திருநாகைக்காரோணப்புராணம்

திருவாவடுதுறை ஆதீனம்

வெளியீடு எண் 254.

உ
சிவமயம்

திருநாகைக்காரோணப்புராணம்

(குறிப்புரை முதலியன)

இது
திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
வெளியிடப்பெற்றது

திருவாவடுதுறை ஆதீனம்
1970

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
— திருவாவடுதுறை. —

இது

திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான்

திரிசிரபுரம்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் தேவாரம்

பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்

" வண்டுபா டவ்வளர் கொன்றைமா லைம்மதி யோடுடன்
கொண்டகோ லங்குளிர் கங்கைதங் குங்குருள் குஞ்சியுள்
உண்டுபோ லும்மென வைத்துகந் தவ்வொரு வற்கிடம்
கண்டல்வே லிகழி சூழ்கடல் நாகைக்கா ரோணமே."

திருச்சிற்றம்பலம்

இப்புத்தகத்தில் அடங்கியவை

			பக்கம்
1	முகவுரை	...	கூ
2	நூலாராய்ச்சிக் குறிப்புகள்	...	கஎ
3	நூலாசிரியர் வரலாறு	...	உரு
4	உரையில் எடுத்தாண்ட மேற்கோள் நூற்பெயரகராதி	...	௩ரு
5	படல அகராதி	...	௩கூ
6	நாகைக்காரோணப்புராணம் மூலமும் - குறிப்புரையும்	...	1—680
7	செய்யுள் முதற்குறிப்பகராதி	...	681—699
8	பிழையும் – திருத்தமும்	...	701—702



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்

முகவுரை

தேவாரம்

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்

திருச்சிற்றம்பலம்

" புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய
நனையுஞ் சடைமேலோர் நகுவெண் டலைசூடி
வினையில் லடியார்கள் விதியால் வழிபட்டுக்
கனையுங் கடனாகைக் காரோணத் தானே. "

திருச்சிற்றம்பலம்

நாகைக்காரோணம் என்பது சோழநாட்டுத் தேவாரம் பெற்ற சிவ தலங்களில் ஒன்று. சோழநாட்டுத் தலங்கள் - 190. அவற்றுள், காவிரியின் வடகரையில் உள்ள தலங்கள் - 63; தென்கரையில் உள்ள தலங்கள் - 127 தேவார முதலிகள் மூவர் திருப்பதிகம் பெற்றது; திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர்தேவாரத் திருப்பதிகம் 2, திருநாவுக்கரசுநாயனுர் தேவாரத் திருப் பதிகம் 4, சுந்தரமூர்த்திநாயனுர் தேவாரத் திருப்பதிகம் 1, ஆகத் திருப் பதிகங்கள் 7.

நாகை என்பது நாகபட்டினம் என்பதன் மரூஉ, காரோணம் என்பது காயாரோகணம் என்பதன் மரூஉ. நாகைக்காரோணம் என்றது கச்சிக் காரோணம், குடந்தைக்காரோணம் என்னும் தலங்களை நோக்கியது போலும்.

புராணம் என்பது பழையவரலாறு என்னும் பொருளையுடையது. திருவாசகத்தின் முதலில் உள்ள 'சிவபுராணம்' என்பதற்கு, 'சிவனது அநாதி முறைமையான பழமை' என்று காணப்படும் விளக்கக் குறிப்பானது புராணம் என்பதன் பொருளைப் புலப்படுத்துமாறு காட்டுவதாகும். புராணங்கள் பலவகைப்படும். தலங்களின் பழையவரலாறுகளைக் கூறுவன தலபுராணம் எனப்படும். இவ்வகைப்புராணங்கள் வடமொழியில் அளவிறந் தனவாக உள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள சிவதலங்கள் பலவற்றிற்கு உரிய வடமொழிப் புராணங்கள் பல தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. புராண இலக் கியங்கள் பெருங்காப்பிய வகையைச்சார்ந்தன. வடமொழியிலுள்ள புராண

நடைவேறு, தமிழ் மொழியில் உள்ள புராண நடைவேறு. வடமொழியிலே யுள்ள புராணங்கள் வரலாற்றை மட்டும் அறிவிப்பன. தமிழ்ப் புராணங்கள் வரலாற்றுடன் காவிய இலக்கணங்களையும் பெற்று விளங்குவன. வடமொழியிலே காவியங்கள் தனியேபொருந்துவன. பழையகாலத்தில் தமிழிற்செய்யப் பெற்ற புராணங்களோ வரலாறுகளை மட்டும் கூறிச் செல்வனவாகும். பின்பு சிலபுலவர் பெருமக்கள் காப்பிய இலக்கணங்கள் அமையும்படி புராணங்களைத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினர். அங்ஙனம் இயற்றப்பெற்ற நூல்கள் திருக்குற்றாலத் தலபுராணம், திருக்கழுக்குன்றத் தலபுராணம், சீகாளத்திப்புராணம், திருவிளையாடற்புராணம், காஞ்சிப்புராணம் முதலியனவாகும். இத்துறையில் நூலியற்றலை மேற்கொண்டு சென்ற நூற்றாண்டில் இருந்து விளங்கியவர் (1815-1876) திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களாவர்.

இனி, செந்தண்டமிழ்மொழி பண்டைக்காலம்தொட்டே செப்பமுற்றுத் திகழ்வது, திருந்திய இலக்கியப் பரப்புடையதாய் விளங்குவது; ஆகலின், தமிழ்நாடு ஒன்றே நாகரிகத்தில் மிகமிகப் பழமையுடையது. இஃது ஆராய்ச்சி வல்லுநர் யாவருக்கும் முடிந்த முடிபான கருத்தாம்.

தமிழ்மொழியானது தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் மூன்று சங்கங்களிலுமுள்ள புலவர்பெருமக்களால் பெரிதும் வளர்க்கப் பெற்றது. அம்மூன்று சங்கங்களுக்கும் இடையிலே உள்ள காலமும் பல. கடைச்சங்க காலம் இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாம். தலைச்சங்க இடைச்சங்க காலங்களும் இடையிலுள்ள காலங்களும் நம்மனோரால் வரை செய்துணர்த்துதல் அரிது. தலைச்சங்க காலத்திலேயே அரிய இலக்கிய இலக்கணங்கள் தமிழில் இருந்தன என்பதற்குச் சான்றுகள் பலவுள. குமரி கடல் கொள்ளப்பட்ட காலத்துத் தொல்காப்பியமும், திருக்குறளும், கடைச்சங்க நூல்களில் சிற்சில நூல்களுமே எஞ்சி நின்றன. எனினும், ஒரு மொழிக்கு வேண்டும் இலக்கண இலக்கியங்களில் இவைகளே குறைவின்றி உள்ளன என்பதை அறிஞர் அறிவர்.

இனி, சங்ககாலத்துக்குப் பிற்பட்டுத் தோன்றிய இலக்கிய இலக்கணங்களும் உரைநூல்களும் பல. இவைகளையெல்லாம் நடுநிலை திறம்பாது கூர்த்தறிய வல்லுநர் உளராயின் தமிழர்கள் வாழ்க்கை தொன்றுதொட்டே நாகரிகமுடைத்தாய்க் காணப்பெறுவதும், தமிழ்நாடு ஒன்றே எந்நாட்டினும் நாகரிகத்தில் முற்பட்டதென்பதும் அந்நாகரிகத்திற்கேற்ப மொழிச்செம்மையிலும் இலக்கிய வளர்ச்சியிலும் ஒரு சிறிதும் குன்றாவளம் நிறைந்து விளங்குவதும் கண்டு பெரிதும் இன்புறுவர். இதில் எட்டுணையும் ஐயமின்று. மற்றும், செந்தண்டமிழ்மொழியிலே இலக்கண இலக்கியங்களே அன்றித் தத்துவ நூல்களும், வானநூல் மருத்துவ நூல்களும், இசைநூல்களும், மந்திரநூல்களும் மிகவுள்ளன என்பதையும் அறிஞர் அறிவர். இவைகளால் தமிழருடைய கூர்த்த நுண்ணறிவும் பேரூக்கமும் உழைப்பும் மேம்பட்டிருந்தன என்பதை அறியலாம். இவைகட்குக் காரணம் பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழியைக் கண்ணுங்கருத்துமாகப் போற்றி

வந்தமையும், அதனை வளர்த்தற்குரிய புலவர் பெருமக்களைக் குறைவொன்றின்றி உயிரினும் மேலாக ஓம்பிப் பாதுகாத்தமையுமேயாம் என்பது தெளிவாம். இதனால் ஒருநாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் அந்நாட்டிற்குரிய மொழியையும், அம்மொழியிலுள்ள நூல்களையும், அம்மொழியில் வல்ல புலவர்களையும் போற்றிப் பாதுகாத்தல் இன்றியமையாததொன்றும் என்பது புலனாகும்.

நூல்கள், தமிழ்மொழியிலே மட்டுமின்றி ஏனைய நன்மொழிகள் பலவற்றினும் காணப்படுவன; அவை முன்பு நாட்டிலே இருந்து மறைந்த பெரியோர்களது அறிவுப்பிழம்புகளேயாம். அறிவுவடிவாகிய அந்நூல்கள், தம்மைச்சார்ந்து போற்றுவோரை அறிவுத் துறையிலே முன்னைச்சான்றோர் பெற்று நின்ற உயரிய நிலையை எளிதிலே அடையச் செய்வன. அந்நூல்களைப்போற்றிப் பற்றாதோர் தாம் உயர்தற்குரிய செம்மை நிலையின் அடிப்படைக்கல்லை அகழ்ந்தெறிந்து அலமருவோராவார். அவர்கள் முன்னேற்றமடைதல் என்றுமின்று.

இலக்கியமொன்றே பலதுறைப்பட்ட நூல்களினும் சிறந்ததாகும். பலதுறைப்பட்ட நூல்களில் கூறப்படும் பொருள்களையறிந்து அவற்றை ஏற்ற இடங்களில் ஆங்காங்கு எடுத்துக்கூறிக் கற்போர் மனத்திற்கு இன்பத்தைப் பெருக்குவது இலக்கியமேயாம். உலகியலில் மக்கள் செம்மையுற்று நீதியுடன் வாழ்ந்து இன்பந் துய்த்தற்குக் காரணமான பல வரலாறுகளை வழக்கில் வைத்துக் காட்டி உள்ளத்தில் ஊக்கமும் இன்பமும் பெருகச் செய்யும் இயல்பு உடையது இலக்கியமே யாகலின் மக்கட்குப் பெரிதும் இலக்கியப் பயிற்சி வேண்டப்படுவதாம். நாட்டிலே மக்கள் விலங்குத் தன்மையினின்று நீங்கி மக்கட்டன்மையையும் பண்பையும் பெற்று வாழச் செய்தலே இலக்கியத்தின் பெரும்பயனும். அப்பெரும்பயனை விளைவித்தலில்லாத இலக்கியங்கள் எவையாயினும் இலக்கியமாகா.

தலபுராணங்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டு இடங்களையும், தமிழ்நாட்டு ஒழுக்கங்களையும் பெரிதும் சிறப்பித்துக் கூறுவன. மொழிவளர்ச்சி நன்கு வளம்பெறவேண்டுமாயின் தம்நாட்டு வழக்க ஒழுக்கங்களைத் தாய்மொழியில் இலக்கியமாக்கலும், பிறமொழியில் ஆக்கிப் பிறநாட்டு மக்களுக்குக் கொடுத்தலும், பிறமொழியில் ஆக்கப்பட்டுள்ள தம்நாட்டுக்கு ஏற்ற சிறந்த இலக்கியங்களைத் தமது தாய்மொழியில் பெயர்த்து ஆக்கலும் பெரிதும் வேண்டப்படுவனவாம். இலக்கியங்களுள்ளே கொள்ளத்தகுவன வன்றித் தள்ளத்தகுவனவும் உள. சமய உண்மைகளோடு மாறுபட்டனவும் ஆன்றோர் வழக்கோடு மாறுபட்டனவும் தள்ளத்தக்கனவேயாகும்; அவை கொள்ளத்தக்கதன்றும். அந்நிலையிலே செந்தண்டமிழ் மொழிக்குப்பெரிதும் ஆக்கம் அளிக்கும் பலதிறப்பட்ட நூல்களையும் இயற்றியருளித் தமிழ்மக்களுக்கு ஊக்கமளித்த இகப்பரு மிகப்பெருஞ்செயல் திராவிடமாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகளையும், அவர்மாணவர் கவிராட்சஸ ஸ்ரீ கச்சியப்ப முனிவரையுமே சாரும். அம்முறையைப் பின்பற்றியே

மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய புராணங்கள் யாவும் மிளிர்வன.

"மகாவித்துவான் பிள்ளையவர்கள் இளம்பிராயத்திலிருந்தே ஸ்ரீ கச்சியப்ப முனிவரிடத்தும், ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகளிடத்தும் பெரிதும் பக்தி பூண்டொழுகியவர். அவர்கள் இருந்து வசித்த திருவாவடுதுறை யாதீனத்திலே உம்மைப்புண்ணியத்தின் பேருகவிளைந்த பக்திப்பெருக்கினுல் ஆதீன வித்துவானுகவும் ஆதீனத்து மகாவித்துவானுகவும் இவர் கௌரவிக்கப்பெற்ருர். கவிராக்ஷஸ ஸ்ரீ கச்சியப்ப முனிவரைத் தமது உபாசனு மூர்த்தியாகவே கொண்டு பிள்ளையவர்கள் போற்றி வந்தனர். கல்வி பயிலுங்காலத்து முதன் முதலாக ஸ்ரீ கச்சியப்ப முனிவரியற்றிய திருவானைக் காப்புராணம் கிடைக்கப்பெற்ருர். அதன்கண் உள்ள சொற்சுவை பொருட் சுவைகளும் பத்திச்சுவையுமே திருவாவடுதுறை ஆதீனத்திலே இவருக்குப் பெரும் பற்றுண்டாதற்குக் காரணமாயிற்று என்பர். ஸ்ரீ கச்சியப்பமுனிவர் அருளிய புராணங்களிலும் ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் அருளிய காஞ்சிப்புராணத்திலும் மிகமிக ஈடுபாடு உண்டாகவே பிற்காலத்தில் மிக்க சுவையுடையதாக நாகைக் காரோணப் புராணத்தை இவர் இயற்றினுர்.

1868 ஏப்ரல் (விபவ ஆண்டு) தொடக்கத்திலே நாகபட்டினத்தில் ஓவர்ஸியராக இருந்த அப்பாத்துரை முதலியார் முதலிய உத்தியோகஸ்தர் களும், தேவாரத்திருக்கூட்டத்தலைவராகிய வீரப்ப செட்டியார் முதலியோர் களும் கேட்டுக்கொள்ள இப்புராணத்தைப் பாடத்தொடங்கினுர். இத் தலத்திற்குரிய வடமொழிப்புராணத்தை அப்பொழுது அங்கே இருந்த திருச்சிராப்பள்ளி ஸ்ரீ மகாதேவ சாஸ்திரிகள் என்பவரைக்கொண்டு தமிழில் வசனநடையாக மொழிபெயர்ப்பித்து எடுத்துக்கொண்டு மாயூரம் வந்தார்."

இப்புராணம் பதினெண்புராணங்களில் ஒன்ருகிய சைவபுராணத்தில் சனற்குமார சங்கிதை உபரிபாகத்தில் உள்ளது என்பர்; (புராணவரலாறு 21செய்).

"நாகையிலுள்ள அன்பர்களில் சிலர் "நீங்கள் செய்யும் இப்புராணம் காஞ்சிப்புராணத்தைப்போல் இருக்கவேண்டும். அதில் சுரகரீசப் படலத் தில் மந்தரகிரியின் வளத்தைக் கூறப்புகுந்த சிவஞான முனிவர் பல சித்திர கவிகளை அமைத்ததுபோல நீங்களும் இப்புராணத்தின் கண் ஏற்றஇடத்தில் அவற்றை அமைக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர். அவர்கள் வேண்டுகோளின்படியே இப்புராணத்தில் நந்திநாதப் படலத்தில் சித்தாச் சிரம வருணனையில் பலவகைச் சித்திரகவிகளை இவர்செய்து அமைத்திருக் கின்றமை காணலாம்;" (பக் 314; சரித்திரம்). "விபவ வருடம் பங்குனி மாதம் (1869) அரங்கேற்றம் ஆரம்பமாயிற்று. ஒரு வருடகாலம் இந்தப் புராணப் பிரசங்கம் நடைபெற்றது. "அரங்கேற்றி முடிவதற்குள்ளாகவே இந்தப் புராணம் அச்சில் பதிப்பிக்கப்பெற்றது. இந்நூலாசிரியர் மாணவர் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாருடைய மேற்பார்வையில் மாயூரப் புராணமும், இந்த நாகைக்காரோணப்புராணமும் சென்னையில் அச்சிடப் பெற்று நிறைவேறின" என்பர் ஸ்ரீ உ. வே. சா.

"இப்புலவர்கோமான் இயற்றிய புராணக் காப்பியங்களுள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது இத்திருநாகைக்காரோணப்புராணமே. மிகவும் உழைத்து எல்லா அழகுகளும் செறியும் வண்ணம் இயற்றப் பெற்றதாகலின் இந்நூலினிடத்து இக்கவிஞருக்கே ஒரு தனி அன்பு இருந்து வந்தது. சிவஞானமுனிவர் கச்சியப்பமுனிவர் என்பவர்களுடைய நூல்களில் இவருக்குள்ள அனுபவமுதிர்ச்சியும், கவி இயற்றுவதில் இவருக்குள்ள பேராற்றலும், வியக்கத்தகும் கற்பனுசக்தியும் இந்நூலின்கண் நன்ருக வெளிப்படும். இவர்செய்த நூல்களுள் ஒவ்வொன்றிற் சிலசில அமைப்புக்கள் சிறப்பெய்தி விளங்கும். இந்நூலிலோ ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வகையில் சிறப்புற்று விளங்கும்."

"உழைகுலாம் நயனத் தார்மாட் டொன்ருென்றே கருதற் கொத்த(து)
அழகெலாம் ஒருங்கே கண்டால் ஆரதை யாற்ற வல்லார்."

என்ற கம்பராமாயணச்செய்யுள் இங்கே ஞாபகத்திற்கு வருகின்றது. தமிழ்க் காப்பியங்களிற் பரந்து கிடக்கும் பலவகை அணிநயங்களும் இதன்கண்ணே ஒவ்வோரிடத்தில் அமைந்து இலங்கும். சொல்லணி, பொருளணி, தொடைநயம், பொருட்சிறப்பு, சுவைநயம், நீதி, சிவபத்திச்சிறப்பு, சிவஸ்தலச் சிறப்பு, நாயன்மார்பெருமை முதலிய பலவும் இதன் கண் நிரம்பியுள்ளன. தமிழ்க்காப்பியத்தின் இலக்கணம் முழுவதும் உள்ளதாய்ப் பலவகையிலும் நயம் சிறந்து, சுவைப்பிழம்பாக விளங்கும் இக்காப்பியத்தைப் பெறுதற்குத் தமிழ்நாடு தவம் செய்திருத்தல் வேண்டும். பல பழையபுலவர்கள் வாக்கினை ஒருங்கே பார்த்து மகிழவேண்டுபவர் இந்நூலைப்படித்தாற்போதும். அந்த அந்தப் புலவர்களின் நடை நயமும் பொருளின்பமும் இடையிடையே இப் புராணத்தில் விளங்கித்தோன்றும். இந்நூலைப்பற்றி எவ்வளவு பக்கம் எழுதினுலும் இதன் பெருமையை ஆராய்ந்து கூறிவிட்டதாக ஆகாது. யார் யாருக்கு எந்த எந்த நயங்களில் விருப்பமோ அந்த அந்த நயங்களை இதன் பாற்கண்டு இன்புறலாம்." (பிள்ளையவர்கள் சரித்திரம், 322-3). என்பர் ஸ்ரீ உ. வே. சா.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர், திருநாவுக்கரசு நாயனுர், சுந்தரமூர்த்திநாயனுர். அதிபத்தநாயனுர் வரலாறுகள் சுருக்கமாக உள்ளன. மேற்கோள் நூல்களிலே காட்டப்பெற்றுள்ள சிவதருமோத்தரம், சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், சிவதத்துவவிவேகம் முதலிய அரியநூற்செய்திகளை உரிய இடங்களில் இதில் அமைத்திருத்தல் காணலாம்.

நாகைக்காரோணப்புராணம் பிள்ளையவர்களால் பாடப்பெற்ற காலம் (1869) ஆம் வருடமாகும். இதனை இயற்றிய காலத்திலே இவ்வாதீனத்திலே 15வது பட்டத்திலே ஸ்ரீ அம்பலவாணதேசிக மூர்த்திகள் வீற்றிருந்தருளினுர்கள். 'இந்நூலைக் குறிப்புரையொன்று எழுதி விரைந்து வெளியிடுக' என்று அடியேனுக்குக் கட்டளையிட்டருளியது இப்பொழுது இவ்வாதீனத்திலே 22-வது குருமகா சந்நிதானமாக வீற்றிருந்து சிவஞானச் செங்கோலோச்சிவரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகளாவார்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் உத்தரவுப்படி ஸ்ரீ கச்சியப்பமுனிவர் அருளிச்செய்த பேரூர்ப்புராணத்துக்கு அடியேனால் எழுதப்பட்ட குறிப்புரை முதலியன அச்சிட்டு முற்றுப்பெற்றவுடனேயே 'இவ்வாதீனத்து மகாவித்துவான் பிள்ளையவர்கள் இயற்றிய நாகைக் காரோணப்புராணத்துக்கு ஒரு குறிப்புரை வரைந்து அச்சிட்டு முடிக்க. அவர் பெயரையுடைய உம்மால் ஆதீன வெளியிடாக வருவது மிகப்பொருத்தமாம். இவ்வாதீன வித்துவான் எழுதிய குறிப்புரை இருத்தல் மரபு பிழையாததாம்' என ஆசியுடன் அருளுரை வழங்கியருளினார்கள். 1869ல் அச்சிடப்பெற்ற புராணம் ஒன்றும், அதனைப் பார்த்துச் சிலர் செய்திருந்த காகிதப் பிரதியொன்றும் உடன் கொடுத்தருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தினிடத்திலே பெற்றுவந்த காகிதப்பிரதியைப் பிரித்துப் பார்த்தபொழுது முதலிலே 400 செய்யுட்கள் எழுதாமலிருந்தன. இடையிடையே செய்யுட்கள் பல காணப்பெற்றில. அக்காகிதப்பிரதி ஒருவரால் எழுதப்பட்டதன்று என்றும், பலர் பலகாலத்துச் செய்திருந்த பிரதிகளை ஒன்றுசேர்த்த காலத்து அவைகள் இழக்கப்பெற்றுள்ளன என்றும் அறிந்தேன். ஒரு சிலர் பிரதிசெய்தது புராணத்திலுள்ளபடியே இருந்தும் சீர்கள் பிரிக்கத்தெரியாத எழுதுவோரால் எழுதப்பட்டதென உணர்ந்தேன்; ஒருசிலர் பிரித்தெழுதிக்குற்றியலுகர முதலிய புணர்ச்சியில் பிழைபட்டிருந்தனர். பொருளுணர்ச்சியில்லாதோரும் சில படலங்கள் எழுதியிருந்தனர். இப்பழைய காகிதப்பிரதியைச் செப்பஞ்செய்தலில் காலம் வீணே கழிந்தது. புதியதாகப்பிரதிபண்ணியிருக்கலாமே என்று தோன்றியது. எனினும் அது விரைவில் செய்யத்தக்கதுமன்று; 'கழிந்ததற்கிரங்கிப் பயனில்லை' எனத் துணிந்தேன். ப்ரூவ் திருத்தத்திலேதான் அவற்றைச் செம்மைப்படுத்தச் சிரமம் அதிகரித்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்குதான் ஒன்றுக்கும் பற்றாத எளியேனையும் இத்தொண்டில் ஈடுபடுத்தியது.

என் பிராயமுதிர்ச்சியும், உடல்தளர்வும் அறிவைத் தடைசெய்யாமல் ஊக்கிப்பணிகொண்டது மகாசந்நிதானத்தின் பேரருளேயாகும். இடையிடையே இப்பணி தடைப்படுமாறு உண்டாகிய உடற்பிணிகள் பேரூர்ப் பெருமானுடைய பேரருளாலும், நாகைக்காரோணநாதர் நல்லருளாலும் அவ்வப்போது நீங்கிக் குணமடைந்தேன். இக்காரோணநாதர்புராணத்தை நோக்குவோர் புராணத்திலே கூறிய நல்ல பயன்களை அடியேன் அடைந்தமை குறித்து அதிசயப்படார்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்திலே அருளிய காகிதப்பிரதியைச் செய்தோர் பலர். ஆயினும், பரங்கிப்பேட்டை வித்துவான் ஸ்ரீ முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள் குமாரர் சிர. சொக்கலிங்கம் பிள்ளையும், அவர்களுடன் நெருங்கிய நண்பர்களில் இரண்டொருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். பிரதி பண்ணுதற்கு அவர்கள் செய்த பொருளுதவியும் மிகுதியாம் என்பர். இதனை அறியும்பொழுது 1925-26 ஆண்டிலிருந்து சில ஆண்டுகள் ஒரு அன்பர் நாகைக்காரோணப்புராணத்தை அச்சிடவேண்டும் என்று

சொல்லிக்கொண்டு பொருள் திரட்டினர்; 1935-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அஃது என்ன ஆயிற்றென்று தெரிந்திலது; (அவர் பெயர், ஊர் முதலியவற்றைத் தெரிவிக்க மனமில்லை). இப்படிப் பலர் பொருளிட்டுதல் உலக வழக்கமே என அறிந்து அடங்குதலே தக்கதாம் என்க.

திருவருளும் குருவருளும் கூடுங்காலமே ஒருகாரியத்தைச் செய்ய முற்படுதற்குரியதாகும். ''காலமுண்டாகவே காதல் செய்துய்ம்மின்'' என்று நமது சமயகுரவர் அருளிச்செய்தனர்.

இவ்வாதீனத்தொடர்பு பெரிதுமுடைய இப்புராணம் நூறு ஆண்டுகட்குப்பின் இவ்வாதீனப் பதிப்பாக வெளிவருதல் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் பெருங்கருணையேயாம் என்பதை நினைந்து ஏற்று மகிழாதார் எவருமிலர்.

சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர பரிபாலனங்களும், சித்தாந்தசைவ பரிபாலனம், செந்தண்டமிழ்மொழிப் பரிபாலனங்களும், திருமந்திரமாநாடு, சித்தாந்தசைவ மாநாடுகளும் வழக்கம்போலவே சிறப்பாக நடைபெறும்படி திருவுளங்கொண்டு கண்ணும் கருத்துமாக அவ்வப்போது வேண்டும் அநுக்கிரகங்களைச்செய்து, சிவஞானச்செங்கோல் செலுத்தி, ஒன்றுக்கும் பற்றாத அடியேனையும் தொண்டு கொண்டருளும் இவ்வாதீனத்து இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி இந்த நாகைக்காரோணப் புராணம் மூலம் குறிப்புரை முகவுரை, நூலாராய்ச்சி, உரையில் எடுத்தாண்ட மேற்கோள் நூற்பெயரகராதி, படல அகராதி, செய்யுள் முதற்குறிப்பகராதி முதலியவற்றுடன் சிறந்த வெளியீடாக வெளிவருகிறது. பிழையுந்திருத்தமும் உடன் சேர்க்கப்பட்டுள்ளன. முதலில் அவற்றைத்திருத்திக்கொள்வது படிப்போருக்கு நன்மை பயக்கும்.

எளியேன் அறியாமையாலும், பிராயமுதிர்வு உடல்தளர்வு முதலியவற்றாலும் நேர்ந்துள்ள எல்லாப்பிழைகளையும் பொறுத்துச் சிறியேன்செய்த இம்முயற்சியைப் பெரிதாக மதித்து மேலும் மேலும் இத்தகைய தண்டமிழ்த் தொண்டுகளைச் செய்யுமாறு ஊக்கும்படி பெரியோர்களை மிகத்தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் நீடுவாழ்க !

இங்ஙனம்,

சித்தாந்தசைவமணி —

திருவாவடுதுறை,
8—8—70.

த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,
ஆதீன வித்துவான்.

உ

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.

நூலாராய்ச்சிக் குறிப்புகள்

இப்புராணத்தில் நூலாசிரியர் பலவண்ணமாக எடுத்துப் பாராட்டி யிருக்கிற இத்தல விசேடங்களை முதலில் அறிந்து கொள்ளுதல் இப்புராணத்தைப் படிப்போருக்கு மிகஇன்றியமையாததாகலின், அவைகளைத்தனியே எடுத்து இங்கே காட்டப்பட்டுள்ளன.

மூர்த்திகள்:

விநாயகர் இருவர் : (1) நாகாபரணவிநாயகர், (2) மாவடி விநாயகர்.

முருகவேள் : மயிலேறு சேவகன் எனப்படுவர்.

சுவாமியின் திருநாமங்கள் : ஆதிபுராணர், காயாரோகணநாதர், காரோணமூர்த்தி, சுந்தரவிடங்கர், இவர் சோமாஸ்கந்த மூர்த்தி; இவர் சாலிசுகன் என்னும் சோழ அரசனுல் விண்ணுலகத்திலிருந்து இரண்டாவது சிருட்டியில் கொண்டு வந்து நாகைக்காரோணத்தில் தாபிக்கப்பட்டவர்.

அம்மையார் திருநாமம் : கருந்தடங்கண்ணம்மை, கருந்தடங்கண்ணி (நீலாயதாட்சி).

தலம் :

தலத்தின் திருநாமங்கள் : ஆதிபுராணம், சிவராசதானி, காயாரோகணம், காரோணம், பழங்காரோணம்.

ஏனைய தலத்தின் திருநாமங்கள் : அமுதகடேசம், இந்திரேசம், முனி திருக்காரோணம், நடுத்தலேசம், விண்டுநாதம், அகத்தீசம், நாகநாதம். கார்முகேசம், இராமநாதம், சித்தீசம், நந்திநாதம், பார்ப்பதியீச்சரம் முதலியன.

அவ்வத்தல மூர்த்திகள் : அமுதகடேசர், அமரரிந்திரேசர், முனிதிருக்காரோணநாதர், நடுத்தலேசர், விண்டுநாதர், அகத்தீசர், நாகநாதர், கார்முகேசர், இராமநாதர், சித்தீசர், கயிலாயநாதர், நந்திநாதர், கதம்பநாதர், வெண்ணெய் இலிங்கர், இயமநாதர், சந்திரநாதர் (சுந்தரலிங்கம்) முதலியோர்.

தீர்த்தம் :

தீர்த்தம் : சறுவதீர்த்தம், தேவதீர்த்தம், காகதீர்த்தம், (புண்டரீக தீர்த்தம்)பர்தாளகங்கை, (மாமுனி தீர்த்தம்)பிரமதீர்த்தம், அச்சுததீர்த்தம், நித்தகங்கை, சத்திகங்கை, பாற்குளம், சூரியதீர்த்தம், சந்திரதீர்த்தம், பாவகதீர்த்தம்.

தேவதீர்த்தத்தின் தென்கரையில் அமுதகடேசமும், காரோணலிங்கத்தின் மேற்றிசை நீலாயதாட்சி சந்நிதியின் தென்மேற்கில் சறுவதீர்த்தமும், தேவதீர்த்தத்தின் வடகரையில் முத்திமண்டபமும், முனிபூசித்த மேலைக் காரோணமும் உள்ளன.

பிரமதீர்த்தத்திலே ஆனித்திங்கள் அபரபக்கம் அட்டமிதிதி ஞாயிற்றுக் கிழமை மிருகசீரிடம் கூடிய நாளில் முழுகின் மிக விசேடமாம் (535பக்). பத்தாம்நாள் மகநட்சத்திரத்தில் அத்திரதேவர் தீர்த்தங்கொடுத்தருளுவர்.

நாகபட்டினம்: நாகமாநகர், நாகபுரம், நாகமாநகரம், அரவமாநகர், பணிநகர், நாகராசபுரம் எனப் பலவகையாகக் கூறப்பட்டுள்ளது.

பூசித்துப் பேறுபெற்றோர்: புண்டரிக முனிவர், இந்திரன், சந்திரன், பஞ்சசன் - சுண்டிலை, இராமதேவர், அதிபத்தர், பராசர முனிவர், ஏழு முனிவர், பிராமிமுதலிய எழுவர், கங்கை, அக்கினி, குகவேள், திருமகள், திருமால், பிரமன், சனற்குமாரமுனிவர், சிபி, புரூரவா, தசரதன், இராமன், பரசுராமன், நந்தி, கதம்ப முனிவன், சூரியன், அரசகேசரி, தனதத்தன், சாலிசுகன், நாககன்னி, ஆதிசேடன் முதலிய நாகர்கள், காமதேனு, கோசிகன், கார்த்தியாயனர், அக்கினி, வீரபாண்டியன் வாசுகியின் புதல்வியர் முதலியோர்.

தலவிருட்சம்: புன்னாகம்: புன்னாகக்காரோணம் (330பக்).

முனிவர்: புண்டரீகர், வியாதர், கண்ணுவர், சூதர், நைமிசவனவாசிகள், அகத்தியர், பராசரர், சனற்குமாரர், சமதக்கினி, பிருகு, வாமதேவர், நாரதர், கௌதமர், காலவர் முதலியோர்.

முனிவர்களின் பெயர் பெரும்பாலும் அடையின்றி வந்துள; (112-ம் பக்கம்) 26 - 30 பாடல்கள். ஏழுமுனிவர்கள்: 126 பக். முனிவர்கள் நிலை: 114, 115 பக். கார்த்தவீரியன், பரசுராமன், இரேணுகை என்பவரும் குறிக்கத்தக்கவர்கள்.

கடவுள் வாழ்த்தில்: காப்பு-நாகாபரணவிநாயகர். மாவடி விநாயகர், காயாரோகணநாதர், ஆதிபுராணர், கருந்தடங்கணம்மை, சபாநாயகர், சிவகாமியம்மை, அழகவிடங்கர், தட்சிணாமூர்த்தி, நாகாபரணப் பிள்ளையார், சுப்பிரமணியர், திருநந்திதேவர், ஆசிரியர் அகத்தியனார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசக சுவாமிகள், தண்டீசர், அறுபத்துமூவர், புண்டரீகமுனிவர், அதிபத்தநாயனர், மற்றையடியார்கள், திருக்கூட்டத்தார், பஞ்சாக்கரதேசிகர், குருவணக்கம் ஆக 29 செய்யுட்கள் உள்ளன.

நூலின் பெருமைக்கேற்ப இதில் நாட்டுப்படலம், நகரப்படலங்களின் செய்யுட்கள் விரிவாயமைந்துள்ளன; அவைமுறையே 120,151 செய்யுட்கள். படலம் - 61; புராணச் செய்யுட்டொகை 2506. அவையடக்கத்திலே, 'காற்றுபல் குறையும்' என்ற செய்யுளில் குறை முதலியன சிலேடை. குறை - ஆறும் வேற்றுமையும், எச்சமும், குறைவு; விகாரம் - புணர்ச்சி விகாரங்

களும், செய்யுள் விகாரங்களும் - திரிபுணர்ச்சி; வேற்றுமை - எட்டு வேற்றுமைகள், வேறு ந்தன்மை; அல்வழி - அல்வழிச்சந்தி, அறமல்லாத வழி; அன்மொழி - அன்மொழித்தொகை, இடத்துக்குரியதல்லாத மொழி என்பர் டாக்டர் உ. வே. சா.

தட்சிணாமூர்த்திதுதியில் சின்முத்திரையின் பொருள் காட்டப்பட்டது. திருநந்திதேவரைப் பதிமரபில் இரண்டாம் சிவன் எனவும். எங்கள் குருமரபின் முதற்குரவன் எனவும் கூறப்பட்டமை காண்க.

பஞ்சாக்கரதேசிகர் துதியிலும், குருவணக்கத்திலும் சைவசம்பிரதாயங்கள் சில பேசப்பட்டன.

சோழநாட்டைப்பற்றிய செய்யுட்கள் 9; மழைவளம், ஐந்திணை வளங்கள், திணைமயக்கம் என்பன வருணிக்கப்பட்டன. குறிஞ்சி முதலிய நான்கு நிலங்களிலும் உள்ள சிவதலங்கள் கூறப்பட்டன. இந்த அமைப்புமுறை திருக்குறிப்புத்தொண்டநாயனர் புராணத்தையும் காஞ்சிப்புராணத்தையும் பின்பற்றியது. ஒவ்வொருதிணையின் இறுதியிலும் அவற்றிற்கு இயைபுடைய சிவதலங்களை எடுத்துக்காட்டி முடித்தார். தணிகைப்புராண ஆசிரியராகிய ஸ்ரீ கச்சியப்பமுனிவர் அனிச்சப்பூ நீர்ப்பூவகையைச் சார்ந்ததெனக் குறித்ததைத் தாமும் அனுவதித்தார் இப்புராண ஆசிரியர். இந்நாட்டிலுள்ள ஆறுகள் யாவும் காவேரிநதியின் பிரிவுகளே (40 பக்) என்பர்.

நகரப்படலத்து: நாகபட்டினத் திருநகரத்தின் சிறப்பு, நாகபுரங்கள் மூன்று, மாடங்கள் நீலமணிகள் பதிக்கப்பட்டு வடுகக்கடவுளைப் போல்வன, புண்டரீகமுனிவர் உடம்பைத் தம் திருமேனியில் ஏற்றிக்கொண்டமைபோல மதில்கள் அலகில்லாத பொறிகளால் விளங்குதல், அரைப்பணம் முதல் கொண்டு வாணிபஞ்செய்து பொருள் தொகுப்போர், வேளாளர் ஒழுக்கம் பத்து, ஒன்பது தருமம், வணிகர் இலக்கணம் நடுவுநிலைமை, வணிகர்க்குரிய எண்குணங்கள், கல்விகற்கும்போதே வாணிகக்கல்வியும் கற்றல், அரசர்க்குரிய உறுதிச்சுற்றம், ஐம்பெருங்குழுக்கள், அந்தணர் அறுதொழில், சாதியிற்பார்ப்பார் அகம்புறம் சிவத்தையே பார்ப்பார், பஞ்சரிஷிகோத்திரத்தில் உற்பவித்த ஆதிசைவரே பரார்த்த பூசைக்குரியார், மாதவர்மடம் சைவமுனிவர் மடங்கள், கழகங்கள். நாயகமணிபோன்றது சிவபெருமான் திருக்கோயில் என்பவும் பிறவும் சுவையுடையன.

நைமிசப்படலத்தில்: மரவகைகள் அணிபெற அமைத்தார். நைமிசவன முனிவர்கள் பெயர்கள் பெரும்பாலும் அடைசொல்லின்றியே வந்துள. 26—31; முனிவர்கள் நிலையும் ஒழுக்கமும் இதில் கூறப்பட்டன.

புராணவரலாறு, ஆதிபுராணப்படலத்தில் உள்ள துதிப்பாடல்கள் 16 - 20, ஏழுமுனிவர்கள், தலத்தெல்லை, ஆதிபுராணம் தலப்பெயர். ஆதி புராணர் சிவபெருமான்.

தல விசேடப்படலம் 23—44 முடிய விசேடதலங்கள். சர்வசங்கார காலத்தில் மூர்த்திகள் யாவும் நாகைக்காரோணதலத்தில் வந்து தங்கிய காரணத்தால் அது மேன்மைபடைத்தது எனல்.

புண்டரீக முனிவர் முதற்காட்சி: காலகாலன், காமதகனன், பிரணவத் துக்குரியபொருள், காயத்திரிப்பொருள், சதருத்திரீயம், காலாக்கினிருத்திரர் வேதம் எடுத்துரைத்தல், சிவார்ச்சனை ஒன்றே, அதர்வசிகை(27செய்). உயர் திணை அஃறிணை உயிர்கள் சிவபெருமானைப் பூசித்தல், விசுவம் விசுவாதிகம், எச்சம் எச்சபதி, பிரமப்பொருள், பிரமன் மால்முதலியோர் தொழில் சுதந்திர மன்மை, தலைமாலையணிதல், பசுக்கள் பசுபதி, நின்மலன், அகிலகாரணன், ஸ்ரீ காசியில் இரண்டாயிரம் வருடம் தவமிருத்தல், கச்சிக்காரோணரைப் பன்னீராயிரம் ஆண்டு பூசித்தமை, கும்பகோணத்தில் எண்பதினாயிரம் ஆண்டுகள் பூசித்தமை, நாகைக்காரோணத்தில் காட்சி.

இரண்டாங்காட்சி: பூசைக்குரிய மலர்வகைகள் 4–8 செய்; சிவபூசை விதி 11-22செய்; அபிஷேகம் நிவேதனம் தாம்பூலம் மாதபூரணைப்பூசை 26-37செய்; நாளொன்றுக்கு இரண்டு லட்சம் பஞ்சாக்கரசெபம் செய்தமை.

மூன்றாங்காட்சி: உணவுநியமம், இலட்சத்து இருபதினாயிரம் ஆண்டு கள் தவம், நாராயண உபநிடதப்பொருள், துதிகள் 24 - 40; புண்டரீக முனிவரைக் காயத்தொடும் இறைவர் ஆரோகணம் செய்தமை முதலியன.

தேவதீர்த்தப்படலம்: கலியின் தீமையால் சிவபத்தியில்லாமை, நரக வகை, முலையில்காட்சி, மொக்கணியிற்காட்சி, சந்திரன் குருமனைவியைப் புணர்ந்த பாவம் தீர்ந்தமை, புரூரவா கொலைப்பாவம்போக்கியது முதலியன.

முனிதீர்த்தப்படலம்: பாதாளகங்கை சிவபெருமான் அமைத்தது 19 - 29 செய்யுட்கள். தீவினைசெய்வோர் நிலையும், அவர் பெறும்பேறும்; நல்லோரை நிந்தித்தல் ஒழியாத பெரும்பாவம் (235 - பக்) முதலியன.

அரசகேசரி முத்தியடைந்த படலம்: ஆனி மாதம் பூதாட்டமி தினத் தில் ஐங்குரோச எல்லை வலம் வரல் (465 பக்), மாசி மாதம் அபரபக்கம் சதுர்த்தசி இரவில் (சிவநிசி) ஆயிரம் பசுக்களின்பால் ஒவ்வொரு படிவீதம் ஆயிரம்படி பால்கொண்டு அபிஷேகித்தல் (486 - பக்), காரோணநாதரைச் சிவராத்திரி நான்கு யாமங்களிலும் நித்திரை செய்யாமல் வழிபடின் பிறதலங் களில் ஆயிரம் சிவநிசியில் செய்த தரிசனப்பேறு உண்டாம் (487 - பக்), மாதந்தோறும் அபரபக்கம் அட்டமியில் பசுநெய்யால் அபிஷேகம்செய்தல், பிரதோஷத்தில் காரோண லிங்கத்துக்கு சகத்திரநாம அருச்சனை செய்தல் முதலியன.

சாலீசுகன் முத்திபெற்ற படலம்: கார்த்திகை மாதம் சோமவாரத்தில் ஆயிரம் வில்வத்தால் அருச்சித்தல், வியாழக்கிழமைதோறும் செஞ்சந்தனத் தால் அம்பிகையை அருச்சித்தல் பிறப்பை அறுக்கும், காயாரோகணம் ஐந்தெழுத்து.

சித்தர்ச்சிரமப்படலத்தில்: சைவதீக்கைகள், தீக்கைக்குரியதவம், அவற்றின்பயன், தாதநெறி மகநெறி தோழநெறி சன்மார்க்கம் என்பன, ‘வடுத்தவிரும் அருள்பதிய’ என்க. பதி பசு பாச இலக்கணங்கள் முதலியன,

திருநந்திதேவர் ஐப்பசித்திங்கள் பூரணையில் சித்தர்களுக்கு உபதேசித்தல் 23 — 44 வரை. சித்தர்கள் - சித்தத்தையுடையவர்கள்; முழுதும் நல்வழியில் நிலைத்தவர் என்க.

பார்வதிதேவியார் பூசித்த சிவலிங்கத்தை வழிபடின் கொடும்பிணி அகலும், துர்மரணம் நீங்கும், குருமனைவியைப் புணர்ந்தோன் குறியிடைக் கொடுநோயனுவான், கோள் சொல்லுவோன் தீ நாற்றம் நிறைந்த முடை நோயால் வருந்துவான், அந்தணனைக் கொலைசெய்தவன் பல்லிற் கொடு நோயால் துன்புறுவான், கள்ளுண்டோன் முயலகன்நோயால் துயருறுவான், பொன்னைக் களவுசெய்தோன் கைகுறையும் நோயால் பீடிக்கப்பட்டு வருந்துவான் எனல் (519 - 20).

தேவ சாளித்தியபுர மான்மியம்: வற்கட காலநிலை வருணனை 3 - 30 செய்யுள். காமதேனு பசிபொருமல் நாயின் பிணத்தை உண்டமை.

நந்திநாதப்படலம்: ஆல் நிழல்செய்தலால் விண்ணோர் வெயிலிலார் 441 பக். ஆலங்காடு சத்திசொரூபம், நந்திதீர்த்தக்கரையில் அன்னதானம் செய்தால் பெரும்பயன் உண்டாம், பங்குனிமாதம் தண்ணீர்ப்பந்தர் வைத்தலால் உண்டாகும்பலன், நந்தி நாதருக்கு மேற்கில் விருத்தகாவேரிக் கரையில் பிதிரர் கன்மம் செய்தல்.

அக்கினிபூசித்த படலம்: விசுவாமித்திரன் நாயூனை யாகத்தில் அக்கினி தேவனுக்குக் கொடுத்தல், அக்கினி வேணுவனத்தில் ஒளித்தமை, பிரமன் அக்கினியைத் தேடிக்கொண்டு நாகைக்காரோணம் அடைதல், அக்கினி களிற்றைச் சபித்தல், கிளியைச் சபித்தல், மண்டுகத்தைச் சபித்தல், நாய் ஊன்தின்ற பிழைநீங்க அக்கினி அருச்சித்தல், களிறு கிளி மண்டுகம் முதலியவற்றிற்குத் தேவர் முதலியோர் வரந்தரல் (544 பக்); அக்கினி தீர்த்தத்தில் முழுகுவோர் துன்பம் நீங்குவர் என்பன.

புன்னுகவனப்படலம்: வாசுகி பூசித்து நான்கு மகளிரைப் பெறுதல், மணஞ்செய்தல், நிலவுலகடைந்த மகளிர் அத்திரி முனிவரைக் காணல், நாகைக்காரோணம் அடைதல், புன்னுக நீழலில் சிவலிங்கம் தாபித்துப் பூசித்தல், தீர்த்தம் உண்டுபண்ணல், நாகூர் எனப் பெயர்பெறல், இறைவர் நாகேசர், திருவடியிற் சேறல் என்ற வரம்பெறுதல் முதலியன (550 பக்).

தேவர்கள் பூசித்தபடலம்: தேவர்கள் நாகைக் காரோணத்தில் யாகம் செய்தல், யாககுண்டத்தைத் தீர்த்தமாக்கல், மகதீர்த்தம், தேனீ வடிவங்கொண்டு தேனைச்சேகரித்துத் தீர்த்தத்திலே சேர்த்தல், மதுத்தீர்த்தம் என்னும் பெயர், தேவர்கள் பகை தீர்தல், துர்க்கை பூசித்து மகிடனை வெற்றிகொண்டமை என்பன.

தரும புஞ்சன் முத்தியடைந்தபடலம்: தருமபுஞ்சன் மகன் நாத்திகன், மகளிர் முயக்கு, குரவன்கொலை, குருபத்தினிப் புணர்ச்சி, வேட்டுவச்சேரி அடைதல், ஊன்மிசைதல் கள்ளுமாந்தல், பிதாவைத் துன்புறுத்தல், பிதா சிவபூசையில் மகனுக்கு நல்லுணர்வு வரவேண்டுதல், இறைவன் பிதாவாகிய

தருமபுஞ்சன் கனவில் நாகைக்காரோணம் சென்று பூசித்தால் தீமை நீங்கும் என்று அருள்செய்தல், அவ்வாறே அவன் நாத்திகனுடன் சென்று காரோண நாதரையும் கருந்தடங் கண்ணியையும் பூசித்திருத்தல், இருவரும் கயிலையை அடைதல் முதலியன.

நரபாகன் முத்தியடைந்த படலம்: காசி முதலிய பலதலங்கள் நிரலே கூறப்பட்டன. எதுகை நயங்களின் மிகுதி அனுபவித்தறிதற்குரியது.

சட்டைநாதப்படலம்: வயிரவ தியானம், சட்டைநாதர் தண்டபாணி காலவயிரவர் ஆபதோத்தாரணர் புழுகாளி என்பதன் பெயர்க்காரணங்கள் கூறப்பட்டன. சோளீச்சரமுடையார் உத்தரவுப்படி திருமலைராயன் சட்டைநாதருக்குக் கோயில் அமைத்து நிபந்தங்களுந்தந்து பதிட்டைசெய்து திருவிழா நடத்தினமை, சித்திரை மாதம் திருவிழா முதலியன.

சுந்தரவிடங்கப் படலத்திலே: சோமாஸ்கந்த மூர்த்தியைத் திருமால் பூசித்தவிடத்துச் சிவபூசைவிதி விரித்துச் சொல்லப்பட்டுள்ளது. நாகநாதப் படலத்தில் வசிட்டமுனிவர் கட்டளைப்படி புத்திரப்பேறு கருதிக் கும்பகோணம், திருநாகேச்சுரம், திருப்பாம்புரம், நாகைக்காரோணம் ஆகிய நான்கு தலங்களிலும் ஆதிசேடன் பூசித்தல், விபூதிவகை, காலை உச்சி மாலை அத்தயாமம் ஆகிய காலங்களில் முறையே கும்பகோணம் முதலிய நான்கு தலங்களிலும் பூசித்தமை, ஆதிசேடன் புதல்வி கருந்தடங்கண்ணியைப் பூசித்தமை கூறப்பட்டன. அம்மையார் துதிப்பாடல்கள் 39-62 செய்யுட்கள்; சுவையுடையன.

அகத்தீசப்படலம் 21 முதல் 31 வரையுள்ள செய்யுட்கள் திருவங்க மாலை போன்றன.

சிலசெய்திகள்: அழகிய விடங்கருக்கு ஆனி அத்தத்தில் கொடியேற்றுதல்; பதினெட்டாம் நாள் அட்டகொடி, இருபத்து நாலாம் நாள் தேர்த் திருவிழா, இருபத்தேழாம் நாள் தீர்த்தம் கொடுத்தருளல்.

முசுகுந்தன் ஆதி சிருட்டியில் சுந்தரவிடங்கரைத் தாபித்தான். இரண்டாம் சிருட்டியில் சாலிசுகன் சுந்தரவிடங்கரை நாகையில் தாபித்தான்.

பதஞ்சலி, வியாக்கிரபாதர் சூக்கும பஞ்சாக்கர நடனம் காண நாகைக் காரோணமடைதல் - 393 பக்.

சுந்தரவிடங்கரை விதிப்படி ஓராண்டு வழிபட்டால் புத்திரப்பேறு உண்டாம் - 398 பக்.

சனி உரோகணி சகடம் பேதித்தலால் பன்னிரு வருடம் மழையில்லாமை - 401 பக்.

பராசரமுனிவருக்குக் கயிலாயநாதர் காட்சி தந்தருளியது தை மாதம் பூசநாளில் -417 பக்.

"கலைமுன்னுகிய கருவிகள் தந்து" எனப்பிரித்துப் பொருள் கொள்க: 417பக் - 26 செய்.

பராசரமுனிவர் பூசித்த கயிலாய நாதரை வழிபடின் அவமிருத்து நீங்கும் - 420 பக்.

ஒருகோடி பிரமர் இறந்தால் திருமாலுக்கு ஒருநாள்.

சம்பராசுரனை இந்திரன் வச்சிரத்தால் துணித்தமை 381 ஆம் பாடல் சிறந்தது.

மேலைக்காரோணம் முனி பூசித்தது.

வடசொற்களும், சொற்றொடர்களும்: கமலம், சுதரிசனம், பதுமலோசனம், வமனம், சலதி, சிவசரித்திரசிரவணம், ஆசங்கை, இகபரபோகம், சதுமுகன், உதீசி, அவாசி, சித்தாச்சிரமம், விட்டரம், அதிதி, வாதராயணர், வடவா, பதுமம், சங்கம், அம்புயம், அசலம், பங்கயம், சோமாக்கந்தர், லதை, சின் மயன், ஆதிபுராணர், கற்பம், விகற்பம், விருதாவளி, நயசுகுணம், உதரம், அண்டபகிரண்டம், அட்டாங்கம், நித்தியம், நைமித்திகம், பஞ்சானனம், அரூபம், சராசரம், நிராமயன், பரமானந்தன், நிர்மலன், புராதனன், மார்த் தாண்டன், விகசிதம், சுகாசனம், அயனம், ககுபம், இரசிதம், பாவகாரி, சராசனம், சைலகோபன், இமகரன், கேத்திரராசம், உபலம், திரோதானம், உமாதரன், சதமகன், அமரேந்திரேசர், புண்டரீகபுட்கரணி, வாயசம், அனுசிதம், திமிராரி, நளினம், பொதியாசலம், நிகமம், உதவகன், கும்பசன், கத்தியம், சடிலம், முண்டகம், பாதபங்கயம், திகம்பரம், ஆனந்தவனம், சயம்பு, கேத்திரம், கேத்திரராசம், கேத்திரவர்ம், ஆரோகணம், அவரோ கணம், ஆசம், விது, சிற்பரம், சின்மயானந்த பூரணம், சச்சிதானந்தம், சண்பகாடவி, பச்சிமம், புயங்கம், சுத்தோதனம், அதரம், திவா, அந்தகாரம், சந்தாபம், நிருபர், சினகரம், ஆவிருதி - பிரகாரம், பருப்பதம், சங்கரன், உருத்திரன், சாம்பன், பாவகன், வரசரோருகம், பூதாட்டமி, தரணிகள், இந்தீவரம், வதரிவனம், தாபதன், பச்சிமம் முதலியன.

சில சொற்கள்: தொள்ளி, துரால், தார்க்கியன் - கருடன், ககனம் - காடு, இட்டிகை, குலை, தண்ணம், வதி, கச்சளம், செத்தது - ஒப்பானது, அறல் - இருட்டு, இலேகர், கருள், முனகர் - நீசர், வீபத்து - சந்திரன், சிறுவியர், குளிறுபு, மறலி, மறல், மருந்தம், (309) கவலை, முதை, பழையர், தெவ்வி, கனோபலம், இதை, உஞ்சுகி, கஞ்சனம், பிடகை, தொன்மரம் பிறந்தை, தடந்த, தோகம் என்பன.

இவர் வாக்கில் அடிக்கடி வரும் சொற்கள்: என்னரும், வெருளறும், மறுவலும், தெவ்வி, நறுமுறுப்பு, நாக்குளற, சுழியும், கலனை என்பன.

ஆதிசேடனைப் புயங்கவேந்தன், கம்கள் ஆயிரத்தான், நாகர்கோன் என்றும், நாகலோகத்தை அரவநாடு என்றும் கூறுவர்.

பழமொழிகள்; உவமைகள்; இருதலைக்கொள்ளி எறும்பு (124 பக்), ஐந்தெழுத்து மந்திரம் அமுதம்போல்வது, சிங்கத்தால் பெறும் பயன் நரி யால் பெறுதல் (270 பக்), நெய்யொழிந்த காலை எவருங்காணச் சுடர்

மேலெழும்புதல் (272பக்), பேரிருள் நீர்காலை வெளிப்படு கள்வர்போல், மகவில்லாத மனையறம் (326 பக்), பசுத்தோலைச் சுருட்டுதல்போல் ஆகாயத்தைச் சுருட்டல், காந்தங்கண்ட இரும்பு முதலியன.

அலங்காரவகை : உருவகம், உவமை, சொற்பின்வருநிலையணி, தற்குறிப்பேற்றம், வேற்றுப்பொருள்வைப்பு, கடைநிலைத்தீவகம், மடக்கு, சிலேடை முதலியன.

ஐந்திலக்கணம், பத்துக் குற்றம், பத்து அழகு, உத்திவகை என்பன.

சைவசித்தாந்த நூற்கருத்துக்கள்: தசகாரியம், ஆதிசைவர், நான்கு பதங்கள், நால்வகைத்தொண்டு, மூவகைத்தீக்கை, முக்குணங்களின் நிறம், ஆணவமலம், கேவல சகல சுத்தநிலைகள், பந்தநிலை - பந்தம் நீங்கியநிலை, ஒருமலத்தார் விளங்கனியையும், இருமலத்தார் தேங்காயையும், மும்மலத்தார் நரந்தங்கனியையும் ஒத்தல், விபூதிவகை (332 பக்), அத்துவிதக்கலப்பு (299 பக்), நவந்தருபேதம், அட்டமூர்த்திசொரூபம் (152) பிரணவபுஷ்பம், உயிரைப்பற்றும் மூலபந்தத்தை நீக்கி இன்பம் நல்கல், ஒன்றுபத்தான ஞானம், முத்தியருள் சிவஞானம், அருட்சத்தி பதிதரல், சரியைத்தொண்டு (450 பக்), சிவகரம் சூட்டல், அத்துவசோதனை, ஞானதீக்கை, தூல சூக்கும பஞ்சாக்கரம், உபதேசம், திருவடிசூட்டல், சைவதீக்கை பெறற்குரியவர் முதலியன.

வாத்தியங்கள் : சுத்தமத்தளம், கொக்கரை, குடமுழா என்பன.


ஒரு வருணனை: 100-பக், 138 செய்யுள்:

"மரம் ஓரறிவுடைய உயிர், பரிச உணர்ச்சி ஒன்றே உடையது, உயிர் நீங்கிய பின் அது பிணமாயிற்று. ஊறு உணர்ச்சியும் நீங்கப் பெற்றது, அப்பிணவுடம்பு கோயிலுள்ளே புகுந்தது. வள்ளலார் திருமுன்பு நிலையாக நின்றது, வேறுகவுள்ள பத்திர புஷ்பங்களால் அருச்சிக்கப்பெற்றது, ஆதலால் பத்திர புஷ்பங்களைத் தாங்கி நின்றது என்க. பலத்தையும் கொடுக்கும் நிலைபெற்றது. பலம்- பிரயோசனம், பேற்றையும் உதவும் சிவமயமாயிற்று இடபத்தையும் எழுதிக்கட்டிய கொடியை மேற்கொண்டு விளங்கியது." என்று கூறிய துசத்தம்ப வருணனை எவ்வளவு சிறப்புடையதாம் என்க.

சில மடக்குவகைகள்: வானவரும் மோனவரும், ஆரணனும் நாரணனும், வழிபாடு கழிபாடு, கொங்கையும் செங்கையும், படங்கரைய மடங்கரைய என்பனவும் பிறவும்.

கோட்டுக்கோட்டுவெம்பகடு, மலைகருமலை, விடைகொண்டு கடாவுடைக்கும் (முரண்).

திருநீறு கண்மணி ஐந்தெழுத்தைப் படலந்தோறும் விதந்தெடுத்துக் கூறப்பட்டுள்ளது.



திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான்
திரிசிரபுரம்
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்

நூலாசிரியர் வரலாறு

நாகைக்காரோணப்புராண நூலாசிரியர் திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள, இதனை இவர்கள் இயற்றத்தொடங்கியகாலம் 1868 ஏப்ரல்மாதம் (விபவவருஷ ஆரம்பத்தில்) ஆகும். அஃது இவருடைய 53 ஆம் வயதாம். பிள்ளையவர்கள் பிறந்த காலம் 6-4-1815; மறைந்த காலம் 1-2-1876. இவர் தந்தையார் சிதம்பரம் பிள்ளை என்பவர். அவர் ஒரு கணக்காயராக இருந்துவந்தார். இவர் முன்னோர் மதுரைமாநகரில் ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளின் திருக்கோயிலுக்கு உரிய முத்திரைக் கணக்கர்களுள் மீன முத்திரைப்பணிக்கு உரியவர்களாக இருந்துவிளங்கினர். இப்போது ஆதிநாராயணபிள்ளை தெரு என்று வழங்கப்படும் இடத்தில் அவர்கள் வசித்துவந்தனர். சைவவேளாளர், நெய்தல்வாயிலுடையான் கோத்திரத்தினர். இவர் தாயார் அன்னத்தாச்சி என்பவர். இவர் குடும்பத்தினர் பரம்பரையாகவே தமிழ்க் கல்வி கேள்விகளிற் சிறந்து புலமைபெற்று விளங்கியவர்கள். இவர் தந்தையாரும் முறையான தமிழ்ப் பயிற்சி பெற்றுப் புலமைமிக்கவராய்ப் பாடம்சொல்லும் திறமையும் விரைவாகச் செய்யுள் செய்யும் ஆற்றலும் பெற்று விளங்கியவர்.

இவர் இளமைப்பருவத்திலே தந்தையாரிடத்திலேயே கல்வி பயின்றார். 'குலவிச்சை, கல்லாமற் பாகம் படும்' என்பதனுக்கேற்பத் தந்தையாருடைய பழக்கத்தால் வருத்தமின்றிச் செய்யுள்செய்யும் திறமை இவர்பால் வளர்ச்சியுற்று மேம்பட்டது. 'இப்பாட்டுக் கருத்தஞ் சொல்' என்பதை ஈற்றடியாக வைத்து ஒரு வெண்பாப் பாடுக என ஒருவர் கூறியவுடனே இவர் விரைவாக,

* "ஒண்கமலம் வாழ்ந்தன்ன மாகி யுரலணைந்து
தண்கயநீர்த் தூங்கித் தகுமேரூர்ந் - தெண்கதிரின்
மேயவிதத் தான்மூவ ராகும் விளம்பியதென்
தூயவிப்பாட் டுக்கருத்தஞ் சொல்."

என்று நெல்லுக்கும் திரிமூர்த்திகளுக்கும் சிலேடையாக ஒரு வெண்பாவைப் பாடிமுடித்து அவரையும் மற்றவரையும் மகிழ்வித்தார். கேட்டிருந்த பிரபு ஒருவர் ஒருவண்டி நெல் அவருக்குக் கொடுத்தனுப்பினர்.

---

* (இ - ள்) 'ஒண்கமலம்... ஆகி' இது பிரமனுக்கும் நெல்லுக்கும் சிலேடை. கமலம் - தாமரையில், நீரில்; அன்னம் - அன்னப்பறவை, சோறு; 'உரல் ... தூங்கி':

இவருடைய 15 ஆம் பிராயத்தில் தந்தையார் சிவபதமடைந்தார். இவருக்கு உதவிசெய்துவந்த அன்பர்களும் கனவான்களும் காவேரிஆச்சி என்னும் பெண்ணை இவருக்கு மணம் செய்வித்தனர். அதன்பின்பு திரிசிர புரத்திலும் அதனைச் சூழ்ந்துள்ள இடங்களிலும் உள்ள தமிழ்ப்புலவர்க ளிடம் இவர் சென்று சென்று சில நூல்களைப் பாடங்கேட்டுவந்தார். அக் காலத்தில் அங்கே இருந்த வித்துவான்கள், 1. உறையூர் முத்துவீர வாத்தியார், 2. திரிசிரபுரம் சோமசுந்தர முதலியார், 3. வீமநாயக்கன் பாளையம் இருளாண்டிவாத்தியார், 4. பாலக்கரை வீரராகவ செட்டியார், 5. கொட்டடி ஆறுமுகம் பிள்ளை, 6. கற்குடி மருதமுத்துப் பிள்ளை, 7. திரு நயம் அப்பாவையர், 8. மருதநாயகம்பிள்ளை என்பவர்களும் வேறு சிலரும் ஆவார். பிள்ளையவர்களை அப்போது ஆதரித்துவந்த பிரபுக்களும் பலர்.

திருவாவடுதுறை ஆதீன மடத்திலே முறையாகப் பல நூல்களைக் கற்றுத்தேர்ந்து, என்ன காரணத்தாலோ பிணக்குற்றுத் திரிசிரபுரத்தில் வந்து தங்கியிருந்த ஸ்ரீ வேலாயுத முனிவர்பால் இவர் பல நூல்களை ஐயந் திரிபறக் கற்றுத் தெளிந்தார். அக்காலத்தில் இவருடன் அவர்பால் பாடங் கேட்டவர் வித்துவான் ஸ்ரீ கோவிந்தபிள்ளை என்பவர். ஐந்து இலக்கணங்களையும் இவர்முறையே கற்றுத்தேர்ந்து சில பிரபந்தங்களையும் செய்யத்தொடங்கினர். பின்பு சிவதீட்சையும் க்ஷணிகலிங்க பூசையும் பெற்று அன்புடன் நாடோறும் சிவபூசை செய்து வருவாராயினர். மேலும் படிக்கும் பொருட்டு இவர் புத்தகங்களைத் தேடுகையில் ஸ்ரீ கச்சியப்ப முனிவரால் செய்யப்பெற்ற திருவானைக்காப் புராணம் ஒன்று அக்கோயில் தருமகருத்தா விட்டிலிருந்து கிடைத்தது. அதன் அருமை பெருமைகளை அறிந்து இன்புற்றூர். பின்னர், விநாயகபுராணத்தில் சில பகுதிகளும், பூவாளூர்ப் புராணமும், காஞ்சிப்புராணமும் இவருக்குக் கிடைத்தன. அவைகளையும் நன்கு ஆராய்ந்து படித்து இன்புறுவாராயினர். அதனல் இவருக்குத் திருவாவடுதுறை ஆதீனத்தின் பெருமையும், அங்கே சென்றால் தமக்குள்ள ஐயங்களைத் தீர்த்துக்கொள்வதுடன் பல நூல்களை யும் படித்தறிய வாய்ப்புண்டாகும் என்ற எண்ணமும், எந்த வழியாக வேனும் ஆதீனத்தின் தொடர்பைப் பெறவேண்டும் என்னும் விருப்பமும் பெருகியது. அப்பொழுது இவருடைய பிராயம் இருபத்தொன்று.

திருமாலுக்கும் நெல்லுக்கும் சிலேடை, உரல் அணைந்து - உரலில் யசோதையால் கட்டப்பட்டு, குற்றப்படுவதற்கு உரலை அடைந்து; கயம் நீர்த்தூங்கி - ஆழமாகிய கடலில் நித்திரைசெய்து, ஆழமாகிய நீரில்தங்கி. 'தகும்...விதத்தால்': சிவபிரா னுக்கும் நெல்லுக்கும் சிலேடை, ஏறு ஊர்ந்து - இடபவாகனத்தில் ஏறியருளி, மூட்டையாகக்கொண்டு போகப்படும்பொழுது எருத்தில் ஏறி (கடாவிடும்பொழுது ஏற்றால் ஊரப்பெற்று என்பதும் பொருந்தும்). கதிரில் - சூரியனிடத்தே, தானியக் கோத்தில். மூவர் - பிரமன் முதலிய மூவர். சொல் சொல் என்னும் ஏவல், நெல்.

அப்பால் திருவாவடுதுறை செல்ல நினைந்து வழியிலுள்ள தலங்களைத் தரிசனம் செய்துகொண்டு பட்டீச்சுரத்துக்கு வந்தார். பட்டீச்சுரத்திலே அப்போது செல்வாக்கும் செல்வமும் படைத்துப் புலவர்களைத் தாய்போலப் பாதுகாத்து வந்த நமச்சிவாயபிள்ளையின் துணைகொண்டு திருவாவடுதுறை ஆதீன மடத்தை வந்தடைந்தார். அங்கே பல காட்சிகளையும் கண்டு மகிழ்ந்து பக்தி பரவசராயினர். அப்போது 14-வது குருமகாசந்நிதானமாக விளங்கியவர்கள் வேலூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகமூர்த்திகள். அவர்கள் வடமொழி தென்மொழி நூல்களிலும் சிவாகமங்களிலும் மெய்கண்டசாத்திரம் பண்டாரசாத்திரம் சித்தநூல்கள் முதலியவற்றிலும் பயிற்சிமிக்கவர்கள்; பரம்பரையே பாடங்கேட்டவர்கள்; பாடஞ்சொல்லுதலில் மிக்க ஆற்றலுடையவர்கள்; பிரசங்கசக்தி வாய்ந்தவர்கள்; வடமொழி தென்மொழி வித்துவான்கள் பலருடைய இடையே இருந்து தினந்தோறும் அவர்களுடன் சல்லாபம் செய்துகொண்டு மகிழ்ச்சியோடு காலங்கழிப்பவர்கள் என்பதை அறிந்தார்.

குருமகாசந்நிதானத்தில் இவர் சமயமறிந்து தக்காருடன் சென்று அடியற்றமரம்போல் விழுந்து வணங்கியெழுந்து திருநீறு பெற்றுத் தாம் அவர்கள் விஷயமாக இயற்றிக்கொண்டு வந்த சில செய்யுட்களை விண்ணப்பித்துக்கொண்டார். சிலநாட்கள் சந்நிதானத்தின் உத்தரவுப்படி தங்கியிருந்தார். தமக்குக் கச்சியப்பமுனிவருடைய நூல்களில் உள்ள ஐயங்களைக்கூறிப் போக்கிக்கொண்டார். பின்பு பிரியா விடைபெற்று இவர் திரிசிரபுரம் மீண்டார். அடிக்கடி இவர் திருவாவடுதுறைக்கு வந்து சந்நிதானத்தைத் தரிசித்துத் தமக்கு வேண்டிய நூற்பொருள்களைத் தெரிந்துகொண்டு செல்வார். இவர்கள் பட்டமேற்ற காலம்: 1790-1845; 55 ஆண்டுகள் பீடத்திலிருந்தார்கள்.

இவர் பின்பு சென்னைக்குச் செல்லவேண்டிய அவசியம் நேர்ந்தது. சிலமாதங்கள் சென்னையில் தங்கியிருந்தார். அப்பொழுது சென்னையில் இருந்த வித்துவான்கள்: திருவாவடுதுறைஆதீன வித்துவான் ஸ்ரீ தாண்டவராயத்தம்பிரான், காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், எழும்பூர்த்திருவேங்கடாசல முதலியார், திருத்தணிகை - விசாகப்பெருமாளையர், திருவம்பலத்தின்னமுதம்பிள்ளை, போரூர் வாத்தியார், அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார், புரசை - அஷ்டாவதானம் சபாபதி முதலியார் முதலியவர்கள்.

காஞ்சிபுரம் சபாபதிமுதலியாரிடத்தும், திருவம்பலத்தின்னமுதம் பிள்ளையிடத்தும், திருவேங்கடாசல முதலியாரிடத்தும் சிலபலநூல்களைப் பாடங்கேட்டு வந்ததுடன், இவர் அவர்கள்பால் இருந்த அரிய நூல்களைப் பெற்றுப் பிரதிசெய்துகொண்டு அவற்றையும் முறையே பாடங்கேட்டார். ஸ்ரீ தாண்டவராயத்தம்பிரானுக்கு உயிர்த்தோழராகிய மழவை மகாலிங்க

ஐயர் நட்பும் இவருக்கு உண்டாயிற்று. இவர்புலமையையும் இவர்இயற்றிய அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழின் அருமைப்பாட்டையும் அறிந்து பெரிதும் பாராட்டி மழவை மகாலிங்க ஐயர் மகிழ்ந்தார். இவர் அவரிடம் பல ஐயங்களைக்கேட்டுத் தெளிந்தார். அவர்பாலிருந்த இலக்கணக் கொத் துரையைப் பெற்றுப் பிரதி செய்துகொண்டு அவரிடத்திலேயே பாடங் கேட்டார். அஃது ஏறக்குறைய 1839 ஆம் ஆண்டாக இருத்தல் கூடும். அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ் அச்சிற்பதிக்கப்பெற்ற காலம் 1842 ஆகும். பின்பு இவர் திரிசிரபுரத்தில் இருந்து வழக்கம்போலவே பாடஞ் சொல்லிக்கொண்டு வந்தார். அக்காலத்தில் படித்துவந்த மாணாக்கர்களுள் முக்கியமானவர் தி. சுப்பராயசெட்டியார் என்பவர். இவருடைய 29-வது பிராயத்திலே ஒருபுதல்வர் (1844) பிறந்தார்; அவருக்குத் தம்முடைய தந்தையாரின் பெயராகிய சிதம்பரம் என்ற பெயரிட்டழைத்தார். இவர் சுப்பராயசெட்டியாரைப் பதினாறு அவதானம் செய்யும்படி சிலமாதங்களில் பயிற்றுவித்து, 'சோடசாவதானி' என்ற சிறப்புப்பெயர் பெறுமாறு சிலர் வேண்டுகோளாற் செய்தார். குரோதி ஆண்டு கார்த்திகைத்திங்கள் கார்த்திகை நட்சத்திரத்தில் வேலூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகமூர்த்திகள் சிவபரிபூரணமடைந்தமை தெரிந்து மிக வருந்திப் புலம்பினார். பின்பு இவர் திருவாவடுதுறையில் இருந்த ஸ்ரீ அம்பலவாணமுனிவரிடம் கம்பரந்தாதி யைப் பாடங்கேட்டார்; அவரிடத்தும் மற்றும் அங்கே உள்ள தம்பிரான் களிடத்தும் சைவசாஸ்திரங்களை உரைகளுடன் பாடங்கேட்டுத்தெளிந்தார். அப்பொழுது அங்கே ஆதீனவித்துவான்களாகக் கந்தசாமிக் கவிராயர் என்பவரும், சரவணஓதுவார் என்பவரும் வேறு சிலரும்இருந்தனர்.

பூவாளூரிலிருந்து தியாகராசச் செட்டியார் என்பவர் திரிசிரபுரம் வந்து இவரிடம் பாடம்கேட்கத் தொடங்கியது (1845) குரோதி ஆண்டு எனத்தெரிகிறது. பின்பு திருவிழிமிழலைச் சாமிநாத கவிராயர் என்பவர் அந்த ஆண்டிலே இவர்பால் முதலில் கம்பராமாயணத்தைப் பாடங் கேட்டார். செட்டியார் பிள்ளையவர்களிடம் முதலிற் பாடங்கேட்டது திருச் சிற்றம்பலக் கோவையார் என்பர். இவர் தம்முடைய 30ஆம் பிராயமாகிய குரோதி பங்குனியில் திருவிழாவிற்குத் திருவாரூர் சென்றிருந்தபோது அன்பர்கள் வேண்டுகோளின்படி தியாகராசலீலையைப் பாடத் தொடங் கினார். பெருங்காப்பியங்கள் பலவற்றுள் தியாகராசலீலையே இவரால் முதலில்செய்யப்பெற்றது. பின்னர் உறையூர்ப் புராணம் பாடினார். இவ ருடைய 35-ஆம் பிராயத்திலே வல்லூர்த்தேவராசபிள்ளை அழைக்க இவர் இசைந்து பங்களூருக்குச்சென்று அவருக்குப்பாடம்சொன்னார். அப்போது தான் உறையூர்ப்புராணம் இவரால் பாடப்பெற்றது. குசேலோபாக்கியானம் சூதசங்கிதை என்னும் இரண்டு நூல்களையும் இவர் வல்லூர்த்தேவராச பிள்ளைக்கே உரிமையாகக் கொடுத்துவிட்டார்; அவைகள் அவர் பெய ராலேயே உலாவிவரலாயின.

பின்பு காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ், கற்குடிமாலை, வாட்போக்கிக் கலம்பகம் முதலிய பிரபந்தங்களைச் செய்தார். கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரிடம் இலக்கணவிளக்கத்தை இவர்பாடங்கேட்டார். 1851ல் செவ்வந்திப்புராணம் இவரால் பதிப்பிக்கப்பட்டது.

நாகூர் குலாம்காதர் நாவலர் என்னும் மகம்மதியர் ஒருவர் சீருப் புராணம் முதலியவற்றையும், புதுச்சேரி சவராயலு நாயகர் என்னும் கிறித்தவர் தேம்பாவணி, திருக்காவலூர்த் திருக்கலம்பகம் முதலிய பல நூல்களையும் இவரிடம் கற்றுத்தெளிந்தனர்.

முனிசிப் வேதநாயகம் பிள்ளையும் இவர் மாணவரே; இந்த வேத நாயகம்பிள்ளையின் அருமைபெருமைகளைக் குறித்துக் குளத்தூர்க் கோவை என்னும் பிரபந்தம் இவரால் பாடப்பெற்றது (1853). ஆரியங்காவற்பிள்ளை, அழகிரிராசு என்பவர்களும் இவரிடத்துப் பாடங்கேட்டுச் சிறந்தவர்களே. சித்திரச் சத்திரப் புகழ்மாலையும், வியாசைக்கோவையும் இவர் பாடியனவே. இஃது இவரது 39 ஆம் பிராயத்திலாகும். சிதம்பரேசர் மாலையும் இவர் செய்த பிரபந்தமே.

சென்னையில் கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலுள்ள திருவாவடுதுறை மடத்திலிருந்து விளங்கிய ஸ்ரீ தாண்டவராயத்தம்பிரான் சுவாமிகள் கல்லிடைக்குறிச்சி செல்வதற்குப் பயணமாகி 1854-ல் திரிசிரபுரம் வந்து மௌனசுவாமிகள் மடத்தில் தங்கியிருந்தபோது பேரூர்ப்புராணத்தைப் பெற்று 1854 (ஆனந்த) வருடத்தில் இவர் பிரதிபண்ணிக் கொண்டார். இவர் சிலமாணுக்கருடன் சென்னைக்குப்பிரயாணமாகிச் சீகாழிக்கு வந்தனர். அக்காலத்தில் சீகாழியில் வேதநாயகம்பிள்ளை முனிசிபாக இருந்தார்: அப்பொழுது இவருடைய பிராயம் 45. சிலர் வேண்டுகோளின்படி சில மாதங்கள் சீகாழியில் தங்கியிருந்து சீகாழிக்கோவையை இயற்றிப் பெருஞ் சிறப்புடன் அரங்கேற்றினர். அரங்கேற்றிய காலம் (1861) சித்தார்த்தி புரட்டாசி எனபர். அக்காலத்திலே வந்து இவர்பால் பலர் பாடங்கேட்டு வந்தார்கள். அதனல் சென்னைப் பயணம் தடைபட்டது.

சீகாழியில் இவர் இருந்தபொழுது வந்து பாடங்கேட்டவர்கள்; முத்தைய வாத்தியார் குமாரர் சிதம்பர வாத்தியார், சீயாலம் சிவ சிதம்பரம் பிள்ளை, திருப்பாதிரிப்புலியூர்ச் சிவ சிதம்பர முதலியார், சிதம்பரம் வாம தேவ முருகபட்டாரகர், வல்லம் கந்தசாமிபிள்ளை, மாயூரம் நடராசபிள்ளை, தில்லைவிடங்கன் முத்துக்குமாரசாமிபிள்ளை, திட்டைச் சோமசுந்தரம்பிள்ளை முதலியோர்.

சீகாழியில் இருந்த காலத்தில் இவர் அடிக்கடி சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராசதரிசனம் செய்துவருவதுண்டு; அப்போது தில்லை யமக

அந்தாதியை இயற்றினர்; திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழும் அக்காலத்துப் பாடப்பெற்றதே. 1860 ஆம் ஆண்டு (ரௌத்திரி) இவர் மாயூரத்தில் இருக்கத் தொடங்கினர். பன்னிருவர் அன்புடன் இவர் செலவுக்குப் பணங்கொடுத்து ஆதரித்தனர். மாயூரத்திலே இவர்பால் பலர் பாடங்கேட்டு வந்தனர். மாயூரத்தில் அப்போதிருந்த வித்துவான்கள் 1. தர்மதானபுரம் கண்ணுவையர், 2. மாயூரம் பட்டமங்கலம் சபாபதி ஐயர், 3. கூறைநாட்டுச் சாமிநாத வாத்தியார் முதலியோர். பல வடமொழி வித்வான்களும், பல சங்கீத வித்வான்களும் அங்கே இருந்தனர். அவர்கள் யாவரும் இவரிடம் வந்து சல்லாபம் செய்துபோவார்கள்.

மாயூரத்திலிருந்தபோது இவர் அடிக்கடி திருவாவடுதுறைக்குச் சென்று வருவார். சின்னப்பட்டத்திலிருந்த மேலகரம்சுப்பிரமணியதேசிகர் இவருடன் பேசியிருந்து மகிழ்வது வழக்கம். இவரை ஸ்ரீ தாண்டவராயத் தம்பிரான் மூலமாக முன்னமே அறிந்தவராகலின், நேரில் பார்த்துப்பழகிய பின்னர் அதிகமான அன்பு ஏற்பட்டது. அப்போது 15வது குருமகா சந்நிதானம் ஸ்ரீ அம்பலவாண தேசிகமூர்த்திகளிடம் விண்ணப்பித்து இவரை ஆதீனவித்துவானாக நியமித்தார்கள். அப்போது மடத்திலே படித்தவர்கள் நமச்சிவாயத்தம்பிரான், மதுரை இராமசாமிபிள்ளை, தேவகோட்டை நாராயணசெட்டியார் முதலியவர்கள். அவர்கள் அப்பொழுதே சிறந்த வித்துவான்களாக மதிக்கக்கூடிய நிலையில் இருந்தவர்கள்.

இவர் ஸ்ரீ அம்பலவாணதேசிகமூர்த்திகள் மீது கலம்பகம் ஒன்று இயற்றி அரங்கேற்றினர். அக்கலம்பகம் எல்லாவற்றினும் சிறந்து பொருள் நயம் செறிந்து சைவசம்பிரதாயம் ஆதீன சம்பிரதாயங்களை விளக்கிக்கொண்டிருத்தலைப் பாராட்டி இவருக்கு 'மகாவித்துவான்' என்னும் பட்டத்தை மகாசந்நிதானம் வழங்கியருளிப் பல சிறப்புக்களையும் கட்டளையிட்டருளினர்கள். ரௌத்திரி (1860) வருஷத்தில் திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ், ஆற்றூர்ப்புராணம், விளத்தொட்டிப்புராணம், திருவாளொளி புற்றூர்ப்புராணம் முதலியன இவரால் இயற்றப்பெற்றன. அதன் பின்பு ஸ்ரீ அம்பலவாணதேசிகர்மீது பிள்ளைத்தமிழொன்று இவரால் செய்யப்பட்டது; மிக்க சுவையுடையது. துன்மதி ((1861) வருஷத்தில் ஸ்ரீ சச்சிதானந்ததேசிகர் மாலையும், திருக்குறுக்கைப் புராணமும் தருமை ஆதீன மகாசந்நிதானத்தின் விருப்பப்படி இயற்றப்பட்டன. துந்துபி (1862) ஆண்டில் திருஞானசம்பந்தமூர்த்தி பதிற்றுப்பத்தந்தாதியும் ஆனந்தக்களிப்பும் இவரால் இயற்றப்பட்டன. பின்பு குருபரம்பரை அகவல், மண்ணிப்படிக்கரைப்புராணம் (1864) இரத்தாட்சியில் இயற்றி அரங்கேற்றப்பட்டது. (1864) வைகாசி மாதத்தில் இவருக்கு நிர்வாண தீட்சை நடந்தேறியது. கோயிலூர்ப்புராணம், கும்பகோணபுராணம் (1865) மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ் (1866), சூரைமாநகர்ப்புராணம், கண்ட

தேவிப்புராணம், திருத்துருத்திப்புராணம், திருவாவடுதுறை யமகவந்தாதி தனியூர்ப்புராணம், மாயூரப்புராணம் (1868), ஸ்ரீ காசிரகசியம், வீரவனப் புராணம், கன்னபுரம் பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ் முதலியவற்றையும் இவர் இயற்றிப் பெருஞ் சிறப்புக்களைப்பெற்றார்.

“இவருடைய மாணாக்கர்களாகிய புரசைபாக்கம் பொன்னம்பல முதலியாரும், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் குமாரராகிய சாமிநாத தேசிகரும், கும்பகோணம் காலேஜில் ஒருவர் காலத்திற்குப் பின்பு ஒருவர் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பெற்று வேலைபார்த்து வந்தார்கள். சாமிநாததேசிகர் திருவனந்தபுரத்துக்குச் சென்றபின் தியாகராசசெட்டியார் (3—7—1865) அவ்வேலையில் அமர்த்தப்பெற்றார்.”

“பிள்ளையவர்கள் திரிசிரபுரத்தில் இருக்கையில் வந்து படித்தவர்களுள் தெய்வநாயகம் பிள்ளை என்பவரும் ஒருவர். அவர் பிள்ளை அவர்களிடம் படித்து மிக்க புகழ்பெற்றவர். அவர்பால் தியாகராச செட்டியாருக்கு அடுத்தபடியான மதிப்பு யாவருக்கும் இருந்து வந்தது.” கும்பகோணம் பெரியண்ண பிள்ளையும், பிள்ளையவர்கள் மாணவர்களில் சிறந்து விளங்கினர்.

விபவ வருஷ ஆரம்பத்தில் (1868) திருநாகைக்காரோணப்புராணம் இவரால் இயற்றப்பெற்றது. நாகபட்டினத்தில் ஒருவருஷ காலத்திற்கு மேல் இருந்துவந்தார். (1869) ஆம் ஆண்டில் மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் பெரியபட்டத்தில் எழுந்தருளினார்கள். பின்பு சுப்பிரமணிய தேசிகர் மாலை, நெஞ்சுவிடுதூது என்னும் பிரபந்தங்களை இவர் இயற்றினார். அம்பர்ப்புராணம் (1869) திருவிடைமருதூருலா (1870), ஆதி குமர குருபர சுவாமிகள் சரித்திரம் இவைகள் இவரால் இயற்றப்பட்டன. ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையரவர்கள் 1871 ஆம் ஆண்டில் (பிரசோற்பத்தி) தமது பதினேழாம் பிராயத்திலே இவரிடத்திலே மாணாக்கராக அவர் தந்தையாரால் ஒப்படை செய்யப்பெற்றார்கள். திருப்பெருந்துறைப் புராணம் (1873), சேக்கிழார் பிள்ளைத்தமிழ் முதலியன இவரால் இயற்றப்பெற்று அரங்கேறின. குருபூசை மான்மியம் ஒன்று இவரால் செய்யப்பெற்றது; அது பதினைந்து செய்யுட்களையுடையது. ஸ்ரீ சிவஞானயோகிகள் சரித்திரம் ஸ்ரீகுமாரசாமித்தம்பிரான் விருப்பத்தின்படி செய்யப்பெற்றது. நடுநாட்டு வருணனையில் பத்துப் பாடல்கள் வரையில்தான் நடைபெற்றது. மருதவாணர் பதிகம் குமாரசாமித் தம்பிரான் விருப்பப்படி நோய்நீக்கத்தின் பொருட்டுப் பாடப்பெற்றது. இவருக்கு அறுபதாம் பிராயம் ஆகிவிட்டமையால் 1875ல் பங்குனி மாதத்தில் சஷ்டியப்த பூர்த்தி என்னும் விசேஷத்தை மடத்துச் செலவிலிருந்தே மிகவும் சிறப்பாக ஸ்ரீ மகா சந்நிதானம் நடத்துவித்தருளியது. திருவிடைமருதூர்த் திரிபந்தாதிதான் இறுதியில் இவரால் பாடப்பெற்றவற்றுள் முற்றுப்பெற்ற பிரபந்தம்.

இவர் இயற்றிய நூல்கள் பலவற்றுள் தெரியாதவை சில. தெரிந்தவற்றுள் புராணங்கள் 22; பிற காப்பியங்கள் 6; பிரபந்தங்கள் 45; தனிப்பாடல்கள் அளவிறந்தன. இவருடைய காலிலும் அடிவயிற்றிலும் வீக்கத்தைத் தோற்றுவித்துக்கொண்டு ஒருவகையான நோய் உண்டாயிற்று. இவருடையதேகம் வரவரத் தளர்ச்சியடையத் தொடங்கியது; ஆகாரம் செல்லவில்லை. மகா சந்நிதானத்தின் கட்டளைப்படி திருவிடைமருதூருக்கு இவரை அனுப்பி வைத்தியம்செய்தும் குணமடையவில்லை. அதனையறிந்து இவரைத் திருவாவடுதுறையிலேயே வந்திருக்கும்படியாகச் செய்தார்கள். தைமீ 20 ஆம் தேதி மங்களவாரம் (1—2—1876) காலையிலிருந்தே இவருக்குத் தேகத்தளர்ச்சி முதலியன அதிகரித்துவந்தன. அன்றையதினம் கோயிலில் இடபவாகனக் காட்சியாகலின் ஸ்ரீ கோமுத்தீசுவரர் இடபாரூடராகத் திருவீதிக்கு எழுந்தருளினர். விபூதிப் பிரசாதத்தை இவர் மெல்ல வாங்கித் தரித்துக்கொண்டார். பதினைந்து நாழிகைக்குமேல் தேகத்தில் ஒரு துவட்சியும் சுவாதீனத்தப்பும் உண்டாயின. கண்ணை மூடிக்கொண்டே அடைக்கலப்பத்தை வாசிக்கக் கேட்டுவந்தார். உடலில் ஓரசைவு உண்டாயிற்று. வலக்கண்ணைத் திறந்தார், அதுதான் ஸ்ரீநடராச மூர்த்தியினுடைய குஞ்சித சரணத்தை இவர் அடைந்ததைக் காட்டும் குறிப்பாகும். அப்போது இவருக்குப் பிராயம் அறுபத்தொன்று ஆகும்.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சிதம்பரம் பிள்ளைக்கு எழுதிய கடிதத்தில், (யுவ—மாசி—19௳)

"தாம் எழுதி அனுப்பிய கடிதம் பெற்று வாசித்துச் சகிக்கலாற்றுத் துக்கமுற்று யாக்கை நிலையாமையை நினைந்து ஒருவாறு தெளிந்தேன். தம்முடைய தந்தையாராகிய ம-௱-௱-ஸ்ரீ பிள்ளையவர்கள் தமிழ் வழங்கு நிலமெங்கும் உலகம் அழியுங்காறும் தங்கள் புகழுடம்பை நிறுத்தி விட்டுச் சென்றமையே தமக்கு வாய்த்ததொரு பெரும் பாக்கியம். இன்னும் சிலகாலம் இருப்பார்களாயின், இன்னும் சில காரியங்கள் அவர்களால் செய்யப்பட்டு விளங்கும். 'வினைதா னொழிந்தாற் றினைப்போ தளவு நில்லாது' என்னும் திருவாக்கை நினைந்து, அவர்கள் அருமையை அறிந்தோர் யாவரும் தங்கள் துக்கத்தை மாற்றிக்கொள்வதே தகுதி." … …

என்று எழுதி அனுப்பியிருந்தனர் என்ப.

இரங்கற் செய்யுட்களில் சில

அந்தக் காலத்தில் அயலூருக்குச் சென்றிருந்த மகாவைத்தியநாத ஐயரும், அவருடைய தமையனாராகிய இராமசாமி ஐயரும் பிள்ளையவர்கள் தேகவியோகமடைந்த செய்தியைக்கேட்டு மிகவும் வருந்தினர்கள். அப்பொழுது இராமஸ்வாமி ஐயர் மனம் வருந்திப் பாடிய பாடல்கள் வருமாறு:

(வெண்பா)

*" கும்பனெனி லன்னேன் குறியவனும் வானுலகிற்
கம்பனெனி லன்னேனுங் கம்பனும் - அம்புவியில்
வேறுளார் வேறுளரா மீனாட்சி சுந்தரநின்
கூறெவரென் றேயகன்றாய் கூறு."

(விருத்தம்)

" எனைவைத்தி யெனைவைத்தி யெனப்பதங்க
ளிடையிடைநின் றிரந்து வேண்ட
இனிவைப்பா மினிவைப்பாம் பொறுத்திடுமின்
பொறுத்திடுமின் என்று கூறி
நினைவுற்ற வொருகடிகைக் களவில்கவித்
தொடைதொடுத்து நிமலர் பூணப்
புனைவுற்ற மீனாட்சி சுந்தரவள்
ளலைப்போல்வார் புவியில் யாரே."

மகாவைத்தியநாதையர் பாடிய செய்யுட்கள் வருமாறு

(கொச்சகக்கலிப்பா)

" தூவலரு மீனாட்சி சுந்தரப்பேர் கொண்டிலகும்
நாவலர்பி ரானரன்தாள் நண்ணினனன் னானிடத்தே
ஆவலரா மாணவக ராரிடத்தே தமிழ்பயில்வார்
சேவலர்பி ரான்புகழ்சால் செழுங்கவியாப் பவரெவரே.!"

" விண்ணாடும் பெருங்கவிஞன் மீனாட்சி சுந்தரவேள்
மண்ணாத மணியனையான் மாதேவன் மலரடிசார்ந்
துண்ணாநின் றனனின்பம் உலப்புறுவார் மாணவரென்
றெண்ணாநின் றனனிலையே யென்னேயிவ் வுலகியல்பே.!"

குறிப்பு:- இவ்வரலாறு மகாமகோபாத்தியாய ஸ்ரீமத் ஐயரவர்கள் எழுதிய பிள்ளையவர்கள் சரித்திரத்திலிருந்து தொகுத்தெழுதப்பெற்றது.

---

* கும்பன் - அகத்தியமுனிவர். கம்பன்ஆம் - நடுக்கமுடையவன் ஆவான்; கம்பம் - நடுக்கம்.

திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

"செந்துவர் வாய்க்கருங் கண்ணிணை வெண்ணகைத் தேன்மொழியார்
வந்து வலஞ்செய்து மாநட மாட மலிந்தசெல்வக்
கந்த மலிபொழில் சூழ்கட ணுகைக்கா ரோணமென்றும்
சிந்தைசெய் வாரைப் பிரியா திருக்குந் திருமங்கையே."

திருச்சிற்றம்பலம்

இந்நூல் உரையில் எடுத்தாண்ட மேற்கோள் நூற்பெயர் அகராதி

அகநானூறு: 30
அதர்வசிகை: 156
அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்: 169
அம்பர்ப்புராணம்: 41, 50, 87, 534
அருணைக்கலம்பகம்: 321
அழகர் கலம்பகம்: 357
இரட்டையர் பாடல்: 145
இலிங்கபுராணம்: 259
உண்மைவிளக்கம்: 151, 393, 396
உதயணன் கதை: 137, 338, 339, 340
ஐங்குறு நூறு: 221
கந்தபுராணம்: 16, 150, 156, 188, 272, 321, 527
கந்தர் கலிவெண்பா: 129
கமலாலயபுராணம்: 370
கம்பராமாயணம்: 47, 206
கலித்தொகை: 338
காஞ்சிப்புராணம்: 10, 13, 27, 51, 116, 128, 134, 157, 158, 188, 250, 367, 371, 528
குறுந்தொகை: 30
கேனோபநிடதம்: 16
கொங்குமண்டல சதகம்: 202
கொன்றைவேந்தன்: 529
சதுர்வேததாற்பரியசங்கிரகம்: 155
சாமவேதம்: 543
சிதம்பரச்செய்யுட்கோவை: 341
சித்தாந்தசாராவளி: 294
சிலப்பதிகாரம்: 35, 470
சிவஞானசித்தியார்: 27, 165, 166, 188, 259, 341, 385, 580, 635
சிவஞானபோதம்: 580
சிவஞானமாபாடியம்: 43, 188
சிவதத்துவவிவேகம்: 155, 156
சிவதருமோத்தரம்: 198, 573
சீகாழிப்புராணம்: 275

சீவகசிந்தாமணி : 77, 340, 341, 617
சூடாமணிநிகண்டு : 316, 647
செவ்வந்திப்புராணம்: 32, 357
தக்கயாகப்பரணி : 243, 615
தனிப்பாடல்
தனியூர்ப்புராணம்: 157
தாயுமானவர் பாடல்: 329, 469, 520
தியாகராச லீலை: 16, 31, 34, 43, 68
திருக்கழுக்குன்றச் சிலேடை: 534
திருக்களிற்றுப்படியார்: 145
திருக்காளத்திப் புராணம்: 616
திருக்குடந்தைப் புராணம்: 82, 238
திருக்குறள்: 22, 26, 38, 88, 107, 176, 196, 206, 246, 303, 348, 372, 379, 469, 621
திருக்குற்றாலச் சிலேடை: 262
திருக்குற்றாலத்தலபுராணம்: 166, 273
திருக்கோவையார்: 331, 341
திருத்தணிகைப் புராணம்: 43, 68, 80
திருப்பல்லாண்டு: 32
திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்: 140
திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்: 140
திருப்பெருந்துறைப் புராணம்: 105, 140
திருமந்திரம்: 183, 396
திருமுருகாற்றுப்படை: 80, 167, 209
திருவரங்கத்தந்தாதி: 64, 315
திருவருட்பயன்: 329
திருவாசகம்: 11, 127, 151, 152, 202, 341, 616
திருவாரூர் உலா: 645
திருவாரூர்க்கோவை: 144
திருவாரூர்நான்மணிமாலை: 372, 495
திருவாரூர்ப்புராணம்: 370
திருவானைக்காப்புராணம்: 5, 7
திருவிசைப்பா: 318
திருவிடைமருதூருலா: 357
திருவிளையாடற்புராணம் (பரஞ்சோதி): 2, 45, 142, 151, 224, 275, 345, 635, 648
திருவையாற்றுப்புராணம்: 144
திவாகரம்: 90, 216, 543
துறைசையமகவந்தாதி: 565

தேவாரம்: 3, 8, 51, 87, 92, 129, 140, 141, 143, 144, 145, 146, 151, 152, 155, 153, 159, 167, 183, 274, 275, 276, 293, 298, 304, 312, 313, 316, 317, 328, 358, 368, 388, 469, 520, 527, 532, 564, 566, 567, 579, 633, 636, 648
தொல்காப்பியம்: 2, 28, 32, 33, 37, 91, 93, 221, 277, 470, 504, 529, 641
நம்பிதிருவிளையாடற்புராணம்: 202
நல்வழி: 315
நற்றிணை: 30
நன்னூல் விருத்தி: 259, 390, 641
நாடகத்தமிழ்ச் சூத்திம்: 137
நாராயணோபநிடதம்: 187
நாலடியார்: 38, 49, 206, 246, 315, 529
நான்மணிக்கடிகை: 372
நீதிநெறி விளக்கம்: 326
நைடதம்: 346, 348
பட்டினப்பாலை: 40, 88
பதிற்றுப்பத்து: 92, 259
பரிபாடல்: 128
பன்னிருபடலம்: 381
பிரபுலிங்க லீலை: 8, 27, 61
புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம்: 142
புறநானூறு: 30, 38, 91, 390, 497, 641
புறப்பொருள் வெண்பா மாலை: 381
பெரியபுராணம்: 10, 115, 143, 638, 639, 640
பெரும்பாணாற்றுப்படை: 31, 128
பேரூர்ப்புராணம்: 82, 224
மச்சபுராணம்: 294
மணிமேகலை: 27, 470
மண்ணிப்படிக்கரைப் புராணம்: 105, 316
மதுரைக்காஞ்சி: 137, 559
மைத்திராயணோபநிடதம்: 154
வாயுசங்கிதை: 294
விநாயகபுராணம்: 88
வில்லிபாரதம்: 2, 86, 91, 138, 165, 259
விளத்தொட்டிப் புராணம்: 10
விறலிவிடுதூது: 83

சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்

பண் - கொல்லிக் கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

“ வேம்பினொடு தீங்கரும்பு விரவியெனைத் தீர்த்தீர்
விருத்திநா னுமைவேண்டத் துருத்திபுக்கங் கிருந்தீர்
பாம்பினொடு படர்சடைக ளவைகாட்டி வெருட்டிப்
பகட்டநா னொட்டுவனோ பலகாலு முழன்றேன்
சேம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கில் திகழும்
திருவாரூர் புக்கிருந்த தீவண்ணர் நீரே
காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே.”

திருச்சிற்றம்பலம்

படல அகராதி

படல எண்	படலம்	பாடல்	பக்கம்
15	அகத்தீசப்படலம்	95	269
38	அக்கினி பூசித்தபடலம்	19	541
29	அரகேசரி முதலியோர் முத்தியடைந்தபடலம்	71	467
59	அதிபத்தப்படலம்	35	653
	அவையடக்கம்	12	15
6	ஆதிபுராணப்படலம்	37	123
49	இந்திரன் சாபந்தீர்ந்தபடலம்	10	607
23	இராமநாதப்படலம்	25	406
17	இயமன் பூசித்தபடலம்	41	303
25	எழுமுனிவர் முதலியோர் பூசித்தபடலம்	18	421
1	கடவுள்வாழ்த்து	29	1
24	கயிலாயநாதப்படலம்	39	412
13	காகதீர்த்தப்படலம்	70	242
33	கார்த்தியாயனர் பூசித்தபடலம்	19	515
20	கார்முகேசப்படலம்	29	364
48	காளகண்டப்படலம்	22	602
32	கோசிகன் பூசித்தபடலம்	32	510
60	சட்டைநாதப்படலம்	51	662
53	சண்டதருமன் பூசித்தபடலம்	11	621
47	சயதுங்கப்படலம்	28	596
14	சறுவதீர்த்தப்படலம்	27	259
22	சனிப்பிரதிட்டைப்படலம்	26	400
30	சாலீசுகன் முத்திபெற்றபடலம்	20	489
27	சித்தாச்சிரமப்படலம்	47	446
	சிறப்புப்பாயிரம்	2	19
58	சுந்தரப்படலம்	27	644
21	சுந்தரவிடங்கப்படலம்	115	369
56	ஞானசம்பந்தப்படலம்	22	632
41	தருமபுஞ்சன் முத்தியடைந்தபடலம்	40	554
50	தருமன் பூசித்தபடலம்	15	610
7	தலவிசேடப்படலம்	51	133
3	திருநகரப்படலம்	151	55

2	திருநாட்டுப்படலம்	120	20
31	தேவசானித்தியபுர மான்மியப்படலம்	65	494
11	தேவதீர்த்தப்படலம்	139	195
40	தேவர்கள் பூசித்தபடலம்	13	551
26	நந்திநாதப்படலம்	68	426
16	நடுத்தலேசப்படலம்	32	294
42	நரபாகன் முத்தியடைந்தபடலம்	40	563
19	நாகநாதப்படலம்	147	325
52	நிருகன் பூசித்தபடலம்	10	618
4	நைமிசப்படலம்	36	105
61	நைமிசமுனிவர் பூசித்தபடலம்	24	674
28	பஞ்சகுரோச மான்மியப்படலம்	31	459
54	பத்திரசேனன் பூசித்தபடலம்	14	624
37	பாண்டியன் கயநோய்தீர்த்தபடலம்	17	537
34	பார்ப்பதீச்சுர மான்மியப்படலம்	14	518
43	பாற்கரப்படலம்	50	571
36	பிரமன் பூசித்தபடலம்	25	529
8	புண்டரீகமுனிவர் முதற்காட்சியுரைத்தபடலம்	56	148
9	புண்டரீகமுனிவர் 2-ம் காட்சியுரைத்தபடலம்	55	165
10	புண்டரீகமுனிவர் 3-ம் காட்சியுரைத்தபடலம்	51	181
5	புராண வரலாற்றுப்படலம்	25	117
51	புரோகிதப்படலம்	15	614
39	புன்னுகவனப்படலம்	21	546
44	மித்திரப்படலம்	15	583
35	முசுகுந்தன் பிரமகத்திதீர்த்தபடலம்	25	522
12	முனிதீர்த்தப்படலம்	60	228
55	மூகைபூசித்தபடலம்	16	628
57	வாகீசப்படலம்	20	638
45	விசித்திரகவசப்படலம்	20	587
46	விடூரதன் சாபந்தீர்ந்தபடலம்	15	592
18	விண்டுநாதப்படலம்	31	314

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருநாகைக்காரோணப்புராணம்

கடவுள் வாழ்த்து

காப்பு

மாமேவு தந்தையொரு மருப்பையென
விளித்திடத்தன் மௌலி யாய
தூமேவு பிறையொருபாற் சொருகாவத்
தந்தையெதிர் தோன்ற நின்று
பாமேவும் ஒருமருப்ப னியானோநீ
யோதெரிந்து பகரா யென்று
பூமேவு நகைகொளுநா காபரணக்
களிற்றிருதாள் போற்றி வாழ்வாம். 1

குறிப்புரை : மாமேவு தந்தை: மா-பெருமை. தந்தை-சிவபெருமான். ஒரு மருப்பை - ஒற்றைக்கொம்பையுடையவனே: விளி. மருப்பை - மருப்பை உடையவன். மருப்பு ஐ எனினும் ஆம்; ஐ - கடவுள். விளித்திட - அழைக்க. மௌலி - கிரீடம். மௌலியாய தூமேவு பிறை - முடியில் பொருந்திய பிறைச்சந்திரன். ஒருபால் - ஒரு பக்கத்தில்: என்றது ஓடிந்த கொம்பை உடைய பக்கத்தை. ஒருமருப்பன் நீயோ யானோ - ஒற்றைக் கொம்பை உடையவன் நீயோ நானோ. ஒருபால் பிறைசெருகி, யான் இருமருப்பன் ஆதலால் ஒரு மருப்பன் அல்லன், பன்றிக்கொம்பைத் தரித்தவர் ஆதலால் நீயே ஒரு மருப்பன் எனவும் பொருள்கொள்ள நின்றது. ஓகாரம் முன்னர் எதிர்மறைக் கண்ணும், பின்னர் பிரிநிலைக்கண்ணும் வந்தது. தெரிந்து - ஆராய்ந்து. பூமேவும் நகை - அழகிய சிரிப்பு: மந்தகாசம். நாகாபரணக்களிறு - தல விநாயகர்.

மாவடிவிநாயகர்

அலகோட்டு பெருங்கருணைத் தந்தையைச்சூழ்ந்
தேற்றதுமொன் றமையா தென்றே
வலகோட்டு மிசைப்படுநீர்ப் பொன்னியிற்றேம்
படுபல்கனி வழங்க லோர்ந்து

நலகோட்டு மதிசடைநின் றெழுக்குவதால்
சடையனைத்து நனைவுற் றேங்கு
பலகோட்டு மாவடிவா மொருகோட்டு
மாவடியைப் பரவி வாழ்வாம். 2

கு - ரை: அலகு ஓட்டு - அளவில்லாத. தந்தையை - சிவபெருமானை. ஏற்றதும் ஒன்று - பெற்றுக்கொண்டதுமாகிய ஒரு மாங்கனி. வல கோட்டு மிசை - வலிய கரையின்மேல்: கோடு - கரை. பொன்னி - காவிரிநதி. தேம் - இனிமை. ஓர்ந்து - ஆராய்ந்து. நல கோட்டு மதி - நல்ல வளைந்த சந்திரன். சடைநின்று - சடையிலிருந்து. சடையனைத்தும் - வேர் முழுவதும். பல கோட்டு மா அடி - பல கிளைகளையுடைய மாமரத்தின் கீழ். ஒரு கோட்டு மா - ஒற்றைக் கொம்பையுடைய யானைமுகப்பிள்ளையார்: மா-யானை.

காயாரோகணநாதர்

சீர்பூத்த வானவரு மோனவருந்
தவராசிச் செல்வ வேந்தும்
பார்பூத்த வாரணனு நாரணனுங்
காரணனும் படியுள் ளோர்ந்து
நார்பூத்த வழிபாடு கழிபாடு
கொளாதியற்றி நயக்க மேவுங்
கார்பூத்த கடனாகைக் காயாரோ
கணப்பெருமான் கழலுட் கொள்வாம். 3

கு - ரை: வானவர் - தேவர்கள். மோனவர் - மௌனிகள். தவராசிச் செல்வவேந்து - இந்திரன். தவராசி - மிக்க தவம்: என்றது நூறு அசுவமேத யாகம் செய்தமை நோக்கியது. பார்பூத்த - உலகத்தைத் தோற்றுவித்த. ஆரணன் - வேதன். காரணன் ஆம்படி - தங்களுக்கெல்லாம் நிமித்த காரணனாயிருக்குந் தன்மையை. உள் ஓர்ந்து - மனத்திற் கொண்டு. நார்பூத்த வழிபாடு – அன்போடு செய்யும் பூசனை. கழிபாடு கொளாது - நீங்காமல். நயக்க - விரும்ப. காயாரோகணப் பெருமான் - இத்தலத்தில் உள்ள சிவபெருமான்.

ஆதிபுராணர்

இதுவுமது

அருவமுத லொருமூன்றுள் கட்புலனு
வனவிரண்டா லவற்று ளெல்லா
உருவமுமுண் டாக்கிடுவித் துபயமே
யெனநெரித்தாங் கொலித்துப் பொங்கி

வெருவவெழு கடலெழுங்கா லிலிங்கமா
யதினின்றும் வேருய்க் காட்சி
மருவமுனி வரர்க்குதவு மாதிபுரா
ணப்பெருமான் மலர்த்தாள் போற்றி. 4

கு - ரை : அருவம் முதல் ஒருமூன்று - அருவம், அருவுருவம், உருவம். அருவமாவன: சிவம், சத்தி, நாதம், விந்து. அருவுருவமாவது - சதாசிவ மூர்த்தி. உருவமாவன : மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரமன். கட்புலனுவன இரண்டு - உருவம், அருவுருவம். உபயம் - ரூபாரூபம். ஒலித்து - தழைத்து. வெருவ - அஞ்ச. எழுகடல் - ஏழுகடல்கள். இலிங்க மாய் - இலிங்க வடிவாய். வேருய் - சோமாஸ்கந்த ரூபமாய். ஆதிபுராணர் - இத்தலத்துச் சிவபெருமான்.

கருந்தடங்கணம்மை

கருந்தடங்க ணம்மையுரூர் தமைச்சாரா வெங்கோபக் கடுங்க டாப்பா
கருந்தடங்க ணம்மையெவன் செயுமனமே மதனுரோர் காற்றீ ராமோ
கருந்தடங்க ணம்மையுறப் பரப்பியமர்க் கினுமெவனுங் கடனு கைக்கட்
கருந்தடங்க ணம்மையிரு கமலமலர்ச் சேவடிகள் கருது வாமே. 5

இ - ள் : மனமே - நெஞ்சமே. கரு தடம் கண் அம்மை உரூர்தமை - பெரிய மார்க்கத்தைக் கருதாநின்ற வருபிறப்பைப் பொருந்தாதாரை; சாரா வெம் கோபம் கடிகடாப் பாகர் - சாராத வெவ்விய கோபத்தையுடைய அச்சத்தைத் தராநின்ற எருமைக்கடா உகைப்பவரால்; உந்து அடங்கள் நம்மை எவன் செய்யும் - செலுத்தப்படாநின்ற சலங்கள் நம்மை யாது செய்யும்; (ஒன்றும் செய்யாது என்றபடி) மதனுர் ஓர்கால் தீரா மோகரும் தள்தம் கணம் - மன்மதரானவர் ஒருகாலத்தும் தீராத மோகத்தை உடையாரும் தள்ளாநின்ற தமது கணமாகிய மாதர் கூட்டத்தை; மை உற பரப்பி அமர்க்கினும் எவன் ஆம் - மயக்கம் மிகப் பரப்பிப் போர் செய்யினும் யாது ஆகும்; கடல்நாகைக்கண் கருந்தடங்கணம்மை இருகமல மலர் சேவடிகள் கருதுவாம் - கடலடுத்த நாகைக் காரோணத்துக்கண் எழுந்தருளிய நீலாய தாட்சி அம்மையினது இரண்டு தாமரைமலர் போன்ற சிவந்த திருவடிகளைச் சிந்திப்பாம் என்றவாறு.

சிவபிராட்டியார் திருவடிகளைச் சிந்திக்கின் இம்மையில் மன்மதன் செய்யும் துன்பமும் மறுமையில் இயமன் செய்யும் துன்பமும் இல்லை என்பது கருத்து.

பெரிய மார்க்கமென்றது முத்திமார்க்கம். வருபிறப்பைப் பொருந் தாதார் அடியார். நீல ஆயத அட்சி - கரிய விசாலமாய கண்ணை உடையவளென்பது பொருள். கடி என்னும் எழுத்துப் பிரிந்திசைக்கப்பட்டா வுரிச்சொல்; பிறிதிலக்கணமாகக் கடுவெனத் தன் ஈறு திரிந்து நிற்றல்:

(தொல் - சொல் - உரி - 96 சூ.) எழுத்துப் பிரிந்திசைத்தல் என்பதற்கு உரையாசிரியர் கூறியவற்றுன் உணர்க. அடம் - தற்சமம்: அன்றி வருத்தம் எனப்பொருள் கூறி, அடு என்னும் முதனிலை அடியாகப் பிறந்த தொழிற் பெயர் காரணஆகுபெயராய் நின்றது எனினும் அமையும். மதனுர் என இயற்பெயர் முன்னரன்றி உயர்திணைப் பெயர் முன்னர் ஆர் என்னும் இடைச்சொல் வருதல்: (தொல் - சொல் - இடைச்சொல்லியல் - 22 சூ.) "இயற்பெயர் முன்னர்" என்பதற்கு உயர்திணையிலும் சிறுபான்மை வரும் என 'ஒன்றின முடித்தல்' என்பதனுல், சேனுவரையரும் நச்சினுர்க்கினியரும் தழுவினமையால் கொள்க. ஓர்கால் என்னும் சினைமுதல் கிளவியல்லாத காலக்கிளவியின் முற்றும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. கருதுவாம் என - மனத்தையும் தன்ளெடு படுத்தமையின் முன்னின்ருரை உளப்படுத்திய தன்மைப் பன்மை வினைமுற்று.

இதுவுமது

சுரும்புமுரல் கருங்குழலும் செவ்வாயும்
வெண்ணகையுந் தொடிப்பொற் ருேளும்
விரும்புபர ஞானநிறை கொங்கையுஞ்செங்
கையுங்கதிர்த்து மிளிர்செம் பட்டும்
பெரும்புவன முழுதமைசிற் றுதரமுமங்
கலநாளும் பிணைகண் ணேட்டம்
அரும்புகருந் தடங்கண்ணி சேவடியுந்
துதித்துமனத் தமைத்து வாழ்வாம். 6

கு - ரை : சுரும்பு முரல் - வண்டுகள் தேனுண்டு இசைபாடும். தொடி - வளை. பரஞானம் - மேலான சிவஞானம். கதிர்த்து மிளிர் - விளங்கி ஒளியினைச் செய்யும். பெரும்புவனம் முழுது அமை - பெரிய உலகங்கள் முழுதும் கருக்கொண்டு பொருந்தும். சிறு உதரம் - சிறிய வயிறு. "பெற்ருள் சக தண்டங்க ளனைத்தும்" (வில்லிபாரதம்); "அண்டங்க ளீன்ருள் துணை யென்பர்" (பரஞ்சோதி - திருவிளை). இது அம்பிகையின் கேசாதிபாத வருணனை கூறியது. கருங்குழல், செவ்வாய், வெண்ணகை, பொற்ருேள் என்பன முரண்தொடை. பிணை - பெண்மான். அரும்பும் - தோன்றும். கருந்தடங்கண்ணி - நீலாயதாட்சி. அமைத்து - இருத்தி.

சபாநாயகர்

மண்களிக்க நெடுஞ்சடையிற் குறுந்திவலை
யெழவழல்கை வயங்கா நிற்கக்
கண்களிக்க வொளிருமுகத் திளங்காறை
வரவெளியாய்க் கதிர்மன் றேறி

விண்களிக்க வெழுசுடர்பே ரருண்முகம்பாய்
தரமற்ரோர் மேனி முற்றும்
எண்களிக்க நடநவிலு மிறையவர்குஞ்
சிதமலர்த்தாள் இறைஞ்சி வாழ்வாம். 7

கு - ரை : மண்களிக்க - உலகம் மகிழ. திவலை - துளி. அழல் - நெருப்பு. இளங்கால் - இளங்காற்று. தைவர - தடவ. மன்று - பொன்னம் பலம். பேரருள்முகம் - மிக்க அருள்வடிவாகிய சிவகாமி அம்மையாருடைய திருமுகம். குஞ்சிதம் - வளைவு. குஞ்சித மலர்த்தாள் - எடுத்த பொற்பாதம். மண், குறுந்திவலை, அழல், கால், வெளி எனத்தொடுத்தது நயம். நெடுஞ் சடை, குறுந்திவலை முரண்தொடை. சடையில் திவலை எழ என்றது பகீரதன் பொருட்டு வந்த ஆகாயகங்கையைத் துளியாகச்செய்து தமது சடையிலுள்ள ஞானகங்கையில் ஒடுக்கியமை குறித்தது. வெளியாய் - ஞானகாசமாய். எழு கின்ற சுடர் அருண்முகமாய்ப் பாய்தர; மேனிமுற்றும் - திருமேனிமுழுவதும். எண் - எண்ணம். நடம் நவிலும் இறையவர் - நடராசப்பெருமான்.

சிவகாமியம்மை

பெற்றதாய் தன்பதியைக் காதலிக்கக் காதலிக்கும் பெட்பிற் காட்ட
லுற்றபோ தேகாணு மிளமழவென் பதுதனக்கே யுண்மை யாகச்
சொற்றமா தேவையுயிர் காதலித்து நோக்கநடந் தொலையா மன்றில்
அற்றமே வாதவைநன் ருற்றிநிற்கும் பராபரைதா ளடுத்து வாழ்வாம்.

கு - ரை : பெற்றதாய் - ஈன்றதாய். தனது பதியை - தன்கணவனை. காதலிக்க - விரும்ப. பெட்பு - விருப்பம். இளமழவு காட்டலுற்றபோதே காணும் என்பது வழக்கு. தாயினுல் தந்தையைத் தெரிந்துகொள்ளுதல் உலகவழக்கு. ''காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே'' என்றமை யால் இறைவன்காட்ட அம்மையார் கண்டார் என்றது தாம் நடனத்தைக் காட்ட அம்மையார் கண்டார் என்றதாம். நடம் தொலையாமன்று - ஐந் தொழில் நடனம் நீங்காத மன்றம். காட்டலுற்றபோதே காணும் இளமழவு: ''இளங்குழவிப் பிணிக்கின்ற தாய்மருந்து நுகர்வதுபோ லிருளின் மாண்ட,
களங்குலவு மலமுயிர்கட் கொழியவரு ணடங்காணுங் கடன்மீக்கொண்டு,
வளங்குலவு தனதுபெருங் கற்புமொரு கணவரிறை மாண்புந் தோன்ற,
விளங்குமிர ணரியமன்றி னின்றருளு மணிவிளக்கை விளம்பி வாழ்வாம்''
(திருவானைக்காப் - கடவுள் - 7). அற்றம் - சோர்வு.

அழகவிடங்கர்

கழகவிடங் கரையிலவா நாகநக
ரகமேல்கீழ்க் கண்ணுங் கோறல்
பழகவிடங் கரைமாய்த்தான் மணிமார்பு
நறுமுறுப்பப் பன்னுள் சென்றுங்

குழகவிடங் கரையாது களத்தமைத்தா
யென்றமரர் கூற மேய
அழகவிடங் கரைமாயைப் படங்கரைய
மடங்கரைய வடுத்து வாழ்வாம். 9

இ - ள்: மேல் கீழ்க்கண்ணும் (நாகநகரமென்னும் பெயருடைய) மேலிடமுங் கீழிடமும், கோறல் பழகு அ இடங்கரை மாய்த்தான் மணி மார்பும் நறுமுறுப்ப - கொலைத்தொழில் பழகிய அம்முதலையைக் கொன்ற திருமாலது கவுத்துவமணிந்த மார்பும் பொருமைப்படவும்; பன்னாள்சென்றும் குழகவிடம் கரையாது களத்து அமைத்தாய் என்று அமரர்கூற-பல்லூழி காலஞ்சென்றும் செல்லாத இளமையை உடையாய், விடம் தனது உருவம் கெடாமல் நிற்பக் கண்டத்தமைத்தாய் என்று தேவர்கள் துதிக்கவும், கழக இடம் கரையிலவாம் நாகநகரம் மேய அழகவிடங்கரை - கல்விச்சபையாகிய விடங்கள் அளவில்லனவாகிய நாகப்பட்டினத்துள் எழுந்தருளிய சுந்தர விடங்கரை; மாயை படம் கரைய - மாயை என்னும் மறைப்புக்கரையவும்; மடம்கரைய - அதற்கு மூலமாகிய அறியாமை கரையவும்; அடுத்துவாழ்வாம்- இடைவிடாமல் சரண்புகுந்து அழிவின்றி வாழ்வாம் என்றவாறு.

நாகநகரம் என்னும் பெயர் தமக்கும் உண்மையின் சுந்தரவிடங்கர் எழுந்தருளப்பெற்றமையால், மண்ணுலகத்திலுள்ள நாகநகரத்தின் சிறப்புத் தமக்கின்மை நோக்கி அழுக்காறடைந்தன என்பார் 'மேல்கீழ்க்கண்ணும் ... நறுமுறுப்ப' என்றார். என்றும் அழியாத்தன்மையை உடையை என்பார் 'பன்னாள் சென்றும் குழக' என்றார்.

கண் என்னும் இடஉருபாய் நின்ற உருபுதொக்க பெயரும் உம் என்னும் எண்ணுநிலைப்பொருள் இடைச்சொல்லும் பண்பு குறித்து நின்ற இனம் ஒத்த மேல்கீழ் என்பவற்றோடு மாட்டுறுப்பாய் மேல்கண்ணும் கீழ் கண்ணும் என நின்றன. ஒரு வாய்பாட்டான் அடுக்கிநின்ற நறுமுறுப்ப கூற என்னும் தம்முள் இயைபில்லாத வினையெச்சங்கள் மேய என்னும் எச்ச வினையோடு முடிந்தன.

கோறல் - கொல்லுதல். இடங்கர் - முதலை. மணி - கவுத்துவமணி. நாகநகர் அகம் - நாகர் உலகமாகிய இடம். நாகர் - தேவர், நாகலோக வாசிகள். மேல்கீழ் என்றது விண்ணுலகத்தையும் பாதல உலகத்தையும். விண்ணுலகமும் பாதல உலகமும் திருமால் மார்பும் பொருமைப்பட என்றது தம்மிடத்தில் விடங்கர் எழுந்தருளாமை பற்றி என்க. நறுமுறுப்ப - பொருமைப்பட. களம் - கண்டம். கழகஇடம் - கல்விச்சபைகள். சத்த விடங்கருள் இத்தலத்து எழுந்தருளியுள்ள சோமாஸ்கந்தர் சுந்தரவிடங்கர் எனப்படுவர். டங்கம் - உளி: விடங்கர் - உளியால் செதுக்கப்படாதவர், எனவே சுயம்புமூர்த்தி என்றபடி. மாயையைப் படம் என உருவகித்தார். சத்தவிடங்கத் தலங்களுள் நாகையும் ஒன்றும்: ஏனைய தலங்கள் திருவாரூர், நள்ளாறு, மறைக்காடு, காருயில், திருவாய்மூர், திருக்கோளிலி என்பன.

நாகையில் சுந்தரவிடங்கர் உள்ளார். ஏனைய தலங்களில் முறையே வீதி விடங்கர், நகரவிடங்கர், புவனிவிடங்கர், ஆதிவிடங்கர், நீலவிடங்கர், அவனிவிடங்கர் வீற்றிருக்கின்றனர்.

இதுவுமது

பரவுமுடி போற்றிவிழி கவருமுகம்
 போற்றியருட் பார்வை போற்றி
விரவுகுழைச் செவிபோற்றி விதிவிலக்கு
 முழுதுரைத்து மிளிர்வாய் போற்றி
கரவுதவி ரன்பர்மன நிகருமரி
 யணைபோற்றி கதிர்வாள் போற்றி
உரவுபொலி நடம்போற்றி யழகவிடங்
 கப்பெருமா னொளிர்தாள் போற்றி. 10

கு-ரை: முடிமுதல் அடிவரையுள்ள வருணனை. விதிவிலக்கு உரைத்தலாவது உயிர்கள் செய்வனவும் தவிர்வனவும் உணர்ந்து செய்து ஈடேறும் பொருட்டுப் படைப்புக் காலத்திலேயே வேதங்களை அருளிச்செய்தமை. கரவு - வஞ்சகம். அரியணை - சிங்காதனம். உரவுபொலி நடனம் - சூக்கும பஞ்சாக்கர நடனம் என்பர். உரவு - ஞானம். அழகவிடங்கர்: இத்தலத்து நாயகர்.

தட்சிணாமூர்த்தி

வேறு

பதிபசு பாச மென்னப் படுமொரு மூன்றும் சுத்தம்
பதிநிலை யொன்றற் கொன்று பயில்வியாப் பியமா மின்னும்
பதியொடு பசுக்க லக்கும் பண்புமிற் றென்றோர் செங்கைப்
பதிவிர லளவிற் சேர்ப்பிற் பகர்பவற் கடிமை செய்வாம். 11

கு-ரை: பதி பசு பாசம் என்னப்படும் ஒரு மூன்று-திரிபதார்த்தம். பதிநிலைசுத்தம் - முத்திநிலை சுத்தமாம். வியாப்பியம் - உள்ளடங்கியிருத்தல். பதி - பதிப்பொருள். பசு - உயிர். இற்று - இத்தன்மையை உடையது. செங்கைப் பதிவிரல் அளவில் சேர்ப்பு: தமது வலக்கரத்தின் பெருவிரல் அடியைச் சுட்டுவிரலின் நுனிபொருந்த நடுவிரல் முதலிய மூன்றும் பிரிந்து நிற்றலைக் காட்டியபடி. பெருவிரல் பதி, சுட்டுவிரல் பசு; பசு பதியின் திருவடியைச் சார்தலால் ஆணவம், கன்மம், மாயைகள் நீங்குதல் ஆகிய உண்மையைக் கைக்குறியாற் காட்டலைச் சின்முத்திரை என்பர். இதனை, ''மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர், அம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக், கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய, செம்மலை யலதுளம் சிந்தி யாதரோ'' (திருவானைக்காப் - கடவள் - 8) காண்க.

வயிரவர்

பெருகுதன் புகழு ளேனோர் பிரதாப மடக்கி யாங்கு
முருகுநங் கலரின் மேலான் முண்டவெண் கபாலத் தூடு
கருகுடைங் கொண்டன் மேனி கவிழ்த்திடு செந்நீ ரேற்ற
திருகுதீர் வடுகப் புத்தேள் சேவடி சென்னி சேர்ப்பாம். 12

கு - ரை: புகழ் - கீர்த்தி; வெண்ணிறம். பிரதாபம் - செந்நிறம், வெற்றியால் வருவது. முருகு - வாசனை, தேன் எனினும் ஆம். அலரின் மேலான் - பிரமதேவன். முண்டவெண்கபாலம் - தலையாகிய கபாலம். கொண்டல்மேனி - திருமால்: அன்மொழித்தொகை. கவிழ்த்திடு - சொரிந்த. செந்நீர் - குருதி. வடுகப்புத்தேள் - வயிரவக்கடவுள். திருகு - மாறுபாடு. "காதி யாயிர மால்களைப் பிழிந்துமாங் கனிபோற், கோது வீசினுங் கடல் கவிழ்த் தனையசெங் குருதி, பாதி யாயினு நிரம்புறுக் கபாலபா ணியனாய், மாது பாதிய னவையிடைப் புகுந்தனன் வடுகன்" — (பிரபுலிங்க - கைலாச - 41).

நாகாபரணப் பிள்ளையார்

வேறு

தண்ணியரும் வெய்யவரும் தன்னோக்காற்
பயனடையிற் சமமா வாரென்
றெண்ணியரு மறையுரைத்தன் மெய்ம்மையெனத்
தெரித்தாங்கன் பில்லார் சாத்துங்
கண்ணியருஞ் சடைமுடியிற் றண்மதியும்
வெவ்வரவுங் கலப்ப மேவி
நண்ணியருந் தவர்க்கருணா காபரண
மழகளிற்றை நயந்து வாழ்வாம். 13

கு - ரை: தண்ணியர் - குளிர்ந்த அன்புடையவர். வெய்யவர் - கொடியோர். தன்னோக்கால் - தம்முடைய கருணைநோக்கத்தினால். கண்ணி - தலையில் சூடும் மாலை: "மாதர் பிறைக் கண்ணியானை" (தேவா).

சுப்பிரமணியர்

'மீனேறு கடல்வறப்ப விண்ணேறு மலைகுலைய வெள்ளே றூருங்
கானேறு கடுக்கையினர் கையேறு கழுமுளினுங் கடுவே றெட்டுக்
கூனேறு மதிநுதலார்க் கொண்டேறு பொருமமரர் குலவி வாழ்வான்
வானேறு விதம்பசிய மயிலேறு சேவகனை வாழ்த்தி வாழ்வாம். 14

கு - ரை : மீன் ஏறு - சுறுமீன். வறப்ப - வரண்டுபோக. கடல் வறத்தல்: கடல்சுவற வேல்விட்ட படலத்தாலும், மலைகுலைதல் மேருவைச் செண்டாலடித்த படலத்தாலும் அறிக.

கான் - வாசனை. கடுக்கை - கொன்றைமாலை. கழுமுள் - சூலாயுதம். வேல்தொட்டு - வேலை விடுத்து. கூன் ஏறு மதி - பிறைச்சந்திரன். நுதலார்க் கொண்டு - மகளிரை மணந்துகொண்டு. மயிலேறுசேவகன் - முருகக்கடவுள்.

இதுவுமது

வரையுதித்த வொருகொடியைப் புணர்ந்துதெய்வ
யானையுரு மருவிச் சத்தி
உரைசெயுமோர் பாற்பொலியப் பெருமையின்மே
லாவதனு லொப்பா காது
கரையுமொரு மொழிப்பொருளை யரற்குணர்த்தி
யுயர்ந்துபொலி கருணை யானை
விரைசெய் நறுங் கடம்பணியுந் தடம்புயனைப்
பராயின்ப வெள்ளத் தாழ்வாம். 15

கு - ரை : வரையுதித்த ஒருகொடி-வள்ளியம்மையார். தெய்வயானை-தெய்வயானை அம்மையார். ஓர்பால் சத்திபொலிய - ஒருபக்கத்திலே சத்தி வேலானது விளங்க. பெரு மயில்மேல் ஆவதனுல் - பெரிய மயிலின்மேல் எழுந்தருளியிருத்தலால். ஒரு மொழிப்பொருள் - பிரணவப் பொருள். விரை - வாசனை. பராய் - துதித்து. வரையுதித்த கொடி - இமயமலையில் தோன்றிய கொடிபோன்ற உமாதேவியார் எனவும்; தெய்வயானை உரு மருவி - தெய்வத்தன்மை பொருந்திய யானை வடிவத்தைக்கொண்டு எனவும்; ஒருபால் சத்திபொலிய - ஒருபக்கத்திலே உமாதேவியார் விளங்க எனவும்; பெருமையின் மேலாவதனுல் - பெருமையினுல் சிறந்து விளங்குதலால் எனவும் வேறு பொருள்கொள்ளக் கிடந்தமை காண்க.

தெய்வயானை உரு மருவுதல்: "பிடியதன் உரு உமை கொள" என்பதனுல் அறிக.

திருநந்திதேவர்

பதிமரபிற் பரவிரண்டாஞ் சிவனெனயா
வரும்புகலப் பட்டு மெங்கள்
துதிவிரவு குருமரபின் முதற்குரவ
னென்றெடுத்துத் தூற்றப் பட்டோன்
நுதியமைவச் சிரங்கதைசு தரிசனமுற்
படைநோன்மை நொறுங்க வாய்ப்பெய்(து)
அதிவிரைவி னெழுசூரற் படைப்பெருமா
னடிக்கமல மடுத்து வாழ்வாம். 16

கு - ரை : பதிமரபு - கயிலாய பரம்பரை. இரண்டாம் சிவன் - அபர சிவன். "முந்தி வானவ ரேத்து முதல்வரை, அந்தின் மேய வபர சிவனெனும், நந்தி நாயகன்" (விளத்தொட்டி-கடவுள்). குருமரபின் முதற்குரவன் - திருநந்தி மரபில் முதல் ஆசாரியன். நுதி - நுனி, கூர்மை. முற்படை - முதலாகவுள்ள படைக்கலங்கள். நோன்மை - வலிமை. நொறுங்க - பொடியாக. வாய்ப்பெய்து - விழுங்கி. சூரற்படை - வேத்திரப்படை; சூரல் - பிரம்பு. சூரற்படைப்பெருமான் - திருநந்திதேவர். " அங்கணன் கயிலைகாக்கும் ... நங்குரு மரபிற்கெல்லாம் முதற் குருநாதனுகிப் பங்கயம் துளவம் நாறும் வேத்திரப்படை பொறுத்த, செங்கையெம் பெருமான் நந்தி'' — என்பது காஞ்சிப்புராணம்.

ஆசிரியர் அகத்தியனுர்

வேறு

வெற்புமேக் கெழற விர்ப்பான் மென்மலர்க் கையு ளொன்று
பொற்புமே வுறம றித்துப் பொலங்கழ லொருதா ளூன்றி
வற்புமே வுறத்த விர்த்த மாதேவ னினுஞ்சீர் வாய்ப்புற்
றற்புமே வுறத்தென் பால்வெற் பமர்பவர்க் கடிமை செய்வாம். 17

கு - ரை : வெற்புமேக்கு எழல் - விந்தமலை செருக்கால் வளர்ந்து எழுதல், கயிலாயமலை இராவணன் பெயர்க்க மேல் எழல். மேக்கு - மேல். தவிர்ப்பான்: பானீற்றுவினை யெச்சம். பொற்பு - அழகு. மறித்து - கவிழ்த்து. வற்பு - வன்பு, வலிமை. சீர் - சிறப்பு. விந்தமலையைப் பிலம்புகக் கையால் அழுத்தியது, சிவபெருமான் எழுந்த கயிலாயத்தைக் கால்விரல் நுதியால் அழுத்தியது. மாதேவன் - சிவபெருமான். அற்பு - அன்பு. தென்பால் வெற்பு - பொதியில்மலை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்

இருமுது மாதர் தங்கூ னிருகரங் கொடுமு யன்று
கருதுறத் தீர்த்த தாச ரதியுங்கண் ணனுநாண் கொள்ளக்
குருமதிக் குலத்து வேந்தன் கூனொரு சொல்லாற் றீர்த்த
பொருவருங் காழி ஞான பூரணற் கடிமை செய்வாம். 18

கு - ரை : இரு முது மாதர் - இரண்டு முதியபெண்டிர்; 1. மந்தரை, 2. திரிவக்கரை. தாசரதி - தசரதராமன். மதிக்குலத்து வேந்தன் - சந்திர வமிசத்திலுதித்த கூன்பாண்டியன். ஒரு சொல்லால் - "வேந்தனும் ஓங்குக'' என்ற தேவாரப்பகுதியால். "எம்பிரான் சிவனே யெல்லாப் பொருளுமென் றெழுது மேட்டிற், றம்பிரா னருளால் வேந்தன் றன்னை முன் னேங்கப்பாட ... ... தென்னன் கூன் நிமிர்ந்த தன்றே''— (பெரியபுரா - திருஞான - 847).

திருநாவுக்கரசு நாயனர்

எழுபது வெள்ளஞ் சேனை யெடுத்திடு பலகற் கொண்டு
செழுமணிப் பரவை யொன்றே கடந்தவெஞ் சிலையோ னுண
வழுவம ணிடுகல் லொன்ருன் மறிகடல் பிறவி வேலை
முழுவதுங் கடந்த வெங்கண் முதல்வனுக் கன்பு செய்வாம். 19

கு - ரை : பலகல் - பலமலைகள். வெஞ்சிலையோன் - சீராமன். பிறவி வேலை - பிறவிக்கடல்.

சுந்தரமூர்த்திநாயனர்

பொறிமறு மார்பத் தண்ணல் வராகமாய்ப் புவியி டந்தும்
அறிவதற் கரிய பாத மகன்றுகண் படுக்குந் தேத்து
முறிவறத் தொடர்ந்து வந்து தலைமிசை முயங்கச் செய்த
செறிபெருந் தவத்து நாவற் செம்மலைச் சிந்தை செய்வாம். 20

கு - ரை : பொறி - இலக்குமிதேவி. மறு - ஸ்ரீவத்ஸம். வராகம் - பன்றி. புவி இடந்தும் - பூமியைத் தோண்டியும். அறிவதற்கரிய பாதம் - "திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராச் சேவடி" — (திருவாச). கண் படுக்கும் - தூங்கும். தேத்து - இடத்து. நாவற்செம்மல் - திருநாவலூரில் அவதரித்த சுந்தரமூர்த்தி நாயனர்.

மாணிக்கவாசகசுவாமிகள்

எழுதிடும் வேலை பூமே லிருப்பவ னியற்றப் போக்கி
எழுதுத லில்லா நூல்சொற் றினிதமர் தருமா தேவை
எழுதெழு தெனப்பல் பாச்சொற் றியைதரப் பெயரு மீற்றில்
எழுதிடச் செய்த கோமா னிணையடி முடிமேல் வைப்பாம். 21

கு - ரை : எழுதிடும் வேலை - தலைமேல் எழுதும் செயலை: விதியை. பூமேல் இருப்பவன் - பிரமதேவன். எழுதுதல் இல்லா நூல் - எழுதாக் கிளவியாகிய வேதம். மாதேவு - மாதேவன். சொற்று - சொல்லி. இயை தர - பொருந்த. பெயரும் ஈற்றில் எழுதிட - இறுதியில் திருச்சிற்றம்பல முடையார் என்று கைச்சாத்திட. கோமான் - மாணிக்கவாசக சுவாமிகள்.

தண்டீசநாயனர்

பசுக்களை யோம்பு வாற்குப் பாங்காவ திதுவே யென்று
பசுக்களை யினிதி னேம்பிப் பான்முத லாய தெவ்வப்
பசுக்களை யோம்பல் செய்த பைந்துழா யவன்போ லாது
பசுக்களைந் தின்பந் துய்க்கும் பார்ப்பனச் சிறுனை யுள்வாம். 22

கு - ரை : பசுக்களை ஓம்புவாற்கு - உயிர்த்தலைவராகிய சிவபெருமானுக்கு: பசுக்கள் - உயிர்கள். ஓம்பி - பாதுகாத்து. தெவ்வ - பெருக. பைந்துழாயவன் - திருமால், பசுபாலன். போலாது - போல் அல்லாமல். பசுக்களைந்து - பசுத்தன்மையை மாற்றி. பசுத்தன்மை - பசுத்துவம். இன்பம் - பேரின்பம். பார்ப்பனச்சிறுன் – பிராமணச் சிறுவராகிய விசாரசருமர்.

அறுபத்துமூன்றுநாயன்மார்

சாற்றிடு பெருமை வாய்ந்த தவாப்புகழ்ச் சைவஞ் சார்ந்தார்
ஆற்றிடு தவமு நான்கே யடைதரு பயனு நான்கே
தூற்றிடு பிறவென் னென்று சொற்றிடற் கொருசான் றுய
போற்றிடு மறுபான் மூவர் பொன்னடி சென்னி வைப்பாம். 23

கு - ரை : தவாப்புகழ் - நீங்காத புகழமைந்த. சைவம் சார்ந்தார் ஆற்றிடு தவம் நான்கு: சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. பயனும் நான்கே: அவற்றால் முறையே அடையக்கூடிய பிரயோசனங்களும் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியங்களாகிய நான்கேயாம். பிற என் என்று சொற்றிட - வேறு சொல்லுதற்கு யாதுளது? என்று கூற. அறுபான் மூவர் - அறுபத்துமூன்று நாயன்மார்.

புண்டரீகமுனிவர்

புரைதவி ருலக மாதி புராணரென் றிருகை கூப்பிக்
கரைதரப் பொலிவா ருக்குக் காயாரோ கணரென் றென்றும்
உரைசெயத் தவம்பு ரிந்த வுத்தமப் புண்ட ரீக
விரைகமழ் பதுமப் பூந்தார் முனிவனை விளம்பி வாழ்வாம். 24

கு - ரை : புரை தவிர் - குற்றமற்ற. ஆதிபுராணர் - மிகப்பழையர். காயாரோகணர் - சரீரத்துள் அடக்கிக்கொண்டவர்: தீர்க்க சந்தி. என்றும் உரை செய - எக்காலத்தும் சொல்ல. பதுமப்பூந்தார் - தாமரை மலர்மாலை. முனிவன் - மனனசீலன்.

அதிபத்தநாயனர்

தடிகடற் புகுதல் போலச் சைவமாங் கடலிற் புக்கு
முடிவலை வீசல் போல முதிர்பத்தி வலையை வீசி
நெடியமீன் கவர்தல் போல நிராமய வுமையோர் பாகத்
தடிகளா மீன்க வர்ந்த அதிபத்தர்க் கன்பு செய்வாம். 25

கு - ரை : தடி - கோல், மின்னல் எனினும் ஆம். முடிவலை - தலையிற் சுமந்திருக்கும் வலை. முதிர்பத்தி - முதிர்ந்த அன்பு. நிராமயன் - குற்றம் அற்றவன். உமையோர் பாகத்து அடிகள் - சிவபெருமான். சைவம் கடல், பத்தி வலை, அடிகள் மீன்; உருவக அணி. அதிபத்தர் - அதிபத்தநாயனர்.

மற்றையடியார்கள்

பொருள்பெறு நாகை யாதி புராணர்மெய் தீண்டி வெண்ணீ
றருள்சிவத் துவிச ரன்னூர் தளிப்பணி யனைத்துஞ் செய்வோர்
மருடபு மற்றைச் சைவ மாண்புடைப் பெரியோ ரியாரும்
தெருண்மிக மலியு மாறென் சிந்தையிற் குடிகொள் வாரே. 26

கு - ரை : பொருள்பெறு - மெய்ப்பொருளாகவுள்ள. ஆதிபுராணர் - இத்தலத்திலுள்ள சிவபெருமான். மெய்தீண்டி - திருமேனியைத்தொட்டு. சிவத்துவிசர் - ஆதிசைவர்: "முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார்" அவரே ஆகலான். அன்னூர் - ஆதிபுராணர். தளிப்பணி - கோயிற் பணிவிடை. மருள் தபு - மயக்கம் நீங்கிய: மருளாவது பொருளல்ல வற்றைப் பொருள் என்று உணர்வது. தெருள் மிக - தெளிவுமிக. மலியு மாறு - நிறைந்து கிடக்கும்படி; பூரணமாக என்க.

திருக்கூட்டத்தார்

வேறு

நிலவுதிரு வெண்ணீறுங் கண்மணியும் புனைந்துமறை நெடுனூ னுப்பட்
கலவுதிரு வைந்தெழுத்துங் கணித்தருள்கூர் மாதேவன் கழல்சே வித்தே
உலவுமவ னுமமுழக் குபுதேவ தீர்த்தத்தி னுதீசிக் கோட்டுக்
குலவுமணி மயமுத்தி மண்டபத்தின் மேவுதிருக் கூட்டம் வாழ்க. 27

கு - ரை : கண்மணி - உருத்திராக்கம். நாப்பண் - நடுவிடம். கலவு - கலந்த. கணித்து - அறிவால் தியானித்து. மாதேவன் - சிவபெருமான். அவன் நாமம் முழக்குபு - அரகர முழக்கம் செய்து. உதீசிக்கோடு - வட கரை; உதீசி - வடக்கு. கோடு - கரை. "அஞ்செழுத்தும், திருநீறும் கண்டிகையும் பொருளாக்கொண்ட நாயன்மார் திருக்கூட்டம்" — (காஞ்சிப் புராணம்).

பஞ்சாக்கரதேசிகர்

வேறு

நுதல்விழி யின்றி நோக்கு நோக்கின லிருண்ம லத்தின்
முதலற நீற்றி யன்றே முயங்கிய வினையுந் தீத்துச்
சுதமிலின் புயிர்க்கு நல்கித் துறைசைவாழ் நமச்சி வாயன்
பதமுடிக் கணிந்தோ மின்னும் பெறலெவன் பாரின் கண்ணே. 28

கு - ரை : நுதல்விழி - நெற்றிக்கண். நோக்கினல் - திருவருட் பார்வையால். இருண் மலத்தின் முதல் - ஆணவ மலத்தின்வேர். அறநீற்றி - அடியோடு பொடிசெய்து. அன்றே - அப்பொழுதே. வினையும் - நல்வினை

தீவினைகளையும். தீத்து - கருக்கி; என்றது வறுத்த வித்தாக்கி. சுதம் இல் - அழிதலில்லாத. இன்பு - பேரின்பம். துறைசை - திருவாவடுதுறை. நமச்சிவாயன் - ஆதீன முதற் குரவராகிய பஞ்சாக்கரதேசிகர். எவன் - யாதுளது. பார் - பூமி.

குருவணக்கம்

வேறு

திருந்தவொளிர் தருதிருவா வடுதுறைச்சுப்
    பிரமணிய தேவ னோடு
பொருந்தவமர் குருபரனம் பலவாண
    னெனையுமொரு பொருளாக் கூவி
இருந்தனவும் வந்தனவு மிரியமுடி
    யடிச்சூட்டி யினிதி னுண்டின்
பருந்தவெனை யுங்கவர்ந்தா னங்ஙனஞ்செய்
    தவற்கினியா னுற்றல் யாதே. 29

கு - ரை : சுப்பிரமணியதேவன் - சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர். குருபரன் அம்பலவாணன் - பதினைந்தாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த குருமகாசந்நிதானம். இவர்கள் காலத்தில் இந்நூலாசிரியர் சின்னப்பட்டம் ஸ்ரீ சுப்பிரமணியதேசிகர் விருப்பத்தின்படி ஆதீனவித்துவானாக அமர்த்தப்பெற்றார். கூவி-அழைத்து. இருந்தனவும் - பிராரத்த கன்மங்களும். வந்தனவும் - ஆகாமிய கன்மங்களும். இரிய - கெட்டோட. முடி அடிச்சூட்டி - அடியேனுடைய இழிந்த முடியின் கண்ணும் செந்தாமரை போன்ற தமது அரிய திருவடியைப் பொருந்தவைத்து. தீட்சாகாலத்தில் அத்த மத்தக சையோகம் செய்தல், திருவடி சூட்டுதல் முதலியவைகளால் சீடனை ஆட்கொள்ளுதல். இன்பு அருந்த-பேரின்பத்தைத் துய்க்க. எனையும் கவர்ந்தான் - பசுபோதத்தையும் சிவபோதமாக்கினன். யான் ஆற்றல் - அடியேன் பிரதி உபகாரமாகச் செய்தல்.

கடவுள் வாழ்த்து முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 29

அவையடக்கம்

பார்பூத்த கங்கைமுதற் பலநதியும் புகழ்சுவைத்தாம் பாலி யாற்று
நீர்பூத்த பெருவளங்கூர் திருத்தொண்டை நன்னுட்டி னிலவு மேன்மை
ஏர்பூத்த குடிமலிந்த பழவேற்கா டெனுநகரி லென்று மன்பாஞ்
சீர்பூத்த காரணத்தா லோங்குசெல்வ ராயகோத் திரஞ்செய் நோன்பால்.

கு - ரை: பாலியாறு - பாலாறு. தொண்டைநாட்டிலுள்ள பழவேற்காட்டில் செல்வராய கோத்திரத்தில். நோன்பு - விரதம்.

பூமேவு துளுவகுலத் துதித்தவன்யா வருமதிக்கும் புகழின் மேலான்
பாமேவு பிரபலவி ராமசா மிக்குரிசில் பயந்த மைந்தன்
தேமேவு வீரசைவ சிகாமணிநல் லதிகாரச் சிறப்பு வாய்ந்தான்
காமேவு கொடைத்தடக்கை வள்ளலப்பாத் துரைமகிபன் கருத்தி
[னேர்ந்து. 2

கு - ரை: துளுவகுலம் - துளுவவேளாளர் மரபு. பிரபலம் - கீர்த்தி. இராமசாமி முதலியார் குமாரர் அப்பாத்துரை முதலியார். குரிசில், மகிபன் என்பன ஆண்பாற் சிறப்புப்பெயர்.

வேறு

காமலி வளஞ்சால் நாகைக் காரோணத் தமரும் பெம்மான்
மாமலி சரிதந் தன்னை வடமொழி மொழிபெ யர்த்துத்
தேமலி தமிழாற் பாடித் தருகெனத் தெரிந்து கேட்கப்
பாமலி யனையான் செஞ்சொன் மருதியான் பாட லுற்றேன். 3

கு - ரை: நாகைக்காரோண நாதருடைய வடமொழிப் புராணத்தைத் தமிழ்ச்செய்யுளால் பாடித்தருக என்று கேட்க, அவன்சொல்லை மறுக்காமல் யான் பாடத்தொடங்கினேன்.

இருவரு முருவ மாறி யெண்ணினுண் முயன்றுந் தேருப்
பொருவரும் பெருமை யாதி புராணர்க்குப் புராணங் கூற
ஒருவருந் துணியா ரேனு முரைத்திடு முண்மை தேரின்
வெருவருங் கதிரோன் முன்னேர் விளக்கத்தாற் சுழற்றல் போலும். 4

கு - ரை: இருவரும் - திருமால் பிரமர் ஆகிய இருவரும். உருவம் மாறி - பன்றியாகவும் அன்னமாகவும் வடிவங்கொண்டு. தேரு - தெளிய முடியாத. பொரு அரும் - ஒப்பில்லாத. தேரின் - ஆராய்ந்தால். கதிரோன் முன் - சூரியன் சந்நிதியில். விளக்கத்தால் சுழற்றல் - விளக்கினல் சுற்றுதல்.

உயர்ந்தவர் பாட லன்றி யேனைய ருரைக்கும் பாடல்
நயந்துகொண் டிலமா லென்று தியாகேச னவிலு மென்னில்
உயர்ந்தவிண் ணுலகர் பூசை யுவந்துமண் ணுலகர் பூசை
நயந்துகொண் டிலையோ வென்று நான்கேட்கத் தெரியேன் கொல்லோ.

கு - ரை : உயர்ந்தவர் - தேவார முதலிகள் மூவர். நயந்து - விரும்பி. தியாகேசன் - சுந்தரவிடங்கர். விண்ணுலகர் - தேவர்கள். பூசை உவந்தும் - பூசையை விரும்பிக்கொண்டும். மண்ணுலகர் - இப்பூவுலகிலுள்ளார்.

முன்னால்விண் ணாளி வேதன் முராரியா தியர டைந்த
தென்னுன்மொய் வலிய னைத்துஞ் சிறியதா மொருது ரும்பு
தன்னுல்வெந் கண்டு நின்ற தவாப்பெரு நோன்மை நாதற்
கென்னுலிப் புராணஞ் சொல்லு வித்தலோ ரிறும்பூ தன்றே. 6

கு - ரை : முன்னால் - முற்காலத்தில். விண்ணாளி - இந்திரன். வேதன் - பிரமதேவன். முராரி - திருமால். வெந் கண்டு - புறமுதுகு கண்டு. தவாப் பெரு நோன்மை - நீங்காத பெரிய வலிமை. இறும்பூது - ஆச்சரியம்.

முன்பு தேவர்களிற் பலர் செருக்குற்றுத் தம்முட் பிணங்கிய காலத்தில் சிவபெருமான், ஓர் இயக்க வடிவங்கொண்டு சென்று, அவர்களுக்கு முன்னே ஒரு துரும்பைநாட்டி, அவர்களைநோக்கி, 'உங்களில் இத்துரும்பை அசைக்கவல்லவர் எவரோ அவரே சிறந்தவர்' என்ன, அவர்களுள் ஒவ்வொருவரும் தத்தம் படைக்கலங்களை விடுத்து அதனை அசைக்க வலியிலராயினர் என்பது இதனுட் குறித்த கதை. இதனை, ''செம்மாந்து தற்புகழும் தேவர் குழு வும்மருள, எம்மான் பிறன்போ லிருந்தோர் துரும்பு நிறீஇ, அம்மாதன் செய்கை அனைத்துமெனக் காட்டினனே, நம்மாலு முற்றுஞ் சிலவென்கை நாணன்றே'' என்னும் திருவிருத்தத்தாலுணர்க (கந்தபுரா - காமதகன-41). இவ்வரலாறு கேனோபநிடதத்தில் கூறப்பட்டுள்ளது என்பர். திருவாரூர்த் தியாகராசலீலை - அவையடக்கம் (செய்யுள் 2.) காண்க.

காற்றுபல் குறையு மேற்றூர் விகாரமுங் கலப்பக் கொண்டார்
வேற்றுமை விலக்கல் செய்யார் அல்வழி விரவி நிற்பார்
சாற்றுமன் மொழியுஞ் சொல்வா ரிலக்கணத் தலைமை வாய்ந்தார்
போற்றுமற் றவர்முன் யானெவ் வேதுவாற் புறத்த னாவேன். 7

கு - ரை : பல்குறை - முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என்பன. விகாரம் - வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல் என்னும் செய்யுள் விகாரங்கள். வேற்றுமை - வேற்றுமை உருபுகள். அல்வழி - வேற்றுமை அல்லாத வழி. அன்மொழி - அன்மொழித்தொகை. இலக்கணத் தலைமை வாய்ந்தார் - இலக்கணப் புலமையிற் சிறந்தோர். குறையேற்றல், விகாரங் கொள்ளல், வேற்றுமை விலக்காமை, அல்வழி விரவுதல், அன்மொழி சொல்லுதல் என நயம்பட உரைத்தமை காண்க.

அன்புசெ யுயிரைக் கோட லன்றியவ் வுயிர்வி ராய
புன்புலான் முடையு டம்பும் புரிந்துமே லேற்றிக் கொண்டார்
இன்புசெய் மாட்சி சாறஞ் சரிதத்தோ டினித ளாமென்
வன்பில்புன் மொழியை நாளு மிழித்திட மனங்கொள் வாரோ. 8

கு-ரை: அன்புசெய்உயிர்-தம்மிடத்து அன்புசெய்யும் ஆன்மாக்கள். கோடல் - கொள்ளுதல். புரிந்து - விரும்பி. மேல் ஏற்றிக்கொள்ளுதல் - ஆபரணமாகத் தரித்தல்; என்றது கங்காளம் அணிதல் முதலியவற்றை. கங்காளம் – முழு எலும்பு; அவை பிரம விஷ்ணுக்களின் முழு எலும்புகள். மற்றும் பிரமவிஷ்ணுக்களின் சிரங்களை முறையே சிரமாலையாகவும்,கிங்கிணி மாலையாகவுங்கொண்டு விளங்குதல் முதலியன. மாட்சி சால் தம் சரிதம். இனிது அளாம் - இனிமை கலந்த. என் வன்பு இல் புன்மொழி - என்னுடைய வலிமையில்லாத இழிந்த சொற்கள்.

மறிதிரைக் கடறன் பாற்பாய் மாப்பெரு நதிநீ ரன்றி
வெறியநீர் பாயா வண்ண மறித்திடை விலக்கு மென்னிற்
செறியருட் கடலு மேலோர் செப்புநன் மொழியே யேற்றுக்
குறியிலேன் பிதற்றும் புன்சொற் கொள்ளாது விலக்கா நிற்கும். 9

கு-ரை: மறி திரைக்கடல் - மடங்கி வீசும் அலைகளையுடைய கடல். மா பெரு நதி நீர் - சிறந்த பெரிய ஆற்று நீர். வெறிய நீர் - வீணன நீர்: என்றது ஊரங்கண நீரை. அருட்கடல் - சிவபெருமான். மேலோர் - திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் முதலிய பெரியோர்கள். குறியிலேன் - அறிவில்லாதவன்.

நறுமலர்க் கொன்றை யோடு நாற்றமி லெருக்கம் பூவும்
அறுகணி சடைமேற் சூடி யண்ணலா ரமரு முண்மை
மறுவிலாப் பெரியோர் செய்ய வாய்மலர் திருப்பாட் டோடு
வெறுவிய கடையேன் செய்யும் பாடலும் விரும்பற் கன்றே. 10

கு-ரை: நறுமலர் - நறுமணமிக்க மலர். நாற்றம் இல் - மணமில்லாத. அண்ணலார் - சிவபெருமான். மறு இலா - குற்றமில்லாத. பெரியோர் - தேவார முதலிகள் மூவர். திருப்பாட்டு - தேவாரப்பதிகங்கள். வெறுவிய - வீணன. இறைவர் கொன்றை மலரோடு எருக்கம் பூவையும் தமது சடைமுடியில் சூடியகாரணம், மூவர் தேவாரத்தோடு அறிவில்லாத கடைநாயேன் செய்யும் பாடலையும் விரும்பி ஏற்றுக்கொள்ளுவர் என யான் கருதுகின்றேன் என்கிறார்.

மாசொடு கலந்த தேனு மதியினை யிகழா ரென்சொல்
ஆசொடு கலந்த தேனு மருட்பெருங் காரோ ணத்தார்
தேசொடு கலந்த தாய புராணத்தை யிகழ்தல் செய்யீர்
ஏசொடுங் கலப்பு ருப்பே ரின்பமாம் பயன்வேட் டோரே. 11

கு - ரை : களங்கத்தோடு கூடியிருந்ததாயினும் சந்திரனை யாரும் இகழார். என் சொல்லாகிய குற்றத்தோடு பொருந்தியிருப்பினும் அருள் மிக்க காரோண நாதரது புகழ்மிக்க புராணத்தைப் பேரின்பமாகிய பயனை விரும்பினோர் இகழமாட்டார்.

மாசு - குற்றம். மதி - சந்திரன். ஆசு - குற்றம். தேசு - புகழ். ஏசுதல் - இகழ்தல். வேட்டோர் - விரும்பினோர்.

மிருகமுற் பலவும் பத்தி விழைந்தமை கண்டும் வானோர்
பெருகநஞ் சயின்றான் பாதப் பத்திமை பேணார் முத்திக்
கருகரு மாகார் குற்ற மளாயதிப் புராணத் தென்பார்
ஒருகரு மலக்கோட் பட்டா ருரைப்பதீ தொன்று கொல்லோ. 12

கு - ரை : மிருகம் முதலாகிய பிராணிகள் பலவும் அன்புமிக்கு இறைவனை அருச்சித்தல் கண்டிருந்தும் தேவர்கள் விடமுண்ட கண்டத்தையுடைய சிவபெருமான் திருவடியில் பேரன்பு கொள்ளார்; முத்திபெறுவதற்குரிய பக்குவரும் ஆகார். அதுபோல உலகர் இப்புராணத்தில் குற்றம் விராவியுள்ளது என்று சொல்லுவார்கள்; ஒப்பற்ற ஆணவமலத்தால் கொள்ளப்பட்டோர் சொல்லுவது இது ஒன்றுமாத்திரமா?

அவையடக்கம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 41

சிறப்புப்பாயிரம்

வேறு

நிலம்பூத்த புகழ்நாகைக் காரோணத்
தலத்தமரு நிமல மூர்த்தி
நலம்பூத்த மான்மியமாம் வடமொழியைத்
தென்மொழியா னயப்பச் செய்தான்
புலம்பூத்த ஞானகலை முதற்பலவு
மரிறபுத்துப் பொலிவிற் றேர்ந்தோன்
வலம்பூத்த சிராமலைவாழ் மீனாட்சி
சுந்தரநா வலவ ரேறே. 1

கு - ரை : நிமலமூர்த்தி - மலரகிதராகிய சிவபெருமான். மான்மியம் - மகாத்மியம். வடமொழிப் புராணத்தைத் தமிழ்ப் புராணமாக விரும்பிச் செய்தான். புலம் - அறிவு. ஞானகலை - சிவஞானம் முதலிய கலைஞானங்கள். அரில் தபுத்து - குற்றம் நீக்கி. சிராமலை - திருச்சிராப்பள்ளி.

சுறவேறு கடனாகைக் காரோணச்
சிவபெருமான் றுகளின் ஞான
நறவேறு மான்மியஞ்சேர் வடமொழியைத்
தென்மொழியா னலப்பச் செய்தான்
உறவேறு பெரும்புலமை யனைத்துமிவ
ணோருருக்கொண் டுற்று லொப்பான்
சிறவேறு நாவல்லோன் மீனாட்சி
சுந்தரமெய்ச் சீர்த்தி யோனே. 2

கு - ரை : சுறவு - சுறுமீன். துகள்இல் - குற்றமற்ற. நறவு - தேன், இனிமை. இவண் - இந்த ஊலகத்தில். ஓர் உருக்கொண்டு - ஒரு வடிவங் கொண்டு. மெய்ச்சீர்த்தி - உண்மையாகிய பெரும்புகழ்.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 43

இரண்டாவது

திருநாட்டுப்படலம்

கருந்தடங் கண்ணி யோடு காயாரோ கணப்பி ரானுர்
இருந்தரு ளிராச தானி யெனப்புக ணுகை முன்னுப்
பொருந்தவெண் ணில்லாத் தானம் பொலிதரு தன்பாற் கொண்ட
பெருந்தகைச் சோழ நாட்டின் வளஞ்சில பேச லுற்ரும். 1

கு - ரை : கருந்தடங்கண்ணி - நீலாயதாட்சி. பிரான் - உபகாரி. இராசதானி - அரசநகர். நாகை - நாகப்பட்டினம். காயாரோகணப்பிரான் - இத்தலத்துச் சிவபெருமான். முன்னு - முதலாக. எண்ணில்லாத் தானம் - அளவில்லாத தலங்கள்: தானம் - இடம்.

அறிபல சமயத் துள்ளு மருந்தவச் சைவம் போலும்
குறிபல வானே ருள்ளுங் குலவுமா தேவன் போலும்
நெறிகெழு சத்தி மாரு ணிகழ்மலை மடந்தை போலும்
செறிபல வளநாட் டுள்ளும் சிறந்தது சோழ நாடு. 2

கு - ரை : அறி - அறிந்துகொண்ட. அருந்தவச் சைவம். பிறரால் செய்து முடித்தற்கு அருமையான சரியை கிரியா யோகங்களும் ஞானமும் ஆகிய தவங்களையுடைய சைவம். குறி - குறிக்கப்பட்ட. வானேர் - தேவர். மாதேவன் - மகாதேவராகிய சிவபெருமான். சத்திமார் - இச்சாசத்தி, கிரியா சத்தி, ஞானசத்தி, ஆதிசத்தி, பராசத்திகள். மலைமடந்தை - உமாதேவியா ராகிய பராசத்தி.

உறுப்பினு ணயனம் பல்வீ யுள்ளர விந்த நோன்புண்
மறுப்பரும் பொறிய டக்கல் வாசிக்குங் கலையுண் ஞானம்
வெறுப்பில்பஃ ருனத் துட்சோ றளித்தன்மே தகவுற் றென்னச்
செறுப்பயில் பன்னுட் டுள்ளுஞ் சிறந்தது சோழ நாடு. 3

கு - ரை : உறுப்பு - அவயவம். நயனம் - கண். வீ - மலர். அரவிந்தம் - தாமரைமலர். நோன்பு - விரதம். பல்தானம் - பலவகை அறங்கள்; பலவகை அறங்கள்என்றது முப்பத்திரண்டு தருமங்களை. சோறு அளித்தல் - அன்னதானம் செய்தல். மேதகவு - மேம்பாடு. செறு - வயல்.

புண்ணியம் பயத்த லன்றிப் பொருவறப் பல்லா ருேடிக்
கண்ணிய பயிர்வ ளர்க்குங் கணக்கிலாக் குடிஞை யுள்ளும்
எண்ணிய பொன்னி போலொன் றிலேயது தழுவப் பெற்றுத்
திண்ணிய வளத்தா லோங்கிச் செழிப்பது சோழ நாடு. 4

கு - ரை: பயத்தல் - தோற்றுவித்தல். பல்லாறு - பலவகை; பல ஆறுகள் எனினுமாம். குடிஞை - ஆறு. பொன்னி - காவிரி. அது என்றது காவிரியாற்றை. திண்ணிய வளத்தால் - உறுதியான வளப்பத்தால்.

பயம்படு தருவு மைந்தே பசுவொன்றே குடிஞை யொன்றே
நயம்படு முணவு மொன்றே பெற்றுநன் கடைந்தார்க் குள்ள
வயம்படு மறமுந் தெவ்வி மற்றுங்கீ ழிழித்தல் செய்யும்
வியம்படு வானு டெள்ளி மிளிர்வது சோழ நாடு. 5

கு - ரை: பயம் படு தரு - பயனைத் தோற்றுவிக்கும் தெய்வதருக்கள். தரு - மரம். தருக்கள் ஐந்தாவன: கற்பகம், மந்தாரம், பாரிசாதம், சந்தானம், அரிசந்தனம் என்பன. பசு - காமதேனு. குடிஞை - ஆகாயகங்கை. நயம்படும் உணவு - தேவாமிர்தம். வயம் - வெற்றி. மறம் - வீரம். தெவ்வி - வீசியெறிந்து. இழித்தல் செய்யும் - தள்ளும். வியம் - மேம்பாடு. எள்ளி - இகழ்ந்து.

முழுகுறு தீர்த்த மெல்லா மொய்சிவ தீர்த்த மன்றி
ஒழுகுறு பொன்னித் தீர்த்த முற்றம ரிடங்க ளெல்லாஞ்
செழுவிய கேத்தி ரங்க டிருந்தறம் பிறிதா நாளும்
எழுதரு தான மாக்கொண் டிருப்பது சோழ நாடு. 6

கு - ரை: மொய் - நிறைந்த. உற்று அமர் இடங்கள். கேத்திரங்கள் - தலங்கள். திருந்து அறம் - சிறந்த தருமங்கள்.

ஏற்றஞ்சால் தியாக ரரீச ரெழுவரும் வான நீங்கி
மாற்றஞ்சால் சிறப்பு மன்பு வழாமையு நோன்பின் வீறும்
ஊற்றஞ்சால் செல்வ மாண்பு முற்றமை யுணர்ந்து மேவத்
தேற்றஞ்சால் தவமெண் ணில்ல செய்தது சோழ நாடு. 7

கு - ரை: ஏற்றம் சால் - சிறப்புமிக்க. தியாகராசர் எழுவரும் - வீதிவிடங்கர், சுந்தரவிடங்கர், நகரவிடங்கர், புவனிவிடங்கர், ஆதிவிடங்கர், நீலவிடங்கர், அவனிவிடங்கர் ஆகிய ஏழு மூர்த்திகளும். வானம் - இந்திரலோகம்; அமராவதி. மாற்றம் - சொல். அன்பு வழாமை - அன்பு நீங்காமை. நோன்பின் வீறு - விரதமேன்மை. ஊற்றம் சால் செல்வம் - மேலும் மேலும் சுரக்கும் செல்வம். தேற்றம் சால் தவம் - தெளிவுமிக்க தவம்.

அன்னிய நாட்டின் பார மனைத்தும்வந் துற்ற போது
மன்னிய தாங்கி யாளு மன்னற்கு முன்போ னல்கி
மின்னிய மணியும் பொன்னும் படுகுழி மிதப்பக் கொண்டு
பன்னிய புகழா லோங்கிப் பரந்தது சோழ நாடு. 8

கு - ரை : மன்னிய - நிலைபெற்ற. படுகுழி - ஆழமிக்க பிலம்.

வருத்திடு பசியுள் ளாரை மறைநெறி திறம்பு வாரை
விருத்திடு பிணிக்கோட் பட்டு மெலிந்தற வாடு வாரைப்
பொருத்திடு சிவன்றாட் கன்பு பூண்டிடா தவரை வானத்
திருத்திடு கொடையி லாரை யில்லது சோழ நாடு. 9

கு - ரை : மறைநெறி - வேதவிதி. திறம்புவார் - மாறுபடுவார். பிணிக்கோட்பட்டு - நோயால் பற்றப்பட்டு. அற வாடுவாரை - மிகுதியும் வருந்துவோரை. வானத்து இருத்திடு கொடை - ஈந்தார்க்கு அவ்வுல கெய்துதல் உறுதியாகலின் என்க. கொடையின் பயன் விண்ணுலக இன்பந் துய்த்தல்; இதனைக் குறளாசிரியர் " நல்லா றெனினுங் கொளல்தீது மேலு லகம், இல்லெனினும் ஈதலே நன்று" என்றமை காண்க.

சோழநாடு பசியின்மை, வேதவொழுக்கம் கெடாமை, நோயால் வாடாமை, சிவபெருமான்பால் அன்புடைமை, கொடையுடைமை முதலியன உடையது.

ஆரண முழக்க மெங்கு மாகம முழக்க மெங்கும்
தோரண நகர மெங்குந் துவன்றுமங் கலங்க ளெங்கும்
பூரண கும்ப மெங்குந் திருவிழாப் பொலிவே யெங்கும்
நாரணன் பொருவா ரெங்கு நலங்கெழு சோழ நாட்டில். 10

கு - ரை : ஆரணம் - வேதம். நாரணன் - திருமால்.

மகபதி யேதி வெற்றி மாய்த்திட வரைக ளெல்லாம்
இகவிறம் வயிரப் பாறைக் கியலுமென் றெருங்க னுப்ப
நகவவை விண்ணு ரிஞ்சி நடந்துகீழ்த் திசையுற் றாங்கு
மிகவும்வெண் ணிறத்த கொண்மூக் குணகடன் மேவிச் சென்று. 11

கு - ரை : மகபதி - இந்திரன். ஏதி - படையாகிய வச்சிரம். இகவு இல் - நீங்காத. கொண்மூ - மேகம். குணகடல் - கீழ்கடல்.

குழிதர வாய்ம டுத்துக் குறையற நாரந் தெவ்விப்
பழிதபக் கறுத்து மீட்டும் விண்ணெழீஇப் படருந் தோற்றம்
கழிதுய ரொருமை நாகங் கனவரைக் கிளர்ச்சி யோர்வான்
வழியனுப் பிடவெ ழுந்த மாநிலப் பாறை போன்ற. 12

கு - ரை : வாய்மடுத்து - உண்டு. நாரம் தெவ்வி - நீரை முகந்து; தெவ்வி - வாரிக்கொண்டு என்க. எழீஇ - எழுந்து. கழிதுயர் - மிக்க துன்பத்தையுடைய. மைநாகம் - மைநாக பர்வதம். வரைக்கிளர்ச்சி - மலைகளின் ஊக்கத்தை. ஓர்வான் - ஆராய்ந்தறியும் பொருட்டு. மா நீலப்பாறை - பெருமைதங்கிய நீலமலை.

தெள்ளிய கால மென்னுஞ் சிறுவன்வெண் படம்வி டுக்க
நள்ளிய வதுமேற் போகி நயந்தொரு நீலத் தாழி
உள்ளிய விழுந்து முற்றும் கறுத்தெழுந் ததுவு மொக்கும்
வெள்ளிய முகிலா ழிப்பால் விழாக்கறுத் தெழுந்த தோற்றம். 13

கு - ரை : தெள்ளிய - தெளிந்த. வெண்ணிறமுடைய மேகம் கடலில் விழுந்து கரிய நிறத்தோடு வரும் காட்சி காலம் என்னும் சிறுபையன் வெண்மையான பட்டத்தைப் பறக்கும்படி செலுத்த அது மேலேசென்று நீலம் கரைத்துவைத்த சாலில்விழுந்து முழுதும் கருநிறமடைந்து மேலே எழுந்து வந்ததையும் ஒப்பாகும்.

படம் - பட்டம். நீலத்தாழி - நீலங்கரைத்துவைத்த சால். முகில் - மேகம். ஆழிப்பால் - கடலில்.

இவ்வித மெழுந்த கொண்மூ விரும்புவி வெதுப்பும் வேனில்
வெவ்விய லழிப்பா னெல்லா மழித்திட விழைந்த பெம்மான்
செவ்வியி னிருவர் தம்மை முந்துபு சிதைத்தல் போலக்
கவ்விய வெழுப ரித்தேர்க் கடவுளை மாய்த்த மாதோ. 14

கு - ரை : புவி - பூமி. வெதுப்பு - வெப்பம். வேனில் வெவ்வியல் - கோடைக்காலத்தின் கொடுமை. எல்லாம் அழித்திட - உலக முழுவதையும் அழிக்கும்பொருட்டு. விழைந்த - விரும்பிய. பெம்மான் - சிவபிரான். இருவர் - பிரம விஷ்ணுக்கள். முந்துபு - முற்பட. கவ்விய - கவ்வி; முழுதும் பற்றி. எழுபரித்தேர்க்கடவுள் - சூரியன். மாய்த்த - மறைத்தன. சூரியன் தேர்க்குதிரைகள் ஏழென்பது: காயத்திரி, பிருகதி, உட்டிணிக், சகதீ, திருட்டுப்பு, அநுட்டுப்பு, பங்தி என்னும் வேதசந்தங்கள் ஏழும் குதிரைகளாம் உண்மைபற்றி 'எழுபரித்தேர்க் கடவுள்' என்றார்.

கதிரவன் மாய்த லோடுங் கலப்புறு மநத காரம
பிதிர்தர விளக்கிட் டென்னப் பிறங்குபன் மின்னுக் கான்று
முதிர்சினத் தமர்ந டாத்த மூண்டுமா முரசார்த் தென்ன
அதிர்தர வணைத்து மம்மா வடருரு முழக்கெ ழுப்பி. 15

கு - ரை : கதிரவன் - சூரியன். மாய்தல் - மறைதல். அந்தகாரம் - இருள். பிதிர்தர - பொடியாக. மின்னு - மின்னலை. கான்று - வெளிப்படுத்தி. முதிர்சினத்து - பெருங்கோபத்துடன். மூண்டு - எழுந்து. அடரீ உரு முழக்கு - நிறைந்த இடி முழக்கம்.

முரசினை யறையக் கொண்ட மூரிவான் குணிலே யென்னப்
பரசொரு பசுவில் விட்டுப் பருவரல் புரியு மாறு
விரசுவன் காலு மூர்தி மெலிவுகண் டொதுங்கிப் போக
அரசுசெ யாணை மேற்கொண் டாகாய முழுதும் போர்த்து. 16

கு - ரை : அறைய - அடிப்பதற்கு. மூரி - வலிய. குணில் - குறுந்தடி. பரசு ஒரு பசுவில் இட்டு. பருவரல் - துன்பம். விரசு - கலந்த. வன்காலும் - வலியகாற்றும். ஊர்தி - வாகனம்: வாயுதேவனுடைய ஊர்தி மான் என்க. மெலிவு - கானற் சலத்தின்பின் தொடர்ந்து மெலிதல். அரசு செய் ஆணை - மேகமாகிய அரசனிட்ட ஆணை.

வழியடி யவர்பா லென்று மன்னுகா ரோண நாதர்
பொழிதிரு வருளே யென்னப் பொழிந்தன மழைமேன் மேலும்
ஒழிதரா துடற்றும் வேனி லுயிரொழிந் தோடிற் றம்மா
வழிதரா தமருங் கொல்லோ வாலம்உட் புகுந்த காலை. 17

கு - ரை : வழியடியவர் - வழிவழியாக வந்த தொண்டர்: வழி - பரம்பரை. மன்னும் - நிலைபெற்ற. காரோண நாதர் திருவருள்போல மழை பொழிந்தன. ஒழிதராது - நீங்காது. உடற்றும் - வருத்தும். வேனில் - கோடை. அழிதராது - அழியாமல். ஆலம் - நஞ்சு, நீர்: சிலேடை.

நீறுமெய் விரவு காயிற் கனேபல நிரம்ப வீழ
மாறுசெய் மகவா னங்கை வச்சிரஞ் சிதறி வீழும்
ஏறுநம் வயிரப் பாறை யியற்றுவெஞ் சமரா லென்று
கூறுபல் வரையு முள்ளங் குளிர்ந்துமிக் குவப்புக் கொண்ட. 18

கு - ரை : நீறு மெய் விரவு காயின் - பூசுணைக்காயைப்போல: நீறு - சாம்பல். கனேபலம் - ஆலங்கட்டி. மாறு - பகை. மகவான் - இந்திரன். வச்சிரம் - வச்சிராயுதம். ஏறு நம் வயிரப் பாறை - தலைமைபெற்ற நம்முடைய வச்சிரமலை. வெஞ்சமர் - கொடியபோர். பல்வரையும் - பல மலைகளும். உவப்பு - மகிழ்ச்சி.

பெருமழைத் தாரை யானைத் தொண்டையிற் பிறங்கி வீழ
இருநிலங் குழியுந் தோற்ற மிகலிமுன் வேனில் செய்த
பொருவருங் கொடிய வெந்நோய் போமிட மெல்லாந் தேர்ந்து
மருவுறக் கீறி யாற்ற முயல்வது மானு மம்மா. 19

கு - ரை : யானைத்தொண்டை - யானைத்துதிக்கை. இகலி - பகைத்து. வேனில் - வேனிற்காலம். தேர்ந்து - ஆராய்ந்து. மருவுறக்கீறி - பொருந்து மாறு கிழித்து. ஆற்ற - ஆறும்படி செய்ய. மானும் - ஒக்கும்.

மழைபொழி தாரை யெல்லாம் வாய்ப்பெய்து வெந்நோய் தீர்ந்து
குழையுமண் வெறுத்து மேலா லோடிடக் கொடுத்து மேவுந்
தழைதரு கொடுநோய்க் கோட்பட் டதுதணிந் தொழியப் பெற்றூர்
பிழைதபு மருந்தென் றூலும் பேணுவ துண்டு கொல்லோ. 20

கு - ரை : வாய்ப்பெய்து - குடித்து. வெந்நோய் - வெப்பமாகிய நோய். மண் - பூமி. தழைதரு - மிக்க. நோய்க்கோட்பட்டு - நோயாற் கொள்ளப்பட்டு. அது - அந்நோய். பிழைதபு - குற்றமற்ற. பேணுவது - விரும்புவது.

வரையக மொருவிக் கான மருவியங் ககன்று மென்பால்
நிரையக மியங்கி யங்கு நீத்திளங் கானல் சூழுந்
திரையகம் புகுந்து மாய்ந்து தேய்ந்தது வேனில் வெப்பம்
புரையமை கொடுமை யாளர்க் கிருக்கையும் பொருந்துங்
கொல்லோ. 21

கு - ரை : ஒருவி - நீங்கி. மருவி - பொருந்தி. மென்பால் - மென்மையான பகுதியாகிய மருதநிலம். நீத்து - நீங்கி, துறந்து. கானல் - கடற்கரைச்சோலை. திரை அகம்-கடலில். மாய்ந்து - மறைந்து. தேய்ந்தது - இல்லாமற் போயிற்று. புரை - குற்றம். கொடுமையாளர் - கொடுமை செய்வோர்.

மறப்பகை மாற்ற வேண்டு மென்றுமால் வணங்கி வேண்ட
விறப்பக லுமையோர் பாகன் வேதவா கமபு ராணப்
பறப்பினை நறுநீர் செய்ய மற்றது பரவி யாங்குச்
சிறப்புறு முகில்பெய் வெள்ள மெங்கணுஞ் செறிந்த தம்மா. 22

கு - ரை : மறப்பகை - பாவமாகிய பகை. மால் - திருமால். விறப்பு அகல் - அச்சம் நீங்கிய. பறப்பு = பரப்பு - மிகுதி. நீர்செய்ய - நீராகச் செய்ய. "வேதாகம புராணங்கள் ஓர் கற்பத்தில் பருவத ரூபமாய் நிற்க, திருமால் வேண்டுகோளால் சிவபெருமான் அதனை நீராக்கித்தர அதுவே காவிரியாக வந்தது'' என்பது முன்பதிப்பின் அடிக்குறிப்பிற் கண்டது.

உரவாய வரைய ளாவி யொரீஇநறு முல்லை புக்கு
வரமேய பண்பு மேவி யஃதொரீஇ மருதம் புக்கு
விரவேயப் பயின்று பின்னர் நெய்தலில் விராய வெள்ளம்
பரகாயப் பிரவே சஞ்செய் பவர்திறங் காட்டிற் றன்றே. 23

கு - ரை : உரவு ஆய - வலிய. ஒரீஇ - நீங்கி. வரம்மேய - மேன்மை பொருந்திய. அஃது - அம்முல்லை நிலம். விராய - கலந்த. பரகாயப் பிரவேசம் செய்பவர் - கூடுவிட்டுக் கூடுபாய்வோர். வெள்ளம் திறம் காட்டிற்று.

வரையுறு கிளர்ச்சி நோக்க மைநாக மனுப்பப் பட்ட
புரையறு நீலப் பாறை பொருக்கெனக் கீழ்ப்ப டிந்தாங்
குரைமுகில் பொழிந்த வெள்ள மொய்யெனப் பரத்த லோடும்
விரையவங் குரித்த வெங்கு மிளிர்பசும் புற்க ளாதி. 24

கு - ரை : கிளர்ச்சி - ஊக்கம், எழுச்சி. புரை அறு - குற்றமற்ற. பொருக்கென - விரைவாக. ஓய்யென - விரைந்து. அங்குரித்த - தோன்றின, முளைத்தன. வெள்ளம் பரத்தலோடும் பசும்புற்களாதி அங்குரித்த.

கோடிமற் றெனைவ ருத்துங் கொடுவேனில் வெப்பந் தீர்ந்தேன்
ஆடிமற் றுடம்பு தண்ணென் றுய்நகப் பசந்தே னற்றால்
நீடிநீ வருந்தல் வேண்டா நிகழ்கருங் கொண்டா லென்று
கூடிய முகிலைத் தேற்றுங் கோளுமாம் பசந்த தோற்றம். 25

கு - ரை : கோடி - முறை திறம்பி, கோணி என்றபடி. நக பசந்தேன் - விளங்கும்படி பசுமைகொண்டேன். கருங் கொண்டால்: விளி. தேற்றும் கோளுமாம் - தெளிவிக்கும் கொள்கையுமாம்.

விண்ணுமுன் விளர்ப்பு மேவி விரிகட றருநீ ருண்டு
கண்ணுமொண் பசப்புப் பெற்றுக் கதிர்த்தது வேனி லாலே
மண்ணுமுன் விளர்ப்பு மேவி மழைபொழி நன்னீ ருண்டாங்
கெண்ணுமொண் பசப்புப் பெற்ற துணலறிற் பசுமை யின்றே. 26

கு - ரை : விண்ணும் - மேகமும். விளர்ப்புமேவி - வெண்ணிறம் பொருந்தி. கடல்தரு நீர்உண்டு - கடல்நீரைக்குடித்து. கண்ணும்-கருதும். பசப்பு - பசியநிறம்: என்றது கருமை நிறத்தை; நீலம், பசுமை, கருமை என்பன கவிமரபு. கதித்தது - தோன்றியது. மண்ணும் - பூமியும்; பசப்புப் பெறுதற்குக் காரணம் மழை பொழிந்தமையால்: ''விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றுங்கே, பசும்புற் றலைகாண் பரிது'' என்றமை காண்க. விண் - மேகம்: 'விண்ணின்று பொய்ப்பின்'. 'வானின் றுலகம்' என மழைமேல் வைத்துக் கூறியமை கருதத்தக்கது.

* பலசம யத்தின் கண்ணும் பயினர்செய் வணக்க மெல்லாம்
பலதலை யணிமா தேவன் பாலேசென் றுறுதல் போலப்
பலநல நிலத்தின் கண்ணும் பசுமுகில் பொழிநீ ரெல்லாம்
பலபிரி வுடைக்கா வேரிப் பாலேசென் றுற்ற தம்மா. 27

* பிரதிபேதம் : பலசம யத்தி னுள்ளும் பயினசை வணக்கம்.

கு - ரை : பயினர்=பயில்நர் - பழகுவோர்: அனுட்டிப்போர் என்றபடி. பல தலை அணி - பிரம விஷ்ணுக்களின் தலைமாலைகளைச் சிரமாலையாகவும் கிங்கிணி மாலையாகவும் அணிந்த. அணிமாதேவன்: வினைத்

தொகை. பசுமுகில் - கரியமேகம். பல இடங்களிலும் பொழியும் மழை நீரெல்லாம் காவேரி நதியிலே வந்து பொருந்தியது, பல சமயத்தினரும் அவரவர் கடவுளைநோக்கிச் செய்யும் வணக்கமெல்லாம் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானையே சென்று அடைதல்போல விளங்கியது. "விலகிவிழுவித் தாரை வேறுவே ருக வோடிக், குலநதிப் பாலி வைப்பி னேகமாய்க் கூடுந் தோற்றம், அலகில்பல் வழியு மூதா ரணிமையி னென்ரு மாறும், பல பல மதமு மீற்றின் ஒருவழிப் படலும் போலும்" என்னும் காஞ்சிப்புராணச் செய்யுளைத் தழுவியது. "இங்குநாஞ் சிலர்க்குப் பூசை யியற்றினு லவர்களோவந், தங்குவான் றருவரன்றே லத்தெய்வ மத்தனைக்காண், எங்கும்வாழ் தெய்வ மெல்லா மிறைவ னுணையா னிற்ப, தங்குநாஞ் செய்யுஞ் செய்திக் காணவைப் பாலளிப்பன்" எனவரும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானும் அறிக.

காவேரி: இராச இருடியும் யோகிகளில் சிறந்தவரும் ஆகிய கவேரர் என்பவர் முத்திபெறுதலை விரும்பிப் பிரமதேவரைக் குறித்து அரிய தவம் செய்து அவர் அருளால் விஷ்ணுமாயையைத் தமது புத்திரியாக அடைந்து முத்தி பெற்றனர் என்றும், பின்பு அக்கன்னி பிரமதேவர் கட்டளையின்படி நதி வடிவுகொண்டு பிரவகித்தமையால் அந்நதி கவேர கன்னி என்றும், காவேரி என்றும் பெயர் பெற்றதென்றும் ஆக்கினேய புராணத்தின் இரண்டாம் பாகத்துள்ள காவேரி மாகாத்மியத்தின் 23-ஆம் அத்தியாயத்தால் தெரிகின்றது. இந்நதி கடலொடு கலக்கும் சங்கத்துறையானது சிறந்த புண்ணிய தீர்த்தமென்று பல நூல்களாலும் கொண்டாடப்படும்.

"அமரமுனிவன் அகத்தியன் தனது, கரகங்கவிழ்த்த காவிரிப்பாவை" என்பர் மணிமேகலையுடையார். இந்திரன் நந்தவனம் செழிக்க, விநாயகக் கடவுள் அவன் வேண்டுகோளினுல் அகத்திய முனிவருடைய கமண்டல நீரைக் கவிழ்த்துதவினுர் என்பது புராண வரலாறு. 'சுரர் குலாதிபன்' என்னும் பிரபுலிங்கலீலைக் காப்புச் செய்யுளானும் அறிக.

'நீரெல்லாம் காவேரிப்பாலே சென்றுற்ற'தென்க.

ஒருங்குப கார மாவா ரொழுங்குபட் டியல்வ ரல்லார்
மருங்குற முறித்துச் செல்வா ரென்பது வயக்கி னுற்போல்
ஒருங்குப கார மாயே யுற்றகா வேரி வெள்ளம்
மருங்குற முறித்த லின்றி யிடையறு வொழுக்கின் மன்னும். 28

கு - ரை: ஒருசேர உபகாரமுடையோர் ஒருநெறிப்பட்டே ஒழுகுவர். உபகார சிந்தையில்லார் பக்கத்திலே முறித்துக்கொண்டு செல்வார். அச்செயலை விளக்குதல்போல உலகத்துக்கு உபகாரம் செய்தலொன்றையே மேற்கொண்ட காவேரி வெள்ளம் பக்கத்திலே கரைகளை உடைத்துக் கொண்டு செல்லாமல் இடையறவின்றி ஓடுவதாம்.

பல்வகை நாட்டி னுள்ளும் பசுமுகில் பொழியு நன்னீர்
ஒல்வகை யமைய வாங்காங் குறுமிதென் சிறப்பென் சொல்கேன்
புல்வளப் பெருநாட் டுள்ளும் பொழிந்தநீ ரிங்கு மேவி
வெல்வளந் தழையா நிற்க மிகப்பயன் றருமெஞ் ஞான்றும். 29

கு - ரை : பசுமுகில் - கறுத்த மேகம்; பசுமை - குளிர்ச்சி எனினுமாம். ஒல்வகை - இயலும்வகை. அமைய - பொருந்த. சிறுவளம் பொருந்திய நாட்டிலும் பொழிந்த மழைநீர் இங்குவந்து சேர்ந்து பெருவளந்தந்து எப்போதும் மிக்க பயனைத்தருவதாம்.

புல்வளம் - சிறிய வளப்பம். தழையாநிற்க - மிக. எஞ்ஞான்றும் - எப்பொழுதும்.

குறிஞ்சி

பிழைவளந் தபுசோ ணாட்டின் மதிதொறும் பிறங்கப் பெய்யும்
மழைவளம் புகல்வார் யாவர் வகுக்குமைந் திணையி னுள்ளும்
குழைவள மேன்மே லுண்டாங் கூடலின் புடைத்தாய் மற்றும்
விழைவளம் படுகுறிஞ்சி வளஞ்சில விளம்ப லுற்றும். 30

கு - ரை : குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும். பிழை வளம் தபு- பிழைதபு வளம் என்க: குற்றமற்ற வளப்பம். மதிதொறும் - மாதந்தோறும். பிறங்க - விளங்க. ஐந்திணை - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன. இந்நிலங்களுக்குப் பெயர்வந்த காரணம் அவ்வந்நிலவுரிப் பொருள்களால் என்க. கூடுதலும் கூடுதல் நிமித்தமும் குறிஞ்சியொழுக்கம். விழை வளம் படு - விரும்பும் பலவகை வளங்களும் தோன்றற்குரிய.

வேறு

காந்து வெந்தறு கட்சத கோடிகைக் கழலா
தேந்து வேந்துவெம் பகைதவிர்த் திறைஞ்சுத லெண்ணி
நாந்து தித்திடு தம்புடைக் குமரவே ணயந்து
போந்து தங்கிடத் தவம்புரிந் தனபல பொருப்பும். 31

கு ரை : காந்து - கருகுகின்ற, எரிகின்ற. வெம் தறு கண் - கொடிய அஞ்சாமையையுடைய. சதகோடி - வச்சிராயுதம்; நூறு முனைகளையுடையது என்னும் காரணக்குறி. கைக் கழலாது - கையைவிட்டு நீங்காமல். வேந்து வெம்பகை - இந்திரனுடைய கொடும்பகை; வேந்து - இந்திரன், "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல்). நாம் துதித்திடு - நாமெல்லாம் போற்றுகின்ற. நயந்து - விரும்பி. குமரவேள் தம்மிடத்துத் தங்க. பலபொருப்பும்- பல மலைகளும்; "சேயோன் மேய மைவரை யுலகமும்" என்பது தொல்காப்பியம்.

வள்ளி யாரொடுங் குமரவேண் மகிழ்ந்தமர் தலினல்
எள்ளி வச்சிர மெடுத்திடு வெம்பகை யிரியத்
தள்ளி முந்துபு மகட்கொடுத் ததுமுளஞ் சமைய
உள்ளி வேந்துசூழ்ந் திறைஞ்சிட வோங்குவ வோங்கல். 32

கு - ரை : வள்ளியம்மையாரோடு முருகக்கடவுள் மலையில் மகிழ்ந்து வீற்றிருக்கும் காரணத்தால், இந்திரனும் மலைகளின் சிறகை அரிதற் பொருட்டு வச்சிராயுதத்தை எடுத்து வீசும் பகை நீங்கித் தன் மகளாகிய தெய்வயானையம்மையாரை முருகவேட்கு மணஞ் செய்வித்தும், மலையினிடத்து வந்து முருகவேளை வணங்குவதற்கும் அஃது இடமாகவுள்ளது.

எள்ளி - இகழ்ந்து. இரிய - கெட்டோட. முந்துபு - முற்பட்டு. வேந்து - இந்திரன். ஓங்கல் - மலை. ஓங்குவது - மேம்பாடுற்று விளங்குவது.

இறைப கைத்திற மிரித்ததை யெண்ணுபு நாமுங்
குறையி னட்புற லாமெனக் கருதிய கொண்மூ
நறைம லர்க்கடம் பணியலா னூர்திக ணயந்து
சிறைவி ரித்தக வும்படி சென்றுசென் றியங்கும். 33

கு - ரை : இறை-தேவேந்திரன். இரித்ததை-விட்டு நீங்கியமையை. எண்ணுபு - எண்ணி. கொண்மூ - மேகம்; இந்திரன் மேகவாகனன் ஆகலின். நறை - தேன், வாசனையுமாம். ஊர்திகள் - மயில்கள். சிறை - தோகையை. அகவும்படி - ஆடுமாறு. இயங்கும் - தவழ்வனவாம்.

முன்னம் வள்ளியார் கொடுத்திட முருகனேற் றயின்ற
தின்ன தாதலின் விருப்பம்வே றிலையென வெண்ணி
அன்ன வற்குண வாம்வகை யிறவுள ரமைப்பார்
மன்ன மால்வரைச் சாரலிற் செந்தினை வளமே. 34

கு - ரை : அயின்றது-உண்டது. இன்னது-இத்தன்மையுடையதாகிய தினை. அன்னவற்கு - அம்முருகக்கடவுளுக்கு. இறவுளர் - வேடர்கள். மன்ன - நிலைபெறுமாறு. செந்தினை வளம்-செந்தினைவிளைவித்தலாகிய வளப்பத்தை.

குன்றக்குறவர் பலர் குழுமி, வெறியாட்டயர்தற்கு வேண்டும் பொருள் கொண்டு வெறியயர்வர் ஆதலின் குறிஞ்சிக்குத் தெய்வம் முருகக்கடவுள் (32) எனவும், உணவு தினை (34) எனவும், புள் மயில் (33) எனவும் கூறினர். கருப்பொருளாவன: "தெய்வ முணாவே ... அன்ன பிறவுங் கருவென மொழிப" (தொல்); தெய்வம், உணவு, விலங்கு, மரம், பூ, பறை, தொழில், யாழ் என்பன. (சூத் - 18) குறிஞ்சி நிலத்துக்குரியபூ : வேங்கை, குறிஞ்சி, காந்தள் என்பன குறிஞ்சி செடிவகையைச் சார்ந்தது. நீல நிறப்பூ, பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை பூப்பது, பூத்தபின்பு செடி அழிந்துபோம், தண்டு பெரிதாக இருக்கும்.

இதையுள் வேடுவ ராக்குக வலைகுர லினச்
சிதைவி லாதுகைத் தட்டையோ டாவயிற் சென்று
குதைவ ரிச்சிலை நுதலுடைக் கொடிச்சியர் காப்பார்
முதையின் மற்றதிற் கலக்குமா றிட்டுமொய் தேனீ. 35

கு - ரை : இதையுள் - புதுக்கொல்லையுள். கவலை - செந்தினை. குரல் - கதிர். கைத்தட்டை - கிளியோட்டுங்கருவி. தட்டையாவது மூங்கிலைக் குறுக்கே நறுக்கிப் பலவாகப்பிளந்து ஓசையுண்டாகும்படி ஒன்றிலே தட்டுங் கருவி "வெதிர்புனை தட்டையேன்" (நற்றி - 147); "படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே" (குறுந் - 223); "தழலை வாங்கியுந் தட்டை யோச்சியும்" (அகநா - 188). குதை வரிச்சிலை - குதையுடன் கட்டப்பட்ட வில். நுதல் - புருவம். கொடிச்சியர் - வேட்டுவிச்சிகள். முதை - மகிழ்ச்சி; காடுவெட்டிச் சுட்ட கொல்லை என்பர். அதில் - அத்தினையுடன். மொய் தேனீ ஈட்டும்.

முந்தி யானையை வேட்டவன் முயங்கிட மமரின்
நந்தி யா நயப் பெய்தலா மென்றுள நயந்து
தந்தி யாவையு மாவயிற் செறிவன தவாமல்
உந்தி யாரரு வியிற்றுளை வனபிடி யோடும். 36

கு - ரை : முந்தி யானையை வேட்டவன் - முருகக்கடவுள். யானை - தெய்வயானையம்மையார். வேட்டல் - விரும்புதல்; மணஞ்செய்துகொள்ளல். நயப்பு - அன்பு. நயந்து - விரும்பி, மகிழ்ந்து. முயங்கு இடம் அமரின் நந்தியாம் நயப்பு எய்தலாம் எனப் பிரித்துப் பொருள்கொள்க. தந்தி - யானை. ஆவயின் - அவ்விடத்து. வயின் - இடம். தவாமல் - நீங்காமல். உந்தி ஆர் அருவியில் - நீர் மிக்க அருவியில். துளைவன - விளையாடுவன. பிடியோடும் - பெண் யானைகளோடும்.

தடுப்ப ருந்திறல் வேட்டுவர் மார்பிடைத் தைத்து
வடுப்ப டுத்துவ மால்கரிக் கோடுமாத் திரமோ
உடுப்பு மென்றளி ராக்கொளுங் கொடிச்சிய ருரத்தில்
எடுப்பு வாய்ந்திணை தபுத்தெழு மிணைத்தடங் கோடும். 37

கு - ரை : தடுப்ப அரும் திறல் - தடுப்பதற்கு அரிய வலிமை. தைத்து - ஊடுருவிச் சென்று. வடுப்படுத்துவ - தழும்புண்டாக்குவன. மால் - பெரிய, மயக்கம். கரிக்கோடு - யானைத்தந்தம். உடுப்பு மெல் தளிரா கொளும் - மென்மையான தளிர்களை ஆடையாக உடுத்துக்கொள்ளும்; அஃது ஆம்பல் முதலிய மலர்களினாலேனும், தளிர்களினாலேனும், விரவிய இவ்விரண்டினாலே னும் ஆக்கப்படுவது. (புறநானூறு, 116; 1 - 2; 248; 1 - 2 அடி). கொடிச் சியர் - வேட்டுவிச்சியர். உரத்தில் - மார்பில். இணை தபுத்து - ஒப்பு நீங்கி. இணை தடங்கோடு - இணையாகிய நகில்கள். கோடு - மலைச்சிகரம், யானைத் தந்தம். எடுப்பு வாய்ந்து - மேலெழுந்து.

புன்மை சால்கிழங் ககழ்ந்திடும் போதெதிர் போதும்
அன்மை தீர்மணி சுரையிரும் பாலகற் றிடுவார்
வன்மை மேவிய தாயினு மாண்பறி யாரேல்
மென்மை மேவிழி பொருளினு மிழிந்ததாய் விடுமே. 38

கு - ரை : புன்மைசால் - மிக இழிந்த. அகழ்ந்திடும்போது - தோண்டி எடுக்குங் காலத்து. மணி - மாணிக்கம். சுரை இரும்பால் - உட்டுளை பொருந்திய இருப்புப்பாரையால்; பெரும்பாணாற்றுப்படை 91, 92 அடிகளையும் அவற்றின் உரையையும் பார்க்க. கிழங்கு என்றது கவலைக்கிழங்கை. ''சுவைபடு வேலை மூலஞ் சுரைபடு மிரும்பாற் கல்லும், நவையறு குறவர்'' (தியாகராச லீலை - திருநாட்டு 39). வன்மை மேவியதாயினும் - சிறந்த பொருளாயினும். மாண்பு - பெருமை. வேற்றுப்பொருள் வைப்பணி.

முறிவி ராயபைம் பொழிலிற்செம் முழுமணி நோக்கிச்
செறிவ தீயெனக் குடாவடி வேறுகான் சென்று
பிறிவி லாவிர வழலெனப் பிறங்கவுள் வெதும்பும்
அறிவி லாரெங்குச் சாரினுஞ் சுகமடை யாரால். 39

கு - ரை : முறி - இளந்தளிர். செம்முழுமணி - மாணிக்கக் கல். குடாவடி - கரடி. பிறிவிலா விரவு அழல் - நீங்காமல் கலந்துள்ள நெருப்பு. வேற்றுப்பொருள் வைப்பணி.

அதிர்த ரும்படி யானைகண் முழங்கிடுந் தோறும்
எதிர்மு ழங்குவ மால்வரை மாறுற்ற தென்று
முதிர்சி னங்கொடு பாய்தொறு மூரிவன் கோட்டின்
உதிர்த ருந்தர ளங்களாங் கிருளற வோட்டும். 40

கு - ரை : அதிர்தரும்படி - நடுங்கும்படி. எதிர் முழங்குவ - எதிராக ஒலி செய்வன. மாறுற்றது - பகைமை கொண்டது. மூரி வன் கோடு - மிக வலிய தந்தங்கள். தரளங்கள் - முத்துக்கள்; யானைக் கொம்பிலுள்ள முத்துக்கள். ஆங்கு இருளற - அவ்விடத்திலே இருள் நீங்கும்படி. யானைத் தந்தம் முத்துப் பிறக்கும் இருபது இடங்களுள்ளே ஒன்றும்: ''தந்தி வராக மருப்பிப்பி பூகஞ் சலஞ்சலம்'' என்னும் பாடலால் அறிக.

அழும ழக்கொளப் படுக்கைவீ டரனளித் தமையாற்
செழும கட்புணர் முருகவே ளுறையுளைச் சேர்ந்து
கழும ணிப்படப் பாயன்மால் கண்ணுறங் குதலின்
முழும லர்ச்செழுந் தோன்றிப்பா லுறங்குவ முகிலே. 41

கு - ரை : அழும் மழக்கொள - பால்வேண்டி அழுதிடும் உபமன்னியு கொள்ளும்படி. படுக்கை வீடு - திருமால் பள்ளியறையாகிய திருப்பாற்கடலை.

"பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கட லீந்தபிரான்" (திருப்பல்லாண்டு). செழுமகட் புணர் - செழுமையான மகள் இருவரையும் புணர்ந்த; திருமாலின் புதல்விகளே இந்திரன் மகளாகவும், வேட்டுவக்குமாரியாகவும் வந்தமை குறித்தது. உறையுள் - இருப்பிடமாகிய குறிஞ்சி நிலம். படப்பாயல்மால் - ஆதிசேடனாகிய படுக்கையினையுடைய திருமால். கண்ணுறங்குதலின் - தூங்குதல்போல; இன் - ஐந்தாவது ஒப்பின்கண் வந்தது. செழுந்தோன்றிப் பால் - செங்காந்தளின் புறத்து. முகில் உறங்குவ. 'அழும் மழ'; "மழவுங் குழவும் இளமைப் பொருள" (தொல் - சொல் - 311). மழவு என்றது மழ என நின்றது.

தோன்றி தீயென வதன்மருங் கொருபுடை தொக்க
வான்றி யங்கிமெய் கருகிய தெனவுள மதித்துத்
தேன்றி ரிந்துகொள் சிறுகுரங் கருவிநீ ரிறைப்ப
ஏன்றி யங்கிமற் றதுமுழக் கெடுப்பவோட் டெடுக்கும். 42

கு - ரை: தோன்றி - செங்காந்தள். தொக்கவான் - தொகுதியாகவுள்ள மேகம். உளம் மதித்து - மனத்திலெண்ணி. சிறு குரங்கு - குரங்குக்குட்டி. ஏன்று - ஏற்றுக்கொண்டு. இயங்கி - தவழ்ந்து. அது - அம்மேகம். முழக்கெடுத்தல் மேகத்தின் தொழில். ஓட்டெடுத்தல் - குரங்குக்குட்டியின் செயல். மற்று: வினைமாற்றின்கண் வந்தது.

அன்னை போல்பவ னன்னையா யமர்தரு சிலம்பும்
முன்னை நாளுணச் சாரமூட் டியமுழு வரையும்
பொன்னை நேரருள் பெறவெறும் பருச்சித்த பொருப்பும்
கொன்னை மேவுறப் பெருந்தவஞ் செய்தது குறிஞ்சி. 43

கு - ரை: அன்னைபோல்பவன் - சிவபெருமான். அன்னையாய் அமர்தரு சிலம்பு: அன்னையாய் - தாயுமானவராய். சிலம்பு - திருச்சிராப்பள்ளிக் குன்று. தாயுமான வரலாறு. செவ்வந்திப் புராணத்துள்ள தாயான சருக்கத்தால் விளங்கும். சாரமாமுனிவர் ஸ்ரீ தாயுமானவரைச் செவ்வந்திப் போதால் வழிபட்டமை செவ்வந்திப் புராணம், சூரவாதித்தச் சருக்கம், 58-59 செய்யுட்களால் அறிக. சாரமூட்டிய முழுவரை - ? (சாரமலைபோலும்.) எறும்பு அருச்சித்த பொருப்பு-எறும்பியூர்மலை; பொருப்பு-மலை. கொன்னை - சிறப்பு.

காக மேவுறிற் கடுந்தழல் வீசிடு பறம்பும்
மோக மாகியீ முயங்கிட வருள்பொழி நகமும்
சோகந் தீரநா வரையர்த முடியடிச் சூட்டும்
ஏக நாயகர் வரையுங்கொண் டதற்கெவன் வேண்டும். 44

கு - ரை.: கடுந்தழல் வீசிடு பறம்பு - இரத்தினகிரி; இது வாட்போக்கி எனவும் வழங்கும்; காகமணுகாமலை என்பர். மோகம் ஆகி - விருப்புற்று. ஈ முயங்கிட அருள்பொழி நகம் - திருஈங்கோய்மலை. பறம்பு, பொருப்பு, நகம்

என்பன மலை என்னும் ஒரு பொருட்சொற்கள். சோகம் - சோர்வு. நாவரையர் - திருநாவுக்கரசு நாயனர்.

முல்லை

தலையும் பாதமு மயனரிக் கரியவர் தருசேய்
நிலையு மால்வரைப் பெருவள நிகழ்த்துதற் காமோ
இலையும் பூவுமார் குழன்மட வார்தனித் திருக்கும்
கலையு மானுஞ்சேர் முல்லையின் வளஞ்சில கரைவாம். 45

கு - ரை : தலையும் பாதமும் அயன் அரிக்கு அரியவர்: தலை அயனுக்கும் பாதம் அரிக்கும் காண அரியவர் - சிவபெருமான்: முறை நிரல் நிறைப் பொருள் கோள். சேய் - புத்திரராகிய முருகவேள். நிலையும் - நிலைபெற்றிருக்கும். இலையும் பூவும் ஆர் குழல் - தழை விரவத் தொடுத்த பூமாலை அணிந்த கூந்தல். மடவார் தனித்திருக்கும் முல்லை: முல்லை - மகளிர் ஆற்றியிருத்தல் முல்லைக்கு உரிப்பொருள். கலை - ஆண்மான். மான் - பெண்மான். மடவார் தனித்திருத்தல் கணவனைவிட்டுப் பிரிந்தமையால் என்க.

வனவி ருப்பனென் பதற்குமுப் பொருள்கொள மாயோன்
தினவி ருப்பொடு மாண்டுபன் ஞன்குகான் றிரிந்தான்
புனவி ருப்பருப் பைந்துழாய் மாலிகை பூண்டான்
கனவி ருப்புற வனமெனும் யாவையுங் காப்பான். 46

கு - ரை : வன விருப்பன்: வனம் - காடு, திருத்துழாய், நீர். ஆண்டு பன்னுன்கு - பதினுன்கு வருடங்கள். கானில் திரிந்தமை ஸ்ரீ இராமாவதாரத்தில். புனம் - காடு. பைந்துழாய் மாலிகை: மாலிகை - மாலை.

அண்ட ரேத்திடக் கிடப்பவ னெனலன்றி யிருப்பான்
அண்ட ரேத்திட வென்பதற் கிருபொரு ளமைய
அண்ட ரேத்திடு வைகுந்தத் தமர்வதல் லாமல்
அண்ட ரேத்திட வனத்தினுந் தெய்வமா யமர்வான். 47

கு - ரை : அண்டர் - தேவர்; தேவர் போற்றுமாறு வைகுந்தத்தில் வீற்றிருத்தல். அண்டர் - இடையர். வனத்தினும் - முல்லை நிலத்தினும். "மாயோன் மேய காடுறை உலகமும்" (தொல் - பொருள் - 5 சூ). பொருவு - ஒப்பு.

மருவு தங்குலக் கலப்புறு நன்றியை மதித்து
வெருவு நேமியான் மேவுகான் மேவுவர் தொறுவர்
பொருவு தீர்தரு திருமகள் பொற்பினும் பொலியும்
திருவ மாதரார் போகமுன் னனிசெறித் துவந்து. 48

கு - ரை : தொறுவர் - இடையர். தங்குலக்கலப்பு - ஆயர்பாடியில் வளர்ந்தமை. நேமியான் - சக்கராயுதத்தையுடைய திருமால். கான் - முல்லை நிலம்.

முப்ப திற்றிரண் டிலக்கயோ சனைத்துணை முயங்கும்
அப்ப யக்கட லுள்ளவன் கட்டுப்பட் டடிபட்
டிப்பர் தங்குடிற் பால்முதற் கவர்ந்தமை யெண்ணில்
ஒப்பி லாய்ச்சிய ரழலிடப் படுஞ்சுவை யுணர்ந்தே. 49

கு - ரை : முப்பத்திரண்டுலட்ச யோசனை அளவு. துணை - அளவு. பயக்கடல் - திருப்பாற்கடல். கட்டுண்டமை அடியுண்டமை ஆயர்பாடியில் கண்ணனுய் அவதரித்தகாலத்தில். இப்பர் - இடையர். குடில் - குடிசை. பால் முதல் - பால் முதலியவற்றை. அழல் இடப்படும் சுவை-பாலைக் காய்ச்சுவதனுல் உண்டாகிய சுவையை.

கரிய மாயவன் றன்னிடங் காதலித் தமர்ந்து
பிரிய மேவுறக் கவர்தன்மற் றிதுவெனப் பேணித்
தெரிய வெங்கணு நவநீதந் திரட்டிவைத் தென்ன
அரிய பைந்தழைக் கானகம் பரப்புவ வாம்பி. 50

கு - ரை : கரிய மாயவன் - திருமால். தன்னிடம் என்றது முல்லை நிலமாகிய கானகத்தை. இது - வெண்ணெய் ஆகிய இந்தப்பொருள். தெரிய - வெளிப்பட. நவநீதம் - வெண்ணெய். ஆம்பி - காளான்; (தியாகராச லீலை - நாடு - 69).

பாய மேகலைச் சிற்றிடைப் பெருமுலைப் பணைத்தோள்
ஆய மாதர்மற் றெண்ணிலா ரவரெலாந் தழுவி
நேய மேவமால் பல்லுருக் கொண்டுநின் றுங்கு
மேய கானகத் தளவற விராயின பூவை. 51

கு - ரை : ஆயமாதர் - இடைப்பெண்கள். சிற்றிடைப் பெருமுலை: முரண். அளவில்லாத ஆயமாதரைத் தழுவுதற்பொருட்டு அன்புடன் கண்ணபிரான் பல உருக்கொண்டு நின்றருளினர். நின்றுங்கு - நின்றுற் போல. பூவை - காயாம்பூ. விராயின - கலந்திருந்தன. திருமால் பூவை வண்ணன் ஆகலின் என்க.

அளவில் பூவைக ளளவில்கண் ணர்களிருப் பமையும்
அளவி லாத்தவ முனிபுரி திக்கையா லாற்றும்
அளவில் பூசனைக் கெதிர்நிற்கு மங்கணர் பொருவ
அளவில் பூந்துணர் நிரம்பிய கொன்றைக ளலங்கும். 52

குரை: பூவைகள் - காயாம்பூக்கள். கண்ணார்கள் - கிருட்டினர்கள். தவ முனி - தவத்தையுடைய முனிவர்: ஈண்டுத் தவமாவது சரியை கிரியா யோகங்களே. தீக்கை: சரியைக்குரியது சமயதீக்கை எனவும், கிரியை யோகம் என்னும் இரண்டற்கும் உரியது விசேடதீக்கை எனவும் உணர்க. தவங்களும் தீக்கையும் ஞானத்தைக் கொடுத்து அந்த ஞானம் வாயிலாக முத்தியைக் கொடுக்கும். அங்ஙனமன்றி நேரே முத்தியைக் கொடா என்பர். எதிர் நிற்கும் - நேரே தோன்றிக் காட்சியளிக்கும். அங்கணர் - சிவபெருமான். பொருவ - ஒப்ப. பூந்துணர் - பூங்கொத்துக்கள். அலங்கும் - விளங்கும்.

நாறு கொன்றையு மற்றத னெருபுடை நயப்பக்
கூறு பூவையும் பொலிதர நிழல்பெறல் குறித்த
வேறு தன்றலை வளைத்துநா வெறிந்துநின் றிடுதல்
பேறு கண்ணற்குச் சேவுமா தரன்றரல் பிணையும். 53

குரை: கொன்றையும் - கொன்றைமரங்களும். நயப்ப - விரும்ப. பூவையும் - காயாமரங்களும். பொலிதர - விளங்க. குறித்த ஏறு - கருதி வந்த எருதுகள். பேருகச் சிவபெருமான் கண்ணனுக்கு இடபத்தைத் தருதலொக்கும். பேறு - பெறுதல். சே - இடபம். உமாதரன் - சிவபெருமான். பிணையும் - ஒக்கும்.

கன்றை யுள்ளிய கறவைசோர் பாலொடுட் கனியக்
கொன்றை வேய்ங்குழல் கோவல ரூதுவர் மாலை
மன்றை யாடரங் காக்கிய பிரான்மனங் கனிய
ஒன்றை மேவுமா னுயனு ரூதிய தொப்ப. 54

குரை: உள்ளிய - நினைந்த. கறவை - பசுக்கள். கொன்றை வேய்ங்குழல் - கொன்றைப்பூவைச் செருகிய மூங்கிலாற் செய்த குழல்கள்; வேய்ங்குழல் என்பதை வங்கியத்திற்குப்பெயராக்கிக் கொன்றைப்பழத்தைத்துருவித் துளைத்த குழல் என்று கூறுதலும் பொருந்தும் (சிலப்பதி). கோவலர் - இடையர். ஆடரங்கு - நடனசாலை. மன்று - சபை; இரத்தினசபை, கனகசபை, இரசிதசபை, தாமிரசபை, சித்திரசபை என்பன ஐவகை மன்றுகள். மாலை - மாலைக்காலத்தில். ஒன்றை மேவும் - வீடுபேற்றை விரும்பிய. ஆனுயனர் - ஆனுய நாயனர்.

சூத முல்லையின் மதுக்கொளுந் தூப்பண்பு கன்று
மாதர் வெண்டயி ருடையொலி மாய்ப்பகைக் கன்று
போத வெங்கணும் பயில்வபூங் கோவிளங் கன்று
காத ரந்தபு மந்நிலத் தஞ்சிய கன்று. 55

குரை: சூதம் - மா. மது - தேன். தூ - சுத்தம். பண் புகன்று மாய்ப்ப. வெண் தயிர் உடை ஒலி - வெண்மையான தயிரை மத்தினுல்

கடையும் ஓசை. கைக்கன்று - கைவளை; என்பது பழைய பதிப்பின் அடிக் குறிப்பு. பூங் கோ இளங்கன்று - அழகிய பசுக்களின் பச்சிளங் கன்று. காதரம் - அமைதி. அஞ்சி அகன்று எங்கனும் பயில்வ.

துள்ளு மோர்புற முயலின மவற்றினுந் துடித்துத்
துள்ளு நவ்வியின் கன்றவற் றினுந்துடி துடித்துத்
துள்ளு மானிளங் கன்றுகோ வலர்மழத் துடித்துத்
துள்ளு முல்லையி னெற்றைக்கு மிவ்வளந் தொலையா. 56

கு - ரை: நவ்வியின் கன்று - மான்கன்று. மான் இளங்கன்று - பெண்மான் குட்டி. கோவலர் - இடையர். மழ - பச்சிளங்குழவி. முல்லை யின் - முல்லை நிலத்தில். இவ்வளம் எற்றைக்கும் தொலையா.

பரவு சாமைகோத் திரவமா டகம்பல பயறு
விரவு சொன்னன்மற் றவரையா தியபல வேறும்
உரவு மேவுபல் பொலிபொலி யாகிமிக் குறுவ
கரவு தீர்வரை பலகுடி புகுந்தெனக் கானம். 57

கு - ரை: கோத்திரவம் - வரகு. ஆடகம் - துவரை. சொன்னல் - சோளம். பொலிபொலியாகி - மிகுதியான குவியல் குவியலாகி: நெற்பொலி என்பதுபோல. கரவுதீர் வரை - ஒளித்தலில்லாத மலைகள்.

45-ஆம் பாடல் முதல் இப்பாடல் வரையில் தெய்வம்: திருமால் எனவும்; மக்கள்: இடையர், இடைச்சியர் எனவும்; பூ: துளசி, முல்லை, தோன்றி எனவும்; மரம்: கொன்றை, காயா எனவும்; விலங்கு: மான், முயல், பசு எனவும்; உணவு: வரகு, சாமை, துவரை, பயறுகள், அவரை எனவும்; தொழில்: தயிர் கடைதல், கொன்றைக் குழலூதல், மூவினமேய்த்தல் எனவும் முல்லைக் கருப்பொருள் கூறினமை காண்க. கணவனைப் பிரிந்த மகளிர் தனித்து ஆற்றியிருத்தலே உரிப்பொருளாம் என்க.

மன்னு மாய்க்குல நாயனு ருதித்தமங் கலமும்
பன்னு மேன்மைசால் பரம்பரன் திருநெடுங் களமும்
துன்னு சானவி கண்டசோ ளீச்சரப் பதியும்
இன்னு முல்லையி னுளவெனிற் பிறிதெவன் வேண்டும். 58

கு - ரை: ஆய்க்குலநாயனர் - ஆனாயநாயனர். மங்கலம், நெடுங் களம், சோளீச்சரம் முதலிய தலங்கள். பரம்பரன் - சிவபெருமான். சானவி கண்ட சோளீச்சரம் - கங்கைகண்ட சோளீச்சரம்.

வெள்ளி யங்கிரி மேவினேன் விழைதிருக் காட்டுப்
பள்ளி யம்மையார் நீழலி லுறைபவன் பதியும்
எள்ளி மாமல மிரித்திடு நியமமும் பிறவும்
புள்ளி மான்வனத் தனவெனிற் புகழ்பெரும் புகழே. 59

கு - ரை: வெள்ளியங் கிரி - கயிலாய மலை. அம்மையார் நீழலில் உறைபவன் பதி. எள்ளி - இகழ்ந்து. மாமலம் - கரிய ஆணவமலம். இரித்திடும் - கெட்டோடப்பண்ணும். நியமம் - கோயில். வனத்தன - முல்லை நிலத்துள்ளன.

மருதம்

நீடல் வாய்வன வளத்தெவன் சொற்றன நிகழும்
ஆடல் பாடலோ டமர்தரு வேந்தனே யளிக்கக்
கூட லாவதற் கேதுவாய் நாடொறுங் குலவும்
ஊடன் மேவிய மருதத்தின் வளஞ்சில வுரைப்பாம். 60

கு - ரை: நீடல் வாய் - பெருமை மிக்க. வேந்தன் - இந்திரன்; "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல்). ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்திணையின் உரிப்பொருளாம்.

வேறு

உற்றபெரு வனங்காக்கு முபேந்திரனு கியவிளவற்
பற்றமையுங் கருத்துடைய பாகசா தனனடுத்த
செற்றவளப் பெருமருதந் தெய்வமாய்ப் புரப்பானென்(று)
அற்றமின்முன் னுறவுமதித் தவாய்ப்பெருகுங் காவேரி. 61

கு - ரை: வனங் காக்கும் உபேந்திரன் - திருமால்; வனம் - முல்லை நிலம். இளவல் - தம்பி. பாகசாதனன் - இந்திரன். செற்ற வளம் - செறிந்த வளப்பம். மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும். அற்றம் இல் - சோர்வு இல்லாத. மதித்து - கருதி. அவாய் - விரும்பி.

முன்னொரு காலத்தில் இந்திரன் அசுரர்கள் நலிதலால் வருந்தித் தேவர்களுடனே திருமாலைச் சரணமடைந்து 'நீ எப்பொழுதும் என் உலகத்தில் எழுந்தருளியிருந்து என் பகை தவிர்த்து எம்மைப் பாதுகாத்தருளல் வேண்டும்' என்று வேண்ட, அதற்கு இணங்கிய விஷ்ணுமூர்த்தி காசியப முனிவரது மனைவியாகிய அதிதி தேவியின் வயிற்றில் அவ்விந்திரனுக்குத் தம்பியாய் ஓர் அவதாரம் எடுத்துத்தோன்றி உபேந்திரன் எனப்பெயர் கொண்டு தேவலோகத்தில் அவ்விந்திரன் அருகிலே நின்று அவனது துயரத்தைத் தீர்த்தருளினர் என்க. இஃது உபேந்திரன் வரலாறு.

பெருவருவா யுடையார்கள் பேணும லிருக்கவுமூழ்
தருவருவாய் பலவுண்டாற் றவாப்பெருக்கின் மிகச்சிறந்த
பொருவருமா நதியாய பொன்னியினும் பிரவதிமுற்
பருவருமா றெழிநதிகள் பலவந்து கூடிடுமால். 62

கு - ரை : பெருவருவாய் - மிகுதியான பொருள். பேறுமல் - பாது காவாமல், விரும்பாமல். ஊழ் தரு - முறையாற் கிடைக்கத்தக்க. தவாப் பெருக்கின் - நீங்காத நீர்ப் பெருக்கத்தால். பொன்னியின் - காவிரிநதியில். ஆம்பிரவதி முற்பருவருமாறு ஒழிநதிகள் - ஆம்பிரவதி முதலாகத் துன்பில்லாத ஆறுகள். பருவருமாறு ஒழி - அருவருப்பு நீங்கிய.

அறிவுடைய பெருஞ்செல்வ ரமைதருநற் பொருளனைத்துஞ்
செறிவுடைய பயன்படுமா செலுத்துவார் பல்வழியும்
நெறியுடைய காவேரி நெடுநீத்த மத்தனையும்
குறியுடைய பன்மதகுங் கொள்ளைகொளச் செலுத்திடுமோ. 63

கு - ரை : அமைதரு - தம்பாற் பொருந்தியுள்ள. செறிவுடைய பயன் - நிறைந்தபயன். காவேரி நெடுநீத்தம் - காவேரிப்பெரு வெள்ளம். அத்தனையும் - அவ்வளவும். 1. "பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம், நயனுடை யான்கட் படின்" (குறள்-216). 2. நடுவூருள் வேதிகை சுற்றுக் கோட் புக்க, படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்" (நாலடி-96). 3. "முன்னூர்ப் பழுனிய கோளி யாலத்துப் புள்ளார் யாணர்த் தற்றே என்மகன், வளனும் செம்மலும் எமக்கு" (புறம் - 254).

முதுமதகு தொறும்புகுந்த முழுப்புனல்பல் செறுக்கடொறும்
கதுமெனச்சென் றுறப்பாய்ந்தக் கழனியினும் பிளவனைத்தும்
பதுமவறி குறியுடைத்தன் பிளவுவிரை தரப்பாறு
மதுவெனப்பாற் றுபுகுழைத்த தரனடியார் மனம்பொருவ. 64

கு - ரை : முழுப்புனல் - மிக்கநீர். செறுக்கள் தொறும் - வயல்கள் தோறும். கதும் என - விரைவாக. கழனியின் ஆம் பிளவு - வயல்களில் உள்ள வெடிப்புகள்: பிளவு - கமர், வெடிப்பு. பதும அறிகுறி - தாமரையின் அடையாளம். பாறுமது என - நீங்குவதுபோல. தன் பிளவு என்றது வயல் வெடிப்பினை. குழைத்தது - குழையச்செய்தது. அரனடியார் - சிவனடியார்கள். மனம் பொருவ - மனத்தை யொப்ப.

பணைதொறுநன் னீர்புகுதப் பழையர்மனை தொறும்புகுந்து
பிணைமதுத்தம் வாய்ப்புகுத்திப் பெருங்களமர் நறுங்குல்லை
இணைபுயமா லொருபிறப்பி னெடுத்தபடைக் கல்லாமல்
அணையுமகள் குழையாளென் றுணர்ந்தலங்கைக் கொண்டணைந்தார்.

கு - ரை : பணைதொறும் - வயல்கள்தோறும். பழையர் - கள்விற்போர். களமர் - உழவர். நறுங்குல்லை - மணம்பொருந்திய துளசி. ஒரு பிறப்பின் எடுத்த படை - பலராமனாக அவதரித்த காலத்திலே கொண்ட படைக்கலம். மால் - திருமால். அணையும் மகள் - பூமிதேவி. அலம் - கலப்பை. களமர் கைக்கொண்டு அணைந்தார்.

புல்லியபுற் கொலையெனினும் பொருவரிய கொலைக்காலன்
வல்லியவூர் திக்குறுத்தன் மாண்பெனவெங் கடாப்பியலிற்
சொல்லியவா னுகங்கிடத்திச் சுடரேர்க்கால் நடுப்பொருத்தி
எல்லியலு மேழிநுனி யிடக்கைமரு வுறப்பயிற்றி. 66

கு - ரை: புல்லிய - இழிந்த. புற்கொலை - புல்லை அழித்தல். பொருவரிய கொலைக்காலன் - ஒப்பற்ற கொலைத்தொழிலைச் செய்யும் இயமன். வல்லிய ஊர்தி - வலிய வாகனம். உறுத்தல் - செய்தல். வெம் கடாப்பியலில் - கொடிய எருமைக்கடாக்களின் கழுத்தில். பியல் - கழுத்தின் பின்புறம். நுகம் - நுகத்தடி. ஏர்க்கால் - ஏரின் நுனி. நடு - பகலாணி. எல் - ஒளி. மேழி நுனி - கலப்பையின் மேற்பகுதி. மருவுற - பொருந்த.

ஒருகுறுமுட் கோல்வலக்கை யுறவாங்கிக் கடாத்தெழித்து
மருவுகுண திசைநின்று மேற்றிசைபோக் குபுமறித்தும்
பொருவில்வட திசைநின்றுந் தென்றிசைபோக் குபுமறித்தும்
வெருவில்வலிக் களமரொரு மிறைக்கவிப்போக் கெனவுழுதார். 67

கு - ரை: குறுமுட்கோல் - சிறிய தாற்றுக்கோல். தெழித்து - அதட்டி. குணதிசை - கிழக்குத் திக்கு. மறித்தும் - திருப்பியும். போக்குபு - போக்கி. வெரு இல் - அச்சமில்லாத. களமர் - உழவர். மிறைக்கவி - சித்திரகவி: அது சுழி குளம் என்பது முற்பதிப்பின் அடிக்குறிப்பு. சுழிகுளம் என்பது ஒரு செய்யுளை எவ்வெட்டெழுத்தாய் நான்கு வரியாக எழுதி, மேனின்று கீழிழிந்தும், கீழ்நின்று மேலேறியும், புறநின்று வந்துள் முடிய உச்சரித்தாலும், அவ்வரி நான்குமேயாகி அச்செய்யுளாயே முற்றுப்பெறுவது. இதனை, "கோமூத் திரியே கூட சதுக்கம், மாலை மாற்றே யெழுத்து வருத்தனம், நாகபந்தம் வினவுத்தரமே, காதை கரப்பே கரந்துறைச் செய்யுள், சக்கரஞ் சுழிகுளம் சருப்பதோ பத்திரம், அக்கரச் சுதகமும் அவற்றின்பால" என்னும் தண்டியலங்காரச் சூத்திரத்தான் அறிக. இந்நூலாசிரியர் இயற்றியுள்ள அம்பர்ப்புராணம் நைமிசாரணியப்படலம் முழுவதும் சித்திரகவிகளே. இப்புராணத்திலும் நந்திநாதப்படலம் 24-ஆம் பாடல் முதல் 46-ஆம் பாடல் முடியவுள்ளன சித்திரகவிகளே என்க. அப்பாடல் முழுமைக்கும் இவ்வாசிரியரே உரையும் வகுத்துள்ளனர்.

எண்ணில்பல விளாக்கோலி யியைந்துபடைச் சானெருங்கக்
கண்ணிலலல முகந்தேயக் கரைந்துபழந் தாண்மடிய
உண்ணிலவு புன்மூல மூழ்த்துமாய் தரமுயன்று
மண்ணிலுழு தனரகரு தேய்த்தெனவண் சேறுசெய்தார். 68.

கு - ரை: விளாக்கோலி - கலந்து உழுது. படைச்சால் - கலப்பை நுனியால் உழுத இடம். அலமுகம் - கலப்பையின் நுனி. புல்மூலம் - புல்லின் வேர். ஊழ்த்து - பதனழிந்து. மாய்தர - அழிய, மறைய. அகரு தேய்த்

தென - அகிற்கட்டையைத் தேய்த்துக் குழம்பு செய்தாற்போல. வண்சேறு - குழைந்த சேறு: கரிய சேருகச்செய்தார் என்க.

வரம்புகெட லாகாமை மதித்துழவர் கங்கரிந்து
நிரம்புவித மேலுயர்த்தி நிலத்தவன்மே டொழிந்திடுவான்
கரம்புதவிர் கழனியளாய்க் காலூழ்த்த றவிரநெடும்
பரம்புமிசை யிவர்ந்திறுமாந் தூருவர்பல் களமரெலாம். 69

கு - ரை : வரம்பு - வயலின் வரப்பு. கங்கு அரிந்து - வரப்பின் ஓரத்தைச் செதுக்கி. கங்கு - வரம்பின்பக்கம். நிரம்புவிதம் - நிறையும்படி. நிலத்த - நிலத்திலுள்ள. வன்மேடு - வலியமேடுகள். கரம்பு தவிர் - தரிசுகள் நீங்கிய. கால் ஊழ்த்தல் - கால்வாய்கள் கெடுதலை. பரம்பு - நிலத்தைச் சமன் செய்யும் பரப்புடைய பலகை. ஊருவர் - ஊர்ந்து செல்வார்.

பொருவரிய வளமருதப் புகழினெடு பிரதாபம்
மருவவெளிப் படுத்துநர்போல் வயங்கியவெண் ணென்முளையும்
ஒருவருஞ்செந் நென்முளையு மொருங்கெடுத்திந் திரற்றொழுது
திருவமிகக் கழனிதொறும் வித்தினர் செயற்களமர். 70

கு - ரை : புகழ் வெண்மை வெண்ணெல் முளை - பிரதாபம் செம்மை செந்நெல் முளை. ஒருங்கு எடுத்து - ஒருசேர வாரி. இந்திரன் மருத நிலத்துத் தெய்வமாகலின் அத்தெய்வத்தை வணங்கி. திருவமிக - செல்வம் மிகுதற்பொருட்டு. திருவம்: அம்சாரியை.

கலங்கனீர் தெளிதருதல் கண்டுமறு நாட்கவிழ்த்துத்
துலங்கமா ணவரறிவின் றுணைதேர்ந்து நூல்பொருத்தும்
இலங்குமா சிரியரென விளமுளையி னளவறிந்தே
அலங்குநீர் பாய்த்திடுதோ றவாய்க்கொடுக்குங் காவேரி. 71

கு - ரை : கவிழ்த்து - வடியச்செய்து. அறிவின் துணை - அறிவின் அளவு. நூல் பொருத்தும் - நூற்பொருளை அவர் உளங்கொளுமாறு போதிக்கும். பாய்த்திடுதோறு - பாய்ச்சுந்தோறும்.

அடங்காத புனற்பொன்னி யகலியகொள் ளிடமண்ணி
முடங்காவிண் ணாறரிசின் முள்ளிவாய் வடவாறு
தடங்காவொண் பாம்பணிமுற் சார்தருபன் னதியாதன்
மடங்காது பல்லுயிரும் வண்மையினேம் புதற்பொருட்டே. 72

கு - ரை : அடங்காத புனல் - கரையின் கட்டுக்கடங்காத தண்ணீரை. புனற்பொன்னி: "புனல்பரந்து பொன்கொழிக்கும்" - "நீர்பரந்து கரையிலே பொன்னைப் போகடும்" (பட்டினப்பாலை: 7). காவிரியைப் பொன்னி என்பதன் காரணம் ஈண்டு அறியற்பாலது. கொள்ளிடம், மண்ணியாறு, விண்ணாறு, அரிசிலாறு, முள்ளியாறு, வடவாறு, பாம்பணி ஆறுகள்.

முற்சார்தரு - முதலாகப் பொருந்தும். வண்மையின் - செழிப்புடன். ஓம்புதல் - பாதுகாத்தல். (அம்பர்ப்புராணம் - நாட் - 89 செ) காண்க.

உழுநரிர வும்பகலு மொழியாது பாய்த்துதலாற்
செழுவியவின் புனலுண்டு செறிமேகம் பசந்ததுபோற்
கொழுமுளைகள் விளர்ப்பொருவிக் குலாய்ப்பசந்து வளர்ந்தனவாற்
பழுதகலும் பருவமெனப் பறித்துநடு வான்முயன்றார். 73

கு - ரை: நீருண்ட மேகம் கருத்ததுபோல். விளர்ப்பு ஒருவி - வெண்ணிறம் நீங்கி. பசந்து - பசுமைகொண்டு. நடுவான் - நடவு செய்யும் பொருட்டு.

பருவமுறு நாறனைத்தும் பறித்தமையக் குணின்மோதி
மருவமுடி செய்தெடுத்து வாணிகரோ ருழிப்பொருளைத்
திருவமிகப் பல்லிடத்துஞ் செறிப்பதுபோற் கழனியெலாம்
வெருவமையா வகையுய்த்து மேன்மேலு நடன்முயன்றார். 74

கு - ரை: நாறு - நாற்று. குணில் மோதி - தடிகளில் மெல்ல அடித்து. ஓர் உழிப்பொருளை - ஓரிடத்துள்ள பொருள்களை. வெரு அமையா வகை - வெற்றிடமில்லாதபடி.

நட்டமுத லன்பமையார் நம்பெருமா னாலயத்துச்
சட்டவிராய்த் தாழ்ந்தெழல்போற் சற்றேதாழ்ந் தெழுந்தபயிர்
உட்டழைய வேரூன்றி யொருங்குதழைந் தெழுகாலை
முட்டவும்வெங் களையெழுந்து மொய்த்தனவண் கழனியெலாம். 75

கு - ரை: நட்ட முதல் - நடப்பட்ட நாற்றுமுதல். அன்பு அமையார் - அன்பில்லாதவர். சட்டவிராய் - செப்பமாகக் கலந்து: சட்ட - செப்பமென்னும் பொருளையுணர்த்தி நிற்பதோர் இடைச்சொல். சற்றே தாழ்ந்து - சிறிது வணங்கி. முட்டவும் - முழுவதும். மொய்த்தன - நிறைந்தன.

வினைநலஞ்செய் கல்விதகை மிடிபிணிகா மாதியெனத்
தளைகடொறும் பயிராக்கந் தபத்தபுத்து மேலெழுந்த
களைகளையும் பருவமிது வெனக்களமர் கழறுதலும்
அளைமயில்க ளெனப்புகுந்தா ராற்றுக்கா லாட்டியரே. 76

கு . ரை: வினை நலம் செய் கல்வி - பெரும் பயனைக் கொடுக்கும் கல்வியை. தகை - தடைசெய்யும். மிடி - வறுமை. பிணி - நோய். காமாதி - பெண்ணாசை முதலியன. தளை - வயல்; நால்வரம்பு சேர்ந்து வட்டித்த வயல் என்பர். ஆக்கம் தப தபுத்து - ஆக்கம் கெடக் கெடுத்து; என்றது வளர்ச்சியைக் கெடுத்து என்க. களை களையும் பருவம் - களைபிடுங்குங் காலம். களமர் - உழவர். ஆற்றுக்காலாட்டியர் - உழத்தியர்.

காமர்முலை போலரும்பிக் கவின்றமுகம் போன்மலர்ந்த
தாமரைபற் றினர்களைவார் தைத்ததுமுட் கரத்தென்பார்
நாமவலி யிலரெனினு நடுங்கவடர்த் திடுகாலைத்
தாமமையப் புரிதருத றகைப்பரோ வெனப்புகல்வார். 77

கு - ரை : காமர் - விருப்பம்: காமரு - விரும்பத்தக்க: காமரு என்பது காமர் எனக்குறைந்து நின்றது. களைவார் - பிடுங்குகின்றவர்: வினையாலணையும் பெயர். கரத்து முள்தைத்தது. நாம வலி இலர் - அச்சந்தரும் வன்மையில்லாதார். அடர்த்திடுகாலை - துன்புறுத்தும் காலத்து. அமையப் புரிதருதல் தகைப்பரோ - பொருந்து மாற்றல் ஊறுசெய்தலின் நீங்குவரோ; நீங்கார்.

ஆம்பன்முத லழித்திடுவா ராம்பன்முத லழிப்பதினும்
தேம்புதுய ராம்வனசச் சிறுமுதலுங் கடலென்பார்
ஆம்பல்பல வற்றினுமோர் புண்டரிக மதிகமெனுந்
தேம்புதலி லாவுணர்ச்சி தேக்கினு ரலர்போலும். 78

கு - ரை : ஆம்பல் - நீர்ப்பூ. அழிப்பதினும் - அழிப்பதைவிட. தேம்புதுயர் - மிக்க துன்பம். வனசம் - தாமரை. கடல் என்பார் மிகுதி பற்றி. ஆம்பல் பலவற்றினும் - பல யானைகளைவிட. புண்டரிகம் - புலி. தேம்புதல் இலா உணர்ச்சி - சோர்வில்லாத உணர்ச்சி. தேக்குதல் - நிறைதல். ஆம்பல் - அல்லிப்பூ, யானை; புண்டரிகம் - தாமரை, புலி: சிலேடை.

மெல்லியலா ரெனுமொருபேர் விழைந்தெவருஞ் சொலப்பட்டார்
வல்லியபுண் டரிகமுமாம் பலுமொருங்கு வதைத்திடுவார்
சொல்லியமா லயன்முதலோர் தொலைதரத்தொல் லோனட்ட
புல்லியவோர் துரும்புகொலோ போந்தவிவ ரதுதெளியேம். 79

கு - ரை : மெல்லியலார் - மென்மையான இயல்பினையுடையவர் என்ற காரணக்குறி; பெண்கள். வல்லிய புண்டரிகம் - வலியதாமரை. ஆம்பல் - அல்லி. புலி, யானையென வேறு பொருள்படுதல் காண்க. வல்லிய புண்டரிகம் என்றது நயம். தொல்லோன் அட்ட - சிவபெருமான் சங்காரம்செய்த.

இறுவதுசத் தியமெனினு மேறூர்வார் தாளடைந்து
பெறுவதுபெ ருதிழிந்தார் மிதிப்பதுபெற் றேமிதுவோ
உறுவதுவென் ரும்பலுந்தா மரையுமோ விடுவதுபோற்
செறுவதின்மற் றம்மலரைத் தீராவண் டோவிடுமால். 80

கு - ரை : இறுவது - அழிவது. ஏறு ஊர்வார் - இடபவாகனத்தை ஏறிச் செலுத்துபவர். தாள் - திருவடிகள். பெறுவது பெருது - பெற

வேண்டிய பேற்றை அடையாமல். பேருவது - நிரதிசய இன்பம். இழிந்தார் - கடைசியர். ஓலிடுவது - ஓலமிடுவது; ஓலம்: ஓல் என நின்றது. செறு - வயல். மலரைத்திரா - மலர்களைவிட்டு நீங்காத. ஓலிடும் - ஒலிக்கும்.

பணையுடலிற் பயிருயிரின் பசுங்கதிரா மனந்தபுக்கும்
பிணைபொறியைந் துங்களையும் பெற்றியிற்சை வலங்குவளை
அணைபதுமங் கொடிவள்ளை யனிச்சமடி யறக்களைந்தார்
கணையிகலும் விழியாற்றுக் காலாட்டி மார்பலரும். 81

கு - ரை: பணை உடல் - வயலாகிய உடம்பு. பயிராகிய உயிரின். கதிர்மனம்: மனம் தபுக்கும் - மனத்தை வேறுபடுத்தும். பிணை - விருப்பம். சைவலம் - கொடிப்பாசி. குவளை - நீலோற்பலம். பதுமம் - தாமரை. கொடியாகிய வள்ளைத்தண்டு. அனிச்சம் - நீர்ப்பூவகையில் ஒன்று; மென்மையான மலரையுடையது. ''மோப்பக்குழையும் அனிச்சம்'' என்பது திருக்குறள். அடி அற - வேரற; முதலில்லாமல் நீங்க. கணை இகலும் விழி - அம்போடு மாறுபடும் கண்களையுடைய. ஆற்றுக் காலாட்டிமார் - கடைசியர். சைவலம், குவளை, பதுமம், கொடிவள்ளை, அனிச்சம் முதலியன நீர்ப்பூக்கள்; ''கமலஞ் செங்கழு நீரனிச் சங்கமழ், குமுதம் வள்ளை கொடிவிடு சைவலம்'' (தணிகைப்பு- நாடு-108); ''ஆம்பல் செற்றர விந்தம் சவட்டியே, ராம்பல் நீல மடர்த்தனிச் சங்குமைத், தாம்பல் குங்கொடி வள்ளை யறுத்தனர், ஆம்பன் மாதர் மலமைந் தடுநர்போல்'' (தியாகராசலீலை - நாட்டுப் - 122).

கன்முதலோர் நான்கிடத்துங் கலவறல்பாய்ந் தினிதோம்பும்
நென்முதலுக் கழிவுசெய வினைந்துசூழ் தரமுளைத்த
புன்முதல்யா வையுங்களைந்தார் பொருகயற்கண் மடமாதர்
சொன்முதனித் தியமென்று துணிந்துணர்த லெளிதேயோ. 82

கு - ரை: கல் முதல் ஓர் நான்கிடத்தும். கல் - மலை; குறிஞ்சிநிலம். கலவு அறல் - கலந்த நீர், நெல்லாகிய முதலுக்கு அழிவைச் செய்யும்படி. சொல் முதல் - மாயை; சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி, வாக்குகள் தோன்றுதற்குக் காரணம் மாயையாதலின் சொல்முதல் என்றார். ''மாயை நித்தியப்பொருள் எனக்கொள்வர் சித்தாந்த சைவர். மா என்பது ஒடுங்குதல், யா என்பது வருதல்; ஆகலின், எல்லாக் காரியங்களும் தன்பால் வந்து ஒடுங்குதற்கும், தன்னினின்றும் தோன்றுதற்கும் காரணமாய் நின்றது மாயை எனப்படும்; ஆகலின் ஒன்றற்கொன்று நுண்ணிதிற் செல்லும் சூக்குமங்கட்கு முடிவிடமாய் நின்ற சூக்குமப்பொருள் யாது? அதனை மாயை என்றலே பொருத்தமுடைமை அறிக'' என்பது சிவஞான பாடியம். துணிந்து உணர்தல் - நிச்சயித்து உணர்தல்.

இந்தவிதங் களையனைத்து மெறிந்துகடை சியரகன்றூர்
சந்தமிகு பயிரெல்லாந் தளைதோறுந் தளையாய
பந்தமற வுயிரொளியே பாரிப்ப தெனப்பசுமை
நந்தவொளி படைத்தெழுந்த நானிலத்தியா வருமகிழ. 83

கு - ரை: களை அனைத்தும் - களைகள் எல்லாவற்றையும். சந்தம் - அழகு. தளைதோறும் - வயல்கள் தோறும். தளை ஆய பந்தம் - பாசமாகிய கட்டு. ஒளியே பாரிப்பது - ஞானமாகவே விளங்குவது. பசுமை நந்த - பசுமை மிக. நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன.

ஊறுதவிர் பயிரனைத்து மொருங்குகருக் கொண்டீன்ற
மாறுபடு மதியோன்றன் மலர்களைந்த விவற்றெடுப்பின்
வீறுதபுத் திடுவலெனு விழைகிரண நனிபரப்பி
ஏறுபரஞ் செயமுனங்கொ ளெடுப்பொழிந்து தாழ்ந்தனவே. 84

கு - ரை: ஊறு - இடையூறு. கருக்கொண்டு - சூலடைந்து. ஈன்ற - கதிர்களை வெளிப்படுத்தின. மாறுபடு மதியோன் - பகைத்த சந்திரன்; மாறுபட்ட புத்தியையுடையோன் என வேறுமொரு பொருள்தருதல் காண்க. தன்மலர் என்றது ஆம்பல் நெய்தல் முதலியவைகளை. எடுப்பின் வீறு - தலை யெடுப்பின் மேம்பாட்டை. தபுத்திடுவல் - கெடுத்தொழிப்பேன். பரஞ்செய - பாரத்தைச் செய்ய. எடுப்பு - தலைநிமிர்தல். தாழ்ந்தன - தலை வளைந்தன. சந்திரகிரணத்தால் கருவின்பால் பால்முற்றி மணிகளாய்ப் பாரஞ்செய்யப் பயிர்கள் தலை கவிழ்ந்தன என்க.

மாதர்முலை போலிளமை மருவவெடுப் பாய்நிமிர்ந்து
போதமுதிர் தருபொழுது கீழிறங்கிப் போய்த்தாழ்ந்த
மேதகவி னவைமுதிராப் பொழுதுவிளைத் திடுமின்பம்
ஆதரவி னிவைமுதிர்ந்த பொழுதினுக் கிடுமின்பம். 85

கு - ரை: மாதர் நகில்கள் இளமைப் பருவத்திலே எடுப்பாய்த் தோன்றி நின்று இன்பஞ் செய்யும்; முதிர்ந்த கிழப்பருவத்திலே அவை தாழ்ந்து தொங்குவனவாம். நகில்கள் மாதருடைய இளமைப் பருவத்திலே கொடுக்கும் இன்பத்தைக் கதிர்கள் முதிர்ந்த பருவத்திலே கொடுத்து இன்புறுத்தும்.

கதிர்கமலங் கட்டபகை கணித்துவெயில் நனிபரப்பி
முதிர்வுமிகப் புரிந்தவனி முயங்கிடச்செய் ததுதெரிந்து
பீதிர்தலிலா வலிமள்ளர் பிறங்குகுயங் கையேந்தி
அதிரவறுத் தரிசெய்தார் கதிரரியா குவதரிதோ. 86

கு - ரை : கதிர் - சூரியன். கமலம் கட்ட பகை - தன் மனைவியாக உள்ள தாமரையாகிய களையைப் பிடுங்கின பகையை. கமலம் - தாமரை. கணித்து - எண்ணி. முதிர்வு மிகப்புரிந்து - நன்றாக முதிரச்செய்து. அவனி முயங்கிட - பூமியைத் தழுவும்படி. மள்ளர் - உழவர். குயம் - அரிவாள். அரி - நெற்கதிர்களின் அடுக்கு. கதிர் - நெற்கதிர், சூரியன்; அரி - நெற்கதிர், சூரியன்: சிலேடை.

அரியெனும்பேர்க் கியையவிடைக் கட்டமைத்துக் களமடைந்து
பெரியவரை யினுமுயரப் போர்புரிந்தார் பெருமள்ளர்
தெரியமுன மாக்கியவே சிதைத்தல்வழக் காகுமெனப்
பரியகடாப் பிணைத்துநிலம் பரப்பிமிதித் திடவிட்டார். 87

கு - ரை : அரி - நெற்கதிர், ஆயுதப்பொது. இடைக்கட்டு அமைத்து - நடுவிலே கட்டி, இடையிலே கட்டிக்கொண்டு. களம் - நெற்களம், போர்க் களம். வரையினும் உயர - மலைகளினும் உயரமாக, மலைமேற் சென்றும். போர் - குவியல், யுத்தம்; மள்ளர் - உழவர், வீரர்: சிலேடை. ஆக்கியவே சிதைத்தல் - தோற்றுவித்ததையே அழித்தல். பரிய கடா பிணைத்து - பெரிய எருமைக் கடாக்களைக் கயிறுகளால் வரிசையாகக் கட்டி. மிதித்திடுதல் - கடாவிடல்; சூடு மிதிப்பித்தல் என்பர்.

முன்னியவிப் பியினின்று முத்தெடுத்துக் கொள்வதெனத்
துன்னியவை களைந்தகற்றிச் சொற்றூற்றிக் குவித்தளந்து
மன்னியவா றினிலொன்று மன்கவர வறமாதி
பன்னியவீந் தெஞ்சியவை பரப்புவர்தம் மனைக்கொடுபோய். 88

கு - ரை : முன்னிய - கருதிய. துன்னிய வை - நெருங்கிய வைக்கோல். சொல் தூற்றி - நெல்லைத் தூற்றி. ஆறிலொன்று அரசருக்கு இறை செலுத்தி. அறம் ஆதி - தருமம் முதலியவைகள். எஞ்சியவை - மீதியான நெல்லை. ''கற்றைவை களைந்து தூற்றிக் கூப்பியூர்க் காணித் தெய்வம், அற்றவர்க் கற்ற வாறீந் தளவைகண் டாறி லொன்று, கொற்றவர் கடமை கொள்ளப் பண்டியிற் கொடுபோய்த் தென்னு, டுற்றவர் சுற்றந் தெய்வம் விருந்தினர்க் கூட்டி யுண்பார்'' (பரஞ். திருவிளை - நாட்டு - 28).

இந்தவிதஞ் செந்நெல்வள மீட்டுநருங் கரும்புடைத்துக்
கந்தமிகு கட்டிவளங் கவருநருங் கனியாதி
முந்தவமை பொழில்வளங்கண் முகக்குநரு மாய்த்துவன்றிச்
சந்தமிகு குடிபலவுந் தழைப்பனதண் ணடைகடொறும். 89

கு - ரை : ஈட்டுநர் - தொகுப்போர். கட்டி - வெல்லக்கட்டி. துவன்றி - நெருங்கி. தண்ணடை - மருதநிலத்தூர்.

நெய்தல்

ஆரூர்வாஞ் சியம்விழி யாவடுதண் டுறைகுடந்தைப்
பேரூர்மா யூரமுதற் பிறங்குதலம் பலபெற்ற
நீரூர்தண் மருதவள நிகழ்த்துநரா ரிரங்கல்வளச்
சீரூர்தண் கழிநெய்தல் வளஞ்சிறிது செப்புவாம். 90

கு - ரை : இதிற் கூறிய தலங்கள் மருதநிலத்தில் உள்ளன: திருவாரூர், திருவாஞ்சியம், திருவாவடுதுறை, திருக்குடந்தை, மாயூரம் முதலிய பல தலங்களாம். இரங்கல் இரங்கல் நிமித்தம் நெய்தல்திணை. கழி - உப்பங் கழிகள், உப்பாறு.

வேறு

எல்லாச் சுவையுந் தனைவிரும்ப விருக்குஞ் சுவையும் பலநதியின்
எல்லாப் புனலுந் தனைவிரும்ப விருக்கும் புனலு முடைமையினல்
எல்லாத் திணையுந் தனைவிரும்ப விருக்குந் திணையீ தென்றளிப்பான்
எல்லாப் பொருளுங் குளிர்ந்துபத மியல வியற்றும் புனற்கிறைவன்.

கு - ரை : 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பது பழமொழி. நதிநீரெல்லாம் கடல்நீரிலே வந்து கலப்பன. நெய்தல் திணையே எல்லாத் திணைகளும் விரும்பவிருப்பது. ஏனைய திணைகள் குறிஞ்சி, முல்லை, மருதம் என்பன. நீர் குளிர்ந்து பதஞ்செய்யும் இயல்பினது. புனற்கிறைவன் - வருணன்.

மீனங் கவர்த லுடல்பிளத்தல் விரைந்துப் பிடுத லுணக்கிடலத்
தானங் கலவு புள்ளோப்பல் விற்ற லிவையிற் சற்றேனும்
ஊனங் கலவா மையிற்புதல்வி யுமையா யினளை யனுமணந்தான்
வானம் பரவ வெனச்செருக்கு மாண்பார் பரதர் பலர்வாழ்வார். 92

கு - ரை : மீன் பிடித்தல், மீனுடலைப் பிளத்தல், உப்பிடுதல், மீனுணக்கல், அவற்றை உண்ணவரும் பறவைகளை ஓட்டுதல், அவற்றை விற்றல் முதலியன நெய்தல் நிலத்து மக்கள் தொழிலாம். அத்தானம் - உணக்குமிடம். கலவு - கலந்த. புள் - பறவைகள், கடற்காகம். ஊனம் - குற்றம், இழிவு. முற்பிறப்பிலே செய்த தவத்தால் பரதவர்கோனுகிய சுதர்மன் என்பவனுக்குப் புத்திரியாக உமாதேவியார் தோன்றியருளினர். பரதவர் - வலைஞர். புன்னை நிழலில் திருமகவாய்க் கிடந்தாள். முதல்நூலாகிய ஆலாஸ்ய மகாத்மியத்தில் 'அம்மை வலம்புரிச்சங்கு வடிவாய்க் கடலுள் இருக்க, வலைஞர் எடுத்துப் பரதவராசன் கையிற் கொடுக்க, அவன் பரிசித்தவுடன் பெண் மகவாயினர் என்று கூறப்பட்டது என்பர். சிவபெருமான் பரதவர்கோன் மகளை மணந்துகொண்டருளினர். வானம் - விண்ணுலகத்தோர்.

வலையர் குரம்பை யிடுபோந்தின் மடல்காற் றறையுண் டெழாவண்ணம்
விலையில் பவளக் கொடிகள்பல மேலாற் படர்ந்து நெருங்குவன
அலைக ளொலித்தோர் காலெழினு மகம்பு காது தடுப்பமுன்றிற்
றலைநின் றிடுவ நனிநெருங்கி நெருங்கக் காய்க்குந் தடந்தாலம். 93

கு - ரை : குரம்பை - சிறுகுடில். போந்தின்மடல் - பனையோலை. காற்றால் மோதுண்டு எழாதபடி பவளக்கொடிகளால் கட்டப்பட்டுள்ளன. அலைகள் ஒலித்து - கடல் அலைகள் முழங்கி. ஓர் கால் - ஒருசமயம். முன்றில்- வீடுகளின் முன்னர். தடம்தாலம் - பெரிய பனைமரங்கள். தாலம் நனி நெருங்கிநின்றிடுவ.

உயிரிற் கலந்து முயிர்செய்வினை தனக்கின் றாக வுயிர்க்கொழிக்கும்
செயிரிற் றவிர்ந்த பெருமானிற் றிரைசார் கரைதங் கினுமாங்குப்
பயிலுற் றிடுமீ னுணங்கன்மணந் தாம்பற் றாம லதற்கொழிக்கும்
அயிலுற் றமைந்தா லெனமுரண்முள் ளமைந்த மடற்கே தகைபலவும்.

கு - ரை : உயிருக்குயிராகக் கலந்து நின்றும் உயிர்கள் செய்யும் நல்வினை தீவினைகள் தமக்கின்றி உயிர்களுக்குரிய வினைப்பயனைச் சேர்ப்பிக்கும் சிவபெருமான். செயிர் - குற்றம். பெருமானில்: ஐந்தனுருபு ஒப்புப் பொருள். கடற்கரையிலே தங்கியிருப்பினும் மீன் உணங்கலின் மணம் தமக்கின்றி அவைகட்கே உளவாம்படி கூரிய முட்கள் மாறுபட்டமைந்துள்ள மடல்களையுடைய தாழைகள் உள்ளன. அயில் - கூர்மை. முரண் - மாறுபாடு. கேதகை - தாழை.

உப்பு விலக்கி யப்புமட்டே யுதவு முகிலின் சுவைபொருத்த
அப்பு விலக்கி யுப்புமட்டே யமைத்துக் கொடுப்ப ருமணரது
செப்பு புனலிற் படிற்கலக்கும் பன்னாள் கழிந்து சேர்ந்தாலும்
பப்பு கலப்பிற் குறைவர்கொலோ பண்டை நட்பின் பயனுணர்வார். 95

கு - ரை : உமணர் - உப்புவிற்போர். முகில் - மேகம். அப்பு - நீர். மேகம் கடல் நீரைக்குடித்து உப்பைப்போக்கி நன்னீரை உலகுக்கு நல்குவ. உமணர் சுவை பொருந்தும் நீரைப்போக்கி உப்பையே அமைத்துக் கொடுப்பர். அது - அந்த உப்பு. பலநாட்கள் கழிந்து நீரிற் பொருந்தினும் அதனோடு கலந்துகொள்ளும். முன்னுள்ள நட்பின் பயனை உணர்ந்த பெரியோர் நிறைந்த நட்பிற் குறைவார்களோ? குறையமாட்டார் என்க. 'பன்னாள் கழிந்து சேர்ந்தாலும்' என்பது இடைநிலைத் தீவகம். 'பிரிந்தவர் கூடினாற் பேசவேண்டுமோ' என்னும் கம்பர் வாக்கை நினைப்பிப்பது இது.

சூழு மணிகொள் வலைஞர்சிறு தூர மியங்கப் படவியக்கி
ஆழுங் கடலிற் கவர்தருமீ னனைத்து மனைய படவேற்றி
வாழுங் களிப்பின் மீடருங்கால் மற்றைப் படவு பொலிகாட்சி
தாழுந் தாரா கணமியக்குந் தடவி மானம் பலபோலும். 96

கு - ரை : சூழும் அணிகொள் வலைஞர் - சூழ்ந்து வரிசையாகச் செல்லும் வலைஞர்கள். படவு இயக்கி - மரக்கலத்தைச் செலுத்தி. கவர்தரும் - பிடிக்கும். மீள் தருங்கால் - திரும்பி வருங்காலத்து. தாழும் தாராகணம் - விண்ணிலிருந்து கீழே இழிந்த நட்சத்திரக்கூட்டம். விமானம் - ஊர்தி.

வெள்ள மருவு மோட்டாமை மேலோர் நோன்பிற் பெறுமடக்கங்
கொள்ளு மமைதி யாலிரைதேர் குருகு கவரா விதம்பயிலும்
உள்ள பலமீன் களுங்கீழோ ருரனி லாமை யாலியற்று
துள்ளல் புரிந்து மாயுமெனிற் றுள்ளல் கலிக்க லால்யார்க்காம். 97

கு - ரை : மோட்டாமை - பெரிய ஆமைகள். மேலோர் - அறிவுடையோர். நோன்பிற் பெறும் அடக்கம் - விரதங்களால் பெறுகின்ற அடக்கம். அமைதியால் - அசைவில்லாமல். இரை தேர் குருகு - இரையைத் தேடித் திரியும் பறவைகள். கீழோர் - அறிவில்லாதவர். உரன் - அறிவு. துள்ளல் புரிந்து மாயும் - துள்ளி இறக்கும். கலிக்கு - துன்பத்திற்கு.

இந்தக் கரையி னுள்ளபொரு ளெல்லாங் கவர்ந்து செலுநாவாய்
அந்தக் கரையிற் கழித்தவண வனைத்தும் வாரிக் கொடுவந்து
முந்தப் பறம்பு போலவிவண் முயங்கக் குவிக்கு முரைத்தமொழி
உந்தக் கொடுபோய்ப் புகன்றுவே றுரைமீண் டுரைக்குந் தூதரென.

கு - ரை : நாவாய் - படகு. அவண - அவ்விடத்திலுள்ள. பறம்பு - மலை. தூதர் என - தூதுவர்போல.

ஒருகா லுயர்ந்த பொருளேற்று மொருகா லிழிந்த பொருளேற்றும்
ஒருகா லிரண்டு மல்லாத வேற்று முழிதந் திடுநாவாய்
ஒருகா லுயர்ந்த போகமுமற் றொருகா லிழிந்த போகமும்வே
றொருகா லிரண்டு மல்லதுமேற் றுழிதந் திடுமா ருயிரேய்க்கும். 99

கு - ரை : உழிதந்திடும் - திரியும். உயிர் ஏய்க்கும் - உயிரையொக்கும்.

தெரிய மூடை பறிக்குமொலி செழுநா வாயிற் செறிக்கு மொலி
விரிய வலைகள் வீசுமொலி விடாது படுமீ னிழுக்குமொலி
உரிய பலமீன் பிளக்குமொலி யுப்பிட் டவற்றை யுணக்கு மொலி
இரிய வருபுள் ளோப்புமொலி யேழு மேழு கடலொலியே. 100

கு - ரை : மூடைகளை இறக்குதல், ஏற்றுதல், வலை வீசுதல், படும் மீன்களை இழுத்தல், மீனை அரிதல், உலர்த்துதல், புள்ளோப்புதல் ஆகிய வற்றால் உண்டாகும் ஒலி ஏழு கடல்களும் ஒலித்தாற் போன்றன.

ஓடு கலங்க டேராக வுற்ற மகரங் கயமாக
நீடு திரைகள் பரியாக நெடுமீன் கொல்வோ ராளாகக்
கூடு மயிலே வாளாகக் குறியா கவப்பார் பொருநெய்தல்
நாடு மிதனு லரசரெலா நயந்தாங் கமர்த்தன் மேற்கொண்டார். 101

குரை: ஓடுகின்ற மரக்கலங்கள் தேராகவும், மகரமீன்கள் யானையாகவும், மிக்க அலைகள் குதிரையாகவும், நீண்ட வாளைமீன்கள் காலாட்படையாகவும் கொண்டு, மயிலைச்சாதிமீன்கள் வாளாயுதமாக, பூமியைக் குறியாக வைத்துப் போர் செய்யும் நெய்தல் நிலத்தில் அரசர்கள் விரும்பி இருப்பாராயினர். கலங்கள் தேர்ப்படை: கலம் - மரக்கலம். கயம் - யானை. மகரம் - மகரமீன்.

முத்த மெனமீன் ருயுதிர்புன் னுகத் தரும்பு முகந்திடுவார்
சித்த முவக்கு மரும்பெனவொண் முத்த மணைத்துஞ் செறித்திடுவார்
பித்த மதியென் றிகழ்வதல வுயர்வு தாழ்வு பெற்றமைந்த
தத்தம் வினையாற் படுபயன்மற் றெவரா லளக்கத் தக்கதே. 102

குரை: மீன் தாய் உதிர் - மீன்கள் துள்ளிச்செல்லுவதால் உதிர்கின்ற, புன்னகத்தின் அரும்புபோல்வன முத்துக்கள் என்க. பித்த மதி - பைத்தியப்புத்தி. தத்தம் வினையால் வருவன உயர்வு தாழ்வுகள் ஆகலின், அப்பயன் யாரால் அளந்தறிய இயலும் என்றபடி. "நிலைகலக்கிக் கீழிடுவானும் தன்னைத் தலையாகச் செய்வானும் தான்" (நாலடி). வேற்றுப் பொருள் வைப்பணி.

கூறு மாமைப் பரத்தியர்வாய் குமுத நாறு மொண்முறுவல்
நாறு தளவ முகைநாறு மைம்பா னறுங்கே தகைநாறும்
ஊறு மதுச்சண் பகநாறு முடம்பு முழுது முணங்கன்மீன்
வேறு தலைமே னுறுமெனில் வினையின் றிறனே வியப்பிற்றே. 103

குரை: மாமைப் பரத்தியர் - தேமல்படர்ந்த நெய்தல்நில மக்கள். குமுதம் - அல்லிமலர். முறுவல் - பற்கள். தளவ முகை - முல்லையரும்பு. ஐம்பால் - கூந்தல். கேதகை - தாழை. உடம்பு சண்பகமலர் மணம் வீசும். உணங்கல் மீன் - மீன் வற்றல். வியப்பிற்று - வியப்பினையுடையது. வேற்றுப் பொருள்வைப்பணி.

தாலத் தமைந்த சாதியெலா ந் தங்கள் சாதி யெனக்கவரும்
சீலத் தமைந்த நுளையர்கனச் சிலைதாண் மிதித்துக் கடற்குளித்துக்
கோலத் தமைந்த பேழ்வாய்ப்பல் லிப்பி வாரிக் கொடுவருவார்
ஞாலத் தமைந்த கிணற்றகத்த கவருங் கருவி நயம்போன்ருர், 104

குரை: தாலம் - பனைமரம். சாதி - கள். நுளையர் - பரதவர். தங்கள் சாதி - தங்களுக்குரிய கள்ளே. கனச்சிலை - பாரமாகிய கல்லை. தாள்

மிதித்து - பாதங்களிலே அழுந்தக் கட்டிக்கொண்டு. பேழ்வாய் - பெரிய வாயையுடைய. பல் இப்பி - பல முத்துச் சிப்பிகளையும். ஞாலம் - பூமி. கிளைற்றகத்த - கிணற்றிலுள்ள பண்டங்களை. 'தாலத்தமைந்த சாதியெலாம் தங்கள் சாதி' என்றது நயம்.

சுழியுங் கழியிற் பொலிநீலத் தோட்டு மலரிற் சுரும்புழக்க
வழியுஞ் சுவைத்தேன் மதுப்பாய்ந்து வாரிப் புனலி னுவர்மாற்றும்
பொழியு முகிலப் போதெடுத்துப் புயலே மாற்று மெனப்புகறன்
மொழியும் பெருமான் முடிப்பதனை யேனோர் முடிப்பா ரெனல்போலும்.

கு - ரை : கழி - உப்பங்கழி; உப்பாறு. நீலத்தோட்டுமலரில் - நீல நிறம் பொருந்திய இதழ்களையுடைய கருங்குவளை மலரில்; தோடு - பூவிதழ். வாரி புனலின் - கடல் நீரிலுள்ள. பொழியும் முகில் - மழைபெய்யும் மேகம். புயலே மாற்றும் - மேகமே உவரைமாற்றும். பெருமான்முடிப்பதனை - முழுமுதற்கடவுள் செய்வதனை. ஏனோர் - மற்றைத் தேவர்கள்.

பொருளிற் பெரிய ராயிருந்தும் பயன்ப டாரெப் போதினுமப்
பொருளிற் சிறிய ராயிருந்தும் படுவார் பயனெப் போதுமெனல்
தெருளிற் பிறிது வேண்டாது தெரிக்கு முவர்நீர்த் தடங்கடலுந்
தெருளிற் றவிராச் சுவைநறுநீர் படுசிற் றூறற் கேணியுமே. 106

கு - ரை : பெரும்பொருளுடையராயினும் எப்போதும் பிறருக்குப் பயன்படாதவருண்டு; சிறியபொருள் சேமித்திருப்போராயினும் எப்போதும் பயனுடையராதலுண்டு. இஃது உலக இயற்கை. வேறு எடுத்துக்காட்டு வேண்டாமல் தெரிப்பனவாம், உவர்நீர்த் தடங்கடலும் சிற்றூறற் கேணியுமே. "கடல் பெரிது, மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல், உண்ணீரு மாகிவிடும்" (ஔவையார்). அம்பர்ப்புராணம் - நாட்டுப் - 127 காண்க.

வீசு வலையி லகப்படுத லின்றி வெளிப்பட் டிடுமீனைப்
பேசு புகழ்சா லதிபத்தப் பெருமான் திருக்கை யால்விடுத்த
மாசு தவிர்ந்த மீனே நம் வலையும் பாச வலையுமறத்
தேசு மலிந்த தெனத்திமிலர் சிந்தித் துருகி நின்றிடுவார். 107

கு - ரை : புகழ்சால் - புகழ்மிக்க. அதிபத்தப் பெருமான் - அதிபத்த நாயனர். மாசு தவிர்ந்த - குற்றம் நீங்கிய. நம்வலை என்றது பரதவர் கையிலுள்ள வலையை. பாசவலை - பாசமாகிய வலை. திமிலர் - பரதவர்.

மாலு மயனுங் காணரிய வள்ளற் பிரானை நள்ளிருளிற்
சாலும் பரவை யார்மனைக்குத் தனித்தூ தேக முனம்விடுத்த
ஆலும் புகழ்சா லாரூர ரடியே னென்னு பதிபத்தர்
கோலுங் குலத்தார் பயிலுவதந் நிலமேற் கூற லெவனினியே. 108

குறை: வள்ளற்பிரான் - தியாகராசர்; சிவபெருமான். நள்ளிருள் - நடுயாமம். ஆலும் புகழ் - பரந்த புகழ். ஆரூரர் - சுந்தரமூர்த்திசுவாமிகள். "விரிதிரை சூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்" (திருத்தொண்டத்தொகை-7) என்றமை காண்க. அந்நிலம் - நெய்தனிலம்.

முல்லை வாயில் சாய்க்காடு முதுபல் லவனீச் சரமறைக்கா
டெல்லை யில்லா னகத்தியான் பள்ளி யியலுந் தருமபுரம்
தொல்லை யமையும் வேட்டகுடி தூய தாய தெளிச்சேரி
அல்லை யனுக்கு மினும்பலகொண் டமைந்த நெய்தற் றவஞ்சிறிதோ.

குறை: முல்லைவாயில், சாய்க்காடு, பல்லவனீச்சரம், மறைக்காடு, அகத்தியான்பள்ளி, தருமபுரம், வேட்டகுடி, தெளிச்சேரி முதலிய தலங்கள் நெய்தல் நிலமாகிய கடலும் கடல் சார்ந்த இடத்தும் உள்ளன. அல்லை அனுக்கும் - இருட்டைக் கெடச்செய்யும்: அல் - ஆணவ இருள். இனும் - இன்னும். பல என்றது பலதலங்களை.

பாலை

மன்னு மிராச தானியென வழங்கு மொருமாப் பெயர்பூண்டு
மின்னு நாகைக் காரோணம் விளங்கு தன்பா லுறக்கொண்ட
முன்னு நெய்தற் பெருவளத்தென் மொழிந்தா முடன்போக் கொழியாத
பன்னு சிறப்பி னுறுபாலை நிலத்து வளத்துஞ் சிலபகர்வாம். 110

குறை: மாப்பெயர் - பெரிய பெயர்; சிறந்தபெயர். தன்பால் - தன்னிடத்து. உடன்போக்கு ஒழியாத - உடன்போக்கு நீங்காத. உடன்போக்கு - தமரைப் பிரிந்து தலைவி தலைவனுடன் செல்லுதல். பாலைக்கு உரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்தமுமாம்.

காலை மாலை யிரண்டொழியக் கடுவே னிலினண் பகலாய
வேலை யுதித்துக் காரணத்தாம் வெம்மை யுறுகா ரியமாய
பாலை தெரித்தே யமருநடுப் பகலிற் பிறத்தல் பழுதாகீ
மாலை யுணர்ந்து மறவரவண் வாழ்வார் கொற்றி யருள்பெறலால். 111

குறை: வேனில் என்னும் பெரும்பொழுதும், நண்பகல் என்னும் சிறுபொழுதும் பாலைக்குரிய பொழுதாம். வேலை - பொழுது. நண்பகல் காரணம், வெம்மை காரியம். 'காரணப்பொருளின் தன்மை காரியத்துளதா' மாகலின். கொற்றி - துர்க்கை; தெய்வம்.

சொல்லச் செயுமோர் நானிலமுந் தொக்க சுரமா தலின்மறவர்
வில்லைக் குனித்தா றலைத்தெல்லா வளமுங் கவர்ந்து மிசைந்திடுவார்
சில்லைப் பிறர துணிலடைவ தீய வினையே யென்றிகந்து
கல்லைப் புசித்து வாழ்வபுருக் கருது மொருமா முனிவரன்போல். 112

கு - ரை : சுரம் - பாலைநிலம்; பாலைக்கெனத் தனிநிலமின்று. "முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து, நல்லியல் பழிந்து நடுங்கு துயருறுத்துப் பாலையென்பதோர் படிவங்கொள்ளும்" என்பவாகலின், அங்குள்ளோர் ஆறலைத்தலைத் தொழிலாவுடையார். வழிச்செல்வோரிடத்திலே பறித்துப் பொருள்கொண்டு உண்ணுதலே உணவு. மறவர் - பாலைநிலத்திலுள்ள தாழ்ந்தோர். குனித்து - வளைத்து. ஆறு அலைத்து - வழியிற் பறித்து. மிசைதல் - உண்ணுதல். பிறரது உணில் - பிறருடையபொருளைக் கவர்ந்து உண்டால். தீய வினையே அடைவ. இகந்து - நீங்கி. புரு கல்லைப்புசித்து வாழ்வன. புரு - தூதுணம்புரு. தூது - பருக்கைக் கல். ஒரு முனிவரன் - ஒப்பற்ற சிறந்த துறவி. சில்லை - அற்பம், சிறுமை.

செழும்பா டலத்து மலர்பொழியுஞ் செந்தேன் வறுங்கூவலை நிறைக்கும்
விழுந்தா மலகக் கனியதனுள் வேண்டு பொழுதெ லாமுதவும்
எழுந்தார் தரமேற் பழுத்திடுபே ரீந்து மதில்வீழ்ந் தற்றருகுங்
கொழுந்தார் கோங்கம் பஞ்சுகுக்குங் கொழுநர்த் தொடர்வார்
[பதங்களிக்க. 113

கு - ரை : பாடலம் - பாதிரி. வறுங்கூவல் - நீரில்லாக்கிணறு. ஆமலகக்கனி - நெல்லிப்பழம். பேரீந்து - பேரீச்சம்பழம். அற்று ஆகும் - அத்தன்மையையுடையதாம்: என்றது வேண்டும்போது உதவுதலை. கோங்கம்பஞ்சு - கோங்கிலவின் பஞ்சு. கொழுநர்த்தொடர்வார் - உடன்போக்கிலே தலைவன்பின்னே செல்லுந் தலைவி. பதம்களிக்க - பாதம் மகிழ்கொள்ள. பாதிரி, நெல்லி, பேரிச்சை, கோங்கு முதலியன பாலைநிலப் பொருள்கள்.

முருங்கை மலரா கியநீறு முற்றப் புனைந்து சுரும்பாய
ஒருங்கு மிளிர்கண் மணியணிந்து காயாஞ் சடையு முறச்சுமந்து
நெருங்கு வெயிலி னிற்றலினு னெடிய தவமென் றுறுபயனு
மருங்கு வேம்பு பலபழுத்துச் சிவலிங் கங்கள் வழங்கிடுமே. 114

கு - ரை : பாலைநிலம் முருங்கை மலராகிய திருநீற்றை முழுவதும் அணிந்து, வண்டுகளாகிய கண்மணிகளை அணிந்து, காய்களாகிய சடைகளை மிகச்சுமந்து, வெயிலிலே நிற்கும் காரணத்தினுல் பெருந்தவம் செய்து அடையும் பயனுக, வேப்பமரங்கள் பழுத்துப் பல சிவலிங்கங்களைக் கொடுப்பனவாம். முருங்கை, வேம்பு முதலியன பாலை நிலத்தில் உள்ளன.

திணைமயக்கம்

வரையா தியநா னிலத்தாரும் வந்து வந்து கொற்றியடி
விரையார் மலர்தூய்த் தொழுந்தோறும் விலக்கா தவர்தோண் மாலை
உரையார் வாகை பலதழுவ வுற்ற சுரச்சி ரென்னுரைத்தாம் [யிடும்
கரையா வளஞ்சேர் நிலநான்குங் கலந்த வளமுஞ் சிறிதுரைப்பாம்.115

கு - ரை : வரையாதிய நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. கொற்றி - துர்க்கை. வாகை - வெற்றிமாலை. சுரச்சீர் - பாலை வனத்தின் சிறப்பு. நிலம் நான்கும் கலந்தவளம் - திணைமயக்கத்தின் வளப்பம்.

வரையிற் கறியும் வனப்புளியு மருவி மறையோர் சிலதினத்துப்
புரையிற் றவிர்ந்த தமைப்பிரிக்கும் பொரும நீரக் கலந்துவக்கும்
விரையிற் பொலியுங் கொடிமுல்லை வேங்கைக் கிளையிற் றாய்ப்படர்ந்து
தரையிற் சிறகர் வண்டுவிழுந் தலைத்த றவிர்ந்து வயங்கிடுமே. 116

கு - ரை : கறி - மிளகுக்கொடி. வரை - மலை. வனப்புளி - காட்டிலுள்ள புளியமரம். புரையில் தவிர்ந்த - குற்றத்தின் நீங்கிய. மறையோர் - அந்தணர். பொருமல் - வருத்தம். குறிஞ்சியும் முல்லையும் மயங்கின. விரை - வாசனை. கொடிமுல்லை - முல்லையாகிய கொடி: இது முல்லைநிலத்திற்குரியது. வேங்கை - வேங்கைமரம். தாய்ப்படர்ந்து - தாவிப்படர்ந்து. வேங்கை குறிஞ்சி நிலத்திற்குரியது. சிறகர்வண்டு - சிறகுகளையுடைய வண்டுகள். தரையில் விழுந்து அலைத்தல் - பூமியில் விழுந்து வருந்துதல். வயங்கிடும் - விளங்கும். வேங்கை மரத்தில் வண்டுகள் மொய்யா ஆதலின் வண்டுகள் வேங்கை மலரின் மணத்தால் நிலத்தில் மயங்கி விழுந்து வருந்தும். முல்லைக் கொடி வேங்கைமரத்தில் படர்ந்து மலர்ந்து கமழ்தலால் வண்டுகள் மயக்கம் நீங்கி விளங்கும்.

மாலை மௌவன் மதுவருந்தி வனத்தா மரைக்கண் விடியல்புகும்
மாலை வண்டு பரத்தையரி லகன்று மைந்தர் மனைக்கிழத்தி
மாலை யிலத்துப் புகல்காட்டும் வனத்தான் பொழிபா னிலவென்று
மாலை முளரி யிதழ்மூடல் வாயிற் புதவு மூடல்பொரும். 117

கு - ரை : மாலை - மாலைக்காலம். மௌவல் மது - முல்லை மலரிலுள்ள தேன். வனத்தாமரை - நீரிலுள்ள தாமரை. விடியல் - விடியற்காலம். மாலை வண்டு - வண்டொழுங்கு. மைந்தர் - ஆடவர். பரத்தையரில்லத்தை யகன்று மனைக்கிழத்தியின் இல்லத்தில் மைந்தர் விடியற்காலத்தில் புகுவதைக்காட்டும். மாலையகன்று விடியலிற்புகுதல் மைந்தர் இயல்பாம். வனத்து ஆன் - முல்லை நிலத்திலுள்ள பசுக்கள். பால்நிலவு என்று - பாலை நிலா என்று கருதி. மாலை - மாலைக்காலத்தில். முளரி - தாமரை. இதழ் மூடல் - இதழ்களை மூடிக் கொள்ளுதல். வாயிற் புதவு - வாயிற்கதவு. பொரும் - ஒக்கும். தாமரை காலையில் மலர்தலும் மாலையில் இதழ்மூடலும் இயல்பு. தாமரை இராக் காலத்து நிலவென்று வாயிற்கதவை மூடும் என்றார். தற்குறிப்பேற்ற அணி. முல்லையும் மருதமும் மயங்கின.

வயலிற் கயல்வா ரிதிமடுத்துச் சிற்றின் பத்தின் வதிதருவோர்
பெயர்தற் கரிய பேரின்பம் பெற்றுத் திளைத்தாற் போன்றுவக்கும்
உயர்விற் பொலிகே தகைமலர்நீ ரொண்டா மரையின் மிசைவீழ்ந்து
மயர்விற் றவிரு மடியர்சிவ பெருமாற் கெடுத்த றணைமாற்றும். 118

கு - ரை: வயலில் கயல் - வயலிலுள்ள கயல்மீன்கள். வாரிதி மடுத்து - கடலை அடுத்து; உவக்கும். சிற்றின்பத்திலே திளைத்தவர்கள் நீங்குதற்கரிய பேரின்பத்தை அடைந்து திளைப்பதுபோன்று உவக்கும் என்றார். வதிதருவோர் - அனுபவிப்போர். கேதகை - தாழை. மயர்வில் - மயக்கத்தின். தவிரும் - நீங்கும். மாற்றும் - போக்கும். மருதமும் நெய்தலும் மயங்கின.

தேம்பா டலக்கொம் பிடைஞாழல் செறியும் வண்டுந் தளவளியுங்
காம்பார் வரைக்காந் தட்சுரும்பும் கஞ்சத் தறுகாற் புளுங்குரவத்
தாம்பாண் மிஞிறு மளாயொலிப்ப வலங்கு பரத்தை யொருத்திநலம்
கூம்பா மனத்திற் கொளப்பலருங் கூடிப் பூசல் செயல்பொருவும். 119

கு - ரை: பாடலக்கொம்பு - பாதிரிமரத்தின் கிளை. ஞாழல் - கோங்கமரம்; புலிநகக்கொன்றை. தளவு - முல்லை. காந்தள் - காந்தள் மரம். கஞ்சம்- தாமரை. குரவம் - குராமரம். வண்டு, அளி, சுரும்பு, அறுகாற்புள், மிஞிறு என்பன ஒருபொருட் சொற்கள். பாடலக்கொம்பு; பரத்தை. மேலே கூறிய வண்டுகளெல்லாம் ஒரு பரத்தையினிடத்துப் பலருங்கூடிப் பூசல் செய்வதை ஒக்கும். தற்குறிப்பேற்ற அணி.

இந்த வண்ணம் பெருவளஞ்சார்ந் தெல்லாக் குடியு மெஞ்ஞான்றும்
தந்த மொழுக்கந் தவறாது தழுவப் பொலிசோ ணாட்டுவளம்
முந்த மொழிவான் பலர்முயன்று முற்ற மொழிந்தா ரலரென்னின்
நந்த முணர்விற் கடங்குவதோ நகர வளத்துஞ் சிறிதுரைப்பாம். 120

கு - ரை: இந்தவண்ணம் - இவ்வாறு. எஞ்ஞான்றும் - எப்பொழுதும். முந்த - முற்பட. முற்ற - முழுவதும். நந்தம் உணர்விற்கு - நம்முடைய அறிவுக்கு.

திருநாட்டுப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 163

மூன்றாவது

திருநகரப்படலம்

வந்து வானவர் தொழுதெழ வானக ரமர்ந்த
இந்து சேகரச் சுந்தர விடங்கர்தன் னிடத்து
முந்து காதலி னமர்தர மாதவ முயன்ற
நந்து சீரது நாகபட் டினத்திரு நகரம். 1

கு - ரை : வான் நகர் அமர்ந்த இந்துசேகரச் சுந்தரவிடங்கர் - விண்ணுலகத்திலே எழுந்தருளியுள்ள சுந்தரவிடங்கராகிய சோமாஸ்கந்த மூர்த்தி; இவர் சத்தவிடங்கருள் ஒருவர். நந்துசீரது - மேலான சிறப் புடையது. நந்துதல் - ஆக்கம் பெறுதல். சீரது : குறிப்பு வினைமுற்று. இந்துசேகரர் - சந்திரனைத் தரித்த திருமுடியை உடையவர்.

ஈட்ட வல்லது பல்வகைக் குடிகளு மீட்டி
ஊட்ட வல்லது பல்பெரும் போகமு மூட்டிக்
காட்ட வல்லது பரமனைக் காட்டியொண் கயிலை
நாட்ட வல்லது நாகபட் டினத்திரு நகரம். 2

கு - ரை : ஈட்ட - தொகுக்க. ஊட்டவல்லது - உண்பிக்க வல்லது. போகமும் - நுகர்ச்சிப் பொருள்களும். கயிலைநாட்ட - திருக்கயிலாயமலையில் நிலைபெற. பரமனை - சிவபெருமானை.

புன்மை மேயது சிறிதுமில் லாதது பொருளால்
வன்மை மேயதி யாரையும் வாழ்தரத் தாங்கும்
தன்மை மேயது தயையெனப் படுவது தவாத
நன்மை மேயது நாகபட் டினத்திரு நகரம். 3

கு - ரை : புன்மை - கீழானதன்மை. வன்மை - வலிமை. தவாத - நீங்காத.

தேம்பு கின்றவர் வறுமையிற் சிதைகுநர் சிறுமை
ஓம்பு கின்றவர் பிணியினுல் வருந்துந ரொழுக்கந்
தாம்பு குந்திடா மனத்தின ரிவரிலாத் தனியூர்
நாம்பு கழ்ந்திடு நாகபட் டினத்திரு நகரம். 4

கு - ரை : தேம்புகின்றவர்-வருந்துகின்றவர். வறுமையிற் சிதைகுநர்- தரித்திரத்தினுல் கெட்டொழிந்தவர். சிறுமை - கீழானதன்மை. தனியூர் - ஒப்பற்ற நகரம்.

துன்று வெள்ளநீர் மேலெழு காலத்துந் தொலையா
தென்று முள்ளதா யிருத்தலா லிறையமர் தலினல்
ஒன்று பேரொளி யாற்கயி லாயமே யொக்கும்
நன்று மேவிய நாகபட் டினத்திரு நகரம். 5

கு-ரை: நாகபட்டினமானது பிரளயகாலத்தும் அழியாது நிலை பெற்றிருத்தலினலும், சிவபெருமான் விரும்பி எழுந்தருளியிருத்தலினலும், பொருந்திய மிக்க புகழாலும் கயிலாய மலையையே ஒத்துவிளங்கும். ஒளி - புகழ்.

வேறு

நாகமா நகர மூன்றுள வவற்று ணஞ்சமஞ் சமுதுடை யதுமற்
றேகமாம் விண்ணி லிருப்பது நடுங்கி யிரியுநஞ் சுடையது பிலத்தின்
மோகமா யிருப்ப திதுவிட நோன்மை முழுவது முருங்கிட முருக்கும்
பாகமா ரமுத முடைத்தெனி லிதற்குப் பகர்ந்தன வுவமையா வனவே.

கு-ரை: நாகமாநகரம் மூன்று - விண்ணுலகம், பாதல உலகம், இந்த மண்ணுலகம். நாகம் - விண், பாம்பு. நாகர் - விண்ணேர், பாதல லோகவாசிகள். நஞ்சம் அஞ்சு அமுது உடையது - ஆலகால விடமும் அஞ்சத்தகுந்த அமுதத்தை உடையது. அது விண்ணுலகத்தில் இருப்பது. நடுங்கி இரியும் - நடுக்கத்தை அடைந்து கெட்டோடும். நஞ்சு - விடம். பிலத்தின் மோகமாய் இருப்பது - அலைகளுள்ளே விரும்பி இருப்பது. இது - இந்த நாகமாநகரம். விடநோன்மை முழுவதும் முருங்கிட - விடத்தின் வலிமை முழுதும் அழிய. முருக்கும் - அழிக்கும். பாகம் ஆர் அமுதம் - பக்குவம் நிறைந்த அமுதம். இரியும் - கெட்டோடும். பிலம் - பிலத்துவாரம். நோன்மை - வலிமை. முருங்கிட - அழிய.

இப்பாடல் முதல் 10ஆம் பாடல்வரையிலுள்ள 5 பாடல்களாலும் நாகபுரவருணனை கூறப்படுகிறது.

அன்றியு நாக புரமொரு மூன்று ளலங்குற நடுவமர் தலினல்
ஒன்றிய விதுவே சிறப்புடை யதுமற் றுரைத்தது முகமனே யென்னின்
நன்றிய னன்கு முகமொழி பொதுவே நடுமுக மொழிபெருஞ் சிறப்பே
என்றிய லுணர்ந்தோ ருரைப்பது மற்றென் றியம்பிட வேண்டுமென்
[னுரைப்பீர். 7

கு-ரை: நாகபுரம் ஒரு மூன்று - விண்ணுலகம், பாதாள உலகம், நடு உலகம். நாகபுரம் - நாகபட்டினம். நடு அமர்தலினல் - பூவுலகத்தில் பொருந்திய காரணத்தினல். முகமனே - உபசாரமே. நான்கு முகம் மொழி பொது - நான்கு முகங்களினல் அருளிச்செய்த வேதம்பொதுவாகும். நடுமுகம் மொழி - நடுமுகத்தினல் அருளிச்செய்த சிவாகமம். பெரும் சிறப்பு-

மிக்க சிறப்பையுடையது. இயல் உணர்ந்தோர் - இலக்கணநூலை நன்குணர்ந்த பெரியோர். உரைப்பதும் அற்று - சொல்லுவதும் அத்தன்மையை உடையது.

பின்னரு நாக புரமெனு மூன்றுட்
பிறங்குமித் தலத்தினை யடைந்தார்
என்னருஞ் சாலோ காதியே யடைவா
ரிழிந்தது கனவினுங் குறியார்
மன்னரு மிரண்டுள் வதிபவ ரிதன்பால்
வந்துவந் திறைஞ்சுவ ரென்றுன்
முன்னரு மிதனுக் குவமையென் றென்று
மொழிவதெவ் வண்டத்து மின்றே. 8

கு - ரை : இத்தலத்தினை - நாகபட்டினமாகிய இந்தத் தலத்தை. என்னரும் - எத்தன்மையுடையோரும். சாலோகாதி - சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் நான்கையும் அடைவார். இழிந்தது - கீழான தன்மையை உடைய சுவர்க்காதி போகங்களை. குறியார் - கருதமாட்டார். மன்னரும் - அரசர்களும். இரண்டுள் வதிபவர் - நாகபுரம் என்னும் பாதல உலகத்திலும் விண்ணுலகத்திலும் நிலைபெற்றிருப்பவர். இதன்பால் - இத் தலத்தினிடத்து.

மீட்டுமொண் ணுக புரமெனு மூன்றுள்
விரிஞ்சன்மா லிந்நகர்க் கன்றிக்
காட்டுமந் நகர மிரண்டற்கு மறந்து
கனவினுங் கைகுவித் தறியார்
பாட்டுவண் டுளரும் பொழில்சுலா மிதற்குப்
பன்முறை வணங்குவ ரென்னில்
நாட்டுநற் பிரம லோகம்வை குந்த
நகரினுஞ் சிறந்ததீ தொன்றே. 9

கு - ரை : விரிஞ்சன் - பிரமதேவர். மால் - திருமால். இந்நகர்க்கு - இந்த நாகபட்டினத்திற்கு. காட்டும் - முன்னே சொல்லிய. கைகுவித்து - கைகூப்பி. பாட்டு வண்டு உளறும் - இசைப்பாட்டுகளைப் பாடுகின்ற வண்டுகள் சஞ்சரிக்கும். பொழில் - சோலை. சுலாம் - சூழ்ந்த. பிரமலோகம் - சத்தியலோகம். வைகுந்தநகர் - வைகுந்தலோகம்.

மற்றுமொண் ணுக புரமெனு மூன்றுண்
மார்க்கண்டர் முதலிய முனிவர்
எற்றுவெண் டரங்க மெறிந்தெழு காலை
யேகுறும் வன்மைமிக் கிருந்தும்

சற்றுமவ் விரண்டி னடைதரல் கருதார்
தவாமலிங் கமர்ந்தன ரென்னில்
கற்றுமிக் குணர்ந்தீ ரிந்நகர்க் குவமை
கரைதரி னதுவலா லியாதே. 10

கு - ரை : எற்று வெண் தரங்கம் - வீசுகின்ற வெள்ளிய அலைகள். தவாமல் - நீங்காமல். கரைதரின் - சொல்லின்.

வேறு

மருவுவண் டொலியார்ந் தின்ப வளக்கொடி யாட லேய்ந்து
பெருகிய பசுமை வாய்ந்து பிறங்கிளஞ் சோலை சூழுந்
திருநகர் தனைவெல் லாமை தெரிப்பவோர் புறமே யன்றிப்
பொருதிரைக் கடலை யெல்லாப் புறத்தும்போர்த் திருத்தல் போலும். 11

கு - ரை : ஒலி ஆர்ந்து - ஒலிமிக்கு. ஏய்ந்து - பொருந்தி. பொரு திரை - கரையை மோதுகின்ற அலைகள்.

நாகமா நகர்சூழ் சோலை நாகவண் கிளையி னுக
நாகவைந் தருவ லைக்கு நகுதளிர்க் குளகு வெள்ளை
நாகங்கை நீட்டித் தெவ்வு நாடுபல் சடையிற் பல்ல
நாகமுற் றுென்றி வாழு நாமவொற் றுமையு ணர்ந்தே. 12

கு - ரை : நாகமாநகர் - நாகபட்டினம். நாகவண்கிளையில் - புன்னை மரத்தின் வளவிய கிளையில். நாகம் - குரங்குகள். நாக ஐந்தரு அலைக்கும் - விண்ணுலகத்திலுள்ள பஞ்ச தருக்களையும் அசைக்கும். குளகு - தழை. வெள்ளைநாகம் - அயிராவதம். தெவ்வும் - தாவும். சடையில் பல்ல நாகம் - சடையிலே பல பாம்புகள். நாம ஒற்றுமை - பெயர் ஒற்றுமை. நாகம் - விண், குரங்கு, புன்னை, பாம்பு, யானை.

வழைவிடு கிளைகற் பத்தின் வண்கிளை யோட ளாவ
விழைமதுக் கவர்வான் வண்டு மிஞிறுமொய்த் தொலித்த னேக்கித்
தழைசுர ரளிவி ராய தருவிலென் றச்சங் கொள்வார்
குழையவை யளிவி ராய கொள்கையின் மையினுண் ணுணும். 13

கு - ரை : வழை - சுரபுன்னை. கற்பத்தின் - கற்பகமரத்தின். அளாவ - கலத்தல்செய்ய. மதுக்கவர்வான் - தேனை நுகரும் பொருட்டு. வண்டு மிஞிறு. தருவில் - கற்பகமரத்தில். அளிவிராய என்று சுரர் அச்சம் கொள்வார், குழையவை - மனம் உருகவைக்கின்ற. அளிவிராய கொள்கை இன்மையின் - கருணை பொருந்திய கொள்கை இல்லாமையினல். உள் நாணும் - மனத்தில் வெட்கும். அளி - வண்டு, கருணை: சிலேடை.

குலவுவான் பவன மாய கும்பவா யிலாங்க லிக்கட்
கலவுவா னரமி திப்பக் கழன்றவொண் பழங்கீழ் நின்று
நிலவுமாங் குழைமு றித்து நேருற லிந்தி ரற்கு
நலவபி டேகஞ் செய்யப் புனைந்தநற் கும்பம் போலும். 14

கு - ரை : வான் பவனம் ஆய - ஆகாயத்திலுள்ள இராசியாகிய. கும்பவாய் - கும்பத்தில். இலாங்கலி - தேங்காய். கலவு - கலந்த. கழன்ற ஒண் பழம் - மூட்டு விண்டுபோன தேங்காய். மாங்குழை - மாந்தழை. நேருறல் - நேரே பொருந்துதல். அபிடேகம் - திருமஞ்சனம். நற்கும்பம் - சிறந்த கலசம்; கடம்.

கரையமர் நறிய தேமாங் கனிவாழைக் கனிசற் றேனும்
புரையிலா வருக்கை யீன்ற பூங்கனி மூன்றும் வீழத்
திரையெறி தடாக மூவர் செழுந்திருப் பாட்டு நன்கேற்
றுரையமை களிப்பு மீக்கொ ளுமாபதி செவியே போலும். 15

கு - ரை : புரையிலா - குற்றமில்லாத. வருக்கை - பலா. தடாகம் உமாபதி செவிபோலும். உமாபதி - சிவபெருமான். மூவர் செழுந் திருப் பாட்டு - திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், திருநாவுக்கரசுநாயனர், சுந்தர மூர்த்திநாயனர் முதலிய மூவர் முதலிகள் அருளிச்செய்த தேவாரத் திருப் பதிகங்கள். மீக்கொள் - மிகுதியாகக்கொள்ளும். மா, வாழை, பலா என்பன முக்கனிகள்.

மற்றுள கனிகள் வீழ்ந்தத் தடத்துற மருவன் மற்றும்
பற்றுள புலவர் பாட்டு மச்செவிப் பதிதல் போலும்
முற்றிய தெங்கங் காயு முழுமலர்த் தேனும் வீழ்தல்
எற்றுமான் குரலும் வீணை யிசையுமுற் றிடுதல் போலும். 16

கு - ரை : மற்றுளகனிகள் அத்தடாகத்தில் வீழ்ந்து பொருந்துதல் மற்றுள புலவர் பாட்டும் அத்திருச் செவியிலே சென்று சேர்தலையொக்கும். பற்றுள - அன்புபொருந்திய. எற்றும் - தாவும். சிவபெருமான் திருக்கரத் தில் ஏந்திய மானின் குரல் கம்பள அசுவதரர் வீணை வாசித்தல்.

நந்துபல் குலைவி ராய நலங்கொள்பா சரம்பைக் காடு
முந்துசெங் கருப்பங் காடு மூவகைப் புறத்துஞ் சூழ்வ
வந்துவான் சிலைமண் வீழ்ந்து வயங்குறு காட்சி நேரும்
உந்துவா ரிதியவ் வில்லி னுறுத்திய நாண மொக்கும். 17

கு - ரை : விராய - பொருந்திய. பாசு அரம்பைக் காடு - பசிய வாழைத்தோட்டம். வான்சிலை - இந்திரவில். மண்வீழ்ந்து - நிலவுலகத் தில் விழுந்து. வாரிதி - கடல். உறுத்திய நாணம் - கட்டப்பட்ட நாண்.

வானக நின்று மிங்கு வந்தசுந் தரத்தி யாகர்
மேனக வெழுந்து செல்லா விதந்தகைத் திடுதல் போலத்
தேனகு மலர்கள் பல்ல கற்பத்துஞ் சிறப்பச் சிந்திக்
கானகப் புறத்தும் வீசிக் கவிந்தமேற் பொழில்க ளெல்லாம். 18

கு - ரை : விண்ணுலகத்திலிருந்து முசுகுந்த சக்கரவர்த்தி கொண்டு வந்த மூர்த்திகள் எழுவருள் ஒருவர் இத்தலத்துள்ள சுந்தரத்தியாகர். ஆடரவக் கிண்கிணிக்கால் அழகனராகிய வீதிவிடங்கப் பெருமான் திரு வாரூரில் எழுந்தருளினர். "நாகைகாரோயல் கோளிலி நகர நலங்கெழு மறை வன நள்ளா, நீகைவான் புரிசை யினியவாய் மூரா மிப்பதி யாறினும்" மற்றை அறுவகை மூர்த்திகள் எழுந்தருளினர். தகைந்திடுதல் - தடைசெய் தல். கற்பத்தும் - கற்பகமரங்களினும்.

முனிவர னொருவன் மேனி முழுமையு மேற்றுக் கொண்ட
கனிவுடைப் பெருமான் மேனி கழிப்பதோ நம்மை யென்று
நனியுணர்ந் தினிய வாய நால்வகை மலரும் பூத்த
புனிதநந் தனவ னங்கள் வண்டுபாண் பாடப் போர்க்கும். 19

கு - ரை : முனிவரன் - புண்டரீகமுனிவர். கனிவு - இரக்கம், அருள். பெருமான் - சிவபிரான். நால்வகைமலர் - கோட்டுப்பூ, கொடிப்பூ, புதற்பூ, நீர்ப்பூ என்பன. பாண்பாட - பாடலைச் செய்ய.

புறநகர்

நகர்வளஞ் சொல்லப் புக்கு நாடிய பொதுவிற் சில்ல
பகர்வது போற்ப கர்ந்தாம் பயில்புற நகர மென்று
நிகரிடை நகர மென்று நிலவுமுண் ணகர மென்றும்
புகரிலோர் மூன்றுண் முன்ன துரைத்திடப் புகுந்தாஞ் சில்ல. 20

கு - ரை : புறநகர், இடைநகர், உண்ணகர் என மூன்றும்.

தம்பரி யாயத் தொன்று தாங்குமிந் நகரத் துள்ளால்
வெம்பரி கீண்ட புள்ளாம் பிரணவ வேழ மேவும்
நம்பரி வகற்றி யூறு நலிந்தோம்பு மென்று ணர்ந்து
பம்பரி விழையுந் தான மால்யானை பயில்வ பல்ல. 21

கு - ரை : தம் பரியாயத் தொன்று - நாகம்: பரியாயம் - ஒருபொருள் குறித்த மறுசொல். தாங்கும் இந்நகரம் - நாகப்பட்டினம். பரி கீண்ட புள். பிரணவ வேழம் - பிரணவப்பிள்ளையார். பரிவு - துன்பம். ஊறு - இடையூறு. ஓம்பும் - பாதுகாக்கும். பம்பு அரி விழையும் தானம் - நிறைந்த வண்டுகள் விரும்பும் மதசலம். மால் யானை பல்ல பயில்வன - மதமயக்கத்தை யுடைய யானைகள் பல உள்ளன.

மறிதிரைக் கடறு ளேந்து வாரணப் பெயர்வி ளக்கும்
பறியணி பலபூண் டேமா தங்கப்பேர் பரவத் தேற்றும்
செறிதரப் பூமி தித்துத் தும்பிப்பேர் தெரியக் காட்டும்
எறிகழை சுழியுங் கோபத் தீர்ங்கவுண் மதமா லியானை. 22

கு - ரை : கடல் துளைந்து - கடலின் மூழ்கி விளையாடி. வாரணம் - யானை, சங்கு. பறிஅணி - பொன்னாபரணம். மாதங்கம் - சிறந்த தங்கம், யானை. பூ மிதித்து - பூமியில் அழுந்தக் காலைவைத்து, மலரை மிதித்து. தும்பி - வண்டு, யானை. கழை - குத்துக்கோல். சுழியும் - கோபிக்கும். கவுள் - கன்னம்.

நகுகட லடுத்து மேயு நகரினை நலித ராமை
மிகுதிகொண் டெழிலோ ரியானை தொண்டையு ணுனிவி ராவிப்
புகுதிறஞ் செயுமே யென்று புந்திசெய் தஞ்சிப் போலும்
தகுதியிற் கவர்த ராமை யுவர்ப்பது தாந்தேர்ந் தன்றே. 23

கு - ரை : நலிதராமை - வருத்தாமை. புந்திசெய்து - கருதி. உவர்ப்பது - உப்புச்சுவையுடன் கூடியது, வெறுப்பது.

தங்களிற் குறைந்த கோட்டு வேழத்தைத் தாழ்வ தன்றிப்
பொங்குற வுயர்ந்த வொத்த கோட்டிபங் களைப்போற் றுவால்
அங்கவை கோடு நான்கும் பெறமுன்ருழ்ந் ததுவு மான்ற
துங்கவெண் கோடி ரண்டுந் தொலையமாய்ந் ததுமுள் ளோர்ந்தே.

கு - ரை : குறைந்த கோட்டு வேழம் - ஒற்றைக்கொம்பையுடைய யானை; விநாயகர். தாழ்வது - வணங்குவது. பொங்குற - மிக. உயர்ந்த - மிகுதியான. ஒத்த - சமமான. கோட்டு இபம் - கொம்புகளையுடைய யானை. அவை - ஐராவதம். முன்னே வணங்கியதும். ஆன்ற - சிறந்த. துங்க வெண் கோடு - தூய வெண்மையான கொம்புகள். மாய்ந்ததும் - இறந்ததும். உள் ஓர்ந்து - மனத்தில் ஆராய்ந்தறிந்து. (பிரபுலிங்கலீலை) காண்க.

பற்றுதந் நிழலைச் சீறிப் பாறவன் கந்து மாய்த்துக்
கற்றுணர்ந் தவர்க ளெல்லாங் கருத்தினு ராய்ந்து தேடி
முற்றுவ மிக்கத் தெவ்வர் முடித்தலை தெங்கங் காயின்
எற்றுபு மிதிக்கும் யானை வாரிக ளெண்ணி லாத. 25

கு - ரை : சீறி - கோபித்து. பாறு - தொலையும்படி. கந்து - கட்டுத்தறி. மாய்த்து - அழித்து. முற்று உவமிக்க - முழுவதும் உவமை கூற. தெவ்வர் - பகைவர். எற்றுபு - இடறி. யானைவாரிகள் - யானைச்சேனையாகிய கடல்கள். வாரி - கடல்.

உறுகதி யைந்து ளொன்றற் குரியதன் பரியா யப்பேர்
பெறுநக ரிதுபெம் மான்றே மொன்றினஞ் சாதிபேண
அறுதியி லின்பந் தந்தா னடுப்பதிற் குறையின் றென்று
மறுவிலா விலக்க ணத்த வாம்பரி பல்ல மேவும். 26

கு - ரை : உறு கதி ஐந்துள் - சிம்மகதி, மயூரகதி, வானரகதி, வியாக்கிரகதி, குஞ்சரகதி எனும் ஐங்கதிகளுள்ளே. பரியாயம்-ஒருபொருள் குறித்த மறுசொல். ஒன்றற்குரிய பரியாயப் பேர் : குஞ்சரம் = நாகம் என்பது. பேர் பெறு நகரம் - நாகப்பட்டினம். பெம்மான் - சிவபெருமான். தேம் ஒன்றில் - ஓரிடத்தில்; தேம் - தேசம் : மதுரையில். நம் சாதி பேண - நம்முடைய குதிரைச்சாதியைப் பாதுகாக்க. அறுதியில் இன்பம் - முடிவில்லாத இன்பம். அடுப்பதில் - இந்நகரிற் பொருந்துவதால். மறு இலா - குற்றமில்லாத. குதிரை இலக்கணம் திருவிளையாடற்புராணத்தில் காண்க.

பகைமுழு தீற்றின் மாய்க்கப் பாற்கடற் பள்ளி மேய
முகைவிரி பசுந்து ழாய்மான் முயங்குமெம் முருவங் கொள்வான்
மிகைபடு மதனுல் வாசி யெனும்பெயர் விளங்கப் பூண்டேம்
தகைபவ ரெவரே யென்று முழங்கல்போன் முழங்குந் தாமா. 27

கு - ரை : தாமா - குதிரைகள். பகை முழுது ஈற்றில் மாய்க்க - பகை முழுவதையும் இறுதிக்காலத்தில் அழிக்கும்பொருட்டு. முகைவிரி - மொட்டுகள் விரிந்த. மால் - திருமால். முயங்கும் எம் உருவம் - கலந்த எம்முடைய வடிவத்தை: என்றது கல்கி அவதாரத்தை. வாசி - குதிரை. தகைபவர் - தடுப்பவர். முழங்கும் - கனைக்கும். தாவும் மா = தாமா முழங்கும்.

வாரிதி சுருங்க வுண்ணும் வலியழல் படைத்த தோரில்
சீரிதி னெங்கள் சாதிப் பெண்பெயர் சேர்த லான்மற்
றேரிய னுளுக் கெல்லா மருத்துவ நாண்முன் னுற்ற
தேரிய லெங்கள் சென்னி போறலி னெனல்போற் றுவும். 28

கு - ரை : வாரிதி சுருங்க - கடல் வற்ற. வலி - வலிமை. அழல் - வடவாமுகாக்கினி. எங்கள் சாதிப் பெண் பெயர் சேர்தலால் - வடவாமுகம் என்னும் பெயரைச் சேர்தலால். வடவா - பெண்குதிரை வடிவம். ஓரில் - ஆராய்ந்தால். நாளுக்கெல்லாம் - நட்சத்திரங்களுக்கெல்லாம். மருத்துவ நாள் - அசுவினி நட்சத்திரம். அசுவினிதேவர் என்பவர் தேவ மருத்துவர். ஏர் இயல் எங்கள் சென்னி போல்தலின் - அழகு பொருந்திய எங்களுடைய தலையைப்போன்று விளங்குதலால். "அசுபதி அறுமீன் குதிரைத் தலை போல்" என்பது காண்க.

பெருநில முழுது நான்கு பெட்டுமுன் னீர்த்த வெம்முள்
ஒருபரி யீர்த்தல் செய்யு முதுகுறித் தறியான் பித்தன்
மருவுமக் குதிரைச் சென்னி வாவியே றிடத்தெ ரிந்தான்
பொருவரு மிதுதேர் வான்கொ லென்றலும் பொருமா வார்ப்பு. 29

கு - ரை : பெருநில முழுதும் - பெரிய பூமியாகிய தேர் முழுவதையும். நான்கு - நான்கு வேதங்களும். பெட்டு - விரும்பி. முன் ஈர்த்த - முன்னே இழுத்தன; அது திரிபுரசங்காரகாலத்தில். எம்முள் - எங்களுக்குள்ளே. ஒரு பரி ஈர்த்தல்செய்யும்: ஒரு பரி - ஒரு குதிரையாகிய ரிக்வேதம். ஈர்த்தல் செய்யும் - இழுக்கும், சுமக்கும். சுமத்தலாவது இருக்குவேதத்தின் நடுவில் இருப்பதை. பித்தன் - சிவபெருமான். குதிரைச்சென்னி - வேதத்தலை. வாவி - தாவி. வேதத்தலை என்றது வேதசிரமாகிய உபநிடதங்களை. இது தேர்வான் கொல் - இதனைத் தெளிவானோ. பொரும் - ஒக்கும். மா ஆர்ப்பு - குதிரைகளின் கனைப்பு.

ஒருவருங் கலனை மேலா லொண்சிலை வீரற் றுங்கி
மருவலர் மகுட கோடி மணிமுடி தெறிப்பப் பாயும்
பொருதிரைக் கடலுந் தாவும் பொங்குவாம் பரிகள் யாத்த
பெருவள மந்தி ரங்கள் பிறங்குவ விடங்க ளெல்லாம். 30

கு - ரை : கலனை - சேணம். மறுவலர் - பகைவர். வாம்பரிகள் - தாவிச்செல்லும் குதிரைகள். வாம் - வாவும். மந்திரங்கள் - குதிரைக்கட்டு மிடங்கள்.

ஒருசுதந் தரமு மின்றி யொழுகிடு வாரு மஃது
பெருகவேற் றெழுகு வாரும் பெறுதுபெற் றெழுகு வாரும்
பொருபரி யீர்க்கும் போது போந்தேரு மூர்கின் றேரும்
அருவலிப் பாகன் முட்கோற் கச்சமுற் றெழுகம் மாவும். 31

கு - ரை : பாகன் - வூாகுகன். முட்கோல் - குதிரைச் சம்மட்டி. மா - குதிரை.

நன்றிகொல் லிழிஞர் போல நகுசயந் தனக்கா லெல்லாம்
ஒன்றுபு தம்மைத் தாங்கும் புலிக்குற வடுச்செய் தோடும்
துன்றிய வவற்றை மாற்றுந் தூயவர் பொருவ வத்தேர்
வென்றிய மணியு திர்ந்து மறைத்திடும் வீதி தோறும். 32

கு - ரை : நன்றிகொல் இழிஞர்போல - செய்ந்நன்றியை மறந்து ஒழுகும் கீழோர்போல. இழிஞர் - அறிவில்லார். ஒன்றுபு - ஒன்றி. புலிக்கு - பூமிக்கு. உற வடு செய்து-மிகுதியாக வடுவைச்செய்து. துன்றிய அவற்றை - நெருங்கிய அவ்வடுவை. தூயவர் பொருவ - பெரியோர்களை ஒப்ப. தேர்

வென்றிய மணி - தேரிலே வெற்றியையுடைய மணிகள். தேர் புவிக்கு வடுச் செய்து ஓடும். மணிகள் அவ்வடுவை விதிகள்தோறும் உதிர்ந்து மறைத்திடும் என்க.

இனன்விடு தேருக் கோர்கா லிருகாலு மிலேபா கற்கு
மனநெகு பரியேழ் தெவ்வர் வாள்வலி யவுண ரையர்
புனலிறைப் பதுநேர் பார்க்கும் பொலிநகை யிழந்தா னன்னுன்
வினவில்யா முயர்ந்தோ மென்று முழங்கல் போன் முழங்கும் வேய்தேர்.

கு - ரை: இனன் - சூரியன். தேருக்கு ஓர்கால் - சூரியனது தேர் ஒற்றைச்சக்கரம் கோத்தது என்பர். "ஓராழி வெய்யவன்" (திருவரங்கத் தந்தாதி) பாகற்கு - தேர்ப்பாகனுகிய அருணனுக்கு. பரி ஏழ் - (இருகாலு மில்லாத பாகன் ஓட்டும் ஒற்றைச்சக்கரம் கோத்த சூரியனுடைய தேரை இழுக்கும்) குதிரைகள் ஏழு. தெவ்வர் - பகைவர். அவுணர் - அரக்கராவார். ஐயர் - பிராமணர்கள். புனல் இறைப்பது - அருக்கியம் கொடுப்பது. அன்னுன் நகை இழந்தான் - அந்தச் சூரியன் தக்கயாகத்தில் வீரபத்திரக் கடவுளால் பல் இழக்கப்பெற்றுன்; அவன் பூடா என்பவன். வேய்தேர் முழங்கும் - அலங்கரிக்கப்பட்ட தேர்கள் ஓடும்போது சத்தமுண்டாகும்.

அழன்மணி திருத்து பொற்றே ரழன்மலைப் பொலிவு போலும்
கழலுத லுருமேல் வெள்ளைக் கதலிகை யன்னம் போலும்
நிழல்கருங் குதிரை யீர்த்து நிற்பது கோலம் போலும்
உழலுவ தொன்று நிற்ப தொன்றுவேற் றுமையீ தொன்றே. 34

கு - ரை: அழல்மணி - நெருப்பை ஒத்த சிவந்த மாணிக்கமணிகள். அழல்மலை - நெருப்புமலை. கழலுதல் உரு - நீங்காத. மேல் வெள்ளைக் கதலிகை - மேலே கட்டப்பட்ட வெள்ளை நிறத்தையுடைய பெருங்கொடிகள். அன்னம்போலும் - அன்னப்பறவையைப் போலும். கோலம் போலும் - பன்றியை ஒக்கும். உழலுவது: அழல்மலையை அடிமுடி தேடிய அன்னமும் கோலமும் உழன்றன. இதிற்கட்டிய பெருங்கொடியும் கருங்குதிரையும் நிற்பன ஆகலின் வேற்றுமை ஈது ஒன்றே என்ருர்.

தரியல ருடம்பி னுள்ள தடிவழுக் கீருண் மேதை
நெரிதரா வெலும்பு மற்று நெரியமேற் றிரிந்து மூத்த
நரிமுத லியவு வக்க நல்விருந் தாக்குந் திண்காற்
பரியதேர் நிலைகள் பல்ல பரந்துவா னடைப்ப மாதோ. 35

கு - ரை: தரியலர் - பகைவர். தடி - தசை: ஊன். ஈர் உண்மேதை - ஈரமுள்ள மேதை. மேல்திரிந்து - மேலேசென்று. திண்கால் - வலிய உருளைகளையுடைய. பரியதேர் நிலைகள் - பெரிய தேர்நிலைகள். பல்ல - பல உள்ளன. பரந்து - பரவி. வான் அடைப்ப - ஆகாயத்தை மறைப்பன.

மற்றடம் புயத்தி ராமன் வலியகாண் டீபன் முன்னும்
விற்றடந் தொழிலர் யாரும் வெஞ்சிலை யெடுக்குந் தோறும்
நற்றடம் பொழில்சூழ் நாகை நயந்தவீ ரரையுட் கொள்வார்
முற்றடல் கொள்ள வென்னின் மொழிவது பிறிதென் னம்மா. 36

கு - ரை: மல் - மல்யுத்தம். காண்டீபன் - காண்டீபம் என்னும் வில்லை ஏந்திய அருச்சுனன். முன் ஆம் - முதலாக உள்ள. வில் தடம் தொழிலர் - விற்போர் வீரர்கள். சிலை - வில். அடல்கொள்ள - வெற்றி கொள்ள. நாகு ஐ வீரரை - இளமைபொருந்திய அழகியவீரர்களை; நாகை நயந்த வீரர் - நாகபட்டினத்தை விரும்பிய வீரர்கள் என்பது மற்றொரு பொருள்.

நெற்றியிற் றழலும் வாயி னெருப்புமில் லானேற் றும்பை
சுற்றிய சடையா னேடுஞ் சூழ்ந்தமர் செயலா மென்பார்
முற்றிய வவனோ டேற்றும் புறங்கொடா முதன்மை யாலே
பற்றிய சினத்தீக் கால னொடுஞ்சமர் பண்ண வேட்பார். 37

கு - ரை: நெற்றியில் தழல் - நெற்றிக் கண்ணாகிய நெருப்பு. வாயில் நெருப்பு-சிரித்துப் புரமெரித்த நெருப்பு. தும்பை-தும்பைமலர். சடையன்-சிவபெருமான். ஏற்றும் - எதிர்த்தும். புறங்கொடா - புறமுதுகு காட்டாத. சினத்தீக்காலன் - கோபத்தீயை உடைய யமன்.

எய்யென வுடம்பு முற்று மிருங்கணை தைத்த னேக்கி
ஓய்யென மகிழ்வா ராவத் தொழிதரிற் கொளலா மென்றே
கையெனப் புகல்வ தேனுங் காலெனக் கணைக டூர்ப்பார்
பொய்யென மெய்யைக் கொள்வா ரவரலாற் புறத்தி யாரே. 38

கு - ரை: எய் என - முள்ளம்பன்றி என்று சொல்லும்படியாக. கணை - அம்புகள். ஓய் என - விரைவாக. ஆவத்து - அம்பறுத்தூணியில். கால் என - காற்று என்று சொல்லும்படி. கணைகள் தூர்ப்பார் - அம்புகளால் தூர்ப்பார்கள். மெய்யைப் பொய்யெனக் கொள்வார். அவர் அலால் - அவ்வீரர் அல்லாமல்.

மண்ணின்முன் வைத்த காலை மறந்தும்பின் வைத்தல் செய்யார்
கண்ணினுண் டாய செம்மை கழித்திடா ரிமைத்தல் செய்யார்
எண்ணினெள் வாள்கை சோரா ரிருஞ்சிகை யவிழ்தல் பேணார்
வெண்ணிணங் குதட்டுங் கூற்றின் வேல்பல வெதிர்ந்த போதும். 39

கு - ரை: முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டார். கோபத்தால் கண்ணிலுள்ள சிவப்பு நிறம் மாறார். இமை கொட்டார். கையினின்று

வாளாயுதத்தை நழுவவிடார். தலைமயிர் அவிழ்ந்தபோதும் அதனைக் கட்டிக் கொள்ளார் ஆகிய தன்மையை உடையவர் காலாட்படையிலுள்ள வீரர். வெள்நிணம் - வெண்மையான கொழுப்பு. குதட்டும் - அதக்கும், மெல்லும். கூற்றின் - யமனைப்போல: இன் - ஐந்தன் உருபு.

இடைநகர்

இன்னபல் வீரர் வாழு மிடங்களு மியானை யாதிக்
குன்னருங் கருவி செய்வா ருறையுளு நிரம்பக் கொண்டு
மன்னுமொண் புறந கர்ச்சீர் வளத்தெவ னுரைத்தா மியாரும்
பன்னுநல் லிடைந கர்ச்சீர் வளஞ்சில பாட லுற்றும். 40

கு - ரை : உறையுள் - தங்குமிடம். மன்னும் - நிலைபெற்ற.

பாலையும் பொருவா வின்சொன் மடந்தையர் பயிலு மாடம்
மாலையு மைந்த ரோடு மற்றவ ராடும் வாவி
வேலையு மறங்க ளோங்கு சாலையு மேன்மேற் பூத்த
சோலையும் பிறவு மேலாஞ் சுவர்க்கத்தை நரகஞ் செய்யும். 41

கு - ரை : பாலையும் பொருவா - ஆவின் பாலையும் ஒவ்வாத. மைந்தர் - ஆடவர். மற்று - வினைமாற்று. அவர் - அம்மடந்தையர். வாவி - குளம். வாவி வேலையும்: வேலை - கடல்: பண்புத்தொகை. அறங்கள் ஓங்கு சாலை - சுவர்க்கத்தையும் நரகம் என்று சொல்லும்படி மேம்பட்டு விளங்கும் இடைநகர் என்க.

இளமழப் பயிலு மாட மெண்ணில வுயர்ந்து மேலால்
வளமுறச் சுதைதிற் றுங்கை பிடிசுவர் வளையக் கொண்ட
உளமகிழ் மழவொன் றேனு முருதவான் கிரக முற்றும்
அளமர விழுங்கற் கெண்ணி யங்காந்து நிற்றல் போலும். 42

கு - ரை : இள மழ பயிலும்: மழ = மழவு - இளமை. மேலால் - மேலே. சுதை - சுண்ணச்சாந்து. வான்கிரகம் - ஆகாயத்திலுள்ள வீடுகள். அளமர - சுழலும்படி. அங்காந்து - வாயைத்திறந்து. எண்ணில மாடம் முற்றும் விழுங்கற்கு அங்காந்து நிற்றல்போலும் வளையக்கொண்ட என்க.

மதியெழ விந்து காந்த மாளிகை பொழிநீ ராலும்
பொதியொளி யடுக்கு மாட மீமிசைப் பொலிந்து நாளும்
கதிமிகு வான யாறு தவழ்தரு காட்சி யாலும்
பதியமர் பவர்க்குக் கூவம் பட்டநீர் மிகையா மன்றே. 43

கு - ரை: மதியெழ - பூரணசந்திரன் தோன்றுதலால். இந்து காந்தம் - சந்திரகாந்தக் கல். நிலவு ஒளியால் சந்திரகாந்தக்கல் நீரைக் கக்கும்.

வானயாறு - ஆகாயகங்கை. பதி அமர்பவர் - இடைநகரில் உள்ளவர். கூவம்பட்ட நீர் - கிணற்றில் ஊறும் நீர்.

வம்பவி ழலங்கன் மாலை மைந்தரு மாத ராரும்
கம்பமில் காம வேளு மிரதியு மெனக்க லக்கும்
நம்பமை மாட மேலா னகுகும்பத் தோடு வானக்
கும்பம்வந் தளவ ளாவு மினத்தொடு மினங்கூ டாதோ. 44

கு - ரை : வம்பு அவிழ் அலங்கல் - வாசனைவீசும் மாலை. அலங்கல் - அசைதல். அலங்கல் மாலை - அலங்கலாகிய மாலை. கம்பம் இல் - நடுக்க மில்லாத. காமவேள் - மன்மதன். கலக்கும் - உறவாடும். மாடம் மேலால் நகு கும்பம் - மாடங்களின்மேல் விளங்கும் கலசங்கள். வானக் கும்பம் - ஆகாயத்திலுள்ள கும்பராசி. இனத்தோடு இனம் கூடும் என்பதுபழமொழி. வேற்றுப்பொருள் வைப்பணி.

மணிவெயில் விரிக்கு மாட மல்கலான் மாதர் மேனி
அணிகெழு மின்னுப் போல வலங்கலா லந்த காரம்
துணிவிலை யெனினு மந்தத் தோகையர் கூந்த லொன்றே
கணிதமி லிருளுண் டாக்குங் கதிர்முதிர் காலு மாதோ. 45

கு - ரை : மணிவெயில் - மாணிக்கக்கற்களின் ஒளி. மல்கலால் - நிறைந்து தோன்றுதலால். மாதர் மேனி அணி - மகளிர் உடம்பிலணிந்த அணிகலம். கெழு மின்னு - மிக்க மின்னல். அலங்கலால் - அசைதலால். மாதர் மேனி மின்னுப்போல அலங்கலால் எனினும் ஆம். அந்தகாரம் - இருள். துணிவு இலை - உறுதியாக நிலைபெறுதல் இல்லை. தோகையர் - பெண்கள். கணிதம் இல் இருள் - அளவில்லாத இருட்டு. கதிர் முதிர் காலும் - சூரியன் மேலெழுந்து விளங்கும் வரையும். முதிர்காலும் - முதிரும் வரையும்.

ஒருசிலை மதன்வ ளைக்க வூடுபு புருவ மாய
இருசிலை வளைப்பர் மாத ரிகலின்முண் டகமற் றொன்று
பொருதிற லினர்மார் பத்துப் புகுத்திடப் புகுத்தா நிற்பர்
அருகுரு விரண்டென் றுனல் லாரவ னினுமிக் காரே. 46

கு - ரை : ஒருசிலை மதன்வளைக்க: சிலை - கரும்புவில். மதன் - மன் மதன். ஊடுபு - ஊடி. புருவம் ஆய இருசிலை - புருவமாகிய இரண்டு வில் லுகள். இகலின் - வலிமையின். முண்டகம் - தாமரைமலர். மதன் முண் டகம் ஒன்று புகுத்திட, மாதர் முண்டகம் இரண்டு புகுத்தா நிற்பர். மன் மதன் தாமரை மலரைத்தொடுத்தலால் மாதர் நினைவு உண்டாம். "நினைக்கும் அரவிந்தம்'' நல்லார் முண்டகம் இரண்டு என்றது தாமரை அரும்பு போலும் கொங்கைகளை. நல்லார் - பெண்கள். அவனினும் மிக்கார் - அம் மன்மதனினும் மேம்பட்டவர் அன்றோ.

மின்னகு செம்பொன் மாட மேலுலா மணங்க ளுர்தம்
பன்னரும் வனப்பு வாய்ந்த பங்கய வதன நோக்கித்
தன்னமு மொவ்வா நாணுற் சந்திர னகங்க றுத்தான்
அன்னது களங்க மென்பா ரரியர்மெய் யுணர்ந்து சொல்வார். 47

கு - ரை : அணங்களுர் - பெண்கள். பங்கய வதனம் - தாமரைமலர் போலும் முகம். தன்னமும் - சிறிதும். அகம் கறுத்தான் - உள்ளிடத்தில் கறுமை நிறம் அடைந்தான்; மனதிற் கோபம் கொண்டான் என்பது மற்ெருரு பொருள். களங்கம் - மறு. தற்குறிப்பேற்ற அணி.

நீன்மணி யுயர்ந்த மாட நிற்கின்ற வடுகன் போலும்
தான்மிளிர் நுனைய சூலந் தாங்குகைச் சூலம் போலும்
வேன்மருள் கண்ணு ராடல் விசைத்தவெண் டரளப் பந்து
வான்மணி வாயுட் கோடல் வெள்ளியை விழுங்கன் மானும். 48

கு - ரை : நீல் மணி - நீலநிறம் பொருந்திய கற்கள் பதிக்கப்பெற்ற. வடுகன் - வயிரவக்கடவுள். நுனைய சூலம் - கூரிய சூலங்கள்: இவை மாடிகளின் மேல் பதிக்கப்பெற்றவை. ஆடல் விசைத்த - விளையாடுதலால் வேகமாக விசிய. தரளப்பந்து - முத்துக்கள் பதிக்கப்பெற்ற பந்துகள். வால் மணி - வெள்ளிய முத்துக்கள். வயிரவக்கடவுள் சுக்கிரனை ஒரு காலத்து விழுங்கின வரலாறு: சுக்கிரன் செருக்கை அடக்குவதற்கு வைரவக் கடவுள் உண்டு, அவனைத் திருவுதரத்தில் வைத்துக்கொண்டனர் என்பது சிவபுராணம் (தியாகராசலீலை 4 - 21).

வடுகன் வெள்ளியை விழுங்கல்: "பண்டொரு கோள்வாய்ப் பெய்து பாற்றிய காரிப் புத்தேள்" (தணிகைப் - நாட்டுப் - 81); "மேதகு மழைக் கோள்தன்னை வெளியினும் வைத்த தொப்பத், தீதகல் வயிரக் கச்சை" (திருவாரூர்த் தியாகராசலீலை - 3 - 21).

ஓங்குபொன் பெரிய ரெல்லா முயர்த்தினர் மாட மென்று
பாங்குற வறியார் சொல்வர் பரிந்தடுக் கியதோ ரேழே
வீங்குறு மவையோ ரேழு மேலுல கேழின் மட்டே
தேங்குமற் றவைக்கு மேலாற் சென்றது முண்டு கொல்லோ. 49

கு - ரை : பொன்பெரியர் - செல்வந்தர்கள். அறியார் - அறியாதவர்கள்; வறியார் எனினும் பொருந்தும். பரிந்து - விரும்பி. ஓர் ஏழு - ஒப்பற்ற ஏழடுக்கு மாடமே. அவை மேலுலகு ஏழின்மட்டே - மேல் ஏழு உலகத்தின் அளவாகவேயாம். ஏழுலகத்திற்குமேல் மாடங்கள் சென்றது உண்டோ ? இல்லை என்றபடி.

தாவரும் வளஞ்சா லந்த நகருறை தகவோ ரியாரும்
பூவருஞ் செல்வ மிக்கா ரெனவெறும் பொய்யே சொல்வார்
யாவருங் குபேர வாழ்க்கை யெவளவவ் வளவே யாக
மேவருந் தவங்கள் செய்தார் மெய்ம்மையா முரைத்த தொன்றே.50

கு - ரை : தாவரும் - கெடுதலில்லாத. தகவோர் - தகுதியையுடைய செல்வர்கள். குபேர வாழ்க்கையின் அளவு செல்வத்தைப்பொருந்த அவர்கள் பெருந்தவத்தைச் செய்தவர்கள் என யாம் உரைத்ததொன்றே உண்மையாம். குபேர வாழ்க்கை - நவநிதிச்செல்வம்.

இழுக்காவிந் நகர்வாழ் வாருக் கியைபெருஞ் செல்வ மாண்பு
முழுக்காம ரழகு மின்ப மொழியொடு கொடையுந் தங்கள்
குழுக்காமு றனுப விப்புங் கோதிலாப் புகழு நோக்கி
அழுக்காறு மேற்கொண் டன்றோ வமரர்கண் ணுறங்கா ரின்னும். 51

கு - ரை : இந்நகரத்தில் வாழ்வோர்பால் அழுக்காறுற்ற விண்ணோர் கண்ணிமைத்திலராய் உள்ளார் என்றார். விண்ணோர் இமையாநாட்டமுடையார்; கவி தற்குறிப்பேற்றமாகக் குறிக்கின்றார். இழுக்கா - குற்றமில்லாத. முழுகாமர் அழகும்: காமர் - விரும்பத்தக்க. காமுற அனுபவிப்பும்: அகரவீறு தொக்கது. தங்கள் குழு - தங்கள் கூட்டத்தார். கோது இலா - குற்றமில்லாத. அழுக்காறு - பொறாமை. அமரர் - தேவர்கள்.

வந்தவ ரன்றே மீட்டும் வந்திடி லெண்ணா ரீயும்
சந்தவிந் நகர்வாழ் மாந்தர் தாமனு பவிக்கும் போகம்
ஐந்தரு வாதி மாட்டு மடைந்திரந் தேற்றுத் துய்க்கும்
சுந்தர வானோர் போகம் போல்வதோ சொல்லுங் காலே. 52

கு - ரை : வந்தவர் - தம்பால் வந்து இரந்த இரவலர்கள். அன்றே - அந்நாளிலேயே. எண்ணார் - இவர் முன்பு வந்தவர் என்று நினையாதவராய். ஐந்தருவாதி - கற்பகம் முதலிய தெய்வ மரங்கள். இந்நகரிலுள்ள மக்கள் அனுபவிக்கும் போகம் தேவர்களுடைய போகம் போல்வதன்று; அதனின் மேம்பட்டதாம்.

பிறைபடு நுதலா ரோடு பெரும்பரி யங்க மேவி
நறைபடு மாலை மார்பர் கலவிப்போர் நடாத்துங் காலைப்
பொறைபடு மல்குற் பொற்றேர் பொருமைநீத் துவப்பு மேவ
மறைபடு மதன்பொற் றேர்சா லேகவாய் வந்து லாவும். 53

கு - ரை : பரியங்கம் - கட்டில். நறை படும் - தேன் ஒழுகப்பெற்ற. அல்குலாகியதேர். பொருமை நீத்து - பொருமையை விட்டு நீங்கி. உவப்பு மேவ - மகிழ்ச்சி பொருந்த. மறைபடும் மதன் - உருவிலியாகத் திரியும்

மன்மதன். பொற்றேர் - அழகிய தேராகிய தென்றற் காற்று; மன்மதனை 'வடக்கோடு தேருடையான்' என்றார் சிவப்பிரகாச சுவாமிகள். சாலேகவாய் - பலகணியின் வாயிலில்; சாலேகம் - சாளரம்.

நல்லவர் குணம்போ லல்குற் றேர்நயந் தினத்தை நட்டு
வல்லவர் பெறுதல் பெற்ற துணர்ந்தும்வார் முலைமால் யானை
அல்லவர் குணம்போன் மாரன் களிறடுப் பவுமா ரத்தால்
புல்லவர் போதல் போலப் போக்குபு வடுத்தாங் கும்மே. 54

கு - ரை: நல்லவர் - அறிவுடையோர். அல்குற்றேர்: பண்புத் தொகை. இனத்தை நட்டு - தம்முடைய இனத்தை விரும்பி. வல்லவர் - அறிவினால் வல்ல பெரியோர். வார் - கச்சு. மால் யானை - மதமயக்க முடைய யானை. ஆரத்தால் - முத்துக்களால். புல்லவர் - கீழோர். போக்குபு - போக்கி. வடு தாங்கும் - பழியாகிய சுவட்டைத் தாங்கும்; வடு - தழும்பு. மாரன் - மன்மதன். களிறு என்றது இருளை.

பன்னரும் புகழ்சா ணுகைப் பதியவர் மாட மெல்லாம்
என்னரும் விரும்பு கோக னகமல ரிருப்ப வட்கு
முன்னருங் கலைம கட்கு மூரிவிற் காம வேட்கு
நன்னர்கொ ளறத்தி னுக்கு நாடக சாலை யாமால். 55

கு - ரை: என்னரும் - எப்படிப்பட்டவரும். கோகனகம் - தாமரை. இருப்பவள் - திருமகள்; "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே" என்றமை காண்க. கலைமகட்கும் - கல்வித்தெய்வத்துக்கும். மூரி வில் - வலிய கரும்பு வில். காமவேள் - மன்மதன். அறத்தினுக்கும் - தருமத்துக்கும். நன்னர் கொள் - நன்மைகளைக் கொள்ளுவதற்குக் காரணமாகிய. நாடகசாலை - ஆடரங்கு.

அடுப்பவர்க் கினிய நாகை யமர்பவ ரார்க்கு மள்ளிக்
கொடுப்பரென் றுரைப்பார் பொய்யே கொடுத்தது கண்டி லேம்யாம்
விடுப்பரும் வேட்கை தீர மேவுவோர் தாமே வாரி
மடுப்பவ ரெனிலவ் வாறு வழங்குதல் குற்ற மன்றே. 56

கு - ரை: அடுப்பவர் - வந்து பொருந்துவோர். விடுப்ப அரும் - நீக்குதற்கரிய. வேட்கை - வேணவா, பேரவா. வாரி மடுப்பவர் - அள்ளித் தேக்குபவர்; நிறைவிப்பவர் என்க: தற்குறிப்பேற்றவணி.

விரதமா தவர்சூழ் காயா ரோகணர் விரும்பு வார்க்குக்
கரதலா மலகம் போலுங் கருந்தடங் கண்ணாள் செய்யும்
சரதமா ரருளி னுன்மே தகுநாகைப் பதியு ளாருக்(கு)
அரதன கரமே பாங்க ரமைந்தது குறைவொன் றுண்டோ. 57

குரை: கரதல ஆமலகம் - உள்ளங்கை நெல்லிக்கனி. கருந்தடங் கண்ணுள் - நீலாயதாட்சி; இத்தலத்து அம்பிகை. சரதம் ஆர் - உண்மை நிறைந்த. அரதனுகரம் = இரத்தினுகரம் - கடல்; ஆகரம் - இருப்பிடம்.

கோலவங் கையு மாதர் கொங்கையுங் கோடல் கிள்ளை
சேலம ரடையுங் காதுஞ் செய்யவாய்ப் பாட்டும் வள்ளை
ஆலமுண் கண்ணுந் தேனி னமைந்தினிப் பதுவுங் கூற்றம்
சீலமென் னடையு நள்ளும் பிடியெனிற் சிறந்தா ரன்றே. 58

குரை: கோலம் - அழகு. அங்கையும் கிள்ளை கோடல் - அகங்கையும் கிளியைக் கொள்ளுதல். கொங்கையும் கிள்ளுதலைப் பொருந்துதலாம்: கோடல் - கொள்ளுதல். அங்கையும் கோடல்: கோடல் - காந்தள்மலர் எனினுமாம். சேல் - சேல்மீனைப் போலும் கண்கள். அமர் அடையும் - போரைச் செய்யும். காது வள்ளைத்தண்டு போலும். வாய்ப்பாட்டும் வள்ளை - வாயாற் பாடும் பாட்டும் வள்ளைப்பாட்டாகும்: வள்ளைப்பாட்டு - உலக்கைப்பாட்டு. ஆலம் - நஞ்சு. கண்ணும் கண்டாரைக் கொல்லும். தேனின் - தேனைப் போல. கூற்றம் - இயமன், சொல். நடையும் பிடி: பிடி - பெண்யானை போலும். நள்ளும் - இடையும்: நள் - நடு. பிடி - ஒரு பிடித்த பிடியளவு.

மேவரு மம்பொன் மாட மேனிலை யணங்க னுர்செய்
தாவரும் பாவ ராக தாளத்து ளொன்று நீக்கித்
தேவருங் கேட்டு வப்பார் சிறந்தவிந் நகர மாந்தர்
யாவருங் கேட்டு வப்பா ரினிதினுங் குளவவ் வாறே. 59

குரை: மேவரும் - பொருந்தும். மேல்நிலை - மேல் உப்பரிகை. அணங்கனுர் - பெண்கள். தா அரும் - நீங்காத, கெடாத. பாவம், ராகம், தாளம்.

இரண்டுகேட் டுவத்தல் செய்வா ரிருவரு மெனினுந் தேவர்
திரண்டவெம் முலையார் செய்யும் பாவனைத் திறமுங் காண
முரண்டபு மாசை கொள்வார் முனிந்தன ரிவரன் னுரே
கரண்டநீர்ப் புவிமின் னுரைக் காமுற்றுக் கருகு வாரால். 60

குரை: இருவரும் - தேவரும், இந்நகரமாந்தரும். இரண்டென்றது ராக தாளங்களை. முரண் தபு - மாறுபாடில்லாத. இவர் - நகரமாந்தர். முனிந்தனர் - வெறுத்தனர். அன்னுரே - அத்தேவர்களே. புவி மின்னுர் - நிலவுலகமகளிர். அன்னுர் காமுற்றுக் காமவெப்பத்தால் கருகுவார் என்க.

வரிவிழிப் பரத்தை மார்த மனைநின்றும் விடியன் மைந்தர்
உரியதம் மனைப்பு குங்கா லூடுறுங் கிழத்திக் கஞ்சித்
தெரிதரு மொருவி ருந்து தேடியங் குழலா நிற்பார்
புரிதருங் கதிர்க்கு முந்திப் போதரும் விருந்து முண்டோ. 61

கு - ரை : பரத்தைமார் தம்மனை - மைவிழியார் இல்லம். மைந்தர் - ஆடவர். ஊடுறும் - சிறுபிணக்குக் கொள்ளும். கிழத்தி - மனையாள். உழலா நிற்பார் - வருந்துவார். கதிர்க்குமுந்தி - சூரியன் உதயமாதற்கு முன்னர்.

வளையொலி வயங்கு கஞ்சம் வழங்கொலி பிலி சுட்ட
முளையொலி வார ளாய முழவொலி மற்று முள்ள
துளையொலி நரம்பி னின்றுந் தோன்றொலி யெல்லா மெங்கும்
அளையொலி யாத லாலே யரவமா நகர மென்பார். 62

கு - ரை : வளை - சங்கம். கஞ்சம் - தாளம். துளை ஒலி - துளைக் கருவிகளின் ஒலி. நரம்பு - நரப்புக் கருவிகள். அளை ஒலி - அளவளாவும் ஒலி: அளைதல் - கலத்தல். அரவ மா நகர் - நாகபட்டினம்: அரவம் - ஒலி, பாம்பு.

பலமுனி வரரும் யாக குண்டத்துப் படைப்ப டைத்த
பலவர வமுமா தேவன் படர்சடை யரங்கத் தாடும்
பலவிதழ்க் கமல வாழ்க்கை யொருமுனி படைத்த மாதர்
பலவல்கு ளுக மைந்தர் பரிமன வரங்கத் தாடும். 63

கு - ரை : பல அரவமும் - பலவேதமந்திர ஒலிகளும். சடை அரங்கம் - சடையாகிய அரங்கம்: அரவம் - ஒலி, நாகம். அரங்கம் - இடம். ஆடும் என்றது சென்று சேரும் என்க. கமல வாழ்க்கை ஒருமுனி - பிரமதேவர். அல்குல் நாகம் - அல்குலாகிய பாம்பு. அரவம், நாகம் என்பன ஒருபொருட்கிளவிகள். மன அரங்கம் - மனமாகிய சபை.

மகபதி நகரு மிந்த நகரும்வண் புலமை யாளர்
புகரற வுணர்ந்து போகி நகரெனப் புகலா நிற்பார்
நிகரறு பல்லோ ரீங்கு நிகழ்த்திய தென்னை யென்னிற்
பகர்தரு நயங்கூர் சாதி யொருமையுட் பதித்தார் போலும். 64

கு - ரை : மகபதி - இந்திரன். நகர் - அமராவதி. புகர் அற - குற்றமின்றி. போகி - இந்திரன், நாகம். நிகர் அறு - ஒப்பற்ற. சாதி யொருமை: நாகருலகம் என்னும் சாதி ஒற்றுமை. நாகர் - தேவர், நாக லோகவாசிகள். உட்பதித்தார் - மனத்துட்கொண்டார்.

கதிரவன் வெயில்பு காது காவண மெங்கு மிட்டு
முதிர்குலைக் கதலி யாதி முயங்கக்கா ரேறும் யாத்துப்
பிதிர்புன றெளித்து மற்றும் பிறக்கிய நியம வீதி
அதிர்புன லுடுத்த ஞால மனைத்தையும் விலைக்கு வாங்கும். 65

கு - ரை : கதிரவன் - சூரியன். காவணம் - பந்தர். கதலி - வாழை. முயங்க - நெருங்க. கால்தோறும். நியமவீதி - கடைத்தெரு. ஞாலம் - உலகம்.

வரையினுள் ளனவுஞ் செற்ற வனத்தினுள் ளனவும் பண்ணைத்
தரையினுள் ளனவு நெய்தற் றலத்தினுள் ளனவு மேவிப்
புரையறச் செறிந்து நாளும் பொலிதரு நியம வீதி
உரையுயிர்ப் போக மெல்லா முடங்கமை மாயை போலும். 66

குரை: வரையிலுள்ளன - வரைபடு பொருள்கள்: வரை - மலை. சந்தனம், தேக்கு, அகில், மூங்கில், மலைநெல், மூங்கிலரிசி, தினைமுதலியன; யானைத்தந்தமுமாம். வனம் - காடு: காட்டிலுள்ளன: வரகு, சாமை, முதிரை, துவரை முதலியன. மருதநிலத்துள்ளன: செந்நெல், வெண்ணெல் முதலியன. பண்ணை - வயல். நெய்தல்நிலத்துள்ளன: மீன், உப்பு, முத்து, பவளம் முதலியன. செறிந்து - நெருங்கி, நிறைந்து. உயிர்ப்போகம் - உயிர்கள் நுகரும் போகப்பொருள்கள். உடங்கு - ஒருசேர.

விலையினேற் றகல்வார்க் கண்டு விற்றன ரெல்லா மென்பார்
உலைவரு நியம நோக்கி யொன்றும்விற் றிலரா லென்பார்
நிலையுற வுண்மை தேர்ந்து நிகழ்த்திடா நீர்மை யாலே
மலைபர சமயம் புக்க மாண்பிலர் போன்று ரன்றே. 67

குரை: விலையின் ஏற்று - விலைகொடுத்து வாங்கி. நீர்மையால் - தன்மையால். பரசமயம் - வேற்றுச்சமயம். மாண்பிலர் - பெருமையில்லாதவர். தேர்ந்து - தெளிந்து.

மாதர்வெம் முலைக டாக்க மகிழ்ந்தனர் புகழ்கின் றாரும்
காதர மேன்மேற் றூன்றக் கவன்றன ரிகழ்கின் றாரும்
போதரப் பொருந்து மெல்லாப் பொருளுஞ்சா னியம வீதி
மூதறி வுடைய சீவன் முத்தர்போன் றிருந்த தன்றே. 68

குரை: வெம்முலை - விரும்பத்தக்க நகில். காதரம் - விருப்பம், துன்பம். சால்நியம வீதி: சால் - மிக்க. சீவன் முத்தர் - உடலோடு கூடியிருந்துகொண்டே சிவபோக நுகர்ச்சியுடையார். மகிழ்ந்தனர், கவன்றனர் முற்றெச்சங்கள்.

பல்வகைக் கனியு மோர்பாற் பல்வகைக் காயு மோர்பாற்
பல்வகை யபூப மோர்பாற் பல்வகை மலரு மோர்பாற்
பல்வகைப் பயறு மோர்பாற் பல்வகைக் கிழங்கு மோர்பாற்
பல்வகைப் பொருளுஞ் சேர்ந்த பண்டார நியம வீதி. 69

குரை: அபூபம் - அப்பவகைகள். பண்டாரம் - சரக்கறை.

அணிபிறை வடமுத் தார மங்கத மதாணி யாழி
மணியொளிர் கடகந் தோடு வளைகுழை சன்ன வீரம்
தணிவரும் பாத சாலஞ் சடையலங் கார மாதிப்
பணிபல செறித லோர்ந்தே பணிநக ரென்று ராய்ந்தார். 70

கு - ரை : அணிகலவகைகள் அடையின்றிவந்தன. அங்கதம் - தோள் வளை. மதாணி - மார்பிற்பதக்கம். சன்னவீரம் - வென்றிமாலை. பணி - ஆபரணம், பாம்பு. பணிநகர் - நாகபட்டினம்.

பரவிய கிடுகு போக்கிப் பாசஞ்சா ரெழினி விட்டே
உரவியன் மணிப தித்தாங் கொளிசெய்கம் பலம்வி ரித்துக்
கரவிய லாத மர்ந்து கலைபல பகரா நிற்பார்
புரவிய லவரே கோடி கோடியாப் புணர்த்த வல்லார். 71

கு - ரை : கிடுகு - பன்னுங்குமுடைந்த ஓலைக்கீற்று. பாசம் சார் - கயிறுகள் பொருந்திய. எழினி - திரைச்சீலை. கரவு இயலாது - வஞ்சகமின்றி. கலை - ஆடை. கோடி - புதிய ஆடை. கோடியா - கோடி எண்ணுடையதாக: அது நூறு நூறாயிரமாம்.

அயலவர் கொடுக்குஞ் செம்பொன் ஆணிப்பொன் னேடு
மயர்வற மெழுகு போக்கி மற்றது துலையிற் றூக்கி [ரைத்து
இயலுறு தம்பொன் றள்ளி யெஞ்சிய துதவு மாண்பாற்
செயலமை யறங்க ளெல்லாஞ் சிறப்பன விடங்க டோறும். 72

கு - ரை : ஆணிப்பொன் - துளையிட்டபொன்; மாற்று உயர்ந்தது: உரையாணி என்க. துலை - துலாக்கோல். பொன் வாணிகருடைய நடுவு நிலைமைச் சிறப்பு. அறங்களெல்லாம் சிறத்தற்குக் காரணம், அறத்தினல் ஈட்டியதாகலின்.

விரித்திடு மொளிசா லுங்கோ மேதகம் பதும ராகம்
தெரித்திடு வயிர நீலந் திகழ்மர கதமொண் முத்தம்
பரித்திடு பிறவுங் கொண்டு கொடுப்பவர் பக்கங் கண்ணில்
அரித்திடு பவர்கைக் கோட லளகைவேந் தனும வாவும். 73

கு - ரை : கொண்டு கொடுப்பவர் - வாங்குவோர் விற்போர். கண்ணில் அரித்திடுபவர் - கண்ணினல் தெரிப்போர். கைக்கோடல் - கையிற் கொள்ளுதல் ஆகிய பொருள். கண்ணில் - கருதுமிடத்து. அரித்திடுபவர் - அரிப்பரிப்பவர் எனினுமாம்.

புரைதவிர் வனப்பு வாய்ந்த பொலங்கொடி யாரை வேட்டு
கரைமதக் களிற்றின் மேலுங் காய்சினப் புரவி மேலும்
உரையமை சிவிகை மேலு முலாப்புறம் போவார்க் கண்டு
வரைசிறை யரிந்த வேந்தன் மாறுத சமழ்ப்புண் மூழ்கும். 74

கு - ரை : புரைதவிர் - குற்றமில்லாத. வனப்பு - அழகு. பொலங்கொடியார் - பொற்கொடிபோன்ற மகளிர்: பொலம் - பொன்: வேட்டு - மணம்புரிந்து. உலாப்புறம் - உலாவரல். வரை சிறை அரிந்த வேந்தன் - இந்திரன். சமழ்ப்பு - நாணம், வருத்தம்.

கருந்தடங் கண்ணரி யோடுங் காமரு மகார்க ளோடுந்
திருந்துபல் கணங்க ளோடுஞ் செய்யகா ரோண நாதர்
அருந்தவர் புகழ்சா றென்றோர் நாமமிட் டமைந்து லாவல்
பொருந்துபன் மறுகி னுய பொலிவள நோக்கற் கன்றே. 75

கு - ரை: கருந்தடங்கண்ணரி - உமாதேவியார். மகார் - குமாரர்கள்: மூத்தபிள்ளையார், இளையபிள்ளையார். சாறு - திருவிழா. உலாவல் - உலா வருதல். மறுகின் ஆய - வீதிகளிற் பொருந்திய.

மினியபொற் றிருக்கை யெங்கும் வெல்லுவ திருக்கை யெங்கும்
முனிவர திருக்கை யெங்கு மொழிகுவ திருக்கை யெங்கும்
கனிவுற மதிக்கை யெங்குங் கலத்தல்சம் மதிக்கை யெங்கும்
பினியவை மதிக்கை யெங்கும் பிரிதலி மதிக்கை யெங்கும். 76

கு - ரை: முனிவரது இருக்கை: இருக்கை - ஆசிரமம். மொழிகுவது இருக்கை: இருக்கு - வேதமந்திரங்கள். பொன்திருக்கை - பொன் போன்ற திருக்கரம், பொன்பொருந்திய திருக்கரம். திருக்கை - மாறுபாட்டை. மதிக்கை - மதித்தல். சம்மதிக்கை - ஒப்புக்கொள்ளல். இயவை - வழி. இம திக்கை.

அரதனப் பணிக ளெங்கு மலரரும் பணிக ளெங்கும்
விரவுவ தோகை யெங்கு மேவுவ தோகை யெங்கும்
வரமல ரன்ன மெங்கும் வழங்குவ ரன்ன மெங்கும்
அரகர முழக்க மெங்கு மளியின முழக்க மெங்கும். 77

கு - ரை: அரதனப் பணி - இரத்தினாபரணம்: பணி - ஆபரணம். அலர் அரும் பணிகள் - விளங்கும் அரியதொண்டுகள். தோகை மயில். மேவுவது ஓகை: ஓகை - உவகை. வர மலர் அன்னம் - சிறந்த மலர்களின் மேல் அன்னப்பறவை. வழங்குவர் அன்னம்: அன்னம் - சோறு. அளியினம் - வண்டின் கூட்டம்.

நிலவுவ சங்க மெங்கு நீறுபூ சங்க மெங்கும்
புலவர்தஞ் சங்க மெங்கும் புகல்பிர சங்க மெங்கும்
குலவொளித் தங்க மெங்குங் கூறுவ தங்க மெங்கும்
உலவுமா தங்க மெங்கு முறுவரர் தங்க மெங்கும். 78

கு - ரை: புலவர் - அறிஞர். சங்கம் - கூட்டம். சங்கம் நிலவுவ - சங்குகள் பொருந்துவன. நீறு பூசு அங்கம்: அங்கம்-உறுப்புக்கள், உருவம். பிரசங்கம் - விரிவுரை. ஒளித்தங்கம்: தங்கம் - பொன். கூறுவது அங்கம்: அங்கம் - வேதஅங்கங்கள். மாதங்கம் - யானை.

குழையடர் கெண்டை யெங்குங் குலைந்தவி தண்டை யெங்கும்
கழைபடு தொண்டை யெங்குங் காமவேள் சண்டை யெங்கும்
தழைதரு கண்டை யெங்குந் தவாச்செரு வுண்டை யெங்கும்
விழைதரு மிண்டை யெங்கு மெல்லிணர்க் கொண்டை யெங்கும். 79

கு - ரை: கெண்டை - கெண்டைமீன் போலும் கண்கள்; குழை - காது. விதண்டை - விதண்டாவாதம். கழை படு தொண்டை. காமவேள் - மன்மதன்.

உண்ணகர்

இன்னபல் வளஞ்சான் றோங்கு மிடைநகர்ச் சிறப்புக் கூறப்
பன்னக வேந்த னாலு முற்றுமோ பளகு தீர்ந்தார்
என்னரு மிராச தானி யென்றினி திசைக்கப் பெற்ற
சொன்னவுண் ணகர மேன்மை யினுஞ்சில சொல்ல லுற்றும். 80

கு - ரை: பன்னகவேந்தன்-ஆதிசேடன். பளகு-குற்றம். என்னரும்-எத்தகையோரும்.

வேறு

ஆதலங் கமையப் பரசிவ சின்ன மடைநரைச் சிவனெனல் போலப்
பூதலம் பொலியு நாகமா நகர்க்குப் பொருந்துறுப் பாம்பெருங் கிடங்கு
பாதல மடைந்து பொலிதலா னுஞ்சில் படுபெரு மதிலுயர்ந் தோங்கு
மீதல மடைந்து பொலிதலா லவைக்கும் விளம்பின ரிந்நகர்ப் பெயரே.

கு - ரை: பரசிவசின்னம் அடைநரை - சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராக்கமணிந்த அடியார்களை. நாகமாநகர் - நாகபட்டினம். பெருங் கிடங்கு - பெரிய அகழி. பாதல உலகத்தை அடைந்து விளங்குதலால் அந் நகர்க்கும் நாகநகர் எனப் பெயர் கூறுவர். நாஞ்சில் - மதில் உறுப்பு. மீதலம்-மேலுலகம். மதில் விண்ணுலகத்தை அடைந்து விளங்குதலால் அந் நகர்க்கும் நாகநகர் என்று பெயர் கூறுவர். நாகநகர் - நாகருலகம், விண் ணுலகம்.

புண்ணிய மருவு சிவபுரம் புகுந்து பூதநா தனைத்தொழு நசையோர்
அண்ணிய வனையா னுருவுபெற் றவரை யவனென விரும்புதல் போலக்
கண்ணிய நாகைப் பாம்புரி நொச்சி காணவேண் டுநர்புறக் கடலை
எண்ணிய வுயர்ந்த நேமிமால் வரையை யினிதுகண் டுவப்புறு வாரால்.

கு - ரை: பூதநாதன் - சிவபெருமான். நசையோர் - விருப்பமுடையோர். அண்ணிய - பொருந்திய. அனையான் - அச்சிவபெருமான். உருவு பெற்றவர் - சாரூபம் பொருந்தினவர்: மான் மழு காளகண்டம் சதுர்ப்புஜம்

திரிநேத்திரம் முதலியன தரித்தவர். பாம்புரி நொச்சி - பாம்புரிபோன்ற மதில்களின் அடிகள்: பாம்புரி - மதிலின் அடியே உள்ள ஆளோடிகள். "பன்மலர்க் கிடங்குசூழ் பசும்பொற் பாம்புரிக், கன்னிமூதெயில்" (சீவக - 1250). பாம்புரி - கீழே புறப்படப் படுத்தது என்பர் நச்சினர்க்கினியர். புறக்கடல் - புறத்திலேயுள்ள சமுத்திரம். எண்ணரிய - எண்ணரி. நேமிமால்வரை - சக்கரவாளகிரி.

உமையொரு பாக மின்மையா லைய
னுருவுபெற் றவரிவ ரென்றுள்
அமைதரக் கொளஎல்போன் மால்விடு திகிரி
யவனெடங் காந்துற விழுங்கும்
கமையறு கராங்க ளின்மையாற் கடியுங்
கடும்பொறி சிறிதுமின் மையினல்
சுமையுறு மிவையோ புறக்கட னேமிச்
சுரும்பெனத் தெளிகுவர் விரைந்தே 83

கு - ரை: உமாதேவியார் ஒருபாகத்திலே இல்லாத காரணத்தால். ஐயன் உருவு பெற்றவர் - சிவசாரூபம் அடைந்தவர். உள் அமைதர - மனத்திலே பொருந்த. மால்விடு திகிரியவன் - கஜேந்திரன். திகிரி - சக்கரப் படை. அங்காந்து - வாயைத்திறந்து. கமை அறு கராங்கள் - பொறுமை யில்லாத முதலைகள். கடியும் - கொல்லும். கடும்பொறி - கொடுமையான இயந்திரங்கள். இவையோ புறக்கடல், இவையோ நேமி.

குலமுனி யுடம்பு மேனிமே லேற்றிக்
கொண்டமா தேவனிற் சிறந்து
பலபொறி யுடம்பு மேனிமே லேற்றிப்
பதிதரு மசைவற நொச்சி
அலகிலப் பொறிக ளுடைநிழல் கிடங்கி
னமைந்தநன் னீரிடைத் தோன்றல்
இலகுறத் தானு மன்னவா றியைய
வேற்றிநன் கமர்திறங் காட்டும். 84

கு - ரை: குலமுனி - சிறந்த புண்டரீகமுனிவர். மேனிமேல் ஏற்றிக் கொண்ட மாதேவன் - காயாரோகணர். மாதேவனில்: இல் ஐந்தனுருபு எல்லைப்பொருளில் வந்தது. பலபொறி - பல இயந்திரங்கள். நொச்சி அசைவறப் பதிதரும்: நொச்சி - மதில். பொறிகளின் நிழல் அகழி நீரிலே தோன்றுதல். இலகுற - விளங்க. தானும் - கிடங்காகியதானும்: அன்னவாறு - பலபொறி உடம்பையும். இயைய ஏற்றி - தன்னுடம்பிலே பொருந்த ஏற்றிக்கொண்டு.

படுகடற் கிடங்கு பக்கமே வினுமப்
பயனக ருட்புகா தென்றும்
அடுதிறல் படைத்து மேலெழி னகழி
யடங்கவாய்ப் பெய்துதேக் கெறியும்
விடுதன்மற் றிலையென் றினத்தொடு மெழுந்து
மேவினு மிக்குயர்ந் தோங்கு
கொடுமதி லரையி னலைவதல் லாது
குலமுடி யெட்டுதற் காமோ. 85

கு - ரை : படு கடற் கிடங்கு - ஆழமுள்ள கடலாகிய அகழி. அப் பயன் - கடல்நீர். மேல் எழின் - கடல்நீர் கொந்தளித்து மேலெழுந்தால். அடங்க வாய்ப் பெய்து - முழுவதும் குடித்து. தேக்கெறியும் - தேக்கிடும். விடுதல் இல்லை என்று. மற்று - வினைமாற்று. இனத்தொடும் - ஏனைக்கடல்களோடும்: உவர்க்கடலையன்றி மற்றை ஆறு கடல்களோடும். எழுந்து மேவினும் - கொந்தளித்துப் பெருகினும். மதில் அரையின் - மதிலின் பாதியளவு. குலமுடி - சிறந்த உச்சி.

திரைக்கட லனைத்து மோருழுந் தளவை
செய்துவாய்ப் பெய்தமா முனிவன்
வரைக்கரு மிந்தக் கிடங்குநீர் வாரி
வாரிவாய்ப் பெய்யினு மொழியா(து)
உரைக்கரு மிதனுள் விருத்திரன் போல்வா
ரொளியினு முய்திற மருவார்
நிரைக்கரு முதலை யொன்றுவாய்ப் பெய்து
நிரப்பமற் றுய்தருந் திறனல். 86

கு - ரை : திரைக்கடல் அனைத்தும் - ஏழ்கடல்களையும். வாய்ப்பெய்த- ஆசமனம் செய்த. மாமுனிவன் - சிறந்த அகத்திய முனிவர். வரைக்க அரும் - அளவிடப்படாத. விருத்திரன் - விருத்திராசுரன். உய்திறம் மருவார் - பிழைக்குந்தன்மை அறியார். வாய்ப்பெய்து நிரப்ப - உண்டு வயிற்றை நிறையச்செய்ய. ஆய்தரும் திறன் - ஆராய்ந்து தேடும் தன்மையுடையதாம். மற்று - வினைமாற்றின்கண் வந்தது. நிரை கருமுதலை - கூட்டமாகிய கரிய முதலைகள்; கரு - பெரிய எனினுமாம்.

மறைமுழு மையுமுன் கவர்ந்தசோ மகனிம்
மாக்கிடங் கிடையொளிப் பானேல்
அறைபசுந் துளவத் தாருடை மாயோ
னயிர மீனுரு வெடுத்துக்

குறையற வெங்கு நாடினுங் காண்கை
கூடுமோ கவர்ந்தொளித் திடுவார்
மிறைதபு மரணீ தென்றுளங் கருத
வேலையுண் டாவது முண்டோ. 87

கு - ரை : சோமகன் என்னும் அசுரன் வேதங்களையெல்லாம் கொண்டு கடலில் ஒளித்தான் என்பது வரலாறு. மாயோன் - திருமால். மிறை தபும் அரண் - துன்பத்தைப் போக்கும் பாதுகாவல். வேலை - சமயம், பொழுது; செயல் எனினும்ஆம்.

அண்டமெண் ணில்ல தஞ்சமொன் றின்றி
யந்தரத் துறைதலு முண்டோ
கொண்டவிம் மதிலே யுயர்ந்துதாங் கிடுமக்
கொள்கைசேய் மையிற்புலப் படாது
தண்டலில் கதிர்முற் கோளுநன் ளுைந்
தவாப்புத வுடைப்பெரு வாயில்
விண்டவாய் வழியே சேறலாற் கும்ப
மெய்த்தவன் செயலுமொன் றின்றே. 88

கு - ரை : எண்ணில்ல - எண்ணில்லாதன. தஞ்சம் - பற்றுக்கோடு. ஒன்றும் - சிறிதும். அந்தரத்து - ஆகாயத்திலே. சேய்மையில் - தூரத்தில். தண்டல் இல் - நீங்குதலில்லாத. கதிர் முற்கோளும் - சூரியன் முதலாக வுள்ள ஒன்பது கிரகங்களும். நாளும் - நாண்மீன்களும். தவா புதவு - நீங்காத கதவு. விண்டவாய் - திறந்த வாயில். கும்பமெய்த்தவன் - அகத்திய முனிவர்.

அடுகளி றடையி னரிப்பொறி மாய்க்கு
மலங்குளைப் புரவிக ளடையிற்
கொடுமுரண் படைத்த புலிப்பொறி மாய்க்குங்
கொற்றமார் சயந்தன மடையில்
விடுதலில் காலாட் பொறிக்குல மாய்க்கும்
வெய்யகா லாட்படை யடையிற்
சுடுதல்செய் யெல்லாப் பொறிகளு மாய்க்குந்
தொக்கெனிற் பகையிலை யென்றும். 89

கு - ரை : அரிப்பொறி - சிங்கத்தின் வடிவாகவுள்ள இயந்திரம். உளை - பிடரிமயிர். புரவி - குதிரை. கொடுமுரண் - மிக்க மாறுபாடு. சயந் தனம் - தேர்ப்படை. தொக்க என்னில்.

பகைவரைப் பாவை மாரெனத் தெரிப்பப்
பந்தொடு பாவைக டுங்கித்
தகைசிறி தறியா வாயில்சா ரூஞ்சிற்
றடப்பெரு நொச்சியுங் கமல
முகைமலர் வெளியுட் கராங்கொடு நயமே
மொழிந்துவஞ் சிப்பவர் போலும்
அகைபுரி கிடங்குஞ் சொற்றனம் வனப்பி
னமர்பரத் தையர்தெருப் புகல்வாம். 90

கு.ரை: பாவைமார் - பெண்கள்: "பகைவரை மகளிராக்கி அவர் கொண்டு விளையாடுதற்குத் தூக்கப்பட்டன, பந்தொடு பாவைகள் என்பது". "வரிப்புனை பந்தொடு பாவை தூங்க" (முருகு - 68). "நூலால் வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மையின் தூங்கியேவிடும்படி". என்பது நச்சினார்க்கினியருரை. மதிலினுள்ளே புகும் பகையரசன் முதல் வாயிலிலுள்ள பந்தையும் பாவையையும் புட்டிலையும் அறுத்துப் பின்பு அத னடுத்த வாயிலிலுள்ள பகழியையும் எடுத்துக்கொண்டு கொல்லும்படி வைத் துள்ள எந்திரத்துக்குத் தப்பி உள்ளே போதல்வேண்டும் என்பர். இதனை, "பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலும் பலவுஞ்சென் றெறிகிற்கும், முந்தை மாதரை யியற்றுபு பின்றைமொய்ப் பகழிவாயி லிற்றூக்கி" (தணிகைப்புரா - சீபரிபூரண - 58). கமலமுகை மலர் - தாமரை மொட்டுகளும் மலர்களும். வெளி - வெளியே தோன்றும்படிகொண்டு. உள் கராம் கொடு - நீரினுள்ளே முதலைகளைக்கொண்டு. நயமே மொழிந்து - மனத்தினுள்ளே வஞ்சனையுள வாகவும் நயமான சொற்களைச் சொல்லி. அகை புரி கிடங்கு - தடுத்தலைச் செய்யும் அகழி. அகை - வருத்தமெனினுமாம்.

குழைபடு கருமை யெழுத்துமற் றதுதேர்
கொள்கைய ரவாவுறப் புகலும்
கழைபடு சொல்லுஞ் சொல்லவாய்க் கேட்டோர்
கனிந்துத வுறுபெரும் பொருளும்
இழைபடு பட்டு முதலிய யாப்பு
மியைதரு மற்றைய வணியும்
தழைபடு திறங்கொண் மடந்தையர் சேரி
தக்கவர் காப்பியம் பொருமால். 91

கு - ரை: குழைபடு கருமை எழுத்து - குழைத்த கரிய மைப்பூச்சு: என்றது கண்ணிலே மையெழுதுதலை. அது - மைபூசிய விழி. தேர் கொள் கையர் - குறிப்பறிவோர். அவாவுற - விரும்ப. கழைபடு சொல் - கருப்பஞ் சாற்றினையொத்த சொல்: வெல்லக்கட்டி எனினுமாம். பெரும்பொருள் - மிக்க செல்வம். யாப்பும் - நெசவுகளும். மற்றைய அணியும் - ஏனை அணி கலங்களும். மடந்தையர் சேரி - பரத்தையர் வீதி. காப்பியம் பொரும் -

காவியத்தையொக்கும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணமும் பொருந்தும் காப்பியம் பொரும் என்றது நயம்.

பாடலின் முழக்கும் யாழ்கரங் கொண்டு
பற்பல கருவியுந் தழுவி
ஆடலின் முழக்கு மன்புறு கிழமை
யந்நலார் போலவா டவரோ(டு)
ஊடலின் முழக்கு முணர்த்திய பின்ன
ருறுசுவை நலநனி யோங்கக்
கூடலின் முழக்கு மிராப்பக லருவாய்க்
குலவுவ மாளிகை தோறும். 92

கு - ரை : பாடல்களின் முழக்கம், யாழ்க்கருவியுடனே மற்றத்துணைக் கருவிகளும் ஒலிக்க ஆடலின் முழக்கம், மகளிர் ஆடவருடன் ஊடுதலால் ஆகிய முழக்கம், கூடுதல் முழக்கமாகிய இவைகள் மாளிகைதோறும் இராப் பகல் நீங்காதனவாய் விளங்குவன. அன்புறுகிழமை அந்நலார் - அன் புரிமையுடைய மகளிர். உணர்த்திய பின்னர் - ஊடலை நீக்கியபின்பு.

ஆடவர் பல்லோர் தமதென நென்ன
லளவனு பவித்தமை யுணர்ந்தும்
தேடரும் பொருளிற் பரத்தையர் போகந்
தெவ்வுவர் பொருள்வலி மைந்தர்
பாடமை சிறப்பின் விளைநிலம் பொழிபாற்
பசுமணிக் கலம்பொன்செய் கலமுற்
பீடமை பலவு ளிதுவுமொன் றென்றே
பெட்டுளத் தமைத்தனர் போலும். 93

கு - ரை : தமது என - தமக்குரிய பொருளென்று. நென்னல் அளவு - நேற்றைத்தினம் அனுபவித்தஅளவே; அளவு-பொருளளவாக எனினுமாம். தேடரும் பொருளில் - ஈட்டுதற்கரிய பொருளைக்கொண்டு; பொருளில் - பொருளினல்: உருபு மயக்கம். தேடரும் பொருளிற்போகம் தெவ்வுவர். பொருளைப்போலப் போகத்தையும் நிறைப்பார்கள்; தெவ்வுதல் - நிறைத்தல்- வாரிக்கொள்ளுதல். பொருள்வலிமைந்தர்-பொருள்மிக்க ஆடவர். "பொருள் கொண் டெள்ளுக் கெண்ணெய்போ லளந்து காட்டிப், பழிபடு போகம் விற்பார்'' ஆகலின், விளைநிலம், பாற்பசு, மணிக்கலம், பொற்கலம் முதலாக வுள்ள. பலவுள் - பலவற்றுள்ளே. இதுவும் - இப்பரத்தையர் போகமும்.

இட்டமிக் கமைந்த மனைக்கிழத் தியரே
யேற்றமென் றொருவர்சொற் றிடுகால்
தொட்டவர் தாமே தொடப்பொலி யனையர்
துவன்றுமட் பாத்திரம் போல்வார்

பட்டபல் லோருந் தொடப்பொலி செம்பொற்
பாத்திரம் போலுவ ரென்று
கட்டமின் மைந்த ருரைப்பரே லினைய
கணிகையர் தவஞ்சிறி தன்றே. 94

கு - ரை: இட்டம்மிக்க - அன்புமிக்க. ஏற்றம் - உயர்வு. அனையர் - மனைக்கிழத்தியர். மட்பாத்திரம் தொட்டவர்களே தொடுதல் நியமமாம்; மனைவியரும் அத்தகையவர். செம்பொற் பாத்திரம்போல யாவரும்தொட்டு அனுபவித்தற்குரியார் பரத்தையரே. கணிகையர் - விலைமாதர்.

இல்லறக் குரிய ரவயவக் குறைவொன்
றில்லராய் வனப்புமிக் கவராய்
நல்லற வின்ப மூட்டுவ ரெனினு
நலஞ்செய்கைப் பொருளெலாம் பறித்துச்
சொல்லற மாய விதனினுஞ் சிறந்த
துறவற வின்பமு மூட்டார்
மல்லற விரைந்து மற்றது மூட்ட
வல்லவர் பரத்தைய ரன்றே. 95

கு - ரை: மனைவியர் உறுப்புக்குறை யொன்றின்றி அழகுமிக்கவராய் அறநெறியிலே இன்பத்தைச் செய்வர். ஆயினும் நன்மையைச் செய்யும் கைப்பொருள் எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு சிறந்த துறவற இன்பத்தைக் கொடார். பொருள் முதலிய எல்லாவற்றையும் விரைந்து பறித்துக் கொண்டு பரத்தையர் துறவறத்தையும் கொடுப்பர். ஆகலின் அவரே சிறந்தவர் என்றபடி. ''இன்பசுக முதலூட்டி எப்பொருளு முறக்கவரும், வன்பமையும் குணம் பொதுநீர் மங்கையருக்கியல்பா''மென்பர் குடந்தைப் புராணத்தில் இவ்வாசிரியர். பேரூர்ப்புராணம் சுமதி கதிபெறு படலத்தால் நன்கறியலாம். 'கைப்பொருளெலாம் பறித்துச்.சொல் அறம் மாய விரைந்து துறவற இன்பமும் ஊட்டவல்லவர் பரத்தையர்' என்ற நயம் கருதத்தக்கது.

ஒருமுனி யெச்சி லெனக்கருங் கடலை
யோங்கிய வானவாறி யங்கும்
பெருமுகி லெச்சி லெனப்பொழி புனலைப்
பெருஞ்சிறைக் கலுழன்மே லிவர்ந்து
வருபவ னெச்சி லெனநிலத் தினையி
வாயெச்சி லெனச்செழுந் தேனை
அருவருத் தொழித்தா ரெவர்கணி கையர்வா
யெச்சிலு மன்னதே யன்றே. 96

கு - ரை : ஒரு முனி எச்சில் - அகத்திய முனிவருடைய எச்சில். வான ஆறு - ஆகாயவழியில். முகில் - மேகம். கலுழன் - கருடன். இவர்ந்து வருபவன் - திருமால். நிலம் திருமால் எச்சில் என்றது பிரளயகாலத்தில் உலகம் அழியாதபடி தமது உதரத்தில் அடக்கி அறிதுயிலமர்ந்திருந்து பின்பு வெளிப்படுத்திய காரணத்தால் என்க. தேன் வண்டுகளின் எச்சிலாவது கொண்டு சேகரித்தலை நோக்கி, கடலையும், மழைநீரையும், நிலத்தையும், தேனையும் எச்சிலென்று இகழ்ந்து தள்ளினுர் எவரே? அவைபோல, பரத்தையர் வாயூறலும் அருவருத்து ஒதுக்கத்தக்கதன்று என்ருர்.

கவர்மனம் படைத்த கணிகையர் முறையில்
கலப்புவந் தெய்தினுங் கவலார்
தவவனப் பமைந்த திலோத்தமை மலரோன்
றனைப்புணர்ந் ததுமனங் குறிப்பார்
உவமையில் கொழுநர் கழிதரு காலு
முற்றமங் கலங்கழி யாமை
அவமற விருப்ப ரவரலாற் றுக்க
மகன்றவ் ருலகின்மற் றெவரே. 97

கு - ரை : கவர் மனம் - பிளவுபட்ட மனம்: 'இருமனப்பெண்டு' என்ருர் பிறரும். இருமனமாவது: ஒருவனேடு புணர்தலும் புணராமையும் ஒருகாலத்தேயுடைய மனம். கணிகையர் - பரத்தையர். முறையில் கலப்பு - முறைமையில்லாத புணர்ச்சி; என்றது 'தந்தையே யாகநற் றமைய ஞகநன், மைந்தனே யாக' என்றபடி. "அப்பன் வருவான் அதன்பின் மகன்வருவான், தப்புமுறை யென்றுதள் ளாதே'' (விறலிவிடுதூது): என்பது. கவலார் - கவலைப்படார். தவவனப்பு - மிக்க அழகு. கொழுநர் - கணவர்; கொழு கொம்பாகப்பற்றிப் படர்தற்குரியார். கழிதரல் - இறத்தல். அவர் - அப் பரத்தையர். துக்கம் அகன்றவர் - துன்பமில்லாதவர்.

மேவிய மைந்தர் மிகுபொரு ளளித்தும்
வேண்டுகுற் றேவல்கள் செய்தும்
ஓவிய வினுயுங் கணிகையர் பாங்க
ருழலுவ ரிராப்பக லென்னின்
மாவியப் பென்று புகல்வதெ னவரை
மாதேவ னெனக்குறித் திருப்பார்
தாவிய வதான்று விளங்கிய ஞாஞ
சாரிய ரெனக்குறித் திருப்பார். 98

கு - ரை : மேவியமைந்தர் - தம்பால் வந்துபொருந்திய ஆடவர். உழலுவர் - சுழல்வர். புகல்வது என். மாதேவன் - மகாதேவர். அதான்று - அதுவல்லாமல். ஞாஞசாரியன் - ஞானகுரு. குறித்தல் - எண்ணுதல்.

பொருந்துபற் குறியொண் ணகக்குறி யமையப்
பொலிதரு பாணியாற் றட்டல்
திருந்துமின் னமுது துய்த்திடல் களிப்புச்
செறிதரும் படியவா யணைத்தல்
வருந்துத றவிர்க்கு மற்றைய பிறவு
மற்றவர் மாளிகை யோவம்
அருந்தநன் கெவர்க்கு முணர்த்துமே லனையா
ராற்றுத றெரிக்கவேண் டுவதோ. 99

கு - ரை: பற்குறி, நகக்குறி, பாணியாற்றட்டல், அதரபானம் பண்ணல், அணைத்தல் முதலியன கலவிக்காலத்து ஆடவர்கள் செய்யும் கரணங்கள் என்பர். ஓவியம்: ''பற்குறி நகக்குறிகள் பாணிகொடு தட்டல், நற்கமிழ்து துய்த்தல்களி நன்றெழ அணைத்தல், அற்குகர ணங்களறி யாருமெளி தாகக், கற்கும்வகை நின்றன கதிர்த்தமணி யோவம்'' என்ற இச்செய்யுளில் கரணங்கள் கூறப்பட்டமை காண்க. ஓவம் - ஓவியம். அவாய் - விரும்பி. அவர் மாளிகையில் சித்திரிக்கப்பட்ட சித்திரங்களே எளிதில் உணர்த்துமென்னில் அவர் உணர்த்துவது ஆராயவேண்டுவ தின்று என்க.

சிறந்தவா ணிபத்தி னுண்மதி யமைந்த
செல்வரு மிகுவியப் பெய்த
உறந்தவான் பொருளோ ரரைப்பண முதல்கொண்
டொருகவ லேனுமில் லாது
நிறந்தவா ணிபஞ்செய் தீட்டுறு மடவார்
நெடுந்தெரு வளம்புகல் பவரார்
அறந்தவா தொழுகுஞ் சீர்த்திவே ளாள
ராதியர் தெருவளம் பகர்வாம். 100

கு - ரை: வாணிபத்தில் நுண்மதி - வாணிகஞ்செய்தலில் கூரிய புத்தி. அரைப்பணம் முதல் கொண்டு - 'அரைப்பணத்தை முதலாக வைத்துக்கொண்டு. அரைப்பணம் - அரையாகிய பணம்: சிலேடை. பணம் - பாம்பின்படம். ஒரு கவலேனும் - சிறு கவலையேனும். ''விற்றிடு மல்குல் தன்னை மீளவுந் தமதே யாக்கி, மற்றைய நாளும் விற்கும் வரைவிலார்'' ஆகலின், அப்பரத்தையர் அரைப்பணத்தைக்கொண்டே வாணிபஞ்செய்து பொருள் தொகுப்பார் என்றபடி. அறம் தவாது - தருமம் நீங்காமல். சீர்த்தி - மிகுபுகழ்.

கோலமா ரொழுக்க மாதிவாய் கங்கா
குலத்தரென் றுரைப்பதற் கியையச்
சீலமா ரொழுக்கஞ் செம்மைசால் புனிதந்
திகழ்சிவ சம்பந்தந் தண்மை

ஞாலமார் தருபுண் ணியமுதற் பலவு
நன்னலத் தியற்கையே யமைவுற்
றேலமா ரைம்பான் மனைமகா ரோடு
மியைந்துவாழ்ந் திருப்பர்வே ளாளர். 101

கு - ரை : ஒழுக்கம் ஆதி வாய் - ஒழுக்கம் முதலியன இயல்பாகப் பொருந்தின. கங்கா குலத்தவர் - கங்கையின் புத்திரர் என்றபடி. வேளாள ரைக் கங்காகுலத்தவர் என்றல் மரபு. கங்கை நீர் இடையறுது ஒழுகுதலும், செவ்விய தூய்மையுடைமையும், சிவசம்பந்தமுடைமையும், குளிர்ச்சியும், உலகத்தில் நிறைந்த புண்ணியமுடைமையும் இயல்பாகவே அமைந்து விளங்குதல்போல வேளாளரும் இயல்பாக அத்தன்மையுடையார் எனக் குறித்தபடி. "வான்யா றன்ன தூய்மையும் வான்யாறு, நிலம் படர்ந்தன்ன நலம்படர் ஒழுக்கமும்" என ஆத்திரையன் பேராசிரியன் கூறிய பொதுப் பாயிரத்தின் பகுதியை இது நினைப்பிப்பது காண்க. ஏலம் - வாசனைப் பொருள், மயிர்ச்சாந்து எனினுமாம். புனிதம் - பரிசுத்தம்.

இறைவழி நிற்ற லழிநரைத் தாங்க
லினிதெனுங் கைக்கட னுற்றன்
முறைமனங் கசித லொக்கனன் கோம்பன்
முயற்சிமற் றிடையரு துளுற்றல்
மிறையின்மன் னிறைமை நல்கலொற் றுமையே
மேவுதல் வருவிருந் தோம்பல்
அறைதிருந் தொழுக்க மாயவிப் பத்து
மனையவே ளாளரை யகலா. 102

கு - ரை : இறைவழி நிற்றல் - அரசன் ஆணைவழிநடத்தல். அழிநர் - துன்புறுவோர். கைக்கடன் ஆற்றல் - உறுதியின்றி நம்பிக்கைக்குக் கொடுத் தல். மனங்கசிதல் - பிறர் துன்பங்கண்டு மனமிளகல். ஒக்கல் - சுற்றம். ஓம்பல் - பாதுகாத்தல். முயற்சி - ஊக்கம். உஞற்றல் - செய்தல். மிறை - வருத்தம், அச்சம். மன் இறைமை - அரசருக்குத்தரும் வரி. திருந்து ஒழுக்கம் - திருந்திய நல்லொழுக்கம்.

துறவின ரடையி னெதிர்கொளல் பணித
றூயவா சனத்தினி திருத்தல்
அறமலி தாள்க ழுவலருச் சித்த
லமைதர நறும்புகை கொடுத்தல்
நிறமலி தீபங் காட்டுதல் புகழ்தல்
நிறைந்தவின் சுவையமு தேந்தல்
பெறலரு மிவ்வொன் பஃதறத் தாலும்
பிறங்குவார் பெருகுவே ளாளர். 103

கு - ரை : துறவற நெறியுள்ள பெரியோர் வருவாராயின் அவரை எதிர்சென்று அழைத்துவரல், வணங்குதல், ஆசனத்தில் எழுந்தருளப் பண்ணல், திருவடிகளை நீரால் கழுவல், மலர்களால் அருச்சித்தல், தூபம், தீபம் காட்டுதல், புகழ்ந்துரைத்தல், அமுதருத்துதல் ஆகிய இவ்வொன்பது உபசாரங்களையும் முறையே வேளாளர் செய்து விளங்குவார். இதனை, "நாரதனுந் தோன்றல் தோன்றப், பைம்பொன்மலர் தூயெதிர்போய்ப் பணிந்திறைஞ்சி யென்செய்தான் பாண்டு மைந்தன்", "ஏற்றினுன் ஆசனத்தில் தனித்தனியே உபசாரம் யாவுந்தந்து, மாற்றினுன் வழியிளைப்பு மலரயன்போ லிருந்தோனை மகிழ்ச்சி கூர்ந்து, போற்றினுன் நீவர யான் புரிதவம்யா தெனப்புகழ்ந்தான்" (வில்லி - சபா - இராய 9, 10). என்று கூறியமை காண்க. உபசாரங்களாவன: தவிசு அளித்தல், கையில் நீர் தரல், கால்கழுவ நீர்தரல், முக்குடி நீர்தரல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரிநூல்தரல், தேய்வைபூசல், மலர் சாத்தல், மஞ்சளரிசி தூவல், நறும்புகை காட்டல், விளக்கிடல், கருப்பூரம் ஏற்றல், அமுதமேந்தல், அடைக்காய் தரல், மந்திரமலரால் அருச்சித்தல் எனப் பதினறு உபசாரங்கள் கூறுவர். துறவியாதலின் இங்கே ஒன்பதினைக் கூறினர்.

முன்பாடலில் இறைவழி நிற்றல் முதலிய பத்து ஒழுக்கங்களும், இப்பாடலில் துறவினர்பால் அவர் செலுத்தும் ஒன்பது அறங்களும் கூறப்பட்டன.

மேயநீ ராடிப் பூசனை புரிய வேண்டுப கரணமு நல்கிப்
பாயபல் சுவையோ டடிசிலும் படைத்துப் பகர்பெரு முகமனே டூட்டித்
தூயசந் தாதி யளித்துற வினவிச் சொல்லுணர்ந் துளக்குறை யறுத்து
நேயமோ டணைவா ருவப்புறப் புரியு நீர்மைய ரவரலா ரெவரே. 104

கு - ரை : அன்புடனே தம்மிடத்து வரும் அன்பர்களுக்குச் செய்யும் உபசாரம் கூறப்படும்.

உபகரணம் - பூசனைப் பண்டங்கள்; துணைக்கருவிகள். அடிசில் - உண்டி; அன்னம். பெருமுகமன் - மிக்க உபசாரம். ஊட்டி - உண்பித்து. சந்து ஆதி - சந்தனம், தாம்பூலம், முகவாசப் பொருள்கள். உற வினவி - அவர்கள் வந்த காரியத்தை நன்ருக விசாரித்து. சொல் உணர்ந்து - அவர்கட்கு வேண்டிய காரியங்களை அவர்கள் சொல்லால் அறிந்து. உளக்குறை அறுத்து - தம்மால் இயன்றவரை அவர் மனத்திலுள்ள குறைகளைப்போக்கி. நேயம் - அன்பு. நீர்மையர் - தன்மையையுடையார். அவர் அலால் - அவ்வேளாளர் குலத்தவரே அல்லாமல். வேளாண்மை - உபகாரம்.

மூவகை யுறுப்புந் தாங்குதாட் டோன்றி
மூவகை யோரையுந் தாங்கி
ஓவ்வரும் பூமிக் குரியரா யென்று
முழுதொழிற் செல்வமிக் கமைந்தார்

மேவருங் கல்வி கேள்விமிக் குடையார்
வியத்தகு கொடைத்தொழில் வாய்ந்தார்
தாவரும் புகழாற் பெரியவே ளாளர்
தங்குமா ளிகைத்தெருப் பலவால். 105

கு - ரை : மூவகை உறுப்பும் தாங்குதாள் தோன்றி - முகம், தோள், துடை முதலிய மூன்றுறுப்புக்களையும் தாங்குகின்ற பாதத்திலே பிறந்து. பிரமதேவருடைய முகத்தில் அந்தணரும், தோளிலே அரசரும், துடையிலே வணிகரும், பாதத்திலே வேளாளரும் தோன்றினர் எனக் கூறும் மரபினை ஓட்டிக்கூறினர். (அம்பர்ப்புராணம் - நகரப்பட - 83). எனவே, அந்தணர் வேதம் முதலிய ஓதல், அரசர் தோள்வலியால் ஏனை மூவரையும் பாது காத்தல், வணிகர் வாணிகத்தால் பண்டங்களை விலைக்குப் பெறுவதும் விற்பதும் ஓரிடத்துள்ள பொருள்களை வேறு வேறு இடங்கட்குக் கொண்டு போய்ப் பண்ட மாற்றுதலுமாக ஏனையோருக்கு உபகரித்தல், வேளாளர் உழவுத் தொழிலை நடாத்தி விளையும் பொருள்களை ஏனை மூவகையினருக்கும் கொடுத்து உபகரித்தல் என்பன. வேள் - பூமி. வேளாளர் - பூமியை உழுது பயிரிட்டுப் பிறருக்கும் உபகரிப்போர். காராளர்: கார் - நீர்; நீரைத்தேக்கிப் பயன்படுத்தி உலகை வாழ்விப்போர்: காரணக்குறி. தாள - முயற்சி. "வேளாளர் என்பவர்கள் வள்ளன்மை மிக்கிருக்கும் தாளாளர் ஆக்கூரில் தான்றோன்றி மாடமே" என்னும் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தானும் அறிக. ஓவரும் - நீங்காத. நிலம், செல்வம், கல்வி, கேள்வி, கொடை, புகழ் முதலியவைகளால் வேளாளர் மேம்பட்டுள்ளார் என்க. பெரிய வேளாளர் - பெருமைதங்கிய வேளாளர்.

தேங்குபே ருலகிற் படுபொரு ளனைத்துந்
தேன்கவ ரீக்கண மென்ன
வாங்குநாள் வாங்கி விடுக்குநாள் விடுத்து
மதிப்பரு மூதியம் பெறுவார்
வீங்குதம் பொருளி னிம்மியி னளவும்
வீண்வழிச் செலமன மிசையார்
தாங்குதம் மொழுக்கந் தவறுரார் மெய்யே
தங்கல மாக்கிய வணிகர். 106

கு - ரை : படு பொருள் - உண்டாகும் பொருள்கள். தேன் கவர் ஈக்கணம் - தேனைத்தேடிப் பூக்கள்தோறும் சென்று சேகரித்துத் தரும் ஈக்களின் கூட்டம். வாங்கும் நாள் - பண்டங்களை எளிதாகப் பெறுங்காலம். விடுக்கும் நாள் - அவைகளை நல்ல விலைக்கு மாறுங்காலம். ஊதியம் - இலாபம். வீங்கு தம் பொருள் - மிக்க தமது பொருள். இம்மி - சிறிய அளவு; மத்தங்காப்புல்லரிசி அளவென்பர். தம் ஒழுக்கம் - கொள்வது மிகையும் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்பநாடிச் செய்தல். "வாணிகஞ்

செய்வார்க்கு வாணிகம் பேணிப், பிறவுந் தமபோற் செயின்'' (குறள்) "கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாது, பல் பண்டம் பகர்ந்து விசும்'' (பட்டினப்பாலை - 210 - 1). ''வணிகர்க்கு உரிய விரதமாவன: கொள்வதூஉம் மிகைகொள்ளாது கொடுப்பதூஉங் குறை கொடாது பல்பண்டம் பகர்ந்திதல் முதலியன'' (தொல்-அகத்திணை - சூ 28, நச் - உரை); "கொடுப்பது குறையின்றிக் கொள்வது மிகையின்றி ... ... வணிகர்கண் மற்றறியார்'' (விநாயகபுராணம் - நகரப் - 88), வணிகர் குலத்திற் குன்றுமைக்குப் பட்டினப்பாலை - 206 - 10 காண்க.

இதனுல் வாணிகத்தினுடைய இலக்கணமும், நடுவு நிலைமையும் கூறப்பட்டன.

படுபொருள் என்றது: கடல்படு திரவியம்: உப்பு, முத்து, பவளம், சங்கு, ஓக்கோலை. மருதநிலம் படுதிரவியம்: செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர். முல்லை நிலம்படுதிரவியம்: தேனடை, தேன், அரக்கு, மயிற்பீலி, நாவி. மலைபடுதிரவியம்: மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், இலவங்கம் முதலியன.

தனியமை யாற்றன் முனிவறக் கடிதல்
சார்தர விடனறிந் தொழுகல்
கனிதர நாளும் பொழுதொடு புணர்தல்
கவினுற வுறுவது தெரிதல்
நனியமை தொழிலி னிறுவதஞ் சாமை
நலமுற வீட்டுதல் பகுத்தல்
புனிதவிவ் விருநாற் குணங்களும் பொருந்திப்
பொற்புற வொழுகுவார் வணிகர். 107

கு - ரை : வணிகர்களுக்குரிய எண்குணங்கள் கூறப்படும். தனிமை யில் பொருந்தும்வன்மை, கோபமில்லாமல் கண்டித்தல், இடனறிந்து நடத்தல், காலமறிந்து நடத்தல், மேல் நடக்கக்கடவன ஊகித்தறிதல், நன்கு நடைபெறும் வாணிகத்தில் நட்டமுண்டாதற்கு அஞ்சாதிருத்தல், நன்மை யாகப் பொருள் தொகுத்தலும், பிரித்தலும் ஆகிய இவை. முனிவு அற - கோபமின்றி. கடிதல் - நீக்குதலுமாம். தெரிதல் - ஆராய்ந்தறிதல்.

மறைபிற ருரைக்கின் வெதிரரா யயலார்
மனைவியர் வனப்புநோக் குதலின்
முறைதப வருதீங் கஞ்சுபு பார்வை
முழுமையு மில்லராய் மடமை
நிறையிழி கயவர் புகல்புறங் கூற்றி
னிகழ்தரு மூமரா யிருத்தல்
பொறையவர் தொழிலென் றறிஞர்சொற் றதுமிப்
புண்ணியர் பாலுணர்ந் தன்றே. 108

கு - ரை : மறை - இரகசியம். வெதிரர் - செவிடர். அஞ்சுபு - அஞ்சி. மடமை - அறியாமை. நிறை - மனத்தை ஒருவழிப்பட நிறுத்துதல். புறங் கூற்று - புறம்பழித்தல். பொறை - பொறுத்திருத்தல்.

மருடபு கல்வி கற்றிடு போதே
வாணிகக் கல்வியுங் கற்பார்
அருடரு பொருண்மிக் கீட்டிடு போதே
யறப்பெரும் பொருளுமீட் டிடுவார்
தெருளுறப் பகுத்துக் கொடுத்திடு போதே
திருந்துமூ தியத்தொடுங் கொடுப்பார்
பொருண்மிகு வணிகர் செய்கையிற் றென்னிற்
புரைபவ ரியாவரெத் தலத்தும். 109

கு - ரை: மருள்தபு - அறியாமை நீங்கற்குரிய. நிறப்பெரும்பொருள் - தருமமாகிய மிக்க பொருள். பகுத்துக்கொடுத்தல் - பிரித்துத்தரல். ஊதியத் தொடும் - இலாபத்தோடும். இற்று - இத்தன்மைத்து. புரைபவர் - ஒப்பா வார். எத்தலத்தும் - எவ்விடத்தும்.

வடதிசைக் கோமான் செல்வமுஞ் சமழ்ப்ப
வானவிர் கோளெலாஞ் சமழ்க்கும்
தடமணி வகையும் பொன்னிர சிதமுற்
சகலபற் பலபொருள் வகையும்
இடமறப் படைத்தும் பரசிவ தரும
மெற்றைக்கு முயர்தர வுயர்த்தும்
கடனுடை வணிகர் செறிந்துவாழ் மாடக்
காமரு வீதியும் பலவால். 110

கு - ரை : வடதிசைக்கோமான் - குபேரன். சமழ்ப்ப - நாண. வான் அவிர் கோள் - ஆகாயத்தில் விளங்கும் கிரகங்கள். மணிவகை - இரத்தின வகை. இரசிதம் - வெள்ளி. முன் - முதலாகவுள்ள. இடமற - வெறுமை யிடமில்லாமல். கடன் - கடமை. காமரு வீதி - அழகிய தெருக்கள்.

இழிதரு பொருளேற் றுயர்தரு பொருளே
யீகுவ திறையவன் றன்மை
மொழிதரு மவன்பேர் பூண்டமைக் கேற்ப
முதுகடும் பகையின ராண்ட
கழிதரு மிழிமண் முழுமையு மேற்றுக்
கடுஞ்சமர் புரிந்தமற் றவர்க்குப்
பொழிதரு வளஞ்சா லுயர்பெருஞ் சுவர்க்கம்
புகுத்திவாழ் திறத்தின ரரசர். 111

கு - ரை: இறையவன் - கடவுள். இழிதருபொருள் ஏற்றல் - தோல் எலும்புகள் அணிதல், சாம்பரைப்பூசுதல், இடுகாட்டிலிருத்தல், நஞ்சையுண்ணுதல், எருக்குமலர் சூடுதல் என்பன. உயர்பொருளீதல் - தம் அடியார்களுக்கு வைகுந்தம், சத்தியலோகம், அமராவதி முதலிய தரல்; பீதாம்பரம், சிறந்த அணிகலங்கள், ஐராவதயானை, கற்பகம் முதலிய தருக்கள் என்பன. இறைவன் - கடவுள், அரசன். முதுகடும் பகையினர் - பெரும் பகைவர். இழிமண் - இழிந்தமண். கடுஞ்சமர் - பெரும்போர். சுவர்க்கம் - வீர சொர்க்கம். போரில் எதிர்த்திறந்த வீரர் வீரசுவர்க்கம் புகுவர் என்பது வழக்கு.

பரவுமந் திரியர் புரோகிதர் சேனு
பதியர்தூ தாளர்சா ரணரிவ்
விரவுமை வருந்தன் குழுவெனத் தழுவி
வியக்குநட் பாளரந் தணாளர்
பரவுநற் சிறப்பின் மடைத்தொழிற் புலவர்
பகர்மருத் துவக்கலை வல்லோர்
வரவுசொல் புலவ ரைவரு முறுதிச்
சுற்றமா வைத்துவாழ் தருவார். 112

கு - ரை: மந்திரி, புரோகிதர், சேனபதியர், தூதுவர், சாரணர் இவர்கள்; "அமைச்சர் புரோகிதர் சேனபதியார், தவாத்தொழிற் றூதுவர் சாரண ரென்றிவர், பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே" (திவாகரம்). மடைத்தொழில் - சமையற்றொழில். நண்பர், அந்தணர், பாகம் பண்ணுவோன், மருத்துவர், சோதிடர் இவர்கள் அரசருக்குரிய உறுதிச் சுற்றத்தார் ஆவார்.

படுமதக் களிற்று வென்றிதாம் விசயப்
பாடல வென்றிவன் கற்பா
டடுதிறற் புயத்து மல்லினர் வென்றி
யடர்மயிர் வலித்தகர் வென்றி
கடுமுர ணொருமைக் கடாத்தரு வென்றி
காற்படைப் புட்டரு வென்றி
வடுவறு மற்றை வென்றிகள் பலவும்
வாஞ்சையி னடைந்தடைந் துவப்பார். 113

கு - ரை: யானை வென்றி, குதிரை வென்றி, மல்லர் வென்றி, தகர் வென்றி, எருமைக்கடா வென்றி, கோழிவென்றி முதலியவற்றைக் கண்டு அரசர் மகிழ்வர்; இவை பொழுதுபோக்கு. களிறு - ஆண்யானை. பாடலம் - குதிரை. தகர் - ஆட்டுக்கிடா. காற்படைப்புள் - சேவற்கோழி. கோழிக் கொடியைக் காலாயுதக்கொடி என்பர். இச்செய்யுளால் வாகைத்திணைக்

குரிய யானைவென்றி, குதிரைவென்றி, தகர்வென்றி முதலியன கூறப்பட்டன. இனம் பற்றிச் சொல்வென்றி, பாடல்வென்றி, கூத்துவென்றி, சூதுவென்றி முதலியவுங் கொள்க. இவையெல்லாம் "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்னும் சூத்திரத்து, 'பாலறி மரபிற் பொருநர் கண்ணும்' என்னும் வாகைத்திணைத் துறையுள் அடங்கும் என்பர். (தொல் - பொருள் - புறத்தி - 75).

மலையினுஞ் சிறந்த மன்னர்தந் திண்டோள்
மதுப்பொலி தும்பைசூ டிடுதல்
கலைபுகல் கணமற் றுளபொழு தெல்லாங்
கமழ்தரும் வாகைமா லிகையே
அலைதரப் பகைஞ ருடல்துளைத் திடுமு
ளுதித்த னுடறுளை படுமால்
இலைமல ரிவண தொழித்துமற் றவர்தோ
ளேந்துதல் கற்பகத் தனவே. 114

கு - ரை : திண்தோள் - வலியதோள்களில். மது - தேன். தும்பை சூடுதல் - பகைவரோடு போர்செய்தலை நினைந்து தும்பைப்பூவைச் சூடுதல்; "அதிரப், பொருவது தும்பையாம்" என்றது காண்க. வாகை மாலிகை - வாகைப்பூமாலை; 'போர்க்களத்தி லொன்னார், செருவென் றதுவாகை யாம்' என்றதுங்காண்க. வாகைப்பூவைத் தலையிலே சூடிப் பகைவரைக் கொன்று ஆரவாரித்தல். அலைதர-உருள. ஆதித்தன் - சூரியன். சூரியமண்டலத்தைப் பிளந்துகொண்டு ஊடுருவிச்சென்று வீரசுவர்க்கத்தைச் சுத்தவீரர் அடைவர் என்க. "தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு" "வெங்கதிர்ப் பரிதிவட்டத் தூடுபோய்" "இருளகற்று மெறிகதிரோன் மண்டலத்தூ டேற்றி வைத்து" என்னும் பெரியோர் வாக்குகள் சிந்திக்தற்குரியன. "வீரரைத் துறக்க மேறவிட்டிடு மிரவியைப் போல்" (வில்லி-சபா-இராயசூய - 138) இவைகளால் விரசுவர்க்கம் செல்வார் இடையிலுள்ள சூரியமண்டலத்தைப் பிளந்துகொண்டு அதன்வழியாய் மேற்செல்லவேண்டு மென்பது பெறப்பட்டமை காண்க.

"உரிகளை யரவ மானத் தானே, அரிது செல் லுலகிற் சென்றனன்" (புறநானூறு-260 : 20-1). இலை மலர் - இலைவிரவித் தொடுத்த மலர்மாலை. இவணது - இவ்வுலகத்துள்ளது. கற்பகத்தன - கற்பகம் முதலிய தருக்களில் உள்ள மலர்களாலாகிய மாலைகளேயாம்.

இலகட மேற்றி யானையூர் திறனு
மிகற்பரி கடாவிடு திறனும்
பொலமலி திண்டே ருகைத்திடு திறனும்
பொற்பமை சிவிகையூர் திறனும்

நலமலி வெள்ளை யானையா னேக்கி
நறுமுறுப் படைந்துளஞ் சமழ்க்க
வலமலி சிறப்பிற் பொலிந்தினி தோங்கி
மன்னர்வாழ் தெருக்களும் பலவால். 115

கு - ரை : இலகடம் - அம்பாரி; யானைமேற்றவிசு. இகல் பரி - வலிய குதிரைகள். பொலம் - பொன். வெள்ளையானையான் - ஐராவதயானையை யுடைய இந்திரன். நறுமுறுப்படைதல் - பொருமைகொள்ளல். சமழ்க்க - நாண.

அழலொரு வடிவ னென்பது நூலா
லறிகுவ தென்னையென் பார்போல்
அழலொரு விழியாக் கொண்டொரு கரத்தவ்
வழலுற வைத்தவே தியனை
அழனடுக் கண்டு போற்றிடுந் திறத்தா
ரங்கமோ டருமறை யுணர்ந்தார்
அழல்சினங் கடிந்து மாதவம் பெருக்கி
யமருவ ரறுதொழி லாளர். 116

கு - ரை : அழல் ஒரு வடிவன். சிவபிரான் தீ வடிவினர். அழல் - தீ. சிவபிரான் அஷ்டமூர்த்த சொரூபன் ஆகலின் அவர் வடிவினுள் நெருப்பும் ஒன்றும். 'எரிபெருக்குவர் அவ்வெரி ஈசன, துருவருக்கம தாவ துணர்கிலார்' (திருக்குறுந்தொகை). "தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்" (தேவா). அழல் ஒரு விழி - நெற்றிக்கண் அக்கினி. ஒரு கரத்து அழல் - ஒரு கையில் அக்கினி. வேதியன் - தேவருள்ளே தேவதேவராகவுள்ள மகாதேவரே அந்தணராவார். அழல் நடு - யாகாக்கினியின் இதயத்தில். அங்கம் - ஆறு அங்கங்கள். அழல் சினம் - அழலுகின்ற சினம். அறு தொழிலாளர்- அந்தணர்: ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன அவை. "ஓதல் வேட்டல் அவை பிறர்ச் செய்தல், ஈத லேற்றலென் றாறுபுரிந் தொழுகும், அறம்புரி யந்தணர் வழிமொழிந் தொழுகி" (பதிற்றுப் - 24).

அறைதரு பெருமைச் சாதியிற் பார்ப்பா
ரகம்புறஞ் சிவத்தையே பார்ப்பார்
மிறைதப நிதமோ வார்சுசி வளர்ப்பார்
மேன்மைசா லுஞ்சுசி வளர்ப்பார்
முறையறு தொழில்செய் வார்வினைப் பிறவி
முதிர்முறை யறுதொழில் செய்வார்
கறையற மார்பி னிலங்குமுந் நூலார்
கரிசறக் கற்றமுந் நூலார். 117

கு - ரை : பார்ப்பார் - அந்தணர் குலத்தோர்: வேதத்தின் அந்தத்தையே எப்போதும் பார்ப்பார் என்க. அகம் புறம் - அந்தரியாகம், பகிரியாகபூசைகளில். மிறை தப - குற்றம் நீங்க. நிதம் - நித்திய கன்மங்கள்; நியதி எனினுமாம், ஓவார் - நீங்கார். சுசி - தூய்மை. மேன்மை சால் உஞ்சுசி: உஞ்சுசி - உஞ்சுவிருத்தி. அறுதொழில் - ஓதல் முதலியன. வினைப்பிறவி-வினைகளால் உண்டாகிய பிறப்பு. முதிர் முறை அறு தொழில்-மேலும் மேலும் வளர்தல் நீங்குதல் தொழில்: பிறவி யறுப்பார் என்க. கறை - குற்றம். முந்நூல் - பூணூல். கரிசு அற - குற்றம் நீங்க. முந்நூல் - முதல் வழி சார்பு என்பன; "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்னும் (தொல் - பொரு - புறத் - 75) சூத்திரத்து நச்சினார்க்கினியர் உரைப் பகுதியிற் கூறிய தலை இடை கடையெனக் கூறும் ஒத்துக்கள் எனலுமாம்.

விடியலி னெழுந்து செழுமடைப் பள்ளி மேவுறப் புனிதநன் கியற்றிக்
கடிதலி னறுநீர் முழுகுபு புலராக் கலிங்கம்பின் போக்குகோ வணத்தோ
டொடிவற வரையிற் சூழ்ந்துவண் கிரகத் துட்புகூஉ யாவையு மட்டு
நெடிததி தியருக் கூட்டுமா தர்களா னிரம்பின மாளிகை யெல்லாம். 118

கு - ரை : மடைப்பள்ளி - சமையலறை. கடிதல் இல்- நீங்காத. புலராக் கலிங்கம் - உலராத புடவை. ஒடிவு அற - நீங்குதலின்றி. அட்டு - சமைத்து. அதிதியர் - ஒருபகலின் மேற்படாமல் தங்குபவர்; விருந்தினர். "விருந்தே தானும் புதுமை மேற்றே".

தோலொடு தூங்கு நூலினர் முஞ்சி சூழ்ந்தசிற் றரையினர் பலாசக்
கோலொடு பொலியுங் கையினர் குழுமிக் குலமறை யோதொலி ஒருபால்
மாலொடு பிரம னுதிவா னவரை மகத்தவி யேற்றிட மனுவாம்
பாலொடு முழங்கி யழையொலி ஒருபாற் பகர்மறை யவர்தெருத் தோறும்.

கு - ரை : தோலொடு தூங்கும் - கிருஷ்ணாசினம் என்னும் மானின் தோலோடு தொங்குகின்ற. முஞ்சி - முஞ்சிப்புல். பலாசம் - முள்முருக்கு. மகத்துஅவி - யாகத்திலே கொடுக்கும் அவிப்பாகம். மனுவாம் பாலொடு- மந்திரங்களின் பகுதியோடு. முஞ்சி - ஒருவகை நாணற்புல். முஞ்சிப்புல் நாண் அரைஞாணாகக் கொள்ளுதலும்; மான்தோல் கட்டிய உபவீதத்தையும், முள்முருக்கந்தண்டை ஏந்துதலுமாம்.

முறைமக முடித்து வெண்குடை நிழற்ற முகிலினும் பல்லிய முழங்கக்
கறைதபு கவரி யிருபுடை யிரட்டக் காவல ராதியர் சூழ
நிறைபுனல் குடையப் போதுவார் சிறப்பு நிகழ்தரு மதுமுடித் தந்தத்
துறையொரீஇ மீள்வார் சிறப்புமோ வாது சுடர்மறை யவர்தெருப்
[பலவால். 120

கு - ரை : முறை மக முடித்து - விதிப்படி யாகத்தைப் பூர்த்திசெய்து. நிமுற்ற - நிழலைச்செய்ய. பல்லியம் - பலவகை வாத்தியங்கள். கறை தபு - குற்றமற்ற. இரட்ட - மாறிமாறி அசைக்க. நிறைபுனல் குடைதல்; வேள்வி முற்றிய பின்பு செய்யும் ஸ்நானம்: அவபிருத ஸ்நானம் என்பர். ஓரீஇ - நீங்கி. ஓவாது - நீங்காமல்.

பெருமறை யுடனூ கமமுழு துணர்ந்தார்
பிறங்குமா தேவியோர் பாகர்
திருமுக மோரைந் தினுமினி துதித்தார்
திகழுமான் மார்த்தமொண் பரார்த்தம்
இருதிறங் களுநற் பூசனை புரிவா
ரிணையிலாச் சீலமிக் கமைந்தார்
பொருவரு மாதி சைவர்கள் சிறப்பிற்
பொலிந்துவாழ் தெருக்களும் பலவால். 121

கு - ரை : முன் ஐந்து பாடல்களால் அந்தணர்விதிச் சிறப்புக்கூறி மேல் ஆதிசைவர் விதி கூறுகின்றார். சிவவேதியர் வேத சிவாகமங்களை முழுதும் நன்குணர்ந்தவர், சிவபெருமான் திருமுகம் ஐந்தினும் உற்பவித்தவர். ஆன்மார்த்தம் பரார்த்தம் ஆகிய இரண்டுவகையாகவுள்ள சிவபூசைகளையும் நியமமாகச் செய்பவர். ஒப்பற்ற சைவதவவொழுக்க மிக்கவர். இத்தகைய ஆதிசைவர்கள் வாழும் வீதிகளும் பல உள்ளன. பெருமறை - பெருமை பொருந்திய வேதம்.

உமாதேவி ஓர் பாகர்-சதாசிவமூர்த்தி. ஐந்து திருமுகங்கள்: ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பன. சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களினின்றும் தோன்றி அச்சதாசிவ மூர்த்தியால் தீட்சிக்கப்பெற்ற கௌசிகர், காசிபர், பாரத்துவாசர், அத்திரி, கௌதமர் என்னும் பஞ்சரிஷி கோத்திரத்தில் உற்பவித்தவர்கள். தம் உயிருக்கு உறுதிபயப்பதாகிய ஆன்மார்த்த பூசையை நாடோறும் விதிப்படி வழுவாது செய்தபின்பு, இவர்கள் பதார்த்தமாகிய சிவாலயாதிகளில் நித்திய நைமித்திக காமியாதி பூசனைகளும், கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தங்களும் சிவாகம விதிகளை உள்ளபடி அறிந்து செய்தற்குரிய அதிகாரிகள்.

கறைதபு செங்கற் றோயுடை புனைந்தார்
கரகமுந் தண்டுங்கைக் கொண்டார்
மிறையுயி ரொழிய நடப்பவர் புனித
வெள்ளிய நீற்றுத்தூ ளனத்தார்

குறையறு பிச்சை வாழ்க்கைய ரெவருங்
குறித்தடி தொழும்பெருந் தகையார்
மறைமுடிப் பொருளே யன்றிவே றுணரா
மாதவர் மடங்களும் பலவால். 122

கு - ரை: கறை தபு - குற்றம் நீங்கிய. செங்கல் தோய் உடை - கல்லாடை. கரகம் - கமண்டலம். தண்டு - யோகதண்டம். உயிர் மிறை ஒழிய: மிறை - வருத்தம். உத்தூளனத்தார் - நீரிட்டுக்குழையாமல் உடம் பெங்கும் பூசியவர். பிச்சை வாழ்க்கையர் - பிச்சை எடுத்துண்டு வாழும் துறவிகள்: அது மாதுகரிபிச்சையாம்; வண்டுகள் மலர்தோறும் சென்று இடையூறின்றிப் பல பூக்களினும் தேன் எடுத்து வருதல் போன்றது. பெருந்தகை - பெருந்தன்மை. மறைமுடிப்பொருள் - வேதசிரசாகிய உபநிட தங்களிலே பேசப்படும் சிவப்பொருள். மாதவர் - சிறந்த தவசிகள்.

நந்துசெந் தமிழ்ப்பன் னிரண்டுசூத் திரமும்
நவிலுமுப் பொருட்பொது வியலும்
உந்துமற் றியலு முணர்ந்துருக் காட்சி
யொள்ளிய சுத்திவாய்ந் தப்பாற்
சிந்துத லில்லா வுருவமுன் மூன்றுந்
திகழ்தரப் பெற்றிடை யறுது
முந்துமா னந்தத் தழுந்திடுஞ் சைவ
முனிவர்வாழ் மடங்களும் பலவால். 123

கு - ரை: நந்து - ஆக்கம்பெற்ற. செந்தமிழ் நந்துஎன்க. செந் தமிழ்ப் பன்னிரண்டு சூத்திரங்கள் - சிவஞானபோத நூலின் பன்னிரண்டு சூத்திரங்கள்: செந்தமிழ் என்றது ஸ்ரீமெய்கண்டதேவ நாயனுரால் அருளிச் செய்யப்பட்ட பன்னிரண்டு சூத்திரங்கள் என்றபடி. முப்பொருள் - பதி பசு பாசங்கள். முதல் ஆறு சூத்திரங்கள் பொது, பின் ஆறும் உண்மை; பொது இயல்பு சிறப்பியல்புகள். உரு காட்சி சுத்தி - தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி; ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி என்பன. சிந்துதல் இல்லா உருவம் முன் மூன்றும் - சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம் என்னும் மூன்றும். உருவம் முன் - உருவம் முதலாகவுள்ள. ஆனந்தத்து அழுந்தி - சிவபோகத்தில் திளைத்து. சைவமுனிவர் - சைவ சந்நியாசிகள். முனிவர் - மனனசீலர்.

பாசக்ஷயமே ஆன்மாவுக்குச் சுத்தி; சிவதரிசனத்தின் நிகழ்வது ஆன்ம சுத்தி; சிவரூபத்தின் நிகழும் ஆன்மதரிசனத்தின்பின் சிவதரிசனத்தின் ஆன்மசுத்தி நிகழும்.

அமைதர வடைமா ணுக்கர்பக் குவந்தேர்ந் தாய்தரு சமயநல் விசேடம்
சமைநிரு வாண மெனுமொரு மூன்றுட் டகுதியி னுற்றுவ வாற்றிக்
கமைகெழு சரியை முதற்றவ நான்கிற் கரிசறப் பயிறிறஞ் செலுத்தி
உமையொருபாகனுலகமுன் னுங்கி னுறுவிப்பார் மடங்களும் பலவால்.

கு - ரை : பக்குவம் - இருவினையொப்பு, மலபரிபாகம் சத்திநிபாதம் என்பன, சமயம், விசேடம் என்பன முறையே முதலில் செய்யப்படுவன. சமயதீக்கை பெற்றோரே சிவப்பணிக்குரியர்: அது சரியை; விசேடதீக்கை பெற்றோர் கிரியை, யோகம் அநுட்டித்தற் குரியராவர். நிருவாணதீக்கை தீக்கைக்குறை எனப்படும்; அது முத்திக்குரியதீக்கை. சீடர்தகுதிநோக்கியே தீக்கை செய்யப்படும். சரியை முதல் தவம் நான்கு - சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. கரிசு அற - குற்றமற. ஞானம் மோட்சத்திற்குச் சிறந்த சாதனம். தவங்களும் தீக்கையும் ஞானத்தைக் கொடுத்து அந்த ஞானம் வாயிலாக முத்தியைக்கொடுக்கும். உமையொருபாகன் உலகம்முன் நான்கு-சிவசாலோகம், சிவசாமீபம், சிவசாரூபம், சிவசாயுச்சியம் முதலாகவுள்ள நான்கு; முன் - முதலாகவுள்ள.

சொற்றவுத் தேச மிலக்கண மமையுஞ் சோதனை யாயவிம் மூன்றாற்
செற்றபன் னூலு மனுவதித் தெடுத்துத் தெரிதரக் கண்டித்தல் செயவும்
முற்றமற் றவற்றை நிறுத்துதல் செயவு மொழிவலி யடைந்தவ ரெல்லாம்
கற்றவர் பல்லோர் குழாங்குழா மாகிக் கலந்துவா ழிடங்களும் பலவால்.

கு - ரை : சொற்ற - நூல்களிலே சொல்லப்பட்ட உத்தேசம், இலக்கணம், பரீட்சை என்னும் மூன்றனுல். அனுவதித்தல் - முன்னே கூறியதைப் பின்னர் அவ்வாறே மொழிதல்; முன்னர்ப் பெறப்பட்ட தொன்றனை வேறென்று விதித்தற்பொருட்டுப் பின்னரும் எடுத்தோதுதல். உத்தேசம் - பெயர் மாத்திரையானே பொருளை எடுத்துரைத்தல். இலக்கணம் - சிறப்பியல்பு, அடையாளம். பரீட்சை - சோதனை, ஆராய்வு. தெரிதர - விளக்க. பொருந்தாதவற்றைக் கண்டித்தலும், தாங் கூறியவற்றை முறையானே நிறுத்துதலும். தாஅனுட்டித் தனது நிறுத்தல் என்னும் மதம். மொழிவலி அடைந்தவர் - சொல்லிலக்கணம் வல்லார்.

எழுத்ததி கார முதலொரு மூன்றி னியைதரு மிலக்கண மைந்தும்
வழுத்தபத் தெரிந்து கரிசொரு பஃது மாட்டியோர் பஃதெழில் கூட்டி
விழுத்தகும் யுத்தி முப்பதிற் றிரண்டின் மேய்காண் டிகைவிருத் தியினுற்
பழுத்தவன் பினர்க்குத் தெரித்திடுங் குரவர் பண்பின்வா ழிடங்களும்
[பலவால். 126

கு - ரை : எழுத்ததிகாரம் முதல் மூன்று - எழுத்துச் சொல் பொருள் அதிகாரங்கள். இலக்கணம் ஐந்து - எழுத்துச் சொற் பொருள் யாப்பணி என்பன. வழுத்தப - குற்றம் நீங்க. கரிசு ஒரு பஃது - பத்துக் குற்றங்கள்: கரிசு - குற்றம். பஃதுஎழில் - பத்தழகு. முப்பத்திரண்டு உத்திகள்; உத்தி - நூல் பொருந்துமாறு. காண்டிகையுரை, விருத்தியுரை என்பன. பழுத்த அன்பினர் - முதிர்ந்த அன்புடைய மாணவர். குரவர் - வித்தியாகுரு. பண்பின் வாழ்தல்-ஆசிரியர்களுக்குள்ள இலக்கணங்களில் பிறழாதிருத்தல். இவைகளையெல்லாம் நன்னூல் முதலிய இலக்கணங்களால் அறிக.

கவிகளுன் குரைக்குங் கவியரும் பொருளைக்
கவின்றசெம் பொருணடை யாகக்
குவிதரக் காட்டு கமகனே துவுமேற்
கோளுங்காட் டுபுபிறன் கொள்கை
அவிதரத் தனதே நிறுத்திடும் வாதி
யறமுத னுன்குநன் குணரச்
செவிவிரி வாக்கி யிவர்தமிற் கலந்து
திகழ்தரு கழகமும் பலவால். 127

கு - ரை : கவிகள் நான்கு - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். [1]கவி: அரும்பொருளைச் செம்பொருள் நடையாய்க் காட்டிப் பாடுவோன். [2]கமகன். கவின்ற - அழகிய. ஏது - காரணம். மேற்கோள் - ஆசிரியவசனம். காட்டுபு - காட்டி. அவிதர - கெட, அழிய. [3]வாதி - வாதஞ்செய்வோன். [4]வாக்கி: அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பொருளையும் யாரும் விரும்பிக்கேட்குமாறு குற்றமறக் கூறுவோன். மேலே சொல்லிய ஆசு முதலிய நால்வகைக் கவிகளையும் யாவரும் வியக்கும்படி பாடுவோன் வித்தாரகவி; இவர்கள் நால்வகைப் புலவராவர்.

மலர்மகன் முதலோர் பூசனை யாற்ற
மகிழ்சிவக் குறிகளே ரம்பர்
அலர்கடம் பணிவார் வயிரவர் கொற்றி
யாதியர் நறுந்துழாய்ப் படலைப்
பலர்புகழ் முகுந்த ரவருடைக் கூற்றிற்
பண்ணவ ரன்புசெய் தடையும்
நலர்கொள வேட்ட தகுதியி னுதவி
நன்கமர் தளிகளும் பலவால். 128

கு - ரை : மலர்மகன் - பிரமதேவர். சிவக்குறிகள் - சிவலிங்கமூர்த்திகள். ஏரம்பர் - விநாயகர். கொற்றி - துர்க்கை. படலை - தழைவிரவித் தொடுத்த மாலை. முகுந்தர் - விஷ்ணு. அவருடைக் கூற்றிற் பண்ணவர் - திருமால் அவதாரமாகிய இராமர், கிருஷ்ணர், வராகமூர்த்தி முதலிய தேவர்கள். தளி - கோயில். நலர் - நன்மையுடையோர். வேட்ட - விரும்பிய.

நினைதரு செம்பொற் பருப்புங்குய் யோடு
நெய்கமழ் கறிகளுந் தளவ
நனைநிகர் மடையு மபூபமுந் தீம்பா
லலம்பொலி யுணுக்களுந் தயிரும்

வனைதரு பிறவும் வாசனை கடல்சூழ்
மண்ணுல கெங்கணும் வளைப்ப
அனைவரும் விரும்ப வடைந்தவர்க் கூட்ட
லமைந்தசத் திரங்களும் பலவால். 129

கு - ரை : செம்பொன் பருப்பு - பொன்னிறமான பருப்பு. குய் - தாளிதம். தளவ நனை - முல்லையரும்பு. மடை - சோறு. அபூபம் - அப்ப வருக்கம். தீம்பால் - இனிய பசும்பால். உணாக்கள் - உணவுகள். வளைப்ப - சூழ. ஊட்டல் அமைந்த - உண்பித்தலையுடைய.

கதிரெழு முனநீர் தெவ்வுபு புதுமட்
கலத்துற நிறைத்தது வெவ்வே
றுதிர்துடி யிட்டும் வேர்மல ரிட்டு
முப்பிலி குசத்தொடு நறுமோர்
அதிர்தர விட்டு மமைத்தவுங் குளநீ
ரான்றவா மலகமு மற்றும்
முதிர்சுவை யனவும் வருநருக் குதவி
முகிழ்த்தநீர்ப் பந்தரும் பலவால். 130

கு - ரை : கதிர் எழும் முனம் - சூரியோதயத்துக்கு முன்பு. தெவ்வுபு - முகந்து. உதிர்துடி - ஏலப்பொடி. வேர் - இலாமிச்சை வேர். மலர் - பாதிரி முதலிய மலர். இலிகுசம் - நரந்தம்புல். ஆமலகம் - நெல்லிக்காய். வருநர் - வழிப்போக்கர்.

வேறு

புறநகர முதலாகப் புகன்றனசெம் பொற்றகடாம்
நிறமலிபன் மாடமெலா மதிற்பதித்த நெடுமணியாம்
உறநடுவ ணுயர்ந்தமணி யொன்றுபதித் ததுபோலும்
அறமலியும் பெருங்கருணை யண்ணலார் திருக்கோயில். 131

கு - ரை : புறநகரம் முதலியன செம்பொற்றகடு ஆகவும் பல மாளிகைகளும் பொற்றகட்டில் பதித்த பெரிய மாணிக்கக் கற்களாகவும் பொருந்த, நடுவில் நாயகமணி ஒன்று பதித்ததுபோல் சிவபெருமான் திருக்கோயில் விளங்குவதாம். புகன்றன - சொல்லப்பட்டன. பன்மாடம் - பல வகைப்பட்ட மாளிகைகள். நெடுமணி - உயர்ந்த மாணிக்கங்கள். நடுவண் - நடுவிடம். பெருங்கருணை அண்ணலார் - பேரருளையுடைய சிவபெருமான்.

மன்னியபல் வளநாக மாநகரம் வானகமே
மின்னியபன் மாடமெலாம் விளங்குதா ரகைக்கணமே
துன்னியநா யகர்கோயில் சுடர்விடுமொண் மதியமே
பன்னியமற் றதுசூழு நொச்சிபரி வேடமே. 132

குரை: நாகமாநகரம் - நாகபட்டினம். வானகம் - ஆகாயம். தாரகைக்கணம் - விண்மீன்களின் கூட்டம். நாயகர்கோயில் - சிவபெருமானது திருக்கோயில். ஒண்மதியம் - ஒளிபொருந்திய சந்திரன். நொச்சி - மதில். பரிவேடம் - ஊர்கோள்.

தூயபுகழ்ச் சோணாடு சுவேதவட்டத் தீவம்விளர்ப்
பாயமனை நிறைநாகை யான்றபாற் கடல்கோயின்
மாயவன்மார் பந்துளவ மாலைமர கதமதிலே
மேயமணி காரோணர் விடங்கரழ கியவிடங்கர். 133

குரை: சுவேதவட்டத் தீவு சோணாடு; விளர்ப்பு ஆய மனை - வெண்மைநிறமுடைய மாளிகைகள். நாகை பாற்கடல். மாயவன் மார்பம் கோயில்: மாயவன் - திருமால். மரகதமதில் - துளவமாலை. மரகதம் - பச்சை இரத்தினம். மணி - கவுத்துவமணி. காரோணர் - காயாரோகணர். விடங்கர் - திருமாலின் இதயகமலத்தில் எழுந்தருளும் சோமாஸ்கந்தமூர்த்தி. அம்மூர்த்தியே அழகிய விடங்கராவார். டங்கம் - உளி; விடங்கர் - உளியினல் செதுக்கப்படாதவர்: எனவே சுயம்புமூர்த்தி என்றபடி. அழகியவிடங்கர் - சுந்தரவிடங்கர்.

தன்றிருமார் பகத்தமர்சுந் தரவிடங்கப் பெருமானுர்
மின்றிகழத் திருக்கோயின் மேவியமர் வதுதெரிந்து
பொன்றயங்கு மணிமார்பன் போந்துசே வித்தெதிரே
நின்றதென லாமுகிறோய் கோபுரநேர் நின்றிடுதல். 134

குரை: சுந்தரவிடங்கர் நாகைத் திருக்காரோணத்தில் கோயில் கொண்டமையை அறிந்து. பொன்தயங்கு மணிமார்பன்: பொன் - இலக்குமி. மணி - கவுத்துவமணி. மார்பன் - மார்பையுடைய திருமால். முகில்தோய் கோபுரம் - மேகங்கள் தவழப்பெற்ற கோபுரம்.

தன்மார்பத் தமர்ந்தவரைத் தரிசிப்பான் குறித்தடைந்த
பொன்மார்பன் றுயில்விருப்பம் பூண்டாலும் பூணுமென்று
பன்மாட நாகையின்பாற் பாற்கடலு மடைந்ததெனச்
சொன்மாறி றளிக்கொருபாற் றுலங்குமொரு பெருந்தீர்த்தம். 135

குரை: தன்மார்பத்து அமர்ந்தவர் - சுந்தரவிடங்கர். குறித்து - கருதி. பொன்மார்பன் - திருமால். நாகையின்பால் - நாகையினிடத்து; பால்: ஏழாம்வேற்றுமை. தளிக்கு ஒருபால் - கோயிலின் ஒரு பக்கத்தில். தீர்த்தம் துலங்கும் என்க.

செம்மணியெண் ணிறந்தபல செறியக்கால் யாத்தொளியே
தும்மவமை சூழ்நொச்சி சூரியமண் டலமேயாம்
அம்மவத னுலன்றே வமரரா தியர்க்கிடர்செய்
மும்மதிலுங் கடந்தபிரான் முனியாது நடுவமர்வான். 136

கு - ரை : செம்மணி - மாணிக்கம். செறிய - நெருங்க. கால்யாத்து - பதித்து. ஒளியே தும்ம - ஒளி நிரம்ப. நொச்சி - மதில். நொச்சி சூரிய மண்டலமாம். மும்மதிலுங்கடந்தபிரான் - திரிபுரத்தைவென்ற சிவபெருமான். முனியாது - வெருமல். சூரியமண்டலத்தின் நடுவே சதாசிவமூர்த்தி எழுந் தருளியிருக்கின்ற மரபுபற்றி இவ்வாறு கூறினுரென்க.

வானகநின் றிங்கடைந்த வள்ளறியா கப்பெருமான்
பானகவந் தடைந்துபதம் பணிந்திடலல் லாதமரர்
மேனகக்கொண் டமையாமை விழித்திருந்து காப்பதுபோல்
ஆனகமே லெடுத்தமரு மணிமதின்மேற் பலவிடைகள். 137

கு - ரை : விண்ணுலகத்தினின்று முசுகுந்தச் சக்கரவர்த்தியால் நில வுலகத்துக்குக் கொண்டுவரப்பட்ட தியாகராசப்பெருமான். அமரர் இங்கே வந்தடைந்து திருவடிகளை வணங்குதலல்லாமல் மீட்டும் அப்பெருமானை விண்ணுலகத்துக்குக் கொண்டுசெல்லாவண்ணம் காப்பதுபோல். அமரர் - தேவர்: இடைநிலைத்தீவகம். பலவிடைகள் - பல இடபங்கள்; அமரும் என்க.

ஊறுதெரி தலுந்தவிர்ந்தோ ருடம்புதளி யுட்புகுந்து
மாறுதவிர் காரோணா வள்ளலா ரெதிர்நின்று
வேறுமல ரிலைபுனைந்து வேண்டுபலங் களுமுதவிப்
பேறுதவு சிவமேயாய்ப் பிறங்கிவிடை மேற்கொளுமே. 138

கு - ரை : ஊறுதெரிதலும் தவிர்ந்து - பரிச உணர்ச்சியும் நீங்கி. ஓர் உடம்பென்றது ஓரறிவுயிராகவுள்ள மரத்ினித என்க. தளியுள் - கோயிலி னுள். மாறுதவிர் - ஒப்பில்லாத. மலர் இலை புனைந்து - பத்திர புஷ்பங்கள் தாங்கி அர்ச்சித்து. பலங்கள் - பழங்கள். சிவமேயாய் - சிவமாந்தன்மையாய். பிறங்கி - விளங்கி. விடைமேல் - இடபத்தின்மேல். விடைமேற்கொளும் - இடபத்தை மேற்கொள்ளும் என்றது இடபராசியின் மேல் உயர்ந்து செல்லும்.

இறைநாக மருச்சனைசெய் தேற்றமடைந் ததையுணர்ந்து
கறைநாக மனைத்துமணி கான்றுகுவித் திறைஞ்சியவோ,
நிறைநாக்ச் சுரராட்ட நிமிர்ந்துமேற் றேன்றியதோ
பொறைநாகங் குனித்தெடுத்த பூரணர்வாழ் மணிக்கோயில். 139

குு - ரை : இறைநாகம் - ஆதிசேடன். ஏற்றமடைந்ததை - உயர்ந்ததை. கறைநாகம் அனைத்தும் - நஞ்சுக்கறையையுடைய பாம்புகள் எல்லாம். மணிகான்று - மாணிக்கக் கற்களைக்கக்கி. நாகச்சுரர் - நாகர் உலகத்திலுள்ள தேவர். நாகம் - விண். பொறைநாகம் - மேருமலை. குனித்து - வளைத்து. பூரணர் - சிவபெருமான்.

செம்மையொளி மணியாலும் திகழ்தருசெம் பொன்னாலும்
வெம்மையம ருமடைய மேவியநுண் டொழிலாலும்
மும்மையுல கமும்விலைக்கு முகந்துகொளுங் கருந்தடங்கண்
அம்மைபிர சன்னமரீஇ யமருமணிப் பொலங்கோயில். 140

கு - ரை : செம்மை ஒளி மணி - மாணிக்கக்கற்கள். வெம்மை - விருப்பம். நுண்தொழில் - நுட்பமாகிய சிற்பவேலை. கருந்தடங்கண் அம்மை - நீலாயதாட்சியம்மை. பிரசன்னம் மரீஇ அமரும் - காட்சி அளித்து எழுந்தருளியிருக்கும். மரீஇ - மருவி. பிரசன்னம் - காட்சி. பொலங் கோயில் - பொற்கோயில்.

தீராத வருள்கொழிக்குந் தியாகரா சப்பெருமான்
ஆராத காதலினிங் கடைந்தநா ளுடனணைந்து
பேராத திறத்தினுறப் பதிந்துபிறங் குவதேயோ
பாராத வனைநிறுத்தாற் போன்றஃதப் பணிக்கோயில். 141

கு - ரை : தீராத - நீங்காத. கொழிக்கும் - அள்ளிவீசும். ஆராத காதலின் - அமையாத விருப்பத்தோடு. பார் ஆதவனை நிறுத்தாற் போன்றது. பார் - பூமி. ஆதவன் - சூரியன்.

அண்டார்தம் புரம்பொடித்தா ராடுதிரு வம்பலமும்
தண்டார்பொன் மலரிதழிச் சந்திரசே கரர்தளியும்
ஒண்டார்வண் பகன்றையினு ரொளிர்கந்தர் சினகரமும்
கண்டார்த மனங்கவருங் கண்கவருங் கதிர்வீசி. 142

கு - ரை : அண்டார் - பகைவர். திருவம்பலம் - சிற்சபை. தண்தார். இதழி - கொன்றை. தளி - கோயில். பகன்றை - கிலுகிலுப்பை மலர். சினகரம் - கோயில். திருவம்பலமும் தளியும் சினகரமும் மனங்கவரும் கண் கவரும் என்க.

மலர்மாலை தொடுப்பாரும் வளவியசந் தரைப்பாரும்
புலராத விரைப்பனிநீர் பொங்கமுகந் திறைப்பாரும்
நலராகுந் திருவலகுப் பணிநயந்து புரிவாரும்
விலகாது மடைத்தொழிலின் முயல்வாரு மிகச்செறிவார். 143

கு - ரை : திருமாலை தொடுக்கின்றவரும், அவ்வப்போது புதிய சந்தனத்தை அரைத்துச்சேர்ப்பாரும், பனிநீரை மிகுதியாகத் தெளிப்பவர்களும், திருவலகு இடுபவர்களும், பரிசாரகரும் மிகுதியும் நெருங்கியுள்ளனர். மடைத்தொழில் - சமையல்வேலை. மடை - சோறு.

வளையொலியுந் துளைக்கருவி
வழங்கொலியுங் கஞ்சனத்து
முளையொலியுஞ் சுட்டெடுத்த
முளையொலியும் பொற்பீலி
விளையொலியும் முழவொலியு
முரசொலியு மேவியயாழ்க்
கிளையொலியுங் கடலொலியிற்
கிளர்ந்தெழுவ பொழுதுதொறும். 144

கு - ரை : வளை - சங்கு. கஞ்சனம் - தாளம். பொற்பீலி - திருச்சின்னம். பொழுதுதொறும் - காலந்தோறும்.

மறைமுழக்க மொருபாலா மன்னியவீ ரிருவர்தமிழ்
நிறைமுழக்க மொருபாலா நிகழ்புலமை மற்றையர்பாத்
துறைமுழக்க மொருபாலாஞ் சூழன்பர் சிவநாமம்
அறைமுழக்க மொருபாலா மத்தளியு ளெஞ்ஞான்றும். 145

கு - ரை : மறை - வேதம். ஈரிருவர் தமிழ் - நால்வர் அருளிச்செய்த தேவார திருவாசகங்கள். புலமை மற்றையர் பா துறை - ஏனைப் புலவர்கள் பாட்டுக்கள்; தோத்திரப்பாக்கள். சிவநாமம் அறை முழக்கம் - ஹர ஹர என்பது. எஞ்ஞான்றும் - எப்பொழுதும்.

ஆங்குதொழ வருவார்க ளடியுறையா வைத்திறைஞ்சும்
பாங்குபெறு செங்கனகம் பதுமரா கம்வயிரம்
தேங்குதர ளம்பவளஞ் செம்பட்டு முதலாய
விங்குவரை போற்குவியும் விமலைதிரு முன்னுக. 146

கு - ரை : அடி உறையா - காணிக்கையாக. கனகம் - பொன். தரளம் - முத்து. விமலை திருமுன் - அம்பிகையின் சந்நிதியில்.

ஆட்டநறும் பால்கொணர்வா ரமைதருமஞ் சனமெடுப்பார்
வாட்டமறு மலர்கொடுப்பார் வாஞ்சையிற்கூ விளமளிப்பார்
நாட்டமிகு கனியாதி நலமெலாங் கொடுவருவார்
ஈட்டமயற் றலத்துவிழாக் காலத்து மிலையிலையே. 147

கு - ரை : ஆட்ட - அபிஷேகிக்க. நறும்பால் - நல்ல ஆவின்பால். மஞ்சனம் - அபிஷேகஜலம். வாட்டம் அறுமலர் - வாடுதலில்லாத மலர்கள். வாஞ்சை - விருப்பம். கூவிளம் - வில்வம். மேலேசொல்லிய நன்மக்களின் கூட்டம் வேறு தலங்களில் திருவிழாக் காலங்களிலும் இல்லை என்னும்படி நாள்தோறும் பெருகும்.

விண்ணவர்தம் நெருக்கொருபால்
மெய்யன்பின் வந்திறைஞ்சு
மண்ணவர்தம் நெருக்கொருபால்
மணிமிளிரும் பாதலத்தின்
கண்ணவர்தம் நெருக்கொருபால்
எவ்வுலகுங் காதலியா
எண்ணவர்தம் நெருக்கொருபா
லிரியாசந் நிதிகள்தொறும். 148

கு - ரை : விண்ணவர் - தேவர். மண்ணவர் - மனிதர். பாதலத்தின் கண்ணவர் - நாகர்கள். இரியா - நீங்கா. சந்நிதிகள்தொறும் நெருக்கம் நீங்கா என்க.

கருந்தடங்க ணம்மைமுனம் காதலித்துப் பாடுதற்குப்
பொருந்திசையிற் றும்புருநா ரதர்விரைந்து போதருவார்
மருந்துகுப்ப தெனவாங்கு வடித்திடுவா ரிசைகேட்டுத்
திருந்துசமழ்ப் பினராகித் திகைத்துருகி நின்றிடுவார். 149

கு - ரை : கருந்தடங்கண் அம்மை முனம் - நீலாயதாட்சியம்மை சந்நிதியில். பொருந்து இசையில் மேம்பட்ட தும்புருநாரதர் என்க. போதருவார் - வருவார். மருந்து உகுப்பது என - அமுதத்தை ஊற்றுவதுபோன்று. ஆங்கு - அவ்விடத்தில். சமழ்ப்பினர் ஆகி - நாணமுடையவராகி. திகைத்து - மயங்கி. வடித்திடுவார் இசை - அங்கே பாடுவோரது இசையை.

இந்தவிதம் வளம்பொலியும் எழிற்செம்பொற் கோயிலிடைப்
பந்தமறுத் தெவ்வுயிர்க்கும் பேரின்பம் பாலிப்பான்
கந்தமலர்ச் செறிகூந்தற் கருந்தடங்கட் பிராட்டியொடும்
சந்தமிகு காரோணத் தம்பிரா னினிதமரும். 150

கு - ரை : கோயிலிடை - கோயிலினிடத்து. பந்தம் அறுத்து - பாசக் கட்டுக்களை நீக்கி. எவ்வுயிர்க்கும் - எல்லா உயிர்களுக்கும். பேரின்பம் பாலிப்பான் - முத்தியின்பத்தைக் கொடுக்கும் பொருட்டு. காரோணநாதர் அம்மையாரோடு இனிமையாக எழுந்தருளியிருப்பார். தம்பிரான் - தனக்குத் தானே பிரானுக உள்ளவர்.

நன்னுக பட்டினமா நகரவளஞ் சொலப்புகுந்த
என்னுத ரவுதணித்தேன் இயம்புவது போலியம்பி
மன்னுவிப் பவஞ்சநசை வையாத மாதவர்கள்
பன்னுளு மரீஇயாமர்நை மிசவளத்துஞ் சிலபகர்வேன். 151

கு - ரை: இயம்புவதுபோல் இயம்பி என் ஆதரவு தணித்தேன். ஆதரவு - விருப்பம். மன்னு இப் பவஞ்சம் - நிலைபெறுத இந்தப் பிரபஞ்சத்தில்; பவஞ்சம் - பிரபஞ்சம். நசை வையாத - விருப்பமில்லாத. மாதவர்கள் - பெரிய தவத்தை உடையவர்கள். நைமிசம் - நைமிசவனம்.

திருநகரப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 314

நான்காவது

நைமிசப்படலம்

செங்கை யாட்டினர் அங்கைமா னேந்திய சிவனர்
பங்கை யோர்மகட் குதவிய பரமனர் பதத்துக்
கொங்கை யார்தனைச் சார்நரை யுய்த்திடு குணத்தால்
கங்கை யாற்றரு கிருப்பது நைமிசக் காடு. 1

கு - ரை: செங்கை ஆட்டினர் - திருவாதிரையில் நடனம் செய்தருளும் சிவபெருமான்; "செங்கையி னுடல் கொண்டார்" (திருப்பெருந்துறை - நாட்டு - 64) கையை ஆட்டினர் என்பது மற்றொரு பொருள். பங்கை - திருமேனியில் ஒரு பகுதியை. பதத்து - திருவடிகளில். கொங்கை: கொங்கு - வாசனை, தேன். ஆர் - பொருந்திய. சார்நரை - சார்ந்தவர்களை. நைமிசக் காடு - நைமிசவனம். நைமிசம் - நேமி சம்பந்தமுடையது: வடமொழித் தத்திதபதம், 'கங்கைக், கந்தவண் கோட்டு மேவு நைமிசக் காடொன் றம்மா' (மண்ணிப் படிக்கரைப் - நைமிச - 1).

பெற்ற மூர்சிவ பிரானரு ளல்லது பிறங்கிப்
பொற்ற தாமரை மேலவன் முகுந்தன்முற் புலவர்
உற்ற தானங்க ளியாவையும் வெறுப்பதற் கொருங்கு
கற்ற மாதவர் விழைவது நைமிசக் காடு. 2

கு - ரை: பெற்றம் - இடபம். தாமரை மேலவன் - பிரமதேவன். பொற்ற - அழகிய. முகுந்தன் - திருமால். முற்புலவர் - முதலாக உள்ள தேவர். தானங்கள் - பதங்கள்: அவை சத்தியலோகம், வைகுந்தலோகம், விண்ணுலகம் முதலியன. ஒருங்கு - ஒருசேர, முற்ற. விழைவது - விரும்புவது.

பொற்ப வேண்டிய போகங்க ளுதவவும் போற்று
தற்ப மேயென வெறுத்தொரு சிபியெனு மண்ணல்
சிற்ப மார்சிவஞ் சேர்தரச் சேர்ந்தது தெரிந்து
கற்ப நாணுறப் பொலிவது நைமிசக் காடு. 3

கு - ரை: பொற்ப - அழகிய. போற்றுது - அதனைப் பாதுகாவாமல். அற்பமே என - சிறிதென்று. சிபி எனும் அண்ணல் - சிபிச்சக்கரவர்த்தி. கற்பம் - கற்பகதரு.

பொருத மேவிய காமவேள் பல்வனப் பூவும்
மிருத வாளிசெய் தாடல்செய் விஞ்சைகை விட்டே
ஒருத வாதவின் வனமல ரனைத்துமொண் மலராக்
கருத நாடொறும் பூப்பது நைமிசக் காடு. 4

கு - ரை: பொருத - போர்செய்ய. காமவேள் - மன்மதன். பல்வனப் பூவும் - பல நிறங்களையுடைய மலர்களையும். வனம் - வண்ணம், அழகு. மிருதவாளி - வருத்தஞ் செய்கின்ற அம்புகள். ஆடல் செய் - வென்றிகொள்ளும். விஞ்சை - வித்தை. தவாத - நீங்காத. ஒண்மலர் - தூயமலர்.

சொல்ல வாயபல் வனமெலாங் கவலைமுற் றோன்று
பல்ல வாங்கிழங் ககழ்தரப் படர்தல்போ லாது
நல்ல தாந்தவக் கருவியா னருமலக் கிழங்கு
கல்ல யாவரு மடைவது நைமிசக் காடு. 5

கு - ரை: சொல் அவாய - புகழ்பொருந்திய. கவலை முன் தோன்று - கவலைக்கிழங்கு முதலாகத் தோன்றுகின்ற. பல்லவாங் கிழங்கு - பலவாகிய கிழங்குகள். அகழ்தர - தோண்ட. படர்தல் - செல்லுதல். தவக்கருவியால் - தவமாகிய கருவியினல். மலக்கிழங்கு - ஆணவ மலமாகிய கிழங்கு. கல்ல - தோண்ட.

வலைபி டித்தொடி யெறிந்துவா ரொழுக்கல்செய் யாது
நிலைபி டித்தவன் புதலொளி யிருந்துநே ராது
கொலைபி டித்தவாள் கொளாதொரு கையிடைக் குலவும்
கலைபி டித்திடப் புகுவது நைமிசக் காடு. 6

கு - ரை: ஓடி எறிதல் - உடம்பை வளைத்து வீசுதல். வார் ஒழுக்கல் - சுருக்காக வைத்துள்ள வார்களை அங்கங்கே தொங்கவிடுதல். வன் புதல் - வலிய புதர். ஒளியிருந்து - பதுங்கியிருந்து. கலை - மான்.

ஒட்டி மேயத முடற்கரண் செய்துகொண் டுடன்று
கிட்டி யோருடை வாளுரீஇக் கீழல்செய் யாது
தட்டி யோர்பதஞ் செயாதுசார்த் தூலத்தோ லரையிற்
கட்டி மேவரப் புகுவது நைமிசக் காடு. 7

கு - ரை: ஒட்டி - மெலிந்து. அரண் - பாதுகாவல். உடன்று - மாறுபட்டு. உரீஇ - உருவி. கீழல் - கிழித்தல். சார்த்தூலம் - வேங்கை. மேவர - பொருந்த.

விரும்பி யாவரு மால்வரைப் பிடிதழீஇ வெள்ளிச்
சுரும்பு மேயொரு கோட்டிளங் கயமுனி தோற்றும்
அரும்பொ ருட்பிர ணவக்களி றகப்படுத் தன்பாம்
கரும்ப ருத்திடப் புகுவது நைமிசக் காடு. 8

கு - ரை : வரைப்பிடி தழீஇ - இமயமலையில் அவதரித்த பெண்யானை போன்ற உமாதேவியாரைத் தழுவி. ஒருகோட்டு இளங் கயமுனி - ஒற்றைக் கொம்பையுடைய இளையதாகிய யானைக்கன்று. தோற்றும் - தோற்றுவிக்கும். பிரணவக்களிறு - பிரணவமாகியகளிறு; என்றது சிவபெருமானை. அகப் படுத்து - அகப்படச்செய்து, மனத்தின்கண் இருத்தி. அன்பாகிய கரும்பை உண்பிக்க.

உரனெ னப்படுந் தோட்டிகொண் டொருவழிப் படாது
பரவி டும்பொறி யென்னுமைம் பகட்டையும் படுத்துத்
திரன மைந்திடத் தெய்வசிங் கத்தினைச் சேர்ந்து
கரவு தீர்பவ ரடுப்பது நைமிசக் காடு. 9

கு - ரை : உரன் - அறிவு. தோட்டி - அங்குசம். ஒருவழிப்படாது - ஒருவழியிற் செல்லாமல். பொறி என்னும் ஐம்பகடு - ஐம்பொறிகளாகிய யானைகள். ஐம்பகட்டையும்: முற்றும்மை. படுத்து - கெடுத்து, அழித்து. தெய்வசிங்கம் - தெய்வமாகிய சிங்கம். கரவு - வஞ்சகம். "உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும்காப்பான்" என்னும் குறட்கருத்தை ஒட்டியது இச் செய்யுள். முற்றுருவகம்.

இனியும் மாற்பய னென்னொன்று கடும்பினை யெள்ளித்
தனியு மேவுங்கொ லென்றடைந் தவர்பசித் தழலை
முனியுந் திப்பிய மாகிய கனியொடு முக்கட்
கனியு நல்கிடுந் திறத்தது நைமிசக் காடு. 10

கு - ரை : கடும்பினை எள்ளி - சுற்றத்தாரை இகழ்ந்து. தனியும் மேவுங்கொல் - தனித்திருத்தலும் பொருந்துமோ. பசித்தழலை - பசித்தீயை. முனியும் - கோபிக்கும். திப்பியம் = திவ்வியம் - தெய்வத்தன்மை. முக்கட் கனி - சிவபெருமான்.

ஓங்கு காஞ்சிகள் சூழ்தர நடுவண்மா வொளிரும்
ஆங்கு மேவிய கருங்குயில் தழூஉம்வடு வமையும்
வீங்கு காஞ்சியி னடுவண்மா நிற்றலும் விளக்கம்
தாங்கு மற்றைய விரண்டுமோ ரற்புதந் தருமே. 11

கு - ரை : காஞ்சி - காஞ்சிமரம். மா ஒளிரும் - மாமரங்கள் விளங் கும். ஆங்கு - அம்மாமரத்தில். தழூஉம் - தழுவும். வடு - மாம்பிஞ்சுகள். தழுவும் வடு என்றது நயம். அற்புதந்தரும் - ஆச்சரியத்தை உண்டாக்கும்.

ஒருக டம்புமே லுயர்ந்தெழ வதன்புடை முளைத்து
வருமொர் சம்புவைச் சூழ்தர வத்திகள் வயங்கும்
திருகு தீர்கடம் படிச்சம்பு மருவலுந் திக்கு
மருவி யத்திக ணிற்றலும் வியப்புறு மாண்பே. 12

கு - ரை : கடம்பு - கடப்பமரம். சம்புவை - நாவல்மரத்தை. அத்திகள் - அத்திமரங்கள். சம்பு - சிவபெருமான். சிவபெருமானைச் சூழ்ந்து அத்திகள் விளங்கும் என்றது நயம். திருகு - மாறுபாடு. கடம்பு அடி - கடப்பமரத்தின் அடியில். சம்பு மருவலும் - சிவபெருமான் விற்றிருத்தலும். திக்கு மருவி அத்திகள் நிற்றல் - எட்டுத்திக்கிலும் பொருந்தித் திக்குயானைகள் நிற்றலும் என வேறும் ஒருபொருள் தோன்றுதல் காண்க. இஃது ஆலவாயிற் பெருமானை நினைவூட்டுவதாம்.

பூத்த பூவையை யாண்டழீஇ மணந்துறப் பொலியும்
பூத்த பூவையை யாண்டழீஇ மணப்பிறும் பூதோ
மூத்த வேங்கையோர் சேவினை யலைத்திடு மொழியின்
மூத்த வேங்கையோர் சேவினை யலைத்தலு முறையே. 13

கு - ரை : பூத்த பூவையை - மலர்ந்த காயா மரத்தை, பருவமகளிரை. ஆண் - ஆண்மரங்கள், ஆடவர். தழீஇ மணந்து - தழுவிக்கலந்து. பொலியும் - விளங்கும். ஆண்மரம் என்றது உள்வயிரம்பற்றிய மரமாம்; அவை கருங்காலி முதலியன. மணந்து - மணம்வீசி. மணப்பு - மணந்து கொள்ளுவது. இறும்பூதோ - ஆச்சரியமோ. மூத்த வேங்கை - முதிர்ந்த வேங்கைமரங்கள், மூப்புடைய வேங்கைப்புலி. சே - உழிஞைமரம், அழிஞ்சில், இடபம். அலைத்திடும் - அசைக்கும், வருத்தும்.

சேவின் மேலொரு சம்புயர்ந் தலங்கிடுஞ் சிறந்த
சேவின் மேலொரு சம்புயர்ந் தலங்குதல் செயுமே
ஆவி னேடொரு சேவளாய்க் கலந்திடு மறையின்
ஆவி னேடொரு சேவளாய்க் கலந்திட லழகே. 14

கு - ரை : சேவின்மேல் ஒரு சம்பு உயர்ந்து அலங்கிடும்: சே - உழிஞை மரம், இடபராசி, இடபவூர்தி. சம்பு - நாவல்மரம், சிவபெருமான். அலங்குதல் - அசைதல், விளங்குதல். ஆ - ஆச்சாமரம், பசு. சே - உழிஞை, இடபம். அளாய் - அளவளாவி.

சம்பு பொன்மலர்க் கொன்றையை யணைத்திடும் சாற்றில்
சம்பு பொன்மலர்க் கொன்றையை யணைத்திட றகவே
பம்பு மத்தியை முனியகங் கொளுமது பகரிற்
பம்பு மத்தியை முனியகங் கொளலொரு பரமோ. 15

கு - ரை : சம்பு - நாவல்மரம், சிவபெருமான். கொன்றை - கொன்றை மரம், கொன்றைமலர். தகவு - தகுதியுடையது. பம்பும் அத்தியை - செறிந்த அத்திமரத்தை, அத்தி - யானை, அத்திமரம். முனி - யானைக்கன்று; பலாசு, அகத்தி. அகங்கொளும் - அடக்கும், தன்னிடத்துக்கொள்ளும். பரமோ - பாரமோ.

எருமை பாடலம் வேங்கையா வேந்துகோட் டத்தி
கருமை மாவெகி னங்கரை சாகமொண் ணுகம்
இருமை யாம்பொருள் படைச்செறிந் தியைந்தவக் கானத்
தொருமை சாலமற் றொருமையு மன்னதே யுரைக்கின். 16

கு - ரை : எருமை - ஒருவகை மரம், எருமைமாடு, காரா. பாடலம் - பாதிரி, குதிரை. வேங்கை - வேங்கைமரம், புலி. ஆ - ஆச்சா, பசு. அத்தி - அத்திமரம், யானை; ஏந்து கோட்டு அத்தி - ஏந்திய கொம்புகளையுடைய அத்தி. மா - மாமரம், விலங்கு. எகினம் - புளிமா, கவரிமா. சாகம் - தேக்கு, வெள்ளாடு. நாகம் - நாகமரம், யானை. இருமை ஆம்பொருள் - சிலேடைப் பொருள். ஒருமை - ஒன்றுந்தன்மை. ஒருமை - ஒரு ஆடு.

அரசு சூழ்தர வத்திமாக் கணிகணின் றிலங்கும்
அரசு சூழ்தர வுரைத்தவை மேவலற் புதமோ
பரசு சம்புவோர் புடைநின்று பச்செனத் தோன்றும்
பரசு மற்றது மதிசய மாகுமோ பகரில். 17

கு - ரை : அரசு சூழ்தர - அரசமரத்தைச் சூழ்ந்து. அத்தி - அத்தி மரம். மா-மாமரம். கணிகள் - வேங்கைமரங்கள். நின்று இலங்கும் - நிலைபெற்று விளங்கும். அரசனைச் சூழ்ந்து யானையும் குதிரையும் சோதிடர் களும் நின்று என்பது வேறும் ஒருபொருள். மேவல் - பொருந்துதல். அற்புதமோ - ஆச்சரியமோ. பரசு - யாவராலும் சொல்லப்படும். சம்பு - நாவல்மரம். பச்சென - பசுமையாக. பரசும் - யாவராலும் துதிக்கப்படும். மற்றதும் - சிவபிரானது ஒருபக்கத்திலே நின்று பசுமையாகத் தோன்றும். பகரில் அது அதிசயம் ஆகுமோ.

இல்ல மெங்கணுஞ் செறிதரும் பன்னியோ டியைந்து
சொல்ல வாகிய மதலையுந் துவன்றுவ தொலையா
வல்ல வாண்களு மருவுவ வில்லத்து வகுத்த
நல்ல வேயலாற் றீயவா குங்கொலோ நாடில். 18

கு - ரை : இல்லம் - தேற்றுமரம். பன்னியோடு - பன்னீர் மரத்தோடு. மதலை - கொன்றைமரம். தொலையா - நீங்கா. வீடுகளெல்லாம் செறிந்த மனைவிகளோடு பொருந்திப் பிள்ளைகளோடு தோன்றுதல் நீங்கா என்பது வேறும் ஒருபொருள். வல்ல - வலிமையையுடைய. ஆண்களும் - கருங்காலி முதலிய ஆண்மரங்களும். இல்லத்து - தேற்றுமரத்தோடு. வேய் - மூங்கில். இல்லத்து ஆண்களும் மருவுவ - மனைவியோடு ஆடவர்களும் பொருந்து வார்கள். இல்லத்து வகுத்த - இல்லறத்துக்குக் கூறப்பட்டவைகள். நன்மை பயக்குமே யல்லாமல் ஆராயுமிடத்துத் தீமையைப் பயக்குமோ? என்பது மற்றுமொருபொருள்.

இழிந்த கேவலந் தொருபிர காசமு மின்றி
மொழிந்த சுத்தந்தின் மிகப்பிர காசிக்கு முதல்போற்
கழிந்த வெம்பகற் காலத்து விளங்குதல் கழித்து
வழிந்த காரிருட் காலத்து விளங்குமோர் மரமே. 19

கு - ரை: இழிந்த கேவலம் - கீழ்மையையுடைய கேவலநிலை. அது கருவிகரணங்களோடு கூடாமல் மலத்திலே அழுந்தி யிருத்தல். பிரகாசமும் இன்றி - ஒளியுமில்லாமல். சுத்தத்தில் - சுத்தநிலையில். முதல்போல - உயிரைப்போல. பகற்காலத்திலே விளங்குதலின்றி இருள்மிகுந்த காலத்தில் ஓர்மரம் விளங்கும். ஓர்மரம் - சோதிமரம். உயிர் - உவமானம். சோதி மரம் - உவமேயம்.

பந்த மேவிய வுயிர்களின் றன்மையும் பந்தம்
நந்த மேவிய வுயிர்களின் றன்மையு நயந்து
முந்த மேவிய யாவருந் தெரிதர முகிழ்த்த
சிந்த மேவிய காய்களாற் பழங்களாற் றெரிக்கும். 20

கு - ரை: பந்தம் மேவிய - பந்தத்தோடு பொருந்திய. பந்தம் நந்த மேவிய - பந்தம் நீங்கும்படி பொருந்திய. நயந்து - விரும்பி. முகிழ்த்த சிந்தம் - அரும்பிய புளியமரங்கள். பந்தம் மேவிய உயிர்கள் புளியங்காயைப் போன்றன. பந்தம் நந்த மேவிய உயிர்கள் புளியம்பழங்களை ஒத்தன.

ஒரும லத்தடை யுயிரினை விளங்கனி யொக்கும்
இருமலத்தடை யுயிரினை யிலாங்கலி யேய்க்கும்
பொருமலத்தடை மூன்றுடை யுயிரினைப் புரையும்
குருமலர்ப்பசுந் தழைவிரி குலப்பெரு நரந்தம். 21

கு - ரை: ஒரு மலத்தடை - ஆணவமலமாகிய தடையினை உடைய. விளங்கனி - விளாம்பழம். ஒத்தலாவது ஓடு ஒன்றே உடைமை. இருமலத் தடை உயிர் - ஆணவம் கன்மம் ஆகிய இரண்டு மலங்களையுடைய பிரளயா கலர். இலாங்கலி - தேங்காய். ஏய்த்தலாவது - மட்டையும் உள்ளே ஓடும் ஆகிய இரண்டு தடைகள் உடைமையால். மலத்தடை மூன்றுடை உயிரினை - ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்று மலங்களை உடைய சகலராகிய உயிர்களை. நரந்தம் - நாரத்தை. புரைதலாவது மேலே பசுத்ததோலும், உள்ளே மெல்லியதோலும், அதனுள்ளே நுண்ணிய தோலும் உடைமையால் என்க.

பலாசு பற்பல செறியுமி ரெழுந்தவும் பலவே
நிலாவு மாண்பல நெருங்குமி ரெழுந்தது நெருங்கும்
குலாவு தண்புளி மாவுமி ரெழுந்தவுங் கூடும்
அலாத காஞ்சிரைக் குழுவுமி ரெழுந்தவு மமலும். 22

கு - ரை : பலாசு - புரசு, முள் முருக்கமரம். ஈறு ஒழிந்த - பலாமரங்கள். நிலாவும் ஆண் - பொருந்திய ஆண் மரங்கள். ஈறு ஒழிந்தது: ஆ - ஆத்தி மரம். புளிமா - புளிமாமரம். ஈறு ஒழிந்த - புளியமரங்கள். காஞ்சிரைக் குழு - எட்டி மரங்களின் கூட்டம். ஈறு ஒழிந்த - காஞ்சி மரங்கள். அமலும் - நெருங்கும்.

கரிய நாகத்திற் கரியநா கங்கடாய்க் கலக்கும்
பெரிய வத்தியிற் பெரியவத் திகளவாய்ப் பிணையும்
வரிய வேங்கையின் வரியவேங் கைகள் புகூஉ மருவும்
அரிய வொற்றுமை யமைதரி னகறலு முண்டோ. 23

கு - ரை : கரிய நாகத்தில் - கருமையான நாகமரத்தில். கரிய நாகங்கள் தாய் - கருங்குரங்குகள் தாவி. நாகம் - சுரபுன்னையும் ஆம். பெரிய அத்தியில் - பெரிய அத்திமரங்களில். அத்திகள் அவாய் - யானைகள் விரும்பி. வேங்கையின் - வேங்கை மரத்தின். வரிய வேங்கைகள் - வரிகளையுடைய புலிகள். புகூஉ - புகுந்து. அரிய ஒற்றுமை அமைதரின் - நீங்குதற்கரிய ஒற்றுமை பொருந்தின். அகறலும் - நீங்குதலும்.

பூத்த கொன்றைநம் பரம்பரன் றிருவுருப் போலும்
பாத்த காய்பல தூங்குவ சடைப்பரப் பேய்க்கும்
ஏத்த மேன்முனி யரும்புறல் சிறுபிறை யேய்க்கும்
சோத்த மென்பவர்க் கருள்செய்வான் நிற்பது துணையும். 24

கு - ரை : பூத்த கொன்றை - பூக்களையுடைய கொன்றைமரங்கள். பரம்பரன் - சிவபெருமான். திருவுரு - பொன்போன்ற மேனி: "பொன்னார் மேனியனே" (தேவா). பாத்த - பகுதியாகவுள்ள. காய் தூங்குவ - கொன்றைக்காய்கள் தொங்குவன. சடைப்பரப்பு - சடைத்தொகுதியை. மேல் முனி அரும்பு உறல் - மேலே அகத்தியின் மொட்டுக்கள் பொருந்துதல். சிறு பிறை - இளம்பிறைச் சந்திரன். சோத்தம் - இழிந்தோர் செய்யும் தோத்திரம். துணையும் - ஒக்கும்.

அளவி லாவலி படைத்தமா மலக்குறும் பகற்றி
அளவி லாச்சிவ புண்ணிய முதிர்ச்சியே யமைக்கும்
அளவி லாத்தருச் செறிதரு நைமிசத் தருச்சீர்
அளவி லாதவர் புகலினு முற்றுதற் காமோ. 25

கு - ரை : மா மலக்குறும்பு - கரிய ஆணவமலச்சேட்டை. அளவு இல் ஆதவர் - எண்ணில்லாத சூரியர்கள்.

வேறு

இத்தரு வனத்திற் சௌனகன் கருக்கன்
இலகிதன் சுதீக்கணன் வசுவ
கத்தியன் கார்த்தி யாயனன் றதீசி
கண்ணுவன் பிருகுமார்க் கண்டன்
அத்திரி சுனப்புச் சன்சுகன் பிருங்கி
யாபத்தம் பன்பரத் துவாசன்
உத்தமப் புலகன் குசுருமா தேவன்
உரோமசன் சதானந்தன் சம்பு. 26

கு • ரை : இப்பாடல் முதல் ஐந்து பாடல்களால் நைமிசவனத்தி லுள்ள பல முனிவர்களின் பெயர் கூறத் தொடங்குகின்றார்.

சௌனகர், கருக்கர், இலகிதர், சுதீக்கணர், வசு, அகத்தியர், கார்த்தி யாயனர், ததீசி, கண்ணுவர், பிருகு, மார்க்கண்டர், அத்திரி, சுனப்புச்சர், பிருங்கி, சுகர், ஆபத்தம்பர், பரத்துவாசர், புலகர், குசுர், உமாதேவர், உரோமசர், சதானந்தர், சம்பு.

திருதன்மா தேசன் பார்க்கவன் சனந்தன்
திரணதூ மாக்கினி விந்து
கிருதன்சாண் டிலியன் சந்திர சூடன்
கிரிசரன் குச்சகன் கற்கி
ஒருதுரு வாசன் சுனன்கலைச் சிருங்கன்
உபமன்னி யன்சுனச் சேபன்
வருசருச் சரன்சா தாதப னட்ட
வக்கிரன் முற்கலன் கபிலன். 27

கு • ரை : திருதர், மாதேசர், பார்க்கவர், சனந்தர், திரணதூமாக்கினி, பிந்துகிருதர், சாண்டிலியர், சந்திரசூடர், கிரிசரர், குச்சகர், கற்கி, துருவாசர், சுனர், ரிஷியசிருங்கர், உபமன்னியர், சுனச்சேபர், சருச்சரர், சாதாதபர், அட்டவக்கிரர், முற்கலர், கபிலர்.

அரபத்தன் விசுவா மித்திரன் சங்கன்
ஆணிமாண் டவியன்சா பாலி
பிரசண்டன் வசிட்டன் சனகன் சனுதன்
பெருஞ்சம தக்கினி புசுண்டன்
சரபங்கன் வச்சன் புலத்தியன் சிலாதன்
தாலப்பி யன்சனற் குமாரன்
வரமிகு போதா யனன்சத்தி கூசு
மாண்டன்கௌ தமன்றத்தாத் திரேயன். 28

கு -ரை: அரபத்தர், விசுவாமித்திரர், சங்கர், ஆரிமாண்டவியர், ஜாபாலி, பிரசண்டர், வசிட்டர், சனகர், சனுதர், ஜமதக்கினி, புசுண்டர், சரபங்கர், வத்சர், புலத்தியர், சிலாதர், தாலப்பியர், சனற்குமாரர், போதாயனர், சத்தி, கூசுமாண்டர், கௌதமர், தத்தாத்திரேயர்.

அகமரு டணன்ப ராசர னசித
னரிதகன் பப்புரு சுமந்து
நகமிளி ராசு விலாயனன் காணன்
நாரதன் காசிபன் சுனகன்
தகவமை யிரைப்பி யன்பருப் பதனற்
றவுமியன் றேவலன் சாதன்
பகவனங் கிரசு விபண்டகன் கலைதேர்
பாணினி காலவ முனிவன். 29

கு - ரை: அகமருடணர், பராசரர், அசிதர், அரிதகர், பப்புரு, சுமந்து, ஆசுவிலாயனர், காணர், நாரதர், காசிபர், சுனகர், இரைப்பியர், பருப்பதர், தவுமியர், தேவலர், சாதர், பகவர், அங்கிரசு, விபண்டகர், பாணினி, காலவர்.

வெருவிலா வாம தேவனற் றிரண விந்துசீர்ப் பயிலவன் சுதன்மன்
ஒருவில்சீர்த் தூம பானனல் லொழுக்கத் துக்கிர வீரிய னெவரும் [வும்
பொருவிலாக் கவுண்டின் னியன்சவு பரிநற் புருசுண்டி பதுமனு சனு
மருவிலா விவரா தியரிரு பத்தா றுயிர மாதவர் மாதோ. 30

கு - ரை: வாமதேவர், திரணபிந்து, பயிலவர், சுதன்மர், தூமபானர், உக்கிரவீரியர், கவுண்டின்னியர், சவுபரி, புருசுண்டி, பதுமர், ஆசனு முதலாகவுள்ள முனிவர்கள் இருபத்தாறுயிரவர் நைமிசவனத்தில் வீற்றிருந்தனர். முனிவர்கள் பெயரைப் பெரும்பாலும் அடைமொழியின்றிக் கூறியிருப்பது காண்க.

மன்னிய விவர்மா றுக்கரெண் ணிறந்தோர்
வகுத்தயா வருமறை முதலாப்
பன்னிய கலைக ளனைத்துநன் குணர்ந்தார்
பளகுதீர் படிமத்தி னுயர்ந்தார்
துன்னிய வேதச் சென்னிவீற் றிருந்து
துலங்கிடும் பூதிசா தனத்திற்
கன்னிய மல்லார் கண்மணித் தொடைகொண்
டமைதர அலங்கரித் திடுவார். 31

கு - ரை: மன்னிய - நிலைபெற்ற. எண்ணிறந்தோர் - அளவில்லாதவர். மறைமுதலா கலைகள் அனைத்தும் - வேதம் வேதாங்கங்கள் வேத

சிரசு புராணங்கள் இதிகாசங்கள் ஆகிய எல்லாவற்றையும். பளகு - குற்றம். படிமம் - வடிவம். வேதச்சென்னி - வேதசிரசாகிய உபநிடதங்கள்; என்றது பகமஜாபால உபநிடதம் முதலியவற்றில் என்க. பூதி - திருநீறு. சாதனம் - பஞ்சாக்கரம். கண்மணித்தொடை - உருத்திராக்கமாலை.

ஆன்மாக்கள் எப்பற்றும் கழன்று பற்றற்றவனைப் பற்றுதற்குரிய அருட்பணிகளில் இன்றியமையாச் சிறப்பினதாய் முதற்பற்றும் பொருளாய் விளங்குவது விபூதியாம். அப்புறக்காட்சியோடு உண்ணிலவும் பற்றுக் கோடாய் நோக்கியவற்றை நோக்காதவாறு செய்யவல்லது ஸ்ரீ பஞ்சாக்கர மாகலின் சாதனம் என்றார். பூதியையும் கண்மணியையும் வேறு பிரித்தலின் சாதனம் என்றது பஞ்சாக்கரத்தை என்க.

முகைவிரி மலர்க்கற் பகநறுந் தொடையன்
முடிக்கட வுளர்பிரான் வாழ்வும்
நகைகெழு கமலப் பசும்பொகுட் டணைமேற்
றங்குநா யகன்பெரு வாழ்வும்
பகைதடி சுதரி சனப்படைத் தடக்கைப்
பதுமலோ சனப்பிரான் வாழ்வும்
நகைகொளும் வமன பதமென வெறுத்தார்
நாடரு மருட்பெறு விருப்பார். 32

கு - ரை : முகைவிரி - மொட்டுகள் மலர்ந்த. தொடையல் - மாலை. கடவுளர்பிரான் - இந்திரன். வாழ்வு - சுவர்க்க இன்பம். கமலப்பசும் பொகுட்டு அணை - தாமரைத்தவிசு. தங்கும் நாயகன் - பிரமதேவர். அவர் வாழ்வு - சத்தியலோக வாழ்க்கை. பகைதடி - பகைவரைக் கொல்லும். சுதரி சனப்படை - சக்கராயுதம். பதுமலோசனப்பிரான் - தாமரைக்கண்ணராகிய திருமால்; அவர் வாழ்வு வைகுந்த வாழ்க்கை. வமனபதம் - கான்றசோறு; வமனம் - வாந்தி. வெறுத்தார் - வெறுத்தவராய். அருள்பெறு விருப்பார் - திருவருளைப் பெறுகின்ற விருப்பத்தை உடையவர்.

பெருவளி யலைப்ப நெடுவரை யனைத்தும்
பெயர்ந்துமிக் கொன்றன்மே லொன்று
பொருதிறன் மருவி வீழினுஞ் சலதி
புடைபெயர்ந் தொன்றுபட் டிடினும்
கருவிட மிடற்றி னடக்குபு கலங்கு
கடவுள ரெவரையும் புரந்த
ஒருதனி முதல்வன் திருவடித் தியான
மொழிதரார் கவலுத லொழிந்தார். 33

கு - ரை : பெருவளி - ஊழிப்பெருங்காற்று. சலதி - கடல். புடை பெயர்ந்து - பொங்கி. மிடற்றின் அடக்குபு - கண்டத்தில் தரித்து. கலங்கு

கடவுளர் எவரையும் - ஆலகால விடத்தினுல் தாக்கப்பட்டு நிலைகலங்கி ஓடி வந்த திருமால் முதலிய தேவர்களையெல்லாம். முதல்வன் - சிவபெருமான். கவலுதல் - கவலைகொள்ளுதல்.

இன்பமெய் திடினும் விருப்புரு ரதனுக் கெதிர்மறை யாகிய கொடிய
துன்பமெய் திடினும் வெறுப்புரு ரடியிற் சூழ்ந்தபா டகமென வுடற்கு
முன்பமை வினையின் பயனென மதிப்பார் மொழிதரு சிற்றுயி ரிடத்தும்
அன்பமை திறத்தா ருயிர்களூ றுற்று லழல்படு தளிரெனக் குழைவார்.

கு - ரை : இன்பத்தில் விருப்பும், துன்பத்தில் வெறுப்பும் இல்லாதவர். பாடகம் - காலணி. இன்பதுன்பங்கள் உடம்புக்கு முன்னரே அமைக்கப்பட்ட வினைப்பயன் என மதிப்பார். சிற்றுயிர்களுக்கும் இரக்கம் உடையவர். உயிர்கள் இடையூறு உற்றால் அதனைக்கண்டு நெருப்பில்பட்ட தளிரைப்போன்று மனம் குழைவார். அழல் - நெருப்பு.

அரிமதர் மழைக்கட் சிற்றிடைப் பெருந்தோ
ளந்நலா ரிளமுலை ஞெமுங்கப்
புரிவின்வந் தணைத்த போதுமின் றெடுத்த
புண்ணியத் தாயென மதிப்பார்
தெரிதரு பொன்னு மோடெனக் காண்பார்
சிவசரித் திரசிர வணத்தார்
விரிதரு மனையார் பெரும்புக ழெடுத்து
விளம்புத லெம்மனோர்க் கெளிதோ. 35

கு - ரை : அரிமதர் மழைக்கண் - செவ்வரிபரந்த மதர்த்த கரியகண். சிற்றிடைப் பெருந்தோள் : முரண்தொடை. நல்லார் - மகளிர். புரிவின் - விருப்பத்தோடு. பொன்னும் ஓடும் ஒப்பாகக் காண்பார்.

"பூத மைந்து நிலையிற் கலங்கினு
மாதொர் பாகர் மலர்த்தாண் மறப்பிலா
ரோது காத லுறைப்பி னெறிநின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனர்."

"கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்."
—(பெரியபுராண - திருக்கூட்டச் சிறப்பு - 7, 8)

" ....
கழிபெருஞ் சீர்த்தியர் மாசு
மண்ணிய மனத்தார் பசுபதி அடியார்
வடிவெலாம் நிறுசண் ணித்த

புண்ணியர் மும்மைப் புண்டர நிரையார்
அக்கமா லிகையர்போர் விடையூர்
அண்ணல்வாழ் தலத்திற் பற்றினேர் அன்னன்
அருச்சனை இயற்றும்ஆர் வத்தார்.''

'' அங்கமும் மறையும் தெளிந்தவர் வேதம்
அந்நிந்த அறிவினர் விமலர்
தங்கும்அஞ் செழுத்தே கிளப்பவர் பொறியைத்
தடுத்துயர்ந் தவர்மக மனைவி
செங்கன லோடும் உறைபவர் தமைப்போற்
சிற்றுயிர் அனைத்தையுங் காணும்
பொங்குபே ரருளின் எல்லையர் இனையோர்
பொலிவுற ஒருங்குடன் குழுமி.''

—(காஞ்சிப்புரா - புராண வரலாறு - 10, 11)

சிவசரித்திர சிரவணத்தார் - சிவபுராணங்களை நியமமாகக் கேட்போர். அனையார் - அம்முனிவர்கள், அவர் மாணாக்கர்கள்.

புண்ணிய மலிந்த நைமிசச் சிறப்புப்
புகன்றன மினையமா தவத்தர்
அண்ணிய வுளத்தா சங்கைமுற் றிரிய
வருட்பெருஞ் சூதனை யடுத்துக்
கண்ணிய திதுவென் றுரைத்தது மதற்குக்
கற்றுணா ரவன்விடை கொடுத்துத்
தண்ணிய மகிழ்ச்சி செய்ததுந் தெரியச்
சாற்றிட லுற்றன மாதோ. 36

கு - ரை : அண்ணிய - நெருங்கிய: செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஆசங்கை - சந்தேகம். முற்று இரிய - முழுவதும் கெட்டோட. சூதனை - சூதமகாமுனிவரை. கண்ணியது - கருதியது.

நைமிசப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 350

ஐந்தாவது

புராணவரலாற்றுப்படலம்

உரைத்தசவு னகனுதி யொள்ளியமா முனிவரெலாம்
விரைத்தவொரு தினங்குழுமி விடையுடையா னமர்தலங்கள்
திரைத்தகட லுடைவரைப்பிற் செறிந்தனவெண் ணிலவவற்றுள்
புரைத்ததல முதன்மூன்றும் பொலிந்தோங்கு தானமெது. 1

கு - ரை: உரைத்த - மேலே நைமிசப்படலத்தில் கூறப்பட்ட. விடையுடையான் - சிவபெருமான். தலங்கள் எண்ணில செறிந்தன. தலம் முதல் மூன்றும் - தலம் மூர்த்தி தீர்த்தம் ஆகிய மூன்றும். தானம் எது - இடம் யாது.

எத்தலமிந் திரனயன்மா லேனேருந் தொழப்படுவ
தெத்தலமுண் ணினைத்தபொழு திகபரபோ கங்கொடுப்ப
தெத்தலநம் பெருமான்ருட் கிடையருப் பத்திதரும்
எத்தலமொன் ருதொன்று மின்பமுத்தி யெளிதளிக்கும். 2

கு - ரை: ஏனேரும் - மற்றைத்தேவர்களும். உள் நினைத்தபொழுது - மனத்தாற் கருதியகாலத்தும். இகபரபோகம் - இம்மை மறுமைப் பேறுகள். இடையருப்பத்தி - இடையீடில்லா அன்பு. ஒன்ருது ஒன்றும் இன்பம் - இரண்டறக் கலத்தலாகிய இன்பம். இன்பமுத்தி - இன்பமாகிய முத்தி.

இதுதெரியா திருந்தனமென் றெண்ணியெண்ணி மாழாந்து
கதுமெனவுட் படர்தருகாற் கல்விவலி யாற்சில்லோர்
அதுவிதென வுரைப்பிதினு மாசங்கை யுளராஞர்
சதுமுகனு நிகராகாச் சவுனகமா முனியெழுந்தான். 3

கு - ரை: மாழாந்து - மயங்கி. கதுமென - விரைவில். உள்படர்தருகால் - மனத்திலே துன்புற்ற காலத்தில்: படர் - துன்பம். ஆசங்கை - ஐயம். சதுமுகன் - பிரமதேவர்.

எழுந்தமுனி வரன்முனிவ ரெல்லார்க்குங் கைகுவித்தே
அழுந்தமனத் திடைக்கொண்மி னடியேன்விண் ணப்பமொன்று
தழுந்தரமா யேமுடியும் தண்டுழாய் மாலென்றே
விழுந்ததகை யினர்கூறும் வியாதமா முனிவரன்பால். 4

கு - ரை : அழுந்த - உறுதியாக. தண் துழாய்மால் - குளிர்ந்த திருத்துழாய் மாலையையணிந்த திருமால். தழும்தரம் - தழுவுகின்ற சிறப்பு. மால் என்றே கூறும் வியாதமா முனிவரன்.

போற்றுசிறப் பமைபதினெண் புராணமுழு வதுந்தெரிந்தான்
ஆற்றுதவ முதீசிவரை யனுவெனச்செய் துறவுயர்ந்தான்
சாற்றுபர சிவனடியிற் றவாதபெருங் கலப்புடையான்
தோற்றுதிரு வருளுருவச் சூதமா முனிவரனே. 5

கு - ரை : உதீசிவரை - சிகரத்தையுடைய மலை; என்றது வடக்கில் உள்ள இமயமலையை. உதீசி - உத்தரதிக்கு. தவாத - நீங்காத.

அன்னவன்சித் தாச்சிரமத் தமர்கின்று னவனடிசார்ந்
துன்னருநாங் குறித்தவெலா முரைத்திடுவா மவன்மதித்துச்
சொன்னதுவே துணிபாகு மென்றெடுத்துச் சொற்றிருந்தார்
என்னருமற் றதுகேளா விதுநன்று மெனமகிழ்ந்தார். 6

கு - ரை : அன்னவன் - சூதமாமுனிவர். சித்தாச்சிரமம் - நைமிசாரணியத்திற்குச் சமீபமாயதோர் வனம். சவுனகமாமுனிவர் சொற்றிருந்தார் எனக்கூட்டுக. என்னரும் - எத்தகையோரும்.

வெள்ளியகொண் மூவனைத்து மிக்கெழுந்து பாற்கடலின்
தெள்ளியபா லருந்துதற்குச் சேறல்போ னீறணிந்த
ஒள்ளியமெய்ம் முனிவரெலா மொருங்கெழுந்து சூதமுனி
வள்ளியசெவ் வாய்மொழிப்பால் மாந்துதற்குப் போதுவார். 7

கு - ரை : கொண்மூ - மேகம். ஒருங்கு எழுந்து - ஒருசேரப் புறப்பட்டு. மொழிப்பால் மாந்துதற்கு - மொழியாகிய பாலை உண்பதற்கு.

தண்டளிரு மணமலருந் ததைந்துநறு மதுப்பிலிற்றி
அண்டருமிந் நிழல்பெற்றே மல்லேமென் றேமாறக்
கொண்டபொழி லுடைத்தாகிக் குளிர்புனற்று மரைகடொறும்
வண்டமலப் பொலிதருசித் தாச்சிரம மருவினர். 8

கு - ரை : ததைந்து - நெருங்கி. பிலிற்றி - சிந்தி, துளித்து. அண்டரும் - தேவர்களும். ஏமாற - ஏமாந்திருக்க. பொழில் - சோலை. வண்டு அமல - வண்டுகள் ஒலிக்க.

காமருசித் தாச்சிரமங் கண்டுமிக முகமலர்ந்து
பூமருவு புனல்வாவி புக்குநிய திகண்முடித்துத்
தேமருவு முனிவரெலாஞ் சிவபிரான் மனமகிழத்
தூமருவோர் மகமாற்றுஞ் சூதமுனி வரற்சார்ந்தார். 9

கு - ரை : புனல்வாவி - நீரையுடைய தடாகம். நியதிகள் - நாட் கடன்கள். தூமருவு ஓர் மகம் - பரிசுத்தமாகிய ஓர் யாகம்.

வந்தமுனி வரர்க்கோகை வழங்கியிருக் கையுமுதவிச்
சந்தமிகு சூதமுனி தானுற்று மகமுடித்து
முந்தநறும் புனலாடி முனிவரும்விட் டரத்தமர்ந்து
பந்தமறு முறுவர்தமைப் பார்த்துரைப்பா னயினன். 10

கு - ரை : ஓகை = உவகை - மகிழ்ச்சி. மகம் - யாகம். நறும்புனல் ஆடி - யாகமுடிந்தபின் விதிப்படி ஸ்நானம் செய்து. விட்டரம் - மேடை. உறுவர் தமை - தவசிகளை.

எல்லீரு மிவணடைந்த தென்னுடைய மாதவமே
சொல்லீரு மித்தினமுந் தூயதின மாயதினும்
அல்லீருங் களத்தண்ண லருட்குரிய வனுமானேன்
நல்லீருந் தரிசனமே நம்பெருமான் றரிசனமால். 11

கு - ரை : எல்லீரும் - நீங்கள் யாவரும்; முன்னிலைப் பொதுப்பெயர். அல் ஈரும் களத்து அண்ணல் - இருளையழிக்கும் கரிய கண்டத்தையுடைய சிவபெருமான். நல்லீர் - நல்லவர்களே.

என்றுபல முகமனுரைத் தெல்லீரு மிவணடைதற்(கு)
ஒன்றுகரு மம்புகன்மி னெனச்சூத னுரைத்திடலும்
நன்றுசவு னகனெழுந்து நற்கமலக் கரங்கூப்பி
வென்றுமிளிர் பெருந்தவத்தோய் கேட்டியென விளம்பிடுவான். 12

கு - ரை : முகமன் - உபசார வார்த்தைகள். ஒன்று கருமம் - பொருந்துங் காரியம்.

ஆயதிரைக் கடலுலகி னுருயிர்க ளுய்யும்விதம்
நேயவருட் பெருமானார் நிறைந்தமரும் பலதலத்துள்
தூயதல முதன்மூன்றுந் தொகச்சிறந்த தானமெது
பாயவய னரியாதிப் பண்ணவர்பூ சித்ததெது. 13

கு - ரை : ஆர்உயிர் - நிறைந்த உயிர்வர்க்கம். நேய அருட்பெரு மான் - சிவபெருமான். பண்ணவர் - தேவர்.

இகபரமுட் குறித்தாலு மெளிதாகக் கொடுப்பதெது
பகவரிய விடையருப் பத்தியளித் தருள்வதெது
சுகமமையும் பெருவீடு கொடுப்பதெது சொன்மினெனத்
தகவினெரு வருக்கொருவர் வினைத்தடுமா றுற்றனரே. 14

கு - ரை : இகபரம் - இம்மை மறுமைகள். பக அரிய - நீங்குதற் கரிய. பெருவிடு - பெருமையுடைய முத்தி. தகவின் - தக்கவாறு.

உறுவரிது தெளியாம லூறுதுயரப் படுகாலை
மறுவரிய நினையடைந்தான் மயக்கமொழி தருமென்றேன்
அறுதுயரத் தினராகி யடைந்தனர் நிற் சரணென்று
வெறுவியரிந் திரனாதி விண்ணவரென் றடையாதார். 15

கு - ரை : உறுவர் - தவசிகள். மயக்கம் ஒழிதரும் - மயக்கம் நீங்கும். அறு துயரத்தினர் - நீங்கிய துயரமுடையவராய். வெறுவியர் - வீணனவர்.

அதிதியரா யடைந்தவருக் கமைஞானச் சுவையமிர்தம்
மதியமைய வூட்டுவையேல் வாழ்வாரென் றுரைத்திருந்தான்
பதியடியிற் கருத்தமைத்துப் பளகுதவிர்ந் துயர்ந்ததவ
நிதியனைய குருமுனி நெடுநேர மதித்திருந்தான். 16

கு - ரை : அதிதியர் - விருந்தினர். மதி அமைய - அறிவு கொள்ளு மாறு. பதி அடியில் - பதிப்பொருளாகிய சிவபெருமான் திருவடிகளில். பளகு - குற்றம். தவநிதி - தவக்கடல்; தவச்செல்வமுமாம்: "கழல் ஏத்தும் செல்வம் செல்வமே." (தேவா). மதித்திருந்தான் - தியானித்திருந்தார்.

முனிவர்வின வியபடியே மூர்த்திதலந் தீர்த்தமிவை
நனிசிறந்த வொருதான நாதனரு ளாற்றெரிந்து
கனிவுமனத் திடையோங்கக் கண்ணருவிப் புனல்வாரப்
புனிதமலர்க் கைகுவித்துப் புகன்றிடுவா னுயினன். 17

கு - ரை : ஒருதானம் - ஒரு இடம். தெரிந்து - ஆராய்ந்து. கனிவு - இரக்கம். ஓங்க - மிக. அருவிப்புனல் வார - அருவியாகிய கண்ணீர் ஒழுக. மலர்க்கை குவித்து - கைகளைக் கூப்பியிருந்து.

நீவிரவா வியபடியே நிரப்புமொரு தலந்தெரிந்தோம்
மாவிரத முனிவரொடு வானேருந் தொழப்படுவ(து)
ஏஇரதம் மால்புவியார்க் கென்றுமினி யதுசொலினும்
நாவிரதம் படுநாகைக் காரோண நற்றலமால். 18

கு - ரை : நீவிர் - நீங்கள். அவாவியபடியே - விரும்பியபடியே. நிரப்பும் - நிறையச்செய்யும். ஏ இரதம் மால் புவியார்க்கு. ஏ மால் - அம்பு திருமால். இரதம் புவி - தேர்பூமி: அதனையுடையார் - சிவபெருமான்: முறைநிரல் நிறை. இரதம் படும் - சுவைபயக்கும், தொழப்படுவது, இனியது. இரதம் படும் காரோணம் என முடிக்க.

அத்தலமான் மியங்கயிலை யண்ணலா ருமையம்மை
கைத்தலங்கூப் பிப்பணிந்து கனிந்திரக்க வருள்செய்தார்
முத்தலமு மொருங்கீன்ற முழுமுதல்வி பணிந்திரக்க
ஒத்தலவா வினுங்கிடையா வொருமுருகற் குரைத்திட்டாள். 19

கு - ரை : மான்மியம் - சிறப்பு. கயிலை அண்ணலார் - சிவபெருமான். அண்ணலார் அருள் செய்தார். முத்தலமும் - மூவுலகும்: என்றது எல்லா உலகங்களையும் என்றபடி. முருகற்கு - முருகக்கடவுளுக்கு.

அந்தமுரு கக்கடவு ளடிதொழுநந் திக்குரைத்தான்
சந்தமலி நந்திபிரான் சனற்குமா ரனுக்குரைத்தான்
மந்தமிலம் முனிவரர்கோன் வாதரா யணற்குரைத்தான்
முந்தனிக ரக்குரவ னெனக்குரைத்தான் முனிவரர்காள். 20

கு - ரை : நந்திக்கு - திருநந்திதேவருக்கு. வாதராயணன் - வியாத முனிவர். முந்தன் நிகர் - முதல்வரை யொத்த.

கற்றவரே புகழ்நாகைக் காயாரோ கணப்பெருமை
உற்றபுரா ணம்பதினெட் டுள்ளுமுயர் சைவத்திற்
சற்றமைதி யென்னுத சனற்குமர சங்கிதையில்
பொற்றசிறப் பொடுபொலியு முபரிபா கம்புகலும். 21

கு - ரை : புராணம் பதினெட்டு - பிரமபுராணம், பதுமபுராணம், வைணவபுராணம், சைவபுராணம், பாகவதபுராணம், பவிடியபுராணம், நாரதீயபுராணம், மார்க்கண்டேயபுராணம், ஆக்கினேயபுராணம், பிரம கைவர்த்தபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம், காந்தபுராணம், வாமனபுராணம், மற்சபுராணம், கூர்மபுராணம், காருடபுராணம், பிரமாண்ட புராணம் என்பன. அவற்றுள் சிவபுராணம் பத்து. சைவ புராணத்திலே சனற்குமர சங்கிதையில் உள்ளதென்க.

முக்கணிறை யவன்விருப்ப முதிர்நாகைக் காரோணம்
மிக்கதல மெனவேத வேதாந்த மெடுத்துரைக்கும்
தக்கவரே யிஃதுணர்வார் மடவர்சாற் றினுமுணரார்
பொக்கமிலத் தலப்பெருமை புகலுவதற் கெளிதாமோ. 22

கு - ரை : விருப்பமுதிர் - விருப்பமிகுந்த. தக்கவர் - கல்வி கேள்வி களால் உயர்ந்தோர். மடவர் - அறிவில்லாதார். பொக்கம் இல் - பொய்ம்மை யில்லாத.

விள்ளரிய மாதவத்தீர் நீவிர்வினு வியபடியே
உள்ளதல மதுவன்றி யுலகில்வே றென்றுளதோ
தள்ளரிய வத்தலமே சார்ந்தாலு நினைத்தாலும்
கள்ளமறச் சொற்றாலுங் கருதியயா வையுங்கொடுக்கும். 23

கு - ரை : விள்ள அரிய - சொல்லுவதற்கு அருமையான. வினவிய படி - கேட்டவாறுள்ள; மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றுனுமுயர்ந்த. கள்ளம் அற - கபடில்லாமல்.

கலையனைத்தும் புகனுகைக் காரோண மான்மியந்தான்
உலைவில்பல மந்தணத்து மந்தணமா யுள்ளதது
நிலையுயரும் பெருந்தவத்தீர் நீவிர்வின வலிற்புகல்கேன்
மலைவிலற மெனக்குமுறு மெனப்புகல்வான் மதிச்சூதன். 24

கு - ரை : கலை அனைத்தும் - எல்லா நூல்களானும். மந்தணம் - இரகசியம். உலைவுஇல் - கேடில்லாத. மலைவு இல் அறம்.

மாதவர்கள் சூதமுனி வரற்சார்ந்து வினவவவன்
ஏதமிலா விடைகொடுத்த திறமறிந்த தெடுத்துரைத்தாம்
பேதமிலா வாதிபுரா ணப்பெருமான் வரலாறு
போதமிலே மாயினுமற் றவனருளாற் புகல்கின்றும். 25

கு - ரை : ஏதம் - குற்றம். பேதம் இலா - வேறுபாடு இல்லாத. போதம் - அறிவு.

புராணவரலாற்றுப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 375

ஆறுவது

ஆதிபுராணப்படலம்

வெள்ளியங் கயிலை காக்கும் மேதகு நந்திப் புத்தேள்
ஒள்ளிய மலர்த்தாள் போற்றி யுயர்சனற் குமார மேலோன்
வள்ளிய கடல்சூழ் வைப்பின் மாதேவன் தலம னேகம்
தெள்ளிய வறுபத் தெட்டே சிறந்தன வென்று சொற்ருய். 1

கு - ரை: மேதகு - மேம்பட்ட. நந்திப்புத்தேள் - திருநந்திதேவர்; புத்தேள் - கடவுள். ஒள்ளிய - ஒளி பொருந்திய. வள்ளிய - வள்ளன்மை யுடைய. வைப்பு - இடம். தெள்ளிய - தெளித்தெடுத்த.

மற்றவற் றினும்வண் காசி வளமலி தில்லை மூதூர்
கற்றவர் புகழு மாரூர் கரைந்தவித் தலமோர் மூன்றும்
அற்றமில் விசேட மென்ரு யவற்றினு மாதி யாயே
உற்றதோர் விசேடத் தான முண்டென்று முரைத்தல் செய்தாய். 2

கு - ரை: தில்லை - சிதம்பரம். கரைந்த - சொல்லிய.

அன்னதை யடியேன் றேற வருள்செய வேண்டு மென்னக்
கன்னலங் குதலை யோர்பாற் கடவுள்போ னித்த மாகிப்
பொன்னவிர் நாக ராச புரமெனும் பெயர்பெற் ருேங்கும்
முன்னநா முரைத்த தென்று மொழிகுவா னந்திப் புத்தேள். 3

கு - ரை: கன்னல் அம் குதலை - வெல்லக்கட்டியை யொத்த அழகிய குதலைச்சொல்: குதலை - பொருட்டெளிவுடன் உள்ளது; குதலை: அன் மொழித் தொகை. பால் - பக்கம். நாகராசபுரம் - நாகபட்டினம்.

தன்னையே நிகர்ப்ப தாய சறுவசங் கார காலம்
முன்னைநா ளுதய மாக முதிர்ந்தவெங் கதிரீ ராறும்
என்னையா முரைப்ப தந்தோ வெழுந்தன வொருங்கு கூடி
மின்னைநேர் கிரணக் கற்றை விரித்தன மிகுவெப் பேற. 4

கு - ரை: சறுவ சங்கார காலம் - நிவிர்த்தி கலைமுதல் சாந்தியதீத கலைவரையிலுள்ள புவனங்களையெல்லாம் ஒடுக்கும் காலம். சங்காரம் - ஒடுக்குதல். கதிர் ஈராறும் - சூரியர் பன்னிருவரும். கிரணக்கற்றை - கிரணத் தொகுதி.

கதிர்பொழி கொடிய வெப்பம் கஞலுற வதனுக் காற்றா
ததிர்வுறு தன்மை யென்ன நடுங்கிய தவனி யந்நாள்
எதிரறு மிணைய வெப்ப மிரித்துமென் றெழுத லேய்ப்பப்
பிதிர்தலில் திரைகள் வீசி யெழுந்தபே ராழி யெல்லாம். 5

கு - ரை : கஞல்உற - நெருங்க. அவனி - பூமி. இரித்தும் - கெட்டோடச் செய்வேம். ஏய்ப்ப - ஒப்ப. பேராழி எல்லாம் - பெருங்கடல் முழுவதும். தற்குறிப்பேற்றவணி.

மடிதலில் வெப்பம் வீசி மன்னுயிர்க் கலக்கண் செய்யும்
கடியவெங் கதிரைப் பற்றக் கடல்கர நீட்டி யாங்குத்
தடியும்வெண் டிரைவான் றோயுந் தம்மையுஞ் சுடுத லாலே
படிமிசை யலறி வீழும் பண்பென மடங்கி வீழும். 6

கு - ரை : மடிதல் இல் - நீங்காத. அலக்கண் - துன்பம். தடியும் - மோதும். படிமிசை - பூமியின்மேல்.

பொருதிரைக் கடலை யுள்ளாற் புணர்கொடு வடவை தீக்க
வெருவர லமைய மேலால் வெங்கதிர் வெதுப்பஞ் செய்ய
ஒருவரு மீன மாதி யுயிரெலா முடல்கு ழைந்தாங்(கு)
இருதலைக் கொள்ளி யுள்ளால் எறும்பென லாய மாதோ. 7

கு - ரை : வடவை தீக்க - வடவா முகாக்கினி தீத்தலால். வெருவரல் - அஞ்சுதல். ஒருவரும் - நீங்கற்கரிய. "இருதலைக் கொள்ளி எறும்பு போல" என்பது ஒருபழமொழி.

எறிதிரை பதுமஞ் சங்க மெடுத்தெறி கின்ற காட்சி
அறிதரப் படைப்பார் காப்பா ரதிகார மிழந்தா ரென்னும்
குறிவெளிப் படுப்பா னன்னார் குலவணை படைகைக் கொண்டு
வெறியவென் றுறப்பந் தாடும் வினோதம்போன் றிருந்த தம்மா. 8

கு - ரை : எறிதிரை - வீசும் அலைகள். பதுமம் - தாமரை. சங்கம் - சங்குகள். படைப்பார் - பிரமர். காப்பார் - திருமால். குறி - அடையாளம். அன்னார் - அப்பிரம விஷ்ணுக்கள். அணை - தாமரைப்பீடம். படை - சங்கு; பாஞ்சசன்னியம். வினோதம் - விளையாட்டு. தற்குறிப்பேற்றம்.

அலையெறி தரமேற் போகு மம்புய மலர்தங் காதற்
றலைவரை யிரந்து வெப்பந் தவிர்த்திடப் போதல் போலும்
உலைதர மறிந்து வீழ்த லுரைத்தமை கொளாமை யாலே
நிலையினி யமையா தென்று நினைந்துகீழ் விழுதல் போலும். 9

கு - ரை : அம்புயமலர் - தாமரைப்பூ. காதற்றலைவர் - சூரியன்: காதல் - விருப்பம். உலைதர - வருந்தும்படி. மறிந்து - மீண்டு. தற்குறிப் பேற்றவணி.

உருத்திரப் பெருமான் மேலிட் டெழுதலு முவண லூர்தி
மருத்தசெங் கமலப் புத்தேள் மறைந்தனர் கழிதல் போலத்
திருத்தகு கடன்மேற் பொங்கிச் செறிதலு முலகத் துள்ள
பொருத்தமார் நதிந தங்கள் போய்க்கழிந் தனம றைந்தே. 10

கு - ரை : உருத்திரப் பெருமான் - உருத்திரமூர்த்தி. உவண லூர்தி - திருமால்: உவணம் - கருடன். மருத்த - மணம் பொருந்திய: மரு - வாசனை. கமலப்புத்தேள் - பிரமன். நதி - மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் ஆறு. நதம் - கிழக்கிலிருந்து மேற்குநோக்கிச்செல்வது.

பொருசின வடவைத் தீக்குத் துணையெனப் போந்து வெய்யோர்
ஒருவரும் வெப்புச் செய்வா ருறுகடற் புனலுக் கின்று
வருதுணை யில்லை யென்று மதித்துற விடுத்தாற் போல
வெருவரு முயிர்கள் கண்ணீர் விடுத்தன வெள்ள மாக. 11

கு - ரை : வடவைத்தீ - வடவாமுகாக்கினி. வெய்யோர் - சூரியர்; பன்னிருவராகலின் செய்வார் என்றார். ஒருவரும் - நீங்குதற்கரிய. உற - பொருந்த, மிகுதியாக. வெருவரும் - அஞ்சும். கண்ணீர் - கண்ணினின்று ஒழுகும் நீர்.

நீரும்வெந் தழலும் பொங்கி நிலத்தினை யலைத்தல் செய்யச்
சாருமற் றிதுவென் னென்று தான்தெரி தரவந் தாற்போல்
ஓரும்வெங் காலெ ழுந்த ததற்கொரு துணையே யாக
நேரும்பல் லுயிரு யிர்க்கு நெட்டுயிர்ப் பெழுந்த தெங்கும். 12

கு - ரை : நீர் - கடல்நீர். தழல் - வடவாமுகாக்கினி. அலைத்தல் - வருத்துதல். வெங்கால் - கடுங்காற்று. உயிர்க்கும் - மூச்சுவிடும். நெட் டுயிர்ப்பு - பெருமூச்சு.

கொடியகாற் றெழுத லோடுங் குவலய மசல மென்னும்
நெடியதன் பெயர்நாட் டாது கம்பிக்கு நிகழ்ச்சி கண்டு
முடியபல் வரையு மப்பேர் மொழிபொருள் நிறுத்தல் செய்யா
கடியகுத் தரங்கு லைந்தாற் புவிநிலை கரைவ தென்னே. 13

கு - ரை : குவலயம் - நிலவுலகம். அசலம் - மலை; சலியாதிருப்பது. கம்பிக்கும் - நடுங்கும். அப்பேர்மொழி - அசலம் என்னும் அப்பெயரைச் சொல்லும். பொருள் நிறுத்தல் - சலியாதிருத்தல் என்னும் பொருளை

நாட்டுதல். கடிய குத்நரம் - வலிமையுள்ள மலை. புவி - பூமி. கரைவது - சொல்லுவது.

இந்நர நிகழுங் காலை யென்றுநித் தியரா யுள்ள
உத்தம மார்க்கண் டேய ருயர்கௌ தமர்வ சிட்டர்
மெய்த்தகா சிபர்த வத்தான் மிகுபுலத் தியர்வி ரும்ப
கத்திய ரருள்சா லாங்கீ ரசரெழு கருணை யாரும். 14

கு - ரை : என்றும் நித்தியர் - எக்காலத்தும் அழிவில்லாத நித்தியப் பொருளாயிருப்பவர். மார்க்கண்டேயர், கௌதமர், வசிட்டர், காசிபர், புலத்தியர், அகத்தியர், ஆங்கிரசர் என்னும் இவர் ஏழு முனிவர்கள்.

குணகடற் கோட்டின் பாங்கர் குறிக்கொளுந் தில்லைத் தென்பால்
அணவியோ சனைமூன் றெல்லை யமைந்தவோர் தான மேவிப்
புணருமித் தான மேலாம் புண்ணியத் தான மென்று
பணவர வணியி னானைப் பரவினர் துதிக்க லுற்றார். 15

கு - ரை : குணகடல் - கீழ்கடல். கோடு - கரை. பாங்கர் - பக்கம். தில்லைத் தென்பால் - சிதம்பர தலத்தின் தெற்குத் திசையில். அணவு - பொருந்திய. யோசனை மூன்று எல்லை - மூன்றுயோசனை அளவு. தானம் - இடம். பண அரவு - படத்தையுடைய பாம்பு. அணியினான் - ஆபரணத்தை யுடைய சிவபெருமான்.

ஒன்றாகிப் பலவு மாகி யருவாகி யுருவு மாகி
நன்றாகித் தீது மாகிச் சுவர்க்கமாய் நரகு மாகித்
தொன்றாகிப் புதிது மாகிச் சோதியா யிருளு மாகி
இன்றாகிப் பின்னு மாய விறைவனே யோல மோலம். 16

கு - ரை : இப்பாடல் முதல் ஐந்து பாடல்கள் துதிப்பாடல்கள். ஒன்று பல, அரு உரு, நன்று தீது, சுவர்க்கம் நரகு, தொன்று புதிது, சோதி இருள், இலதாய் உளதாய் என்க. தொன்று - பழமை. "ஒன்றும் நீயலை அன்றி யொன்றில்லை", "எல்லாமா யல்லதுமாய்" என்ற அருட் பாடல்களையும் நோக்குக.

தரைமுத லுருவோ ரெட்டுந் தழுவிய பிரானே யோலம்
கரையரு நஞ்ச முண்டு கடவுளர்ப் புரந்தா யோலம்
விரைமல ரவன்முன் னாய விண்ணவர்க் கரியா யோலம்
புரைதபு மடியர் வாட்டம் பொறுக்கிலா யோல மோலம். 17

கு - ரை ; தரைமுதல் உரு ஓர் எட்டு - அட்டமூர்த்தி சொரூபம்: நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் சூரியன் சந்திரன் ஆன்மா என்பன. இதனை, "மண்ணீரனல் வளிவானெடு, வெண்ணீர்மதி வெங்கதிருயிர்,

எண்ணிடுரு வியைபசுபதி'' என்பதனுலறிக. விரைமலரவன்: விரை-வாசனை. மலரவன் - பிரமன். கரை அருநஞ்சம் - சொல்லுதற்கரிய ஆலகாலவிடம்; அளவிடற்கரிய நஞ்சம் எனினுமாம். முன் ஆய - முதலாகவுள்ள. புரைதபும் - குற்றம் நீங்கிய.

மூலமு நடுவு மீறு மில்லதோர் முதலே யோலம்
காலமு மளவு மற்றுங் கடந்தொளிர் பொருளே யோலம்
சூலமு மழுவுந் தாங்கித் தோன்றருட் கடலே யோலம்
கோலமுங் குணமு மேவாக் கொண்டலே யோல மோலம். 18

கு - ரை: மூலமும் நடுவும் ஈறும் - தோற்றம் நிலை இறுதிகள்; ''ஆக்கம் அளவு இறுதி யில்லாய்''; ''போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே'' (திருவாசகம்). முதல் - முழுமுதற்கடவுள்: ''மூளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி'' ஒளிர் - விளங்கும். அருட்கடல் - கிருபா சமுத்திரம். கோலம் - உரு. குணம்-சத்துவமுதலிய குணங்கள். கொண்டல்- மேகம்.

மறைமுழு துரைத்தா யோலம் மறையடிப் புனைவா யோலம்
மறைமுழு துகைப்பா யோலம் மறையரை யமைத்தா யோலம்
மறையடி வளைத்தா யோலம் மறைதொழப் படுவா யோலம்
மறைமுடி யமர்வா யோலம் மறைமுடி யுணரா யோலம். 19

கு - ரை: மறைமுழுது - வேதங்கள் முழுமையும்: உம்மை தொக்கது. ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுச் சிவபெருமான் வேத சிவாகமங்களை அருளிச்செய்தார் என்பது. தற்புருட முகத்தில் இருபத்தொரு சாகையோடு இருக்குவேதம் தோன்றியது. அகோரமுகத்தில் யசுர்வேதம் நூறு சாகைகளோடு தோன்றியது. வாமதேவமுகத்தில் சாமவேதம் ஆயிரம் சாகைகளோடு தோன்றி எழுந்தது. சத்தியோசாத முகத்தில் ஒன்பது சாகைகளாகி அதர்வவேதம் தோன்றி நடந்ததென்பர். இறைவருடைய திருவடிகட்கு வேதங்கள் பாதுகையாம். உகைத்தல் - செலுத்துதல். வேதங்களே குதிரைகள். அந்தணர்களைப் பாதுகாத்தலே அமைத்தல். அடிவளைத்தல் - சிலம்பாக அணிதல். வேதங்களால் தொழப்படுபவர் - வேதசிரசாகிய உபநிடதங்களால் எடுத்துப் பேசப்படுபவர். மறைகள் முடியை உணராமை: ''வேதங்கள், ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணிய''ராயிருத்தலின் என்க.

எங்கணு முகத்தா யோலம் எங்கணுஞ் செவியா யோலம்
எங்கணுங் கண்ணா யோல மெங்கணும் வாயா யோலம்
எங்கணு முடம்பா யோல மெங்கணும் புயத்தா யோலம்
எங்கணும் பதத்தா யோல மெங்கணு மானா யோலம். 20

கு - ரை: எப்பொருள்களிலும் சிவபெருமான் கலந்திருத்தல்பற்றி உலகமே உருவமாயினருக்கு முகம், செவி, கண், வாய், உடம்பு, புயம், பதம் ஆகியவை எங்கணுமுள்ளன என்றார்.

எழுமுனி வரரு மிவ்வா றிரங்குபு துதித்த லோடும்
செழுவிய வுலக மூன்றுட் சிறந்துமண் ணுலகு வப்ப
முழுவரை யுதீசிப் பாரை யவாசிப்பார் முழங்கி வெல்ல
வழுவறு தீவோ ரேழுள் நாவலந் தீவு மல்க. 21

கு - ரை : ஏழு முனிவரர்கள் பதினன்காம் பாடலில் கூறப்பட்டனர். இரங்குபு - இரங்கி. உலகம் மூன்று - விண்மண் பாதலம் என்பன. உதீசிப் பார் - வடபுலம். அவாசிப்பார் – தென்புலம். பார் - பூமி. நாவலந்தீவு, இறலித்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, இலவந்தீவு, தெங்கந்தீவு, புட்கரத்தீவு என்னும் ஏழனுள்ளும் நாவலந்தீவு என்பது நாம்வசிக்கும்தீவு. மேருமலையின் தென்பால் நின்ற நாவல்மரத்தின் கனியின்சாறு ஓர் ஆருய் அம்மேருமலையைச் சூழ்ந்து வடபாற்செல்வது சாம்பூநதயாறு. சம்பு - நாவல். அதன் சலத்தையுண்பவர் சுவர்ணமயமாய்ப் பதின்மூவாயிர வருடம் வாழ்வார்கள் என்பர். "கடிகமழு நாவலொன்று தென்பா னின்ற காரணத்தால் பாரதன்றன் கண்டமுற்றும், இடனுடைய நாவலந்தீ வெனப் பேர் பெற்றது" என்பதனலறிக, "நாவலந் தண்பொழில் வீவின்று விளங்க (பெரும்பாணுற்-465) "நாவலந் தண்பொழில் வடபொழி லாயிடைக், குரு கொடு பெயர் பெற்ற மால்வரை யுடைத்து" (பரிபாடல் 5:8-9).

பாயவீ ரொன்பான் பாடை பரந்தபஃ றேயத் துள்ளும்
ஆயவண் டிராவி டஞ்சா ரழகிய தேய மோங்க
மேயவத் திராவி டஞ்சார் மிக்கதே யத்தி னுள்ளும்
தோயநல் வளஞ்சி றந்த சோழநா டுவகை பூப்ப. 22

கு - ரை : ஈரொன்பான்பாடை - பதினெட்டுப்பாடை; "செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந் தமிழ் நிலத்தின் கண்ணும் பதினெண்மொழியுள் தமிழும் மேற்கூறும் வடசொற்குக் காரணமாகிய ஆரியமும் ஒழிந்த பதினறு மொழியும் ஆம்". திராவிடம் - தமிழ். தேயம் - தேசம். திராவிடம் என்பது தமிழ்மொழிக்குப் பெயராய் வடமொழியில் வழங்குவது. திரு என்னும் தாது ஓட்டுதல் என்னும் பொருளுடைமையின் திராவிடம் என்பது அதனடியாகப் பிறந்த பெயராய் எத்தகைய வினையையும் ஓட்டும் மொழி எனப் பொருள்தரும். "எவ்வினையும் ஒப்புதலால் திராவிடம் என் றியல்பாடை." (காஞ்சிப் - தழுவக் - 243), பாடை என்றது மொழியின் இலக்கணத்தை.

அணிகிளர் சோணுட் டுள்ளு மான்றகா விரிக்குத் தென்பால்
மணிகிளர் மகிழ்ச்சி பொங்கி வடபாலே வெற்றி கொள்ளத்
திணிகிளர் தென்பான் மேலைத் திசையினைச் சிறப்பு வாய்ந்து
துணிகிள ரறஞ்சால் கீழைத் திசைவென்று துள்ளா நிற்க. 23

கு -ரை : ஆன்ற - அகன்ற. வடபால் - வடதிசை. கீழைத்திசை - கிழக்குத்திசை.

பழுதறு மறைக ளாலும் பங்கயத் தமர்வோ னாலும்
செழுவனத் தொடையோ னாலும் தேடியு மின்னுங் காணா
முழுமுத லிலிங்க மாக முளைத்தனன் முளைத்த லோடும்
எழுமுனி வரருங் கண்டா ரெண்ணிலா வுவகை பூத்தார். 24

கு -ரை : பழுது அறு மறை - குற்றமற்ற வேதங்கள். பங்கயத்து அமர்வோன் - பிரமன். வனத்தொடையோன் - திருத்துழாய் மாலையை அணிந்த திருமால். முழுமுதல் - முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான். எழு முனிவரர்கள் - மார்க்கண்டேயர் முதலியோர்.

தோற்றமில் லாத பெம்மான் தோற்றிய தென்னை யென்பார்
சாற்றருங் கருணை யன்றிச் சாற்றல்வே றில்லை யென்பார்
ஏற்றநந் தமக்கு நல்கி யாளுதற் கெண்ண மென்பார்
மாற்றரும் வெள்ளஞ் செய்யும் வலியினி யெவனு மென்பார். 25

கு - ரை : தோற்றம் - பிறப்பு. தோற்றம் இல்லாத பெம்மான் - சிவ பெருமான். "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்" என்றார் பிறரும். "கருவினாலன்றியே கருவெலா மாயவன்" - (தேவார). "கருவின்றி நின்ற கருவாய்" - (கந்தர்கலி). கருணை - அருள். "அருளே உருவாய்" "கருணை திருவுருவாய்" (கந்தர் கலி). ஏற்றம் - உயர்வு.

இன்னண முனிவர் கூறி யிறைஞ்சிநின் றிடுமக் காலை
முன்னரு மிலிங்க மூர்த்தி மொழிந்தவோ ரறுபத் தெட்டும்
நன்னர்மற் றுள்ள யாவும் நயக்குமத் தலத்தை மேவிப்
பன்னருஞ் சிறப்பின் வைகி யமர்ந்தன பலரு முய்ய. 26

கு - ரை : அறுபத்தெட்டும் - அறுபத்தெட்டுத் தலங்களும். நன்னர் - சிறந்த. நயக்கும் - விரும்பும். மற்றுள்ள யாவும் - ஏனைய தலங்களும். இலிங்கமூர்த்தி அறுபத்தெட்டும், மற்றுள்ள யாவும் அமர்ந்தன.

மேயவச் சிறப்புங் கண்டு மேன்மேலு மிறும்பூ துற்று
நேயமிக் குதிப்ப நிற்கும் முனிவரர் நேரே காணத்
தூயவவ் விலிங்க நின்றுந் தோன்றினர் சோமாக் கந்தர்
ஆயநல் வடிவி னைய ரவர்க்கினி தருளிச் செய்வார். 27

கு - ரை : இறும்பூது - ஆச்சரியம். நேயம் - அன்பு. ஐயர், சோமாக் கந்தர் வடிவின் தோன்றினர். அவர்க்கு - அம்முனிவர்களுக்கு.

நம்மடிக் கன்பு சான்ற முனிவிர்நா நவிலுஞ் சொன்னும்
செம்மனத் தமையக் கொண்மின் சிருட்டியாங் கால மட்டும்
அம்மவின் விலிங்க மூலத் தமைதரு குகையுண் மேவி
விம்மலற் றமர்மி னென்று கருணையின் விளம்பி னூரே. 28

கு - ரை : நாம் நவிலும் சொல் - நாம் சொல்லும் சொல்லை. நும் செம்மனத்து - உம்முடைய செவ்விய மனத்தில். அமைய - பொருந்த. விம்மல் - பொருமுதல்.

அண்ணலா ருரைத்த வார்த்தை யஞ்செவி நிறைய வேற்றுக்
கண்ணலார் முனிவ ரியாருங் கண்டியா வருமு யும்பாக்
கெண்ணலா ரிக்கோ சப்பி னென்றும்வீற் றிருத்தல் வேண்டும்
நண்ணலார் புரம்பொ டித்தீ ரென்னலு நயந்தா ரையர். 29

கு - ரை : அண்ணலார் - சிவபெருமான். கண்ணல் ஆர் - எண்ணு தற்கரிய. உயும்பாக்கு - உய்யும் பொருட்டு: பாக்கு - வினையெச்சம். இக் கோசப்பின் - இந்த இலிங்கத்தின் பின். நண்ணலார் - பகைவர்.

முனிவரர் செயும்விண் ணப்ப முகிழ்நகை யரும்ப வேற்றுத்
தனியமாிலிங்கப் பின்னர் தண்ணருள் கொழிப்ப வைகிக்
கனிதரு முயிர்கட் கெல்லாம் காட்சிதந் தருளா நின்றூர்
புனிதமார் மறைக்கு மெட்டாப் பூர்ணப் பொருளா யுள்ளார். 30

கு - ரை : முகிழ்நகை அரும்ப - புன்னகை தோன்ற. இலிங்கப் பின்னர் - இலிங்கத்தின்பின். வைகி - வீற்றிருந்து. பூரணப்பொருள் - நிறைந்தபொருள்.

எழுமுனி வரருக் காக விணையிலா விலிங்க மாக
முழுமுதன் முளைத்த வாறு முளைத்தவவ் விலிங்க நின்றும்
தொழுமருட் சோமாக் கந்தர் தோன்றியாங் கமரு மாறும்
செழுமல ரயனு மாலும் தேர்ந்துவந் திறைஞ்சல் செய்தார். 31

கு - ரை : இணையிலா - ஒப்பில்லாத. முழுமுதல் - முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான். முளைத்தவாறும்-தோன்றியவிதமும். தேர்ந்து- தெளிந்து.

இருவருட் பிரம னந்த விலிங்கத்தி னடிய மர்ந்தான்
மருவரு நடுவட் டிண்டோண் மணத்துழாய் மால மர்ந்தான்
பொருவரு முனிவ ரோர்பாற் பொலிதகை யமர்ந்து வாழ்ந்தார்
வெருவரு முனிவர் மற்றோர் விழைவினவ் விலிங்கஞ் சார்ந்து. 32

கு - ரை : இலிங்கத்தின் அடி பிரமபாகம். நடு விஷ்ணுபாகம். ஓர் பால் - ஒரு பக்கத்தில். முனிவரும் மற்றோரும். விழைவின் - விருப்பத் தோடு.

புள்ளுமா விலதை யாகிப் பக்கத்திற் பொருந்தி வாழ்ந்தார்
கொள்ளுமவ்வண் சிருட்டி நாளிற் குலவுமவ் விலிங்க நின்றும்
தெள்ளுநான் முகத்தோன் தோன்றிச் சிருட்டிக ளனைத்தும் செய்
நள்ளுமா யவனுந் தோன்றி நலங்கெழு காப்புச் செய்தான். [தான்

கு - ரை : சிருட்டி நாளில் - படைப்புக் காலத்தில். நள்ளு - நடு விடத்து. மாயவன் - திருமால். புள் - பறவை. மா - விலங்கு. இலதை - கொடி.

முனிவரர் வெளியே வந்து முனிவறத் தரிசித் தேத்திக்
கனிவொடு வாழ்ந்தி ருந்தார் காலவீற் றனைத்துஞ் சேர
இனிதமர் தலினத் தானஞ் சிவராச தானி யென்பார்
புனிதமுன் மொழிமுத் தானம் புராணமென் றிசைப்ப ராய்ந்தோர்.

கு - ரை : முனிவு அற - வெறுப்பின்றி. காலவீற்று - கால முடிவில். முத்தானம் - இலிங்கத்தின் அடி, நடு, குகை ஆகியவை. புராணம் - பழமை.

கரையுமத் தலமூன் றற்கு முந்தியாங் கார ணத்தால்
புரையிலித் தலத்தை யாதி புராணமென் றிசைப்ப ரியாரும்
அரையர வசைத்து ளாரு மாதிபு ராண ரானுர்
வரையறு சிறப்பு வாய்ந்த மந்திர மிப்பே ராமால். 35

கு - ரை : ஆதிபுராணம் - தலப்பெயர். ஆதிபுராணர் - சிவபிரான். அரவு அசைத்துளார்: அசைத்தல் - கட்டுதல். ஆதிபுராணர் என்பது மந்திரம் ஆம்.

அரியவிந் நாம மாய மந்திர மறைந்தோர் தீமை
முரியநன் கடைந்து வாழ்வார் மொழிந்தன முணர்தி யென்று
தெரியவாங் குரைத்தா னெங்கள் சின்மய நந்திப் புத்தேள்
பிரியமுற் றளவா வோகை பெற்றனன் சனற்கு மாரன். 36

கு - ரை : நாமம் - பெயர். சின்மயன் - ஞானமயன். நந்திப்புத் தேள் - திருநந்திதேவர். புத்தேள் - புதுமையையுடையவர். அதாவது நரை, திரை, மூப்பு, பிணி, பசி, துயில் முதலியன இன்றி இளமை, அழகு முதலி யன வாய்க்கப்பெற்றுப் புதுமையாக விளங்குபவர்; அறிவுடையோர் எனினு மாம். அளவா ஓகை - அளவில்லாத மகிழ்ச்சி. ஓகை=உவகை.

புண்ணிய மூர்த்தி யாதி புராணனென் றொருபேர் பெற்ற
தெண்ணிய வெடுத்துச் சொற்று மினிக்கலை யனைத்துங் கற்றுத்
திண்ணிய வறிவான் மிக்கோர் சிவராச தானி யென்ன
நண்ணிய தலத்தின் மேன்மை நவிலுவஞ் சிறிது மாதோ. 37

கு - ரை : புண்ணியமூர்த்தி - சிவபிரான். எண்ணிய - தியானித்து.

ஆதிபுராணப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 412

ஏழாவது

தலவிசேடப்படலம்

நாடுசனற் குமரமுனி நந்திபிரா னடிபணிந்து
தேடுதல மான்மியமுந் தெரியவருள் புரியென்னப்
பாடுகயி லைக்கிரியிற் பரமன்பாற் பலகலையுங்
கூடுதிற முறத்தெளிந்து குரவுபூண் டமரனையான். 1

கு - ரை : தலமான்மியம் - தலச்சிறப்பு. பாடு - பெருமை. உறத் தெளிந்து - மிகவும் தெளிந்து. குரவு - ஆசிரியத்தன்மை.

கற்பமொளிர் திருமேனிக் கண்ணுதனு யகன்பலவி
கற்பமுநீத் தினிதமருங் காட்சியென வெண்ணிறந்த
கற்பமுத லீறுணர்ந்து களித்துயர்ந்தோங் கிடுமமரர்
கற்பமலர் பறித்தேத்துங் காமர்வளக் கயிலாயம். 2

கு - ரை : கற்பம் ஒளிர்திருமேனி: கற்பம் - விபூதிவிசேடம். கண்ணுதல் - சிவபெருமான். பலவிகற்பமும் நீத்து - பலவாகிய வேறுபாடுகளும் நீங்கி. எண்ணிறந்த கற்பம் - அளவிறந்த கற்பகாலங்கள். முதல் ஈறு - தோற்ற ஒடுக்கம். அமரர் - தேவர். கற்பமலர் - கற்பகமலர். காமர் வளம் - விருப்பத்தைத்தரும் வளப்பம்.

வெண்பளிங்கிற் றிருவுருவும் வெண்ணீறும் வெள்விடையும்
வெண்பிறையு மொருகுரண்ட வெள்ளிறகும் பசுந்தும்பை
வெண்மலரும் வெண்புனலும் வெண்மணியும் விழைந்தாற்கு
வெண்ணிறமே பொருத்தமென விளர்த்ததுயர் திருக்கயிலை. 3

கு - ரை : கயிலாயமலை வெண்ணிறமாக இருத்தற்குரிய காரணத்தைக் கற்பிக்கின்றார். பளிங்கு - படிகம். வெள்விடை - வெள்ளிய இடபம். குரண்ட வெள்ளிறகு - கொக்கின் வெள்ளிய இறகு. வெண்புனல் - கங்கை. வெண்மணி - படிகமணி. விளர்த்தது - வெண்ணிறத்தை அடைந்தது.

ஆங்குவிழைந் தணுகரியோ னலங்கொளியான் மெய்விளர்த்துத்
தீங்குவிடம் புரிகருமை தீர்ந்தனமென் றுளமகிழ்வான்
பாங்குமலி செம்பொனிறப் பங்கயத்தோன் மெய்விளர்ப்புற்(று)
ஈங்குவிளர்ப் புற்றதிற மென்னேயென் றுளங்கவல்வான். 4

கு - ரை : விழைந்து - விரும்பி. கரியோன் - திருமால். தீங்கு விடம் புரி கருமை - தீமையைத்தரும் ஆலகால விடம் தாக்கிய கருநிறம்; "கடல் கடைந்திடச் செல்லுறாஉம் வெள்ளைமால் கடுப்பப், படலை வெண்முகில் பரவைநீருழக்கிவாய் மடுத்து, விடமெழுந்தென மீண்டஅம் மாயனை விழைய, உடல்கறுத்துவின் நெறிப்படர்ந் தெய்யென மீண்டு " (காஞ்சிப் - திருநாட்டு - 2) அலங்கு ஒளியால் - விளங்குகின்ற ஒளியால். செம்பொன் நிறப் பங்கயத்தோன் - பிரமன். கவல்வான் - கவலைகொள்வான்.

அடியமர்நீன் மணிப்பாறை யாயதுதா மதகுணமாம்
ஓடிவறுசெம் மணிப்பாறை யதன்மேலா லொளிவிடுதல்
நெடியவிரா சதமிவைமேல் வெண்கயிலை நிலவிடுதன்
முடியமைசத் துவமிவற்றான் முக்குணத்தின் றரம்விளக்கும். 5

கு - ரை : நீல்மணிப்பாறை - நீலநிறமுள்ளபாறை. ஓடிவு அறு - நீங்குதலில்லாத. செம்மணிப்பாறை - மாணிக்கப்பாறை. நீலநிறம், சிவந்த நிறம், வெண்ணிறம் இவைகள் முறையே தாமதம், இராசதம், சத்துவம் ஆகிய குணங்களாம்.

பொறையமைபு நேமிவரை போற்றுபெருங் கரையாகும்
நிறைகடனீர் நடுப்படர்ந்த நெடியகொடி மண்ணுலகம்
அறைதருவெண் மலர்கயிலை யதிற்பொலிதே னம்பெருமான்
முறையின்மதுக் கவரளிகண் மொய்த்தவயன் மான்முதலோர். 6

கு - ரை : நேமிவரை - சக்கரவாளகிரி. கடல்நீர் - சமுத்திர ஜலம். வெண்மலர் - வெண்மையாகிய மலர். நேமிவரை கரை; கடல்நீர்; கொடி மண்ணுலகம்; வெண்மலர் கயிலை; தேன் நம்பெருமான்; அளிகள் அயன் மால் முதலோர். அளிகள் - வண்டுகள். முற்றுருவகம்.

வாடாத பசுஞ்சோலை வளையவத னடுப்பொலியும்
விடாத கதிர்விரிக்கும் வெள்ளிமால் வரைசிதைவு
கூடாத பரிவேடங் கொண்டமா மதிபொருவும்
ஓடாத களங்கமதற் குள்ளதிதற் கென்றுமிலை. 7

கு - ரை : சோலைவளைய - சோலைசூழ. விடாத - அழியாத. வெள்ளிமால்வரை - கயிலாயம். பரிவேடம் - ஊர்கோள். சிதைவு - அழிதல். சோலை பரிவேடம் ஆம். வெள்ளிமலை மதிபொருவும். ஓடாத களங்கம் - நீங்காத மறு. அதற்கு - சந்திரனுக்கு. இதற்கு - வெள்ளிமலைக்கு. தற்குறிப்பேற்றம்.

பரசிவனைத் தொழற்கேறும் பாம்புகள்செம் மணிகொழித்துக்
கரவின்முடி நின்றிழியுங் கனவருவித் திரளேய்க்கி
உரவமையுந் தரிசனஞ்செய் துரகங்கண் மீண்டனநாம்
வரவுபா ணித்தனமென் றெண்ணியுள மாழாக்கும். 8

கு - ரை : சிவபெருமானை வணங்குதற்கு ஏறும்பாம்புகள் நாம் உரிய காலத்தில் வருதற்குத் தாமதித்தோம் என்று எண்ணி மனம் மயங்கும். மாணிக்கக் கற்களை வீசிக்கொண்டு உச்சியினின்று ஒழுகும் பெரிய அருவித் திரளைப் பார்த்து மாழாக்கும் என்க. உரகங்கள் - பாம்புகள். செம்மணி - மாணிக்கக் கற்கள். இழியும் - ஒழுகும். அருவித்திரள் - அருவிக்கூட்டம். பாணித்தனம் - தாமதித்தோம். மாழாக்கும் - மயங்கும்.

அரமகளி ரடிவாரத் தமைந்தசுனை தொறுங்குடைய
விரவுநறுங் குங்குமத்தாற் சேந்தநீர் விளங்கிடுதல்
உரவுமிளிர் முரணரக்க னுடனெரித்த நாளெழுந்து
பரவுநெய்த்தோர் மேலெழுந்து படர்ந்தினுநிற் பதுகாட்டும். 9

கு - ரை : அரமகளிர் - தெய்வப்பெண்டிர். சுனைதொறும் - சுனைகள் தோறும். குடைய - மூழ்க, நீராட. சேந்து - சிவந்து. உரவு - வலிமை. முரண் அரக்கன் - மாறுபட்ட இராவணன். உடல்நெரித்த நாள் - கயிலாய மலையை எடுத்து உடல் நெரிபட்ட காலத்தில். நெய்த்தோர் - குருதி.

மறையொலியு மாகமங்கள் வழங்கொலியும் பலபூதர்
நிறையொலியும் பல்லியத்து நிகழொலியு மமரரிடும்
முறையொலியும் பன்முனிவர் முழக்கொலியு மெவ்வொலியுங்
குறையொலியா யிடவெழுந்து குலவுமவ் வரைச்சாரல். 10

கு - ரை : பூதர் - பூதகணங்கள். பல் இயம் - பலவகை வாத்தியங் கள். அமரர் இடும் முறை - தேவர்கள் செய்யும் முறையீடு. குறைஒலியாய் - குறைந்த ஒலியாய். வரைச்சாரல் - மலைப்பக்கம்.

தங்களினத் தொவ்வொன்று தலங்கடொறும் நிழல்செய்யப்
பொங்குபெரும் புண்ணியத்தாற் போந்தேறி வாழ்வனபோல்
தெங்குகடம் பார்நாவ றேமாவா மலகமுதன்
மங்குதலில் பலவிருக்கம் வளைந்துதழை வனநாளும். 11

கு - ரை : தலங்கள் தோறும் தலவிருட்சங்கள் உள்ளன. அவை அங்குள்ள மூர்த்திகளுக்கு நிழல் செய்த புண்ணியத்தால் இந்த மலையிலே வந்து ஒருங்குகூடி வாழ்கின்றன என்கிறார். அவை தெங்கு, கடம்பு, ஆத்தி, நாவல், தேமா, நெல்லி முதலிய பலமரங்கள். இவைகள் தழைத்துச் சூழ்ந்து விளங்குவனவாம். ஆர் - ஆத்தி. ஆமலகம் - நெல்லி. விருக்கம் - மரம்.

இத்தகைய திருமலைமே லினன்கதிரா யிரங்கவர்ந்து
மொய்த்தவொழுங் குறநிறுவி முழுமதிமே லியைத்ததெனச்
சுத்தமிகு பொன்மணியாற் றொழினுண்மை பெறவமைத்த
அத்தகைய வனப்பொழுகு மாயிரக்கான் மண்டபத்துள். 12

கு - ரை : மேலே சொல்லிய திருமலையின்மேல் ஆயிரக்கால் மண்டபம் ஒன்றுள்ளது. திருமலை - கயிலாயமலை. இனன் - சூரியன். கதிர் - கிரணம். நிறுவி - நிறுத்தி. முழுமதி - பூரணச்சந்திரன். மேல் இயைத்தது - மேலே பொருத்தியது. பொன்மணியால் - பொன்னாலும் மணிகளாலும். வனப்பு - அழகு.

மறைநான்கு மெனச்செம்பொன் வயங்குநாற் காற்குறட்டின்
முறைவாய்ந்த வுபநிடத முழுதுமெனு மரியணைமேற்
கறைவாய்ந்த தொழியும்வகை வெண்மதியங் கலந்ததென
நிறைவாய்ந்த விருளனுக்கும் வெண்டரளக் குடைநிழற்கீழ். 13

கு - ரை : அந்த மண்டபத்தில் நான்கு வேதங்கள் போல நாற்காற் குறடு உள்ளது. அதில் உபநிடதங்கள் முழுவதும் எனும்படி சிங்காதனம் உள்ளது. அரியணை - சிங்காதனம். கறை - முயற்கறை. பூரணச் சந்திரன் பொருந்தியதென்று சொல்லும்படியாக வெள்ளிய முத்துக்குடை நிழலின் கீழ். இருள் அனுக்கும் - இருளைக்கெடுக்கும். நிறைவாய்ந்த - செறிந்துள்ள.

ஆயபுகழ்க் கொழுந்துமிசை யவாவியெழு திறமான
மேயமணிக் காற்கவரி யிருபுடையும் விரவியெழ
நேயமிகு பிரதாப நீர்மையுமே லெழுவதெனப்
பாயபவ ளச்சிவிறி பாங்கரிளங் காலெழுப்ப. 14

கு - ரை : புகழ்க்கொழுந்து - புகழாகிய கொழுந்து. மிசை - மேல். அவாவி - விரும்பி. எழுதிறம்மான - எழுகின்ற தன்மையை ஒப்ப. மணிக்கால் கவரி - இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற கால்களையுடைய சாமரங்கள். விரவி - கலந்து. புகழ் - வெண்மைநிறம். பிரதாப நீர்மையும் - பிரதாபத்தின் தன்மையும். பவளச்சிவிறி - பவளங்கள் பதிக்கப்பெற்ற விசிறிகள். இளங்கால் - இளங்காற்று. புகழ் - கொடுத்தலால் வருவது. பிரதாபம் - பகையை வென்றமையால் வருவது. புகழை வெண்மையாகவும் பிரதாபத்தைச் செம்மையாகவும் கூறுதல் நூல்மரபு.

குடையொலிய லாலவட்டங் கோணுத கதைகோணன்
மிடைதடிமுற் பலவிருதா வளிகளுநேர் விளங்கியிட
உடைகடலு முகஞ்சாய வுற்றகுட முழவாதி
அடைதருபல் லியம்பலவு மடங்காத முழக்கெழுப்ப. 15

கு - ரை : ஒலியல் - சிலை, பூமாலை. கோணல் மிடைதடி - வளைதடி. விருதாவளி - விருதுகளின் வரிசைகள். முகஞ்சாய - முகங்கவிழ. குடமுழவு - குடமுழா எனும் வாத்தியம். பல்இயம் - பலவகை வாத்தியங்கள்.

மாகதர்கள் புகழ்ந்தேத்த மாதரரம் பையர்நடிப்ப
மோகமிகு தும்புருநா ரதர்முனிவில் யாழ்தழுவிப்
பாகமிகு மிசையமுதம் பண்புகமழ் தரவுகுப்பச்
சோகமிலாப் பூதகணந் துள்ளியிடந் தொறுநெருங்க. 16

கு - ரை: மாகதர் - இருந்தேத்துவோர். சூதர் - நின்றேத்துவோர். ''சூதர் வாழ்த்த மாகதர் நுவல - நின்றேத்துவார் வாழ்த்த இருந்தேத்துவார் புகழைச்சொல்ல'' (மதுரைக்காஞ்சி - 670). மாதர் - விருப்பத்தைச் செய்வோர்; ''மாதர்காதல்'' (தொல்). அரம்பையர் - தெய்வமகளிர். மோகம் மிகு - மிக்க விருப்பத்தைத்தரும். தும்புரு நாரதர் - தும்புருவும் நாரதரும் ஆகிய தெய்வ முனிவர்கள். முனிவு இல் யாழ் - வெறுப்பில்லாத யாழ். நாரதர் மகதி என்னும் வீணைக்குத் தலைவர். மகதி என்றது பேரியாழ் எனக்கொள்க. அருங்கலம் பெருங்கலம் என்பனவும் அது. அஃதாவது கோட்டினது அளவு பன்னிருசாணும், வணர் அளவு சாணும், பத்தர்அளவு பன்னிருசாணும், இப்பெற்றிக்கேற்ற ஆணிகளும் திவவும்உந்தியும் பெற்று, ஆயிரம் நரம்பு தொடுத்து நடப்பது. அது, ''ஆயிர நரம்பிற் ருதியாழ் ஆகும், ஏனையுறுப்பு மொப்பன கொளலே, பத்தரளவுங் கோட்டினதளவும், ஒத்தவென்ப விருமூன்றிரட்டி, வணர்சாணொழித்தென வைத்தனர் புலவர்'' என்ற நாடகத்தமிழ்ச் சூத்திரத்தாற் கண்டது. இசையில் பெரியோன் நாரத முனியாகலானும், ''தலமுதலூழியிற் றானவர் தருக்கறப், புலமகளாளர் புரிநரப்பாயிரம், வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச், செலவுமுறையெல்லாம் செல்கையிற் றெரிந்து, நாரத கீதக் கேள்வி நுனித்து'' எனப் பெருங்கதையென்னும் உதயண காவியத்து உரைத்துளாராகலானும், பேரியாழ் முனிவரனுர்க்கே பொருந்தியதாமென்க. தும்புருநாரதர் சங்கீத சாகித்தியங்களில் வல்லவர் என்பர். பாகமிகும் – பக்குவம் மிகுந்த. உகுப்ப - சிந்த.

சித்தர்சா ரணரியக்கர் திகழ்விச்சா தரர்கருடர்
ஒத்தபுகழ்க் காந்தருவ ரோங்கியவிண் ணவரவுணர்
வித்தகரிந் திரர்பிரமர் மிளிர்சனூர்த் தனர்முதலாம்
பத்தர்பல ரெதிர்நின்று பாங்குபெறச் சேவிப்ப. 17

கு - ரை: சித்தர்முதல் அவுணர்வரையில் உள்ளவர் பதினெண் கணங்களைச் சார்ந்தவர். பதினெண் கணங்களாவார்: தேவரும், அசுரரும், முனிவரும், கின்னரரும், கிம்புருடரும், கருடரும், இயக்கரும், இராக்கதரும், கந்தருவரும், சித்தரும், சாரணரும், வித்தியாதரரும், நாகரும், பூதமும், வேதாளமும், தாராகணமும், ஆகாசவாசிகளும், போகபூமியோரும் என இவர்; பிறவாறும் உரைப்பர்.

திருவடியிற் கழலொலிப்பச் செறிபுற்றோ லரைப்பொலிய
ஒருவரும்வெண் டலைமாலை யுரகங்க ளொடுதுயலக்
குருமதிசெஞ் சடைவிளங்கக் குளிர்முகக்கண் ணருள்கொழிப்பப்
பொருவரிய திருமுகத்துப் புல்லியவெண் முறுவலெழ. 18

கு -ரை : கழல் - வீரக்கழல். புல் தோல் - புலித்தோல். ஒருவரும் - நீங்குதற்கரிய. வெண்டலைமாலை - வெள்ளியதலை மாலைகள். அவை பிரமர்களின் தலைமாலைகள். உரகங்கள் - பாம்புகள். துயல - தொங்க. குருமதி - இளம் பிறைச்சந்திரன். புல்லிய வெண் முறுவல் - புன்சிரிப்பு. "கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்" என்றது காண்க.

அண்டபகி ரண்டமெலா மொருங்கீன்ற வன்னையெனுந்
துண்டமதிப் பிறைநுதலா ளொருபாகந் துதைந்தமரக்
கண்டவிரு மைந்தர்களு மிருபாலுங் கலந்திருக்கக்
கொண்டமகிழ்ச் சியினமர்ந்தான் கோதிலா ருளப்பெருமான். 19

கு -ரை : அண்டபகிரண்டம் எலாம் - அண்டத்தினுள்ளும் புறம்பும். ஒருங்கு ஈன்ற - ஒருசேரப்பெற்ற. அண்டபகிரண்டம் என்றது அங்குள்ள சர அசரப்பொருள்களை. "பெற்றாள் சகதண்டங்களும்" (வில்லிபார). பிறைநுதலாள் - உமாதேவியார். துதைந்து - நெருங்கி. இருமைந்தர் - மூத்த பிள்ளையார் இளையபிள்ளையார் ஆகிய இருவரும். இருபாலும் - இரண்டு பக்கமும். கோதிலார் உளப்பெருமான் - குற்றமில்லாத மெய்யடியார்களுடைய உள்ளத்தின்கண் வீற்றிருக்கும் சிவபெருமான். "கள்ளத்திருக் கோயில் காணலாம் கண்டீர் நம், உள்ளத் திருக்கோயி லுள்." என்றார் குமரகுருபரசுவாமிகளும்.

இருந்தபிரா னவரவர்தங் குறைவினவி யிறைகொடுத்துத்
திருந்தவம ரிடமடையச் செலுத்தியபின் றனிக்கண்டு
பொருந்தவுமை யாள்வினவப் புண்ணியனன் றுரைத்ததிறம்
அருந்தவர்க்கே யாவதென நினைந்துரைப்பா னுயினான். 20

கு - ரை : குறை வினவி - மனக்குறைகளைக் கேட்டருளி. இறை கொடுத்து - அருள்செய்து. இறை - விடை. அமர் இடம் - இருக்கை. தனிக் கண்டு - தனியே இருத்தலைப் பார்த்து.

வேறு

புவனங்க ளனைத்து மீன்ற பொங்கரு ளெம்பி ராட்டி
கவனமால் விடையாற் றாழ்ந்து காயாரோ கணஞ்சி றந்த
தெவனதி விருப்ப முற்று யெனக்குமேன் மேல்வி ருப்பாம்
அவனியிற் சிறந்த யாவை யருளென வறைய லுற்றாள். 21

கு - ரை : எம்பிராட்டி - உமாதேவியார். கவனம் மால்விடையான் - வேகமாகச்செல்லும் திருமாலாகிய இடபத்தை வாகனமாகக் கொண்ட சிவபெருமான். மால்விடை - பெரிய இடபம் எனினும் பொருந்தும். அவனி - பூமி.

பனிவரை தவஞ்செய் தீன்ற பான்மொழி யணங்கு கேண்மோ
கனிவள னமைந்த விந்தக் கயிலாய வரையே போல
முனிதலில் விருப்பு வாய்ந்த தலம்பல மொழிய வற்றில்
நனிவிருப் பமைந்த தொன்றே நவின்றமற் றவைவி ரிப்பாம். 22

கு . ரை : பனிவரை - இமயமலை. பான்மொழி அணங்கு - உமாதேவி: அண்மைவிளி. கனிவளன் - மிக்கவளப்பம். நவின்ற - சொல்லிய.

மிடைபல பறம்பு மொவ்வோர் விசேடணங் கொண்டே மேவ
அடைமொழி யொன்றுஞ் சாரா தமரொரு பறம்பு முண்டால்
உடைதிரைப் புவிவா ழெந்த வுயிரடைந் திறந்த போதுந்
தடையிலெம் முருவ நல்குந் தனிப்பெருந் தலமு முண்டால். 23

கு - ரை : பறம்பு - மலை. அடைமொழி ஒன்றும் சாராது அமர் ஒரு பரம்பு - திருமலை; கயிலாயம். தனிப்பெருந்தலம் - ஸ்ரீகாசி. எம் உருவம் - சிவசாரூபம்.

மன்னுமிவ் விலங்க லென்றும் வடகயி லைப்பேர் மேவத்
துன்னுதென் கயிலை யாகித் தூத்தவக் காள னத்தி
என்னுமிவ் விரண்டு மன்பி னிகலுபு பூசை யாற்றப்
பன்னும்வான் பேறு நல்கிப் பதியுமோர் சிலம்பு முண்டால். 24

கு - ரை : இவ்விலங்கல் - இந்தமலை. தென்கயிலை - சீகாளத்திமலை. காளன் அத்தி என்னும் இரண்டும் பூசித்த சிறப்புடையது. காளன் - பாம்பு. அத்தி - யானை. அன்பின் - பக்தியினுல். இகலுபு - மாறுபட்டு; என்றது பகையுடன் என்க. வான்பேறு - சிறந்தபேறு. சிலம்பு - மலை.

மறையெனு மாவி னீழல் வடுவிலா நமக்கு நீசெய்
மறைவிலா வடுக்க டாங்கி வாழ்தரு வைப்பு முண்டால்
அறையொரு பிறப்பு மில்லே மம்மையென் றழைக்கப் பெற்றுள்
அறைசிலம் போதை கேட்க வாடுமோர் தலமு முண்டால். 25

கு - ரை : மறை எனும் மா - வேதங்கள் என்று சொல்லும் மாமரம். வடுஇலா - குற்றமில்லாத. மறைவிலாவடு - நீங்காத தழும்புகள்: என்றது முலைத்தழும்பும் வளைத்தழும்பும் என்க. வைப்பு - தலம்: அது காஞ்சிபுரம். ஒருபிறப்பும் இல்லேம் - ஒருபிறப்பு மில்லாத யாம். அம்மை என்று அழைக் கப்பெற்றுள் - காரைக்காலம்மையார். சிலம்பு ஓதைகேட்க - சிலம்பொலி கேட் குமாறு. ஆடும் ஓர்தலம் - நடனம்செய்யும் ஒப்பற்ற திருவாலங்காடு.

அப்பா எனத் தம் புத்திரரை அழைத்தல் உலக இயற்கை. சிவனுக்கு அத்தகைய புத்திரராக உள்ளவர்கள் மூத்தபிள்ளையார், இளையபிள்ளையார்,

சேய்ஞலூர்ப்பிள்ளையார், ஆளுடையபிள்ளையார் என்பவர்கள். ஆயினும் பெண்பாலரில் ஒருவரும் இல்லையாக இவ்வம்மையார் புத்திரி என்னும் நிலையிலே 'அம்மா' என அழைக்கப்பெற்றார். இவரும் 'அப்பா' என உலகுக்குத் தாய்தந்தையாகவுள்ள இறைவரை அழைத்தார் என உத்திக்குப் பொருந்துமாயிற்கொள்க.

உரைசெயு முலக மெல்லா முடையநா மொற்றி யென்று
நிரைவரி நெருக்கித் தீட்ட நிலவுமோர் தலமு முண்டால்
நரையகஞ் செழிக்கு மாறு தவாப்பெருஞ் சந்தை கூட்டி
வரைவறு மோத்து நல்க வயங்கிய தலமு முண்டால். 26

கு - ரை: ஒற்றி - திருவொற்றியூர். அத்தலத்தில் சிவபெருமான் திருநாமம் எழுத்தறியும் பெருமாள் என்பது. தவா - நீங்காத. சந்தை - சந்தஸ். ஓத்து நல்க வயங்கிய தலம் - திருவோத்தூர்.

பொருந்தொரு கழுகு காணுப் புனன்முடி யுடைய நம்மை
இருந்திரு கழுகு முற்றுங் கண்டிறைஞ் சிறும்பு முண்டால்
திருந்துபா திரியின் மேலோர் புலியுற றெரிந்துங் கீழால்
வருந்தொரு முடம்படுங்கான் முயறெழும் வைப்பு முண்டால். 27

கு - ரை: ஒரு கழுகு என்றது பிரமதேவரை. ஒரு கற்பத்தில் பிரமதேவர் கழுகு வடிவங்கொண்டு சிவபெருமான் திருமுடியைத் தேடச்சென்றனர் என்பது புராணவரலாறு ஆதலின் "பொருந்தொரு கழுகு காணுப் புனல் முடியுடைய நம்மை" என்றார். இதனை, "பூவார் பொற்றவிசின் மிசை யிருந்தவனும் பூந்துழாய் புனைந்த மாலும், ஓவாது கழுகேன மாயுயர்ந் தாழ்ந் துறநாடி யுண்மை காணுத், தேவாருந் திருவுருவன்" என்னும் தேவாரத்தால் உணர்க. "ஒரு கழுகு காணுத ஒண்முடியார்" எனத்திருப் பெருந்துறைப் புராணத்தும் இவ்வாசிரியரால் கூறப்பட்டது. புனல்முடி - கங்காஜலத்தை யுடையமுடி. இரு கழுகு - சம்பு. ஆதி என்னும் முனிவர்களாகிய கழுகுகள். இறும்பு - மலை; திருக்கழுக்குன்றம். ஒரு கழுகு முடியை மட்டும் காணுமல் அவதியுற்றது. இரு கழுகுகள் திருமேனி முழுவதும் கண்டு இறைஞ்சின என்ற நயம் காண்க.

மங்கணர் எனும் முனிவர் தூமப்பர் என்னும் முனிவர் சாபத்தால் முடங்குகால் முயல் ஆயினர். அவர் நூறுண்டுகள் பல காடுகளிலும் சஞ்சரித்துப் பாடலிவனத்தை அடைந்து பூசித்து வாழுங்காலத்தில் ஒருநாள் ஓர் நாய்கண்டு துரத்த அதற்குப் பயந்து பாடலிமரத்தின் அடித்தூரில் நுழைந்தார். அந்தப் பரிசத்தால் முயல் உருவம் நீங்கப்பெற்று முன்னைய உருவம் விளங்கப்பெற்றார் என்பது திருப்பாதிரிப்புலியூர்த் தலபுராண வரலாறு. "முன்ன நின்ற முடக்கான் முயற்கருள் செய்துநீள், புன்னை நின்று கமழ்பா திரிப்புலி யூருளான்" (தே: திருஞான). முயலி னுறுதுயரகல வருள்புரி முதல்வர்" (திருப்பாதிப் - கலம்ப - 38). பாதிரியின்மேல்

ஒருபுலி என்றது புலிக்கால் முனிவரைப்போலும். அம்பிகை சாபத்தால் முயல்வடிவம் பெற்ற உபமன்னியு முனிவர் வரலாறும் உபமன்னியர் சாபந் தீர்ந்த சருக்கத்தால் உணரலாகும்.

கடன்முழு தழற்றும் வெய்ய கணையுடைக் கணையொன் றேவி
அடல்கெழு புரங்கண் மூன்று மட்டமாத் தலமு முண்டால்
மிடல்கெழு கடவு ளர்க்கோர் வெய்யவெங் கூற்ற மாகி
உடலுமந் தகனைச் சூல முண்டதோர் வைப்பு முண்டால். 28

கு • ரை : கடல் முழுது அழற்றும் வெய்யகணை • ஆக்கினேயாத்திரம். கணையுடைக் கணை • திருமால். திருமாலை அம்பாகக் கொண்டு திரிபுரம் எரித்தமை கருதியது: மாத்தலம் • திருவதிகை. மிடல் கெழு • வலிமைமிக்க. கடவுளர் • தேவர்கள். வெய்ய வெங் கூற்றம் • மிகக்கொடிய இயமன். அந்தகன் • அந்தகாசுரன். வைப்பு • தலம்: திருக்கோவலூர். அதிகையும், கோவலும் நடுநாட்டில் உள்ளவை. ஏனைய சோழநாட்டில் உள்ளன. ''காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம் கடவூர்வீ ரட்டானம் காமருசீ ரதிகை, மேவியவீ ரட்டானம் வழுவைவீ ரட்டம் வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக் கிடமாம், கோவல்நகர் வீரட்டம் குறுக்கைவீ ரட்டம் கோத்திட்டைக் குடிவீரட் டானமிவை கூறி, நாவில்நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால் நமன்தமரும் சிவன்தமரென் றகல்வர் நன்கே.'' (திருநாவு • ஆரூந்திரு: 71: 2) காண்க. இவ்வீரட்டங்கள் முறையே: ''பூமன் சிரங்கண்டி அந்த கன் கோவல் புரமதிகை, மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர், காமன் குறுக்கை யமன்கட வூரிந்தக் காசினியில், தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே.'' என்னும் பழம் பாடலானறிக. திரி புரத்தை எரித்தது அதிகை வீரட்டம். அந்தகாசுரனை அழித்தது கோவலூர் வீரட்டமாம். உடலும் • மாறுபடும்.

முறையுண ராது பாத முண்டகஞ் சடிலக் காட்டை
உறைமாவும் புள்ளுந் தேடி யுழன்றதோர் வெற்பு முண்டால்
நிறைதரு கவுமா ரத்தின் நீங்குறு நீயு நாமும்
மிறைதபு விருத்த ரூப மேவிவாழ் சிலம்பு முண்டால். 29

கு • ரை : முறை உணராது • தாம் தேடிச்செல்லும் விதியை உணரா மல். பாத முண்டகம் • பாததாமரை. சடிலக்காடு • சடைக்காடு. மாவும் புள்ளும் • விலங்கும் பறவையும். உழன்றது • வருந்தியது, மா • பன்றி; புள் • அன்னம். இவை முறை யுணர்ந்து செல்வதாயின் அன்னம் பாத தாமரையையும், பன்றி சடைக்காட்டையும் தேடி அடைதல் வேண்டும். முறைமாறிப் பன்றி தாமரையையும், அன்னம் காட்டையும் தேடிவருந்தியது என்றார். திருமாலாகிய பன்றி, பிரமனாகிய அன்னம், தேடியுழன்ற வெற்பு • திருவண்ணாமலை. கவுமாரம் • குமாரப் பருவம், யௌவனப் பருவங்கள்: ''பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னி யாகும்'' என்றதை நோக்குக.

விருத்த ரூபம் - கிழ வடிவம். சிலம்பு - விருத்தகிரி, பழமலை. மிறை தபு - குற்றம் நீங்கிய.

புலியத ளரையிற் சூழ்ந்து பொங்குபாம் பெங்கு மேற்றிப்
புலியொடு பாம்புங் காண நடஞ்செயும் புரமு முண்டால்
கலிகட லெழுந்த காலைக் கலங்குரு வண்ணம் நாமே
கலிதவிர் தோணி விட்டுக் கலந்தமர் பதியு முண்டால். 30

கு - ரை : புலி அதள் - புலித்தோல். அரை - இடுப்பு. புலியும் பாம்பும் காண - வியாக்கிரபாதரும் பதஞ்சலி முனிவரும் தரிசனம் செய்ய. நடஞ் செயும் புரம் - சிதம்பரம். கலிகடல் - ஒலிக்கின்ற சமுத்திரம். எழுந்த காலை - பொங்கியெழுந்த ஊழிக்காலத்தில். கலிதவிர் - துன்பம் நீங்கும் பொருட்டு. தோணி மிதக்கச் செய்த பதி - திருத்தோணிபுரம் (சீகாழி).

வாதமுற் பிணிமூன் றோடு மலப்பிணி மூன்றுந் தீரப்
போதமண் வாயி லிட்டுப் பொலிந்தமர் தலமு முண்டால்
ஓதரும் வனப்பு வாய்ந்த வொருமதன் மேனி முற்றும்
கோதவெந் தழல்வி ருந்து கொளத்தரு தலமு முண்டால். 31

கு - ரை : வாதம் முன் பிணி - வாதம் பித்தம் சிலேத்துமம். மலப் பிணி மூன்று - ஆணவம், கன்மம், மாயை என்பன; காமம் வெகுளி மயக்கம் எனினுமாம். மண் வாயிலிட்டுப் பொலிந்தமர் தலம்-வைத்தீசுவரன்கோயில் (புள்ளிருக்கு வேளூர்) "இருள்நோய் தீர்க்கும் மருந்துறைபதி" (பரஞ்சோதி திருவிளை) "கண்ணுண்டு......வினைதீர்த்த பெருமான் பக்கல், மண்ணுண்டு பிறப்பறுக்க மாட்டாமல் மருந்துண்டு மயங்கு வாரே"; "வந்த வந்த பேர்களுக்கு மண்மருந் தளிக்கிறீர்"; "வார்த்தைவேறின்றிவினை தீர்த்தததே வெனும் பேரே மந்த்ர மாகப், பார்த்தபேர் மகிழ்திருச்சாந் துண்டைமருந் தாய் மருந்துப்பையுந் தாங்கிக், கூர்த்தவேற் குகன்றுதை வயித்தியநா யகர் தமது குளத்தி லுள்ள, தீர்த்தமே மருந்தாகத் தீராத நோய்க ளெல்லாந் தீர்க்கின்றாரே" (புள்ளிருக்கு வேளூர்க்கலம்பகம்). மதன் - மன்மதன். மதன் மேனிதழல் விருந்து கொளத்தரும் தலம் - திருக்குறுக்கை. வெந்தழல் - நெற்றிக் கண்ணாகிய கொடிய நெருப்பு. விருந்து கொள - உண்ண.

மருவொரு கொம்பு தாங்கு மார்புடை நமைப்பூ சித்துப்
பொருகரி கொம்போர் நான்கும் பெறப்பொலி தலமு முண்டால்
கருநிறத் திருமால் தேடிக்காணுணுக் கமலப் பூவோர்
திருகுடை மறலி மார்பிற் சேர்த்ததோர் தலமு முண்டால். 32

கு - ரை : மருவு ஒரு கொம்பு - பொருந்தியபன்றிக் கொம்பு: என்றது திருமாலாகிய பன்றியின்கொம்பை. கரி கொம்பு ஓர்நான்கும் பெறப்பொலி தலம் - திருவெண்காடு. கரி - அயிராவதயானை. திருகு - மாறுபாடு. மறலி - இயமன் சேர்த்த தலம் - திருக்கடவூர்.

வெயின்மணி கொழிக்கும் வண்கா விரித்துலாத் தீர்த்த மாடி
மயிலுரு வொடுநீ நம்மை வழுத்திய தலமு முண்டால்
பயிலொரு மதமா லியானை பகர்திகம் பரந மக்குக்
குயின்மொழி மடந்தாய் போர்வை கொடுத்ததோர் தலமு
[முண்டால். 33

கு - ரை : வெயில் மணி - ஒளியையுடைய மணிகள். காவிரித்துலாத் தீர்த்தம் - காவிரிநதியில் ஐப்பசிமாத முழுவதும் ஆடும்தீர்த்தம்: அது துலாக்கட்டம் எனப் பெயர் பெறும். உமாதேவியார் மயில் வடிவங்கொண்டு வழுத்தியதலம் - கௌரிமாயூரம். நீ என்றது உமாதேவியை நோக்கியது. திகம்பரம் - திக்காடை. திக் அம்பரம்; அம்பரம் - ஆடை. யானை போர்வை கொடுத்ததலம் - வழுவூர்.

கெடாதுற்ற புனற்கா வேரி யிடைக்கிளர்ந் தொருநீ போற்ற
வடாதுத்தா லகவ னப்பேர் மருவிய தலமு முண்டால்
விடாதற்பி னென்பான் கோடி சித்தர்கள் விழைந்து போற்றப்
படாதுற்ற வரசி னீழற் பதிதரு பதியு முண்டால். 34

கு - ரை : உத்தாலகவனம் - திருத்துருத்தி (குத்தாலம்). அற்பின் - அன்போடு. ஒன்பான்கோடி சித்தர்கள் - நவகோடிசித்தர். அரசின் நீழற் பதி - அரசவனம், திருவாவடுதுறை.

உருத்திரர் பதினோர் கோடி யுள்ளவ ரொருங்கு போற்றத்
திருத்தகு மருதி னீழற் சிவனுமோர் தலமு முண்டால்
அருத்தியின் மகநீர் கங்கை யாதிநீ ராடு மாறு
பெருத்தகும் பத்திற் றோன்றிப் பிறங்குமோர் தலமு முண்டால். 35

கு - ரை : பதினொருகோடி உருத்திரர் ஒருசேரப் போற்ற. ஒருங்கு - ஒருமிக்க. மருதநீழற்சிவனும்தலம் - திருவிடைமருதூர். சிவனும் - பொருந்தும். அருத்தியின் - விருப்பத்துடன். மகநீர் - மகநட்சத்திரத்தில் ஆடும் தீர்த்தம். கங்கையாதி - கங்கை முதலாகவுள்ள தெய்வநதிகள். பெருத்த கும்பம் - பன்னிரண்டு ஆண்டுக்கொருதரம் வரும் கும்பமாதம்; மகாமகம். கும்பம் - மாசிமாதம். பிறங்குந்தலம் - குடமூக்கு. “ தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை சரசுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க், கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே” (திருநாவு: 6: 75: 10.); “பூமருவு கங்கைமுதல் புனிதமாம் பெருந்தீர்த்தம், மாமகந்தான் ஆடுதற்கு வந்துவழி படுங்கோயில்” என, சேக்கிழார்சுவாமிகள் அருளினர்.

முருக்கைநே ரிதழ்ம டந்தாய் முடியினோ ராறு மன்ன
இருக்கையோ ரையா றென்னற் கியைந்தவோர் தலமு முண்டால்
திருக்கைமாய்த் தனைத்துங் காக்கும் திறத்தியா மொருதா யாயோர்
கருக்கையா வாறு காத்துக் கலந்தமர் பொருப்பு முண்டால். 36

கு - ரை : முருக்கு - முள்ளுமுருக்கம்பூ. முடியின் ஓர் ஆறு மன்ன: ஓர் ஆறு - கங்காநதி. இருக்கை - இருப்பிடம். ஐயாறு: ஐந்து ஆறுகள், திருவையாறு. ஐயாறு - பஞ்சநதி; வரலாறு: "எங்களருஞ் செப்பேச னெற்புடம்பு நலஞ்சிறக்கக் கங்கையினீர் கமலத்தோன் கமண்டலநீ ருமையம்மை, கொங்கையினீர் கொண்டனீர் குணநந்தி வாய்நுரைநீர், அங்கையினு லையாற னபிடேகம் பண்ணினனே", "அஞ்சுவகைத் தீர்த்தங் கொண் டையாற னாட்டுதலால்" (திருவையாற்றுப்புராணம்). திருக்கை மாய்த்து - மாறுபாட்டை ஒழித்து. ஒரு தாயாய் - ஒரு தாயாக. கரு கையா வாறு - கருப்ப வேதனை தோன்றாதவண்ணம்: கைத்தல் - வெறுத்தல். கலந்து அமர் பொருப்பு - தாயுமானவர் மலை : திருச்சிராப்பள்ளிமலை.

அருவத்து நீயு நாமு மன்னிய மாவ தன்றி
உருவத்து மவ்வா றென்ன வோங்குமாத் தலமு முண்டால்
பருவத்து மடந்தாய் பூமேற் பசுவன்றி வான்மேற் றங்கும்
திருவத்தோர் பசுவைக் கொண்டு சிருட்டிசெய் தலமு
[முண்டால். 37

கு - ரை : அருவத்து - அருவ நிலையில். அன்னியம் ஆவது அன்றி - வேறுதலின்றி. ஓங்கும் மாத்தலம் - திருவானைக்கா. பூ மேற் பசு - பூமியிலுள்ள பசு: பூவின்மேல் தங்கிய பிரமதேவராகிய பசு. வான்மேற் றங்கும் பசு - காமதேனு. சிருட்டி செய்தலம் - திருக்கோளிலி.

உற்றவன் பினர்செய் வேலி யொன்றுள நாமை வேலிப்
பொற்றளி யாதி கொண்டு பொலிதரு தலமு முண்டால்
அற்றமி லன்பு வாய்ந்தா ரியாவரும் புகலூ ரென்று
பெற்றவண் சிறப்பி னோங்கிப் பிறங்குறு தலமு முண்டால். 38

கு - ரை : அன்பினர் - மெய்யடியார். ஐ வேலிப் பொற்றளி - ஐந்து வேலிப்பரப்புடைய திருவாரூர்ப் பூங்கோயில்; ஆதி என்றது கோயில்ஐந்து வேலி, குளம் ஐந்துவேலி, நீரோடை ஐந்துவேலி என்பன. "அஞ்சனை வேலி யாரூ ராதரித் திடங்கொண் டாரே" (தேவாரம், திருநாவுக்). "குளம் வாவிமதில், ஐவேலி யாந்திரு வாரூர்த் தியாகர்" (திருவாரூர்க்கோவை -7). அற்றம் இல் அன்பு - சோர்வில்லாத அன்பு: அற்றம் - சோர்வு. புகலூர் - திருப்புகலூர்.

கொடுமைசெய் களிற்றை மாட்டிக் குலவுநீ முந்தி யீன்ற
வடுவறு களிறு போற்றி வழிபடு தலமு முண்டால்
நெடுமறை யனைத்தும் வெவ்வே றுருக்கொடு நிரம்பப் போற்றப்
படுவர மிதப்ப நல்கிப் பதிபெரும் பதியு முண்டால். 39

கு - ரை : கொடுமை செய் களிறு - கயமுகாசுரன். முந்தி ஈன்ற வடு அறு களிறு - யானைமுகக் கடவுள். போற்றி வழி படு தலம் - திருச்செங்காட்டங்குடியிற் கணபதீச்சரம். வேதம் போற்றியதலம் - வேதாரணியம்: (திருமறைக்காடு). மாட்டி - அழித்து. வடு வறு - குற்றமற்ற. மறை அனைத்தும் - வேதங்கள் முழுதும். மிதப்ப - மிகுதியாக. "சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும், மதுரம் பொழில்சூழ் மறைக்காட்டுறை மைந்தா" (தேவா: ஞானசம்).

விடரடை வடுவு மற்றும் விரும்பிநா மமுது செய்து
படரடை யாம லன்பற் புரந்தவான் பதியு முண்டால்
இடர்தபு துருவா சப்பேர் இயன்முனி வரற்கா வின்பம்
அடர்திரு நடனஞ் செய்த அரும்பெருந் தலமு முண்டால். 40

கு - ரை : விடர் அடை வடு - கமரிற் கொட்டிய மாவடு. படர் அடை யாமல் - துன்பமடையாமல். அன்பற்புரந்த - அரிவாட்டாய நாயனாரைப் பாதுகாத்த, "செய்யில் உகுத்த திருப்படி மாற்றதனை, ஐய விதுவமுது செய்யெனவே - பையவிருந், தூட்டி யறுப்பதற்கே யூட்டியறுத்தவரை, நாட்டியுரை செய்வதே நாம்" (திருக்களிற்றுப்படியார்-20) கமரிற்கொட்டிய கட்டளைப் பொருள்களாவன: செந்நெலரிசி, செங்கீரை, மாவடு என்பன.

பண்ணிய கலைகள் போலப் பகரறு பத்து நான்கு
புண்ணிய வாடல் செய்து பொலிதரு தலமு முண்டால்
மண்ணிய மணிநே ரன்பு வாய்ந்தவ ளொருத்தி யாற்ற
அண்ணிய கபோலக் கிள்ளோ டமர்தரு தலமு முண்டால். 41

கு - ரை : பண்ணிய கலைகள் - தாமருளிச்செய்த அறுபத்துநான்கு கலைகள்: "ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்" என்றது காண்க. அறுபத்து நான்கு திருவிளையாடல் செய்தருளியதலம் திருவாலவாய். ஆடல் - திருவிளையாடல். மண்ணியமணி - சாணைபிடித்த மாணிக்கக்கல். அன்புவாய்ந்தவள் - பொன்னனையார். கபோலம் - கன்னம். அமர்தரு தலம் - திருப்பூவணம்.

திருகுகோட் டுதளுக் குற்ற சென்னியும் யானைக் குற்ற
பெருகுதோ லுடம்புந் தீர்த்துப் பிறங்கொரு தலமு முண்டால்
உருகுமோர் கௌரிக் காமூ வுருவுகொண் டுற்ற நாந்தோம்
அருகுமோர் கானை யாகி யமர்தரு தலமு முண்டால். 42

கு - ரை : திருகு கோட்டு உதள் - முறுக்கிய கொம்புகளையுடைய ஆட்டுக்கிடா. பிறங்கு ஒருதலம்: விளங்கவில்லை. உருகும் ஓர் கௌரி - விருபாக்கன் மகளாகிய ஒரு பிராமணப்பெண்; இவ்வரலாறு விருத்த குமார பாலரான படலத்தான் அறிக. மூவுருவு - விருத்த குமார பாலர். காளையாகி யமர் தலம் - காளையார்கோயில். "கானப்பேர்உறை காளையையே" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

ஆயிலா ரிறும்பூ தெய்தா ரிமதர் மழைக்கட் பாவாய்
தாயிலா நமக்கு வேயே தாயாகுந் தலமு முண்டால்
நோயிலா வொருந மைப்போ னுவலருஞ் சிறப்பிற் றுகி
மாயிலாக் குறும்ப லாவொன் றமர்வளத் தலமு முண்டால். 43

கு - ரை : ஆய் இலார் - தாய் இல்லாக்குழவிகள். இறும்பூது - ஆச்சரியம், மகிழ்ச்சி. பாவாய் என்றது உமாதேவியாரை. வேயே தாயாகுந்தலம் - திருநெல்வேலி: வேய் - மூங்கில். "வேயீன்ற முத்தர்தமை வெட்டிஞ னேயிடையன்" (இரட்டையர்பாடல்) என்பர். நோய் - மலநோய். நோயிலா ஒரு நமை என்றது நிர்மலர் என்பது கருதி. குறும்பலா ஒன்று அமர் வளத்தலம் - திருக்குற்றாலம். திருஞானசம்பந்தர் குற்றாலத்துக்கு ஒன்றும் குறும்பலாவுக்கு ஒன்றுமாகப் பதிகம் அருளிச்செய்தார். மாய் இலா - அழிதல் இல்லாத.

தழுவிய சிலையி ராம னரக்கனைத் தடிந்த பாவம்
கழுவிய வுவந்து போற்றுங் காமரு தலமு முண்டால்
வழுவிய வரக்கன் கைக்கு வராதுமா பலமே யாகிச்
செழுவிய நமது கோசஞ் செறிதரு தலமு முண்டால். 44

கு - ரை : அரக்கனை - இராவணனை. தடிந்த - கொன்ற. காமரு தலம் - திருவிராமேச்சுரம். வழுவிய அரக்கன் - இராவணன். மாபலேச்சுரம்: கோசம் - குறி; நமது கோசம் - சிவக்குறி.

இவைமுதற் றலம னேக மிக்கயி லாயம் போலும்
நவையறு மிவற்றுண் மேலா நாமமர் தான மொன்று
குவைமலர்க் குழலா யஃது குறித்தகா ரோண மாகும்
செவையுறக் குறிப்போர்க் கெல்லாச் சித்தியு மௌிதி னல்கும். 45

கு - ரை : நவை - குற்றம். மேலாம் நாம் அமர் தானம் காரோண மாகும். செவையுற = செவ்வையுற - நன்றாக. குறிப்போர் - தியானிப்போர். சித்தியும் - எல்லாச் சித்திகளும்.

நாடுமிக் கயிலை யாதி நவின்றபஃ றலங்கட் கெல்லாம்
பாடுகா ரோண மேன்மை படைத்ததெத் திறனு லென்னில்
கூடுபே ரண்ட மெல்லாங் குலையுநாண் மூர்த்தி யாவும்
நீடுமத் தலத்தே வந்து நிரம்புத லாலென் றோர்தி. 46

கு - ரை : நாடும் - சிவஞானிகளால் நாடப்படும். பாடு காரோணம்: பாடு - பெருமை. அண்டமெல்லாம் குலையும் நாள் - சர்வசங்கார காலத்தில். ஓர்தி - ஓர்வாய்: ஓர்தல் - ஆராய்ந்தறிதல்.

அத்தலத் திடையு தித்தா ரத்தலத் திடைவ சித்தார்
அத்தலத் துயிர்வி டுத்தா ரத்தலத் தாசை வைத்தார்
அத்தலத் தெல்லை சூழ்ந்தா ரத்தலத் தலர்தூய்த் தாழ்வார்
அத்தலப் பெருமை தேர்ந்தா ரனைவரு முத்த ராவார். 47

கு - ரை : உதித்தார் - பிறந்தவர். அலர்தூய் - மலர்களிட்டு அருச்சித்து. முத்தர் - விடுபேற்றுக்குரியார்.

கருதின வருளு நாகைக் காயாரோ கணத்த லத்தில்
ஒருகணம் வசிப்பா ரேனு முறுபலன் பெரிய தாகின்
மருவுமற் றதன்மே லாக வசிப்பவர்க் குரைப்ப தென்னே
பொருவில்பஃ றலத்தும் வைகும் பயனெலாம் பொருந்துவாரால்.

கு - ரை : ஒருகணம் - ஒரு நொடிப்பொழுது. மற்று அதன்மேலாக என்றது ஒரு கணப்பொழுதின்மேல் நாள், திங்கள், ஆண்டுகள்.

அத்தலத் துயர்ந்த தான மகிலத்து மில்லை யாகும்
முத்தலங் களினு மொத்த திதுவென்று மொழிவா ரில்லை
கைத்தல மழுமா னேந்து மெம்மையே நிகருங் கண்டாய்
மைத்தலஞ் சனமு மோவ வயங்குகார்க் கூந்த னல்லாய். 49

கு - ரை : அகிலம் - உலகம். எம்மையே நிகரும் - எம்மையேஒக்கும். மைத்தல் அஞ்சனம் - கரிய மை. ஓவ - நீங்க. கார்க்கூந்தல் - கரிய கூந்தல்.

பலவிரித் தறைவ தென்னை பகருமத் தலத்தைச் சார்ந்தார்
நலமரு வெமைச்சார்ந் தாரே நவின்றதற் கைய மில்லை .
நிலவுமிவ் விசேடத் தாலே நிரம்பிய பிரியம் வைத்தோம்
அலமர லன்றி நீயு மமைத்தனை யறிதி யென்றான். 50

கு-ரை: நலம் மருவு: நலம்-மங்கலம், சிவத்தன்மை. அலமரல்-சுழற்சி.

தலவள நந்தி யெம்மான் சனற்குமா ரனுக்குச் சொற்ற
நலமுற வெடுத்துச் சொற்று நயந்தவன் விழைவு நோக்கிக்
குலமுனி புண்ட ரீகன் குறிமுதற் காட்சி பெற்று
நிலவிய துரைத்த வாறு தெரிதர நிகழ்த்த லுற்றாம். 51

கு - ரை: குலமுனி - சிறந்த முனிவன். குறி - சிவலிங்கம். சொற்ற - சொல்லிய. நயந்து அவன்: நயந்து - விரும்பி. விழைவு - விருப்பம்.

தலவிசேடப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 463

எட்டாவது

புண்டரீகமுனிவர் முதற்காட்சி

நலமலியு நந்திபிரா னுடுசனற் குமரமுனி
பொலமலியுஞ் சிவராச தானியெனும் புரத்தினுக்குக்
கலமலியுங் கடனாகைக் காயாரோ கணமெனும்பேர்
நிலமலியும் படிசொல்லென் னிகழ்த்துகென நேர்ந்துரைப்பான். 1

கு - ரை : திருநந்திதேவர், சனற்குமர முனிவருக்குச் சிவராசதானி என்னும் புரம் நாகைக் காயாரோகணம் என்னும் பேர்பெற்றமையையருளிச் செய்கின்றார்.

பொலம் - பொன். கலம் மலியும் கடல் - மரக்கலங்கள் நிறைந்து விளங்கும் கடல். கடல்நாகை - கடலை அடுத்த நாகபட்டினம். நிகழ்த்துக - சொல்லியருளுவீராக. நேர்ந்து - ஏற்றுக்கொண்டு.

அறமனைத்துங் குடிகொளுங்கை யம்பிகையண் ணலைவணங்கி
மறமனைத்துந் தவிர்தலத்தின் மான்மியங்கேட் டுளமகிழ்ந்தேன்
திறமனைத்தும் புணர்நினையத் தலத்தடைந்து சேர்ந்தவர்யார்
நிறமனைத்துந் தருமதுவு முரைத்தியென நிகழ்த்திடுவான். 2

கு - ரை : சிவபெருமானை உமையம்மை வணங்கி அத்தல மான்மியம் கேட்டு மகிழ்ந்தேன். அத்தலத்திலே தேவரீரை வந்தடைந்து வழிபட்டோர் யாவர் எனக் கேட்க, அவர் சொல்லத் தொடங்கியதாகத் திருநந்திதேவர் சொல்லத் தொடங்குகிறார்.

அறமனைத்தும் - எல்லாத் தருமங்களும். குடிகொளுங்கை அம்பிகை - சிவபெருமான் கொடுத்த இருநாழி நெல்லை வாங்கி உமையம்மையார் காஞ்சி புரத்தில் முப்பத்திரண்டு தருமங்களையும் செய்தருளினர் என்ற வரலாறு உண்மையால் அறமனைத்தும் குடிகொளுங்கை என்றார். அண்ணல் - சிவ பெருமான். மறம் - பாவம். மான்மியம் - பெருமை. திறம் அனைத்தும் - வல்லமை முழுவதும்.

புரையெறியும் பெருங்குணத்திற் புண்ணியப்பூங் கொம்பேகேள்
வரையெறியும் பன்மணியு மால்யானைக் கோடுகளும்
விரையெறியு மொண்மலரு மேதகுசந் தனக்குறடுந்
திரையெறியும் யமுனையெனுந் திருத்தகுமா நதிக்கரையில். 3

குரை: புரை எறியும் - குற்றங்களைப்போக்கும். பூங்கொம்பே - பூங்கொம்புபோன்ற உமாதேவியே. வரை எறியும் - மலையினின்று கொண்டு வந்து வீசும். பல்மணி - பலவகை இரத்தினங்கள். யானைக்கோடு - யானையின் கொம்புகள். விரை எறியும் - வாசனை வீசும். சந்தனக்குறடு - சந்தனக் கட்டை. திரை எறியும் - அலைகள் வீசும்.

சாதமறை முழங்கொலியுஞ் சாலையழ லோம்பொலியும்
போதவம ரரையவியூண் புசிக்கவழைத் திடுமொலியும்
ஏதமின்மங் கலவொலியு மென்றுமெழு கடலொலியாம்
வேதபுர மெனும்பெயரின் விளங்குமொரு திருநகரில். 4

குரை: சாத மறை - சிவபெருமானிடத்தினின்று தோன்றிய வேதங்கள். ஜாதம் - பிறப்பு. அழல் ஓம்பும் - அக்கினி காரியம் செய்யும். போத - மிகுதியும். அவி - அவிசு. எழுகடல் - ஏழுகடல். யமுனை நதிக்கரையிலுள்ள வேதபுர மென்னும் நகரில்.

வழிவழிநம் மடிக்கன்பே வயக்கிவரு பெருங்குணத்தால்
இழிவுசிறி தேனுமுரு தெஞ்ஞான்று முயர்வேயுற்(று)
ஒழிவரிய கண்ணோட்ட மொப்புரவா திகடழுவிக்
கழிபுகழி னனிபொலிந்து கமழ்கற்க கோத்திரத்தில். 5

குரை: வழிவழி - பரம்பரையாக. எஞ்ஞான்றும் - எப்பொழுதும். கண்ணோட்டம் - தாட்சணியம். ஒப்புரவு - உபகாரம். கழிபுகழ் - மிக்கபுகழ். கற்க கோத்திரம்: குடிப்பெயர்.

மறைமுழுதும் வடித்துணர்ந்தா னங்கமுமாண் புறத்தெரிந்தான்
நிறைதருமா கமக்கடலு நீந்தினு னல்லொழுக்க
முறைநெறியிற் றலைநின்ருன் முனிவருநந் தமையுணர்ந்து
கறைகெழுபல் பவமுமறு கருத்தமனென் றொருமறையோன். 6

குரை: மறை முழுதும் - நான்குவேதமும். அங்கமும் - ஆறு அங்கங்களும். ஆகமக்கடலும்-இருபத்தெட்டு ஆகமங்களும் உபாகமங்களும் ஆகியகடலையும். பவம் - பிறப்பு. கருத்தமன் என்னும் பிராமணன்.

அந்தமுனி வரன்றவத்தி லான்றபாற் கடலுதித்த
சந்தமதி யெனவுதித்தான் சதுர்வேத முதலாக
வந்தகலை பற்பலவும் வடித்துணர்ந்து தந்தையினும்
நந்தவறி வினிற்சிறந்தா னல்லொழுக்கந் தலைநின்ருன். 7

குரை: அந்தமுனிவரன் - கருத்தமன் என்பவன். ஆன்ற - அகன்ற. சந்தம் மதி - அழகிய சந்திரன். கலைபற்பலவும் - வேதத்தின் வழியாக வந்த பல கலைகளும்; என்றது புராண இதிகாசங்களையும் அறுபத்துநான்கு கலைகளையும் என்க. நந்த - மிகுதியாக.

நம்மடியா் தமைக்காணி னுமென்றே யுபசரிப்பான்
செம்மலா்மே லயனுதித் தேவருளு மிணையில்லான்
விம்மலறு பெருந்தவமே விளைந்ததனால் வருமுவகைப்
பொம்மல்படைத் துயர்ந்தோங்கு புண்டரீ கப்பெயரான். 8

கு - ரை: சிவனடியாரைக் காணின் சிவனென்றே உபசரிப்பவன். விம்மல் - பொருமல். உவகைப் பொம்மல் - மகிழ்ச்சிமிகுதி. புண்டரீகன் என்பவன்.

அன்னமுனி வரன்றந்தை யாயகருத் தமற்பணிந்து
சொன்னபவத் துயரகற்றித் தூயசா யுச்சியமா
நன்னரமை முத்தியினை நயந்தளிக்குங் கடவுளெவன்
மன்னவுரைத் தருளென்றான் மற்றவனும் மகிழ்ந்துரைப்பான். 9

கு - ரை: பவத்துயர் - பிறவித்துன்பம். சாயுச்சியம் - இரண்டறக் கலத்தல். மன்ன - நிலைபெற.

உரவில்விட யாதிகளி லுழலிளமைப் பருவத்தே
கரவுதவி ரின்பமுத்தி காதலித்தா யம்முத்தி
விரவுதிற லினனியே விடுமுதல் யாதானும்
பரசிவனை யல்லாது பாலிப்பா ரிலையுணர்தி. 10

கு - ரை: உரவுஇல் விடயாதிகள் - வலிமையில்லாத புலன்நெறிகள்; என்றது பொறிவழியே செல்லும் புலன்கள் என்க. உழல் - அகப்பட்டு வருந்தும். கரவுதவிர் - வஞ்சகம்நீங்கிய. இன்பமுத்தி-இன்பமாகிய முத்தி. திறலினன் - வலிமையுடையவன். விடுமுதல் யாதானும் - முத்திப்பேறு முதலிய எல்லாப்பேறுகளையும். பாலிப்பார் - கொடுத்தளிப்பவர்.

சங்கரனு லெவ்வுயிர்க்குந் தாவில்சுகங் கொடுத்தலினாற்
பங்கவிய சனந்தவிர்க்கும் பண்பினு லுருத்திரனே
அங்கணருள் பொழியம்பை சமேதனு யமர்தலினால்
துங்கமிகு சாம்பனெனச் சொல்லுவா ரறிவுடையோர். 11

கு - ரை: எல்லா வுயிர்களுக்கும் கெடாத சுகத்தைக் கொடுத்தருளுதலினால் சங்கரன் என்றும், துயரத்தை நீக்கும் தன்மையினால் உருத்திரன் என்றும், உமாதேவியாரோடு பொருந்தியிருத்தலினால் சாம்பன் என்றும் அறிவுடையோர் கூறுவர். உருத்திரன் என்னும் பேர் பெற்றமை: "இன்னலங் கடலுட் பட்டோர் யாரையும் எடுக்கும் நீரால், உன்னரும் பரம மூர்த்தி உருத்திர னெனும்பேர் பெற்றான்" (கந்தபுரா - தக்ஷ - ததீசிப் - 46). சங்கரன் - சுகத்தைச் செய்பவன். வியசனம் - துயரம். அம்பை - உமா தேவியார். சாம்பன் - அம்பிகையோடு கூடியவன்.

நிலமுரத்துத் தரித்திடலு நீர்குளிந்து பதஞ்செயலுங்
கலவழல்சுட் டொன்றுதலுங் கால்சலித்துத் திரட்டுதலும்
வலனமைவிண் ணிரந்தரமா யிடங்கொடுத்து மருவுதலும்
அலமரலி லருட்பெருமான் கட்டளையென் றறிமைந்த. 12

கு - ரை : "மண்கடின மாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந் தேபதமாம், ஒண்கனல்சுட் டொன்றுவிக்கும் ஓவாமல் - வண்கால், பரந்துசலித் துத்திரட்டும் பார்க்கிலா காயம். நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து" (உண்மை விளக்கம் - 9) என்பதனுல் உணர்க. உரத்து - வன்மையுடையதாய். அழல் - அக்கினி. கால் - காற்று. சலித்து - அசைந்து. நிரந்தரமாய் - எப்பொழுதும். அலமரல் - சுழலல்: "அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி" (தொல்).

இரவிமதி முதலாய கோள்கடக வியங்குதலுங்
கரவறமீன் புணர்பரவை கரைகடவா தடங்குதலும்
புரவமையும் புவனங்கள் போவதுவு மாவதுவும்
அரவணியுஞ் சிவபெருமா ணுணையென வறிமைந்த. 13

கு - ரை : கோள்கள் - கிரகங்கள். தகஇயங்குதலும். பரவை - கடல். போவதுவும் ஆவதுவும் - அழிவதும் உண்டாவதும். புரவு - புரத்தல்.

மறைகளவன் வாய்மொழியே மறைகளவன் வந்தியரே
மறைகளவன் பாதுகையே மறைகளவன் காற்சிலம்பே
மறைகளவ னூர்பரியே காணுது மயங்குதலும்
மறைகளெனிற் சிவபெருமான் மான்மியநா னென்னுரைக்கேன். 14

கு - ரை : வந்தியர் - புகழ்வோர். பாதுகை - திருவடிநிலை. பரி - குதிரை. "மறையே நமது கோவணமாம் மறையே நமது பாதுகையாம்..." என்னும் செய்யுளான் அறிக. மறைகள் காணுது மயங்குதல்: "வேதங்கள் ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" (திருவாச). மான்மியம் - பெருமை. "அல்லை ஈது அல்லை ஈதென மறைகளும் அன்மைச், சொல்லினுல் துதித்திளைத்திடும் இச்சுந்தரன்" (பரஞ்சோதி - திருவிளை).

எங்குமவன் றிருமுடியே யெங்குமவன் றிருமுகமே
எங்குமவ னுலோசனமே யெங்குமவன் குழைச்செவியே
எங்குமவன் செவ்வாயே யெங்குங்கை யேபதமும்
எங்குமெனிற் சிவபெருமா னேற்றநா னென்னுரைக்கேன். 15

கு - ரை : சிவபெருமான் சேதன அசேதனப் பொருள்களிலெல்லாம் கலந்து நிற்றலின் இவ்வாறு கூறினர். உலோசனம் - கண். குழை - சங்கக் குழை. ஏற்றம் - பெருமை.

புனையுருவெட் டொன்பதுமுற் புணர்ந்துமோ ருருவுமிலன்
வினையொருநான் கொன்றியற்றி மேவினுமோர் வினையுமிலன்
புனையிழையோர் பான்மருவப் பொருந்தினும்வி காரமிலன்
அனையபிரா னுண்மைநிலை யாரியம்ப வல்லவரே. 16

கு - ரை: புனை உரு எட்டு - அட்டமூர்த்த சொரூபம். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன் என்பன: "இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி இயமான னாயெறியுங் காற்றுமாகி, அரு நிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமா யட்ட மூர்த்தி யாகி"; "அட்டமா வுருவி னானே"; "அட்ட மூர்த்தி அண்ணா மலை கைதொழ" (தேவாரம் - திருநா). ஒன்பது - நவந்தரு பேதம்: உரு நான்கு, அருவுரு ஒன்று, அரு நான்கு. பிரமன், மால், உருத்திரன், மகேசன் என்பன நான்கும் உரு. அருவுரு சதாசிவம். அருநான்கு: விந்து, நாதம், சத்தி, சிவம். வினை ஒருநான்கு ஒன்று - ஐந்தொழில்; படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. புனையிழை - அலங்கரிக்கப்பட்ட இழையினை உடையாள்: அன்மொழித்தொகை. இழை - ஆபரணம். ஓர்பால் - ஒரு பக்கம். விகாரம் - வேறுபாடு.

மண்ணிடையைந் தாயமர்ந்தா னீரிடைநான் காய்வதிந்தான்
கண்ணிடைதீ யிடைமூன்றாய்க் காலிடைமற் றேரிரண்டாய்
விண்ணிடையொன் றாயமைந்தா னானும் விளம்பியவை
எண்ணிடைவ தல்லாம லின்னனென வுணர்வனவோ. 17

கு - ரை: "பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய்போற்றி, நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி, தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி, வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி, வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி" (திருவாச) "மின்னுருவை விண்ணகத்தில் ஒன்றாய் மிக்கு வீசுங் கால், தன்னகத்தில் இரண்டாய்ச் செந்தீத் தன்னுருவின் மூன்றாய்த் தாழ் புனலின் நான்காய்த் தரணிதலத் தஞ்சாகி எஞ்சாத் தஞ்ச மன்னுரு" (தேவார - திருநாவு - 6 - 54 - 5). இன்னன் - இத்தன்மையை உடையவன்.

கூற்றுவன்செய் கொடுந்தண்டங் குதித்துய்யக் குறித்தவர்கள்
ஏற்றுமிசை வருபெருமா னடியன்றி யெண்ணுவரோ
போற்றுமறை யாகமபு ராணமெலாம் புகல்பவர்தோங்
காற்றுவலி யமைகால காலனெனத் துதித்தலினால். 18

கு - ரை: கூற்றுவன் - இயமன். குதித்துய்ய - தப்பிப்பிழைக்க. குறித்தவர்கள் - எண்ணியவர்கள். ஏற்றுமிசை - இடப வாகனத்தின்மேல். தோம் காற்று வலி - குற்றத்தைப்போக்கும் வலிமை. காலகாலன் - காலனுக்குக் காலன்: சிவபெருமான். இயமபயம் நீங்குவோர் தியானித்தற்கு உரியவர் காலகால மூர்த்தியேயாம்.

எண்ணியபூங் கணைமதவே ளிரவுபக லாவியற்றுங்
கண்ணியவெந் துயரனைத்துங் கடந்துய்ய வுளங்குறித்த
புண்ணியர்க ளவனையன்றிப் பிறரையும்பூ சிப்பர்கொலோ
தண்ணியநூ லெலாங்காம தகனனென முறையிடலால். 19

கு - ரை : காமத்தைப் போக்கக் கருதுபவர்கள் காமதகனனைத் தியானிக்கவேண்டும் எனக் கூறுகின்றது. பூங்கணை - மலரம்புகள். மதவேள் - மன்மதனாகிய வேள். கண்ணிய - கருதிய. அவனை அன்றி - சிவபெருமானை அல்லாமல். காமதகனன் - காமனை எரித்தவன்.

மேயபல துயரமெலாம் விரைந்தெழுவான் றேற்றிடுவித்
தாயபிறப் பொழித்திடுவா னமையவுளத் திடைக்குறித்த
தூயமதி யினர்சிவனை யல்லாது துதிப்பர்கொலோ
பாயமறை பிறப்பிலியென் றெடுத்துரைக்கும் பான்மையினால். 20

கு - ரை : பிறப்பறுக்க வேண்டுவோர் பிறப்பிறப்பில்லாத பெருமானாகிய சிவனைப் போற்றவேண்டும் எனக் கூறுகின்றது. எழுவான்: வானீற்று வினையெச்சம். பிறப்பிலி - பிறப்பில்லாதவன்: "பிறவாயாக்கைப் பெரியோன்" என்றார் பிறரும். "ஒரு பிறப்பிலானடியை உணர்ந்துங் காணார்", "பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை". (தேவார - திருநாவுக்).

அரியகட வுளராய வரிபிரமா தியர்க்கெல்லாம்
பெரியபிரான் சங்கரனே யென்றறிஞர் பேசிடுவார்
தெரியமுர சறைந்ததெனச் செகமுழுதும் வாய்க்கேட்க
உரியமறை மாதேவ னெனுந்திருப்பே ரோதுதலால். 21

கு - ரை : பெரியபிரான் - முழுமுதற்கடவுள். சங்கரனே - சிவபெருமானே. அவாய் - விரும்பி. மாதேவன் - மகாதேவன்.

பிரணவத்தி னுரியபொருள் பிறரென்று பேசிடுவார்
முரணவித்தற் காகமங்கண் முதலாய வேண்டுபவோ
கரணவிகற் பங்கடப்பாய் காவதமெண் ணிலகமழுந்
திரன்மிகுத்த செழுங்கொன்றை மாலிகைசேர் தரக்கண்டும். 22

கு - ரை : பிரணவத்தின் உரியபொருள் - பிரணவத்துக்கு உரிய பொருள். பிறர் - பிரம விஷ்ணுக்கள். முரண் - மாறுபாடு. அவித்தற்கு - போக்குதற்கு. கொன்றை மாலிகை - கொன்றை மலர்மாலை; கொன்றை மலர் பிரணவப்பூ என்று சொல்லப்படும். பிரணவப்பொருள் திருமாலும் பிரமரும் அல்லர் இவரே என்று யாவரும் உணரும்பொருட்டுக் கொன்றை மலரை இறைவர் அணிந்தருளினர். கொன்றைமலர் அடையாளப்பூ.

வேதகா யத்திரியின் பொருளாகும் வித்தகரார்
போதநா யகனை பொங்கொளிச்சம் புவையன்றி
ஏதநீ வாதமரும் யாவரையும் புகன்றிடலாம்
ஓதவாம் பற்கனெனு மொருமொழிநள் ளமையாதேல். 23

கு - ரை: வேத காயத்திரியின் பொருள் - பிரம காயத்திரியின் பொருள். வித்தகர் - சதுரப்பாடுடையவர். போதநாயகன் - ஞானவடிவினன். சம்புவை அன்றி வித்தகர் ஆர். ஏதம் - குற்றம். நீவாது - விட்டு நீங்காமல். ஓது அவாம் பற்கன். பற்கன் என்னும் ஒருமொழி - பற்கசப்தம். நள் - நடுவில்.

"எந்தச் சிவசூரியனது (ஞானேச்சாக்கிரியா) சத்தியாகிய ஒளியானது எங்கள் ஞானேச்சாக் கிரியாசத்திகளைச் செலுத்துகின்றதோ, அந்த முக்கியப் பொருளை (அஃதாவது, அப்பராசத்தி ஒளியை) தியானிக்கின்றோம்" என்பதே சமஸ்த வேதங்களின் சாரமாகிய மகாமந்திர காயத்திரியின் பொருளாம்.

(பூர்புவ: ஸ்வ:) தத் சவிதுர் வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி தியோயோ ந: பிரச்சோதயாத் || என்பது பிரமகாயத்திரி மந்திரம்.

"சிவசூரியனுடைய பராசத்தி ஒளியினுல் வன்மையாக்கப்பட்ட ஞானக் கண்ணினுல் ஆன்மாவானது சிவசத்தியோடு இயைந்து சிவத்தைப் பார்க்கின்றது; மலம் மறைந்துபோயிற்று" என்று சிவாகமம் அக்காயத்திரிப் பொருளை விளக்கியது. தேவசவிதா என்பதில் தேவ என்பது சிவனையும், சவிதா என்பது சூரியனையும் உணர்த்தும். ஆகலின், சிவார்க்கர் அஃதாவது சிவாதித்தன் என்று கூறப்பட்டது. நமது கண்களுக்கு விஷயங்களைப் புலப்படச் செலுத்தும் புறத்துள்ள சூரியனுக்கு இயையச் சிவாகமம் ஒளி என்றும். சிவத்துக்கு இயையச் சத்தி என்றும் கூறிற்று. காயத்திரி சுருதியானது ஒரு மொழிகொண்டு ஒளியையும் பராசத்தியையும் ஒருங்கு உணர்த்துமாறு பர்க்கஸ் என்று கூறியது.

சேதன அசேதனப் பிரபஞ்சம் அனைத்தையும் பிரகாசிப்பித்தலால் ப (ஒ) எனவும், அவற்றை இச்சிப்பித்தலால் ர (ம) எனவும், அவை அனைத்தும் ஒடுங்கித் தோற்றுதலால் க (ம) எனவும் பகுத்துப் பொருள் கோடற்கு இயைந்த 'பர்க்க' சப்தம் சிவசத்தியினின்று வேறுருத சிவனுக்குப் பெயராகப் போந்ததென்று மைத்திராயண உபநிடதம் கூறுமாற்றுல், 'பர்க்கஸ்' என்றது ஞான இச்சாக் கிரியாரூப பராசத்திக்குப் பெயராயிற்று; பர்க்கஸ் என்றது தனிமொழியாய் ஒளிக்கும் பெயராமாறு தெளியப்படும் என்பர் பெரியோர்.

காயத்திரி மந்திரத்தினுல் பிரதிபாதிக்கப்படும் பரம்பொருள் சிவபெருமானே என்பது ஸ்ரீ அரதத்தாசாரிய சுவாமிகளால் சதுர்வேத தாற்பரிய

சங்கிரகத்தில் வச்சிரலேபனம் செய்யப்பட்டுள்ளமை காண்க. "இருபிறப் பாளர் நியதியாய் வழூத்தற் கெடுத்தல்கா யத்திரி யன்றே, வருமதற் குயர்ந்த தெய்வநீ யென்றே வழுத்திடு மிதுபெரு வழக்கே" என்பது சிவதத்துவ விவேகம் - 53.

மும்மறையு ளடுமறையின் முனிவிலெழு காண்டத்திற்
செம்மைதரு நடுக்காண்டஞ் சேர்ந்தவெழு சங்கிதையில்
அம்மநடுச் சங்கிதையி னுதியி ரெழுித்துநடுப்
பொம்மலுற வமர்மனுவின் பொருளாவா னெவன்மைந்த. 24

கு - ரை : மும்மறை - இருக்கு, யசுர், சாமம் என்பன; வேதத்திரயி என்பது கருதத்தக்கது. நடுமறை யசுர்வேதம். இந்த யசுர் வேதம் நூற் றெரு சாகைகளையுடையது. இவற்றுள் நடுச்சாகை ஐம்பத்தோராவது சாகையாகிய ஸ்ரீபோதாயன சாகை. இந்தச்சாகை ஏழுகாண்டங்களாக அமைந்துள்ளது. இதன் மத்தியிலுள்ள காண்டமே நாலாவது காண்ட மாகிய சதருத்ரீயம். இதன் நடுவில் உள்ளது ஐந்தாவது ப்ரச்னம். அதில் "நம: ஸோமாயச ருத்ராயச" எனும் அனுவாகத்தின் இருதயத்தில், "நம: சிவாயச" எனும் பஞ்சாக்கர மந்திரம் பிரகாசிக்கின்றது. "வேத நான்கினு மெய்ப்பொருளாவது, நாத னுமை நமச்சி வாயவே" (தேவா - சம்பந்தர்). 'செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க், கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே' (தேவா). திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருமுறைகள் 4, 5, 6 என் பன. அவற்றுள் ஐந்தாம் திருமுறை நூறு பதிகங்களையுடையது. அவற்றுள் ஐம்பத்தொன்றுவது திருப்பாலைத்துறைத் திருக்குறுந்தொகை. அது பதினொரு திருப்பாட்டுக்களை உடையது; அவற்றுள் ஆறுவது, "விண்ணி னுர்பணிந் தேத்த வியப்புறும், மண்ணி னுர்மற வாதுசி வாய வென், றெண்ணி னுர்க்கிட மாளழில் வானகம், பண்ணி னுரவர் பாலைத் துறையரே" என்னும் பாடல் சிந்திக்கத்தக்கது.

திருத்தமிகு மறைமுடிபாய்த் திகழ்தருகா லாக்கினிசார்
உருத்திரப்பே ருபநிடத முதலாய வுரைப்பதெலாம்
வருத்தமற வுலகனைத்து மிளைப்பொழித்து மாதேவன்
பொருத்தமுற மெய்ப்பூசு புண்ணியநீ ருேபிறிதோ. 25

கு - ரை : மறைமுடிபாய் - வேதங்களின் முடிவாக. உபநிடதம் - காலாக்கினிருத்திர முதலாகவுள்ள உபநிடதங்கள். இளைப்பு ஒழித்து - சங்காரம் செய்து. உலகனைத்தும் இளைப்பு ஒழித்து என்றது சர்வ சங் காரத்தை. அது மகாசங்காரம் எனப்படும். நிவர்த்திகலை பிரதிஷ்டாகலை வித்தியாகலை சாந்திகலை சாந்தியதீதகலை என்னும் ஐவகைச் சங்காரத் துள்ளும் சாந்தியதீதகலா சங்காரமே மகாசங்காரம் எனப்படும். மாதேவன் - சர்வசங்காரருத்திரராகிய சிவபெருமான். மெய்ப்பூசு - திருமேனியில் பூசிக் கொள்ளும். நீறு - விபூதி.

பிரியமிக வனைத்தினுக்கும் பிரமாண மாயமறை
தெரியவெடுத் தினிதுரைத்தல் சிவலிங்கார்ச் சனையொன்றே
உரியவெனப் பிறர்வடிவ முரைத்ததுமற் றுண்டுகொலோ
அரியதவத் திருமைந்த வறைவதெவ னிதன்மேலும். 26

கு - ரை : சிவபெருமானுல் அருளிச்செய்யப்பட்ட வேதசிவாகமங்களே பரம பிரமாணமாம். அவைகளால் எடுத்துச் சொல்லப்பட்டது சிவலிங்க அர்ச்சனை ஒன்றேயாகும். வேதங்களில் பிரமவிஷ்ணுக்களின் வடிவத்தைச் சிறப்பாக எடுத்துரைத்தது உண்டோ? ஆகலின் இதற்குமேல் சொல்வது யாதுளது?

ஆதலினம் பரசிவனை யரிபிரமா தியர்பல்லோர்
காதலிற்பூ சனைபுரிந்து கருதியதெய் தினரின்னும்
ஏதமற யானைமுத லெறும்பிறு தியபலவுட்
போதமுறப் பூசித்துப் பொலிந்தவைக்கோ ரளவுண்டோ. 27

கு - ரை : நம் பரமசிவனை - நம்முடைய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை. அரி பிரமாதியர் - விஷ்ணு பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும். யானைமுதல் எறும்பு கடையாகவுள்ள பல அஃறிணைப் பொருள்களுள். போதம்உற - அருச்சிக்கவேண்டும் என்னும் அறிவுண்டாக. சுருதிகளில் பிரமன், இந்திரன், திருமால், அக்கினி முதலியோருக்குப் பெருமை கூறப்பட்டுள்ளது. அவையெல்லாம் சுருங்கிய பொருள்படும். ஏனெனில், அதர்வசிகையில் கூறப்பட்டவாறு ஏனைய தேவரிற் பிரித்துத் தலைமை சொல்லப்படவில்லை என்பர்.

அன்றியும். இச்சுருதியே அவற்றின் மாறுபாட்டை நீக்குவதாயும் உள்ளது. இக்கருத்துப் பற்றியே கந்தபுராணகாரரும் பிரமதேவர் தக்கனுக்குக் கூறியதாகச் சொல்லும் பகுதியில்:

"காரெழில் புரையு மேனிக் கண்ணனை யென்னை மற்றை
யாரையும் புகழும் வேதம் அரன்றனைத் துதித்த தேபோல்
ஓருரை விளம்பிற் றுண்டோ உரைத்தது முகம னென்றே
பேருல கறிய முன்னும் பின்னரும் விலக்கிற் றன்றே."

என்றருளிச்செய்தனர். இச்செய்யுள் ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் அருளிச்செயலை ஒத்தமை காண்க. மற்றும், சிவதத்துவ விவேகம்; 41-வது செய்யுள் நோக்கியும் அறிக.

"ஏனை யாரையும் அறத்துறந் தியாவரும் என்றும்
பான்மை யில்தியா னஞ்செயப் படும்ஒரு முதல்வன்
மேன்மை கூர்சிவன் ஒருவனே எனவிரித் தன்றே
நான்ம றைத்தலை யாம்அதர் வச்சிகை நவிலும்."

" யாமெ லாம்அவன் இணையடித் தியானஞ்செய் பசுக்கள்
ஆமெ னத்தெளி யவனருள் சேர்தலிற் பசுவும்
பூமி சைத்தியா னப்பொரு ளாமெனப் புனைந்து
தோம றச்சில நூல்புகல் உண்மையுந் துணியாய்."

— காஞ்சிப் - சார்ந்தாசயப் - 16, 17.

" சேந்தபொற் குண்டத் தோங்குஞ் சிகைத்தழல் மிசையே கம்ப
வேந்தைஆ வாகித் தேத்தும் புகைபொதி வேள்விச் சாலை
ஏய்ந்தசீர்த் தகர வித்தை முறைப்படி இதயக் கஞ்சப்
பூந்தழற் சிகைமேல் ஈசற் போற்றுமா யவனை ஒக்கும்."

— காஞ்சிப் - திருநகரப் - 119.

" மந்தி ரத்தழல் மகத்தினுக் கிறையவன் மகவான்
சந்த மாமறைக் கிறையவன் தாமரைக் கிழவன்
இந்தி ராதியாம் உலகினுக் கிறையவன் யானே
மைந்த னேயெனக் கிறையவன் மணிமிடற் றிறையோன்."

" அகில நாயகன் அவற்குமேல் இறையவன் இல்லை
அகில லோகமும் அவன்திரு ஆணையின் நடக்கும்
அகில லோகமும் படைத்தளித் தழிப்பவன் அவனே
அகில நூல்களும் உரைத்திடுந் துணிவிது வாமால்."

" வானம் ஏத்தயான் வைகுந்த வாழ்வுபெற் றதுவும்
ஞான நான்முகன் சத்திய உலகம்நண் ணியதும்
ஏனை விண்ணவர் தத்தம வாழ்க்கைஎய் தியதும்
ஆனு யர்த்தவன் அருட்குறி அருச்சனைப் பயனால்."

— காஞ்சிப் - சார்ந்தாசயப் - 19 - 21.

இன்னுமுயர் பரசிவனை யிருதிணையி னுயிரனைத்தும்
மன்னும்வழி பாடியற்றி வயங்கியவைக் கறிகுறியா
மின்னுபல தலம்பொலியு மன்றிமிளி ரனையபிரான்
உன்னுமொரு வரைப்பூசை யுளுற்றியது முண்டுகொலோ. 28

கு - ரை: இருதிணை - உயர்திணை, அஃறிணைகள். புழுகுபூனை, மண்டுகம், நாரை, மயில், வானரம், சிலந்தி, யானை, சிங்கம், குதிரை, பசு, பன்றி, பாம்பு, ஞெண்டு, ஆமை, அணில், முதலிய அஃறிணைகளும் பூசித்தமை அறிக: தனியூர்ப்புராணம் - புழுகீசப் படலம் - 15, 16, 17, செய்யுட்கள் காண்க.

விச்சுவமென் றெடுத்தியம்ப விளங்குவா னெருமுகுந்தன்
விச்சுவத்திற் கதிகனென விளங்குவான் பரமசிவன்
எச்சமென யாவர்களு மியம்புவார் மாயவனை
எச்சவதி பதிசிவனே யெனப்புகலு மெம்மறையும். 29

கு - ரை : விச்சுவம் - உலகம். முகுந்தன் - திருமால். விச்சுவத்திற்கு அதிகன் - உலகத்திற்கு அப்பாற்பட்டவன். எச்சம்-யாகம். மாயவன்-விஷ்ணுமூர்த்தி. எச்சஅதிபதி - யாகத்தலைவன். "விச்வம் நாராயண: பர:", "விச்வாதி கோருத்ரோ மகர்ஷி," "யஜ்ஞோவை விஷ்ணு:", "மேத பதிம் ருத்ரம்" என்னும் வேதமந்திரங்களின் பொருளை அறிவிப்பது.

"விச்சு வன்சிறைப் புள்ளர சுயர்த்தவன் விளம்பும்
விச்சு வாதிகன் எறுழ்வலிச் சினவிடை யூர்தி
எச்ச மேசுரும் புளர்துழாய் அலங்கலான் என்ப
எச்ச நாயகன் பொலந்துணர் இதழிமா லிகையான்."

— காஞ்சிப் - சார்ந்தாசயப் - 25

என்பது காண்க.

பரசிவனே பிரமமெனப் பன்மறையு மெடுத்தோதும்
உரனிலா ரையும்பரமென் றோதிடுவ தென்னையெனில்
விரவுமுப சாரமே யன்றியுமே வுயிர்ப்பரப்பின்
தரமுணர்ந்தும் போலுமெனச் சாற்றுவார் சான்றோரே. 30

கு - ரை: உரன் இலார் - வலிமையில்லாதவர். உயிர்ப்பரப்பின் தரம் - உயிர்த்தொகைகளின் மேம்பாடு. சான்றோர் - அறிவுடையோர்.

படைத்தலொடு காத்தலுநம் பரமசிவன் புரிதொழிலே
படைத்தலயன் றொழிலென்னிற் பாறியவோர் தலையின்னும்
படைத்தறனக் கியற்றுகிலான் மால்காப்ப னெனப்பகரில்
படைத்தமகா ருறுப்பழிவு முடம்பழிவும் பார்த்திருந்தான். 31

கு - ரை : படைத்தல் காத்தல் முதலிய தொழில்களைச் சிவபெருமான் அருளினல் அயன், மால் இருவரும் முறையே இயற்றுவர். அத்தொழில்கள் அவர்கட்குச் சுதந்திரம் இன்று. அவ்விரு தொழில்களும் அவ்வவருக்குச் சுதந்திரமாயிருப்பின் வயிரவக்கடவுளால் கிள்ளப்பட்ட ஒரு தலையை இன்னும் பிரமன் படைத்துக்கொண்டிலன். பாறிய - கிள்ளி எறியப்பட்ட. மகார் - தன்னுடைய புத்திரர்கள். உறுப்பு அழிவு - பிரமனுக்குத் தலை கிள்ளப்பட்டமை. உடம்பு அழிவு - மன்மதன் சாம்பராயினமை. பிரமன், மன்மதன் ஆகிய இரண்டு புத்திரர்களையும் காப்பாற்றாமைக்குக் காரணம் காத்தல் தொழில் திருமாலுக்குச் சுதந்திரமின்மையின் என்க.

எம்பெருமா னித்தியமு மேனையோ ரனித்தியமும்
நம்பமைய மறையாதி யெடுத்துநவின் றிடவேண்டா
கம்பமுற வருகற்ப காலங்க டொறுங்கவர்ந்த
அம்பதுமன் முதலியர்தந் தலைத்தொடையே யறிவிக்கும். 32

கு - ரை : நித்தியம் - சாவாமை. அநித்தியம் - பிறத்தல் இறத்தல்கள். நம்பு அமைய - நம்புதல் உண்டாகும்படி. கம்பம் உற - நடுக்கம் உண்டாக. கற்பகாலங்கள் தொறும்-பிரமகற்பம் விஷ்ணுகற்பங்கள் தோறும். பதுமன்-பிரமதேவர். தலைத்தொடை - தலைமாலை. பிரமருடைய தலைமாலை சிவபெருமானுக்குச் சிரமாலையாகவும், திருமால்களுடைய தலைமாலை திருவடிகளுக்குக் கிண்கிணி மாலையாகவும் உள்ளன. "நூறு கோடி பிரமர்கள் நொந்தினர், ஆறு கோடி நாராயண ரங்ஙனே, ஏறுகங்கை மணல் எண்ணி லிந்திரர், ஈறி லாதவன் ஈசன் ஒருவனே" — (திருநாவுக் - தேவாரம்).

ஆயமல ரவனாதி யமரரெலாம் பசுக்களே
மேயபசு பதிசிவனே விளம்புவதெ னின்னுங்கேள்
நேயமிகு மாதேவ நின்மலன்வான் பரவையிடை
மாயவனா தியரொருதி வலையாமென் றுண்ருதியால். 33

கு - ரை : பசுக்கள் - ஆன்மாக்கள். சிவபெருமான் ஒருவனே பசுக்களுக்குப் பதியாகவுள்ளார். மாதேவ நின்மலன் - மகாதேவராகிய மலரகிதர். வான்பரவை - பெரிய சமுத்திரம். மாயவன் ஆதியர் - திருமால் பிரமன் முதலிய தேவர்கள். ஒருதிவலை - ஒரு நீர்த்துளி.

அந்தமா தேவனே யகிலகா ரணன்காண்டி
பந்தமுமற் றலைதொழியப் பற்றுமொரு பெருவீடு
நந்தவவ னருளன்றி நண்ணார்நண் ணுவர்நெடுவான்
உந்தவமை பசுந்தோலிற் சுருட்டும்வலி யுளராவார். 34

கு-ரை : அகிலகாரணன் - உலகங்களுக்கெல்லாம் நிமித்தகாரணன். காண்டி - காண்பாய். பந்தமும் வீடும் சிவபெருமான் அருளின்றி ஒருவரும் அடையமாட்டார். பந்தம் - கட்டு. வீடு - முத்திப்பேறு. நந்த - மிகுதியாக. நெடுவானையும் பசுத்தோலைப்போலச் சுருட்டுவதற்குரிய வலிமை உள்ளவராயின் அவர் இறைவன் திருவருளின்றிப் பந்தவீடுகளை அடைவர். பசுத்தோலின்: இன் - ஐந்தன் உருபு; ஒப்புப்பொருள்.

மன்னியவப் பரசிவனை யவனமர்மாத் தலத்தடைந்து
நன்னியமத் தொடுபோற்றிக் கருதியது நன்கடைவாய்
முன்னியநின் கருமமிடை யூறின்றி முற்றுகவென்
றன்னியமில் கருத்தமனன் கருளிவிடை கொடுத்தனனே. 35

கு - ரை : மன்னிய அப்பரசிவனை - நிலைபெற்ற அந்தச்சிவபெருமானை. நல்நியமத்தொடு - சிறந்தசிவாகமவிதிப்படி. கருதியது - எண்ணிய பேற்றை. முன்னிய - நினைந்த. முற்றுக - முடிவுறுக. கருத்தமன் - தந்தையாகிய அந்தணன்.

வேறு

தந்தையா ருரைத்த வார்த்தை தலைக்கொடு புண்ட ரீகன்
நிந்தைநீர் தலத்தின் மிக்க தெதுவென நினையுங் காலை
முந்தையோர் பலருங் காசி முழுநக ரடைதி யென்னச்
சிந்தைகூர் களிப்பி னோடத் திருத்தலம் வந்து புக்கான். 36

கு - ரை : தலைக்கொடு - தலைமேற்கொண்டு. நிந்தைநீர் - பழிப்பில்லாத. முந்தையோர் - முன்னோர். அடைதி - அடைவாய்.

ஆனந்த வனத்து மேய வளமெலா மமைய நோக்கி
ஆனந்தம் பயப்ப தற்கோ ரையமின் றென்று தேர்ந்தே
ஆனந்த வறமுண் டாக்கு மற்புதக் கங்கை யாடி
ஆனந்த வுருவ மாநம் மருட்குறி பணிந்தெ ழுந்தான். 37

கு - ரை : ஆனந்தவனம் - ஸ்ரீ காசி. அமைய - பொருந்த. தேர்ந்து - தெளிவுற்று. அற்புதக்கங்கை - தெய்வத்தன்மையுள்ள கங்கைநதி. நம் அருட்குறி - விசுவலிங்கவடிவம்.

கங்கையி னன்னீ ராடல் காலங்க டோறுஞ் சார்ந்து
செங்கையின் மழுமா னேந்திந் திகழுநங் குறிசே வித்தல்
அங்கையிற் கண்ணாய் நீயா மன்னபூ ரணியைப் போற்றல்
சங்கையி னியமங் கொண்டான் றவத்துயர் புண்ட ரீகன். 38

கு - ரை : காலங்கள் தோறும் - ஆறுகாலங்களிலும், அங்கையிற் கண்ணாய் - விசாலாக்ஷியே: விளி, நீயாம் அன்னபூரணி - அன்னபூரணி என்னும் பெயரையுடைய நீ. சங்கையில் - ஐயமில்லாத.

இந்தநன் னியமம் பூண்டே யிராயிர வருடங் காறும்
நந்தவெம் பொறிய டக்க லாதிய நயந்து மேவும்
பந்தமின் முனிக்குக் காட்சி பாலித்தே மல்லே மாக
வந்தநன் முனிவ னுள்ளத் தவலத்தாற் கவல லுற்றான். 39

கு - ரை : கங்கையில் நீராடல், ஆறுகாலங்களிலும் சிவலிங்கஞ் சேவித்தல், அம்பிகையாம் அன்னபூரணியைப்போற்றல் ஆகிய நியமங்களுடன் இரண்டாயிரம் வருடங்கள் ஐம்புலனடக்கல் முதலிய விரதங்களை மேற்கொண்டு புண்டரீகமுனிவன் இருந்தும் நாம் காட்சிதந்திலம். அதனால் அம்முனிவன் கவலை கொண்டான்.

இரங்கிடு காலை வாம தேவமா முனியாங் கெய்தி
வரங்கிளர் ஒருநீ நெஞ்ச மாழாந்த தென்னை யென்னப்
பரங்கிள ருடம்பி னோடு முத்தியிற் படர்தல் வேட்டேன்
கரங்கனன் மழுவேந் தண்ணல் கருணைசெய் திலனு மின்னும். 40

கு - ரை : புண்டரீகமுனிவன் கவலையுற்று இரங்கிய காலத்து வாம தேவமுனிவர் அங்கு அடைந்தார். வரங்கிளர் - வரத்தால் மேம்பட்ட; சிறந்த என்றபடி. மாழாந்தது - கவலையிற்பட்டது. பரங்கிளர் உடம்பினோடு - மேம்பட்ட இந்த உடம்போடு. முத்தியிற் படர்தல் - வீட்டுலகத்தை அடைதற்கு. வேட்டேன் - விரும்பினேன். கரம் கனல் மழு ஏந்து அண்ணல்.

அதுகுறித் திரங்கு கின்றேன் ஐயனே யென்று னன்னுன்
விதுமுடிப் பெருமா னீங்கு வீந்தார்க்குத் தன்சா ரூபங்
கதுமெனக் கொடுப்ப தன்றிக் கருதிய தளித்தல் செய்யான்
மதுமலர்ச் சூதக் காஞ்சி மாநகர் குறுகு கென்றான். 41

கு - ரை : விதுமுடிப்பெருமான் : விது - சந்திரன். வீந்தார்க்கு - இறந்தவர்களுக்கு. ஈங்கு - இந்தக் காசிப்பதியில். தன் சாரூபம் - சிவ சாரூபம். அது மான், மழு, சதுர்ப்புஜம், காளகண்டம், திரிநேத்திரம் முதலியன உடையவடிவம். கதும் என - விரைவாக. கருதியது - நீஎண்ணிய வீடு பேற்றை. சூதம் - மாமரம்.

மொழிபுகழ் வாம தேவ முனிவன்சொல் உள்ளங் கொண்டு
கழிதவப் புண்ட ரீகன் காஞ்சிமா நகரஞ் சென்று
பழிதபு கம்பை யாதிப் பற்பல புனலு மாடி
இழிவறு சூத நீழ லெம்மையாங் கிறைஞ்சி னானே. 42

கு - ரை : கழிதவப் புண்டரீகன் - மிக்க தவத்தையுடைய புண்டரீக முனிவன். பழிதபு - இகழ்தலில்லாத. கம்பையாதி - கம்பை முதலியவாகவுள்ள. பற்பலபுனல் - பலவகைப்பட்ட தீர்த்தங்கள். சூதநீழல் - மாமர நீழலில். ஆங்கு - அத்தலத்தில்.

கறைதபு காமக் கண்ணி யெனும்பெயர் கலந்து வாழும்
மறைபுக ழிணையும் போற்றி வழுத்துமத் தலத்தின் கண்ணே
முறைமையி னொருகா ரோண மூர்த்தியைத் தாபித் தன்பிற்
பொறைமிக வாண்டு பன்னீ ராயிரம் பூசித் தானால். 43

கு - ரை : கறைதபு - குற்றம் நீங்கிய. காமக்கண்ணி - காமாட்சி; காஞ்சித்தலத்திலுள்ள அம்மையார் திருநாமம். காரோணமூர்த்தி - காயா ரோகணர்: அவர் கச்சிக்காரோணர். பொறைமிக - மிகுந்த பொறுமை யோடு. பன்னீராயிரம் ஆண்டுகள் பூசித்திருந்தான்.

ஆங்குநாங் காட்சி நல்கே மாயினே மதுதெ ரிந்து
பாங்குசால் புண்ட ரீகன் படருற்றுத் துயருங் காலை
ஈங்குமே வினரு டம்போ டிறுமுத்தி யெய்தா தாகும்
லிங்குபோ காதி யாவும் வீசுதல் கூடு மோர்தி. 44

கு - ரை : ஆங்கும் - காஞ்சித்தலத்தும். படர் உற்று - துன்பத்தை அடைந்து. துயருங்காலை - வருந்தும் காலத்து. ஈங்கு மேவினர் - இக் காஞ்சித் தலத்துப் பொருந்தினோர். ஈங்கு - இத்தலத்தில். போகாதியாவும் - போகபோக்கியங்கள் எல்லாம். ஓர்தி - ஆராய்ந்து அறிவாய்.

ஆதலிற் கும்ப கோண மடுத்துநீ பூசிப் பாயேல்
காதலிற் பெறுவா யென்று கருதசரீரி யானும்
ஓதலிற் களிப்பு மேவி யொருகும்ப கோணஞ் சார்ந்தான்
போதலிற் கருதன் முற்றப் புணருமென் றுள்ளங் கொண்டே. 45

கு - ரை : கருது அசரீரியால் நாம் ஓதலின்: அசரீரி - ஆகாயவாணி. போதலின் - போவதனல். கருதல் முற்றப் புணரும் - நாம் எண்ணிய எண்ணம் முழுதும் கைகூடும்.

மன்னுமத் தலத்தின் மேலா மாமக தீர்த்த மாடித்
துன்னுநந் திருமு னும்பொற் றாமரைப் புனலுந் தோய்ந்து
பன்னுநங் குறியும் போற்றி மங்களப் பெயர்ப ரித்து
மின்னுநின் றனையும் போற்றி மற்றவும் விருப்பிற் றாழ்ந்தான். 46

கு - ரை : மேலாம் மாமகதீர்த்தம் - மேம்பட்ட மகாமகதீர்த்தம். பொற்றாமரைப்புனல் - பொற்றாமரைத்தீர்த்தம். நம்குறி - கும்பேசர் என்னும் நம்முடைய வடிவம். நம்திருமுன் ஆம் - நம்முடைய சன்னிதிமுன்னேஉள்ள. மங்களப்பெயர் பரித்து - மங்களநாயகி என்னும் பெயரைத்தாங்கி. மற்றவும் - மற்றுள்ள சிவலிங்க மூர்த்திகளையும்.

எண்ணரிய வாங்குங் காயா ரோகண லிங்கந் தாபித்(து)
அண்ணரிய வன்பி னெண்பா னுயிர வருடம் பூசை
பண்ணரிய முனிவ னுக்குப் பருவம்வந் துறுமை யாலே
கண்ணரிய தருளா வண்ண மிருந்தனம் கருங்கட் பாவாய். 47

கு - ரை : எண்ணரிய ஆங்கும் - நினைந்த அக்கும்பகோணதலத்தும். அண்ணரிய - நிறைந்த. பருவம்வந்து உறுமையால் - பக்குவகாலம் வந்து அடையாமையால். கண்ணரியது - கருதியது.

இத்தனை யாண்டுப் பூசை யியற்றியு மிருவர் தேரு
அத்தனை யடியர்க் கெய்ப்பில் வைப்பென வருள னாதி
முத்தனை யடையப் பெற்றே மலமென்று முனிவன் வாடிப்
பித்தனை நிகர்ப்ப மேன்மேற் பேதுறு கின்ற காலை. 48

கு - ரை : இத்தனை ஆண்டு - காசியில் ஈராயிரம் ஆண்டுகள், காஞ்சியில் பன்னீராயிரம் ஆண்டுகள், குடந்தையில் எண்பானுயிரம் ஆண்டுகள். இருவர் - பிரமவிஷ்ணுக்கள். எய்ப்பினில் வைப்பு - அல்லற்காலத்துச் சேமநிதி. பேதுறுகின்றகாலை - வருந்தும் காலத்தில்.

கண்ணுவ முனிவன் ஞேன்றிக் கருதிய தடைய வேண்டில்
எண்ணுவ தினியொன் றின்றி யிரங்குகீழ்ப் பரவைக் கோட்டில்
அண்ணுவ மான மில்லா வாதிபு ராணஞ் சார்ந்து
பண்ணுவ தாங்குச் செய்யிற் பலித்திடு நினைத்த தென்றான். 49

கு - ரை : கண்ணுவமுனிவர், கும்பகோண தலத்திலே புண்டரீக முனிவனை எதிர்ப்பட்டு நீ எண்ணியபடி இந்த உடம்போடு வீடுபேற்றை அடையவேண்டினுல். கீழ்ப்பரவைக்கோட்டில் - கிழக்குக்கடற்கரையில். அண் உவமானம் இல்லா.

முனியுரை தலைமேற் கொண்டு மொய்வளக் குடந்தை நீத்தே
இனியது செய்வே னென்னுச் சிவராச தானி யென்னும்
பனிமலர்ப் பொழில்சூ ழாதி புராணமாத் தலம்ப டர்ந்து
துனிதவிர் தேவ தீர்த்த முதற்பல புனலுந் தோய்ந்தான். 50

கு - ரை : முனி - கண்ணுவ முனிவர். ஆதிபுராணம் - நாகபட்டினம். தேவதீர்த்தம் முதல் - தேவதீர்த்தம் முதலாகவுள்ள. பல புனலும் - பலதீர்த்தங்களிலும்.

பொருந்தவங் கமரு மாதி புராணப்பே ரெமையு மேன்மைக்
கருந்தடங் கண்ணி யென்னக் கலந்தமர் நினையும் போற்றித்
திருந்தும்வண் சறுவ தீர்த்தத் தென்மேற்காச் சிரமஞ் செய்தாங்(கு)
அருந்தவர் தொழுங்கா ரோண விலிங்கமும் பதிட்டை யாற்றி. 51

கு - ரை : கருந்தடங்கண்ணி - நீலாயதாட்சி. சறுவதீர்த்தத்தின் தென்மேற்கிலே ஆச்சிரமம் செய்துகொண்டு. பதிட்டை - பிரதிட்டை.

அந்தமா விலிங்கத் திற்கு மளப்பரு மன்பு பொங்கச்
சந்தமென் மலர்க ளாதி யாவையுந் தழீஇப்பூ சித்துப்
பந்தமுற் றொழியு மாறு பரவிநன் கமர்மு னிக்குக்
கந்தமென் மலர்ப்பூங் கோதாய் காட்சிதந் தருளி னேமால். 52

கு - ரை : பந்தம் முற்று ஒழியுமாறு - பந்தம் முழுவதும் நீங்கும்படி. முனிக்கு - புண்டரீக முனிவருக்கு.

காட்சிதந் தருள லோடுங் கதுமென வடியில் வீழ்ந்து
மாட்சிசா லன்பர் வாழ்வே வருபவப் பிணிம ருந்தே
மூட்சிசால் விருப்பிற் பன்னுண் முயன்றன னின்ருள் காணப்
பூட்சியோ டடியே னின்னைப் புணர்திற மருளா யென்றான். 53

கு - ரை : கதும் என - விரைவாக. அன்பர் வாழ்வே - அடியார்களுடைய வாழ்வாக இருப்பவரே. பவப்பிணி மருந்தே - பிறவிநோய்க்கு மருந்தாக உள்ளவரே. வருபவம் - மேலும் மேலும் வரும்பிறப்புக்கள். புணர்திறம் - கலக்கும் தன்மையை.

முன்னிய புண்ட ரீக முனிவநம் மூன்றுங் காட்சி
மன்னிய காலத் தெண்ணம் வாய்த்திடப் பெறுவா யென்று
நன்னிய மத்த வற்கு நாஞ்சொல்லி மறைந்தேம் யாரும்
பன்னிய விலிங்கத் துள்ளாற் பனிவரை பயந்த தோகாய். 54

கு - ரை : முன்னிய - நம்மைக் கருதித்தவஞ்செய்த. நம்மூன்றும் காட்சி - நம்முடைய மூன்றுவது தரிசனம். மன்னிய காலத்து - உனக்குப் பொருந்திய காலத்தில். எண்ணம் - உன்னுடைய நினைவு. பன்னிய இலிங்கத்துள்ளால் - மேலே கூறிய காரோண லிலிங்கத்தினுள்.

உரைத்தரு ளியசொற் கொண்டே யுறுவர ரேறு போல்வான்
விரைத்தபூம் பொழில்சூ ழாங்கே மேவிநோற் றிருந்தான் மாண்பால்
புரைத்தநா மெழுவாய்க் காட்சி புணர்த்திய துணர்தி யென்றுன்
நரைத்தசாந் தளாய கொங்கை யம்மையுள் ளுவகை பூத்தாள். 55

கு - ரை : உறுவரர் ஏறு போல்வான் - தவத்தில் மேம்பட்ட முனிவர்களுக்குச் சிங்க ஏறுபோன்றவன்; புண்டரிக முனிவன். ஆங்கே - ஆதி புராணமாகிய அத்தலத்தில். நோற்றிருந்தான் - தவஞ்செய்திருந்தான். எழுவாய்க்காட்சி - முதற்காட்சி. புணர்த்தியது - தந்தது.

பந்தமில் புண்ட ரீகப் பனவனுக் கெழுவாய்க் காட்சி
தந்தமை யெடுத்துச் சொற்றுஞ் சிவராச தானி மேய
அந்தமி லனைய மூர்த்தி யணிகிள ரிரண்டாங் காட்சி
நந்தநன் கருளு மாறு நாமினி யுரைக்க லுற்றும். 56

கு - ரை : பந்தம் இல் - பந்தபாசமில்லாத: என்றது பற்றற்ற என்றபடி. புண்டரிகப்பனவன் - புண்டரிகன் என்னும் பிராமணன். சிவராசதானி - நாகபட்டினம். அனையமூர்த்தி - அக்காயாரோகணர்.

புண்டரிகமுனிவர் முதற்காட்சியுரைத்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 519.

ஒன்பதாவது

புண்டரீகமுனிவர் இரண்டாம்

காட்சி உரைத்தபடலம்

பொருவுதவிர் சனற்குமர னந்திபிரா னடிவணங்கிப் புண்டரீகன்
வெருவுதவிர் சிவராச தானியாச் சிராமத்து விருப்பின் மேவி
மருவுதவி ராவிரண்டாங் காட்சிபெற்ற வரலாறும் வகுத்தி யென்ன
ஒருவுதவிர் நயசுகுணத் தனயன்மன மகிழ்ச்சிமிகுந் துரைக்க
[லுற்ருன். 1

கு - ரை: பொருவு தவிர் - ஒப்பற்ற. வெருவு - அச்சம். தவிரா - நீங்காத. நயசுகுணம் - இனிய நல்ல குணம். தனயன் - ஞானபுத்திரன்; சீடனை ஞானபுத்திரன் என்பது மரபு.

சிற்றுதரம் வருந்தாம லண்டபகி ரண்டமெலாஞ் செழிக்க வீன்றுஞ்
சற்றுமொரு தளர்ச்சியுரு திளங்கன்னி யாயமருஞ் சயிலப் பாவை
கற்றுநவில் புகழ்முனிக்கு நீயிரண்டாங் காட்சிதந்த கருணை கேட்கும்
பற்றுமிகுந் தவனெனப்பல் லுலகுமுய்ய விடமுண்ட பரமன் கூறும். 2

கு - ரை: சிறு உதரம் - சிறிய வயிறு. அண்டபகிரண்டம் - உள் அண்டம் வெளியண்டங்கள். தளர்ச்சியுரு - இளைப்பில்லாத. கன்னி: ''பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும்'' (சித்தி); ''பெற்ருள் சக தண்டங்க ளனைத்தும் மவைபெற்றும், மூற்ருமுகிழ் முலையாளொடு முக்கண் ணர் விரும்பும்'' (வில்லிபா - அருச்சுனன் தீர்த்த - 15). ''சிறிதும்வருந் தாதெல்லா வுலகு மீன்ருள்'' (நாகை - சறுவதீர்த்த - 27). சயிலப்பாவை - இமயமலையரையன் புதல்வி. பரமன் - சிவபெருமான்.

மாண்டதவப் புண்டரீ கப்பெருமா
முனிகிரியை வழுவா தாற்ற
நீண்டமன முடையானுய் வைகறையிற்
றுயிலெழுந்து நிகரி லாமை
யாண்டநறுந் தேவதீர்த் தங்குடைந்து
வெள்ளியநீ றணிந்து மேன்மை
பூண்டமணித் தொடைபுனைந்து பிடகைகொடு
நந்தவனம் புகூஉப்பூக் கொய்வான். 3

கு - ரை : மாண்டதவம் - பெரியதவம். கிரியை - கிரியாமார்க்கத்தால் வழிபடுதல். "கிரிச னெம்பிரான் அருச்சனைபுரிவது கிரியை" (திருக்குற்ருலப் புராண). இதனைப் புத்திரமார்க்கம் என்பர்; "புத்திர மார்க்கம் புகலிற்" என்னும் (சித்தி - 8, 20) செய்யுளானறிக. வழுவாது ஆற்ற - குறைபடாமற் செய்ய. வைகறை - விடியற்காலம். குடைந்து - நீராடி. மணித்தொடை - உருத்திராக்கத்தாழ்வடம். பிடகை - பூக்குடலை.

நந்தியா வட்டமா தளைசந்து கூதாளம் நரந்தம் நாவல்
புந்திகூர் மாலூர மந்தார மாஞாழல் புன்னு கஞ்செவ்
வந்திபா டலங்கன்னி காரமா மலகமார் மாயோன் காந்தி
முந்தியாம் விழைகொன்றை தேங்கொன்றை வகுளநீர் முள்ளி காஞ்சி.

கு - ரை : மாதளை - மாதுளம்பூ: பூமாதுளை. சந்து - சந்தனம். கூதாளம் - கூதாளிச்செடி. ஞாழல் - புலிநகக் கொன்றை. பாடலம் - பாதிரி. கன்னிகாரம் - கோங்கு. நரந்தம் - நாரத்தை. ஆமலகம் - நெல்லி. ஆர் - ஆத்தி. மாயோன்காந்தி - விஷ்ணுகரந்தை. வகுளம் - மகிழ்.

சிந்துவா ரங்குரவஞ் செவ்வகத்தி நீர்மிட்டான் செருந்தி வேங்கை
நந்துநா யுருவிபொன்னு விரைகுருந்து வன்னிகுசை நாணல் காயா
முந்துமோ ரிதழ்க்கமலம் வழைகொக்கு மந்தாரை முளரி தான்றி
உந்துபொன்னூ மத்தைகூத் தன்குதம்பை செவ்வரத்த முயர சோகம். 5

கு - ரை : சிந்துவாரம் - வெண்ணொச்சி. குசை - தருப்பை. ஓரிதழ்க் கமலம் - ஓரிதழ்த்தாமரை. வழை - சுரபுன்னை. முளரி - தாமரை. கூத்தன் குதம்பை - ஒருவகை மஞ்சள்நிறப்பூவுடையது.

மருவருக்கம் வெட்பாலை வெள்ளிலோத் தம்பூளை மாவி லிங்கம் [கீரை
கருவிளம்பன் னீர்திலமார் பலாசுபட்டி பருத்திவெண்காக் கணஞ்செங்
யொருகுவளை சேதாம்பல் சதகுப்பை வெட்சிதுழா யோங்கு வாகை
கருநிறத்த மலர்ச்செம்பை கண்டங்கத் திரிகிளுவை கரந்தை காரை. 6

கு - ரை : மரு வருக்கம் - மரு மருக்கொழுந்து வெட்டிவேர் முதலியன. செவ்வரத்தம் - மந்தாரம். வெள்ளில் - விளா. கருவிளம் - காக்கணம். குவளை - செங்கழுநீர்; கருங்குவளை - நீலோற்பலம். கருநிறத்த மலர்ச் செம்பை - கருஞ்செம்பை. கரந்தை - சிவகரந்தை. துழாய் - துளசி.

கொழுந்துவிளா வலரிதுரோ ணங்காந்தள்
வெட்டிவேர் கோட்டந் தாழை
எழுந்துபொலி விலாமிச்ச வேர்மஞ்ச
ணத்திகடம் பிரவி காந்தி

செழுந்தகைவெற் றிலையறுகு கருங்காலி
குளவிபச்சை சிறந்த சாலி
தழுந்தரமா ரழிஞ்சில்வழு துணைமயிலை
ஒண்பாரி சாதம் தாளி. 7

கு - ரை : கொழுந்து - மருக்கொழுந்து. அலரி - செவ்வலரி, வெள்ளலரி. துரோணம் - தும்பை. மஞ்சணத்தி - நுணா. இரவிகாந்தி - சூரிய காந்தி. குளவி - மலைமல்லிகை. பச்சை - விபூதிப்பச்சை, மாசிப்பச்சை, கதிர்ப் பச்சைகள். சாலி - செந்நெல். மயிலை - இருவாட்சி. தாளி - தாளியறுகு.

வதரியெலு மிச்சைபுலி தொடக்கிநறு
மல்லிகைய வாங்குச் சிப்புல்
இதமிகுசண் பகமாதிப் பற்பலவு
மிதப்பக்கொய் தெடுத்துக் கொண்டு
கதமிலொரு தலையமைத்து மாலையுமிண்
டையுந்தொடையுங் கண்ணித் தாருஞ்
சுதமினமை யலங்கரிக்கத் தக்கபடி
முயன்றமைத்துத் தொகுத்த பின்னர். 8

கு - ரை : வதரி - இலந்தை. புலிதொடக்கி - இண்டு. மிதப்ப - மிகுதியாக. மாலை, இண்டை, தொடை, கண்ணி, தார் என்பன மாலை வகைகள். இண்டை: ''மலரிண்டைகட்டி'' மாலை; ''கார்க்கொன்றைமாலை கலந்ததுண்டோ'' (தேவா). கண்ணி - ஆடவர் தலையிற் சூடுதற்குரிய மாலை; ''மாதர் பிறைக் கண்ணி யானை'' (தேவா). தார் - மார்பிலணியும் மாலை; ''மார்பொடு விளங்க வொருகை, தாரொடு பொலிய வொருகை'' (முருகு, 112 - 3). சுதம் இல் - அழிவில்லாத. முயன்று - முயற்சித்து.

வண்டுபடு மார்கண்ணி வளவர்பிரான்
முனிவர்பிரான் மாண்பு தேர்ந்து
கொண்டுபரி சனம்பூசா திரவியமு
னேனையவுங் கொடுத்து வேண்டக்
கண்டுமகிழ்ச் சியிற்றழுவிக் கதிர்முதிர்முன்
மஞ்சனநீர் கனிவிற் றெவ்வி
யண்டுநிறை தொறுநிரப்பித் துடிகருப்பூ
ரம்பொடித்திட் டமைத்துக் கொண்டு. 9

கு - ரை : ஆர்ங்கண்ணி - ஆத்திப்பூமாலை. வளவர் - சோழர். முனிவர்பிரான் - புண்டரீகமுனிவர். பரிசனம் - பரிவாரம், தொண்டுபுரிவோர். பூசாத்திரவியம் - பூசை உபகரணங்கள். முன் ஏனையவும் - முதலாக மற்றைப் பொருள்களையும். கதிர் முதிர்முன் - சூரியன் வெப்பம் முதிர்வதன் முன்பு; முற்பகலிலேயே என்றபடி. தெவ்வி - முகந்து, கைக்கொண்டு. அண்டு - அண்டாக்கள். துடி - ஏலம்.

பலநிவே தனமமைக்கச் சிலரையே விப்பசுங்கர்ப் பூர மாதிப்
பலவிராய்ச் சாந்தமைக்கச் சிலரையே விப்புனிதம் பாத்தி ரங்கள்
பலவும்வாய்த் திடவியற்றச் சிலரையே விக்கனிவு பரவப் பூக்கள்
பலவிராம் புனன்மீட்டுங் குடைந்துநீற் றெடுகண்மணி பராய்த்த
ரித்தே. 10

கு - ரை : பசுங்கர்ப்பூரம் - பச்சைக் கருப்பூரம். சாந்து - சந்தனம். பசுங்கர்ப்பூரம் ஆதி என்றது பச்சைக்கருப்பூரம், குங்குமப்பூ, கத்தூரி, கோரோசனை, புழுகு, சவ்வாது, பனிநீர் முதலியவற்றோடு கலந்த சாந்து என்க. இவை எட்டும் அட்டகந்தம் எனப்படும். கனிவுபரவ - அன்புமிக. விராம் - கலந்த.

இப்பாடல் நிவேதனம், சந்தனம் அமைத்துப் பூமிசுத்தி செய்தல் கூறும்.

தெளிவளராய் பதமைந்து முளத்தெண்ணி
யன்பொடுநந் திருமுன் போந்து
களிவளர்நம் மனுஞைபெற்று விதிவழியே
புண்ணியாக வாச னஞ்செய்
தளிவளர்கௌ வியபூசை யாற்றியமு
தோரைந்து மமையப் போற்றி
ஒளிவளர்ஒன் பதுகும்ப நிறீஇத்தொழுது
தழற்கரும முஞற்றி னானே. 11

கு - ரை : தெளி வளர் ஆய் பதம் ஐந்தும் - தெளிவு மிகும் ஆராய்ந்த எழுத்துக்கள் ஐந்தையும்; என்றது சிபஞ்சாக்கரத்தை. ஐந்தெழுத்தின் பொருள் சிகரம் முதலாக முறையே சிவம், அருள், ஆன்மா, திரோதம், மலம் என ஐவகைப்படும். இவற்றுள் மலம் திரோதம் என்னும் இரண்டையும் நீக்கி ஆன்மா அருளால் சிவனுடன் கலக்கும் முறையை உணர்த்துவதாய ஐந்தெழுத்து முறையாம். அஃதாவது யகரம் நடுநிற்க சிகர வகரங்கள் முறையே முன்னும் பின்னுமாய் நிற்றல். அது சிவோகம் பாவனையை உணர்த்துவதாம். அம்மந்திரத்தின் உச்சரிப்பு முறையைக் குருவினிடத்து உபதேசவாயிலாக அறிக. திருமுன் - சந்நிதியை. நம் அனுஞை - நம் உத்தரவு: நம் என்றது சிவபிரான். அனுக்ஞை, புண்ணியாகவாசனம், கௌவியபூசை, அமுது ஐந்து முதலியன விதிப்படி செய்து என்க. கௌவியம் - ஆனைந்து; பால், நெய், தயிர், கோமயம், கோசலம் என்பன. அமுது ஐந்து - பஞ்சாமிர்தம்; கற்கண்டு திராட்சை சர்க்கரை தேன் பழம் என்பன. பஞ்சாமிர்தம் வேறு, பலபஞ்சாமிர்தம் வேறு என உணர்க. ஒன்பது கும்பம் - ஒன்பது கலசங்கள். தழற்கருமம் - அக்கினி காரியம். உஞற்றுதல் - செய்தல்.

இப்பாடலால் அபிஷேகம் செய்யுமுன் அபிஷேகத் திரவியங்களை அமைக்கும் முறை விதிக்கப்பட்டது.

ஒருமருப்பன் முதலாய துவாரவா னவர்பூசை யுவந்து செய்து
பொருவரிய கருக்கிரகம் புகுந்துவர நதிபூசை பொலிய வாற்றிப்
பெருவலியிற் பூதசுத்தி தானசுத்தி மனுச்சுத்தி பெருக்கம் வாய்ந்து
மருவுதிர வியசுத்தி யிலிங்கசுத்தி யோரைந்து மாண்பி னுற்றி. 12

கு - ரை: ஒரு மருப்பன் - ஒற்றைக் கொம்பையுடைய விநாயகர். துவாரவானவர் - துவாரத்திலுள்ள தேவர்கள். கருக்கிரகம் - கர்ப்பக்கிரகம். வரநதி - கங்கை. பூதசுத்தி, தானசுத்தி, மந்திரசுத்தி, திரவியசுத்தி, இலிங்கசுத்திகள்; இவை பஞ்சசுத்திகள் எனப்படும். சிவாகம விதிப்படி வழிபடுவோர் இந்த ஐவகைச்சுத்தியும் செய்யாமல் சிவபூசைசெய்தல் இல்லை. பஞ்சசுத்தி இல்லாத பூசை பயன் தராது. ''ஐவகைச் சுத்தியு மமைத்து...... உலவாது பூசைமுற்றும், சைவமுறை யாற்றுகைப் பங்கயஞ் சேப்ப'' (அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்).

சொற்றபாத் தியமுமா சமனமுநல் லருக்கியமுந் தூய்தாப் பண்ணி
உற்றவா தாரசத்தி முதற்சத்தி மண்டலமீ றுறப்பூ சித்துப்
பற்றவா வாகனமுந் தாபனமு முளத்தன்பு பதிய வாற்றி
மற்றவா றைந்தன்மே லெட்டங்க நியாசமுநன் மாண்பி னுற்றி. 13

கு - ரை: சிவாகமத்திலே விதித்த பாத்தியம், ஆசமனம், அருக்கியம் முதலியன சேர்த்து, ஆதாரசத்தி முதல் சத்திமண்டலம் ஈருகப் பூசனை செய்து, பின்பு ஆவாகனம், தாபனம் அன்புடன் இயற்றி, முப்பத்தெட்டுக் கலா நியாசங்களையும் சிறப்பாகச் செய்து: ''ஐயாறதன் மிசை எட்டுத் தலை யிட்ட வான்கலை'' என்பர்.

கூறுசந்நி தானமொடு சந்நிரோ தனமவகுண் டனமுஞ் செய்து
பேறுதரு நற்றேனு முத்திரைமுற் பற்பலவும் பிறங்க நல்கி
வீறுகெழு பாத்தியமா சமன மருக் கியங்கொடுத்து வேலை யேழு
மாறுகொடு முழங்கியன விய முழங்க வபிடேக மாண்பிற் செய்வான். 14

கு - ரை: சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனு முத்திரை முதலியவற்றை விளங்கச்செய்து, பாத்திய ஆசமன அருக்கியங் களைக் கொடுத்து, அபிஷேகம் சிறப்பச் செய்வான். அபிஷேக காலத்தில் பலவகை வாத்தியங்கள் முழங்கச்செய்வான். அவ்வொலி கடல் ஏழின் ஒலியையும் அடங்கச்செய்தது.

ஆன்றநறுந் தயிலமா நெல்லியரி சனங்குடஞ்சுட் டமைந்த வைந்து
சான்றவமு தைந்துநெய்பா றயிர்சுவைத்தேன் அயிரரம்பை தழைவ
ஏன்றநறுஞ் சூதமுயர் கருப்பஞ்சா றிலிகுசத்தி னெடுத்த சாறு [ருக்கை
தோன்றநரந் தக்கனிமா துளங்கனித மரக்கனியிற் றெருகுத்த சாறு. 15

கு - ரை : இனி அபிடேகப் பொருள்கள் முறையே கூறுகின்றார். எள்நெய், மாவகை, நெல்லி, கத்தூரிமஞ்சள், பஞ்சகவ்வியம், பஞ்சாமிருதம், நெய், பால், தயிர், தேன், வாழை பலா மா முதலிய முக்கனிகள், கருப்பஞ்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தை, மாதுளை, தமரத்தை முதலிய பழச்சாறுகள்.

தயிலம் - எள்நெய். அரிசனம் - மஞ்சள். குடம்சுட்டு - பசு. அரம்பை - வாழை. வருக்கை - பலா. சூதம் - மா. இலிகுசம் - எலுமிச்சை. நரந்தம் - நாரத்தை. அயிர் - சருக்கரை.

மேயவிள நீரடிசில் சந்துதப னங்கங்கை வில்வச் சாறு
பாயசகத் திரதாரை சிருங்கம்வலம் புரிமுறைமை பயப்ப வாட்டி
நேயமுற வாட்டுதொறு மிடையிடைச்சுத் தோதகநன் னிவேத னதி
யாயபுரிந் தொற்றுடை யிட்டுமிளிர் பரிவட்ட மலங்கச் சூழ்ந்து. 16

கு - ரை : இளநீர், அன்னம், சந்தனம், தபனஜலம், கங்காஜலம், வில்வஜலம், சகத்திரதாரை, சிருங்கஜலம், வலம்புரிஜலம் இவைகளை முறைப்படி அபிடேகஞ்செய்து, இடையிடையே சுத்த ஜலங்கொண்டு அபிடேகித்து, நிவேதனம்செய்து என்றது ஒவ்வொரு திரவியமும் அபிடேகம் செய்யுங்காலத்தில் இயன்ற ஒன்றைவைத்து நிவேதனம் செய்து என்றபடி. திருவொற்றுடை சாத்தி அழகிய பரிவட்டம் சாத்தி. இளநீர் - செவ்விளநீர். சந்து - சந்தனக்குழம்பு. சிருங்கம் - காண்டாமிருகத்தின் கொம்பு. வலம்புரி - வலம்புரிச்சங்கம். நேயம் உற - அன்பு பொருந்த. சுத்தோதகம் - சுத்தஜலம்.

தூயவுப வீதமெடுத் தணிந்துமணி முடிகுழைபொற் சுடர்க்கே யூர
மாயவொளி படுவயிர கடகமணி மதாணியொளி ராழி நாண்முன்
ஏயமலி தரச்சாத்தி நீறெருடுசாந் தணிந்துதொடை நிரம்பச் சூட்டிப்
பாயநறுந் தூபமொளிர் தீபமெடுத் துறவயக்கிப் பண்பு மேவ. 17

கு - ரை : தூய - பரிசுத்தமான. உபவீதம் - பூணூல். முடி, குழை, கேயூரம், வயிரகடகம், மதாணி, ஆழி முதலிய அணிகலங்களைச் சாத்தி. சாந்து - சந்தனம். நீறு - திருநீறு. தொடை - மலர்மாலை. தூபம், தீபம் முதலியன கொடுத்து முடி - கிரீடம். மணி - இரத்தினம். கேயூரம் - வாகுவலயம். நாண் - பொற்பூணூல்.

நாடுதள வரும்பளசுத் தோதனமொண் பருப்படிசி னன்பாற் சொன்றி
நீடுகுளப் பொம்மல்புளி ப டுமிதவை திலமூர னெய்யி னேடு
கூடுசருக் கரைவல்சி மரிசயினி ததிமடைகுய் கோலச் செய்து
வாடுதலில் சுவைக்கருனை பாகரிலட் டுகந்தோசை வளங்கூர் பிட்டு. 18

கு - ரை : தளவு அரும்பு - முல்லை அரும்பு. சுத்தோதனம் - சுத்தான்னம். பருப்படிசில் - பருப்பன்னம். பாற்சொன்றி - பாற்சோறு. குளப்பொம்மல் - சருக்கரையன்னம். புளி படு மிதவை - புளியோதனம். திலமூரல் - எள்ளோதனம். நெய்யினொடு கூடு சருக்கரை வல்சி - அக்காரவடிசில். ததி மடை - தயிரன்னம். குய் - தாளிதம். கருனை - பொரிக்கறி. இலட்டுகம் - அபூபவகை. ஓதனம், அடிசில், சொன்றி, பொம்மல், மிதவை, மூரல், வல்சி, அயினி, மடை முதலியன அன்னத்தின் பரியாயநாமங்கள்.

பண்ணியமோ தகமுழுந்த வடையினிய
நோலைமற்றும் பகர பூபந்
தண்ணியதெங் கிளநீரின் குளநீர்வண்
பழநீர்மோர் சார்ந்த தூநீர்
கண்ணியவொண் சுத்தநீ ரிவையனைத்து
மொரோவொன்ருக் கனிவி னல்கிப்
புண்ணியமா ரருக்கியந்தாம் பூலமுக
வாசமுறை பொலிவி னீந்து. 19

கு - ரை : பண்ணியம் - பலகாரவகை. மோதகம் - கொழுக்கட்டை. உழுந்தவடை. நோலை - எள்ளுருண்டை. மற்றுள்ள அப்பவகைகள். இளநீர், பானகம், பழவகைகள், நீர்மோர், சுத்தநீர் இவைகளை எல்லாம் ஒவ்வொன்ருக நிவேதனம் செய்து. பின்பு அருக்கியம், தாம்பூலம், முக வாசப்பொருள் முதலியவற்றைக் கொடுத்து. குள நீர் - பானகம். முகவாசம் - ''தக்கோலம் தீம்பூத் தகைசால் இலவங்கம், கப்பூரம் சாதியோ டைந்து''.

விரைகெழுதூ பங்கொடுத்து மேலடுக்கு தீபமுதல் விளம்பா நின்ற
புரையில்பல வாகியவா ராதனமும் புரிந்துமணப் பூக்க டுவிக்
கரையுநிராஞ் சனஞ்செய்த பின்பளித விளக்கெடுத்துக் கனிவு மேவ
உரைபருத்தி வித்தொடுவேப் பிலைசுழற்றி யெறிந்துவெண்ணீ
[ருளிரச் சாத்தி. 20

கு - ரை : விரைகெழு தூபம் - வாசனைமிகுந்த தூபங்கள். அடுக்கு தீபம் முதல் பலவகையான தீபங்களும். நிரஞ்சனம் - கற்பூர நீராஞ்சனம். பளித விளக்கு - பச்சைக்கற்பூர தீபம். பருத்திவித்து - பருத்திவிதை.

திருந்துதருப் பணாங்கவிகை வெண்கவரி யாலவட்டஞ் சிவிறி யாய
பொருந்துமிவை நேர்வயக்கிப் புதுமலரக் கதைசாத்திப் புனிதந் தீரா
திருந்துதிக முருக்கியமு மீந்துபல மலரிடக்கை யேந்திச் சன்ம
மருந்துபுரை யைந்தெழுத்தும் வலக்கையிற்கண் மணிமாலை வாங்கி
[யெண்ணி. 21

கு : ரை : தருப்பணம் - கண்ணாடி. கவிகை - குடை. வெண்கவரி - வெண்சாமரம். ஆலவட்டம் சிவிறி முதலியன விசிறி வகைகள். நேர்வயக்கி- நேரேகாட்டி. அக்கதை - அட்சதை. சன்ம மருந்து புரை - பிறவிநோய்க்கு மருந்தை ஒத்த. கண்மணிமாலை - உருத்திராக்க மாலை. எண்ணி - ஜபித்து.

ஆயவினி தாகியநம் மடிமலரிற் சாத்தியபி னட்டாங் கத்தின்
ஏயமிகப் பணிந்தெழுந்து துதித்துவெளி வந்தொருசார் நிலவ மேவிப்
பாயநம தருளுருவங் குறித்தமர்ந்து பின்னெழுந்து பணிநின் றோர்க்கு
மேயபிர சாதநல்கி விதிப்படிநின் னையும்பூசை விரும்பிச் செய்வான்.22

கு - ரை : இடக்கையில் பத்திர புஷ்பங்களை வைத்து வலக்கையால் உருத்திராக்க மணிகொண்டு பஞ்சாக்கர ஜபம்செய்து அதனை, அடிமலரில் சாத்தி - சமித்துச்சாத்தி. அட்டாங்க நமஸ்காரம்செய்து எழுந்து துதித்து. அட்டாங்கம் எனவே பஞ்சாங்கம் திரியாங்கம் முதலிய நமஸ்காரங்களும் பொருந்தும். ஒருசார் - ஓரிடத்தில். மேவி - இருந்து. குறித்து - தியானித்து. பணிநின்றோர்க்கு - பணிவிடையில் நின்றவர்களுக்கு நின்னையும் - அருட்சத்தியாகிய உன்னையும்.

பதினெண்ணாவது பாடல் முதல் இருபத்திரண்டாவது பாடல்முடியச் சிவபூசை செய்யும் விதியை நன்கு தெளிய உணர்த்தியமை காண்க.

காலைவளச் சுரதீர்த்தம் படிந்திவ்வா றியற்றியவக் கருத்த மன்சேய்
பாலைநிகர் மொழிமடவாய் முனிதீர்த்த முழுகுபுநண் பகலா முச்சி[வான்
வேலையின்முன் சொற்றபடி யெமையுநினை யும்பூசை விழைந்து செய்
மாலையில்வண் காகநீர் தோய்ந்துபூ சனைபுரிவான் மகிழ்ச்சி பொங்க.23

கு - ரை : சுரதீர்த்தம் - தேவதீர்த்தம். கருத்தமன் சேய் - கருத்தமன் என்னும் அந்தணனுடைய புத்திரனாகிய புண்டரீக முனிவன். மடவாய் என்றது உமாதேவியாரை நோக்கி. முனிவர் தீர்த்தத்தில் முழுகி நடுப்பகலாகிய உச்சிப்பொழுதில் முன்னே கூறியபடி எம்மையும் நின்னையும் அன்புடன் பூசிப்பான். உச்சிவேலை - உச்சிப்பொழுது. விழைந்து - விரும்பி. காகநீர் - காகதீர்த்தம். முழுகுபு - முழுகி. படிந்து, தோய்ந்து என்பன நீராடலைக் குறித்தன.

பொய்யினெடு கூடாத புண்டரீ
கப்பெயரோன் புக்கி லாய
மெய்யினெடும் வீடடைவான் சறுவதீர்த்
தம்படிந்து மேலோங் கன்பின்
மொய்யினெடு வேண்டுவகொண் டத்தயா
மப்பூசை முயன்று செய்வான்
நெய்யினெடாங் குழலாய்நித் தியமிதுநை.
மித்தியமு நிகழ்த்தக் கேண்மோ. 24

கு - ரை : புக்கில் - இருப்பிடம், ஆசிரமம். புக்கிலாயமெய் - தேகம் எனினும் ஒக்கும். பொய்யினெடு கூடாதப் புண்டரீகப் பெயரோன் மெய்யினெடும் வீடடைவான் என்றது முரண்தொடை. அத்தயாமத்தில் சறுவ தீர்த்தத்தில் நீராடிப் பூசிப்பான். நித்தியம் - நாட்பூசை. நைமித்தியம் - சிறப்புப்பூசை.

பனிவரையின் முளைத்தமலர்ப் பசுங்கொம்பே
நமக்கன்பு பரிப்பார் தம்மிற்
புனிதநனி யுடையவனம் மடியவரை
நாமென்றே புந்தி செய்வோன்
இனியபுன னுடளிப்போன் முனமொழிந்த
வளவன்வரு மிடையூ ரேட்டி
முனிவனுள மெப்படியப் படிநடக்கு
மொருவிரத முன்போற் பூண்டான். 25

கு - ரை : பனிவரை - இமயமலை. பசுங்கொம்பு - உமாதேவியார். வரையின் முளைத்த பசுங்கொம்பு என்றது நயம். அன்பு பரிப்பார் - அன்பு பூண்டவர். புனிதம் - பரிசுத்தம். நம்மடியாரை என்றது சிவனடியாரை. நாம் என்றே என்பது சிவம் எனவே. புனல் நாடளிப்போன் - சோழன். புனல் நாடு - சோழநாடு. வளவன் - சோழன்.

வேறு

திருகு கோட்டுச் செழுந்தகர்த் திங்களில்
வருகு ணத்தநெய் வான்திரு நாளிடைப்
பெருகு வாசக் கொழுந்துபெ ருக்கியே
உருகு மன்பி னுஞற்றுவன் பூசனை. 26

கு - ரை : திருகு கோடு - முறுக்கிய கொம்பு. தகர்த்திங்கள் - மேட மாதம்; சித்திரை. நெய்வான்திருநாள் - சித்திரை நாண்மீன். பெருகுவாசக் கொழுந்து - மருக்கொழுந்து. தகர் - ஆடு. திங்கள் - மாதம்.

கொழுவி மிற்பெருங் குண்டை மதிவரு
செழுமு றத்திரு நாளிற் சிறப்புறத்
தழுவு சாந்தந் தகக்கொடு போற்றுவான்
வழுவி லாத முனிமலை மங்கையே. 27

கு -ரை : கொழு இமில் - பருத்த திமில். குண்டை - எருது; இடப மாதம். முறம் - விசாகம். சாந்தம் - சந்தனக் குழம்பு. தகக் கொடு - தகுதியாகக்கொண்டு. வழு - குற்றம். மலைமங்கை - உமாதேவி.

மேய தூய மிதுன மதியிடை
யாய வன்றி லடைதிரு நாள்வயிற்
பாய மூன்றுப ழமுங்கொண் டேத்துவான்
மாயவாழ்க்கை மதியா முனிவனே. 28

கு -ரை : மிதுனமதி - ஆனித்திங்கள். அன்றில் நாள் - மூலநட்சத்திரம். மூன்று பழம் - மா, வாழை, பலாப்பழங்கள். மாய வாழ்க்கை - மாயம் பொருந்திய இவ்வுலக வாழ்வு; என்றது நிலையாமை குறித்து.

கவைப டுங்காற் கடக மதிவரு
நவையி லாத வுடைகுள நாள்வயிற்
செவையி னும்பயங் கொண்டுசி றப்பிப்பான்
குவைய ருமலர் கொண்ட குழலினுய். 29

கு -ரை : கவை படும் கால் - கவர்த்த (பிளவுபட்ட) கால்களையுடைய. கடகமதி - ஆடிமாதம்; கடகம் - ஞெண்டு. நவை இலாத - குற்றமில்லாத. உடைகுள நாள் - பூசநாள். செவையின் = செவ்வையின் - நன்றாக. பயம் - பால். குவை - குவியல்.

பரவு கின்றபஞ் சானனத் திங்களில்
வரவு மேவிய மாயவ னாளிடை
விரவு சீரயி ரான்மிகப் போற்றுவான்
புரவுமேவிப் பொலியுங்கை மாதராய். 30

கு -ரை : பஞ்சானனத் திங்கள் - சிங்கமாதம்; ஆவணி. பஞ்சானனம் - சிங்கம்: ஆனனம் - முகம்; விரிந்த முகத்தையுடையது. என்னும் காரணக் குறி. மாயவன்நாள் - திருவோணநாண்மீன். அயிர் - சருக்கரை. புரவு - புரத்தல், காத்தல். புரவு மேவிப் பொலியுங் கை - அபய கரம்.

விரைந றுங்குழற் கன்னி மிளிர்மதிக்
கரைசி றப்பிற் கடைக்குள நாள்வயிற்
புரையி லாதவ பூபத்திற் பூசிப்பான்
வரையு தித்தபைந் தோகை மயிலனுய். 31

கு - ரை : விரை - வாசனை. கன்னிமதி - புரட்டாதி மாதம். கடைக்குள நாள் - உத்தராடநாள். அபூபம் - அப்ப வருக்கம். வரையுதித்த தோகை மயில் என்றது நயம்.

தொக்க மேன்மைத் துலாமதி வாய்ப்பகை
உக்க சூல முறுந்திரு நாளிடைத்
திக்க வாவு பதத்திற் சிறப்பிப்பான்
நக்க தாமரை போன்முக நங்கையே. 32

கு - ரை : துலாமதி - ஐப்பசி மாதம். சூலம் உறும் திருநாள் - இரேவதி நட்சத்திரம். திக்கு அவாவு பதம்: அன்னுபிஷேம்; பதம் - சோறு. நக்க தாமரை - விளக்கமுறும் தாமரை; மலர்ந்த என்றபடி.

துட்ட னென்று சொலப்படுந் திங்களில்
இட்ட மாமறு நாளி லிலகுறப்
பட்ட தீபம் பலகொடு பூசிப்பான்
வட்ட மாமுலை வாள்விழி மாதராய். 33

கு - ரை : துட்டன் - தேள்: விருச்சிக மதி; கார்த்திகைத் திங்கள். இட்டம் ஆம் அறுநாள் - கார்த்திகை நட்சத்திரம்; கார்த்திகைப்பெண் அறுவர் ஆகலின் அறுநாள் என்றார். பட்ட தீபம் பல கொடு - தீப வரிசைகளைக்கொண்டு.

குனிசி லைப்பெயர் கொண்ட மதியிடைப்
புனித மாகிய செங்கை பொருந்து நாள்
இனிய வானநெய் கொண்டினி தேத்துவான்
கனியு நாணாக் கரையுமின் சொல்லினுய். 34

கு - ரை : குனிசிலை - வளைந்தவில். சிலைப்பெயர் மதி - தனுர்மாதம்; மார்கழி. செங்கை பொருந்து நாள் - திருவாதிரை. ஆனநெய் - பசுவின் நெய்.

திரையு லாமக ரப்பெயர் சேர்மதிப்
புரையி லாத கொடிறு புகுந்தினம்
உரைசி றந்தசெந் தேன்கொண் டுவப்பிப்பான்
தரைமுன் யாவையுந் தந்த வுதரத்தாய். 35

கு - ரை : திரையுலாம் மகரம்; திரை - கடல். மகரமதி - தைமாதம். கொடிறு - பூசநாள். செந்தேன் - செவ்விய தேன். தரைமுன் யாவையும் - தரை முதலாகவுள்ள எல்லா உலகங்களையும். உதரம் - வயிறு.

கோல மேய குடப்பெயர்த் திங்களின்
ஞால மேத்துங் கொடுநுக நாளிடைக்
கால வாயநெய்க் கம்பலஞ் சாத்துவான்
ஏல மார்ந்த கருங்குழ லேந்திழாய். 36

கு - ரை: கோலம் - அழகு. குடப்பெயர்த் திங்கள் - கும்பமாதம்; மாசித் திங்கள். கொடு நுகம் - மக நட்சத்திரம். ஞாலம் - உலகம். கால் அவாய நெய்க்கம்பலம் - நெய்யில் தோய்த்த இரத்தினக் கம்பளம். ஏலம் - வாசனைச்சாந்து.

விடைய மைந்து வெடித்தெழு மீன்மதிக்
கடையெ ழுஞ்சனி நாளிற் கனிவுற
உடைத ராத தயிர்கொண் டுவப்பிப்பான்
நடையி னோதிம நாணுற நாட்டுவாய். 37

கு - ரை: மீன்மதி - மீனமாதம்; பங்குனித்திங்கள். வெடித்து எழு - துள்ளி எழுகின்ற. கடையெழும் சனி நாள் - உத்தரநட்சத்திரம். கனிவு உற - அன்புடன். உடைதராத தயிர் - கெட்டித் தயிர்; அஃதாவது ஏடு எடாத தயிர் என்க. ஓதிமம் - அன்னப்பறவை.

இந்த வாறுநை மித்திய மென்பது
நந்த நாளு நடாத்துந் திறலினன்
பந்த மோவப் பனவர் குலமெலாம்
முந்த வாற்று தவத்தின் முளைத்துளான். 38

நைமித்தியம் - நித்தியத்தின் தாழ்வு தீரச்செய்வது; நைமித்திகம் - நிமித்தத்தாற் செய்வது; தத்திதபதம். "சிறப்பொடு பூசனை செல்லாது வானம், வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு" (குறள் - 18) சிறப்பு - நைமித்திகம். பூசனை - நித்தியம். நந்த - மிகுதியாக. பந்தம் ஓவ - பாசக்கட்டுகள் நீங்க. பனவர் குலம் - பார்ப்பனச் சாதி. முந்த ஆற்று தவம் - முற்பட்டுச் செய்த தவம்; "முன்பு செய்தவத்தின் ஈட்டம்" என்றது காண்க.

குறிப்பு:- சித்திரைமாத முதலாகவுள்ள பிரதான அபிஷேக திரவியங்கள் வருமாறு:- தவனம், சந்தனம், பழவர்க்கம், திரட்டிப்பால், சருக்கரை, அதிரசம், அன்னம் கறிவகைகளுடன், தீபம், நெய், தேன், நெய்யில் நனைத்த கம்பலம், தயிர் என்பன. இது காரணாகமத்தில் கண்டது.

மருக்கொழுந்து, சந்தனம், முப்பழம், திரட்டிப்பால், சருக்கரை, அதிரசம், அன்னாபிஷேகம், தீபம், பசுநெய், தேன், க்ருதகம்பலம், பசுந்தயிர் என்பன திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமிக்கு மாதந்தோறும் பௌர்ணமி பூசையில் முறையே சாத்தப்பட்டு வருதல் கண்கூடு.

பிணையு மின்னவை பேணுவ தன்றியுந்
துணையி லாதவத் துங்க முனிவரன்
அணையு நாளொன் றனுக்கிலக் கம்மிரண்(டு)
இணையி லாத வெழுத்தைந்து மெண்ணுவான். 39

கு - ரை: பிணையும் இன்னவை - தொகுத்துச்சொன்ன இச்சிறப்புக்கள். துணை இலாத - பற்றில்லாத. துங்கம் - பரிசுத்தம். நாளொன்றுக்கு இரண்டுலக்கம் பஞ்சாக்கரசெபம் செய்வான். இரண்டு இலக்கம் - இரண்டு நூருயிரம். எழுத்தைந்து - பஞ்சாக்கரம்.

புண்ட ரீகன் பொலியும் பெருந்தவங்
கண்ட வானவர் கோனுட் கவலுரு
அண்ட ரோடினி தாய்ந்து சிதைத்திடும்
வண்ட வாவுகை மாதரைக் கூவினன். 40

கு - ரை: வானவர் கோன் - இந்திரன். உட்கவல் - மனக்கவலை. அண்டர்களோடு - தேவர்களுடன். ஆய்ந்து - ஆராய்ந்து. சிதைத்திடும் - தவத்தை அழிக்கும். வண்டு அவாவு கை - வளையல்களையணிந்த கைகளையுடைய. மாதர் - தெய்வஅரம்பையர்.

அரம்பை மேனகை யாகிய மாதரார்
வரம்பை யோவிய மாமை சுமந்துளார்
திரம்பை நாகஞ் சிதைத்திடு மல்குலார்
நிரம்பை முன்னருற் றீதுநி கழ்த்துவார். 41

கு - ரை: அரம்பை மேனகை ஆதி - அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி முதலான தெய்வப்பெண்கள். வரம்பை ஓவிய - அளவைக் கடந்த: வரம்பு - எல்லை, அளவு. ஓவிய - நீங்கிய. மாமை - தேமல். பை நாகம் - படத்தையுடைய பாம்பு. சிதைத்திடும் - அழகாற் கெடப்பண்ணும். நிரம்பு ஐ முன்னர் உற்று - தேவர்கள் சூழ்ந்துள்ள இந்திரன் சந்நிதியை அடைந்து.

வேத னுவி யலைத்திடல் வேண்டியோ
வோத மீதி லுறங்குமு குந்தனும்
ஆத காதென வாற்றுதல் வேண்டியோ
மாத வத்தரை வாட்டுதல் வேண்டியோ. 42

கு - ரை: வேதன் - பிரமதேவர். ஓதம் - கடல்; என்றது திருப்பாற்கடலை. முகுந்தன் - திருமால். மா தவத்தரை - சிறந்த முனிவரை.

இன்று நீவிரைந் தெம்மை விளித்தது
குன்று செற்ற குலிசப் படையினுய்
என்று கூறலு மிந்திர னேதுவ(து)
ஒன்று கேண்மினென் றேதுதன் மேயினன். 43

கு - ரை: விளித்தது - அழைத்தது. குன்று செற்ற குலிசப் படை - மலைகளின் சிறகை அரிந்த வச்சிராயுதம். படையினுன் - இந்திரன்.

குணக டற்பெருங் கூலத் தொருதலம்
புணரு மாதிபு ராண மெனும்பெயர்த்
தணைவு மத்தலத் தாய்புண்ட ரீகன்செய்
மணவ ருந்தவ மாற்றுதிர் போமென்ருன். 44

கு - ரை: குணகடல் - கீழ்கடல். கூலம் - கரை. பெயர்த்து அணவும் - பெயரையுடையதாய்ப் பொருந்தும். மண அருந் தவம் - மங்கலத்தைத்தரும் அரியதவம்: மங்கலமாவது பிறந்து இறந்து உழலாமை. மாற்றுதிர் - கெடச்செய்வீர்.

என்று கூறலு மித்துணை யோவெனு
நின்று நக்கு நிலத்தர மங்கையர்
அன்று வந்தன ராதி புராணத்தைச்
சென்று சேர்ந்தனர் வென்றிடுஞ் சிந்தையார். 45

கு - ரை: இத்துணையோ - இவ்வளவு தானே: என்றது இகழ்ச்சிக் குறிப்பு. நக்கு - நகைசெய்து. அரமங்கையர் - தேவரம்பையர். சிந்தையார் - எண்ணமுடையவராய்; சிந்தையார் சென்று சேர்ந்தனர்.

புண்ட ரீக முனிவன்முன் போயினர்
பண்ட வாத விசைபல பாடினர்
எண்ட வாத நடமு மியற்றினர்
தண்ட மீது விழுந்துந் தழுவினர். 46

கு - ரை: பண் தவாத - பண்ணின் தன்மை நீங்காத. எண் தவாத - அளவிலாத.

நம்மை யேயுளங் கொண்டு நயந்திடுஞ்
செம்மை யாளனிச் செய்கை யுணர்ந்திலான்
கொம்மை வெம்முலைக் கோடுறத் தாக்கவுந்
தம்மை வாட்டு தறியுமொத் தானரோ. 47

கு - ரை: "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" ஆகலின், இச்செய்கையை முனிவன் உணர்ந்

திலன், திரண்ட தனபாரத்தின் சிகரத்தால் தாக்குண்டும் தறிபோல் அசைந்திலன். கொம்மை - திரட்சி. முலைக்கோடு - தனபாரமாகிய மலையின் சிகரம்: கோடு - மலையினுச்சி; கொம்பெனினுமாம்.

கண்ட மங்கையர் நாணங் கதித்திடக்
கொண்ட லூர்தி திருமுன் குறுகினர்
விண்ட வாவத் தலப்பெரு மேன்மையால்
ஒண்ட வாம லுறையு முனியென்றார். 48

கு - ரை: கதித்திட-செலுத்த. கொண்டல் ஊர்தி-மேகவாகனனாகிய இந்திரன். விண்ட அவா அத்தலப்பெருமை; அவா விண்டு-பற்று நீங்குதற்குக் காரணமாகிய. விண்ட அவா - நீங்கிய ஆசை என்க. 'இழந்த பொற்றாலி' என்பதுபோல. ஒண் தவாமல்=ஒண்மை நீங்காமல்; ஒண்மையாவது பஞ்சேந்திரிய நிக்கிரகம்; அஃது வென்றுளே புலன் களைதலாம்.

இனியி யற்றுவ தென்னை யெனக்கவன்(று)
அனிய மோவிய வாண்டளப் பானொடும்
புனித வானவ ரும்புடை சூழ்வரப்
பனிம லர்த்தலை யான்பதஞ் சார்ந்தனன். 49

கு - ரை: கவன்று - கவலை மேற்கொண்டு. ஆண்டளப்பான் - வியாழ பகவான்; தேவகுரு. அனியம் ஓவிய: அனியம்; அன்னியம் என்பதன் தொகுத்தல்: விட்டுப் பிரியாத என்றபடி. மலர்த்தலையான் பதம் - பிரமதேவருடைய சத்தியலோகத்தை.

தான வேந்தன் வரவு தகத்தெரிந்(து)
ஆன வேத னவரொடு மேவியே
மீன வேலை விழிதுயில் பைந்துழாய்க்
கான மார்பனைக் கண்டுரை யாடினன். 50

கு - ரை: தானவேந்தன் - இந்திரன். தான் அ வேந்தன் எனப் பிரித்துப் பொருள் கொள்ளுதலுமாம். அவரொடும் - அவ்விண்ணுலகத்தாருடனே. வேலை - திருப்பாற்கடல். பைந்துழாய்க் கானமார்பன் - திருமால்.

அன்ன ரோடு மனையனம் பாலடைந்(து)
உன்ன ருந்தவத் தோங்கு மொருமுனி
முன்ன மேவி முழுதருள் செய்யென
நன்னர் யாமவ ரோடங்கு நண்ணினோம். 51

கு - ரை: அன்னர் - அத்தேவர்கள்; இந்திரன், பிரமன் முதலோர். அனையன் - திருமால். உன்னரும் - நினைத்தற்கும் அரிய. ஒரு முனி - புண்டரீகமுனிவன். நன்னர் - நன்றாக. அங்கு - ஆதிபுராணத்தை.

புண்டரீகன் பொருக்கென் றெழுந்தொரு
தண்ட நேரத் தரையிற் பணிந்தனன்
அண்ட ருக்கு மனுகருங் காட்சியான்
கண்ட தெங்ஙன மென்று களித்தனன். 52

கு - ரை: பொருக்கென்று - விரைந்து. தண்டம் நேர - தண்டத்தை யொக்க: தண்டாகாரமாக. அண்டருக்கும் - தேவர்களுக்கும். காட்சியான் - சிவபெருமான். கண்டது - காட்சி தந்தது. பணிந்தனன் களித்தனன் என்க: பணிந்தனன் முற்றெச்சம்.

உறுவ கேண்மு னுரைத்த படிமற்றோர்
மறுவில் காட்சியில் வாய்ப்பநின் னெண்ணமே
பெறுவை யென்றுறப் பேசிப்பல் லாரொடும்
மறுவி லாதமர் நாமமறைந் தாமன்றே. 53

கு - ரை: உறுவ - முனிவனே: விளி. மற்றோர் காட்சியில் - மூன்றாவது காட்சியில். முன் உரைத்தபடி - முதற்காட்சியில் நாம் கூறியபடி. பெறுவை - பெறுவாய். மறு இலாது - குற்றமின்றி.

பொங்கு கேள்விப் புகரின் முனிவரன்
தங்கு மோகை தவாது தலைக்கொளத்
தெங்கு வார்பொழில் சூழத் திருநகர்
அங்கு மேவி யருந்தவ மாற்றினன். 54

கு - ரை: பொங்கு கேள்வி - மிக்க கேள்வியினையுடைய. புகர் - குற்றம். ஓகை தவாது - உவகை நீங்காமல். தலைக்கொள - மேம்பட. திருநகரமாகிய ஆதிபுராணத்தை.

பற்று நீத்த படிமையர் யாவரும்
உற்று நோக்கி யுறுவ திதுவெனக்
கற்று மேவிரண் டாவது காட்சியைச்
சொற்று ளாமினிக் காட்சியுஞ் சொல்லுவாம். 55

கு - ரை: பற்று நீத்த படிமையோர் - பற்றொன்றில்லாத தவசிகள். உறுவது - மேல்நடப்பது. இனிக் காட்சி - இனி நடைபெறும் மூன்றாங் காட்சி என்க.

புண்டரீகமுனிவர் இரண்டாங்காட்சி உரைத்த படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 574.

பத்தாவது

புண்டரீகமுனிவர்

மூன்ருங்காட்சி உரைத்தபடலம்

மாதவச் சனற்கு மார னந்திவா னவனைப் போற்றி
மூதறி வுடைய ஞய முனிவற்கு மூன்ருங் காட்சி
மேதகு பெருமா னல்கு கருணையும் விளம்பு கென்னச்
சீதள வதனங் காட்டி மகிழ்ச்சியிற் செப்பு கின்ருன். 1

கு - ரை: மாதவம் - சிறந்த தவம். நந்தி வானவன் - திருநந்தி தேவர். மூதறிவு - பேரறிவு. முனிவற்கு - புண்டரீகமுனிவனுக்கு. மேதகு பெருமான் - மேம்பட்ட சிவபெருமான். விளம்பு கென்ன: அகரவிறு தொகுத்தல். சீதள வதனம் - குளிர்ந்த திருமுகம்.

சராசர மனைத்து மீன்ற தாயிளங் கொடிவ ளாங்கி
நிராமய பரமா னந்த நிருமல புண்ட ரீகன்
பராவநீ மூன்ருங் காட்சி பாலிப்பின் முந்து தந்த
புராதன சரிதங் கூறென் றிரத்தலும் புராணன் கூறும். 2

கு - ரை: தாய் இளங்கொடி - தாயாகிய இளங்கொடி: உமாதேவியார். நிராமயன் - குற்றமற்றவன். நிருமலன் - தூயவன். புராதன சரிதம் - பழமையாகிய வரலாறு.

ஒருவினம் மிரண்டாம் பாத முளங்கொடு கரும மாற்றிப்
பொருவரு நாலாம் பாத மெய்யொடும் புணர்தல் வேட்டான்
கருவடர் புண்ட ரீகன் கருதினீ திறும்பூ தின்னும்
மருமலர்க் கிழவ ஞதி யெவர்க்கும் வாய்த்திடுவ தன்றே. 3

கு - ரை: ஒருவு இல் நம் - நீங்குதலில்லாத நம்முடைய. இரண்டு ஆம் பாதம் - இரண்டாகிய திருவடிகளை. பொருவரும் - ஒப்பற்ற. நாலாம் பாதம் - சாயுச்சியம். மெய்யொடும் - சரீரத்தோடும். கரு அடர் புண்டரீகன் - எல்லையில்லாத பிறப்பினையுடைய புண்டரீகன். கரு - பிறப்பு. அடர் - பரந்த; நிறைந்த. இறும்பூது - ஆச்சரியம். மருமலர்க் கிழவன் ஆதி - பிரம தேவன் முதலிய. கரு அடர் புண்டரிகன் என்பது பிறப்பை ஒழிக்கும் தன்மையை உடைய புண்டரிகன் எனப் பொருள்கொள நின்றது.

அம்மையென் றுலக மேத்து மருட்பசுங் கொம்பே மிக்க
செம்மைகொள் புண்ட ரீகன் றிகழ்மன வாக்குக் காயம்
மும்மையு முலக மாய மூன்றினு முய்த்தல் செய்யான்
நம்மையே குறித்து நிற்பா னிருவினை நலிவுந் தீர்ந்தான். 4

கு - ரை: அம்மை என்று - தாய் என்று. அருள் பசும் கொம்பே - அருள் வடிவாகிய பசிய கொம்பு போன்றவளே. மனம் வாக்குக் காயம் ஆகிய மூன்றும். மும்மை - மூன்று. உலகம் ஆய மூன்று - நிலம், பொன், பெண். உலகம் ஆய மூன்று என்றது மூன்று உலகங்களிலும் பெறப்படும் போகங்கள் எனினும் ஆம். நிற்பான் தீர்ந்தான் - நிற்பவனாகி நீங்கினான். நலிவு - துன்பம். இருவினை - நல்வினை தீவினைகள். குறித்து - தியானித்து.

பொறையுரு வமைந்த கோதாய் பொறியைந்து மடக்கி நாளும்
நிறைதவஞ் செய்த லன்றி நிரம்புநங் குறியைப் போற்றி
முறையுறச் சூழ்த லோடு முழுதுதீர்த் தமும்யா வோரும்
அறைசெய்கேத் திரமுஞ் சூழ்வா னருந்தவ முருக்கொண் டன்னான். 5

கு - ரை: பொறையுரு - பொறுத்தல் தன்மையே ஒரு வடிவாக. பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்து நிறைந்த தவத்தைச் செய்தல் அல்லாமல். நம்குறி - சிவலிங்கவடிவம். முறை உற - விதிப்படி. சூழ்தல் - வலஞ்செய்தல். மூர்த்தி தலம் தீர்த்தம் என்பன நம்முடைய வடிவம் ஆதலின் அவற்றை அறிந்து சூழ்வானாயினான். அருந்தவம் - பிறரால் செய்தற்கரிய தவம். உரு - வடிவம்.

திரைசெய்தீர்த் தங்க ளெல்லாஞ் சென்றுசென் றன்பி னாடிக்
கரைசெய்வெண் ணீறு பூசிக் கண்மணி மாலை பூண்டு
புரைசெயைந் தெழுத்து மெண்ணிப் போக்கருங் கனிவு பொங்க
விரைசெயங் கதுப்பி னல்லாய் மேதக நமைப்பூ சிப்பான். 6

கு - ரை: தீர்த்தங்களிலெல்லாம் சென்று சென்று நீராடி, விபூதி அணிந்து, உருத்திராக்கமாலை பூண்டு, திருவைந்தெழுத்தைக் கணித்து, நீங்குதல் இல்லாத அன்புமிக, சிறப்பாக நம்மை வழிபடுவான். விரைசெய் கதுப்பு - வாசனை வீசும் கூந்தல்.

அலங்குநங் கோயின் மேவி யலகிடன் மெழுகன் மற்றும்
இலங்குபஃ றிப மேற்ற லாதிய வியற்று வாரை
விலங்குவெங் கரண மொன்றி விரும்பு மைஞ்சுத்தி யாற்றித்
துலங்குநம் பூசை செய்து தொழுதுதோத் திரஞ்செய் வாரை. 7

கு - ரை: அலங்கு - விளங்குகின்ற. அலகிடல், மெழுகல், தீபம் ஏற்றல் முதலிய சரியைத் தொண்டு செய்கின்றவர்களை: "நிலைபெறுமாறு

எண்ணுதியேல் நெஞ்சே நீ வா நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப், புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித், தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா சயபோற்றி போற்றி யென்றும், அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும் ஆரூரா என்றென்றே அலறா நில்லே'' என்னும் திருத்தாண்டகத்தை நினைப்பிக்கின்றது.

விலங்கு வெம் கரணம் - மனத்தை மாறுபடச் செய்யும் கரணங்கள். ஒன்றி - ஒருப்படச்செய்து. ஐஞ்சுத்தி - ஐவகைச்சுத்தி: முற்கூறப்பட்டது. கிரியைத்தொண்டு செய்கின்றவர்களை.

வளியிரு வழியுஞ் சேறன் மாற்றுபு நாப்ப ணாடி
யுளியெழ வெழுப்பி நம்மை யுணர்ந்தன ரிருக்கின் றாரை
விளிவின்முப் பொருளு மோர்ந்து வெவ்விய பாச நீங்கிக்
களிகொள நம்மோ டொன்றா தொன்றிவாழ் கலப்பி னாரை. 8

கு - ரை : வளி - பிராணவாயு. இருவழியும் சேறல் - இடகலை பிங்கலைகளால் செல்லுதலை. மாற்றுபு - மாற்றி. நாப்பண் நாடியுளி - நடு நாடியிடமாக: உளி - ஏழன் உருபு. எழ எழுப்பி - எழும்படியாகச் செய்து என்றது சுழுமுனை வழியாகச் செலுத்தி என்க. இருக்கின்றார் - யோகிகள். விளிவு இல் முப்பொருளும் - அழிதல் இல்லாத பதி பசு பாசங்கள் ஆகிய மூன்று பொருள்களையும். ''பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற், பதியினைப் போற்பசு பாசம் அனாதி, பதியினைச் சென்றணு காப்பசு பாசம், பதியணுகிற்பசு பாசம் நிலாவே'' (திருமந்திரம் - 159). ஓர்ந்து - ஆராய்ந்தறிந்து. வெவ்விய பாசம் - கொடிய பந்தங்கள். ஒன்றாது ஒன்றிவாழ் கலப்பு - இரண்டறக் கலந்து வாழ்கின்ற சீவன் முத்தி.

கண்டிடு தொறுமார்த் தாண்டன் வரவுகாண் கமலப் போது
கொண்டிடு விகசி தந்தன் குருமுகத் தியல்பே தோன்ற
மண்டிடு மிடியன் செம்பொன் வைப்பெதிர் கண்டாற் போன்று
விண்டிடு முகம னோடு விரைந்தெதிர் தழீஇயு வப்பான். 9

கு - ரை : இயற்றுவாரை, செய்வாரை, இருக்கின்றாரை, கலப்பினாரைக் கண்டிடுதொறும். மார்த்தாண்டன் - சூரியன். கமலப்போது - தாமரைமலர். விகசிதம் - மலர்ச்சி. குரு முகத்து - சிறந்த முகத்தில். இயல்பே தோன்ற - இயல்பாகவே தோன்ற. மிடியன் - வறிஞன். வைப்பு - நிதி. முகமனோடு - உபசார வார்த்தைகளைச் சொல்லி. தழீஇ - தழுவிக்கொண்டு.

இன்னண மொழுகுந் தூயோ னிறையவன் மூன்றுங் காட்சி
நன்னர்யாம் பெறுவ தெந்த ஞான்றென வுள்ளத் துள்ளி
முன்னரும் சறுவ தீர்த்த முழுகுபு கரைமேல் வந்து
பன்னரு மாங்கு மேவு நங்குறி பரவிப் போற்றி. 10

கு - ரை : இன்னணம் - இவ்வாறு. தூயோன் - புண்டரிகமுனிவன். நன்னர் - நன்ருக. எந்த ஞான்று - எப்பொழுது. உள்ளத்து உள்ளி - மனத்தில் எண்ணி. முழுகுபு - முழுகி.

ஓங்குதென் கரைப்பா லெய்தி யுயர்குண திசையை நோக்கிப்
பாங்குசேர் சுகாச னத்துப் பண்புமே வுறவி ருந்து
விங்குநான் முகன்மால் வேத வேதாந்த முணரொ ணுத
தேங்குபே ரொளியா நம்மைச் சிந்தையிற் பதித்தி ருந்தான். 11

கு - ரை : தென்கரைப்பால் - தெற்குக்கரையினிடத்து. குணதிசை - கிழக்குத்திக்கு. சுகாசனம் - எவ்வாறு இருந்தால் துன்பமில்லாமல் நெடு நேரம் இருக்கலாமோ அப்படி இருத்தல். தேங்கு பேரொளியாம் - நிறைந்த பெரிய ஒளிப்பிழம்பாகிய.

என்றுமோர் பொழுதே சற்றுண் டிரவுணுப் புண்ட ரீகன்
அன்றுதொட் டொருநாள் விட்டும் அமைதர விருநாள் விட்டும்
ஒன்றுற முந்நாள் விட்டும் ஒருங்கொரு பக்கம் விட்டும்
நன்ருெரு மதியம் விட்டும் நாடாது சிறிதுண் பானுல். 12

கு - ரை : என்றும் - எப்பொழுதும். ஒருபொழுது சிறிது உண்டு, இராக்காலத்தில் உணவுகொள்ளாத புண்டரீகன். அன்றுதொட்டு - அந் நாள் தொடங்கி, ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள், ஒரு பக்கம், ஒரு திங்கள் விட்டு. நாடாது - உண்ணும் விருப்பம் இன்றி. ஒருபக்கம் - பதினைந்து நாள்.

அயனமொவ் வொன்று நீத்தும் ஒவ்வொராண் டமைய நீத்தும்
பயன்மிக வடையு மாண்டு பன்னிரண் டொருங்கு நீத்தும்
வியனுற நூறு நீத்துஞ் சிறிதுணு விழைவு மன்னுன்
இயலுமெவ் வுணவு நீத்தா னிருந்தனன் கற்ருணுைத்தே. 13

கு - ரை : அயனம் - உத்தராயனம், தட்சிணுயனம். அமைய - பொருந்த. ஆண்டு பன்னிரண்டு - பன்னிரண்டு வருடங்கள். ஒருங்கு நீத்தும் - ஒருசேர உண்ணுதிருந்தும். நூறு - நூறு ஆண்டுகள். உணு விழையும் - உணவை விரும்பும். எவ்வுணவும் - எந்த உணவும். கற்றாண் போல இருந்தனன்.

இவ்வண்ண மிலக்க மேலோ ரிருபானு யிரமாண் டெல்லை
அவ்வண்ண மாய நம்மை யகங்கொடு புண்ட ரீகன்
மெய்வண்ணத் தவத்து மேவ மேற்பொங்கி யெழுந்த தம்மா
செவ்வண்ணத் தீயி னேடுஞ் செறிபுகைப் படல மேன்மேல். 14

கு - ரை : இலக்கம் மேல் ஓர் இருபான் ஆயிரம் ஆண்டு - இலட்சத்து இருபதினுயிரம் வருடங்கள். மெய்வண்ணத் தவத்துமேவ - மெய்ம்மையாகிய தவத்திற்பொருந்த. தீயிஞேடு புகைப்படலம் மேன்மேல் பொங்கி எழுந்தது. செவ்வண்ணம் - சிவந்த நிறம். செறிபுகை - அடர்ந்த புகை.

தடநெடும் புகைமேற் பொங்கித் தானமுற் புவன மெல்லாம்
படருபு வெதுப்ப லோடும் பண்ணவர் நடுந டுங்கிக்
கடவுவெண் களிற்ருன் பாதங் கலந்தன ரிறைஞ்சிக் கூற
மடனின்மற் றவனேர் காலே மகதியாழ் முனிவன் வந்தான். 15

கு - ரை : படருபு - படர்ந்து. வெதுப்பலோடும் - வெப்பஞ்செய்தலோடும். பண்ணவர் - தேவர்கள். வெண்களிற்ருன் - இந்திரன். ஓர்காலே - ஆராய்ந்திருந்த காலத்து. மகதி யாழ் முனிவன் - நாரதமுனிவர்.

வந்தமா முனியைத் தாழ்ந்து மணஞ்செய்கற் பகத்தார் வேந்தன்
இந்தவான் றூம மேவற் கேதுநீ யுரைத்தி யென்ன
நந்தநான் முகத்தான் வாழு நகர்நின் றும் வருதல் செய்வேன்
சந்தமார் புண்ட ரீகன் றரைத்தலேத் தவஞ்செய் கின்ருன். 16

கு - ரை : வந்த மாமுனியை - நாரத முனிவரை. கற்பகத்தார் வேந்தன் - இந்திரன். வான்றூமம் - மிக்கபுகை. ஏது - காரணம். நான்முகத்தான் வாழும் நகர் - சத்தியலோகம். தரைத்தலே - பூவுலகத்தில்.

அன்னவன் றவத்தா லாய தூமமென் றறைந்தா ராங்கு
முன்னமே யுணர்ந்தே னென்று மொழிந்தன னெழுந்து போனுன்
கொன்னவில் குலிசத் தோளான் குலவரம் பையரைக் கூவிப்
பன்னரும் புண்ட ரீகன் பயிறவஞ் சிதைப்பீ ரென்ருன். 17

கு - ரை : ஆங்கு . அந்தச் சத்தியலோகத்தில். தவத்தாலாய தூமம் - தவமிகுதியாலுண்டாகிய புகை. குலிசத்தோளான் - வச்சிராயுதம் பொருந்திய கையை உடையவன். அரம்பையரை - தேவ தாசிகளே. பயில் தவம் சிதைப்பீர் - செய்யும் தவத்தை அழிப்பீர்கள்.

செழுமணி வயிரத் தூணேச் சிதலளா யரித்திட் டாலும்
முழுமுதற் பரனே யால முயன்றெழுந் தடர்ந்திட் டாலும்
வழுவின்மற் றவனேக் காமன் மலர்க்கணே மயக்கி ஞலும்
பழுதிலம் முனிவ னேன்பு பாறுரு தெம்மா லென்ருர். 18

கு - ரை : சிதல் - கறையான். ஆலம் - ஆலகாலவிடம். அடர்ந்திட்டாலும் - கொன்ருலும். மற்று அவனே - சிவபெருமானே. காமன் - மன்மதன். மலர்க்கணே - மலரம்புகள். நோன்பு - விரதம். பாறுருது - அழியாது.

இனியெவன் செய்து நாமென் றிலேகர்தங் கூட்டத் தோடும்
பனிமலர்க் கிழவன் பாங்கர்ப் படர்ந்தவன் பாதம் போற்றி
முனிவரன் றவத்தா லாய முழுப்புகை முருக்குந் தன்மை
நனியெடுத் துரைத்தான் வான நாட்டவன் கேட்ட வேந்தன். 19

கு - ரை: இலேகர் - எழுதுவோர். மலர்க்கிழவன் - பிரமதேவன். முருக்கும்தன்மை - வருத்துந்தன்மை, அழிக்குந்தன்மை. வானநாட்டவன் - இந்திரன்.

விரையவிந் திரனோ டும்பால் வேலையி னடுவட் பச்சை
வரைபல கமலம் பூத்து மாநாக மிசைக்கி டந்தாற்
புரையநம் மாலை தாங்கி விழிவளர் புயலைச் சார்ந்தான்
உரையமை வணக்கஞ் செய்தாங் குரைத்திட லுற்றான் மன்னோ. 20

கு - ரை: பால் வேலை - திருப்பாற்கடல். நடுவண் - மத்தியில். பச்சை மலை - மரகத மலை. கமலம் - தாமரை. மா நாகம் மிசை - ஆதிசேடனாகிய பாம்பின்மேல். நாகம் - பாம்பு. விழிவளர் புயல் - திருமால்: இல்பொருள் உவமையணி, புயல்: உருவகம்.

திருமகண் மணாள கேண்மோ திரைக்கடல் வளாகத் துள்ளால்
ஒருமுனி தவஞ்செய் கின்றா னுறுபுகைப் படலை யாலே
கருகிய வனைத்து மோர்ந்துங் கண்டுயில் கின்றா யென்னப்
பருவர லொழிமி னென்று பகர்ந்தன னெழுந்தா னன்றே. 21

கு - ரை: மணாளன் - கணவன். வளாகம் - இடம்: நிலவுலகம். ஓர்ந்தும் - அறிந்துவைத்தும். பருவரல் - துன்பம். பகர்ந்தனன்: முற்றெச்சம். அனைத்தும் கருகிய, அனைத்தும் ஓர்ந்தும் என்க.

மாயவன் பிரம னாதி வானவ ரொடும் விரைந்து
தூயநந் திருமுன் வந்து தொழுதுவிண் ணப்பஞ் செய்ய
நேயமால் விடைமேற் கொண்டு நிரம்பிய வவர்க ளோடும்
பாயபல் கணமுஞ் சூழ முனிவன்முன் படர்ந்தா மன்றே. 22

கு - ரை: மாயவன் - திருமால். நேயம் மால் விடை - அன்பு பொருந்திய பெரிய இடபம். படர்ந்தாம் - சென்றோம்.

காட்சிதந் தருளு நம்மைக் கண்டுவல் விரைந்தெழுந்து
பூட்சியோ டடையு முத்தி பொருந்திய தின்றென் றுன்னி
ஆட்சிகொ டவத்தான் பல்கா லடிமிசைப் பணிந்து சூழ்ந்து
மீட்சியி லெதிர்நின் றோவாத் துதிபல விளம்ப லுற்றான். 23

கு - ரை: காட்சி - தரிசனம். வல்விரைந்து - மிக விரைவாக. ஆட்சி கொள் தவத்தான் - புண்டரீகமுனிவர்: தவத்தை ஆளுதலுடையான் என்க. பல்கால் - பலமுறை. ஓவாத்துதி - ஒழிவில்லாத தோத்திரங்கள்.

எவனருள் வலியாற் பந்த மெனைத்து மெவ்வுயிர்க்கு மெய்தும்
எவனருள் வலியாற் பந்த மெனைத்து மெவ்வுயிர்க்கு மாயும்
எவனருள் வலியா லோவா வின்ப மெவ்வுயிர்க்கு மேவும்
அவனொரு நீயே யன்றி யாருளார் மிளிர்முக் கண்ணாய். 24

கு - ரை: பந்தம் எனைத்தும் - பந்தங்கள் எல்லாமும். மாயும் - அழியும். ஓவா இன்பம் - நீங்காத முத்தியின்பம். அவன் - அப்பரம்பொருள். அற ஏற்று அண்ணல்: அற ஏறு - தரும விடை.

எவனுடை யாணை யாலே மதிகதி ரியங்கா நிற்கும்
கவனவாந் திரைநீர் வேலை கரைகட வாது மேவும்
புவனங்க ளனைத்தும் வைத்த நிலைமையிற் பொருந்தா நிற்கும்
அவனொரு நீயே யன்றி யாருளார் மிளிர்முக் கண்ணாய். 25

கு - ரை: மதி கதிர் - சந்திர சூரியர்: உம்மைத்தொகை. கவன வாம் திரை - வேகமாகத் தாவிச் செல்லும் அலைகள். வேலை - கடல். புவனங்கள் அனைத்தும் - இருநூற்று இருபத்துநான்கு புவனங்களும்.

அதிசயம் பயக்கு நாரா யணவுப நிடதம் யாரை
மதியினிற் குறித்தி யாவர் வணங்கினு மவ்வ ணக்கந்
துதிகெழு நினவே யென்று சொலுமுனைக் குறித்து நாயேன்
விதியிற்செய் வணக்கம் வேறு மேவுமோ விமல வாழ்வே. 26

கு - ரை: அதிசயம் பயக்கும் - வியப்பைத்தரும். 'நாராயண உப நிடதம்பற்றிச் சிவோபாசனையை ஆராய்குதும். நாராயணோபநிடதத்தில் கூறிய உபாசனை சிவோபாசனை என்பதூஉம், அதன்கட் கூறிய உபாசிக்கப் படும் பொருளினது உருவம் சிவரூபம் என்பதூஉம், மீமாஞ்சகர் கூறும் 'உபக்கிரமோப சங்கார' நியாயம்பற்றித் துணியப்படும். அதன்கண் உபா சனையைக் கூறிய தொடங்கிய உபக்கிரமத்தின்கண் உள்ள வாக்கியம் சிவ ரூபம் கூறி முடிந்த உபசங்கார வாக்கியத்தோடு இயைந்து ஒருபொருள் படுதலின். இங்ஙனம் துணியப்படவே, ஆண்டு நாராயணனுக்கு உபாசிக் கப்படும் தன்மையும் ஓராற்றானும் பொருந்தாமையின் அவன் அவ்விரண்டு மல்லன் என்பதூஉம், பாரிசேடத்தால் உபாசகன் என்பதூஉம் போதரும். அல்லதூஉம் ஆண்டு 'நாராயணனுடைய இருதயாக்கினியின் சிகாமத்தி யில் பரமான்மா உளன்' என்ற வாக்கியமே வேறு பிரமாணம் வேண்டாது அவன் உபாசகன் என்பதை வலியுறுத்தும். அது வலியுறுத்துமாறு என்னை?

எனின், 'நாராயணனுடைய இருதயத்தில் பரமான்மா உளன்' என்று கூறி னமையின், அவனைப் பரமான்மா என்றல் பொருந்தாமையின் என்க. நாரா யணன் தனது இருதயாக்கினிக்கண் இருந்துகொண்டு தானே தன்னை உபாசிப்பன் எனின், அக்கூற்று யாவர்க்கும் நகை விளைக்கும் என்று ஒழிக. உபாசனையைக் கூறிய பகுதியாவது நாராயணோபநிடதத்து வரும் 'ஸஹஸ்ர சீர்ஷம் தேவம் விச்வாக்ஷம் விச்வ சம்புவம்' என்று தொடங்கும் பகுதி. நாராயணனுடைய இருதயாக்கினியின் சிகாமத்தியில் பரமான்மா உளன் என்ற வாக்கியமாவது 'தஸ்யா சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:' என்பது. அற்றேல் அஃதாக நாராயணன்மேல் வைத்து உபாசனையை வருணித்தவாறு என்னை எனின்; நாராயணனுடைய இருதயமும், அதன் கண் தகரமும், அதன்கண் பெரிய அக்கினியும், அதன் சிகாமத்தியில் பரமான்மாவும் உண்டு என்று அங்ஙனம் அருத்தவாதம்படக் கூறும் முகத் தானே ஆசரிப்பவருக்குச் சிரத்தை போதர, விசிட்ட புருடன்மேல் வைத்து உபாசனையை விதித்தவாறு என்க....நாராயணன் சிவபாவனையால் சிவபிரா னோடு அத்துவிதமாய் நின்றவழி, அங்ஙனம் உபசரிக்கப்பட்டான் ஆகலின், மலைவு யாண்டையதென்க. ''இவ்வொற்றுமைபற்றி யன்றே அருச்சுனற்குக் கீதைநூல் செவியறிவுறுத்த கண்ணன் 'யானே உலகெல்லாம் ஆயினேன்' என்றதூஉம், சிவபிரானது விசுவரூபத்தைத் தான் காட்டியதூஉம், 'ஏனைய வற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக' என்றதூஉம், அதனை உறுதி யாகக்கொண்ட அருச்சுனன் அவன் கூறிய கருத்துநோக்கிச் சாங்காறும் சிவபூசை செய்ததூஉம், கண்ணன் மேலிட்ட போதுகள் சிவபிரான் திருமுடி மேல் கண்டதூஉம் என்க.'' இப்பகுதி ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் சிவஞான பாடியத்து (சூத் - 2 அதி - 1) அருளிச் செய்யப்பட்டதாகும்.

இந்நாராயணோபநிடதப் பொருளை ''சேந்தபொற் குண்டத் தோங்குஞ் சிகைத்தழல் மிசையே கம்ப, வேந்தையா வாகித் தேத்தும் புகைபொதி வேள்விச் சாலை, ஏய்ந்தசீர்த் தகர வித்தை முறைப்படி யிதய கஞ்சப், பூந் தழற் சிகைமே லிசற் போற்றுமா யவனை யொக்கும்'' என்று சுவாமிகள் காஞ்சிப்புராணம் திருநகரப்படலம் 119 ஆவது செய்யுளில் அருளிச்செய் தமை காண்க. வேறு மேவுமோ - வேறிடத்தில் சென்று சேருமோ என்க.

'' யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி '' (சித்)

'' யாதொரு பொருளை யாவர் '' (கந்தபுராணம்).

சாதலும் பிறப்பு மில்லாய் தணத்தலும் புணர்வு மற்றாய்
காதலும் வெறுப்புந் தீர்ந்தாய் நினைத்தலு மறப்புங் காணாய்
நோதலுங் களிப்புங் கூடாய் நுண்மையா யதிதூ லத்தாய்
ஆதன்முன் னெடுபின் சாரா யடியனிற் புகழா நின்றேன். 27

கு - ரை: தணத்தல் - நீங்குதல். காதல் - விருப்பம். நோதல் - வருந்துதல். நுண்மை - அதிசூக்குமம். அதிதூலம் - மிகப்பருமை.

விரிதரு படைப்புக் காப்பு விளைத்திடு தேவர் நாளுந்
திரிபில்சட் டுவமே போன்று செயற்படச் செயற்ப டுத்தி
உரிமையிற் கால நோக்கி யொழித்துமீட் டுறுத்தல் செய்தும்
புரிதரு விகாரஞ் சற்றும் புணராய்நிற் புணர்வான் வேட்டேன். 28

கு - ரை: திரிபு இல் - மாறுபடாத. சட்டுவம் - அகப்பை. செயற்பட - செயல்படும்படியாக. செயற்படுத்தி - செய்வித்து. ஒழித்து - சங்கரித்து. வேட்டேன் - விரும்பினேன்.

அரிதனைத் தனைய லாரை யளிவினை முதலாச் செய்துந்
தெரியொர்பாற் படைத்தி ரண்டாம் வேற்றுமைப் பொருளாச் செய்தும்
எரிகணை செய்து மூன்றும் வேற்றுமைப் பொருணீ யென்றும்
புரிபடை யருளி நான்காம் வேற்றுமைப் பொருள்பு ணர்த்தும். 29

கு - ரை: அரிதனை - விஷ்ணுமூர்த்தியை. அளி வினை முதலா - காத்தற்குரிய வினைமுதலாக. ஒருபால் படைத்து - ஒருபக்கத்திலே தோற்றுவித்து. எரி கணை - அக்கினிதேவனை முனையாகவுடைய அம்பு. படை அருளி - சக்கரப் படையைக் கொடுத்து. அரி, அரியை, அரியால், அரிக்கு என நான்கு வேற்றுமைப் பொருளும் வந்தன காண்க.

செறியிளைப் பொழிய வைந்தாம் வேற்றுமைப் பொருளுஞ் செய்து
நெறிகொளத் தழுவி யாறும் வேற்றுமைப் பொருணி றைத்துங்
குறிகொண்மார் பமர்ந்தே யேழாம் வேற்றுமைப் பொருளாக்கொண்டும்
அறிபெயர்ப் பொருளே நின்னை யடைதர முயலா நின்றேன். 30

கு - ரை: இளைப்பு ஒழிய - இளைப்பு நீங்க: அரியின். தழுவி - தழுவிக் கொண்டு: மோகினியாகிய அரியது மேனியை; அது. குறிகொள் மார்பு - பூசைத் தானமாகக் குறித்த மார்பின்கண். பெயர்ப்பொருள் - மகாவாக்கியப் பொருள்.

மாயவன் வந்து வேண்ட மலரணைப் பொகுட்டு மேய
தூயனை மகவாத் தந்துஞ் சுந்தர முகங்க ளைன்கும்
மேயவப் பரமன் வேண்ட விண்டுவை மகவாத் தந்தும்
பாயகா ரணமாய் நின்ற பரமநிற் பழிச்சா நின்றேன். 31

கு - ரை: மாயவன் - திருமால். மலரணைப்பொகுட்டு மேயதூயன் - பிரமதேவர். மகவு - குழந்தை. பிரமனுக்கு மாலை மகவாகத் தந்தும். காரணமாய் - நிமித்தகாரணமாய். பரம: விளி. பழிச்சுதல் - துதித்தல்.

திருமேனி யோரெட் டுள்ளுஞ் சிலீமுக மொருமூன் ருக
இருமேனி யுருளை யாக வியவை யொன்ருக மற்றும்
ஒருமேனி யிரத மாக வொன்றுதா னவர்கள் சோரப்
பொருமேனி லாஞ்சோ மூன்றும் பொடித்தாய்நிற் புணர்தல்
[வேட்டேன். 32

கு - ரை: திருமேனி ஓர் எட்டு - மண், நீர், அனல், வளி, வான், சூரியன், சந்திரன், ஆன்மா என்பன. சிலீமுகம் - அம்பு. இருமேனி - சந்திர சூரியர். இரதம் - தேர்: அக்கினி, வாயு, மால். ஒருமேனி - பூமி. தானவர்கள் - அசுரர்கள். சோர - சோர்ச்சியடைய. சோமூன்றும் - மதில் மூன்றையும். பொரும் - போர் செய்யும். பொடித்தாய் - நீருக்கினுய்.

சயந்தன மறைத்து வைக்குந் தானமுஞ் சடைமுற் பூணல்
நயந்தபல் கலங்கள் வைக்கும் பேழையு நகுதாண் மேலா
வயங்குபொற் கழலிற் பூண்டு மருவலும் பிலமாச் செய்து
சயங்குல வடிகே ணின்னைச் சார்தர முயன்று நின்றேன். 33

கு - ரை: சயந்தனம் - தேர். பல் கலங்கள் - பல ஆபரணங்கள். பேழை - பெட்டி. பிலம் - குகை. கழல் - திருவடி. சயம் குலவு அடிகேள்.

படுசுவை யுணவு நல்கு மட்டிலும் பகைபோய்ப் பாற
விடுகணை யிட்டு வைக்கு மாவமும் விரும்பி ளஞ்சேய்
அடுபசிப் பிணித விர்க்கு மருமருந் தன்ன செப்புந்
தொடுபயக் கடலாக்கொண்ட தூயநிற் ளுெழுதல் வேட்டேன். 34

கு - ரை: சுவை உணவு - சுவையையுடைய அமுதம். அட்டில் - சமயலறை. பாற - அழிய. விடுகணை - செலுத்தும் திருமாலாகிய அம்பு. ஆவம்-அம்பருத்தூணி. இளஞ்சேய்-உபமன்னியு முனிவர். செப்பு - சிமிழ். பயக்கடல் - பாற்கடல்.

நகுசடை முடியாய் போற்றி நஞ்சுண்டு முடியாய் போற்றி
ககுபநல் லுடையாய் போற்றி காண்டிபற் குடையாய் போற்றி
செகுமழுப் படையாய் போற்றி சிதைவளம் படையாய் போற்றி
மிகுதிற லேற்ருய் போற்றி விரிந்தநீ ரேற்ருய் போற்றி. 35

கு - ரை: நகு - விளங்குகின்ற. சடைமுடியாய் - சடையாகிய முடியை யுடையவனே. நஞ்சு உண்டும் முடியாய் - விடத்தைக் குடித்தும் அழியாதவனே. ககுபம் - திசை. ககுப நல் உடையாய் - திக்காகிய ஆடையை உடையவனே: திகம்பரனே என்றபடி. காண்டிபற்கு-அர்ச்சுனனுக்கு. உடையாய்-தோலாதவனே. செகு - அழிக்கின்ற. திறல் ஏற்ருய் - வலிமை பொருந்திய இடபவாகனத்தை உடையவனே. ஏறு - இடபம். விரிந்த நீர் ஏற்ருய் - பரந்த ஆகாய கங்கையைச் சடாபாரத்தில் தாங்கியவனே.

சூலவெம் படையாய் போற்றி தொக்க தோலுடையாய் போற்றி
ஞாலமுண் விடையாய் போற்றி நதிமதிச் சடையாய் போற்றி
ஆலமுண் டுடையாய் போற்றி யலருளத் தடையாய் போற்றி
மாலமர் புடையாய் போற்றி வான்புகழ் நடையாய் போற்றி. 36

கு - ரை : ஞாலம் உண் விடை-உலகத்தைத் திருவயிற்றில் அடக்கிய திருமாலாகிய விடை. நதி மதிச் சடை - நதியையும் மதியையும் அடைத்த சடை. ஆலம் உண்டு உடையாய் - ஆலகாலவிடத்தை உண்டு மாறுபடா தவனே: உடைதல் - மாறுபடல். அலர் உளத்து - இகழ்கின்ற உள்ளத்தில். அலர் - பழிமொழி. மால் அமர் புடை - திருமால் பொருந்திய பாகம்.

மறைமுதற் கலையாய் போற்றி வண்மதிக் கலையாய் போற்றி
இறைமையிற் கலையாய் போற்றி யிரசிதக் கலையாய் போற்றி
நிறைதிசைக் கலையாய் போற்றி நிலவுகைக் கலையாய் போற்றி
அறையொளிக் கலையாய் போற்றி யரவமே கலையாய் போற்றி. 37

கு - ரை : மறை முதல் கலை - வேதம் முதலாகிய கலைகள். மதிக்கலை - பிறைச்சந்திரன். இறைமையில் கலையாய் - இறைமைப்பாட்டில் நீங்கா தவனே. இரசிதம் - வெள்ளி. திசைக் கலையாய் - திக்காடையை உடையவனே. கைக் கலை - கையிலுள்ள மான். அரவ மேகலை - பாம்பாகிய மேகலாபரணம்.

வரிசிலை மலையாய் போற்றி வயங்குக மலையாய் போற்றி
உரியவ மலையாய் போற்றி யொண்டாழை மலையாய் போற்றி
புரியக மலையாய் போற்றி புயலெனு மலையாய் போற்றி
அரியொடு மலையாய் போற்றி யலரக மலையாய் போற்றி. 38

கு - ரை : வரி சிலை - கட்டப்பட்ட வில். சிலை மலை - மேருமலையாகிய வில். கமலையாய் - கமலாலயத்தில் உள்ளவனே. அமலையாய் - உமாதேவியாரை உடையவனே. தாழை மலையாய் - தாழம்பூவைச் சூடாதவனே. மலைதல் - சூடுதல்.

திருநக ரரசாய் மன்னுஞ் சிவராச தானி யென்னும்
ஒருநக ரரசே போற்றி யும்பர்நா யகனே போற்றி
பெருமறை யின்னுந் தேருப் பேரரு ளாள போற்றி
பொருவிடைப் பாக வாதி புராணநா யகனே போற்றி. 39

கு - ரை : உம்பர்நாயகன் - தேவதேவன். தேரு - தெளியமுடியாத. விடைப்பாகீ - இடபவாகனத்தைச் செலுத்துபவரே. பொருவிடை - போர் செய்யும் இடபம். ஆதிபுராண நாயகன் - ஆதிபுராணத்தில் எழுந்தருளியிருக்கும் கடவுள்.

பொருவரும் வளஞ்சா லாதி புராணத்தி னினிது மேவி
மருவுயிர் தழைப்ப நல்கி வாழ்கருந் தடங்க ணம்மை
ஒருபுறத் தமையக் கொண்ட வுத்தம யோகி போற்றி
பெருமையிற் பொலிகா யாரோ கணப்பெரு மானே போற்றி. 40

கு - ரை: பொருவரும் - நீங்காத. நல்கி - பெற்று. கருந்தடங்கண் ணம்மை - நீலாயதாட்சி.

ஈண்டுப் போற்றி யாவும் வியங்கோள்; பாதுகாத்தருள்க என்பது பொருள். அன்றியும், போற்றிய என்னும் வியங்கோள் வினைமுற்று ஈறு கெட்டுப் போற்றி என நின்று வந்திக்கின்றேன் எனக்கொள்ளலும் ஒன்று.

என்றுரைந் துருகிக் கண்ணீ ரிழிதர வெதிர்நின் ருனை
நன்றுளக் கருணை பொங்க நாமிரு கரத்தால் வாங்கி
ஒன்றுத லமையக் காயத் தொடுமாரோ கணஞ்செய் தோமோர்
கன்றுத லின்றி யொன்ருய்க் கலந்தின்பந் துளைந்தா னன்றே. 41

கு - ரை: இழிதர - ஒழுக. நின்ருனை - நின்றவராகிய புண்டரீக முனிவரை. கருணை பொங்க - கருணைமிக. ஒன்றுதல் அமைய - பொருந்தும்படி. காயத்தொடும் ஆரோகணம் செய்தோம் - அவன் உடம்போடு நம்முள் அடக்கினேம். கன்றுதல் இன்றி - வருந்துதல் இல்லாமல். துளைந்தான் - மூழ்கினன்.

இன்னது கண்ட வானே ரிணர்மலர் மாரி பெய்தார்
பன்னகக் கிடக்கை யானும் பங்கயத் திருக்கை யானுந்
தன்னிகர் புண்ட ரீக முனிவரன் சார்ந்த தெண்ணி
அன்னமென் னடையா யொல்லா வழுக்காற்றுண் முழுகி னூரால்.

கு - ரை: இணர் - பூங்கொத்து. மலர்மாரி - கற்பகப்பூ மழை. பன்னகக் கிடக்கை - பாம்பாகிய படுக்கை. பங்கயத்து இருக்கை - தாமரை மலராகிய ஆசனம். தன்னிகர் - தனக்குத்தானே ஒப்பான. ஒல்லா அழுக் காறு - நீங்காத பொருமை.

வெங்கதி ரவனுஞ் சீத மதியென மெய்கு ளிர்ந்தான்
மங்கல மலர ளாவி மந்தமா ருதமு லாவிற்(று)
அங்கணர் கருணை யென்னு விருந்ததென் ருடி யாடித்
துங்கநன் முனிவ ரெல்லாந் தோய்ந்தன ருவகை வாரி. 43

கு - ரை: கதிரவன் - சூரியன். சீதமதி - குளிர்ந்த சந்திரன். மலர் அளாவி - மலர்களிற் கலந்து. மந்தமாருதம் உலாவிற்று - இளந்தென்றற் காற்று விசியது. உவகை வாரி - மகிழ்ச்சிக்கடல்.

அறிவினிற் சிறந்தோர் பன்னுள் வருந்தியு மமையு மாறு
முறிவரு மெமது நாலாம் பாதமே முயங்கி வாழ்வார்
செறிவலிச் சீயம் யானைத் திறன்மருப் புறுவே ரன்றிப்
பிறிதுமொன் றவாவுங் கொல்லோ பிறழ்கருந் தடங்க ணல்லாய். 44

கு - ரை: அறிவினிற் சிறந்தோர் - ஞானிகள். முறிவரும் - நீங்குதற்கரிய. நாலாம்பாதம் - சாயுச்சியம். சீயம் - சிங்கம். திறல் மருப்பு உறுவேர் - வலிய கொம்பின் அடிக்குருத்து.

பொருவரும் புண்ட ரீகன் புணரரு மினைய முத்தி
மருவிய தினைய வாதி புராணத்தின் வலியா லென்பார்
பெருகுமிச் சறுவ தீர்த்தப் பிறங்குமான் மியத்தா லென்பார்
வெருவரு மினைய மூர்த்தி விளங்கிடும் விசேடத் தென்பார். 45

கு - ரை: புணர் அரும் - பொருந்துதற்கு அரிய. இனைய முத்தி - காயாரோகணம் ஆகிய முத்திப்பேற்றை. இனைய - இப்படிப்பட்ட. ஆதி புராணத்தின் வலி - ஆதிபுராணத் தலத்தின் மேன்மை. பிறங்கு - விளங்குகின்ற. மான்மியம் - பெருமை. இனையமூர்த்தி - ஆதிபுராணர்.

இத்தரம் புகன்று வானோ ரிலங்குமச் சறுவ தீர்த்தத்(து)
உத்தம மேவ மூழ்கி யொளிருநங் குறிபூ சித்துத்
தத்தம திருக்கை சேர்ந்தார் தவலரு முனிவர் பல்லோர்
அத்தல மகலா ராகி யருந்தவம் புரிந்து வாழ்ந்தார். 46

கு - ரை; இத்தரம் - இவ்வாறு. நங்குறி - சிவலிங்கமாகிய நமது வடிவம். தவலரும் - நீங்குதற்கரிய. அகலாராகி - நீங்காதவர்களாய்.

அன்றுதொட் டனைய தீர்த்த மரும்புண்ட ரீக தீர்த்தம்
என்றுபேர் புனைந்த தின்னு மெய்ம்மையே யென்று கூற
ஒன்றுவெண் கமலம் பல்ல வுருகெழ வலரா நிற்குங்
கன்றுபல் லுயிரு மின்பங் கலவநோக் கிடுக ணல்லாய். 47

கு - ரை: அனைய தீர்த்தம் - சறுவ தீர்த்தம்: மெய்ம்மையே - உண்மையே. வெண்கமலம் - வெண்டாமரை. கன்று பல் உயிரும் - வருந்தும் பலவகைப்பட்ட உயிர்களும். இன்பங் கலவ - இன்பம் பொருந்த.

முன்னிய புண்ட ரீக முனிவரன் சரிதங் கேட்டு
மன்னிய சறுவ தீர்த்தம் வாஞ்சையி னுடி யெங்கும்
அன்னிய மில்லா நம்மை யன்புறப் பூசை செய்வார்
மின்னிய வடிக்க லப்பின் மேவுத லுண்மை யாமால். 48

கு - ரை : முன்னிய - சொல்லிய. வாஞ்சையின் ஆடி - விருப்பத்தோடு மூழ்கி. அன்னியம் இல்லா - நீங்குதல் இல்லாத. அடிக்கலப்பு - திருவடியிற் கலத்தல்.

புண்ணியம் பாவ மில்லை யெனப்புகல் பொல்லா மூர்க்கர்
மண்ணிய மணியே போலு மாதவப் புண்ட ரீகன்
கண்ணிய சரிதங் கேளார் கேட்பினுங் கரையார் மேலோர்
அண்ணிய தீங்கே சார்வ ரவரொடு மறைந்து ளோரும். 49

கு - ரை : பொல்லா மூர்க்கர் - பொல்லாதவராகிய மூடர்கள். மண்ணிய மணி - சாணைபிடிக்கப்பட்ட மாணிக்கம்; மண்ணிய - கழுவிய. பொல்லா மூர்க்கர் புண்டரீகன் சரிதம் கேளார், கேட்பினும் உள்ளங் கரையார், தீங்கே சார்வர். அறைந்துளோரும் அவரோடு சார்வர் என்க. அப்பொல்லா மூர்க்கருக்குச் சிறந்த உபதேசங்களைச் செய்தல் ஆகாது என்றறிக.

விரும்புற முன்ன மாதி புராணமென் பெயர்மே விற்றால்
இருஞ்சிவ ராச தானி யெனும்பெயர் பின்ன ராய
தரும்புக ழுமைகா யாரோ கணப்பெய ரமைந்த தஃது
கருங்கணாய் மரீஇயிற் றாற்பின் காரோண மெனவோ ரென்றான்.50

கு - ரை : முன்னே இத்தலத்துக்கு ஆதிபுராணம் என்ற பெயர் பொருந்தியது. சிவராசதானி என்னும் பெயர் பின்னர் ஆயது. இதன்பின் காயாரோகணப் பெயர் அமைந்தது. காயாரோகணம் என்ற பெயர் காரோணம் என மருவியது. ஓர் - ஓர்க; ஆராய்க.

என்றலு முமைம கிழ்ந்தாள் காயாரோ கணமெ னும்பேர்
நன்றினி தமைதற் கேது வுணரென்று னந்திப் புத்தேள்
ஒன்றிய புண்ட ரீக னுற்றதை யெடுத்துச் சொற்றும்
வென்றிசை தேவ தீர்த்த மான்மியம் விளம்ப லுற்றும். 51

கு - ரை : நந்திப்புத்தேள் - நந்தியம்பெருமான். ஏது - காரணம். தேவதீர்த்த மான்மியம் - தேவதீர்த்தச் சிறப்பு.

புண்டரிகமுனிவர் மூன்றுங்காட்சி உரைத்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 625

பதினேழாவது

தேவதீர்த்தப்படலம்

தாவரும் புகழ்ச்சனற் குமரன் றக்கவர்
நாவரு நந்தியை நயந்து போற்றுபு
தேவதீர்த் தத்துமான் மியமுஞ் செப்பென
ஓவரு மகிழ்ச்சியி னுரைத்தன் மேயினன். 1

கு - ரை : தாவரும் புகழ் - நீங்குதற்கரிய புகழ், கெடுதலில்லாத புகழ் எனினுமாம். தக்கவர் நா வரும் - சிவஞானிகள் நாவினிடத்துத் தோன்றும்; தக்கவர் - அடியார், சிவஞானிகள். மான்மியம் - சிறப்பு. ஓவரும் மகிழ்ச்சி - நீங்குதலில்லாத மகிழ்ச்சி.

மலைமக ளாகிய வன்னை வானதிக்
கலைமதி யொடுபுனை கடவுட் டாழ்ந்தெழா
அலைகட னுகைக்கா ரோணத் தற்புதம்
உலைவறக் கேட்டுமிக் குளமகிழ்ந் துளேன். 2

கு - ரை : மலைமகள் - உமாதேவியார். வான் நதி - ஆகாயகங்கை. கலைமதி - பிறைச்சந்திரன். கடவுள் - சிவபெருமான். அற்புதம் - ஆச்சரிய மான செய்திகள். உலைவு அற - கெடுதலின்றி.

மறிதிரைப் பெருங்கடல் வரைப்பில் யாருநல்
நெறிகடைப் பிடித்திலர் நியம நீத்தனர்
அறிமறை யவருநின் னடியிற் பத்திமை
செறிதரக் கொண்டிலர் கலியின் றீமையால். 3

கு - ரை : கடல் வரைப்பு - நிலவுலகம். நல்நெறி - ஞானமார்க்கம், சன்மார்க்கம். நியமம் - கடப்பாடு. அறி மறையவரும் - எல்லாவற்றையும் அறிந்த வேதப் பிராமணரும். பத்திமை - அன்புடைமை. கலியின் தீமையால் கடைப்பிடித்திலர், நீத்தனர், கொண்டிலர் என்க.

குறையற மார்பகங் கொண்ட நூலலான்
மறைமுத னூலெலா மதித்துக் கொண்டிலர்
நிறைபுகழ் நீற்றினை நீத்து வேறுவே(று)
உறைதர விலாஞ்சனை நுதலு றுத்துவார். 4

கு - ரை : மார்பகம் - மார்பினிடத்து. கொண்ட நூல் - தரித்த முப்புரிநூல். மறை முதல் நூல் - வேதம் முதலாகிய நூல்கள்; வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், சாத்திரங்கள் என்பன அவை. நீறு - விபூதி. நீத்து - தரித்தலைவிட்டு நீங்கி. இலாஞ்சனை - முத்திரை; நெற்றிக்குறி என்க. வேறு வேறு இலாஞ்சனை - கோபி சந்தனம், மஞ்சட்பொடி, சிவப்புப்பொடி, திருமண்காப்பு முதலிய குறிகள். நுதல் உறுத்துவார் - நெற்றியிலே தரிப்பார்.

நீறுமெய்ப் பூசுமந் தணரு நேரதன்
மாறுவா யாற்பிற பெயர்வ மூத்துவார்
வேறுரை செய்தலு மெய்ம்மை யோவதற்
கூறுற வுள்ளத்தி லுன்னல் கோடியே. 5

கு - ரை : நீறு மெய்ப் பூசும் - விபூதியை உத்தூளனமாக உடம்பு முழுவதும் பூசும். நேர் மாறு - அதற்கு நேர் மாறுபட. பிறபெயர் - சிவ சிவ எனக் கூறுதல் ஒழிந்து நாராயணா! கிருஷ்ணா! கோவிந்த! இராம! என்னும் வேறு பெயர்கள். சிவ சம்பந்த முடையவர்போல விபூதிப் பூச்சும் விஷ்ணு சம்பந்திகள்போல வாயிற்பேச்சும் உடையராயினும், அச்செயல்களிலும் உண்மையிலராய் அவைகட்கும் பழுது விளையும்படி மனத்தால் எண்ணும் எண்ணங்களும் கோடிக்கணக்காகவுள்ள தீய எண்ணங்களேயாம். ஊறு - இடையூறு. உன்னல் - நினைத்தல்.

அந்தண ரெண்பதற் கமைந்த காரணஞ்
சிந்தையிற் கொளாரிடு குறிசெய் தாரினு
நந்திய தீத்தொழி னயந்து ளாரெனல்
வெந்தொழின் மேற்றென விருப்பிற் கொண்டுளார். 6

கு - ரை : அந்தணர் - அந்தத்தை அணவுவோர் அந்தணர்; வேதாந்தத்தில் பிரதிபாதிக்கப்படும் சிவப்பொருளையே பார்ப்பார் என்னும் காரணக் குறி; "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுக லான்" என்பது திருக்குறள். இடுகுறி - ஒரு பொருளுக்குப் படைப்புக்காலத்தே இட்ட குறி: குறி - பெயர். தீத்தொழில் நயந்துளார் - ஆகவனியம், காருகபத்தியம், தட்சிணாக்கினி என்னும் மூன்று அக்கினி காரியங்களையும் விரும்பியோம்புவார். தீத்தொழில் வெந்தொழில் மேற்று - தீத்தொழில் என்பதன் பொருள் கொடிய செயல்களாகிய காமம் வெகுளி மயக்கம் என்பதன் மேலவாம். "முத்தீச் செல்வத்து இருபிறப்பாளர்" என்பதில் 'முத்தீச் செல்வம்' என்பதனையும் அவ்வாறு பொருள் கொள்வர் போலும். வெந்தொழில் - கொடிய செயல். மேற்று - மேலது.

இழிதொழி லியற்றியும் யாவர் மாட்டும்வெம்
பழிபடு பட்டிமை யாதி பண்ணியும்
ஒழிவற வுணுமுதல் விற்று மோகையிற்
கழிபொரு ளீட்டலே கருத்த மைத்தனர். 7

கு - ரை : இழிதொழில் - தான் பிறந்த குலத்திற்கும் குடிக்கும் ஒவ்வாத செயல். வெம்பழி - கொடிய பழி. பட்டிமை - வேண்டியவாறே ஒழுகுதல். ஆதி என்றதனுல் அவைபோன்ற பிறவும் கொள்க. நீங்காமல் உணவு முதலியவற்றை விற்றல். உணு - உணவு. ஒழிவு அற - ஓய்வின்றி. ஓகை - உவகை. கழிபொருள் - மிக்க பொருள்: 'கழிபொருள்' என்ற நயமும் காண்க. கருத்து - எண்ணம். ஈட்டல் - தேடுதல்.

பொருள்மறை யவர்களிப் புன்மை மேவலால்
வருணமாச் சிரமமும் வழீஇமற் றியாவரும்
இருண்மிடற் றுன்னடி யெண்ண லோவினர்
மருண்மனத் துதரமோம் புதலின் மன்னினர். 8

கு . ரை : பொருள் மறையவர் - பொருட்சிறப்புடைய வேதவேதியர்: உயிருக்கு இம்மை மறுமைகளில் உறுதி தருகிற வேதமோதல், வேள்வியாற்றல் முதலிய செயல்களைச் செய்யும் அந்தணர். புன்மை மேவல் - இழிதொழிலைச் செய்தலால்: மேவல் - பொருந்துதல். வழீஇ - வழுவி, தவிர்ந்து. இருள் மிடறு - கறுத்த கண்டம். ஓவினர்-நீங்கினர். மருள் மனம் - மயங்கிய உள்ளம். உதரம் - வயிறு. ஓம்புதல் - வளர்த்தல்.

மன்னவர் நெறிமுறை மாறு நூலுணர்
முன்னவ ருளுழுழு தொழின்மு யற்சிசெய்
பின்னவ ருளுஞ்சில ரன்றிப் பேதுறீஇ
என்னரு நெறிமுறை இகந்து மேவுவார். 9

கு - ரை : நெறிமுறை- நீதிமுறை. நூல் உணர் முன்னவர்- அந்தணர். உழுதொழில் முயற்சிசெய் பின்னவர் - வேளாளர். பேது உறீஇ- அறியாமை பொருந்தி. என்னரும் - யாவரும்; எப்படிப்பட்டவரும். இகந்து - நீங்கி.

மற்றிவ ராயுளுஞ் சிறிய வல்வினை
ஒற்றிய நோய்களோ பெரிய வொன்றுபு
முற்றிய வறுமையான் மூடப் பட்டுளார்
பற்றிய ஞானமு மணுவின் பாலதால். 10

கு - ரை : ஆயுளும் சிறிய - ஆயுட்காலம் குறைவுடையன. வல்வினை ஒற்றிய நோய்கள் பெரிய - வலிய தீவினைகளால் வந்துபொருந்திய பிணிகளும் மிகப்பல. முற்றிய வறுமை - முதிர்ந்த தரித்திரம். அணுவின்பாலது - அணுவின் பகுதியினதாம்.

ஆதலிற் பிறப்பிவ ரகன்று முத்தியிற்
காதலிற் புதுவதெக் கால மன்றியுஞ்
சாதலிற் பெருந்துயர் தருபல் கும்பியும்
போதலிற் றளருமே புடைவ றத்தலால். 11

கு - ரை: இவர் பிறப்பினின்று நீங்குதல் எப்போது? முத்தியில் சேர்தல்தான் எப்போது? காதலின் - விருப்புடன். பல் கும்பி - பலவகைப் பட்ட கும்பிபாக நரகங்கள்: ரௌரவம் இராச நரகமாம்; இருண்ட புழுதி வடிவாய் மிகுந்த துயரஞ்செய்யும். அரிய துயரஞ்செய்யும் அக்கினிச் சுவாலை போன்ற கும்பிபாக நரகம். இந்த ரௌரவத்துக்கும் இராசா ஆகலின், இராசராச நரகமாம். புழுப்பொருந்திய அவிசி என்னும் நரகம் எல்லாவற் றிற்கும் இராசா ஆகலின், இராசாதிராச நரகம் எனப்படும்.

பாதாளலோகம் ஏழினுக்கும் கீழாகிய உலகத்தில் நரகம் நிலைபெறும். நரகங்கள் தொகையினுல் இருபத்தெட்டு, வகையினுல் நூற்று நாற்பது, விரிக்கின் அவை இருபத்தெட்டுக் கோடியாம் என்க. முற்கூறிய இருபத் தெட்டினுக்கும் ஒவ்வொன்றுக்கு ஐந்தைந்து நாயக நரகம் உண்டு. இவை களின் விரிவைச் சிவதருமோத்தரம் சுவர்க்க நரக இயலிற்காண்க.

ஆணத்திற் பெருந்துய ரனைத்துந் தீரக்கா
ரோணத்தின் வசித்துனைப் போற்ற லொன்றுகொன்
மாணத்தி னகப்படு மற்று முண்டுகொல்
ஏணத்தின் கரத்தினு யியம்பு கென்றனள். 12

கு - ரை: ஆணத்தில் - அன்பினுல். மாண் அத்தின் - மாட்சிமைப் பட்ட அச்செயலின்; என்றது காரோணத்தின் வசித்துச் சிவபெருமானைப் போற்றுதலை. ஏணத்தின் கரத்தினுய்: ஏணம் - மான்.

என்றலுந் திருவுள மிரங்கி யெம்பிரான்
அன்றலி னமதுகா ரோணத் தல்குபு
பொன்றலி லாநமைப் போற்ற லன்றியும்
ஒன்றலி னென்றுள துரைப்பக் கேட்டியால். 13

கு - ரை: அன்றல் இல் நமது: அன்றுதல் - பகைத்தல்; என்றது வெறுத்தலை. அல்குபு - தங்கி, வசித்து. பொன்றல் இலா - அழிவில்லாத.

வினைதபு நமதுகா ரோண மெய்ப்பெயர்
புனைகுறிக் கழற்றிசைப் பொருந்து நீரது
தனையருந் தவத்தரே சாரத் தக்கது
வனையினம் போலுயர் மாட்சி மேயது. 14

கு - ரை : வினை தபும் - இயல்பாகவே பாசங்களின் நீங்கிய. காரோண மெய்ப்பெயர் புனை குறி - காரோண நாதர் என்னும் சிவலிங்கமூர்த்தி. அழற் றிசை - அக்கினி திக்கு. மாட்சி - பெருமை.

ஆதிநா ளுமினி தமைக்கப் பட்டது
நீதியா டினர்க்கெலா நிரப்பு நீரது
காதிமா பாதகங் காற்ற வல்லதால்
ஓதிமா முகிலனு யுளதொர் தீர்த்தமே. 15

கு - ரை : ஆதிநாள் - சிருட்டி காலத்திலே. ஆடினர்க்கு எலாம் - முழுகினோருக்கெல்லாம். நீதி நிரப்பும் - நீதியை நிரம்பச்செய்யும். நீரது - நீர்மையையுடையது: நீர்மை - தன்மை. காதி - சிதைத்து. காற்ற - பொடியாக்க. ஓதி - கூந்தல். மாமுகில் - கரியமேகம்.

அறுபதின் றலையிடு மாறு கோடியென்(று)
உறுபெருந் தீர்த்தங்க ளொருங்கு தொக்கது
மறுவற நினைப்பினும் வழுத்தக் கேட்பினுங்
கறுவறக் காணினுங் கதிகொ டுப்பது. 16

கு - ரை : அறுபத்தாறு கோடி தீர்த்தங்கள். ஒருங்கு தொக்கது - ஒருசேரத் திரண்டுள்ளது. மறு அற - குற்றம் நீங்க. வழுத்த - துதிக்க. கதி - வீட்டின்பம்.

அதுநிகர் தீர்த்தமற் றகிலத் தில்லையான்
மதுமலர்க் குழலினுய் மற்ற தன்சிறப்(பு)
இதுவென வுரைக்குந ரேவர் யாமலாற்
புதுமைய துறச்சில புகலு வாமரோ. 17

கு - ரை : அகிலம் - உலகம். யாம் அலால் உரைக்குநர் ஏவர்.

கூறுமுப் பத்துமுக் கோடித் தேவரு
நாறுகற் பகத்தொடை நயந்த வேந்தனும்
ஊறுதே மலர்த்தவி சுளானுந் தார்க்கியன்
ஏறுமா யனுமற்றை யாரு முன்னை நாள். 18

கு - ரை : கற்பகத் தொடை - கற்பகமலர் மாலை. நயந்த - விரும்பிய. வேந்தன் - இந்திரன். மலர்த்தவிசு உள்ளான் - பிரமதேவர். தவிசு - பீடம். தார்க்கியன் - கருடன். ஏறும் - ஏறிச் செலுத்தும். மாயன் - திருமால்.

இரணவே லவுணரோ டேற்று வென்றிட
மரணநீத் தமர்பெரு வன்மை யெய்துவான்
அரணமா மருந்துபெற் றருந்த லெண்ணினர்
சரணமே வினருளந் தவாத காட்சியாய். 19

கு - ரை : இரணவேல் - தசைபொருந்திய வேற்படை: இரணம் - போர் எனினுமாம். ஏற்று - எதிர்த்து. அரணம் ஆம் மருந்து: மருந்து - அமுதம். எய்துவான் : வானீற்று வினையெச்சம். மேவினர்-பொருந்தினோர்: சரணம் மேவினர் - அடியார்கள். உளம் தவாத - மனத்தைவிட்டு நீங்காத

புரைதபு மந்தரப் பொருப்பு நாட்டினர்
விரைதர வரவநாண் விழைந்து பூட்டினர்
தரைபுகழ் பெருமதித் தம்பங் கூட்டினர்
கரைபொரு திரங்குபாற் கடலை வாட்டினர். 20

கு - ரை : புரைதபும் - குற்றமற்ற. மந்தரப்பொருப்பு - மந்தரமலை. அரவ நாண் - பாம்பாகிய நாம்பு : வாசுகி. வாட்டினர் - கடைந்தார் என்க.

ஓடதி கொடுத்தன ருறக்க டைந்திட
நாடருஞ் சுதைக்குட நன்கெ ழுந்ததால்
ஆடல்சா லமரர்க ளதுகைப் பற்றினர்
வீடரு மவுணரை வெரீஇயி னரரோ. 21

கு - ரை : ஓடதி - ஔடதம். சுதைக்குடம் - அமுதகலசம். ஆடல் - வெற்றி. அது என்றது அமுதகலசத்தை. அவுணரை - அவுணருக்கு : உருபுமயக்கம். வெரீஇயினர் - அஞ்சினர்.

கலிமிகு மாற்றலர் காண வுண்பமேல்
வலிமிகு புயத்தவர் வௌவி னென்செய்வாம்
ஒலிகடல் வரைப்பகத் தூறு றுதுணப்
பொலியிட மெதுவெனப் புந்தி யாய்ந்தனர். 22

கு - ரை : கலிமிகும் மாற்றலர் - துன்பம்மிக்க பகைவர். புயத்தவர் என்றது அவுணரை. வௌவின் - பறித்துச்செல்லின். ஊறு உறுது - துன்பம் வந்தடையாமல். புந்தி ஆய்ந்தனர் - அறிவினால் ஆராய்ந்தார்.

கடையெழு வெள்ளமுங் கலங்கக் கண்டுவந்(து)
அடைபவர் தமைப்புரந் தழிவி லாதமர்
மிடைவளத் திருநகர் வேறு கண்டிலேம்
உடையவர் செறிந்தகா ரோண மொன்றலால். 23

கு - ரை: கடையெழு வெள்ளம் - ஊழியிறுதியில் உண்டாகும் பெரு வெள்ளம். புரந்து - காப்பாற்றி. வளம் மிடை - வளப்பம் செறிந்த. உடையவர் - எல்லாம் உடையநாயகராகிய சிவபெருமான்.

என்றுதம் முளங்குறித் தெய்தி ஞரவண்
வென்றுயர் தீர்த்தத்தின் விளிம்பயுந் தென்கரை
நன்றுயர் சுதைக்கட நயந்து வைத்தனர்
துன்றுவண் புனல்படிந் துணறு ணிந்தனர். 24

கு - ரை: உளம் குறித்து - மனத்தில் எண்ணி. சுதைக்கடம் - அமுத கும்பம். படிந்து உனல் - நீராடி உண்ணுதலை. உணல் துணிந்தனர்.

எண்ணிய படியிருந் தடத்தி றங்கினூர்
அண்ணிய சங்கற்ப மறைந்து மூழ்கினர்
தண்ணிய வெண்பொடி தயங்கப் பூசினர்
புண்ணிய மலிதரக் கரையிற் போதுமுன். 25

கு - ரை: தடம் - தடாகம். வெண்பொடி - வெள்ளிய விபூதி. தயங்க - விளங்க. புண்ணியம் மலிதர - புண்ணியம் நிறைய.

இருஞ்சுதைக் கும்பமோ ரிலிங்க மாகநாம்
ஒருங்குளத் தெண்ணினே மொளியி லிங்கமாய்
மருங்கிரு ளறுத்தது வயங்கக் கண்டுளால்
அருங்குரைத் தெனப்புகுந் தமர்ந்து ளேமரோ. 26

கு - ரை: நாம் அவ்வமுத கும்பம் ஒரு இலிங்கமூர்த்தியாகுக எனத் திருவுளங்கொண்டோம். மருங்கு - பக்கம். இருள் அறுத்து அது வயங்க. அச்சிவலிங்கத்திலே எழுந்தருளினேம்.

உலைவில்கன் ருப்புதட் பிழுக்கை யோர்மகள்
முலையளந் திடுமொரு கருவி மொக்கணி
அலைவற விவையெலா மமரு நாஞ்சுதை
நிலையகும் பத்திடை நீங்கு வேங்கொலோ. 27

கு - ரை: உலைவு இல் - கெடுதலில்லாத. பிழுக்கை ஓர் மகள் - தொழுத்தை, வேலைக்காரி; தாசி. கன்ருப்பு - கன்று கட்டுதற்குரிய தறி. சைவ தவவொழுக்க மிக்க ஒருவர், தாம் அருமையாகப் பெற்றெடுத்த பெண் மணியை வைணவக்குடியிலே தோன்றிய ஒரு மணமகனுக்கு மணஞ்செய் வித்தார். அத்தவமணி வைணவராகிய தமது மாமியார் முதலாயினேருக்குத் தெரியாவண்ணம் கன்றுகட்டும் தறி (முளை)யையே சிவலிங்கமூர்த்தியாகக் கருதி அன்பின் மேலீட்டால் வழிபாடு செய்துவந்தாள். ஒருநாள் அவ்வழி பாட்டைக் கணவன் கண்டு சினந்து ஒரு கோடரிகொண்டு அம்முளையைப்

பிளக்கச் சிவபெருமான் அம்முளையிலிருந்து வெளிப்பட்டருளினர் என்பது வரலாறு. அக்காரணத்தால் ஊருக்குக் கன்ருப்பூர் என்றும், சிவபெருமானுக்கு நடுதறியப்பர் என்றும் பெயர் எய்தியதென்பர்.

காளிதாசர் தாசி காந்தனைப் பொழுது போக்குவதை அறிந்த புலவர்கள் இதனை மெல்ல அரசனுக்கு அறிவிக்க, அரசனும் ஒருநாள் தான் போசனம்பண்ணச் செல்லும்போது காளிதாசரை அழைக்கக் காளிதாசர் சிவபூசை செய்யாமல் இருந்தமையால் அப்போதே அத்தாசியின் நகிலொன்றைச் சிவலிங்கமாகப்பாவித்து வெற்றிலையைக் கிள்ளுபத்திரமாகக் கொண்டு நியமமாகப் பூசித்துப் புறப்பட்டு வந்து அரசனுடன் ஒக்க இருந்து விருந்துண்ணத் தொடங்கும்போது சிவபூசை செய்தாயிற்ரு எனப் புலவரை அரசன் வினவினன். ஆயிற்றென்ருர் புலவர். நீர் தாசிவீட்டிலிருந்து வருகின்றீரே! சிவபூசை செய்திலீர் என்ருன் அரசன். இன்று பூசை முடித்தேன் வேறு பச்சிலை இல்லாமையால் வெற்றிலையைக் கிள்ளிச் சாத்திப் பூசை செய்தேன் என்ருர் காளிதாசர். அரசன், அவர் பூசைப் பெட்டகத்தைத் திறந்து சோதிக்கும்போது புலவர் கூறியபடியே இருக்கக்கண்டு மகிழ்ந்து வெட்கினன் என்பர். இதனையன்றி வேறு வரலாறு உண்டாயினும் கொள்க.

மொக்கணி=அவித்த பயறு கொள்ளு கடலை முதலியவற்றை இட்டு வைக்கும் குதிரையின் தீனிப்பை.

"மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்" (திருவாச - கீர்த்தி - 33, 4).

"கழுவிய பயறும் கொள்ளும் கடலையுந் துவரை யோடும்
முழுவதும் சிறக்க விட்டே மொக்கணி முட்டக் கட்டி"

என்பது நம்பி திருவிளையாடல்.

சிவபூசை நியமம்பூண்ட வணிகனெருவன் கோட்டூரில் தங்கி நீராடிச் சிவபூசை செய்யும்பொருட்டு வந்தான். அவன் மைத்துனன் அவனைப் பரிகசிக்கக் கருதினன்; குதிரைக்குக் கொள் கட்டும் பை ஒன்றை எடுத்து மணலால் நிரப்பிவைத்துச்சிவலிங்கமெனக் கூறினன். வணிகனும் அதனைச் சிவமென எண்ணிப் பூசையைச் செய்து முடித்தான். பூசை முடிந்த பின்பு மைத்துனன் வணிகனைக் கொள்ளுப்பைக்குப் பூசை செய்தனையே எனக் கூறிப் பரிகசித்தான். அதனை அவன் எடுக்கச்செல்ல, கைக்கு எடுக்கவராமல் சிவலிங்கமாக விளங்கியது என்னும் வரலாறு கொங்குமண்டல சதகம் 24 ஆம் பாடலால் அறிகிருேம். இறைவருக்கு 'மொக்கணீசுரர்' என்ற நாமமும் உண்டாயிற்று என்பர்.

'அளந்திடும் ஒரு கருவி' என்றது புலனைவில்லை.

வானவர் சுதைக்குட மருங்கு வந்தனர்
தானகு மிலிங்கமாய்த் தயங்கக் கண்டனர்
ஆனதொன் றிஃதென வறிய கிற்றிலர்
ஈனமில் உளத்திகைப் பெய்தி னரரோ. 28

கு - ரை: மருங்கு - பக்கம். தயங்க - விளங்க. உளத்திகைப்பு - மன மயக்கம். தான் நகும் இலிங்கமாய். அறியகிற்றிலர் - அறியாதவராய்: முற்றெச்சம்; கில்: ஆற்றல் உணர்த்தும் இடைச்சொல்.

செறிதரு வானவர் திகைப்பு மாற்றிட
அறிதரு மவ்விலிங் கத்து நின்றியாங்
குறிதரு மான்மழுக் கொண்ட கையொடும்
வெறிதரு கூந்தலாய் வெளிவந் தாமரோ. 29

கு - ரை: செறிதரு வானவர் - முப்பத்துமுக்கோடி தேவரும் இந்திரனும் ஆகிய விண்ணோர். அமுதகும்ப இலிங்கத்தினின்று மான்மழு ஏந்திய கரங்களோடும் வெளிவந்தோம். வெறி - வாசனை.

வெளிவரு நம்மடி வீழ்ந்து பண்ணவர்
எளிவரு சோதியே யெங்க டெய்வமே
அளிவரு கருணையே யமல மேயெனத்
துளிவருங் கண்ணொடு துதிசெய் தாரரோ. 30

கு - ரை: பண்ணவர் - தேவர். எளிவரு - எளிதாகக் காட்சிதந்த. எங்கள் தெய்வமே - தேவதேவரே! மகாதேவரே: எங்கள் என்றது தேவர்களாகிய எங்களுடைய என்க. அமலம் - பரிசுத்தம்.

துதிபுரி பவர்முக நோக்கித் தூயவித்
திதிபெறு தலத்திடைச் செறிந்த வாலுகப்
பொதியெலா மிலிங்கமாய்ப் பொலியு மென்றிடில்
அதிசுவைச் சுதைக்கட மயலொன் றுருகுமோ. 31

கு - ரை: துதிபுரிபவராகிய விண்ணவர். திதிபெறு - நிலைபெற்ற. வாலுகப்பொதி - வெண்மணல் மூடைகள். அயல் ஒன்று - மற்றொன்று. தூய இத்தலம் என்க.

ஏற்றஞ்சா லமுத கடேச மென்றொரு
தோற்றஞ்சால் பெயர்பெறீஇத் துலங்கு மித்தலம்
மாற்றஞ்சா றுதியொடு வணங்கு வார்க்கருள்
ஊற்றஞ்சால் வினையொழித் துதவு நாளுமே. 32

கு - ரை: இத்தலம் அமுதகடேசம் எனவழங்கும். ஏற்றம் - சிறப்பு. தோற்றம் சால் - விளக்கமிக்க. மாற்றம் சால் துதி. ஊற்றம் சால் வினை - மேலும் மேலும் அதிகரித்துவரும் வினைகள்.

வண்பது மாசன ஞாதி வானுளீர்
உண்பது போயதென் றுளம்பு முங்கலீர்
பண்பது பராயவித் தடத்து நின்றுமோர்
நண்பது சால்சுதைக் குடநன் றீகுவாம். 33

கு - ரை : பதுமாசனன் - பிரமன். ஆதி - முதலாகவுள்ள. உண்பது போயது - உண்ணும் பொருட்டாக வைத்த அமுதம் கையிகந்தது. இத் தடத்தினின்றும் 'ஓர் சுதைக்குடம் நன்று ஈகுவாம்' என்றது சிவபிரான் அருள்மொழி.

என்றொரு சுதைக்குட மெழநி னைந்தனம்
அன்றொரு கடலெழு மமுத விந்துவின்
நன்றொருங் கெழுந்தது நயந்து கண்டனர்
பொன்றொரு தினமுமின் றென்று புங்கவர். 34

கு - ரை : அமுத விந்துவின் - அமுதத்துளியையவிட. பொன்று= பொன்றுதல் - அழிதல். புங்கவர் - தேவர்.

வெருவமு தெதிர்ப்படூஉ வெறுத்தல் சாலமு
தருவரு ளாற்றர லமைந்த தன்றெனு
மருதுநிற் பார்களை வாங்கி யுண்டுமெய்
இருவலி பெறுமினென் றியம்பி னமரோ. 35

கு - ரை : வெரு அமுது - வெறுத்தலில்லாத அமுதம். எதிர்ப்படூஉ - எதிர்ப்படலும். வெறுத்தல் சால் - வெறுத்தல் மிக்க: என்றது பாற்கடல் அமுதத்தை. அரு அருளால் தரல் அமைந்தது அன்று - நீங்காத அருளினுல் கொடுக்கப்பெற்றதன்றும்; இஃது நம் அருளால் தரல் அமைந்தது என்றுர். மெய் இரு வலி - சரீரம் அழியாமலுள்ள வலிமை.

அருண்மறுத் திடுவதற் கஞ்சி வானவர்
தெருள்சுதைக் குடத்தினைச் சென்று பற்றினர்
வெருளற யாவரும் விரும்பி யுண்டனர்
மருளில்யா மாவயின் மறைந்து ளேமரோ. 36

கு - ரை : தெருள் - தெளிந்து. வெருள் அற - அச்சமின்றி. ஆவயின் - அவ்விடத்து; அவ்வமுதலிங்கத்தில்.

மறைமுடி வயங்குநா மறையக் காண்டலும்
நிறைவெருக் கொண்டது நீங்கிப் பின்னரும்
முறையினத் தடம்படீஇ முன்னி னர்க்கெலாங்
கறைதபு கருணைக்கா ரோணம் புக்கனர். 37

கு - ரை : மறை முடி - வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களில்; வேதசிரஸ் என்றபடி. நிறை வெரு - மிகுந்த அச்சம். முன்னினூர்க்கெலாம் - நினைந்தவர்களுக்கெல்லாம். கறை தபு - குற்றம் நீங்கிய.

ஆண்டுநம் மையுமரு ளமைந்த நின்னையும்
பூண்டுபே ரன்புளம் போற்றி யாங்கொரீஇ
மீண்டுவந் தமுதக டேச மேவினூர்
தூண்டுகா தலின்மிகத் துதித்துப் பூசித்தார். 38

கு - ரை : ஆண்டு - அக்காரோணதலத்தில். உளம் பேரன்பு பூண்டு என மாறுக. ஒரீஇ - நீங்கி. தூண்டு காதலின் - அதிகரித்துவரும் அன்பினூல்.

விடைகொடு தத்தம திருக்கை மேவினூர்
குடைபவர் பாதகங் குமைக்கு மப்புனல்
கடையுருத் தேவபுட் கரணி யாயது
நடைகொளிவ் வேதுவா லுணர்தி நங்கைநீ. 39

கு - ரை : விடைகொடு - பிரியா விடைபெற்று. குடைபவர் - முழுகுவோர். குமைக்கும் - அழிக்கும். கடைதலில்லாத தேவபுட்கரணி: கடையுரு - கடைதலில்லாத, அழிதலில்லாத. பாற்கடல் அமுதம் கடைந்தெடுத்தது. தேவபுட்கரணி அமுதம் கடையாமல் பெற்றது. தேவபுட்கரணி - தேவதீர்த்தம். ஏதுவால் - காரணத்தால்.

தேவதீர்த் தப்பெயர் செறிந்த வாவியுள்
யாவர்போய்க் குடையினு மியைந்த வெவ்விய
பாவநூ ருயிர கோடி பாறிடு
மேவமால் வரைவரு விமலை யின்னுங்கேள். 40

கு - ரை : வாவி - தடாகம். வெவ்விய பாவம் - மிகக்கொடிய பாவங்கள். நூருயிரகோடி என்றது எண்ணிறந்த என்றபடி. வரைவரு விமலை - உமாதேவி.

வேறு

ஆய வெங்கதி ரெனவொரு பொழுதுசெய் யரசும்
பாய தாரகைக் கண நடுப் பொலிதரு பண்புந்
தூய வானவர் தம்பசி யவித்திடு துணிவு
மேய சீதள கலைமதி யென்பவன் மேனூள். 41

கு - ரை : வெங்கதிர் - சூரியன். ஒருபொழுது - இராக்காலம். பாய தாரகைக்கணம் - பரவிய நட்சத்திரக்கூட்டம். பசி அவித்தல் - அமுதகிரணம்

சொரிதல். சீதளம் - குளிர்ச்சி. கலைமதி - கலைகளோடு கூடிய சந்திரன்: கலைமதி என்றது நயம்.

பரம டந்தையர் புணர்தலிற் படுபழி பாவந்
திரம டைந்திடு மென்பது தன்னுளந் தெரிந்துஞ்
சிரநெ டுந்துயர் விளைத்திடு கருமலச் செருக்கால்
வரமி குங்குரு மனை நலம் புணர்வது மதித்தான். 42

கு - ரை : பரமடந்தையர் - பிறன்மனைவி. திரம் - நிலை. கருமலம் - ஆணவம். செருக்கு - அகந்தை. வரம் மிகும் - சிறப்பு மிக்க. குருமனை - வியாழபகவான் மனைவி. பழி பாவம்: கம்பராமாயணம் - உயுத்த - மந்திரப் படலம் 48 - 53 வரையுள்ள பாடல்கள் சிந்திக்க. "பிறன் தாரம், நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென், றச்சத்தோ டிந்நாற் பொருள்" (நாலடி-82); "பகை பாவம் அச்சம் பழியெனநான்கும், இகவாவாம் இல்லிறப்பான் கண்" (குறள் - 146).

ஆன்ற சாலிமுற் பற்பல ருயர்புற்ற தறிந்துஞ்
சான்ற பேரெழிற் றாரையுஞ் சந்திர னழகே
மான்ற வுள்ளத்து மதித்தனள் வருபழி மதியாள்
தோன்ற வாண்டளப் பாற்பிழைத் திடுவதே துணிந்தாள். 43

கு - ரை : சாலி - அருந்ததி; வடமீன். தாரை - குருபகவான் மனைவி. மான்ற - மயங்கிய. ஆண்டளப்பான் - வியாழன். மதித்தனள், மதியாள்: முரண்.

இருதி றத்தரு மின்னரா யொழுகுழி யொருநாள்
ஒருக ழைச்சிலை கோட்டியொண் சுருப்புநாண் பூட்டிக்
குரும லர்க்கணை யெடுத்தெடுத் தளப்பில கூட்டித்
தெரும ரச்சமர் செய்தனன் மாரவேள் சினந்து. 44

கு - ரை : இருதிறத்தரும் - தாரையும் சந்திரனும். இன்னராய் - இத் தன்மையுடையராய்; இணைவிழைச் சுடையராய். கழைச்சிலை - கரும்புவில். கோட்டி - வளைத்து. மலர்க்கணை - மலரம்புகள். தெருமர - சுழல: "அல மரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி" (தொல்). சமர் - போர். மாரவேள் - மன்மதன்.

வருமலர்க்கணை பாய்தலு நெஞ்சமா ழாந்து
கருகி ருட்கதி ரரசனில் லமையத்திற் கசிந்து
வெருவ ரச்சென்று தாரைமென் மலர்க்கரம் பிடித்தான்
அருவ ருப்புறு தவளுமற் றவனுட னணைந்தாள். 45

கு - ரை : மாழாந்து - மயங்கி. இருட்கதிர் - சந்திரன். அரசன் - குரு. வெருவர - அஞ்ச. அருவருப்பு உறுது - வெறுக்காமல். அவளும் - தாரையும்.

கொண்டு போயொரு தன்மனைக் குறுகிமெல் லமளி
மண்டு வான்பரி யங்கத்தி னிருத்துபு வரம்பு
விண்டு மேல்விழா மெய்யுறத் தழுவிவா யூறல்
உண்டு தேக்கியொண் முகத்தொடு முகமியைத் துவந்தான். 46

கு - ரை : அமளி - படுக்கை. பரியங்கம் - கட்டில். வரம்பு விண்டு - அளவுகடந்து. இயைத்து உவந்தான்.

முத்த முண்டன னிளமுலை வருடினன் முழுதுஞ்
சித்த மின்புற வரைக்கலை நெகிழ்த்தனன் செழும்போ(து)
ஒத்த வொண்கடி தடத்தனை விடுத்தன னுவப்புற்(று)
அத்த கைப்படுங் கடலகத் தழுந்தின னுலோன். 47

கு - ரை : அரைக்கலை - அரையிலுள்ள துகில். செழும்போது - செந்தாமரை. ஆலோன் - சந்திரன். வருடினன் - தடவினன். இவை இரண்டு செய்யுட்களானும் சந்திரன் இன்பநுகர்ச்சி கூறப்பட்டன.

மதிய ழிந்தொரு மதிகுரு மனையொடிவ் வண்ணம்
கதிய மைந்தவர் போன்றுபன் னுளளங் களிக்க
விதிகொ ளந்தணன் மனைவியைக் காணலன் வெருவித்
திதிய மைந்தவைப் பெங்கணுந் தேடினன் றெரிந்தான். 48

கு - ரை : மதி அழிந்து - புத்திகெட்டு. மதி - சந்திரன். கதி - முத்திப் பேறு. அந்தணன் - வியாழன். வெருவி - அஞ்சி. வைப்பு - உலகம்.

பாவ காரியீ தாற்றிய தென்னெனப் பதறித்
தேவர் வேந்தனே டோருழி யடைதரத் திரட்டி
மேவ வெவ்விய மதிபுரி செயலெலாம் விளம்பி
யாவ நாந்துற வடைகுது மினியென வறைந்தான். 49

கு - ரை : பாவகாரி - பாவி. தேவர் வேந்தன் - இந்திரன். ஓர் உழி - ஓரிடத்தில். வெவ்விய மதி - கொடிய சந்திரன். ஆவ : இரக்கக் குறிப்பு. தேவரையும் வேந்தனையும் திரட்டி என்க.

குரவன் வாய்மொழி செவித்துனை குறுகலுங் கொதித்துப்
பரவு வானவர் யாவரு மிகமனம் பதறிக்
கரவ னுகிய மதியினைப் புடைத்திவட் கழித்து
விரவு துன்பமுங் கழிக்குது மெனவெகுண் டெழுந்தார். 50

கு - ரை : வாய்மொழி - உண்மைச் சொல். கரவன் - வஞ்சகன்.

அதுதெ ரிந்துமிக் கஞ்சுபு விதிர்விதிர்ப் படைந்து
விதுப ளிங்கம ரிடம்புகூஉ வவனடி வீழ்ந்து
கதுமெ னச்சுரர் வளைந்துபோர் குறித்தது கரைய
விதுவெ னுவதென் றவனுமற் றவுணருக் கிசைத்தான். 51

கு - ரை : அஞ்சுபு - அஞ்சி. விது - சந்திரன். பளிங்கு அமர் இடம் புகூஉ - சுக்கிராசாரியர் இருக்கும் இடத்தையடைந்து: பளிங்கு - சுக்கிரன். இது என் ஆவது.

தீய தானவர் வெட்டுடை யிறுக்கினர் சினத்திற்
பாய மாமுக ரோமமு முறுக்கினர் பலகை
யாய வாள்சரா சனமுதல் யாவுங்கை யமைத்தார்
மாய வான்சமா குறித்துவா னுடரை வளைத்தார். 52

கு - ரை : பாய - பரவிய. முகரோம முறுக்கினர். பலகை - பரிசை வட்டம். சராசனம் - வில். மாய வான் சமர் - மாயையோடு கூடிய பெரும் போர். வான்நாடர் - விண்ணோர். வளைத்தார் - சூழ்ந்து கொண்டனர்.

திதிய ளித்தவர் வளைந்தமை தெரிந்துகண் சிவந்து
பொதிகு டச்சுதை யெடுத்தயின் றமரராய்ப் பொலிவார்
கொதிச மர்த்திறற் கோலத்திற் குறைவரக் கொண்டு
மதிபி ழைப்பதின் றெங்கென வாளம ரேற்றார். 53

கு - ரை : திதி அளித்தவர் - தைத்தியர்: காசிபமுனிவருடைய பத்தினியர் பதின்மூவரில் திதி என்பவளிடம் தோன்றியவர்: அசுரர். அமரர் - தேவர்: சாவாதவர் என்னும் குறிப்பு. மதி பிழைப்பது இன்று எங்கு என. வாள் அமர் - வாட்போர். ஏற்றார் - எதிர்த்தார்.

சிலைவ ளைத்தனர் செறியநா ணேற்றினர் திக்கின்
மலைபி ளப்புற மாமத யானையு மயங்கித்
தலைவி திர்த்திட நாணொலி யெழுப்பினர் சலதி
அலைமு ழக்கமு மச்சுறத் தோள்புடைத் தார்ப்பார். 54

கு - ரை : சிலை - வில். திக்கின் மலை - எட்டுத்திக்கிலுமுள்ள மலைகள். மாமத யானை - திக்கயங்கள். விதிர்த்திட - நடுங்க. சலதி - கடல்.

ஒன்று பத்துநூ றுயிர மெனக்கணை யுகைப்பார்
சென்று சென்றுவாள் வீசுபு சாரிகை திரிவார்
அன்று வாள்வெட்டுப் பலகையிற் றகைந்துசென் றடர்ப்பார்
இன்று வென்றிமற் றெமதென நெடுமொழி யிசைப்பார். 55

கு - ரை : கணை உகைப்பார் - அம்பைச் செலுத்துவார்கள். விசுபு - வீசி. சாரிகை - இடதுசாரி, வலதுசாரி, வட்டம் என்பன. தகைந்து - தடுத்து. நெடுமொழி - சபதம்.

பரியு கைப்பவர் பரியுகைப் பவரொடுங் கழைகொல்
கரியு கைப்பவர் கரியுகைப் பவரொடு முருளைக்
கிரியு கைப்பவர் கிரியுகைப் பவரொடுஞ் செங்கண்
அரியு கைப்பவர் அரியுகைப் பவரொடு மமர்த்தார். 56

கு - ரை : பரி - குதிரை. கரி - யானை. கழை - மூங்கிலாற் செய்த குத்துக்கோல். உருளைக் கிரி - சக்கரங்கோத்த மலைபோலுந் தேர்: கிரி - மலை. அரி - சிங்கம். போர்செய்வோர் சுராசுரர் ஆகலின் நால்வகைப் படைகள் இன்றிச் சிங்கம் முதலியவற்றில் ஏறிச்செல்வர் என்க. அமர்த்தார் - போர் செய்தார்.

மண்ணி டைப்புகும் வாளராக் குலம்பல வயங்குங்
கண்ணி டைப்புகு மழைக்குலத் திடைப்புகுங் கார்கோள்
எண்ணி டைப்புகுந் திசையெலாம் புகுமிரு திறத்தார்
புண்ணி டைப்புகுந் துருவிய பொருதிறற் பகழி. 57

கு - ரை : அராக்குலம் - பாம்புக்கூட்டம். கண்ணிடை - இடத்தில்; என்றது பாதலவுலகத்தை. மழைக்குலம் - மேகக்கூட்டம். கார்கோள் - கடல்; "கார்கோள் முகந்த கமஞ்சூன் மாமழை" (முருகு). பகழி - அம்பு.

முடிய மூத்திய மணிபல தெரித்திட முழுதுங்
கடிம ணிக்குழை சிதர்ந்திடத் தோள்வளை கழல
அடிபி டித்தனர் மேலெடுத் தறைந்திடு மள்ளர்
தடியி டைக்கதிர்ச் சாலிகொன் மள்ளரும் போன்றார். 58

கு - ரை : முடி - கிரீடம். கடி - விளக்கம். சிதர்ந்திட - சிதறிவிழ. மள்ளர் - போர்வீரர். தடியிடை - தடிக்கம்பினிடத்து. கதிர்ச்சாலி - நெற்கதிரோடுகூடிய தாளை. கொல் - எடுத்து அடிக்கும். மள்ளர் - உழவர். போர் வீரரும் பகைவருடைய கால்களைப் பிடித்து மேலே எடுத்துப் பூமியில் மோதுவர், உழவரும் தாள்களையெடுத்து நெற்கதிர்களைத் தடியிலே மோதுவர் என்றபடி.

மொழிந்த மள்ளர்க ளறைதலு முற்றிய செந்நெல்
கழிந்த வையினை மேலெடுத் தெறிதிறங் கடுப்ப
அழிந்த நெஞ்சிலா வொருவரை யொருவர்தொட் டறைந்து
பிழிந்த வாற்றல்செய் தெடுத்தெடுத் தெறிவர்மேற் பிறங்க. 59

கு -ரை : கழிந்த - நீங்கிய. வை - வைக்கோல். தொட்டு அறைந்து - எடுத்து மோதி. பிழிந்த ஆற்றல் செய்து - வலிமையைக்கெடுத்து. பிறங்க - விளங்கும்படி.

தோளி ழந்தவ ரிழந்தனர் தும்பைமா லிகையுந்
தாளி ழந்தவ ரிழந்தனர் தழங்கொலிக் கழலும்
வாளி ழந்தவ ரிழந்தனர் பிடித்தவன் கையு
நாளி ழந்தவ ரெனுவிரு திறத்தரு ணலிந்து. 60

கு - ரை : தும்பை மாலிகை - தும்பை மாலை: பகைவரோடு போர் செய்தலை நினைந்து தும்பைப்பூவைச் சூடுதல். தழங்கு ஒலி - முழங்குகின்ற ஒலி. கழல் - வீரக்கழல். நாள் - ஆயுட்காலம்.

ஆவ மாகிமெய் சிவப்பவும் விழிச்சிவப் பழியார்
ஓவ மேயென நிற்பினு நிற்பரஃ தொழிந்து
மேவ முன்வைத்த பாதம்பின் வைத்திடா விறலார்
பாவ முந்தரு மமுஞ்சம ராடிய படியார். 61

கு - ரை : ஆவம் - அம்பறுத்தூணி. விழிச்சிவப்பு - கோபத்தால் கண்சிவத்தல். ஓவம்=ஓவியம் - சித்திரம். சமர் ஆடிய படியார் - போர் செய்தலையொப்பானவர்.

ஒருவர் தண்டமற் றொருவர்கைத் தண்டத்தா லுடையும்
ஒருவர் தோமர மொருவர்தோ மரத்தினு லொழியும்
ஒருவர் வெஞ்சர மொருவர்வெஞ் சரத்துடைந் தோடும்
ஒருவ ராற்றன்மற் றொருவராற் றலிற்றரை யுதிரும். 62

கு - ரை : தண்டம் - தண்டாயுதம். தோமரம் - பெருஞ்சவளம்; கைவேல் எனினுமாம். வெஞ்சரம் - கொடிய அம்பு. உடைந்து ஓடும் - தோற்றோடும். ஆற்றல் - வலிமை.

படையி ழந்தவ ரெண்ணிமெய்ப் புதைபடை பறித்துத்
தடையி லாதெதிர் சமர்செய வம்மினென் றழைப்பார்
படைப றித்தவ ருளுஞ்சிலர் கோணுதல் பார்த்துத்
தடையி லாதுடற் புண்ணிட்டு நிமிர்த்தனர் சார்வார். 63

கு - ரை : மெய் புதை படை - சரீரத்தில் தைத்த ஆயுதம். எண்ணி - ஆலோசித்து. கோணுதல் - கோணியிருத்தல்.

மேய வாகவப் பூமியின் மறிதர வீழ்ந்த
பாய கேடகம் பரிகலம் பரந்துவீழ் மூளை
யாய சொன்றிமற் றதன்மிசை யீருளம் பருப்பு
நேய மென்றசை நிணமெலா நிரப்பிய கறிகள். 64

கு - ரை : ஆகவப் பூமி - போர்க்களம்: ஆகவம் - போர். மறிதர விழ்ந்த - கவிழ்ந்து விழுந்த. பரிகலம் - உண்ணும் பாத்திரம். சொன்றி - சோறு. முற்றுருவக அணி.

என்பு வற்றல்வீ ழரக்குநீ ரினிதுபெய் கிருது
வன்பு மேயதோன் மூடிய பரிவட்ட மாக
அன்பு மேவிய சயமக ணிவேதன மமையும்
புன்பு லாலுடல் சாய்ந்தவர் பணிபவர் போன்றூர். 65

கு - ரை : அரக்குநீர் - செந்நீர். கிருது - நெய். பரிவட்டம் - சிறு துணி; ஆடை. சயமகள் - கொற்றவை. பணிபவர் - வணங்குகின்றவர்.

இந்த வாறமர் நிகழ்வுழி யுலகெலா மேங்கச்
சந்த நான்முக னறிந்தவ ணடைந்தமர் தணித்துப்
பந்த மேவிய மதியினைக் கூயவற் பார்த்து
நந்த நீயெவன் செய்தனை யென்றிது நவில்வான். 66

கு - ரை : நான்முகன் - பிரமதேவர். கூய் - அழைத்து. நந்த - கெட.

கற்ற கல்வியும் பரிதியோ டெண்ணிடு கணிப்புஞ்
சொற்ற கோள்களு ளொன்றெனத் துலங்கிடு மாண்பும்
அற்ற மோவவெவ் வுணவுநன் ருக்கிடு மமைவும்
பெற்ற நீயெவன் செய்தனை யறிவிலாப் பேதாய். 67

கு - ரை : பரிதி - சூரியன். கணிப்பும் - மதிப்பும்; என்றது சூரிய சந்திரர் என்பதை நோக்கியது. கோள் - கிரகம். அற்றம் ஓவ - சோர்வு நீங்க; துன்பம் எனினுமாம்.

ஈர நெஞ்சிலா முருடரு மிதுசெயத் துணியார்
வீர மொன்றிலா வலியுரு மேல்விளை ந் திடுமே
பார மோவுருப் பாதகந் தடிக்குமே யயலார்
தாரம் வெளவினர் நரகன்றிச் சார்வது முண்டோ. 68

கு - ரை : ஈரம் - அன்பு. முருடர் - முரட்டுத்தன்மை உடையோர். உரு - வடிவம். ஓவுரு - நீங்காத. தடிக்கும் - பெருகும். அயலார் தாரம் - பிறன் மனைவி.

தீய செய்தனை தாரையை விடுமதி செத்தோன்
ஆய செய்கையை யுயிருட னிருந்துமென் றறைந்தான்
தூய தேவர்கள் குரவனைப் பிழைத்தவித் துட்டன்
மேய வேள்வியிற் பாகமெய் தானென விதித்தார். 69

கு - ரை : விடுமதி: மதி அசைநிலை. குரவனை - ஆசாரியனுக்கு : உருபு மயக்கம். "குரவர்த் தப்பிய கொடுமையோன்" இவன் என்றவாறு. வேள்வியிற் பாகம் என்றது அவிப்பாகம் பெறுதல் என்க.

நிலைக லக்கிய விமகர னெடிதுயிர்ப் பெறிந்து
தலைவ னொந்தொரு தாரையை விடுத்தனன் வியாழங்
கலைசொ லுங்கழு வாய்செய்து கைக்கொடு போனான்
அலைவில் வானவர் யாருந்தம் மிருக்கைசென் றடைந்தார். 70

கு - ரை : இமகரன் - சந்திரன். நெடிது உயிர்ப்பு எறிந்து - பெருமூச்சு விட்டு. கலை சொலும் கழுவாய் - நூல்களாற் கூறப்படும் பிராயச்சித்தம். அலைவு இல் - வருந்துதலில்லாத.

முத்த வாணகைத் தாரைசின் னாளிற்சூன் முதிர்ந்து
வித்த நேரொரு மைந்தனை யீன்றனள் வெய்யோன்
ஒத்த தானவ னென்மக னெனவழக் குரைத்தான்
சுத்த வாரியன் தன்மக னேயெனச் சொற்றான். 71

கு - ரை : தாரை - குருபகவான் மனைவி. சூல் முதிர்ந்து - கருப்பம் முற்றி. வெய்யோன் ஒத்த தானவன் - சந்திரன். சுத்த ஆரியன் - தூய வியாழன்.

இருவ ருங்கலாய்த் தின்னண மாடுறு மேல்வை
மரும லர்த்தவி சோன்முனம் போலவே வந்து
குரும லர்க்குழற் றாரையை நேர்வரக் கூவிக்
கருவில் யாவரா லமைந்ததிக் கான்முளை யென்றான். 72

கு - ரை : கலாய்த்து - கலகஞ்செய்து. ஆடுறும் ஏல்வை - வார்த்தையாடும் சமயத்தில். கான்முளை - புத்திரன்.

என்ற காலையி லறிந்திலாய் போலவீங் கென்னை
ஒன்ற நீவினு வியதெவன் மதியென வுரைத்தாள்
அன்ற வன்மதி யாலெனல் குறிப்பினு லறிந்தான்
வென்ற தானவன் பாலுற மகவினை விடுத்தான். 73

கு - ரை : எவன்மதி: மதி அசைச்சொல். மதி என்று குறிப்பால் உணர்த்தினுளுமாம். அவன் - பிரமதேவன். தானவன் - சந்திரன்.

அன்ன மூர்பவன் றானமர் வளநக ரடைந்தான்
பின்ன மேவுறுத் தீவினை பெருகலான் மதியோன்
முன்ன மேவிய தேகமுற் றெழிதர முன்னி
என்ன காரியஞ் செய்தன மென்றிழித் திருந்தான். 74

கு - ரை : அன்னம் ஊர்பவன் - நான்முகக்கடவுள். வளநகர் - சத்தியலோகம். பின்னம் மேவுரு - குறைபாடில்லாத. மதியோன் - சந்திரன். தேசு - புகழ், ஒளி. முற்று ஒழிதர - முழுவதும் நீங்க. முன்னி - நினைந்து.

மதலை யாம்புத னைத்தழீஇ மகிழ்தலி னிந்த
விதலை தீர்திற மின்றென மெலிந்துளத் தெண்ணி
முதலை சூழ்புவித் தீர்த்தங்க ளிடைச்சென்று மூழ்கின்
அதலை வாந்துயர் தீர்க்குமென் றவனிவந் தடைந்தான். 75

கு - ரை : மதலை - குழந்தை. புதன் - சந்திரன் மகன். விதலை - துன்பம். புவித் தீர்த்தங்கள் - நிலவுலகத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்கள். அது அலைவு ஆம் துயர்தீர்க்கும்: அலைவு - வருத்தம். அவனி - பூமி.

தூய கங்கைமுற் றீர்த்தங்க ளனைத்தினுந் தோய்ந்தான்
காய மேவொளி முன்னையிற் பொலிதரக் காணான்
மேய பாதகம் வீந்தில தின்னுமென் செய்வாம்
மாய மோவிஃ தென்றமு திரங்கினன் மதியோன். 76

கு - ரை : தோய்ந்தான் - முழுகினான். காயம் மேவு ஒளி. முன்னையின் - முன்புபோல: இன் ஐந்தாவது ஒப்பின்கண் வந்தது. வீந்திலது - அழிவுற்றதின்று. மாயமோ - மாய வித்தையோ. மதியோன் - சந்திரன்; அறிவுடையோன் எனத்தொனித்தலும் காண்க.

அந்த வேலையின் மகதியாழ் முனிவர னடுத்தான்
முந்த மேவிய யாவையு மறிதர மொழிந்து
சந்த மேவவ னடிமிசை யழுதுதாழ்ந் தெழலும்
நந்த வோதுவ துண்டென வனையவ னவில்வான். 77

கு - ரை : மகதியாழ் முனிவரன் - நாரதமுனிவர். முந்த மேவிய யாவையும் - முன்னே நிகழ்ந்த செய்திகள் எல்லாவற்றையும். சந்தம் மேவு அவன் அடி : சந்தம் - அழகு. நந்த - ஆக்கம்பெற. அனையவன் - நாரத முனிவர்.

குணக டற்கரை நாகைக்கா ரோணத்தைக் குறுகி
அணவு தேவதீர்த் தத்துநீ மூழ்குவை யாகிற்
புணரும் பாதக மெவ்வள விருப்பினும் போகும்
உணரு மாறுநீ முன்னையிற் பொலிவையென் றுரைத்தான். 78

கு - ரை : குணகடல் - கீழ்கடல். அணவு - பொருந்திய. புணரும் பாதகம் - பொருந்திய பாதகங்கள்; புணரும் பாதகம் என்ற குறிப்பும் எண்ணுக. முன்னையிற் பொலிவை - முன்புபோல விளக்கம் பெறுவாய்.

சொற்ற வாசகங் கேட்டலு முவகையிற் றுளைந்தே
அற்ற மேதுமி லுகைக்கா ரோணம்வந் தடைந்தான்
உற்ற வானவர் பலர்குழீஇக் குடைவது முணர்ந்து
வெற்ற தேவபுட் கரணியா தெனவினு யினனே. 79

கு - ரை: துளைந்து - முழுகி. அற்றம் ஏதும் இல்: அற்றம் - சோர்வு, துன்பம். குழீஇ - குழுமி. குடைவது - நீராடுவது. தேவ புட்கரணி - தேவ தீர்த்தம்.

ஈது தானென நிகழ்த்தின ருவகைமிக் கெய்திச்
சாது வானவ ரவரொடு மத்தடம் படிந்தான்
காது தீவினை வேரொடுங் கருகிய துடனே
ஓது முன்னையி னுருப்பொலிந் தெழுந்தன னுவந்தான். 80

கு - ரை: சாது வானவர் - சாதுக்களாகிய தேவர். காது தீவினை - வருத்திய கொடிய பாவம். உரு பொலிந்து - வடிவு நன்ருக விளங்கி. உவந்தான் - மகிழ்ந்தான்.

வெய்ய பாதக முழுகுமுன் விடுபடப் போக்கி
ஐய முன்னையிற் பொலிவுநன் கருளிய தென்னில்
வைய மெங்கணு நாடினு மிதுபொரூஉம் வாவி
செய்ய வாயினு யுண்டுகொல் செப்புவ தினியென். 81

கு - ரை: வெய்ய பாதகம் - குருபன்னியைப் புணர்ந்த பாவம். முழுகுமுன் - முழுகியவுடனே. ஐய - அழகியதாக. வையம் - நிலவுலகம். பொரூஉம் - ஒக்கும். செய்ய வாயினுய் - சிவந்த வாயையுடைய உமையே.

அரவி னுல்விடு பட்டவ னுெத்தலங் காலோன்
புரவி னுலுயர் நந்திருக் கோயிலுட் புகுந்தே
இரவி னுற்புரி கண்டத்தெம் மிணையடி யிறைஞ்சி
உரவி னுற்பொலி நின்னையும் வழுத்தினு னுமையே. 82

கு - ரை: அரவினல் - இராகுவினல் (கரும்பாம்பு). ஒத்து அலங்கு ஆலோன்: ஆலோன் - சந்திரன். இரவினுற் புரிகண்டம் - கறுத்த கண்டம். உரவு - ஞானம்.

திருந்து நங்குறிப் பதிட்டையு மினிதுறச் செய்து
பொருந்து பூசனை யொருமதி செய்தனன் போற்றத்
திருந்து பல்வரங் களுந்தந்து தேவரோ டளாவி
அருந்து வேள்வியிற் பாகமும் பெறும்படி யளித்தோம். 83

கு - ரை : நம்குறிப் பதிட்டை - சிவலிங்கப் பிரதிட்டை. ஒருமதி - ஒருமாதம்; ஒப்பற்ற சந்திரன் எனப் பொருள்படுவதும் காண்க. அளாவி - கலந்து. வேள்வியிற் பாகம் - அவிப்பாகம்: அவி - தேவருணவு.

விரைசெ யாம்பல்கண் முகமலர்ந் திடவெழும் வீபத்
துரைசெய் முன்னையிற் சிறப்படைந் துவப்புறப் பணிந்து
புரைசெய் நாமருள் விடையொடுந் தன்பதம் புகுந்து
கரைசெய் தன்செயல் புரிந்துவாழ்ந் திருந்தனன் களித்தே. 84

கு - ரை : விரைசெய் ஆம்பல்கள் - மணம்வீசும் குமுதமலர்கள். வீபத்து - சந்திரன். நாம் அருளிய விடை என்க. கரைசெய் - நியமித்த.

மன்னு தேவதீர்த் தப்பெரு மான்மியம் பகரின்
நன்னு தாலள விட்டெவர் நவின்றிட வல்லார்
பன்னு தேனினு மமுதினு நனிசுவை படுமா(று)
இன்னு மொன்றெடுத் தியம்புது மினிதுகேட் டிடுதி. 85

கு - ரை : மன்னு - நிலைபெற்ற. பெரு மான்மியம் - பெருஞ்சிறப்பு. நல்நுதால் - நல்ல நெற்றியையுடைய உமாதேவியே.

வேறு

மின்னு நாணு மருங்குல் விமலைகேள்
பன்னு மண்ணுல கெல்லாம் பரிப்பவன்
பொன்னு நேரில் குணத்தன் புரூரவா
என்னு நாமத் தரச னிருந்தனன். 86

கு - ரை : மின்னும் நாணும் - மின்னற்கொடியும் வெட்குற. மருங்குல்- இடை. விமலை: விளி. பரிப்பவன் - சுமப்பவன்; காப்பாற்றுவோன் என்க. பொன்னும் நேர் இல் - தேவகுருவும் ஒப்பாகாத.

மதிக்கு லஞ்செய் தவத்துற வந்தவன்
விதிக்கொ டுந்திக்கு மேவும் புகழினன்
துதிக்கி ரங்குநந் தாடொழு வாழ்க்கையான்
உதிக்கு மன்பி னுயிரினி தோம்புவான். 87

கு - ரை : மதிக்குலம் - சந்திரவங்கிசம். துதிக்கு இரங்கும் - தோத்திரத்துக்கு அருள் செய்யும். அன்பினால் எல்லா உயிர்களையும் பாது காப்பவன் என்க.

அறியு மேன்மை யமைச்சர் புரோகிதர்
செறியுந் தானைத் தலைவர் சிறந்துற
நெறியு மாலென நேர்ந்து தழுவித்தோம்
எறியுஞ் செங்கோ லினிது செலுத்துநாள். 88

கு - ரை: அமைச்சர், புரோகிதர், சேனாபதியர் முதலியோர் சிறப்போடு விளங்க: இவர் ஐம்பெருங் குழுவினர்; ஏனையோர் தூதுவர், சாரணர் என்னுமிவர்கள். "அமைச்சர் புரோகிதர் சேனாபதியர், தவாத் தொழிற் றூதுவர் சாரணர் என்றிவர், பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே" (திவாகரம்). மால் - திருமால். தோம் எறியும் - குற்றத்தைப் போக்கும்.

மீன வார்கடல் சூழ்புவி வேந்தகேள்
ஆன வேட்ட வினையது தாழ்த்தலால்
தான வாரண மாதி தழைத்தெழூஉ
ஈன மாற்றுமென் றூரிறைஞ் சிச்சிலர். 89

கு - ரை: வேந்த - வேந்தனே: விளி. வேட்ட வினை - வேட்டையாடுந் தொழில். தான வாரணம் - யானை. ஈனம் - கேடு.

கேட்ட வேந்தன் கிளந்தது தாழ்த்திடில்
ஊட்ட வாம்பயி ராதி யொழிதரும்
வாட்ட மல்லதென் மன்னுயிர்க் குண்டென
வேட்ட மாடும் விருப்பி னெழுந்தனன். 90

கு - ரை: கிளந்தது - சொல்லிய வேட்டையாடுதல். வாட்டம் - துன்பம். மன்னுயிர் - நிலைபெற்ற குடிமக்கள். வேட்டம் - வேட்டை.

அரையிற் காலுரி யாடை யுடுத்தினன்
விரையக் கச்சுடை வாளொடும் வீக்கினன்
கரையு மெய்யிற் கவசம் புனைந்தனன்
புரையி லாத்தலைச் சாத்தும் பொருத்தினன். 91

கு - ரை: புரூரவன் வேட்டைக்குச் செல்ல ஆயத்தமாய் அதற்குரிய உடைகளை அணிவானாயினன். அரை - இடுப்பு. கால் உரியாடை - 'காற்பங்கு தோலாடை; காலால் கழற்றும் ஆடை. அரையிற் கால் என்பது நயம். உரி - மரவுரி எனலுமாம். கச்சு - அரைப்பட்டிகை. வீக்கினன் - கட்டினன். புரை இல் - குற்றமில்லாத. தலைச்சாத்து - தலையிற் கட்டும் ஒருவகை முண்டாசு.

முதுபெ ரும்பகை யாளர் முடித்தலைக்
கதுமெ னக்குரம் வைத்துயிர் காற்றிடு
வதுக டுப்பின் மறலுங் கொடியகாற்
றதுதி றம்பு மடற்பரி யேறினன். 92

கு - ரை : முதுபெரும் பகையாளர் - மிக்க பெரும் பகைவர். கதும் என - விரைந்து. குரம் - குளம்பு. காற்றிடும் - போக்கும். கடுப்பின் - வேகத்துடன். மறலும் - மாறுபடும். காற்றிடுவது, காற்றது ஆகிய அடற்பரி என்க. அடற்பரி - வலிய குதிரை : அடல் கொல்லுதல் எனினுமாம்.

கூற்றம் பல்லுருக் கொண்டன்ன கொள்கையர்
சீற்ற மின்றியுந் தீயெழ நோக்குவார்
ஏற்ற மிக்க விருந்திறல் வீரர்கள்
ஊற்ற மிக்க வுவகையின் முந்தினர். 93

கு - ரை : கூற்றம் - இயமன். பல் உரு - பல வடிவங்கள். சீற்றம் - கோபம். தீ எழ - நெருப்புச் சிதற. ஏற்றம் - உயர்ச்சி. ஊற்றம் மிக்க - பெருகுதல் மிகுந்த.

காயுஞ் சீற்றமும் போந்தின் கருக்குநேர்
வாயு முள்ளால் வளைதரு தோகையும்
ஏயு ஞாளிக் குலம்பல வீண்டின
தோயும் வார்வலை யாளருந் துன்னினர். 94

கு - ரை : போந்தின் கருக்கு - பனைமட்டையிலுள்ள கூர்மை: பனங் கருக்கு. ஏயும் - பொருந்திய. ஞாளிக்குலம் - நாயின் கூட்டம். ஈண்டின - நெருங்கின.

இதுவரை உள்ள நான்கு பாடல்களாலும் வேட்டைக்குச் செல்லப் புரூரவா தன்னை அலங்கரித்ததும், குதிரை ஏறியதும், வேட்டை வீரர்களும் வேட்டை நாய்களும் தன்னைச் சூழ்ந்துவருவதும் கூறப்பட்டன.

மிடலொ டுங்கலில் வெம்பகை யோருயிர்
அடல்செ யும்படை யாள்கைப் புரூரவா
விடலி லார்தொடர் வீரரெ னப்படும்
கடலொ டும்பெருங் காட்டுட் புகுந்தனன். 95

கு - ரை : மிடல் ஒடுங்கல் இல் - வலிமை நீங்காத.. அடல் செயும் படை - கொல்லும் படைக்கலம். விடல் இலார் - விட்டு நீங்காதவராய். புரூரவா காட்டில் புகுந்தான் என்க.

ஓடியெ றிந்தனர் வாரு மொழுக்கினர்
கடிய வார்வலை சூழவுங் கட்டினர்
துடியெ றிந்து துவன்றிய வேடர்கள்
வெடிகொ ளும்பல் விலங்கு மெழுப்பினர். 96

கு - ரை : ஓடியெறிதல், வார் ஒழுக்கல், சூழ வலைகட்டுதல், துடி யெறிதல் முதலியன வேட்டையாடுவோர் செய்தற்குரியன. ஓடி எறிதல் - கவண் விசுதல். வார் ஒழுக்கல் - வார்களில் சுருக்கு முடியிட்டுத் தொங்க விடுதல். துடி - குறிஞ்சிப்பறை. கடிய வார்வலை - வலிய நீண்ட வலைகள்; தப்பியோடுதலைத் தடுக்க.

சிங்கம் யாளி சினக்குந் தரக்குமா
தங்க வெண்கு தவாவலிச் சல்லியந்
துங்க மான்கருங் கேழற் றொடக்கத்த
வெங்கண் மாக்கள் வெருவி யெழுந்தன. 97

கு - ரை : தரக்கு - புலி. மாதங்கம் - யானை. எண்கு - கரடி. சல்லியம் - முள்ளம்பன்றி. தவா வலி - நீங்காத வலிமை. கருங்கேழல் - கரிய காட்டுப்பன்றி; பெரிய பன்றியுமாம்: கருமை - பெருமை. வெங்கண் மாக்கள் - கொடிய விலங்குகள். வெருவி - அஞ்சி.

கூடிச் சென்று சுரிகையிற் குத்துவார்
நாடிப் பாய்ந்துவை நாந்தகம் வீசுவார்
தேடித் தேடிச் சிலைக்கணை தூற்றுவார்
வாடிச் சோரவிவ் வாறம ராற்றினர். 98

கு - ரை : சுரிகையில் - உடைவாளால். வை நாந்தகம் - கூரிய வாள். சிலைக்கணை - வில்லிற்பூட்டிய அம்புகள்.

வாலி ழந்தன பல்ல வலிநடைக்
காலி ழந்தன பல்ல கலங்கிமெய்த்
தோலி ழந்தன பல்ல துடிதுடித்
தோலி ழந்தன பல்ல வுடன்றரோ. 99

கு - ரை : வலி நடை - பலம் பொருந்தும் செலவு. மெய்த்தோல் - உடம்பிலுள்ள தோல். ஓல் இழந்தன - ஓலமிடுதல் இழந்தன: ஓல் - கடைக் குறை; ஓலம் - அபயக்குரல். பல்ல - பல: விரித்தல் விகாரம். உடன்று - மாறுபட்டு.

துடித்தி டுஞ்சில தோகையெ டுத்துமண்
ணடித்தி டுஞ்சில வாரயி லாதியைக்
கடித்தி டுஞ்சில கானகந் தூளெழ
வெடித்தி டுஞ்சில மிக்கபன் மாக்களுள். 100

கு - ரை: தோகை - வால். வார் அயில் ஆதியை - வார்கள், அம்புகள் முதலியவற்றை; வார் அயில் - நீண்ட அம்பு எனினுமாம். வெடித்திடும் - சத்தமிடும்.

இன்ன வாக வனத்து விலங்கெழூஉப்
பின்ன மாகிப் பெயர்தரு காலையிற்
சொன்ன வார்கழல் தோன்றல் புரூரவா
மன்ன னேர்ந்து வடிக்கணை தூவினன். 101

கு - ரை: எழூஉ - எழுந்து. பின்னம் ஆகி - சிதறி. நேர்ந்து - எதிர்ந்து. வடிக்கணை - கூரிய அம்புகள்.

புலிமு கத்திற் புகுந்தோர் நெடுங்கணை
வலியிற் பின்சென்று வாலடித் தோன்றுவ
மெலிவி லாவிவ் விலங்குக் கிரட்டைவால்
நலியு மாறுற்ற தென்னென நாடவே. 102

கு - ரை: புலியினது முகத்திலே தைத்த நீண்ட அம்பு ஒன்று ஊடுருவி வாலின் பக்கமாகச் சென்று தோன்றியது; அது இந்த விலங்குக்கு இரட்டை வால் உள்ளது என்னகாரணமெனக் காணும்படி இருந்தது. வால் அடி - வாலின் அடியில்.

ஏற்ற யானை முகத்தி லிருகணை
ஏற்ற வுள்ளா னுழைந்தும் வெளியினுந்
தோற்ற நான்கு மருப்புச் சுமந்ததெத்
தோற்ற மென்று துணிதர வாய்வரால். 103

கு - ரை: ஏற்ற யானை - எதிர்த்த யானை. இரு கணை - இரண்டு அம்புகள். அவ்விரண்டு அம்புகளும் முகத்தின் உள்ளே நுழைந்தும் வெளியே தோற்றியும் உள்ள காட்சி நான்கு தந்தங்களை உடையதெனத் தோற்றியது. இது எப்பிறப்பு எனத் துணிய ஆராய்ந்தனர்.

மடங்க லேயென வல்விரைந் தேகியோர்
முடங்கன் மார்புகி ழித்ததோர் வன்கணை
மடங்கல் கூடா வலிசா லொருநர
மடங்கல் கீண்ட வலியபுண் மானவே. 104

கு - ரை : மடங்கல் மார்பு - சிங்கத்தின் மார்பு. வன் கணை - வலிய அம்பு. மடங்கல் கூடா - வளைதல் இல்லாத; பின்னிடாத. நரமடங்கல் - நரசிங்கம். கீண்ட வலிய புண்மான - கிழித்த பெரிய புண்ணை ஒத்தது. மடங்கலே - சிங்கமோ: ஏகாரம் ஓகாரப் பொருளில் வந்தது.

கணையொன் றுய்ப்பக் கடுகிம திக்கண்வாழ்
துணைய ணைந்திட மேற்செலுஞ் சூழ்ச்சிபோல்
இணையும் வேகத் தெழுந்துமேற் றுவுவ
பிணையொ டும்பயில் பெட்பில் குரங்கமே. 105

கு - ரை : உய்ப்ப - செலுத்த. கடுகி - விரைந்து. மதிக்கண் வாழ் துணை - சந்திரனிடத்துள்ள துணையாகிய மான்: மதிக்கறையை மான் எனல் மரபு. சூழ்ச்சி - உபாயம். பிணை - பெண்மான். குரங்கம் - மான். குரங்கம் வேகத்தெழுந்து மேல் தாவுவ. பெட்பு - விருப்பம்.

மோக வாண்முனிந் தாலு முனிவுவிண்
போக மேன்மயிர்க் கேடகம் போர்த்தென
ஆக நீண்மயி ராருங் குடாவடி
வேக மாறும் விடுகணை யொன்றனல். 106

கு - ரை : வாள் முனிந்தாலும் - வாட்படையைக் கோபத்தோடு எறிந்தாலும்: முனிவு - கோபம். விண் போக - வீணாக ஒழிய. மயிர்க்கேடகம் - மயிர் நிறைந்த பரிசை வட்டம். பாணங்கள் தைப்பினும் அழிவிலாதிருத்தற்கு மயிருள்ள தோலினுற்செய்வதுபற்றி 'மயிர்க்கேடகம்' என்றார். ஆகம் - உடம்பு. ஆரும் - நிறைந்துள்ள. குடாவடி - கரடி. வேகம் ஆறும் - வேகம் கெடும்; மாறும் எனினுமாம்.

கோடி ழந்தன குஞ்சர மார்பகத்
தோடி ழந்தன வேங்கை யுயிர்திறற்
பாடி ழந்தன பஞ்சா னனம்பெருங்
காடி ழந்தன மொய்த்த கவரியே. 107

கு - ரை : கோடு - தந்தம். குஞ்சரம் - யானை. திறற்பாடு - வலியோடு கூடிய பெருமை. பஞ்சானனம் - சிங்கம். கவரி - கவரிமான்; "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா" ஆகலின், மொய்த்த கவரி என்றார் மயிர்முழுதும் நீத்தமைபற்றி.

வாளி யோயினும் வைநுதி வேல்விடு
மீளி யோயினும் வெவ்விய கட்கமாம்
ஆளி யோயினு மாங்காங்குப் பற்றிடு
ஞாளி யோய்வில தாயின நாடினே. 108

கு - ரை : வாளி - அம்புகள். வை நுதி வேல் - கூரிய நுனியுள்ள வேற்படை. மீளி - வீரன். கட்கம் - வாள். ஞாளி - வேட்டைநாய்கள்.

சூல டைந்தபி ணுவைத் தொலைத்திலான்
மால டைந்த பறழும் வதைத்திலான்
ஓல டைந்த வுறுசின மாக்களே
வேல டைந்த விருந்தென்று நூறுவான். 109

கு - ரை : வேட்டையாடுதலினும் சில மரபு பிறழாமை கூறப்படுகிறது. சூல் - கருப்பம். பிணு - பெண்மான். பறழ் - குட்டி. 'பறழ் என்னும் இளமைப் பெயர் குரங்கிற்கு வந்தது' என்பர் (தொல் - மரபு - 7, பேர்). "கருவிரன் மந்திக் கல்லா வன்பறழ்" (ஐங்-272). உறு சின மாக்கள் - மிக்க கோபத்தை யுடைய விலங்குகள். விருந்து - புதிய உணவு. நூறுவான் - அழிப்பான்.

மேய வித்திறம் வேட்டை வினைமுடித்
தாய மன்ன னடுபரி மேற்கொளாப்
பாய வெம்பசி பற்றி வருத்தலால்
தோய மா நகர் துன்ன முடுக்கினுன். 110

கு - ரை : வேட்டைவினை - வேட்டைத்தொழில். பரி மேற் கொளா - குதிரையின் மேலேறி. பாய - பரவிய. தோய் அ மாநகர் துன்ன - தான் வசிக்கும் அந்தச் சிறந்த நகரத்தை அடைய. முடுக்கினுன் - வேகமாகச் செலுத்தினுன்.

பரிவி ரைந்து படரு நடவையோர்
விரிகி ளைத்தரு நீழலோர் வேதியன்
சரிவ ருத்தந் தணிப்பக் கிடந்தனன்
புரிநி றத்திற் புரவி மிதித்ததே. 111

கு - ரை : நடவை - நடக்கும் வழி. சரி வருத்தம் - நடந்துவந்த இளைப்பு: சரித்தல் - நடத்தல். கிடந்தனன் - படுத்திருந்தான். புரி நிறத்தில் - பூணூல் விளங்கும் மார்பிலே: புரி - முப்புரிநூல். நிறம் - மார்பு. புரவி - குதிரை.

உளைவ யப்பரி யோரடி வைத்தலும்
வளைம ருப்பெரு மைப்பக டூர்பவன்
விளைந யப்புற மேவு நகர்செல்வான்
இளைதி றத்தின னீரடி வைத்தனன். 112

கு - ரை : உளை வயப் பரி - பிடரிமயிரையுடைய வெற்றிபொருந்தும் குதிரை. வளை மருப்பு - வளைந்த கொம்பு. எருமைப் பகடு - எருமைக்கிடா.

ஊர்பவன் - ஏறிச்செலுத்துபவனுகிய இயமன். நயப்புற மேவும் நகர் - இயம லோகம். இளை திறத்தினன் - இளைப்பாற வந்த வேதியன். பரி ஓரடி வைத்தது, திறத்தினன் ஈரடிவைத்தனன் என்றது நயம்.

கண்ட மன்னன் கலங்கிக் கவன்றனன்
மண்ட வந்தது வன்பிர மக்கொலை
எண்ட வாவிதற் கென்செய லென்றுசீர்
கொண்ட மாதவர் கூட்டங் குறுகுவான். 113

கு - ரை : கவன்றனன் - கவலையடைந்தான். பிரமக்கொலை - பிரம கத்தி தோஷம். எண் தவா இதற்கு - நினைத்தற்கு முடியாத இப்பாவத்துக்கு. மாதவர் - தவசிரேட்டர்.

அண்மை யோர்பொழி லாங்கு வசித்திடும்
வெண்மை தீர்விசு வாமித் திரன்முதல்
ஒண்மை யோர்திர ளுற்றுப் பணிந்தனன்
எண்மை யோவ நடந்த தியம்பினுன். 114

கு - ரை : அண்மை ஓர் பொழில் - சமீபத்திலுள்ளதாகிய ஒருசோலை யில். வெண்மை தீர் - அறியாமை நீங்கிய: எனவே அறிவான்மிக்க என்றபடி. ஒண்மையோர் - அறிவுடையோர்: ஞானிகள். எண்மை ஓவ - எளிமைநீங்க; எளிமையாவது பிரமக்கொலைப் பாவம்.

கேட்ட மாதவர் கேழ்கிளர் வேந்தநின்
வாட்ட மோவு மறையவ னுக்கிடு
காட்ட கத்துக் கடனுரி யோர்க்கொடு
நாட்ட மேவ நடத்துதி நன்றரோ. 115

கு - ரை : கேழ் கிளர் வேந்த - அறிவுடைய அரசனே: கேழ் - ஒப்பு எனினுமாம். இடு காட்டகத்துக் கடன் - மயானத்திலே செய்யும் சடங்கு களை. நாட்டம் மேவ - கண்ணுங் கருத்துமாக. நன்று - உலோபகுண மின்றி.

பின்னர் நீபரி மேத மகம்பிணை
நன்னர் மேவ நடத்திடு வாயெனின்
மன்ன ரேறனை யாய்வந்த தீங்கொடு
முன்ன ராற்றிய தீங்கு முருங்குமால். 116

கு - ரை : பரிமேத மகம் - அசுவமேதயாகம். மன்னர் ஏறு - அரசருள் ஆண்சிங்கம். முருங்கும் - அழியும்.

என்று கூற விறைஞ்சின னேகினுன்
பொன்று வேதிய னுக்குப் புரிகடன்
நன்று செய்நரைக் கொண்டினி தாற்றினுன்
ஒன்று மாமகஞ் செய்வதற் குன்னினுன். 117

கு - ரை : பொன்று வேதியன் - இறந்த அந்தணன். புரி கடன் - செய்யவேண்டிய ஈமக்கடன். நன்று செய்நர் - நன்ருகச் செய்வோர். மாமகம் - அசுவமேதம்.

அளவி லாமறை யந்தண ரைத்தழீஇ
அளவி லாச்செம்பொன் வாரி யளித்தனன்
அளவி லாவற மாக்கும் பரிமகம்
அளவி லாப்புக ழானினி தாற்றினுன். 118

கு - ரை : மறை அந்தணர் - வேதப்பிராமணர். தழீஇ - தழுவிக் கொண்டு; கலந்து ஆலோசித்து. அளவிலா அறம் - எல்லேயில்லாத தருமங்கள். பரி மகம் - அசுவமேதம். புகழான் - புரூரவா.

அதுபு ரிந்து மகன்றில தாய்ப்பழி
கதுவி நீழலிற் பற்றக் கலங்கியே
எதுசெய் துய்வ லினியென வேதங்கள்
சதுவு மோர்ந்த தவுமியற் சார்ந்தனன். 119

கு - ரை : கதுவி - பற்றிக்கொண்டு. நீழலில் பற்ற - நிழல்போல் தொடர்ந்துவர. உய்வல் - உய்வேன். வேதங்கள் சதுவும் - வேதங்கள் நான்கனேயும். ஓர்ந்த - ஆராய்ந்துணர்ந்த. தவுமியன் - தவுமிய முனிவர்.

முன்ன டந்தத னைத்து மொழிதலும்
அன்ன மாதவ னுள்ளத்தி னுய்ந்தனன்
பின்ன மின்றிப் பிறங்குபன் னூல்களுஞ்
சொன்ன தீர்த்தங்கள் யாவுந் துனேயென்ருன். 120

கு - ரை : உள்ளத்தின் ஆய்ந்தனன் - மனத்தால் ஆராய்ந்தான். பின்னம் இன்றி - குறைவில்லாமல். பிறங்கு - விளங்கும். துனே - முழுகுக.

தூய கங்கை முதற்பல தோயமும்
ஆய வன்பி னணேந்தணேந் தாடினுன்
பாய செம்பொன் முற்ருனமும் பண்ணினுன்
தீய தாயது தீர்தரக் கண்டிலான். 121

கு - ரை : பலதோயம் - பலதீர்த்தங்கள். ஆய அன்பின் அணைந்து - பொருந்திய அன்போடு சென்று. தீயது ஆயது - தீமையுடையதாகிய பிரமக்கொலைப் பாவம்.

கிட்டும் வாசம ராற்றற் கெனக்கெழீஇ
ஒட்டுங் கோபித் துடன்றெழு மார்பகந்
தட்டும் போக்குத் தடுக்குந் தடம்புயங்
கொட்டு மார்க்குங் குதிக்கும தீர்க்குமே. 122

கு - ரை : வா சமர் ஆற்றற்கு - போர் செய்தற்கு வா. ஓட்டும் - நெருங்கும். உடன்று - மாறுபட்டு. போக்குத் தடுக்கும் - போவதைத் தடைசெய்யும். ஆர்க்கும் - ஆரவாரிக்கும். அதிர்க்கும் - நடுங்கச்செய்யும்.

பரஞ்சோதி திருவிளையாடல் இந்திரன் பழிதீர்த்த படலம், 59-வது செய்யுளும்; பேரூர்ப்புராணம் கரிகாற் சோழன் கொலைப்பழி: 23, 24. செய்யுளும் ஒப்புநோக்குக.

பெயர்வி லாத பிரமகத் திக்கெவன்
செயலெ னுவுளந் தேம்பிக் கவுதமி
உயர்ந திக்கரை யுற்ற கவுதமன்
அயர்வில் பாத மடைந்தன ணண்ணலே. 123

கு - ரை : பெயர்வு இலாத - நீங்காத. கவுதமி - கோதாவரி. கவுதமன் - கௌதம முனிவர்.

அன்ன மாதவற் கோதி யழுதனன்
என்ன பாதக மேனுமுள் ளெண்ணலை
இன்ன றீருங் கழுவா யியம்புதும்
மன்ன வென்று வகுத்துரை யாடுவான். 124

கு - ரை : என்ன பாதகமேனும் - எப்படிப்பட்ட பாதகமாயினும். இன்னல் தீரும் கழுவாய் - துன்பம் நீங்கும் பிராயச்சித்தம்.

செறிவ ளங்கொடேன் றேசத்துள் யாவரும்
மறிபு லிக்கொடி யான்றிரு நாட்டிடைக்
குறிகொள் கீழ்கடல் வேலையிற் கோலமார்
நெறியி னின்று நிலவுங்கா ரோணமே. 125

கு - ரை : புலிக்கொடியான் - சோழ அரசன். கீழ் கடல் வேலையில் - கிழக்குக் கடற்கரையில். காரோணம் - காரோணத்தலம்.

கேடு போக்கிடுங் கேத்திர ராசமென்
ருடு நாமத் தொடுமத் தலமுறும்
பாடு சாலதி னுள்ளது பாரெலாம்
நாடு வானவ தீர்த்த நராதிப. 126

கு - ரை : கேடு போக்கிடும் - கெடுதிகளையெல்லாம் அழியச் செய்யும். கேத்திர ராசம் என்று ஆடும் : ஆடும் - சொல்லும். பாடு சால் - கீர்த்தி மிக்க. வானவ தீர்த்தம் - தேவ தீர்த்தம். நராதிப - அரசனே: விளி.

அந்தத் தீர்த்தத் தடைந்து முழுகுறின்
எந்தப் பாதக முங்கழிந் தேகிடும்
அந்தத் தானத் தமரிலிங் கந்தொழின்
எந்தப் பேறு மெளிதிற்கை கூடுமே. 127

கு - ரை : முழுகுறின் - முழுகினுல். கழிந்து ஏகிடும் - நீங்கிப்போம். அந்தத் தானத்து - அவ்விடத்தில். பேறு - அடையத்தகுவன. எந்தப் பேறும் - இம்மை மறுமைப் பேறுகளும் வீடுபேறும்.

அடையின் னேயென் றரசனை யேவினுன்
மிடையு மோகை துளும்பிட வேந்தனுங்
கடையு ருத்திருக் காரோணத் தெய்திவிண்
குடையுந் தெய்வப் புனல்குடைந் தானரோ. 128

கு - ரை : அடை இன்னே - இப்பொழுதே செல்க. ஓகை=உவகை - மகிழ்ச்சி. கடையுரு - அழிதலில்லாத. விண் - விண்ணுலகத்தோர். தெய்வப் புனல் - தேவதீர்த்தம்.

குடைந்த போதே கொடும்பழி மாய்ந்தது
மிடைந்த தேசின் விளங்கி யெழுந்தனன்
அடைந்த வோகைய னுய்நம் மெதிரடைந்
துடைந்த நெஞ்சி னுருகித் தொழுதனன். 129

கு - ரை : குடைந்தபோதே - மூழ்கிய அப்பொழுதே. மாய்ந்தது - அழிந்தது. கொடும்பழி - கொடிய பிரமகத்திபாவம். தேசின் - ஒளியுடன். நம் எதிர் அடைந்து - நம்முடைய சந்நிதியையடைந்து.

நேய மேமிக நின்னையும் போற்றினுன்
தூய தெய்வச் சுவைப்புனற் றெங்கரை
மேய கும்பத் தலமும் விழைந்துதாழ்ந்
தேய வங்க ணிருந்தன னென்பவே. 130

கு - ரை: நேயம் - அன்பு. தெய்வச் சுவைப் புனல் - தேவதீர்த்தம். கும்பத்தலம் - அமுதகடேசம்.

இதுதெ ரிந்தில னித்தனை நாளெலாம்
முதுகொ டுந்துயர் மூழ்கலுற் றேனந்தோ
எதுவி ரும்பினு மீயுமித் தேமெனுப்
பதும மாதி பலகொடு பூசிப்பான். 131

கு - ரை: இது - இத்தலப் பெருமையை. முது கொடுந்துயர் - முதிர்ந்த கொடுந்துன்பம். இத் தேம் - இத்தலம். பதுமம் ஆதி - தாமரை மலர் முதலியன.

பரவு செம்பொன் பரப்பி யுயர்கருக்
கிரக மோடத்த மண்டபங் கேடிலா
வரனி லாவிய மாமண்ட பம்மெழில்
விரவ வாற்றி நினக்கும் விளைத்தனன். 132

கு - ரை: புரூரவாவின் திருப்பணி கூறப்படும். கருக்கிரகம், அத்த மண்டபம், மகாமண்டபம் முதலியன செய்வித்தான். வரன் நிலாவிய - சிறப்புப் பொருந்திய. எழில் விரவ - அழகுற. நினக்கும் என்றது அம்பிகையை நோக்கி.

மழையு ரிஞ்சு மதிலைந் தெடுத்தனன்
தழைபொற் கோபுரம் பல்ல சமைத்தனன்
விழையுந் தூண்பல மேவிய மண்டபம்
பிழையில் யாவும் பெருக வியற்றினன். 133

கு - ரை: மழை உரிஞ்சும் - மேகம் அளாவும். மதில், கோபுரம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் முதலிய இயற்றுவித்தான்.

அருள்வி ராய வமுத கடேசத்தும்
பொருள்வி ராய பலவும் புரிந்தனன்
தெருள்வி ராயவண் டெய்வப் புனற்குக்கா
மருள்வி ராய படியும் வகுத்தனன். 134

கு - ரை: அமுதகடேசத்திலே பல திருப்பணிகள் செய்வித்தான். தேவதீர்த்தத்துக்குப் படிக்கட்டுகளும் இயற்றுவித்தான்.

விளைநி லங்களு மேதகு சோலையும்
இளைகொ ணந்த வனமு மியைபெருங்
களைய மைந்த கனகப் பணிகளும்
அளையும் பட்டுடை யாதிய பல்லவும். 135

கு - ரை : விளை நிலங்கள், சோலைகள், நந்தவனம் முதலியவற்றையும் ஏற்படுத்தினன். கனகப்பணி - பொன் ஆபரணம், பட்டாடை முதலியவும் வழங்கினன்.

குடைவெண் சாமரை கோணுத தண்டங்கோ
ணடைத ருந்தண்ட மான்றபல் பாத்திரம்
உடைத ராச்செம்பொ னூர்தியு மற்றுநன்
னடைகொள் வேந்த னமக்குற நல்கினன். 136

கு - ரை : குடை, வெண்சாமரை, வளைதடி, வளைவில்லாத நேர்தடி, பலவகைப் பாத்திரங்கள், தேர், மற்றுள்ள வாகனங்கள் முதலியவற்றையும் நமக்குச் சமர்ப்பித்தான்.

அந்த மாதலத் தன்பின் வசிப்பவர்க்
குந்த வேண்டுவ யாவு முதவினன்
நந்த மாரருள் பெற்று நலம்விராய்ப்
பந்த மோவிய பார்த்திப னேகினன். 137

கு - ரை : அத்தலத்திலே வசிக்கும் புண்ணியம் உடையோருக்கு வேண்டிய கொடுத்தான். முடிவில்லாத நம்முடைய பேரருளைப் பெற்றுப் புரூரவா விடைபெற்றுச் சென்றான்.

தேவ தீர்த்தப் பெருமையைச் செப்பினும்
மேவ வின்னும் விளம்பில னேகமாம்
பாவ மற்றதன் பேர்சொலப் பாறிடும்
ஓவ நேரு மொளியிழை மாதராய். 138

கு - ரை : தேவதீர்த்தத்தின் பெருமையை இதுவரை சொன்னோம். பொருந்திய அதன்பேர் சொல்ல எத்தகைய பாவமும் கெடும். பாறிடும் - கெடும். ஓவம் - ஓவியம்.

என்று கூற விறைவி மகிழ்ந்தனள்
நன்று வானவ தீர்த்த நலஞ்சொற்றும்
ஒன்று மாமுனி தீர்த்தத்தி னுண்மையுங்
கன்று சோகங் கழியப் புகலுவாம். 139

கு - ரை : இவ்வாறு சிவபெருமான் சொல்லியருள உமாதேவியார் மகிழ்ந்தனர். தேவதீர்த்தச் சிறப்பைச் சொன்னோம். இனி, முனிதீர்த்தச் சிறப்பும் சொல்லுவோம் என்று கூறியருளினர்.

தேவதீர்த்தப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 764

பன்னிரண்டாவது

முனிதீர்த்தப்படலம்

நலமலி சனற்குமரன் நந்திதன் மலர்ப்பாதம்
புலமுனி தரப்போற்றிப் புகர்தபு முனிதீர்த்த
வலமலி மான்மியமும் வகுத்தருள் என்றிரப்பப்
பலமலி தவத்தனையான் பன்னுவன் உவப்புற்றே. 1

கு - ரை : புலம் மலிதர - அறிவு நிரம்ப. புகர்தபு - குற்றம் நீங்கிய. வலம் மலி - வெற்றி நிறைந்த. மான்மியம் - பெருமை. பலம் மலி தவம் - பயன் நிறைந்த தவம். பன்னுவன் - சொல்லுவான்.

இறையவன் முகநோக்கி ஏழுல கமுமீன்றாள்
மறைமுடி யுணர்வரியாய் வானவ தீர்த்தத்தின்
நிறைபுகழ் கேட்டுவந்தே னிலவுமத் தலத்தின்னும்
முறைபுனல் சிறந்துளதே லருளென உரைசெய்வாள். 2

கு - ரை : ஏழ் உலகமும் ஈன்றாள் - உமாதேவியார். மறைமுடி - வேதசிரசு. சிறந்துளதேல் - பெரும்பயன் விளைப்பதாயின். புனல் - தீர்த்தம்.

பனிமலை வருபாவாய் பதுமகற் பத்திடையுட்
கனிவரு கலிவருதல் காணுபு வசிட்டன்முதல்
முனிவரர் மலர்மகனை முன்னுபு தொழுதேத்திப்
புனிதம துறுதானம் புகல்தவம் செயற்கென்றார். 3

கு - ரை : பனிமலை - இமயமலை. பதுமகற்பம் - பிரமகற்பம். மலர் மகன் - பிரமன். காணுபு - கண்டு. முன்னுபு - முன்னி. புனிதம் அது உறு தானம் - தூயதலம்.

அனையவ னுளத்தெண்ணி ஆர்கலி சூழுலகில்
புனைதமிழ் வளநாட்டுட் பொன்னியின் புனல்பாய்ந்து
நினைவளம் பலவாக்கும் நேரிய னன்னாட்டில்
கனைகடற் கரையுளது கடைதபு காரோணம். 4

கு - ரை : ஆர்கலி - கடல். பொன்னியின் புனல் - காவிரியாற்றுநீர். நேரியன் - சோழன். கடைதபு காரோணம் - இறுதியில்லாத காரோணத் தலம்.

கண்ணரிய பாதாள கங்கையென் றொருதீர்த்தம்
மண்ணரிய சிவபெருமா னன்றமைத் திட்டதது
புண்ணரிய மிகவாக்கும் பொற்புள தத்தலத்தே
நண்ணரிய தது வைகுந் தானமு நவின்றிடுவாம். 5

கு - ரை : கண்ணரிய - மதிக்கப்படும். அமைத்திட்டது, பொற்புளது, நண்ணரியது என்க.

கருதிய காயாரோ கண விலிங் கத்தினுக்கு
நிருதியந் திசைமேவு நிகரிலத் தடம்படிந்து
சுருதிசொல் விதிப்படியவ் விலிங்கத்தைத் தொழுதேத்தி
ஒருதினம் வசித்திடினு முறுபயன் பெரிதாமால். 6

கு - ரை : நிருதியந்திசை - தென்மேற்றிசை. நிகர் இல் - ஒப்பில்லாத. சுருதி - வேதம்.

அத்தல முப்பொழுது மயின்றினி திருப்பாரும்
முத்தலங் களும்புகழ முத்தர்க ளேயாவர்
பித்தல மந்துழலும் பேயர்க ளடைந்தாலும்
கைத்தல வாமலகம் போற்கதி காணுவரே. 7

கு - ரை : முப்பொழுதும் அயின்று - மூன்று வேளைகளினும் புசித்து. முத்தர்கள் - சீவன்முத்தர்கள். பித்து அலமந்து உழலும் பேயர் - பித்துக் கொண்டோரும் சுழன்று திரியும் பேய்பிடித்தோரும். கைத்தல ஆமலகம் - உள்ளங்கை நெல்லிக்கனி. கதி - பயன்.

கண்டவர் சிவலோகங் கண்டவர் காணுது
விண்டவ ருயர்பனைத்தும் விண்டவ ரளறனைத்தும்
கொண்டவர் வசிக்குநசை கொண்டவ ரமுதள்ளி
உண்டவர் தொழப்பொலிவா ருத்தம ரவர்கண்டீர். 8

கு - ரை : கண்டவர் - அந்தத் தலத்தைத் தரிசித்தோர். விண்டவர் - நீங்கினோர். அளறு அனைத்தும் - நரகம் முழுவதும். நசை - விருப்பம். இத்தலத்திலே வசிக்க விருப்புற்றோரும். அமுது அள்ளி உண்டவர் - தேவர். தொழப்பொலிவார் - வணங்கும்படி விளங்குவர். அவர் உத்தமராவார்.

கடுநுகர் காயாரோ கணச்சிவ பெருமானுர்
வடுவகிர்க் கருந்தடங்கண் உமையொடு மகிழ்ந்தமர்ந்து
கொடுவினை மலமாசு குறுகினர் தமக்கொழித்து
நெடுநிலம் புகழின்ப நிரப்புவர் முனிவரர்காள். 9

கு - ரை : கடுநுகர் - ஆலகாலவிடத்தை உண்டருளிய. வடுவகிர் - மாவடுவின் பிளவு. கொடிய வினையும், மலச்சேட்டையுமாகிய குற்றங்களைத் தம்மையடைந்தோருக்கு நீக்கிப் பெரிய நிலவுலகத்திலே புகழையும் இன்பத்தையும் நிறையச்செய்வர். புகழ் இன்பம் - புகழும் இன்பமும்.

சொற்றவத் தலம்புகுந்து தூயவத் தடம்படிந்து
பொற்றநங் காரோணப் புனிதரைக் கைதொழுது
நற்றவ மினிதியற்றி யமருமின் என நளினத்
துற்றவன் விடைகொடுத்தா னுறுவரர் தொழுதெழுந்தார். 10

கு - ரை : தூய அத்தடம் - பரிசுத்தமாகிய அம்முனிதீர்த்தத்தில். பொற்ற - அழகிய. அமருமின் - தங்கியிருங்கள். நளினத்து உற்றவன் - பிரமதேவர். உறுவரர் - மிக்க தவத்தையுடைய முனிவர்கள்.

தொழுதெழு முனிவரெலாந் தூமல ரோனுரைத்த
பழுதறு காரோணப் பதிவயி னுறப்புகுந்து
செழுவளம் பலநோக்கிச் சிந்தையிற் களிப்பெய்தி
உழுவலன் பொடுநிருதித் திசைப்புன லுற்றனரே. 11

கு - ரை : தூமலரோன் - தூய தாமரைத் தவிசுடைய பிரமன். பதிவயின் - பதியினிடத்து. உழுவல் அன்பு - எழுமையும் தொடர்வதாகிய அன்பு. நிருதித் திசைப்புனல் - தென்மேற்குத் திக்கில் உள்ள தீர்த்தம்.

தருப்பைகை யுறக்கோத்துச் சங்கற்பம் புரிவாரும்
விருப்பொடு படிவாரும் வெண்பொடி புனைவாரும்
ஒருப்படு பிதிர்க்கருமம் ஒருங்கவண் புரிவாரும்
அருப்புறச் சூழ்வாரும் ஆயினர் பலரம்மா. 12

கு - ரை : தருப்பை - தருப்பையாற் செய்த பவித்திரம். படிதல் - முழுகுதல். வெண்பொடி - விபூதி. பிதிர்க்கருமம் - பிதிரர்களை நோக்கிச் செய்யும் சிரார்த்தம், தருப்பணம் முதலியன. ஒருங்கு - ஒருசேர. அவண் - அவ்விடத்தில்.

அதிசய மிகவிளைய அன்னதுந் தெரிந்தாராய்
மதிமுனி வரரெல்லா மறைமுதற் கலையுரைக்கும்
விதிகொடு படிந்தாடி வெள்ளிய நீறணிந்து
துதிசெய்கண் மணிபூண்டைந் தெழுத்துமெண் ணினர்
[துணிந்தே. 13

கு - ரை : அதிசயம் - ஆச்சரியம். மறைமுதற் கலை - வேத முதலிய நூல்கள். நீறு, கண்மணி, ஐந்தெழுத்து முதலியன சைவ சமயிகட்குரியன. எண்ணினர் - கணித்தனர்; ஈண்டு எண்ணுதல் அறிவாற் கணித்தலாம்.

நமதருட் குறிமுன்பு நண்ணினர் தொழுதேத்தி
விமலம துறநினையு மிகுவிருப் பொடும்போற்றி
அமுதக டேசத்து மணைந்தனர் சூழ்ந்திறைஞ்சிக்
குமுதமென் மலர்செறியப் புனற்கரை குறுகினரால். 14

கு-ரை: நமது அருட் குறி - சிவலிங்க மூர்த்தி. விமலமது உற - பரிசுத்தம் பொருந்த. சூழ்ந்து இறைஞ்சி - வலம் வந்து வணங்கி. செறி அப் புனல் - நெருங்கிய அத்தீர்த்தம்.

சாலைகள் பலவமைத்துத் தவவசிட் டன்பிருகு
மாலையில் திரணவிந்து மார்க்கண்டன் மனுத்தக்கன்
காலவன் தீர்க்கபதன் கௌதமன் கற்கனறம்
போலமர் சதானந்தன் புலகன்கண் ணுவன்குசுரு. 15

அத்திரி ஆங்கீ ரசன்றவு மியன்விசுவா
மித்திரன் வாதாசி வாயுபோ சனன்மிளிர
கத்தியன் முதலானோர் கணக்கிலர் கலைகற்கும்
புத்திரர் தம்மோடும் பொருந்தின ராவயினே. 16

கு-ரை: சாலைகள் - தழைக் குடிசைகள் (பர்ணசாலை). இவ்விரண்டு செய்யுட்களும் அங்கே தங்கிய முனிவர்களின் பெயர்களைக் கூறுவன. பெரும்பாலும் அடைமொழியின்றியே முனிவர் பெயர் வந்தன காண்க. ஆவயின் - அவ்விடத்து.

கலைநவில் பாதாள கங்கையென் பெயர்த்தீர்த்தம்
மலைவற வன்றுமுதல் மாமுனி தீர்த்தமெனத்
தலையமை பெயர்பெற்ற தத்தடம் படிவார்கள்
தொலைவரும் பாவமெலாந் தொலைத்துயர் புறலுண்மை. 17

கு-ரை: பாதாள கங்கை என்னும் தீர்த்தம் மாமுனி தீர்த்தமென வழங்கலாயிற்று. தொலைவு அரும் - நீங்குதற்கரிய. உயர்பு உறல் - மேன்மையடைதல்.

ஆயவத் தடப்புனரேய்ந் தமர்தரு பெருஞ்சிறப்பால்
பாயவைம் பொறியடக்கிப் பழமல வேர்களைந்து
தூயநம் மருள்வாய்ந்து சுந்தரப் பேரின்பம்
மேயவ ராயுவந்தார் வேண்டுவ தினியென்னே. 18

கு-ரை: அத்தீர்த்தத்திலே முழுகி அங்கே வசிக்கும் மிக்க சிறப்பால் ஐம்பொறிகளையும் அடக்கி, பழமையாகவுள்ள ஆணவமலத்தின் வேரைக்

களைந்து, நம்முடைய திருவருளையும்பெற்று, அழகிய பேரின்பம் துய்ப்பாராய் மகிழ்ந்திருந்தனர். அவர்கட்கு இனி வேண்டுவது யாதென்க.

வணிகர்தம் குலத்துதித்தான் மடமுருக் கொண்டனையான்
கணிதமில் பெரும்பாதகக்கொரு குழிசியனுன்
அணியிழை மடவார்க்கே யாட்படும் பெருநோன்பில்
திணிமனத் தானொருவன் தேவலன் எனும்பெயரான். 19

கு - ரை: வணிகர் குலத்திலே தோன்றியவனும், அறியாமையே உருக்கொண்டவனும், அளவில்லாத பெரிய பாதகங்களுக்கு ஒரு பாத்திரமாயுள்ளவனும், பெண்கள் ஆசை மிக்கு அவர்களுக்கே அடிமைத்திறம் செய்து திரிதலே விரதமாய்க் கொண்டவனும் ஆகிய வன்மை பொருந்திய மனம் உடையவன் ஒருவன்; அவன் தேவலன் என்னும் பெயருடையவன். நோன்பு - விரதம். குழிசி - பானை. மடம் - அறியாமை.

வேதநிந் தனைபுரிவான் ஆகமம் விளம்பிடினும்
போதநிந் தனைபுரிவான் புன்மையில் வைதிகரென்(று)
ஓதநிந் தனைபுரிவான் உரைத்தவை யன்றியும்பல்
பேதநிந் தனைபுரிவான் பித்தரின் உழிதருவான். 20

கு - ரை: அவன் வேதநிந்தனை, சிவாகம நிந்தனை, வைதிகர் நிந்தனை முதலிய பலவகைப்பட்ட நிந்தனைகளையும் செய்துகொண்டு பித்துடையோர் போலத் திரிவானுயினன். போத - மிகுதியாக. உழிதரல் - திரிதல்.

நீறுகண் மணிபூண்டு நேர்வருந் திருவினரைச்
சீறுபு முடுக்கிடுவா னிந்தையுஞ் செப்பிடுவான்
பேறுசெய் நீராடல் பிறங்கநங் குறிகாண்டல்
காறுமொன் றருந்தாரைக் கலப்பவ ரையுங்கடுப்பான். 21

கு - ரை: திருவினர் - செல்வர்கள். சீறுபு - கோபித்து. முடுக்கிடுவான் - செலுத்துவான். கலப்பவரையும் - இணங்குவோரையும். கடுப்பான் - கோபிப்பான்.

பரதிர வியங்கவர்வான் பழிபா வங்கருதான்
பரமட வார்ப்புணர்வான் பாதகம் புரிவாரே
பரமெனப் புகழ்ந்திடுவான் பரரிடுக் கண்படுதல்
பரவுறக் கண்டேகண் படைகொளு நியதியினுன். 22

கு - ரை: பரதிரவியம் - பிறர்பொருள். பரமடவார் - பிறன் மனைவியர். பரம் - மேலானவர். பரர் - பிறர். இடுக்கண் - துன்பம். கண்படை - தூக்கம். நியதி - நியமம்.

இழிகுலத் துதித்தாரும் இழிதொழில் புரிவாரும்
பழிவரல் கருதாதூன் பற்றினர் நுகர்வாரும்
பிழியுறக் குடிப்பாரும் பெண்களைப் புணர்ப்பாரும்
கழிமகிழ் கொளத்தழுவிக் கலந்தமர் வாழ்க்கையினன். 23

கு - ரை : ஊன் - மாமிசம். கழி மகிழ் கொள - மிக மகிழ்ச்சியடைய.

தண்மையும் பொறுமையுநற் றவமுடை யார்க்குதவும்
வண்மையுங் கண்ணோட்டம் ஆண்மையும் வருவதுணர்
நுண்மையும் அறம்புரியு நோன்மையு மேலாய
உண்மையு மவனிருந்த ஊரினு மில்லைமாதோ. 24

கு - ரை : தண்மை - குளிர்ந்த தன்மை, அன்பு. கண்ணோட்டம் - தாட்சணியம். நுண்மை - நுட்பபுத்தி. நோன்மை - வலிமை. இருந்த ஊரினுமில்லையாகவே அவன்பால் சிறிதுமில்லை என்றபடியாம்.

கொடியவன் இவனோடுங் கூடுதற் கஞ்சினள்போல்
நெடியசு குணமனைவி நீத்தன ளுயிரப்பால்
கடியமை புதல்வர்களுங் கழிந்தனர் தனியாகிப்
படியுழி தரலுற்றான் பாதகத் தேவலனே. 25

கு - ரை : கொடியவனாகிய இவனோடும். உயிர் நீத்தனள் - உயிர் துறந்தாள். கடி அமை புதல்வர் - பாதுகாத்தற்கமைந்த புத்திரர். படி - பூமியில். உழிதரல் - திரிதல்.

தீயினும் வருத்துமிடி செறிந்தலைத் திடப்புழுத்த
நாயினுங் கடைப்பட்டு நாட்டுழி தருகாலை
நோயினுங் கோட்பட்டு நோதக வொருங்குமிகப்
பேயினு முலைகின்றான் பேதைமைத் தொடக்குண்டான். 26

கு - ரை : தீயினும் வருத்தும் மிடி - நெருப்பைவிடப் பற்றித் தீயச் செய்யும் தரித்திரம். புழுத்த நாயினும் கடைப்பட்டு என்றது மிக இழிவடைந்து பிறர் காணவும் கூசி வெறுக்குமாறு என்க. உழிதருகாலை - திரியும் காலத்து. கோட்பட்டு - கொள்ளப்பட்டு. நோதக - வருந்த. உலைகின்றான் - வருந்தி அலைவான். பேதைமை - அறியாமை.

உடம்பிடை நெய்த்தோர்சீ யொழுகுறு புண்ணுகி
விடம்படு வாய்முழுது மிகக்கிரு மிகள்கெண்ட
இடம்படு காசமுத லெத்தனை யோபிணிகள்
மடம்படு மவற்குற்ற வருத்திடும் பசிப்பிணியும். 27

கு - ரை : நெய்த்தோர் - குருதி. கிருமிகள் கெண்ட - புழுக்கள் நெளிய. மடம்படு - அறியாமை மிக்க. உற்ற - பொருந்தின. பசிப்பிணி - பசிநோய்.

ஓவென அலறிடுவா னுளமுலைந் திரங்கிடுவான்
ஆவெனக் கரைதருவான் அடரும்வெம் பிணியென்பான்
நோவென இரங்காமே நோக்கமுஞ் செய்யாமே
போவெனப் புகன்றமையே புலைப்பிணி யாய்த்தென்பான். 28

கு - ரை : உளம் உலைந்து - மனம் வருந்தி. அடரும் - வருத்தும், கொல்லும். பிறர் துன்பத்துக்கு இரங்காமையும் கண்ணெடுத்துப் பாராமையும் போ எனச் சொல்லி வெருட்டினமையுமே இப்போது எனக்குத் தீய பிணியாய் வந்து பற்றியது என்பான்.

உடம்பெழு முடைநாற்றம் யோசனை வீசுதலால்
இடம்படு மறுகிடத்து மெதிர்ப்படி னெதிர்கண்டோர்
திடம்பட வாயாமஞ் செயலென நாசிபுதைத்(து)
அடம்படு கயமகனே அகலக லெனக்கழிவான். 29

கு - ரை : முடை நாற்றம் - கெட்ட நாற்றம். மறுகு - தெரு. ஆயாமம் செயல் என - பிராணாயாமம் செய்தல்போல: ஆயாமம் - மூச்சை அடக்குதல். அடம்படு கய மகன் - தீமைபொருந்தும் கீழ்மகன். அகல் அகல் என - நீங்குக நீங்குக என்று சொல்ல.

19வது பாடல் முதல் இப்பாடல்காறும் தீவினை செய்வோர் நிலையும் அதனாற்பெறும் பயனும் விரிவாகக்கூறி மக்களை நல்வழிப்படுத்துவனவாதல் காண்க.

இன்னண முழிதருவோன் இயன்றமுற் பவநலத்தால்
கன்னவின் மதில்புடைசூழ் காமரு காரோணத்(து)
உன்னரு முனிதீர்த்தத் துற்றன னொருநாளப்
பொன்னவிர் தடங்குடையும் புண்ணியர் பலருள்ளும். 30

கு - ரை : இன்னணம் - இவ்வாறு. உழிதருவோன் - திரிந்து வருந்துபவன். முற்பவநலத்தால்-முற்பிறப்பிலே செய்தநன்மை வந்து கூடுதலால். ஒரு நாள் முனிதீர்த்தத்து வந்தடைந்தான். குடையும் - மூழ்கும்.

யாவரும் புகழ்மகதி யாழ்முனி வரன்கண்டான்
மேவரு மாபாவி மேவிய தென்னையெனத்
தாவருஞ் சினங்கொண்டு தகைந்திவ ணடைந்தனையார்
ஓவரும் பழிபூண்டாய் உரையெனத் தொழுதெழுந்து. 31

கு - ரை : மகதியாழ் முனிவரன் - நாரதமுனிவர். மேவியது என்னை - இங்கே வருதற்குக் காரணமென்ன. தா வரும் - போக்குதற்கரிய. ஓவரும் பழி - நீங்குவதற்கரிய பழி.

ஆயத னுற்பவமும் ஆற்றிய தீவினையும்
மேயவில் லொடுபுதல்வர் வீந்தது மிலம்பாடு
பாயதும் பல்பிணிக்கோட் பட்டது நோதகவாம்
தீயது மெடுத்தோதித் தீரென வழுதனனல். 32

கு - ரை : தன் உற்பவம் - தன்னுடைய பிறப்பு. இல் - இல்லாள். வீந்ததும் - இறந்தமையும். இலம்பாடு - தரித்திரம். கோட்பட்டதும் - கொள்ளப்பட்டமையும். நோதகவு - நொந்துகொள்ளத்தக்க வருத்தம். தீர் - போக்கியருள்க.

முனிவரன் முனியானும் முயங்கிரக் கமும்பொருந்திப்
புனிதமில் பாவீயிப் புனலிடைக் குடையென்றான்
தனியுவப் படைந்தானுய்ச் சாற்றிய படிகுடைந்தான்
நனியமை புண்ணந்நீர் நனைதலுங் காய்ந்தனவே. 33

கு - ரை : முனியானும் - கோபியாதவனும். புனிதம் - பரிசுத்தம். குடை - மூழ்குக. அந்நீர் - முனிதீர்த்த நீரில்.

மெய்யுறு நோய்முழுதும் வீந்தது வீயாத
பொய்யுறு பாதகமும் போகிய தானாலும்
செய்யுறு நிந்தையினல் செறிபழி தீராத
தெய்யுறு முனியிரங்கி யிஃதவற் குரைத்தனனே. 34

கு - ரை : மெய் உறுநோய் - உடம்பில் பற்றிய பிணி; அது தீவினை யால் வந்துற்றதென்க. வீந்தது - கெட்டொழிந்தது. வீயாத பாதகம் - ஒழியாத பெரும்பாவம். நல்லோரை நிந்தித்ததால் உண்டாகிய நிறைந்த பாவம் நீங்காததாம். (20, 21 ஆம் செய்யுளிற் காண்க) "மறை கணிந்தனை சைவ நிந்தனை பொருமனமும்" என்ற பாடல் யாவருடைய சிந்தனைக்கும் உரியதென்க. எய் உறு முனி - அதனை ஆராய்ந்தறிந்த நாரதமுனிவர். இஃது - இச்செய்தியை; கீழ்வருவனவற்றை.

நெறியொழு கியாவரையு நிந்தித்த கீழ்மகனே
முறிவரு மப்பாவ முருங்குதற் கெளிதேயோ
செறிதரு மித்தீர்த்தந் தினந்தொறும் படிந்தெழுந்து
பறிபுரை சடையெம்மாற் பரவுதி யெனப்பணித்தான். 35

கு - ரை : நெறி ஒழுகிய யாவரையும். முறிவரும் - அழிதற்கு அருமை யான. முருங்குதற்கு - போக்குதற்கு. பறிபுரைசடை-பொன்போலும் சிவந்த சடை. எம்மாற் பரவுதி - எம்மானை வணங்குவாயாக.

பெருமுனி சொற்படியே பிறங்குறு முனிதீர்த்தம்
ஒருமையன் புறவாடி ஒள்ளிய காரோணத்(து)
அருமருந் தனந்த மருட்குறி தொழுதேத்திப்
பொருவினி னையும்போற்றும் புலனெறி கைக்கொண்டான். 36

கு - ரை: பிறங்குறு - விளக்கமுறும். ஒருமை அன்பு - ஒன்றுபட்ட அன்பு. அருமருந்து - கிடைத்தற்கரிய அமுதம். பொருஇல் - ஒப்பில்லாத. நினையும் - உன்னையும். புலன்நெறி - புலவொழுக்கம்.

கேத்திரஞ் சூழ்தருவான் கேத்திரத் துள்ளாய
தீர்த்தங்க டோய்ந்தெழுவான் செறியுநம் மடியவரை
ஆர்த்தியிற் பணிந்தெழுவா னரகர வென நடிப்பான்
ஏர்த்தபுண் ணியம்பொலிய வின்னணம் பயின்றிடுவான். 37

கு - ரை: கேத்திரம் - தலம். ஆர்த்தி = அருத்தி - அன்பு. ஏர்த்த - அழகு பொருந்திய. புண்ணியம் - சிவபுண்ணியம். இன்னணம் - இவ்வாறு.

முனிவரை வணங்கிடுவான் முதுகொடும் பாவியிவன்
அனியமென் றெண்ணுமல் அருள்செய வேண்டுமென்பான்
இனியன வாயமொழி யாவர்க்கு மெடுத்துரைப்பான்
தனியமை பத்திமையிற் றலைமைய னுயினனே. 38

கு - ரை: முதுகொடும் பாவி - முற்றிய கொடும்பாவி. அனியம் = அன்னியம் - வேறு. தனி அமை பத்திமை - ஒப்பற்ற பத்தியுடையனுந்தன்மை.

கனிதரு மனத்தமுத கடேசமும் போய்ப்பணிவான்
பனிமலர் செறிதேவ தீர்த்தமும் போய்ப்படிவான்
தனியருள் பெறலின்றி நாயினுங் கடைப்பட்டுத்
துனியமைந் துழன்றதெலாஞ் சூழ்ந்துநெட் டுயிர்த்திடுவான். 39

கு - ரை: துனி அமைந்து - துன்புற்று. சூழ்ந்து - ஆராய்ந்து. நெட்டுயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்.

முழுவலன் புடையோனுய்ப் பத்தியுண் மூழ்கிடுவான்
செழுவிய காரோணத் திருத்தலத் திவ்வாறு
பழுதற வமர்ந்துடலம் பான்மையிற் கழித்துடனே
வழுவினங் கணத்தலைமை மாண்புபெற் றினிதமர்ந்தான். 40

கு - ரை: முழுவல் அன்பு - எழுமையும் தொடர்வதாகிய அன்பு. பழுது அற - குற்றமற. உடலம் - உடம்பு. பான்மையில் கழித்து - ஊழ் முறையாக விட்டு நீக்கி. வழு இல் நம் கணம் - குற்றமில்லாத நம்முடைய கணம்; சிவகணம் என்க.

வேறு

பதியமை யாதார் தங்கள் குலத்துற் பவமுற்றுள்
நுதியமை வேலும் வாளும் மருட்டு நோக்கத்தாள்
மதியெதிர் கூம்பாத் தாமரை போலும் வதனத்தாள்
அதிநல மிக்காள் சுண்டிலை என்ப தவணுமம். 41

கு - ரை : பதி அமையாதார் தங்கள் குலம் - பரத்தையர் குலம். உற்பவம் - பிறப்பு. நுதி - நுனி, கூர்மை. மருட்டும் - மயங்கச் செய்யும். மதி எதிர் - சந்திரனுக்கு நேரே. கூம்பா - குவியாத. வதனத்தாள் - முகத்தினை யுடையாள். நாமம் - பெயர்.

ஆய வனப்புப் பொழிமழை நேரு மைம்பாலாள்
தூய சுதைக்கும் பத்துணை போன்ற சுவர்க்கத்தாள்
நேய மிகுத்தே யாரும் விரும்பு நிதம்பத்தாள்
தேய மணைத்துஞ் செல்லுபு மீளும் செயனெஞ்சாள். 42

கு - ரை : வனப்பு - அழகு. மழைநேரும் - மேகத்தை யொத்த. ஐம்பால் - கூந்தல். சுதைக்கும்பம் - அமுத கலசம். சுவர்க்கம் - நகில்கள். செல்லுபு - சென்று.

மண்டிலை வெள்வேல் மைந்தர்கள் யாரு மனமாழ்கிச்
சுண்டிலை யென்னும் நாம வணங்கே தொடரெம்மைக்
கண்டிலை நெஞ்சிற் கொண்டிலை யாளுங் கடனீதோ
உண்டிலை யும்பா குங்கழி போதிங் குமிழென்பார். 43

கு - ரை : மைந்தர்கள் - காளைப்பருவமுடையோர். மாழ்கி - மயங்கி. அணங்கே - தெய்வப் பெண்ணே. இலையும் பாகும் - வெற்றிலையும் பாக்கும்.

சொன்ன முடிப்பை யவிழ்த்திடு வாரே தொகுவாரே
அன்ன முடிப்பை யவிழ்த்திடு தற்கா மறமுள்ளார்
முன்ன முகந்திடு முத்தம் மீயு முறையோரே
தன்ன முகந்திடு முத்தம் மேற்பார் தாமாவார். 44

கு - ரை : சொன்னம்=சுவணம் - பொன். தொகுவார் - கூடுவார். மறம் உள்ளார்: மறம் - பாவம். உள்ளார் - நினையார். முன்னம் - முற்பட. உகந்திடும் - விரும்பும். முன்னம் - குறிப்பு எனினுமாம். முன்னம் உகந்து இடும் முத்தம் எனப் பிரிப்பினும் பொருந்தும், தன்னம் - சிறிது. உகந்து இடு முத்தம் - விருப்புற்றுக் கொடுக்கும் வாய்முத்தம். ஏற்பார் - ஏற்றுக் கொள்ளுபவர்.

பல்லுக் கொவ்வா முல்லை யரும்பும் பனியாந்தீஞ்
சொல்லுக் கொவ்வா தாரமு தும்பொற் சுடர்மேனி
எல்லுக் கொவ்வா மின்ன லனைத்து மெழிலன்னுள்
புல்லுக் கொவ்வா தாலயி ராணி புணர்ப்பம்மா. 45

கு - ரை : பனி - குளிர்ச்சி. ஆர் அமுது - கிடைத்தற்கரிய தேவாமிர்தம். எல் - ஒளி. புல்லுக்கு - புல்லுதலுக்கு; கூடி அணைப்பதற்கு. அயிராணி - இந்திராணி.

கோடலி னுன்மன நேரென யாழ்கைக் கொண்டேறப்
பாடலி னுன்முழ வாதிய சேரும் படிபண்ணி
ஆடலி னுன்மத னுகம நூல்வழு வாகாது
கூடலி னுன்மிகு பொன்பறி செய்துங் குறையோவாள். 46

கு - ரை : கோடலினுல் - கோனுதலினுல். ஏறப்பாடலினுல் - எடுத்துப்பாடுதலினுல். ஆடல் - நடனம் பண்ணல். மதன் ஆகமநூல் - காமநூல். வழு ஆகாது - குற்றப்படாமல். பொன் பறி செய்தும் - பொன்னைப் பறித்துக் கொண்டும். பொன் பறி செய்தும் என்பது நயம். பொற்கொல்லர் பொன்னைப் பறி என்பது குழூஉக்குறி: ஒவ்வொரு குழுவினுள்ளோர் யாதானும் ஒரு காரணத்தான் ஒரு பொருளினது சொற்குறியை யொழித்து வேருெரு சொற்குறியால் கூறுவது குழூஉக்குறியாம்: இது தகுதிவழக்கு என்பர். இதனை,

" ஆடலாற் பாடலால் அபிநயத்தால் ஊடுதல்போல்
ஊடலால் ஊடலுணர்ந் தோங்கமளி மிடைத்தழுவிக்
கூடலான் மைந்தர்பொருள் கொள்ளைபுரி வார்கிரகம்
நீடலாற் குடமூக்கு நெடுவானை வென்றதால். "

என்பதனேடு ஒப்பிடுக.

அன்ன வனைக்கண் டாளெருெ நாண்மிக் கதிமோகந்
துன்ன மருண்டான் மாநகர் காவற் றெழில்பூண்டான்
மின்னகு வாளான் வீரரில் வீரன் விடர்கோமான்
பொன்னவிர் பூணன் பஞ்ச சனப்பேர் பூண்டுள்ளான். 47

கு - ரை : அதிமோகம் துன்ன - மிக்க காமம் செறிய. விடர் கோமான் - காமமிக்கோரில் தலைமகன். பூணன் - ஆபரணங்களையுடையான். பஞ்சசனன் என்னும் பெயருடையான்.

என்னே நாமினி யெண்ணுவ தென்றவ ளிற்புக்குத்
தன்னே ரில்லா நித்தில மாலை தகச்சூட்டிப்
பொன்னே தேனே பூவாய் பாவாய் பொற்கொம்பே
மின்னே யென்னைக் காத்திடு கென்றுன் மெலிகின்றுன். 48

கு - ரை : அவள் இல் - அவள் விடு. நித்தில மாலை - முத்துமாலை.

பஞ்சச னன்கொள் காமமு நல்கும் பரிசுங்கண்(டு)
அஞ்சன வொண்கட் சுண்டிலை யென்பா ளணைமேலால்
கஞ்சமு கத்தின் மலர்ச்சியு மூறற் கவவுஞ்செய்(து)
எஞ்சலி லாம லின்பம் விளைத்தா ளினிதோங்க. 49

கு - ரை : அஞ்சனம் - மை. கஞ்ச முகம் - தாமரைமலர் போலும் முகம். மூரல் - பற்கள். கவவு - பற்றுதல். எஞ்சல் இலாமல் - குறைவு இல்லாமல்.

எண்ணிய போகந் துய்த்தக மகிழ்தலி லிணையில்லான்
அண்ணிய நாடொறு மீதலே மேற்கொளு மதனுலே
நண்ணிய பொன்மணிப் பூண்வினை பூமி நலஞ்சாரில்
புண்ணிய மாதி யொழிந்த மழக்கைப் பொருளேபோல். 50

கு - ரை : துய்த்து - அனுபவித்து. ஈதலே - கொடுக்கும் தன்மையை. மழக் கைப் பொருள் - இளம் பருவக் குழந்தை கரத்திலுள்ள பொருள்கள்: ''மழவுங் குழவும் இளமைப் பொருள'' (தொல்).

கடனனி வாங்கியு நல்கினன் மேலுங் கடன்வாங்கற்(கு)
இடமிலை யாதலி னுள்ளவர் தம்மி லிராப்புக்கு
மடனுடை யான்பொருள் வெளவியு மீந்தான் மற்றஃதும்
திடனமை யாமையி னென்செய லென்று திகைத்தானல். 51

கு - ரை : உள்ளவர் தம் இல் - பொருளுடையார் வீடு. வெளவியும் - திருடியும். திகைத்தான் - மயங்கினன்.

செறிபெரு வணிகர் குலத்தி லுதித்தான் சீலத்தால்
குறிசிவ யோகி யெனும்பெயர் பூண்டான் குணமிக்கான்
நெறியுளி நம்மை யருச்சனை யாற்றிடு நியமத்தான்
முறிவில் சிறப்பினம் மடியரை நாமென முனல்செய்வான். 52

கு - ரை : சீலத்தால் - ஒழுக்கத்தால். நெறியுளி - விதிப்படி. நியமம்- கடப்பாடு. முறிவு இல் - நீங்காத. உனல்=உன்னுதல் - கருதுதல்.

கதிரெழு முன்ன மெழுந்துசெய் நித்திய கடனுற்றிப்
பிதிர்தலி னங்குறி யன்பொடு பூசை பெறச்செய்து
முதிர்தரு நண்பக னம்மடி யாரொடு முறையுண்பான்
அதிர்கடல் சூழுல கத்தி லவன்பொரு வார்யாரே. 53

கு - ரை : கதிர் - சூரியன். நித்தியகடன் - நாட்கடன். நண்பகல் - நடுப்பகல். பொருவார் - ஒப்பாவார்.

மற்றவ னுடொறு மீட்டுவ யாவும் வளங்கூர்நூல்
சொற்றநம் மாலய மாற்று பணிக்குந் துரிசோவக்
கற்றநம் மடியவர் தஞ்செல விற்குங் கனிந்தீவான்
அற்றவர் யாவரு மன்னை யெனப்பொலி யறமிக்கான். 54

கு - ரை : ஈட்டுவ - சம்பாதிப்பனவாகிய பொருள்கள். துரிசு ஓவ - குற்றம் நீங்க. கனிந்து - மனம் உருகி: கசிந்து.

அனையன் மனைத்தலை யோரிர வுற்றன னணியாடை
வனைகல னுதிய வெளவுபு சுண்டிலை மனையுய்த்தான்
கனைகதிர் வந்தெழு காலை யுணர்ந்துங் கவலானுய்ப்
புனைபுகழ் வண்சிவ யோகிநம் பூசை புரிந்தானே. 55

கு - ரை : மனைத்தலை - வீட்டில். வனைகலன் - ஆபரணம். வெளவுபு - வெளவி. கவலானுய் - கவலைப்படாதவனுய். சிவயோகி - வணிகர்குலசீலன்.

பஞ்ச சனன்செயன் மன்ன னறிந்து பரிந்துள்ளம்
அஞ்ச வொறுத்துயிர் போக்க முயன்றிடு மக்காலை
நெஞ்சமை யுஞ்சிவ யோகியம் மன்னவ னேருற்றுத்
தஞ்ச மிவன்செய லென்று கவர்ந்தவர் தாம்வேருல். 56

கு - ரை : பரிந்து-இரங்கி. உள்ளம் அஞ்ச-மனம் நடுங்க. ஒறுத்து - தண்டனை செய்து. தஞ்சம் - பற்றுக்கோடு. இவன் கவர்ந்தான் என எண்ணும்படி மற்றவரே கவர்ந்தார்.

அன்னர் வெளிப்படி னெண்ணிய வாசெய லறமென்றுன்
மன்னன் விடுத்தான் கள்வன் சுண்டிலை மனைபுக்கான்
மின்னனை யாண்முனி தீர்த்தமொர் நாண்மே வித்தோய்ந்தாள்
பின்னர் வரும்பஞ் சசனனு முழுகினன் பேறுதே. 57

கு - ரை : அன்னர் - கவர்ந்த அத்தன்மையுடையார். அறம் - தருமம். கள்வன் - திருடியவனுகிய பஞ்சசனன். சுண்டிலை - பரத்தை. தோய்ந்தாள் - முழுகினுள். பேறுதே - ஒன்றையும் விரும்பாமல்.

பயன்விழை யாதிவ ராடவு மோங்கிய பதிஞானம்
மயலறு மாறிரு வர்க்கு முதித்திட மாண்பெய்தித்
தயலுள பொன்முத லாய வெலாநந் தளிசேர்த்தாள்
இயலுற விருவரு மீற்றினம் மடிநிழ லேய்ந்தாரே. 58

கு - ரை : பயன் விழையாது - பயனை விரும்பாமல்; நிஷ்காமியமாய். பதிஞானம் - சிவஞானம். மயல் - மயக்கம்; என்றது அறியாமையை : அதற்குக் காரணம் ஆணவமலமேலிடு. இருவர்க்கும்: இழிவு சிறப்பும்மை. தயல்=தையல். நம் தளி - நம்முடைய ஆலயத்தில்.

பஞ்ச சனன்சுண் டிலேயிவர் முத்தி பதிந்தாரேல்
வஞ்ச மிலாச்சிவ யோகியு முத்தி வளம்பெற்றுன்
எஞ்ச விலாதென வேண்டுவ தோவெல் லாமுதவும்
அஞ்ச முலாவு மலர்த்திரண் முனிவ ரருந்தீர்த்தம். 59

கு - ரை : பஞ்சசனனும் சுண்டிலேயுமாகிய இவ்விருவரும் முத்தியை அடைந்தாராயின், சிவயோகியும் எஞ்சாமல் பரமுத்தியை அடைந்தான் எனச் சொல்லவேண்டுமோ? அஞ்சம் - அன்னப்பறவைகள். முனிவர் தீர்த்தம் இம்மை மறுமைப் பேறுகளேயும் முத்திப்பேற்றையும் உதவுவதாம் என்க. சிவயோகியும் : உம்மை சிறப்பு.

மலர்மக னுதியர் தம்பத முந்தர வலதந்த
அலர்முனி தீர்த்த மெனப்பர னோதி வகங்கொண்டாள்
புலர்தலி லாப்பரை முனிவரர் தீர்த்தப் புகழ்சொற்றும்
பலர்புகழ் காக தடப்புக ழுஞ்சில பகர்கிற்பாம். 60

கு - ரை : மலர்மகன் ஆதியோர் - பிரமன் முதலிய தேவர்கள். பதம் - பதவி. பரன் ஓத - சிவபிரான் சொல்லியருள. பரை - பராசத்தி. காகதடம் - காகதீர்த்தம்.

முனிதீர்த்தப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 824

பதின்மூன்ருவது

காகதீர்த்தப்படலம்

வண்மைச் சயிலாதி மலர்ப்பத மாண்பிற் போற்றித்
தண்மைத் தவத்தா னுயர்ந்தோங்கு சனற்கு மாரன்
கண்மைத் திட நீன் மணிவிசலைக் காக தீர்த்தத்(து)
உண்மைத் திறமோ தெனவோத லுற்ரு னுவந்தே. 1

கு - ரை : வண்மை - வள்ளற்றன்மையுடைய. சயிலாதி - சிலாத முனிவர் புத்திரராகிய திருநந்திதேவர். கண் மைத்திட - கண்கள் கரு நிறங்கொள்ள. நீல் மணி - நீலரத்தினம். அலைக் காகதீர்த்தம் - அலை களையுடைய காகதீர்த்தம்.

முத்திற் பொலிவெண் ணகையாள்கரு முற்று மாமே
கத்திற் பொலிகண் டனைத்தாழ்ந்து கதித்த காரோ
ணத்திற் பொலிநீ ரினுமோதென நாடி யொன்று
பத்திற் பொலியண் ணலுவந்து பகர லுற்ருன். 2

கு - ரை : முத்திற்பொலி: இன் ஐந்தனுருபு ஒப்பின்கண் வந்தது. கரு முற்றும் மா மேகம் - சூல் முற்றிய கரிய மேகம்: "கமஞ்சூன் மாமழை" என்றது காண்க. மா மேகத்திற் பொலி கண்டன் - கரிய கண்டன்; சிவ பெருமான். கதித்த - விளங்குகின்ற. காரோணத்திற் பொலி: இல்: ஏழன் உருபு. நீர் - நீர்மை; விசேடம். இனும் ஓது - இன்னும் சொல்வீராக: இனும்: தொகுத்தல். ஒன்று பத்திற்பொலி அண்ணல் - பொருந்திய தச காரியத்திலே விளங்கும் சிவபெருமான். பத்தாவது - தசகாரியம்: தத்துவ ரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி; ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி; சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பன. சிவபோகமே ஆன்மலாபமாம். இவற்றின் இயல்பெல்லாம் சிவஞான போதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், உண்மைநெறி விளக்கம், பண்டாரசாத்திரம் முதலியவற்ருல் அறிக. அனுபவஞானம் குருவுபதேசத் தால் விளைவதாம் என்க.

சிந்தா மணியும் நிதியங்களுஞ் செவ்வி தோங்கி
நந்தா வொருதே னுவுந்தன்னரு ளுட்ட நோக்கச்
சந்தா னமாதித் தருவைந்துந் தழைந்து மல்க
முந்தா ரமுத முணனேக்குபு முன்னர் மேவ. 3

கு - ரை : சிந்தாமணி, நவநிதியம், காமதேனு, சந்தான முதலிய ஐந்தரு, அமுதம் என்பன பாற்கடலில் தோன்றின. சங்கநிதி பதுமநிதி இரண்டும் இந்திரனிடத்துள்ளன; சிந்தாமணி, காமதேனு, கற்பதரு என்பனவும் அவனிடமே உள்ளன. கற்பகம் மந்தாரம் பாரிசாதம் சந்தானம் அரிசந்தனம் என்பன ஐந்தருக்கள். முந்து - முற்பட. 'சந்தானம் - கற்பகத்தில் நாலாஞ்சாதியான சந்தான விருட்சம்' என்பது தக்கயாகப்பரணி உரை.

பகர்தேவர் முப்பத்து முக்கோடியர் பக்க மேவப்
புகர்மே விரட்டித் திதிமைந்தர் புறங்கி டப்ப
நிகர்தீ ரருமா தவராசி நிரம்பி யோங்க
நுகரா வமுதிற் சிலரின்னிசை நூலிற் பாட. 4

கு - ரை : முப்பத்து முக்கோடி தேவர்கள் ஒருபக்கமும், தைத்தியர் மற்றைப் புறத்திலேயும் இருப்ப. திதி மைந்தர் - தைத்தியர்; அசுரரில் ஒருவகையார். நிகர் தீர் அரு மாதவர் - ஒப்பற்ற அரிய தவசிகள்; தெய்வ இருடியர். ஆசி - ஆசீர்வாதம். நுகரா அமுது - உண்ணாத அமுதம்: இல்பொருள் உவமை. நூலிற்பாட - நூல்களிற் சொல்லிய விதிப்படி பாட.

அதிரூ பவரம் பைதிலோத்தமை யாடல் செய்ய
மதிநேர் வதனத் தயிராணி மருங்கி ருப்பத்
துதிசேர் விருதா வளிமுன்பு துவன்றி நிற்ப
விதிசா லரியா தனமீதமர் வேள்வி வேந்தன். 5

கு - ரை : அதிரூபம் - மிக்க அழகு. அரம்பை, திலோத்தமை தெய்வ மகளிர். வதனம் - முகம். அயிராணி - இந்திராணி. விருதாவளி - வெற்றிச் சின்னங்கள். அரி ஆதனம் - சிங்காதனம். வேள்வி - நூறு அசுவமேதங்களைச் செய்த. வேந்தன் - இந்திரன்.

கலைமா மதியம் புரைசாந்தன் கடுப்பொன் றில்லான்
கலையா தசமா தியனாகங் கலந்த திக்குக்
கலையா ணமையே மதிக்கின்ற கௌத மப்பேர்க்
கலைமா முனிவன் மனையாள கலிகை யென்பாள். 6

கு - ரை : கலை மா மதியம் - பூரணசந்திரன். கடுப்பு - வேகம். கலையாத சமாதியன் - நீங்காத தியானபூரணன். நாகம் கலந்த திக்கு கலை ஆள் நமையே: நாகம் கலந்த திக்கு - திக்கயங்கள் பொருந்தும் திசை. திக்குக்கலை : திசை ஆடை. கலை ஆள் நமை - ஆடையாகவுடுத்த நம்மை: சிவபிரான் கூற்று. கலை மா முனிவன் - நூல்களை நுனித்தறிந்த சிறந்த முனிவன்.

மழைநேர் குழலும் பிறைநேர் நுதன் மாண்பு மம்பொற்
குழைசேர் செவியும் புருவப்பெயர்க் கோடு வில்லும்
உழையா வுமருட் டியகண்களு மொப்பின் மூக்குங்
கழையா மொழியும் பளிங்கொத்த கபோலச் சீரும். 7

கு - ரை: மழை - மேகம். குழல் - கூந்தல். நுதல் - நெற்றி. கோடு வில் - வளைந்த வில். உழை - மான். மருட்டிய - மயக்கிய. கழை - கரும்பு. கபோலம் - கன்னம்.

செறிவண் டளவா நகையுந்துகிர்ச் செய்ய வாயுங்
குறிவாண் முகமுங் கழைத்தோளுங் கொழுங்க ழுத்தும்
அறியா மூறுதண் டின்முன்கை யுமங்காந் தட்கையும்
மறியாப் பவளக் கிளைபோல்விரல் வாய்ந்த சீரும். 8

கு - ரை: வண்தளவு ஆம் நகை: தளவு - முல்லை. துகிர் - பவளம். வாள் - ஒளி. கழைத்தோள் - பசுமூங்கிலையொத்த தோள்கள். காந்தள் கை - காந்தள் மலரையொத்த கை. மறியா - மடங்காத.

கிளிமூக் கணைய நகமுந்தனக் கிண்ண மாண்புங்
களியா விடையுஞ் சுழியுந்தியுங் காமர் ஆற்பச்
சொளியா ரிலையின் வயிறும்வயிற் றெண்ம டிப்பும்
நெளிபாம் புபைத்த படம்போன்ற நிதம்பச் சீரும். 9

கு - ரை: தனக்கிண்ணம் - தனமாகிய கிண்ணம்: 'வள்ளமுலைக் கலைமடந்தை' என்றது காண்க. ஆல் பசு ஒளி ஆர் இலை - ஆலினது பசிய ஒளி பொருந்திய இலை: ஆலிலைபோலும் வயிறு என்க.

கதலிக் கவான்றெண் டுவரால்கம டம்பொ ரூஉமுப்
பதமொய்த் தமஞ்சண் முளைநேர்விரல் பன்ன கச்சீர்
இதமுற் றயாவுந் தவறுதுளத் தெண்ணி யெண்ணி
விதனப் படுவா னழல்சார்ந்த மெழுகு போன்றான். 10

கு - ரை: கதலிக் கவான்-வாழை போன்ற துடை. முப்பாதம் - முழங் கால், கணைக்கால், புறங்கால் இவைகட்கு முறையே றெண்டும் வராலும் ஆமை முதுகும் உவமானங்கள். கமடம் - ஆமை. விதனம் - துன்பம்.

ஏழாம் பாடல் முதல் இதுவரையில் அகலிகையின் கேசாதிபாதங் களின் வருணனை கூறப்பட்டன.

வேறு

வரைபொடி படுக்குந் தோலா வலிச்சத கோடி வேந்தன்
கரையற மதிமா ழாக்குங் காலையிற் கழைகு ழைத்து
விரைமலர்க் கணைய னேகம் விடுத்தனன் மார வேளுந்
திரைசெறி கடல்சூழ் வைப்பி னிழிந்தன னுயர்வு தேருன். 11

கு - ரை: வரை - மலை. தோலா வலி - தோல்வியில்லாத வலிமை. சதகோடி - வச்சிராயுதம்: நூறு முனைகளையுடையது எனக் காரணக்குறி. மதி மாழாக்கும் - புத்தி மயங்கும். கழை குழைத்து - கரும்புவில்லை வளைத்து. மாரவேள் - மன்மதன். கடல் சூழ் வைப்பு - நிலவுலகம். தேருன் - தெளியாதவனுய்.

பெற்றதைச் சிறிது செய்து பெருததைப் பெரிது பண்ணும்
அற்றமில் வலியான் மிக்க வாணவ மலக்கோட் பட்டோன்
கற்றவர் புகழு மேன்மைக் கௌதம முனிவன் வைகும்
குற்றமில் இருக்கைப் பாங்கர்க் குறுகினு னெடுமால் கொண்டே. 12

கு - ரை: ஆணவமலக் கோட் பட்டோன் - ஆணவமலத்தால் விழுங் கப்பட்டவனுகிய இந்திரன். ஆணவ மலத்தின் தன்மை பெற்ற பொருளைச் சிறிதாகவும் பெருத பொருளைப் பெரிதாகவும் மதிக்கச்செய்து சோர்வில்லாத வலிமை பொருந்தியதாம். குறுகினுன்-கிட்டினுன். நெடு மால் - பெருங்காம மயக்கம். குறுகினுன் நெடுமால் என்பது முரண்தொடை.

தவமுனி யிருக்கை நீங்கத் தக்கதோர் சூழ்ச்சி யெண்ணிக்
கவன்மனத் தடைந்த தீயோன் காரியென் பெயருக் கேற்ப
அவமுறுங் காரி யாகி அடுத்துமுக் காற்க ரைந்தான்
புவனமோன் றிருடீர் போது போந்ததென் றுள்ளங் கொண்டு. 13

கு - ரை: தவமுனி - கௌதமர். இருக்கை - ஆச்சிரமம். சூழ்ச்சி - உபாயம். கவல் - கவலையை. தீயோன் - இந்திரன். காரி - கரியநிற முடையோர். அவமுறுங்காரி - காக்கை: இழிந்த பறவையாதலின் அவ்வாறு கூறினர். இருள் தீர் போது - விடியற்காலம்.

முனிவர னியதி யாற்ற முடுகுபு நதிப்பாற் சென்றுன்
தனிமைகண் டுவக்குங் கள்வன் தன்னுரு எடுத்து மங்கை
இனிதுற இருந்த சாலை யெய்தினு னெய்த லோடும்
புனிதமா முனியே வந்தான் போந்திலன் என்றி ருந்தாள். 14

கு - ரை: நியதி - நாட்கடன். முடுகுபு - விரைந்து. தன் உரு - இந்திரனுகிய தன்வடிவம்; முனிவனுடைய வடிவம் எனினுமாம். போந் திலன் - நீராடச் சென்றிலன்.

வளமுற அமளி மேவி மார்புற இறுகப் புல்லி
இளமுலை வருடி முத்த மிட்டுவா யூறன் மாந்தி
உளநெகிழ் தரம ருங்கு லுறுகலை நெகிழ்த்தாங் கல்குல்
இளகுறக் கரண மெல்லா மியற்றினு லின்பந் துய்த்தான். 15

கு - ரை : அமளி - படுக்கை. புல்லி - அணைத்துத்தழுவி. வருடி - நெருடி. வாயூறல் - வாய்நீர் : வருவாயமுதம் என்க. மருங்குல் - இடை. கலை - ஆடை. கலவிக்காலத்து ஆடவர் செயல் கூறப்பட்டது.

பொம்மல்வெம் முலையி னுளும் புணர்ச்சியின் வேறு பாட்டால்
அம்மநம் முனிவ னல்லன் அயலனென் றுணர்ந்துங் காதல்
விம்மநன் கிழைத்த லாலே விலக்குதல் தவிர்ந்தி ருந்தாள்
செம்மலிந் திரனு முற்றத் திளைத்தபின் அச்சம் பூண்டான். 16

கு - ரை : பொம்மல் - பருத்த. அயலன் - வேறொருவனும். காதல் விம்ம - காமம் மிக. உணர்ந்தும் தவிர்ந்திருந்தாள். செம்மல் இந்திரன் என்றது இழிவு.

கண்டிடின் முனிவன் சாபம் கனலினுங் கொடிதாய் வந்து
மண்டுமே யெனம ருண்டு வாசவன் கரந்து போனுன்
கொண்டலங் கூந்தற் கோதாய் குலமுனி நதிப்பால் எய்தி
அண்டுநள் ளிருளே யாய தறிந்துளத் தெண்ண லுற்றுன். 17

கு - ரை : கனலினும்-தீயைவிட. மண்டும்-நிறையும், பற்றும்: "குணமென்னும் குன்றேறி நின்ருர் வெகுளி, கணமேயும் காத்தல் அரிது" ஆகலின். வாசவன்-இந்திரன்: வசுக்களுக்குத் தலைவன்: காரணக்குறி. கரந்து - ஒளித்து. மருண்டு - மயங்கி. "அச்சம் பெரிதால் அதற்கின்பம் சிற்றளவால்" எனவும், "புக்கவிடத் தச்சம் போதரும்போ தச்சம், துய்க்குமிடத் தச்சம் தோன்ருமற் காப்பச்சம், எக்காலும் அச்சந் தருமால் எவன்கொலோ, உட்கான் பிறனில் புகல்" (நாலடி - 83) எனவும் கூறியமை காண்க. கொண்டல் - மேகம். குலமுனி - கௌதமர். அண்டும் நள்ளிருள் - பொருந்திய நடு இரவு.

காகநள் ளிரவின் முக்கால் கரைவதற் கேது வென்னென்(று)
ஆகமுப் புரிநூ லாளன் ஓதியால் ஆய்ந்தா னுக
மேகவா கனனிவ் வாருேர் வினைசெய்து நமது பன்னி
போகம்வேட் டடைந்தான் என்று தெரிந்தனன் பொங்கி னுனல்.

கு - ரை : முக்கால் - மும்முறை. ஏது என் - காரணம் யாது. ஆகம் முப்புரிநூலாளன் - மார்பிலே தரித்த பூணூலையுடையான். ஓதியால் - ஞான திட்டியால். மேகவாகனன் - இந்திரன். பன்னி - பத்தினி. போகம் வேட்டு - போகத்தை விரும்பி. பொங்கினுன் - கோபம் மிக்கான்.

விரைதரக் கடுகி வந்து மெல்லிய லாளை நோக்க
உரைதடு மாறி நாணம் உலேத்திட ஒதுங்கி நிற்கும்
புரையுணர்ந் தழன்று சீறிப் பொதுமக ளானுய் போத
உரைசெய்பே தைமையா னற்ருல் உபலமாய்க் கிடத்தி யென்ருன்.

குரை: விரைதாக் கடுகி - மிக வேகமாக. உலேத்திட - வருத்த. புரை - குற்றம். அழன்று சீறி - நெருப்பெழக் கோபித்து. பொதுமகள் - பரத்தை. போத - மிகுதியாக. பேதைமை - அறியாமை. உபலம் - கல்.

தடுப்பருஞ் சாப மேற்றுத் தாழ்குழல் கல்லாய் வீழ்ந்தாள்
விடுப்பருஞ் சீடர் தாழ்ந்து வீடுரைத் தருடி யென்னக்
கடுப்பரும் பிருகு சொல்லால் கரியவ னிராம னுவான்
தொடுப்பரும் அவன்க ழற்காற் றுகள்படத் தொலேயு மென்ருன்.

குரை: தாழ்குழல்-அகலிகை: அன்மொழித்தொகை. வீடு உரைத்து அருள்தி: வீடு - சாபவிடை; நீங்கும் வழி. பிருகு - பிருகுமுனிவர். கரியவன் - விஷ்ணுமூர்த்தி. கழற்கால் துகள் - வீரக்கழலேயணிந்த திருவடித்தூளி.

நள்ளருந் திருவின் வான நாடொருங் காளும் பேதை
உள்ளரும் அயலான் பன்னி ஒருநிதம் பத்திற் பூண்ட
விள்ளரும் விழைவால் இன்னே மெய்யடங் கலுமற் றஃதே
தள்ளரு மிரண்டைஞ் ஞூறு சார்தரக் கடவன் என்ருன். 21

குரை: நள்ளருந் திரு - கிடைத்தற்கு அரிய இலக்குமி கடாட்சம். பேதை - இந்திரன். உள்ள அரும் - நினேத்தற்கரிய. விள்ளரும் விழைவு - நீங்குதற்கரிய ஆசை, சொல்லவொண்ணு ஆசை எனினுமாம். இன்னே - இப்பொழுதே. அஃது - அப்பெண்குறி. இரண்டு ஐஞ்ஞூறு - ஆயிரம்.

வீடருங் கொடிய சாபம் விளேத்தபின் வெகுளி நீங்கி
வாடருஞ் செயன்மா ணுக்கர் புரிபணி மகிழ்விற் செய்ய
நாடரு நம்மைப் போற்றி நயங்கிளர் சமாதி யுற்ருன்
கூடருந் தவத்தான் மிக்குக் குலாங்கௌ தமப்பே ரோனே. 22

குரை: வீடரும் - விடுத்தற்கரிய. வெகுளி - கோபம். சமாதி - தியானபூரணம். மிக்குக் குலாம் - மிகப்பொருந்தும்.

இவனிலே யின்ன தாக விடுகொடுஞ் சாப மேற்ற
அவனுடம் படங்க யோனி ஆயிரம் செறிந்த தோர்ந்து
தவன்மனே விழைந்த பாவந் தடித்திவ்வா ருய தென்றுள்
குவனதி நாணங் கொள்வன் குணிப்பருந் துயரத் தாழ்வன். 23

கு - ரை : இவன் நிலை - இம்முனிவர் செயல். அவன் உடம்பு - அவ்விந்திரன் உடம்பு. ஓர்ந்து - ஆராய்ந்து. பாவம் தடித்து - பாவமிக்கு. உள்குவன் - கருதுவான். அடங்க - முழுவதும். தவன் மனை - தவசியின் மனையாள். தடித்து - முதிர்ந்து, பெருகி. குணிப்ப அரும் - அளவிடுதற்கு அரிய.

இமையவர் ஒருங்கு தாழ்பே றெய்தினேன் கெட்டே னென்னும்
அமைபுலோ மசைதெரிந்தாற் சிரிப்பளே யாவா வென்னும்
கமைதவிர் அவுணர் எல்லாம் கைகொட்டி இகழ்வா ரென்னும்
சுமையுடம் பொழிவுமில்லை யினியெவன் சூழ்ச்சி யென்னும். 24

கு - ரை : ஒருங்கு தாழ் பேறு - ஒருசேர வணங்கும் பெருவாழ்வு: என்றது முப்பத்து முக்கோடி தேவர்களையும். எய்தினேன்: வினையாலணையும் பெயர். புலோமசை - இந்திராணி. ஆ ஆ: இரக்கக்குறிப்பு. கமைதவிர் - பொறுமையில்லாத; க்ஷமை=கமை. சுமையாகிய உடம்பு. ஒழிவுமில்லை என்று எண்ணுதற்குக்காரணம் அமுதுண்டமையால் சாவாமை குறித்தது. சூழ்ச்சி - ஆலோசனை.

மருவொரு குறியு ளாரும் வான்பெரும் புடவை கொண்டு
பெருகுறச் சூழ்ந்து சூழ்ந்து பெருந்திரோ தானஞ் செய்வார்
ஒருவற வுடம்பு முற்று முளகுறி பல்ல வென்னில்
இருமைமிக் குடையேன் யாதால் எங்ஙன மறைத்தல் செய்வேன்.

கு - ரை : ஒரு குறியுளோர் - பெண்குறி ஒன்றனைமட்டும் உடைய பெண்டிர். சூழ்ந்து சூழ்ந்து - சுற்றிச்சுற்றி. திரோதானம் - மறைத்தல். வான் பெரும் புடவை என்றது பதினெட்டு முழமுள்ள துணி. பெருகுற - மிக. ஒருவு அற - நீங்குதலின்றி. பல்ல என்றது ஆயிரம் என்னும் தொகை. இரு மை மிக்குடையேன் - பெருங்குற்றம் மிகுதியாகவுடையேன். இருமை - பெருமை; மை - குற்றம்.

முடைபடு உவர்நீ ரூறி முழுமையு மசும்பு செய்து
மிடைகுறி பல்ல தாங்கி அரியணை மேவ மாட்டேன்
உடைதிரைப் பரவை ஞாலத் தொளிப்பனென் றெழுந்தா னப்போ
தடைதரு குரவன் போக்குத் தடுத்திஃ தறைய லுற்றான். 26

கு - ரை : முடைபடும் உவர் நீர் - முடைநாற்றம் வீசும் உப்பு நீர் : என்றது சிறுநீரை. அசும்பு - நீர்த்துளி, கசிவு. மிடை - நெருங்கிய. அரியணை - சிங்காதனம். பரவை ஞாலம் - கடலாற் சூழப்பட்ட நிலவுலகம். குரவன் - வியாழபகவான்.

செறிபெருந் தவத்தி னுற்குச் செய்ததீங் கெளிது போமோ
குறிபல வுடம்பி னுகக் கூறிய தருளே யன்றே
நெறியுறு தீர்த்த மெல்லா நெடும்புவி யடைந்து மூழ்கி
அறிதரக் கங்கை யாடி ஆங்கம ரொழியு மென்ருன். 27

கு - ரை : தவத்தினுற்கு - தவத்தையுடையவனுகிய கௌதமனுக்கு. அருளே - கருணேயே. புவி - பூமியில். ஆங்கு அமர் - அக்காசிப்பதியிலே கங்காதீரத்தில் தங்கியிருப்பாயாக.

குருமொழி சென்னி யேற்றுப் பணிந்தனன் விடையுங் கொண்டு
திருமலி புடவி மேவித் தீர்த்தங்கள் பலவுந் தோய்ந்து
பொருவருங் காசி மேவிப் புண்ணியக் கங்கை யாடிப்
பெருகொளி நம்மைப் போற்றி யிருந்தனன் பேணிப் பன்னுள். 28

கு - ரை : குரு மொழி - வியாழபகவான் ஆணேயை. புடவி - பூமி. பொரு அரும் காசி - ஒப்பற்ற காசித்தலம். பெருகு ஒளி நம்மை - மிக்க சோதிவடிவாகிய நம்மை.

இன்னண மிருக்கும் வேந்த னிராயிர மாண்டு சென்றுந்
தன்னமு முனிவன் சாபந் தந்ததுன் பொழியக் காணுன்
பன்னருங் கவலே கூர்ந்து பண்ணுவ தினியென் னென்று
முன்னமே யாங்கு மேய கண்ணுவ முனியைக் கண்டான். 29

கு - ரை : வேந்தன் - இந்திரன். தன்னமும் - சிறிதும். தந்த துன்பு ஒழிய. பன்னரும்-சொல்லுதற்கரிய. முன்னமே ஆங்கு மேய-தான் காசிப் பதியை அடைவதற்குமுன்பே அவ்விடத்துத் தங்கியிருக்கும்.

கண்ணுவ முனியைக் கண்டு கதுமென வவன்ருள் போற்றி
நண்ணுவ மான மில்லாய் நஞ்சமு தென்று துய்த்தேன்
எண்ணுவ தினியென் னுற்ற விடும்பைநோய்க் கவதி யில்லே
பண்ணுவ திதுவென் றேபார் பதிதீர்த்த மனைத்துந் தோய்ந்தேன்.

கு - ரை : கதுமென - விரைவாக. நண் உவமானம் இல்லாய் - பொருந்தும் உவமையில்லாத முனிபுங்கவரே. நஞ்சினே அமுதம் என்று கருதி நுகர்ந்தேன். இடும்பை நோய் - துன்பமாகிய நோய். அவதி-முடிவு. பார் பதி தீர்த்தம் - பூமியின் கண்ணே நிலேபெற்றுள்ள புண்ணிய தீர்த்தங்கள்.

இராயிர வருடங் கங்கை யிரும்புனல் தோய்ந்தீங் குள்ள
பராபர இலிங்கம் போற்றிப் பத்திசெய் தமர்ந்தேன் இன்னும்
விராவிய தீமை தீர்ந்து மேதக வடைந்தே னல்லேன்
புராதன முனிவ யானென் புரிகுவ துரைத்தி யென்ருன். 31

கு-ரை: பராபரம் - யாவற்றுக்கும் மேம்பட்ட. விராவிய - பற்றிய, பரவியுள்ள. மேதகவு - மேம்பாடு. புராதன - பழமையாயுள்ள.

வரைப்பகை மாற்றங் கேட்ட முனிவன்வாய் முறுவல் பூப்பத்
தரைத்தலைத் தீர்த்த மெல்லாந் தவாமலா டினன்யா னென்றே
உரைத்தனை பொய்ம்மை காயா ரோகணத் துற்றாய் கொல்லோ
விரைத்தபன் மலர்சால் தீர்த்த மேதக ஒன்றுண் டாங்கே. 32

கு-ரை: வரைப் பகை: பெயர்: மலைகளுக்குப் பகையாயுள்ளோன். மாற்றம் - சொல், விண்ணப்பம். முறுவல் பூப்ப - புன்சிரிப்புக்கொள்ள. தரைத்தலை; தலை: ஏழனுருபு. தவாமல் - நீங்காமல், ஒழியாமே. பொய்ம்மை-அது பொய்ம்மொழியாம். விரைத்த - மணம் பொருந்திய. மேதக - சிறப்பாக. ஆங்கே - நாகபட்டினத்தில்; நாகைக் காரோணத்தில் என்க.

தூயபுண் டரிகன் றனென் சொற்படி யாங்கு மேவி
மேயபல் புனலு மாடி விருப்பிற்கா ரோண லிங்க
நாயனைப் பூசை யாற்றி நயப்பநா லாம்ப தத்தில்
ஆயமெய் யொடும்பு குந்தா னனந்தத் தவச னானன். 33

கு-ரை: புண்டரீகன் - புண்டரீக முனிவர். நாயன் - தலைவன். நயப்ப - விரும்ப. நாலாம்பதம் - சாயுச்சியம். அவசன் - வசமிழந்தவன்.

தெள்ளிய பாடை யாய திராவிடம் வயங்குந் தேயத்(து)
ஒள்ளிய தரக்கு யாத்தோ னுயர்முறை செலுத்து நாட்டின்
நள்ளிய குணாது வேலைக் கரைநகு பொன்னித் தென்பால்
வள்ளிய புகழ்சால் காயா ரோகண மருவு மென்றும். 34

கு-ரை: தெள்ளிய பாடை - தெளிவான மொழி. திராவிடம் - தமிழ்: "எவ்வினையு மோப்புதலால் திராவிடமென்றியல் பாடை" (காஞ்சிப்-தழுவக்-245). தரக்கு உயர்த்தோன்: தரக்கு - புலிக்கொடி. உயர்த்தோன் - சோழன். குணாதுவேலை - கீழ் கடல். பொன்னி - காவிரி. வள்ளிய புகழ் - வள்ளல் தன்மையால் உண்டாகிய புகழ்.

அந்தமாத் தலத்தி லென்று மடைபவர் பிறவி வெந்நோய்
சிந்தவும் பேரா னந்தஞ் செறியவுங் கற்ப காலத்
துந்தமூர்த் திகளெ லாம்வந் தொடுங்கவு முளைத்த தம்மா
சந்தமார் ஞானா னந்தத் தற்பர விலிங்க மொன்று. 35

கு-ரை: சிந்த - உக. முளைத்தது - தோன்றியது. ஞானானந்தத் தற்பரலிங்கம்: ஞானானந்தம் - ஞானமும் ஆனந்தமும் வடிவாகிய. தற்பர லிங்கம் - தனக்குத் தானே மேலாகிய இலிங்கம். சிந்தவும், செறியவும், ஒடுங்கவும் இலிங்கம் ஒன்று முளைத்தது.

நேயவவ் விலிங்கத் திற்கு நிருதியந் திசையின் முத்தி
ஏயநற் புண்ட ரீக முனியிலிங் கத்தின் முன்னம்
தூயநன் முனிவர் வாவிக் குத்தர திசையிற் றேன்றும்
நாயகத் தீர்த்த மொன்று நயந்ததின் மூன்று போதும். 36

கு - ரை: நிருதித்திசை - தென்மேற்கு. முன்னம் - எதிரில்; சந்நிதியில். உத்தரதிசை - வடக்குத்திக்கு. நாயகத்தீர்த்தம் ஒன்று தோன்றும். மூன்றுபோதும் - மூன்று காலங்களிலும்.

விதிவழி ஆடிப் பின்னர் விளங்குகா ரோண லிங்கம்
மதியுறப் போற்ற லோடு வண்சுதைக் கடேச மேல்பால்
பதிதரு காரோ ணப்பே ரிலிங்கமும் பண்பிற் போற்றித்
துதிமுறை புரிதல் வேண்டுஞ் சொல்வதொன் றின்னுங் கேட்டி. 37

கு - ரை: விதி வழி ஆடி - விதிப்படி ஸ்நானம் செய்து. மதி யுற - புத்தி பூருவமாய். சுதைக் கடேசம் - அமுத கடேசம். மேல்பால் - மேற்குத் திசை.

கொடியுரு வமைந்து பாவங் குயிற்றிய திறனு லாங்குங்
கொடியுரு வமைந்தே தீர்த்தங் குடைசில நாளிற் செம்பொன்
கொடியென வனைய தீர்த்தங் குலவருள் செயுமப் போதே
கொடியிடை பாகர் காட்சி கொடுத்தருள் செய்வ ரன்றே. 38

கு - ரை: கொடி உரு அமைந்து - காகவடிவுகொண்டு. குயிற்றிய - செய்த. காக்கை வடிவங்கொண்டே நீ அந்தத் தீர்த்தத்திலே மூழ்குக. செம்பொற்கொடி - பொற்காக்கை; பொன்னிறக் காக்கை என்றபடி. குலவ அருள் செயும். கொடியிடை பாகர் - உமாபாகராகிய சிவபெருமான்.

நலமலி தருமா றின்றே நடமதி கடிதி னென்றுன்
உலமலி குவவுத் தோளான் ஒய்யென வெழுந்து தாழ்ந்து
புலமலி விசுவ நாதப் பெயர்புனை நமையும் போற்றிக்
கலமலி கடல்சூழ் நாகைக் காரோண நகரம் புக்கான். 39

கு - ரை: நலம் மலிதருமாறு. கடிதின் - விரைவில். உலம் - திரண்ட கல். தோளான் - இந்திரன். ஒய்யென: விரைவுக் குறிப்பு. புலம் மலி - ஞானவடிவாகிய. கலம் மலி - மரக்கலங்கள் நிறைந்த.

ஆண்டுநல் லோர்கள் பல்லோர் அமைதரு புராணங் கைக்கொண்(டு)
ஈண்டுவந் தடைந்தோ ரெல்லாம் இருவினைப் பிறவித் துன்பம்
மாண்டுகெட் டொழியப் போக்கி மனத்திடைக் குறித்த யாவும்
பூண்டுமிக் குயர்வர் என்று புகன்றிடக் கேட்டு வந்தான். 40

கு - ரை : ஆண்டு - அவ்விடத்தில். மாண்டு கெட்டொழிய - அழிந்து பட. குறித்த - நினைத்த. நல்லோர் கைக்கொண்டு புகன்றிடக் கேட்டு உவந்தான்.

இன்னுமப் புராணஞ் சொல்வோர் பரமட மாதர் என்பார்
மின்னுமொண் கலசக் கொங்கை விழைபவர் கயவ ராவார்
பன்னுமற் றவரு மெய்தில் பரனருள் செய்வா னென்ன
உன்னுநஞ் செயல்தேர்ந் தாரென் றுளத்தொரு நாணுக் கொண்டான்.

கு - ரை : பர மடமாதர் - பரஸ்திரீகள்; பிறர் மனைவிகள். விழைபவர் - விரும்புவோர். கயவர் - கீழ்மக்கள். அவரும் - அக்கீழோரும். என்ன - என்று சொல்ல. நம் செயல் தேர்ந்தார் - நம்முடைய கொடும் பாவச்செயலை அறிந்தார் போலும். நாணுக்கொண்டான் - நாணத்தையடைந்தான்.

மீட்டுமப் புராணஞ் சொல்வார் வெய்யபா தகரே யேனும்
நாட்டுமித் தலத்தைச் சார்ந்து நலமலி ஒருதீர்த் தத்தில்
காட்டுமற் போடு மூழ்கில் கரிசறுத் துயர்வா ரென்று
பூட்டுபஃ றீர்த்த மேன்மை புகல்வது விரும்பிக் கேட்டான். 42

கு - ரை : வெய்ய பாதகரேயேனும் - கொடிய பாதகராயினும். அற்போடு - அன்புடன். கரிசு அறுத்து - குற்றத்தைப் போக்கி. பல் தீர்த்த மேன்மை - பல தீர்த்தங்களின் சிறப்புக்களையும்.

ஒருகருந் தடங்க ணம்மை உற்றவர்க் குவந்து செய்யும்
பெருகருள் பெரிதென் கோசீர் பிறங்குகா ரோண நாதர்
தருமருள் பெரிதென் கோவென் சாற்றுவ தென்று பல்லோர்
அருகமர்ந் துரைப்பக் கேட்டான் அளவிலா உவகை பூத்தான். 43

கு - ரை : கருந்தடங்கணம்மை - நீலாயதாட்சி. உற்றவர்க்கு உவந்து. என்கோ - என்று சொல்லுவேனோ. பிறங்கு - விளங்குகின்ற. அளவிலா உவகை - அளவுபடாத மகிழ்ச்சி.

விதியிற் சரியா நிற்கும் ஆடவர் மின்னுக் கான்ற
சோதியிற் பரமின் னார்தம் தோற்றர வெதிரே கண்டு
நீதியிற் புடவி நோக்கி நேர்செலா தொதுங்கிச் செல்ல
ஓதியிற் பொலியின் னேரே உத்தம ரென்று வந்தான். 44

கு - ரை : சரியாநிற்கும் - செல்லும். மின்னுக் கான்ற சோதியில் - மின்னல் ஒளிபோலும். பரமின்னார் - பிறர் மனைவியர். தோற்றரவு - தோற்றம். புடவி நோக்கி - பூமியைப் பார்த்துக்கொண்டு. ஓதியிற் பொலி - அறிவினால் விளங்கும்; ஓதி - அறிவு.

தலனமை வளலிவ் வாறு சார்தரக் கண்டு செல்லும்
வலனுயிர் குடித்த தோன்றல் கண்ணுவன் வகுத்த வாறே
புலனமை காக மாகிப் பொருக்கெனப் பரந்து சென்று
நலனமை யனைய தீர்த்த நாடுபு கூடி னுனே. 45

கு - ரை : வலன் உயிர் குடித்த தோன்றல் - வலாசுரனைக் கொன்ற இந்திரன். கண்ணுவன் - கண்ணுவமுனிவர். புலன் அமை காகம் - அறிவு உடைய காகம். பொருக்கென - விரைவாக.

கண்ணுவன் சொன்ன தீர்த்தம் இதுவெனக் கருத்தி னுராய்ந்(து)
எண்ணுபு வியந்து மூழ்கி யேனைய தீர்த்த மெல்லாம்
அண்ணுபு தோய்ந்து பின்னர் அத்தலத் தெல்லை சூழ்ந்து
நண்ணுவ மான மில்லா நங்குறி யடுத்துத் தாழ்ந்து. 46

கு - ரை : கருத்தின் ஆராய்ந்து - அறிவால் துருவி. எண்ணுபு - எண்ணி. அண்ணுபு - அண்ணி; அணுகி என்க. சூழ்ந்து - வலம் வந்து. நண் உவமானம் இல்லா.

பொருவரும் புண்ட ரீகன் பொற்புறப் பதிட்டை செய்து
மருவுமன் புறப்பூ சித்த மாண்பமர் இலிங்க முன்போய்ப்
பருவரல் ஒழியு மாறு பரிந்தருள் செய்தி யென்று
வெருவரல் ஒழித்தல் செய்வான் வீழ்ந்துவீழ்ந் திறைஞ்சல் செய்து.

கு - ரை : பொருவரும் - ஒப்பில்லாத. பருவரல் - துன்பம். பரிந்து - இரங்கி. வெருவரல் - அச்சம்.

பரவரு மறையென் றேதும் பாற்கட லகத்துத் தோன்றும்
உரவமை யமுத மாமைம் பதங்களு முள்ளித் தீர்த்த
வரமெனுந் தடத்து மேல்பான் மாமுனி நிறீஇய வந்தத்
திரவிலிங் கத்தின் தென்பான் முதற்பிர காரஞ் சேர்ந்து. 48

கு - ரை : பரவ அரும் மறை - துதித்தற்கு அரிய மந்திரம்; மறை: ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திர மென்ப'' ஆகலின். ஓதும் ஐம்பதங்களும் - சொல்லப்படும் ஐந்தெழுத்தை யும்; ஐந்தெழுத்தும் ஐந்து பதங்களாம். சி - சிவம், வ - அருள், ய - ஆன்மா, ந - திரோதம், ம - மலம் என்பதைக் குறிப்பனவாம். திருப்பாற் கடலிடத்துத் தோன்றும் அமுதம் போல்வது இம்மந்திரம். பிறவிநோயைத் தீர்த்து முத்திப்பேற்றை அருள்வது ஆகலின் ஐந்தெழுத்து மந்திரம் அமு தம்போல்வது என்ருர். பாற்கடலில் தோன்றிய அமுதையுண்டோர் சாவார் என்க. உள்ளி - கருதி, தியானித்து. தீர்த்தவரம்: வரம் - சிரேட்டம். தீர்த்தத்தின் மேற்கில் முனிவர் பதிட்டித்த இலிங்கத்தின் தென்புறத்தில் முதற்பிரகாரத்தை அடைந்து.

மனமொழி யதீத மாயு மண்முதற் சிவமீ ருன
இனனமர் தொகுதி யாவு மியற்றுவ தாயு நாளும்
அனகம தாயு மின்ன திதுவென அளத்தற் கொண்ணுக்
கனவெளி யாயு மோர்முத் தாபமுங் கழிப்ப தாயும். 49

கு - ரை: வாக்கு மனத்துக்கு எட்டாத, பிருதிவி தத்துவம் முதல் சிவதத்துவம் ஈருகவுள்ள. இனன் அமர் தொகுதி - ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவதத்துவங்கள்; அவை முறையே 24, 7, 5 என்பதாம். அனகம் - பரிசுத்தம். அளத்தற்கு - அளவு செய்தற்கு. கனவெளி - சுத்தம் என்ற அபரவிந்துவையும், வெளியாய அபரநாதத்தையும், பாழாய பர விந்துவையும், வெறும் பாழாய பரநாதத்தையும் கடந்துள்ள பெரு வெளி என்க. முத்தாபம் - தாபத்திரயம்; தாரேஷு, தனேஷு, புத்திரேஷு என்பன; இதனை ஈஷணுத்திரயம் என்பர். "மூவேடணை என்று முடிந்திடுமோ" என்றுர் அருணகிரிநாத சுவாமிகளும்.

ஆதியோ டந்த மின்றி அனைத்தினுந் தோய்ந்துந் தோயாச்
சோதிய தாயு மொவ்வாச் சுயம்பிர காச மாயும்
ஓதியி னனைத்து நீத்த வுறுவர்த முளத்து நீங்கா
நீதிய தாயுஞ் சச்சி தானந்த நிலைமைத் தாயும். 50

கு - ரை: சுயம் பிரகாசம்-தனக்குத்தானே பிரகாசமானது. ஓதியின்-அறிவினல், என்றது சிவஞானத்தால். உறுவர் - தவத்தோர். சத்துச் சித்து ஆனந்தவடிவுடையது.

கட்டுவீ டிரண்டு நீத்த காட்சிய தாயு மன்பிற்
கிட்டுவ தாயு மொன்று பத்தெனக் கிளக்கு முண்மை
ஒட்டுவிட் டிடாருக் கென்று மொழிதரா வின்ப மாயும்
எட்டுமே வுருவ தாயு மியைபரம் பிரம மாயும். 51

கு - ரை: கட்டு வீடு - பந்த மோட்சங்கள். ஒன்று பத்து எனக் கிளக்கும் உண்மை - தசகாரியம். கிளக்கும் - சொல்லும். ஒழிதரா - நீங்காத. எட்டு மேவும் உரு - அட்ட மூர்த்த சொருபம்; மண் நீர் அனல் வளி வான் ஞாயிறு திங்கள் ஆன்மா என்பன. பரம் பிரமம் - மேலான பிரமப்பொருள்.

உளநமை யிதயத் தெண்ணி யுறுபொறி யைந்து மாய்த்துப்
பளகமை கரண நான்கு மொருவழிப் படர வைத்துத்
தளர்வற விருந்தான் காக வுருக்கொண்ட சைல கோபன்
புளகமுண் டாகுந் தீர்த்த வரத்துமுப் போது மூழ்கி. 52

கு - ரை: மாய்த்து - கெடுத்து. பளகு - குற்றம். கரணம் நான்கு - மனம் சித்தம் புத்தி அகங்காரம் என்னும் உட்கருவிகள். சைலகோபன் - இந்திரன்: சைலம் - மலை. கோபன் - கோபித்தவன்.

ஓங்குமிந் நியதி மேவிச் சிலபக லுறையுங் காலை
வீங்குமப் புனலில் தோய்ந்த விசேடத்தாற் கருமை தீர்ந்து
பாங்குகொள் செம்பொன் வண்ணம் படைத்தது காக மேனி
தாங்குமற் றதுதெ ரிந்து சதமக னுவகை பூத்தான். 53

கு - ரை : நியதி - கடப்பாடு. தோய்ந்த விசேடத்தால் - முழுகிய சிறப்பால். காகத்தின் மேனி. சதமகன் - இந்திரன்.

பொன்னிறம் படைத்த காகத் துண்மையைப் புந்தி தேரார்
முன்னிற மொழிந்த தென்பார் புதுநிற முயங்கிற் றென்பார்
எந்நிறத் தெவனே விந்த வுருக்கொடீங் கிருந்தா னென்பார்
நன்னிறப் புனல்வி சேட நாஞ்சொலப் படுமோ வென்பார். 54

கு - ரை : தேரார் - தெளியமாட்டார். முயங்கிற்று - பொருந்தியது. இப்பாடல் கண்டோர் கூற்று.

கண்டவ ரிந்த வண்ணங் கரைந்திறும் பூது கொள்ள
அண்டரா தியர்கள் கூடி யரிட்டமுப் போதுந் தோய்ந்து
தண்டலில் சிறப்புப் பெற்ற தன்மையால் காக தீர்த்தம்
எண்டகு மினைய தீர்த்த மென்றெடுத் தியம்பி னூரால். 55

கு - ரை : கரைந்து - சொல்லி. இறும்பூது - ஆச்சரியம். அண்டர் ஆதியர் - தேவர் முதலியோர். அரிட்டம் - காகம். தண்டல் இல் - நீங்காத. காகதீர்த்தம் என்று சிறப்பித்துச் சொன்னுர்கள்.

பரவுநாங் கருணை பூத்துப் பங்குனி உத்தி ரத்தில்
விரவுமா காட்சி நல்கி முன்னுரு மேவச் செய்து
கரவுதீர் யோனி முற்றுங் கண்களாப் பொலியச் செய்தாம்
அரவல்கு லாயன் ருதி யாயிரங் கண்ண னானன். 56

கு - ரை : நாம் பங்குனி உத்திரத்தில் காட்சி தந்து. முன் உரு - இந்திரவடிவம். ஆயிரங்கண்ணன் என்னும் பெயர் தாங்கினன்.

முன்புபோ லொருமுப் பத்து முக்கோடிக் கடவு ளாரை
வன்புசா லருளி னேம்பி யவுணரை வலிந்து மாட்டி
அன்புகூ ரரசு செய்தி யாயிரங் கண்ண வென்று
நன்புல னமையக் கூறி மறைந்தன நகம டந்தாய். 57

கு - ரை : வலிந்து மாட்டி - வலியச்சென்று அழித்து. செய்தி என்று - செய்வாய் என்று. நன் புலன் அமைய - நல்லறிவு பொருந்த. நக மடந்தாய் - மலைமகளே.

மன்னிய காக தீர்த்த மாண்புங்கா ரோண மென்று
பன்னிய தலத்தின் சீரும் பங்குனி உத்தி ரத்தின்
மின்னிய வொருநாங் காட்சி விழைந்துநல் கியது மோர்ந்து
முன்னிய மத்த ருயே முயங்கியத் தலத்த மர்ந்தான். 58

கு - ரை : காகதீர்த்தச் சிறப்பும், காரோணத்தலத்தின் சிறப்பும், பங்குனி உத்திரத்தில் தந்த காட்சியும் ஆராய்ந்தறிந்து முன்புள்ள கடப் பாட்டுடன் அத்தலத்தில் இந்திரன் இருந்தான்.

ஆயவக் காலை வேந்தன் ஆயிரங் கண்ண ளுகி
மேயது தெரிந்து காண்பான் வியாழமுஞ் சுரரா னேரும்
பாயபல் வளக்கா ரோணப் பதிவயி னடைந்தார் முந்தித்
தூயவொண் குருவைத் தாழ்ந்தான் தொழுசுரர்க் கினிய சொற்ருன்.

கு - ரை : வேந்தன் - இந்திரன். காண்பான் - காணும்பொருட்டு. வியாழம் - தேவகுரு. சுரர் - தேவர். குருவை - வியாழபகவானை.

வீடரும் பழியும் வீட்டி மெய்யெலா நயன மாக
நாடருஞ் சிறப்பு நல்கு நலத்தவோ மூர்த்தி தீர்த்தம்
பாடருந் தலமிம் மூன்று மெனிலிணை பகர்தற் குண்டோ
ஆடரு மிவற்றிற் குள்ள தெவைக்குள தாயுங் காலே. 60

கு - ரை : வீடரும் - விடுதற்கு அருமையான. பழி - இணைவிழைச்சு; பிறன்மனை விழைவான் வந்தபழி. வீட்டி - கெடுத்து. நயனம் - கண். மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றும்.

என்றுமாத் தலமுன் மூன்றும் புகழ்ந்தினி திருக்குங் காலை
ஒன்றுபொன் னவுணர் மேலிட் டுடற்றிடு பகைமை மாற்ற
வென்றுமேம் படுமித் தேத்தோர் குறிநிறீஇ விழைந்து போற்றி
நன்றுநாந் தானஞ் சேற லமென நவின்ரு னன்றே. 61

கு - ரை : தலம் முன் மூன்றும் - தலம் முதலாகிய மூன்றும். உடற் றிடு - செய்யும். தேத்து - இடத்தில். ஓர் குறி நிறீஇ - ஒரு சிவலிங்கம் தாபித்து. தானம் சேறல் - நம்முடைய தேவலோகத்தை அடைதல்; தானம் - விண்ணுலகம்.

அதுபுரி தரனன் றேயென் ருயிரங் கண்ண னந்த
முதுபுகழ்ப் பழங்கா ரோண இலிங்கத்தின் முளரித் திக்கில்
கதுமென வம்பு வீழு மெல்லையிற் கடற்றீ ரத்துச்
சதுமறை புகழுந் தெய்வப் பொன்னிசங் கமத்தின் பாங்கர். 62

கு - ரை : அது புரிதரல் - அதனைச் செய்தல். முளரித்திக்கு - அக்கினி திக்கு. கதுமென - விரைவாக. தெய்வப் பொன்னி - விருத்தகாவேரி. சங்கமம் - கடலொடு கலக்குமிடம்.

வினைவல மயனைக் கொண்டு மிளிர்கருக் கிரக நொச்சி
புனைமணிச் சிகரி யாதி யாவையும் பொலியச் செய்த
அனையநன் னியமத் துள்ளா லமரரேந் திரேச னென்றோர்
வனைபெய ரிலிங்க நாட்டி மற்றதன் திருமுன் னாக. 63

கு - ரை : மயன் - தெய்வத்தச்சன். கருக்கிரகம் - கருப்பக்கிரகம். நொச்சி - மதில். சிகரி - கோபுரம். நியமத்து உள்ளால் - கோயிலினுள்ளே. அமரேந்திரேசர்என்னும் இலிங்கம். நாட்டி - தாபித்து.

முனையவச் சிரங்கைக் கொண்டு முதுநில மகழ்ந்து தூய்தாம்
அனையபா தாள கங்கை யதிர்ந்துமே லெழுமா செய்து
நினையமற் றமர ரோடு நிலவுமப் புனலின் மூழ்கித்
துனையமெய் யீரம் போக்கித் தூயவெண் ணீறு பூசி. 64

கு - ரை : முனைய வச்சிரம் - கூரிய வச்சிராயுதம். அகழ்ந்து - தோண்டி. பாதாளகங்கையை அதன் மூலம் எழுப்பி.

அந்தநற் றீர்த்தங் கொண்டே யமரரேந் திரேசற் காட்டிச்
சந்தமென் மலர்மூன் னுய தழையுப கரணங் கொண்டு
முந்தநற் பூசை யாற்றி முன்னின்று துதியுஞ் செய்து
பந்தமில் பழங்கா ரோணம் பண்புற மீட்டும் போற்றி. 65

கு - ரை : ஆட்டி - அபிஷேகம் செய்து. மலர் முன்னுய - மலர் முதலாகிய. உபகரணம் - பூசாத்திரவியங்கள். பழங்காரோணத்தை மறுபடியும் சென்று வணங்கி.

செறிபெருந் தேவ தீர்த்தத் தென்கரை யினிது மேய
குறிகிளர் கடேசம் போற்றிக் கோதிலாப் புண்ட ரீகன்
அறிதரப் பதிட்டை செய்கா ரோணமு மன்பிற் போற்றி
நெறியுறப் பல்காற் றாழ்ந்து நீங்குதல் குறியா வேந்தன். 66

கு - ரை : தேவதீர்த்தத்தின் தென்கரையில் உள்ள அமுதகடேசத்தை வணங்கி, புண்டரீகமுனிவர் பதிட்டைசெய்த காரோணத்தையும் வழிபட்டு, நீங்குதல் எண்ணிய இந்திரன்.

அரிதவ ணின்று நீங்கி யான்றபல் லமர ரோடும்
தெரிபெருங் குரவ னோடுஞ் சேணுயர் தான மேவிப்
புரிகுழ லிந்தி ராணி பொம்மல்வெம் முலையிற் றோய்ந்து
பரிகரி முதல சூழப் பரிந்தர சியற்றி வாழ்ந்தான். 67

கு - ரை: அரிது அவண் நின்று நீங்கி. குரவனோடும் - வியாழப்புத் தேனுடனும். சேண் உயர் தானம் - விண்ணுலகம். பரிந்து - அன்புடன்.

ஆயவச் சிரகங் கைக்க ணமைதரு விதியிற் றோய்ந்து
தூயநல் லமர ரேந்தி ரேசனைத் தொழுவார் யாரும்
நேயமிக் கமைய மைந்தர் மனைவியர் நிரம்ப வாழ்ந்து
பாயபல் போகந் துய்த்துப் பரகதி யடைவா ரீற்றில். 68

கு - ரை: வச்சிர கங்கையில் விதிப்படி ஸ்நானம் செய்து, அமரரேந் திரேசரை வணங்குவோர் யாரும் அன்புடன் மனைவி மக்கள் பொருந்த மிக வாழ்ந்து பல போகங்களையும் அநுபவித்து இறுதியில் மேலான முத்தியை அடைவர்.

பிரியநா மிக்குச் செய்யும் பெரும்புகழ்க் காரோ ணத்தில்
தெரியவெவ் விடத்து மேய சிவலிங்க மூர்த்தி யெல்லாம்
அரியகா ரோண மூர்த்தி யமைந்தபல் குளமு மேன்மைக்
குரியநந் தேவ தீர்த்த மாதியா முமைய ணங்கே. 69

கு - ரை: பெரும்புகழையுடைய காரோணத்தில் எவ்விடத்துமுள்ள சிவலிங்க மூர்த்தியெல்லாம் அருமையான காரோண மூர்த்தியேயாவர். பல தீர்த்தங்களும் தேவதீர்த்த முதலியனவேயாம்.

என்றனன் முக்கண் மூர்த்தி இறைவியுண் மகிழ்ச்சி பூத்தாள்
நன்றமை காக தீர்த்த நலத்தியல் பறியச் சொற்றும்
ஒன்றிய தவத்தான் மிக்கா ருவந்துகொண் மேன்மைத் தாய
வென்றியஞ் சறுவ தீர்த்தப் பெருமையும் விளம்ப லுற்றும். 70

கு - ரை: என்று இவ்வாறு சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லியருளினர். இறைவி மகிழ்வுற்றூர். இனி, தவத்தின் மிக்கோர் போற்றும் மேன்மையையுடைய சறுவதீர்த்தப் பெருமையும் சொல்லுவோம்.

காகதீர்த்தப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 894

பதினான்காவது

சருவதீர்த்தப்படலம்

மொழிபெருந் தவத்தின் உயர்சனற் குமர முனிவரன் புகழ்ச்சயி லாதி
பொழிமதுக் கமலச் சேயிதழ் சமழ்ப்பப் பொலிதரு திருவடி வணங்கி
வழிபுனற் பெருக்கிற் சருவதீர்த் தத்தின் மான்மியங் கூறென இரப்பக்
கழிமகிழ் திளைத்துத் திருமுக மலர்ந்து கரைதரத் தொடங்கினன்
[மாதோ. 1

கு - ரை: சயிலாதி - திருநந்திதேவர்; சிலாதர் புத்திரர் ஆதலின் சயிலாதி என வந்தது: தத்திதாந்தபதம். சிலாதமுனிவர் சற்புத்திரப் பேறு வேண்டுமெனச் சிவபெருமானை நோக்கி ஆயிரம் தேவவருடம் தவஞ்செய்து வருங்காலத்துப் பெருமான் எழுந்தருளி உமது கருத்தின்படி புத்திரப்பேறு அருளினேம் என்று கூறி மறைந்தருளினர். அம்முனிவர் அதுகேட்டுப் பெரு மகிழ்ச்சி கூர்ந்து வேள்வி செய்தற்பொருட்டு நிலத்தை உழும்பொழுது அந்த நிலத்திலிருந்து திருநந்திதேவர் தோன்றியருளினர் என்பது இலிங்க புராண வரலாறு. கமலச் சேயிதழ் - தாமரைமலரின் சிவந்த இதழ். சமழ்ப்ப - நாண. இரப்ப - வேண்ட. கழிமகிழ் - மிக்க மகிழ்ச்சி. கழி: "சினனே காமம் கழிகண்ணோட்டம்" (பதிற்றுப் - 22); "சால உறுதவ நனிகூர் கழி மிகல்" (நன்னூல் - 456).

செற்றமில் புவனப் பரப்பெலாம் உயிர்த்தும்
சிற்றிளங் கன்னியாய் அமரும்
அற்றமி லுமையாள் அண்ணலை வணங்கி
ஆன்றகா ரோணத்தி னின்னும்
உற்றநல் தீர்த்தச் சிறப்புநன் கறிய
உணர்த்திட வேண்டுமென் றிரப்பக்
கற்றவர் புகழ்வ தொன்றுள தென்றக்
கண்ணுதல் செய்யவாய் மலர்வான். 2

கு - ரை: உயிர்த்தும் - பெற்றும். "புவனப் பரப்பெலா முயிர்த்தும் சிற்றிளங் கன்னியா யமரும், அற்றமி லுமையாள்" என்பதன் கருத்தை, "பெற்றாள்சக தண்டங்க ளனைத்தும் அவைபெற்றும், முற்றாமுகிழ் முலையாளொடு முக்கண்ணர் விரும்பும்" (வில்லிபார-ஆதிபரு - அருச்சுனன் தீர்த்த-15); "சிவஞ்சத்தி தன்னை யீன்றும் சத்திதான் சிவத்தை யீன்றும், உவந்திரு வரும் புணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும், பவன்பிரம சாரியாகும் பான் மொழி கன்னி யாகும்" (சிவஞான சித்தியார்). கண்ணுதல் - சிவபெருமான்.

ஓங்குகா ரோண இலிங்கமென் றெவரும்
உரைசெய்நங் குறிக்குமேற் றிசையில்
தேங்குபே ரருளின் மிளிர்கருந் தடங்கட்
செல்வியென் றமர்தரு நினக்குப்
பாங்குசேர் நிருதித் திசைவயி னுளது
பல்லுயிர் களுமெளி துய்ய
ஆங்குநா மன்றே அளவில்பே ரருளால்
அமைத்தவான் சறுவதீர்த் தங்காண். 3

கு - ரை: காரோண இலிங்கத்துக்கு மேற்றிசையில், நீலாயதாட்சியம்மை சந்நிதிக்குத் தென்மேற்றிசையில், நாம் அமைத்த சறுவதீர்த்தம் உளது ஆம். தேங்கு - நிறைந்த. நிருதித் திசை - தென்மேற்கு. வயின் - இடம். வான் - சிறந்த.

தலமொரு மூன்றி னுளபல தீர்த்த சாரங்க ளனைத்தையுந் திரட்டி
நலமுற நமது சடையிடைப் புனலு நயமுறக் கூட்டியாங் கமைத்தேம்
இலகுறு சறுவ தீர்த்தமென் றொருபே ரிட்டன மன்பதைப் பரப்பின்
குலமுழு தீன்றுங் கன்னியென் றிருக்குங் கோமளக் கோற்றொடிக்
[கையாய். 4

கு - ரை: சடையிடைப்புனல் - கங்காதீர்த்தம்; என்றது ஞான கங்கை. மன்பதை - மக்கட்கூட்டம். கோற்றொடி - வளைந்த வளையல். சாரம் - தெளிவு.

தண்ணிய தீர்த்த சாரமாய்ப் பொலியும் சறுவதீர்த் தத்திற்புண் டரீகன்
புண்ணியம் பயப்ப முழுகிமெய் யோடு பொலிதர முத்தியெய் தியதால்
எண்ணிய புண்ட ரீகபுட் கரணி என்றொரு பெயர்வழங் கிடுவார்
மண்ணிய மணிகள் ததைந்தபூண் சுமந்து வளரிள வனமுலைக்
[கொம்பே. 5

கு - ரை: தீர்த்தசாரம் - தீர்த்தங்களின் தெளிவு. பயப்ப - நல்க. புண்டரிக புட்கரணி என்னும் பெயரும் சறுவ தீர்த்தத்துக்கு வழங்குவர். "புண்டரிகமென்று வெண்டாமரைக்கே பெயர்" புண்டரீக - மூன்றும் - 47; இச்சொல் வெண்டாமரை என்னும் பொருளில் வழங்குவது பெரும்பான்மையாயினும் செந்தாமரை என்னும் பொருளில் ஆளப்படும். மண்ணிய மணி - சாணையில் தேய்த்தெடுத்த கல். ததைந்த - நெருங்கிய.

இருந்தச தானஞ் செய்திடச் செயலொன்
றில்லவர் மற்றதிற் படியிற்
பெருந்தவத் தானஞ் செயலினெண் மடங்குப்
புண்ணியப் பயன்பெற லன்றித்

திருந்தநம் முலகும் பெற்றுவாழ்ந் திடுவார்
செவ்வரி கருவரி பரந்து
மருந்தமு மமுது மளாவிநந் தம்மை
மருட்டுவாள் விழிமட மயிலே. 6

கு - ரை: படியில் - நீராடினுல். எண்மடங்கு - எட்டுமடங்கு. நம் உலகு - சிவலோகம். மருந்தம் - நஞ்சு. அளாவி - கலந்து. தசதானங்களாவன: உப்பு, எள், நெய், நெல், பசு, பூமி, பொன், வத்திரம், வெல்லம், வெள்ளி என்பன.

புதையிருட் படல முழுவதுந் தபவம்
போருக முகைமுறுக் குடையத்
ததைகதிர் பரப்பிக் குணக்கெழும் பரிதி
தனித்துலாத் திடையமர் தருங்கால்
சிதைவரும் பாவ முழுவதுஞ் சிதைக்கத்
திரைப்பெருங் கங்கைமுற் றீர்த்தம்
சுதைபுரை மொழியாய் சறுவதீர்த் தத்தில்
துதைந்தினி தாடுதல் செயுமால். 7

கு - ரை: புதை இருட்படலம் - திணிந்த இருட்பிழம்பு. தப - கெட. அம்போருகமுகை - தாமரையரும்பு. முறுக்கு - கட்டு. ததை கதிர் - நெருங்கிய ஒளி. குணக்கு - கிழக்கு. பரிதி - சூரியன். துலாத்திடை - துலாராசியில். சிதைவு அரும் பாவம் - போக்குதற்கு அரிய பாவம்; சிதை வரும் பாவம் - சிதைக்க அதனுல் தம்பால் வருகின்ற பாவங்கள் எனினும் பொருந்தும். பிறர் போக்கும் பாவத்தைச் சுமத்தலால் வரும் பாவம் என்க. கங்கை முன் தீர்த்தம் - கங்கை முதலாகவுள்ள தீர்த்தங்கள். சுதை - அமுதம். துதைந்து - நெருங்கி.

கங்கைமுற் றீர்த்தங் கலந்தினி தாடுங்
காமரு துலாமதி முழுதும்
சங்கையொன் றின்றிச் சறுவதீர்த் தத்தில்
தகக்குடை பவர்தனு மதியில்
செங்கையி னடிக்கு மெம்மரு ளளிதில்
சேர்வர்தீ வினையெலாஞ் செகுப்பார்
அங்கையா மலக மெனப்பர கதியு
மடைவரா லடைநிகர் வயிற்றாய். 8

கு - ரை: கங்கைமுன் தீர்த்தம் - கங்காநதி முதலாகவுள்ள தீர்த்தங்கள். துலாமதி - ஐப்பசி மாதம். சங்கை - சந்தேகம். தக - நலமிக. தனுர் - மார்கழி. செங்கையின் - திருவாதிரைநாளில்; "மார்கழி நாள் இட்டவிழாச்

செங்கையார்'' (திருக்குற்றாலச் சிலேடை - 29). செகுப்பார் - அழிப்பார். அங்கை ஆமலகம் - உள்ளங்கை நெல்லிக்கனி. பரகதி - மேலாகிய பரமுத்தி. ஆல் அடை - ஆலிலை.

அன்றியுங் கங்கைத் திருப்பெரு நதியி
னறுபதி னுயிர வருடம்
ஒன்றிய விதியிற் படிந்தனர் பெறும்பே
றொருமதிச் சறுவதீர்த் தத்தில்
நன்றியிற் படிவார் பெறுகுவ ரென்னி
னவில்வதென் வேங்கையொள் வியிற்
றுன்றிய சுணங்கு பூத்தணு ந் தெழுந்த
துணையிள வனமுலைக் கொடியே. 9

கு - ரை: திருப்பெருநதி - மகாநதி. ஒருமதி - ஒருமாதகாலம். நன்றியில் - நன்மையுண்டாக. வேங்கை ஒள் வி - வேங்கை மரத்தின் ஒளி பொருந்திய மலர். வியின்: இன் ஐந்தனுருபு ஒப்புப்பொருள். சுணங்கு - தேமல், பசலை நிறம்.

யாவரு மெந்த முயற்சியி னுனு மிலையிலார் சறுவதீர்த் தத்தின்
மேவருஞ் சிறப்பிற் படிதரல் வேண்டு மேவுற முடிதரா தென்னில்
பாவரும் பரிமுன் னூர்ந்துசென் றேனும் பண்புறப் படிதரல் வேண்டும்
தாவரு மதுவு முற்றுறு தென்னிற் சாற்றுதுங் கேண்மட மயிலே. 10

கு - ரை: படிதரல் - முழுகல். பரிமுன் ஊர்ந்து - குதிரை முதலிய வாகனங்களில் ஏறிச்சென்று. முற்றுறுது - முடியாது.

உறையிட மந்நீர் வரவழைத் தேனு
முவந்தினி தாடுதல் வேண்டும்
கறைதப வதுவு முற்றுறு தென்னிற்
கனகமா திகள்பல வீசி
மறையவ ராடும் படிசெயல் வேண்டு
மற்றது முற்றுறு தென்னிற்
குறைவிலப் புனல்தோய்ந் தடைந்தவர்க் கண்டு
கும்பிட்டுத் துதிசெயல் வேண்டும். 11

கு - ரை: உறை இடம் - வசிக்குமிடம். கறைதப - குற்றம் நீங்க. கனகம் ஆதிகள் - பொன் முதலியவற்றை. மறையவர் - வேதங்களை ஓதி உணர்ந்த பிராமணர். அப்புனல் தோய்ந்து அடைந்தவர்க் கண்டு - அந்தச் சறுவதீர்த்தத்தில் முழுகி வந்தடைந்தவர்களைத் தரிசித்து.

அன்னது முற்ரு தென்னிலப் புனல்தோய்ந்
தடைவளி மேனியிற் படுமா
றென்னரு மெதிர்பார்த் தியங்கிடல் வேண்டு
மிதுவுமுற் ருதெனி லந்நீர்
பன்னருஞ் சிறப்பில் தோய்ந்ததா வுளத்துப்
பாவனே பண்ணுதல் வேண்டும்
சொன்னது முற்ரு தெனிலினி யவர்க்குச்
சொல்வதொன் றில்லேயா லணங்கே. 12

கு - ரை : அப்புனல் தோய்ந்து வரும் காற்று உடம்பிலே படுமாறு: புனல் - தீர்த்தம். வளி - காற்று. என்னரும் - எப்படியும். இயங்கிடல் - நடத்தல். உளத்துப் பாவனே - மனத்தால் கருதுதல். அவர்க்கு - அப் புண்ணியம் சிறிதும் உணராதாருக்கு. ஒன்று இல்லே - சிறிதும் இல்லேயாம்.

எறிதிரைச் சறுவ தீர்த்தநன் காடி
இழைபல புனேந்தகன் னிகையைச்
செறிபெருங் குடத்திற் செருத்தலம் பசுவைச்
செம்மையி னனிவிளே நிலத்தை
அறிபிற வற்றை நம்மடி யுணரு
மந்தணர் முதலியர்க் களிப்பின்
மறிவின்மூ வகைப்பா தகங்களு மொழிய
வான்முத லெய்தியின் புறுவர். 13

கு - ரை : எறிதிரை - வீசுகின்ற அலேகளேயுடைய. ஆடி - முழுகி. இழை - ஆபரணம். புனேந்த - அணிந்துள்ள. கன்னிகை - கன்னிப் பருவ முடைய பெண். குடத்திற் செருத்தல்: "குடம்புரை செருத்தல்" என்ருர் பிறரும். குடத்தின் - குடத்தைப்போன்ற. செருத்தல் - மடி. நனிவிளே நிலம் - நன்ருக விளேயும் நன்செய் நிலம். நம் அடி உணரும் அந்தணர் - நமது பாதங்களேத் தியானிக்கும் அந்தணர். மறிவு இல் - நீங்குதலில்லாத. மூவகைப் பாதகம் - தூலம், சூக்குமம், அதிசூக்குமம்; இவை முறையே பாதகம், அதிபாதகம், மகாபாதகம் என்று சொல்லப்படும். விரிந்த நூல் களில் காண்க. வான்முதல் - முத்தியுலகம்.

புண்டரீ கப்பேர் புனேந்தொளிர் மிக்க
புண்ணியச் சறுவதீர்த் தத்தின்
தண்டவாக் கரையிற் பிதிரர்தம் பொருட்டுத்
தருப்பண மாதிசெய் திடுவோர்

எண்டவா வளற்றுழ் பவரைவண் சுவர்க்கத்
தேற்றுவித் தவர்களே புல்ல
கண்டமு மமுதுங் கமழ்ந்தகோற் றேனுங்
கைத்திடக் கரையுமின் மொழியாய். 14

கு - ரை: புண்டரிகதீர்த்தம் என்னும் சறுவதீர்த்தத்தின். ஒளிர் - விளங்கும். மிக்க புண்ணியத்தைத் தரும் தீர்த்தம் என்க. பிதிர் தருப்பணம் முதலிய செய்வோர்; பிதிரராவார் படைப்புக் காலத்து அயனல் படைக்கப் பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கிடம் தென்றிசையாம். எண் தவா - எண்ணிறந்த; நினைக்கவுமுடியாத என்றபடி; எண் - எண்ணம். அளறு - கும்பீபாகம் முதலிய நரகம். ஆழ்பவர் - அழுந்துபவர் எனவே முழுகிக்கிடப்பவர் என்க. புல்லகண்டம் - கண்ட சர்க்கரை. கோற்றேன் - கொம்புத்தேன். கைத்திட - கசக்கும்படி.

மேயகார்த் திகைமார் கழிமதி யிரண்டும்
விளங்குவா னவர்பெருந் தடத்துப்
பாயநீர் குடைந்து தருப்பண மோமம்
பகர்செபந் தியானமா திகளை
ஆயவத் தீர்த்தக் கோட்டினன் காற்றி
யன்புற நம்மையுந் தொழுவார்
தூயபே றளவா தடைகுவர் குழையில்
தோய்ந்துமீள் வரிக்கயல் விழியாய். 15

கு - ரை: கார்த்திகை, மார்கழி ஆகிய இரண்டு மாதங்களிலும். வானவர் பெருந்தடம் - தேவதீர்த்தம். தீர்த்தக்கோடு - தீர்த்தக்கரை. அளவாது - அளவில்லாமல். குழையில் - காதில். மீள் - மீளும்.

வேறு

மின்னியவா யசதீர்த்த மேடமதி யிடபமதி விடாது மூழ்கிப்
பன்னியநம் மையுநினையுங் காரோணத் தலம்புகுந்து பரவு வார்க்குத்
துன்னியபல் பாதகமுங் கவைத்தகொழுந் தழல்விழுந்த துய்போ லாகும்
நன்னியமங் கொடுபுரிபுண் ணியங்களெலா மொருங்கெய்து நகுபூங்
[கொம்பே. 16

கு - ரை: வாயச தீர்த்தம் - காகதீர்த்தம். மேடமதி - சித்திரை மாதம். இடபமதி - வைகாசிமாதம். நினையும் - உன்னையும். கவைத்த - கப்பு விட்டெழும். கொழுந்தழல் - கொழுமையான தீ. துய் - பஞ்சின் நுனி. நியமம் - கடன். ஒருங்கு - ஒருசேர.

மதிக்குமிழை புணைகன்னி மதிமுழுது
முனிதீர்த்த மருவி யாடித்
துதிக்குமொரு காரோணத் தளிபுகுந்து
நமையுமொளிர் தூயோ ருள்ளம்
பதிக்குமிரு தாணிணையு நணைமலரா
திகள்கொண்டு பரவு வோர்க்கு
விதிக்குமளப் பரிதாய பேறெல்லா
முறுங்கயலின் மிளிருங் கண்ணாய். 17

கு - ரை : கன்னிமதி - புரட்டாசிமாதம். காரோணத்தளி - காரோணக் கோயில். இருதாள் நிணையும். நணை - அரும்பு. மலர் ஆதி - மலர் முதலியன. தூயோர் - சிவஞானிகள்.

நிலாவணிநம் மருள்போலுஞ் சறுவதீர்த்
தத்தறமே நிரம்பா நிற்கும்
துலாமதியிற் படிந்தாட லன்றியும்வண்
மகரமதி தூய தாகிக்
குலாவுகுட மதியிவற்றில் விடாதுதோய்ந்
தெமைப்பரவு கொள்கை யார்கொள்
இலாபமெடுத் துரைப்பவரார் நம்பதமெ
லாங்கலப்புற் றிருப்பா ரன்றே. 18

கு - ரை : நிலா அணி - சந்திரனைத் தரித்த. அறம் - சிவபுண்ணியம். துலாமதி - ஐப்பசிமாதம். மகரமதி - தைமாதம். குடமதி - மாசிமாதம்; குடம் - கும்பம். இலாபம் - பயன்.

எண்ணியமந் திரங்கள்பல வற்றினுமைந்
தெழுத்தெனவு மெவைக்கு மேலாக்
கண்ணியமா நதிகள்பல வற்றினும்வெண்
டிரைசுருட்டுங் கங்கை போலும்
மண்ணியமா மணிநிகர்பன் முனிவருளுந்
தவத்துயர்ந்த வசிட்டன் போலும்
புண்ணியமேம் படுபலமா னிடருளுமந்
தணர்போலும் பொலம்பூங் கொம்பே. 19

கு - ரை : மந்திரங்களில் திருவைந்தெழுத்தும், நதிகளுள்ளே கங்கா நதியும், முனிவர்களுக்குள்ளே வசிட்ட முனிவரும், மனிதருள்ளே அந்தணரும். கண்ணிய - எண்ணப்பட்ட. மண்ணிய மாமணி - சாணைப்பிடித்த மாணிக்கக் கல். பொலம் - பொன்.

சிறையுடைய புட்குலத்துள் தார்க்கியனே
போலுநலஞ் செறியு மானுள்
கறைதபுவான் பொலிகாம தேனுவே
போலுமரக் ககனத் துள்ளும்
குறைவறவிட் பொலிககனம் போலும்வரை
களுட்கயிலைக் குவடு போலும்
மறைபலவற் றினுங்காயத் திரிபோலும்
புருடருக்குள் மாயன் போலும். 20

கு - ரை: சிறை - சிறகு. புள் - பறவை. தார்க்கியன் - கருடன். ஆன் - பசு. கறைதபு - குற்றமற்ற. வான் பொலி - விண்ணுலகத்தில் விளங்கும். காமதேனு - தேவருலகத்துப் பசு. மரக் ககனம் - மரக்காடு. விண்பொலி ககனம்-விண்ணுலகத்தில் விளங்கும்சோலை. வரை-மலை. குவடு-மலை. மறை - மந்திரம். மாயன் - திருமால்.

பழிதபுபல் தேவருளு நமைப்போலும் பேருலகிற் பரவா நின்ற
மொழிகெழுமு பற்பலமூர்த் திகளுள்ளுங் காரோண மூர்த்தி போலும்
ஒழிவில்பல தலங்களுளுந் திப்பியமா நாகைக்கா ரோணம் போலும்
அழிவில்பல புனலுள்ளுஞ் சறுவதீர்த் தஞ்சிறந்த தாயுங் காலே. 21

கு - ரை: பழிதபு - குற்றத்தினீங்கிய. திப்பியம் - தெய்வத்தன்மை. புனல் - தீர்த்தம்.

மதிமலியுங் காரோணத் தலம்வசித்தா ரெத்தலத்தும் வசித்தோ ராவார்
கதிமலியுங் காரோண விலிங்கங்கண் டேத்தினவர் கடல்சூழ் வைப்பில்
திதிமலியு மளவிலிங்க முங்கண்டேத் தினராவார் செறியெண் ணில்லா
நதிமலியுஞ் சறுவதீர்த் தம்படிந்தோ ரெப்புனலு நனைந்தோ ராவார். 22

கு - ரை: மதிமலியும் - அறிவான் மிக்க. கண்டு ஏத்தினவர் - தரிசித்துத் துதித்தோர். எண் இல்லா - அளவில்லாத.

தேவதீர்த் தங்காக தீர்த்தமுயர் முனிதீர்த்தஞ் செறியா நின்ற
பாவநா சம்புரியு முயர்சறுவ தீர்த்தமிவை பண்பு நாளும்
மேவவுயர் படித்துறையா திகள்கருங்க லிட்டிகைகள் விரவக் கொண்டு
பூவமையப் பணிபுரிவோர் பெறும்பேறு மலரோற்கும் புகலொ ணாதால்.

உரைசெயுநாற் புனலகத்துந் தொள்ளிவிழா
தெடுத்தெறிவோ ருவக்கு மாறு
கரையகநந் தனம்புரிவோர் படித்துறையில்
தூரான்முதலாங் கரிசு தீர்ப்போர்

புரைதவிர விளக்கிடுவோர் பல்பெரும்பா
　　தகமுமறப் போக்கி நாளும்
வரைவில்சுவர்க் காதிபுவ னங்களெலா
　　மனுபவித்து வாழ்வர் மாதோ. 24

கு - ரை: நாற்புனலகத்தும் - நான்கு தீர்த்தங்களினும்; சறுவ தீர்த்தம், தேவதீர்த்தம், முனிதீர்த்தம், காகதீர்த்தம் என்பன. தொள்ளி - குழை சேறு. நந்தனம் - நந்தவனம். துரால் - செத்தை. கரிசு - குற்றம். புரை தவிர - குற்றம் நீங்க. பல் பெரும் பாதகமும் - பலவகைப்பட்ட பெரிய பாவங்களும். வரைவு இல் - அளவில்லாத.

இட்டிகையா திகள்கொண்டு பணிபலசெய்
　　யாவிடினு மின்பம் மேவ
ஒட்டியநந் தனமாதி யாவுமுளுற்
　　ருவிடினு முரைத்த நீரிற்
கிட்டியவன் குலையிலனு சிதஞ்செய்யா
　　ரெனினுயர்ச்சி கெழுமப் பூண்பார்
கட்டியகச் சிணைக்கிழித்துப் புடைத்தெழுந்து
　　நிறங்கவர்கொங் கைப்பூங் கொம்பே. 25

கு - ரை: இட்டிகை - கூட்டுமெழுகு செங்கல். பணி - திருப்பணி. உளுற்ருவிடினும் - செய்யாவிட்டாலும். குலை - கரை. அனுசிதம் - அசுத்தம். உயர்ச்சி கெழும - உயர்வு நிரம்ப.

இந்தவளம் படைத்துயர்ந்த சறுவதீர்த் தத்திடைநன் கியைய மூழ்கிச்
சந்தமிகு தமிழ்க்கும்ப முனிவன்முதற் பல்லோர்நந் தமைப்பூ சித்தே
அந்தமில்பல் சிறப்புற்று ரருட்காயா ரோகணமே யளவி லாற்றல்
பந்தமறுத் துயர்முத்தி பாலிக்கு மெவ்வுயிர்க்கும் பவள வாயாய். 26

கு - ரை: இயைய - பொருந்த. தமிழ்க் கும்பமுனிவன் - தமிழாசிரிய ராகிய அகத்திய முனிவர். அந்தம் இல் - முடிவில்லாத. ஆற்றல் - வலிமையை யுடைய. பந்தம் - பாசக்கட்டுகள். எவ்வுயிர்க்கும் முத்திபாலிக்கும்; பாலிக் கும் - கொடுக்கும்.

என்றுநுதல் கிழித்தெழுந்த விழிப்பெருமா
　　னியம்புதலு மெண்ணி லாமல்
ஒன்றுமகிழ்ச் சியிற்றுளைந்தாள் சிறிதும்வருந்
　　தாதெல்லா வுலகு மீன்றாள்

நன்றுபர னுமைக்குரைத்த திவ்வளவே
யென்றுரைத்தா னந்திப் புத்தேள்
வென்றுமிளிர் சறுவதீர்த் தம்பகர்ந்தா
மகத்தீசம் விளம்பு வாமால். 27

கு - ரை : நுதல் கிழித்தெழுந்த விழிப்பெருமான் - சிவபெருமான். நுதல் - நெற்றி; நெற்றிக்கண்ணார் என்க. ஒன்றும் - பொருந்தும். துளைந் தாள் - மூழ்கினுள். எல்லா உலகும் ஈன்ருள் - உமாதேவியார்.

சறுவதீர்த்தப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 921

பதினைந்தாவது

அகத்தீசப்படலம்

விரைத்த கடுக்கைச் சடைமுடியார் விமல உமையாள் வினவவெடுத்(து)
உரைத்த படியே தலந்தீர்த்தப் பெருமை யுரைத்தா யுறமகிழ்ந்தேன்
குரைத்த புனல்சூ ழத்தலமான் மியமற் றுளவுங் கூறுகெனும்
புரைத்த சனற்கு மாரனுக்குப் புகல்வா னந்திப் புத்தேளே. 1

கு - ரை: விரைத்த கடுக்கை - வாசனைபொருந்திய கொன்றைமாலை. விமலம் - தூய்மை. வினவ - கேட்க. குரைத்த புனல் - ஆரவாரம் மிக்க நீர். தல மான்மியம் - தலப்பெருமை. கூறுக என்னும். புரைத்த - தனக்குத்தானே ஒப்பான.

விண்ணம் பொலியு மிமயவரை
வேற்க ணுமையாள் கடிமணத்தில்
தண்ணம் பொலியுந் தடந்திருக்கைச்
சாமி திருவாய் மொழிதலைக்கொண்(டு)
எண்ணம் பொலியுந் தமிழ்முனிவ
னவனி சமன்செய் திடலெண்ணி
வண்ணம் பொலியும் பொதியவரை
வதிவான் வதியி னியங்கிடுவான். 2

கு - ரை: விண்ணம் பொலியும் - ஆகாயத்தையளாவிய. கடிமணத்தில் - திருக்கல்யாண காலத்தில். தண்ணம் - மழுவாயுதம். சாமி - சிவபெருமான். தமிழ்முனிவன் - அகத்தியர். அவனி சமன் செய்திட - வடக்குத் தாழ்ந்திருந்த பூமியைச் சமமாக நிறுத்தற்பொருட்டு. வண்ணம் - அழகு. வதிவான் - தங்கியிருத்தற்கு. வதியின் இயங்கிடுவான் - வழிச்செல்வான் ஆயினன்.

சீரார் சுவைச்செந் தமிழ்மணக்குஞ் செவ்வாய் முனிவன் வருபோழ்தே
காரார் கடல்சூழ் காரோணக் கரையில் பெருமான் மியமனைத்தும்
ஏரார் பலமா ணுக்கருக்க மியம்பி வருவான் கண்டுதொழும்
நாரார் விருப்ப மெழவந்து குருக்கேத் திரத்தை நண்ணினன். 3

கு - ரை: இயம்பிவருவதைக் கண்டு; வருவான்: வான் ஈற்றுவினையெச்சம். நாரார் விருப்பம் - அன்பு நிறைந்த ஆசை.

ஆய காலை விந்தவரை அடைந்து மகதி யாழ்முனிவன்
பாய மேரு நினைமதித்தல் பண்ணு திகழ்ந்த தடாதென்னும்
நேய மிகுமென் னுரையினையு நீத்த தெவரும் வெறுப்பவெனத்
தீய கலகஞ் செய்தகன்ருன் சிலம்பு சினந்த துளங்கொதித்தே. 4

கு - ரை: ஆய காலை - குருக்ஷேத்திரத்தை அடைந்த காலத்தில். விந்தவரை - விந்தியமலை. மகதியாழ் முனிவன் - நாரதர். பாய மேரு - பரவியுள்ள மேருகிரி. அடாது - பொருந்தாது. நீத்தது - நீக்கியது, விட்டொழித்தது. சிலம்பு - விந்தியமலை.

அந்த வமையந் தனக்கெதிரே அடையும் பரிதி முகநோக்கி
விந்த மெனையே சூழ்ந்திடுதி மேரு வரையைச் சூழ்குவையே
னந்த நினது போக்கொழிய நானே எழுந்து தடுத்திடுவேன்
முந்த வெனலுந் திமிராரி முறுவல் புரிந்தீ துரைத்திடுவான். 5

கு - ரை: பரிதி-சூரியன். விந்தம் பரிதி முகம் நோக்கி, மேருமலையை வலம் வருவாயாயின் நீ செல்லும் வழியை நானே தடுத்திடுவேன், என்னையே வலம் வருவாய் என்றது. திமிராரி - சூரியன்; திமிரம் - இருள். அரி - அழித்தொழிப்பவன்.

திசைதேர் வதனுக் கறிகுறியாய்த் தேவர் பலர்க்கு மாலயமாய்
வசைதீர் பொன்னாய் மாதேவன் வண்கைக் கொள்ளுஞ் சராசனமாய்
அசையா நிலையிற் பொலிதருவெற் பதைச்சூ ழாது நினைச்சூழும்
நசையா மரியா லடைபயனை நரியா லடையப் பெறுமாயின். 6

கு - ரை: தேர்வதனுக்கு - தெளிந்து கொள்ளுதற்கு. அறிகுறி - அடையாளம். ஆலயம் - கோயில். மாதேவன் - சிவபெருமான். சராசனம் - வில். வெற்பு அதை - மலையாகிய அம்மேருவை. நசை - விருப்பம். சிங்கத்தால் அடையக்கூடிய பயனை நரியால் அடையப்பெறின் என்க.

பொங்கு சுவையா ரமுதுண்பார்
புற்கை யுணவும் பொருந்துவரோ
தங்கு பெரும்பாற் கடலாடுந்
தகையர் சிறுமான் குளப்படிநீர்
முங்கு திறமு முணர்வர்கொலோ
முழுமால் வரையின் பெருமையெணு(து)
இங்கு மொழிந்தா யினிமொழியேல்
என்ருன் செறிகச் சளப்பகைவன். 7

கு - ரை: புற்கை - கூழ், இழிந்த உணவு. முங்கும் - முழுகும். எண்ணுது. செறி கச்சளப் பகைவன் - சூரியன்; கச்சளம் - இருள்.

மேரு வரைமிக் கிகழ்ந்ததென வீணை முனிவன் சொலக்கேட்டோம்
ஆரு மதுபொய் யெனநேரே அஞ்சா திகழ்ந்தான் மார்த்தாண்டன்
சேரு நடவை தகைந்தின்னே திகைக்கு மாறு புரிவலெனப்
பாரும் விசும்பு நடுநடுங்கப் பறம்பாம் விந்த முயர்ந்ததால். 8

கு - ரை : வீணை முனிவன் - நாரதன். மார்த்தாண்டன் - சூரியன். நடவை - வழி. தகைந்து - தடுத்து. பறம்பாம் விந்தம் - மலையாகிய விந்தியம்.

சிறிய கல்வி யாளர்மனச் செருக்குப் போலு மறனியற்றூர்
முறிய வெழுதீ வினைபோலு மொய்த்த திருவம் பலபடைத்தும்
அறிய வுலோப மகலாதார் பழியே போலு மவிர்கோள்கள்
மறிய வெழுந்து புடைபரந்து வானு றடைத்த தொருவிந்தம். 9

கு - ரை : அற்பக் கல்வியுடையோர் செருக்கையும், அறஞ் செய்யா தார்அழியச் செய்யும் தீவினையையும், நிறைந்த செல்வம் பல படைத்தும் உலோபகுணம் நீங்காதோர் பழியையும் போல. கோள்கள் - கிரகங்கள். வானுறு - ஆகாய வழியை; ஆறு - வழி.

விந்த மெழுந்திவ் வாறுவா னடவை தகைப்ப வெய்யோன்முற்
சந்த மலியுங் கோளியக்கந் தவிர்ந்த ததனு லுலகநெறி
நந்த வுணர்ந்து வானுடர் நளின மலர்த்து வானோடும்
முந்த வுயரு மொருகுருக்கேத் திரத்தி னடைந்தார் முனிவனெதிர். 10

கு - ரை : வான் நடவை - ஆகாயவீதி. தகைப்ப - தடைசெய்ய. வெய்யோன் முன் கோள் இயக்கம் - சூரியன் முதலாகவுள்ள கிரகங்களின் செலவு. உலகநெறி நந்த - உலகத்திலே செய்யும் நியமங்கள் கெட; நந்துதல் - கெடுதல், ஆக்கம் பெறல். நளினம் மலர்த்துவான் - சூரியன்; நளினம் - தாமரை. வான்நாடர் முனிவன்எதிர் அடைந்தார்.

அடைந்த பலரு முனிவனடி அடுத்து வணங்க முகமனுரைத்(து)
உடைந்த மனத்தி னெல்லீரும் ஒருங்கீங் கடைந்த கருமமெவன்
மிடைந்த தெவனுங் களுக்கென்றுன் மீட்டும் பணிந்து வானுடர்
தடைந்த பொறியா யுலகநெறி தவறச் சார்ந்த தொன்றுளதால். 11

கு - ரை : முகமன் - உபசாரவார்த்தை. கருமம் - காரியம். மிடைந்தது - வந்தடைந்தது; துன்பம். தடைந்த பொறியாய் - புலன்களைப் பொறிகளின் வழிச்செல்லாமல் தடைசெய்தவரே; 'பொறிவாயில் ஐந்தவித் தாய்' என்க. உலக நெறி தவற - உலகத்திற் செய்யும் கடப்பாடுகள் நீங்குமாறு. ஒன்று - ஒருசெயல்.

மேரு வரையி னோடிகலி விந்த மெழுந்து கோளனைத்துஞ்
சாரு நடவை தகைந்ததது சாற்ற வடைந்தோ மென்றிறுத்தார்
ஒருந் தமிழ்மா முனிவரனெய் யொழிந்த காலைச் சுடரெவருந்
தேரும் படிமே லெழுதிறமே செத்த தென்று முறுவலித்தான். 12

கு - ரை : இகலி - மாறுபட்டு. நடவை தகைந்தது - வழியை அடைத்தது; தகைதல் - தடுத்தல். கோள் - கிரகம். சாரும் - பொருந்தும். இறுத்தார் - விடையளித்தார். முனிவரன் - முனிவருள்ளே சிறந்தவர். நெய் ஒழிந்த காலை - எண்ணெய் நீங்கிய காலத்து. தேரும்படி - தெளியும்படி. செத்தது - ஒப்பானது. முறுவலித்தான் - புன்சிரிப்புக் கொண்டார்.

எல்லா வமர ரொடும்விந்த மேவு மிடத்தை யணுகுதலும்
வல்லா வொருவன் வல்லுநன்முன் குறுகும் விதம்போல் வரைகுறுகிப்
பொல்லா நடுக்கத் தொடுநிற்பப் புகலுங் காயா ரோகணத்து
நல்லா வுகைக்கும் பெருமானை நாடி யுளத்திற் குறிக்கொண்டு. 13

கு - ரை : வல்லா ஒருவன் - மாட்டாத ஒருவன், வலியில்லாத என்றபடி. வல்லுநன் - வலிமையுடையான். வரைகுறுகி நடுக்கத்தொடு நிற்ப. நல் ஆ உகைக்கும் - சிறந்த இடபத்தை ஏறிச் செலுத்தும். குறிக்கொண்டு - தியானித்து.

ஆய பொதியா சலத்தினை நா மடைந்து புடவி சமன்செய்து
மேய கயிலை யுறவிவ்வழி மீளு மளவும் பாதலத்து
நேய மருவ விருத்தியென நிகரி லொருகை வரைத்தலைவைத்(து)
ஏய விருத்தி யுலகநெறி யெல்லா நடக்கும் படிசெய்தான். 14

கு - ரை : பொதியாசலம் - பொதியில்மலை. புடவி - பூமியை. மீளும் அளவும் - திரும்பி வரும் வரையிலும். இருத்தி - இருப்பாய். வரைத்தலை - விந்தமலையின் உச்சியில். ஏய இருத்தி - நன்றாக அழுத்தி. உலகநெறி - உலகத்தில் செய்யும் கடப்பாடுகள் (கந்தபுரா - விந்தம்பிலம்புகு - 7 - 9).

ஒழியா வோகை நனிமருவி யுறுவா னுடர் தோத்திரங்கள்
மொழியா முனிவன் விடைகொண்டு முந்தித் தத்த மிடம்புகுந்தார்
பழியாப் பலமா னுக்கரொடும் பரவு மெங்க டமிழ்முனிவன்
வழியா தரித்து நடந்துபுகழ் வளர்கா ரோணத் தலமடைந்தான். 15

கு - ரை : ஓகை=உவகை - மகிழ்ச்சி. அகத்திய முனிவரிடத்து விடை பெற்றுக்கொண்டு. பழியா - பழித்தலில்லாத.

அந்தத் தலத்து வளமுழுது மமைய நோக்கி நனிமகிழ்ந்து
முந்தப் பிரதக் கணஞ்செய்து தேவ தீர்த்த முனிதீர்த்தம்
சந்தத் துயர்வா யசதீர்த்தஞ் சறுவ தீர்த்த மிவற்றன்பு
நந்தப் படிந்து நீறணிந்து நவில்கண் மணிமா லிகைபூண்டு. 16

கு - ரை: பிரதக்கணம் - வலம் வரல். தேவதீர்த்தம், முனிதீர்த்தம், காகதீர்த்தம், சறுவதீர்த்தம் ஆகிய தீர்த்தங்களில். அன்புநந்த - அன்பு மிக. மாலிகை - மாலை. வலம்வரல்; "மதிலினுட்புறம் வலம் வரல் புறம் வலம் வருதல், விதியி னுற்கரங் குவித்தல்மெய்த் தோத்திரந் தியானம், எதிரி றைஞ்சுசாட் டாங்கமெய் வலமென ஏழும், அதிக மொன்றிலொன் ருயிர மடங்கென லாமால்" (குற்ருலத்தல - வேடன்வலம் - 3). வாயசம் - காகம்.

ஆரா வன்பி னருள்கொழிக்கு மமுத கடேசம் போய்ப்பரவிப்
பாரா தரிக்கு மமரரேந் திரேசம் புகுந்து பணிந்தெழுந்து
தேரா வுணர்வோர்க் கினிக்குமுனி திருக்கா ரோணஞ் சென்றிறைஞ்சிப்
பேரா வாய்மைத் தமிழ்முனிவன் பெருங்கா ரோணத் தளிபுகுந்தான்.

கு - ரை: ஆரா அன்பு - அமையாத அன்பு. அமுதகடேசம் அமரரேந்திரேசம் முனிதிருக்காரோணம் பெருங்காரோணம் தரிசித்தார். பேரா வாய்மை - நீங்காத மெய்ம்மையையுடைய. தளி - கோயில்.

உள்ளங் குளிரக் கைதலைமே லுற்றுக் குவியக் கண்ணருவி
வெள்ளம் பொழியப் பரவசமாய் மேனி முழுது மயிர்சிலிர்ப்பக்
கள்ளங் கருதார் செறிதிருமுற் கசிந்து பணிந்து பணிந்தெழுந்து
வள்ளம் பொருமா முலைபாகப் பெருமான் முன்ன மகிழ்ந்தடைந்
[தான். 18

கு - ரை: உச்சியிற் கரங்கூப்பி. பரவசம் - தன்வசமிழத்தல். கள்ளம் - வஞ்சகம். "கள்ளத் திருக்கோயில் காணலாம்" குமரகுருபரர். திருமுன் - சந்நிதியில். வள்ளம் பொரும் - கிண்ணத்தையொத்த: பொரும் - பொருவும்.

தருக்கா நின்ற திறனெழித்துச் சார்ந்தா ருளத்தை யழன்மெழுகின்
உருக்கா நின்ற பெருங்கருணை யொளியை மீட்டு மானந்தம்
பெருக்கா வினித்துத் தெவிட்டெடுப்பப் பிறங்கா நின்ற கோற்றேனைத்
திருக்கா ரோணத் தாரமுதைத் திகழ்கண் களிப்பக் கண்டனனே. 19

கு - ரை: தருக்காநின்ற திறன் - செருக்குற்ற நிலைமை. அழல் மெழுகு - நெருப்பிலிட்ட மெழுகு. பெருக்கா - பெருக்கி. தெவிட்டெடுப்ப - தெவிட்ட. கோற்றேன் - கொம்புத்தேன்.

கண்டா னயனு தியருமினுங் காணுப் பெரியோ னருட்குறியைக்
கொண்டா னளவாப் பேருவகை குடந்தம் பட்டு நேர்நின்று
விண்டான் வேறென் றெண்ணுவது மேலு மேலு மமுதள்ளி
உண்டான் பொருவத் துதிமொழிய லூற்றுன் மொழியக் கற்றுனே. 20

கு - ரை : அருட்குறி - சிவலிங்க வடிவம். குடந்தம்பட்டு - வணங்கி, வழிபட்டு: "குடவென்பது தடவென்பதுபோல வளைவை உணர்த்துவதோர் உரிச்சொல்லாதலின், அதனடியாகப் பிறந்த பெயருமாம்" என்பர் நச்சினர்க்கினியர். குடந்தமாவது : "நால்விரன் முடக்கிப் பெருவிரல் நிறுத்தி — நெஞ்சிடை வைப்பது குடந்த மாகும்" என்பது காண்க. வேறென்று எண்ணுவது விண்டான் : விண்டான் - நீங்கினுன்.

வேறு

வெள்ளலைநீர் மண்முழுதும் விரிபிலத்துள் கவிழாது
புள்ளலைமா முடியடங்கப் பொருத்தியவல் லவனைக்
கள்ளலைதே மலர்க்கொன்றை யானைக்கா ரோண
வள்ளலையன் புறவெண்ணு மனமென்ன மனமே
மாதேவன் தனையெண்ணு மனமென்ன மனமே. 21

கு - ரை : வெள் அலை நீர் - வெள்ளிய அலைகளையுடைய கங்கை நீர். பிலம் - பாதலவுலகம். சிறந்த முடியின்கண் அடங்க. "நெஞ்சே நீ நினையாய், நிமிர் புன்சடை நின்மலனை" (தேவா).

பூவானைப் பாகுசெய்து புரங்கொலவே வியமால்
ஏவானை எண்ணுவா ரிதயத்தி னின்றுந்
தாவானைச் சிவராச தானிவளர் நிகம
மாவானை நயந்தேத்தா வாயென்ன வாயே
வானவர்தே வனையேத்தா வாயென்ன வாயே. 22

கு - ரை : பூவான் - பிரமதேவன்; மலரவன். பாகு - பாகனுக. மால் ஏ - திருமாலாகிய அம்பு. சிவராசதானி - நாகபட்டினம். நிகமம் - கோயில். "கல்லானிழற் கிழாயிடர் காவாயென வானே, ரெல்லாமொரு தேராயயன் மறைபூட்டிநின் றுய்ப்ப, வல்லாயெரி காற்றீர்க்கரி கொல்வாசுகி நாண்கல், வில்லாலெயி லெய்தான்" (ஞான - விழிமிழலை - தேவா). "வாயே வாழ்த்து கண்டாய்" (நாவுக் - தேவா).

பகையானை யதள்போர்த்த பண்ணவனைப் புரங்கொல்
நகையானைத் திருவரையில் நாடோறும் உடுக்கும்
திகையானைக் கருந்தடங்கண் செல்வியொரு பாகத்
தகையானை வணங்காத தலையென்ன தலையே
சங்கரனை வணங்காத தலையென்ன கலையே. 23

கு - ரை : பகை யானை - பகைத்த யானை; என்றது தாருகாவன முனிவர் ஏவிய யானையை. அதள் - தோல். பண்ணவன் - கடவுள். புரங் கொல் நகையான்: "அன்றின ரரியென வருபவ ரரிதினின், ஒன்றிய திரிபுர மொருநொடி யினிலெரி, சென்றுகொள் வகைசிறு முறுவல்கொ டொளிபெற நின்றவர்" (ஞான - தேவா - வீழி). திசையானை - திசைகளையுடையானை. கருந்தடங்கட் செல்வி - நீலாயதாட்சி. சங்கரன் - சுகத்தைச் செய்பவன். "தலையே நீ வணங்காய் ... ..." (தேவா).

நடிப்பவனம் பலத்திவர்ந்து நலங்கருதா வொருமான்
பிடிப்பவன்யா வருமகிழப் பிறையினெடு கங்கை
முடிப்பவன்கேத் திரராச முதல்வனுல கனைத்தும்
நொடிப்பவன்வெண் ணீறணியா நுதலென்ன நுதலே
நுண்ணியன்வெண் ணீறணியா நுதலென்ன நுதலே. 24

கு - ரை : மான் பிடித்தல் - கையில் மானேந்தல். நொடிப்பவன் - அழிப்பவன்; சர்வசங்காரகர்த்தா; நொடித்தல் - அழித்தல். நுதல் - நெற்றி. நுண்ணியன் - அணுவுக்கணுவாயினன்.

அண்டத்தா னவற்றினுக்கு மப்பாலா னணிந்த
முண்டத்தான் திருநெடுமான் முதுகெலும்பில் கொண்ட
தண்டத்தான் வானுடர் தங்களுயிர் காத்த
கண்டத்தா னுருநோக்காக் கண்ணென்ன கண்ணே
காரோண னுருநோக்காக் கண்ணென்ன கண்ணே. 25

கு - ரை : அண்டத்தான் அவற்றினுக்கும் அப்பாலான்: "அண்டங்க ளுள்ளும் புறம்புங் கரியாயினனும்" (பரஞ் - திரு). திருமாலின் முதுகெலும் பைத் தண்டமாகக் கொண்டமை: 'துங்க மாமணித் தூணில்வந் திரணியன் தோள்வலி தனைவாங்கும், சிங்க வேற்றுரி யரைக்கசைத் துலகெலாந் தேர்ந்தளந் தவன்மேனி, அங்கம் யாவுமோர் கதையதாக் கொண்டத ளங்கி யாப் புனைகாழிச், சங்க வார்குழைச் சட்டைநா யகன்துணைத் தாமரைச் சரண்போற்றி" (சீகாழித்தலபு - கடவு - 5). வானோர் உயிர்காத்த கண்டம்: ஆலகாலவிடமுண்டமை குறித்தது. "கண்காள் காண்மின்களோ, கடல் நஞ்சுண்ட கண்டன்றனை" (அங்கமாலை).

தவமரு வுயிர்க்கருளுந் தத்துவனை யுருவ
நவமுரு வைந்தொழிலு நடத்திவரு வானை
அவமிலா தென்றுமிளி ராதிபுரா ணத்துச்
சிவபிரான் சீர்கேளாச் செவியென்ன செவியே
தேவர்பிரான் சீர்கேளாச் செவியென்ன செவியே. 26

கு - ரை : தவம் அரு உயிர் - தவத்தினின்று நீங்காத ஆன்மாக்கள்; ஈண்டுத் தவமாவது சரியை கிரியா யோகங்களையும் அதனால் பெற்ற ஞானத்தையும் எனக்கொள்க. தத்துவன் - மெய்ப்பொருளாக உள்ளவன்; "யார்க்கும் தெரியாத தத்துவனை", "தானன்றி வேறொன்றில்லாத் தத்துவனை" (நாவுக் - தேவா). ஐந்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. அவம் - வீண். ஆதிபுராணத்தலத்துள்ள சிவபிரான். "செவிகாள் கேண்மின்களோ, சிவனெம்மிறை செம்பவள, எரிபோல் மேனிப் பிரான் திறம் எப்போதும் ..." (தேவா).

திங்கள்வார் சடையபெருந் தேவேச வுமையாள்
பங்களா வுறநயந்த பண்ணவவெண் ணில்லா
அங்கள்வார் மலர்த்தடஞ்சூ ழாதிபுரா ணத்து
நங்கள்நா யகவென்னு நாவென்ன நாவே
நமச்சிவா யாவென்னு நாவென்ன நாவே. 27

கு - ரை : சடைய - சடையினையுடைய. பெருந்தேவேச - பெருந்தேவர்களாகிய பிரம விஷ்ணுக்களுக்குத் தலைவனே; ஈசன் - எப்பொருட்குந் தலைவன். பங்கு அளாவுற - பாகத்திலே கலந்திருக்க. எண் இல்லா - அளவில்லாத. அம் கள் வார் மலர்த்தடம்: வார் - ஒழுகும். தடம் - தடாகம். இறுதியடி பஞ்சாக்கரத்தை உச்சரியாத நா நாவல்ல என்றபடி. அஃது எற்றுலியன்றதோ? என்க. " வாயே வாழ்த்து கண்டாய் " (தேவா).

பிறைக்கண்ட முடிக்கணிந்த பேராளன் கொடிய
துறைக்கண்ட கரைவதைத்துத் தன்துணைத்தாள் தொழுவான்
மறைக்கண்ட வாவுநரை வாழ்விக்குங் கருணைக்
கறைக்கண்டன் பணிபுரியாக் கையென்ன கையே
காரோணன் பணிபுரியாக் கையென்ன கையே. 28

கு - ரை : பிறைக்கண்டம் - பிறைத்துண்டம்; இளம்பிறை. கண்டகர் - பகைவர். கொடிய துறை - கொடுமையான பாவப்பகுதிகள். தொழுவான் - தொழும்பொருட்டு. அவாவுநர் - விரும்புவோர். கறைக்கண்டன் - நஞ்சக் கறை பொருந்திய கண்டத்தையுடையோன்; நீலகண்டர். பணி - திருவடித் தொண்டு. யாக்கை - உடம்பு; "ஆக்கை யாற்பயனென், அரன்கோயில் வலம் வந்து, பூக்கை யாலட்டிப் போற்றியென் னுதவிவ், ஆக்கை யாற்பயனென்" (திருவங்கமாலை).

நண்ணால்குறித் திரவுபக னுற்கரணங் களுமொழித்(து)
எண்ணால்பிறி திலையாக முயலுநர்க்கே யின்பம்
பண்ணால்பிறர்க் கிலையாகப் பரவருள்செய் கருணை
அண்ணல்சின கரஞ்சூழா வடியென்ன வடியே
ஆதிபுரா ணனைச்சூழா வடியென்ன வடியே. 29

கு - ரை : நண்ணல் குறித்து - திருவடியைப் பொருந்துதலைக் குறிக்கோளாகக்கொண்டு. இரவு பகல் - இராத்திரி காலத்தும் பகற்காலத்தும்; எப்போதும் என்க. கேவல நிலை சகல நிலை எனினுமாம். நாற்கரணம் - மனம் சித்தம் புத்தி அகங்காரம் என்னும் உட்கருவிகள். ''அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தையே யாக'' என்றமை காண்க. முயலுநர் - முயற்சி செய்வோர். கருணை அண்ணல்-சிவபெருமான். சினகரம்-கோயில். ''கால்களாற் பயனென் - கறைக்கண்ட னுறைகோயில் - கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் - கால்களாற் பயனென்'' (நாவுக் - தேவா).

இருநான்கு முன்னான்கு மீரெட்டுங் கடந்தான்
உருநான்கு மருநான்கு முபயமொன்று மமைந்தான்
திருநான்கு பதமுமெனுந் தெய்வநீ ராதி
ஒருநான்குந் தோயாத வுடம்பென்ன வுடம்பே
ஒளிகிளர்கண் மணிபூணா வுடம்பென்ன வுடம்பே. 30

கு - ரை : எட்டும் பன்னிரண்டும் பதினாறும் கடந்தான்-முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த சிவபரம் பொருள்: தத்துவாதீதர்; ''ஐயைந்துக் கப்புறத்தானை''. உரு நான்கு - பிரமன் மால் உருத்திரன் மகேசுரர் வடிவங்கள். அருநான்கு - விந்து நாதம் சத்தி சிவம் என்பன. உபயம் ஒன்று- அருவுரு; சதாசிவமூர்த்தி: நவந்தரு பேதங்களாம். தெய்வநீராதி ஒரு நான்கு - தேவதீர்த்தம் முனிதீர்த்தம் காகதீர்த்தம் சருவதீர்த்தம் என்பன. தோயாத - முழுகாத. கண்மணி - உருத்திராக்கமணி.

அற்றமறுத் தெம்மைவழி யடிமைகொடு புரப்பாள்
கற்றவர்கள் புகழ்ந்தேத்து கருந்தடங்க ணம்மை
உற்றமறை யொருநான்கு முவந்துபுகழ்ந் தேத்தப்
பெற்றபதங் கருதாதார் பிறப்பென்ன பிறப்பே
பிறங்குமவள் சீர்பேசார் பிறப்பென்ன பிறப்பே. 31

கு - ரை : அற்றம் அறுத்து: அற்றம் - சோர்வு. வழியடிமை - பரம்பரையடிமை. கருந்தடங்கணம்மை - நீலாயதாட்சி. பதம் - திருவடிகள். சீர் - சிறப்பு. அவள் - அவ்வுமாதேவியார். இந்தப் படலம் 21வது செய்யுள் முதல் இச்செய்யுள் வரையுள்ள 11 பாடல்களும் திரு அங்கமாலைபோல ஒவ்வொரு உறுப்புக்களின் பயன் இன்னதெனக் கூறியுள்ளமை காண்க.

இனி, இச்செய்யுள்கள் படர்க்கைப் பரவலாய் ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி நான்கடி இற்ற பின்ஓரடி மிக்குவந்த கொச்சக ஒருபோகாம் (தொல் - செய் - சூத் 149. நச்).

வேறு

என்றுதுதித் தேத்தி, நன்றுவலஞ் சூழ்ந்து
துன்றுமகிழ் பூத்தான், குன்றுபிலம் வீழ்த்தான். 32

கு - ரை : வலஞ் சூழ்ந்து - பிரதட்சணம் செய்து. குன்று - விந்தமலை. பிலம் - பாதலம். விழ்த்தான் - அழுந்தச் செய்தவராகிய அகத்தியமுனிவர்.

அம்மைதிரு முன்னர்ச், செம்மையுறச் சார்ந்து
வெம்மைகொடு துதிப்பான், மும்மைத்தமிழ்க் குரவன். 33

கு - ரை : வெம்மை - விருப்பம். மும்மைத் தமிழ் - இயல் இசை நாடகம்.

வேறு

ஆய கருந்தடங்கண் அம்மை திருப்பாதம்
பாய பிறவிப் பரவை கடப்பதற்கு
நேய மலியும் நெடுங்கலமே போலும்

ஆன்ற கருந்தடங்கண் அம்மை திருப்பாதம்
ஏன்ற பிறவி இருங்காடு மாய்ப்பதற்குக்
கான்ற சுடர்வைக் கணிச்சியே போலும்

அன்பார் கருந்தடங்கண் அம்மை திருப்பாதம்
வன்பார் பிறவித் துணங்கறன் மாய்த்திடுதற்(கு)
இன்பா ருதய இரவியே போலும். 34

கு - ரை : பாய பிறவிப் பரவை - பரந்த பிறவியாகிய கடல். நெடுங் கலம் - பெரிய மரக்கலம். இருங்காடு - பெரிய காட்டை. வை கணிச்சி - கூரிய மழுவாயுதம். துணங்கு அறல் - நெருங்கிய இருட்டு. உதய இரவி - உதயசூரியன்.

அளிக்குங் கருந்தடங்கண் அம்மை திருநாமம்
விளிக்குங் கருமலமாம் வீடாத நோய்க்குத்
தெளிக்கும் வரையில் செறியதகம் போலும்

அரிய கருந்தடங்கண் அம்மை திருநாமம்
கரிய மலமாம் கடிய பறம்பிற்குச்
சரிய அடர்க்கும் சதகோடி போலும்

ஆண்ட கருந்தடங்கண் அம்மை திருநாமம்
பூண்ட கருமலமாம் பொல்லா வரவிற்கு
நீண்ட சிறையி னிலாங்கலுழன் போலும். 35

கு - ரை : அளிக்கும் - கருணைசெய்யும்; அளி - கருணை. கருமலம் - கரிய ஆணவமலம், இருள்மலம். விடாத-அழியாத. வரையிற் செறி அதகம்-

மலை மருந்து. கடிய பறம்பு - வலிய மலை. அடர்க்கும் - பொடிக்கும். சதகோடி - வச்சிராயுதம். பொல்லா அரவு - கொடிய பாம்பு. சிறை - சிறகு. கலுழன் - கருடப்பறவை.

இவ்விரண்டு செய்யுட்களும் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத்தாழிசை.

வேறு

இம்மைப் பயன்முழுது மீயுங் கருந்தடங்க ணம்மைதாளே
அம்மைப் பயனு மொருங்களிக்குங் காரோணத் தம்மைதாளே
செம்மைப் பதமுத்தி நல்குந் திருநாகை யம்மைதாளே
மும்மைப் பொருளுணர்ச்சி முற்றின்பு நல்குநவி லம்மைதாளே. 36

கு - ரை: தாளே - திருவடியே. அம்மைப்பயன் - மறுமைப்பயன். செம்மைப்பதமாகிய முத்தியைக் கொடுக்கும். இம்மை, மறுமை, வீடு ஆகிய பேறுகளை ஒருசேரத்தரும் என்க. மும்மைப்பொருள் உணர்ச்சி - பதி பசு பாசங்களின் அறிவு. முற்று இன்பு நல்கும் - முடிவாகிய சிவபோக நுகர்ச்சியையும் அருளும் என்றபடி.

வேறு

என்று நெஞ்சநெக் குருகிடக் கண்கணீ ரிறைத்திடத் துதிசெய்து
வென்று மேம்படு செந்தமிழ் முனிவரன் விடைகொடு வெளிவந்து
நன்று சால்கருந் தடங்கண்ணி மேவிய நற்றளி வடமேற்கில்
ஒன்று மாலயஞ் சூழ்தரு பெருமதிற் குத்தர திசைக்கண்ணே. 37

கு - ரை: செந்தமிழ் முனிவரன் - அகத்திய முனிவர். தளி - கோயில் ஆலயத்தைச் சூழ்ந்துள்ள பெருமதிலின் வடக்குத் திக்கில்.

வேறு

தேடருஞ் சறுவ தீர்த்தத்தீ சான திசைவயிற் சிறந்ததே யாகி
வீடருஞ் சிறப்பின் மேயது நாளும் விளக்கஞ்சார் நித்திய கங்கை
நாடருந் தலத்தோ டமைந்தவத் தீர்த்த நண்ணுபு குறுமுனி படிந்து
கோடருங் காயா ரோகண விலிங்கங் குலவுகா லந்தொறுங் கண்டே. 38

கு - ரை: ஈசானதிசை - வடகிழக்கு. வயின் - இடம். வீடு அரும் - நீங்குதற்கரிய. நாளும் - எப்போதும். நித்திய கங்கையிற் படிந்து. கோட அரும் - கோணுதலில்லாத. கண்டு - தரிசித்து.

அதுதனைப் பூசித் தருந்தவம் புரிவான்
அதற்குத வகன்றிசை யணித்தில்
கதுமென வடைந்து தன்பெயர் விளங்கக்
காட்டுமோ ரிலிங்கந்தா பித்து

மதுமல ராதி கொண்டுபூ சித்து
மாண்புசா லகத்திய முனிவன்
சதுமுக னுலும் புரிவதற் கரிய
தவஞ்செய்வான் பின்னுமீ தியற்றும். 39

கு - ரை : உதவகன் திசை - அக்கினி திக்கு. அணித்தில் - சமீபமாக. தன் பெயர் என்றது அகத்தியரை. மது மலர் - தேனோடு கூடியமலர். சதுமுகன் - நான்முகக் கடவுள்.

அருமையிற் றன்பேர் புனைந்துதா னிறுவு
மருளிலிங் கத்தினை யாட்ட
ஒருமையிற் பலருங் குடைந்தினி துய்ய
வுன்னியா வயினெரு தீர்த்தம்
பெருமையிற் றெட்டுத் தன்கடப் புனலும்
பெய்துறப் படிந்தெடுத் தாட்டித்
திருமயிற் சாயற் பாகனைப் பூசை
செய்தருந் தவம்புரி காலை. 40

கு - ரை : தன்பேர் புனைந்து - அகத்தீசர் எனச் சொல்லி. நிறுவும் - பதிட்டை செய்யும். ஆவயின் - அவ்விடத்தில். தொட்டு - தோண்டி. தன் கடப்புனல் - கமண்டல தீர்த்தம். படிந்து - முழுகி. ஆட்டி - அபிஷேகம் செய்து.

வேறு

நாடுதிறல் வாளவுணர் நமுசிமுத லானோர்
கோடுசிலை வாள்பலகை குந்தமுறு கையர்
நீடுபுவ னங்களி னெருப்பெழ விழிப்பார்
கூடுபல சேனையொடு கோளமர் குறித்தார். 41

கு - ரை : நமுசி முதலிய அவுணர்கள். கோடு சிலை - வளைந்த வில்.

பாயமுகி லும்பரவை யுங்குலை குலைந்து
சாயநனி யார்த்தனர் தடஞ்சிலை வளைத்தார்
மாயமிது வென்கொலென வாசவ னளிக்கும்
நேயமலி மாநகர் வளைந்தட நினைந்தார். 42

கு - ரை : பாய முகில் - பரவிய மேகம். பரவை - கடல். குலை குலைந்து - நடுநடுங்கி. வாசவன் - இந்திரன். மாநகர் என்றது விண் ணுலகத்தை.

காவலரை ஓட்டியுயர் கற்பக முறித்தார்
பாவலர்சொல் தேனுவையும் பற்றினர் பிணித்தார்
மாவலர் கதுப்பின்மட மாதரை யலைத்தார்
ஏவலரிவ் வாறலை யியற்றியடர் காலை. 43

கு - ரை : காவலர் - காவல்புரிவோர். தேனு - காமதேனு. கதுப்பு - கன்னம். அலைத்தார் - துன்புறுத்தினர். ஏ வலர் - அம்புதொடுத்தலில் வல்லவர்; ஏ - அம்பு.

வானவ ரறிந்துருமு வட்கநனி யார்த்தார்
தானவ ரடங்கவலி சாய்ந்துமுனை தேய்ந்து
போனவர்க ளாகவடு போர்புரிது மென்று
வானவர்க ளாயமர் விளைத்தன ரடர்ந்தே. 44

கு - ரை : உருமு வட்க - இடியும் அஞ்சும்படி. தானவர் அடங்க - அசுரர் யாவரும். வலி சாய்ந்து - வலிமை கெட்டு. முனை தேய்ந்து - போர் முனையில் அழிந்து. அடர்ந்து - நெருங்கி.

கோடுசிலை வாங்கிநெடு நாண்கொளுவி நேரே
யாடுகணை பூட்டின ரளப்பில விடுத்தார்
நாடுவடி வாளுருவி வெட்டினர் நடுங்கச்
சேடுபடு தண்டுகொடு மோதினர் சினந்தே. 45

கு - ரை : வாங்கி - வளைத்து. நாண் கொளுவி - நாணிபூட்டி. ஆடு கணை - வெற்றியுள்ள அம்புகள்; அடு என்பது ஆடு என நீண்டதாகக் கொண்டு கொல்லும் அம்பு எனினுமாம். வடிவாள் - கூரியவாள். சேடுபடு - வலிமை மிக்க.

வெட்டின ருரப்பினர் வெடித்தனர் பிடித்துக்
கட்டின ரிறுக்கினர் கதித்தனர் வயத்தோள்
கொட்டினர் மிதித்தனர் குதித்தனர்கொல் வாமென்(று)
ஓட்டினர் நெருக்கின ருருக்கின ரிலேகர். 46

கு - ரை : உரப்பினர் - அதட்டினர். கதித்தனர் - செதுக்கினர். வயத்தோள்: வயம் - வெற்றி. ஓட்டினர் - சபதம் செய்தனர். இலேகர் - வானோர்.

வாளொடு மிழந்தனர் பிடித்தகை வயப்பொற்
றேளொடு மிழந்தனர் துரோணமிகல் மேய
கோளொடு மிழந்தனர் குலாவும்வலி மான
நாளொடு மிழந்தனர்கள் நைந்துதிதி மைந்தர். 47

கு - ரை : துரோணம் - வில். இகல் மேய கோள் - பகைமைபொருந்தும் கொள்கை. வலி மான - வலிமையை யொப்ப. நாள் - வாழ்நாள். நைந்து - வருந்தி. திதிமைந்தர் - அசுரர், தைத்தியர்.

அற்றன முடித்தலைக ளாடின கவந்தம்
உற்றன விரத்தமிக ஓடின பரந்து
செற்றன பிணக்குவை சிதைந்தன பெரும்போர்
இற்றனர் தயித்திய ரிகற்றிற மடங்கி. 48

கு - ரை : கவந்தம் - உடற்குறை. பிணக்குவை - பிணக்குவியல். தயித்தியர் - அசுரர். இகற்றிறம் - பகைத்திறம்.

கரிபல சிதைந்தன கடுத்துவரு வேகப்
பரிபல சிதைந்தன பரப்பினெடு பொற்றேர்க்
கிரிபல சிதைந்தன கிடைத்தவுண ரென்னும்
அரிபல சிதைந்தன பறந்தலையி னம்மா. 49

கு - ரை : கடுத்து வரு - வேகமாக வரும். தேர்க்கிரி - தேராகிய மலை. அரி - சிங்கம். பறந்தலை - போர்க்களம்.

வானவ ரெதிர்ந்துவடி வாளிகள் தொடுத்துத்
தானவ ருடைந்திட வியற்றுசமர் கண்டு
கானவழ லென்னவெரி கண்ணின ரெதிர்ந்தார்
ஆனதிறல் காண்டுமென வாங்கவுணர் தலைவர். 50

கு - ரை : வாளிகள் தொடுத்து - அம்புகளைச் செலுத்தி. தானவர் - அசுரர். உடைந்திட - கெட்டோட. சமர் - யுத்தம். கான அழல் - காட்டுத்தீ.

வேறு

சிலைவாங்குபு நாணேற்றினர் திதிமைந்தருட் டலைவர்
உலைவாங்கிய சுடுதீக்கணை ஒன்றல்லன வுய்த்தார்
அலைவாங்கிய கடலேழுமுள் ளச்சுற்றிட வார்த்தார்
நிலைவாங்கின ரிமையோரென நினைவுற்றனர் பலரும். 51

கு - ரை : சிலை வாங்குபு - வில்லை வளைத்து. திதி மைந்தர் - காசிப முனிவருடைய மனைவியர் பதின்மூவரில் திதிபெற்ற பிள்ளைகள்; தைத்தியர். ஒன்றல்லன - பல. உய்த்தார் - செலுத்தினர். உள் அச்சுற்றிட - மனத்தில் அச்சம் கொள்ள. நிலை வாங்கினர் - தங்கள் நிலைமை கெட்டனர். இமையோர் - தேவர்.

உலையிற்பொலி கனலிற்சின முற்றூர்விடு பகழி
தலையிற்சில முகத்திற்சில தாளிற்சில திண்டோள்
மலையிற்சில துடையிற்சில மார்பிற்சில வாக
நிலையிற்றளர் தரத்தைத்திட நெடிதோய்ந்தன ரமரர். 52

கு - ரை : உலையில் பொலி கனல் - கொல்லன் உலைக்களத்திலே விளங்கும் நெருப்பு. விடுபகழி - செலுத்தும் அம்புகள். சினமுற்றவராகிய அசுரர். தோளாகிய மலை. தளர்தர - சோர்வடைய. அமரர் நெடிது ஓய்ந்தனர்.

சாய்ந்தார்சிலர் மெலிந்தார்சிலர் தளர்ந்தார்சிலர் வெகுளி
ஓய்ந்தார்சிலர் களைத்தார்சிலர் உளைத்தார்சிலர் ஒளித்தே
மாய்ந்தார்சிலர் பெயர்ந்தார்சிலர் மயர்ந்தார்சிலர் கிடக்கை
ஏய்ந்தார்சிலர் தவித்தார்சில ரிளையாவலி யிமையார். 53

கு - ரை : வெகுளி - கோபம். உளைத்தல் - வருந்துதல். மாய்ந்தார் - மறைந்தார். மயர்ந்தார் - மயக்கத்தை அடைந்தார்; மயர்வு - மயக்கம். இளையா வலி இமையார் - சோர்வில்லாத வலிமையையுடைய தேவர்கள்.

தேரிற்புகும் பரியிற்புகுஞ் செங்கட்களி றென்னும்
காரிற்புகும் பார்ப்பாரிரு கண்ணிற்புகுங் கடல்சூழ்
பாரிற்புகும் பிலத்திற்புகும் பறம்பிற்புகும் பல்லோர்
ஊரிற்புகுங் கொடுந்தானவ ருய்க்குங்கடும் பகழி. 54

கு - ரை : பரி - குதிரை. கார் - மேகம். பார்ப்பார் - பார்க்கின்றவர். பிலம் - பாதலம். பறம்பு - மலை. தானவர் - அசுரர்; தனு என்பவள்பால் தோன்றியவர் என்னும் காரணக்குறி. கடும் பகழி - கொடிய அம்புகள்.

இவ்வாறம ராடும்பொழு திமையோர்படை யுடைய
வெவ்வாய்வட வையிற்சீறுபு விழியாயிர முடையான்
தெவ்வானவர் முடிதேய்த்திடுந் திறன்மாக்களித் தேறி
ஒவ்வாவொரு சதகோடிகொண் டுருமேறென வார்த்தான். 55

கு - ரை : அமர் ஆடும் பொழுது - போர் செய்யும் காலத்தில். உடைய - தோற்றோட வடவையின் - வடவாமுகாக்கினி போல: இன் ஐந்தனுருபு ஒப்புப்பொருள். சீறுபு - சீறி. விழி ஆயிரமுடையான் - இந்திரன். தெவ் ஆனவர் - பகைவர். திறன் மா - வலிய ஐராவதயானை. சதகோடி - வச்சிராயுதம்; நூறுமுனைகளையுடையது என்னும் காரணக்குறி. உரும் ஏறு - சிறந்த இடி.

கொடுங்கார்முகம் புருவத்தொடு குனித்தான்முழக் கெழுப்பி
அடுங்காருமி ழுருமேறென அடல்வாளிகள் சொரிந்தான்
கடுங்காரவு ணர்கள்மார்பகங் கலக்கிப்புறப் படுவ
படுங்காரினு மனையார்பொழி பகழிக்குல நூறி. 56

கு - ரை : கார்முகம் - வில். குனித்தான்: முற்றெச்சம். கார் உமிழும் உரும் ஏறு: கார் - மேகம். அடல்வாளிகள் - கொல்லும் அம்புகள். கடுங் கார் அவுணர்; கடுங்கார் - மிகக்கரிய. அசுரர்கள் பிரமதேவருடைய தமோ குண ரூபத்தினின்றும் பிறந்தமையால் கருநிற மேனியும், மாயை வஞ்சம் கொலை பொய் முதலிய பாவத்தொழிலும் பொருந்தப்பெற்றனர். அவ்வுரு வத்தை நீக்க அது இருளாய் நின்றமையால், அசுரர்கள் இரவிலே அதிக பலம் உடையர் எனக்கொள்க.

வடவை - வடவாமுகாக்கினி; பெண்குதிரை முகம் போலிருக்கும் ஊழித்தீ. அது பின்மொழி கெட்ட முன்மொழி யீற்றில் பொருள் நின்றது. வீமசேனன் வீமன் என வருதல் காண்க. இதுபோல இந்திரகோபம் கோபம் எனவும் வரும். இது முன்மொழி கெட்ட பின்மொழியீற்றில் பொருள் சிறந்து நிற்கும். இதனை வடநூலார் நாமைகதேச நாமக்கிரகணம் என்பர்.

தேவர்கள் சாத்துவிககுணரூபத்தினின்றும் பிறந்தமையால் பிரகாச முள்ள மேனியும், ஞானம் இரக்கம் உயிரோம்பல் சத்தியம் முதலிய நற்றொழி லும் பொருந்தப் பெற்றார். பிரமன் அவ்வுருவத்தை விட்ட காலத்து அது பகற்காலமாய் நின்றமையால் தேவர்கள் பகலிலே வலியர் எனக் கொள்க. பகழிக் குலம் - அம்புகளின் கூட்டம். நூறி - அழித்து, பொடிபடுத்து.

கோலாற்சில ருயிர்மாய்த்தனன் கூற்றத்தினுங் கொடிய
வேலாற்சில ருயிர்மாய்த்தனன் மிளிர்வாண்முதற் படையின்
பாலாற்சில ருயிர்மாய்த்தன னயிராவதப் பகட்டின்
காலாற்சில ருயிர்மாய்த்தனன் கண்ணாயிர முடையான். 57

கு - ரை : கோலால் - அம்பினால். படையின் பாலால் - படைக்கலங் களின் பகுதியால். அயிராவதப் பகடு: பகடு - யானை.

பழுதார்செயல் புரிந்தோமெனப் பதைத்தார்சிலர் கையால்
தொழுதார்சிலர் விழ்ந்தார்சிலர் சோர்ந்தார்சிலர் துயர்மிக்(கு)
அழுதார்சிலர் ஒழிந்தார்சிலர் அழிந்தார்சிலர் ஆர்த்துக்
கழுதார்பறந் தலைநீத்துயிர் காத்தார்சிலர் அவுணர். 58

கு - ரை : பழுது ஆர் செயல் - குற்றமுடைய செய்கை. கழுது ஆர் பறந்தலை - பேய்கள் நிறைந்த போர்க்களம். நீத்து - விட்டோடி.

விறல்மிக்கவர் இவ்வாறுற வெந்நிட்டமை காணூ
மறமிக்கந முசியென்பெயர் வாகைத்திற லவுணன்
திறல்மிக்கவெங் கணைமாமழை சேரப்பொழிந் தார்த்தார்
உறன்மிக்கவிந் திரன்மாற்றின னுறுபல்கணை தூவி. 59

கு - ரை : விறல் - வலிமை. வெந்நிட்டமை - புறமுதுகிட்டோடின செயல்: வெரிந்=வெந் - புறமுதுகு. மறம் - வீரம்; பாவமெனினுமாம். வாகைத்திறல் - வெற்றி பொருந்தும் வல்லமை. பல் கணை தூவி: தூவி - சிந்தி.

காற்றின்படை கனலின்படை கனலஞ்சுறு கொடிய
கூற்றின்படை முதலாயின தொடுத்தான்கொலை அவுணன்
ஏற்றும்படை எல்லாமொருங் கிறத்தக்கன வாகி
மாற்றும்படை தொடுத்தான்பெரு வயிரப்படை யுடையான். 60

கு - ரை : வாயுவாத்திரம் முதலியவற்றைத் தொடுத்தான். ஏற்றும் - எதிர்த்த. இறத்தக்கன - அழிந்துபடும் தன்மையுடையன. வயிரப்படை - வச்சிராயுதம். மாற்றும் படை - அவைகளின் வலிமைகளைக் கெடுக்கும் படைக்கலங்கள்.

அடுவேலெடுத் தெறிந்தார்த்தன னவுணன்சுரர் அஞ்சக்
கொடுவேலது வரல்காணுபு குலிசத்தினை விட்டான்
படுவேலுட னவனாவியும் பருகிப்பெருங் குலிசம்
வடுவேல்விழி யயிராணிம ணாளன்கையுற் றன்றே. 61

கு - ரை : அடுவேல் - கொல்லும் வேற்படை. வேலது: அது பகுதிப் பொருள் விகுதி. காணுபு - கண்டு. குலிசம் - வச்சிராயுதம். அவன் ஆவியும் - நமுசி என்னும் அவுணன் உயிரும். பருகி - உண்டு. வடு - மாவடு. அயிராணி - இந்திராணி. அயிராணி மணாளன் - இந்திரன்.

வேறு

காய்தொழில் நமுசி மாயத் தயித்தியர் கலங்கி யோடி
ஆய்வலி மிக்க காலப் பிரபனுக் கறியக் கூறப்
பாய்கனல் நயனம் காலப் படையொடு மவனெ ழுந்தே
வாய்வசி வயிர வொள்வேல் மன்னனை வளைத்தா னன்றே. 62

கு - ரை : காய்சினம் - கடுங்கோபம்; காய்தல் - சுடுதல். காலப் பிரபன். பாய் கனல் - பரவிய நெருப்பு. நயனம் கால - கண்கள் வெளிப்படுத்த. வசி - கூர்மை. வயிர ஒள் வேல் - வச்சிராயுதம். மன்னன் - தேவேந்திரன். வளைத்தான் - சூழ்ந்தான்.

ஒருசிலை குனியக் கோட்டி உடற்றுபல் கணைகள் பூட்டிப்
பொருகடைக் கால மாரி பொழிவதிற் பொழிந்தா னாக
வெருவரை விடுத்த வாளிக் குலமெலாம் விய மாற்றி
மருவுடன் முழுதுந் தைப்ப வாட்டமுற் றிளைத்தா னன்றே. 63

கு - ரை : குனிய - வளைய. கோட்டி - வளைத்து. ஒரு சிலை - ஒப்பற்ற வில். உடற்றும் - மாறுபடுத்தும். கடைக்கால மாரி - ஊழிக்கால மழை. வெருவர - அஞ்ச. விய - அழியும்படி.

விழிமலர் மேனி முற்றும் மெய்யென வெய்ய வாளி
கழிதரத் தைப்ப வாற்றுங் கருமமொன் றில்லா வேந்தன்
பொழிதிரைக் கடலி னாப்பண் புயல்பல கமலம் பூத்துப்
பழிதபக் கிடந்தா னென்னக் கண்வளர் பவனை யுள்வான். 64

கு - ரை : விழிமலர் - கண்கள். வெய்ய வாளி - கொடிய அம்புகள். கழிதரத் தைப்ப - புறத்தே நீங்கும்படி புதைய. ஆற்றும் கருமம் - செய்யும் செயல். வேந்தன் - இந்திரன். நாப்பண் - நடுவிடம். புயல் பல கமலம் பூத்து - மேகமானது பல தாமரை மலர்கள் மலர்ந்து. கண்வளர்பவன் - யோகநித்திரை செய்தருளும் திருமால். உள்வான் - நினைந்தான்.

பெருந்திறல் படைத்த காலப் பிரபனை விளைத்தே னுண்ட
மருந்தினு லிருந்தே னின்னே வந்தம ராடி வென்று
திருந்தவா னவருக் குற்ற செல்லலைக் களைய வேண்டும்
கருந்துழாய்த் தொடையா யென்று கருத்துற வெண்ணி னானே. 65

கு - ரை : பெருந்திறல் - மிக்க வலிமை. உண்ட மருந்தினுல் - உட்கொண்ட அமுதத்தால். அமர் ஆடி - போர்செய்து. செல்லல் - துன்பம். கருத்துற - மனத்திற் பொருந்த.

எண்ணிய பொழுதே மாயோ னெழுந்துதார்க் கியன்மே லேறி
அண்ணிய படைக ளோடு மமர்க்களங் குறுகி யார்த்துக்
கண்ணிய திகிரி யேவிக் கருதல னுயிரை மாய்த்து
நண்ணிய படையுங் கொன்று வானவர் நடுக்கந் தீர்த்தான். 66

கு - ரை : மாயோன் - திருமால். தார்க்கியன் - கருடன். அண்ணிய - நெருங்கிய. படைகளோடும் - சேனைகளோடும், படைக்கலங்களோடும். திகிரி - சக்கராயுதம். கருதலன் - பகைவனாகிய காலப்பிரபன். படையும் - சேனைகளையும்.

எஞ்சிய வவுண ரோடி யிற்றமை யுரைப்பக் கூற்றும்
அஞ்சிய கால வேக னடுபடை யொடுமெ ழுந்து
துஞ்சிய வவுணர்க் கண்டு துடிதுடித் தலரின் மேய
வஞ்சிய மார்பி னூனேர் வந்துபோர் புரிவா யென்றான். 67

கு - ரை: இற்றமை - இறந்தொழிந்தமை. கூற்றும் - இயமனும். காலவேகன் என்பவன். துஞ்சிய - இறந்த. அவுணர்க்கண்டு - அவுணரைப் பார்த்து. அலரின்மேய வஞ்சி - திருமகள். வஞ்சிய மார்பினன் - வஞ்சி பொருந்திய மார்பையுடையவன்; வஞ்சி - வஞ்சிக்கொடிபோன்ற திருமகள். நேர்வந்து - எதிரிலே வந்து.

அடுசமர் புரியெ னூமுன் அழன்றுகைத் திகிரி விட்டான்
கொடுவலிக் கால வேகன் குறுநகை வாயிற் றேற்றி
நெடுவலித் திகிரி தன்னை நில்லென நிகழ்த்த லோடும்
படுமனுத் தகைக்கப் பட்ட பாம்பென லாயிற் றன்றே. 68

கு - ரை: புரி எனு முன் - செய்வாய் என்று சொல்லுமுன்னமே; சொன்னவுடனே என்றபடி. அழன்று - கோபித்து. குறுநகை - புன்சிரிப்பு. நெடுவலித் திகிரி - மிக்க வலிமையையுடைய சக்கரம். மனுத் தகைக்கப்பட்ட பாம்பு - மந்திரத்தால் தடைசெய்யப்பட்ட பாம்பு.

நில்லென வுரைத்த லோடுந் தகையுண்டு நேமி நின்ற(து)
ஒல்லென வினிநாஞ் செய்வ தொன்றுமின் றென்ன வெண்ணி
அல்லென விருண்ட கண்டத் தண்ணலைத் தியானஞ் செய்தான்
கல்லெனப் பொலிதிண் டோளிற் கருந்துழாய் கமழப் பூண்டோன். 69

கு - ரை: தகையுண்டு - தடைப்பட்டு. நேமி - சக்கரம். ஒல்லென - விரைவாக. அல் - இருட்டு. இருண்ட கண்டத்து அண்ணல் - சிவபெருமான். கல் - மலை.

காலனை வென்றாற் போலக் காலவே கனையும் வென்று
சீலவிண் ணவரைக் காக்கத் திருவுளஞ் செய்ய வேண்டும்
ஆலநன் னிழலின் மேய வண்ணலே காமற் காய்ந்த
பாலநேத் திரத்தா யென்று பரவுபு தியானஞ் செய்தான். 70

கு - ரை: ஆல நல் நிழலின் மேய அண்ணலே - சிவபெருமானே. காமன் - மன்மதன். பாலநேத்திரத்தாய் - நெற்றிக்கண்ணையுடையவரே. பரவுபு - துதித்து.

மாயவ னிவ்வா றெண்ண வனிதையோர் பாகத் தெம்மான்
ஆயவக் களத்துத் தோன்றி யங்கையிற் சூல மேவித்
தீயவெங் கால வேகற் செகுத்தவன் படையு மாய்த்துத்
தூயவெண் கயிலை யுற்றான் சுரரெலாந் தொழுது வாழ்த்த. 71

கு - ரை : வனிதை - பெண்; பார்வதி. அக்களத்து - அப்போர்க்களத்தில். செகுத்து - அழிந்து. மாய்த்து - அழித்து. சுரர் - தேவர்.

இறந்தவ ரொழிய மற்று மெஞ்சிய வவுண ரெல்லாம்
பறந்தலை யகன்று சென்று பரவைபுக் கொளித்துக் கொண்டு
நிறந்தக விருளிற் றோன்றி நிரம்பவூ றிழைத்து மேன்மேல்
மறந்தலை யெடுப்பச் செய்தார் வலாரியா தியர்துன் புற்றார். 72

கு - ரை : பறந்தலை - போர்க்களம். பரவை - கடல். ஊறு இழைத்து - துன்புறுத்தி. மறம் - பாவம். வலாரி - இந்திரன்.

என்செய்வா மிதற்கென் றெண்ணி யெழுகடற் புனலு முண்ண
மின்செய்வார் சடிலத் தண்ணன் மெய்யரு ணிரம்பப் பெற்ற
தென்செய்மா தவத்த னுய செந்தமிழ் முனியே வல்லோன்
முன்செய்வா னிஃதென் றெண்ணி யாவரு முடிவு செய்தார். 73

கு - ரை : வார் சடிலத்து அண்ணல் - சிவபெருமான்; வார் சடிலம் - நீண்ட சடை. மின்செய் வார் சடிலம்: ''மின்னார் செஞ்சடை'' (தேவா). தென் - அழகு. செந்தமிழ் முனி - அகத்திய முனிவர்.

அந்தமா முனிவ னுகைக் காரோணத் தமலன் பூசை
சந்தமா மலர்கொண் டாற்றுந் தவம்புரிந் தமர்வ தோர்ந்து
முந்தவா னுடர் யாரு மொய்த்துவந் தவனைத் தாழ்ந்து
நந்தவா தரவு பொங்க நயந்திது நவில லுற்றார். 74

கு - ரை : ஆற்றும் தவம் - செய்யுந் தவம். ஓர்ந்து - ஆராய்ந்தறிந்து. நந்த ஆதரவு பொங்க - ஆக்கத்தைச் செய்யும் உதவிமிக. நயந்து - விரும்பி.

அருட்பெருங் கடலே பொல்லா வவுணர்வா ரிதியொ ளித்துக்
கருட்பொழு தெழுவா றூறு கண்ணறப் புரியா நிற்பார்
மருட்படு மவரைக் கொல்லும் வகையுணர்ந் திலமா லென்று
தெருட்பெரு வானோர் கூறச் செந்தமிழ் முனிவன் சொல்லும். 75

கு - ரை : வாரிதி ஒளித்து - கடலில் ஒளித்திருந்து. கருட்பொழுது: கருள் - இருள். உறுகண் - மிக்க துன்பம். அற - மிகுதியாக. மருள் - மயக்கம். தெருள் - தெளிவு.

பகன்மறைந் திருளிற் றேன்றிப் பயிலறக் கூறு செய்யும்
இகல்வலி யவுணர் தோற்ற மெய்திடப் புரிவா மின்னும்
தகலுற யாது வேண்டுஞ் சாற்றுமி னென்ரு னன்னுர்
அகல்களிப் பினரா யீதே போதுமென் றஞ்ச லித்தார். 76

கு - ரை : அறக்கு ஊறு செய்யும் - தருமத்துக்கு இடையூறு பண்ணும்: அறக்கு - அறத்துக்கு: அத்துச்சாரியை கெட்டது; மாடக்கு என்பது போல.

வந்தவா னுட ரோடும் வயங்குகா ரோண மேய
சந்தமார் முலையோர் பாகத் தம்பிரான் ருள்கள் போற்றி
நந்தவா தரவு பொங்க நல்லரு ணிரம்பப் பெற்றுப்
பந்தவா ளவுணர் மேய படுகடற் கரையுற் ருனே. 77

கு - ரை : வானுடர் - தேவர். தம்பிரான் - சிவபெருமான். சந்தம் - அழகு, சந்தனம். நந்த ஆதரவு பொங்க என்ருர் முன்னும்; 74-ல். பந்தம் - கட்டு.

மேயகும் பசனைக் கண்டு வெருவர லடைந்து கார்கோள்
ஆயசெந் துகிர்முத் தாதி யடியுறை யாக வைத்துப்
பாயபல் கரமு நீட்டிப் பணிதரு தன்மை மானுந்
தூயபன் மணிக ளோடுந் திரைபதந் தோயுந் தோற்றம். 78

கு - ரை : கும்பசன் - அகத்தியர்; குடத்தில் தோன்றியவர் என்னும் காரணக் குறி. வெருவரல் - அச்சம். கார்கோள் - கடல். துகிர் - பவளம். அடியுறை - காணிக்கை. பாய - பரவியுள்ள. பல் கரம் - பல கைகள். திரை - அலைகள். தோயுந் தோற்றம் பணிதரு தன்மை மானும்.

குறுமுனி வரனீர் முற்றுங் குடிப்பதற் கென்று தேர்ந்து
கறுவுடை யவுணர் வாரி கைவிட்டுப் போவ தொக்கும்
உறுபெரு வயிறு வீங்க வுவர்ப்புனல் வாய்வைத் துண்டு
மறுவறு விசும்பி னேகு மழைக்குல முழுது மம்மா. 79

கு - ரை : குறு முனிவரன் - குறுகிய வடிவத்தையுடைய அகத்தியர். கறுவுடை அவுணர்: கறு - கோபம். வாரி - கடலை. தேர்ந்து - தெளிந்து. கைவிட்டு - விட்டுவிட்டு. உவர்ப்புனல் - உப்புநீர். மறு - குற்றம். விசும்பின் - ஆகாயத்தில். மழைக்குலம் - மேகக்கூட்டம்.

மறிதிரைக் கடனி னுவாய் வல்விரைந் தோடுங் காட்சி
குறியவிம் முனிநீர் முற்றுங் குடித்திடு மதற்கு முன்னே
செறிபல சரக்கி னேடுஞ் சிதைதரா தொதுங்கு வாமென்(று)
அறிதரக் கரைச்சார் பெண்ணி யவாய்விரைந் தோடன் மானும்.

கு - ரை : நாவாய் - கப்பல். செறி - நிறைந்த. சிதை தராது - சிதையாமல், கெடாமல். கரைச்சார்பு - கரையில் சார்தலை. எண்ணியவாய் - நினைந்தவைகளாய்; எண்ணி அவாய்: -அவாய் - விரும்பி.

அடர்கின்ற பவளக் காட்டோ டெழுமலை யாண வத்தின்
படர்வென்ற முனிவன் பாத பதுமத்தின் வீழுந் தோற்றங்
கடலொன்று வெள்ள முற்றுங் கணத்தினுண் டமையும் விஞ்சை
மடனின்று கற்பா னெண்ணி வடவைவந் திறைஞ்சல் போலும்.

கு - ரை: அடர்கின்ற - நெருங்கியுள்ள. எழும் அலை. பாதபதுமம் - பாத தாமரை. கடல் ஒன்று: ஒன்று - பொருந்திய. அமையும் விஞ்சை - பொருந்தும் வித்தையை. கற்பான் - கற்கும் பொருட்டு. வடவை - வடவா முகாக்கினி.

முன்னை நாண் மாலைப் போதின் முழுவலை யனைத்தும் பூத்த
புன்னைமேல் விரித்துக் காயப் போகட்ட நுளைய ரெல்லாம்
பின்னை நாள் வெயிலுந் தோயப் பெறன்மதித் தெடுத்தி டாமை
என்னை நா மிதுகைக் கோட லென்றிகழ்ந் திருத்தன் மானும். 82

கு - ரை : முன்னைநாள் - முதல்நாள். பூத்த புன்னை - பூத்திருக்கின்ற புன்னைமரத்தின்மேல். நுளையர் - வலைஞர். பின்னை நாள் - மற்றைநாள். இது - இவ்வலைகளை. கைக்கோடல் - பற்றுதல்.

உறுதுய ரொருங்கு பின்ன குறுவது சற்றுந் தேருச்
சிறுமதி யாளர் துள்ளுஞ் செயலெனச் சிறுமீ னெல்லாம்
வெறுவிய துள்ளா நின்ற மேல்வர லனைத்துந் தேறப்
பெறுபெரு மதியார் போல வியங்குவ பெருமீ னெல்லாம். 83

கு - ரை : உறுதுயர் - மிக்க துன்பம். ஒருங்கு - ஒருமிக்க. தேரு - தெளியாத. சிறு மதியாளர் - அற்பபுத்தியுடையோர். வெறுவிய - வீணாக, பயனின்றி. தேறப்பெறு - தெளிந்த. பெருமதியார் - பேரறிவுடையோர். இயங்குவ - செல்வன.

கொடிமுதற் பறவை யெல்லாங் கொழுங்கய லாதி வௌவிச்
செடிபடு குடம்பை தோறும் விரைதரச் செல்லுங் காட்சி
வடிவறி யாத வாரி வறத்தலோர்ந் தேன்ற மட்டுங்
குடிகொளு மிடத்து ணுக்கள் கூட்டிவைத் திடுதல் போலும். 84

கு - ரை : கொடி முதற்பறவை - காக்கை முதலாகவுள்ள பறவைகள். வௌவி - வாயாற் பற்றி. குடம்பை - கூடு. வடிவு அறியாத வாரி: வாரி - கடல். வறத்தல் - வறண்டுபோதல். ஏன்ற மட்டும் - இயன்ற அளவும். உணுக்கள் - உணவுகள்.

இன்னண நிகழுங் காலை யெங்கள்கா ரோண நாதர்
பொன்னடி யிதயத் தெண்ணிப் புண்ணிய முனிகை யேற்றான்
உன்னருங் கடனீர் முற்று மோருழுந் தளவைத் தாகி
அன்னவன் கரத்து நாப்ப ணமர்ந்ததியா வரும்வி யப்ப. 85

கு - ரை : புண்ணிய முனி - அகத்தியர். ஏற்றான் - ஏந்தினான். நாப்பண் - நடுவிடம்.

முண்டக மலருண் மேய முத்தென வகங்கை மேய
வண்டகைத் திவலை யொன்றை வாயினுட் பெய்தான் பெய்யக்
கண்டவ ரதிச யித்தார் காயாரோ கணப்பி ரானார்
தண்டவா வருள்பெற் றார்க்குஞ் சாற்றிதோர் பார மாமோ. 86

கு - ரை : முண்டகமலர் - தாமரைமலர். வண் தகை திவலை - வளம் பொருந்திய தன்மையுள்ள துளி. வாயினுட் பெய்தான் - உண்டான்; ஆசமனம் செய்தான். சாற்று இது ஓர் பாரம் ஆமோ: பாரம் - சுமை.

பரவைநீர் வறத்த லோடும் பாதக வவுண ரெல்லாம்
விரவுபே ரிருடீர் காலை வெளிப்படு கள்வர் போல
உரவில ராய்வெ ளிப்பட் டோடுதற் குள்ளங் கொண்டார்
கரவிலா வமரர் கோமான் கைக்குலி சத்தாற் கொன்றான். 87

கு - ரை : பரவைநீர் - கடல்நீர். பேர் இருள் தீர்காலை - மிக்க இருள் நீங்கும் காலத்து. கள்வர் - திருடர். உரவு இலராய்: உரவு - வலிமை. உள்ளம் கொண்டார் - நினைந்தார். கரவு இலா - வஞ்சகமில்லாத. குலிசத்தால் - வச்சிரப்படையால்.

புனல்வறங் கூர்க டற்குப் புதுப்புனல் விடுப்பான் போல
மனநெகா வவுணர் செந்நீர் பாய்த்தினான் வான வேந்தன்
அனகவா னுடர் யாரு மருந்தமிழ் முனியைப் போற்றி
முனகர்செய் தீங்கு தீர்ந்தோ முனைவநின் னருளா லென்றார். 88

கு - ரை : வறங் கூர் - வறண்டுபோன தன்மை மிக்க. புதுப்புனல் - புதியநீர். செந்நீர் - இரத்தம். அனக - பாவமில்லாத. முனகர் - அவுணர்; பகைவர் என்றுமாம்.

தானவ ரென்னுந் தாவந் தவாதுறத் தீத்த லாலே
வானவ ரென்னும் பாத வம்புலர்ந் திடுத லெண்ணி
ஈனமில் கருணை யாய பெருமழை யிரங்கிப் பெய்தக்
கானகந் தழையச் செய்தாய் கைம்மாறென் றிதற்குண்
[டாங்கொல். 89

கு - ரை: தாவம் - வெப்பம். தவாது உற - நீங்காமல். பாதவம் - மரம். புலர்ந்திடுதல் - உலர்ந்து போதல். தானவர் தாவம், வானவர் பாதவம், கருணை மழை. இரங்கி - இரக்கமுற்று, காலிறங்கி. கானகம் தேவருலகம். கைம்மாறு - பிரதியுபகாரம்.

என்றுபன் முனிவர் கும்ப முனிவனை யேத்துங் காலைக்
கன்றுநின் றுவந்த வேந்தன் முனிவனைக் கசிந்து தாழ்ந்து
தொன்றுபோ லுறவுட் கொண்ட தோயத்தை விடுக வென்றான்
அன்றவை தரவி டுத்தா னூர்த்தது புணரி மாதோ. 90

கு - ரை: கன்று நின்று உவந்த வேந்தன் - கன்றுதலினின்று மகிழ்ந்த இந்திரன். கசிந்து - உருகி. தொன்றுபோல் - பழமைபோல. உற - பொருந்த. உட்கொண்ட தோயம் - ஆசமனம் செய்த நீரை: தோயம் - நீர். அன்று - அப்பொழுதே. புணரி - கடல்.

முனிவிடை பெற்று வானோர் முழுங்குதம் முலகம் புக்கார்
கனிமனத் துறுவன் போந்து காயாரோ கணமுன் னாக
வனிதையோர் பாகத் தண்ணல் வைப்பெலாஞ் சென்று போற்றி
அனியமி லாத மேன்மை யகத்தீச மிறைஞ்சுங் காலை. 91

கு - ரை: முனிவிடை பெற்று - முனிவரிடத்து விடைபெற்று. கனி மனம் - இரங்கிய மனம். உறுவன் - தவசியாகிய அகத்தியர். முன்னாக - முதலாகவுள்ள. வைப்பு - தலம்.

அந்தமா விலிங்க நின்று மற்புதன் றோன்றி வேட்ட
சந்தமார் வரங்க ணல்கத் தவாதபே ருவப்பிற் பெற்று
முந்தமா மலய நண்ணி முனிவர்தங் குழாங்கள் சூழப்
பந்தமோ வுறவ மர்ந்து பாரினைச் சமன்செய் தானால். 92

கு - ரை: அற்புதன் - ஞானமே திருமேனியாகவுள்ள சிவபெருமான். வேட்ட - விரும்பிய. தவாத - நீங்காத. மா மலயம் - பெருமை பொருந்திய பொதியில் மலை. பந்தம் ஓவுற - பந்தங்கள் நீங்க. பாரினை - பூமியை.

நித்திய கங்கை தன்னோ டகத்திய நீரு மூழ்கிச்
சத்திய வகத்தீ சன்பொற் ருளிணை தொழுது நைந்த
கத்திய துதியுஞ் சொல்வார் கருதிய போகந் துய்த்து
மெத்திய சிவலோ கத்தே வீற்றினி திருப்பா ரென்றும். 93

கு - ரை: நித்திய கங்கை என்னும் தீர்த்தம். அகத்திய நீர் - அகத்திய தீர்த்தம். நைந்த - உருகிய. கத்தியம் - வசனம்.

கலையுணர் ஞானம் வேட்டோர் கசிந்தன ரடைந்து தென்பான்
மலைமுனி பதிட்டை செய்த வகத்தீச வள்ளல் பாதந்
தலையுறப் பணிந்து போற்றிற் ருழ்விலா தடைவா ரென்றும்
உலைவினுற் கவியும் பாடும் வலிமையு முறுவ ரன்றே. 94

கு - ரை: வேட்டோர் - விரும்பினோர். தென்பால் மலைமுனி - அகத்தியர். பதிட்டை - பிரதிட்டை. உலைவு இல் நாற்கவியும் - வருத்தம் இல்லாத நால்வகைக் கவிகளும்; அவை ஆசு, மதுரம், சித்திரம், வித்தார கவிகள். ''ஆசுமுதல் நாற்கவியும்''; ''நாற்கவியும், பாடும் பணியிற் பணித்தருள்வாய்'' (குமரகுருபரர்).

அகத்தியன் பூசை செய்த வகத்தீசந் தனக்குண் டாய
மகத்துவம் யாது சொற்ரு மாமல ராளி வந்து
தகத்திகழ் நடுத்த லேசஞ் சமைத்தரும் பூசை யாற்றி
இகத்தலில் பேறு பெற்ற சரிதமு மெடுத்துச் சொல்வாம். 95

கு - ரை: அகத்தீச மகத்துவம் - அகத்தீசத்தின் பெருமை. யாது சொற்ரும்-என்ன சொன்னோம்; சிறிது சொன்னோமன்றி முற்றும் சொன்னோமில்லை என்றபடி: ''தானெனை முன்படைத்தா னதறிந்துதன் பொன்னடிக்கே, நானென பாடலந்தோ'' என்பதுபோலக் கொள்க. மாமலராளி-பிரமன். சமைத்து - உண்டாக்கி. இகத்தல் இல் பேறு - விட்டு நீங்காதபேறு.

அகத்தீசப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1016

பதினாறாவது

நடுத்தலேசப்படலம்

பந்தமறுத் துயர்சனற்கு மாரமுனி பல்கலையும்
நந்தவுணர் சயிலாதி பதந்தொழுது நம்பெருமான்
சந்தமுற வமருநடுத் தலேசங்கா ரோணத்து
வந்ததிற னுரைத்தியென மனமகிழ்ந்து கூறுவான். 1

கு - ரை : பந்தம் - பாச பந்தங்கள். நந்த - மிகுதியாக. சயிலாதி - திருநந்திதேவர். சந்தம் உற - அழகுமிக.

முன்னமொரு கற்பத்தின் முழுவதுமாக் குதல்கருதி
அன்னமுகைப் பவன்முயன்று மாகாமே மனம்வருந்தி
என்னபுரி குவமினியென் றெண்ணியெழுந் தனன்வடப்பைம்
பன்னமிசை விழிவளரும் பச்சைமால் தனையடுத்தான். 2

கு - ரை : ஆக்குதல் - படைத்தல். அன்னம் உகைப்பவன் - பிரமதேவர்: உகைத்தல் - ஏறிச் செலுத்துதல். ஆகாமே-இயலாமல். முயன்றும் - முயற்சி செய்தும்; என்றது ஆன்ம முயற்சியை. எழுந்தனன்: முற்றெச்சம். வடம் பைம் பன்னம்-பசிய ஆலிலை. வடம் - ஆல், பன்னம்=பர்னம் - இலை. விழிவளரும் - யோக நித்திரை செய்யும். பச்சை மால் - பசிய திருமேனியுடைய விஷ்ணு; மரகத வண்ணன் ஆகலின். நீலம், கருமை, பச்சை நிறங்களை ஒப்பாகக் கூறுதல் கவிமரபு.

கற்பம் என்றது பிரமனது பகலிற்கும், தினத்திற்கும், வருடத்திற்கும், பரார்த்தத்திற்கும் பெயராய் நிற்கும். இரண்டாயிரம் சதுரயுகம் கொண்ட காலத்தையே பிரமற்குப் பகல் எனவும், கற்பம் எனவும் பேசப்படும். முந்நூற்று அறுபது பகல் கழிந்தால் பிரமற்கு ஒரு வருடமாம். இங்ஙனமன்றி, ஆயிரங் கற்பங் கழிந்தால் ஒருவருடம், அந்த வருடம் எண்ணாயிரம் சென்றால் ஒருயுகம். அந்தயுகம் ஆயிரம் சென்றால் ஒரு சவனமாகும், அச்சவனம் ஒன்பதினாயிரம் கழிந்தால் ஒரு பரமாகும் என்றும் கூறப்பட்டது (வாயுசங்கிதை).

இந்தப் பிரமனது ஆயுட்காலம் (பரம்) முடிந்தால், திருமாலுக்கு ஒரு நாளாகின்றது. திருமாலின் ஓர் பகலின் ஓர் பிரமன் இறப்பன். உருத்திரரின் ஓர்பகலின் ஒருமால் ஒழிவர். மகேசுரரின் பகலின் ஒரு உருத்திரர் லயிப்பர் எனக்கொள்க. இவற்றின் விரிவுகளையெல்லாம் மச்சபுராணம், சித்தாந்த சாராவளி என்னும் நூல்களிற் கண்டு தெளிக.

முதற் கற்பம் என்றது இரண்டாம் பரார்த்தத்தின் முதலாம் வருடம் என்றும் .... ஏழாங் கற்பம் என்றது அவ்வருடத்தின் ஏழாம் நாள்; ஏழாங்கற்பம் பதுமகற்பமாம். அது கழிந்து எட்டாவது கற்பமாகிய சுவேத வராக கற்பம் நடக்கின்றது. எனவே, இப்போதுள்ள பிரமாவுக்கு இரண்டாம் பரார்த்தத்திலே, முதலாம் வயசினுள்ளே முதலாம் ஆண்டில், எட்டாந் தினத்து, ஆறுவது மனுவந்தரத்தில், இருபத்தெட்டாம் சதுர யுகத்தில் கலியுக முதற்பாதம் நடக்கின்றது என்று உய்த்துணர்க.

அடுத்தமல ரவன்வணங்கி யண்ணலே படைப்பதனுக்
கெடுத்துபல திறன்முயன்று மெய்திலனென் செய்வலென
உடுத்தபொலந் துகிலானு முமாபதியார் திருவருளான்
மடுத்ததிஃ தெனத்தெளிந்தம் மறையவனுக் குணர்த்துவான். 3

கு - ரை : மால்தனை அடுத்த மலரவன் : மலரவன் - பிரமன். பல திறன் - பலவகையாக: பொலன் துகில் - பீதாம்பரம், பொன்னுடை. மடுத்தது - தேங்கியது. மறையவன் - வேதன்.

தூயமலர் மிசைவளருந் தோன்றூல்கே ணம்பெருமான்
நேயமிகு சத்திகணன் னிவிர்த்திமுத லோரைவர்
ஆயவருள் நிவிர்த்திநினை யடையாத காரணத்தால்
பாயபடைப் புறமுயன்றும் பலித்திலதோ ரெட்டுணையும். 4

கு - ரை : நிவிர்த்தி முதலோர் ஐவர் - நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்திய தீதைஎன்பவர். அவருள்ளே நிவிர்த்தி உன்னை அடையாத காரணத்தால் மிகமுயன்றும் படைப்புப் பலித்திலது. பாய - பரவியுள்ள. எட்டுணையும் - எள்ளளவும்.

பராசத்தியாகிய பிரகிருதிமாயைக்கு ஐவகைத் தோற்றம் உண்டு. அவை நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீத கலை என்பனவாம். இவை சொல்லும் பொருளும்போல் அபேதமாயும் பேத மாயும் நிற்கும். அவற்றுள் நிவிர்த்தியாவது தன்னிடத்திற் பொருந்தின ஆன்மாக்களுடைய சங்கற்பங்களை நிவிர்த்தி செய்வதாம். பிரதிட்டாகலை ஆன்மாக்களுக்கு முற்கூறும் சங்கற்பவிடுதி நிலைபெற்றுத் திடமாகப் பிரதிட்டித்து நிற்கும். வித்தியாகலை அங்ஙனம் திடப்பட்ட காலத்துச் சர்வார்த்த ஞானத்தைப் பிரகாசிப்பிப்பதாம். சாந்திகலை சர்வார்த்த ஞானத்தால் இராகத் துவேஷம் நிகழவொட்டாது இருத்துவிக்கும் விகற்பஞானம் சாந்தமாயிருக்கும் நிலையாம். சாந்திகலையில் அனந்தேசுரராகவும், வித்தியா கலையில் உருத்திர மூர்த்தியாகவும், பிரதிட்டாகலையில் திருமாலாகவும், நிவிர்த்திகலையில் பிரமனாகவும் நிற்றல். "எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்" ஆகலின், சதாசிவனாயபோது மனோன்மணி சத்தியாகியும், மகேசுரனானபோது மகேசுவரியாகியும், உருத்திரனானபோது உமையாகியும், திருமாலானபோது திருவாகியும், பிரமனானபோது வாணியாகியும்

பராசத்தியொன்றே ஐந்தொழில் காரணமாகச் சிறப்புவகையால் வியாபரிக்கும் என்க.

அண்ணலவன் சத்திகளே யாக்கன்முத லைந்தொழிலும்
பண்ணல்பிறி தில்லுணர்தி பகர்தருமச் சத்தியுறின்
எண்ணலெவ னொருதுரும்பு மிரும்படைப்பா திகளியற்றும்
ஒண்ணலத்தி னொருபசுமுன் னுஞற்றியதோர்ந் திலைகொல்லோ.

கு - ரை: அவன் சத்திகளே - அச்சிவபிரானுடைய சத்திகளே. அச்சத்தியுறின் ஒரு துரும்பும் படைப்பு முதலியவற்றைச் செய்யும். ஒருபசு முன்பு படைத்தல் தொழில் செய்ததனை ஆராய்ந்தறிந்திலையோ.

உன்னைமக னுப்பெறுவே னொருகான்மற் றொருகானீ
என்னைமக னுப்பெறுவை யிருவருமற் றவனுடம்பின்
முன்னையிரு பாலுதித்தோ மொழிந்தவிவை யத்தனையும்
அன்னையனை யானவன்செய் யாடலென வுணர்மைந்த. 6

கு - ரை: ஒருகாலத்தில் உன்னை மகனைப் பெறுவேன். மற்றொருகாலத்தில் நீ என்னை மகனைப் பெறுவை. இருவரும் அப்பெருமான் திருமேனியில் இருபாலும் முன்பு தோன்றினேம். இவையெல்லாம் தாய்போன்ற அப்பெருமான் திருவிளையாடலாம் என அறிக.

பிரமனே! எந்தையாகிய சிவபெருமானை மறந்து படைத்தற்றொழில் தொடங்கினாய், அது முற்றிலது: அப்பெருமான் அருளின்றி ஒன்றுமாகாது. ஆகலின், அதனைத் தேர்ந்து தவஞ்செய்வாய்.

வேறுதவஞ் செய்வதினும் வெய்யபொறி செகுத்தைந்தாக்
கூறுபொறி யுளத்தெண்ணிக் குழகனருட் குறிப்பூசை
மாறுதபப் புரிதவமே வாய்த்தபெருந் தவமாகும்
ஊறுபல வுறுப்பினுளு முத்தமாங் கம்பொருவ. 7

கு - ரை: வேறு தவங்களைச் செய்வதைவிட ஐம்பொறிவாயில்களையும் அவித்து, ஐம்புலன்களையும்வென்று, மனத்தில் தியானித்து, சிவபெருமான் அருட்குறியைப் பூசித்தலே பெருந்தவமாம். அது பல உறுப்புக்களுள்ளும் உத்தம அங்கம் போலும்.

பேறுபல வற்றினுளும் பெறற்கரிய பெரும்பேறு
மாறுதவிர் சிவபெருமான் மகத்துவஞ்சா லருட்பேறே
ஊறுதவி ரப்பேறு ரணுத்துணைநீ யுற்றனையேல்
தேறுபெரும் படைப்பொன்றோ செய்வையெலாஞ் செய்குவையால். 8

கு-ரை: பல பேறுகளுள்ளும் சிவபெருமான் அருட்பேறே சிறந்ததாம். அப் பேற்றை அனுத்துணை நீபெறினும் படைத்தல் தொழில் ஒன்றுதான் செய்வையோ? எல்லாம் செய்யவல்லாய்.

ஆதலினச் சிவபெருமா னடிக்கமல மருச்சித்துக்
காதலின்மற் றவனருளே கைக்கோடி யெனவுரைத்தான்
ஓதலின்மிக் குவப்புற்றே னெண்பூசை புரிதானம்
வீதலின்மற் றெதுவென்றுன் விண்டுமனத் துணர்ந்துரைப்பான். 9

கு-ரை: அடிக்கமலம் - திருவடித்தாமரை. அருச்சித்து - பூசனை புரிந்து. அருளையே கைக்சொள்வாய்: கோடி - கொள்வாய் என்று சொன்னான். உவப்புற்றேன்: வினையாலணையும்பெயர்; பிரமன் என்க. விண்டு - விஷ்ணுமூர்த்தி.

எண்ணரிய தலங்களுளு மேற்றமாம் பெரியதலங்
கண்ணரிய கடனுகைக் காயாரோ கணத்தலமே
நண்ணரிய வதுசார்ந்து நன்றுசிவக் குறிநிறுவிப்
பண்ணரிய பூசைபுரி பனவபோ வெனவிடுத்தான். 10

கு-ரை: எண் அரிய - எண்ணுதற்கு அருமையான, அளவில்லாத. ஏற்றம் - உயர்ந்தது. கண்ணரிய: கண்ணுதல் - நினைத்தல். சிவக்குறி - சிவலிங்கமூர்த்தி. பனவ - அந்தணனே: விளி.

பச்சைமுகி லெடுத்துரைத்த படிகாயா ரோகணத்து
விச்சைதெரி முனிவரொடு மேவிமிளிர் புனல்நான்கும்
இச்சைநிரம் புறமுழுகி யாதிபுரா ணரையிறைஞ்சி
அச்சையருள் கருந்தடங்கண் அம்மைமலர்ப் பதம்பணிந்து. 11

கு-ரை: பச்சைமுகில் - திருமால்: ஆகுபெயர். புனல் நான்கு - தேவதீர்த்தம், முனிதீர்த்தம், காகதீர்த்தம், சறுவதீர்த்தம் என்பன. அச்சை அருள் - உயிர்களைப் படைத்தருளிய; என்றது உயிர்கள் அநாதியே உள்ளன ஆதலின், அவைகள் செய்த வினைகளுக்கு ஈடாகத் தனு கரண புவன போகங்களைக் கொடுத்தருளல் என்க. அச்சு - உயிர்.

மேயசுதைக் கடத்துதித்த வித்தகரை யொருமுனியால்
ஆயகா ரோணரைமே வமரேந்தி ரேசரைநற்
றாயவகத் தீசரையன் புள்ளுருகச் சென்றுதொழு
தேயமல ரவன்மீட்டு மெய்தினுன் காரோணம். 12

கு-ரை: சுதைக்கடம் - அமுதகும்பம். வித்தகர் - சிவபெருமான். ஒரு முனி - புண்டரீக முனிவர். மலரவன் - பிரமன்.

ஆதிபுரா ணப்பெருமாற் கவாசியா சையினருள்சால்
நீதியமை நகர்நடுவி னிலவுதளி யொன்றமைத்துப்
பாதிமதி புனைசடிலப் பரன்குறிதா பித்தாங்கண்
போதிகவாத் தீர்த்தமொன்று தன்பெயரி னுற்புனைந்து. 13

கு - ரை: அவாசி ஆசையின் - தெற்குத் திக்கில்: அவாசி - தெற்கு. ஆசை - திக்கு. தளி - கோயில். சடிலம் - சடை. பரன் குறி - சிவலிங்கம். தன்பெயரால் தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

களிகிளரப் புனலகத்திற் காலமூன் றினுமுழுகி
அளிகிளர்பூ சனைபுரிதற் காயபாத் திரஞ்சாந்தம்
ஒளிகிளர்பன் மலராதி யுபகரண முறக்கொண்டு
தெளிகிளரா வாகனமுற் செய்துபூ சனைபுரிவான். 14

கு - ரை: களி கிளர் - மகிழ்ச்சி மிக்க. அப் புனல் - அந்தப் பிரமதீர்த்தம். சாந்தம் - சந்தனம். உபகரணம் - பூசைக்குரிய பொருள்கள். ஆவாகனம் முதலியவற்றைச் செய்து.

கண்ணுடு மருமணியைக் காரோணத் தரும்பொருளை
விண்ணுடு முழுதுய்ய நஞ்சுண்டு விளங்கமுதைப்
பெண்ணுடு மொருபாகப் பெருந்தகையைத் தினந்தோறும்
உண்ணுடு மன்புருகப் போற்றுதலு மொருவுகிலான். 15

கு - ரை: கண்ணுடும் அருமணி: "கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய் காவாய்" (தேவார). முழுது உய்ய. விளங்கு அமுதை. நஞ்சு உண்டு விளங்கு அமுது என்றது நயம். ஒருவுகிலான் - நீங்கான். "தேவர் வேண்டச் சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச் சிங்கமே" (தேவா).

பொழிமதுத்தா மரைமேய புங்கவன்செய் தவநோக்கிப்
பழிதபுவா னவராதி பற்பலரு மதிசயித்துச்
செழிமறையோன் சிவபூசை செய்வதுபோ லெவர்செய்வார்
அழிவில்கருத் தியாதோவென் றுடியக மிகமகிழ்ந்தார். 16

கு - ரை: தாமரை மேய புங்கவன் - பிரமதேவன். மதுப் பொழி தாமரை என மாறுக. மறையோன் - வேதன். அழிவு இல் கருத்து யாதோ.

இந்தவிதம் பூசைபுரிந் திருக்குநாள் களிலொருநாள்
அந்தமிலான் காட்சிகொடுத் தருளுவதென் றவனருள்யாம்
சந்தமுறப் பெறுவதுமென் றென்றுள்ளந் தகநினைந்து
முந்தநினைந் துள்ளுருகி முளரிமே லவனிருந்தான். 17

கு - ரை : அந்தமிலான் - சாதலில்லாத சிவபெருமான். அருளுவது என்று. பெறுவதும் என்று - பெறுவதும்: உம்மை இறந்தது தழீஇயது. தக - தகுதியாக. முளரி - தாமரை.

அப்போது கருணைபுரிந் தவ்விலிங்கத் திடைநின்றும்
எப்போது மொருதன்மை யானுய வெம்பெருமான்
செப்போது முலைபாகத் தெய்வநா யகன்றோன்றி
முப்போதும் பூசிக்கு முண்டகத்தோன் முன்னின்றான். 18

கு - ரை : இலிங்கத்திடை நின்று எம்பெருமானுகிய தெய்வநாயகன் தோன்றி. செப்போது முலை: அன்மொழித் தொகை. முண்டகத்தோன் - பிரமன். முண்டகம் - தாமரை.

கண்டமல ரவன்விரைந்து கைகள்குவித் தனனெழுந்து
தண்டமெனக் கூற்றினுயிர் குடித்ததாண் மிசைவிழுந்து
கொண்டவுவப் பினனுகிக் குறித்தொருமுக் காற்சூழ்ந்து
விண்டமொழி நாக்குளற முன்னின்று துதிவிளம்பும். 19

கு - ரை : குவித்தனனுகி எழுந்து. தண்டம் - தண்டனை. குறித்து - தியானித்து. முக்கால் சூழ்ந்து - மும்முறை வலம் வந்து. விண்டமொழி - சொன்ன சொற்கள். நா குளற - நாத் தழுதழுக்க.

விண்ணநிலந் தீயிரும்பு வெங்கதிரோ னெண்கிரணங்
கண்ணருக்க னீருவர்ப்பு மலர்மணங்காய் கதிர்சுக்கை
வண்ணமணி யொளிநாரந் தண்மையழல் வதிவெம்மை
பண்ணமையு மிசைபோன்ற பரம்பரநிற் பணிகின்றேன். 20

கு - ரை : விண் - ஆகாயம். அநிலம் - காற்று. விண்ணும் அனிலமும், கதிரோனும் கிரணமும், கண்ணும் அருக்கனும், நீரும் உவர்ப்பும், மலரும் மணமும், மணியும் ஒளியும், நீரும் குளிர்ச்சியும், அழலும் வெப்பமும், பண்ணும் இசையும் போன்ற பரம்பரனே. இதனை அத்துவிதக் கலப்புத் தோன்றக் கூறினர் ஆசிரியர். ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் உரைப் பாயிரத்தில் அருளிய ''பண்ணிசைவெம் பரிதிமதி திலதயிலந் தீயிரும்பு பாணியுப்பு, விண்ணனில முடலுயிர்நீர் நிழலுச்சிப் பளிங்குபகல் விளக்குப் பானீர், கண்ணிரவி யுணர்வொளிபோற் பிறிவரிய அத்துவிதக் கலவி காட்டித், தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச் சிவாயகுரு சரணம் போற்றி'' என்னும் திருவாக்கானுமுணர்க.

ஒன்ருகிப் பலவாகி யுருவாகி யருவாகி
நன்ருகித் தீதாகி நான்மறைச்சென் னியுந்தீண்டாத்
தொன்ருகிப் புதிதாகிச் சுடராகி யிருளாகி
இன்ருகி நாளையுமா மிறைவநினை யிறைஞ்சிடுவேன். 21

கு - ரை: ஒன்று பல, உரு அரு. நன்று தீது. நான்மறைச் சென்னி - உபநிடதம். தொன்று புதிது; தொன்று - பழமை. சுடர் இருள், இன்று நாளை என்னும்படியுள்ள இறைவ.

வானாகி வளியாகி வயங்கழனீர் மண்ணாகி
ஊனாகி யுயிராகி யுயிர்க்குயிராய் நிறைந்தபெரு
மானாகி யிரவியொடு மதியாகிப் பதியாகித்
தானாகி நின்றபெருந் தலைவனினைச் சார்தருவேன். 22

கு - ரை: வான், வளி, அழல், நீர், மண், ஊன், உயிர், இரவி, மதி ஆகிய அட்டமூர்த்த சொரூபம்.

பாலாகிச் சுவையாகிப் பாதங்க ளொடுபயனும்
நாலாகி யுருவமிரு நாலாயொன் பதுமாகி
மாலாகி நானாகி மற்றெவையு மாயெவைக்கு
மேலாகி நின்றாய்நின் மென்மலர்த்தா ளிணைதொழுவேன். 23

கு - ரை: பால், சுவை. பாதங்கள்நாலு - சரியை கிரியா யோகம் ஞானம் என்பன. சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்கள் எனப் பயன் நாலு. உருவம் இருநாலு - அட்ட மூர்த்தம். ஒன்பது - நவந்தருபேதம். மால் - திருமால். நான் என்றது பிரமனாகிய தன்னை.

உடையாய்நின் னடிபோற்றி யொள்ளியமூ விலைச்சூலப்
படையாய்நின் னடிபோற்றி பச்சிளவெண் மதிமிளிர்செஞ்
சடையாய்நின் னடிபோற்றி சாந்தமடை யாதமனத்
தடையாய்நின் னடிபோற்றி யண்ணாநின் னடிபோற்றி. 24

கு - ரை: உடையாய் - உடையவனே; எப்பொருள்களையும் உடைமையாகவும் அடிமையாகவும் உடையவனே. பச்சிளவெண்மதி - இளம்பிறைச் சந்திரன். அடையாய் - அடையாதவனே.

இதுவரையுள்ள 5 பாடல்களால் பிரமதேவன் துதிசெய்தமை காண்க.

என்றுதுதி புரிபவனுக் கெம்பிரா னருள்சுரந்து
நன்றுனக்கு வேண்டுவர நவிறியென வாய்மலரத்
துன்றுமுவ கையின்மீட்டுந் தொழுதெழுந்து கைகள்குவித்
தொன்றுவித மெதிருறநின் றோதியிவை வேண்டுவான். 25

கு - ரை: புரிபவனுக்கு - பிரமதேவனுக்கு. நவிறி = நவில்தி - சொல்லுவாய். கைகள் குவித்து - கரங்கூப்பி.

தேனுலு மலர்க்கொன்றைச் சிவனே நின் றிருக்காட்சி
மேனுலு மறையுரைக்கும் பெரும்பேறு வேறில்லை
ஆனுலு நின்னடிக்கே யன்புநனி தரல்வேண்டும்
ஊனுலு நசையனைத்து மொழிஞான முறல்வேண்டும். 26

கு-ரை: தேன் ஆலும் - வண்டுகள் ஒலிக்கப்பெற்ற. ஊன் நாலு நசை - தனு கரண புவன போகங்களின் ஆசை. அனைத்தும் ஒழி ஞானம் - முதலியவைகளெல்லாம் நீங்கிய ஞானம்.

தரைமுதல்யா வையுஞ்செயநின் சத்திபதி தரல்வேண்டும்
புரைதவிரிந் நகரநடுப் பொலிதலினுற் சிற்றடியேன்
கரையுமுள நடுப்பொலியுங் காரணத்தா லினையதலம்
விரைசெய்நடுத் தலேசமெனு மொருபெயர்மே வுதல்வேண்டும். 27

கு-ரை: செய=செய்ய - படைக்க. புரை தவிர் - குற்றம் நீங்கிய. நின்சத்தி - நின் அருள். நகர நடுவிற் பொலிதலினுலும், இதய நடுப் பொலிதலினுலும் நடுத்தலேசம் என்னும் பெயர் பெறவேண்டும்.

தெரியவமை புனல்பிரம தீர்த்தமென வொருபெயர்பெற்
றரியபயன் குடைவாருக் கமையவளித் திடல்வேண்டும்
உரியநினைத் தருச்சிப்பா ருறுபோகம் பலதுய்த்துத்
துரியநிலை கடந்தின்பந் துய்க்கும்வீ டுறல்வேண்டும். 28

கு-ரை: அடியேனுல் அமைக்கப்பெற்ற தீர்த்தம் பிரமதீர்த்தம் எனப் பெயர்பெறல் வேண்டும். புனல் - தீர்த்தம். குடைவாருக்கு - முழுகுவோருக்கு. அரிய பயன் - சிறந்த பலன். துய்த்து - அநுபவித்து. துரிய நிலை கடந்த இன்பம் - துரியாதீத நிலையிலுள்ள இன்பம். வீடு - முத்தி.

இந்தவர மளித்தியென இரந்தனனுன் முகனனையான்
பந்தமறப் பரம்பரன்சாம் பவதீக்கை யினிதாற்றி
அந்தமிலா முப்பொருளு மறியுஞா னமுமருளி
எந்தவரங் களுந்தந்தோ மென்றருளி யுருக்கரந்தான். 29

கு-ரை: நான்முகன் இரந்தனன். அனையான் - அப்பிரமதேவனுடைய். பந்தம் - பாசபந்தங்கள். சாம்பவதீக்கை - தீக்கைவிசேடம். அந்தம் இலா முப்பொருள் - முடிவில்லாத திரிபதார்த்த ஞானம். முப்பொருள் - பதி பசு பாசங்கள். முப்பொருளும்: முற்றும்மை. ஞானமும் - சிவஞானமும்: இறந்ததுதழீஇய எச்சவும்மை. உருக்கரந்தான் - அருட்டிருமேனியை மறைத்தருளினர்.

அன்றுமுத லத்தலமு மப்புனலு மாரருளே
ஒன்றுநடுத் தலேசமென வுயர்பிரம தீர்த்தமென
நன்றுபெயர் புணைந்தனநன் ஞானமரு ளியதிறத்தாற்
கன்றுதலின் ஞானதல மென்றுமொரு பெயர்கரைவார். 30

கு - ரை : தலமும் தீர்த்தமும். அருளே ஒன்றும் - திருவருள் பொருந்தும். நடுத்தலேசம், பிரமதீர்த்தம் என்னும் பெயர்கள் அன்று முதல் வழங்கப் பெற்றன. திறத்தால் - தன்மையால். ஞானதலம் என்றும் வழங்கும்.

பிரமதீர்த் தம்படிந்து பிரமனூற் றுபித்த
பரமநா யகற்பணியார் பரமநா யகற்பிழைத்த
சரமமார் வினையொன்றுந் தவிர்தரயா வையுமொழிவார்
கிரமமா முத்தியின்பங் கிடைத்துவாழ் குவர்மெய்யே. 31

கு - ரை : பிரமதீர்த்தத்தில் முழுகி, நடுத்தலேசரைப் பணிபவர் சிவத்துரோகம் நீங்கலாக ஏனைப் பாவங்களெல்லாம் நீங்கப் பெறுவார். முறையே முத்திப்பேற்றையும் பெறுவர்.

விடைகொடுதன் னுலகடைந்து மேயபடைப் பினிதியற்றி
நடைகெழுநான் முகனிருந்தான் நடுத்தலே சம்புகன்றும்
புடைகதைக்கைக் கூற்றுவன்முன் புரிந்தபா தகமொழிவான்
தடையறவந் தருச்சித்த காதையினிச் சாற்றுவாம். 32

கு - ரை : தன் உலகு - சத்தியலோகம். புடை - மோதும். கதைக் கைக் கூற்றுவன் - கதாயுதத்தைக் கையிலேந்திய இயமன். ஒழிவான் - ஒழியும்பொருட்டு. அருச்சித்த - பூசித்த.

நடுத்தலேசப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1048

பதினேழாவது

இயமன் பூசித்தபடலம்

மருவிய சனற்குமர மாமுனி வரன்மலமா
சொருவிய சயிலாதி யொண்மலர்த் தாள்போற்றி
வெருவிய நமன்புரிந்த பாவமென் விளைத்ததெவன்
பெருவியப் புறவதனைப் பேசெனப் பேசிடுவான். 1

கு - ரை: மலம் மாசு ஒருவிய - ஆணவமலக் குற்றம் நீங்கிய. வெருவிய நமன் - அச்சமுற்ற இயமன். பாவம் யாது? அதனல் விளைந்த பயன் யாது? பெருவியப்பு - மிக்க ஆச்சரியம். என், எவன்: வினப்பெயர். ''காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான், மாலைக்குச் செய்த பகை'' (குறள்-1225). என்புழி எவன்கொல் என்பதனுனும், எவன் என்னுகத் திரிந்தது அறிக. ''பயனென் கொல்'' என்னுமிடத்து 'எவன் என்னும் வினப்பெயர் என் என்ருயது' எனப் பரிமேலழகர் கூறியமை அறிக. என், எவன்; யாதென்னும்பொருட்டு.

இளமுனி மார்க்கண்டற் ககவையெய் திடுமீரெட்(டு)
அளவையி னத்தனெடு மன்னையுங் கவலுற்றுத்
தளர்தர வெவனென்றம் மழமுனி தான்வினவ
உளம்வெரு வுறநமன்வந் துறுமென லுரைத்தழுதார். 2

கு - ரை: இளமுனி மார்க்கண்டற்கு - பிரமசாரியாகிய மார்க்கண்டனுக்கு. அகவை - பிராயம். அத்தன் - தமப்பன். கவல் - கவலை. தளர்தர - சோர்வடைய. எவன் - யாது காரணம். மழமுனி - பிரமசாரி. வெருவுற - அஞ்ச.

பரசிவ னுளனன்னுன் பாதபங் கயமுள்ள
வரமலர் பலவுள்ள வண்புன லுளதெங்கும்
விரவதிர் வொடுமுள்ளம் வெருவலி ரெனவிளம்பிக்
கரவறு களிப்போடுங் கைதொழு தெழுந்தனனுல். 3

கு - ரை: சிவபெருமான் உளன். அவன் திருவடித் தாமரைகள் உள்ளன. சிறந்த மலர்கள் பல உள்ளன. நன்னீர் எங்கும் உள்ளது. வெருவலிர் - அஞ்சாதீர்கள். பாதபங்கயம் - திருவடித்தாமரை. வரமலர்: வரம் - சிரேட்டம். புனல் - நீர். கரவு அறு - வஞ்சகமற்ற.

ஒருபர சிவக்குறியை யுன்னிட மனமுண்டு
பொருவரு மரியதுதி புரிதர வாயுண்டு
மருவருச் சனைபுரிய வளவிய கையுண்டு
திருவுரு நோக்கிடுவான் சிறப்புறு விழியுண்டு. 4

கு - ரை: ஒரு பரசிவக்குறி - ஒப்பற்ற சிவலிங்க வடிவம். பொரு அரும் - ஒப்பற்ற. நோக்கிடுவான் - நோக்கும்பொருட்டு. மனம், வாய், கை, விழி இவை உள்ளன என்றார்.

"கற்றுக்கொள்வன வாயுள நாவுள, இட்டுக் கொள்வன பூவுள நீருள, கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம், எற்றுக் கோநம னால்முனி வுண்பதே" (நாவுக் - தேவா).

மற்றவன் புகழ்கேட்க வார்தரு செவியுண்டால்
அற்றம தறப்பழக வவனடி யவருண்டு
சொற்றபத் திமைபுரிந்து தொழுதிடத் தலையுண்டு
கொற்றமென் பாலன்றிக் கொடுநமற் கெவனென்பான். 5

கு - ரை: அற்றமது அற - சோர்வில்லாமல். அற்றமது - சோர்வு: அது பகுதிப்பொருள் விகுதி. பழகுதற்கு அடியார் கூட்டம். பத்திமை - அன்புத்தன்மை. கொற்றம் என்பால்: கொற்றம் - வெற்றி. கொடு நமற்கு - கொடிய இயமனுக்கு. எவன் - யாது உண்டு.

பண்ணவ னடிப்பத்தி பசுமரத் தறையாணி
வண்ணமென் றிடவுளத்து மருவிடக் காசிமுதல்
அண்ணலந் தலமனைத்து மடைந்தடைந் துறப்போற்றிக்
கண்ணகன் கடவூரைக் குறுகினன் காதலொடும். 6

கு - ரை: பண்ணவன் - சிவபெருமான், 'பசுமரத்து அறை ஆணி வண்ணம்'; பசுமரத்தாணி என்பது பழமொழி. உளத்து மருவிட: மருவிட - பொருந்த. காசிமுதல் அண்ணல் அம் தலம் - காசி முதலாகவுள்ள சிவ தலங்கள். கண் அகன் - இடமகன்ற. கடவூர் - திருக்கடவூர்த்தலம்.

தலையமை கடவூரிற் றற்பர சிவலிங்கம்
அலைவறப் பூசைபுரிந் தன்புற வமர்காலைக்
கொலையமை பிணர்க்கோட்டுக் கோட்டுவெம் பகடூர்ந்து
மலைகரு மலைபோல வந்தனன் கூற்றுவனே. 7

கு - ரை: தற்பர சிவலிங்கம் - தனக்குத்தானே மேலாகிய சிவலிங்கம். அலைவு அற - ஒருநெறிய மனத்துடன் என்க; அலைவு - அசைதல். பிணர் - சருச்சரை; சொரசொரப்பு. கோடு - கொம்பு. கோட்டுக்கோட்டு வெம்பகடு-

வளைந்த கொம்பினையுடைய கொடிய எருமைக்கிடா. மலை கரு மலை - போர் செய்யும் கரிய மலை. கோட்டுக்கோடு; மலை கருமலை என்ற நயம் காண்க.

கூற்றுவன் வரல்கண்டுங் கொண்டகொள் கையிற்சிதையான்
ஆற்றுவ தருச்சனையே யன்றிமற் றென்றுமிலான்
மாற்றுவ திலையாக வந்தெனைத் தன்னுலகத்
தேற்றுவ தறிவாமென் றிருந்தனன் மார்க்கண்டன். 8

கு - ரை : கூற்றுவன் - இயமன்; உடலையும் உயிரையும் வெவ்வேறு கூருக்கும் கடவுள்; உடலினின்று உயிரைப் பிரிப்பவன் என்றபடி; 'வாழ்நாள் இடையருது செல்லுங் காலத்தினைப் பொருள்வகையால் கூறுபடுத்துங் கடவுள்' என்பர் நச்சினர்க்கினியர். சிதையான் - வேறுபடான். ஆற்றுவது - செய்வது. தன் உலகத்து ஏற்றுவது - இயமலோகத்துக்குக் கொண்டு போவது.

கண்டகண் மிகப்புலிங்கங் கான்றிடக் கடுங்கோபங்
கொண்டவ னுயுருமிற் குளிறுபு கொதித்துறப்பி
எண்டக நான்வந்த தெண்ணலை சிறுபிள்ளாய்
வண்டமர் குழல்பாகற் போற்றுபு வதிகின்ருய். 9

கு - ரை : கண்ட கண் - பார்த்த கண்கள். புலிங்கம் - தீப்பொறி. கான்றிட - கக்க. உருமிற் குளிறுபு - இடியைப்போல முழங்கி. உறப்பி - அதட்டி. எண்ணலை - நினையாய். வண்டமர் குழல்: அன்மொழித்தொகை. போற்றுபு - போற்றி. வதிதல் - தங்குதல்.

அரியயன் முதலாய வமரர்முற் பல்லோரும்
விரிதரு மெனதாணை கடந்திலர் மெய்ம்மையிது
புரிதரு பூசையைக்கண் டஞ்சுபு போதுவலோ
தெரிவிரை தரவம்மோ வென்றனன் சினமறலி. 10

கு - ரை : ஆணை - கட்டளை; ஆக்ஞை. அஞ்சுபு - அஞ்சி. போதுவலோ - போவேனே. விரைதர வம்மோ - விரைந்து வருக. வம்மோ - வருவாயாக: வம் - வா: மோ முன்னிலை அசைச்சொல். மறலி - இயமன்.

பரசிவ னடிப்பூசை பண்ணிடு பெருநோன்பின்
உரவமை நெறியினன்யா னுனக்கெளி யவனல்லேன்
புரவமை யாதபிறர் போலெனை நினையற்க
திரமுற வந்தவழிச் செல்லென முனியுரைத்தான். 11

கு - ரை : உரவு அமை நெறியினன்: உரவு - வலிமை, ஞானம். நோன்பின் உரவு என்க. புரவு அமையாத - பாதுகாப்பில்லாத. திரம் உற - உறுதியாக. முனி - மார்க்கண்டர்.

என்னுடை வலிசிறிது மெண்ணலை சிறுபிள்ளாய்
உன்னுடை யெழுத்தொழிந்த துணரென நமன்சொற்றான்
முன்னுடைத் தலையெழுத்தே முன்னினை யுளத்தமைத்த
மன்னுடை யைந்தெழுத்து மதித்திலை போலுமென்றான். 12

கு-ரை: வலி-வலிமை. எண்ணலை-எண்ணாய். எழுத்து-தலையெழுத்து. ஒழிந்தது-தொலைந்தது. முன் உடை-முன்னே உள்ள. முன்னினை-நினைந்தாய். மன்னுடை ஐந்தெழுத்து-நிலைபெற்ற பஞ்சாக்கர மந்திரம். மதித்திலை-மதியாய்; எண்ணவில்லை என்றபடி.

ஓவரு மாபாச முள்ளதென் றான்மறலி
ஏவரு மாபாச மிரிப்பதற் கடைவானைத்
தாவரு மாபாசஞ் சாடெனச் சார்ந்தவெனக்
காவரு மாபாச மாமென முனியுரைத்தான். 13

கு-ரை: ஓவரும் மா பாசம்-நீங்குதற்கரிய பெரிய காலபாசம். பாசம்-கயிறு வடிவினதாகவுள்ள ஒரு ஆயுதம். ஏவரும் மா பாசம் இரிப்பதற்கு-யாவரும் மிக்க பாசபந்தங்களைக் கெடுப்பதற்கு. பாசம்-பற்று, தளை. அடைவானை-அடையப்படுபவனை: செயப்பாட்டு வினை குன்றியது. அடையப்படுபவன்-சிவபெருமான். தாவரும் ஆபாசம்-நீங்குதற்கரிய கெடுதல். சாடு-முறிப்பாய். எனக்கா வரும் மாபாசம் ஆம் என உரைத்தான்.

தண்டமொன் றுளதுதலை தகர்த்திடு வேனெனவே
தண்டவன் றோளியமன் சாற்றினன் முனிவரைக்கோ
தண்டமு ளானடியே சார்பெனச் சார்ந்துபுரி
தண்டமுன் னினதுவலித் தண்டமென் செய்யுமென்றான். 14

கு-ரை: தண்டம்-தண்டாயுதம். தகர்த்திடுவேன்-பொடிபடுத்துவேன். தண்ட வன் தோள் இயமன். வரைக்கோதண்டம் உளான் அடியே சார்பு: வரைக்கோதண்டம்-மேருமலையாகிய வில். உளான்= உள்ளான்-உள்ளவராகிய சிவபெருமான். சார்பு-பற்றுக்கோடு. சார்ந்து புரி தண்டம் முன்-அடைந்து செய்யும் தண்டாகாரமான வணக்கத்தின் முன்னர். வலித்தண்டம்-வலிய தண்டாயுதம்.

சூலமொன் றுளதெடுத்துத் துளைப்பனின் னிறமென்றான்
ஆலமுண் டவன்றிருக்கை யமர்தரு திரிசூலங்
காலமொன் றுமுனனைத்தும் வாய்ப்பெய்து கழிக்குமது
போலவொன் றிலையென்றான் புன்னகை மழமுனிவன். 15

கு - ரை : சூலம் - சூலப்படை. நின் நிறம் - உன் மார்பை. ஆல முண்டவன் - ஆலகால விடத்தை அமுது செய்தருளிய சிவபெருமான். சிவபிரான் ஏந்திய சூலாயுதம். காலம் ஒன்றும் உன் - காலத்தொடு பட்ட உன்னை; சாங்காலம் பொருந்திய உன்னை என்றபடி. நீ காலன் ஆயினும் உன் ஆயுட்காலத்தை ஓர்ந்திலையே என்றது கருத்தாம். காலம் வந்து பொருந்து முன்னமே. வாய்ப்பெய்து - உண்டு. அனைத்தும் வாய்ப்பெய்து கழிக்கும் அதுபோல ஒன்று இல்லை என்றான்.

இளைத்திலன் மொழிப்போரி லெனச்சினந் தலைக்கொண்டு
வளைத்தவன் மருப்பெருமைப் போத்தினை மறலுந்த
விளைத்தது தன்கழுத்தின் மணியொலி விடைக்கழுத்தில்
தளைத்தபொன் மணியொலியுஞ் சாருமென் றனன்முனிவன். 16

கு - ரை : மொழிப்போரில் - சொற்போரில். இளைத்திலன் - தோற் றிலன். சினந்தலைக்கொண்டு - சினந்து. வளைத்தவன் மருப்பு எருமைப் போத்தினை - வளைத்து விளங்கும் வலிய கொம்பினையுடைய எருமைக் கிடாவை. மறல் உந்த - இயமன் செலுத்த. மணி ஒலி விளைத்தது. விடை - இடபம். இடபத்தின் கழுத்தில் கட்டிய மணியோசையும் உண்டாம் என் றனன். தளைத்த - கட்டிய.

வம்மென வந்திலை நீ மாய்வதின் னேசரதங்
கொம்மென வுணர்கென்று னுயிர்கொடுப் பவனுயிரைத்
தம்மெனு மொருநீயோ தகவல வெனுநானே
விம்மெனு முனந்தெரியு மெனமழ முனியுரைத்தான். 17

கு - ரை : வம் என வந்திலை: வம் - வா. இன்னே - இப்பொழுதே. சரதம் - சத்தியம். கொம் என - விரைந்து. உயிரைத் தம் எனும் ஒரு நீயோ உயிர் கொடுப்பவன் தகவு அல எனும் நானே. தம் - தா. தகவு - தகுதி. இம் எனும் முனம் தெரியும்: இம் - விரைவுக்குறிப்பு. "இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும், அம்மென்றால் ஆயிரமு மாகாதோ" என்னும் பாடல் காண்க.

என்றலு முலகமெலா மிரிந்துலை தரமுழங்கி
ஒன்றலில் பெருஞ்சினங்கொண் டுறுதழல் விழித்தோற்றிக்
கன்றலில் புகையுயிர்த்துக் கரும்பகட் டினைநீங்கி
அன்றலி னணுகுற்று னருளமை யாமடங்கல். 18

கு - ரை : இரிந்து உலைதர - கெட்டோடி நிலை கலங்க. ஒன்றல் - ஒன்றுதல். விழி உறு தழல் தோற்றி; உறுதழல் - மிக்க தீ. தோற்றி-தோற்று வித்து. உயிர்த்து - பெருமூச்சுவிட்டு. கரும் பகடு - கரிய எருமைக்கிடா. அன்றலின் - பகைமையின். நணுகுற்றுன் - நெருங்கினுன். அன்று அ(ல்)லின்

அனுகுற்றுன் எனினுமமையும்; அல் - இருள். மடங்கல் - சிங்கம் போன்ற வன்; இயமன். பகடு - எருமைக்கிடா, யானை என்னும் பொருள் தொனித்தற் கேற்ப மடங்கல் என்ருர்.

நமனனு குதலோடு நமனெனக் கருதாவுத்
தமனுளம் பதைபதைத்துத் தாரைக ணீர்பொழிய
எமனுனை யலதிலையென் றிலிங்கத்தைத் தழுவினனுங்
குமனொரு முதல்வெளியே குதிகொளும் படியழைப்பான். 19

கு - ரை: நமன் - இயமன். நமன் - நம்மவன். கருதா உத்தமன் - மார்க்கண்டன். தாரையாகக் கண்கள் நீரைப்பொழிய. எமன் - எம்மவன். நுனை அலது இலை - நுன்னையல்லாமல் வேறு யாருமில்லை. ஆங்கு மன் ஒரு முதல் - அப்பொழுது அவ்விடத்து நிலைபெற்ற ஒரு முதல்வன். குதிகொளும் படி - குதித்து வரும்படி: குதிகொளல் - தோன்றுதல்.

திரிபுர முழுதெரித்த சிறுநகைப் பரவோலங்
கரிவிற லறக்கீண்டு கவரதள் வரவோலம்
அரிமக னுடலழித்த வழல்விழி பரவோலம்
கிரியர வொடுதிருமால் கெழுவொரு சரவோலம். 20

கு - ரை: சிறுநகை - புன்சிரிப்பு. பர: விளி. கரி விறல் அற கீண்டு - தாருகாவன முனிவரால் ஏவிவிடப்பட்ட யானையின் வலிதொலையக் கிழித்து. உக - சிந்த, அழிய. அதள்வர - தோலை அணிந்த சிரேட்டனே. அரிமகன் - மன்மதன். அழல் விழி அர - அக்கினியாகிய கண்ணையுடைய அரன் என்னும் திருநாமத்தையுடையவரே.

சங்கர நினக்கபயந் தற்பர நினக்கபயம்
பொங்கர வாபரண பூரண நினக்கபயம்
செங்கர வழலேந்துந் திகம்பர நினக்கபயம்
இங்கர வத்தொடுகூற் றெய்தின னினக்கபயம். 21

கு - ரை: தற்பர - தனக்குத்தானே மேலானவனே. அரவு ஆபரணம். பூரண - எங்கும் நிறைந்தவனே. திகம்பர - திக்காடையையுடையவனே; திக் அம்பரம். அரவத்தொடு - முழக்கத்தோடு. கூற்று - இயமன்.

எனமுறை யிடுகாலத் தெரிவிழி நமனுய
முனகன்வெங் கொடுபாச முனியுடல் மிசைவீச
அனகனும் வெளித்தோன்றி யடியெடுத் துதைத்திடலுங்
கனவரை யெனவீழ்ந்தான் கடுஞ்சினக் கூற்றுவனே. 22

கு - ரை: எரி விழி நமன் ஆய முனகன் - தீச்சிதறும் கண்களையுடைய இயமன் ஆகிய பகைவன். முனகன் - பகைவன்; பாதகன் எனினுமாம்; "முனகர்செய் தீங்கு தீர்ந்தோம்" என்ருர் முன்னும் (அகத்திச - 88). முனி உடல் மிசை - மார்க்கண்டேயர் உடம்பின் மேல். அனகன் - சிவபெருமான். அடி எடுத்து - திருவடியைத்தூக்கி. கன வரை என - பெரிய மலைபோல.

அஞ்சுத லிலஞகிப் பூசனை யினிதாற்றும்
மஞ்சனை முகநோக்கி நீத்திய முறவழங்கி
எஞ்சிய கூற்றுவனை யெழுப்பிநம் மடியாரைத்
தஞ்சமென் றடையென்று சாற்றுபு விடுத்தனனே. 23

கு - ரை: மஞ்சன்=மைந்தன் - மார்க்கண்டேயர். நித்தியம் உற - அழியாதிருக்கும்படி; சிரஞ்சீவியாக. எஞ்சிய - இறந்த. தஞ்சம் - பற்றுக்கோடு. சாற்றுபு - கட்டளையிட்டு.

பூசனை புரிகாலைப் போற்றுதல் செய்யாது
பாசம்வன் புறவீசிப் படர்புரி பாதகத்தாற்
காய்சின வலியிழந்து கவலையுண் மிகத்துளைந்து
தோய்சல திப்புடவித் தலம்பல தொழனினைந்தான். 24

கு - ரை: போற்றுதல் செய்யாது - வணங்காமல். வன்புற - வலிமையோடு. படர் - துன்பம். பாதகம் - பாவம். துளைந்து - மூழ்கி. சலதிப்புடவித்தலம் - கடல்சூழ்ந்த நிலவுலகத்திலுள்ள சிவதலங்கள். தொழல்நினைந்தான்.

ஆனந்த வனமாதி யலகில்பஃ றலஞ்சென்று
தானந்த மில்லாத சயம்புவைப் பூசித்தும்
ஊனந்தற் கொழியாஞ யொருகரும் பகட்டூர்தி
கானந்தப் பெருகுபுனல் யமுனையங் கரையுற்ருன். 25

கு - ரை: ஆனந்தவனம் - காசி. அந்தமில்லாத சயம்பு - முடிவில்லாத சுயம்புமூர்த்தி; சிவபெருமான். ஊனம் - பழி, பாவம். பகட்டு ஊர்தி - இயமன். கால்நந்தப் பெருகு - வாய்க்கால்களில் மிகுதியாகப் பெருகுகின்ற.

வளிதட வினும்பாடு மகதிநல் யாழ்முனிவன்
ஒளிகிள ராங்கெதிர வுவந்தவ னடிதாழ்ந்து
களிகிளர் செருக்கின்முன நிகழ்ந்தவெ லாங்கரைந்து
தெளிதல மொன்றறியச் செப்புதி யெனக்கென்ருன். 26

கு - ரை: மகதி நல்யாழ் முனிவன் - நாரதமுனிவர். எதிர - எதிர்ப்பட. செருக்கின் - செருக்கினல். தெளிதலம் - தெளிந்த தலம்; தெளிந்த - ஆராயப்பட்ட. செப்புதி - சொல்வாய்.

வேறு

புன்னையங் கானல் சூழும் பொருகுண கடற்றி ரத்தின்
அன்னையோர் பாகத் தெம்மா னமர்தரு தலமொன் றுண்டால்
தன்னையே நிகர்வ தென்றுந் தணவருஞ் சிறப்பி னோங்கும்
பொன்னையே பொருவ யாரும் பொதிதருந் திருக்கா ரோணம். 27

கு - ரை: புன்னை அம் கானல் - புன்னைமரங்களையுடைய அழகிய கடற்கரைச் சோலை. குண கடல் தீரம் - கீழ்கடற்கரை. அன்னை - உமா தேவியார். தணவு அரும் - நீங்குதற்கரிய. பொதிதரும் - பாதுகாக்கும். பொன்னையே பொருவ; பொருவ - ஒப்பாக.

கேத்திரம் பலவற் றிற்கும் விசேடமாங் கிளர்ச்சி யாலே
கேத்திர ராச மென்றுங் கேத்திர வரமே யென்றுங்
கேத்திரத் தியல்பு ணர்ந்த கிழமைய ருரைப்ப ரந்தக்
கேத்திர மருவி யுள்ள புனலெலாங் கெழும வாடி. 28

கு - ரை: கேத்திரம் - தலங்கள். கிளர்ச்சி - மேம்பாடு. க்ஷேத்திர ராஜம், க்ஷேத்திர வரம் என்பர். இயல்பு - தன்மை. புனல் எலாம் - தீர்த்தங்களிலெல்லாம். கெழும - நன்ருக. ஆடி - முழுகி.

கருந்தடங் கண்ணி யோடு கருணைசால் காரோ ணத்தார்
இருந்தநற் றளிமுன் போற்றி யேனைய தளிக ளெல்லாம்
பொருந்துறப் போற்றிக் கஞ்சப் பூவினுன் பூசைசெய்த
பெருந்தகை நடுத்தலேச மெனும்பெருந் தளியைச் சார்ந்து. 29

கு - ரை: தளி - கோயில். முன் - முற்பட. ஏனைய தளி - மற்றுள்ள ஆலயங்கள். கஞ்சப்பூவினுன் - மலரோன்; பிரமதேவன். பெருந்தளி - பெருமைமிக்க கோயில்.

அந்தண னமைத்த தீர்த்தத் தாடியந் நடுத்த லேசச்
சுந்தரன் பாதம் போற்றித் தொழூஉப்பல பணியுஞ் செய்யின்
எந்தவல் வினையுந் தீரு மெய்துவை வலிபோ வென்றுன்.
சந்துமிக் குய்ந்தே னென்று தாழ்ந்தனன் விடைகொண் டானல்.30

கு - ரை: அந்தணன் - வேதன். அமைத்த தீர்த்தம் - பிரமதீர்த்தம். நடுத்தலேசச் சுந்தரன் - சிவபெருமான். பணியும் - தொண்டுகளும். வலி எய்துவை. சந்தம் மிக்கு உய்ந்தேன் - அழகுமிகப் பிழைத்தேன்.

விடைகொண்டு கடாவு கைக்கும் வெந்திறற் செய்ய கோலான்
கடைகொண்டு வெல்ல லாகாக் காரோண நகர மேவி
அடைகொண்டு மலருங் கொண்ட வமரர்தந் தீர்த்த மாதி
மிடைகொண்டு மிளிரும் பல்ல தீர்த்தமும் விரவி மூழ்கி. 31

கு - ரை : கடா உகைக்கும் - எருமைக்கிடாவை ஏறிச்செலுத்தும். செய்யகோலான் - செங்கோலையுடையவன்; நடுவன். வெந்திறல் செய்ய கோலான்: முரண்தொடை. அடை - இலை. அமரர் தம் தீர்த்தம் - தேவ தீர்த்தம். மிடைகொண்டு - நெருங்கி, செறிந்து. விடைகொண்டு கடா உகைக்கும் என்ற நயம் காண்க.

கறைதபு நீறு பூசிக் கண்மணி மாலை பூண்டு
முறையினை ந் தெழுத்து மெண்ணிக் கருந்தடங் கண்ணுள் மோகத்
திறையவர் முன்ன மேகி யிறைஞ்சுபு சுதைக்க டேசப்
பிறைமுடி யவர்முற் கும்ப முனியீச ரீருப் பேணி. 32

கு - ரை : கறை தபு நீறு - குற்றம் நீங்கிய விபூதி. முறையின் - விதிப்படி. இறைஞ்சுபு - வணங்கி. சுதைக் கடேசப் பிறைமுடியவர் - அமுதேசர். கும்பமுனியீசர் - அகத்தீசர். பேணி - விரும்பி.

வணங்குபு நடுத்த லேச மருவிநன் பிரம தீர்த்தத்
திணங்குற மூழ்கி யண்ண லெதிர்சென்று பணிந்து போற்றிக்
குணங்கிளர் மலர்முன் னாய கொண்டுறப் பூசை யாற்றி
மணங்கம ழன்பு பொங்க மற்றுமின் னனசெய் வானல். 33

கு - ரை : வணங்குபு - வணங்கி. மருவி - பொருந்தி. மலர்முன்னாய - மலர் முதலாகவுள்ள பூசோபகரணங்களைக்கொண்டு. பூசை ஆற்றி - பூசை செய்து. அன்பு பொங்க - அன்பு மிக.

ஏறுகள் பலவி ராவி யெழில்செய்வா னெழுந்த நொச்சி
பாறுத லில்லாப் பல்காற் பன்மணி மண்ட பங்கள்
வேறுமோர் மேரு வென்ன விளங்குகோ புரமுன் னாக
ஆறுசேர் சடையார் கோயி லழகுற வியற்றி னானே. 34

கு - ரை : ஏறுகள் - இடபங்கள். விராவி - கலந்து. வான் எழுந்த நொச்சி - ஆகாயத்தில் உயர்ந்து விளங்கும் மதில். பாறுதல் இல்லா - நீங்காத. கோபுரம் முன்னாக - கோபுரம் முதலாக. நொச்சி மண்டபம் கோபுரம் முதலிய அங்கங்களுள்ள கோயில் என்க. ஆறுசேர் சடையார் - சிவபெருமான்.

ஆயவா னவர்முற் பல்லோ ரொருங்குவந் தடையக் கூட்டி
மேயசீர் மாக மாத மிளிர்மருத் துவநன் னாளிற்
பாயவே றெழுதப் பட்ட படத்தையா ரோக ணஞ்செய்(து)
ஏயவே ழாநா ளண்ண லிரதமூர் விழாந டத்தி. 35

கு - ரை : மாகமாதம் - மாசிமாதம்; மகநாள் பூரணையுடன் கூடுவது மாகம்; மாகம் - மகசம்பந்தம். ஒவ்வொரு மாதங்களும் இவ்வாறே நட்சத்திரப் பிரதானத்தால் பெயர்பெறும். மருத்துவ நாள் - அசுபதி நட்சத்திரம்.

ஏறு எழுதப்பட்ட படம் - இடபத்தை எழுதிக் கட்டிய கொடி; படம் - துகிள். ஆரோகணம் செய்து - உயர்த்தி. ஏழாம்நாளில் தேர்த்திருவிழா.

திருமக முறுபத் தாநாட் டிருமலர்ப் பிரம தீர்த்தத்
தொருவிலத் திரரை யாட்டி யும்பரா தியர்க ளோடு
மருவுறத் தானு மூழ்கி வயங்கவ ரோக ணஞ்செய்
திருமருப் பெருமைப் பாக னிலிங்கமுன் னிறைஞ்சி நின்று. 36

கு - ரை : பிரமதீர்த்தத்தில் பத்தாம்நாள் மக நட்சத்திரத்திலே அத்திரதேவரைத் தீர்த்தங் கொடுக்கச்செய்து, தேவர்களுடன் தானும் முழுகி, அவரோகணம்செய்து - இறக்கி. இயமன் சிவலிங்கமூர்த்தி சந்நிதியில் வணங்கி நின்று.

மறைமுடி வாச போற்றி வயங்கருட் டேச போற்றி
கறைமல நாச போற்றி கணிப்பருந் தேச போற்றி
உறைகயி லாச போற்றி யூர்கடி யாச போற்றி
அறைகடி பாச போற்றி யருணடுத் தலேச போற்றி. 37

கு - ரை : இதுமுதல் 2 பாடல்களால் சிவபெருமானை இயமன் துதிப்பானயினன்.

மறைமுடி - உபநிடதம். கறை மலம் - ஆணவமலம். ஊர் கடி ஆச - திரிபுரத்தை எரித்த சிரிப்புடையவரே; ஆச: விளி. ஆசம் - சிரிப்பு.

கூடுதோ லுடையாய் போற்றி கூர்த்தசூர்ப் படையாய் போற்றி
நீடுநீர்ச் சடையாய் போற்றி நேரிழை புடையாய் போற்றி
ஆடுபாம் பிடையாய் போற்றி யறுகணி தொடையாய் போற்றி
நாடுமால் விடையாய் போற்றி நடுத்தல முடையாய் போற்றி. 38

கு - ரை : தோல் உடை - தோலாகிய ஆடை. நேரிழை - உமாதேவியார். புடை - பக்கம். பாம்பு இடையாய் - அரவக்கச்சையுடையவனே. "திருவரையிற் கட்டிய கச்சையும் பாம்பு" (குமரகுருபரர்). "கச்சைசே ராரவர் போலும்" (தேவாரம்). அறுகு அணி. தொடை - மாலை.

எனத்துதி புகலு வானுக் கிரங்கியவ் விலிங்க நின்றுங்
கனத்தினுங் கரிய கண்டன் றோன்றுபு காட்சி நல்கி
மனத்தினு நினையாத் தீமை மாய்த்தனை வலியுந் தந்தாஞ்
சினத்துநம் மடியார் மாட்டுச் சேறலை யென்று மென்று. 39

கு - ரை : துதி புகல்வான் - இயமன். கனம் - மேகம். தோன்றுபு காட்சி நல்கி - தோன்றிக் காட்சிதந்து. வலி - வலிமை, ஆற்றல். சேறலை -

செல்வாயல்லே. இனத்து நம் அடியார் மாட்டு - நம்முடைய அடியார் கூட்டத்தில். அடியார் மாட்டுச் சேறலே: ''படையும் பாசமும் பற்றிய கையினீர், அடையன் மின்நம தீசன் அடியரை, விடைகொ ளூர்தியி னன்அடி யார்குழாம், புடைபுகா துநீர் போற்றியே போமினே'' (காலபாசத் திருக்குறுந்தொகை) என்றமைகாண்க. பதிகம் முழுவதும் சிந்திக்க.

வாய்மலர்ந் தருளி யாங்கே மறைந்தன னிறைந்த சோதி
காய்சினக் கூற்றந் தாழ்ந்து கணிதரு விடையும் பெற்றுப்
பாய்சின விடையார் மேய காரோணம் பணிந்து போற்றி
ஆய்குணக் கருந்த டங்கண் அம்மைதன் னருளும் பெற்று. 40

கு - ரை : ஆங்கே - அப்பொழுதே. சோதி - சோதிவடிவாகிய சிவபெருமான். கூற்றம் - இயமன். விடை - உத்தரவு.

தன்னக ரடைந்து முன்போற் றகவர சியற்றி வாழ்ந்தான்
அன்னகு கரிய மேனி யந்தக னடைந்து செய்த
நன்னலந் தெரியச் சொற்று நலமலி விண்டு நாதர்
இன்னல முழுது மேன்மே லினித்திட வெடுத்துச் சொல்வாம். 41

கு - ரை : தகவு அரசு இயற்றி. அல் நகு கரிய மேனி. அந்தகன் - இயமன். நலம் மலி - நன்மை நிறைந்த. நலம் முழுதும் - சிறப்பு முழுதும்.

இயமன் பூசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1089

பதினெட்டாவது

விண்டுநாதப்படலம்

முற்று தவத்துச் சனற்குமார முனிவன் சிலாத முனிபுரிந்த
பற்று தவத்தி னுதித்தநந்திப் பண்ணவன் செம்பொற் பதம்பணிந்து
மற்று மருட்பெரு விண்டுநாதர் மான்மியம் யாவு முரைத்தியென்னக்
கற்று நிரம்பு மண்ணயனுள்ளக் காதல் பெருகக் கரையலுற்றுன். 1

கு - ரை : முற்று தவம் - முற்றுப்பெற்ற தவம். சிலாதமுனிவர் தவத்தால் உதித்தவர் திருநந்திதேவர். விண்டுநாதர் மான்மியம்; மான்மியம் - பெருமை. கற்று நிரம்பும் அணயன் - கற்பனவற்றைக் கற்றுச் சிவஞானம் நிறைந்த அத்திருநந்திதேவர். காதல் பெருக - அன்பு மிக.

நிலவுசெந் தாமரைக் காடுபூத்தோர் நீலச் சிலம்பு கிடத்தல்போல
உலவு திரைப்பாற் கடனடுவ ணோராயிர மாம்படப் பாந்தண்மேலாற்
கலவு விருப்ப மெழக்கிடந்து கமலத் தவளும் நிலமகளும்
குலவுபொற் பாதம் வருடல்செய்யக் கோலம் பொலிகண் வளரு
[மாயோன். 2

கு - ரை : நிறைந்த செந்தாமரைமலர் மலர்ந்து விளங்கும் ஒரு நீல மலை கிடந்தாற்போல. நீலச்சிலம்பு - நீலமலை. பாற்கடல் நடுவண் - திருப்பாற்கடலின் நடுவில். பாந்தள் - பாம்பு. ஆயிரம்படப் பாந்தள் என்றது ஆதிசேடனை. கலவு - கலந்த. கமலத்தவள் - திருமகள். நிலமகள் - பூமிதேவி. வருடல் - தடவுதல். கண் வளரும் - யோகநித்திரை செய்யும். மாயோன் - திருமால்.

அந்தர நாடவர் தங்குழாத்தோ டவுணர் குழாமு மொருங்குகூடிச்
சுந்தரப் பாற்கட ருழியாகத் தூய மதிப்பெருந் தூணிறுவி
மந்தர வெற்பெனு மத்துநாட்டி வாசுகி யென்னுங் கயிறுபூட்டி
முந்த முயன்று கடைந்தகாலை முளைத்தெழுந் தெங்கும் பரந்ததாலம். 3

கு - ரை : அந்தர நாடவர் - விண்ணோர். அவுணர் குழாம் - அரக்கர் குழு. பாற்கடல் தாழி. மதிதூண். நிறுவி - நிறுத்தி. தாழி - சால். மந்தர மலை மத்து. வாசுகி கடைகயிறு. ஆலம் எழுந்து பரந்தது. ஆலம் - ஆல காலவிடம்.

விண்ணுங் கருகத் திசையனைத்தும் வீந்து கருகக் கடல்வளைந்த
மண்ணுங் கருக வமுதம்வாரி வாரியுண் பாமெனும் வாஞ்சையுற்றுர்
எண்ணுங் கருகப் பெரும்புவன மெல்லாங் கருக விரிந்துகாண்பார்
கண்ணுங் கருகப் பரந்தெழுந்து கனற்றிய தாலால மென்னுந்தீயே. 4

குரை: வீந்து-அழிந்து. வாஞ்சை - விருப்பம். எண்ணும்-எண்ணமும். இரிந்து - கெட்டோடி. ஆலாலம் என்னும் தீ கனற்றியது; வெப்பம் வீசியதென்க.

ஆல மெழுந்து பரத்தலோடு மவுண ரொடுஞ்சுர ரோட்டெடுத்தார்
ஞால மளந்தவ னேடுதற்கு நாணிச் சிறிதுளத் தெண்ணிநின்றுன்
கால முடிவெழுந் தீயுநாணக் கதித்துக் கொதித்துக் கனற்றலாலே
கோலம் பொலிமெய் வனப்பழிந்து குலைந்து கருகி யிருந்தை
[போன்றுன். 5

குரை: ஓட்டெடுத்தார் - ஓடினர். ஞாலம் அளந்தவன் - திருமால். காலமுடிவு - ஊழிக்காலம். எழும் தீ - ஊழித்தீ. கதித்து - மேலெழுந்து. கனற்றுதல் - சுடுதல். மெய்வனப்பு - மேனியழகு. இருந்தை - கரி; "இருந் தைக் கிருந்தன்று" (நாலடி); "இருந்தை யிலங்க வெளிறுபடா தென்செய் தாலும்" (திருவரங்கத்தந்தாதி - 36).

சற்றினி நின்றிடிற் சாம்பராதல் சத்திய மென்றுளத் தெண்ணியச்ச
முற்று மிளிர்கயி லாயத்தெல்லா ரோடுமுன் னேடிப் பணிந்துவீழ்ந்து
சிற்றறி வாற்சிறி யேங்களொன்று செய்திடச் செய்தது தெய்வமொன்று
மற்றுன் னருளின்றி யாற்றலிந்த வண்ணமல் லாற்பிறி தென்படுமே. 6

குரை: சாம்பர் - பொடி. "நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது" என்பது பழமொழி, "ஒன்றை நினைக்கி னதுவொழித்திட் டொன்ருகும், அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை, நினையாத முன் வந்து நிற்பினு நிற்கும், எனையாளு மீசன் செயல்" (ஔவையார்). மற்று: வினைமாற்றின்கண் வந்தது. பிறிது - வேறு.

ஆழி கடைந்தமு துண்ணவேண்டி யடியோ மடைந்து முயலுங்காலை
ஊழி யனலுங் குளிருமாறே யுடன்றெழு வெய்ய விடங்கனற்ற [யிற்
வாழி யுயிர்பிழைத் தோடிவந்தோ மற்று மொருகணந் தாழ்த்தல்செய்
பாழி யுலக முழுதுந்தீக்கும் பற்றின்றி வாடிய வெங்களோடும். 7

குரை: ஆழி - திருப்பாற்கடல். ஊழி அனலும் - ஊழித்தீயும். உடன்று எழு - மாறுபட்டு எழுந்த. கனற்ற - வெதுப்ப. பாழி - பெரிய. தீக்கும் - தீயச்செய்யும். பற்று இன்றி - பற்றுக்கோடில்லாமல்.

உருகுமெய் யன்ப ருளத்துவாழ்வே யோவாக் கருணைப் பெருங்கடலே
கருகு விடத்தின் வலிதொலைத்துக் காத்தரு ளென்று கசிந்துவேண்ட
அருகமர் சுந்தர மூர்த்தியைப்பார்த் தாலாலம் பற்றித் தருகவென்னப்
பெருகு விருப்பி னணைந்ததனைப் பிடித்துத் திரட்டிக்கை மீதுவைக்க.

கு - ரை : உருகும் மெய்யன்பர் உளத்து வாழ்வே: "ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" "உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை" (நாவு - தேவா). ஓவா - நீங்காத. கருகு விடம் - கரியவிடம். அருகு அமர் சுந்தரர் - தோழராகிய சுந்தரர். அதனை - ஆலகால விடத்தை.

தாமரை மேலமர் வண்டுபோலத் தன்கை யமரும் விடத்தைநோக்கிக்
காமர் மருவுசெவ் வாயிற்பெய்து கண்ட நிறீஇநீல கண்டனுனன்
பூமலி வேணியன் சொற்படியே போந்து கொடியவா லாலம்பற்றி
யாமவ னுய்த்தலி னுயனுரு மாலால சுந்தர ராயினரே. 9

கு - ரை : தாமரை மலர் மேல் வண்டு; உவமை, சுந்தரர் திருக்கரத்து நஞ்சு: பொருள். நீலகண்டர். "மலரில் வண்டெனப் போந்தது கொடு விடங் குறுகி" (மண்ணிப்படிக்கரைப்பு - நீலகண்ட - 18). ஆலாலசுந்தரர் ஆயினர்.

கொடுவிட மாய்ந்தபின் மாயன்சூழ்ந்து கோமள மேனி வனப்பழிந்து
படுபழி மேவக் கரியனானேன் பண்டை வனப்புறப் பாலியென்னக்
கடுவமர் கண்டன் முறுவலித்துக் காரோண மேவியி லிங்கந்தாபித்
திடுமல ரால்வனப் பெய்துவாயென் றியம்பப் பணிந்து விடை
[பெற்றனே. 10

கு - ரை : கோமள மேனி - அழகியமேனி. வனப்பு - அழகு. கரியன் - கரிய நிறத்தையுடையோன். பாலி=பாலிப்பாய் - அருள்செய்வாய். முறுவலித்து - புன்சிரிப்புக் கொண்டு. கடு - விடம்; "கடுவிட முள்ளுத்தானே அரிதகி கசப்பு நாற்பேர்" (சூடாமணி நிக). இடும் மலரால் - அருச்சிக்கும் மலர்களால்.

வேறு

மதுமடை யுடைத்துப் பாய்பசுந் துளப மாலையான் வயங்குகா ரோண
முதுநக ரடைந்து முகிழ்த்தபல் வளமு மோகித்து நோக்குபு மகிழ்ந்து
சதுமுகன் படைத்த தராதலப் பயனுய்த் தழைந்ததிந் நகரெனக் கருதி
விதுமுடிப் பெருமான் றிருவருள் நினைந்து விண்ணவர் வாவியை
[யடைந்தான். 11

கு - ரை : துளப மாலையான் - திருமால். முதுநகர் - பழையநகரம். மோகித்து - விரும்பி. சதுமுகன் - பிரமன். விதுமுடிப் பெருமான் - சிவ பெருமான்; விது - சந்திரன். விண்ணவர் வாவி - தேவதீர்த்தம்; வாவி - குளம்.

அந்தநற் றீர்த்தம் படிந்துபின் முனிவ ராவியி னன்புறத் தோய்ந்து
பந்தமுற் றொழிக்குங் காகதீர்த் தத்தும் பாய்புகழ்ச் சறுவதீர்த் தத்தும்
சந்தமுற் றமைய முழுகுபு புனிதீ சாந்தமாந் தெய்வநீ றணிந்து
முந்தவற் புதமாங் கண்மணி பூண்டு மொழியுமைந் தெழுத்துளங்
[கணித்து. 12

கு - ரை : முனிவர் ஆவி - முனிதீர்த்தம்; ஆவி - குளம். தோய்ந்து - முழுகி. முற்று ஒழிக்கும் - முழுவதையும் அழிக்கும். பாய் புகழ்-பரவிய புகழ். முழுகுபு - முழுகி. தெய்வநீறு - தெய்வத்தன்மை பொருந்தும் விபூதி. அற்புதம் - ஞானமயமாம். கண்மணி - உருத்திராக்கம். ஐந்தெழுத்து உளம் கணித்து - பஞ்சாக்கர மந்திரத்தை மனத்தால் கணித்து.

திருந்திய காயா ரோகணம் புகுந்து
தெய்வநா யகன்முனம் பணிந்து
பொருந்திய வுள்ள நெக்குநெக் குருகப்
பொழிமழைத் தாரைகண் வார
வருந்தியக் கங்க ளனைத்தையுந் தவிர்த்தற்
காயவா வரணத்தைச் சூழ்ந்து
வருந்திய வருநஞ் சமுதுசெய் தருளும்
வள்ளலார் திருமுன மடைந்தான். 13

கு - ரை : தெய்வநாயகன்; "செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன்" என்க. உள்ளம் நெக்கு நெக்குருக - மனம் நெகிழ்ந்து உருகும் படி; "நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே, புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்" (தேவா). கண் வார - கண்களினின்று ஒழுக. வரும் தியக்கங்கள் தவிர்த்தற்கு ஆய ஆவரணம்; தியக்கம் - கலக்கம். அரும் தியக் கங்கள் எனினுமாம். ஆவரணம் - திருச்சுற்று. சூழ்ந்து - சுற்றி; வலம்வந்து. வருந்திய வரும் நஞ்சு - துன்புறும்படி தோன்றிய ஆலகாலவிடம். திரு முனம் - சந்நிதியை.

குறிகுணங் கடந்த தனிப்பெரு முதலைக் கோதிலா தவர்பெரு வாழ்வைச்
செறியருட் பிழம்பாஞ் சிற்பர வெளியைச் சின்மயா னந்தபூ ரணத்தை
அறிதரு மறிஞ ருள்ளத்துள் ளூறி யழிதரா தினிக்குமா ரமுதை
மறிவருஞ் சச்சி தானந்தப் பொருளை மலர்விழி களிப்புறக் கண்டான்.

கு - ரை : குறி குணம் கடந்த தனிப் பெருமுதல்; குறி - பெயர். குணம் - சத்துவ முதலியன; இவைகள் மாயா காரியமாகலின் இவற்றைக் கடந்த என்க. தனிப் பெருமுதல் - சிவபெருமான். கோது இலாதவர் - குற்றமில்லாத மெய்யடியார். பெருவாழ்வாகவுள்ளவரை. சிற்பரவெளி - ஞானாகாசம்: சித் - ஞானம். பரம் - மேலானது. சின்மய ஆனந்த பூரணம் - ஞானமயமான ஆனந்த நிறைவு. உள்ளத்துள் ஊறு. சத்துச் சித்து ஆனந்தமாகவுள்ள பொருளை.

பன்முறை பணிந்து பணிந்தெழுந் தாடிப்
பாடுபு பரவச மாகிச்
சின்மய விந்தச் சிவக்குறி காணச்
செய்தமா தவமெவ னிந்த
நன்மைகொள் குறியைத் தரிசியார் பிறப்பு
நவிலுமெப் பிறப்பென நயந்து
சொன்மனங் கடந்த தனிச்சிவக் கொழுந்தைத்
துரிசறத் துதிப்பவ னானன். 15

கு - ரை : சின்மய: விளி. மா தவம் - சிறந்த தவம். இந்தச் சிவலிங்க வடிவாகவுள்ள உம்மைத் தரிசனம் செய்யாதவருடைய பிறப்பு என்ன பிறப்பு என்று விரும்பி. சொல் மனம் கடந்த. துரிசு அற - குற்றமில்லாமல். மாதவம் எவன்: எவன் வினாவினைக்குறிப்பு. நயந்து - விரும்பி.

ஒளிவளர் சுடரே யுரைக்கொணா வொன்றே யுவமனி லாத்தனி முதலே
தெளிவள ரமுதே மூன்றுகட் கரும்பே சிந்திக்கத் தித்திக்குந் தேனே
அளிவளர் கனியே யானந்தப் பிழம்பே யற்புதம் விளைக்குமா ரமுதே
நளிவளர் மறைசூழ்ந் தேத்துகா ரோண நற்றலத் தமர்சிவக்
[கொழுந்தே. 16

கு - ரை : சுடர், ஒன்று, தனிமுதல், அமுது; கரும்பு, தேன், கனி, பிழம்பு, ஆரமுது, சிவக்கொழுந்து. இச்செய்யுள் ''ஒளிவளர் விளக்கே'' என்னும் திருவிசைப்பாவை ஒற்றிவந்தது. தெளிவளர் - தெளிவுமிக்க. அற்புதம் - ஞானம்.

என்றுநற் றுதிசெய் தெண்ணிலா வுயிரு மீன்றினி தளித்திடு மிறைவி
யன்றுத லில்லா வொருகருந் தடங்க ணம்மையைக் கண்டுளங் களித்து
நன்றுறத் துதித்து மற்றுமா வரண நயந்தமர் வாரையும் போற்றி
வென்றுமிக் கொளிருஞ் சக்கரப் படைமால் விடைகொடு வந்தனன்
[வெளியே. 17

கு - ரை : இறைவி - உமாதேவியார். அன்றுதல் - பகைத்தல். கருந்தடங்கண் அம்மை: இத்தலத்து இறைவி. ஆவரணம் - பிரகாரம். சக்கரப்

படைமால் - சுதரிசனம் என்னும் சக்கராயுதத்தையுடைய திருமால். மால் விடைகொடு வந்தனன் என்ற தொனிநயம் காண்க.

அருடரு மமுத கடேசமும் போற்றி
யமரரேந் திரேசமும் பணிந்து
மருடபு முனிகா ரோணமுந் தொழுது
வயங்ககத் தீசமு மேத்தி
இருண்மணி மிடற்றூர் இனிதுவீற்
றிருக்கு மெழினடுத் தலேசத்திற் புகுந்து
தெருண்மலி பிரம தீர்த்தத்தின் மூழ்கிச்
சேவித்துப் பெருமகிழ் சிறந்தான். 18

கு - ரை: அமுதகடேசம், அமரரேந்திரேசம், காரோணம், அகத்தீசம், நடுத்தலேசம் முதலியவைகளைத் தரிசித்துப் பிரமதீர்த்தத்தில் முழுகி இறைவரைப்பணிந்து பெருமகிழ்வடைந்தார் (திருமால்). மருள் தபு - மயக்கத்தைப் போக்கும். இருள்மணி மிடற்றூர் - நீலகண்டர். தெருள் மலி - தெளிவுமிக்க.

நாடுகா ரோண நாயகன் றென்பா லடுத்தலேச் சுரன்வனித் திசையிற்
கூடுமச் சுதபுட் கரணியென் றுரைக்கக் குலவிய வமுதபுட் கரணி
பாடுமூ வுலகும் படிந்துய்ய வமைத்துப் பண்புற மற்றதின் மூழ்கி
நீடுவெண் ணீறு கண்டிகை புனைந்து நின்மல வைந்தெழுத்தெண்ணி.

கு - ரை: காரோண நாயகருக்குத் தெற்கேயுள்ள நடுத்தலேசுரருக்கு அக்கினித்திக்கிலுள்ள அச்சுத புட்கரணியைப் பெருமை பொருந்த மூவுலகில் உள்ளோரும் முழுகி உய்யுமாறு அமைத்து, அதில் முழுகி, வெண்ணீறு கண்டிகை புனைந்து, தூய ஐந்தெழுத்தைக் கணித்து. அச்சுத புட்கரணி - அச்சுத தீர்த்தம். வனித்திசை: வனி=வன்னி - அக்கினி.

அன்னபுட் கரணிக் கலங்கழற் றிசையி
னவிர்நடுத் தலேசத்தின் றென்பால்
நன்னர்வண் டளியொன் றியற்றுபு விண்டு
நாதனென் றுரைத்திடு பெயரின்
மன்னவோ ரிலிங்கந் தாபித்து நறிய
மஞ்சன மாதிகள் கொண்டு
பின்னமொன் றில்லா வன்புமேற் பொங்கப்
பிறங்குநற் பூசனை புரிவான். 20

கு - ரை: அந்தத் தீர்த்தத்தின் அக்கினிதிசையில் நடுத்தலேசத்தின் தெற்கில் சிறந்த வளம்பொருந்திய கோயில் ஒன்றை நிருமித்து, விண்டுநாதர் என்னும் பெயரோடு விளங்கும் வண்ணம் ஒரு சிவலிங்கம் தாபித்து,

நல்ல மணம் பொருந்தும் திருமஞ்சனம் முதலியனகொண்டு குறையாத அன்புடன் பூசித்தார் (திருமால்). அலங்கு அழல் திசை. தளி - கோயில்.

தானினி தமைந்த வமுதபுட் கரணி தன்னின்முக் காலமும் படிந்து
தேனினி துயிர்க்கு மலர்முதற் பலவுந் தெவ்வியத் தடத்துமஞ் சனமே
நானினி வேறு கவர்தரே னென்று நயமுறக் கவர்ந்துபூ சிப்பான்
மானினி யமருந் தளிவிளக் கென்ன மணிகிடந் திமைக்குமார்
[புடையான். 21

கு - ரை: திருமால் உண்டாக்கிய அமுதபுட்கரணியில் மூன்றுகாலங்களினும் படிந்து, தேன் ஒழுகும் மலர் முதலிய கொணர்ந்து அத்தீர்த்தத்தையே கொண்டு பூசிப்பாராயினர்.

நான் என்றது விஷ்ணுமூர்த்தி. தெவ்வி - எடுத்து. வேறு - பிற தீர்த்தம். மானினி அமரும் தளி விளக்கு. மணி - கௌத்துவமணி. மானினி - பெண்; என்றது இலக்குமிதேவியை.

செக்கரஞ் சடையான் அருட்குறிப் பதிட்டை
சிறந்தகா ரோணத்தி னாற்றிச்
சக்கரப் படையான் பூசனை புரிவான்
றவாதருள் பெறுவனவ் வருளே
மிக்கர நாமா மிரும்பினுக் கென்று
வெருவுபு தானவர் கரந்தார்
அக்கர வுணர்ந்து மிகமனங் களித்தார்
அமரர்முன் னுயபல் லோரும். 22

கு - ரை: செக்கர் - சிவப்பு. அருட்குறி - சிவலிங்கமூர்த்தி. பதிட்டை - பிரதிட்டை. ஆற்றி - செய்து. தவாது - நீங்காமல். நாமாம் இரும்பினுக்கு அவ்வருளே மிக்க அரம். நாம் என்றது அரக்கர். வெருவுபு - அஞ்சி. தானவர் - அசுரர். அ கரவு உணர்ந்து; அந்த ஒளிந்த செய்தியை அறிந்து. அமரர் முன்னுய - தேவர் முதலாகவுள்ள.

சூடுவ னிருகை மலருந்தன் றலைமேற்
சூழுவன் விண்டுநா யகனை
ஆடுவ னுரோமஞ் சிலிர்த்திட வாடி
யரகர கரவென முழங்கிப்
பாடுவன் பல்காற் ருழ்ந்துதாழ்ந் தெழுவன்
பரனருள் பெறுவதென் றென்று
வாடுவன் மகிழ்வன் என்சொலக் கடவே
மாயவன் செய்யுமன் பினையே. 23

கு - ரை : தன் தலைமேற் சூடுவன், நாயகனைச் சூழுவன். உரோமம் சிலிர்த்திட - மயிர்க்குச்செறிய. பரன் அருள்பெறுவது என்று.

எனைவிடை யுருச்செய் தியக்குவை கணைசெய்
தெய்குவை திரிபுரங் குலைய
நனைமலர்க் குழல்செய் தொருபுறத் தமைப்பை
நால்வகைச் சத்திக டம்முட்
புனையிழை முலையோர் சத்திநா னலனோ
பொற்பிழந் துயங்குதல் நன்றோ
வினைமுழு தொழிக்கும் விண்டுநா தத்தின்
மேவிய பரசிவக் கொழுந்தே. 24

கு - ரை : எனை - திருமாலாகிய என்னை. விடை உரு - இடப வடிவம். கணை - அம்பு. மலர்க்குழல்: அன்மொழித்தொகை. நால்வகைச் சத்திகளுள் நான் ஒரு சத்தி அல்லனோ; நால்வகைச் சத்தி - பார்வதி, துர்க்கை, காடு கிழாள், விட்டுணு.

பொற்பு இழந்து உயங்குதல் நன்றோ: பொற்பு - அழகு. உயங்குதல் - வருந்துதல். விண்டு நாதம் - விஷ்ணுவால் அமைக்கப்பெற்ற கோயில்.

"விரைக்கமல வோடை யாவர் புரத்தைமுனி பாண மாவர் விரித்த கொடி யாவ ரீதலால், இரக்குமனை தோறு மேறி நடத்துமெரு தாவர் மேவி யிடத்திலுறை தேவி யாவரே" (அருணைக்கலம்பகம் - 42),

திருமால் சிவபெருமானுக்கு மாயாசத்தி என்னும் ஆண் சத்தியாக லின் மனையாம். என்னை? காளிதேவி கோபச்சத்தியும், துர்க்கை அழித்தற் சத்தியும், உமாதேவியார் இன்பச்சத்தியும், திருமால் ஆண்சத்தியும் எனப் புராணங்கூறும். இதனை, 'நால்வகைப்பட நண்ணிய சத்தியுள், மாலுமொன் றுதலின்' (கந்தபுரா - மாசாத்தாப்படலம்).

கண்மலர் சாத்தக் கான்மல ரணிந்தாய்
கடையனே னரப்புப வீதம்
எண்மலர் நிறத்திற் புனைந்தனை மெய்த்தோ
லியைதரக் கஞ்சுகஞ் செய்தாய்
திண்மலர் வெரிநென் பொருகரங் கொண்டாய்
சீரிழந் துயங்குத னன்றோ
விண்மலர் சுரர்சூழ் விண்டுநா தத்து
மேவிய பரசிவக் கொழுந்தே. 25

கு - ர: என்னுடைய கண்ணாகிய தாமரைமலரைச் சாத்தத் தேவரீர் திருவடித் தாமரையில் அணிந்தருளினீர். கண்மலர், கான்மலர். நரம்பு= நரப்பு; வலித்தல். உபவீதம் - பூணுநூல். எண் மலர் நிறம் - வெண்மை. நிறம் மார்புமாம். கஞ்சுகம் - சட்டை; மெய்ப்பை. வெரிந் என்பு - முதுகு எலும்பு. இழந்து - சிறப்புக்களெல்லாம் தொலைந்து. உயங்குதல் - வருந் துதல்.

அருட்பெருங் கடலே நின்னடி யடைந்தே
னண்ணலே நின்னடி யடைந்தேன்
மருட்பகை துமித்து வணங்குநர்ப் புரக்கும்
வள்ளலே நின்னடி யடைந்தேன்
தெருட்கிட னாய விண்டுநா தத்திற்
செம்மையோய் நின்னடி யடைந்தேன்
இருட்கடு மிடற்றாய் நின்னடி யடைந்தே
னென்றுதோத் திரம்பல புரிந்தான். 26

கு - ரை: மருட் பகை - அஞ்ஞானமாகிய பகை. துமித்து - கெடுத்து. தெருட்கு இடன்: தெருள் - ஞானம். இருட் கடு - கரிய விடம்.

இவை மூன்றுபாடல்களாலும் திருமால் துதித்தமை காண்க.

துதியுள முருகி யின்னணம் புரியச் சுந்தர நாயக னிடப
மதிவிசா கத்தி னவ்விலிங் கத்தி னின்றுமாண் புறவெளி வந்து
பதிபெரு வனப்புக் கரசனீ யாகும் படிவரங் கொடுத்தன மின்னும்
விதியுற வேண்டும் வரமெவ னுரைத்தி விரிதுழாய்க் கண்ணிய
[வென்றான். 27

கு - ரை: இன்னணம் - இவ்வாறு. உளம் உருகித் துதி புரிய. இடப மதி - வைகாசி மாதம். விசாகநாளில். அழகினுக்கு அரசன் நீ ஆகும்படி. துழாய்க் கண்ணிய - திருத்துழாய் மாலையை அணிந்தவனே: விளி.

என்றலும் வணங்கி யிவ்விலிங் கத்தி
லென்றுநீ பொலிதரல் வேண்டும்
நன்றமை தரநா னமைத்ததீர்த் தத்தி
னலமுறத் தோய்ந்துநிற் றொழுவார்
பொன்றலில் வினையும் போக்குதல் வேண்டும்
போகமும் பொருந்திடல் வேண்டும்
மன்றநான் வசித்த தேத்தினெஞ் ஞான்றும்
வசிக்கவும் வேண்டுமென் றிரந்தான். 28

கு - ரை: தேவரீர் இந்த இலிங்கத்தில் என்றும் விளங்கியருள வேண்டும். நான் அமைத்த அமுதபுட்கரணியில் மூழ்கினோர், உம்மை வணங்கினோர்களின் அழிதலில்லாத தீவினைகளைப் போக்குதல் வேண்டும். போகமும் பொருந்தி நான்வசித்தவிடத்தில் எப்போதும் வசிக்கவும் வேண்டு மென்று இறைவனிடத்து இரந்தான்.

மாயவன் மொழிந்த படியெலா முதவி
மறைந்தன னிவ்விலிங் கத்துத்
தூயவ னைய னருளிய வரத்தாற்
சுந்தர ராசனென் றொருபேர்
மேயவ னாகி முன்னையிற் சிறந்து
விளங்கினன் திருநெடு மானன்
காயவ னழகைக் கண்டுவண் கமலை
யகமகிழ்ந் துறத்தழீஇ யினளால். 29

கு - ரை: மாயவன் - விஷ்ணுமூர்த்தி. எலாம் உதவி அவ்விலிங்கத்து மறைந்தனன். தூயவன் - மலரகிதராகிய சிவபெருமான். தூயவன் மறைந் தனன். திருநெடுமால் சுந்தரராசன் என்று ஒருபேர் மேயினன். நன்கு ஆயவன். கமலை - இலக்குமி.

அண்ணலெம் பெருமான் பூசைநன் காற்றற்
கமைத்ததீர்த் தத்திற்கு மேல்பால்
வண்ணலம் பொலிய முன்புதா னமர்ந்து
மாதவம் புரிந்தவத் தேத்தே
ஒண்ணலம் பொலிய வாலய மமைத்திட்
டொளிர்திரு மகள்சிறைக் கலுழன்
கண்ணல விடுவச் சேனனா தியருங்
கலப்பமே வுவன்சவுந் தரமால். 30

கு - ரை: அண்ணலாகிய எம்பெருமானுடைய. அமைத்த தீர்த்தம் - அமுதபுட்கரணி. அத்தேத்து - அவ்விடத்தில். திருமகள் - இலக்குமி. கலுழன் - கருடன். விடுவச்சேனன் - விஷ்வக்சேனர்; சேனை முதலியார். ஆதியரும் - முதலானவரும். சவுந்தரமால் - சுந்தரராசப்பெருமாள். கலப்பப் பொருந்துவர் என்க.

அனையனைத் தொழுவோர் வைகுந்த மடைவார்
அழகிய விண்டுநா தரைத்தாழ்
வினையின ரெல்லாப் போகமு மடைவார்
மேதகு முத்தியும் பெறுவார்

நனைமலர்க் கடுக்கை விண்டுநா தச்சீர்
நவின்றன நலமெலாம் பொருந்தும்
கனையரு ளாக நாதரென் றுரைக்குங்
கண்ணுத லார்வர வுரைப்பாம். 31

கு - ரை : அந்தச் சுந்தரராசப் பெருமானை வணங்குவோர் வைகுந்த பதமடைவர். அழகிய விண்டுநாதரை வணங்குவோர் எல்லாப் போகமும் அடைவார்; மேலாகிய முத்தியையும் பெறுவார். நனைமலர்க் கடுக்கை - மொட்டருமலராகிய கொன்றை. கனை அருள் நாகநாதர் - மிகுந்த அருளை யுடைய நாகநாதர்.

விண்டுநாதப்படலம் முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் — 1120

பத்தொன்பதாவது

நாகநாதப்படலம்

பொழியருள் நந்திப் புத்தேள் பொன்னடிக் கமலம் போற்றி
அழிவருந் தவத்தான் மிக்கோ னாகிய சனற்கு மாரன்
பழிதபு நாக நாதர் மான்மியம் பகர்தி யென்னக்
கழிமகிழ் சிறப்ப வன்னுன் கட்டுரைத் திடலுற் றுனல். 1

கு - ரை: பொழி அருள் நந்திப் புத்தேள்; பொழி அருள் - அருளைப் பொழிகின்ற: வினைத்தொகை. அழிவு அரும் தவத்தால் மிக்கோன். பழிதபு - குற்றமில்லாத; மலரகிதர். கழிமகிழ் - மிக்க மகிழ்ச்சி.

பூதலத் தமர்கின் றூர்வாய்ப் புகழொடும் பொன்னு டாய
மீதலத் தமர்கின் றூர்வாய்ப் புகழுமிக் கணியாப் பூண்டு
பாதலத் தமர்வோ னெல்லாப் பரப்பிற்கு மரசு செய்வோன்
மாதலத் திகவா துய்க்கும் வாஞ்சைய னுகி வாழ்வான். 2

கு - ரை: பூதலம் - பூமி. அமர்கின்றூர் - மக்கள். பொன்னுடாய மீதலம் - விண்ணுலகம். அமர்கின்றூர் - தேவர். மிக்க அணியா - பேராபரணமாக. பாதலத்து அமர்வோன் - ஆதிசேடன். மா தலத்து இகவாது உய்க்கும்: இகவாது - நீங்காமல். வாஞ்சை - விருப்பம்.

குணமலி மனைவி யோடுங் கூடிவாழ் கின்ற நாளிற்
பணமலி சேட னென்பான் பற்பனு ணேன்பு ழந்து
மணமலி குதலைச் செவ்வாய் மகவுதோன் றுமை யாலே
கணமலி துயருண் மூழ்கிக் கவன்றிது கரைய லுற்றுன். 3

கு - ரை: குணம் மலி மனைவி: குணம் மலி - நற்குணங்கள் நிறைந்த. பணம் மலி சேடன்: பணம் - படம். பற்பல நாள் நோன்பு உழந்து - நெடுங்காலம் விரதமுதலியவற்றல் வருந்தி. குதலைச்செவ்வாய் மகவு; குதலை-எழுத்துவடிவம் பெருத சொல். மகவு - குழந்தை. கவன்று - கவலையுற்று.

கொடையுயர் முகம னின்றேற் கொழுமலர் நாற்ற மின்றேல்
அடைநிசி மதிய மின்றே லருந்தவங் கருணை யின்றேன்
மிடைகலை ஞான மின்றேல் விளங்குறு மறமன் பின்றேற்
கடைபடு திறமே போலு மில்லறம் காலின் றென்னில். 4

கு - ரை : முகமனில்லாத கொடையும், மணமில்லாத மலரும், சந்திர னில்லாத இரவும், அருளில்லாத அருந்தவமும், ஞானமில்லாத கல்வியும், அன்பில்லாத அறச்செயலும் எவ்வாறு கடைப்பட்டதாக அறிஞரால் ஒதுக்கப் படுவனவோ அவ்வாறே மகவில்லாத மனையறமுமாம் என்றபடி.

கொடை - கொடுக்குந்தன்மை; ஈகை. ஈகையின் இலக்கணமாவது: 'செய்மைக்கண்ணே இரவலரைக் கண்டபோது இனிமையாகப் பார்த்தலே அரும்பாக, நெருங்கியவழி மலர்ச்சியோடு கூடிய முகமே அன்று அலர்ந்த மலராக, இன்மொழியாகிய வாய்மை தீங் காயாக, கொடையே பழமாகவுள்ள நற்குணங்கள் மிக்கிருத்தலேயாம் என்க. இதனை, "கண்ணேக் கரும்பா நகைமுகமே நாண்மலரா, இன்மொழியின் வாய்மையே தீங்காயா-வண்மை, பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே, சலியாத கற்ப தரு" என்று அருளினர் நீதிநெறிவிளக்கத்தில் (37) ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள். இதனல், கண்ணேக்கும் நகைமுகமும் அகத்தின் உவப்பை வெளிப்படுத்துவன. மனம், வாக்கு, காயம் என்னும் மூன்ருலும் விரும்பிச்செய்வது ஈகை என்று கொள்க.

புத்திரப் பேறு இல்லாதாயின் இல்லறம் பயன்படுமாறில்லை என்பதை உவமை முகத்தால் உணர்த்துவன இச்செய்யுளும் அடுத்த செய்யுளும்.

பண்ணிலாப் பாடல் போலும் பற்றிலா நட்புப் போலும்
பெண்ணிலாச் சயனம் போலும் பெயரிலா வாழ்க்கை போலும்
உண்ணிலா நெய்யி லாம லூட்டுமின் னடிசில் போலும்
கண்ணிலா வதனம் போலுங் கான்முளை யில்லா வில்லம். 5

கு - ரை : இசையில்லாத பாடலையும், உள்ளும் புறம்பும் ஒத்துச்செய் யாத நட்பையும், குலமகளில்லாத படுக்கையையும், புகழில்லாத வாழ்வையும், நெய்யில்லாத உண்டியையும், கண்ணில்லாத முகத்தையும் போல்வது குழந்தைகளில்லாத விடு என்க.

பண் - இசை. பெயர் - கீர்த்தி. அடிசில் - உணவு. வதனம் - முகம். கான்முளை - புத்திரன். இல் - விடு. "நெய்யில்லா உண்டி பாழ்" என்றமையும் காண்க.

என்றுளத் தமைய வெண்ணி யிருங்கடற் புடவி மேவி
நன்றுநம் பரனைப் போற்றி நந்தன னடைவே னென்று
குன்றுத லில்லாத் தூய குணங்கெழு மனைவி யோடும்
ஒன்றுபஃ றலைய னைய வுரகன்மண் மிசைவந் தானல். 6

கு - ரை : அமைய - பொருந்த. புடவி - நிலவுலகம். நம் பரன் - நமது உயிர்த்தலைவனுகிய சிவபெருமான். நந்தனன் - புத்திரன். கெழு - மிக்க. பஃறலை - பல்தலை; என்றது ஆயிரம் பணமுடிகளை. உரகன் - ஆதி சேடன்.

வந்தபாப் பரசன் றூய வசிட்டமா முனிவற் கண்டு
நந்தநான் மகவு வேண்டி நண்ணின லஃது மேவுஞ்
சந்தமா தவமீ தென்று சாற்றுதி யென்று தாழ்ந்தான்
அந்தமா தவனு முள்ளத் தாய்ந்தினி துரைக்க லுற்றான். 7

கு - ரை : பாப்பரசன் - ஆதிசேடன்; பாம்பு=பாப்பு: வலித்தல் விகாரம். நந்த - ஆக்கம்பெற. சந்தம் மா தவம் - அழகிய பெருந்தவம். மாதவன் - வசிட்ட முனிவர். உள்ளத்து ஆய்ந்து - தியானித்து.

பரம்பர னிலிங்க பூசை பண்ணலே சிறந்த நோன்பாம்
நிரம்புற மகவு நல்கு நினைத்தவை யனைத்து மேவும்
வரம்பறு மறுமைப் பேறு வாய்ப்பது மேலா முத்தி
உரம்படப் பெறலு மந்தப் பூசையா லுரக வேந்தே. 8

கு - ரை : பரம்பரன் - சிவபெருமான். நோன்பு - விரதம். வரம்பு அறு - எல்லையில்லாத. உரம்பட - வலிமை பொருந்த; உரம் - வலிமை, ஞானம். ஞானம்பொருந்த எனினுமாம். உரக வேந்து - பாம்பரசன், நாகராசன்.

ஓராயிரங் கமல மேனி யொருங்குபூத் திடக்க ளிப்பார்
பராவொரு கமல மேவிப் பண்புற வாழ்வா ருந்தி
விராவொரு கமலம் பூப்ப விளங்குவார் சடில மோலி
அராவணி பவனி லிங்கத் தலங்கொரு கமல மிட்டார். 9

கு - ரை : கமலம் - தாமரை. ஆயிரங்கமலம் மேனிபூத்திடக் களிப்பார் - இந்திரனாவார். கமலம் மேவி வாழ்வார் - பிரமனாகிப் படைப்பார்; பிரமன் கமலாசனன் ஆகலின். உந்திவிராவு ஒருகமலம் - உந்தித்தாமரை. விளங்குவார் - திருமாலாகிக் காப்பார் என்க. சடிலம் மோலி - சடாமகுடம். அரா அணிபவன் - சிவபெருமான். இலிங்கத்து அலங்கு ஒரு கமலம் இட்டார்; அலங்கு - விளங்கும். ஒரு கமலம் - ஒரு தாமரைமலர்.

ஆதலா லிலிங்க பூசை யனைத்தையுங் கொடுக்க வல்ல
தீதலான் மறைகள் வேறுண் டென்றெடுத் தியம்பா வென்றுங்
காதலா லதனை யின்னே கடைப்பிடித் தாற்றி னுள்ளம்
நோதலாற் கவலா யெண்ண நொடிவரை முற்று மென்றான். 10

கு - ரை : ஈது அலால் - இந்தச் சிவபூசையையின்றி. மறைகள் இயம்பா. காதலால் - அன்புடன். இன்னே - இப்பொழுதே. கடைப்பிடித்து ஆற்றின். நோதலால் - வருந்துவதால். கவலாய் - கவலைப்படாதே. எண்ணம் முற்றும் - கருத்து நிறைவேறும். நொடிவரை - நொடிப்பொழுதில்.

முன்புநா ளிணைந்த வாறே மொழிந்தனன் பன்னூற் கேள்வி
வன்புசால் முனிவ னென்று மகிழ்ந்தன னுகர் கோமான்
அன்புமே விலிங்க பூசை யாற்றுதற் கிடமீ தேயென்(று)
இன்புகூர் கும்ப கோணத் திருநக ரெய்தி னனே. 11

கு - ரை: பன்னூற் கேள்வி வன்பு சால் - பல நூல்களையும் கற்றுங் கேட்டும் வலிமை மிக்க. வன்பு - வலிமை; அறிவின்வன்மை. 'கற்றல் கேட்ட லுடையார் பெரியார்' என்க. முனிவன் - வசிட்ட முனிவர். நாகர் கோமான் - ஆதிசேடன். இடம் ஈதே என்று கும்பகோணத் திருநகர் எய்தினன்.

பொருவருங் கும்ப கோணப் பொன்னகர் மரீஇக்கீழ்க் கோட்டத்
ஒருவரு மன்பிற் புக்கா னொளிர்சிவக் குறியைக் கண்டான் (து)
வெருவருங் களிப்பிற் றூழ்ந்து மேதகு தீர்த்த மூழ்கி
மருவரு மலர்முற் கொண்டு மாண்புறப் பூசை செய்தான். 12

கு - ரை: கீழ்க்கோட்டம் - கீழைக்கோயில்; என்றது குடந்தைக் கீழ்க்கோட்டமாகிய நாகேசுரர் கோயில் என்க. சிவக்குறி - சிவலிங்கமூர்த்தி. மருவரு மலர்: மரு - வாசனை. முற்கொண்டு - முதலியவற்றைச் சேகரித்து வைத்துக்கொண்டு.

ஈசனை மடந்தை பாகத் திறைவனை யன்பர் மாட்டே
நேசனை யொளிர்கீழ்க் கோட்ட நிமலனை யளக்க வொண்ணுத்
தேசனைச் சிவபி ரானைச் சிற்சபை யாடு வானைப்
பூசனை யிந்த வாறு புரிந்தனன் சின்னுட் சேடன். 13

கு-ரை: ஈசன்-எப்பொருட்கும் தலைவன்; சர்வைசுவரிய சம்பன்னன் என்ற படி. மடந்தை - உமாதேவியார். இத்தலத்தில் இறைவர் 'மடந்தை பாகர்' என்னும் திருநாமமுடையார். நிமலன் - மலரகிதர். தேசன் - ஒளியுடையார். சபை ஆடுவான் - சிற்சபையிலே பஞ்சகிருத்திய தாண்டவம் செய்தருளுபவர். கீழ்க்கோட்டத்தில் நடராசப்பெருமானுக்குத் தனிக்கோயில் உண்டு. இங்கு நடராசர் சந்நிதி விசேடம். "குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னுரே" என்றருளியதற்கேற்ப இங்கே சிவகாமி அம்மையார் திருக்கரத்தில் தாள மேந்தியுள்ளார். இறைவர் திருக்கூத்தாடும்போது இறைவி அதற்கேற்பத் தாளமிடுகின்றுர் என்று தமிழ்வேதம் கூறுகிறது. "கூடிய விலயஞ் சதிபிழை யாமைக் கொடியிடை யுமையவள் காண, ஆடிய அழகா" (தேவார). சுவாமி மடந்தைபாகர். அம்மையார் பெரியநாயகி. திருநாவுக்கரசு நாயனுர் திருத்தாண்டகம் ஒருபதிகம் உள்ளது. சேடன் சின்னுள் பூசனைபுரிந்தனன்.

மலவிரு டுமித்து நாளும் வழுத்திடு வாரை யாளும்
நிலவணி சடிலப் பெம்மா னெறியினேத் திடுத னக்குப்
பலமெளி தருளிச் செய்யாப் பான்மையை நினைந்து வேறு
தலமுறல் கருதிச் சேடன் சண்பகா ரணியஞ் சார்ந்தான். 14

கு - ரை : மல இருள் - ஆணவமலமாகிய இருட்டு; இருண்மலம். துமித்து - கெடுத்து. நிலவு - பிறைச்சந்திரன். சடிலம் - சடை. நெறியின் - சிவாகம விதிப்படி. தனக்கு என்றது ஆதிசேடனை. பலம் - பயன். சண்பக காரணியம் - திருநாகேச்சுரம்.

பூத இருளானது எல்லாப் பதார்த்தங்களையும் மறைத்துத் தன்னையும் காட்டி நிற்கும். ஆணவ இருளானது தன்னையும் காட்டாது தனக்குள்ளே இருக்கிற ஆன்மாவையும் காட்டாது நிற்கும். "காரிட்ட ஆணவம்" என்றார் தாயுமானவ சுவாமிகள். "ஒரு பொருளுங் காட்டா திருளுருவங் காட்டும், இருபொருளுங் காட்டா திது" (திருவருட்பயன்).

சண்பக வனத்தை மேவித் தற்பர விலிங்கங் கண்டு
நண்பக மருவ வாங்கோர் தீர்த்தத்தி னயந்து மூழ்கி
எண்பக மலர்க ளாதி யாவுநன் கமையக் கொண்டு
பண்பகந் தரித்தா யென்று பரவினன் பூசித் தானால். 15

கு - ரை : தற்பரன் - தனக்குத்தானே மேலானவன்; சிவபெருமான். தற்பரலிங்கம் - சிவலிங்கம். தற்பரன்: ஆன்மாவுக்குத் தலைவன் எனினுமாம். நண்பு அகம் மருவ: நண்பு - அன்பு. அகம் - உள்ளம். எண்பக - அளவின்றி. மலர்கள் ஆதி - மலர் முதலிய பூசைக்குரிய உபகரணங்கள்.

சத்தனை யளவா மேன்மைச் சண்பகா டவிய னாதி
முத்தனை யென்று மூவா முதல்வனைக் குன்றக் கொங்கை
அத்தனை மூன்று பத்தோ டாறற்கு மப்பா லானைச்
சுத்தனை யிடைய றாது தொழுதுபூ சித்தா னங்கே. 16

கு - ரை : சத்தன் - ஞானமயமாயுள்ளான்; சத் - ஞானம். சண்பகாடவியன் - சண்பக வனத்திலுள்ளான்; அடவி - காடு. மூவா முதல்வன் - இறத்தல் பிறத்தலில்லாத முழுமுதற்கடவுள். குன்றக் கொங்கை அத்தன் - உமாதேவியாரைத் தமது திருமேனியில் பாதியாகக் கொண்டவன். குன்றக் கொங்கை: அன்மொழித்தொகை. அத்தம் - பாதி. மூன்று பத்தோடு ஆறற்கும் அப்பாலான் - முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்தவன்; தத்துவாதீதன் என்க. சுத்தன் - தூயன்.

பூசையிவ் வாறு செய்யும் புழையெயிற் றரவ வேந்தன்
ஆசையுள் ளுணர்ந்து மெண்மை யருள்செய்யாத் திறமு ணர்ந்தான்
ஈசையோர் பாகத் தெம்மா னருள்விரைந் தெய்த லெண்ணிப்
பாசையோ வாத காச்சூழ் பாம்புர மணுகி னானே. 17

கு - ரை : புழை எயிற்று - தொளை பொருந்திய பற்களையுடைய. அரவவேந்தன் - ஆதிசேடன். எண்மை - எளிதாந்தன்மை. ஈசை - உமாதேவியார். ஈசன்; ஈசை: பெண்பால். பாசை - பசுமை. ஓவாத கா - நீங்காத

சோலை. பாம்புரம் - திருப்பாம்புரம் என்னும் தலம். பாம்பு புரம்; பாம்புரம் என மருவியது என்பர். பேரளத்திலிருந்து மேற்கே 3 கல் தொலைவு; திரு ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம் ஒரு பதிகம் உள்ளது.

காலெலாங் கமலக் குப்பை களமெலா முயர்ந்த நெற்போர்
மேலெலாங் கமஞ்சூற் கொண்டல் வெளியெலாங் கருப்பங் காடு
சாலெலாம் பவள முத்தந் தடமெலாம் பொழிபான் மேதி
பாலெலாஞ் செம்பொ னுய பாம்புரக் கோயில் புக்கான். 18

கு - ரை: கால் - கால்வாய். கமலக் குப்பை - தாமரைமலர் மிகுதி. கமம் சூல் கொண்டல் - நிறைந்த கருக் கொண்ட மேகம். சால் - உழுத படைச் சால். தடம் - தடாகம். மேதி - எருமை. பால் எலாம் - பக்கங்களிலெல்லாம்.

எண்ணரிய வனைத்து நல்கு மிலிங்கமொன் றுங்குக் கண்டு
புண்ணரிய தீர்த்த மாடிப் பொலிமல ராதி கொண்டு
கண்ணரிய வன்பு பொங்கக் கசிந்துபூ சித்தான் சின்னுள்
அண்ணரிய வானோ ராதி யாவரு மதிச யித்தார். 19

கு - ரை: சிவலிங்கத்தைக் கண்டு, தீர்த்தத்தில் முழுகி. கண்ணரிய - கருதிய. அன்பு பொங்க - அன்பு மிக. அண்ணரிய வானோர் - நெருங்கிய தேவர்.

புள்ளலை மலர்நீர் வாவிப் பாம்புரம் பொருந்தி வாழும்
வள்ளலை யருச்சித் தேத்தும் வாளராக் குலத்து வேந்தன்
விள்ளலை யமையா வாங்கும் விரைந்தரு ளாமை யெண்ணிக்
கள்ளலை மலர்ப்புன் னுகக் காரோணங் கருதி வந்தான். 20

கு - ரை: புள் அலை மலர் - வண்டுகள் கிண்டும் பூக்கள். வள்ளல் - சிவபெருமான். அராக் குலத்து வேந்தன். ஆங்கும் - அந்தத் தலத்தும்: உம்மை இறந்தது தழிஇயது. குடந்தைக் கீழ்க்கோட்டம், திருநாகேச்சுரம் என்னும் தலங்களில் விரைந்தருளாமையோடு என்க. கள் அலை மலர்ப் புன்னுகம்: கள் - தேன். புன்னுகம் - தலவிருட்சம். காரோணம் - நாகைக் காரோணத்தலம்.

எறிதிரைக் கடனு வாய்நின் றிழியும்*புன் னுக மெங்கும்
வெறிமணங் கமழ நாளும் வீசுபுன் னுக மெங்கும்
செறிமனை யெனும்பேர் பூண்டு திருவம்†புன் னுக மெங்கும்
அறிவுமிக் குறலா லண்ண லருள்‡வம்புன் னுக மெங்கும். 21

---

*புன்னுகம் - சிற்றூர். † புன்னுகம் - புல்லியமலை. ‡ வம்புன்னுகம்: வம்பு உன் ஆகம் எனப் பிரித்து மணத்தைக் கருதும் மனம் எனக் கொள்க.

கு - ரை : நாவாய் - கப்பல், மரக்கலம். புன்னாகம் - சிற்றூனை. வெறி மணம் - மிக்க வாசனை. புன்னாகம் - புன்னாக மரம். புன் நாகம் - புல்லிய மலை. அண்ணால் அருள் வம்பு உன் ஆகம் எனப் பிரித்து மணத்தைக் கருதும் மனம் எனக் கொள்க; வம்பு - மணம். உன்னுதல் - கருதுதல். ஆகம்=அகம் - மனம்.

புன்னாகம் என்னும் சொற்பொருள்கள் முன் பதிப்பின் அடிக்குறிப்பிற் கண்டவை.

ஆரண வோதை யெங்கும் அலங்கலங் கோதை யெங்கும்
பூரண கும்ப மெங்கும் பொன்மணித் தம்ப மெங்கும்
காரண மாட மெங்குங் காமரு கூட மெங்கும்
ஏரண மன்ற மெங்கும் இலங்குசெய் குன்ற மெங்கும். 22

கு - ரை : ஆரண ஓதை - வேதவொலி. அலங்கல் அம் கோதை; அலங்கல் - அசைதல். கோதை - மாலை. கார் அண் அ மாடம்; கார் - மேகம். அ - அழகிய. காமரு - அழகிய. ஏரண மன்றம் - தருக்கம் செய்யும் சபைகள். "ஆரணங் காணென்பர் ... ஏரணங் காணென்பர் எண்ணர் ..." (திருக்கோவையார் - நூற்சிறப்பு). 'ஏரணமெனினும், எண் எனினும், அளவை யெனினும், தருக்கமெனினும், நியாயமெனினும் ஒக்கும்.

இன்னபல் வளமு நோக்கிக் கேத்திர ராச மென்னும்
நன்னக ரிதுபோ லெங்கு நாங்கண்ட தில்லை யென்று
பன்னக வேந்த னுள்ளத் தளக்கொணு மகிழ்ச்சி பம்ப
முன்னருந் தேவ தீர்த்த முதலிய வனைத்துந் தோய்ந்து. 23

கு - ரை : கேத்திர ராசம் - தலங்களுக்கெல்லாம் அரசு போன்றது. பன்னகம் - பாம்பு. பம்ப - நிறைய. முன்ன அரும் தேவதீர்த்தம் - நினைத்தற்கும் அரிய தேவதீர்த்தம்: முன்னுதல் - நினைத்தல். தோய்ந்து - முழுகி.

இழிதொழி லொருப்பா டுற்ற வெமையுமோர் பொருளா வெண்ணி
வழிவழி யடிமை கொண்டு வாழ்விக்குங் கருணைச் செல்வி
பழிதபு கருந்த டங்கட் பாவையோர் பாகத் தெம்மான்
செழிபெருங் கோயில் புக்குத் திருந்துநெஞ் சுருகப் போற்றி. 24

கு - ரை : இழிந்த தொழில்களிலே மனமொருமிக்கும் எம்போல்வாரையும் என்க. ஒருப்பாடு - மனவொருமை. வழி வழி யடிமை - வழிவழியாக வுள்ள அடிமைத்திறம்: வம்சாவளியாக என்க. 'தந்தை தந்தை மூத்தப்பன்' என்றபடி. கருந்தடங்கட்பாவை - கருந்தடங்கண்ணம்மை,

தூயவான் சுதைக்க டேசந் துகளில்பச் சிமகா ரோணம்
ஆயதோ ரிந்தி ரேச மகத்தீச நடுத்த லேசம்
பாயசீர் விண்டு விசம் பராய்த்தொழு தொருகா ரோண
மேயமேற் றிசையி னுள்ள சறுவதீர்த் தத்தின் மேல்பால். 25

கு - ரை : சுதைக் கடேசம் - அமுதகடேசம். வான் - சிறந்த. பச்சிம காரோணம் - மேற்றிசையிலுள்ள காரோணம். இந்திரேசம், அகத்தீசம், நடுத்தலேசம், விண்டுவிசம் முதலிய கோயில்கள். ஒரு காரோணம் - ஒப்பற்ற காரோணத்தலம். மேய - பொருந்திய. மேல்பால் - மேற்குப்பக்கம்.

சிற்பநூல் விதிவ ழாது சிறக்குமா லயமொன் றூற்றிப்
பொற்பவோ ரிலிங்கந் தாபித் ததற்குத்தன் பெயர்பு ணைந்து
கற்பநீ றணிவான் சொற்ற விதிகடைப் பிடித்துப் பூசை
அற்பமே வாது செய்தா னுயிரம் பணங்கொள் சேடன். 26

கு - ரை : வழாது - வழுவாமல். ஆற்றி - செய்து. பொற்ப - அழகாக. தன் பெயர் என்றது நாகநாதர் என்பதாம். கற்பம் - விபூதி விளைவிப்பதன் பேதங்கள். கற்பம், அநுகற்பம், உபகற்பம், அகற்பம் என நான்குவகைப் படும். பசுவின் சாணம் பூமியில் விழுவதன்முன் தூய்மையான பாத்திரத்திலே ஏற்று ஐந்து வகையான வில்வங்களுடன் கூட்டி நன்ருகப் புடமிட்டு விளையச்செய்வது கற்பமாம். அநுகற்பமாவது: சாணத்தை முன்பு கூறியவாறு ஏற்று ஐந்து வில்வங்களோடு கூட்டாமல் தனியே நீற்றப்பட்டதாம். உபகற்பமாவது: பூமியில் விழுந்த சாணத்தைக் கொண்டு, வில்வங்களுடன் கூட்டாமல் ஆக்கப்பட்டது. இம்மூன்றனுள்ளே கற்பவிபூதியே மிகச் சிறந்ததாம் என்க. பணம் - படம்.

காலையிற் குடந்தை மேய கடவுளைக் கருது முச்சி
வேலையிற் சண்ப கக்காட் டண்ணலை விருப்பங் கூரும்
மாலையிற் பாம்பு ரத்து வள்ளலை யத்த யாமஞ்
சோலையிற் பொலிகா ரோணச் சோதியைப் பூசை செய்வான். 27

கு - ரை : காலையில் குடந்தைக் கீழ்க்கோட்டத்து விளங்கும் மடந்தை பாகரையும், உச்சிப்போதில் சண்பகாரண்யத்துள்ள கடவுளையும், மாலைக் காலத்தில் திருப்பாம்புரத்துச் சிவபெருமானையும், அத்தயாமத்தில் காரோணத்திலுள்ள இறைவரையும் ஆதிசேடன் பூசை செய்வானுயினன்.

பூசையிவ் வாறு செய்து வருமொரு புயங்க வேந்தற்(கு)
ஈசைபங் குடைய வெம்மா னின்னருள் செய்தா னுக
ஓசைகொ ளனையான் பன்னி யுதரத்துக் கருப்ப முற்றுள்
ஆசைகொ ளரையான் செய்தா னரரு ளென்று சேடன். 28

கு - ரை : புயங்கவேந்தன் - ஆதிசேடன்: புயங்கம் - பாம்பு. ஈசை - உமாதேவியார். அனையான் பன்னி - ஆதிசேடன் மனைவி. உதரம் - வயிறு. ஆசைகொள் அரையான் - சிவபெருமான்: ஆசை - திக்கு. அரை - இடை. எனவே திகம்பரன் என்க.

சொற்றநாற் றலத்துங் காலை தொடங்கியோர் நாற்கா லத்தும்
அற்றமில் பூசை யாற்றி யன்பதி கரிப்பத் தாழ்ந்து
செற்றமில் விடையும் பெற்றுத் திகழ்மனைக் கிழத்தி யோடுங்
கற்றவர் புகழுஞ் சேடன் கருதுதன் னிருக்கை புக்கான். 29

கு - ரை : சொற்ற - மேலே சொல்லிய. நாற்றலம் - நான்கு தலங்கள்; குடந்தை, சண்பகாரணியம், திருப்பாம்புரம், நாகைக் காரோணம் என்பன. விடை - உத்தரவு. தன் இருக்கை - நாகலோகம்.

திங்களங் கொருபான் செல்லத் திருமக டனையு யிர்த்தாங்(கு)
அங்கள வில்லா மாமை யமைதரு மொருபெண் பெற்றுண்
மங்களம் பொலியுந் தேவி யதுகண்டு மகிழ்ச்சி பூத்தான்
கங்களா யிரத்தா னெல்லாக் கடும்புமிக் குவந்த மாதோ. 30

கு - ரை : மாமை - அழகு. உயிர்த்தாங்கு - பெற்றாற்போல. கம் கள் ஆயிரத்தான்: கம்கள் - தலைகள். ஆயிரம் சிரமுடைய ஆதிசேடன் என்க. கடும்பு - சுற்றம்.

முலையொரு மூன்று மார்பின் முகிழ்த்தது கண்டு தேவி
அலைபெருந் துயரத் தாழ்ந்தா ளதுசொலக் கேட்ட சேடன்
மலைவரு மமுத முண்டார் நஞ்சுண்டு மாழாந் தென்னத்
தொலைவருங் கவலை யாய தொடுகடற் கிடங்கின் வீழ்ந்தான். 31

கு - ரை : முகிழ்த்தது - தோன்றிய செயலை. மாழாந்து என்ன - மயங்கியதைப்போல. தொலைவு அரும். கவலையாய கடல் கிடங்கு - கவலையாகிய கடலின் ஆழம். கிடங்கு - பள்ளம். தொடுகடல் - தோண்டப்பட்ட கடல்; சகரர்களால் தோண்டப்பட்டதாகலின் அது சாகரம் எனப் பெயர் பெறும்.

இருவரு நெஞ்ச மாழாந் தின்னணங் கவலுங் காலைப்
பொருவருங் காரோ ணத்தெம் புண்ணிய ரருளி னாலே
பருவரும் பயிர்ப்பால் வீழும் பசுமழைத் தாரை போல
வெருவரு மனையார் தேற விளைந்ததா காய வாக்கு. 32

கு - ரை : நெஞ்சம் - மனம். கவலுங்காலை - கவலைப்படும் காலத்து. புண்ணியர் - சிவபெருமான். பருவ அரும் பயிர்ப்பால் - பருவத்திலே அரிய பயிரினிடத்து. பசு மழைத் தாரை - சிறந்த மழையொழுக்கு. வெருவரும் - அச்சமுறும். தேற - தெளிய.

முலையொரு மூன்று தாங்கு முற்றிழை தனைச்சின் னாளில்
அலைகடற் கரைக்கா ரோணத் தண்ணலா ரொருபான் மேய
கலையுணர் வரிய மேன்மைக் கருந்தடங் கண்ணி பாதம்
நிலையுறப் பூசை செய்து நேர்தொழு திறைஞ்சச் செய்தால். 33

கு - ரை : முற்றிழை தன்னை - வேலைப்பாடமைந்த ஆபரணமணிந்த மகளை; முற்றிழை: அன்மொழித்தொகை. கருந்தடங்கண்ணிபாதம் - நீலாய தாட்சியாகிய உமாதேவியின் திருவடிகளை. நிலையுற - உறுதியாக.

அனையமா தேவி செய்யு மாரரு ளிரம்பப் பெற்றுத்
தனைநிகர் பெருமை வாய்ந்த சறுவபுட் கரணிப் பாங்கர்ப்
புனையிழை யுலவுங் காலைப் புரவல னொருவன் றோன்றும்
நினைதரு மவற்காண் போதே நிறத்தினொன் றழுந்தா நிற்கும். 34

கு - ரை : அனைய மாதேவி - அந்த உமாதேவியார். சறுவபுட்கரணி - சறுவதீர்த்தம். உலவுங்காலை - உலாவும்போது. புரவலன் - அரசன். நிறத்தின் - மார்பில். ஒன்று - ஒரு நகில்.

பின்னர்மற் றவனே வந்து பிறங்குற மணப்பா னென்று
நன்னலம் பயப்பக் கூற நாகர்கோன் மனைவி யோடும்
பன்னரு மகிழ்ச்சி யுற்றான் பவளமென் கொடியோ தெய்வப்
பொன்னவிர் கொம்போ வென்ன வளர்ந்தனள் புதல்வி யம்மா.35

கு - ரை : பிறங்குற - விளங்கும்படி. நல் நலம் பயப்ப - சிறந்த நன்மை உண்டாக, ஆகாய வாக்குக் கூற. நாகர்கோன் - ஆதிசேடன். மென்மையான பவளக்கொடிதானோ அல்லது பசும்பொன்னாலாகிய பூங் கொம்போ என்னப் புதல்வி வளர்ந்தனள் என்றவாறு.

பிறையென வளரா நின்ற பெண்ணணங் கரசை நோக்கி
நிறைமகிழ் பூத்த சேட னிகழ்ந்தமை யனைத்துங் கூறி
முறைபணி புரியத் தக்க முற்றிழை மடவா ரோடுங்
கறையிலப் புதல்வி தன்னைக் காரோண நகரத் துய்த்தான். 36

கு - ரை : பெண் அணங்கு அரசை - பெண்களினுள்ளே அரசு போல்வாளாகிய மகளை. நிகழ்ந்தமை - ஆகாய வாக்குக் கூறிய செய்திகளை. முறை பணி புரியத்தக்க - விதிப்படி தொண்டுகள் செய்யும் தகுதியுடைய. கறை இல் அ புதல்வி: கறை இல் - குற்றமில்லாத. உய்த்தான் - செல விடுத்தான்.

முன்னுகா ரோணத் துற்ற மும்முலை யொருத்தி யாங்கு
மன்னுபஃ றீர்த்த மெல்லா மாண்புறத் தோய்ந்து தோய்ந்து
பன்னுகா ரோண நாதர் பைம்பொனு லயம்பு குந்து
மன்னுவான் கருந்த டங்கண் மாதேவி முன்ன ருற்ருள். 37

கு - ரை : மும்முலை ஒருத்தி - மூன்று நகில்களையுடைய ஒப்பற்ற அப் புதல்வி. மன்னு - நிலைபெற்ற. தோய்ந்து தோய்ந்து - முழுகி முழுகி. காரோணநாதர் ஆலயத்தில் நுழைந்து, கருந்தடங்கண்நாயகி சந்நிதியை அடைந்தாள்.

நறுவிரைத் தயில மாதி நயக்கும்யா வையுங்கொண் டாட்டி
மறுவில்சுத் தோத னுதி மாண்புசால் பலவு மூட்டித்
தெறுகதி ரவனு நாணுந் தீபங்கள் பலவுங் கோட்டி
உறுமகிழ் சிறப்பப் போற்றி யுருகுபு பரச லுற்ருள். 38

கு - ரை : நறு விரை தயிலம் ஆதி - நல்ல மணம்பொருந்திய எண்ணெய் முதலிய அபிடேகப் பொருள்கள். ஆட்டி - அபிடேகித்து. மறு இல் - குற்றமில்லாத. சுத்தோதனுதி - சுத்தான்னம் முதலிய அன்னவகைகள்; ஓதனம் - அன்னம். ஊட்டி - உண்பித்து; நிவேதனம் செய்து. தெறு கதிரவன் - சூரியன். உருகுபு - உருகி. பரசல் - துதித்தல்.

விதிப்படி எடுத்த எள்நெய், அரிசிமா உழுந்துமா பயறுமா கடலைமா கோதுமைமா முதலிய மாவகைகள், நெல்லிமுள்ளி,கத்தூரிமஞ்சள், திரவியப் பட்டைத்தூள், பூலாமூலம் முதலிய தூள், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், கருப்பஞ் சாறு, எலுமிச்சை, நாரத்தை, தமரத்தை, கொளிஞ்சி முதலிய பழச்சாறுகள், மாதுளை, இளநீர், அன்னுபிஷேகம், சந்தனக்குழம்பு, பனிநீர், ஸ்நபன ஜலம், கங்காஜலம், வில்வச்சாறு, சகத்திரதாரை, சிருங்கஜலம், வலம்புரிச் சங்கஜலம் முதலியன கொண்டு முறையே அபிஷேகம்பண்ணி; இடையிடையே சுத்த ஜலத்தால் ஆட்டி நிவேதனமும் செய்து, திருவொற்ருடை சாத்தி, பரிவட்டம் சூழ்ந்து, திருவாபரணம், மலர் மாலைகள் முதலியவற்ருல் அலங்கரித்து, தூபதீபங்காட்டி; சுத்தான்னம், பருப்பன்னம், பாலன்னம், சர்க்கரையன்னம், புளியன்னம், திலான்னம், தயிரன்னம் முதலிய அன்ன வகைகளை நிவேதனம்செய்து, அபூபவகைகள் மோதகம், வடை, தோசை, இளநீர் குளநீர் பழம் நீர்மோர், சுத்தநீர் இவைகளைத் தனித்தனியே நிவேதித்துத் தூபம், அடுக்குதீபம், புஷ்பாஞ்சலி, திருநீறு, கண்ணுடி, குடை, ஆலவட்டம் சிவிறி நேரே விளங்கக்காட்டி, அருக்கியம் கொடுத்து அட்சதை சாத்தி, மந்திரபுஷ்பம் செபித்துச் சாத்திக் கருப்பூரதீபம் ஏத்திக்காட்டி முடிவில் தாம்பூலம் கொடுத்து அருக்கியம்தந்து பின்பு மனமுருகித் துதித்து அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம்பண்ணுதல் முதலிய எல்லாவகையான உபசாரங்களையும் முறையே நாடோறும் செய்தாள் என்க.

கருமுகில் விளர்க்கு மாறு கறுத்துநெய்த் தெதிர்ந்தார் நெஞ்சம்
மருவிரு ளனைத்தும் வாரி வாய்ப்பெயுங் கூந்தல் போற்றி
ஒருகருங் கடலி னுப்பண் உதயஞ்செய் கதிரோன் மானப்
பருமணித் தகடு முன்னுப் பதிபல பணியும் போற்றி. 39

கு - ரை: கருமுகில் - கரியமேகம். விளர்க்குமாறு - வெள்ளிய நிற மாகும்படி. நெஞ்சம் மருவு இருள். கறுத்து நெய்த்த கூந்தல். நாப்பண் - நடுவிடம். மான - ஒப்ப. தகடு முதலாக. பல பணியும் - பலவகை அணி கலங்களும்.

மூலகா ரணனு மெந்தை முடிப்பிறை யடியிற் றாழ
ஞாலமின் பமையச் சற்றே சுளிக்குநன் னெற்றி போற்றி
ஆலமுண் டவன்றன் கையா லமைதரப் புனைதல் செய்த
கோலமுண் டமையும் பொட்டுங் குலவிலம் பகமும் போற்றி. 40

கு - ரை: முடிப்பிறை - திருமுடியிலணிந்த பிறைச்சந்திரன். அடியில் தாழ - அடியில் விழுந்து வணங்க. அமைதர - பொருந்த. புனைதல் - அலங்கரித்தல். இலம்பகம் - நெற்றிச்சுட்டி.

வரிசிலை மதனைச் செற்றார் மனமிருந் தாடா நிற்கும்
எரிமணி யம்பொ னூச லெனப்பொலி காது போற்றி
விரிகதிர் மதிபோல் வேணி மிசைக்கொளப் பதிக்கோ தென்று
பரிவுற வுரைத்து மேவும் படிமிளிர் தோடு போற்றி. 41

கு - ரை: மதனைச் செற்றார் மனம் - மன்மதனைப் பொடி படுத்திய சிவபெருமான் நெஞ்சம். ஊசல் - ஊஞ்சல். வேணி - சடை. கோது - குற்றம்.

ஒருவரை குழையக் கோட்டி யுரகநாண் பொருந்தக் கூட்டிக்
கருநிறப் பகழி பூட்டிக் கடும்புர மவிய மாட்டிப்
பெருவலி தோற்றி நின்ற பிரான்முடி கோட்டு மாறு
பொருவறக் கோட்டா நிற்கும் பொருசிலைப் புருவம் போற்றி. 42

கு - ரை: ஒருவரை குழைய கோட்டி - ஒப்பற்ற மேருமலை குழையும் படி வளைத்து. உரகம் - வாசுகி என்னும் பாம்பு. கரு நிறப் பகழி - விஷ்ணுவாகிய அம்பு. கடும் புரம் அவிய - கொடிய திரிபுரம் அழியும்படி. முடி கோட்டுமாறு - திருமுடி வளையும்படி. சிலைப்புருவம் - வில்போலும் புருவம்.

குழைகிழி தரந டந்து குமிழ்மிசை மறிந்து தொண்டர்
பிழைசிறு மையுநோக் காது பிறழ்கருந் தடங்கண் போற்றி
மழைபொரு களத்தார் தீட்டு மையலங் காரம் போற்றி
விழைகணேன் பெயருக் கேற்ப மிக்கமர் கருணை போற்றி. 43

கு - ரை : குழை - காது. குமிழ்மிசை - மூக்கினிடத்து. மழை பொரு களத்தார் - மேகத்தையொத்த கண்டத்தையுடைய சிவபிரான். விழை கண் என் பெயர் - யாவரும் விரும்பப்படும் கண் என்று சொல்லும் பெயர்.

விழியளி யொன்றே டொன்று சமர்செயா விதநள் ளிட்ட
பழியில்சண் பகவ ரும்பின் படியெனு நாசி போற்றி
செழிமுகப் பதுமந் தோன்றுந் திவளொளி முத்த மென்னக்
கொழிவனப் பொழுகக் கோத்துக் குலவுவெண் டரளம் போற்றி. 44

கு - ரை : விழி அளி - கண்களாகிய வண்டுகள். சமர் - போர். நள்ளிட்ட - நடுவிலிட்ட. சண்பக அரும்பின் படி - சண்பகப் பூவரும்பின் பிரதி. சண்பகமலரில் வண்டுகள் மொய்யா என்க.

பரம்பர னழகு பார்க்கப் பதித்தகண் ணடி போலும்
நிரம்பிய வனப்பு வாய்ந்து நிலவிய கபோலம் போற்றி
வரம்பெறு பவளத் துண்ட மாண்புசா லதரம் போற்றி
திரம்பெற வதற்கு நாப்பட் செறியுமூன் றிரேகை போற்றி. 45

கு - ரை : பரம்பரன் - சிவபெருமான். கபோலம் - கன்னம். அதரம் - கீழுதடு. நாப்பண் - நடுவே. ரேகை - கோடு.

நிலவுவண் கபோல மென்னு நீர்நிலை நாப்பட் பூத்த
குலவுசெங் கழுநீ ரென்னக் கோலமார் செவ்வாய் போற்றி
கலவுமம் மலருட் பூத்த காமரு தளவம் போல
உலவுபே ரழகு வாய்ப்புற் றொளிகிளர் வெண்பல் போற்றி. 46

கு - ரை : நீர்நிலை - தடாகம். செங்கழுநீர் - செவ்வாம்பல். கோலம் - அழகு. கலவும் - கலந்த. தளவம் - முல்லையரும்பு.

செங்கழு நீருட் கொண்ட சிறுநிலாக் கிரண மென்னச்
சங்கரன் மனமு ருக்குந் தகையவெண் முறுவல் போற்றி
அங்கதி னறுந்தே னென்ன வமைதரு மின்சொல் போற்றி
பங்கமொன் றேனு மின்றிப் பண்புசால் சுபுகம் போற்றி. 47

கு - ரை : வெண்முறுவல் - வெள்ளிய பற்கள். அதின் நறுந் தேன். பங்கம் - குற்றம்.

இருவிழி யென்னும் பொன்னு மிரசிதம் புரைமெய் மின்னும்
அருவிநீங் காம லென்றும் வாழ்பசுங் கமல மாகிப்
பொருவிலா னிதய வாவி பூத்திடு பூவு மாகி
ஒருவுரு வனப்பு வாய்ப்புற் றொளிர்தரு வதனம் போற்றி. 48

கு - ரை : இரசிதம் - வெள்ளி. இதய வாவி - நெஞ்சமாகிய தடாகம். கமலம் - தாமரை. வதனம் - முகம்.

பதுமநன் னிதிய மென்னப் பகர்திரு முகத்தின் கீழாற்
புதுமைகொள் தெய்வச் சங்க நிதியமும் பொருந்தி யாங்குக்
கதுவெழிற் கண்டம் போற்றி கணவனுஞ் சருந்தி னுனுஞ்
சதுமுகன் முனோர்வீந் தாலுந் தழையுமங் கலநாண் போற்றி. 49

கு - ரை : பதுமநல் நிதியம் - பத்மநிதி: முகம். சங்கநிதி: கழுத்து. எழில் கதுவு கண்டம். கணவன் - சிவபெருமான். சதுமுகன் முனோர் - நான்முகக்கடவுள் முதலியோர்.

முலையெனுங் குன்ற மேலான் முளைத்தெழு பசுவே யென்னக்
கலையொரு புறத்திற் போர்த்துக் கவின்பொழி தருதோள் போற்றி
தலையுமை யனைய குன்றஞ் சார்ந்துதித் தனவே யென்ன
விலையில்பன் மணிகால் யாத்து மிளிர்தொடி யாதி போற்றி. 50

கு - ரை : குன்றம் - மலை. பசுவேய் - பசுமூங்கில். கலை - ஆடை. கால் யாத்து - பதித்து.

சிவபரன் றேட ஈீஇவெள் வளையொலி சிறப்பச் செய்யும்
அவமில்யாழ்த் தண்ட மேயென் றறைதரு முன்கை போற்றி
குவலய மாதி காணுங் குறியிலார்க் கஃத மைத்த
நவவளை கடகஞ் செம்பொ னயந்தசூ டகங்கள் போற்றி. 51

கு - ரை : முன்கை யாழ்த்தண்டு போன்றது. வளை, கடகம், சூடகம் என்பன அணிவகைகள்.

நரம்பெலும் புரோமந் தோன்று நலங்கிளர் புறங்கை போற்றி
நிரம்புவ மேயங் காந்த ளென நில வகங்கை போற்றி
பரம்புநீர்க் களிறு வட்கும் பலவிரல் போற்றி கிள்ளை
வரம்பெய்மூக் குகிர்கள் போற்றி மாமணி யாழி போற்றி. 52

கு - ரை : காந்தள் கை. வட்கும் - வெட்கும்; ''காந்தள் முகிழன்ன மெல்விரல் காந்தட், பூந்துடுப் பன்ன புனைவளை முன்கை'' (பெருங்); ''காந்தளந் துடுப்பிற் குவிகுலை யன்ன, செறிதொடி முன்கை'' (கலி - 59). நீர்க்களிறு - கெளிற்றுமீன். உகிர் - நகம். ஆழி - மோதிரம்.

ஒருமலை குழைத்த வீர னுரங்குழைத் தணைந்து விம்மும்
இருமுலை போற்றி மேவிட் டெழில்செயுஞ் சுணங்கு போற்றி
பொருமலிற் புணர்வார் போற்றி புணர்மணிக் கோவை போற்றி
அருமைசா லுண்மை ஞான மாகிய வருட்பால் போற்றி. 53

கு - ரை : உரம் - மார்பு, இதயம் என்க. குழைத்து - இளகச்செய்து. சுணங்கு - தேமல். உண்மை ஞானம் - மெய்ஞ்ஞானம். அருட்பால் - திருவருளாகிய பாலமுது.

புவனங்க ளனைத்தும் வைகப் பொறுத்தசிற் றுதரம் போற்றி
தவலின்றி மூவ ரைத்தந் தமைதெரித் தாங்கு மூன்று
நவமொன்று மடிப்புப் போற்றி நாரத்திற் சுழியும் வட்கத்
திவள்கின்ற வுந்தி போற்றி செழுமயி ரொழுங்கு போற்றி. 54

கு - ரை : பொறுத்த - சுமந்த. உதரம் - வயிறு. தவல் இன்றி - நீங்குதலில்லாமல். மூவர்-அயன், மால், உருத்திரன். மூன்று மடிப்பு: உத்தம லட்சணம். நாரத்திற் சுழி - நீர்ச்சுழி: ''யாற்றற லன்ன கூந்தல் யாற்றுச், சுழியெனக் கிடந்த குழிநவில் கொப்பூழ்'', ''புனற்சுழி யலைத்துப் பொருந்திய கொப்பூழ்'' (பெருங்கதை); நாரம் - நீர். உந்தி - கொப்பூழ். மயிரொழுங்கு - உரோமாவளி.

அறிவதற் கரிய தாய வண்ணற னுண்மை போல
அறிவதற் கரிய தாகி யமைந்தநுண் மருங்குல் போற்றி
செறிமணிக் கடலிற் றேற்றஞ் செய்யிளங் கதிர்ச மழ்க்கச்
செறிதரு செம்பட் டோடு திகழுமொட் டியாணம் போற்றி. 55

கு - ரை : மருங்குல் - இடை. அண்ணல் - சிவபெருமான். மணிக்கடல் - இரத்தினகரம். சமழ்க்க - நாண.

சாயலந் தோகைக் கச்சஞ் சற்றுங்கொள் ளாத பாம்பாய்
மேயபே ரல்குல் போற்றி மேகலை யாதி போற்றி
ஆயமென் பிடியின் கையு மரம்பையு மிணையொவ் வாமல்
தூயநற் கரபம் போன்று துளும்பெழிற் குறங்கு போற்றி. 56

கு - ரை : தோகை - மயில். பாம்பாய் மேய பேரல்குல் - அரவகல் அல்குல்: பாம்பின் படம்போலும் அல்குல் என்க. பிடியின் கை - யானைத் துதிக்கை. அரம்பை - வாழை. குறங்கு - துடை.

அலவனெள் வராலி யாமை யஞ்சிய முத்தாள் போற்றி
நலனுயர் சிறுத ராசி னயம்படு பரடு போற்றி
பல்வரி சனமு ளைத்த படியெனும் விரல்கள் போற்றி
கலவுவெண் மதிபத் தாகக் கடைந்தன நகங்கள் போற்றி. 57

கு - ரை : அலவன் - நண்டு. வரால் - கெண்டை. யாமை - ஆமை முதுகு: இவை முறையே முத்தாள் என்ற முழந்தாள் கெண்டைக்கால்

புறங்கால்கட்கு உவமம். பரடு - காற்பரடு; "புடைச்சிறு பரடு புல்லிக் கிண்கிணி சிலம்போ டார்ப்ப" (சீவகசிந் - 2445); "பைம்பொற் கிண் கிணி பரட்டுமிசை யார்க்கும்" (பெருங்கதை). அரிசனம் - மஞ்சள். கலவு - கலந்த. வெண்மதி - வெள்ளிய சந்திரன்.

நல்லவ ருளம்போ லாயே னுள்ளமு நயந்து நீங்காப்
பல்லவ மருட்டா நின்ற பங்கயப் பாதம் போற்றி
சொல்லரு மறைக ளென்னச் சூழ்ந்தபொற் சிலம்பு தண்டை
வில்லமை பாத சாலம் விரலணி யாதி போற்றி. 58

கு - ரை : நல்லவர் - அறிவர், ஞானிகள். நயந்து - விரும்பி. பல்லவம் - தளிர். சிலம்பு தண்டை பாதசாலம் முதலியன காலணிகலங்கள். வில் - ஒளி.

மயிலிளஞ் சாயல் போற்றி மானத வாவி யூடு
பயிலிள வன்ன மென்னும் படியியங் கியக்கம் போற்றி
வெயில்விரி கோடை நாளில் வெதும்பிய பயிர்த ழைக்கக்
குயின்முகி லெனப்ப சந்த கோமள மேனி போற்றி. 59

கு - ரை : மானத வாவி - மானதசரஸ்; இமயமலைச் சாரலில் உள்ளது. இயங்கு இயக்கம் - நடக்கும் நடை. கோடைநாள் - கோடைக்காலம். குயின் முகில் - மழை பெய்யும் மேகம். கோமளம் - அழகு.

பொருள்பெறக் கருது வார்தம் புந்தியிற் சிவந்தாய் கல்வி
அருள்பெறச் சிந்திப் பார்த மகத்துற விளர்த்தாய் தெவ்வர்
இருடப முயலு வார்த மிதயத்துக் கறுத்தாய் மூல
மருடபுங் காரோ ணத்து வயங்குமா தேவி போற்றி. 60

கு - ரை : புந்தி - புத்தி. விளர்த்தல் - வெண்ணிறமடைதல். அகத்து - மனத்தில். தெவ்வர் - பகைவர். எனவே இலக்குமி, சரசுவதி, துர்க்கை என்னும் சத்திகள் உன்னுடைய அம்சங்களே என்றபடி. மூல மருள் - ஆணவமல மயக்கம்.

பரையாதி சத்தி யாகிப் படைப்பாதி புரிவாய் போற்றி
தரையாதி யனைத்து மாகித் தவலற நிறைந்தாய் போற்றி
உரையாதி மறைகட் கெட்டா வொருபெரு முதல்வி போற்றி
கரையாதி புராணர் பாகக் காரோண விமலை போற்றி. 61

கு - ரை : பரையாதி சத்தி - பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்திகள். தரை ஆதி - பிருதிவி தத்துவம் முதலாக. தவல் அற - நீக்கமற.

பிறைமுடி யவன்ரு யாளுய் பின்பிறந் தவளு மாளுய்
முறைமையின் மகளு மாளுய் முயங்கிடு மனேயு மாளுய்
மறைமுத லனைத்துந் தேரு வளங்கெழு செல்வி போற்றி
கறைதபு திருக்கா ரோணக் கருந்தடங் கண்ணுய் போற்றி. 62

கு - ரை : பிறை முடியவன் - சிவபெருமான். தாய் தங்கை மகள் மனைவி என்றது "கனகமார் கவின்செய் மன்றில், அனகநா டகற்கெம் மன்னை, மனைவிதாய் தங்கை மகள்" (சிதம்பரச் செய்யுட்கோவை - 33); சத்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றுதலின் தாய் என்ருர் (சிற் - 112 - பேர்). "எம்பெருமா னிமவான் மகட்குத், தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன் றமையன்" (திருவாசக - திருப்பொற்சுண்ணம் - 13). "தவளத்த நீறணி யுந்தடந் தோளண்ணல் தன்னொருபால், அவளத்த ஞமக னுந்தில்லையான்" (சிற் - 112); "சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்தி தான் சிவத்தை யீன்றும்" (சிவஞான சித்தியார்).

என்றுநைந் துருகிக் கண்ணீர் இழிதரத் தாழ்ந்து தாழ்ந்து
சென்றுதன் னிருக்கை மேவிச் சிந்தையிற் குறித்தி ருப்பாள்
ஒன்றுபன் னுளிவ் வாறே பூசனை யுஞற்று வாள்பால்
நன்றுபே ரருள்சு ரந்தாள் நங்குல தெய்வ மானுள். 63

கு - ரை : இழிதர - ஒழுக. தாழ்ந்து - வணங்கி. குறித்து - தியானம் செய்து. உஞற்றுவாள் பால் - செய்வாளிடத்து. அருள் சுரந்தாள் - கிருபை செய்தாள்.

அவாமுத லறுத்து ளார்க்கே யமைகருந் தடங்க ணம்மை
தவாவரு ளொருங்கு பெற்ருள் சறுவபுட் கரணிப் பாங்கர்
உவாமதி யுடுக்க ணத்தோ டுலாவிய காட்சி போலோர்
திவாவிகு ளையர்தம் மோடு முலாவினுள் சேடன் செல்வி. 64

கு - ரை : அவா முதல் - அவாவின் வேர்: முதல் - வேர்: "ஆர்வ வேர் அரிந்து" (சீவக - 409). தவா அருள் - நீங்காத அருள். உவாமதி - பூரணைச் சந்திரன். உடுக்கணம் - நட்சத்திரக் கூட்டம். ஓர் திவா - ஒரு பகல். இகுளை - தோழி. சேடன்செல்வி - ஆதிசேடன் புத்திரி.

படுகட னடுவட் டோன்றும் பரிதிதன் குலத்து தித்தோன்
வடுவறு கலைக ளெல்லா மயக்கறத் தெளிந்த வல்லான்
உடுபதிக் குடையி னுனு முட்குறும் வனப்பின் மிக்கான்
தொடுகழற் காலான் சாலீ சுகனெனு நாம வேந்தன். 65

கு - ரை : படு கடல் நடுவண் - ஆழமான கடலின் நடுவில். பரிதி தன் குலம் - சூரியகுலம். வடுவறு - குற்றமில்லாத. உடுபதிக் குடையினுன் - மன்மதன். உட்குறும் - அஞ்சும். வனப்பு - அழகு. சாலிசுகன் என்னும் பெயரினன்.

மேயகா ரோணம் புக்கு விண்ணவர் தீர்த்த மாடிப்
பாயகா ரோண நாதன் பங்கயப் பாதம் போற்றி
நேயமார் துணைவ ரோடு நிலவிய சறுவ தீர்த்தத்
தாயவான் கரையை நாடி யடைந்தன ளணங்கு கண்டாள். 66

கு - ரை : விண்ணவர் தீர்த்தம் - தேவதீர்த்தம். நேயம் ஆர் - அன்பு நிறைந்த. தீர்த்தத்து ஆய வான் கரை. அணங்கு - பெண்; ஆதிசேடன் புதல்வி.

காண்டலு முலையோர் மூன்றுட் கரந்தது நடுவ ணுள்ள
தாண்டகை யினையன் மண்மே லாயகந் தருவன் கொல்லோ
மூண்டவிற் காமன் கொல்லோ முதிரெழிற் குமரன் கொல்லோ
விண்டடைந் தவன்யா ரென்னு வேந்திழை திகைத்து நின்ருள். 67

கு - ரை : உட்கரந்தது - உள்ளே மறைந்தது. முதிர் எழில் குமரன் - பேரழகுடைய குமாரக்கடவுள். காமன் - மன்மதன். ஏந்திழை - ஆதிசேடன் மகள்: அன்மொழித்தொகை.

முலையொன்று மறையக் கண்ட முற்றிழை மடவார் யாருந்
தலையொன்று பெருமை வாய்ந்த தடாதகை போன்ரு ளின்னள்
நிலையொன்று மறியே மென்று நெடிதிறும் பூது மேவிக்
கலையொன்று முதல்வி பூசைப் பயனுளங் கருதி நின்ருர். 68

கு - ரை : மடவார் - தோழிகள். இன்னள் - இவள். நிலை - தன்மை. நெடிது இறும்பூது - மிக்க ஆச்சரியம். பூசைப் பயன் - கருந்தடங்கணம் மையைப் பூசித்ததனுலாய பயன்.

தந்தையா காய வாணி சாற்றிய படிய லைத்தும்
முந்தைநா ளுரைத்த வாறு முலையொன்று மறைந்த வாறும்
நிந்தையில் வனப்பு வாய்ந்த புரவல னிற்கு மாறுஞ்
சிந்தையி னுணர்ந்தா ளுணஞ் செறிதர நங்கை நின்ருள். 69

கு - ரை : ஆகாய வாணி - ஆகாயத்தில் தோன்றிய வாக்கு. தந்தை உரைத்தவாறும். புரவலன் - தலைவன். நாணம் செறிதர - நாணம் மிக.

மருவல ருடலம் போழ்ந்து வார்குடர் மாலை சூடி
வெருவரக் கொழுவோ டீருள் விடக்குவாய் குதட்டிப் பின்னர்
பெருகுநெய்த் தோரு மாந்திப் பெரும்பசி யடங்கு ருமே
இருகடை வாயு நக்கு மெரிதவ ழிலைவேல் வேந்தும். 70

கு - ரை : மருவலர் - பகைவர். வெருவர - அஞ்சும்படி. விடக்கு - தசை; மாமிசம். நெய்த்தோர் - இரத்தம். அனைத்தும் வேற்படைக்கு அடையாகக் கொள்க. வேந்து - சாலீசுகன் என்பவன்.

விதிகடைக் கூட்ட லாலே மிளிர்தரு பொலங்கொம் பொன்று
மதியமொன் றுறமுன் ருங்கி மழைமுகில் பின்னென் றேந்திப்
பொதிசுவை யமுத கும்பம் பொலிதர விரண்டு கொண்டு
துதிசெய நின்ரு லென்ன நிற்குந்தோ கையைக்கண் ணுற்ருன். 71

கு - ரை : விதி கடைக்கூட்டலால் - ஊழ்வினை பொருந்துமாற்ருல். பொலங்கொம்பு - பொன்னுலாகிய பூங்கொம்பு போல்வாள்: பொலம் - பொன். மதி முன்தாங்கி, முகில் பின் ஏந்தி, அமுதகும்பம் இரண்டுகொண்டு நின்ருலென்ன நிற்கும் தோகை. மதிமுகம், முகில் கூந்தல், அமுதகும்பம் நகில்கள். தோகை - மயில். உருவக அணி. துறை காட்சி.

காதலங் கடலுண் டாக்குங் காரிகை பாதந் தோய
வாதலங் கமையு மாநோன் பாற்றிய தரவ வேந்தன்
பாதலங் கொல்லோ மேலாப் பகர்தலங் கொல்லோ விந்தப்
பூதலங் கொல்லோ வென்னுப் புந்தியு ளையங் கொண்டான். 72

கு - ரை : காரிகை - பெண். காதல் - அன்பு; காமம். மா நோன்பு - பெரிய விரதம். அரவ வேந்தன் - ஆதிசேடன். பாதலமோ, விண்ணுலகமோ, பூதலமோ என ஐயுற்ருன். மேலாப் பகர்தலம் - விண்ணுலகம்.

அணிமலர் வாடிற் றில்லை கண்ணிமை யாடிற் றில்லை
மணிமுக மதிய கத்து வருவெயர் கூடிற் றில்லை
தணிவிலிவ் வேது வாலித் தரைமக ளல்ல ளென்று
கணிபுனை தடந்தோ ளண்ணல் கருத்துறத் தெளிந்தா னன்றே.

கு - ரை : மலர் வாடவில்லை, கண்ணிமை யாடவில்லை. வெயர் கூடவில்லை. இக் காரணங்களால் தரைமகள் அல்லள் எனத் தெளிந்தான். துறை தெளிதல்.

இறையவன் முகத்து நாட்ட மிரண்டனுள் ஒன்று வெப்பம்
நிறைதரச் செயுமற் றென்று தட்பமே நிகழ்த்தா நிற்கும்
அறைவிழி யிரண்டுங் கூடி யன்னவை யியற்று மென்று
குறையறு காதல் பொங்கக் குறிப்பறிந் தனன்கோ மானே. 74

கு - ரை: இறையவன் - சிவபெருமான். நாட்டம் - கண்கள். ஒன்று தட்பஞ்செய்யும். இவள் கண்கள் இரண்டும் வெப்பம் செய்வன, தட்பம் செய்வனவாம் என்று குறிப்பறிந்தான். காதல் பொங்க - காதல் மிக. துறை குறிப்பறிதல்.

இறையிவை மதிக்குங் காலை யெழுந்தவெங் காம வேட்கைப்
பொறையுடை யவளா யிங்குப் புகுந்தமை தந்தைக் கோத
நறைமலர்க் குழலா ரோடு நாகர்கோன் மகண்ம றைந்தாள்
மறைதலு மதிமா றாந்து மன்னனு மிருக்கை புக்கான். 75

கு - ரை: இறை - தலைவன்; சாலிசுகன். காம வேட்கைப் பொறை - காம விருப்பத்தின் சுமை. தந்தைக்கு - ஆதிசேடனுக்கு. நாகர்கோன் - சேடன். மதி மாழாந்து - அறிவு மயங்கி.

வேறு

துங்க மிகுந்த வொருசாலி சுகனென் பவனங் குலத்துதித்தான்
சங்க நிகருங் களத்தொருபெண் தந்த காமந் தலைக்கொண்டான்
அங்க முழுதும் வெப்படைவா னதுகா ணேனென் றகல்வான்போற்
பங்க மருவு மேல்கடற்போய்ப் படிந்தான் பரியே ழுடைத்தேரோன். 76

கு - ரை: துங்கம் - பரிசுத்தம். நங்குலம் - சூரியகுலம்: இது சூரியன் கூற்று. சங்கம் நிகரும் களம் - சங்கையொத்த கழுத்து. அகல்வான்போல் - நீங்குபவனைப் போன்று. பரி ஏழுடைத் தேரோன் - சூரியன்: சூரியனது இரதத்திற்குக் காயத்திரி, பிருகதி, உட்டினிக், சகதி, திருட்டுப்பு, அநுட்டுப்பு, பங்தி என்னும் வேத சந்தங்கள் ஏழும் குதிரைகளாம் உண்மைபற்றி, "பரி ஏழுடைத் தேரோன்" என்றார். எழுபுரவி என்பதற்குச் சப்தாசுவம் என்னும் வடநூல் வழக்குப் பற்றி அப்பெயர்கொண்ட ஒரு குதிரை எனக் கொள்வார் மதம் மறுக்கப்பட்டது. படிந்தான் - மூழ்கினான் என்றது மறைந்தான் என்றபடி. சூரியன் எல்லாவற்றிற்கும் வெப்பம் செய்பவனாயிருந்தும் 'சாலிசுகன்' காமவெப்பத்தைக் காணப்பொறேன் என்று மனத்திற் கொண்டவனாய் மேல்கடல் படிந்தான் என்றார்; ஏதுத் தற்குறிப் பேற்ற வணி. பங்கம் மருவு கடல் என்றது சகரர் தோண்டிய கடலை; அது சாகரம் எனப்படும்.

பரந்த காமத் தழற்கடலுட் படிந்து வருந்தி வாழ்வதினுஞ்
சுரந்த கொடுந்தீப் பெருங்கடலுட் டுளைந்து வாழ்த லமையுமென
நிரந்த சுடுவெந் தழலெழுப்பி நேரே முழுகிக் காட்டல்பொரூஉங்
கரந்த வெதுப்பி னினன்செவ்வா னெழுப்பிக் கடுகப் புகுந்ததே. 77

கு - ரை: பரந்த காமத் தழற் கடல் - பரவிய காமமாகிய அக்கினிக் கடல். கொடுந்தீப் பெருங்கடல் - கொடிய அக்கினியாகிய கடல். சுரந்த -

அதிகரிக்கின்ற. எழுப்பி - மூட்டி. பொரூஉம்=பொருவும் - ஒப்பாகும். கரந்த வெதுப்பின் இனன்-கடலில் மறைந்த வெய்யோன். இனன்-சூரியன். செவ்வான் - சிவந்த வானம்; அந்திவானம். கடுக - விரைவாக.

கொழுநர் பிரிவோ ராறுளெது குறித்த போது மனங்கலங்கும்
வழுவில் குலமங் கையர்மனமும் வண்டா மரைப்பூக் களுமொத்த
பழுதி லவர்தங் குழலவிழ்ந்து படியிற் படிந்து கிடப்பதெனக்
கழுது முறங்கு மிருட்டிரண்மண் கரும்பொன் னிறமென் றிடத்
[தோய்ந்த. 78

கு - ரை : கொழுநர் - கணவர். பிரிவு ஓர் ஆறு "பரத்தையிற் பிரிதல், ஓதற்குப் படர்தல், அருட்டரு காவலொடு தூதிற் ககறல், உதவிக் கேகல் நிதியிற் கிகத்தல் என்று, உரைபெறு கற்பிற் பிரிவு அறுவகைத்தே" என்க. மனமும் தாமரைப்பூக்களும் குவிந்தன. படியில் படிந்து - பூமியில் அழுந்திக் கிடந்து. "கழுது கண் படுக்கும் பானாள் இரவு" (பரஞ்சோதி முனிவர்). இருட்டிரள் - இருட் பிழம்பு. கரும்பொன் - இரும்பு.

பட்ட நிறைபுள் ளொலியடங்கப் பள்ளிக் கணக்கர் வாயடங்கத்
தொட்ட தொழிலிற் குறைகிடப்பத் தொக்க பறவை குடம்பைபுக
விட்ட மருவு பிணைத்தழுவி யெல்லா விலங்குஞ் சேக்கைபுகப்
பெட்ட மதவேள் தணந்தாருட் பிறங்கிப் புகவல் லிறுத்தன்றே. 79

கு - ரை : பட்டம் நிறை புள் ஒலி - வண்டுகளின் ரீங்காரம். பள்ளிக் கணக்கர் - படிக்கும் பிள்ளைகள். தொட்டதொழில் - தொடங்கியவேலை. தொக்க - தொகுதியாகவுள்ள. குடம்பை - கூடு. பிணை - பெண். சேக்கை - இருப்பிடம். பெட்ட மதவேள் - விருப்பத்தைத்தரும் மன்மதன். தணந்தார் உள் பிறங்கி - பிரிந்தோருடைய மனத்தில் விளங்கி. அல் இறுத்தன்று- இருட்காலம் வந்தது. பிரிந்தோரை மாலைப்பொழுது வருத்தும். மாலைப் பொழுதில் தாமரை குவியும். இருள் பிரிந்தவர்க்கு மரணவேதனையையொத்த வேதனையை விளைக்கும் என்க.

செந்தா மரைகண் முகமலரத் தேரிற் றோன்றுஞ் செங்கதிரை
நந்தா மேலைக் கடலுரக நடுங்கப் பிடித்து விழுங்குதலும்
அந்தா ரணியி னுயிரனைத்து மந்த காரப் புனல்படிந்த
சந்தா பக்கார் கோட்குளித்தான் சாலீ சுகனென் றிடுமிறைவன். 80

கு - ரை : செங்கதிர் - சூரியன். கடல் உரகம் - கடலாகிய பாம்பு. தாரணி - நிலவுலகம். அந்தகாரப்புனல் - இருளாகிய நீரில். சந்தாபக் கார்கோள் - துன்பக்கடல். 'செங்கதிரை உரகம் பிடித்து விழுங்குதலும் உயிரனைத்தும் புனல்படிந்த' என்ற நயம் காண்க.

கூகை களிப்பக் கொடிகவலக் கூட்டங் குலைத லாற்சிறிதும்
ஓகை துளும்பா நேமிப்பு ளுணவு கருதி யுழிதரமிக்
காகை யமைந்த விருளிரிய வாங்காங் கெடுத்தார் பல்விளக்கம்
வாகை யரைய னுவளகத்த மளிசேர்ந் துளமா மூந்துரைப்பான். 81

கு - ரை : கூகை - பேராந்தை, கோட்டான். கொடி - காக்கை. கூட்டம் குலைதலால் - புணர்ச்சியின் நீங்குதலால். ஓகை=உவகை - மகிழ்ச்சி. நேமிப்புள் - சக்கரவாகம். 'கூட்டங் குலைதலால் சிறிதும் ஓகை துளும்பா நேமிப்புள்'; "தணத்த லெண்ணிமெய் தளர்வுறு நேமியம் பறவை" (நைடதம்). இருள் இரிய - இருள் கெட்டோட. ஆங்காங்கு பல் விளக்கம் எடுத்தார்; விளக்கம் - விளக்கு. உவளகம் - அந்தப்புரம். அமளி - படுக்கை.

சறுவ திர்த்தத் தடங்கரையிற் சார்ந்த காலை யிளநிலவின்
முறுவல் பூத்த பொற்கொம்பு முன்னின் றொளித்த தெங்கென்னும்
மறுவில் காட்சி யுற்றுடனே மறைந்து போய காரணத்தாற்
பெறுவ தொன்றி லொருமின்னற் கொடியோ வென்று பேசுமால். 82

கு - ரை : சார்ந்தகாலை - சென்றபொழுதில். இளநிலவின் முறுவல் - இளநிலவையொத்த பற்கள். கண்டு உடனே மறைந்துபோன காரணத்தால் பெறலரிய மின்னற்கொடியோ என்று கூறினன்.

பொன்னங் கொடிபோ லெதிர்நின்று போன ரைம்பாற் றுணங்கற
முன்னம் பரந்து புவனமெலா முற்றி யதுவே றிலையென்னும் [லென்
அன்னம் பொருவு நடையார்மெய் யமைந்த வொளிகண் டுளங்கூசி
என்னங் குலத்து முதல்மறைந்த தியல்பாய் மறைந்த திலையென்னும்.

கு - ரை : பொன்னங்கொடி - பொற்கொடி. அறல் - கருமணல். என் முன்னம் பரந்து; பரந்து - பரவி. முற்றியது - நிறைந்தது. என்னும் - என்று சொல்லுவான். நம் குலத்து முதல் - சூரியன்.

முத்தம் பொருவு முறுவலெனு முறுவல் பொருவு முத்தமெனும்
வித்தம் பொருவு மேனியெனு மேனி பொருவும் வித்தமெனும்
அத்தம் பொருவுங் காந்தளெனுங் காந்தள் பொருவு மத்தமென்றன்
சித்தம் பொருவு மருங்குலெனு மருங்குல் பொரூஉமென் சித்த
[மெனும். 84

கு - ரை : முத்தம் - முத்துக்கள். முறுவல் - பற்கள். வித்தம்-பொன். அத்தம் - கை. மருங்குல் - இடை. சித்தம் - மனம்.

கூற்ற மிரண்டுண் டெனிவ்விழிக்குக் கூற லாகு முவகையெனும்
மாற்ற முணரே மானுலும் வடித்த தேனி னினிக்குமெனும்
நாற்றங் கமழுந் திருமேனி நலத்தை யாவர் புகழ்வரெனும்
ஏற்ற மெனக்கு முண்டாகு மினியோர் காற்கண் ணுறினென்னும். 85

கு - ரை: கூற்றம் - இயமன். மாற்றம் - சொல். நாற்றம் - பதும கந்தம்: பத்மினிசாதிப் பெண்களுக்கு மேனி வியர்வை, மூச்சு முதலியன தாமரைமலரின் மணம் போன்றதாம். ஏற்றம் - உயர்வு, மேன்மை. கண்ணுறின் - கண்டால். ஓர் கால் - ஒரு தரம்.

ஒழியா வமுத கடமிரண்டு முற்று லுய்ய லாமென்னும்
கழியா வெப்ப மிரண்டாய கதலி வருடக் கழியுமென்னும்
பழியா வெனது விறன்மடங்கல் பாறிற் றெருமா னுலென்னும்
அழியா வாசை நோய்க்குமருந் தகில புவனத் தினுமிலையால். 86

கு - ரை: ஒழியா அமுதகடம் இரண்டும் - இரண்டு நகில்களும். இரண்டாய கதலி - வாழைபோலும் துடைகள். விறல் மடங்கல் - வலிமையாகிய சிங்கம். மான் - மான்போலும் பெண். பாறிற்று - அழிந்தது. ஆசையாகிய நோய். புவனம் - உலகம். மடங்கல் ஒரு மானுல் பாறிற்று என்றது நயம்.

என்று பிதற்றும் பொழுதாழி யிரையு மோதை செவிமடுத்தான்
கன்று கனருய் சலாகையிரு காதுட் புகுத்தா ரெவரென்பான்
அன்று முனிவன் குடிக்கவிற லழிந்தா யமரர் கலக்குதலால்
வென்று மிளிரும் பொருளனைத்து மிழந்தும் வீணே யிரைகின்ருய். 87

கு - ரை: ஆழி இரையும் ஓதை - கடலொலி. காய்ச்சிய சலாகை இரு காதுகளிலும் புகுத்தினர் யாவர். முனிவன் - அகத்திய முனிவர். குடிக்க - ஆசமனம்பண்ண. விறல் - வலிமை. அமரர் - தேவர்கள். கலக்குதலால் - கடைதலால். பொருள் அனைத்தும் என்றது ஐராவதம், உச்சைசிரவம், நவநிதியம், காமதேனு, கற்பகம், பதுமநிதி, சங்கநிதி, இலக்குமி, சந்திரன் முதலிய பொருள்களை. இழந்தும் என்றது இந்திரனுக்கும், குபேரனுக்கும், விஷ்ணு மூர்த்திக்குமாகக் கொடுத்துத்தொலைத்தும் என்றபடி. இரைகின்ருய் - முழங்குகின்ருய். நவநிதியம்: மகாபதுமம், பதுமம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம் என்னும் ஒன்பது நிதிகளுக்கும் குபேரன் தலைவன்.

நின்னை யமைத்தோ ரெங்கள்குல நிருப ரதுவும் போதாது
பின்னை யளவாப் புனிதமுறப் பெருவா னதியை மண்ணிழித்துக்
கொன்னை மருவக் கலப்பித்தார் கூறு மிவையுட் குறியாயாய்
என்னை வருத்தி யென்பெறுவா யென்று பெருவா ரியைமுனிந்தான். 88

கு - ரை : அமைத்தோர் - சகரர்கள். எங்கள் குல நிருபர் - சூரிய குலத்தோராகிய அரசர்கள்: நிருபர் - அரசர்; மனிதர்கட்குத் தலைவர். நிருபர்: வடசொல்; நிரு - மனிதர். அளவாப் புனிதம் - அளவில்லாத தூய்மை. வான் நதி - கங்கை: ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தவன் பகீரதன். கொன் - பெருமை. உள் குறியாயாய் - மனத்தில் கொள்ளாதவனாய்; வினைப்பெயர். வாரி - கடல்.

ஆய பொழுது சந்தனக்காட் டளைந்து பொதியா சலநின்று
மேய குளிர்வா வியினறும்பூ விரைதோய்ந் தெழுந்து கள்ளுண்டு
சாய வருவார் திறமென்னத் தடஞ்சா ளரம்புக் குலவியது
பாய விளங்கா லதுகண்டு பதைத்தா னின்ன பகருவான். 89

கு - ரை : சந்தனக்காடு - சந்தனமரச்சோலை. பொதியாசலம் - பொதியின்மலை. குளிர்வாவி - குளிர்ந்த தடாகம். விரை தோய்ந்து - வாசனையில் அழுந்தி. கள் - தேன். சாளரம் - பலகணி. இளங்கால் - இளந்தென்றற் காற்று: கால் - காற்று; மந்தமாருதம்; "மலய முயிர்ப்ப அலர்பொதுளும், சந்தா டவியிற் றவழ்ந்து நறுந் தண்ணென் அருவி தோய்ந்து மலர்ப், பைந்தா தாடி முருகுயிர்த்துப் பசும் பொற் சிறுசா ளரநுழையும், மந்தா நிலம்'' (நைடதம் - சந்திரோபாலம்பனப்படலம் - 18 செ).

கொல்ல வெழுவெம் புலிபோன்ற கொடிய மந்த மாருதமே
நல்ல தமிழி னுடன்பிறந்தாய் நகுகண் ணோட்டஞ் சற்றுமிலாய்
சொல்ல வினிய வமுதினெடுந் தோற்ற முடைய தானுலும்
வல்ல விடங்கொல் லாதொழித லுண்டோ நின்னை வழங்கலெவன். 90

கு - ரை : மந்தமாருதம் - இளந்தென்றற்காற்று. நல்ல தமிழ் - செந்தண்டமிழ்: தமிழினுடன் பிறந்தாய் என்றது தமிழ் முனிவராகிய அகத்தியர் விற்றிருக்கும் பொதியிலில் தோன்றினாய் என்பது கருதி. கண்ணோட்டம் - தாட்சணியம்; ''கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்'' (திருக்குறள்). நஞ்சு அமுதத்துடன் பாற்கடலில்தான் தோன்றியது, ஆயினும் கொல்லாமல் விடுமோ; அஃது அதன் இயற்கைக்குணம். நின்னை வழங்கல்: வழங்கல் - சொல்லுதல்.

உற்ற பொதிய வரையென்னு மொருபாம் புயிர்த்த வெவ்வுயிர்ப்பிற்
செற்ற மந்த மாருதமே செறிந்த சாந்த முனிவர்குழாம்
பற்ற வமர்ந்து மருவிடத்துப் பயின்றுஞ் சாந்தஞ் சிறிதுமிலாய்
பொற்ற நறுநீர்க் கிடந்தாலுங் கிடையு ளீரம் பொருந்தாதே. 91

கு - ரை : பொதியவரை பாம்பு. உயிர்த்த வெவ் வுயிர்ப்பு - வெளியிட்ட கொடிய மூச்சுக்காற்று. உயிர்ப்பின்: இன் ஐந்தாவது ஒப்புப் பொருள். பயின்றும் - நெடுநாள் இடைவிடாது பழகியும். கிடை - நெட்டி:

நீரிலே பலநாள் நெட்டி கிடந்தாலும் உள்ளே ஈரம்படாது. தென்றலைப் பழித்தல்.

இந்த வண்ணஞ் சிறுகாலோ டெதிர்ந்து சினந்து பிணங்குங்காற்
சந்த நறிய தேமாவின் றலையிற் குயிலோர் காற்கூவ
அந்த முழக்கங் குயின்முழக்கி னரசர் கோனஞ் செவிவெதுப்ப
வெந்த விரும்பு புண்ணுழைந்த விதம்போற் கனன்று விளம்புவான். 92

கு - ரை : சிறுகால் - இளங்காற்று. பிணங்குங்கால் - மாறுபடும் காலத்து. சந்த நறிய தேமாவின் தலை - அழகிய மணம்பொருந்திய தேமா மரத்தில்; மாங்குயில் கூவ. குயின் - மேகம். வெந்த இரும்பு புண் நுழைதல் - காய்ச்சிய சலாகை புண்ணிலே செருகல். கனன்று - கோபித்து.

பூவிற் பொலியுந் திருமேனி பொன்னிற் பொலிவாண் மொழிக்குடைந் [து
மாவிற் கரந்த கருங்குயிலே வாளா வின்று வாய்திறப்பாய்
நாவிற் சிறந்த வல்லர்முத லொருமாத் திரைநாட் டாதுனைச்சொல்
பாவிற் கியையக் களகண்ட மென்றூர் கொடுமை பார்த்தன்றே. 93

கு - ரை : திரு - இலக்குமி. உடைந்து - தோற்று. கரந்த - ஒளித்திருந்த. வாளா - சும்மா; வீணே. நாவிற்சிறந்த வல்லர் - நாவலர். முதல் ஒரு மாத்திரை நாட்டாது; முதல் - முதலெழுத்து: கா என்பது, அது க என நெடிலைக் குறிலாக ஒரு மாத்திரை குறைத்தது. காளம்=களம். காளம் - விடம். குயிலை வெறுத்தல்.

இனைய விதமாங் குயிலைவெறுத் தினையுங் காலை நல்லாருள்
அனைய தடத்து ளரக்காம்பல் அரும்ப ரனைத்து முறுக்குடைய
நினைய வரிய விண்மீனு நிரம்பு மகிழ்ச்சி தலைக்கொள்ளத்
துனைய வொருபுள் ளுணன்முயலத் தூய மதியந் தோன்றியதால். 94

கு - ரை : இனையும் - வருந்தும். தடத்து அரக்கு ஆம்பல் - தடாகத்திலுள்ள செவ்வாம்பல். முறுக்கு உடைய - கட்டவிழ. விண்மீன் - நட்சத்திரம். ஒரு புள் உண் - சகோரப்பறவை உண்ணும். நல் முயல் அ தூய மதியம் - முயற்கறை பொருந்தும் அழகிய நல்ல சந்திரன். புள் உணல் முயல எனினுமாம்; புள் உண் நல் முயல் அ தூய மதியம். சந்திர கிரணத்தைச் சகோரம் உண்ணுதல் என்பது மரபு.

தூய தேவ தீர்த்தத்துத் தொக்க பலவொண் மலர்நாப்பண்
ஆய விண்ணோர் வாயூற வருளி னெழுந்த சுதைக்கடம்போற்
பாய நெடிய வானத்திற் பரந்து செறிதா ரகைநாப்பண்
மேய சகோரம் வாயூற எழுந்த தொருவெண் டிங்களே. 95

கு - ரை: தொக்க - தொகுதியாகவுள்ள. சுதைக்கடம் - அமுதகும்பம். வாய் ஊற - வாயில் நீர் சுரக்கும்படி. பரந்து செறி - பரவி நெருங்கும். தாரகை - நட்சத்திரம். சகோரம் வாய் ஊற - சகோரப்புள் வாய் ஊறும்படி. திங்கள் எழுந்தது என்க.

ஊழி முதல்வன் வெள்ளியநீ றெருங்கு பரந்த காட்சியெனத்
தாழி யமைந்த பால்பொங்கி வழியா நின்ற தன்மையென
வாழி யுதித்த வெண்டிங்கட் கிரணம் பரந்து வழிந்தனவால்
ஆழி யரச னதுகண்டா னழன்று புகலத் தொடங்கினன். 96

கு - ரை: ஊழி முதல்வன் - சிவபெருமான். நீறு - விபூதி. பரந்த - பரவிய. தாழி - பானை. ஆழி - கடல். திங்கட்கிரணம் - சந்திரன் ஒளி. பரந்து வழிந்தன - பரவிச்சென்றன. ஆழி அரசன் - ஆக்ஞா சக்கரத்தை யுடைய அரசன்; சாலிசுகன். அழன்று - கோபித்து.

நல்லா வுதித்த பாற்கடலு ளயக்கு மமுதத் தொடுபிறந்தாய்
சொல்லா நின்ற வமரர்வயிற் றெழுந்த பசியுந் தொலைத்திடுவாய்
பொல்லா விருளின் பொம்மலறப் பொலியுங் கிரணம் வீசிடுவாய்
எல்லா நயமு முடையாய்மற் றென்னை வருத்த லெவன்றிங்காள். 97

கு - ரை: நல் ஆ - காமதேனு. நயக்கும் - விரும்பும். அமரர் - தேவர். பொல்லா இருள் - துன்புறுத்தும் இருட்காலம். பொம்மல் - செறிவு. எல்லா நயமும் - எல்லா நன்மைகளும். எவன் - யாதுகாரணம்.

கஞ்ச மனைத்துங் குவித்திடுவாய் கழுநீ ரனைத்தும் விரித்திடுவாய்
நஞ்ச நிகர்ப்பாய் தணந்தாருக் கமுதி னயப்பாய் மணந்தார்க்குத்
தஞ்ச மனைவி யருட்சிலரை வெறுப்பாய் சிலரைச் சார்குவாய்
மஞ்ச நடுவின் மையினன்றோ வளர்வாய் தேய்வா யாயினுய். 98

கு - ரை: கஞ்சம் - தாமரை. கழுநீர் - செங்கழுநீர்ப்பூ, குவளைமலர். நஞ்சம் - விடம். தணந்தார் - பிரிந்தவர். மணந்தார் - கலந்தவர். தஞ்சம் மனைவியர் - உன்னைப் பற்றுக்கோடாக வந்தடைந்த மனைவிமார் என்றது தக்கன் புதல்வியராகிய இருபத்தெழுவரையும். சிலரை வெறுத்தல் - உரோகிணியையன்றி ஏனையோரை என்க. சார்தல் - பொருந்துதல். நடுவின்மை - நடுவுநிலையில்லாமை. வளர்தல் தேய்தல் - தக்கன் சாபத்தால் உண்டாகிய துன்பம்நீங்கி வளர்தலும் தேய்தலுமாக இருக்கும்படி இறைவன் கருணை செய்தமை கருதியது.

மறைமுற் றுணர்ந்து சிருட்டிபுரி
மராள முயன்றுங் காணரிய
நிறைவிற் பொலியு முடியமர்வாய்
நிலத்தி னுயர்ந்தோர்ச் சார்ந்தவருங்

குறைவிற் படுமோர் தொழிலியற்றுர்
குறியொப் புரவாற் றுவருணர்ந்துங்
கறையிற் றவிரா விஃதியற்றல்
கடனே மடனே வாமதியே. 99

கு - ரை: சிருட்டிபுரி மராளம் - பிரமதேவராகிய அன்னம். நிலத்தின் - பூமியில். உயர்ந்தோர்ச்சார்ந்தவரும் - உயர்ந்தோரைச் சார்ந்து நிற்பவரும். ஒப்புரவு ஆற்றுவர் - உலகத்தோடு ஒட்ட ஒழுகுவார்: ஒப்புரவு - உலகநடை. கறையில் தவிரா - பழியில் நீங்காத. இஃது இயற்றல் - எனக்குத் துன்பத்தைச்செய்தல். மடன் ஓவா - அறியாமையின் நீங்காத. மடன் ஓவாமதி முரண்.

என்று மதியை முனிதருகா லெழுந்து கருப்புச் சிலைகோட்டித்
துன்று சுருப்பு நாண்பூட்டித் தோலாக் குணத்தி னொலிகாட்டி
அன்று மலர்கள் பலகூட்டி யனங்க னனியுய்த் திடுவதுகண்
டின்று செயலின் றிவன்செயலுக் கென்று வெதும்பி யிவையிசைப்பான்.

கு - ரை: முனிதரு கால் - கோபிக்கும் காலத்தில். கருப்புச் சிலை கோட்டி - கரும்பு வில்லை வளைத்து. துன்று - நெருங்கிய. சுருப்புநாண் - வண்டுகளாகிய நாணி. தோலா குணத்தின் ஒலி - தோல்வியடையாத வில் நாணியிலிருந்து உண்டாகும் ஒலி: குணம் - வில்நாணி. அன்று மலர்கள் - நாண்மலர்கள்; அன்றும் மலர்கள் - வருத்தும் மலரம்புகள் எனினுமாம். அனங்கன் - மன்மதன். இவன் செயலுக்கு இன்று செயலின்று. இவன் செயல் - போர்த்தொழில். இன்று - இப்போது. செயல் இன்று - செய்யத் தக்கதில்லை.

வேறு

ஒலிகட லுலகின் கண்ணே யொள்ளறி வுடையார் தம்மின்
வலியர்மேற் செல்லுங் காற்று மாவது மனத்தி னெண்ணி
மெலியர்மேற் செல்லார் முக்கண் விமலன்மேற் செல்லா தென்பாற்
பொலிதரப் புகுந்தாய் வேணின் வீரந்தான் புகலற் பாற்றே. 101

கு - ரை: ஒள் அறிவு உடையார் - தெளிந்த (பிரகாசமுடைய) அறிவுள்ளார். மேற்செல்லுங்கால் - தம்மாட்டுப் போர்செய்ய வருங் காலத்து. தாம் ஆவது - தாம் மனங்கலங்குதலை. மெலியார் - தம்மின் வலிகுறைந்தோர். முக்கண் விமலன் - சிவபெருமான். வேள் - மன்மதனே: அண்மை விளி.

கழைகுழைத் தளிநாண் பூட்டிக் கணையெனச் சிலபூக் கூட்டி
விழைசெருப் புரிவாய் வெற்பும் வெந்நிடும் வலியான் மிக்க
குழைசிலை வாங்கிப் பல்ல கொடுங்கணை தொடுக்க வல்லேன்
நுழையரு வமைந்தா யீது நோக்கியோ நுவறி வேளே. 102

கு - ரை : கழை குழைத்து - கரும்புவில்லை வளையச்செய்து. அளி நாண் - வண்டொழுங்காகிய நாணி. கணை - அம்பு. சில பூ - தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்பன. செரு - போர். வெந்நிடும் - புறமுதுகிட்டோடும். வெற்பு - மலை. அருவமைந்தாய் - உருவமில்லாய்: அனங்கன் என்றபடி. நுவறி - நுவல்வாய்: நுவலல் - சொல்லுதல். வேள் - மன்மதன்.

இருந்தவ முஞற்றி யீன்ற விருமுது குரவர் மாட்டும்
பொருந்தவெம் பகழி தூண்டிப் புல்லிய காம மேற்றும்
பெருந்தகை நினக்கி யானார் பேரமர் புரிவார் தம்முள்
திருந்தநன் கெதிரு றாருஞ் சீர்மையிற் சிறந்தா ரன்றே. 103

கு - ரை : உஞற்றி - செய்து. இரு முது குரவர் - தாய்தந்தையர் என்றது திருமகள் திருமால்களை. பகழி - அம்பு. புல்லிய - அற்பத்தன்மையுடைய. காமம் ஏற்றும் - காமத்தைப் பெருக்கும். நினக்கு யான் யார் - உன் தன்மைக்கு நான் ஒரு பொருளோ என்க. பெரிய போரைச் செய்வோரை எதிர்த்துச் செல்லாதவரும் சிறந்தவரேயாவார். சீர்மை - பெருமை.

ஒருகவி யெய்யுங் காலத் தொளித்துநின் றெய்தா னுந்தை
வருபழி நோக்காய் நீயு மறைந்துநின் றென்னை யெய்வாய்
பொருதொழில் வனமா வெய்யும் புன்றொழிற் கிராதன் போன்றாய்
இருநிலத் துனையுந் தேவ னென்மருஞ் சிறந்து ளாரே. 104

கு - ரை : ஒரு கவி - ஒப்பற்ற வாலியாகிய குரங்கு. உந்தை - உன் தந்தை: திருமாலாகிய இராமன். நீயும் மறைந்து நின்று எய்வாய். வனமா - காட்டினுள்ள விலங்குகள். கிராதன் - வேட்டுவன். புன் தொழில் - கீழாகிய கொலைத்தொழில். தேவன் என்மரும் - தேவன் என்று சொல்வோரும். தந்தையின் குணமே மைந்தனாகிய உன்பாலும் சித்தித்தது; அது குலவிச்சைபோலும்.

என்றுவெய் துயிர்க்குங் காலை யிலங்குநங் குலத்து தித்தான்
கன்றுத லொழிப்பே னென்று கடுகவந் தெழுவான் போல
ஒன்றுபல் விளக்க மெல்லா மொளியிழந் தகலக் கீழைக்
குன்றினின் றுதயஞ் செய்தான் குலவெழு பரித்தே ரானே. 105

கு - ரை : வெய்துயிர்க்கும் - பெருமூச்செறியும். கன்றுதல் - வருந்துதல். கடுக - விரைந்து. ஒன்று பல் விளக்கம் - பொருந்திய பல விளக்குகள். கீழைக்குன்று - உதயகிரி. எழுபரித் தேரான் - ஏழு குதிரைகள் பூட்டப்பெற்ற தேரையுடைய சூரியன்.

பரசிவந் தோன்ற லோடும் படுமல விருள்கெட் டாங்கு
வரமிகு பரிதி தோன்ற மாய்ந்ததா லிருளின் பொம்மல்
விரவுபுன் றெய்வ மெல்லாம் வீறுதேய்ந் தொளித்தன் மானக்
கரவறப் பயில்வீ பத்தா தியசுடர் கழிந்த வன்றே. 106

கு - ரை: பரசிவம் - சிவபெருமான். படு மல இருள் - (செம்பிற் களிம்பு போலப்) பொருந்திய ஆணவ இருள். வரமிகு - சிறந்த. பொம்மல்-மிகுதி. புன் தெய்வம் - சிறு தெய்வங்கள்; செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள். வீறு - மேம்பாடு. வீபத்தாதிய - சந்திரன் முதலிய.

அருமறை யொலியெ ழுந்த வந்தண ரிருக்கை யெங்குங்
கருவிலங் கொலியெ ழுந்த தருச்செறி ககன மெங்கும்
ஒருவில்புள் ளொலியெ ழுந்த வோடைநீர் வாவி யெங்கும்
பெருகுசங் கொலியெ ழுந்த பிரானமர் தளிக ளெங்கும். 107

கு - ரை: ககனம் - ஆகாயம். கருமான்=கருவிலங்கு - கலை. தரு செறி - மரங்கள் நிறைந்த: செறி - நெருங்கிய. ஒருவு இல் - நீங்குதல் இல்லாத. ஓடை நீர் வாவி: உம்மைத்தொகை. பிரான் - சிவபெருமான். தளி - கோயில்.

அரவின்வாய் வீடு பெற்ற வண்ணலம் பரிதி போல
இரவின்வாய் வீடு பெற்ற விலங்கிலை யலங்கல் வேலான்
புரவின்வாய் தேவ தீர்த்தம் புகுந்தினி தாடி யாரும்
பரவின்வாய் திருக்கா ரோணப் பெருந்தளி பண்பிற் புக்கான். 108

கு - ரை: அரவு - இராகு. வீடுபெற்ற - விடுதலையடைந்த; நீங்கிய. இரவின் வாய் - இராக்காலத்தினின்று. பரவின் வாய் - பரவுதல் பொருந்திய. காரோணப் பெருந்தளி - காரோணமாகிய பெருங்கோயில்.

கருந்தடங் கண்ணி யோடு கலந்தினி தமரா நின்ற
பெருந்தகை பாதம் போற்றிப் பேணுபு நின்ற னுகத்
திருந்தமுன் னிற்கின் றானைத் தெய்வநா யகனேர் நோக்கி
வருந்தனஞ் சவுந்த ரப்பேர் மாலிடஞ் சேறி யென்றான். 109

கு - ரை: நின்றனுக - நின்றான். தெய்வநாயகன் - சிவபெருமான். வருந்தல் - வருந்தாதே. சவுந்தரப் பேர்மால் - சவுந்தரராசப் பெருமாள். சேறி - செல்வாய்.

தனையடைந் தவரை யாருந் தாழ்தர வுயர்த்தா நின்ற
தனைநிகர் கருணை மூர்த்தி சாற்றிய துணர்ந்து கஞ்சா
தனைபுணர் மார்ப னுய சவுந்தர மாலைச் சார்ந்தான்
தனையரும் புகழ்சால் சாலீ சுகனெனுந் தரையாள் வேந்தன். 110

கு - ரை : தாழ்தர - வணங்க. கஞ்ச ஆதனை - செந்தாமரையை ஆசனமாகக்கொண்ட இலக்குமிதேவி. சாலிசுகன் என்னும் அரசன்.

மந்தரம் பொருவு தோளான் மாமணிக் கோயின் மேவிச்
சுந்தர ராச மாலைத் தொழுதெதிர் நிற்ற லோடும்
அந்தர நாட ருண்ண வமுதமுன் னளித்த தெய்வக்
கந்தர மேனி மாலக் காவலன் முன்னந் தோன்றி. 111

கு - ரை : மந்தரம் - மந்தரமலை. மால் - திருமால். அந்தரநாடர் - விண்ணோர். கந்தர மேனி மால் - மேகவண்ணத்தையுடைய திருமால்: கந்தரம் - மேகம்.

புரவல வஞ்சே லாதி புராணர்க்கு வடபா லுள்ள
துரனுடைக் காரி காப்ப தோங்கிய தரும ரூபத்
திரமரு வியத ரைக்கு ரோசத்திற் றிகழ்வ தென்றும்
அரவநாட் டெளிது செல்லற் காயதோர் பிலமொன் றம்மா. 112

கு - ரை : புரவல - அரசனே. உரன் - வலிமை. காரி - ஐயனர்; வடுகக் கடவுள் எனினுமாம். அரைக்குரோசத்தில் திகழ்வது; குரோசம் - கூப்பிடுதூரம். ஓங்கியது, மருவியது, திகழ்வது என்க. அரவநாடு - நாக லோகம். பிலம் - துவாரம்; சுரங்கவழி.

ஆயவப் பிலத்தூ டேகி னரவநாட் டடைவை யாங்கு
மேயபன் னகர் வேந்தன் மேதகு முகமன் செய்து
தூயதன் மகளை மன்ற றுனைந்துசெய் தளிப்ப னென்றுன்
மாயனை வணங்கி யாங்கு விடைகொண்டான் வள்ளற் கோமான். 113

கு - ரை : பிலத்தூடு - பிலத்தின் வழியாக. அடைவை - சென்று சேர்வாய். நாகர் வேந்தன் - ஆதிசேடன். முகமன் - உபசாரம். மன்றல் - கல்யாணம். துனைந்து - விரைவிலே.

அறிதுயி லமர்ந்த மூர்த்தி யருளிய வாறே சென்று
மறிமழுக் கரக்கா ரோண வள்ளலார் வடதி சைக்கட்
செறியரைக் குரோசத் தெல்லை சிவணிய பிலத்துட் புக்கான்
குறிகெழு நாகர் நாடு குறுகினு னரசர் கோமான். 114

கு - ரை : அறிதுயில் - யோகநித்திரை. சிவணிய - பொருந்திய. நாகர் நாடு - பாதலவுலகம்.

இவனிலை யின்ன தாக விழைமுலை யொன்று காணுள்
தவனிவ னென்னக் கண்டா டந்தையை வணங்கி யைய
சிவனமர் காரோ ணத்துத் திகழ்பெருஞ் சறுவ தீர்த்தத்
தவனிவ னென்னத் தேறே னடைந்தன னெருவ னுங்கே. 115

கு - ரை : இவன் நிலை - சாலிசுகன் தன்மை. தவன் இவன் - தவத்தை யுடையவன் இவன்; கணவன்: தவன் சிலேடை. சறுவதீர்த்தத்தவன் இவன் - சறுவதீர்த்தக் கரையிலுள்ளவன் இன்னுன்.

அன்னவற் காண்ட லோடு மணிமுலை யொன்று காணேன்
இன்னது நின்பாற் கூற வெய்தினே னென்ன லோடும்
பன்னக வேந்த னுள்ளம் பண்புற மிகம கிழ்ந்து
நன்னலத் தவனே நிற்கு நாயக னுவ னென்ருன். 116

கு - ரை : காண்டலோடும் காணேன்: முரண்தொடை. இன்னது - இச்செய்தியை. நல்ல நலங்களையுடையவனுகிய அவனே நினக்குக் கணவன் ஆவான் என்ருன்.

அந்தநன் னகரத் துள்ளா ரனைவரு மறியக் கூறிச்
சந்தநன் மணியாற் பொன்னுற் றகவலங் காரஞ் செய்து
கந்தமென் ருெடையன் மார்பக் காவலன் வரவு நோக்கி
நந்தலி லுவகை பூப்ப விருந்தன னுகர் வேந்தன். 117

கு - ரை : சந்தம் - அழகு. கந்தம் - வாசனை. தொடையல் - மாலை. நந்தல் இல் உவகை - குறைவுபடாத மகிழ்ச்சி.

ஆயவப் பொழுதே சாலி சுகனவ னெதிரே சென்ருன்
பாயபொற் பிவனே யந்தப் பார்த்திப னெனத்தேர்ந் தீங்கு
மேயநீ யாவன் வந்த கருமமென் விளம்பு கென்ருன்
நேயமா ரரவ வேந்த னரபதி நிகழ்த்த லுற்ருன். 118

கு - ரை : அவன் எதிரே - ஆதிசேடனுடைய எதிரில். பார்த்திபன் - அரசன். தேர்ந்து - தெளிந்து. கருமம் - காரியம். நரபதி - நிலவுலகத்து வேந்தன். மேய=மேவிய - பொருந்திய.

ஏற்றமா ரொருமார்த் தாண்ட னியலமை பெருங்கு லத்தில்
தோற்றமே வினன்யான் சாலி சுகனெனு நாம முள்ளேன்
ஆற்றநின் பாங்க ரொன்று கருதிவந் தடைந்தே னென்ருன்
மாற்றமொன் றுரையான் சேடன் மகிழ்ச்சியிற் றிளைப்புற் ருனே. 119

கு - ரை : ஏற்றம் ஆர் - பெருமை பொருந்திய. மார்த்தாண்டன் - சூரியன். இயல் அமை பெருங்குலம் - சூரியகுலம். நின் பாங்கர் - உன் னிடத்து. மாற்றம் ஒன்று - ஒரு சொல்லும் என விரிக்க.

ஒருமுலை மறையக் காட்சி யுதவினு னிவனே கொல்லென்(று)
அருமக டன்னை நோக்க வனையளு மினைய னே நின்
மருமக னெனச்சொல் லாது சொற்றிட மகிழ்ச்சி கூர்ந்த
பொருவரு நாகர் கோமான் யாரையும் பொருந்தக் கூட்டி. 120

கு - ரை: காட்சி உதவினுன் - கண்டவன். சொல்லாது சொற்றிட - வாயாற்கூருது குறிப்பாலுணர்த்த. கூர்ந்த - மிக்க. பொருவரும் - ஒப்பில்லாத.

மணமகன் றனக்கெண் ணில்லா மணிப்பணி யெடுத்துச் சூட்டிப்
பணவர வல்குன் மாதர் பவளவாய் வாழ்த்து மல்கத்
தணவரு மியமு ழங்கத் தவாதமங் கலங்கூத் தாடக்
குணமுயர் மகளை யந்தக் கொற்றவற் குதவி னுனே. 121

கு - ரை: எண் இல்லா - அளவில்லாத. மணிப் பணி - இரத்தினுபரணம். மல்க - நிறைய. தணவு அரும் - நீங்குதலில்லா. இயம் - வாத்தியங்கள். தவாத - கெடாத; நீங்காத எனினுமாம். கொற்றவற்கு - சாலிசுகன் என்னும் அரசனுக்கு.

மேவரு மகிழ்ச்சி பொங்க வேனெடுங் கண்ணு ளோடு
பூவரு முவள கத்துப் புகுந்துசந் தாபந் தீரத்
தாவரும் புகழ்சால் வேந்த னல்குலந் தடத்துண் மூழ்கித்
தேவரு நறுமு றுக்கச் செறிந்தபே ரின்பந் துய்த்தான். 122

கு - ரை: உவளகத்து - அந்தப்புரத்தில். சந்தாபம் தீர - காமவெப்பந் தணிய. தாவரும் - கெடாத. நறுமுறுக்க - பொருமை கொள்ள.

தன்னர சுரிமை யெல்லா மருமகன் றனக்கே யாக்கிப்
பன்னக வேந்தன் வல்லே பாதல நின்று போந்து
மன்னல நனிவி ராய மருத்துவி ருதியைச் சார்ந்து
தொன்னல மமைந்த முக்கட் சோதியை யாங்குப் போற்றி. 123

கு - ரை: பன்னக வேந்தன் - ஆதிசேடன்: பன்னகம் - பாம்பு. வல்லே - விரைவாக. மன் நலம் நனி விராய - நிலைபெற்ற நன்மைகள் மிக்க. மருத்து விருதி - அமுதகடேசம்.

முந்துதான் பதிட்டை செய்த விலிங்கத்தின் முன்பு மேவி
நந்துபே ரன்பிற் போற்றி நாடுமவ் விலிங்க மேல்பால்
உந்துமோர் தீர்த்தந் தொட்டு மற்றதி னுவந்து மூழ்கி
வந்துதே ருணவாக் கொள்வோன் வைகலும் பூசிப் பானுல். 124

கு - ரை: தான் பதிட்டை செய்த இலிங்கம் - காரோணத்தின் மேல்பால் உள்ள சறுவதீர்த்தத்தின் மேல்பால் இருக்கும் நாகேச்சுரலிங்கம். தீர்த்தம் தொட்டு - தீர்த்தத்தை உண்டாக்கி: தொட்டு - தோண்டி. வந்து தேர் உணவா - காற்றைத் தேர்ந்த உணவாக; காற்றுகிய தேரை உணவாக எனினுமாம். வந்து - காற்று. காற்று பாம்புக்கு ஆகாரம்; அதனுற் பாம்பிற்கு வாதாசனம் என்பதொரு பெயருண்டு: "வாதா சனச்சயன ாராம

வெற்பிறைவர்'' (அழகர் கலம்பகம்), ''வாயு வான பஞ்சடைத்து மாயோன் துயிலு மலரணையே'' (செவ்வந்திப் - திருமலைச்), ''அரி யுண்ணும்'' தனிப் பாடல், "மணியுடைநும் பூணுணவு மாற்றம் விரத, நணரியனகொ றென்ற னடுக்கும்'' (திருவிடைமருதூருலா - 316). உணவாக் கொள்வோன் - ஆதிசேடன். வைகலும் - நாடோறும்.

குடந்தையே யாதி யாகக் குறிக்கொளுந் தலங்க ளுன்குந்
தடந்தைதா மரைமுன் னுய°தண்மல ராதி கொண்டு
விடந்தைவா ளெயிற்று நாகர் வேந்தனோர் கால நான்கும்
மடந்தையோர் பாகத் தானைப் பூசனை வழாது செய்வான். 125

கு - ரை : குடந்தையே யாதி தலங்கள் நான்கும் - குடந்தைக் கீழ்க் கோட்டம், திருநாகேச்சுரம், திருப்பாம்புரம், நாகபட்டினம் என்பன; நான்கும்: முற்றும்மை. குடந்தை - கும்பகோணம். முன்னுய - முதலாக வுள்ள. ஓர் காலம் நான்கும் - காலை, நண்பகல், மாலை, அத்தயாமம் ஆகிய நான்கு காலங்களிலும். நாகர் வேந்தன் - ஆதிசேடன். தடம் தை தாமரை. விடம் தை வாள் எயிறு.

குடமதி யபர பக்கஞ் சதுர்த்தசி கூடு நாளில்
நடநவில் பரனைப் பூசை செய்தற்கு நயந்தான் போல
மடனிகு கதிரோன் மேலை வார்கடற் புனல்ப டிந்தான்
விடனம ரெயிற்று நாகர் வேந்தனு நன்னீர் தோய்ந்தான். 126

கு - ரை : குடமதி - மாசிமாதம்: குடம் - கும்பம். அபரபக்கம் - தேய்பிறை. மாசி சதுர்த்தசி - மகாசிவராத்திரி நாள். நடம் நவில் பரன் - பஞ்சகிருத்திய நடனத்தைச் செய்யும் சிவபெருமான். நயந்தான் போல - விரும்பினவனைப் போன்று. மடன் இகு கதிரோன் - சூரியன். படிந்தான் - மூழ்கினன்; அத்தமித்தான் என்றபடி. விடன் அமர் எயிறு - நஞ்சு பொருந் திய பற்கள்: 'விடந்தைவா ளெயிற்று நாகர் வேந்தன்' என்முர் முன்னும்.

நிலவிய முதல்யா மத்து நிறைமல ராதி கொண்டு
கலவிய வன்பர் நெஞ்சங் கழன்றிடாக் கருணை வாழ்வை
உலவிய கயற்க ணாளை யொருபுறங் கொண்ட கோவைக்
குலவிய குடந்தைக் கீழைக் கோட்டத்திற் பூசித் தானே. 127

கு - ரை : கலவிய - கலந்த. கழன்றிடா - நீங்காத. கயற்கணாளை - உமாதேவியாரை. கீழைக் கோட்டம் - கீழைக் கோயில் என்றது நாகேசுர சுவாமி கோயில். மகாசிவராத்திரி முதற்காலத்தில் கீழைக்கோட்டத்திலே பூசித்தான்.

அடுத்தவோ ரிரண்டாம் யாமத் தமையுப கரணங் கொண்டு
மடுத்தபே ரன்பு பொங்க மலவிரு ளனுக்குந் தெவ்வைக்
கெடுத்தவைம் பொறியார் வாழ்வைக் கேடிலா முதலை விண்ணாங்
கடுத்தபல் வளஞ்சால் சண்ப கவனத்திற் பூசித் தானே. 128

கு-ரை: இரண்டாம் யாமத்திலே உரிய பூசாத்திரவியங்களைக் கொண்டு பூசித்தான். மடுத்த-தேக்கிய, நிறைந்த. மல இருள் அனுக்கும்-ஆணவமலமாகிய இருளைக்கெடுக்கும். ஆணவமலம் இருள்மலம் என்றும் சொல்லப்படும். தெவ்-பகை: தெவ்வை-பகைவரை என்றது ஞான சொரூபரை என்க. கெடுத்த ஐம்பொறியார் - உட்புலன்கள் ஐந்தையும் கெடுத்து வென்றி கொண்டோர்; ஐம்புலன் வழியேசென்று அழிதன் மாலையவாம் விடயங்களை மெய்யென்று கருதாது அவற்றைப் பொய்யென்று களைந்தோராகிய பெரியோர்: "வென்றுளே புலன்களைந்தார்" என்றபடி; "பொறிவாயி லைந்தவித்தார்". வாழ்வை-வாழ்வாகவுள்ளவரை. கேடு இலா முதல்-அழிவில்லாத முழுமுதற்கடவுள். விண்ணம் கடுத்த-தேவருலகத்தை யொத்த.

உறவரு மூன்றும் யாமத் துபகர ணங்கைக் கொண்டு
மறவரு மன்பி லெங்கண் மாசிலா மணியைப் பாசந்
தெறவரு முதலை மேலாஞ் சின்மயப் பொருளை வானத்
தறவரும் புகழ்தி ருப்பாம் புரத்திடை யருச்சித் தானே. 129

கு-ரை: மூன்றும் யாமத்திலே திருப்பாம்புரத்திடைப் பூசித்தான். பாசம் தெற வரு முதல்-பாசத்தை அழிக்கவல்ல முதல்வர். சின்மயப் பொருள்-ஞானமயமாகிய பரம்பொருள். வானத்து அறவர் - விண்ணுலக முனிவர்: தெய்வ இருடிகள்.

எண்ணிய நாலாம் யாமத் தியைபல பொருளுங் கொண்டு
தண்ணிய நேயம் பொங்கச் சார்ந்தவர் தமைவாழ் விக்கும்
புண்ணிய முதலை மேலாம் பூரணப் பொருளை யாருங்
கண்ணிய வரங்க ணல்குங் காரோணத் தருச்சித் தானே. 130

கு-ரை: நாலாம் யாமத்தில் காரோணத்தில் அருச்சித்தான். தண்ணிய நேயம்-குளிர்ந்த அன்பு. சார்ந்தவர்தமை வாழ்வித்தல்: "தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானை" (தேவா). பூரணப் பொருள்-நிறைந்து விளங்கும் பொருள். கண்ணிய-கருதிய.

முதற்சாமத்தில் பஞ்சகவ்விய அபிடேகமும், இரண்டாம் சாமத்தில் பஞ்சாமிர்த அபிடேகமும், மூன்றும் சாமத்தில் தேன் அபிடேகமும், நான்காம் சாமத்தில் கருப்பஞ்சாறு அபிடேகமும் சிறந்தன எனக் காரண ஆகமம் கூறும்.

கோசலம் தயிர் பால் நெய் கோமயம் என்பன பஞ்சகவ்வியமாம். தேன் சர்க்கரை தயிர் பால் நெய் என்பன ஐந்தமிர்தமாம்; இதனைப் பஞ்ச கவ்வியம்போலத் தனித்தனியே தாபித்துப் பூசித்து அபிடேகித்தல்வேண்டும் என ஆகமங்கள் கூறுவன.

முதற்சாமத்தில் சந்தனம், இரண்டாம் சாமத்தில் அகில், மூன்றும் சாமத்தில் பச்சைக்கருப்பூரம், நான்காம் சாமத்தில் குங்குமப்பூ என்பன திரு மேனியில் குளிரும்படிச் சாத்த வேண்டும்.

வில்வம் முதற்சாமம், தாமரைப்பூ இரண்டாம் சாமம், சாதிமலர் மூன்றும் சாமம், நந்தியாவட்டம் நான்காம் சாமங்களில் முறையே சாத்த வேண்டும் எனச் சிறந்த சித்தாகமம் கூறும்.

முதற்சாமத்தில் தாமரை, இரண்டாம் சாமத்தில் துளசி, மூன்றும் சாமத்தில் முத்தளமுள்ள வில்வம், நான்காம் சாமத்தில் நீலோற்பல மலர் சாத்த வேண்டும் என்று காரண ஆகமம் கூறும்.

நிவேதனம் : முற்கான்னம், பாயசான்னம், திலான்னம், சுத்தான்னம் என்பவைகளை முறையே நான்கு சாமங்களினும் நிவேதனம் செய்ய வேண்டும்.

பூசையிவ் வாறு செய்யும் புண்ணியச் சேடன் காண
ஆசைகொ ளரையெம் பெம்மா னவ்விலிங் கத்தி னின்றும்
ஓசைகொள் கருவி யைந்து முயர்ந்துவா னகத்தி யம்ப
ஈசையு மொருபான் மேவ விடபவா கனனுய்த் தோன்றி. 131

கு - ரை : புண்ணியச் சேடன் - சிவபுண்ணியமிக்க ஆதிசேடன். ஆசை கொள் அரை - திக்கை ஆடையாகக் கொண்ட இடை: ஆசை - திக்கு. அரை - இடை. கருவி ஐந்து - பஞ்ச துந்துபி வாத்தியங்கள். வானகம் - விண். ஈசை - அம்பிகை.

கந்தரு நாப்பண் மேவக் கயிலைமால் வரையோ டெய்தும்
அந்தமில் காட்சி யீதென் றமரர்பூ மாரி தூர்ப்பப்
பந்தமின் முனிவர் பெய்கட் பனிப்புன லவற்றை யீர்ப்ப
அந்தமி லடியர் மற்றோ ரரகர கரவென் றார்ப்ப. 132

கு - ரை : கந்து அரு நாப்பண் - இலிங்கமூர்த்தியின் நடுவிடத்தில். பெய் கண் பனிப்புனல் - கண்ணீர். அடியர் அர கர கர் என்று ஆர்ப்ப: ஆர்ப்ப - முழக்கஞ்செய்ய. ஈர்ப்ப - இழுக்க. அந்தம் இல் - முடிவில்லாத. அடியரும் மற்றோரும் ஆர்ப்ப.

நந்திமுற் கணங்க ளெல்லா நகுகரந் தலைமேற் கூப்பி
முந்திநின் றிறைஞ்சல் செய்ய முடிமிசைப் பிறைவி ளங்க
வந்தியர் புகழ்ந்து நிற்ப மாமறை யனைத்தும் வாழ்த்தத்
தந்தியாழ் வல்லோர் பாடத் தவாப்பெருங் காட்சி தந்தான். 133

கு - ரை: நகு கரம் - விளங்கும் கைகளை. வந்தியர் - புகழ் பாடுவோர். தந்தி யாழ் - நரம்புகளையுடைய யாழ். தவா - நீங்காத.

காட்சிதந் தருள லோடுங் கட்செவி நாகர் கோமான்
மீட்சியி னேயம் பொங்க விரைந்தெழுந் துவந்து சூழ்ந்து
மாட்சியிற் பணிந்தெ ழுந்து வள்ளற னெதிரே நின்றான்
ஆட்சியிற் சிறந்த வம்பான் வேண்டுவ வறைதி யென்றான். 134

கு - ரை: கட்செவி - பாம்பு. மீட்சி இல் நேயம் பொங்க - மீளுதல் இல்லாத அன்பு மிக. எழுந்து, உவந்து, சூழ்ந்து: சூழ்ந்து - வலம் வந்து. வள்ளல் - சிவபெருமான். வேண்டுவ - வேண்டும் வரங்கள்.

கன்றுமான் மழுக்கை யாய்நின் காட்சியின் விசேட மாய
தொன்றுமின் றேனும் வேட்கை யுரைக்குவ லவையா வென்னில்
என்றுமிந் நகர மென்பே ரினிதுறப் பூணல் வேண்டும்
நன்றுபஃ றிருவு நாட்கு நாளுயர்ந் திடவும் வேண்டும். 135

கு - ரை: கன்று மான் மழு கையாய் - மான்கன்றையும் மழுவாயுதத்தையும் ஏந்திய கையை உடையவரே. காட்சியின் விசேடமாயது - தேவரீரைத் தரிசித்திருத்தலினும் மேம்பட்டது. வேட்கை - என் விருப்பம்; வேணவா. ‘இந்த நகரம் என் பெயரோடு கூடி விளங்கவேண்டும். மிகவும் பலவகைப்பட்ட செல்வங்களும் நாளுக்குநாள் பெருக உண்டாகவேண்டும்’.

இந்தமா விலிங்க நீங்கா தென்றுநீ பொலிதல் வேண்டும்
சந்தவிவ் விலிங்கத் தோடு தீர்த்தமு மென்பேர் தாங்கிப்
பந்தம தொழித்த லோடு வேண்டுவ பயத்தல் வேண்டும்
அந்தமில் புனல்யா றென்றிங் கணைந்தாழி கலத்தல் வேண்டும்.

கு - ரை: இந்த இலிங்கமூர்த்தியில் என்றும் தேவரீர் நீங்காமல் விளங்கியிருத்தல் வேண்டும். சந்தம் - அழகு. இலிங்கமும் தீர்த்தமும் என் பெயருடன் கூடியிருந்து பாசபந்தங்களை ஒழித்தலுடன் வேண்டிய வரங்களையும் தந்தருளவேண்டும். பந்தம் - கட்டு, தளை. அந்தம் இல் புனல் யாறு - நீங்குதலில்லாத நீரையுடைய ஆறு. ஆழி - கடல்.

இத்துணை வரங்க ளன்றி யின்னுமொன் றிரப்ப துண்டான்
முத்துணை முறுவல் பாக வுடம்பொடு முயங்கும் வாழ்வில்
அத்துணை யாசை யில்லை யடியனேற் கென்று மானந்
தத்துணை யாக நின்பொற் ருட்கலப் புறுத்தல் வேண்டும். 137

கு - ரை : இத்துணை - இவ்வளவு. முத்து உள் நை முறுவல் - முத்துக்கள் உள்ளே நினைந்து வருந்தும் பற்களையுடைய உமாதேவியார்; முறுவல்: அன்மொழித்தொகை. அத்துணை - அவ்வளவு. முயங்கும் - கலக்கும். ஆனந்தம் துணையாக.

இவையரு ளென்று தாழ இமையவர் மயனைக் கொண்டு
சிவையொரு பாகத் தம்மான் றிருநகர் பெரிதாக் கண்டு
குவைமணி செம்பொ னுதிப் பொருளெலாங் குவியச் செய்து
நவையற யாரு நாக நகரெனப் புகல்க வென்று. 138

கு - ரை : இமையவர் மயன் - தெய்வத்தச்சன். சிவை - அம்பிகை. குவை - குவியல். நவையற - குற்றமில்லாமல். நாகநகர் - நாகபட்டினம். புகல்க - சொல்லக்கடவர்.

கண்மலர்ப் பொழில்சூழ் நாகைக் காரோண நகர்க்கு மேல்பால்
எண்மல ரளவை கூறி னிரண்டியோ சனையி னின்றும்
விண்மலர் நதியு நாண விளங்கொரு குடிஞை தோற்றித்
தண்மலர் திருக்கா வேரிக் காதியிற் சமைத்த வாற்ருல். 139

கு - ரை : கள் மலர்ப் பொழில்: கள் - தேன். பொழில் - சோலை. எண் மலர் அளவை - எண்ணத்தில் தோன்றும் அளவு; இரண்டு யோசனை தூரம். விண்மலர் நதி - ஆகாயகங்கை. குடிஞை - ஆறு. காவேரிக்கு ஆதியில் - காவேரிநதி தோன்று முன்னமே.

விருத்தகா வேரி யென்று விளங்கவோர் நாமஞ் சாற்றித்
திருத்தவா தியிற்சு ருக்கி வரவர விரியச் செய்து
மருத்தபூம் பொழில்சூ ராரூர்த் தென்றிசை வழியி யக்கிப்
பொருத்தமாம் புணரி மேவிப் புனிதஞ்செய் திடச்செய் தானே. 140

கு - ரை : விருத்த காவேரி. ஆதியில் சுருக்கி - தொடக்கத்தில் சுருங்கிய அளவாக. ஆரூரின் தெற்குத் திசையின் வழியாகப் போகச்செய்து. புணரி - கடல். புனிதம் - பரிசுத்தம்.

மற்றவை யனைத்து நல்கி மறைந்தன னிறைந்த சோதி
பற்றறு நாகர் வேந்தன் பரனடி கலந்து வாழ்ந்தான்
கொற்றவிண் ணவர்க ளெல்லாங் குவிமலர் மாரி தூர்த்தார்
அற்றமி லனைய தான மடுத்தவர்க் கனைத்து நல்கும். 141

கு - ரை : நிறைந்த சோதி - சிவபெருமான். நாகர் வேந்தன் - ஆதி சேடன். அற்றம் இல் - சோர்வில்லாத. அணைய தானம் - அந்தத் தலம்.

பன்னக வேந்தன் பெற்ற பண்புசால் பேறு நோக்கி
நன்னர்வா சுகிய டைந்நந் நாகதீர்த் தத்தின் மூழ்கிப்
பொன்னவி ரதற்குக் கீழ்பாற் சிவலிங்க நிறுவிப் போற்றித்
தன்னமர் நாமஞ் சூட்டிச் சாலோக மெய்தி வாழ்ந்தான். 142

கு - ரை : பன்னக வேந்தன் - நாகர் வேந்து; வாசுகி என்னும் பாம்பு. பொன் அவிர் - அழகு விளங்கும். நிறுவி - பதிட்டைசெய்து. தன் அமர் நாமம் - வாசுகி லிங்கம்.

கறையணச் சங்க பால னத்தடங் கலந்து மூழ்கி
நிறையுமத் தடத்து மேல்பாற் சிவலிங்க நிறுவிப் போற்றி
முறைமையிற் றன்பேர் நாட்டி வாசுகி முயன்று பெற்ற
மறைதலில் பேறு பெற்று வாய்ந்தினி திருந்தான் மன்னே. 143

கு - ரை : சங்கபாலன் என்னும் பாம்பு. வாசுகி பெற்ற பேறு - சாலோகபதம்.

குளிகனென் பவனு மந்நீர்க் குறுகுபு விதியி னாடி
அளிகிள ரணைய தீர்த்தத் தமைவட கரையின் கண்ணே
தெளிதரத் தன்பே ராலோர் சிவக்குறி நிறுவிப் போற்றி
இளிவறச் சங்க பாலன் பெற்றபே றெய்தி வாழ்ந்தான். 144

கு - ரை : குளிகன் என்னும் பாம்பும் சிவலிங்கம் தாபித்துப் பூசித்துச் சாலோகம் பெற்றது.

இன்னுமத் தீர்த்த மூழ்கி யிருஞ்சிவக் குறிபூ சித்து
மன்னும்வண் சிவசா லோக முதலிய மருவி வாழ்ந்த
பன்னுபன் னகங்கள் பல்ல பாரினும் விசும்பின் கண்ணுந்
துன்னுபல் லோர்கண் மூழ்கித் துயரொழிந் தின்புற் றூரால். 145

கு - ரை : அத்தீர்த்தம் - நாகதீர்த்தம். மன்னும் - நிலைபெற்ற. பன்னகங்கள் - பாம்புகள். பல்ல - அனேகமுள. பார் - நிலவுலகம். விசும்பு - விண்ணுலகம். துயர் ஒழிந்து - துன்பம் நீங்கி.

நாகமா நகர நண்ணி நாகதீர்த் தத்தின் மூழ்கி
நாகநா தரைக்கண் டேத்து நல்லவ ரானர் மண்மேல்
நாகவாய் விடஞ்செய் துன்ப நண்ணிடார் சிறிது மென்று
நாகநாட் டவர்கொண் டாட நலம்பொலிந் தமர்வ ரன்றே. 146

கு - ரை : நாக மாநகரம் - நாகபட்டினம். நாகநாதர் - நாகங்களால் பூசிக்கப்பட்ட சிவபெருமான். நாக வாய்விடம் செய் துன்பம் - பாம்பின் விடத்தால் உண்டாகும் துன்பம். நண்ணிடார் - பொருந்தமாட்டார். எனவே, பாம்பின் விடத்தால் துன்பமடையார் என்றபடி. நாகநாட்டவர் - விண்ணோர்.

பணியர சிறைஞ்ச நாலாம் பதமினி தருளிச் செய்த
மணிமருள் கண்ட நாக நாதர்தம் வரவு சொற்றுங்
கணிதமி லருளான் மிக்குக் கலந்தவர்க் கின்பஞ் செய்யும்
மணிகிளர் கார்மு கேசர் வரவினி யறைவா மன்றே. 147

கு - ரை : பணி யரசு - பாம்புகளுக்கு அரசனாகிய ஆதிசேடன். நாலாம்பதம் - சாயுச்சியம். மணி - நீலமணி. மணிமருள் கண்டம் - நீல கண்டம். கணிதம் இல் - அளவில்லாத. கலந்தவர்க்கு - அடைந்தோருக்கு. கார்முகேசர் வரலாறும் இனிச் சொல்லுவோம்.

நாகநாதப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1267

இருபதாவது

கார்முகேசப்படலம்

சாது நந்தி நாதெொழுக், கோது தீர்கு மாரன்ரு
மோது கார்மு கேசன்சீர், ஓது கென்ன ஓதுவான். 1

கு - ரை: சாதுநந்தி - சத்துவ குணமிக்க திருநந்தி தேவர். கோது தீர் குமாரன் - சனற்குமார முனிவர்: கோது - குற்றம். சீர் - பெருமை.

மிக்க மாத வச்சம, தக்கி னிப்பெ யரினுன்
தக்க காதன் மனைவிசொல், லிக்க வாவி ரேணுகை. 2

கு - ரை: மாதவச் சமதக்கினி - பெரிய தவத்தையுடைய சமதக்கினி முனிவர். சொல் இக்கு அவாவு - சொல்லைக் கரும்பும் விரும்பும். மனைவி இரேணுகை என்பாள்.

திருகு தீரி ருவர்க்கும், பிருகு வார்த்தை பேணிய
கருகு மேனி மாயவ, னுருகு மைந்த னுயினன். 3

கு - ரை: திருகு - மாறுபாடு. இருவர்க்கும் - சமதக்கினி இரேணுகை ஆகிய இருவருக்கும். பிருகு வார்த்தை - பிருகு முனிவன் சாபத்தால். மாயவன் மைந்தன் ஆயினன்; மாயவன் - திருமால். மைந்தன் - புத்திரன்.

பரசி ராம னென்றுபேர், விரசு மாறு மேவுநாள்
அரசு காத்த வீரியன், வரசு மார்க்க மாற்றினுன். 4

கு - ரை: அவன் பெயர் பரசுராமன். விரசுமாறு - பொருந்தும்படி. அரசு கார்த்தவீரியன் - கார்த்தவீரியன் என்னும் அரசன். வர சுமார்க்கம் - மேம்பட்ட நல்ல வழி.

கற்பு மேவி ரேணுகை, பொற்பு நேர்தெ ரிந்துகொண்
டற்பு நெஞ்ச மைத்தனன், வற்பு மேய மன்னவன். 5

கு - ரை: கற்பு மேவு இரேணுகை. பொற்பு - அழகு. அற்பு நெஞ்சு - அன்புடைய நெஞ்சு. வற்பு - வன்மை.

அனைய டன்னை நோக்குமோர், வினைய முள்ளத் தெண்ணுபு
நனையு நீர்கொ ளுந்தடத், தினையு நெஞ்ச னெய்தினன். 6

கு - ரை: அனையள் - இரேணுகை. தன்னை - கார்த்த வீரியனாகிய தன்னை. வினையம் - சூழ்ச்சி. எண்ணுபு - எண்ணி. தடத்து - தடாகத்துக்கு. இனையும் நெஞ்சன் - வருந்திய மனமுடையனாய்.

கூடு சாயை கொள்ளுநீ, ரூடு தோன்ற வானின்றான்
பாடு சால்பெ ரும்பழி, வீடு தீர்ந்த வெய்யனே. 7

கு - ரை: முகக்கும் நீரிலே தன் சாயை தோன்றுமாறு ஆகாயத்தில் நின்றான். நீரூடு - நீரின்கண். வெய்யன் - கொடியோன். சாயை - நிழல்.

அன்ன சாயை நோக்கினா, ளின்ன சாயை மேனியான்
என்ன சாய லானெனாத், தன்ன முள்ளத் துள்ளினாள். 8

கு - ரை: தன்னம் உள்ளத்து உள்ளினாள் - சிறிது மனத்தில் நினைந்தாள்.

வந்த தீங்கு நாடியே, பந்த மேது மில்லவன்
முந்த நீயி வளுயிர், சிந்த மாட்டு கென்றனன். 9

கு - ரை: தீங்கு - கற்பிற்குற்றம். பந்தம் - பற்று. ஏதும் - சிறிதும். முந்த - முற்பட. இவள் - இரேணுகை.

தந்தை சொற்ற லைக்கொடு, நிந்தை வந்து நேர்ந்தது
முந்தை யூழ்மு றையெனச், சிந்தை நொந்து செய்தனன். 10

கு - ரை: தந்தை - சமதக்கினிமுனிவர். முந்தை ஊழ்முறை-முன்னே செய்த ஊழ்வினையின் பயன்.

வனிதை மாய மாய்த்தலு, மினிய செய்தி லானெனாக்
கனிசி னத்து மன்னவன், முனிவ னாவி போக்கினான். 11

கு - ரை: வனிதை - இரேணுகை. கனி சினத்து மன்னவன் - முதிர்ந்த கோபத்தையுடைய கார்த்தவீரியன். முனிவன் ஆவி - சமதக்கினி முனிவனுயிரை.

பெற்ற தூய ரிருவரு, மிற்ற தன்மை யெண்ணிநாள்
அற்ற மன்னன் மேற்பெருஞ், செற்ற மேவி னான்மகன். 12

கு - ரை: பெற்ற தூயர் - தன்னைப் பெற்ற பரிசுத்தராகிய தாய் தந்தையர். நாள் அற்ற மன்னன் - ஆயுள் நீங்கிய அரசன். பெருஞ் செற்றம் - பெருங்கோபம்.

விரசு பாவம் வீக்கவு, முரசு கண்ப டாமுன்றில்
அரசெ லாம ழிக்கவும், பரசி ராம னெண்ணினான். 13

கு - ரை: விரசு பாவம் - பொருந்திய தாய்தந்தையர் கொலைப்பாவம். விக்கவும் - அழிக்கவும். முரசு கண்படா - முரச வாத்தியங்களின் ஒலி உறங்காத; முரசம் மூன்று:- வீரமுரசு, தியாகமுரசு, நியாயமுரசு என்பன; மண முரசுடனே ஏனை இரண்டு முரசு என்பாரு முளர். முன்றில்=இல் முன்; வாயில் என்க. பரசிராமன் சமதக்கினி முனிவர் புதல்வன்.

நாண மேருப் பூட்டுதிண், டோண மாதி மேவுகா
ரோண வூரை யுற்றன, ஞண மேவ கத்தினன். 14

கு - ரை: நாணம் - வில்நாணி, வெட்கம். நாணம் மேவு அகத்தினன். அகம் - மனம்.

பாவ நாசம் பண்ணிடுந், தேவ தீர்த்தந் தோய்ந்துபச்
சோவ மோர்பு றத்துமுக், கோவ னேர்கு றுகினன். 15

கு - ரை: பச்சோவம் - பசிய ஓவியம் போலும் உமாதேவியார். ஓவம்=ஓவியம் - சித்திரம். முக்கோவன் - மூன்று கண்களையுடைய சிவ பெருமான்; காரோண நாதர். கோ - கண்: கோவன் - கண்களையுடையவன்.

முனியு டம்பு தன்னுடம், பினிதி னேற்று மண்ணருள்
கனிவிற் போற்றிக் கைதொழாத், தனிய வன்ற னக்கரோ. 16

கு - ரை: முனி உடம்பு - புண்டரீக முனிவர் உடம்பு. தன் உடம்பு - தன்னுடைய திருமேனி: தன் என்றது சிவபெருமானை. இனிது ஏற்றும் - ஆரோகணம் பண்ணும். கனிவின் - முதிர்ந்த அன்பினுல்.

நிருதி யாசை யிற்புகா, ஒருவி ருத்த காவிரி
அருகி னேர்சி வக்குறி, பெருகு மன்பிற் ருபித்தான். 17

கு - ரை: நிருதி ஆசை - தென்மேற்குத்திசை. விருத்த காவிரியின் அருகில் சிவலிங்கம் பதிட்டைசெய்தான்.

அருகு நாற்ச துரத்தி, னெருத டமுண் டாக்குபு
மரும லர்முன் னுயகொண், டுருகி யன்பிற் பூசிப்பான். 18

கு - ரை: நான்கு சதுரம் - சச்சதுரம். தடம் - தடாகம். மருமலர் முன் ஆய - மணம் பொருந்திய மலர் முதலாகிய உபகரணங்கள்.

மழுவி ராம னின்னணம், பழுதில் பூசை பண்ணுநாள்
வழுவில் கார்மு கமொன்று, தொழுமந் நீருட் டோன்றிற்றே. 19

கு - ரை: மழுவிராமன் - பரசிராமன். கார்முகம் - வில். அந்நீருள் - தான் உண்டாக்கிய அத்தடாக நீரில்.

ஈது தோன்ற லண்ணற, ளுது பேர ருளெனுக்
கோது தீர்கு ணங்கெழு, சா து வாள னெண்ணுழி. 20

கு - ரை : அண்ணல் - சிவபெருமான். அருள் எனு - அருளென்று. கோது - குற்றம். குணம்கெழு - குணமிக்க. சாதுவாளன் - பரசிராமன். எண்ணுழி - எண்ணுமிடத்து.

அலிங்க மைந்த தென்களப், புலிங்க வார ழனுதற்
கலிங்க வாசை யானுமவ், விலிங்க நின்று தோன்றினன். 21

கு - ரை : தென்களம் - அழகிய கண்டம். அல் இங்கு அமைந்த; அல் - இருள். அல் இங்கு அமைந்தது என் களம் எனினுமாம். புலிங்கம் - தீப்பொறி. அழல் நுதல் - நெற்றிக்கண்ணுகிய அக்கினி: அழல் - நெருப்பு. நுதல் - நெற்றி. கலிங்க ஆசையான் - திக்கை ஆடையாகவுள்ளவன்: கலிங்கம் - ஆடை. ஆசை - திக்கு. களத்தையும் நுதலையும் ஆசையையுமுடையனுகிய சிவபெருமான்.

கண்டி ராமன் கைதொழாத், தண்டு போற்ற ரைவிழா
மண்டு மோகை யின்னெழாத், தொண்டு பூண்டு நின்றனன். 22

கு - ரை : இராமன் - பரசிராமன். ஓகை - உவகை. தொண்டு - அடிமைத்திறம்.

உற்ற காத லன்னையைச், செற்ற பாத கந்தவிர்த்
தற்ற மேது மில்லதோர், கொற்ற முங்கொ டுத்தனன். 23

கு - ரை : அன்னையைச் செற்ற பாதகம் - தாய்க்கொலையால் உண்டாகிய பாவம்; "கொலைகளில் கொடுமை சான்ற பார்ப்பனக் கொலைவல் வீரக், கொலைகருக் கொலைதாய் தந்தைக் கொலைக்கவைக் கோட்டு நல்லான், கொலைமுதற் பிறவும் நீங்கும்" (காஞ்சிப்பு - சருவதீர்த்த - 14). தவிர்த்து - நீக்கி. அற்றம் - துன்பம். கொற்றம் - வெற்றி.

தோன்று கார்மு கம்மெடுத், தூன்று மன்ன ராருயிர்
ஏன்று மாய்த்தி யென்றுகண், மூன்று ளான்ம றைந்தனன். 24

கு - ரை : கார்முகம் - வில். ஊன்றும் மன்னர் - நிலைபெற்ற அரசர். ஏன்று மாய்த்தி - எதிர்த்து அழிப்பாய்.

சொற்ற வாறு கார்முகம், பெற்ற கைய னுயவன்
கொற்ற மன்ன ராருயிர், முற்ற மாய்த்து வாழ்ந்தனன். 25

கு - ரை : சொற்றவாறு-சிவபெருமான் அருளியபடி. கைய னுயவன்: கையனுய் அவன் - கையையுடையவனுய் அப்பாசிராமன். கையன் ஆயவன் -

தாய்க் கொலை செய்தவனுகிய கீழ்மகன்; கொலைபாதகன் என்ற குறிப்பும் காண்க. கை - ஒழுக்கம்; ஒழுக்கமுடையோன் எனினுமாம். முற்றமாய்த்து - முழுவதும் அழித்து.

மருவு கார்மு கப்பெயர்ப், பொருவி லாத தீர்த்தமும்
பெருகு சீரி லிங்கமும், ஒருவு ருமலூற்றன. 26

கு - ரை : கார்முக தீர்த்தம்; கார்முகேசர். மருவு - பொருந்திய. ஒருவுருமல் - நீங்காமல்.

ஏர்த்த மேன்மைக் கார்முகத், தீர்த்தந் தோய்ந்தெ மூபவர்
பார்த்த திக்கி னும்புகா, ஆர்த்த பாத கங்களே. 27

கு - ரை : ஏர்த்த - அழகிய. தோய்ந்து - முழுகி. பார்த்த திக்கினும் - பார்த்த திசையிலும். ஆர்த்த - பற்றிக்கொண்ட; பற்றி நின்ற என்றபடி. "பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்" (திருத்தாண்டகம்). பாதகம் - பாவம். பாதகங்கள் புகா என்க.

அரிய கார்மு கேசன்ருள், பிரிய மாகப் போற்றுவார்
கரிய மாலு மெய்தரும், பெரிய பேறு பெறுவரே. 28

கு - ரை : கார்முகேசன் - பரசிராமனுல் தாபிக்கப்பட்ட சிவலிங்கம். மாலும் எய்த அரும் பெரிய பேறு.

வந்த கார்மு கேசர்சீர், நந்த நாமு ரைத்தனஞ்
சுந்த ரவி டங்கர்சீ, ருந்த கத்தெ ரித்துமால். 29

கு - ரை : சீர் நந்த - பெருமையை மிகுதியாக. சுந்தரவிடங்கர் - அழகிய விடங்கர். சீரும்; தக - தகுதியாக.

கார்முகேசப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1296

இருபத்தொன்ருவது

சுந்தரவிடங்கப்படலம்

அந்தி வெண்பிறை மிலைச்சிய பெருமா
னருளி ஞகம முழுதுநன் குணர்ந்த
நந்தி யெம்பிரான் றிருவடி வணங்கி
நலங்கெ ழுஞ்சனற் குமாரமா முனிவன்
கந்தி தென்னையி னுயர்ந்தகா ரோணக்
கடிந கர்ப்பெருஞ் சுந்தர விடங்கர்
புந்தி செய்யுநன் மான்மிய முணரப்
புகலு வாயெனப் புகலுவ தானுன். 1

கு - ரை : அருளின் - அருளினுல். ஆகமம் முழுதும் - இருபத்தெட்டு ஆகமங்களும், உபாகமங்களும் ஆகிய எல்லாம். நலம் கெழும் - சிவஞான நலமிக்க. கந்தி - கமுகு. தென்னையின்: இன் ஐந்தாவது ஒப்புப் பொருள். கடிநகர் - காவலோடுகூடிய நகர். சுந்தரவிடங்கர் - இத்தலத்துச் சோமாஸ்கந்தர்.

ஆதி யாகிய சிருட்டியின் மாயோ னழகி தாவொரு மகப்பெறவேண்டிப்
பாதி மாமதி சூடிய பரமன் பண்பு சான்றமூர்த் தங்களுட் கரிசு
காதி நன்மக வளித்திடு சோமாக் கந்த மூர்த்தத்தை யமரர்கம் மியனுற்
சோதி மேவுறப் புரிந்துபூ சித்துச் சுந்த ரந்திகழ் காமனைப் பெற்ருன். 2

கு - ரை : ஆதியாகிய சிருட்டி - முதற்படைப்பு. மாயோன் - திருமால். பரமன் - சிவபெருமான். பண்பு சான்ற மூர்த்தங்களுள் - திருவருட்குண மிக்க மாகேசுர மூர்த்தங்கள் இருபத்தைந்தனுள்ளே. கரிசு காதி-குற்றங்களை ஒழித்து. அமரர் கம்மியன் - தெய்வத்தச்சன். சோதிமேவுற - சோதிப் பிழம்பு பொருந்த. சுந்தரம் - அழகு. காமன் - மன்மதன்.

அன்ன காலையி னவுணர்கள் பல்லோ
ரமரர் நாட்டினை வளைந்தம ராடப்
பொன்ன கர்க்கிறை வச்சிர மேந்திப்
பொருதும் வென்றிலன் பாற்கட லடைந்து

பன்ன கத்திடைத் துயில்பவற் குணர்த்தப்
    பைந்து ழாய்த்தொடை யணையனு மெண்ணி
நன்ன ரத்தகு மூர்த்தியைக் கொடுத்துன்
    னகரிற் பூசனை புரியென விடுத்தான். 3

கு - ரை: அமர் ஆட - போர்புரிய. பொன் நகர்க்கு இறை - தேவேந்திரன். பொருதும் - போர்செய்தும். பன்னகம் - பாம்பு; ஆதிசேடன். துயில்பவன் - யோக நித்திரை செய்யும் திருமால். அத்தகு மூர்த்தி - சோமாஸ்கந்தர்.

அந்த மூர்த்தியைத் தன்னக ரிருத்தி
    யான்ற பூசனை புரிந்துபல் லவுணர்
சிந்த வென்றனன் வலனெனு மவுணன்
    செயிர்த்தெ ழுந்தனன் றிகழுமச் சோமாக்
கந்த நம்பிரான் றிருவருள் பெற்றுக்
    கதிர்க்கு லத்திகன் முசுகுந்தற் கொண்டு
முந்த வென்றனன் மகிழ்ந்தம்மூர்த் தியையம்
    முசுகுந் தன்கொளக் கொடுத்தனன் மகவான். 4

கு - ரை: ஆன்ற பூசனை - விதிப்படியான வழிபாடு. ஆன்ற - அகன்ற; விரிவான என்றபடி. சிந்த - அழிய. செயிர்த்து - கோபித்து. கதிர்க்குலம் - சூரியகுலம். இகல் - வலிய. அம்மூர்த்தியை - திருமால் தனக்குக் கொடுத்த சோமாஸ்கந்தமூர்த்தியை. மகவான் - நூறு அசுவமேத யாகங்களைச் செய்தவனுகிய இந்திரன்; மகம் - யாகம்.

மேய மூர்த்தியை மிகுபெருஞ் சிறப்பின்
    விமானத் தேற்றுபு முசுகுந்த னென்பான்
பாய வைவகை யியங்களு மியம்பப்
    பாரெ லாங்களி சிறந்திடக் கொடுவந்
தேய பல்வளப் பெருந்திரு வாரூ
    ரிணையி லாலயஞ் செய்துதா பித்து
நேய மிக்குறப் பூசனை புரிந்து
    நிகரி லாதபே ரின்பத்திற் றிளைத்தான். 5

கு - ரை: பாய ஐவகை இயங்கள் - பரவியுள்ள ஐந்து வகையான வாத்தியங்கள். பார் - பூமி; திருவாரூரில். இணையில் - ஒப்பில்லாத. தாபித்து - பதிட்டை செய்து. நேயம் மிக்குற - அன்பு மிகுதியாகப்பொருந்த. முசுகுந்த சக்கரவர்த்தி வைவச்சுத கற்பத்தில் மாசிமாதத்தில் அத்த நட்சத்திரத்தில் திருவாரூரிலே ஸ்ரீ தியாகேசரைத் தாபனம் செய்து திருவிழாச் செய்தனர். (கமலா - சோமா - 28; திருவாரூர்ப்பு - தியாகராச - 234).

அடுத்த தாகிய சிருட்டியி லிறையா
ருறு தத்துவத் திரண்மலங் கவரப்
படுத்த தாகிய வறிவொழித் துயிர்கள்
பலவு நன்கெடுத் தாளுதற் பொருட்டே
மடுத்த தாகிய கருணையின் மலர்மேல்
வைகு வான்முதல் யாரையும் படைத்தான்
எடுத்த தாகிய வச்சிருட் டியினு
மிலக முன்புபோற் றோன்றிய மாயோன். 6

கு - ரை : ஆருறு தத்துவத்திரள் - முப்பத்தாறு தத்துவங்களின் கூட்டம். மலம் கவர - ஆணவமலம் கவர்ந்துகொள்ள. மலர்மேல் வைகுவான் - பிரமன். இலக - விளங்க.

பொறியொ டுங்கலப் புற்றுவாழ் நாளிற்
புதல்வ னின்மையை மனத்துறக் குறித்து
நெறித ரும்பிறங் கடையிலா வாழ்க்கை
நீச வாழ்க்கையி னிழிந்ததென் றிழித்துக்
குறிகொ ணான்மகப் பெறுவது கருதிக்
கூடு மாதவம் புரிந்துபன் முனிவர்
செறித ரும்பெரு நைமிசத் தடைந்தான்
செய்ய தாமரைத் திருமக ளோடும். 7

கு - ரை : பொறி - இலக்குமி. பிறங்கடை - புத்திரன். செய்யதாமரை- சிவந்ததாமரை. திருமகளோடும் மாயோன் நைமிசத்தடைந்தான்.

அந்த மாவனத் தொருசிவ கோச மன்பு மேவுறப் பிரதிட்டை செய்து
சந்த மாமல ராதிகள் கொண்டு தவாம லாயிர மாண்டுபூ சிக்க
நந்த மாரருட் கடலுள மிரங்கி நாடு மாயவன் விழியெதிர் சோமாக்
கந்த மூர்த்தத்திற் காட்சிதந் தருளக் கண்டு மாயவ னெழுந்தடி
[பணிந்தான். 8

கு - ரை : சிவகோசம் - சிவலிங்கம். சந்தம் - அழகு, சந்தனம். தவாமல் - நீங்காமல். நந்தம் ஆரருட்கடல் - சிவபெருமான். சோமாக் கந்தர் ஸ: உமா ஸ்கந்தர்; கந்த மூர்த்தியும் உமாதேவியும் சிவபிரானும் சேர்ந்துள்ள ஒருவடிவம். இதனை,

"அடலிற் கொதிக்கும் படைஆழி அண்ணல் முதலோர் ஏத்தெடுப்பத்
தடவுச் சீயப் பிடர்த்தலையிற் கவினும் மணிப்பூந் தவிசும்பர்க்
கடவுட் பிராட்டி உடங்கிருப்பக் கதிர்வேற் காளை நள்ளிருப்ப
நடலைப் பிறவி மருந்தாகி வைகும் நாதன் திருவுருவம்".

— காஞ்சிப்பு - சிவபுண்ணிய - 7.

" சிங்கஞ் சுமந்த செழுமணித் தவிசிற்
கங்குலும் பகலும் கலந்தினி திருந்தாங்(கு)
இடம்வலம் பொலிந்த இறைவியும் நீயும்
நடுவண் வைகும் நாகிளங் குழவியை."

— திருவாரூர் - நான்மணி - 5.

என்றது காண்க.

பணிந்த மாயனைப் பரம்பர னோக்கிப்
பசுந்து ழாய்நறும் படலைமார் புடையாய்
துணிந்த நின்கருத் தெவனுரை யென்னத்
தூய மால்மறு வலும்பணிந் தெழுந்து
தணிந்த யோகியர் உளத்தொளி யாய
சம்பு வேநின தருளினுற் புலவ
ரணிந்த செல்வமிக் குடையவ னுனே
னுயி னுங்குறை யொன்றுள தைய. 9

கு - ரை : பரம்பரன் - சிவபெருமான். படலை - தழை விரவித் தொடுத்தமாலை. மறுவலும் - மறுபடியும். தணிந்த யோகியர். அடங்கிய உள்ளத்தையுடைய யோகிகள். சம்பு - சுகத்துக்கு இருப்பிடமாயுள்ளவர். புலவர் - தேவர், வித்துவான்கள்.

அருளி லாப்பெருந் தவமுநின் னடிக்க
ணன்பி லாப்பெரும் பூசையும் போலாம்
பொருளி லாமனை வாழ்க்கையென் றோதிப்
புனத்து ழாயணி நாரண னிரப்பத்
தெருளி லாமனத் தடைதராப் பெருமா
னன்ன தாகெனத் திருவுளஞ் செய்தான்
வெருளி லாமனத் துவப்படைந் தனன்மால்
விமல நாயகி சிறிதுகண் சிவந்தாள். 10

கு - ரை : அருளில்லாத தவமும், திருவடிப் பற்றில்லாத பூசையும், சந்ததியில்லாத மனைவாழ்க்கையும் பயனதராது என்றபடி. பொருளிலா மனை வாழ்க்கை - சந்ததியில்லாத இல்லறவாழ்வு: பொருள் - சந்ததி; "தம் பொருள் என்பதம் மக்கள்" (குறள் - 63); "மக்களின் ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை" (நான்மணிக் - 55). தெருள் இலா மனம் - தெளிவில்லாத உள்ளம். அன்னது ஆகுக என - புத்திரப்பேறு உண்டாவதாக என்று. அன்னது - நீ வேண்டியிரந்த பொருள். விமலநாயகி - உமாதேவியார்.

முனைவ லத்துயர் சக்கரப் படையாய்
முக்கண் மூர்த்தியை வணங்கினை யன்றி
எனைம தித்திலை வணங்கிலை யதனு
லெய்து மைந்தன்மற் றவனெரி விழியாற்
கனைக டற்புவி யிழிப்பநீ ருகிக்
கழிக வென்றுரை யாடுபு மறைந்தாள்
நனைம லர்ப்பசுங் கடுக்கையா னேடு
நவின்ற சொற்செவிப் புகுதலு நடுங்கி. 11

கு - ரை: முனை வலத்து உயர் - போர்முனையில் வெற்றியினல் உயர்ந்த. மற்று: வினைமாற்றின்கண் வந்தது. அவன் - முக்கண்மூர்த்தி. உரையாடுபு - சொல்லி. நனை - அரும்பு. கடுக்கை - கொன்றை.

யாது செய்குவ தினியிதற் கந்தோ
வெழின்ம கப்பயந் திழந்திடு வதினு
மோது மற்றஃ திலாதிருப் பதுவே
யோங்கு முத்தம மாகுமா யிடினு
மீது செய்தருள் பெறுவனென் றுள்ளத்
தெண்ணி விச்சுவ கன்மனைக் கூவி
மாது பாகன்முன் காட்சிதந் தளித்த
வண்ண மோருருத் தருகெனப் புகன்ருன். 12

கு - ரை: மகப் பயந்து - மகவைப்பெற்று. அஃது - புத்திரப்பேறு. விச்சுவகன்மன் - தேவதச்சன். உருத் தருக - வடிவம் அமைத்துத்தருக.

சொற்ற வாறமைப் பேனென வெழுந்து
தூய விச்சுவ கன்மனே ரிடத்துக்
கற்ற கேள்வியர் சிலரொடு மமர்ந்து
கரிசில் பன்மணிப் பீடமொன் றமைத்துக்
கொற்ற மாருமப் பீடத்தின் மேலாற்
கொன்றை மாலிகைப் பிரானுல கீன்ற
ஏற்ற மேதுமில் கந்தரிம் மூவர்
அமையு மாறுநன் காய்ந்தினி தமைப்பான். 13

கு - ரை: கரிசு இல் - குற்றமில்லாத. மாலிகை - மாலை. மேலால் - அந்த இரத்தின பீடத்தில். சிவபெருமான் உமாதேவியார் இடையிலே கந்தர் ஆகிய மூவரும் அமையுமாறு அமைத்தான்.

குணக டற்றலை யெழுமிளங் கதிருங்
குறிக்கொ ளுச்சமழ்ப் புளங்கொடு வட்கத்
தணவ ருங்கதிர் பரப்புபொன் மோலி
சமைத்து மற்றது கதிரென மருண்டே
அணவு சந்திர கலையெனப் பிறையு
மமைத்து மற்றத னுருவடி வொத்து
நணவ மைந்திடு புனல்மக ளொருபா
லுடு கண்கவர் வருந்திற னமைத்து. 14

கு - ரை : குணகடல் - கீழ்கடல். இளங்கதிர் - உதய சூரியன். குணகடற்றலை எழுமிளங் கதிர்: "பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு". சமழ்ப்பு - நாணம். மோலி=மௌலி - கிரீடம். தணவரும் - நீங்குதற்கரிய. அணவு - பொருந்திய. நணவு - நடுவிடம்.

தூய வாகமப் படியருச் சிக்கத்
தொடங்கி யோர்மல ரெடுத்திடும் போதே
மேய நின்கருத் தெவனுரை யென்று
வெள்ளி தாஞ்சிறு முறுவலுந் தோற்றி
நேய வாய்மலர்ந் திடுவது மான
நிலவு கண்கவர் திருமுக மமைத்துப்
பாய பேரிருள் சவட்டுவெங் கதிரோன்
பறம்பிற் றேற்றமு மொடுக்கமு முறலால். 15

கு - ரை : சிறு முறுவல் - புன்சிரிப்பு. பாய - பரவிய. சவட்டு - கெடுக்கும், அழிக்கும். பறம்பு - மலை.

என்று மற்றவை யில்லவாய் விளங்கு
மிரண்டு செங்கதிர் படைத்துவிட் டன்ன
நன்று செம்மணிக் குண்டல மிரண்டு
நயக்கு மாறிரு செவியினும் பொருத்தி
ஒன்று நீண்முடி யுறுபிறை யமுத
மொழுக்க மற்றது முழுக்கநன் மார்பம்
நின்று கிழிழிந் திடுவது கடுப்ப
நிகரி லாவுப வீதமு மமைத்து. 16

கு - ரை : செங்கதிர் - சூரியன். செம்மணி - மாணிக்கம். உபவீதம் - பூணூல்.

தரும மாதிய நான்குநன் களிக்கச்
சமைந்த வேயெனத் தயங்குபொன் னுக
அருமை யாமலர்ந் தொருதிறத் தமைந்த
வங்கைத் தாமரை நான்கினு மாண்பால்
பருவ மங்கைபா லென்பதற் கியையப்
பரசு வாயொரு பரசுமொண் மானும்
மருவு பேரருள் புரியபீ யமுநல்
வரத முங்கவின் குதிகொள வமைத்து. 17

கு - ரை : தருமம் ஆதிய நான்கு - அறம் பொருள் இன்பம் வீடு என்பன. பரசு - மழுவாயுதம். அபயகரமும் வரதகரமும். கவின் - அழகு. நான்கு கரங்களிலும் மழு, மான், அபயம், வரதம் என்பன.

பிரிய மேவிய விடப்பத மடக்கிப்
பிறங்கு வேதவே தாந்தமுங் காண்டற்
கரிய தாயபொற் கிண்கிணி புலம்ப
வமைந்த வோர்வலப் பதந்தக நீட்டித்
தெரிய மற்றவுஞ் சிறப்புற வமைத்துத்
திருந்த மூவுல கீன்றநற் ருயுங்
கிரிய வாய்க்குடி கொளுமிளஞ் சேயுங்
கிளந்த மற்றவற் கேற்புற வமைத்து. 18

கு - ரை : இடப்பதம் - இடதுகால். கிண்கிணி புலம்ப - கிண்கிணி ஒலிக்க. வலப்பதம் தொங்கவிட்டு. மூவுலகு ஈன்ற நற்ருய் - உமாதேவியார். கிரி அவாய் குடிகொளும் - மலையை விரும்பி வீற்றிருந்தருளும். இளஞ் சேய் - முருகவேள். மற்று அவற்கு ஏற்புற - சிவபெருமானுக்குப் பொருந்தும்படி.

எடுத்து வந்துல களந்தவன் முன்ன
ரியைய வைத்தனன் விச்சுவ கன்மன்
கடுத்து வேரெருரு பொருளுருப் பொருளைக்
கமலக் கண்களி கொளக்கண்டு கவலை
விடுத்து மிக்கபே ருவகைய னுகி
விசுவ கன்மனைப் போக்கியைம் பொறியுங்
கெடுத்து மாதவ னெனும்பெயர்க் கியையக்
கிளர்பெ ருந்தவம் புரிவதற் கெழுந்தான். 19

கு - ரை : உலகு அளந்தவன் - திருமால். கடுத்து - ஒத்து. ஐம் பொறியும் கெடுத்து - பஞ்சேந்திரிய நிக்கிரகம்செய்து. மாதவன் - பெரிய

தவத்தையுடையோன்; இலக்குமி கணவன்: மா - பெரிய, இலக்குமி. தவன் - தவத்தையுடையோன், கணவன்.

விதியிற் புண்ணிய கங்கைநீ ராடி
வெள்ளை நீற்றுமுப் புண்டரம் புனைந்து
கதியிற் சேர்த்திடு கண்மணி தரித்துக்
கருத்தி னுள்ளுற வெழுத்தைந்துங் கணித்து
மதியிற் றானமுற் றூய்மைய தியற்றி
மஞ்ச னாதியா வையுமுறக் கொண்டு
நிதியிற் செய்யருக் கியமுதற் பலவு
நிரப்பி மேதகு பூசனை புரிவான். 20

கு - ரை: முப்புண்டரம் - திரிபுண்டரம். கண்மணி - உருத்திராக்கம். கணித்து - அறிவாற்கணித்து. தானம் முன் தூய்மையது இயற்றி - இடத்தைச் சுத்தம்செய்து. தானம் முன் தூய்மை என்றது ஐவகைச் சுத்திகளையும்; தானசுத்தி, பூதசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்பன. மஞ்சனாதி யாவையும் - திருமஞ்சனம் முதலிய பூசைக்குரிய பொருள்களெல்லாவற்றையும். உறக்கொண்டு - நன்றாக அமைத்துக்கொண்டு. அருக்கியம் முதற்பலவும் நிரப்பி - அருக்கியம் பாத்தியம் ஆசமனம் முதலியவற்றை நிறைத்து. மேதகு பூசனை - மேம்பட்ட பூசை.

திருந்து மன்பினா வாகன மாதி செய்து வாசனைத் தயிலமு னாட்டிப்
பொருந்து பற்பல பணிகளும் பூட்டிப் புகரி லாதபல் சுவைகளு மமைந்த
மருந்து நேர்நிவே தனங்களு மூட்டி வயங்கு பற்பல தீபமுங் கோட்டிக்
கருந்து ழாய்முகி லிலனுறப் பணிந்து கைகு வித்துறச் சூழ்ந்துபோற்
[றிடுவான். 21

கு - ரை: ஆவாகனமாதி - ஆவாகனம், ஸ்தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், முண்டனம், அவகுண்டனம், பரமீகரணம், தேனுமுத்திரை, மகாமுத்திரை என்பனவாம். தயிலம் முன் ஆட்டி - எண்ணெய்க்காப்பு முதலாக அபிஷேகித்து: எண்ணெய்க்காப்பு, மாக்காப்பு, நெல்லிக்காப்பு, மஞ்சட்காப்பு, பஞ்சகௌவியம், பஞ்சாமிர்தம்; பால் தயிர் நெய் தேன் இளநீர் கருப்பஞ்சாறு பல கனிவருக்கச் சாறு சந்தனக் குழம்பு முதலிய அபிஷேகத்துக்குரிய திரவியங்களையெல்லாம் எடுத்து முறையே அபிடேகம் பண்ணி; திருவொத்தாடை சாத்தி. பணிகள் - ஆபரணங்கள். நிவேதனங்களையும் செய்து. மருந்து - தேவாமிர்தம். பலவகைத் தீபங்களையும் காட்டி. கருந்துழாய் முகில் - திருமால். சூழ்ந்து - வலம்வந்து.

பலவகைத் தீபங்களாவன:— அலங்காரதீபம், நாகதீபம், இடபதீபம், புருடதீபம், மயூரதீபம், நட்சத்திரதீபம், மேருதீபம், பூரணகும்பதீபம் முதலியன.

பூசை யின்னணா மாயிர வருடம்
புரிய வந்தவிக் கிரகத்தி னின்றும்
ஈசை பாலுற மழநடுப் பொருந்த
வெம்மை யாளுடை யிறையவன் றேன்ற
ஆசை யாடையான் அன்னது காணுஉ
அங்கை கூப்புபு விரைந்தெழுந் தாடி
ஓசை மேவுற வரவொலி யெழுப்பி
யுவந்து பன்முறை பணிந்துநின் றனனே. 22

கு - ரை : ஈசை - உமாதேவி. மழ நடுப் பொருந்த - முருகவேள் நடுவிலே பொருந்த. ஆசை ஆடையான் - பீதாம்பரதாரி: ஆசை - பொன்.

நின்ற மான்முக நோக்குபு பெருமா
னிணைத்த தென்னென மகவிழ வாமை
ஒன்ற நல்கென முறுவல்செய் தொருபா
லுமைமு கத்தினை நோக்கமற் றவளும்
என்றன் வாய்மொழி பிழைபடா ததனுல்
எரிந்த நின்மக னெய்துவ னுயிரை
நன்ற னங்கனுய் மருவுவன் வருந்தேல்
நளினை நாயக வென்றருள் புரிந்து. 23

கு - ரை : நோக்குபு - நோக்கி. மகவு இழவாமை ஒன்ற நல்கு என - புத்திரன் இறந்துபடாமலிருக்குமாறு வரந்தருக என்று விண்ணப்பிக்க. எரிந்த நின் மகன் - இறைவர் நெற்றிக்கண்ணுல் நீருன உன் மகன். உயிரை எய்துவன் 'அனங்கனுய் மருவுவன் வருந்தேல். நளினை நாயக - இலக்குமி நாயகனே; நளினம் - தாமரை: நளினை - தாமரையில் வீற்றிருப் பவள்.'

பின்னு மோதுவா ளிவ்வுருக் காணப்
பெற்ற யாவர்க்கும் வழிவழி மகவு
துன்னு வேண்டுசெல் வங்களும் பெறுவார்
என்று சொற்றனள் கரும்பிவர் குழலாள்
மன்னு மிந்தவிக் கிரகத்தி னென்றும்
மருவி நீபிர சன்னமா யிருந்து
மின்னு போகங்கள் பலவுமெவ் வுயிர்க்கும்
விருப்பி னல்கென மீட்டுமா லிரப்ப. 24

கு - ரை : இவ்வுரு - சோமாஸ்கந்த வடிவம்.

இரந்த வாறுபல் வரங்களு மருளி
யெம்பி ரானுமத் திருவுருப் புகுந்தான்
சுரந்த பேரருட் டாயுமொண் சேயுஞ்
சொற்ற மற்றவ ருருவத்துட் புக்கார்
பரந்த வோகைய னாகிய நெடுமால்
பரவு மப்பெரு மூர்த்திக ளோடும்
வரந்த வாததன் னிருக்கையுட் புகுந்து
மாவொ டுங்கலந் தினிதுவாழ்ந் திருந்தான். 25

கு - ரை : எம்பிரான் - சிவபெருமான். தாய் - உமாதேவியார். சேய் - முருகவேள். வரம் தவாத - சிறப்பினின்று நீங்காத. மாவொடும் - இலக்குமி தேவியோடும்.

வேறு

மந்தரம் பொருவு தோண்மா விருக்கையை மருவிச் சோமாக்
கந்தர முழுது நோக்கிக் கண்களி பூத்து நாமஞ்
சுந்தர விடங்க ரென்று சொல்லிமுன் னோயினும் பூசை
அந்தர முதற்பன் னாடு மதிசயித் திடப்பு ரிந்தான். 26

கு - ரை : மந்தரம் பொருவு - மந்தரமலையையொத்த. இருக்கையை மருவி - பாற்கடலையடைந்து. சோமாக்கந்தர் அம் முழுதும் - சோமாஸ்கந்த மூர்த்தியின் அழகு முழுதும். சுந்தர விடங்கர் - அழகிய விடங்கர். அந்தரம் முதல் பல் நாடும் - விண்ணுலக முதலிய எல்லா உலகமும்.

புரியுநாள் மதவே ளென்னும் புதல்வனைப் பெற்று னன்னுன்
வரிசிலை வல்லோ னாகி வாழுநாட் பரமன் மேலோர்
தெரிகணை தொடுத்து நெற்றித் தீவிழி சுடலான் மாய்ந்தவ்
வரியவ னருளான் மீட்டு முய்ந்தெழுந் தனங்க னானான். 27

கு - ரை : சிலை வல்லோன் - வில்வித்தையில் வலியோன். பரமன் மேல் - சிவபெருமான்மீது. மாய்ந்து - பொடியாய் அழிந்து. அனங்கன் - அங்கமில்லாதவன்.

கரியுரி போர்த்த மேனிக் கடவுட னருளை யுன்னி
அரிமகிழ்ந் தமரு நாளி லவுணருட் சம்ப னென்பான்
விரிகடற் சேனை சூழ விண்ணுல கதனை முற்றித்
திரிபொடு வம்மி னென்று சினந்தறை கூவி னானே. 28

கு - ரை : கரியுரி - யானைத்தோல். அரி - விஷ்ணுமூர்த்தி. முற்றி - முற்றுகையிட்டு. சம்பன் - சம்பராசுரன்.

பொரவழைத் தவன்யா ரென்று புரந்தரன் றூதிற் றேர்ந்து
கரவுடைச் சம்ப னென்பான் கடுகிவந் தனனு லென்று
வரமுடைத் தேவ ரோடும் வளைந்தமர் பன்னுட் செய்தும்
உரனில னவுணன் போருக் குடைந்தனன் வெந்நிட் டானுல். 29

கு - ரை : பொர - போர்செய்ய. புரந்தரன் - இந்திரன். கரவு - வஞ்சகம். வரம் - சிறந்த. உரன் - வலிமை. வெந்நிட்டான் - புறமுதுகிட்டான். வெரிந்=வெந் - முதுகு.

இனியியற் றுவதென் னென்னு விந்திரன் கரந்து சென்று
பனிபடு கடலி னுப்பண் பாப்பணை மீது துஞ்சும்
புனிதனை யடுத்தா னன்னுன் புரிந்துண ராமை நோக்கிக்
கனிதுயின் மிக்கா னென்று காவல னிதனைச் செய்தான். 30

கு - ரை : பாப்பணை - சேஷசயனம். புரிந்து - விரைந்து. உணராமை - துயில் நீங்காமை. காவலன் - இந்திரன்.

தவாமயக் கியற்றி வைகுஞ் சத்திசாம் பவியை வேண்ட
அவாவறுத் தவர்க்குச் சன்ம மகன்றெனத் துயில்பி டிக்கைக்
கவானுடைத் திரும ணுளற் ககன்றது கழித ரக்கட்
குவாலுடைக் குலிச வேந்தை நோக்குபு கூற லுற்ருன். 31

கு - ரை : தவா மயக்கு இயற்றி. சத்தியாகிய சாம்பவி. அவா நீங்கியவர்கட்குப் பிறப்பு அகலுமாறு துயில் அகன்றது. அவா பிறப்பைப் பெருக்கும் : ''அவாவென்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும், தவாஅப் பிறப்பீனும் வித்து'' (குறள் - 361). அவா நீங்கப் பிறப்பும் அறும் என்றபடி. பிடிக்கைக் கவான் - யானைத் துதிக்கைபோலும் துடை. திருமணுளன் - மால். குலிசவேந்து - இந்திரன்; குலிசம் - வச்சிரப்படை.

வந்ததை யெவன டைந்த வாட்டமெ னுரைத்தி யென்றுன்
இந்திரன் பணிந்து சம்ப னென்பவ னனிகத் தோடு
முந்தவந் தமர்த்தல் செய்தான் முயன்றுபோர் புரிந்துந் தோற்றே
னந்தலி னின்பாற் கூற நண்ணினே னென்று சொற்ருன். 32

கு - ரை : வாட்டம் என் - சோர்வு யாது. அனிகம் - சேனை. நந்தல் இல் - கேடில்லாத.

புரந்தரன் மொழியுட் கொண்டு புயல்வண்ணன் கருணை மேன்
சுரந்துதன் னிதய மேய சுந்தர விடங்கப் பெம்மான் [மேற்
வரந்தரு சரண மெண்ணி வானகம் புகுந்து வைகற்
கிரந்தன னுடம்பா டோர்ந்து மகபதிக் கிசைக்க லுற்ருன். 33

கு -ரை: தன் இதயம் மேய - தனது இருதயகமலத்தில் வீற்றிருந் தருளும். எண்ணி - தியானித்து. வைகற்கு - தங்க. உடம்பாடு - திருவுள்ளக்குறிப்பு. மகபதி - இந்திரன்.

அருளினென் னிதய மேய வழகிய விடங்கர் தம்மைத்
தெருளுறக் கொடுபோய் நின்பொற் றிருநகர்ப் பதிட்டை செய்து
மருளறப் பூசை செய்யின் வாள்வலி யவுணன் செய்யும்
வெருளறூஉ வெல்ல லாகும் விரும்பிய வனைத்து மேவும். 34

கு -ரை: தெருளுற - ஞானமிக. நின்நகர் - அமராவதியில். மருள் - மயக்கம், அஞ்ஞானம். வெருள் - அச்சம்.

இந்தவிக் கிரக மேன்மை யியர்பரி தெம்ம னோர்க்கும்
முந்தநீ கொடுபோ வென்று கொடுத்தனன் முகுந்த னென்பான்
அந்தமி லுவகை பொங்க வடிபணிந் ததனை யேற்றுச்
சந்தநல் விமான மேற்றித் தன்னக ரடைந்தான் வேந்தன். 35

கு -ரை: முகுந்தன் - திருமால். அதனை - அழகிய விடங்கமூர்த்தியை. ஏற்று - பெற்றுக்கொண்டு. வேந்தன் - இந்திரன்.

பொருவருங் கோயி லொன்று புரிந்தத னிடைத்தா பித்துத்
தருவரு மலர்முன் னுய யாவையுந் தழுவக் கொண்டு
மருவரு மன்பு பொங்க மாண்புசால் பூசை யாற்றி
வெருவரும் வன்மை பெற்றுன் விண்ணுல கொருங்கு காப்பான். 36

கு -ரை: தருவருமலர் முன்னுக - கற்பகமலர் முதலாகவுள்ள. வெருவ அரும் வன்மை - அச்சமில்லாத வலிமை.

விடாதபூ சனைசெய் நாளில் விடங்கர்தங் கருணை பெற்றுத்
தடாதபல் லனிகத் தோடுஞ் சதமக னெதிர்ந்து சென்று
கெடாதவா ளவுணர் தம்மைக் கிடைத்துமிக் கடுபோ ராற்றிப்
படாதபல் படையின் மாய்த்துச் சம்பன்முன் படர்ந்தா னன்றே. 37

கு -ரை: விடங்கர் - சோமாஸ்கந்தர். தடாத - தடுத்தலில்லாத. பல் அனிகம் - பல சேனைகள். சதமகன் - நூறு அசுவமேத யாகங்களைச்செய்த இந்திரன்; சதம் - நூறு. மகம் - யாகம். படாத - அழியாத. படர்ந்தான் - சென்றான்.

அடுதிறற் சம்பன் மெய்யை யவன்பெயர்க் கடையி ரொன்பான்
படுமொரு மெய்யொ ழித்துப் பத்தாமெய் புணர்த்த வாய
தடுவரும் பொருளால் வீசித் தரையிடைப் படிய வீழ்த்தி
வடுவரும் வாகை பூண்டான் மலர்ந்தவா யிரங்கண் ணனே. 38

கு - ரை : சம்பன் மெய்யை - சம்பராசுரன் உடலை. கடை ஈரொன் பான்படும் ஒரு மெய்-னகரஒற்று; ன் என்பது. பத்தாம் மெய்-மகர ஒற்று; ம் என்பது. சம்பம் - வச்சிரம். ஆயுது அடுவரும் பொருள் - ஆயுதம்;எனவே வச்சிராயுதத்தால் என்க. வடு அரும் - குற்றமில்லாத. வாகை - வெற்றி. ஆயிரங்கண்ணுன் - இந்திரன்.

இறந்தனன் சம்ப னென்பான் எஞ்சிய வவுணர் யாரும்
பறந்தன ரோட்டெ டுத்துப் பல்லிடத் தினுங்க ரந்தார்
மறந்தலை யெடாது வென்ற வானவர் பெருமா னீர்தோய்ந்
தறந்தழை விடங்கர் பூசை யாற்றிநன் கிருந்தா னன்றே. 39

கு - ரை : மறம் தலை எடாது - பாவம் தலை தூக்காமல். அறம் தழை விடங்கர் - தருமம் தழைத்தற்கு ஏதுவாகிய விடங்கர்.

வாள்வலிச் சம்ப னென்பான் வானகத் தமர்ந்த வாறுந்
தோள்வலி மகவான் ருக்கத் துடிதுடித் திறந்த வாறுங்
கோள்வலி யவுணர் மற்ருேர் குலைகுலைந் தொளித்த வாறும்
நாள்வலி யிழந்தோ னுய நமுசிகேட் டுளங்கொ தித்தான். 40

கு - ரை : அமர்த்த - போர்செய்த. மகவான் - இந்திரன். நாள் வலி இழந்தோன் - ஆயுட்காலம் தொலைந்தோன்; நாள் - வாழ்நாள். நமுசி என்னும் ஒரு அசுரன்.

நாடிய திறலான் முன்னை நமுசியிற் பதின்ம டங்கு
கூடிய வலியின் மிக்கான் கூற்றிற்குங் கூற்றம் போல்வான்
நீடிய வவுணர்க் கெல்லா நிறைகளை கண்ணு யுள்ளான்
சூடிய தும்பை யோடு துடிதுடித் தெழுந்தா னன்றே. 41

கு - ரை : கூற்றிற்கும் கூற்றம் - இயமனுக்கும் இயமன். களைகண் - பற்றுக்கோடு. தும்பைசூடுதல்: பகைவரோடு போர்செய்தலை நினைத்துத் தும்பைப் பூவைச் சூடுதல் மரபு; "பொருதல் தும்பை புணர்வ தென்பர்" (பன்னிரு); "செங்களத்து மறங்கருதிப் பைந்தும்பை தலைமலைந்தன்று" (பு - வெ). தும்பை - போர்ப்பூ.

அரியினை நரிவென் ருங்குச் சம்பனை யடர்த்தான் வெள்ளைக்
கரியினை யுகைப்பான் கொல்லா மெனக்கனன் றதிர்த்துச் செம்பொன்
கிரியினை யுகைத்தல் போலக் கிளர்மணித் தேரு கைத்துப்
பரியினை யாதி யெல்லாப் படைகளுஞ் சூழ வந்தான். 42

கு - ரை : அரியினை - சிங்கத்தை. வெள்ளைக்கரி - ஐராவதம். செம் பொற்கிரி - மேருமலை. உகைத்தல் - செலுத்துதல்.

வந்துகற் பகநன் னுட்டை வளைத்துயர் மதில ழிக்க
முந்துபற் பலரை யேவி நினைத்தவா முடித்துப் பின்னர்
கந்துகொல் களிற்றி னூர் கலந்தரம் பையரைப் பற்றி
நந்துபல் வளமுந் தெவ்வி நடுங்கிட வடுபோர் செய்தான். 43

கு - ரை: மதிலின்புறத்து முற்றுகைசெய்த அசுரன் நினைத்தவாறு மதிலை அழிக்கச்செய்தான். கந்து - கட்டுத்தறி. களிற்றினன் - இந்திரன். மதில் மற்றும் அழித்தல் உழிஞைத்திணையுள் கந்தழிதுறை. தெவ்வி - கொண்டு.

மந்தரம் பொருவு திண்டோ ளமுசிதன் வரவு தேர்ந்து
சுந்தர விடங்கர் பாதந் தொழுதுள முருகப் போற்றி
அந்தர மிதுவென் ருேரேன் அவுணனை யடுதற் கென்று
கந்தர முகைக்குங் கோமான் கசிந்துவிண் ணப்பம் செய்தான். 44

கு - ரை: தேர்ந்து - ஆராய்ந்து. அந்தரம் இது என்று ஓரேன்; அந்தரம் - முடிவு. ஓரேன் - ஆராய்ந்தறியேன். கந்தரம் - மேகம். மேகம் இந்திரனுக்கு வாகனம் என்பர்.

நாரண னுட்டி னின்று நான்மருப் பேந்தும் வெள்ளை
வாரண னுட்டில் வந்த சுந்தர விடங்க வள்ளற்
பூரண னுட்ட மூன்று பொருந்தினேன் புணரி சூழ்ந்த
பாரண னுட்டம் வைத்துப் பகருவான் மகவாற் கீது. 45

கு - ரை: நாரணன் நாடு - வைகுந்தம், திருப்பாற்கடல். நால் மருப்பு - நான்கு தந்தங்கள். வெள்ளைவாரணன் - இந்திரன். புணரி - கடல். பார் அண-நிலவுலகத்தில் அண்ணும்படி. அண்ணுதல் - சமீபித்தல்.

கதிரவன் குலத்துத் தோன்றுங் காவலன் வலியான் மிக்கான்
அதிர்கழற் காலான் சாலி சுகனென வறையும் பேரோன்
எதிரினம் மடிகட் கென்று மிடையரு வன்பு பூண்டான்
உதிர்தலில் புகழா னன்னு னுரகர்கோன் மகளை வேட்டு. 46

கு - ரை: கதிரவன் - சூரியன். எதிர் இல் - ஒப்பில்லாத. உதிர்தல் இல் - நீங்குதலில்லாத. உரகர் கோன் - ஆதிசேடன்.

பாதல நின்றும் போந்து பைந்திரைக் கடலு டுத்த
பூதல மருங்கு காயா ரோகணம் புகுந்து மிக்க
மாதல மிதுவென் றெண்ணி வைகுவா னவன டைந்தாற்
சாதலங் கமையு மாறு தகுவனை வெல்வ னென்ருன். 47

கு - ரை: மாதலம் - சிறந்ததலம். தகுவனை - அசுரனை.

அற்புத விடங்கப் பெம்மா னருளிய திருவாக் காய
பொற்பரு ணிரம்பப் பெற்று புலோமசை மணாள னின்னே
வற்பமை நமுசி யாவி மாட்டினே னென்றெ ழுந்து
கற்பல மதில்சூழ் நாகைக் காரோண நகரத் துற்றான். 48

கு - ரை : புலோமசை மணாளன் - இந்திரன். வற்பு=வன்பு - வலிமை. புலோமசை மணாளன் நாகைக்காரோண நகரத்துற்றான்.

கற்றவர் புகழு நாகைக் காரோணர் பாதம் போற்றி
அற்றமில் கருந்த டங்க ணம்மையை வணங்கா நின்ற
கொற்றவ னுய சாலீ சுகன்முனங் குறுகி நின்றான்
செற்றவொள் வயிர வேலா னவன்களி சிறப்பக் கண்டான். 49

கு - ரை : காரோணர் - சிவபெருமான். வயிரவேலான் - வச்சிரப் படையையுடைய இந்திரன்.

காண்டலு முவகை துள்ளக் கைகுவித் தவன்கை பற்றி
மாண்டதன் னிருக்கை மேவி வந்ததென் னுரைத்தி யென்னப்
பூண்டவெஞ் சினத்த னுய தகுவனைப் புரட்ட வெண்ணி
ஆண்டவ னருளிச் செய்த வனைத்தையு மறியச் சொற்றான். 50

கு - ரை : மாண்ட - மாட்சிமை பொருந்திய. தகுவன் - நமுசி என்னும் அரக்கன். ஆண்டவன் - சிவபெருமானாகிய அழகியவிடங்கர்.

சொற்றலுங் கைகு வித்துச் சுந்தர விடங்கப் பெம்மான்
நற்றவஞ் சிறிது மின்றி நாயினுங் கடைப்பட் டேனை
உற்றதோர் பொருளாக் கொண்டீ துரைத்தனன் கொல்லோ வென்று
பொற்றடம் புயங்கள் வீங்கப் பொருக்கென வெழுந்தா னன்றே. 51

கு - ரை : நல் தவம் - சிறந்த சிவபுண்ணியம். வீங்க - பூரிக்க. பொருக்கென - விரைவாக.

எழுந்துபல் புவனத் துள்ளா ரியாவருந் தடுத்த போதும்
உழுந்துருண் முன்னம் வானோர்க் குறுகணே விளக்குந் தீயோன்
அழுந்துபட் டிடச்செ குப்பே னன்றிமற் றென்றுஞ் செய்யேன்
தழுந்தர மிதுவே யென்றான் சதமக னுவகை பூத்தான். 52

கு - ரை : வானோர்க்கு - தேவர்களுக்கு. உறுகணே - துன்பமே. தீயோன் - கொடியோனாகிய நமுசி. செகுப்பேன் - அழிப்பேன். சதமகன் - இந்திரன். தழுந்தரம் = தழுவும்தரம் - நீ வந்தடைந்ததன் மேன்மை; தழுவுதல் - அன்பாலணைதல்.

மகபதி யொடுமெ ழுந்து வரிகருங் கழற்காற் சாலி
சுகனெனு மரையன் வானத் தொன்னகர் புகுந்து தோலா
இகல்கெழு நமுசி தன்னே டேற்றனன் பன்னுட் போர்செய்(து)
உகலரு மவன்ற னுவி யொளிறுவாள் வீசி யுண்டான். 53

கு - ரை : வரி கருங்கழல் - கட்டப்பட்ட வீரக்கழல். தொன்னகர் - பழையநகரம். வானம் - விண்ணுலகம். தோலா - தோல்வியில்லாத. இகல் கெழு - வலிமிகுந்த; இகல் - பகை எனினுமாம். ஏற்றனன் - எதிர்ந்து: முற்றெச்சம். ஒளிறு வாள் - ஒளிசெய்யும் வாட்படை. ஆவி உண்டான் என்க.

பொருசத கோடி யங்கைப் புனிதனல் வெல்லக் கூடாப்
பெருவலி யவுண னுவி மானிடப் பிறவி யுற்றுன்
ஒருவனைக் கொண்டு மாய்த்தான் ஒருதுரும் பால்விண் ணுடர்
அருவலி முழுது மாய்த்தாற் கிதுவுமோ ரருமைத் தாமோ. 54

கு - ரை : சதகோடி - வச்சிராயுதம். ஒரு துரும்பால் - ஒரு துரும்பினல். மாய்த்தாற்கு - அழித்த சிவபெருமானுக்கு.

பகையுயிர் பாற லோடும் பார்புரந் திடுவார் சென்னித்
தொகைமணி படுகாற் சாலி சுகன்றனை யிறுகப் புல்லி
நகைமுகத் தவன்கை பற்றி நலங்கொடன் னிருக்கை யுய்த்துத்
தகைபடு விருந்த ளித்தான் சசிமுலைத் தடந்தோய் மார்பன். 55

கு - ரை : பகை - பகைவனுகிய நமுசி. பாறலோடும் - கொன்றதும். புல்லி - தழுவி. தன் இருக்கை - தன்னுடைய சிங்காதனம்; தன் என்றது இந்திரனை. தகை படு - மேம்பட்ட. சசி - இந்திராணி.

விழைதரு பொன்னுட் டுள்ள மேதகு வளங்க ளெல்லாங்
குழைதரு விருப்பி னேக்கிக் குலிசவேற் கோமா னேடுந்
தழைதரு நட்ப னுகித் தராதிப னமரு நாளில்
உழைதரு விழியோர் பாகற் றரிசிக்கு முள்ளங் கொண்டான். 56

கு - ரை : குலிசவேற் கோமான் - இந்திரன்; குலிசம் - வச்சிராயுதம். தராதிபன் - அரசன். உழைதருவிழி - உமாதேவியார்: அன்மொழித் தொகை. ஓர் பாகன் - ஒரு பக்கத்திலுடைய சிவபெருமானை.

வலனுயிர் குடித்த தோன்றன் மன்னவன் விருப்பந் தேர்ந்து
நலனுயர் விடங்கப் பெம்மான் பூசனை நடாத்துங் காலை
நிலனமை மன்னற் கூவி நேருறத் தரிசி யென்றுன்
புலனெறுப் பாடு மேவத் தரிசித்தான் புவியாள் கோமான். 57

கு - ரை : வலன் உயிர் குடித்த தோன்றல் - இந்திரன்; வலாரி. மன்னவன் - சாலீசுகன். விடங்கப்பெம்மான் - சுந்தர விடங்கர். நேர் உற தரிசி - சந்நிதியில் நின்று நன்கனம் தரிசிப்பாய். புலன் ஒருப்பாடு மேவ - ஐம்புலன்களும் ஒருவழிப்பட்டுப் பொருந்த. கோமான் - அரசன்.

விழிகவர் வனப்பு வாய்ந்த விடங்கரைக் கண்ட போதே
பழிதவிர் காந்தங் கண்ட விரும்பெனும் படிய ஞகி
வழிதரு கண்ணீர் சோர வரீர்மயிர்ப் புளகம் போர்ப்பக்
கழிபெருங் காதல் பொங்கக் கவருமோர் வேட்கை யுற்ருன். 58

கு - ரை : காந்தங்கண்ட இரும்பு - காந்தத்தைக் கண்ட இரும்பு; காந்தம் விகாரமின்றி நின்றே இரும்பை வலிக்கும்: ''இரும்பைக் காந்தம் வலித்தாற்போல்'' (சித்தி), கவரும் ஓர் வேட்கை-கவர்ந்துசெல்லும் ஒப்பற்ற வேணவா. கண்ணீர்சோர்தல், புளகம்போர்த்தல், காதல் பொங்குதல் இவை மெய்யன்புக்குரிய மெய்ப்பாடுகள்.

எறிகட லவனி காப்போ னிவ்வண நிற்குங் காலைப்
பறியுல காளும் வேந்தன் பண்புசா னட்பு மிக்காய்
செறிநினக் கியாது வேண்டுஞ் செப்புதி தருவ லென்ருன்
வெறிமலர்த் தொடைய லானும் விடங்கரைத் தருதி யென்ருன். 59

கு - ரை : இவ்வண்ணம் - இவ்வாறு என்றது வேணவாவுடனே என்றபடி. பறி உலகு - பொன்னுலகம். வெறிமலர் - மணம்பொருந்திய மலர். தருதி - தருவாய்.

விடங்கரைத் தருதி யென்று வேந்தர்கோன் விளம்ப லோடும்
மடங்கரை வலாரி சோர்ந்து மயங்கிமூர்ச் சித்து வீழ்ந்து
திடங்கரை சில்லோர் தேற்றத் தெளிந்துமால் யானை காப்பான்
இடங்கரை யறுத்தா னுள்ள மியைதரி னியைவ னென்ருன். 60

கு - ரை : வேந்தர்கோன் - சாலீசுகன். மடம் கரை - அறியாமை நீங்கிய. திடம் கரை சில்லோர் - உறுதி கூறும் சிலர். தேற்ற - தெளிவிக்க. மால் யானை காப்பான் - பெரிய கஜேந்திரன் என்னும் யானையைக் காத் தருளும் பொருட்டு; மால் - மயக்கம் எனினுமாம். இடங்கர் - முதலை. அறுத்தான்-அறுத்தவனாகியதிருமால். உள்ளம் இயைதரின்-மனமிசைந்தால்.

சொற்றசொன் மறுத்தற் கஞ்சி யிவ்வணஞ் சொல்ல லோர்ந்து
கொற்றவெண் கவிகைச் சாலீ சுகனகங் குளிர்ப்பு மேவப்
பொற்றபாற் கடல டைந்து பொங்கரா வணையி னுப்பண்
அற்றமின் ருகத் துஞ்சு மண்ணல்பொற் பதம்ப ணிந்தான். 61

கு - ரை: சொற்ற சொல் - 'நினக்கு யாது வேண்டும் செப்புதி தருவல்' என்றசொல். ஓர்ந்து - ஆராய்ந்து. அகம் குளிர்ப்பு மேவ - மனங்குளிர. அரா அணை - சேஷசயனம். அற்றம் - துன்பம். துஞ்சும் - தூங்கும். அண்ணல் - திருமால்.

பணிந்தமன் னவனை நோக்கிப் பைந்துழாய்ப் படலை மார்பன்
துணிந்தசிந் தையனு யிங்கு வந்ததென் சொற்றி யென்னத்
தணிந்தசிந் தனையில் லாத நமுசியைச் சாடி னேனுங்(கு)
அணிந்தசுந் தரவி டங்கர் திருவுரு வமையக் கண்டேன். 62

கு - ரை: படலை - தழைவிரவத்தொடுத்த மாலை. சொற்றி - சொல்வாய். சாடினேன் - அழித்தேன். ஆங்கு விடங்கர் திருவுரு வீற்றிருப்பதைக் கண்டேன்.

ஆய்ந்தவிண் ணுளி யாது வேண்டுவ தருள்வே னென்றான்
வாய்ந்தசுந் தரவி டங்க வள்ளலைத் தருதி யென்றேன்
ஏய்ந்தநின் னனுஞை பெற்றிங் கெய்துக வென்றான் செம்பொன்
தோய்ந்தமார் புடையா யின்னே யருளெனத் தொழுதா னன்றே. 63

கு - ரை: விண்ணுளி - இந்திரன். நின் அனுஞை - உம்முடைய உத்திரவு. செம்பொன் தோய்ந்த - இலக்குமி பொருந்திய. இன்னே அருள் - இப்போதே அருள் செய்வீராக.

தொழுபவற் கிரங்கி மாயோன் சுந்தர விடங்கர் பாதம்
வழுவற மனத்தி னெண்ணி மற்றவர் குறிப்புந் தேர்ந்தே
உழுவலன் புடையாய் கொண்டு போகென வுரைத்தான் வேந்தன்
பழுதறுத் துய்ந்தே னென்று பைம்பொனுட் டகத்துச் சென்றான். 64

கு - ரை: தொழுபவற்கு - வணங்குகின்றவனாகிய சாலிசுகனுக்கு. எண்ணி - தியானித்து. அவர் குறிப்பும் தேர்ந்து - சுந்தரவிடங்கருடைய திருவருட் குறிப்பையும் தெளிந்து. அவர் குறிப்பும்: இறந்தது தழீஇய எச்சவும்மை. உழுவலன்பு - எழுமையும் தொடர்வதாகிய அன்பு. பழுது அறுத்து - குற்றம் நீக்கி.

மறையவ னுதித்த வுந்தி மலரினன் வார்த்தை வெள்ளைக்
கறையடி யிறைவற் கோதித் தருகெனக் கசிந்து நின்றான்
நறைமலர்த் தொடையல் மார்பா நச்சிய படியே யாதுங்
குறையிலிப் பொருளைக் கொண்டு போகெனக் கொடுத்திட் டானே. 65

கு - ரை: மறையவன் - பிரமதேவன். கறையடி - யானை. தருக என. நறை - தேன். நச்சியபடியே - விரும்பிய வண்ணமே.

அளிகிளர் கருணை மிக்க வழகிய விடங்கர் தம்மை
ஒளிகிளர் கதிர்ச மழ்க்கு மொருவிமா னத்தி னேற்றித்
துளிகிளர் முகிலு நாணுஞ் சுத்தமத் தளமு ழங்கக்
களிகிளர் சிறப்பு வாய்கொக் கரைபெரு முழக்கஞ் செய்ய. 66

கு - ரை : ஒளி கிளர் கதிர் - சூரியன். சமழ்க்கும் - நாணும். முகிலும் - மேகமும். சுத்தமத்தளம், கொக்கரை வாத்திய விசேடம்.

பல்லிய மற்றை யாவும் படுகட லினுமு ழங்க
மெல்லிய லரம்பை மாதர் மின்னென வெதிர்ந டிப்ப
அல்லியங் குழலார் சில்லோர் அலங்குசா மரையி ரட்டப்
புல்லிய பவளக் காம்பிற் பொலிமணிக் குடைநி ழற்ற. 67

கு - ரை : பல் இயம் - பலவகை வாத்தியம். அல்லி அம் குழலார் - மகளிர்: அல்லி - அகவிதழ். இரட்ட - மாறிமாறி அசைக்க. மணிக்குடை - இரத்தினங்கள் பதித்த குடை. காம்பிற் பொலி மணி என்க. நிழற்ற - நிழலைச் செய்ய.

மறைமுழு துடையான் வந்தான் மால்விடை யாளி வந்தான்
கறைவிட மமுதாக் கொண்டு கடவுளர்ப் புரந்தான் வந்தான்
துறைகெழு பலரும் போற்றுஞ் சுந்தர விடங்கன் வந்தான்
இறையவன் வந்தான் வந்தா னென்றுசின் னங்க ளூத. 68

கு - ரை : கடவுளர் - தேவர்கள். சின்னங்கள் - திருச்சின்னங்கள்.

திரிபுர மெரித்த வாறுஞ் சிலைமதற் காய்ந்த வாறுங்
கரியத ளுரித்த வாறுங் காலனைக் காய்ந்த வாறும்
விரிமலர்க் கிழவன் சென்னி விழுத்திய வாறு நெய்த்தோர்
அரியுடற் கவர்ந்த வாறு மமைத்தொரு வகையோர் பாட. 69

கு - ரை : சிலை மதன் - கரும்பு வில்லையுடைய மன்மதன். கரி அதள் - யானைத் தோல். மலர்க்கிழவன் - பிரமன். நெய்த்தோர் - இரத்தம். அரி உடல் - திருமாலினது உடம்பு.

திரிபுரமெரித்தது அதிகை வீரட்டம், சிலைமதற் காய்ந்தது குறுக்கை வீரட்டம், கரியதள் உரித்தது வழுவை வீரட்டம், காலனைக் காய்ந்தது கடவூர் வீரட்டம், மலர்க்கிழவன் சென்னி விழுத்தியது கண்டியூர் வீரட்டம், நெய்த்தோர் அரியுடற் கவர்ந்தமை வைரவகோலத்தில் என்க.

அட்ட வீரட்டத் தலங்களுள் பறியல் வீரட்டம், கோவல் வீரட்டம், விற்குடி வீரட்டம் என்னும் வீரட்டங்கள் நீங்க ஏனைய வந்தன காண்க.

திருநாவு - தேவா - அடைவுதிருந்தா - 2; பூமன் சிரங்கண்டி என்னும் முதற்குறிப்புடைய பழம் பாடல்களாலும் அறியலாம்.

கடிமல ரொன்றிட் டாலுங் கனிந்தோர்பச் சிலையிட் டாலும்
நெடியவன் பிரம னாக நிலத்தினின் றுயர்த்தி யின்னும்
அடியவர்க் கெளிய ராகி யருள்செயுந் திறம னைத்தும்
ஓடிவறப் பாடல் செய்தாங் கொருவகை யார்கள் பாட. 70

கு - ரை: கடி மலர்-மணம்பொருந்திய மலர். நெடியவன்-திருமால். ஓடிவு அற - குறைவின்றி.

சங்கர சம்பு போற்றி சச்சிதா னந்த போற்றி
பொங்கர வணிந்த முக்கட் பூரண புராண போற்றி
செங்கர மழுமா னேந்துஞ் சிவபரஞ் சோதி போற்றி
நங்கர வறுப்பாய் போற்றி யெனப்பலர் நயந்து போற்ற. 71

கு - ரை: சங்கரன் - சுகத்தைச் செய்பவன். சம்பு - சுகத்துக்கு இருப்பிடமானவன். சச்சிதானந்தன் - சத்துச் சித்து ஆனந்தமயமாயுள்ள வன். பூரணன் - நிறைந்தவன். புராணன் . பழமையானவன். நம் கரவு - நம்முடைய வஞ்சனை.

செறிபல கோணற் றண்டந் திகழ்பல கோணுத் தண்டம்
மறிவருஞ் சிவிறி யால வட்டமொள் ளொலிய லேற்றுக்
குறிகெழு துவசஞ் செம்பொற் குடைமணித் தோர ணங்கள்
அறிதரு மற்ற யாவு மடர்ந்தன காடு செய்ய. 72

கு - ரை: கோணற் றண்டம் - வளைதடி. கோணுத்தண்டம் - நேர் தடி. சிவிறி, ஆலவட்டம், ஒலியல், இடபக்கொடி, குடை, தோரணம் முதலியன நெருங்கிவர.

வானவ ரியக்கர் சித்தர் வித்தியா தரர்வ யப்போர்த்
தானவர் நிருதர் நாகர் கின்னரர் தடந்தோட் பூதர்
ஆனவர் கருடர் மாமை யமைந்தகாந் தருவர் சொல்லா
ஏனவர் கணங்க ளெல்லா மெங்கணுந் துவன்றி மல்க. 73

கு - ரை: பதினெண் கணங்களும் எங்கும் நெருங்கிவர; இச்செய்யு ளில் பதினொரு கணங்கள் கூறப்பட்டன. ஏனவர் - மற்றையோர். துவன்றி மல்க - நெருங்கி நிறைய.

மணிபல விறைக்கின் ருரும் வயங்குபொன் வீசு வாரும்
அணிமல ரளவி லாத வள்ளுபு பொழிகின் ருருங்
கணிதமில் விரைநீர் சாந்திற் கரைத்தன ரூற்று வாரும்
பணிபல வின்னு மாற்றும் பான்மையர் பல்லோர் மொய்ப்ப. 74

கு - ரை : கணிதம் இல் - அளவில்லாத. அள்ளுபு - அள்ளி. விரை நீர் - பன்னீர், வாசம்பொருந்திய நீர். பணி - தொண்டு. மொய்ப்ப - நெருங்க.

இன்னவை பலமேன் மேலு மியம்புதற் கரிய வாகப்
பொன்னலந் திகழும் வானம் புழுங்குபு சமழ்த்தே மாற
நன்னல மரிய தென்று ஞாலமிக் கிறுமாப் பெய்தக்
கன்னவி றோளான் வந்து காரோணம் புகுந்தா னன்றே. 75

கு - ரை : வானம் - விண்ணுலகம். புழுங்கி நாணி ஏமாற்றமடைய. ஞாலம் - நிலவுலகம். கல் நவில் தோளான் - மலைபோலும் வலிய தோள்களை யுடைய சாலிசுகன்.

எண்ணிய வெண்ணி யாங்கே யியற்றிடு வலியொ ருங்கு
நண்ணிய வான நாடு நயந்தகம் மியனைக் கொண்டு
புண்ணிய வளங்கூ ராதி புராணருக் கடுத்த தென்பால்
அண்ணிய செம்பொற் கோயி லழகுறச் சமைத்த பின்றை. 76

கு - ரை : வானநாடு நயந்த கம்மியன் - தெய்வத்தச்சன். தென் பால் - தெற்குத் திசையில். அண்ணிய - நெருங்கிய. சமைத்த பின்றை - அமைத்த பின்பு.

செழுநலம் பொலிகா ரோணத் திருப்பெரு வீதி யெல்லாம்
பழுதறப் பந்த ரிட்டப் பந்தரின் கால்க டோறுங்
கொழுவரைக் கதலி கந்தி குலவுசெங் கன்னல் யாத்து
வழுவிறோ ரணமுந் தூக்கி விதானமும் வயங்கக் கட்டி. 77

கு - ரை : கொழு அரை கதலி. கொழு அரை=கோழரை - வழுவழுப் பான அரை. கந்தி - கமுகு. செங்கன்னல் - செங்கரும்பு. யாத்து - கட்டி. தூக்கி - தொங்கவிட்டு. விதானம் - மேற்கட்டி.

தங்குசுந் தரவி டங்கர் தமையெழுந் தருளப் பண்ணிப்
பொங்குநாற் றெருவுஞ் சூழ்ந்து போதரப் புரிந்த பின்னர்
கொங்குசார் கோயில் புக்குக் குலவரி யாச னத்தின்
அங்குமே வுறத்தா பித்தா னுருயி ரனைத்தும் வாழ. 78

கு - ரை : சூழ்ந்து போதர - வலமாகச் சுற்றிவர. கொங்கு - பொன். அரியாசனம் - சிங்காதனம். ஆருயிர் அனைத்தும் வாழத் தாபித்தான்.

சிறியிலை வெதிரி னேங்குஞ் செந்நெலங் கழனி மூதூர்
குறிகிளர் வருக்கை தேமா வாதிய குலவி நாளும்
முறிமலர் பயிலுஞ் சோலை மொய்வளத் துடவை யின்னும்
அறிதர விடங்கர்க் கென்றே யமைத்தன னளவி லாத. 79

கு - ரை : சிறியிலை வெதிரின் - சிறிய இலைகளையுடைய மூங்கில்களைப் போல்: "சிறியிலை வெதிரினெல் விளையும்மே" (புறநா-109); இது விளையுமே எனற்பாலது, விளையும்மே என ஒற்றில் வழி ஒற்றை விரித்தவாறு; இதனுட் சிறியவிலை எனற்பாலது சிறியிலையெனத் தொகுத்தவாறு" (நன் - வி - சூத் - 155). வருக்கை - பலா. முறி - தளிர். துடவை - தோட்டம்.

சதுமுக னாதி யாய வுயிரெலாந் தழுவி யுய்ய
மதுமலர்க் கடுக்கை மாலை வள்ளலா ரருளிச் செய்த
முதுமொழி யாக மத்தின் முறைசெய் நித் தியமுன் மூன்றும்
புதுமையி னடக்கு மாறே புரிந்தனன் புவியாள் வேந்தன். 80

கு - ரை : கடுக்கைமாலை - கொன்றைமலர் மாலை. சதுமுகன் - பிரமன். நித்தியம் முன் மூன்றும் - நித்தியம், நைமித்திகம், பெருவிழாக்கள் என்பன சிவாகம விதிப்படி செய்வித்தான். வேந்தன் - சாலிசுகன்.

அருமறை முடியின் மேவு மழகிய விடங்க ருக்குத்
திருமலி சிறப்பி னானித் திங்களி னத்த நாளிற்
பொருவிடைக் கொடியொன் றேற்றிப் புவனங்கண் முழுதும் போர்ப்பப்
பெருகுறு மீரொன் பானுட் பிறங்குமெண் கொடியு மேற்றி. 81

கு - ரை : அருமறைமுடி - அருமையான வேத சிரசு; உபநிடதங்கள். அழகிய விடங்கர் - சுந்தரவிடங்கர். ஆனித்திங்கள் அத்த நட்சத்திரம்; இடபக்கொடியேற்றி. ஈரொன்பான் நாள் - பதினெட்டாம் நாளில். எண்கொடியும் ஏற்றி - அட்டகொடியும் ஏற்றி.

இருபத்து நாலா நாளி னிரதமூர் விழா நடத்தி
அருமைத்தா மூவொன் பானு ளமைந்தவுத் திரத்திற் றீர்த்தன்
திருவத்தி னுயிர்க ளெல்லாஞ் செழித்திட நல்கச் செய்து
மருமொய்த்த வலங்கற் சாலி சுகன்மிக மகிழ்ச்சி பூத்தான். 82

கு - ரை : இருபத்துநான்காம் நாளில் தேர்த்திருவிழா. மூவொன்பான் நாள் - இருபத்தேழாம்நாள் உத்திரத்தில் தீர்த்தம். மரு - வாசனை. அலங்கல் - மாலை. தீர்த்தன் - பரிசுத்தன். திருவத்தின் - திருவின்; அத்துச் சாரியை.

விடங்கர்தந் திருவி ழாவை யின்னணம் விருப்பிற் செய்து
மடங்கரும் வானுட் டுள்ளார் வரூதினி மன்னர் யார்க்கும்
அடங்கரு முவகை பொங்க வளவிலா முகமன் செய்தான்
கடங்கலுழ் கபோலச் சீற்றக் கந்துகொல் களிற்று வேந்தன். 83

கு - ரை : விடங்கர் - சுந்தரவிடங்கர். வரூதினி - சேனை. முகமன் - உபசாரம். கடம் கலுழ் கபோலம் - மதநீர் ஒழுகும் கபோலத்தையுடைய. சீற்றம் - கோபம். கந்து - கட்டுத்தறி. வேந்தன் - சாலிசுகன்.

அருட்டிரு வாரூ ராதி சிருட்டியி லண்ண லாரை
மருட்டிற னறத்தா பித்த முசுகுந்த லினுமாண் புற்ருன்
பொருட்டிற மலிகா ரோண புரத்தழ கரையி ரண்டாஞ்
சிருட்டியி னிறுத்த சாலீ சுகனென்ருர் தெளிந்தோர் யாரும். 84

கு - ரை: ஆதி சிருட்டியின் - முதல் சிருட்டியில். அண்ணலார் - சோமாஸ்கந்தர். மருள் திறன் அற - அஞ்ஞான மயக்கம் நீங்க. முசுகுந்தன் - சோழ அரசன். சோமாஸ்கந்த மூர்த்தியைத் திருவாரூர் முதலிய இடங்களில் தாபித்தவன் முசுகுந்தச் சக்கரவர்த்தி. மாண்பு உற்ருன் - சிறப்பு அடைந்தான். காரோணத்தில் இரண்டாம் சிருட்டியில் சாலீசுகன் சுந்தர விடங்கரைத் தாபித்தான்.

தெளிதர வின்னு மூன்ருஞ் சிருட்டியி லிவன்கு லத்தோர்
களிகிளர் மன்னன் ருேன்றிக் காமரு விடங்கர் தம்மை
அளிமறைக் குலம்பூ சித்த வருண்மறைக் காட்டிற் ருபித்
தொளிகிளர் பெரும்பே றுற்ரு னும்பரா தியர்வி யப்ப. 85

கு - ரை: மூன்ரும் சிருட்டியில் இவன் குலத்து ஓர் மன்னன் திருமறைக்காட்டில் விடங்கரைத் தாபித்தான்.

மற்றுமோர் விடங்கர் தம்மை வயங்குநா லாஞ்சி ருட்டி
உற்றிடு நாளவ் வெய்யோ னுயர்குலத் தொருவன் ருேன்றிக்
கற்றவர் புகழ்ந்து போற்றுங் காமரு திருநள் ளாற்றில்
அற்றமின் ருகத் தாபித் தளவிலாப் பெரும்பே றுற்ருன். 86

கு - ரை: நாலாஞ்சிருட்டியில் சூரியகுலத்திலே ஒருவன் தோன்றித் திருநள்ளாற்றில் விடங்கரைத் தாபித்துப் புகழ்பெற்ருன். வெய்யோன் - சூரியன். அற்றம் இன்ருக - துன்பமில்லாதிருக்க.

இன்னுமோர் விடங்கர் தம்மை வியைந்தவைந் தாஞ்சி ருட்டி
மன்னுநா ளம்மார்த் தாண்டன் குலத்தொரு மன்னன் ருேன்றிப்
பன்னுநான் மறையும் போற்றும் பைம்பொழிற் றிருக்கா ருயில்
என்னுமோர் தலத்திற் ருபித் தீறிலாப் பேறு பெற்ருன். 87

கு - ரை: மற்றும் ஓர் விடங்கரை ஐந்தாம் சிருட்டிக்காலத்தில் சூரிய குலத்தில் ஒரு மன்னன் தோன்றித் திருக்காருயிலில் தாபித்துப் பேறு பெற்ருன். மார்த்தாண்டன் - சூரியன்.

மீட்டுமோர் விடங்கர் தம்மை விளங்குமா ருஞ்சி ருட்டி
காட்டுநா ளவ்வா தித்தன் குலத்தொரு காளை தோன்றி
நாட்டுபல் லோரும் போற்றி நயந்தகோ ளிலியிற் ருபித்
தீட்டுபல் பேறும் பெற்ரு னிமையவ ரிறும்பூ தெய்த. 88

கு - ரை : ஆறாஞ்சிருட்டி நாளில் ஆதித்தன் குலத்தில் தோன்றிய ஒருவன் ஓர் விடங்கரைத் திருக்கோளிலி என்னும் தலத்தில் தாபித்துப் பேறுபெற்றான். ஆதித்தன் - சூரியன். இறும்பூது - ஆச்சரியம்.

பின்னுமோர் விடங்கர் தம்மைப் பிறங்குமே ழாஞ்சி ருட்டி
மன்னுநாண் முன்ன ருஞ்சொற்ற மார்த்தாண் டன் குலத்தோர் மன்னன்
துன்னுமா தவர்க ளனைருஞ் சூழ்பெருந் திருவாய் மூரில்
உன்னுமா தாப னஞ்செய் தொழிவில்புல் பேறும் பெற்றான். 89

கு - ரை : ஏழாஞ் சிருட்டியில் வேறொரு விடங்கரைச் சூரியகுலத் துதித்த ஒரு அரசன் திருவாய்மூரில் தாபித்து நீங்காத பல பேறுகளையும் பெற்றான். மாதவர்கள் நாளும் சூழும் - சிறந்த தவத்தையுடையோர் எப்போதும் சூழ்கின்ற.

எழுவிடங் கரையு மிவ்வா றெழுசிருட் டியினுந் தாவும்
எழுபரித் தேரோன் மைந்த ரெழுவரும் பெருமை வாய்ந்த
எழுபெருந் தலத்தின் கண்ணுந் தாபித்தா ரெனிலக் கீழ்பால்
எழுகதிர்க் குலத்து மேன்மை யிற்றென வியம்ப லாமோ. 90

கு - ரை : ஏழு விடங்கரையும்-சத்தவிடங்கரையும். எழுபரித்தேரோன்-சூரியன். ஏழு சிருட்டியினும் ஏழு விடங்கரை ஏழு தலங்களில் தாபித்த அரசர்கள் சூரியவமிசத்தில் தோன்றிய ஏழு அரசர்களாவார்கள்; ஆகலின், சூரியகுலத்தின் சிறப்பை இன்னதென எடுத்துச் சொல்ல இயலுமோ? இயலாது. சத்தவிடங்கத் தலங்களாவன :

" சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயில் — பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம். "

என்பதறிக. மற்றும், திருவாரூர் வீதிவிடங்கர், அசபா நடனம்; திருநாகை சுந்தரவிடங்கர், பாராவார தரங்க நடனம்; திருநள்ளாறு நகரவிடங்கர், உன்மத்த நடனம்; திருமறைக்காடு புவனிவிடங்கர், ஹம்ஸபாத நடனம்; திருக்காறாயில் ஆதிவிடங்கர், குக்குட நடனம்; திருவாய்மூர் நீலவிடங்கர், கமல நடனம்; திருக்கோளிலி அவனிவிடங்கர், பிருங்க நடனம் என்பர் பெரியோர். இந்த ஏழு தலங்களிலும் ஸ்ரீ தியாகராஜமூர்த்தி எழுந்தருளப் பெற்றிருத்தலின், இத்தலங்கள் சத்தவிடங்கத் தலம் என்று கூறப்படும்.

வேறு

புலமாரும் பதஞ்சலியும் பொருபுலிக்கான் முனிவரனும்
நிலமாரும் பெருந்தில்லை யம்பலத்தி னின்மலன்பொற்
கலமாரு முலைகாணக் காட்டுநடங் கண்டுவப்பார்
நலமாரு மனையர்தவ நாமேயோ புகழ்கிற்போம். 91

கு - ரை : புலம் ஆரும் பதஞ்சலி: புலம் - அறிவு என்றது சிவ ஞானத்தை. புலிக்கால் முனிவர் - வியாக்கிரபாதர். நின்மலன் - ஸ்ரீநடராச மூர்த்தி. சிவகாமியம்மையார் காணும்படி. அனையர் - பதஞ்சலி வியாக்கிர பாதர். நிலமாரும் தில்லை அம்பலம் என்றூர் சரீரத்தின்கண்ணும் புண்டரீக புரம் உளதாகலின் 'நிலமாரும்' என அடைகொடுத்துக் கூறினர். காணக் காட்டும் நடம் என்றமை குறிக்கத்தக்கது.

கண்ணியசூக் குமபஞ்சாக் கரநடனங் காண்பதற்கு
நண்ணியவாஞ் சையராகி நாகைக்கா ரோணமடைந்
தெண்ணியவா னவதீர்த்த முதலியவெத் தீர்த்தத்துந்
தண்ணியபே ராழியினுஞ் சார்ந்துபடிந் தனரெழுந்தார். 92

கு - ரை : கண்ணிய - அறிவாற் கணிக்கத்தக்க. சூக்கும பஞ்சாக்கர நடனமாவது:

" எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்
சிவாயநம என்னும் திருவெழுத் தஞ்சாலே
அவாயமற நின்றாடு வான்."

" ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்."

" சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்."

" தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

— *உண்மைவிளக்கம்—31, 32, 33, 35.*

நோக்கி அறிக; விரிப்பிற்பெருகும்.

வெள்ளியநன் னீற்றினெடு மேதகுகண் மணிபுனைந்து
தெள்ளியவான் சுவையமுத கடேசமுதற் செறிந்துள்ள
வள்ளியமாத் தலமனைத்துஞ் சென்றுசென்று மகிழ்ந்திறைஞ்சி
உள்ளியகா ரோணப்பே ருற்றசின கரம்புகுந்தார். 93

கு - ரை : விபூதி உருத்திராக்கந்தரித்து. அமுதகடேசம் முதலாகப் பொருந்திய எல்லாத்தலங்களையும் சென்று சென்று வழிபட்டுக் காரோணக்

கோயிலை அடைந்தனர். வான்சுவை அமுதம் - தேவாமிர்தம். சினகரம் - கோயில்.

அருந்தவர்த முளத்தொளியை யனைத்துயிரு மொருங்கீன்ற
கருந்தடங்க ணுமைபாகக் காரோணத் தாரமுதைப்
பொருந்தவடி தொழுவார்தம் பொருளாய பரம்பொருளைத்
திருந்தமகி ழுறக்கண்டு செங்கைகுவித் திறைஞ்சினர். 94

கு - ரை : அரிய தவத்தையுடையோர் உள்ளத்தில் ஒளியாக விளங்குபவரும், எல்லா உயிர்களையும் ஈன்றெடுத்த உமாதேவியை ஒருபாகத்திலுடையவரும், காரோணத்தில் எழுந்தருளிய அரிய அமுதம் போன்றவரும், தம்மை வழிபட்டுத் துதிசெய்யும் மெய்யடியார் வாழ்வாகவுள்ள பெரும் பொருளாகவுள்ளவரும் ஆகிய சிவபெருமானை மகிழ்ந்து வணங்கினர்.

மறையெனுமோர் பெருங்கூட்டில் வாழுமிளம் பசுங்கிளியை
நிறைதவத்தோ ருளப்புலத்து நேர்முளைத்த சுவைக்கரும்பைக்
கறைதபுக்குங் கருந்தடங்கட் கருங்குயிலைக் கண்டுதொழு
தறைபெருஞ்சுந் தரவிடங்கர் முன்சென்று ரருந்தவத்தோர். 95

கு - ரை : மறையாகிய பெரியகூடு, அதன்கண் வாழும் இளம்பச்சைக் கிளி அம்மையார்; தவசிகள் உளப்புலத்து முளைத்த சுவைக்கரும்பு அம்மையார்; கருங்குயில் அம்மையார். அம்மையாரை வணங்கிப்போற்றிச் சுந்தர விடங்கர் சந்நிதியை அடைந்தனர். உருவக அணி.

விண்ணாடு தலைசாய்த்து வெள்கவிரி திரைக்கடல்சூழ்
மண்ணாடு தலையெடுத்து வாழ்வுபெற மாதவத்தோர்
உண்ணாடு காரோணத் துற்றொளிர்சிந் தாமணியைக்
கண்ணாடு பயன்படைப்பக் கண்டுமகிழ்ந் தனர்தொழுதார். 96

கு - ரை : வெள்க - வெட்கப்பட. மா தவத்தோர் உள் நாடு - பெரிய தவத்தையுடையோர் உள்ளத்திலே அவன் அருளே கண்ணாகக் கொண்டு நாடுகின்ற. காரோணத்து உற்று ஒளிர் சிந்தாமணி இறைவர்; சிந்தாமணி என்னும் தெய்வமணி அமரர்நாட்டில் உள்ளது. இந்தச் சிந்தாமணி காரோணத்து ஒளிர்வது; நிலவுலகில் உள்ளது.

இளங்கதிரின் மணிமுடியு மெதிர்ப்படுகண் கவர்முகமுங்
களங்கமில்பொற் குழைக்காதுங் கருணைபொழி தருவிழியும்
வளங்குலவு செவ்வாயும் வழங்கெழில்கட் கொடுவாரி
விளங்குமன வறைநிறைத்தார் கிண்கிணித்தா டெரிவிருப்பார். 97

கு - ரை : கிண்கிணித்தாளை ஆராய்ந்து சிந்திக்கும் விருப்பமுடைய முனிவர்கள் மணிமுடியும், முகமும், குழைக்காதும், விழியும், செவ்வாயும்

பொருந்திய அழகிஜேக் கண்ணுல் அள்ளித் தமது மன அறையிலே நிறையச் செய்தனர். இளங்கதிர் - உதய சூரியன். எழில் - அழகு.

காலங்க டவருமா லிவ்வாறு கண்டிறைஞ்சிச்
சீலங்கொள் பெருமுனிவர் திருந்துதவம் புரிகாலை
ஆலங்கொ டிருமிடற்று விடங்கரவ ரெதிர்தோன்றிக்
கோலங்கொ ளெதுவேண்டுங் குறித்ததுரைத் திடுமினென. 98

கு - ரை: தரிசனம் செய்தற்குரிய காலங்கள் எல்லாம் தவருமல் தரிசித்து வணங்கினர். ஆலம் - ஆலகாலவிடம். மிடறு - கழுத்து. விடங்கர் - சுந்தரவிடங்கர். குறித்தது - கருதிவந்தது.

களிசெயச பாநடனங் காணவிரும் பினமளவா
ஒளிசெய்திரு மேனியா யுவந்தருள வேண்டுமெனக்
கிளிசெய்மொழி யொருபாலார் தனுமதியிற் கிளர்செங்கை
அளிசெய்நடம் புரிதுமென வருளிமறைந் தனரன்றே. 99

கு - ரை: களிசெய் - களிப்பைத்தரும். அசபா நடனம் - அசபைக் கூத்து. அளவா - அளவிடமுடியாத. கிளிசெய் மொழி - உமாதேவியார்: அன்மொழித்தொகை. பால் - பக்கம். தனுமதி - மார்கழித்திங்கள். செங்கை - திருவாதிரைநாள். அளிசெய் நடம் - ஆன்மாக்களுக்குக் கருணைபுரியும் நடனம்.

கலைமுழுது மையமறக் கற்றுணர்ந்த முனிவர்மதிச்
சிலையிலொரு செங்கையுறத் தெரிந்துகுனித் தருளுமெனத்
தலையமைசுந் தரவிடங்கர் தம்மெதிர்சார்ந் தனரவரும்
உலைவின்முழ வாதியிய மொருங்கியம்பும் படிநடித்தார். 100

கு - ரை: முனிவர் - பதஞ்சலி, வியாக்கிரபாதர். மதிச்சிலையில் ஒரு செங்கை உற - தனுர்மாதத்தில் ஒப்பற்ற திருவாதிரை நட்சத்திரம் வந்து பொருந்த. குனித்தருளும் - நடனஞ்செய்தருளுவர். உலைவு இல் முழவு ஆதி - கெடுதலில்லாத முழவம் முதலிய; எனவே சுத்தமத்தளம், கொக்கரை என்னும் வாத்தியங்களை.

நானந்த வாதகுழ லுயகியை யொருபுறங்கொண்
டானந்த மேயுருவா யமைந்தருள்சுந் தரவிடங்கர்
தேனந்த மலர்தூவி யிருவர்களுஞ் சேவிப்ப
மோனந்த வாப்பிறரு முயங்கியுவப் புறநடித்தார். 101

கு - ரை: நானம் - புழுகுநெய். தேன்நந்த - தேன்பெருக. மோனம் தவா - மௌன நிலையின் நீங்காத. இருவர்களும் - பதஞ்சலி வியாக்கிர பாதர் இருவரும்.

"மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடும் - ஆனந்தம்
மொண்டருந்தி நின்றாடல் காணுமருள் மூர்த்தியாக்
கொண்டதிரு அம்பலத்தான் கூத்து."

(உண்மை விளக்கம் - 37.)

இந்நடமிந் நாளி லியாங்கண்டு தொழுதபடி
சந்தமுற வெவ்வுயிருந் தாங்கண்டு தொழுதிடுமா
முந்தவரந் தருகென்று முனிவரிரு வருமிரப்ப
அந்தமிலாப் பரமனுமற் றாகவென வருள்புரிந்தான். 102

கு - ரை: இந்நாள் - மார்கழித் திருவாதிரை நாள். தொழுதிடுமாறு. முந்த வரம் - முற்பட்ட வரத்தை.

நல்லார்க டாம்பெற்ற நாடரிய பெரும்பேற்றை
எல்லாரும் பெறவேண்டு மெனக்கருதி முயன்றிடுவார்
அல்லார்மற் றதுகுறியா ரகனிலத்தென் பதையுணர்ந்தாம்
வல்லாரிவ் விருவருமிவ் வரம்பெற்ற திறங்கொண்டே. 103

கு - ரை: முதல் இரண்டடி: 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற (85) திருமந்திரத்தை நினைப்பிக்கும். நல்லார் - நல்லோர்கள். அல்லார் - நல்லோரல்லாத தீயோர். குறியார் - எண்ணார். வல்லார் - ஞான வலியுடையோர்.

ஒள்ளியகிண் கிணியொலிக்கு மொண்மலர்த்தா ளதுகாட்டத்
தெள்ளியசிந் தனைமுனிவர் சேவித்துக் களிகூர்ந்து
நள்ளியவா னந்தமெழ நயந்தேத்தி விடைகொண்டே
உள்ளியதம் மிருக்கைமரீஇ யுவந்துவாழ்ந் திருந்தனரே. 104

கு - ரை: மலர்த்தாளது: அது பகுதிப் பொருள்விகுதி. நள்ளிய ஆனந்தம் - பொருந்திய ஆனந்தம்.

புலிமுனியும் பணிமுனியும் போற்றியினி துறவேண்ட
ஒலிகெழுகிண் கிணித்தாளா ருதவுவரத் தின்படியே
நலிவில்சிலை மதிதோறு நலங்கிளரா திரைநாளின்
மலியருளி னசபைநடம் புரிகுவர்மன் னுயிருய்ய. 105

கு - ரை: புலிமுனி-வியாக்கிரபாதர். பணிமுனி-பதஞ்சலி முனிவர். கிண்கிணித்தாளார் - சோமாஸ்கந்த மூர்த்தி: "ஆடரவக் கிண்கிணிக்கா லழகர்" ஆகலின். நலிவு இல் சிலைமதி - சோர்வில்லாத தனுர்மாதம். நலம் கிளர் ஆதிரை நாள் - நன்மை மிகுந்த திருவாதிரை நட்சத்திரம். அசபை நடம் - அசபாநடனம்.

எதுகாறு தொழிந்தாலு மிந்நடமாத் திரங்காண்பார்
மதுமாலைக் குழன்மனைவி மக்களுடன் வாழ்ந்திருந்து
முதுவானப் பெரும்போக முயங்கியனு பவித்தீற்றிற்
சதுவேதன் முதலோருஞ் சாரரிய பதஞ்சார்வார். 106

கு - ரை : இ நடம் மாத்திரம் - இந்த நடனத்தை மட்டும் என்றது மார்கழித் திருவாதிரையிற் செய்யும் நடனம் என்க. மது - தேன். முது - பழமையான. முயங்கி - கலந்து. சதுவேதன் - பிரமன்.

அந்திமதி புனைந்தமுடி யழகவிடங் கருக்குயர்செவ்
வந்திமலர் தொடுத்தணிய வல்லவரம் மலரொன்றற்
குந்தியெழு பெருங்கற்ப மொன்ருக வேறுகைக்கு
நந்தியமர் சிவலோக நண்ணரிவாழ்ந் தினிதுவப்பார். 107

கு - ரை : அந்த மதி - இளம்பிறைச் சந்திரன். அழகிய விடங்கர் - இத்தலத்தில் எழுந்தருளியுள்ள சோமாஸ்கந்தர். செவ்வந்திமலர் ஒன்றற்கு பெரிய கற்பம் ஒன்று வீதம். ஏறு உகைக்கும் நந்தி - இடபத்தை ஏறிச் செலுத்தும் சிவபெருமான்.

வானுடு வெறுத்துவரி மண்ணுடு தக்கதெனக்
கானுடு பொழில்சூழுங் காரோணம் புகுந்தமர்வார்
தேனுடு மதுப்பொழியுஞ் செங்கழுநீர் விரும்புதலாற்
பானுடு மவைவிருத்தி பண்ண நிலங் கொடுத்தாரும். 108

கு - ரை : வான் நாடு - விண்ணுலகம். உவரிமண் நாடு-கடல் சூழ்ந்த நிலவுலகம். கால் நாடு - காற்று விரும்பும்; கான் - வாசனை என்றுமாம். காரோணம் புகுந்து அமர்வார் - இத்தலத்துச் சோமாஸ்கந்தர். செங்கழுநீர் - செங்கழுநீர்ப் பூமாலையை. பால் - பக்கத்திலே. அவை - செங்கழுநீர்ப்பூ. குளகம்: "குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்".

கூடுபல வோடைபெருங் குளங்களுறச் சமைத்தாரும்
நீடுபுன னிறைத்தாரு நிகழ்கிழங்கு பதித்தாரும்
நாடுமவை சிதையாம னகுவேலி யமைத்தாரும்
ஏடுசெறி மலர்புனிதத் தெடுத்துவந்து கொடுத்தாரும். 109

கு - ரை : கொடுத்தாரும்; சமைத்தாரும், நிறைத்தாரும், பதித்தாரும், அமைத்தாரும், எடுத்துவந்து கொடுத்தாரும் என்க. குளகம்.

மீறிதிரைவா ரிதிபுடைசூழ் வையமுழு வதுமொருகோல்
நெறிமுறையிற் செலவுய்த்து நெடுங்கால முறவாழ்ந்து
முறிமலர்க்கற் பகநாடு முதலியபற் பலநாட்டுச்
செறிபலபோ கமுந்துய்த்துச் சிவபதமீற் றடைந்துவப்பார். 110

கு - ரை: வாரிதி - கடல். வையகம் - பூமி. ஒரு கோல் - ஒப்பற்ற செங்கோல். நெறி 'முறையில் - நீதிவழியே. 'முறி - தளிர். செறிந்த பல போகங்களும். ஈற்று அடைந்து - இறுதியில் சென்று.

புண்ணியமே மிகத்தழையப் போதுமீ ரயனங்கள்
விண்ணியல்செங் கதிர்துலாமே டவிராசி யின்விரும்பி
நண்ணியவே லைகளானி நலங்கெழுபங் குனிமதியத்
தெண்ணியவுத் திரமுறுநா ளிவைவிசே டம்படுநாள். 111

கு - ரை: ஈர் அயனங்கள் - இரண்டு அயனங்கள். விண் இயல் செங்கதிர் - சூரியன். துலாராசி, மேடராசிகளில் சூரியன் வருங்காலம்: ஐப்பசி விஷு, சித்திரை விஷு. ஆனி உத்திரம், பங்குனி உத்திரம் இவைகள் சிறந்த காலங்கள்.

இந்தவிசே டம்படுநா ளெழில்விடங்கர் தமையாட்டச்
சந்தநறுந் துயிலம்பா றயிரயிர்செங் கழைச்சாறு
நந்தவிரை படும்பனிநீர் முதலியவு நயந்தளித்தார்
அந்தமிலா தடைபேற்றை யாரேயோ வறைகிற்பார். 112

கு - ரை: இந்த விசேட காலங்களில் அழகிய விடங்கருக்கு அபிஷேகம் செய்ய நறுந்தயிலம், பால், தயிர், சருக்கரை, செங்கருப்பஞ் சாறு, பனிநீர் முதலியவற்றை விரும்பிக் கொடுப்போர் முடிவில்லாமல் பெறும் பேற்றை யாரே சொல்வார். அயிர் - சருக்கரை, வெல்லம். ஆட்ட - அபிஷேகிக்க. கழை - கரும்பு. விரை - வாசனை. நயந்து - விரும்பி.

தென்புலவா ணருக்கியற்று மருங்கடன்றீர்த் திடற்பொருட்டு
நன்புலமைந் தரைவேண்டி நானிலத்திற் றவமுழப்போர்
என்புநெகிழ்ந் துருகுவித மிருந்துநடித் தருள்வானை
அன்புமிகத் தவிராதோ ராண்டுபணி தரிற்பெறுவார். 113

கு - ரை: தென்புல வாணர் - பிதிரர். நன் புல மைந்தர் - நல்ல அறிவுள்ள புத்திரர். தவம் உழப்போர் - தவஞ்செய்வோர். இருந்து நடித் தருள்வான் - இருந்தாடழகர். தவிராது ஓர் ஆண்டு - நீங்காமல் ஒரு வருடம். பணிதரில் - விதிப்படி வழிபாடு செய்யின்; புத்திரப் பேறு வேண்டுவோர் அதனைப் பெறுவர்.

அருந்தவர்த முளத்தொளியா மழகவிடங் கரைப்போற்றில்
திருந்தமகப் பெற்றுவத்த றிண்ணமிதற் கையமிலை
பொருந்தவழி படுநாளிற் புனத்துழாய் முடியாற்குக்
கருந்தடங்க ணுமையளித்த காதல்வரம் பொய்போமோ. 114

கு - ரை : அழகவிடங்கர் - அழகிய விடங்கர். பெற்று உவத்தல் திண்ணம். புனத்துழாய் - முல்லை நிலத்திலுள்ள திருத்துழாய் மாலை. முடியான் - முடியையுடைய திருமால். திண்ணம் - உறுதி. காதல் வரம் - விரும்பிய வரம்.

அருமறையின் முடிப்பொருளா யமருமழ கியவிடங்கர்
தருமசரித் திரஞ்சிறிது சாற்றினு மயோத்திவளர்
பெருமனுவின் குலத்துதித்த தசரதன்பெட் பொடுபுகுந்து
பொருமலறச் சனிப்பதிட்டை புரிந்ததிற மெடுத்துரைப்பாம். 115

கு - ரை : அரிய வேதங்களின் சிரப்பொருளாக வீற்றிருக்கும் அழகிய விடங்கர் வரலாறு கூறினேம். அயோத்தியிலுள்ள மனுகுலத்துதித்த தசரதசக்கரவர்த்தி. பெட்பு - விருப்பம். சனிப்பதிட்டை - சனிபகவானுடைய பதிட்டை.

சுந்தரவிடங்கப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1411

இருபத்திரண்டாவது

சனிப் பிரதிட்டைப்படலம்

புதையிருள் கிழிசுடர் போன்ற நந்திதாள்
இதையம்வைத் தொருசனற் குமார னேத்துபு
ததைபுகழ்த் தசரதன் சனிப்ப திட்டைசெய்
கதையுரைத் திடுகெனக் கழறு வானவன். 1

கு - ரை: புதை இருள் கிழி சுடர் - சூரியன். ஏத்துபு - துதித்து. ததை புகழ் - நெருங்கிய புகழ். கழறுவான் - சொல்லுவாராயினர்.

நலமலி கோசல நாட ளிப்பவன்
வலமலி யயோத்தியின் வாழும் வாழ்க்கையான்
குலமலி பரிதிதன் குலத்திற் பூத்தவன்
நிலமலி யுயிரெலாங் காக்கு நீர்மையான். 2

கு - ரை: அளிப்பவன் - காப்பவன். வலம் மலி - வெற்றி நிறைந்த. பரிதிதன் குலம் - சூரியகுலம். பூத்தவன் - தோன்றியவன். நீர்மையான் - தன்மையுடையான்.

கலைமுழு துணர்ந்தவன் கருத லாருயிர்
அலைசெயும் வாளின னருளின் வாழ்க்கையான்
தலையமை நீதியான் றடித்த தோள்வட
மலைபுரை தசரத மன்ன னென்பவன். 3

கு - ரை: கருதலார் - பகைவர். அலைசெயும் - வருத்தும். வடமலை - மேருகிரி; இமயமலை எனினுமாம். தசரதன் - பத்துத்திக்கிலும் ரதத்தைச் செலுத்துபவன்.

அன்னவன் மன்னுயி ரனைத்து மோம்பிடும்
நன்னலத் தமைந்துகோ னடாத்து நாள்வயிற்
பன்னருஞ் சோதிடப் பயிற்சி மிக்கவர்
என்னரு மடைந்தன ரிருக்கை நல்கினன். 4

கு - ரை: ஓம்பிடும் - காக்கும். கோல் - செங்கோல். நாள்வயின் - நாளில். என்னரும் - யாவரும்.

ஒருங்குநீ ரடைந்ததென் னுணர்த்து வீரென
அருங்குரைத் தெனவுல களிக்கு மாரருட்
பெருங்குணத் தவவுயி ரனைத்தும் பேதுற்று
முருங்குவ தாக்குநாண் முளைக்கு மேலரோ. 5

கு - ரை : ஒருங்கு - ஒருசேர. பேதுற்று - வருந்தி. முருங்குவது - அழித்தலை. முளைக்கும் - தோன்றும்.

விராவுமற் றஃதெவ னெனவி னுவிடில்
தராதிப வுரோகணி சகடம் பேதித்தே
இராவடு கதிர்மக னியங்கு நீர்மையாற்
பராமழை பன்னிரு வருடம் பாறுமால். 6

கு - ரை : தராதிப - அரசனே. உரோகணி நாள். சகடம்பேதித்து - சுற்றுவதை மாற்றி. கதிர்மகன் - சனி. பன்னிரு வருடம் பாறும் - பன்னிரண்டு ஆண்டுகள் நீங்கும். பாறும் - கெடும்.

மழையொரு பன்னிரண் டாண்டு மாறுமேற்
குழையுயிர் படுந்துயர் கூறல் வேண்டுமோ
கழைசுளி களிற்றினாய் கருத்தி னோரெனப்
பிழையில்சோ திடத்தவர் பேசிப் போயினர். 7

கு - ரை : கழை சுளி களிற்றினாய் - குத்துக் கோலைக் கோபிக்கும் யானைச் சேனையையுடையவனே. ஓர் - ஆராய்ந்தறிக. பேசிப் போயினர் - சொல்லிச் சென்றனர்.

மற்றது கருத்துற மதித்த மன்னவன்
உற்றவித் துயர்க்கெவ னொழிவென் றுய்ந்தனன்
செற்றவெங் கதிர்மக னமருந் தேமுறக்
கொற்றவன் றேர்மிசைக் கொண்டு போயினான். 8

கு - ரை : உற்ற இ துயர்க்கு. ஒழிவு - பிராயச்சித்தம், கழுவாய். வெங்கதிர் மகன் - கொடிய சனி. தேம் - இடம்.

கடுவிசை யோடுதேர் ககனஞ் செல்லுழி
வடுவிறன் குலமுதல் வழியிற் றோன்றினான்
அடுதிறற் களிற்றின னவனைத் தாழ்ந்தனன்
முடுகியிங் கடைதர முடிந்ததென் னென்றான். 9

கு - ரை : ககனம் - ஆகாயம். வடு இல் - குற்றமில்லாத. தன் குல முதல் - சூரியன். அவனை - சூரியனை. முடுகி - விரைந்து. அடைதர - அடைய.

உயிர்திறம் பாவகை யொருங்கு காத்திடுஞ்
செயிரறு விரதநான் சேரக் கொண்டுளேன்
கயிரவப் பகைவநின் காதற் சேய்வெளி
றயிருடைப் பதுவென வுடைத்த ருன்செய்வான். 10

கு - ரை : உயிர் திறம்பா வகை - உயிர்கள் வருந்தாத வண்ணம். செயிர் அறு - குற்றமற்ற. இரதம் - தேர். கயிரவப் பகைவ - அல்லிமலருக்குப் பகைவனே; கயிரவம் - அல்லி. காதற்சேய் - அன்புடைய மகனாகிய சனி.

தருதிற லுரோகணி சகடம் பேதித்து
வருதிற லடைந்தனன் மற்ற வன்னெடும்
பொருதிறல் புரிந்தது மாற்றப் புந்திசெய்
தொருதிற லாழித்தே ராயுற் றேனென்றான். 11

கு - ரை : திறல் - வல்லமை. பொரு திறல் புரிந்து - போர் செய்து. அது மாற்ற - அவ்வலியைக் கெடுக்க. புந்தி செய்து - எண்ணி. ஒரு திறல் ஆழித் தேராய் - ஒற்றைச் சக்கரம் கோத்த தேரையுடைய சூரியனே. ஆழி - சக்கரம்: "ஓராழி வெய்யவன் சூழுலகு" (திருவரங்கத்தந்தாதி).

என்றலு மவன்கருத் தெய்த்த சூரியன்
கன்றம ரரற்றிடிற் கழியு நாள்பல
பொன்றல்செய் வற்கடம் போந்து மீளுமால்
நன்றல விதுவினு நவிலக் கேட்டியால். 12

கு - ரை : அவன் கருத்து - தசரதன் எண்ணத்தை. எய்த்த - அறிந்த. கன்று அமர் - வருத்தத்தைச் செய்யும் போர். பொன்றல் செய் வற்கடம் - ஆருயிர்களை அழியச் செய்யும் பஞ்சம்.

கோணிலை யனைத்துநங் குழக னாணையே
நாணிலை யியக்கமு நவிலில் வேறுகொல்
விணிலை யுடற்றலின் விழைவ தென்னையொள்
வாணிலை தடற்றினய் மதித்தல் செய்தியால். 13

கு - ரை : கோள்நிலை அனைத்தும் - கிரகங்களின் நிலைமைகள் எல்லாம். குழகன் ஆணையே - சிவபெருமானுடைய கட்டளையேயாம். நாள்நிலை இயக்கமும் - நட்சத்திரங்களின் சஞ்சாரமும். உடற்றலின் - மாறுபடுவதால். வாள்நிலை தடற்றினய் - வாளைச் செறித்த உறையையுடையவனே.

முனிசம ராற்றுபு முடிக்கு மாண்பினுங்
கனிதர வடுத்துறக் கலந்து கண்ணிய
தினிதுற முடித்திட லேற்ற மாகுமால்
துனியற வுயிர்க்கருள் சுரத்தல் பூண்டுளாய். 14

கு - ரை : முனி சமர் ஆற்றுபு - கோபித்துப் போர்செய்து. கனிதர - இரக்கத்துடன். அடுத்து உறக் கலந்து - பொருந்தி மிகவும் அளவளாய். கண்ணியது - கருதியவற்றை. துனி அற - துன்பமின்றி.

ஓங்குசீர் நாகைக்கா ரோண முற்றருட்
பாங்குமே வுறப்பரம் பரனைப் போற்றுபு
தேங்குபே ரருள்கொடு செயிர்க்கும் பங்குவை
ஆங்குநீ தாபித்தர்ச் சனையி யற்றிடில். 15

கு - ரை : பரம்பரன் - மேலானவற்றினும் மேலானவன்; சிவபெருமான். செயிர்க்கும் பங்குவை - கோபிக்கும் முடவனை; பங்கு - முடவன், சனி.

எண்ணிய காரிய மெளிதி னெய்தலாம்
கண்ணிய தல்லவுங் கைக்க ணெல்லியா
வண்ணிய வதுபுரிந் தருள்வி ராவிட
மண்ணிய மணிநிகர் மைந்த போவென்றான். 16

கு - ரை : கண்ணியது அல்லவும் - எண்ணாத காரியத்தையும். கைக்கண் நெல்லியா - உள்ளங்கை நெல்லிக்கனியாக. அது புரிந்து - தாபித்து அர்ச்சனை செய்து. அருள் விராவிட - அருள் பொருந்த. மண்ணிய மணி - கழுவப்பட்ட மாணிக்கம்; சாணையில் தேய்த்த இரத்தினம் என்க.

உற்றதன் குலமுத லுரைத்த வாய்மொழி
அற்றமின் றுலென வகத்த மைத்தனன்
கற்றவர் புகழ்கழற் கான ரேந்திரன்
நற்றவர் மருவுங்கா ரோணா நண்ணினான். 17

கு - ரை : தன் குலமுதல் - சூரியன். அற்றமின்று - துன்பமில்லாதது. கழற்கால் நரேந்திரன் - வீரக்கழலை அணிந்த காலையுடைய அரசன். நற்றவர் - நல்லதவமுடைய பெரியோர்.

மேதகு பெரும்புகழ் விருத்த காவிரித்
தீதறு சங்கமஞ் செறிந்து மூழ்கினான்
போதர மற்றுள புனலு மாடினான்
ஆதரத் தொடுந்தல மனைத்தும் போற்றினான். 18

கு - ரை : சங்கமம் - காவிரி கடலொடு கலக்குமிடம். மற்றுள புனல் - மற்றுள்ளனவாகிய தீர்த்தங்களில். ஆதரத்தொடும் - விருப்பினோடும்.

மருந்தமுண் டமரரை யன்று வாழ்வித்த
பெருந்தகைப் பரமனைப் பேணிப் போற்றுபு
கருந்தடங் கண்ணியைக் கலந்து தாழ்ந்தனன்
அருந்தவத் திறலுடை யயோத்தி யாண்டகை. 19

கு - ரை : மருந்தம் - ஆலகாலவிடம். அயோத்தி ஆண்டகை - தசரதன்.

உள்ளநெக் குருகிட வுவகை பொங்கிடத்
தள்ளரும் விழிப்புன லுரை யாயிட
வெள்ளநன் முடியெழில் விடங்கத் தாணுவாம்
வள்ளலைத் தொழுதெழூஉ வழுத்தல் செய்தபின். 20

கு - ரை : தள்ள அரும் - நீங்குதற்கரிய. எழில் விடங்கத்தாணு ஆம் வள்ளல்: எழில் விடங்கத்தாணு - அழகிய விடங்கராகிய கடவுள்; வள்ளல் - தியாகேசர்.

அவனரு ளடைந்தவற் கயலி ராக்கதத்
தவலருந் திசைத்தளி சமைத்துக் காரியை
நவமுறத் தாபித்து நயக்கு நீனிறக்
கவலருங் கலைநலங் கவினச் சாத்தியே. 21

கு - ரை : அவன் அருள் - அவ்வழகிய விடங்கரது அருள். அவற்கு - அப்பெருமானுக்கு. அயல் - பக்கத்தில். இராக்கதத்திசை - நிருதித்திசை. தளி - கோயில். காரி - சனிபகவான். நவம் உற - புதிதாக. நீல் நிறக் கலை - நீலநிறம் பொருந்திய ஆடை. கவின - அழகாக.

திலம்படு மூரலுஞ் சிறப்ப வூட்டுபு
நலம்படு பூசனை நயக்க வாற்றலும்
வலம்படு சவுரியவ் வுருநின் றேவரைக்
குலம்படு தோளன்முன் குறுகி நின்றனன். 22

கு - ரை : திலம் படு மூரல் - எள்ளோதனம். நயக்க - நன்மை பொருந்த. வலம் படு சவுரி - வலிமை பொருந்திய சனி. அந்த வடிவில் நிலைபெற்றே தசரதன் முன்குறுகி நின்றனன். வரைக்குலம் படுதோளன் - தசரதன்.

மன்னநின் பூசனை மகிழ்ந்து ளேனுளத்
துன்னிய வரமெவ னுரைத்தி யாலெனத்
தன்னிக ருரோகணி சகடம் பேதித்தால்
இன்னலி னழுந்துமெவ் வுயிரு மேந்தலே. 23

கு - ரை : தன்நிகர் - தனக்குத்தானே ஒப்புடைய. இன்னலின் அழுந்தும் - துன்பத்துள் மூழ்கும்.

அதுபுரி யாதியென் றரசன் வேண்டலும்
முதுமக னியைந்தனன் மொழிந்த தன்றியும்
மதுமலர்த் தாரவென் வாரத் திவ்வயிற்
புதுமலர் கொண்டெனைப் போற்று வாரெலாம். 24

கு - ரை : அது புரியாதி - அத்துன்பத்தைச் செய்யாதருள்க. முதுமகன் - சனிபகவான். என் வாரத்து - சனிக்கிழமையில். இவ்வயின் - இவ்விடத்தில்.

கலங்கயான் புரிதுயர் கைக்கொ ளாரென
அலங்கொரு வரமுநன் கருளி யவ்வுரு
விலங்குரு தமர்ந்தனன் சந்தில் வேந்தனும்
அலங்கலி லயோத்தியிற் புக்கு வாழ்ந்தனன். 25

கு - ரை : யான் புரி துயர் - யான் செய்யும் துன்பம். அலங்கு ஒரு வரமும் - பொருந்திய ஒரு வரத்தையும். விலங்குருது - நீங்காமல். வேந்தன் - தசரதன்.

பராவுமன் னவன்சனிப் பதிட்டை செய்திறம்
விராவுபல் லுயிர்பொருட் டதுவி ளம்பினும்
தராதலம் போற்றிடு மேன்மை தங்கிய
இராமநா தன்வர வினிதி யம்புவாம். 26

கு - ரை : பராவும் மன்னவன் - தசரதன். விராவு பல்லுயிர்ப் பொருட்டே சனிப்பதிட்டை செய்தான்; பதிட்டை - பிரதிட்டை. தராதலம் - நிலவுலகம்.

சனிப் பிரதிட்டைப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம்— 1437

இருபத்துமூன்றாவது

இராமநாதப்படலம்

வானார் பலருந் தொழுநந்தி வள்ள லிருதாண் மலர்பழிச்சி
ஊனார் பிறவிப் பிணிப்புமுழு தொழிந்த சனற்கு மாரமுனி
ஆனார் துவசம் வலனுயர்த்த வருள்கூ ரிராம நாதரது
தேனார் சரிதங் கூறுகெனச் செவ்வாய் மலர்ந்தன் னவன்புகல்வான். 1

கு - ரை: வானார் - தேவர்கள். பழிச்சி - துதித்து. பிணிப்பு - கட்டு. ஆன் ஆர் துவசம் - இடபம் எழுதிக்கட்டிய கொடி. தேன் ஆர் - இனிமை பொருந்திய. அன்னவன் - நந்திவள்ளல். கூறுக என.

போக மலிந்த பொன்னாட்டிற் பொலியு மொருகோ சலநாட்டின்
மேக முரிஞ்சு மதிலுடுத்த வயோத்தி நகரான் விறல்வேந்தன்
மாகம் வழுத்துந் தசரதப்பேர் வள்ளன் மகவு பெறவேண்டி
மோக மிரித்த கலைக்கோட்டு முனிவன் யாகம் புரிகாலை. 2

கு - ரை: பொன்னாட்டிற் பொலியும் - விண்ணுலகம் போல விளங்கும்: இன் ஒப்புப்பொருள் ஐந்தனுருபு. மாகம் - விண்ணாடர். மோகம் இரித்த - மோகம் முதலியவற்றைக் கெட்டோடச் செய்த.

ஆய பிண்ட நாற்கூறிட் டமைந்த மூன்று மனைவியர்க்கு
நேய விறைநல் கிடப்பிருகு நிகழ்த்து மொழியா னெடியமால்
தூய துணைவர் மூவரொடுந் தோன்றி யிராம னெனும்பெயர்பூண்(டு)
ஏய வளர்நா ளொருமுனிபின் னெய்தி னானோ ரிளவலொடும். 3

கு - ரை: பிண்டம் - அவிப்பாகம். நாற்கூறு - நான்கு பாகம். மூன்று மனைவியர் - கோசலை, கைகேயி, சுமித்திரை என்பவர். பிருகு - பிருகு முனிவர். நெடியமால் - திரிவிக்கிரமனாகிய திருமால். நிகழ்த்து மொழி என்றது சாபத்தை. துணைவர் மூவர் - பரதன் இலக்குவன் சத்துருக்கனன். ஒரு முனி பின் - விசுவாமித்திர முனிவன் பின்பு. ஓர் இளவல் - இலக்குவன்.

அந்த முனிவன் மகங்காப்பா னரக்கி யொடுமற் றவள்மகவுஞ்
சிந்த வடுவெங் கணைதூண்டிச் சிலைமா தாகும் படிநடந்து
முந்த மிதிலை வின்முறித்து முயங்குஞ் சனகி தனைமணந்து
வந்த பரசி ராமனடன் மாற்றி யயோத்தி நகரடைந்து. 4

கு - ரை : மகம் காப்பான் - செய்யும் யாகத்தைப் பாதுகாக்கும் பொருட்டு. அரக்கி - தாடகை. அவள் மகவு - மாரீசன், சுபாகு. சிந்த-அழிய. மிதிலை வில் முறித்து-மிதிலை நகரில் சனகராசன் தன்மகள் கல்யாண நிமித்தமாக வைத்திருந்த வில்லை ஒடித்து. சனகி - சனகன் புதல்வி: வடமொழித் தத்திதபதம். அடல் மாற்றி - வலியைக் கெடுத்து.

சிறுதாய் மொழியத் தம்பியொடுஞ் சீதை தொடர வனம்புகுந்து
தெறுவேட் டுவனை நட்டுநெடுந் திறல்வி ராத னுயிர்கவர்ந்து
மறுவீர் முனிவ ரொடுங்கலவி வளமார் கோதா விரிதீரத்
துறுநா ளடைந்த சூர்ப்பநகை முலைமூக் கொருங்கு கெடலாலே. 5

கு - ரை : சிறுதாய் - சிற்றன்னையாகிய கைகேயி; சிறுமையுடைய தாய் எனவும் கொள்ளக்கிடத்தல் காண்க. தம்பியோடும் - இலக்குவனோடும். தெறு வேட்டுவன் - குகன். நட்டு - சினேகம் செய்து. விராதன் - ஓர் அசுரன். கலவி - கலந்து. சூர்ப்பநகை - இராவணன் தங்கை. கோதா விரி தீரத்து உறு நாள் - கோதாவிரி நதிக்கரையில் தங்கியிருந்த காலத்து.

வந்த கரனு தியர்மடிய மாட்டி மாய மான்றொலைத்து
நந்த வொருபுட் கியற்றுகட னவின்று சீதை தனைத்தேடி
முந்த வருகாற் கவந்தனுயிர் முடித்துச் சவரி பூசனைபெற்
றுந்த வொருகிட் கிந்தையடைந் துயங்க வாலி யுயிர்மாட்டி. 6

கு - ரை : கரனுதியர் - கரதூஷணன் முதலியோர். மாட்டி - சவட்டி. மாய மான் - மாயையினால் மான்வேடங்கொண்ட மாரீசனை. ஒரு புட்கு இயற்று கடன் - சடாயு என்னும் கழுகரசனுக்குச் செய்யும் இறுதிச்சடங்கு. கவந்தனைக் கொன்று, சபரியினால் உபசரிக்கப்பெற்று. உயங்க - வருந்த. உயிர் மாட்டி - உயிரைக் கவர்ந்து.

நட்ட பரிதி மகற்கரசு நல்கி யவனும் வரூதினியுங்
கிட்ட வளியீன் றவன்சீதை நிலைமை தேர்ந்து கிடைத்துரைப்பப்
பட்ட விலங்கை யடைவதற்குப் பறம்பு செறித்துப் பரவையணை
கட்ட மதித்து மேற்செய்யக் கடவ துணர்ந்துங் காகுத்தன். 7

கு - ரை : நட்ட பரிதி மகற்கு - நண்பு பூண்ட சூரியன் மகனாகிய சுக்கிரீவனுக்கு. வரூதினியும் - சேனையும். வளி ஈன்றவன் - வாயுபுத்திரனாகிய அநுமான். சீதை நிலைமை தேர்ந்து உரைப்ப. பறம்பு செறித்து - மலைகளைப் பிடுங்கி நெருக்கி. பரவை அணைகட்ட மதித்து - கடலில் அணை கட்டக் கருதி. காகுத்தன் - இராமன்.

நாடு நாகைக் காரோண நயந்து புகுந்து பெருஞ்சிறப்புக்
கூடும் விருத்த காவேரி கூடும் பரவை யகந்தோய்ந்து
நீடு திருவெண் ணீறணிந்து நிலவு திருவைந் தெழுத்தெண்ணி
ஆடு பெருமான் காரோணத் தண்ண லடித்தா மரைபணிந்து. 8

கு - ரை: விருத்த காவேரி கூடும் பரவை யகம் - விருத்த காவேரி சங்கமத்தில். நீறணிந்து, விதிப்படி ஐந்தெழுத்தெண்ணி. ஆடுபெருமான் - அசைந்தாடும் பெருமான். ஆடுதல் என்றது இங்கே வீசி ஆடுதலை; அது பாராவாரதரங்க நடனமாம் என்பர்.

ஆன்ற வருள்சால் கருந்தடங்க ணம்மை மலர்ப்பா தம்மிறைஞ்சி
ஏன்ற நாகே சரைவணங்கி யிலங்கு மவற்குத் தென்பாலில்
தோன்ற விலிங்க மொன்றுநிறீஇத் துகளில் பூசை புரிந்திடலுஞ்
சான்ற பெருமா னவ்விலிங்க நின்றும் வெளியே தனிவந்தான். 9

கு - ரை: ஆன்ற அருள் சால் - அகன்ற அருள் மிகுந்த. நாகேசருக்குத் தென்பால் இலிங்கம் ஒன்று நிறீஇ: நிறீஇ - நிறுத்தி; பதிட்டை செய்து.

வந்த பெருமா னடியில்விழுந் தெழுந்து பலகால் வலஞ்சூழ்ந்து
முந்த விருகண் ணீரிறைப்ப மொழியா நின்ற நாக்குளறச்
சந்த வுமையா ளொருபாகத் தனியே தனித்தார் பெருவாழ்வே
அந்த மருவாப் பெருந்துயரத் தாழ்ந்தே னடியே னென்றழுதான். 10

கு - ரை: இரு கண் நீர் இறைப்ப. நா குளற - நாத் தழுதழுக்க. தனியே - ஒப்பற்றவனே. தனித்தார் - பற்றில்லாதவர். அந்தம் மருவா - முடிவில்லாத.

ஒழியாக் கவலை யுற்றழுங்கு மொருகோ சலமைந் தனைநோக்கிப்
பழியாப் பெருமான் றிருவுள்ள மிரங்கி விழைவு பகர்தியென
அழியாப் பொருளே நினதுள்ள மறியா ததுமொன் றுண்டுகொலோ
கழியாக் காத லென்மனையைக் கவர்ந்தான் கடும்பா தகவரக்கன். 11

கு - ரை: அழுங்கும் - வருந்தும். கோசலமைந்தன் - இராமன். கோசலன் - கோசல நாட்டரசன்; தசரதன். விழைவு - உன்விருப்பம். கழியாக்காதல் - நீங்காத அன்பு. கடும் பாதக அரக்கன் - இராவணன்.

அனைய கொடியற் செகுத்திடவு மவன்வா ழிலங்கை நகரடைய
வினைய முறந்த பெரும்பரவை வெற்பா லடைத்து வழிசெயவும்
நினைய முடியாப் பரம்பொருளே நிகரில் வரங்க டரல்வேண்டும்
இனைய வரங்க ளல்லாம வின்னும் வேண்டும் வரமுளவால். 12

குு - ரை : கொடியன் - கொடுமையுடையவனை. செகுத்திட - அழிக்க. அவன் வாழ் இலங்கை. பெரும் பரவையை மலைகளால் அடைத்து வழி செய்ய.

இந்த விலிங்கத் தெஞ்ஞான்று மிரியா தொருநீ யுறல்வேண்டுஞ்
சந்த மருவு நினக்கொருபே ரிராம நாத னெனச்சாற்றி
முந்த வெவருந் தொழல்வேண்டுந் தொழுதார் பலரு முழுப்போகம்
நந்த லடையா துறல்வேண்டு நல்லா யிவற்றை நல்கென்றான். 13

குு - ரை : எஞ்ஞான்றும் - எப்பொழுதும். இரியாது - நீங்காமல். இராமநாதன் எனும் பெயர். முழு போகம் நந்தாது - நிறைந்த போகங்கள் கெடாமல்.

கேடில் புகழ்க்கோ சலைவள்ளல் கேட்ட வரங்கள் முழுதுணர்ந்து
வீடில் பெருமான் முறுவலித்து விளம்பு மிந்த கேத்திரந்தான்
நாடிற் குரோச மைந்தளவு நலமார் தரநம் பராசத்தி
ஈடி லதிட்டிக் கப்படுவ தின்னுங் கேட்டி யிராகவனே. 14

குு - ரை : கோசலை வள்ளல் - இராமன். முறுவலித்து - புன்சிரிப் புற்று. கேத்திரம்-தலம். குரோசம் ஐந்து அளவும் - ஐந்து குரோசம் எல்லை வரையிலும். நம்முடைய பராசத்தியால் ஒப்பற அதிட்டிக்கப்படுவது. இராகவன் - இரகுவமிசத்தில் தோன்றியவன்.

எறியுந் திரைப்பைங் கடலிலொரு குரோசத் தளவென் றெண்ணுதி
செறியுங் கங்கை முதலாய தீர்த்த மனைத்து மிவ்வளவுள் [யாற்
அறியுந் தவத்தி னுயர்ந்தோரே யமையச் செறிந்து வாழ்தருவார்
மறியுங் கரணச் சித்தரெலாஞ் சித்தாச் சிரமம் வசித்திடுவார். 15

குு - ரை : கடலில் ஒரு குரோசம் வரை என்று எண்ணுவாய். தவத்தில் உயர்ந்தோரே வாழ்வார். சித்தர்கள் சித்தாச்சிரமத்தில் வசிப்பார்கள்.

இன்னுந் தவஞ்சால் குறுமுனிவன் இங்கு வசிப்பா னித்தலத்தைத்
துன்னு மவர்க்குச் சௌமியமாந் தொழினல் கிடுத லல்லாது
பன்னும் பிறிது நல்கலிலை பரிதி குலத்தோ யானாலும்
மன்னு நமையர்ச் சித்தடைந்த மாண்பா லுரைத்துங் கேட்டியால். 16

குு - ரை : குறுமுனிவன் - அகத்தியமுனிவர். சவுமியம் ஆம் - சாந்த முண்டாகும்; மனவொடுக்கம் எனினுமாம்.

மறைபூ சித்த நகர்த்தென்பான் மகிடற் காய்ந்தா ளமர்நகரிற்
குறைதீர் பரவை யடைத்திலங்கை குறுகிக் கொடியோன் றனைமாட்டி
நிறைசால் புடையா டனைமீட்டு நேயத் தவரோ டங்கணைந்தே
அறைசா லிந்தக் குறிபோற்றி யயோத்தி யடைநது வாழ்ந்திருப்பாய்.

கு - ரை : மறை பூசித்த நகர் - வேதாரணியம். மகிடற்காய்ந்தாள் - துர்க்கை. மாட்டி - சவட்டி. நிறை சால்பு உடையாள் - சீதை. ஈங்கு அடைந்து - இவ்விடத்துக்கு மீண்டும் வந்து. நேயத்தவர் - அன்புடையவர். இந்தக் குறி - உன்னால் பதிட்டிக்கப்பெற்ற இச்சிவலிங்கம்.

மதியொண் பரிதி யுபராக மத்தோ தயம கோதயமற்
றுதிபுண் ணியகா லங்களினிவ் வொலியா நின்ற கடன்மூழ்கித்
துதிகொ ணின்னாற் பதிட்டைபுரி யிராம நாத னடிதொழுவார்
பதியுங் கொடிய பாதகங்கள் பலவா மேனும் பாற்றிடுவார். 18

கு - ரை : உபராகம் - கிரகணம் : சந்திர கிரகணம், சூரிய கிரகண காலம். அத்தோதயம் மகோதய காலங்கள். மற்றுமுள்ள புண்ணிய காலங்கள். இக்கடலில் மூழ்கி உன்னால் பதிட்டைசெய்த இராமநாதர் திருவடிகளை வணங்குவாராயின். பாற்றிடுவார் - போக்குவார்.

தீய வரக்கன் றனைமாட்டுஞ் செயனிற் களித்தோ மற்றுமுள
வாய வனைத்து நீவினு வியவா றளித்தோ மென்றருளிப்
பாய புகழ்நம் மான்மறைந்தான் பையு ணீங்கி நனிமகிழ்ந்து
தூய குணத்தான் றேவிபுரம் படர்ந்தான் சேனை சூழ்வரவே. 19

கு - ரை : மாட்டும் செயல் - அழிக்கும் வன்மையை. வினவியவாறு - கேட்டபடியே. பையுள் - துன்பம். தேவிபுரம் - சீதாதேவியிருக்கும் இலங்கையை நோக்கி. படர்ந்தான் - செல்வானாயினன்.

ஆழி வரைகொண் டடைத்திலங்கை யகத்துப் புகுந்து கொடியோனைப்
பாழி யமைந்த சேனையொடும் படரா கவபூ மியிற்படுத்து
வீழி பொருவாய்ச் சானகியை மீட்டு விமான மேற்கொண்டு
வாழி துணைவர் பலரோடு வளஞ்சா னகைப் பதியடைந்தான். 20

கு - ரை : ஆழி - கடல். வரை - மலை. கொடியோனை - இராவணனை. பாழி - வலிமை. ஆகவபூமி - யுத்தகளம்; ஆகவம் - போர். படுத்து - கொன்று. வீழி - விழிப்பழம். சானகி - சனகராசன் புதல்வி.

வேறு

நாகை மேவி நயந்து பரவையிற்
பாகை நேர்மொழிப் பைந்தொடிச் சீதையோ
டோகை மேவ வுறுவிதி மூழ்கினன்
வாகை வெஞ்சிலை வள்ள லிராகவன். 21

கு - ரை : நயந்து - விரும்பி. பரவை - கடல். பாகு - வெல்லப்பாகு. ஓகை மேவ - உவகை பொருந்த. விதி - விதிப்படி. வாகை - வெற்றி. " வாகை, சூடிய சிலையி ராமன் " என்றார் கம்பநாடரும்.

அருந்த வத்தரு ளத்தம ராதியைக்
கருந்த டங்கணு மையொடுங் கண்டுதாழ்ந்
திருந்த கோலவி டங்கர்மு னெய்துபு
திருந்து நெஞ்ச நெகிழ்ந்திடச் சேவித்தான். 22

கு-ரை: தவத்தவர் - தவத்தையுடையவர். உளத்து அமர் ஆதி; ஆதி - சிவபெருமான். கண்டு - தரிசித்து. கோல விடங்கர் - சுந்தரவிடங்கர். நெஞ்சம் நெகிழ்ந்திட - மனமுருக.

இராம மோருருக் கொண்டியங் குற்றன
இராம லர்க்குழற் சீதையொ டெய்தியே
இராம நாதன் பதமு மிறைஞ்சிவில்
இராமன் மூதூ ரயோத்தியை யெய்தினன். 23

கு-ரை: இராமம் - இராப்பொழுது. இரா மலர்க்குழல் - இருட்டையொத்த குழல், மலர்க்குழல். வில் இராமன் - வில்வித்தையில் வல்ல இராமன்.

ஆங்கு வேதிய ராதியர் சூழ்தரப்
பாங்கு மாமுடி சூடிப்பல் லோர்களும்
வீங்கு போகத்தின் மூழ்க வியனிலந்
தாங்கு மாதர விற்றக வாழ்ந்தனன். 24

கு-ரை: வேதியர் ஆதியர்-பிராமணர் முதலியோர். வீங்கு போகம் - மிகுந்த போகங்கள். ஆதரவில் தக - பற்றுக்கோட்டினால் மிக; எனவே, அன்புடன் என்றபடி.

இராம நாதர் சரித மியம்பினும்
பராவி ரண்டா யிரமருப் புப்பரூஉக்
கராச லத்துக் கயிலாய நாதனர்
விராவு மேன்மை யெடுத்து விளம்புவாம். 25

கு-ரை: பராவு இரண்டாயிரம் மருப்பு - துதிக்கும் இரண்டாயிரம் தந்தங்கள். கராசலம் - யானை என்றது அயிராவண யானையை; 'நிரைநிரை, ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின், வெண்ணிறச் செங்கண் வேழமும்' (கோயில்நான்மணிமாலை).

இராமநாதப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1462

இருபத்துநான்காவது

கயிலாயநாதப்படலம்

நாடு சீர்ச்சனற் குமரமா முனிவர னந்தி
நீடு நாண்மலர்ப் பதந்தொழு திருண்மல நெரியச்
சாடு மாகயி லாயநா தப்பெருந் தகைதன்
பாடு மான்மியம் பகரென வன்னவன் பகர்வான். 1

கு - ரை : இருண்மலம் நெரிய சாடும் - ஆணவமலம் வலியிழந் தொழியும்படி செய்யும். பாடு மான்மியம் - பெருமைபொருந்திய வரலாறு.

தோற்ற மீறிலாச் சிவபிரான் றுணையடிக் கமலம்
நாற்ற மோடல ரளிப்புன னகுமனக் குளத்தான்
சாற்ற மேவுபன் முனிவராந் தாரகை நாப்பண்
ஏற்ற மார்முழு மதிபுரை பராசர னென்பான். 2

கு - ரை : தோற்றம் ஈறு இலா - பிறத்தல் சாதல் இல்லாத: "பிறவா யாக்கைப் பெரியோன்", "பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை" (தேவா). நாற்றம் - வாசனை. அளிப்புனல் - கருணையாகிய நீர். நகும் - விளங்கும். மனமாகிய குளத்தையுடையவன். முனிவர்கள் தாரகை, முழு மதி பராசரன். தாரகை - நட்சத்திரம். முழுமதி - பூரண சந்திரன்.

கஞ்ச நாண்மலர் மேலவ னுலகமுங் கமலத்
தஞ்ச மார்பினு னுலகமுந் தன்னுளத் தமையான்
நஞ்ச மாரமு தாக்கினே னருடனை நண்ணில்
தஞ்ச மாக்கிடு நாகையம் பதிவந்து சார்ந்தான். 3

கு - ரை : கஞ்சம் - தாமரை. மேலவன் - பிரமதேவன். கமலத்து அஞ்சம் - திருமகள். மார்பினன் - திருமால். தஞ்சம் - பற்றுக்கோடு.

தேவ தீர்த்தநன் காடிநீ றணிந்துவெந் தீய
பாவ காரியர் கருதொணுப் பழம்பரம் பொருளை
மேவ நேர்சென்று பருகுவான் போன்றிரு விழிநீர்
தூவ மும்முறை வலஞ்செய்து பன்முறை தொழுதான். 4

கு - ரை : பாவகாரியர் - பாவத்தைச் செய்வோர். பருகுவான் போன்று - உண்ணுபவன்போல. தூவ - ஒழுக.

எழுது மோவிய மெனுந்திரு வுருவெடுத் துலக
முழுது மோம்பிடுங் கருந்தடங் கண்ணிதன் முன்போய்த்
தொழுது சுந்தர விடங்கர்பொற் பாதமுந் துனைந்து
பழுது தீர்தரப் பழிச்சுபு பன்முறை பணிந்தான். 5

கு - ரை : துனைந்து - விரைந்து. பழிச்சுபு - துதித்து.

அங்கு நீங்கிநல் லமுதகும் பேசரை யடுத்துப்
பொங்கு காதலிற் போற்றுபு மற்றவர் குணபால்
தங்கு தூயவாச் சிரமமொன் றமைத்தனன் றவத்தின்
எங்கு நாடிமிக் காயினுந் தனக்கிணை யில்லான். 6

கு - ரை : மற்று அவர் குணபால் - அமுதகும்பேசருக்குக் கிழக்கில். ஆச்சிரமம் - முனிவர் இருக்கை. மிக்கு ஆயினும் - பெரிது ஆராயினும்.

அறிய வாற்றிய வாச்சிர மத்தினி தமர்ந்து
வெறிய வாய்விட யந்தபப் பொறியைந்தும் வீட்டி
நறிய தாமன நளினத்துக் குறியொன்று நவிலாக்
குறிய தாஞ்சிவக் குறிபதி தரும்படி கொண்டான். 7

கு - ரை : வெறியவாய் விடயம் தப - வீணாகவுள்ள புலன்கள் நீங்க. பொறி ஐந்தும் வீட்டி - பொறிவாயில் ஐந்தனையும் அவித்து; வீட்டி - கெடுத்து. நறியது ஆம் மன நளினத்து - மணம் பொருந்தும் மனத் தாமரையில். குறி ஒன்றும் நவிலாக் குறி - குறிகளும் அடையாளமும் கூற முடியாத குறி என்றது சிவக்குறியை என்க.

ஒளிசெ யெண்ணிரண் டாயிரங் கோடுக ளூற்றுக்
களிசெய் மாகயி லாயநா தனையுளங் கருதித்
தெளிசெ யாயிர வருடம்வன் சிலையென விருந்தான்
அளிசெய் தம்பிரா னன்னவர்க் கருள்செய்வா னமைந்தான். 8

கு - ரை : எண் இரண்டாயிரம் கோடுகள் - பதினாறாயிரம் சிகரங்கள். இருபத்தொன்றாவது செய்யுளில் காண்க. பல சிகரங்கள் என்றபடி. கயிலாயநாதன் - திருக்கயிலாயத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமான். வன் சிலை - வலிய கல். அளி செய் - கருணையைச் செய்யும். தம்பிரான் - தனக்குத்தானே பிரானாக உள்ளவர்; சிவபெருமான்.

கந்த மாமலர்க் கடவுடன் பதமுரட் கருதார்
சிந்த நோக்குமொண் ணேமியான் பதஞ்சிதை காலும்
நந்த மேலெழுந் தொளிமிகப் பரப்பிடு நலத்த
தந்த மாதியி லானினி தமர்பெருங் கயிலை. 9

கு - ரை : கந்த மாமலர்க்கடவுள்தன் பதம் - பிரமன் வீற்றிருக்கும் சத்தியலோகம். நேமியான் - சுதரிசனம் என்னும் சக்கரத்தையேந்திய திருமால். நந்த - மிகுதியாக. நலத்தது - நன்மையையுடையது. அந்தம் ஆதியிலான் - "ஆதியு மந்தமு மில்லா வரும் பெருஞ் சோதி"யாகிய சிவபெருமான். இச்செய்யுள்முதல் கயிலாயச்சிறப்புக் கூறப்படும்.

முனிவர் யோகியர் சித்தர்வித் தியாதரர் முதலோர்
இனியெ மக்கெவன் வேண்டுவ தென்றிரு மாந்து
துனிகெ ழும்பவத் தொடர்பினை முதலறத் தொலைத்துப்
புனித னின்னருள் பருகுபு புகும்பொலி வினதால். 10

கு - ரை : எவன் வேண்டுவது-யாது வேண்டுவது. இறுமாந்து-செம் மாந்து. துனி கெழும் பவத்தொடர்பு - துன்பமிக்க பிறப்பின் தொடர்ச்சி. முதல் அற - வேரோடு நீங்க. பருகுபு - நுகர்ந்து.

கரிய வாணவ முதலிய கழற்றியா ருயிருக்
கரிய வின்னருட் சத்தியா லோங்கொளி யண்ணல்
தெரிய வாக்குமெய்ஞ் ஞானத்தின் பொலிவெனத் திகழ்ந்து
புரிய வாமெழிற் பொலிவினுல் வளம்பொலிந் தன்றுல். 11

கு - ரை : கரிய ஆணவம் - கருமை பொருந்திய ஆணவமலம்: ஆணவத்தை இருண்மலம் என்பர். ஓங்கு ஒளி அண்ணல் - உயர்ந்த சிவஞான ஒளி பொருந்திய பெருமான். ஆக்கு மெய்ஞ்ஞானம்-உண்டாக்கும் சிவஞானம்.

தங்கு தாபர சங்கமப் பரப்பெலாஞ் சார்புற்
றெங்கு மாம்பொரு ளிருத்தலி னிலங்குமப் பொருளோ
நங்கு தீர்ந்தவப் பொருட்கிட நன்குநல் கியதோ
பொங்கி யாதுகொல் பெரிதென நனிபொலிந் தன்றுல். 12

கு-ரை : தாபர சங்கமப் பரப்பு - நிலையியல், இயங்கியற் பொருள்கள் முழுதும். தாபரம் - தாவரம். எங்கும் ஆம் பொருள் - வியாபகப் பொருள். நங்கு - பழி.

தகுவ ராருயிர் சிதைதரச் சக்கர நோக்கு
மிகுவ தாந்திறன் மால்பல விண்ணப்பஞ் செய்ய
நெகுவ தாகிய சிந்தையி னமையநேர் நோக்கிப்
புகுவ தெண்ணிவை குறுமிடம் பொலிந்துள தொருபால். 13

கு - ரை : தகுவர் - அரக்கர். நெகுவது ஆகிய சிந்தை - உருகுதலை யுடைய மனம்.

ஓதி மத்திழிந் துள்புகற் கொத்ததாங் காலம்
யாதி தற்கிறை யியம்புமி னீவிரென் றிறைஞ்சித்
தீதில் வாயில்சார் கணுதிபர் தம்மொடுஞ் சேர்ந்து
போதின் மேயவன் வைகிடம் பொலிந்ததஃ தொருபால். 14

கு - ரை: ஓதிமம் - அன்னம். யாது - யாவது. இறை - விடை. போதின் மேயவன்-பிரமன்.

சந்த விந்திர ஞதியர் தனித்தனி யிவர்ந்து
வந்த வூர்திகள் சேய்மையே மருவுற நிறுவி
அந்த மாதியி லெங்கடம் பிரானருட் பார்வை
நந்த மேவுபு வைகிட நகுவதை யொருபால். 15

கு - ரை: இவர்ந்து - ஊர்ந்து. சேய்மை - தூரத்தில். நிறுவி- நிறுத்தி. நந்த - அதிகரிக்க. நகுவது - விளங்குவது.

சினக ரங்கில மாயது தெரிந்தது புதுக்கி
அனக மேமிகத் திருவிளக் காதிக ளமைத்து
முனகர் மேவுருச் சிவபிரான் திருப்பணி முயன்றோர்
கனக மேனியிற் பொலியிடங் கஞலிய தொருபால். 16

கு - ரை: சினகரம் - கோயில். கிலம் - பழுது. அனகம் - பரிசுத்தம். முனகர் - பாவிகள், அற்பர். கனகமேனி - பொன்மேனி. கஞலியது - நெருங்கியுள்ளது.

பத்தி மேவுற மலர்முதற் பல்லவுங் கொண்டு
சுத்தி யைந்தொடா வாகன மாதிய துலக்கி
அத்தி யீருரி யண்ணலை யருச்சித்த வறவோர்
சித்தி வாய்ந்துறப் பொலியிடஞ் சிவணிய தொருபால். 17

கு - ரை: பல்லவும் - உபகரணங்கள் பலவற்றையும். சுத்தி ஐந்து- பஞ்ச சுத்திகள்: தானசுத்தி, திரவியசுத்தி, பூதசுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்தி என்பன. அத்தி ஈர் உரி அண்ணல் - யானையின் தோலையுரித்துப் போர்த்த சிவபெருமான். அறவோர் - தவசிகள். சிவணியது - பொருந்தப் பெற்றது.

சிவச ரித்திரங் கேட்டவர் சிவன்றிரு நாமம்
அவம றப்புக லன்பினர் சிவனடி யவரைத்
தவமி திற்பிறி தெவனெனப் பூசித்த தகையோர்
உவமை யற்றிரு மாந்தம ரிடங்களு மொருபால். 18

கு - ரை: அவம் - வீண். தவம் இதில் பிறிது எவன் - இதனைவிட வேறு தவம் யாது. இறுமாந்து: " இறுமாந் திருப்பன்கொல்லோ ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டு" (தேவாரம்).

பரம தத்தரா யதற்குரி வேடமே பயின்றும்
அரமு ழக்கெழி னதிற்பெரு வாஞ்சையுள் ளமைத்துத்
திரமு றச்சிவ னடிமலர் கருதிய திறத்தார்
கரவ றப்பொலி யிடங்களுங் கலுழிய தொருபால். 19

கு - ரை: பர மதத்தர் - சைவசமயமல்லாத ஏனையோர். அதற்கு உரி வேடம் - அச்சமயத்தினுக்குரிய வேடம். பயின்றும் - பூண்டிருந்தும். அர முழக்கு எழின். வாஞ்சை - விருப்பம். உள் அமைத்து - மனத்திற்பொருந்தி. திரம் உற - நிலையாக. கரவு அற - வஞ்சகமின்றி. கலுழியது - நெருங்கியது.

ஆதி சைவர்முற் பற்பல சைவரு மடுத்துப்
பூதி மேவிய மேனியும் புனல்பொழி கண்ணுஞ்
சோதி தாள்பதி சிந்தையு மாயரு டுதைந்தார்
நீதி வாய்ந்தினி தமரிட நிலவிய தொருபால். 20

கு - ரை: பூதி - விபூதி. சோதி தாள் - சிவபெருமான் திருவடி. அருள் துதைந்தார் - திருவருள் செறிந்தோர்.

மன்னு மின்னமா கயிலைமால் வரைபதி னாறுப்
பன்னு மாயிரங் கோட்டதப் பருப்பத மேலால்
துன்னு பேரொளி நவமணி குயிற்றியஞ் சுடர்சேர்
மின்னு கேசரி தாங்குபு விளங்குபீ டத்து. 21

கு - ரை: இன்ன - இப்படிப்பட்ட என்றது 9 ஆம் செய்யுள்முதல் 20ஆம் செய்யுள்வரை கூறிய சிறப்புகளை யெல்லாம். பதினாறுப் பன்னும் ஆயிரம் கோட்டது.

மாசு தீர்ந்தவெண் பளிங்கென வயங்குறு மேனித்
தேசு சாலுநா லெட்டிலக் கணங்களாற் றிகழ
மூசு மாமையி சானமுன் முகமைந்து மைந்தாப்
பேசு மற்புத நிலத்தொடுந் திசைதிசை பிறங்க. 22

கு - ரை: தேசு - ஒளி. நாலெட்டு இலக்கணங்கள் - முப்பத்திரண்டு இலக்கணங்கள். அற்புதம் - ஞானம்.

அஞ்சு கூறுசான் மூவிழி தனித்தனி யிலங்க
மஞ்சு மேயசெந் தாமரை மலர்க்கரம் பத்து
நஞ்சு வாண்முத லொருபதுந் தனித்தனி நயக்க
விஞ்சு வெள்ளிய பூணுநூன் மார்பிடை விளங்க. 23

கு - ரை: ஐந்து முகங்களினும் தனித்தனியே மூன்று மூன்று கண்கள் விளங்க. மஞ்சு - அழகு. பத்துத் திருக்கரங்களினும் வாள் முதலிய ஆயுதங் கள் தனித்தனி பொருந்த. மார்பிலே வெள்ளிய பூணுநூல் விளங்க.

அற்ற மேதுமின் முடிமிசைச் சிறுபிறை யலங்கச்
சொற்ற வாகமப் பரப்பிடைத் தொகுத்தன வெல்லாம்
பெற்ற கோலத்திற் றிகழ்தரப் பிறங்குதைத் திங்க
ளூற்ற பூசத்திற் காட்சிதந் தருளின னுரவோன். 24

கு - ரை: அற்றம் - துன்பம். அலங்க - விளங்க, அசைய. கோலம் - அழகு. தைமாதம் பூசநட்சத்திரத்தில்.

"திருவுருவந் தெளிபளிங்கு சடாமகுடத் திதழி
சிறுபிறையு மூவைந்து திருநயனம் வலப்பால்
கரதலத்தில் சத்தியப யஞ்சூல நீண்ட
கட்டங்கம் தமருகமும் மற்றையிடக் கரத்தின்
வரதமுமா துளங்கபலம் போகிசெப மாலை
மணமலிநீ லோற்பலமு முடையர்வய தீரெட்(டு)
உருவிரட்டி யுறுப்பிரண்டு பதம்பதுமந் தனந்தான்
உறவிருப்பர் சதாசிவர்தத் துவத்தவிசி னுவந்தே."

வந்த நாதனைக் கண்டெழுந் துறுவரன் வணங்கி
அந்த மில்விழி பெற்றில னழகுகாண் பதற்கென்
றுந்த வெண்ணியு ணெக்குநெக் குடைதர வுருகி
நந்த முன்னின்று நாக்குள றிடத்துதி நவில்வான். 25

கு - ரை: உறுவரன் - முனிவன். அந்தம் இல் விழி - அளவில்லாத கண்கள். உள் நெக்கு நெக்கு உடைதர. நந்த - ஆக்கமிக.

கலைமுன் னுகிய கருவிக டந்துகா ரிருள்வாய்
அலைய ணுக்கட்குக் கன்மமாந் தொடக்கறப் போகந்
தொலைவு செய்தழி யாவின்பத் துறையரு டுயே
தலைவ நின்மல தற்பர நின்னடி போற்றி. 26

கு - ரை: கலை முன்னுகிய கருவி கடந்து - கலைகள் முதலாகிய கருவிகளைக் கடந்து. கார் இருள் - ஆணவ இருள்மலம்; அஞ்ஞானமுமாம். அணுக்கள் - உயிர்கள். கன்மம் ஆம் தொடக்கு - கன்மமாகிய பாசம். போகம் தொலைவு செய்து - போகங்களை நுகரும்படிச் செய்து. நின்மல - மலரகிதரே. தற்பர - உயிர்த்தலைவரே.

அருந்த வம்புரி யோகிய ரகத்திரு ளகற்சி
பொருந்த வாதியீ றிலாதமர் பரிதியே போற்றி
திருந்த வைம்பொறி செற்றிரு வினைச்சமஞ் செறிந்தார்
வருந்த நோக்குரு தவர்க்கெதிர் வள்ளலே போற்றி. 27

கு - ரை: அகத்திருள் - மனத்திலுள்ள அறியாமையாகிய இருள். மா பரிதி - பெருமையுடைய சூரியன். ஐம்பொறி செற்று - ஐம்புலன்களும்

செல்லும் ஐந்து பொறிகளையும் கெடுத்து. இருவினைச் சமம் செய்தார் - நல்வினை தீவினைகளைத் தமது அறிவின்கண் ஒப்பக் கொள்ளும் ஞானிகள். அவர்க்கு எதிர் - அவர்களுக்கு எதிர்ப்பட்டுக் காட்சி தந்தருளும்.

பொறிபு லன்கழன் றமைதரப் போதமே பொலிந்தார்
அறிவி னீங்குறு வானந்த வெள்ளமே போற்றி
குறிகு ணந்தவிர் பிரமமென் றருமறை கூறச்
செறிய ரும்பொருட் சின்மயப் பரஞ்சுடர் போற்றி. 28

கு - ரை: போதம் - சிவஞானம். பிரமம் - பிரமப் பொருள். சின்மயம் - ஞானசொரூபம்.

மறையி னந்தமுந் தொடரொணு வள்ளலே போற்றி
அறையு மாலய னுதிய ரறியொணுய் போற்றி
நிறைவ ளம்படு நாகைக்கா ரோணத்து நிலாவி
உறைபெ ருங்கயி லாயமே வுத்தம போற்றி. 29

கு - ரை: மறையின் அந்தம் - வேதத்தின் முடிவாகிய உபநிடதங்கள். கயிலாயம் மேவு உத்தம.

என்று போற்றிடு முனிவனுக் கிருவிழி களிப்ப
அன்று நின்றவ னவன்முக நோக்கிமிக் கன்பால்
ஒன்று முள்ளத்து நீபுரி பூசனை யுகந்தோம்
இன்று வேண்டிய தெவனுரை யெனவவ னிசைப்பான். 30

கு - ரை: வந்து நின்றவன் - காட்சி தந்தருளிய சிவபெருமான். அவன் முகம்நோக்கி - முனிவனைப்பார்த்து.

அடிய னேன்றவம் புரியவிங் கிழைத்தவாச் சிரமத்
தொடிவி லீபெருங் கயிலையோ டுறைதரல் வேண்டும்
முடிவ தாயுள வாயுளின் முறைதப யானிவ்
வடிவி னித்தமாய் மருவவும் வேண்டுமென் றிரந்தான். 31

கு - ரை: ஒடிவு இல் நீ - அழிவில்லாத தேவரீர். முடிவதாய் உள ஆயுளின் - ஆயுளின் முடிவில். முறை தப - முறைமையின் நீங்கி. இவ்வடிவில் - இந்த வடிவத்தில். நித்தமாய் - நித்தப்பொருளாய்.

இரந்த வாபெருங் கயிலையோ டுறைகுது மென்றுஞ்
சுரந்த மாதவ மித்தலத் தியற்றிய துணிபாற்
பரந்த நித்தியத் துவமுநீ பெறுகெனப் பணித்து
வரந்த வாவவற் பார்த்திது பின்னரும் வழங்கும். 32

கு - ரை : இரந்தவா - நீ வேண்டியவாறே. துணிபால் - உறுதியால். நித்தியத்துவம் - அழியாதிருத்தல். வரம் தவா - மேன்மையின் நீங்காத. வழங்கும் - அருள்செய்யும்.

நாலெ னப்புகல் யுகமிரண் டாயிர நடந்தாற்
சேலெ னப்பிறழ் கண்ணமர் நாவற்கோர் திவசம்
பாலெ னப்படா வதுபதி னைந்தொரு பக்க
மாலெ னக்கொளா யஃதிரண் டுற்றது மாதம். 33

கு - ரை : இரண்டாயிரம் சதுர்யுகம் நடந்தால் பிரமனுக்கு ஒரு நாளாகும். சேல் எனப் பிறழ் கண் - சரசுவதி: அன்மொழித்தொகை. அமர் நாவன்-பிரமன். திவசம் - நாள். பதினைந்து நாள் ஒரு பக்கம்; பக்கம் இரண்டு கொண்டது ஒரு மாதமாகும்.

அந்த மாதமோர் பன்னிரண் டுற்றதோ ராண்டாம்
பந்த மில்லவ வஃதைம்ப துற்றதோர் பரார்த்தங்
கந்த வத்தகு பரார்த்தமோ ரிரண்டுறிற் கற்பம்
உந்த வத்தின மேமலர் மிசையவ னொடுங்கும். 34

கு - ரை : பன்னிரண்டு மாதம் ஒரு ஆண்டு. பந்தம் - பாசக்கட்டு. ஆண்டு ஐம்பது ஒரு பரார்த்தம். இரண்டு பரார்த்தம் உறில் கற்பம் ஆகும். அக்காலத்துப் பிரமன் ஒடுங்குவான்.

இந்த வண்ண நான் முகரொரு கோடிய ரிறந்தால்
அந்த மாயவற் கொருதின மதுமுந்நூற் றறுபான்
நந்த மேவலோ ராண்டது நூறுற நடந்தால்
பந்த வாமுலைத் திருமகண் மணாளனும் பாறும். 35

கு - ரை : இவ்வாறு ஒருகோடி பிரமர்கள் இறந்தால் திருமாலுக்கு ஒரு தினமாகும். அது முந்நூற்றறுபது சென்றால் ஓர் ஆண்டாகும். அது நூறு நடைபெறின் திருமால் இறப்பான். பந்து அவாம் முலை திருமகள்.

செயிரின் மாறபுங் காலநின் னுடம்பிடைச் செறிந்த
மயிரொர் மூன்றரைக் கோடியு ளொன்றுபோய் மாயும்
உயிர்வி யக்குமிவ் வரநினக் குதவின மாலென்
றயிர்கொ ளாழிநஞ் சயின்றவன் பின்னுமீ தருளும். 36

கு - ரை : செயிர் இல் மால் - குற்றமில்லாத திருமால். உன் உடம்பிலுள்ள மூன்றரைக்கோடி மயிர்களுள் ஒன்று அழியும். இவ்வரம் உயிர்கள் வியக்குமாறு உனக்கு அருளினேம். அயிர் - நுண்மணல்.

அவனி வாழ்பவ ரியாவரே யாயினு மடைந்து
தவலி லாதவிப் பெருங்கயி லாயத்தைத் தரிசித்
துவமை தீர்தரத் தொழினவ மரணத்தை யொழிவார்
நவநி லாம்பல போகமு நயந்துதுய்த் திடுவார். 37

கு - ரை: அவனி - பூமி. தவல் இலாத - நீங்குதலில்லாத. இப் பெருங் கயிலாயத்தைத் தரிசித்து வணங்கினுல் அவமரணத்தை ஒழிவார். நவம் - புதுமை.

என்று தம்பிரான் வாயிலோ ரீரிரண் டிலங்க
ஒன்று மப்பெருங் கயிலையிற் றிப்பிய வுருவந்
துன்று சோதிசா லிலிங்கமா யமர்ந்தனன் றெழுவார்
கன்று வெம்பவத் தொடக்கறுத் துயர்கதி காண்பார். 38

கு - ரை: வாயில் ஓர் ஈரிரண்டு - நான்கு வாயில்கள். திப்பியம் - திவ்வியம். கன்று வெம் பவத் தொடக்கு - துன்புறும் கொடிய பிறவியின் தொடர்பு. உயர்கதி - முத்திப்பேறு.

பராச ரப்பெயர் முனிவரன் றவப்பய னுகை
விராவு மாகயி லாயநா தப்பிரான் மேன்மை
ஓராத வன்பினே தினமெழு முனிவர்முற் பல்லோர்
அராவ ணிந்தவற் பூசித்த வண்ணமு மறைவாம். 39

கு - ரை: பராசர முனிவன் செய்த தவத்தின் பயனுகப் பொருந்தும் கயிலாயநாதர் பெருமையைச் சொன்னேம். ஓராத அன்பு - நீங்காத அன்பு. அரா அணிந்தவன் - பாம்பை ஆபரணமாகத் தரித்துள்ள சிவபெருமான்.

கயிலாயநாதப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் - 1501

இருபத்தைந்தாவது

எழுமுனிவர் முதலியோர் பூசித்த படலம்

முழுவலிச் சனற்குமர முனிவர னந்திபிரான்
செழுமலர்ப் பதம்போற்றித் திகழ்பெருங் காரோணத்
தெழுமுனி வரர்முதலி யோரினி தருச்சித்த
பழுதிலற் புதஞ்சொலென வன்னவன் பகருவனால். 1

கு - ரை: எழுமுனிவரர் - ஏழு முனிவர்கள்; வரர் - சிரேட்டமானவர். பழுது இல் அற்புதம்.

மன்னிய பெருந்தவத்து வசிட்டன்மு னெழுவோரும்
பன்னிய பதிஞானப் பண்புணர் தரும்பொருட்டு
முன்னிய திருநாகை முழுத்தலத் துறப்புகுந்தார்
நன்னிய மத்தமர தீர்த்தநன் காடினரால். 2

கு - ரை: வசிட்டன் முன் எழுவோரும் - வசிட்டர் முதலிய ஏழு முனிவர்களும். பதி ஞானப் பண்பு - சிவஞானத்தன்மை. நல் நியமத்து - நல்ல கடப்பாட்டுடன். அமரதீர்த்தம் - தேவதீர்த்தம்.

புனிதவெண் ணீறணிந்து போற்றுகண் மணிபூண்டு
கனியுளத் தெழுத்தைந்துங் கணித்தனர் காரோணத்
தினிதமர் பெருவாழ்வை யிறைஞ்சுபு கருந்தடங்கட்
பனிவரை மகள்பாதம் பணிந்துபி னிதுசெய்தார். 3

கு - ரை: பனிவரை மகள் - இமயமலையரசன் புத்திரியாகிய உமா தேவியார். பின் இது செய்தார்.

அத்திருத் தளியெழுவாய் *ஆவிரு தியிற்குணபாற்
பத்தியிற் சிவலிங்கப் பதிட்டைசெய் தருச்சித்துச்
சித்தியெய் தினர்நினைந்த திருப்பெருஞ் சிவஞான
முத்தியெய் துவரனைய மூர்த்தியைத் தொழுவோரே. 4

---

*ஆவிருதி - பிரகாரம்.

கு - ரை : திருத்தளி - திருக்கோயில். எழுவாய் ஆவிருதி - முதற் பிரகாரம். குணபால் - கிழக்குப் பக்கத்தில். பத்தியில்=பத்தியாக - வரிசை யாக என்க; அன்போடு எனினுமாம். சித்தி - ஞானசித்தி. திருப்பெருஞ் சிவஞான முத்தி - திருப்பெருகு சிவஞானத்தால் பெறும் முத்தியின்பம். அனைய மூர்த்தி - எழுமுனிவர்களாலும் பூசிக்கப்பட்ட சிவலிங்க மூர்த்தி. எழு முனிவராவார்: வசிட்டர், அகத்தியர், புலத்தியர், அங்கிரா, கௌதமர், காசிபர், மார்க்கண்டர் என்பவர்.

முழுவலி பெறவேண்டி முயன்றபி ராமிமுதல்
எழுவரு மாங்கெய்தி யிமையவர் புனல்படிந்து
செழுமுனி வரரிலிங்கத் தென்றிசை யிலிங்கநிறீஇ
வழுவறப் பூசித்து வள்ளற னருளாலே. 5

கு - ரை : பிராமி முதல் எழுவர் - பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைணவி, வராகி, மாகேந்திரி, மாகாளி என்னும் சத்தமாதர்கள். இமை யவர் புனல் - தேவதீர்த்தம். எழுமுனிவரர் இலிங்கத்தின் தெற்குத்திசையில். வழுவற - குற்றமின்றி.

எண்ணிய வலிபெற்று ரிலகுறு மவ்விலிங்கம்
நண்ணிய தொழுசில நயந்தவர் பகைமுருங்கக்
கண்ணிய வலிபெற்றுக் கருதிய போகமெலாம்
அண்ணிய வொருங்கடைவா ரமரரு மதிசயிப்ப. 6

கு - ரை : அவரவர் கருதிய வலிமையைப் பெற்றார். தொழு சீலம் நயந்தவர் - வணங்கும் நியதியை விரும்பினோர். பகை முருங்க - பகைவர் அழிய. அண்ணிய - அணுக. ஒருங்கு அடைவார் - ஒருசேரப் பெறுவார். அமரரும் - தேவரும்.

துன்றிய புகழ்க்கங்கை சுந்தர விடங்கருக்குத்
தென்றிசை யோரிலிங்கஞ் சிவணுறப் பதிட்டைசெய்து
நன்றியி னருச்சித்து நயந்துவந் தாடிடுவார்
கன்றிய விடுபாவங் கழிதர வரம்பெற்றாள். 7

கு - ரை : துன்றிய புகழ்க்கங்கை - கங்காதேவி. சிவணுற - பொருந்த. நயந்து வந்து ஆடிடுவார் - விரும்பி வந்து மூழ்குவோர். கன்றிய - வருந்த. கழிதர - நீங்க.

பொலிதரு மவ்விலிங்கம் போற்றுபு தரிசிப்பார்
கலிதிரை பரப்பியெழுங் கங்கையை யடைந்தாடும்
மெலிவறு பயன்பெறுவார் விலகருந் தீவினையும்
நலிதர வுயர்புற்று நன்னலத் தினிதமர்வார். 8

கு - ரை : கலி திரை பரப்பி - ஒலிக்கின்ற அலைகள் மிக்கு. காசிப் பதியில் கங்கை நதியில் நீராடும் குறைவில்லாத பயனைப்பெறுவார். விலக அரும் தீவினையும் நலிதர - நீங்குதற்கரிய தீவினைகளும் வருந்த. நல் நலம் - சிறந்த நன்மைகள்.

அத்தகு மிலிங்கத்தின் றென்றிசை யழற்கடவுள்
உத்தம விலிங்கநிறீஇ யுரனுறப் பூசித்துத்
தத்துறச் சுடுதலினு லடைவினை தபப்பெற்றுன்
பத்தியி னதுதொழுவார் பாறுவர் பாவமெலாம். 9

கு - ரை : அந்த இலிங்க மூர்த்தியின் தெற்கில். அழற்கடவுள் - அக்கினிதேவன். உரன் உற - வலிமைபெற. தத்து உற சுடுதலினுல் - தாவிச் சுடுதலினுல். வினை தப - வினை கெட. பாவமெல்லாம் பாறுவர்: பாறுதல் - கெடுதல். அஃது அக்கினி பிரதிட்டாலிங்கம்.

இருந்தவத் துயர்புண்ட ரீகனஞ் சலித்தேத்தும்
பெருந்தகை நைருதத்திற் பிறங்குமொ ரிலிங்கநிறீஇப்
பொருந்திறற் சூரடுவான் போயவந் நாட்குகவேள்
அருந்தவத் துயர்பூசை யாற்றின னழகுறவே. 10

கு - ரை : புண்டரீக முனிவர் பூசித்து வழிபட்ட இலிங்கத்தின் நிருதித் திக்கில். நைருதம் - நிருதித்திக்கு. சூர் அடுவான் - சூரபன்மனைக் கொல்லும்பொருட்டு. குகவேள் - முருகக்கடவுள்.

அற்புதப் பூசைபுரிந் தாரரு ணனிபெற்றுன்
பொற்புய ராறுமுகன் போற்றிய வவ்விலிங்கங்
கற்புயர் கலைஞானங் கரிசறக் கொடுத்தலொடு
பற்பல பெருந்திருவும் பாலிக்குந் தொழுவார்க்கே. 11

கு - ரை : ஆர் அருள் நனி பெற்றுன். முருகக் கடவுளால் பூசிக்கப் பெற்ற சிவலிங்கம் கல்வியில் மேம்பட்ட கலைஞானங்களையெல்லாம் குற்றம் இன்றிக் கொடுக்கும். கற்பு உயர் - கல்வியினுல் உயர்ந்த. கரிசு - குற்றம். கலைஞானம் எனவே அறுபத்துநான்கு கலைஞானங்களும் எனக்கொள்க. பெருந்திரு - மிக்க செல்வம். ஆறுமுகக்கடவுள் பூசித்த இலிங்கத்தை வழிபடுவோர் கல்வியையும், மிக்க செல்வத்தையும் பெறுவர்.

பெருவலிச் சூரனுரம் பிளந்தவ னருச்சித்த
திருமலி யிலிங்கத்தின் றென்றிசை யோரிலிங்கம்
மருமலர்ப் பெருங்கோயின் மாமக டாபித்துப்
பொருவரும் பூசைசெய்து புணர்ந்தன டிருமாலை. 12

கு - ரை : சூரன் உரம் பிளந்தவன் - சூரபன்மன் மார்பைப் பிளந்த முருகவேள். அந்த இலிங்கத்தின் தென்திசையில் திருமகள் ஒரு இலிங்கம் தாபித்துப் பூசித்துத் திருமாலை அடைந்தாள்.

பொறியருச் சனைபுரிந்த புண்ணிய விலிங்கத்தை
நெறிமுறை தொழுதேத்து நியதிய ரிலம்பாடு
முறிதரப் பெருந்திருவ முயங்குபு பல்கிளையுஞ்
செறிதர வொப்புரவிற் சிறந்தவ ராய்ப்பொலிவார். 13

கு - ரை : பொறி - இலக்குமிதேவி. நியதியர் - கடப்பாடுடையோர். இலம்பாடு - தரித்திரம். பெருந்திருவம் - மிகப் பெருஞ்செல்வம். முயங்குபு - திளைத்து. பல் கிளை - பலவகைச் சுற்றமும். ஒப்புரவில் - உலக நடையில்.

இன்னமு நாம்பூசை யியற்றிய விலிங்கமுதற்
பன்னரும் புகழிலிங்கம் பலவுள காரோணத்
துன்னரும் பெருமையெவ ருரைப்பவ ரெனமுடித்தான்
நன்னலச் சனற்குமர னயந்தடி பணிந்தெழுந்து. 14

கு - ரை : காரோணத்திலே இன்னமும் நாம் பூசித்த இலிங்கம் முதல் சொல்லுதற்கரிய பல இலிங்கங்கள் உள்ளன. காரோணதலத்தின் பெருமையை யாரே கட்டுரைப்பார்.

தெரிந்தவித் துணைகொண்டே சிறந்ததித் தலமென்று
விரிந்தமெய்ப் புகழ்க்காயா ரோகணம் விருப்புற்றேன்
அரிந்தவெவ் வினையடிகேள் விடையளித் தருள்கவெனப்
பரிந்தநெஞ் சினனாகிப் பண்புறப் பெற்றெழுந்தான். 15

கு - ரை : தெரிந்துகொண்ட இவ்வளவினாலேயே காரோணதலம் சிறந்ததென விருப்புற்றேன். இத்துணை - இவ்வளவு. அடிகேள் - சுவாமியே. பரிந்த - விருப்புற்ற.

கலமலி கடனாகைக் காமரு காரோணம்
புலமலி தரப்புகுந்து பொருந்திய தீர்த்தமெலாம்
நலமலி தரத்தோய்ந்து நலங்கிளர் தலமனைத்தும்
வலமலி தரப்பணிந்து மன்னிய மகிழ்ச்சியனாய். 16

கு - ரை : கலம் மலி கடல் - மரக்கலங்கள் மிக்க கடல். காமரு - விருப்பந்தரும். புலம் மலிதர - அறிவு நிறைய. விடை அளித்தருள்க எனப் பெற்று, புகுந்து, தோய்ந்து, பணிந்து, மகிழ்வுடையவனாய் எனக் கூட்டுக.

கருந்தடங் கண்ணியொடுங் கலந்தமர் பெருவாழ்வைப்
பொருந்தநன் கடிதொழுது விடங்கரைப் பூசித்துத்
திருந்தமெய்ம் மயிர்சிலிர்ப்பச் சிந்தையு நெக்குருக
அருந்தவச் சனற்குமர னானந்தப் பேறுற்றான். 17

கு - ரை : கருந்தடங்கண்ணி - நீலாயதாட்சி. பெருவாழ்வு - காரோண நாதர். விடங்கர் - சுந்தரவிடங்கர். சிந்தையும் நெக்குருக - மனமும் நெகிழ்ந்துருக. ஆனந்தப்பேறு - சிவானந்தப் பேருகிய சிவபோகம்.

எழுமுனி வரர்முதலோர் பூசித்த விலிங்கச்சீர்
முழுதுரைத் தனம்வாத ராயணன் மொழிப்படியே
செழுமையிற் பொலிநந்தி நாதர்தஞ் சிறப்பாதி
பழுதறப் புகறுமெனப் பகர்ந்தனன் புகழ்ச்சூதன். 18

கு - ரை : வாதராயணன் - வியாசமுனிவர். புகறும் - சொல்லுவோம். சூதன் - சூதமகாமுனிவர்.

எழுமுனிவர் முதலியோர் பூசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1519

இருபத்தாறுவது

நந்திநாதப்படலம்

முன்னு சூத முனிவனை, மின்னு நைமி சத்தவர்
மன்னு நந்தி நாதர்சீர், பன்னு கென்னப் பகருவான். 1

கு - ரை : முன்னு - கருதப்படும். சூதமுனிவன் - வியாசமுனிவருடைய மாணவர். நைமிசத்தவர் - நைமிசாரணிய முனிவர்கள்; தவர் - தவத்தை யுடையவர். பன்னுக என்ன.

சூள தாய கயிலையின், வாள ருமுன் வாயிலைக்
கோள வாய நந்திமா, காளர் நாளுங் காப்பவர். 2

கு - ரை : சூள் - மெய்ம்மை. வாள் அரு - ஒளி நீங்காத. கோள் அவாய - கொள்கையையுடைய. நந்தி மாகாளர் என்பவர் முன் வாயிலைக் காப்பவர்.

தாயி னுள்வி நாயகர், மாய்த ராப்பி ருங்கியும்
பாய்வ ளங்கொ டென்றிசை, வாயில் காக்கு மாண்பினர். 3

கு - ரை : விநாயகர், பிருங்கி இவர் தென்திசை வாயில் காப்போர். தாயின் ஆள் - தாய்போல ஆளுகின்ற.

இரும ருப்பி டபமும், பெருகு மாற்றன் முனிவரும்
கருது மேலை வாயிலுக், கொருவி லாத காவலார். 4

கு - ரை : இருமருப்பு - இரண்டு கொம்புகள். இடபதேவரும், பெருவலியுடைய முனிவரும் மேலைவாயில் காவலர். ஒருவு இலாத - நீங்காத.

விடக்கு வாயு றப்பெய, விடக்கு மாற்றல் கொற்றியும்
அடக்கு வீரச் சண்டனும், வடக்கு வாயில் காப்பவர். 5

கு - ரை : விடக்கு - மாமிசம். ஆற்றல் கொற்றி - வலிமையுடைய துர்க்கை. கொற்றியும் சண்டனும் வடக்குவாயில் காப்பவர்.

பேச நீளிக் காவலாம், பாச முற்றெ ரீஇத்துரு
வாச னென்னு மாமுனி, யீச னைத்தொ ழப்புகா. 6

கு - ரை : இ காவல் ஆம் பாசம். முற்றும் ஓரீஇ - முழுவதும் நீங்கி. துருவாசமுனிவர்.

அரசி ருக்கு மாவயிற், பரசு தற்கு நோக்கிலான்
வரசு கோத யப்பொருள், விர சுவள கம்புகா. 7

கு - ரை : அரசு இருக்கும் ஆவயின் - கொலுவிற்றிருக்கும் அவ்விடத்து. பரசுதற்கு - வணங்குவதற்கு. நோக்கிலான் - கருதாதவனாய்: முற்றெச்சம். உவளகம் - அந்தப்புரம்.

இருப்ப தெண்ணி யெய்தினன், பொருப்பு வில்லி தாடொழா
விருப்ப முள்ள வாபெறூஉப், பருப்ப தத்தி னீங்கினன். 8

கு - ரை : பொருப்பு வில்லி - மேருமலையை வில்லாகவுடைய சிவபெருமான். பெறூஉ - பெற்று. பருப்பதம் - கயிலாயமலை.

அந்தி வான்ம திச்சடை, நந்தி நந்தி யாதியோர்
முந்தி மேவக் கூவுபு, சிந்தி யாதி ருந்துழி. 9

கு - ரை : அந்தி வான் மதிச் சடை நந்தி - சிவபெருமான். நந்தி ஆதியோர் - நந்திதேவர் முதலியோரை. கூவுபு - அழைத்து.

அற்ற மோர்கி லான்முனி, யுற்ற செய்கை யுணர்கிலீர்
பெற்ற காவ னன்றென்றான், பற்ற வாவெ றுப்பிலான். 10

கு - ரை : அற்றம் ஓர்கிலான் - துன்பம் வருவதை ஆயாதான். பற்று அவா வெறுப்பிலான் - சிவபெருமான்.

இனைய குற்ற மெய்தலால், துனைய மேதி னிக்கணே
நினைய மேவு வீரென்றான், அனைய வாவோர் பாதியான். 11

கு - ரை : துனைய - விரைந்து. மேதினிக் கண் - நிலவுலகத்தில். அன்னை அவாவு ஓர் பாதியான் - சிவபிரான்.

நந்தி யாதி யாவரும், புந்தி மாழ்கி வீழ்ந்தனர்
உந்தி சூடு வேணியாய், சிந்தி யாத தீமையால். 12

கு - ரை : புந்தி மாழ்கி - அறிவு மயங்கி. உந்தி சூடு வேணி - கங்கைநதியைச் சூடிய சடை.

இந்த வாற ருளினை, பந்த மோவி யாமெலாம்
முந்த நின்னை மேவுநா, ளெந்த நாளி ரங்குவாய். 13

கு - ரை : பந்தம் ஓவி - பாசத்தினின்று நீங்கி. முந்த - முற்பட.

என்று நைந்து வேண்டலுங், கன்று மான்ம ழுக்கையார்
அன்று மிக்க ருளுற, நன்று கூறு வாரரோ. 14

கு - ரை : நைந்து - மனம் நொந்து. மான் மழுக் கையார் - சிவ பெருமான். அன்று - அப்பொழுது.

நாகை மேவி நம்மடி, யோகை யால ருச்சியா
வாகை யாய திங்கறு, வாகை மேவி வம்மினே. 15

கு - ரை : ஓகையால் - அன்புடனே. ஆகை ஆய திங்கு - உண்டாகிய தீமை. வாகை மேவி - வெற்றி பொருந்தி.

பண்டு போல மேவலாங், கண்டு கொள்ளு வீரெனத்
தொண்டு கொண்ட சுந்தரன், விண்டு நல்கி னுன்விடை. 16

கு - ரை : பண்டுபோல - முன்பு போலவே. விண்டு விடை நல்கினுன் - சொல்லி விடைகொடுத்தருளினுர்.

ஓகை மேவி யாவரு, மீகை நாடு மினைதராத்
தோகை பாகர் மேவிய, நாகை வந்து நண்ணினுர். 17

கு - ரை : மீகைநாடு - விண்ணுலகம். தோகை - உமாதேவியார். பாகர் - பக்கத்திலுடைய சிவபெருமான்.

தேவ தீர்த்த மாடினுர், ஓவ நேரு மாபதித்
தீவ நேர்தெ ரிந்தனர், பாவ நத்தம் பாறவே. 18

கு - ரை : ஓவம் நேரும் - சித்திரத்தையொத்த. பாவ நத்தம் பாற: பாற - நீங்க, ஒழிய.

அருந்த வத்த ராவியைத், திருந்த நின்ற தேவியைக்
கருந்த டங்க ணம்மையைப், பொருந்த வன்பிற் போற்றினுர். 19

கு - ரை : அருந் தவத்தர் ஆவி: ஆவி - உயிர். கருந்தடங்கண் அம்மை - நீலாயதாட்சியம்மையார்.

சுற்று முள்ள தலமெலாம், பற்று மேவச் சென்றுசென்
றுற்று நோக்கி யேத்தினுர், கற்று வல்ல காட்சியார். 20

கு - ரை : பற்று மேவ - அன்பு பொருந்த. சென்று சென்று நோக்கி ஏத்தினுர், உற்று நோக்கி ஏத்தினுர்.

வேறு

மேயகா ரோணத் தென்கீழ் வியன்றிசை யமரர் போற்ற
ஆயதா மொருகு ரோசத் தலங்குமாச் சிரம மொன்று
தூயவான் சித்தர் பல்லோர் துதைதலாற் பன்னூற் கேள்வி
ஏயயா வோருஞ் சித்தாச் சிரமமென் றிசையா நிற்பர். 21

கு - ரை : தென் கீழ்த்திசை - அக்கினித் திக்கு. ஒரு குரோசத்து அலங்கும்; அலங்கும் - விளங்கும். துதைதலால் - நெருங்கியிருத்தலால். சித்தாச்சிரமம்.

விருத்தகா வேரி யாழி மேவுமோர் தானத் தென்பாற்
பொருத்தமா யொளிரத் தானம் பூரணி சொரூப மாயே
அருத்தமாஞ் சிவனுக் கென்று மளவிலாப் பிரியஞ் செய்யுந்
தருத்தவா வளத்தா லோங்கித் தழைப்பதஃ தெந்த ஞான்றும். 22

கு - ரை : ஆழி - கடல். தென்பால் - தெற்கில். பூரணி - அம்மையார். அருத்தம் ஆம் - பாதியாகவுள்ள. பூரணி சொரூபமாயே அத்தானம் பிரியம் செய்யும். தரு தவா வளத்தால் - மரங்கள் நீங்காத வளப்பத்தால்.

வேறு

மேவு மாபெருங் கானம் விடுத்தகூ
ரேவு முண்ணுழை யாதென் றிமையவர்
நாவு மோதுமென் ஞேதலென் ஞாயிற்றின்
பாவு மொண்கதி ரும்பட ராவெனில். 23

கு - ரை : கூர் ஏவும் உள் நுழையாது; ஏ - அம்பு. ஞாயிறு - சூரியன். பாவும் - பரவும். கதிர் - கிரணம். படரா - செல்லமாட்டா.

கலிவிருத்தம்

திரிபு

அம்புன் ஞகத் தமர்தருப் போகமாம்
வம்புன் ஞகமின் மாதவர் சேரவண்
வெம்புன் ஞக மடங்கல் விருப்பினி
தம்புன் ஞக மருங்கு சரிக்குமே. 24

இதன்பொருள் : அம் புல் நாகத்து அமர்தரு போகம் ஆம் வம்பு - அழகு புல்லிய தேவலோகத்து அமராநின்ற ஐந்தருவின் போகமாகிய நிலையில்லாமையை. உன் ஆகம் இல் மாதவர் சேர் அவண் புன்ஞகம் மருங்கு - நினைக்கும் நெஞ்சமில்லாத பெரிய தவத்தையுடையோர் சேர்ந்த அவ்விடத்து

உள்ள புன்னை மரத்தின் பக்கத்து. வெம் புல் நாகம் மடங்கல் விருப்பின் நிதம் சரிக்கும் - வெவ்விய புலியும் யானையும் சிங்கமும் பகைமையின்றி நாள் தோறும் சஞ்சரிக்கும் என்றவாறு.

ஐந்தரு ஊட்டும் போகம் உண்போர்க்குப் புதிதாக விளங்குதலின், வம்பு என்பதற்குப் புதுமை எனப் பொருள்கொண்டு, போகமாகிய புதுமையை மனத்தின்கண் நினைத்தல் இல்லாத மாதவர் என மொழிமாற்றிப் பொருள் கூறினும் அமையும். அங்குத் திரியும் மிருகங்கள் அவர் ஆணைவழி நடக்கும் என்பார், விருப்பின் நிதம் சரிக்கும் என்றார். பகையின்மை என்னும் காரணத்தை விருப்பு எனக் காரியமாக்கிக் கூறியது உபசார வழக்கு. மூக்குக் கூரிய நம்பி என்றாற்போல, ஆகமின் மாதவர் என்பது ஒருமைச் சினைப் பெயர் முதல் வினையோடு முடிந்த திணை வழுவமைதி. புல் நாகம் மடங்கல் என இடைச் சொல்லானன்றிப் பெயரான் எண்ணப்படும் செவ்வெண்ணின் தொகையும் முற்றும்மையும் விகாரத்தால் தொக்கன.

தந்தத் தானத் தறுகட் கறையடி
நந்தத் தானத் தமரரு நண்ணரும்
அந்தத் தானத் தரும்புகழ் கூறற்கு
முந்தத் தானத்த நீங்க முயலுமே. 25

இ - ள்: தந்தம் தானம் தறுகண் கறையடி நந்த - கொம்பினையும் மதத்தினையும் கொடுமையினையும் உடைய யானைகள் பெருகுதலால். தானத்து அமரரும் நண்ணரும் அந்த தானத்து அரு புகழ் கூறற்கு - தேவலோகத் துள்ள தேவர்களும் பொருந்துதற்கு அரிய அவ்வனமாகிய இடத்தின் அரிய கீர்த்தியைச் சொல்ல. தால் முந்த நத்தம் நீங்க முயலும் - நாவானது முந்துதலால் அவித்தையாகிய இருள் நீங்குதற்கு முயலாநிற்கும் எ - று.

சொல்ல முந்தின் அவித்தை நீங்கும் எனவே, சொல்லின் வரும்பேறு வரையப்படா என்பது பொருளாற்றலாற் போந்தது. நந்த முந்த என்னும் எச்சம் காரணப்பொருளில் வந்தது. அமரரும் என்பதின் உம்மை இறந்தது தழீஇ நின்ற உயர்வு சிறப்பும்மை. அந்த என்னும் சுட்டுத்திரிபு அவ்வனத் தின் பெருமையைக் குறித்து நின்றது. கூறற்கு என்பது பகுப்பப் பிளவு பட்டு உருபும் பெயரும் வேறாய்நின்ற தொழிற்பெயர் போலாது, பிளவு படாது ஒன்றுபட்டு இசைந்து நிற்றலான் வினையெச்சம்.

யமகம்

ஆக மஞ்சரி யாவயின் வேதனே
டாக மஞ்சரி யாதிய ரின்பமுண்
டாக மஞ்சரி யார்தரு வைகலொன்
றாக மஞ்சரி யாமையு மார்வரே. 26

இ - ள் : ஆகமம் சரி ஆவயின் - சைவாகமங்கள் சஞ்சரிக்கும் அவ் விடத்து. வேதனோடு ஆகம் மஞ்சு அரி ஆதியர் - பிரமனோடு மேகம்போன்ற மேனியையுடைய விட்டுணு முதலியோர். இன்பம் உண்டாக மஞ்சரி ஆர் தரு வைகல் ஒன்று - தங்கள் தங்கள் உலகங்களில் அனுபவிக்கும் இன்பம் உண்டாகவும் பூங்கொத்துக்கள் பொருந்திய பல தருக்கள்தோறும் நிட்டை கூடியிருத்தல் ஒன்று மாத்திரமோ. கமம் சரியாமையும் ஆர்வர் - (சிவானந்த போகமாகிய) நிறைவும் சாய்தராமல் பொருந்துவர் என்றவாறு.

பிரமன் முதலாயினோர் தங்கள் தங்கள் பதங்களில் நுகரும் இன்பத்தை அருவருத்து நிட்டை கூடலும், சிவானந்த போகமும் அவ்வனத்துட் பொருந்துவர் என்றமையால், அவரவர் பதங்களிலும் அவ்வனம் மேன்மை யுடைத்து என்பது போந்தது. ஆகமம் தெய்வப் பகுதியதாதலின், ஈறு திரியாது அஃறிணைச்சொல்லாய் உயர்திணைப்பொருளை உணர்த்தி நின்ற தோர் திணை வழுவமைதி. இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. "எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற், பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்" (தொல் - இடை - 39 சூத்) என்பதனால் வைகலும் என உம்மை கொடாதொழிந்தார்.

குவல யத்தடந் தோய்குவர் கொற்றந
குவல யத்தடந் தோளர்வெங் கூற்றிசைக்
குவல யத்தடத் தோவென கூறுமுற்
குவல யத்தடந் தோற்றங் குமைக்கவே. 27

இ - ள் : வெம் கூற்று இசைக்குவல் அந்தோ அயத்து அடு என கூறு முன் - வெவ்விய யமனானவன் உனக்குச் சொல்லுவேன் ஐயோ இரும்பா லாகிய ஆயுதங்களாற் கொல்வாய் என்று தூதுவனைப் பார்த்துச் சொல்லு முன், குவலயத்து அடம் தோற்றம் குமைக்க - பூமியின்கண் உள்ள பொல் லாங்குகளையும் பிறவிகளையும் கெடுக்கும்பொருட்டு. கொற்றம் நகு வலயம் தடம் தோள் மைந்தர் - வெற்றி விளங்காநின்ற வாகுவலயம் அணிந்த பெரிய தோளினையுடைய மைந்தர்கள். குவலயம் தடம் தோய்குவர் - (அங்கு உள்ள) நீலோற்பலம் மலர்ந்த பொய்கைதோறும் மூழ்காநிற்பர் எ-று.

இதனால் அங்குள்ள தீர்த்த விசேடம் கூறினர். சுட்டு அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. அயம்: கருவியாகுபெயர். அடு என்பது ஈறு கெட்டு நின்றதோர் முன்னிலை முற்றுச் சொல்: "செய்யா வென்னு முன்னிலை வினைச் சொல், செய்யென் கிளவி யாகிட னுடைத்தே" (தொல் - எச்ச - 54சூ) என்ப தற்குச் சேனாவரையர் கூறிய கடாவிடைகளான் உணர்க. கூறு: முதனிலைத் தொழிற்பெயர். குமைக்க: காரியப்பொருளில் வந்த எச்சம்.

இரண்டடிப் பாடக மடக்கு

கண்ட லங்கக னங்கவ ராவிரைக்
கண்ட லங்கக னங்கவ ராவிரைக்
கொண்ட லங்கண்ட நாகங்கு லாவுமே
கொண்ட லங்கண்ட நாகங்கு லாவுமே. 28

இ - ள் : கண் தலம் ககனம் கவரா்-பார்த்தோர் கண்கள் வெளியைக் கவராமல், விரை கண்டல் ககனம் கவர் ஆவிரை - வாசனைபொருந்திய தாழங்காட்டினையும் பிளவுபட்ட ஆவிரைகளையும், கொண்டு அலம் கண்ட நாகம் குலாவும் - கொண்டு அமைதி பொருந்திய புன்னை மரங்கள் குலவா நிற்கும். அங்கு கொண்டல் நாகு அங்கு உலாவும் - அவ்விடத்துச் சஞ்ச ரிக்கும் மேகங்களைத் (தமக்கு இனமென்று கருதி அவற்றை)ப் பொருந்தப் பெண் எருமைகள் அங்கு உலாவும் என்றவாறு.

அம் பதத்தொடு பதம் புணர்தற்கண் வந்த சாரியை இடைச்சொல். முதலொடு சினைக்கு ஒற்றுமை உண்மையிற் சினைவினை முதல்மேல் ஏற்றிக் கவர் ஆவிரை என்றார். சுட்டுத்திரிபு ஓர் அடியுள் அடுத்து வந்தமையிற் சொற்பின் வருநிலையணி. ''எருமையு மரையும் பெற்றமு நாகே'' (தொல்- பொருள் - மரபு - 63 சூத்) என்பதனல் நாகென்றார். மருத நிலத்திற்குரிய எருமைகள் முல்லை நிலத்தில் உலாம் என்றது புகழ்ச்சிப்பாற் படுதலின், இட மலைவு அமைதி.

இது அடிமடக்கு எனினும் அமையும்.

முற்றுமடக்கு

வஞ்சித்துறை

தான மணக்கும், தான மணக்கும்
தான மணக்கும், தான மணக்கும். 29

இ - ள் : தானம் அணக்கும் தானம் மண் நக்கும் தானம் மணக்கும் - தேவலோகத்தை விழுங்குதற்கு அண்ணாக்கும் அவ்வனமாகிய இடத்து மண்ணைத்தடவிச் செல்லாநின்ற யானை மதம் பரிமளிக்கும்; தானம் மணக் கும் - (அதன்றியும்) சோடச தானங்களும் கலக்கும் என்றவாறு.

முனிவர்கள் இடையருது யாகம் செய்யுமிடம் ஆதலால் சோடசதான மும் அவ்விடத்துப் பொருந்தும் என்பார் 'தானம் மணக்கும்' என்றார். அணத்தல் என்னும் இடத்தின் நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது.

கோமூத்திரி

இரண்டு இரண்டு வரியாக ஒரு செய்யுள் எழுதப்பட்டு மேலும் கீழும் ஒன்று இடையிட்டு வாசித்தாலும் அச்செய்யுளே வருவது.

கலிவிருத்தம்

மாடு நாக மராவழை மன்னுவ
ஊடு பூக மிராவுழை யொன்றுவ
கூடு சோதி குலாந்திமி சாருவ
நீடு மாதி நிலாயதின் சாலுவ. 30

இ - ள் : மாடு நாகம் மரா வழை மன்னுவ - பக்கத்தில் புன்னைகளும் கடம்புகளும் சுரபுன்னைகளும் நிலைபெறுவன. ஊடு பூகம் இரா உழை ஒன்றுவ - அம்மரச் செறிவினிடையே கமுகுகள் இருள்போல இடந்தோறும் பொருந்துவன. கூடு சோதி குலாம் திமிசு ஆருவ - தலைக்கூடிய சோதி மரங்களும் பொலியும் வேங்கை மரங்களும் நிரம்புவன. நீடும் ஆதி நிலாயது - (அவ்வனம்) நீண்டிருக்கும் இவை முதலிய தருக்களால் விளங்கியது. இன் சாலுவ - (அதனுல் அதைச் சார்ந்தார்க்குப் பல) இன்பங்களும் நிரம்புவன என்றவாறு.

நீண்டிருக்கும் இவை முதலிய தருக்கள் விளங்கி அவ்வனத்தின்கண் நிரம்புவன எனப் பொருள் கூறினும் அமையும். ஆதிய என்னும் குறிப்பு வினை முற்றுப் பெயர் ஈறு விகாரத்தால் தொக்கது. நிலாயது என்பதை முன்னர் வினைமுற்ருகக் கொண்டு பொருள் கூறிப் பின்னர் நிலாய் அது என்பதைச் சுட்டுப்பெயராகக்கொண்டு பொருள் கூறினும். அதின் சாலுவ உருபிற்கியையும் இன் சாரியை பொருட்கண் இயைந்தவழி னகரவீறு இயல் பாதல் "உணரக் கூறிய புணரியன் மருங்கிற், கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே" என்னும் (தொல் - எழுத் - புள்ளிமயங் - 101 சூ). புறனடையாற் கொள்க.

கூடசதுக்கம்

ஈற்றடி யெழுத்துக்கள் ஏனை மூன்றடியுள்ளும் கரந்துநிற்க வருவது.

விண்டு நின்று மிளிர்கிஞ் சுகத்துமே
லண்டு மாவழை தாடிமத் தும்மணி
கொண்டு வப்புக்கொள் சந்துப னசத்தும்
வண்டு கிண்டி மதுப்புனன் மாந்துமே. 31

இ - ள் : விண்டு நின்று மிளிர் கிஞ்சுகத்து மேல் அண்டு - விகசித்து நின்று விளங்காநின்ற முருக்கின் மேலிடத்தை அணுகிய. மா வழை தாடி மத்தும் - மாவினிடத்தும் சுரபுன்னையினிடத்தும் மாதளையினிடத்தும். மணி கொண்டு உவப்புக் கொள் சந்து பனசத்தும் - அழகு கொண்டு (கண்டோர்)

உவகை கொள்ளுதற்குக் காரணமாகிய சந்தனத்தினிடத்தும் பலாவினிடத்தும். வண்டு கிண்டி மதுப்புனல் மாந்தும் - வண்டுகள் மூக்கால் உழுது மதுவாகிய நீரை உண்ணுநிற்கும் என்றவாறு.

சினைவினை முதன்மே லேற்றி, 'விண்டு நின்று மிளிர் கிஞ்சுகம்' என்றார். சாரியை இடைச்சொல்லும் எண்ணும்மையும் இறுதியில் நின்று சொற்றொறும் இயைந்தமையிற் கடைநிலைத் தீவக அணி. அன்றி,''ஒருசொன் னின்றே தனித்தனி யுதவுதல்'' என்னும் பிரிவினுள் அடக்கினும் அமையும்.

முரசபந்தம்

ஒவ்வோரடி ஒவ்வொரு வரியாக நான்கடியும் எழுதி மேல் இரண்டு வரியும் தம்முள் கோமூத்திரியாகவும், கீழிரண்டு வரியும் தம்முள் கோமூத்திரி யாகவும் சிறுவார் போக்கப்பட்டும், மேல்வரி இரண்டாம் வரியினும் மூன்றாம் வரியினும் நான்காம் வரியினும் கீழுற்று மீண்டு மேல்நோக்கவும், கீழ்வரி யினும் அவ்வாறே மேலுற்று மீண்டு கீழ்நோக்கவும் பெருவார் போக்கப் பட்டும், இந்த வார் நான்கும் நான்கு வரியாக வருவது.

வஞ்சிவிருத்தம் - அடிமடக்கு

புன்னை யாரமை பாடலம், தென்னை யாரமை பாடலம்
புன்னை யாரமை பாடலம், தென்னை யாரமை பாடலம். 32

இ - ள்: தென் நையார் அமைபு ஆள் தலம் - (தவத்தின்) பெருமை கெடாத முனிவர் தங்கி ஆளுந்தலமாகிய அவ்வனம். புன்னை ஆர் அமை பாடலம் தென்னை ஆரம் - புன்னையும் ஆத்தியும் மூங்கிலும் பாதிரியும் இலாங் கலியும் சந்தனமரமும். ஐ பாடு அலம் புல் நை ஆர் அமை - அழகுபடுதலும் அமைவுமுள்ள தருப்பைப்புல்லும் (ஆகிய இவை முதலியவற்றால் கண்டோர் மனம்) கனிதல் பொருந்திய வளமுடைமையால். பாடலம் - யாம் புகழ்ந்து பாடேம் (பாடுதற்கு முடியாது என்றபடி) என்றவாறு.

எண்ணும்மையும் உம்மையெண்ணின் கண் உருபு தொகுதல் வரையப் படாமையால், உருபும் வினைமுதல் வினையும் தொக்கன. அமைதி என்பதின் ஈறு தொக்கது.

ஆர் - ஆத்தி. அமை - மூங்கில். பாடலம் - பாதிரி. ஆரம் - சந்தனம்.

சுழிகுளம்

ஒரு செய்யுள் எவ்வெட்டு எழுத்தாக நான்கு வரி எழுதப்பட்டு மேல் நின்று கீழ் இழிந்தும், கீழ் நின்று மேல் ஏறியும், புறம் நின்று வந்து உள் முடிய அவ்வரி நான்கும் ஏயச் செய்யுளாவருவது.

வஞ்சித்துறை

அதவமரா வார்மா, தவமுவவா யாகார்
வமுவல்புதை யாவா, மவல்கனிபு வாரா. 33

இ - ள்: அதவம் மரா ஆர் மா கார் ஆயா தவழுவ - (அவ்வனத்தின்) அத்தி மரத்தினும் கடப்ப மரத்தினும் ஆத்திமரத்தினும் மாமரத்தினும் மேகங்கள் கேடில்லனவாய்த் தவழுவன. ஆ வழுவல் புதையா - ஆச்சாமரங்கள் சாய்தலான் மறைவன அல்ல. மவ்வல் கனிபு வாரா - வனமல்லிகைக் கொடிகள் நெருங்கிப் பகுத்தறியத் தெரியாவாய் நிறைந்தன என்றவாறு.

வார்தல் - தெரிதல். மவல் - தொகுக்கும் வழித் தொகுத்தல்.

அதவம் - அத்தி. மரா - கடம்பு. கார் - மேகம். ஆ - ஆச்சாமரம். மவல்=மவ்வல் - வனமல்லிகை.

மாலைமாற்று

ஒரு செய்யுளை ஈறு முதலாகக்கொண்டு வாசிப்பினும் அச்செய்யுளே வருவது.

கலிவிருத்தம்

தேயா வாமா வாவா டாதே, தேசா மூவா யாவா ஞதே
தேஞ வாயா வாமூ சாதே, தேடா வாவா மாவா யாதே. 34

இ - ள்: ஆமா தேயா - காட்டுப்பசுக்கள் (பிணி முதலியவற்ருல்) தேய்வன அல்ல. ஆ வாடாது - மற்றைப் பசுவும் (அவற்ருல்) வாடாது. தேசு ஆம் மூவா யா ஆனுது - ஒளிபொருந்திய முதிராத யா என்னும் மரம் நீங்காது. தேன் நா வாய் ஆ ஆம் ஊசாது - இருவினது தேனனது (அடைந்தோர்) நாவினையுடைய வாயின் கண்ணுக (ஒழுகுதல்) உண்டாகும், (அவ்வாறு ஒழுகுதலின் சிறிதும்) சாயாது. தேடா வாவா மா ஆயாது - தேடுதற்கு அரிய (பிற இடங்களில்) தாவுதல் இல்லாத மாமரங்கள் கெடாது என்றவாறு.

ஏகாரங்கள் தேற்றப் பொருளில் வந்தன. அவ்வனம் முனிவர் உறைவிடம் ஆதலின் அங்கிருக்கும் காட்டுப் பசுக்களும் மற்றைப் பசுக்களும் பிணி முதலியவற்ருல் கெடா என்பார் 'தேயா வாடாது' என்ருர். பஞ்சகவ்வியப் பொருட்டால் இனம்பற்றி அவர்கள் ஓம்புதலில், தேயா வாடாது என்ருர் எனினும் அமையும். தெய்வத்தன்மையுள என்பார் தே சா மூ வாயா என்றும், தேன் ஊசாது என்றும், மா ஆயாது என்றும் கூறினர். ஆ என்னும் முதனிலை வினையெச்சப்பொருளில் வந்தது. ஈறு கெட்டது எனினும் அமையும்.

காதைகரப்பு

ஒரு செய்யுள் முடிய எழுதப்பட்டு அதன் ஈற்று மொழியின் முதல் எழுத்துத் தொடங்கி ஒவ்வோரெழுத்து இடையிட்டு வாசிக்கப் பிறிதொரு செய்யுள் போதுவது.

சாது பாய தயாவமை யானித்த
கோது போய சுமேதத வானிப்பு
மீது மேய மராகவி தேனிப்ப
போது தூய வளாவிய மானிக்க. 35

இ - ள்: தயா அமை சாது பாய - தயா அமைந்த சாதுத் தன்மைகள் பரவின. ஆனித்த கோது போய சுமேதத்த - கெடுதலையுடைய குற்றந்தீர்ந்த நல்ல யாகங்களையுடையன. வானிப்பு மீது மேய மரா கவி தேனிப்ப - மேற் கட்டிபோல மேலிடத்துப் பொருந்திய மராமரங்கள் குரங்குகள் (பயில) உவப்பன. மானிக்க தூய போது வளாவிய - கண்டோர் யாவரும் அபி மானிக்கத் தூயமலர்கள் கலந்தன என்றவாறு.

ஆனித்தல் - கெடுதல். வானிப்பு - மேற்கட்டி. தேனித்தல் - உவத்தல். மேதத: தொகுக்கும்வழித் தொகுத்தல். பாய தேனிப்ப வளாவிய என வனத்துறு பொருளின் தொழிற்பன்மை கூறி, மேதத்த என அவ் வனத்தையே பன்மையாகக் கூறியது என்னை? எனின். யாகம் நிகழுதல் அவ் வனத்தின் முனிவர் உறைவிடந்தோறும் ஆதலான் முதலொடு சினைக்கு ஒற்றுமை நோக்கிச் சினைப்பன்மையை முதன்மேல் ஏற்றிக் கூறினர் என்க. மரா தேனிப்ப என, உயர்திணைப்பொருளின் தொழிலை அஃறிணைப்பொருள் மேல் ஏற்றிக் கூறியது மரபு வழுவமைதி.

காதை கரப்பிற் கரந்தது

வஞ்சித்துறை

கனிய னாயது, பனிவி ராயது
புனித மேயது, தனிமை யாயது. 36

இ - ள்: இது வெளி.

திரிபங்கி

ஒரு செய்யுளாய் உறுப்பமைந்து ஒரு பொருள் பயப்பதனை மூன்றாகப் பிரித்து எழுத வெவ்வேறு செய்யுளாய்த் தனித்தனியே பொருள் பயந்து தொடையும் கிரியையும் தனித்தனியே காண வருவது.

நேரசைக் கட்டளைக்கலித்துறை

கூடிய பூநிறை கொம்பரே லாங்குளிர் வானணவு
நீடிய காய்குறை யென்பது போமிளிர் நேயமிகு
நாடிய சீர்நறை கொண்டன வேதளி ரானயமாம்
பாடிய வேமறை யங்கமு லாம்வெளி பாறியதே. 37

இ - ள்: கூடிய பூ நிறை கொம்பரெலாம் குளிர்வான் அணவும் - நெருங்கிய மலர் நிறைந்த கொம்புகள் எல்லாம் குளிர்ந்த வானத்தைத் தடவும். குறை என்பது போம் காய் நீடிய - (அதுவன்றியும்) குறை என்பது ஒழிந்த காய்களால் நிறைந்தன. மிளிர் நேய மிகு நாடிய சீர் நறை கொண்டன - விளங்காநின்ற நேயமிக்க ஆராய்ந்த சிறப்பினையுடைய தேனையும்

கொண்டன. தளிரால் நயமாம் - தளிர்களாலும் அழகாகும். வெளி பாறியது - அவற்ருல் வெளியிடம் தோன்றுவதுமின்று. பாடிய ஏம் மறை அங்கம் உலாம் - ஓதுதலால் இன்பத்தை (ப்பயக்கும்) வேதமும் வேதாங்கமும் (அவ் விடத்துச்) சஞ்சரியாநிற்கும் என்றவாறு.

இயக்குவான் தொழிலை இயங்குபொருள்மேல் ஏற்றி இவ்வூர்க்குக் கானம் வரும் என்ருற்போல, மறை அங்கம் உலாம் என உடையான் தொழிலை உடைமைமேல் ஏற்றிக் கூறியது, ''வாரா மரபின வரக் கூறுதலும்'' (தொல் - சொல் - எச்ச - 26 சூ.) என்பதில் ஒன்றின முடித்தல் என்பதனுற் கொள்க.

இக்கவியுட் பிரிந்த செய்யுள்கள்.

வஞ்சித்துறை

கூடிய பூ, நீடிய காய்
நாடியசீர், பாடிய வே. 38

நிறைகொம் பரெலாம்
குறையென் பதுபோம்
நறைகொண் டனவே
மறையங் கமுலாம். 39

குளிர்வா னணவு
மிளிர்நே யமிகு
தளிரா னயமாம்
வெளிபா றியதே. 40

இ - ள்: இவை வெளி.

மாத்திரைச்சுருக்கம்

ஒரு பொருள் பயக்கும் ஒரு சொல் ஒரு மாத்திரையைக் குறைப்ப வேறு பொருள் பயக்குஞ் சொல்லாய் வருவது.

கலிவிருத்தம்

ஓடியு மாத்திரை யொன்றுடைத் தாதகி
மடியு மொன்றுடை மாந்தருச் செய்தில
கடியு மொன்றுடைக் காடுகை யாற்கிழித்
திடியு மொன்றுடைக் கீலக மேய்க்குமே. 41

இ - ள்: மாத்திரை ஒன்று ஓடியும் உடை தாதகி - ஒரு மாத்திரை குறைதலுடைய ஆத்தி, ஒரு மாத்திரை குறைதலுடைய ஆத்தி என்றமை யால் அத்தி என்ருயிற்று; அத்தி - யானைகள். மடியும் ஒன்று உடை மாந்தரு -

ஒரு மாத்திரை மடிதலையுடைய சூதம், ஒரு மாத்திரை மடிதலையுடைய சூதம், என்றமையால் சுதம் என்றாயிற்று; சுதம் - கெடுதியை. செய்தில - எதிர்ந் தோர்க்குச் செய்திலவாய். கடியும் ஒன்று உடை காடு - ஒரு மாத்திரை கடி தலையுடைய கானம், ஒரு மாத்திரை கடிதலையுடைய கானம் என்றமையால் கனம் என்றாயிற்று; கனம் - மேகத்தை. கையாற் கிழித்து - துதிக்கையாற் கிழித்து. இடியும் ஒன்று உடை கீலகம் - ஒரு மாத்திரை குறைதலையுடைய ஆப்பு, ஒரு மாத்திரை குறைதலையுடைய ஆப்பு என்றமையால் அப்பு என் றாயிற்று; அப்பு நீரை. ஏய்க்கும் - (ஒழுக்குவித்தலால் அம்மேகத்தை) ஒத்துத் தோன்றும் என்றவாறு.

யானைகள் எதிர்ந்தோர்க்கு ஊறுசெய்திலவாய், மேகத்தைத் துதிக்கை யாற்பற்றிக் கிழித்து, அதினின்றும் நீரை ஒழுக்குவித்தலால், அம்மேகத்தை ஒத்துத்தோன்றும் என்பது பொருள்.

தம் அளவிற் குறைதலால், ஒரு மாத்திரையையுடைய என, மற்றைய வற்றிற்கும் இவ்வாறே ஏற்குமாறு பொருள் கூறினும் அமையும். ஓடியும், மடியும், கடியும், இடியும் என்னும் எச்சங்களுள், முதனிலை பிரிந்து தொழிற் பெயராய் உருபேற்று வந்தன. பின்னர்க் கூறிய உரையுள் ஓடியும் முதலிய எச்சங்கள் காரணப்பொருளில் வந்தன. ஒன்று: எண்ணுகுபெயர்.

மாத்திரை வருத்தனை

ஒரு பொருள் பயக்கும் ஒருசொல் ஒரு மாத்திரை பெற்று, வேறு சொல்லாய்ப் பொருள் பயந்து நிற்பது.

ஒன்று மாத்திரை யொன்றிய பூமியால்
ஒன்று சேர்விண் ணவருண வோங்குவ
ஒன்று சேர வொளிரு மிழையெலாம்
ஒன்று சேரும் விளர்ப்புற் றுயருமே. 42

இ - ள் : ஒன்று மாத்திரை ஒன்றிய பூமியால் - ஒரு மாத்திரை கூடிய நிலத்தால், ஒரு மாத்திரை கூடிய நிலம் என்றமையால் நீலம் என்றாயிற்று. நீலத்தால் - குவளைமலரால். ஒன்று சேர் விண்ணவர் உணவு - ஒருமாத் திரை கூடிய தேவருணவு. தேவருணவு அவி; ஒரு மாத்திரை கூடிய என்றமையால் ஆவி என்றாயிற்று; ஆவி - பொய்கைகள். ஓங்குவ - விளங் குவன. ஒன்று சேர - ஒரு மாத்திரை கூட. ஒளிரும் இழை - விளங்கும் கலம். ஒரு மாத்திரை கூட விளங்கும் கலம் என்றமையால் காலம் என்று ஆயிற்று. காலம் எலாம் - அறுவகைப் பெரும்பொழுதும். ஒன்றுசேரும் விளர்ப்பு - ஒருமாத்திரை கூடிய வெண்மை. வெண்மை - சிதம். சிதம் ஒரு மாத்திரை கூடிய என்றமையால். சீதம் என்றாயிற்று. சீதம் - குளிர்ச்சியை. உற்று உயரும் - பொருந்தி (அவ்வனத்தில்) உயர்ந்து தோன்றும் எ-று.

மரச்செறிவானும், மேகங்கள் படிதலானும், பொய்கை முதலியவற்றின் மிகுதியானும் எப்போதும் ஒரு தன்மையவாய்க் குளிர்ந்திருக்கும் என்பார்

காலமெல்லாம் சீதமுற்று உயரும் என்றார். பொதுமை நீங்கி அஃறிணைக்கு உரித்தாய் நின்ற எல்லாம் என்னும் பன்மைப்பெயர் வினைமுதல் வினை கொண்டு முடிதலுமன்றிக் காலம் என்னும் முதற்பொருளின் சினையாய அறு வகைப்பொழுதினும் நின்றது.

பிறிதுபடுபாட்டு

ஒரு செய்யுளின் அடியையும் தொடையையும் வேறுபடுப்பச் சொல்லும் பொருளும் வேறுபடாது, அச்செய்யுளே வேறொரு செய்யுளாய் வருவது.

மேலாடு சோலை விளையாடு பல்வண்டர்
காலாடு தோறுங் கதித்தேறி யோலாடு
நூலாடு மார்பர் நண்ணிநோற் றாயு
நாலாட வாலாடு நாப்ப ணமைந்தே. 43

இ-ள்: மேல் ஆடு சோலை விளையாடு பல்வண்டர் - விண்ணுலகத்தில் தோய்ந்த அங்குள்ள சோலைகளில் (தேன் நுகர்ந்து) விளையாடா நின்ற பலவகைப்பட்ட வண்டுகளும். கால் ஆடு தோறும் கதித்து ஏறி ஓலாடும் - காற்று வீசுந்தோறும் அதிகரித்துச் சென்று முழங்கும். நூல் ஆடு மார்பர் நண்ணி நோற்று ஆயும் நால் ஆட நாப்பண் அமைந்து ஆல் ஆடும் - உபவீதம் விளங்கும் மார்பினையுடைய முனிவர்கள் நோன்பு பூண்டு பொருந்தி யாராயும் நான்கு வேதங்கள் சொல்ல (அக்குழுவின்) நடுவுள் அமைந்து ஆலமரம் விளங்கும் என்றவாறு.

அந்த ஆலமரம் சிவபெருமான் எழுந்தருளப்பெற்ற மான்மியம் உளதாதலின், நாப்பண் அமைந்து ஆலாடும் என்றார். நால்: எண்ணுகுபெயர்.

இது

மேலாடு சோலை விளையாடு பல்வண்டர்
காலாடு தோறுங் கதித்தேறி – யோலாடு
நூலாடு மார்பர் நண்ணி நோற்றாயு – நாலாட
வாலாடு நாப்பணமைந் தே. 44

என ஒழுகிசைச் செப்பல் ஓசைத்தாய் ஈராசு இடையிட்டு, ஒரு விகற்பத்தான் நடந்து, நாள் என்னும் வாய்பாட்டான் இற்ற நேரிசை வெண்பாவாய் வந்தது காண்க.

கரந்துறை செய்யுள்

பிறிதொரு செய்யுட் சொற்புகாது எழுத்துப் பொறுக்கிக் கொள்ளலாம்படி செய்யுள் பாடுவது.

நேரசைக் கட்டளைக்கலித்துறை

சீலவ ரோதயத் தார்குணத் தார்வனை சித்திரமே
போலநல் யோகத் திருப்பார்கொண் டாடுகை பொற்பச்செயும்
ஞால நிலைக்கவொ ரோதைமிக் காயெழ நாளுஞ்செய்தே
யேல மணக்கு நனைமரு மோது மிரங்குவண்டே. 45

இ - ள்: சீலம் வரோதயத்தார் குணத்தார் வனை சித்திரம்போல நல் யோகத்திருப்பார் - மாசின்மையையும் பிறர்க்கு அருளுதலையும் உடைய தவத்தினரும் சித்திரம் எழுதுதலில் கைபோயார் எழுதிய சித்திரம்போல உறுப்புக்கள் கம்பியாது நல்ல யோகத்தில் இருப்பவரும். ஞாலம் நிலைக்க பொற்பச் செய்யும் கொண்டாடுகை ஒரு ஓதை மிக்காய் எழ - உலகத்தில் நிலைபெற அழகுபெறச் செய்யும் பாராட்டுகையாகிய ஒரு ஓசை அதிகரித்து எழ. நாளும் செய்து ஏலமணுக்கும் - எந்நாளுஞ்செய்து (அவ்வனத்தில் ஆல மரம்) பொருந்த இருக்கும். இரங்கு வண்டுநனை மருவி மோதும் - ஒலித்தலையுடைய வண்டுகள் (அங்குள்ள) அரும்புகளின் கட்டவிழப் பொருந்தித் தாக்கும் என்றவாறு.

தவத்தினரும் யோகியரும் தத்தமக்குரிய நிலைமை வழுவாது நிலைபெற நடத்துதலின், அவ்வால் அவரால் புகழ்தற்பாடுடைத்து என்பார், கொண்டாடுகை ஓதை எழ மணக்கும் என்றார். மரு: தொகுக்கும் வழித்தொகுத்தல். ஏகாரம் முன்னர் இரண்டும் தேற்றத்தினும், பின்னது அசை நிலையினும் வந்தன.

இதனுட் கரந்தசெய்யுள்

சீரோணத் தானைச் சிலையேக் கொளுநாகைக்
காரோணத் தானைக் கருது. 46

இ - ள்: இது வெளி.

அட்டநாகபந்தம்

எட்டுப்பாம்பு தம்முள் இயைவனவாக உபதேசமுறையான் வரைந்தவற்றுள், எட்டுக்கவி எழுதப்பட்டுச் சந்திகளில் நின்ற எழுத்தே மற்றை இடங்களினும் உறுப்பாய் நிற்க வருவது.

நேரிசை வெண்பா

காயுங் கனியுங் கலவ மலர்கெழுமி
யாயுஞ் செழுமைமல்க வாயதே – நேயமிகும்
பாவுசீர் மேவிய பங்கமக லக்கமா
மேவுபார் கொண்டாடு மே. 47

இ - ள் : காயும் கனியும் கலவ மலர் கெழுமி ஆயும் செழுமை மல்க ஆயது - காய்களும் கனிகளும் பொருந்த மலர்கள் நெருங்கிக் கண்டோரால் ஆராயப்படும் வளப்பம் நிரம்பவாகிய அவ்வனமானது. நேயம் மிகும் பாவு சீர்மேவிய பங்கம் அகல் அக்கமா மேவு பார் கொண்டாடும் - அன்பு மிகுந்த பரவிய சிறப்பு வாய்ந்த ஞானக்கண்ணுகப் பொருந்திய உலகத்தால் கொண்டாடப்படும் என்றவாறு.

தன்னை அடைந்தோரை முத்திநெறிப் படுத்தலான் அவ்வனத்தை ஞானக்கண் என்ருர்.

கலவ கெழுமி மல்க எனத் தம்முள் இயைபில்லனவாகிய பல வாய்பாட்டானடுக்கிய எச்சங்களுள், இறுதி எச்சத்தின் முடிபாகிய ஆயது என்னும் சொல்லால் மற்றை எச்சங்கள் முடிந்தவாறு காண்க.

இப்படலம் 24வது செய்யுள் முதல் இதுவரையிலுள்ள 23 செய்யுட்களும் சித்திரகவிகளாயினமை காண்க. திரு அம்பர்ப்புராணம் நைமிசாரணியப்படலம் 41 பாடல்களும் சித்திர கவிகளாகவே இவ்வாசிரியர் இயற்றியுள்ளார். இப்பாடல்களுக்கெல்லாம் நூலாசிரியராகிய பிள்ளையவர்களே உரையும் இயற்றியுள்ளார்; அவ்வுரையே இதில் காணப்படுவது.

வேறு

அந்தவா ரணியத் தோரால் அளவினுள் கண்டு நிற்குஞ்
சந்தமே வுறுத லாற்ருேன் மரமெனச் சான்ருேர் சொல்வார்
நந்தவாங் கனிகள் பல்ல நயந்துமட் புதுக்க லங்கண்
முந்தவெண் ணிலக விழ்த்த முறைமையின் முயங்கு மாலோ. 47

கு - ரை : ஆரணியம் - வனம். அளவு இல் நாள் - அளவிறந்த காலம். சந்தம் - அழகு. தொன்மரம் - ஆலமரம், பழையமரம். நந்த ஆம் கனிகள். மட்புதுக்கலம் - புதிய மண்பாண்டம். எண் இல - அளவில்லாதன. முயங்கும் - பொருந்தும்.

ஒருவிழு தலைத்து விட்டா லுற்றநாற் றிசையு முள்ளார்
வெருவரச் சென்று மோதி மீடருங் கணத்தின் முன்னர்
திருமகண் மணுளர் பல்லோர் சேர்ந்துறங் கிடவந் தாலும்
மருவுமோ ரிலைவெவ் வேருப் படுத்தற்கு வயின்கொ டுக்கும். 48

கு - ரை : ஒரு விழுது அலைத்து விட்டால். வெருவர - அஞ்சும்படி. மீள்தரும் - திரும்பிவரும். வெவ்வேருகப் படுத்து உறங்குவதற்கு ஓர் இலை வயின் கொடுக்கும். வயின் - இடம்.

அத்தரு வெழுந்து வானு டடைந்துற நிழற்ற லாலே
மெய்த்தவா னவர்பல் லோரும் வெயிரிலா திருந்து வாழ்வார்
கைத்தல மிருநான் குள்ளான் கண்டபல் பறவை யெல்லாம்
மொய்த்தவ ணுறையா நின்ற முழக்கொலி யுறங்கா வென்றும். 49

கு - ரை: உற நிழற்றலால் - மிகுதியாக நிழல் செய்தலால். வெயர் இலாது - வியர்வை நீர் இல்லாமல். கைத்தலம் இருநான்கு உள்ளான் - பிரமதேவன். கண்ட - படைத்த.

இன்னுமஃ தாலங் காடென் றொருபெய ரெய்தி நாளும்
மன்னுசாய்க் காடு வெண்கா டமைந்தநீர் வளச்செங் காடு
மின்னுமா மறைக்கா டாதி விளங்குபல் காட்டிற் கெல்லாந்
துன்னுமேன் மையதாய்ச் சத்தி சொரூபமா யமைந்த தன்றே. 50

கு - ரை: ஆலங்காடு என்று அஃது ஒரு பெயர் பெற்றது. சாய்க்காடு, வெண்காடு, செங்காடு, மாமறைக்காடு என்னும் காடுகளுக்கெல்லாம் மேம்பட்டு விளங்குவது. சத்திசொரூபமாய் அமைந்தது.

அன்னதோர் தலத்தை நந்தி யடுத்தவ ரொடும டைந்து
சொன்னவவ் வடமூ லத்திற் சுடருமோ ரிலிங்கந் தாபித்
துன்னரும் புகழ்சா றீர்த்த மொன்றுகண் டாட்டிச் சூட்டி
நன்னலத் தூட்டிக் காட்டி நண்புசால் பூசை செய்தான். 51

கு - ரை: வடமூலத்தில் - ஆலமரத்தின்கீழ்: வடம் - ஆல். புகழ்சால் - புகழ்மிக்க. கண்டு - உண்டாக்கி.

அடுத்துவந் தாரு மிவ்வா றன்பொடு பூசை யாற்ற
விடுத்துமுன் னின்று தாழ்ந்து விழிகணீ ரிறையா நிற்ப
உடுத்துவன் புலித்தோன் மன்றத் துவந்துநின் றாடு வாரைக்
கடுத்துவே றென்று ருத துதிபல கரைய லுற்றான். 52

கு - ரை: நந்தியும் அடுத்து வந்தாரும் என்க. புலித்தோல் உடுத்து மன்றத்து உவந்து நின்று ஆடுவாரை.

ஆலவெங் குணத்தை மாய்த்தாங் கனுதியே யுயிரைப் பற்றும்
மூலபந் தத்தை நீக்கி முடிவிலா வின்ப நல்குங்
கோலவின் பொருளே போற்றி குறிப்பருங் குணமே போற்றி
காலமாய்க் கால முற்றுங் கடந்தபே ரொளியே போற்றி. 53

கு- ரை: ஆலம் - ஆலகாலவிடம். மூலபந்தம் - ஆணவமலம்.

பூதமும் பொறியு மைந்தாம் புலன்களுங் கரண மாய
பேதமுங் கால மாதிப் பெருக்கமும் பிறங்கு விந்து
நாதமுங் கடந்து நின்ற நாடருஞ் சுடரே போற்றி
வாதமுஞ் சமய பேத மயக்கமுந் தொடராய் போற்றி. 54

கு - ரை: முப்பத்தாறு தத்துவங்களும் கடந்துநின்ற தத்துவாதீதராய் என்றபடி.

அடியவர் புரிந்த குற்ற மனைத்தையும் பொறுப்பாய் போற்றி
நெடியவன் முதலோர் வேண்ட நீலநஞ் சயின்றாய் போற்றி
கடியவா ளரக்க னேத்தக் கருணையி னளித்தாய் போற்றி
படியவாம் புகழ்சால் சித்தாச் சிரமத்துப் பரம போற்றி. 55

கு - ரை: நெடியவன் - திருமால். அயின்றாய் - உண்டவரே. அளித்தாய் - அருள்செய்தாய். படி அவாம் புகழ் - நிலவுலகம் விரும்பும் கீர்த்தி.

என்றுரைந் துருகி யேத்த விணையிலவ் விலிங்க நின்றும்
கன்றுமான் பரசு தாங்குங் கைப்பிரான் வெளியே தோற்றி
நன்றுநீ வேட்ட யாவை நவிலெனப் பணிந்தெ ழுந்து
குன்றுவார் சிலையான் முன்னங் குறித்திவை வேண்டு நந்தி. 56

கு - ரை: பிரான் - சிவபெருமான். குன்று வார் சிலையான் - மேரு மலையை வில்லாகவுடையவர். முன்னம் - சந்நிதியில்.

தங்குமிவ் விலிங்கத் தென்றுந் தழைத்தினி தமர்தல் வேண்டும்
பொங்குமித் தீர்த்தத் தெல்லாத் தீர்த்தமும் புணர்தல் வேண்டும்
இங்குநீ நந்தி நாத னெனும்பெயர் பூணல் வேண்டும்
மங்குத லில்லா நின்னைப் பணிசெயல் வழங்க வேண்டும். 57

கு - ரை: புணர்தல் - கலத்தல். மங்குதல் - அழிதல். நின்னை - நினக்கு: உருபுமயக்கம்.

எனவுரைத் திரந்து வேண்ட வெம்பிரான் கருணை பூத்துக்
கனமிகு நந்தி யாதி கணங்களை யொருங்கு நோக்கி
அனகவிவ் வரங்க ளீந்தோ மன்றியு மினைய தானஞ்
சினமிலா வதிவி ருப்பஞ் செய்திடு நமக்கெஞ் ஞான்றும். 58

கு - ரை: ஒருங்கு நோக்கி - ஒருசேரப் பார்த்து. அனகம் - பரிசுத்தம். இனைய தானம் - இந்த இடம்.

நந்திநன் கமைத்த விந்த நந்திதீர்த் தத்தின் மூழ்கி
முந்தியிந் நந்தி நாதன் முளரியஞ் சரணந் தாழ்வோர்
பூந்திசெய் கொடிய மாபா தகமெலாம் பாறி மாயச்
சிந்திநம் முலகஞ் சார்ந்து செழித்துவாழ்ந் திடுவ ருண்மை. 59

கு - ரை: நந்திதீர்த்தத்தில் முழுகி, நந்திநாதரை வணங்குவோர் கொடிய மாபாதகம் நீங்கப்பெற்று நம்முலகம் சார்ந்து வாழ்வார். பந்தி - கூட்டம், தொகுதி. பாறி மாய - அழிந்தொழிய.

திருவளர் நந்தி தீர்த்தக் கரையிடைச் சிறக்கு மாறு
பொருவரு மன்ன தானம் புரிந்தவ ரவிழொன் றற்கு
வெருவருஞ் சிவலோ கத்தோ ராயிர வருட மேன்மேற்
பெருகுபல் போகந் துய்த்துப் பிறங்கிவாழ்ந் திடுவ ரன்றே. 60

கு - ரை: அவிழ் - கவளம், பருக்கை.

ஆதவன் மீன ராசியடுத்துறப் பயிலு நாளிற்
சீதவன் பந்த ரிட்டுச் செறிபவர் பலர்க்கும் வெப்ப
மோதவன் புருக நன்னீர் முகந்துவாக் குவரே னேமி
மாதவன் முதலோர்க் கெய்தா வளமெலாம் பெற்று வாழ்வார். 61

கு - ரை: ஆதவன் - சூரியன். மீனராசி - பங்குனி மாதம். வாக்குதல் - வார்த்தல். நேமி மாதவன் - சக்கரப்படையையுடைய திருமால்.

ஒருமலர் நந்தி நாதர் முடிமிசை யுறவிட் டோருந்
திருமலர் மிசையோன் மாயோன் திகைத்துள நறுமு றுத்துப்
பொருமல ராக வெல்லாப் போகமும் பொருந்தி யீற்றின்
நிருமல ராகி ஞான நிரம்புபே ரின்பந் துய்ப்பார். 62

கு - ரை: மலர்மிசையோன் - பிரமன். நறுமுறுத்து - பொருமை கொண்டு. பொருமுதல் - உள்ளழிதல்.

அருத்தமா நந்தி நாதன் மேற்றிசை யமைவ தாய
விருத்தகா வேரிப் பாங்கர்த் தென்புலத் தவர்வி ரும்பத்
திருத்தமாங் கடன்செய் வார்வண் கயையினிற் செய்த பேற்றிற்
பொருத்தமாய் நூறு பங்கு மேற்படப் பொருந்து வாரால். 63

கு - ரை: நந்தி நாதருக்கு மேற்றிசையிலுள்ள விருத்த காவேரியின் பக்கல். தென்புலத்தவர் - பிதிரர். கயையிலே செய்யும் பிதிர்க்கடன் தரும் பலத்தின் நூறுமடங்கு மேம்பட்ட பலன் பெறுவர்.

இன்னபல் வரங்க ணல்கி யெம்பிரான் மற்றை யோர்க்கு
மன்னருள் சுரந்தொ ளித்தான் மாண்புடை நந்தி யாதி
என்னரு முவகை யெய்தி யிலங்குமா லயமுண் டாக்கி
நன்னரா வரண தேவ ரியாவரு நண்ணச் செய்து. 64

கு - ரை: என்னரும் - யாவரும். நன்னர் - நன்றாக.

கொடிமதில் விமானஞ் செம்பொற் கோபுர மண்ட பாதி
ஒடிவறப் பொலிதற் கேற்ப வொள்ளிய நகரு மாக்கிக்
கடிகெழு வீதி போக்கிக் கவலரி தாய பல்ல
குடிகளு மேற்றிப் பூசை குலவுற நடத்திப் பின்னர். 65

கு - ரை : மதில் விமானம் கோபுரம் மண்டபம் முதலியவற்றேடு ஆலயம் நிருமித்து, ஆவரண தேவரையும் பதிட்டைசெய்து, நகர் உண்டாக்கி, வீதிகளும் சமைத்துக் குடிகளை ஏற்றி, பூசைமுதலியவற்றையும் சிறப்பாகச் செய்து.

நந்திநா தனுக்கு மாக சுக்கில பக்க நன்கு
வந்ததோர் துவாத சிக்கண் வல்லேற்றுத் துவச மேற்றிப்
புந்திசெய் யேழா நாளிற் பொற்றிருத் தேர்ந டாத்தி
நந்தலில் சாந்தெட் டாநா ணடராசர் புனையச் செய்து. 66

கு - ரை : நந்திநாதருக்கு மாசிமாதம் வளர்பிறைத் துவாதசியில் இடபக்கொடி ஏற்றி, ஏழாம்நாள் தேர்த் திருவிழா நடத்தி, எட்டாம்நாள் நடராசர் திருச்சாந்து புனையச் செய்து.

கரையெறி புனல்வி ருத்த காவேரி சங்க மத்தில்
தரைபுகழ் தசநா ளாய சட்டியத் திரரை யாட்டிப்
புரைதவிர் விழா முடித்துப் புண்ணியக் கயிலை மேவி
உரைசெயு நந்தி முன்னே ருவந்துதம் பணிமேற் கொண்டார். 67

கு - ரை : விருத்தகாவேரி சங்கமத்துறையில் பத்தாம்நாள் சட்டியில் அத்திரதேவரைத் தீர்த்தமாடச் செய்து விழாவை முற்றுவித்துக் கயிலாயத்தை அடைந்து நந்தி முதலியோர் முன்பு போலவே தம் பணியை மேற்கொண்டிருந்தனர்.

எண்ணிய வெண்ணி யாங்கே யாவர்க்கு மெளிதி னல்கும்
புண்ணிய நந்தி நாதன் மான்மியம் பொருந்தச் சொற்றும்
கண்ணிய வனையா னுளுங் காமுறப் பிரியஞ் செய்யுந்
திண்ணிய வளஞ்சால் சித்தாச் சிரமத்தின் சிறப்புச் சொல்வாம்.

கு - ரை : நந்திநாதருடைய பெருமையைச் சொன்னேம். இனிச் சித்தாச்சிரமச் சிறப்பைக் கூறுவோம்.

நந்திநாதப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம்— 1587

இருபத்தேழாவது

சித்தாச்சிரமப்படலம்

துன்னியநை மிசமுனிவர் சூதமுனி வரற்போற்றி
மின்னியசெஞ் சடையார்க்கு மேன்மேலும் விருப்புதவி
மன்னியசித் தாச்சிரம மான்மியவா ரமுதருந்த
முன்னியதெஞ் செவியெனவம் முனிவரன்செவ் வாய்மலர்வான். 1

கு - ரை : துன்னிய - நெருங்கியுள்ள. செஞ்சடையார்க்கு - சிவபெருமானுக்கு. மன்னிய - நிலைபெற்ற. மான்மியமாகிய ஆரமுது. முன்னியது - கருதியது. அம் முனிவரன் - சூதமுனிவர்.

அறையியம முதலாய வங்கமிரு நான்கமைந்து
நிறைகரும யோகத்து நிரம்பினர் தவலோகத்
துறைபவரொன் பதுகோடி சித்தர்பிறப் பொருங்கறுப்பான்
மறைமுடிவாஞ் சிவஞான மாண்பினடை வதுகுறித்தார். 2

கு - ரை : இயமம் முதலாய அங்கம் இருநான்கு - இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. கருமயோகத்து முற்றுப்பெற்றோர் உறையும் தவலோகம். ஒன்பது கோடி சித்தர்கள். அறுப்பான் - அறுக்கும் பொருட்டு. மறை முடிவு - வேத சிரசு. குறித்தார் - எண்ணினர்.

தோடுசெறி நறுங்கமலத் தோன்றலுல கம்புகுந்து
நாடுமவன் பதம்பணிந்து நான்முகத்தோய் நின்னருளால்
தேடுமணி மாமுதலெண் சித்தியும்பெற் றுறவாழ்ந்தோம்
வீடுவிரும் பினமவற்றின் மேன்மேலும் வெறுப்புற்றோம். 3

கு - ரை : தோடு - பூவிதழ். கமலத்தோன்றல் - பிரமன். அணிமா முதல் எண்சித்தி - அணிமா, லகிமா, மகிமா, பிராத்தி, கரிமா, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. விடு - முத்தியுலகம்.

ஆன்றபதி பசுபாச வனைத்தியலும் பொதுச்சிறப்பில்
தேன்றவுணர் சிவஞானந் துணிந்தடையுங் கருத்துடையேஞ்
சான்றதவம் புரிந்தாற்கே தகுமதுநாம் பெறுவண்ணம்
மான்றமன மில்லாய்நீ வகுத்துரைப்பா யென்றிரந்தார். 4

கு - ரை: பதி பசு பாச அனைத்தியலும் - பதி பசு பாசங்களாகிய முப்பொருள் உண்மையும் இலக்கணமும். பொதுவாயும் சிறப்பாயும். துணிந்து - உறுதியாக. மான்ற மனம் இல்லாய் - மயக்கம் பொருந்திய மனமில்லாதவரே.

ஒன்றுபல சித்தர்களு முரைத்தமொழி கேட்டுவந்து
நன்றுகுறித் தனிர்நீவிர் நாடரிய சிவதீக்கை
அன்றுபெறு வதையின்ரு ளைப்பரிய சிவஞானம்
வென்றுமிளிர் தீக்கையுமற் றெண்மையின்மே வுதலின்றே. 5

கு - ரை: நன்று குறித்தனிர் - நல்ல செயலையே எண்ணினீர்கள். சிவதீக்கை பெருமல் சிவஞானம் உண்டாகாது. தீக்கையும் எளிதிற் பெறுவதன்று. எண்மை - எளிமை.

ஆயபெருந் தீக்கையுறற் காசிரிய னருள்வேண்டுந்
தூயவருள் பெறுவதற்குத் துங்கமிகு தலத்தடைந்து
நேயவருச் சனையாதி நிரம்பவியற் றிடல்வேண்டும்
பாயவதற் கேற்றதல மொன்றுளது பாரகத்தே. 6

கு - ரை: தீக்கையுறுதற்குக் குரவன் அருள்வேண்டும். தூய அருளைப் பெறவேண்டின் பரிசுத்தமான தலத்தை அடைந்து அன்புடன் அருச்சனை முதலிய இயற்றியிடவேண்டும். அதற்குரிய தலமும் நிலவுலகத்தில் ஒன்று உள்ளது.

ஆயதல மெவ்விடத்தி னுள்ளதெனி லறைதருவாம்
பாயபனி வரைத்தென்பாற் பாரதப்பல் கண்டத்து
மேயவள மலிகுமரி கண்டமிகு சிறப்புடைத்தால்
தோயவர நதியமுனை காவேரி முதற்றுவன்றும். 7

கு - ரை: இமயமலைத்தென்பால் பாரதகண்டத்துள் வளமிகு குமரிக் கண்டம் மிகச் சிறப்புடையதாம். கங்கை யமுனை காவேரி முதலிய நதிகள் சிறப்புற்றோங்கும். வரநதி - கங்கை.

இந்தநதிக் கரைமருங்கி னிருக்குமுயர் சிவதலங்கள்
அந்தமில வவற்றுளுங்கீ ழாழியரு குள்ததன்பேர்
சந்தமுற வடைந்தார்தம் பவப்புணரி தபச்சுவற்றி
முந்தவரு டிருநாகைக் காரோண மெனமொழிவார். 8

கு - ரை: மருங்கு - பக்கம். அந்தம்இல - முடிவில்லாதன. கீழ் ஆழி - கீழ்கடல். பவப் புணரி - பிறவிக் கடல். தப சுவற்றி - நீங்கும்படி சுவறச்செய்து: சுவறுதல் - வற்றுதல். முந்த அருள்.

அன்னதலத் தெல்லையுமோர் ஐந்துகுரோ சத்தளவாம்
பன்னருமத் தலத்தென்கீழ்ப் பயில்விருத்த காவேரி
என்னநவி னதித்தென்பா லென்றுமுள தொருதானம்
பொன்னகர முதலனைத்தும் போந்துவழி படுநாளும். 9

கு-ரை: அந்தத் தலத்து எல்லை ஐந்து குரோச அளவுள்ளது. அதன் தென்கிழக்குத்திசையில் விருத்தகாவேரி உள்ளது. அந்நதியின் தென்பால் ஒருதானம் உள்ளது. விண்ணுலகம் முதலிய அனைத்தும் நாளும் வந்து வழி படுவது. குரோசம் - கூப்பிடுதூரம்.

நந்திபிரான் முதற்கணங்க ணயந்தாங்குற் றாலடியில்
அந்திமதி புனைபெருமா னருட்குறிதா பித்தருச்சித்
திந்தியநீத் தருந்தவஞ்செய் தெண்ணியவெ லாமடைந்தார்
தந்தியுரி யவனந்தி நாதனெனத் தழைந்தமர்வான். 10

கு-ரை: நயந்து ஆங்கு உற்று. ஆல் அடியில். அருட்குறி-சிவலிங்கம். இந்தியம் நீத்து - இந்திரிய நிக்கிரகம் செய்து; பொறிகளின் வழியே புலன்களைச் செலுத்தாமல் கட்டுப்படுத்தி. தந்தி உரியவன் - யானைத்தோலை உரித்துப் போர்த்த சிவபெருமான்.

மாலடியோ டொழிநந்தி தீர்த்தநீர் மகிழ்ந்தாடி
ஆலடியி னமர்முக்க ணரசடிகை தொழுதின்பங்
காலடிநந் தியையுளத்துக் கருதியிரு மெனவிடுத்தான்
தோலடிப்புட் கொடியுயர்த்தான் சித்தரெலாந் தொழுதெழுந்தார்.

கு-ரை: மால் - மயக்கம், அஞ்ஞானம். நந்தி தீர்த்தத்தில் முழுகி, ஆலடியில் விற்றிருக்கும் நந்திநாதரை வணங்கி, தியானித்திரும், ஆலடியின் அமர் முக்கண் அரசு - சிவபெருமான். ஆலடியின் அமர் முக்கண் அரசடி என்றநயம் காண்க. தோலடிப்புள் - அன்னம்; புட்கொடி உயர்த்தான் - பிரமன்.

எழுந்தவர்கள் பின்னுமிர ணியகருப்பன் பதம்பணிந்து
செழுந்தலமற் றஃதெமக்குத் தெரித்தருள வேண்டுமெனத்
தழுந்தகவோர் மாணாக்கன் றனையுடன்செல் கெனவேதக்
கொழுந்தனைய வவன்சித்தர் குழாத்துடன்முன் னடந்தனனே. 12

கு-ரை: இரணியகருப்பன் - பிரமதேவன். செழுந்தலம் அஃது தெரித்தருளவேண்டும். வேதக்கொழுந்து அனைய அவன் - அம்மாணாக்கன்.

வானாறு மலர்மேலான் மாணாக்கன் றன்னிழல்போற்
பானாறு சித்தரெலாம் பின்றொடரும் படிசென்று
கானாறும் பொழினாகைக் காரோணத் திருநகரந்
தானாறு மொருகுரோ சத்தளவி தெனத்தெரித்தான். 13

கு - ரை : மலர்மேலான்-பிரமன். பால்நாறு - பகுதிப்பட்ட என்றது ஒன்பது கோடியையும். நிழல்போல் தொடரும்படி. கான்நாறும் - மணம் வீசும். நாகைக்காரோணம் ஒரு குரோசத்தளவு எனத் தெரித்தான். ஆறும்-வழியும்.

தெரித்தவவ னேகுதலுஞ் சித்தரெலா மாங்கடைந்து
விரித்தபுனற் றிரைப்புணரி முதற்பலவும் விழைந்தாடித்
தரித்தமழு மானுடைக்கைத் தனிமுதலை யடிதொழுது
பரித்தவருட் கருந்தடங்கட் பராபரைபா தமும்போற்றி. 14

கு - ரை : தெரித்த அவன் ஏகுதலும்: அவன் - மாணுக்கன். புணரி-கடல். பலவும் - பல தீர்த்தங்களினும். தனிமுதல் - ஒப்பற்ற முழுமுதற் கடவுள். அருள்பரித்த கருந்தடங்கண்ணியாகிய பராபரை.

பெருகருட்சுந் தரவிடங்கப் பெருமானைக் கண்டிறைஞ்சி
அருகுநடுத் தலேசமுத லாகியபற் பலதலத்தும்
உருகுமனத் தினராய்ச்சென் றுவந்தேத்தித் தென்கீழ்பால்
திருகுதவி ரயனுரைத்த தேடருந்தா னம்புகுந்தார். 15

கு - ரை: அருள்பெருகு சுந்தரவிடங்கப் பெருமான். உவந்து ஏத்தி. திருகு தவிர் அயன் - மாறுபாடில்லாத பிரமதேவன்.

அத்தான வளமுழுது மன்புதுளும் புறநோக்கி
இத்தானம் புரைவதினி யெத்தான மெனவியந்து
முத்தானக் களிற்றுரியார் முயங்குதிரு வருளொன்று
பத்தான ஞானமுறப் பாலிக்கு மெனறுணிந்தார். 16

கு - ரை : துளும்புற - ததும்ப. புரைவது - ஒப்பாவது. முத்தானக் களிறு - கன்னமதம் கபோலமதம் கோசமதம் என்னும் மும்மதத்தையுமுடைய யானை. தானம் - மதநீர். ஒன்று பத்தான ஞானம் - தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் தசகாரியங்கள்.

தோய்ந்தார்தங் கொடும்பாவப் பெருங்காடு சுடுநெருப்பாம்
ஆய்ந்தாருட் பொலிநந்தி யாவிநீ ரிடைப்படிந்து
மாய்ந்தார்த மெலும்பணிந்த மாநந்தி நாதர்தளி
ஏய்ந்தாருட் புகுந்திறைஞ்சி யெல்லையிலா வுவப்புற்றார். 17

கு - ரை : ஆய்ந்தார் உள்பொலி. நந்திஆவி - நந்திதீர்த்தம்; ஆவி-குளம். மாய்ந்தார் தம் எலும்பு - இறந்த பிரம விஷ்ணுக்களின் எலும்புகள். தளி - கோயில்.

பத்திநெறி வழுவாதொன் பான்கோடி சித்தர்களுஞ்
சித்திமுழு தருணந்தி நாதர்பதஞ் சேவித்து
முத்தியருள் சிவஞான முயங்குமா றனையரருட்
சத்திபதி தரநந்தி தனையுள்ளங் குறித்தமர்ந்தார். 18

கு - ரை : ஒன்பது கோடி சித்தர்கள். சிவஞானம் முயங்குமாறு - சிவஞானம் நிறையும்படி. அருட்சத்தி பதிதர. உள்ளம் குறித்து - மனத்தில் தியானித்து.

அந்திமதி புனைந்தசடை யண்ணலார் திருவருளால்
நந்தியவ ரெதிர்தோன்ற நாடுமவர் விரைந்தெழுந்து
முந்திமலர் தூய்வணங்கி முன்னின்று ரவர்கருத்துப்
புந்தியுணர் சயிலாதிப் புங்கவனீ தருள்செய்வான். 19

கு - ரை : நந்தி - திருநந்திதேவர். சயிலாதிப் புங்கவன் - சிலாத முனிவர் புத்திரராகிய நந்திதேவர்.

நாடுதிரு வருணந்தி நாதர்சின கரம்புகுந்து
நீடுதிரு வலகிடலாப் பியின்மெழுக நெய்யமையக்
கூடுபல விளக்கேற்றல் கோலமலர் புனைந்தணிதல்
பாடுமிவை முதலாப்பல் பணிகளுஞ்செய் திடுமென்றான். 20

கு - ரை : சினகரம் - கோயில். திருவலகிடுதல் கோமயத்தால் மெழுகல் நெய்விளக்கிடல் மலர்மாலைகளால் அலங்கரித்தல் பாடுதல் முதலிய சரியைத்தொண்டுகள். "நிலைபெறுமா றெண்ணுதியேல்" என்ற திருத் தாண்டகம் சிந்திக்க.

குரவுபுனை நந்திமொழி குறிக்கொண்டு சித்தர்களா
தரவுமிக வைகறைமு னெழுந்துதடம் புனல்குடைந்து
விரவுமல கிடலாதி யுரைத்தவற்றின் மேலாகப்
புரவுபொலி பணியனைத்தும் புரிந்தனரோ ராண்டளவும். 21

கு - ரை : குரவு - ஆசிரியத்தன்மை. ஆதரவுமிக - அன்புமிக. வைகறை - விடியற்காலம். ஓர் ஆண்டு அளவும் - ஒரு வருடம் வரையில்.

மாண்டசம யாசாரம் வழுவாது பணிபுரியும்
நீண்டகுணச் சித்தருக்கு நிகழ்தருபக் குவநோக்கி
ஆண்டவனஞ் சயிலாதி யைப்பசித்திங் களின்மேன்மை
பூண்டவுவா விற்புனிதம் பொலியுமவர் தமைக்கூவி. 22

கு - ரை : சமயாசாரம் - சமய ஒழுக்கம். நிகழ்தரு பக்குவம் - உண்டாகிய சத்தி நிபாதம். ஆண்டவன் - ஆட்கொண்டருளியவன், சிவன். நம் சயிலாதி - நம்முடைய திருநந்திதேவர். நஞ்சு அயில் ஆதி எனலும் ஆம். ஐப்பசித்திங்கள் பூரணைத்திதியில் அச்சித்தர்களை அழைத்து.

முன்னியதன் பேர்த்தீர்த்த முழுகிவரும் படிசெய்து
மின்னியவா லயத்தமர்ந்து விளங்குசிவ கரஞ்சூட்டி
மன்னியமூ விரண்டத்து வாவுஞ்சோ தனைபுரிந்து
பன்னியவா ணவசத்தி பதியாது பாறும்விதம். 23

கு - ரை : தன் பேர்த் தீர்த்தம் - நந்தி தீர்த்தம். சிவகரம் சூட்டி - அத்த மத்தக சையோகம் செய்து. மூவிரண்டு அத்துவா - ஆறு அத்துவாக்கள்: வன்னம், பதம், மந்திரம், புவனம், கலை, தத்துவம் என ஆறும். அத்துவா - வழி.

அத்துவ சோதனையாவது - ஆறு அத்துவாக்களையும் மந்திரம் பதத்திலும், பதம் வன்னத்திலும், வன்னம் புவனத்திலும், புவனம் தத்துவத்திலும், தத்துவம் கலையிலும் ஒடுங்க, நீக்கமின்றி ஒடுக்கி, அவற்றுள் முடிவாகக் கருதப்படும் கலையைத் திரோதான சத்தியினும், அத்திரோதான சத்தியைச் சிவத்தினும் அடங்குமாறு ஒடுக்குதல். அவ்வாறு ஒடுக்குவதனால் பிறவிக்கு ஏதுவாகிய மலத்தைக் கெடுத்து எங்கணும் வியாபகமாகிய சிவம் பிரகாசித்தற்கு ஏதுவாகிய ஞானத்தைக் கொடுத்துப் பிறவியை ஒழிப்பதாம் என்க.

பாறும் விதம் - கெடும் வகையாம். சுத்தி - நீக்கம்.

திருந்துசிறப் புயர்ஞான தீக்கைபுரிந் தைந்தெழுத்தும்
இருந்துதிகழ் தரத்தூல சூக்குமத்தி னெடுத்துணர்த்திப்
பொருந்துமல ரடியவர்தம் பொற்பமைசென் னியிற்சூட்டி
அருந்துமமு தினுமினிப்ப வெதிரிருத்தி யருள்செய்வான். 24

கு - ரை : ஞானதீக்கை செய்து, ஐந்தெழுத்து மந்திரத்தைத் தூல முறையினும் சூக்கும முறையினும் வைத்து உணரச் செய்து, திருவடியைச் சிரத்திலே சூட்டி, எதிரிலே இருக்கச் செய்து அருள் புரிவாராயினர்.

புறச்சமயத் திடையுழன்று மகச்சமயம் புக்கமைந்தும்
விறப்பகல வருணநிலை வேட்டுமிரு தியிற்பயின்றும்
அறப்பன்மறை புகன்மகங்க ளாற்றியுநல் வேதாந்தத்
திறப்பொருடேர்ந் தவர்சைவ தீக்கைசெயற் குரியவரால். 25

கு - ரை : புறச்சமயம் - உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சம், மாயாவாதம், பாஞ்சராத்திரம் என்பன; இவை தூலம். அகச் சமயம் - சைவம், பாசுபதம், வாமம், பைரவம், மாவிரதம், காளாமுகம்

என்பன; இவை சூக்குமம். மனு முதலியவரால் செய்த தருமசாத்திரம் பதினெட்டின் வழியே சென்று ஒழுகியும், வேதத்தில் சொல்லப்பட்ட பிரமச்சரியம் முதலான ஆச்சிரமம் நான்கின் நெறிகளில் வழுவாது ஒழுகியும், அநுட்டித்தற்கு அரிதாகிய பஞ்சாக்கினி முதலியவற்றில் நின்று அரிய தவங்களைச் செய்தும், கற்பதற்கு அரிதாகிய கலை ஞானங்கள் பலவற்றைப் பயின்றும், இருக்கு முதலிய நான்கு வேதங்களை ஓதியும், சிறப்பினையுடைய பதினெண்புராணங்களை ஓதியுணர்ந்தும், வேதாந்தமாகிய உபநிடதப்பொருளை மிக ஆராய்ந்து தெளிந்தும் இவ்வாறு படிமுறையாகப் பல பிறவிகளினும் அப்பியாசம்பண்ணி அவைகள் முற்றுப்பெற்றால் சைவத்திறத்து அடைவர். அவரே சைவதீக்கை பெறுவதற்கு உரியவராவார் என்க.

பெறற்கரிய தீக்கையும்பல் விதமாகும் பேசுங்கால்
இறப்பருநோக் கூறுமொழி யெண்ணூல்யோ கவுத்திரியேழ்
அறத்தினவுத் திரிகிரியை ஞானமென விரண்டாய்முத்
திறப்படுமொண் சமயமுதற் செப்பலுறும் பகுப்பானே. 26

கு - ரை: சைவ தீக்கையும் பலவிதமாம். அவை திருவருள் நோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம் என ஆறும் ஒருவகை. அந்த ஆறுடனே கூடிய ஔத்திரி சாம்பவம் மற்றொருவகை. அவுத்திரியும் ஞானவதி கிரியாவதி என இருதிறப்படும். சமயம் முதற்பகுப்பு - சமயம் விசேடம் நிருவாணம் என்பன.

ஓதுபுக ழித்தீக்கைக் குரியதவ மொருநான்காஞ்
சாதுநிறை பெருங்குணத்தீர் சரியைமுதன் ஞானமள
வேதுமரி லிலாவிவற்றின் பயனுமீ ரிரண்டாகுங்
கோதுதவிர் சாலோக முதற்கலப்புக் கோளளவும். 27

கு - ரை: தீக்கைக்குரிய தவம் ஒரு நான்கு - சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. அரில் - குற்றம். பயனும் நால்வகை - சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பன. இச்செய்யுள்முதல் சரியை முதலிய நால்வகையும் கூறப்படும்.

நாதனமர் தளிப்புகுந்து நயப்பவல கிடன்மெழுகல்
போதமலர் பறித்தணிதல் பொலிவுபெற விளக்கேற்றல்
வேதநவி லடியர்பணி மேற்கோட லிவையாதித்
தாதநெறிச் சரியையினர் சார்வர்சிவ சாலோகம். 28

கு - ரை: சிவாலயத்தில் சென்று அலகிடல் மெழுகல் மலர் தொடுத்தணிதல் விளக்கேற்றல் வேதமோதும் அடியார் பணியைச் செய்தல் இவைகள் தாதநெறியாம். இவர் சரியையாளர்: சிவசாலோகம் பெறுவர்.

தளி - கோயில். போத - மிகுதியாக.

மொழிதருமா தாரசத்தி முதற்சத்தி யெனுங்கமலத்
தழிவறவா தனமாதி பாவித்தா வாகித்துச்
செழிவளத்தா வரணமுதற் பூசித்துத் தீயோம்பும்
பழியின்மக நெறிக்கிரியை யார்படர்வர் சாமீபம். 29

கு - ரை: ஆதார சத்திமுதல் சத்தி தத்துவம் வரையுள்ள கமலத்தில் ஆதன முதலியவற்றைப் பாவித்து ஆவாகனம் செய்து ஆவரண பூசை முதலிய செய்து அக்கினிகாரியம் செய்தல் மகன்மை நெறியாகிய சற்புத்திர மார்க்கமாம். இவர் கிரியையாளர்: சிவசாமீபம் பெறுவர்.

நாடுமிரு வளியடைத்து நடுநாடி யுறப்படுத்திக்
கூடுமிரு மூன்றிடத்துங் குலவுபொரு ளுணர்ந்தேகித்
தேடுமதி வரைப்பமுதந் தெவ்விநுகர் சகமார்க்கப்
பாடுபெறு யோகமுளார் பயில்வர்சிவ சாரூபம். 30

கு - ரை: இருவளி - இடைகலை, பிங்கலைகள். நடுநாடி - சுழுமுனை நாடி. பிராணவாயுவைச் சுழுமுனை வழியே செலுத்தி மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களிலும் உள்ள தேவதைகளை அபிமுகம் பண்ணிக்கொண்டு சந்திரமண்டலத்திலுள்ள அமுதத்தை வாரியுண்டு தேக்கித் திளைத்திருத்தல் சகமார்க்கமாம்; இது தோழநெறி எனப்படும். இவர் யோகிகள்: சிவ சாரூபம் பெறுவர். மதிவரைப்பு - சந்திரமண்டலம். தெவ்வி - முகந்து.

எடுத்துரைத்த சரியைமுத லிம்மூன்று முற்றியபின்
வடுத்தவிரு மருள்பதிய வயங்குமிரு வினையொப்பில்
அடுத்ததனை யைந்துமிரித் தொன்றியொன்று தடிக்கலப்பிற்
கடுத்ததிலன் புற்றமர்தல் சன்மார்க்க மதுகரைவாம். 31

கு - ரை: முற்கூறிய சரியை முதலிய மூன்றும் முற்றிய பின்பு. அடுத்து அவிரும் அருள்பதிய; அவிரும் - விளங்கும். ஐந்தும் இரித்து - ஐம்புலச் சேட்டைகளையும் கெட்டோடப்பண்ணி. திருவடியின்பத்தில் அன்புற்று அமர்தல் சன்மார்க்கமாம். இவர் சன்மார்க்கராகிய ஞானிகள்.

அருவுருவங் குறிகுணங்கள் கட்டுவீ டனைத்துமிலா
ஒருமுதலா யழிவறநின் றேருங்கொளியா யுயிரனைத்தும்
மருவியுடன் றெழிற்படுத்து வயக்கிவீ டுறப்புகுத்தும்
பெருமுதலாய் மறைப்பொருளாய்ப் பிறங்குவது பதியுணர்வீர். 32

கு - ரை: அருவும் உருவும், குறியும் குணமும், கட்டும் வீடும் ஆகிய ஒன்றுமில்லாத ஒரு முதலாயும், ஒளியாயும், எல்லாவுயிர்களிடத்தும் ஒன்றாயும் வேறுயும் உடனுயுமிருந்து தொழிற்படுத்தி வீட்டின்பத்தைக் கொடுக்கும் பெரிய முதற்பொருளாயும், வேதங்களில் சொல்லப்படும் பொருளாயும் விளங்குவது பதிப்பொருளாம் என்றறிவீராக. இது பதி இலக்கணம்.

சத்தசத்தும் பகுத்துணருஞ் சத்தாய்வெண் படிகமே
ஒத்தியலப் பற்றியவை தாமாயோர் மூவகையாய்
நித்தியமாய் வசிப்பவரு நிறைவாயெண் ணில்லனவாய்ச்
சுத்தியரு ளாலடைவ துவன்றியகண் ணியற்பசுக்கள். 33

கு・ரை : சத்துப்பொருளையும் அசத்துப் பொருளையும் பகுத்து உணரும் சத்துப்பொருளாய், படிகக்கல்லை யொப்பத் தன்னிடத்துச் சார்ந்த பொருளின் வண்ணமாய், ஒப்பற்ற விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவகையினதாய், நித்தப்பொருளாய், சார்ந்த பொருளினிடத்து அப்பொருளளவாக வசிப்புண்டு வியாபித்திருக்கும் ஏகதேச வியாபியாய், அளவில்லாதனவாய், அருளால் சுத்தியடைவதாய், ஆணவமலத்தால் கட்டுண்டு கிடப்பன பசுக்களாம். இது பசு இலக்கணம்.

ஒன்ருயெண் ணரியவலி யுடைத்தாய்ச்செம் புறுகளிம்பில்
தொன்ருய்நித் தியமாயா ரருளன்றித் தொலைந்தொழிவ
நன்ருயுள் ளதுகொடிய வாணவமற் றஃதொழிய
நன்ருயுந் தனுவாதி நல்குமிரு வகைமாயை. 34

கு・ரை : ஒன்ருயும், அளவிடுதற்கரிய வலிமையையுடையதாயும், செம்பிற்களிம்புபோலப் பழமையுடையதாயும், நித்தப்பொருளாயும், திருவருளாலன்றித் தொலைந்து ஒழியாததாயும் உள்ளது கொடிய ஆணவமலம். அந்த ஆணவமலத்தையொழியத் தனுகரண புவன போகங்களைக் கொடுக்க வல்லதாகிய இருவகைப்பட்ட மாயை உள்ளன. அவை சுத்தமாயை அசுத்த மாயைகளாம்.

இருவினைக்கு மேதுவென வியம்புகான் மியமிவற்றை
மருவநிகழ்த் திடுந்திரோ தானமல மிவையைந்தே
வெருவலிவற் ருேடுபழ வினையுமிருண் மலவேரும்
பொருவில்பதிக் கில்லையென்றும் புணர்பசுக்கட் குள்ளனவே. 35

கு・ரை : நல்வினை தீவினைகட்குக் காரணம் எனச் சொல்லப்படும் கன்மமலம், இவற்றைப் பொருந்தும்படி செய்யும் திரோதானமலம் என மலம் ஐந்தாம். இந்த ஐந்து மலங்களுடன் பழவினையும் இருண்மலத்தின் மூலமும் என்றும் பதிப்பொருளுக்கு இல்லை; என்றும் அவை பசுக்களுக்கே உள்ளன. இருண்மலம் - ஆணவம்.

கருமமுமா யையும்பரமன் கருணையா லுயிர்களுக்கு
மருவினமுன் னுள்ளதன்மேன் மருவுவித்த தென்னையெனில்
ஒருவிலழுக் குறுபுடவைக் குவருட்டுந் திறம்போலப்
பொருவில்வலிச் சகசமலம் போக்குவதற் கென்றுணர்மின். 36

கு - ரை : சிவபெருமான், கருணையால் உயிர்களுக்கு முன்னுள்ள மலத்தின்மேல் கன்மமலமும் மாயாமலமும் பொருந்துவ. அதற்குக் காரணம் அழுக்குப் பொதிந்த ஆடைக்கு வண்ணான் உவர்மண் சாணி சவர்க்காரம் முதலிய அழுக்குகளை மேலுங்கூட்டி அழுக்கைப் போக்குவதுபோல, ஒப்பற்ற வலிமையையுடைய சகசமலமாகிய ஆணவத்தைப் போக்கும் பொருட்டே யாகும் என உணர்வீர். ஒருவு இல் - நீங்காத. சகசமலம் - ஆணவமலம்.

அளித்திடல்காத் திடலிளைப்பை யகற்றிடறி ரோபவித்தல்
தெளித்தவருள் செயன்மலர்மேற் செம்மன்முத லியர்க்கொண்டு
களித்தபதி யியற்றிடினும் விகாரியா கான்கண்டீர்
வெளித்தயங்கு தவலோக மேவுதலை வெறுத்துள்ளீர். 37

கு - ரை : படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் பிரமன் மால் உருத்திரன் மகேசன் சதாசிவன் என்பவர்களைக் கொண்டு சிவபிரான் இயற்றினும் சிறிதும் விகாரம் அடைபவரல்லர்; வெளியே விளங்குதலையுடைய தவலோகம் பொருந்துதலை வெறுத்துள்ள சித்தர்களே !

வதிதருபல் லுயிர்களையு மயக்குவது மாயையது
பதியுடைமை யாயினுமப் பதியைமயக் காதென்றும்
புதிதெனுமிந் திரஞாலம் புரிபவனை யெவன்செய்யும்
அதிவலியின் மலமயக்கா தாயினகன் றிடுமிரண்டும். 38

கு - ரை : பொருந்தும் பல உயிர்களையும் மயக்குவது மாயை எனினும், பதிப்பொருளை அது மயக்குவதின்று. இந்திர சாலவித்தை செய்பவன் யாவரையும் மயக்குவன், அவன் மயங்கான். மலம் மயக்காதாயின் அவ்விரண்டும் நீங்கும்.

உயர்பதியு மதுநீங்கா தொளிகிளர்சத் தியுமுயிரும்
பெயர்விறிரோ தாயியுந்தாம் பின்னிடமே லோங்கிநிற்கும்
அயர்வில்கரு மலந்தேய வருட்சத்தி யதுபதியும்
மயர்விலது பதிதலினல் வளர்வசிவ புண்ணியங்கள். 39

கு - ரை : பதிப்பொருளும், அப்பொருளைவிட்டு நீங்காத சத்தியும் உயிரும் பெயர்தலில்லாத திரோதான சத்தியும் பின்னிட ஆணவமலம் மேலோங்கி நிற்கும். ஆணவமலம் தேயத் திருவருட்சத்தி பதியும். சத்தி பதிதலினல் சிவபுண்ணியங்கள் வளர்வனவாம்.

திரோதாயி - திரோதசத்தி. அயர்வு இல் கருமலம்; கரு மலம் - ஆணவம். மயர்வு இல் அது - மயக்கமில்லாத திருவருட்சத்தி.

புண்ணியமே லிடமலபா கமும்பிறக்கும் பொற்பமைய
நண்ணியசத் தியும்பதியும் நாடுவினை யொப்புமுறுந்
திண்ணியமற் றஃதுறுங்காற் றிரோதாயி யருளேயாம்
அண்ணியகா ரிருளதனை லறலன்றி வேறுளதோ. 40

கு - ரை : சிவபுண்ணியம் மேலிட்டோங்க மலபரிபாகம் உண்டாம். திருவருட் சத்தியும் தோயும். இருவினையொப்பும் உண்டாம். இருவினை யொப்பு உண்டாமிடத்துத் திரோத - சத்தியே திருவருட் சத்தியாம். பொருந்திய ஆணவமலம் திருவருளால் தொலைதலன்றி வேறுள்ளதாமோ என்க.

இருவினையொப்பாவது: ஆன்ம அறிவின்கண் நல்வினை தீவினை களும், அவற்றின் பயனாகிய இன்பத்துன்பங்களும் விருப்பு வெறுப்பின்றி ஒப்பத் தோன்றுதலேயாம். இதனால், நான் என்னும் சீவபோதமாகிய மலச் சேட்டை தேயும். ஆதலின் மலபாகத்திற்குரிய இருவினையொப்புக் கூறப் பட்டது.

உரவுயிரி னிச்சைமுத லொருமூன்று முள்ளடங்க
விரவுபதி யிச்சைமுத லொருமூன்று மேலோங்கும்
பரவுமரு ளாற்றனையும் பதியுமுணா ருயிர்கதிரிற்
கரவுதவிர் கண்கலந்தாற் போற்கலந்தின் பனுபவிக்கும். 41

கு - ரை : ஆன்மாவின் இச்சை அறிவு தொழில்கள் மூன்றும் அடங்க, பதிப்பொருளின் இச்சை அறிவு தொழில்கள் மூன்றும் மேற்பட்டு விளங்கும். வியாபக அருளால் தன்னையும் பதியையும் உணரும் உயிர் சூரிய கிரணத் தில் மாசில்லாத கண் கலந்து நின்று எல்லாவற்றையும் அறிதல்போன்று சிவத்திற் கலந்துநின்று இன்பத்தை நுகரும்.

பரவும் - வியாபகமாயுள்ள. சிவனோடு உயிர் கூடியவிடத்தும் அத்து விதமாய் (கலந்து) நிற்றலேயன்றி ஒன்றாய்ப் போமாறில்லை என அறிக.

மருளினான் முதலென்றன் மற்றதற்கு மேலாக
அருளினான் முதலென்ற லருளொன்றே முதலென்றல்
தெருளினா லதினழுந்தன் முத்தியல சித்தாந்தப்
பொருளினாற் சிவத்தழுந்த லொன்றுமே பொலிமுத்தி. 42

கு - ரை : மயக்கத்தால் நான் முதல் என்றலும், அதற்கு மேலாக அருளினால் நான் முதல் என்றலும், அருளே முதல் என்றலும், தெளிவினால் அருளில் அழுந்தி நிற்றலும் முத்தியன்று. ஆன்மா திருவருளால் சிவத்தை அறிந்து அதிலழுந்திச் சிவபோகத்தை நுகர்தலே சித்தாந்த முத்தியாம்.

மருள் - மயக்கம். மற்று : வினைமாற்றின் கண் வந்தது. தெருள் - தெளிவு.

சஞ்சிதமுன் பேயழிந்த தேறும்வினை தாக்குமெனில்
எஞ்சியதா யிடுமருளா லுலகினுட லியங்களவுந்
துஞ்சியவா தனையுடற்றுஞ் சூக்குமபஞ் சாக்கரத்தால்
அஞ்சியதா யேயகலு மான்றகுணப் பெருந்தவத்தீர். 43

கு - ரை: ஆசாரியனுடைய திருவருட்பார்வையால் பஞ்சுப்பொதியில் தீப்பற்றினமை போலச் சஞ்சித கன்மம் தொலையும். ஆகாமிய வினை தாக்கும் எனின் எஞ்சிநின்ற கன்மம் அருளால் உலகில் உடம்போடு கூடி நிற்குமளவும் அவ்வாசனை தாக்கும். சூக்கும பஞ்சாக்கரத்தை இடைவிடாது கணிக்க அவ்வாசனை அஞ்சி விட்டு நீங்கும். "பஞ்சாக்கர செபத்தால் வாசனை மலம்போம்" என்றமையும் காண்க.

இனி, வினை ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்தம் என மூவகைப்படும். அவற்றுள் ஆகாமியமாவது நல்வினை தீவினை என்னும் முயற்சி. சஞ்சிதமாவது அம்முயற்சி பலனுக்கு வராமல் புண்ணிய பாவமாய்க் கட்டுப்பட்டிருப்பது. கட்டுப்பட்டிருக்கும் இடம் செய்தவன் புத்தி தத்துவமும் மாயையுமாம். பிராரத்தமாவது அம்முயற்சியின் பயனாகிய இன்பத்துன்ப அனுபவம். இவை வருமாறு; வித்தை நிலத்திலிடுதல் ஆகாமியம். அவ் வித்து இட்டவன் புத்தி தத்துவம் பற்றுக்கோடாகப் பலன்தரும்வரை பூமியில் தங்கியிருப்பது சஞ்சிதம், பலன் அனுபவத்திற்கு வருதல் பிராரத்தமாம் என அறிக.

உணர்வானு முணர்பொருளு முணர்வுமொழிந் தொழியாமே
துணராரும் பூங்கடுக்கைச் சுந்தரனை மூன்றிடத்தும்
புணர்வாக வழிபாடு பொருந்துவார் சீவன்முத்தர்
குணர்மேய தூயபர முத்தியுமீண் டேகுலவும். 44

கு - ரை: உணர்வான் - காண்பான். உணர்பொருள் - காட்சிப் பொருள். உணர்வு - காட்சி. காண்பானும் காட்சியும் காட்சிப்பொருளும் ஆகிய மூன்றும் நீங்கியும் நீங்காமல் சிவபரம்பொருளைத் திருவேடமும், அன்பரும், ஆலயமும் ஆகிய மூன்றிடத்தும் வழிபாடு செய்வோரே சீவன் முத்தராவார். பரமுத்தியும் சித்திக்கும்.

துணர் - பூங்கொத்து. கடுக்கை - கொன்றைமாலை.

என்றுகரு ணையினுரைத்தா னெம்மரபின் முதற்குரவன்
ஒன்றுகருத் தமைதரக்கேட் டொழியாது சிந்தித்து
நன்றுதெளிந் தனர்முத்தி நண்ணினர் சித்தரெலாம்
அன்றுபெரு மகிழ்ச்சியரா யமரர்மலர் மழைபொழிந்தார். 45

கு - ரை: எம்மரபின் முதற்குரவன் - திருநந்திதேவர்; "நங்குரு மரபிற் கெல்லாம். முதற்குரு நாதனாகி" என்றமை காண்க. அமைதர - பொருந்த, கேட்டல், சிந்தித்தல், தெளிதல் உடையராய் நிட்டை கூடினர். முத்திநிலையை அடைந்தார். அமரர் - தேவர்.

ஒளிகிளர்வண் சயிலாதி யோங்குகயி லையைமருவித்
தெளிகிளர்முன் புரிபணியிற் றிகழ்ந்திருந்தான் சித்தரெலாம்
அளிகிளர்முத் தர்களானு ரவர்க்கெளிதே முத்தியருள்
களிகிளர்சித் தாச்சிரமப் பெருமையெவர் கட்டுரைப்பார். 46

கு - ரை : சயிலாதி - திருநந்திதேவர். முன்புரிபணி - அகம்படித் தொண்டு; கயிலைகாக்கும் திருத்தொண்டு. சித்தரெலாம் முத்தராயினர். அளி கிளர் முத்தர் - அருள் மிக்க முத்தர். அவருக்கு முத்தியருளல் எளியதே யாம். களி கிளர் - களிப்பு மிகுந்த.

நாறுமலர் கொடுபூசை நவகோடி சித்தர்புரிந்
தேறுவினை தடுத்துமுத்தி யெய்தியசித் தாச்சிரமப்
பேறுபெறு மான்மியத்தென் பேசினும் பெரும்புலவர்
கூறுபுகழ் மிகுபஞ்ச குரோசமான் மியம்புகல்வாம். 47

கு - ரை : நாறும் மலர் - மணம் நிறைந்த மலர். ஏறுவினை - ஆகாமியம். முத்தி எய்திய - முத்தியை அடைந்த. பெரும்புலவர் - மகாவித்து வான்கள்.

சித்தாச்சிரமப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1634

இருபத்தெட்டாவது

பஞ்சகுரோச மான்மியப்படலம்

*உரோகணி மகனு மாலை யொருபுறங் கொண்ட தெய்வ
சிரோமணி புகழே நாளுஞ் செவிக்குண வாகச் செய்யும்
வரோதய முனிவர் சூத முனிவனை வணங்கிப் பஞ்ச
குரோசமான் மியஞ்சொல் லென்னக் கூறுவா னனைய சூதன். 1

கு - ரை : உரோகணி மகன் - திருமால்: விஷ்ணுவிற்கு ஓர் அவதாரத்தின் வந்தபெயர். ஒரு புறம் - ஒரு பக்கத்தில். தெய்வசிரோமணி - சிவபெருமான். வரோதய முனிவர் - சிறந்த முனிவர்களாகிய நைமிசமுனிவர். பஞ்சகுரோசம் - ஐந்து குரோச அளவு.

கரிசறு தவத்தின் மிக்கான் கதம்பமா முனிவ னென்பான்
விரிபுகழ் படைத்த நந்தி நாதற்கு மேல்பாற் சென்று
கரியுரி போர்த்த மேனிக் கடவுட னிலிங்கந் தாபித்
தரியபன் மலர்கொண் டன்பிற் பூசனை யுளுற்றி னுனல். 2

கு - ரை : கரிசு அறு தவம் - குற்றமற்ற தவம். கதம்பமுனிவர், நந்திநாதருக்கு மேல்பக்கத்தில் சிவலிங்கம் தாபித்து அன்புடன் பூசனை செய்துவந்தார்.

பன்னெடும் பகல்பூ சிக்கப் பரவுமவ் விலிங்க நின்று
மின்னெடுஞ் சடையான் றோன்றி வேண்டிய தளித்துப் பின்னும்
நன்னெடு புகழ்க்க தம்ப நாதனென் றொருபேர் பெற்றான்
கொன்னெடுங் குலிசம் பாவக் குன்றினுக் கனைய தானம். 3

கு - ரை : பன்னெடும் பகல் - அனேக காலம். கதம்பமுனிவர் பூசித்த இலிங்கம் கதம்பநாதர் என்பது. கொன் நெடுங் குலிசம் - வச்சிராயுதம். பாவக்குன்று - பாவமாகிய மலை.

சூருயிர் குடித்துப் போதுந் தோன்றலவ் வழிவ ருங்காற்
பாருயிர் விரும்பு மந்தப் பராபர விலிங்க நோக்கி
ஆருயி ருவக்குந் தீர்த்த மின்மையு மமைய வெண்ணிப்
போருயிர் சத்தி யான்முன் பொருந்தவோர் தீர்த்தந் தொட்டான்.

---

* உரோகணி மகன் - விட்டுணுவிற்கோரவதாரத்தின் வந்தபெயர்.

கு - ரை : சூர் - சூரபன்மன். தோன்றல் - முருகக்கடவுள். பார் உயிர் - உலகத்திலுள்ள உயிர் வருக்கங்கள். அந்தப் பராபர இலிங்கம் - கதம்பநாதர். சத்தியால் - சத்தி வேலினால். தீர்த்தம் தொட்டான் - தீர்த்தம் உண்டாக்கினார்.

கண்ணுமத் தீர்த்தஞ் சத்தி கங்கையென் றொருபேர் பூணும்
நண்ணுமத் தீர்த்த மூழ்கிக் கதம்பநா தனைப்பூ சிப்போர்
விண்ணுமெட் டரிய போக மிதப்புறப் பெற்று வாழ்வார்
அண்ணுமற் புதங்கூர் முத்தி யின்பமு மடைவ ரன்றே. 5

கு - ரை : கண்ணும் - கருதப்படும். அத்தீர்த்தம் சத்தி கங்கை என்னும் பெயருடையது. விண்ணும் எட்டரிய போகம் - விண்ணோராலும் அடைவதற்கரிய போகம். மிதப்புற - அதிகமாக. அற்புதம் கூர் - ஞானம் மிக்க.

எண்ணரிய கதம்ப நாத விலிங்கத்தின் மேல்பாற் சற்றே
கண்ணரிய வாயுத் திக்கிற் கலந்துள தருந்த வஞ்சால்
புண்ணரிய வசிட்ட மேலோன் பொருந்திய வாச்சி ராமந்
துண்ணரிய தவத்தோ ருள்ளந் தானெனப் புனித மேவும். 6

கு - ரை : கதம்பலிங்கத்தின் மேல்புறம் சிறிது தூரத்தில் வாயு திக்கில் வசிட்ட முனிவர் ஆச்சிரமம் பொருந்தியுள்ளது. அது தவசிகள் உள்ளம்போலத் தூயது ஆகும்.

ஆயவத் தலத்தோர் பொய்கை யமரர்பாற் கடல்க டைந்த
தூயநன் னீரிற் றோன்றுஞ் சுதைநிகர் சுவைமிக் குள்ள
பாயநீ ருடைய தஃதைப் பாற்குள மென்று சொல்வர்
மேயவத் தீர்த்தக் கீழ்பாற் கரையிடை விருப்பு மேவ. 7

கு - ரை : அத்தலத்தில் அமுதம்போன்ற சுவையுடைய நீர் மிக்க ஒரு பொய்கையுள்ளது. சுதை - அமுதம். அது பாற்குளம் எனப்படும். அத் தீர்த்தத்தின் கீழ்கரையில்.

திகழ்நவ நீதங் கொண்டு செய்தவோ ரிலிங்கந் தாபித்
தகழ்வினை வசிட்ட மேலோ னருச்சனை யாற்றி வேண்டும்
புகழ்மிகு வரங்கள் பெற்றான் புனிதன்வெண் ணெய்யி லிங்கம்
இகழறுத் தின்ப நல்கு மியாவர்போய் வணங்கி னாலும். 8

கு - ரை : நவநீதம் - வெண்ணெய். வெண்ணெயினால் இலிங்க மொன்று தாபித்து வசிட்டமுனிவர் பூசித்தார். வெண்ணெய் இலிங்கம் யாவர் போய் வணங்கினாலும் இகழ்ச்சியைப் போக்கி இன்பத்தைத் தரும்.

உரைநவ நீத லிங்க வுத்தமற் கீசா னத்தில்
தரைபுகழ் திருக்கா ரோணத் தம்பிரான் மேலைத் திக்கிற்
சுரைபடு முட்டாட் கஞ்சச் சூரிய தீர்த்த மொன்று
புரைதவி ரனைய தீர்த்த வரவினைப் புகல்வாங் கேண்மின். 9

கு - ரை : நவநீத இலிங்கத்தின் ஈசான திக்கில் காரோணநாதருக்கு மேற்றிசையில். சுரை - உட்டுளை. முட்டாட்கஞ்சம் - முள்பொருந்திய தண்டினையுடைய தாமரை. சூரிய தீர்த்தம்.

ஒளியவிர் மலரின் மேலா னுவப்பவத் தலத்து மேவித்
தெளியவோர் குண்டஞ் செய்து செந்தழல் வளர்க்குங் காலை
அளியவக் குண்ட நாப்ப ணன்புசெய் பவருக் கென்றும்
எளியனுந் தம்பி ரானே ரிலிங்கமா முளைத்தா னன்றே. 10

கு - ரை : மலரின் மேலான் - பிரமன். நாப்பண் - நடுவிடத்தில். சிவ பெருமான் இலிங்க வடிவாகத் தோன்றியருளினர்.

அன்னவை பவங்கண் ணுற்றே யன்னமேக் குயர்த்த தோன்றல்
பொன்னவிர் தளியொன் ருக்கிப் பூசைமுற் சிறப்ப னைத்தும்
நன்னல முறந டாத்தி நாடுபல் வரமும் பெற்றுத்
தன்னம ரிருக்கை மேவித் தழைத்தினி திருந்தான் பின்னுள். 11

கு - ரை : அன்னம் மேக்கு உயர்த்த தோன்றல் - அன்னத்தின் வடிவத்தை எழுதிக்கட்டிய கொடியை மேலே உயர்த்திய பிரமன். தளி - கோயில். தன் அமர் இருக்கை - சத்தியலோகம். பின்னுள் - பிற்காலத்தில்.

எழுபரித் தேரின் மேவி யிண்டையொண் முகைக ளெல்லாம்
முழுமுறுக் குடையத் தோன்று மொய்கதிர்ப் பரிதிப் புத்தேள்
பழுதமை மறம றைந்து பண்ணுவார் தமைத்தண் டிக்குஞ்
செழுமகப் பேறு வேண்டிச் செழும்பொழி லுகை புக்கான். 12

கு - ரை : எழு பரித் தேர் - ஏழு குதிரைகள் பூட்டப்பெற்ற தேர். பரிதிப்புத்தேள் - சூரியன். "புரவி யேழும் மணிபூண் டியங்கும் கொடித் தேரினன்" என்ருர் பெரியாரும். "இரவி கண்மறைந் தேழ்பரி யிரதமுந் தானும்" (பரஞ்சோதி-திருவிளை). மறம் மறைந்து பண்ணுவார் - பாவிகள். மறம் - பாவச்செய்கை. தண்டிக்கும் மகப்பேறு.

புக்கவன் றேவ தீர்த்தம் புண்ணிய மருவ மூழ்கி
மிக்கவ னுய வாதி புராணனை விருப்பிற் போற்றித்
தொக்கவன் பினருண் மேவிச் சுடர்கருந் தடங்க ணுடாள்
தக்கவ னென்னப் போற்றித் தழையுமேற் றிசைய டைந்தான். 13

கு • ரை : தேவதீர்த்தத்தில் முழுகி, ஆதிபுராணரை வணங்கி, நீலாய தாட்சி அம்மையை வணங்கி. தடங்கணுள் தாள் போற்றி. மேற்றிசையை அடைந்தான் (சூரியன்).

அயன்மகத் தெழுந்த பெம்மா னருட்குறி கண்டு போற்றிப்
பயன்மிக மேல்பா லுண்டு பண்ணிய தஃது கண்டோர்
வியனம ரந்நீர் மூழ்கி வேள்வியி னெழுதற் போற்றுஞ்
செயன்மகிழ்ந் தனைய நாதன் திருப்பெருங் காட்சி நல்கி. 14

கு • ரை : அயன் மகம் - பிரமதேவன் செய்த யாகம். மேற்றிசையில் உள்ள சூரியதீர்த்தம். வேள்வியின் எழுந்த தம்மைப் போற்றும் செயல். காட்சி தந்து.

இருள்வலி முருக்கும் வெய்யோ னெண்ணிய படியே பாவர்
வெருள்கொளு மியமற் றந்து வேண்டிய வரமு மீந்தான்
அருள்வள ரியம நாத னெனும்பெய ரடைந்தான் வேதன்
மருடபும் வேள்விக் குண்டத் துதித்தவ னனைய மாண்பால். 15

கு • ரை : முருக்கும் - அழிக்கும். வெய்யோன் - சூரியன். பாவர் - பாவிகள். வெருள் - அச்சம். இயமன் தந்து - இயமனைப் புத்திரனாகக் கொடுத்து. பிரமன் வேள்விக் குண்டத்துத் தோன்றிய சிவலிங்கமூர்த்தி இயமநாதன் என்னும் பெயர்பெற்றார்.

சூரிய னமைத்த லாலே சூரிய தீர்த்த மென்றோர்
சீரிய பெயர்பூண் டன்றத் தீர்த்தமற் றனையான் வாரத்
தேரிய லமைய மூழ்கி யியமநா தனைச்சே விப்பார்
காரிய சித்தி பெற்றுக் களித்துவாழ்ந் திடுவர் மெய்யே. 16

கு • ரை : சூரியனால் அமைக்கப்பட்டது சூரியதீர்த்தம் ஆகும். அத் தீர்த்தத்தில் ஞாயிற்றுக்கிழமையில் விதிப்படி முழுகி இயமநாதனை வணங்குவோர் காரியசித்திகள் பெற்று மகிழ்ந்து வாழ்வார்; இஃது உண்மை. ஏர் இயல் அமைய.

ஒளிகெழு கதிரோன் றீர்த்தத் துத்தர திசையின் மேவி
அளிகெழு குமுத நண்ப னமையவோ ராவி தொட்டுக்
களிகெழு மதன்றீ ரத்துக் காமரு விலிங்க மொன்று
தெளிகெழும் படிதா பித்துத் திருத்தகு பூசை செய்தான். 17

கு • ரை : சூரிய தீர்த்தத்து வடக்குத் திக்கில் சந்திரன் ஒரு குளம் தோண்டி அதன் கரையில் ஒரு இலிங்கம் தாபித்துப் பூசித்தான். குமுத நண்பன் - சந்திரன். ஆவி - குளம். தொட்டு - தோண்டி. தீரம் - கரை.

அந்தநற் றீர்த்த நாம மவன்பெயர் பெற்று மேவுஞ்
சுந்தர விலிங்க மென்று சோதியு மொருபேர் பெற்றுன்
சந்திர தீர்த்தந் தோய்ந்தச் சயம்புவைத் தரிசிப் போர்கள்
இந்திர னுதி யோரு மெய்தரும் பெரும்பே றெய்வார். 18

கு - ரை : சந்திரனுல் பூசிக்கப்பட்ட இலிங்கம் அவன் பேர்பெற்றது. சுந்தரலிங்கம் என்றும் ஒரு பேர் உண்டு. சந்திரதீர்த்தத்தில் முழுகி அச் சிவலிங்கமூர்த்தியைத் தரிசித்தோர் பெரும்பேறு பெறுவர்.

மதியமை யிலிங்கத் திற்கு வடகிழக் கெல்லை யெய்தித்
துதியமை தீர்த்தந் தொட்டுச் சுடருமோ ரிலிங்கந் தாபித்
ததிநயம் பயப்பப் பூசை யாற்றியொள் ளழலோ னென்பான்
பதிதரு கருத்து முற்றும் படிவரம் பெற்று னன்றே. 19

கு - ரை : சந்திர லிங்கத்தின் வடகிழக்கு எல்லையில் அக்கினிதேவன் ஒரு தீர்த்தமுண்டாக்கி இலிங்கம் தாபித்துப் பூசித்தான். எண்ணிய வரங்கள் பெற்றுன். சுடர், அக்கினி, அழலோன் என்பன ஒரு பொருட்சொற்கள்.

கார்த்திகைத் திங்க ளெய்துங் கார்த்திகை நன்னுண் மண்மேற்
பார்த்திவர் செறியு மந்தப் பாவகன் றீர்த்த மூழ்கி
ஆர்த்தியி னழலோன் பூசை யாற்றிய விலிங்கந் தாழ்வார்
பூர்த்தியி னினைத்த வெல்லாம் பொருந்துவர் தீமை தீர. 20

கு - ரை : கார்த்திகை மாதம் கார்த்திகைநாளிலே அக்கினி தீர்த்தத்தில் முழுகி அக்கினி இலிங்கத்தை வழிபடுவோர் தீமைநீங்கி நினைத்தவெல்லாம் கைகூடப்பெறுவர். பாவகன் - அக்கினி.

ஆசார வழலோன் பூசை யாற்றிய வருட்கோ சத்திற்
கீசான திசையின் மேலா மிருந்தவர் பலரும் போற்றத்
தேசாரு மொருகா ரோணச் செம்மனு யகர்வ டக்கிற்
காசாருங் கொங்கை நாக கன்னிகை யொருத்தி மேவி. 21

கு - ரை : ஆசார அழலோன் - தூய அக்கினிதேவன். அருட்கோசம் - சிவலிங்கம். ஈசானதிக்கில், காரோண நாயகருக்கு வடக்கில் நாககன்னிகை ஒருத்தி வந்து.

அருந்தவம் புரிந்தா ளாக வன்னதற் கிரங்கி யெங்கோன்
திருந்தவோ ரிலிங்க மாகித் தெரிதர வெளியில் வந்தான்
பொருந்துமச் சுயம்பு மூர்த்தி யெழுந்தது பொருக்கென் றேர்ந்து
வருந்துத லில்லாச் சாலீ சுகனெனு மன்னர் மன்னன். 22

கு - ரை: அரிய நவமியற்றினுள். இறைவர் ஒரு சிவலிங்கமாகி வெளித்தோன்றினர். அச்சுயம்புமூர்த்தி தோன்றியமை ஓர்ந்து சாலீசுகன் என்னும் அரசர்க்கரசன்.

கருதரு வளஞ்சால் நாக கன்னிகா புரமென் பேரால்
ஒருபெரு நகர மாக்கி யந்தணா ருறைய நல்கித்
திருவளர் கோயில் செய்து சிறப்பித்தா னனைய மூர்த்தி
மருவும்வெம் பாவ நோய்க்கோர் மாமருந் தாகி மன்னும். 23

கு - ரை: நாக கன்னிகாபுரம் என்னும் ஒரு நகர் உண்டாக்கி, அந்தணர்களைக் குடியேற்றி, அழகிய கோயில்கட்டிச் சிறப்பித்தான். அந்த மூர்த்தி பாவநோயைத் தீர்த்தற்கு ஒரு மருந்தாகிப் பொருந்தும்.

அறைபெரும் புகழ்சா னகை யைங்குரோ சத்தி னுள்ள
நிறைதரு மிலிங்கந் தீர்த்த மின்னவா நெடுங்க டற்கு
மறைசொலத் திருநா கைக்கு நாப்பணே வானு ளோரும்
பொறையுடற் கழிப்பா னெண்ணிற் புகழ்வதெ னிதனின் மேலும்.

கு - ரை: மிக்க புகழையுடைய நாகையின் ஐங்குரோசத்தின் உள்ள நிறைந்த இலிங்கங்கள், தீர்த்தங்கள் இவையாம். விண்ணோரும் நாகையில் சுமையாகிய தம் உடம்பைக் கழிக்க எண்ணுவராயின் இதன் மேலும் சிறப்பு என்ன உள்ளது.

ஆவியிற் பொலியு நாகை யைங்குரோ சத்தி னுள்ளும்
மேவிவாழ்ந் திருந்தா ரியாவ ராயினு மெய்வி டுங்காற்
காவியங் கண்ணுண் மார்பன் கமலமே லுறைவா னேடு
மாவியப் பெய்த வண்ணல் வளர்சிவ லோகஞ் சார்வார். 25

கு - ரை: நாகையின் ஐங்குரோச எல்லையின் வசிப்போர் யாவராயினும் தேகம் நீங்குங் காலத்துத் திருமால் பிரமன் வியப்பச் சிவலோகத்தை அடைவார்.

பிறங்கிய வளஞ்சா னகைப் பிறங்குகா ரோணஞ் சூழும்
அறங்கிள ரைங்கு ரோசத் தகத்துமுத் தினம்வ சித்து
மறந்துமற் றொருத லம்போய் மாண்டன ரெனிலன் னருஞ்-
சிறந்தபல் வளஞ்சான் மேலைப் பெரும்பதஞ் சிவணி வாழ்வார்.26

கு - ரை: இந்த ஐங்குரோச எல்லையில் மூன்று நாட்கள் வசித்து மறந்துபோய் வேறொரு தலத்தில் சென்று மாண்டாராயினும் அவர் சிவ லோகத்தைப் பொருந்தி வாழ்வார். சிவணி-பொருந்தி. பிறங்கு-விளங்கும்.

ஆனியிற் சிறந்த தாம்பூ தாட்டமி வருந்தி னத்தின்
மேனிக ழைங்கு ரோசம் விதிமுறை சூழ்தல் மேலாம்
பானிறச் சங்கம் வீசும் படுதிரை யொடுவ டக்கில்
தானிகழ் சமுத்தி ரத்தைச் சாற்றெல்லை யாகக் கொண்டு. 27

கு - ரை : ஆனியில் சிறந்ததாம் பூத அட்டமி வரும் தினத்தில் ஐங் குரோச எல்லையையும் வலம்வரல் மேலானது. கடற்கரையோடு வடக்கில் பொருந்தும் சமுத்திரத்தை எல்லையாகக் கொண்டு.

கடிமலர் நாறுங் கூந்தற் கருந்தடங் கண்ணி பாகத்
தடிகளை யிதயத் தெண்ணி யஞ்சலிக் கரத்த ராகித்
தடிபொறி யினராய் மெல்லச் சூழ்வது தகுதி யாகும்
ஒடிவிலிவ் வாறு சூழு முத்தம குணத்தா ரெல்லாம். 28

கு - ரை : கருந்தடங்கண்ணி பாகராகிய காரோணநாதரை மனத் தில் தியானித்துக்கொண்டு, கைகளைக் கூப்பித்தொழுது, மெல்ல நடந்து செல்லுதல் தக்கதாம். இவ்வாறு வலம் வரும் உத்தம குணமுடையோர்.

மனையொடு மக்கள் சூழ மகிதலத் திடைப்பன் னுள்வாழ்ந்
தினைதரல் சற்று மின்றி யிந்திரா தியர்தம் வைப்புந்
துனைதரப் புகுந்து போகந் துகளறத் துய்த்த பின்னர்
முனையடு சூலத் தெம்மான் முழுப்பத மருவி வாழ்வார். 29

கு - ரை: நிலவுலகத்தில் மனைவி மக்களுடன் பலநாள் வாழ்ந் திருந்து, சிறிதும் வருத்தமின்றி, இந்திரலோகமும் புகுந்து போகங்களை அனுபவித்தபின் சிவபெருமான் பதத்தில் பொருந்தி வாழ்வார்.

மகிதலம் - பூமி. இனைதரல் - வருந்துதல். வைப்பு - இடம், உலகம். துனைதர - விரைந்து. துகளற - குற்றமின்றி.

கலமலி கடல்சூழ் நாகைக் காரோணத் தைங்கு ரோசம்
புலமலி தரச்சூழ் வாரேற் பூமியைச் சூழ்ந்த பேறும்
நலமலி யவரை வான நாடருஞ் சூழ்வ ரென்னிற்
குலமலி யதன்சீ ராதி சேடனுங் கூறற் பாற்றே. 30

கு - ரை : கலம் மலி கடல் - மரக்கலங்கள் நிறைந்த கடல். புலம் மலிதர - அறிவு பொருந்த. பூமியை வலம்வந்த பலனுண்டாம்: அவரை விண்ணோரும் வலம் வருவர். சூழ்வர் - சுற்றுவர். ஆதிசேடனும்; உம்மை உயர்வு சிறப்பு. அறிவில் ஆதிசேடன் உயர்ந்தவராதலின்; அன்றியும் இரண்டாயிரம் நாவுடையராதலினுலும் என்க.

வரசரோ ருகன்மா லாதி வானவ ரியாரு மென்றும்
பரசநீ ளங்கு ரோச மான்மியம் சிலப கர்ந்தாம்
அரசகே சரிமுன் னுய யாவருஞ் சூழ்ந்து மேன்மை
விரசமா முத்தி பெற்ற விதமுமே லெடுத்துச் சொல்வாம். 31

கு - ரை : வரம்-சிறந்த. சரோருகம் - தாமரை; சரோருகன் - பிரமன். பரச - துதிக்க. முன் ஆய - முதலாகவுள்ள. மேன்மை விரச - சிறப்புற.

பஞ்சகுரோச மான்மியப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1665

இருபத்தொன்பதாவது

அரசகேசரி முதலியோர் முத்தியடைந்தபடலம்

பொருவருந் தவத்துச் சூதமா முனிவன் பொன்னடித் தாமரை யிறைஞ்சி
மருவரும் வளஞ்சா ஊமிச வனத்து மாதவர் யாவரு மைய
வெருவரு மரச கேசரி முதலோர் மேவினர் முத்தியென் றுரைத்தாய்
பருவருந் தரமி லஃதுரை யென்னப் பகருமச் சூதமா முனிவன். 1

கு - ரை: அரசகேசரி முதலியோர் முத்தி அடைந்தனர் என்று கூறினீர். பருவரும் தரம் இல் அஃது - துன்புறும் தன்மையில்லாத அவ்வரலாறு. பருவரல் - துன்பம். தரம் - தன்மை.

ஒருகவி மிதிப்ப விலாங்கலிக் குலையி னெண்பழ மொன்றுறக் கழன்று
மருமலி பலாமுட் புறக்கனி கீண்டு மாங்கனி சிதறுபு வாழைப் [கும்
பொருபுலி யடிக்காய்க் கூன்குலை முறித்துப் புண்டரீ கத்தரும் பவிழ்க்
திருமலி பழனஞ் சூழுடுத் தோங்கிச் சிறப்பதுச் சயினிமா காளம். 2

கு - ரை: ஒரு கவி - ஒரு குரங்கு. இலாங்கலிக் குலை - தேங்காய்க் குலை. முட்புறக்கனி - பலாப்பழம். கீண்டு - கிழித்து. சிதறுபு - சிதறி. வாழையினது புலியடிபோன்ற காய்களையுடைய தாறு. கூன் - வளைந்த. புண்டரீகம் - வெண்டாமரை. பழனம் - வயல். உச்சயினிமாகாளம்.

முனிவர ரிமையோர் புரந்தர னொருநான்
முகனிகற் றிகிரியேந் தண்ணல்
துனிதவிர் கணத்தர் முதலிய பலருந்
துணர்மல ரிறைத்திறைத் திறைஞ்ச
நனிவர மவர்க்கு நல்கிமா காள
நாதரென் றொருபெயர் புனைந்து
வனிதையோர் பாக ரென்றுநீங் காது
மகிழ்ந்தினி தமர்வதந் நகரம். 3

கு - ரை: புரந்தரன் - இந்திரன். திகிரி - சக்கராயுதம். கணத்தர் - பூதகணங்கள், தேவகணங்கள் முதலியோர். துணர் - பூங்கொத்து. இறைவர் பெயர் மாகாளர் என்பது. வனிதை - உமாதேவியார். ஓர் பாகர் - ஒரு பாதியிலுள்ள சிவபெருமான்.

தூயவந் நகரி னுய்கர்தங் குலத்துத்
தோன்றினன் வாய்மையிற் சிறந்து
மேயவன் விண்டு தத்தனென் றெவரும்
விளம்பிடு பெயரினன் றவத்தி
னுயவன் சுகுணன் றனதத்த னெனும்பே
ரமைந்தவன் பிறையென வளர்நாள்
தீயவல் வினையா லடைந்ததோர் கொடுநோய்
செழித்தெழு பயிரடு களைபோல். 4

கு - ரை : நாய்கர் - வணிகர். வாய்மை - சத்தியம். விண்டுதத்தன் என்பவன். தவத்தின் ஆயவன் - செய்த தவத்தினல் புத்திரனுகத் தோன்றியவன். தனதத்தன் என்பது அவன்பெயர். சுகுணன் - நல்ல குணமுடையான். தீய வல்வினையால் - தீமையை விளைக்கும் கொடிய வினையால். "அருவாய வல்வினை" என்க. கொடுநோய் - கொடுமையை விளைக்கும் பிணி. அம்மகவை - அக்குழவியை. பயிர் அடு களை - பயிரை அழிக்கும் களை.

பிணியட வருந்தி நாட்குநாட் டேய்ந்து
பேதுறு மைந்தனை நோக்கி
அணிகெழு விண்டு தத்தனுள் ளுடையா
வவலமிக் கிரங்கின னந்தோ
கணிதமி றவஞ்செய் தொருமகப் பெற்றேன்
கடும்பிணி யடைந்ததம் மகவைத்
தணிதருந் திறமற் றெதினென வாய்ந்து
தக்கதீ தென்றிஃ தாற்றும். 5

கு - ரை : பிணி அட - நோய் வருத்த. பேதுறும் - துன்பப்படும். மைந்தனை - புத்திரனை. உள் உடையா - மனம் உடைந்து. அவலம் மிக்கு - கவலை மிகுதியாய். இரங்கினன் - மனந்தாழ்ந்தான். கணிதம் இல் தவம் - கணக்கில்லாத தவம். தணிதரும் திறம் - குறையும் விதம். ஆய்ந்து - ஆராய்ந்து. இஃது ஆற்றும் - இதனைச் செய்வான்.

சிறந்தபல் லாயுள் வேதியர்க் கூவிச்
செம்பொருள் முகந்தனன் வீசி
நிறந்தபு விதமென் மைந்தனை வருத்து
நெடும்பிணி தவிர்த்தருள் வீரென்
றறந்தழை மனத்தான் வேண்டலு மனையார்
அமைந்தநோ யின்னதென் றுணர்ந்து
விறந்தமற் றதற்கு மூலமுந் தெரிந்து
மேன்மணி யாதிகைக் கொண்டு. 6

கு - ரை : ஆயுள்வேதியர் - மருத்துவர். நிறம் தபுவிதம் என் - இவன் மேனியின் நிறம் கெடுமாறு எவன். தபுதல் - வேறுபடுதல். அறம் தழை மனத்தான் - தருமம் செழித்த மனமுடைய விண்டுதத்தன். நோயை ஆராய்ந்து - நோயின் மூலகாரணத்தையும் ஆராய்ந்து. ''நோய்நாடி நோய்முதல் நாடி'' (குறள் - 948). மணி ஆதி - மணிமந்திர ஔடதம் முதலிய.

மணிமனு மருந்து மூன்றினு முயன்றும்
வன்பிணி தவிர்ந்தில தாக
தணிதருந் தெய்வத் தாலென மொழிந்து
* தரணிகள் அகன்றனர் பின்னர்
எணியொரு தந்தை முனிவரைப் பரசி
யெம்பிரான் கோயிலுட் புக்குப்
பணியென விடுத்தா னுங்கவ னுரைத்த
படியொழு கினன்றன தத்தன். 7

கு - ரை : மணி மனு மருந்து மூன்றினும் - மணியும் மந்திரமும் மருந்தும் ஆகிய மூன்றினுலும்: தெய்வத்தால் தணிதரும்; ''மந்திரமுந் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னை'' (தேவா). ''மணி மந்த்ரமாதியால் வேண்டு சித்திகளெல்லாம்''(தாயுமானவ). தரணிகள் - வயித்தியர். எணி=எண்ணி: தொகுத்தல். பரசி - துதித்து. பணி - வணங்குக.

ஒழுகுறு நாளி லத்தலத் தருளா
லுறையுமா காளரைப் பணிவான்
வழுவறு தவத்தா னருட்குண நிறைந்தான்
மாண்புசால் பல்கலை யுணர்ந்தான்
முழுமலஞ் சவட்டும் வெள்ளிய நீற்று
முண்டத்தான் கண்மணித் தொடையான்
செழுமறைப் பொருளைந் தெழுத்தெனும் வாம
தேவமா முனிவரன் வந்தான். 8

கு - ரை : அத்தலத்து - அந்தத் தலத்தில். உச்சயினி மாகாளத்து; மாகாளர் - இறைவர். முழுமலம் சவட்டும் - மலங்கள் முழுவதையும் கெடுக்கும். முண்டத்தான் - திரிபுண்டரமணிந்தவன். கண்மணித்தொடை - உருத்திராக்கவடம். மறைப்பொருள் - ஐந்தெழுத்து: ''வேத நான்கினும் மெய்ப்பொருளாவது, நாதன் நாமம் நமச்சி வாயவே'' (ஞான-பதிக) வாமதேவ முனிவர்.

---

* தரணிகள் - வயித்தியர்

வந்தமா முனியைக் கண்டெதி ரோடி
மலரடி முடிமிசைப் பொருத்திப்
பந்தநோய் வருத்தப் படுதன தத்தன்
பணிந்தன னவனுள மிரங்கிச்
சந்தமார் மைந்த வெழுந்திரு வாழ்நாள்
தகுதியிற் பெறுதியென் றியம்ப
நந்தலின் மகிழ்வோ டெழுந்தெதிர் நின்று
நயப்புற விண்ணப்பஞ் செய்வான். 9

கு - ரை: எதிரில் ஓடிச்சென்று வணங்கினன். அவன் - அம் முனிவன். ஆசி கூறினன். நந்தல் இல் மகிழ்வு - குறையாத மகிழ்ச்சி. நயப்பு உற - விநயமாக.

அடியனேன் பிணியால் வருந்துவேன் முயன்று
மாயுள்வே தியரொழித் தகன்றார்
நெடியசோ திடநூ லுணர்ந்தவ ரகவை
நிகழ்பதி னாறெனப் பகர்ந்தார்
ஒடிவற நீநூ றாண்டள வுறுகென்
றோதினை யுய்ந்தன னென்றான்
தடிதலில் குணஞ்சான் முனிவனுள் ளுணர்ந்து
சாற்றிடுங் கருணையா லீது. 10

கு - ரை: ஆயுள்வேதியர் - மருத்துவர். முயன்றும் - தம் அறிவு சென்ற அளவு முயற்சித்தும். அகவை - பிராயம். ஒடிவு அற - நீங்குதல் இன்றி. நூறு ஆண்டு அளவு உறுக என்று ஆசி கூறினய்: 'வாழ்நாள் தகுதியிற் பெறுதி' என்றாய்.

இப்பர்தங் குலத்தோ யூழ்வலி யதனு லிரெட்டாண் டறுதியி னிறந்து
தப்பற நடுவ னூர்புகுந் தொருநாஞ் சாற்றிய வாசியான் மீண்டு
துப்பவிர் சடையா ரருளினல் வாழ்ந்து தோலுரு முத்தியும் பெறுவாய்
ஒப்பற விற்றி னென்றினி தருளி யொழிந்தன னருட்பெரு முனிவன்.

கு - ரை: இப்பர் - வணிகர் குலத்தோர். 'இப்பர் கவிப்பர்' என்பன வணிகரைக் குறிப்பனவாம். எட்டி என்பது அரசனல் வணிகர் பெறுவதொரு பட்டப்பெயர்; 'எட்டி குமரன் இருந்தோன்' (மணி - 4 - 58); 'எட்டி காவிதிப்பட்டம்'; "எட்டி காவிதி என்பன தேய வழக்காகிய சிறப்புப் பெயர்" என்பர்; (தொல்-தொகை-சூத்-12-நச்). 'உத்தரன் கவிப்பற்கொரு மகனுகி' எனப் பாடமோதி, இக்குரங்கு உத்தரன் என்னும் பெயரோடு கவிப்பன் என்னும் வாணிகனுக்கு ஒரு மகனகப்பிறந்து என்பாருமுளர்; (சிலப்-15-191). ஊழ்வலி - பழவினைப்பயன். அறுதி - முடிவு. நடுவன் -

இயமன். சாற்றிய ஆசியால். துப்பு அவிர் சடையார்; துப்பு - பவளம். சடையார் - சிவபெருமான். தோலுரு - தோல்வியில்லாத.

தவமுனி யுரைத்த வாசியும் பிறவுந் தன்னையீன் றவர்க்கினி துரைத்தே
அவமிலென் றிறுமாப் புறுதன தத்த னைந்தொழின் முதலெனப் பகரு
நவவடி வகன்று பொலியுமா காள நாதனை யிராப்பக லருச்சித்
துவமையில் பணிசெய் தொழுகுநா ளொழிந்த வுள்ளவாண் டொருபதி
[னாறும். 12

கு - ரை: தவமுனி - வாமதேவமுனிவர். தன்னை ஈன்றவர்க்கு - விண்டு தத்தனுக்கு. இறுமாப்பு - செருக்கு. ஐந்தொழில் முதல் - படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களுக்கும் முதல்வர். நவ வடிவு அகன்று - அயன் மால் உருத்திரன் மகேசன் என்னும் உருவம் நான்கு, விந்து நாதம் சத்தி சிவம் என்னும் அருவம் நான்கு, சதாசிவன் என்னும் அருவுரு ஒன்று ஆக ஒன்பது வடிவங்களும் நீங்கி அப்பாலாகப் பொலியும் என்க. மாகாளநாதர் என்னும் சிவபிரானை. உள்ள ஆண்டு பதினாறும் - வகுத்திருந்த வயது பதினாறும். ஒழிந்த - நீங்கின.

கருகிரு டிரண்டா லன்னமெய்க் கூற்றங் கடவிட விரைந்துவெம் படர்
தொருதன தத்த னுயிர்கவர்ந் திடுவா னுன்னின ரனையனக் காலை [வந்
மருமலர்க் கடுக்கை மாலைமா காள வள்ளலைப் பூசைசெய் திருந்தான்
அருகுறற் கஞ்சி யவன்மனைப் புகும்போ ததுசெயக் குறித்தன ரிருந்தார்.

கு - ரை: கருகு இருள் திரண்டால் அன்ன மெய்க் கூற்றம் - இருட்பிழம்பு எனத்தகும் மேனியையுடைய இயமன். கடவிட=கடாவ - செலுத்த. படர் - இயமதூதர். கவர்ந்திடுவான் - கவரும்பொருட்டு. உன்னினர் - நினைத்தார்கள். அனையன்-தனதத்தன். கடுக்கை மாலை-கொன்றைப்பூமாலை. அதுசெய - உயிரைக்கவர. குறித்தனர் இருந்தார் - கருதியிருந்தனர்; குறித்தனர்: முற்றெச்சம்.

அத்தயா மத்துத் தரிசனஞ் செய்தே
யணிமனைப் புகுந்தன னதுபோ
தொத்தபோ திதுவென் றொருதன தத்த
னுயிர்கவர்ந் தனர்படர் சென்றார்
முத்தமா முனிவன் மொழிநினைந் துடம்பை
மூடியாங் கொருசிறை யமைத்துச்
சித்தமா ழாத்த லின்றியே யமர்ந்தார்
தெரியிரு முதுகுர வோரும். 14

கு - ரை: அதுபோது - அப்போது. கவர்ந்தனர் சென்றார்-கவர்ந்து சென்றனர்; கவர்ந்தனர்: முற்றெச்சம். முத்தமாமுனிவன்-வாமதேவ முனிவர்.

ஒரு சிறை - ஒரு பக்கத்தில். சித்தம் மாழாத்தல் இன்றி - மனம் கலங்குதல் இல்லாமல். இரு முது குரவோரும் - தாய் தந்தையர் இருவரும்.

படர்தன தத்தன் றனைக்கொடு விரைந்து
படர்ந்தன ரியமன்முன் விடுத்தார்
இடர்தப வனையா னவனடி வணங்கி
யெய்தினே னுனைமேற் கொண்டே
அடர்புல முனிவ னுணைமற் றிதுவென்
றறிதர வுரைத்தன னடுவன்
சுடர்விழி நுதலா னுணையென் றஞ்சித்
துனைந்துநீ போதியென் றுரைத்தான். 15

கு - ரை: படர் படர்ந்தனர் - இயமதூதர் சென்றனர். விரைந்து படர்ந்தனராய் விடுத்தார். இடர்தப - துன்பம் நீங்குமாறு. ஆணை - கட்டளை. அடர் புல முனிவன் - வாமதேவ முனிவர். நடுவன் - இயமன். சுடர்விழி நுதலான் ஆணை - சிவபெருமான் கட்டளை. துனைந்து - விரைவாக. போதி - போவாய்.

உரைசெய மகிழ்ந்து மீட்டுமற் றவன்றூ ளுறப்பணிந் தொருதன தத்தன்
புரைபடு பாவத் தொடக்கினர் நரகிற் புக்குழன் றழிவது தெரிவான்
விரையுமென் னுள்ள மருடியென் றிரப்ப விரித்துரை ஒருவனைக் கூட்டி
வரை நர கனைத்துங் காட்டுக வென்றான் மற்றவன் றெரிதரத்
[தெரிப்பான். 16

கு - ரை: உரைசெய - இயமன் கூற. அவன் - அந்த இயமனுடைய. புரை படு பாவத்தொடக்கினர் - குற்றம் பொருந்திய பாவிகள். உழன்று அழிவது - வருந்தித்தொலைவது. தெரிவான் - தெரியும் பொருட்டு. அருடி - அருள் செய்வாய். வரை நரகு அனைத்தும் - சொல்லப்படும் நரகம் முழுவதும்; வரைதல் - சொல்லுதல்.

இதுமுத னரகம் பெயரிர வுரவம்
எரிதழல் வெதுப்புறப் பட்டுங்
கதுவழல் சுடுநெய்க் கலத்திட்டு வறுத்துக்
கவற்றிடப் பட்டுமிங் குழல்வார்
மதுமலர்க் கூந்தற் பரமட வார்தோண்
மணந்தவர் பரர்பொருள் கவர்ந்தோர்
சதுமுக னெடுமா லறிவரும் பெருமான்
றனையவ னுரையைநிந் தித்தோர். 17

கு - ரை : இரவுரவம்: எரிகின்ற நெருப்பிலே வெதுப்பப்பட்டும் தீப்பற்றி எரியும் நெய்க்கொப்பரையில் போகட்டு வறுத்து. நெய்க்கலம் - நெய்க்கொப்பரை. கவற்றப்பட்டும் - துன்புறுத்தப்பட்டும். உழல்வார் - வருந்துவர். பரமடவார் - பிறர்மனைவியர். பரர் பொருள் - பிறருடைய பொருள். சிவபெருமானை நிந்தித்தோர், அப்பெருமான் அருளிச்செய்த வேத சிவாகமங்களை நிந்தித்தோர். இது முதலாவது நரகம்.

மற்றவஃ திரண்டா வதுமகா ரவுர
வப்பெயர் புனைந்ததா லதனுட்
செற்றபல் சூசி குறியிடை யழுந்தச்
செருகுறப் பட்டழி கொடியார்
உற்றபல் லுறுப்புஞ் சிதைத்திடக் கவல்வா
ருறுகுரு மனைவியைப் புணர்ந்தார்
கற்றவர் தமைநிந் தித்தவர் நன்றிக்
கடனறி யாதற வொழித்தார். 18

கு - ரை : இரண்டாவது மகாரௌரவம் எனப்படும். இதன்கண் குறியிலே பல ஊசிகள் அழுந்தும்படி செருகப்பட்டு அழிகின்ற கொடிய பாவிகளுடைய பல உறுப்புக்களையும் சிதைக்கக் கவலையடைவார்கள். குரு மனைவியைப் புணர்ந்தவர்களும், கல்வியறிவொழுக்கமுள்ள பெரியோரை நிந்தித்தவர்களும், செய்ந்நன்றியைக் கொன்றவரும் இதனையடைவர்.

அன்னது மூன்று வதுமந்த தமமென் றறைபெய ருடையதந் நரகிற்
கொன்னவில் கரும்பொ னல்கினுற் கொடிய கொடிமுதற் பறவைகள் [சூலப்
பன்னருந் துயரிற் கண்கொடுத் துழலும் பாதகர் பரமட மாதர்
இன்னலந் திளைத்த லெண்ணிமற் றவர்த மெழிலால நோக்கினர்
[மாதோ. 19

கு - ரை : மூன்றுவது மந்ததமம் என்பது அந்த நரகம். கொன் - அச்சம். கரும்பொன் - இரும்பு. கொடி - காகம். சூல - பெயர்த்தெடுக்க. காகம் முதலிய கொடிய பறவைகள் கண்களைத் தோண்டும் படி வருந்தும் பாதகர். இவர் பிறர் மனைவியரை அனுபவிக்கக்கருதி அவர் அழகை விரும்பிப் பார்த்தோராவர்.

ஆங்கது நாலா வதுபிர முகமென்
றறைபெய ருடையதா லதனுள்
தீங்கமை கொடிற்றை நெருப்பெழ வெதுப்பிச்
செய்யநாப் பிடுங்கிடக் கவல்வார்

பாங்கமை பரம னடியரை வானப்
    பரப்பமை தேவரைத் தவத்தி
லோங்குநல் லவரைக் குரவரைப் பிறரை
    யுளைதர நிந்தைசெய் தவரே. 20

கு - ரை : பிரமுகம் என்னும் நரகம் நாலாவதாம். கொடிறு - தாழ் வாய், கன்னம். நா பிடுங்கிட - நாவைப் பிடுங்கிச் சிதைக்க. கவல்வார் - துன்புறுவார். தீங்கு அமை கொடிறு என்றது பொய் சொல்லிய வாய்; பிறரை நிந்தித்த வாய் என்க. கன்னத்தில் அறைந்து உடைத்து நாவைப் பிடுங்க என்றவாறு. பிறர் என்றதை விளக்குவார்: சிவனடியாரை, தேவர்களை, தவசிகளை, ஆசாரியரை என்பவர்களையும் ஏனையோரையும். உளைதர - வருந்த.

நிரயம தைந்தா வதுபுகல் பெயரோ நிம்மன மென்பதா லதனுட்
பரவுறுப் பனைத்தும் வாளினா லரியப் பதைபதைத் தழிதரு தீயர்
கரவறு நட்புக் கடைப்பிடித் தவர்பாற் கருதுறுக் குய்யஞ்செய் தோரும்
விரவிய பிறர்பாற் கேளிர்பாற் றுரோகம் விளைத்ததி துயரஞ்செய்
[தோரும். 21

கு - ரை : நிம்மனம் என்பது ஐந்தாவது நரகம். கொடிய பாவிகளின் உடல் உறுப்புக்கள் எல்லாவற்றையும் வாளினால் அரிய அவர் பதைபதைத்து அழிவர். இவர் நட்பிடைக் குய்யம் வைத்தவரும், பிறரிடத்தும், சுற்றத்தாரிடத்தும் துரோகம் செய்து அதிக துன்பம் செய்தவருமாவார். கரவு அறு நட்பு - வஞ்சகமில்லாத நட்பு. குய்யம் - துரோகம்; நம்பிக்கைத் துரோகம். கேளிர் - சுற்றத்தார். அதி துயரம் - மிக்க துன்பம்.

நேர்தெரி யஃதா றுவது நாம
    நிகும்பமென் பதுகொடி ததனுள்
வார்மணல் வறுத்திட் டதனொடு கூட்டி
    வறுத்திடத் துடிதுடித் தழுவார்
பார்விலங் குகளைச் சிறைப்பற வைகளைப்
    பையுணோக் காதுயிர் செகுத்துக்
கூர்நுனைக் கருவி கொடுதசை யரிந்து
    கொடுந்தழல் வெதுப்பியுண் டவரே. 22

கு - ரை : நேரே தெரிவதாகிய அந்த நரகம் ஆறுவதாம். அது நிகும்பம் எனப் பெயர் பெறும். மிகக் கொடியது. அதில் மிக்க மணலை வறுத்துப் பாவிகளை அதிற்கூட்டி வறுக்கத் துடிதுடித்து அழுவார். உலகத்துள்ள விலங்குகளையும், பறவைகளையும் அவைகளின் துன்பத்தை எண்ணாமல் உயிரைப்போக்கி, கூரிய கருவியால் தசையை அரிந்து நெருப்பில் வாட்டி உண்ட பாவிகளே அவர்களாம்.

சிறை - சிறகுகள். பையுள் - துன்பம். செகுத்து - கொன்று.

வலனுடை யேழா நரகிது பெயர்வீ வற்சமென் றுரைப்பதா லிதனுள்
விலகரு மலமூத் திரங்களே யமையும் வெய்துயிர்த் தவற்றினை யருந்தி
அலகில்பன் னாளுமமுழ் ந்திடு கொடியோ ரரசர்பாற் கோளுரைத் தொருவர்
நலமிகு குடியைக் கெடுத்தவர் பொய்ம்மை நவின்றவர் கொடுமொழி
[யுரைத்தோர். 23

கு - ரை : இது வலிமை பொருந்தும் ஏழாவது நரகம். இதன் பெயர் வீவற்சம் என்பது. இதனுள் நீங்கற்கரிய மல மூத்திரங்களே நிறைந்திருக்கும். பெருமூச்சுவிட்டு அதனையுண்டு எல்லையில்லாத காலம் மூழ்கிக்கிடக்கும் இப்பாவிகள் அரசரிடத்துக் கோள் உரைத்து ஒருவருடைய சிறந்த குடியைக் கெடுத்தோரும், பொய்யுரைத்தோரும், கொடுஞ்சொல் சொன்னோருமாவார்.

வலன் - வலிமை. வெய்து உயிர்த்து - பெருமூச்செறிந்து.

எதிர்தெரி குவதெட் டாவதா நாம
மிசைப்பர்குச் சிதமென விதனுட்
பிதிர்தலில் கோழை சுவேதநீர் வயிறு
பெருத்திட வருந்திவெய் துயிர்ப்பார்
முதிரிரு குரவ ராரியர் விருந்தின்
முற்றினு ரிவர்பசித் திருப்பக்
கதிர்படு சாலி யடிசினெய் பருப்புக்
கருணைபா கிவைதனித் துண்டார். 24

கு - ரை : எதிரே காணப்படுவது எட்டாவது நரகமாம். குச்சிதம் என்பது இதன்பெயர். இதனுள்ளே நீங்காத கோழை, வியர்வைநீர் முதலியவற்றால் வயிறு பெருக்கும்படி வருத்தமுற்றுப் பெருமூச்செறியும் இப்பாவிகள், முதிர்ந்த வயதுடைய தாய்தந்தையர், ஆசாரியர், விருந்தினர் ஆகிய இவர்கள் பசியோடிருப்ப, நல்ல செந்நெல்லரிசிச்சோறு நெய் பருப்பு பொரிக்கறி வெல்லப்பாகு இவைகளைத் தனியே உண்டவர் இவர். சுவேத நீர் - வியர்வை. இருமுது குரவர் - தாய்தந்தையர். குரவர் - ஆசாரியர். "விருந்தினர் - புதிதாக வந்தவர்; அவர் இருவகையர். பண்டு அறிந்துள்ளமை குறித்து வந்தாரும் அஃதின்றிக் குறியாது வந்தாரும் என" என்று உரைப்பர் பரிமேலழகர்.

சுடுதொழி லொன்பா னரகிது நாமந்
துர்க்கமென் றுரைப்பர்மற் றிதனுள்
அடுதிற லுரகந் தேளிரும் பதனு
லமைத்தகண் டகம்வருத் திடலாற்
கொடுவெதுப் படைவுற் றையகோ வென்பார்
குறிக்கொணுத் தீநெறி நடந்தார்
வடுவுற வழிமுள் ளிட்டவர் பிறர்தம்
வருத்தங்கண் டிரங்குறுக் கொடியோர். 25

கு - ரை : சுடுந்தொழிலையுடைய இந்த ஒன்பதாவது நரகம் துர்க்கம் எனப்பெயர் பெறும். இதனுள்ளே பாம்பு தேள் இருப்புமுள் முதலியவற்றால் துன்புறுத்தப் பெறுவதால் மிகவும் வெதும்பி ஐயோ என அலறுவர்; எண்ணவு முடியாத தீய நெறியில் சென்றோரும், பிறர் துன்புற வழியிலே முள்ளிட்டவரும், பிறருடைய துன்பங்கண்ட விடத்து மனமிரங்காத பாவிகளும் இவராவார்.

அடுதிறல் உரகம் - கொல்லும் வலியுள்ள பாம்பு. கண்டகம் - முள். ஐயகோ! இரக்கக் குறிப்பு. குறிக்க ஒண்ணு - நினைக்கமுடியாத.

இந்தவெந் நரகங் கொடியபத் தாவ
தியம்புபேர் சூசிமற் றிதனு
ளந்தமி லிரும்பாற் செம்பினு லுருக்கா
லமைதழற் றூணங்க டழுவி
நொந்தசிந் தையராய் வெதும்புவா ரயலார்
நோக்குடை மனைவியர் தம்மைத்
தந்தமக் குற்ற வலியினல் வலிந்து
தழுவிய தவலருங் கொடியோர். 26

கு - ரை : பத்தாவதாக எண்ணப்படும் இந்த நரகம் சூசி என்பதாம். இருப்புத்தூண் செப்புத்தூண் உருக்குத்தூண் இவைகள் நெருப்புத்தூண்களாம். இத்தூண்களைக் கட்டி அணைத்துத் தழுவி நொந்த மனமுடையவராய் வெதும்புவர். இந்த நரகத்தில், பிறனுடைய அழகிய மனைவியரைத் தமக்குள்ள செல்வம் செல்வாக்கு உடல்வலி அதிகாரம் முதலியவைகளைக் கொண்டு வலிந்து தழுவிய நீங்காக் கொடியோர் இவர்.

தழல் தூணங்கள் - நெருப்புத் தூண்கள்.

உதுபதி னேரா வதுமிகக் கொடிய துரைப்பர்துச் சகப்பெய ரிதனுள்
முதுதழ லுருக்கு நீரய நீர்மு ழுத்துயர் வங்கநீர் வாயிற்
கதுமெனப் புகட்டக் கதறுவார் விசேட காலத்திற் பரருண வுண்டார்
மதுநுகர்ந் தவர்சூ தகத்தினுண் டவருண் மதிப்பரு மிழிஞரு
[ணுண்டார். 27

கு - ரை : துச்சகம் என்னும் இப்பதினேராவது நரகம் மிகக் கொடியது. இதனுள்ளே மிக்க பெருநெருப்பில் உருக்கப்பட்ட செம்புருக்கு நீர், இரும்புருக்கு நீர், துன்பமுழுவதும்தரும் ஈயக்குழம்பு இவைகளை விரைந்து வாயில் ஊற்றுவதால் மிகக் கதறும் இந்தப் பாவிகள் விசேட காலங்களில் பிறர் உணவுகளை உண்டவரும், கட்குடித்தவரும், ஆசூச காலத்தில் உண்டவரும், மிக இழிந்தாருடைய உணவை யுண்டவரும் ஆவார்.

கண்டபன் னிரண்டா வதுமிகக் கொடிது
கண்டக சம்விரு தப்பேர்
கொண்டதிந் நரகி னனியுடல் வெதும்பக்
கொப்புளெங் கணும்பரந் தேறத்
தண்டலி ருகம் வருத்திட வொதுங்கத்
தகுநிழல் சிறிதிலா தழிவார்
அண்டர்பற் பலருஞ் செறிதரு முடம்பின்
ஆக்களை வருத்திய கொடியோர். 28

கு - ரை: இப்போது காண்கின்ற பன்னிரண்டாவது நரகம் மிகக் கொடியது. இது கண்டக சம்விருதம் என்னும் பெயர் பூண்டது. இந்த நரகத்தில் பாவிகளுடைய உடம்பு மிக வருந்தக் கொப்புளங்கள் எங்கும் பரவியேற, நீங்காத தாகம் துன்புறுத்த, ஒதுங்குதற்குச் சிறுநிழலும் கிடையாது அழிவார். இவர், தேவர்களெல்லோரும் நெருங்கி வசிக்கும் உடம்பையுடைய பசுக்களை வருத்திய கொடிய பாவிகளாவார்.

கொப்புள் - கொப்புளம். தண்டல் இல் தாகம். அண்டர் - தேவர். தண்டல் இல் - நீங்காத. செறிதரு உடம்பின் ஆக்களை: ஆ - பசு.

செறியிது பதின்மூன் றுவது நாமஞ் சித்திர துந்துமி யென்பர்
மறிவரு மிதனுள் இடிமுழக் கெழுந்து வண்செவி குடைதரக் கவல்வார்
வெறிமிகு காம மயக்கமிக் கேறி விடர்புகல் கானமே கேட்டார்
பொறியில ரயலார் மனைவிய ரழகு புகன்றிடச் செவிகொடுத் தவரே. 29

கு - ரை: சித்திர துந்துமி என்பது பதின்மூன்றுவது நரகமாகிய இது ஆகும். இந்நரகத்திலே காதுகளைக் குடையும்படி இடி முழக்கம்செய்ய வருந்துவார். வெறிமிகுத்த காமமயக்கத்தால் காமிகளால் பாடப்படும் இராகத்தைக் கேட்டவரும், அறிவிழந்து அயலார் மனைவியரின் அழகுகளைச் சொல்லச் செவிகொடுத்துக் கேட்ட பாவியரும் இவர்களாம்.

மறிவு அரும் - மீளுதற்கரிய. கவல்வார் - கவலைகொள்வார். விடர் - காமமிகுத்தோர். கானம் - இசைப்பாட்டு.

அடுதொழிற் பதினு லாவதிந் நரக மறைபெயர் மிருதமா மிதனுட்
கொடுவரி வேங்கை யாதிபாய் தரக்கூ கூவொலி யெழுப்புபு கவல்வார்
தடுவரி யன்பிற் பிதிரர்தம் பொருட்டுத் தகச்சிரார்த் தம்புரி யாரும்
கெடுவஃது விரும்பிச் செயத்தகுங் கிரியை கெழுமுறச் செயாதபா வியரும்.

கு - ரை: வருத்தும் தொழிலையுடைய பதினான்காவதாகிய இந்த நரகம் மிருதம் என்று சொல்லப்படும். வரிப்புலிகள் முதலிய துட்ட விலங்குகள் பாயக் கூகூ என்று அலறி அழுவார் இப்பாவிகள். நீங்கற்கரிய அன்புடன் பிதிர்க்களின் பொருட்டுத் தகுதியாகச் சிரார்த்தம் செய்யாதவரும்,

விரும்பிச் செய்யவேண்டிய கிரியைகளைச் சிறப்பாகச் செய்யாத பாவியரும் இவராவார்.

நடு அரிய அன்பு - நடுத்தற்கரிய அன்பு. பிதிரராவார் படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி என்பர் பரிமேலழகர்.

ஈங்கிது பதினைந் தாவதா நரக மியம்புவர் கருத்தம மெனும்பேர்
தீங்குசெ யிதனு ளழுந்துபு கிருமி தின்றுசெந் நீர்குடித் தழுவார்
தாங்குத லிலரா யடைந்திறந் தார்க்குத் தகப்புரி கடன்புரி யாரும்
ஓங்குவண் செல்வ முற்றுமோ ருதவி யுஞற்றல்கண் டுஞற்றிடா
[தோரும். 31

கு - ரை : இங்கே காணப்படும் இந்த நரகம் பதினைந்தாவதாகும். இது கருத்தமம் எனப் பெயர்பெறும். துன்பத்தைச் செய்யும் இந்த நரகத்தில் அழுந்தி, கிருமிகள் தின்று குருதியைக் குடித்தலால் அழுவார்; கிருமிகளைப் புசித்துக் குருதியைக் குடித்தலால் எனினும் பொருந்தும். ஆதரிப்பாரின்றி அடைந்து இறந்தவர்கட்குத் தக்க அந்திமக் கடன்களைச் செய்யாதவரும், மிகப் பெருஞ் செல்வமுடையராய் இருந்தும் உதவிகளொன்றும் செய்யாதவருமாகிய பாவிகள் இங்கே வருந்துவர்.

அழுந்துபு - அழுந்தி. செந்நீர் - இரத்தம். தாங்குதல் - ஆதரித்தல். புரிகடன் - செய்யுங்கடன்கள். உஞற்றல் - செய்தல்.

கேடுசெய் பதினா றாவது கீல
கிலப்பெயர் பூண்டதா லிதுகாண்
பாடுசெய் யிதனுட் சூறைவந் தடிக்கப்
பறந்துமண் மாரிமேற் பொழிய
நீடுசெய் தழன்மற் றடியுற வெதுப்ப
நெடுந்துய ரடைந்துளங் கவல்வார்
ஈடுசெய் மறையோ ராதிநால் வருக்கு
மியற்றிய துரோகவெங் கொடியோர். 32

கு - ரை : துன்புறுத்தும் இப்பதினாறாவது நரகம் கீலகிலம் என்பதாம். துன்பத்தைச் செய்யும் இந்நரகத்தில் சூறைக்காற்று அடிக்கப் பறந்தும், மண்மாரி மேலே பொழிய, மிக்க நெருப்புக் கீழே நன்றாக வெதுப்பப் பெருந் துக்கமடைந்து மனங்கவல்வார். இப்பாவிகள், மிக்க அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நாற்பெரு வருணத்தார்க்கும் துரோகமியற்றிய கொடியவராவார்.

பாடு - துன்பம். சூறை - சூறாவளி. தழல் - தீ.

தழல்படு பதினே ழாவது நிசித சத்திர மெனும்பெயர் பூண்ட
வுழல்படு மிதனுட் படர்கதை தாக்க வுள்ளுடைந் தொய்யென வலறிக்
கழல்படு விழிய ராய்க்கழி தருவார் கருதுறு விரதநன் னுளிற்
சுழல்படு மனத்த ராயகை தொழித்துந் துடிப்பனுத் துணையுமெய்
[தாதார். 33

கு-ரை: தீ மிக்க நிசித சத்திரம் என்னும் பெயருடைய பதினே ழாவது நரகத்தினுள்ளே கதாயுதத்தால் தாக்க விரைந்து அலறிப் பிதுங்கிய விழியுடையராய்ப் பாவிகள் துன்புறுவர். இந்தப் பாவிகள் விரதநாளிலே மனம் சுழன்று திரிந்து விரதத்தைக் கைவிட்டவராய் அதனல் மனம் துடி துடித்து வருந்தாதோராவார்.

உழல்படும் - வருந்தும். ஓய்யென - விரைவாக. கழல்படு விழி - பிதுங்கும் கண்கள்.

கறையமை பதினெட் டாவது தத்தாங்
காரமென் றுரைசெயும் பெயர
தறைசெயு மிதனுட் டழல்படு வெந்நீர்
அழுந்திமே லெழுந்தொறுங் கதறி
நிறைகொடுந் துயர்பூண் டுடலம்வெந் தழியு
நீர்மையார் சிவனடி யவரை
மிறைமிகப் படுத்திப் பொய்ச்சம யத்து
வீழ்த்திய தீயவெங் கொடியோர். 34

கு-ரை: குற்றம்பொருந்திய பதினெட்டாவது தத்தாங்காரம் என்று சொல்லப்படும் நரகமாம். சொல்லப்படும் இதனுள்ளே நெருப்பிலிட்டுக் காய்ச்சப்பட்ட வெந்நீரிலே அழுந்தி மேலே எழும்புந்தோறும் கதறி யழுது மிக்க கொடுந்துன்பத்தையடைந்து உடல்வெந்து அழியும் தன்மையுடை யார் ஆகிய இப்பாவிகள் சிவனடியவரை, பொய்யை மிகப்படுத்திப் பொய்ச் சமயத்தில் வீழ்த்திய மிக்க கொடியோராவார்.

கறை - குற்றம். அறை செயும் - சொல்லப்படும். நீர்மை - தன்மை. மிறை - பொய், குற்றம்.

கூடிய பத்தொன் பதாவதா நிரயங் கூடசான் மலியெனும் பெயரின்
ஓடிய திதனு ளழலிடை வெதுப்ப லுற்றவாள் கொண்டுநா வரிந்து
நீடிய கதையா லெயிறெலாந் தகர்ப்ப நிலைகுலைந் தையகோ வென்பார்
பாடிய தெய்வ மில்லையென் றிகழ்ந்த பதகர்மற் றவரொடும் பயின்றோர்.

கு-ரை: இந்தப் பத்தொன்பதாவது நரகம் கூட சான்மலி என்னும் பெயருடையது. இதனுள்ளே நெருப்பிலே காய்ச்சப்பட்ட வாட்படையால் நாவை அரிந்து, பெரிய கதையால் பற்களெல்லாம் உதிர்த்தலால் நிலை குலைந்து ஐயகோ என்று ஓலமிடுவார். இந்தப் பாவிகளே தெய்வமில்லை

யென்று இகழ்ந்து திரிந்தவரும், அந்தப் பாதகரோடு கூடித் திரிந்தோரு மாவார்.

அழல் - நெருப்பு. தகர்ப்ப - உதிர்க்க. நிலை குலைந்து - தடுமாறி. பதகர் - பாவிகள்.

நெடுந்திற லிருப தாவதென் றுரைக்கும்
நிம்மனை னதப்பெயர் நரகம்
அடுந்தழ லிதனு ளடிப்பெருவிரல்சேர்த்
தசைத்துமேன் முடக்கிரும் பேற்றிக்
கொடுந்தழ லடியில் வளர்த்திட வெதும்பிக்
குலைகுலைந் தழிதரு கயவர்
கடுந்தழ னயனத் திறைவனு லயத்துட்
கருதரு மனுசிதஞ் செய்தார். 36

கு - ரை : மிக்க வலிய இருபதாவது நிம்மனைனதம் என்னும் பெயருடைய நரகமாம். நிறைந்த நெருப்பிலே காற்பெருவிரலைச் சேர்த்துக்கட்டி, மேலே வளைந்த இரும்பை ஏற்றி, கொடுந்தழலை அடியில் வளர்க்க வெதும்பிக் குலை குலைந்து அழிதரும் இப்பாவிகள் சிவபெருமான் திருக்கோயிலின் உள்ளே நினைத்தற்கு முடியாத அநுசிதம் செய்தோராம்.

நெடுந்திறல் - மிக்க வலிமை. அசைத்து - கட்டி. முடக்கு இரும்பு - வளைந்த இரும்பு. கயவர் - கீழோர். தழல் நயனத்து இறைவன் - சிவபெருமான்.

வேறு

இன்னமும் பல்ல வுள்ள தனித்தனி யியம்பப் புக்காற்
பன்னரி தாகு நாளும் பலசெலுஞ் சூழ்ந்து நோக்கித்
தன்னமு மொழியா வண்ண முணரென்றுன் சாற்றப் புக்கான்
அன்னவ னன்ன வாறே சூழ்ந்தன னனைத்துந் தேர்ந்து. 37

கு - ரை : இன்னமும் பலவகை நரகங்கள் உள்ளன. தனித்தனியே சொல்லத் தொடங்கின் சொல்லுதற்கரிதாம். நாளும் பல செல்லும். சூழ்ந்து - ஆராய்ந்து, சுற்றி. தன்னமும் - சிறிதும். உணர் - உணர்வாயாக: வியங்கோள். சாற்றப்புக்கான் - சொல்லப்புகுந்த இயமதூதன். அன்னவன் - தனதத்தன். அனைத்தும் தேர்ந்து - முழுதும் தெளிந்து.

நடுவன்முன் வந்து தாழ்ந்தா னரகபே தங்க ளெல்லாம்
விடுதிற மின்றித் தேர்ந்தாய் கொல்லென வினுத லோடுங்
கடுவலி யுடையா யெல்லாங் கண்வெதுப் பேறக் கண்டேன்
வடுவமை யிவைசா ராமே வயங்குதற் குபாய முண்டோ. 38

கு - ரை : நடுவன் - இயமதருமன். நரகபேதம் - நரக வகைகள். விடுதிறமின்றி - விட்டு விடாமல். கண் வெதுப்பு ஏற - கண்களில் வெப்ப முண்டாக. வடு - குற்றம். சாராமே - பொருந்தாமல். வயங்குதற்கு - விளங்கு தற்கு.

உள்ளதை யுரைத்தா யென்னி லுய்குவ னடியே னென்றுந்
தள்ளருஞ் சிவமெய்ஞ் ஞானந் தடையற வடைவ தொன்று
விள்ளருஞ் சிவனைப் பூசை விருப்பினுற் றிடுத லொன்று
கள்ளமி லவன்றாள் சார்ந்தார்க் கலந்திறைஞ் சிடுத லொன்று. 39

கு - ரை : உள்ளதை - உண்மையை. உய்குவன் - பிழைப்பேன். தள்ள அரும். சிவமெய்ஞ்ஞானம் - சிவஞானம் என்றது உண்மைச் சிவ ஞானத்தை. விள்ள அரும் - நீங்குதற்கரிய. சிவபூசை செய்தல். கள்ளம் இல் - வஞ்சனையில்லாத. அவன் தாள் சார்ந்தார்க் கலந்து - சிவபெருமான் திருவடியை அகலாது நெஞ்சிலிருத்திய மெய்யடியாரோடு கலந்து. இறைஞ் சிடுதல் - வணங்குதல்.

இன்னவை யரிய வென்னி லுலகமீ ரேழு மேத்துங்
கன்னவின் மதில்சூழ் நாகைக் காரோணத் தைங்கு ரோச
முன்னரும் விதிமேற் கொண்டு முயலுபு சூழ்த லொன்று
பின்னர்வே றில்லை யென்னுப் பேசுபு விடுத்தா னன்றே. 40

கு - ரை : அரிய - அருமையுடையன. கல் நவில் மதில் - கல்லாற் செய்த மதில். காரோணத்து ஐங்குரோசம் - நாகைக் காரோண தலத்தின் ஐங்குரோச எல்லை அளவும் சூழ்தல். உன்னரும்-நினைத்தற்கரிய. முயலுபு - முயன்று. சூழ்தல் - வலம் வருதல். பேசுபு - பேசி. விடுத்தான் - இயமன் தன் உலகத்தினின்று தனதத்தனைப் போகவிடுத்தான்.

விடுத்தலுந் தன்னூர் வந்து விட்டதோ ருடம்பிற் புக்குப்
படுத்தவ னெழுந்தாற் போல வெழுந்தனன் பசும்*பொற் றத்தன்
அடுத்ததாய் தந்தை நோக்கி யதிசய மடைந்து வாரி
யுடுத்தபே ருலகின் மைந்தற் கொப்பிலை யென்று வந்தார். 41

கு - ரை : விடுத்தலும் - இயமலோகத்தினின்று விடுவித்தவுடன். தன் ஊர் - உச்சயினிமாகாள நகரம். உடம்பிற்புக்கு எழுந்தான். பசும்பொற் றத்தன் - தனதத்தன். வாரி - கடல். மைந்தற்கு - தம் மகனுக்கு.

மொழிதவ வாம தேவ முனியருள் வரத்தி னானும்
பொழியருண் மாகா ளேசன் பூசனைப் பயத்தி னானுங்
கழிசின நமனூர் புக்குங் காதலன் மீண்டா னென்று
செழியுவ கையரா யாங்கு நிகழ்ந்தமை தெரியக் கேட்டார். 42

* பொற்றத்தன் - தனதத்தன்.

கு - ரை : வாமதேவர் வரத்தினுலும், மாகாளேசுரர் பூசனைப் பயனு லும் இயமன் நகரத்தினின்று மகன் மீண்டுவந்தான் என்று மகிழ்வுடையவ ராய்த் தாய் தந்தையர் அங்கு நடந்த செயல்களைக் கேட்டார்கள்.

கழிசினம் - மிக்க கோபம். காதலன் - புத்திரன். மீண்டான் - திரும்பி வந்தான்; "கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை" ஆதலின் தாய் தந்தையர் உவந்தார்.

இருமுது குரவர் கேட்ப வியமனூர் புக்க வாறும்
பெருமுனி தனக்க ளித்த பெருவர முரைத்த வாறும்
ஒருபரன் வரமென் றுள்ளத் துணர்ந்தவன் விடுத்த வாறும்
வெருவுசெய் நரக பேதங் கண்ணுற விழைந்த வாறும். 43

கு - ரை : இருமுது குரவர் - தாய்தந்தையர். பெருமுனி - வாமதேவ முனிவர். ஒரு பரன் வரம் - ஒப்பற்ற சிவபெருமான் திருவருள் ஆணை. அவன் இயமராசன். வெருவு செய் - அச்சஞ்செய்யும். கண்ணுற - காண. விழைந்தவாறும் - விரும்பியபடியும்.

தமனொரு வனைச்செ லுத்தித் தெரித்திடச் சமைத்த வாறும்
நமனரு டாங்கி யன்னு னரகெலாந் தெரித்த வாறுங்
*குமனுயி ரழுங்கல் யாவுங் குறிக்கொடு கண்ட வாறுஞ்
சமனடி வணங்கித் தீர்வு சாற்றென விரந்த வாறும். 44

கு - ரை : தமன் - தம்மவன்; இயமதூதன். செலுத்தி-கூட அனுப்பி. தெரித்திட - தெரிவிக்கும்படி. கு மன் உயிர் - உலகின் மன்னிய உயிர்த் தொகுதிகள். 'கு மன் - உலகின் மன்னிய' என்பது முற்பதிப்பின் அடிக் குறிப்பு. 'பொற்றத்தன் - தனதத்தன்' என்றதும் அப்பதிப்பின் அடிக்குறிப் பில் கண்டதே. அழுங்கல் - வருந்துதல். சமன் - இயமன். தீர்வு - கழுவாய், பிராயச்சித்தம்.

ஞானமுன் மூன்றுங் கூறி நாகைக்கா ரோண மெய்தி
ஈனமி லிங்கு ரோச வெல்லையை யன்பிற் சூழ்தல்
ஆனதே நரக மெல்லா மகற்றுமென் றுரைத்த வாறும்
ஊனமொன் றுருமற் சொற்று னுயர்தன தத்த னென்பான். 45

கு - ரை : ஞானம் முன் மூன்றும் - சிவமெய்ஞ்ஞானம், சிவபூசை, சிவனடியாரோடு கலந்திருந்து வணங்குதல் முதலிய மூன்றும். ஈனம் இல் - குற்றமில்லாத. அன்பிற் சூழ்தல் - அன்பினோடு வலம் வருதல். ஆனதே - ஆகிய இவைகளே. ஊனம் - குறைவு.

*குமன்: கு மன் - உலகின் மன்னிய.

விருப்பொடு கேட்ட விண்டு தத்தனும் விரைந்து சென்று
கருப்புவிற் காளை நாணுங் கட்டழ குடையான் மேருப்
பொருப்புநேர் புயத்தான் காவல் பூண்டுமா நிலம்பு ரப்பான்
அருப்புமா நலத்தோ னய வரசகே சரிக்குச் சொற்றான். 46

கு - ரை: விண்டுதத்தன் தனதத்தன் தந்தை. கருப்புவிற் காளை - மன்மதன்; கரும்பு=கருப்பு: வலித்தல். மேருப்பொருப்பு - மேருமலை.

அடுகளிற் றண்ண லாய வரசகே சரியி றும்பூ
தொடுதன தத்தன் றன்னை வரவழைத் துவகை செய்து
கொடுநம னூர்புக் கிங்குக் குறுகிய வளவு மொன்றும்
விடுதலி லாது கேட்டு விம்மித மேன்மேற் கொண்டான். 47

கு - ரை: களிற்று அண்ணல் - யானைச் சேனையையுடைய அரசன். இறும்பூது - ஆச்சரியம். விம்மிதம் - பெருமிதம், பூரிப்பு.

அத்தன தத்த னோடு மவன்பெருஞ் சுற்றத் தோடும்
‡ வித்தநன் கமையக் கொண்டு மிடைந்ததன் கடும்பி னோடுங்
குத்தன தென்று காக்குங் கோமகன் விரைந்தெ ழுந்து
முத்தன்மா காள நாதன் முளரியஞ் சரணந் தாழ்ந்து. 48

கு - ரை: அத்தனதத்தன் - இயமனூர் புக்கு மீண்ட அத்தனதத்தன். வித்தம் நன்கு அமைய - பொன் வேண்டுமளவு மிகுதியாக: வித்தம் - பொன். மிடைந்த - நெருங்கிய. கடும்பு - சுற்றம். கு - பூமி.' கோமகன் - அரசன். மாகாளநாதன் - சிவபெருமான். முளரி - தாமரை.

விடையுடை யனைய பெம்மான் விடைகொடுத் தருளப் பெற்று
மிடைபெருங் காடு நாடும் வெற்புமெண் ணிலக டந்தே
அடையலர் மருமம் போழா வாவிவாய் மடுக்கும் வேலான்
கடையினும் பொலியு நாகைக் காரோண நகர்வந் துற்றான். 49

கு - ரை: விடையுடை - இடப வாகனத்தையுடைய. விடை - அநுமதி. மிடை - நெருங்கிய. அடையலர் - பகைவர். மருமம் - மார்பு. ஆவிவாய் மடுக்கும் - உயிரைக் குடிக்கும். கடையினும் - ஊழிக்காலத்தினும். கடை இ(ன்)னும் பொலியும் என்றது நயம்.

புண்ணியம் பயக்குந் தேவ தீர்த்தத்துப் போந்து மூழ்கி
கண்ணிய நீறு பூசிக் கண்மணித் தொடையும் பூண்டு
தண்ணிய பதமைந் தெண்ணித் தவலருஞ் செம்பொற் கோயில்
அண்ணிய சிகரி புக்கா னனைவரு நிழலிற் போத. 50

---

‡ வித்தம் - பொன்.

கு - ரை : தேவதீர்த்தத்தில் முழுகி, திருநீறுபூசி, உருத்திராக்கமணி அணிந்து, திருவைந்தெழுத்தைக் கணித்துக்கொண்டு. சிகரி - கோபுரம். நிழலிற் போத - நிழல்போல் தொடர்ந்துவர.

பரவருள் கொழிக்கு நாகா பரணமால் களிற்றைத் தாழ்ந்து
புரவுசெய் தருள்கா ரோணப் புண்ணியப் பெருமான் முன்போய்
விரவுமன் பெழுந்து பொங்க மெய்ம்மயிர் சிலிர்ப்பப் போற்றி
உரவுகொள் வேந்தர் வேந்தன் விடங்கர்மு னுற்று னன்றே. 51

கு - ரை : பரவ அருள் கொழிக்கும். நாகாபரண மால் களிறு - நாகாபரண விநாயகக்கடவுள். காயாரோகண நாதர். பொங்க - மிக. உரவு - வலிமை. வேந்தர் வேந்தன் - அரசகேசரி. விடங்கர் - சுந்தரவிடங்கராகிய சோமாஸ்கந்தர்.

மண்ணகங் களிப்ப மேய சுந்தர விடங்க வள்ளல்
கண்ணகன் மலர்த்தாள் போற்றிக் கருந்தடங் கண்ணு ளாய
பெண்ணணங் கரசி தாளும் பெட்புறப் பணிந்து மற்றை
அண்ணலம் பொருவி றேவர் யாரையு மணைந்து போற்றி. 52

கு - ரை : மேய - மேவிய. பெண் அணங்கு அரசி - பெண்களுக்குள் சிறந்தவள்; உமாதேவியார். பெட்பு உற - விருப்பம் மிக. பொரு இல் தேவர் யாரையும் என்றது காயாரோகணநாதரையன்றி ஏனைய சிவலிங்கமூர்த்திகளையும் என்க; பரிவார தேவர்களையும் எனினுமாம்.

சுற்றுறை தலங்க ளெல்லா மொவ்வொன்றுத் தொழுது வந்து
நற்றுறை போகு மன்ன னுகமா நகர நாப்பண்
உற்றுறை விருப்ப மேவ வொளிகிளர் தனக்குந் தன்பாற்
பற்றுறை மற்று ளோர்க்கு மாளிகை பலச மைத்தான். 53

கு - ரை : சுற்றுறை தலங்கள் எல்லாம் - அமுத கடேசம், அமரரேந்திரேசம், மேலைக்காரோணம், அகத்தீசம், நடுத்தலேசம் முதலிய தலங்கள் முழுதும். நாகமா நகரம் - நாகபட்டினம். தனக்கும், தன்பால் பற்றுள்ள ஏனையோருக்கும் பல மாளிகைகள் கட்டுவித்தான்.

அவரவர் தகுதிக் கேற்ப வணிகிளர் மாட நல்கித்
தவலருந் திருவத் தோடு தழைதர வமைத்த பின்னர்
உவமையி ருனோர் மாடங் குடிபுகுந் தொருகோ லோச்சிப்
புவனமுற் றினிதி னுண்டான் புரவல சிங்க நாமன். 54

கு - ரை : அவரவர் தகுதிக்கேற்ப அழகிய மாளிகைகளைக் கொடுத்து. ஒரு கோல் ஓச்சி - ஒப்பற்ற செங்கோல் செலுத்தி. புவனம் - உலகம். புரவல சிங்கநாமன் - அரசகேசரி என்பவன்.

ஆலயம் பெருகச் செய்து மணிவிழாப் பெருகச் செய்தும்
மாலயற் கரியான் பூசை வரவரப் பெருகச் செய்துஞ்
சோலையுஞ் செறுவு மற்றத் துடவையும் பெருகச் செய்துங்
காலையு மாலைப் போதுங் கைகுவித் திறைஞ்சு வானால். 55

கு - ரை : ஆலயத்தைப்பெருக்கியும், விழாக்களைச் சிறப்புற நடாத்தியும், சிவபூசையை வரவர அதிகமாகச்செய்தும். சோலையும் வயலும் தோட்டமும் மிகுதியாக்கியும். செறு-வயல். துடவை - தோட்டம். காலை மாலைகளில் தரிசனம் செய்தும்.

தினவிழாக் கண்டும் பக்கத் திருவிழாத் தெரிந்து மாதக்
கனவிழாப் பார்த்தும் வேனிற் கமழ்விழா நோக்கஞ் செய்தும்
இனவிழா வுள்ள வெல்லா மியற்றிட நாட்டம் வைத்துந்
தனவிழா வென்றி யாருஞ் சாற்றிடச் சிறப்பிப் பானால். 56

கு - ரை : தினவிழா, பக்கவிழா, மாதவிழா, வேனில்விழா முதலிய விழாக்களைத் தரிசித்தும், விழாக்களையெல்லாம் தானே செய்வித்தும் செல்வ விழா என்று யாவரும் சிறப்பித்துச் சொல்லுமாறு செய்விப்பானானன். தன விழா - செல்வ விழா.

சுந்தர விடங்கப் பெம்மான் ஞெழத்தகு பவனி கண்டும்
அந்தர மருங்கு லெங்க ளருட்கருந் தடங்க ணம்மை
வந்தர மடவார் போற்ற வருவிழாச் சிறப்புக் கண்டும்
மந்தரம் பொருவுந் தோளான் மகிழ்ச்சியாம் புணரி மூழ்கும். 57

கு - ரை : சுந்தரவிடங்கருடைய திருவுலாவைத் தரிசித்தும். அந்தரம் மருங்குல் - ஆகாயம் போலும் இடையையுடைய. அரமடவார் - தெய்வ மகளிர். மந்தரம் பொருவும் - மந்தர மலையையொத்த. மகிழ்ச்சியாம் புணரி - ஆனந்தசாகரம்: புணரி - கடல்.

சிலபகல் சுதைக்க டேசச் செம்மலார் விழவு காண்பான்
சிலபகல் நடுத்த லேசத் தேவனார் விழவு காண்பான்
சிலபகல் விண்டு நாதச் செல்வனார் விழவு காண்பான்
சிலபக லகத்தீ சஞ்சார் செம்மையார் விழவு காண்பான். 58

கு - ரை: அமுதகடேசர், நடுத்தலேசர், விண்டுநாதர், அகத்தீசர் முதலிய மூர்த்திகளின் திருவிழாக்களைச் சில சில நாட்கள் தரிசித்தும்.

வளர்கயி லாய நாதர் மாண்புசால் விழவு கண்டும்
கிளர்பெருஞ் சட்டை நாதர் கிளப்பரும் விழவு கண்டும்
உளரளிப் பசுந்து ழாய்பூண் சுந்தர ராச வும்பன்
தளர்வரும் விழவு கண்டுந் தனித்தனி யுளங்க ளிப்பான். 59

கு - ரை: கயிலாயநாதர், சட்டைநாதர், சவுந்தரராசப் பெருமாள் முதலிய மூர்த்திகளின் விழாக்களையெல்லாம் தனித்தனியே தரிசித்து மன மகிழ்ச்சி கொண்டான்.

இன்னணங் களிப்போ னானித் திங்களி னியைவி சேடத்(து)
என்னரு மைங்கு ரோச மினிதுறச் சூழ்வ தோர்ந்து
தன்னமர் களிப்பு மேவத் தானுஞ்சூழ்ந் துறுநாள் வாழ்ந்து
பின்னரெம் பெருமான் பாதம் பிணைந்தின்பந் துய்த்தா னன்றே.

கு - ரை: இப்படி மகிழ்ச்சியோடு தரிசிப்பவன் ஆனி மாதத்திலே விசேடகாலத்தில் எப்படிப்பட்டவரும் ஐங்குரோச எல்லையினை வலம் வருதலை எண்ணி, மகிழ்ந்து தானும் அவ்வாறு வலம்வந்து தரிசித்து வாழ்ந்திருந்து பின்பு சிவபெருமானது திருவடியைச் சேர்ந்து இன்பந்துய்த்தான்.

அனையவ னிழற்போற் பின்ன ரடைதன தத்த னாதி
எனையரு மைங்கு ரோசத் தெல்லையை விருப்பிற் சூழ்ந்தார்
புனைதன தத்த னன்னான் போலின்ப முத்தி பெற்றான்
வினையறு பலருந் தத்தந் தகுதியின் மேவி னாரால். 61

கு - ரை: அனையவன் - அரசகேசரி. எனையரும் - எல்லோரும். சூழ்ந்தார் - வலம் வந்தனர். அன்னான்போல் - அரசகேசரியைப்போல. தனதத்தன் முத்திபெற்றான். வினை அறு பலரும் - நல்வினை தீவினைகளின் தொடக்கற்ற பலரும். அவரவர் தகுதிக்குத் தக்க பதமுத்திகளைப் பெற்றனர்.

குடமதி வருபின் பக்கங் கூடிய சதுர்த்த சிக்கண்
இடர்தப வருமி ராவிற் காரோண விலிங்கத் திற்குப்
படருமா யிரவா னெவ்வோர் படிதரு பால்கொண் டாட்டிச்
சுடர்விடு பாலிற் கேற்ப மற்றவுந் துலங்க வாட்டி. 62

கு - ரை: குடமதி=கும்பமாதம் - மாசித்திங்கள். பின்பக்கம் - அபர பக்கம். வரும் இரா - சிவராத்திரி. காரோணநாதருக்கு ஆயிரம் பசுக்களின் பால் ஒவ்வொரு படிகொண்டு அபிஷேகம்பண்ணி, பாலின் அளவுக்குத் தக்கபடி ஏனைய அபிஷேகப் பொருள்களாலும் அபிஷேகித்து.

ஆட்டுதற் கியைய வூட்டி யன்பினு ராதிப் பாரேல்
நீட்டுசெஞ் சடையான் மேனி நிலாவுபுண் டரீகன் சேரக்
கூட்டுவண் கோலங் காணக் கொடுத்தரு ளுவன்மா காட்சி
நாட்டுமிக் காட்சி வான நாடர்க்கு மரிய தாமால். 63

கு - ரை: அபிஷேகம் செய்தமைக்குப் பொருந்த அன்பினால் நிவேதனங்களையும் செய்வாராயின் சிவபெருமான் திருமேனியில் புண்டரீக

முனிவர் கலந்த காட்சியை அளித்தருளுவர். இந்தக்காட்சி விண்ணோருக்கும் அரிதாம்.

ஆட்டுதற்கு - அபிஷேகம் செய்வதற்கு. ஊட்டி - உண்பித்து, நிவேதனம்செய்து. வண்கோலம், வளப்பம் பொருந்திய அழகு. வானநாடர் - தேவர்கள்.

தூயவா லிரண்டைஞ் ஞூறு சுரந்தபா லுரைத்த வாறே
நேயமா யாட்டி யூட்டி நிலாவுமிக் காட்சி காண்டற்
காயபே ரவன்று ணீழ லடைவரென் றுரைப்ப தென்னே
பாயவான் முத்தி யன்னோர் படிவமென் றுரைப்ப தன்றி. 64

கு - ரை: தூய ஆன் இரண்டு ஐஞ்ஞூறு - சுத்தமான பசுக்கள் ஆயிரம். காட்சி காண்டற்கு ஆய பேர். பாய - பரவிய. வான் முத்தி - சிறந்த முத்தி.

சிவநிசி யாம நான்குஞ் சிறந்தகா ரோண லிங்கந்
தவமிக விழித்துப் போற்றித் தரிசிக்கும் பெருமை யாளர்
அவமற பிறத லத்தி ணுயிர நிசிகண் டேத்தும்
நவமிகு பேற்றை யன்றே யடைவரே னவில்வ தென்னே. 65

கு - ரை: சிவநிசி யாமம் நான்கும் - சிவராத்திரி நான்கு யாமமும். தவ மிக விழித்து. அவம் அற - வீண் காரியங்களின் நீங்க. ஆயிரம் நிசி - ஆயிரம் சிவராத்திரி காலம். நவம் மிகு பேற்றை - புதுமை மிக்க பயனை. நவில்வது என்.

மதிதொறும் வருபின் பக்கத் தட்டமி வருவ தோர்ந்து
துதிபெறு தூய வானெய் துரிசற வாட்டு வாரேற்
பதியவர் கிளைக ளோடும் பன்னெடுங் கற்ப காலந்
திதியமை சிவலோ கத்துச் சேர்ந்துவாழ்ந் திருப்ப ரன்றே. 66

கு - ரை: மாதங்கள்தோறும் வரும் அபர பக்கத்து அட்டமியில் தூய பசுவின் நெய்யால் அபிஷேகம் செய்வாராயின் அவர் சுற்றத்தாரோடும் மிகப் பல கற்பங்கள் சிவலோகத்தைச் சேர்ந்து வாழ்ந்திருப்பர்.

மதுவழிந் தொழுகு மிந்தீ வரமல ராயி ரத்தாற்
புதுநறுந் தொடையல் கட்டிப் புண்ணிய விடங்கப் புத்தேள்
விதுமுடிக் கணிவ ராயின் வேண்டிய போகந் துய்த்துப்
பதுமனு நறுமு றுக்கப் படர்ந்துபே ரின்பந் துய்ப்பார். 67

கு - ரை: இந்தீவரம் - நீலோற்பலம், கருநெய்தல். தொடையல் - மாலை. விடங்கப்புத்தேள் - சுந்தரவிடங்கர். விது முடி - சந்திரனைச் சூடிய திருமுடியில். பதுமன் - பிரமதேவர். நறுமுறுக்க - பொறாமைகொள்ள. படர்ந்து - சென்று.

திருவளம் பொலிபன் மூன்றுந் திதியெனும் பிரதோ டத்திற்
பொருவரு மாயி ரம்பேர் புகன்றுகா ரோண லிங்கத்
தொருவற வருச்சித் தேத்து முத்தமர் சனனந் தோறும்
வெருவறப் புரிந்த பாவ மனைத்திற்கும் விடைகொடுத்தோர். 68

கு - ரை: பதின்மூன்றும் திதியாகிய பிரதோடகாலத்தில். ஆயிரம் பேர் - சகத்திரநாமம். காரோண லிங்கத்துக்கு அருச்சனை புரிவோர் பிறவிகள் தோறும் அஞ்சும்படி செய்துவந்த பாவங்களினின்று நீங்குவர். ஒருவு அற - நீங்காமல். வெருவு அற - அச்சங்கள் நீங்க.

பொருள்பெற வேண்டி னாலும் புத்திரர் வேண்டி னாலும்
மருள்தபு கல்வி ஞானம் வயங்குற வேண்டி னாலுந்
தெருண்மலி யெவைக்கு மேலாஞ் சிவபதம் வேண்டி னாலும்
இருடவிர் தளிக்கா ரோணத் தெல்லையைங் குரோசஞ் சூழ்வார். 69

கு - ரை: பொருள், புத்திரர், கல்வி, ஞானம், சிவபதம் முதலியவற்றைப் பெறவேண்டினோர் காரோணக்கோயிலின் ஐங்குரோச எல்லையை வலம் வருவர். மருள் தபு - அறியாமை கெடும். வயங்குற - விளங்க. தெருள் மலி - தெளிவு மிகுந்த. இருள் தவிர் - இருட்டு நீங்கிய. தளி - கோயில்.

இமையவர் தொழுகா ரோணத் தெல்லையைங் குரோசத் துள்ளும்
அமைமண லெலாமி லிங்க மளாயநீ ரெல்லாந் தீர்த்தங்
கமையுறு தவத்தின் மிக்கோர் காதலிற் பயில்வா ரெல்லாம்
உமையொரு பாகர் மேவத் தலத்தின்சீ ருரைப்ப தென்னே. 70

கு - ரை: இமையவர் - தேவர். மணல் எல்லாம் இலிங்கமாகப் பொருந்துவன. நீரெல்லாம் தீர்த்தமேயாம். கமை - பொறுமை. மேவு அ தலத்தின் சீர்.

கற்பக நாடு போற்றுங் காரோண நகர மேவி
அற்பக னகலாக் கேள்வி யரசகே சரிமுன் னானோர்
பொற்பமை வீடு சேர்ந்த புண்ணியஞ் சொற்று முத்தி
சொற்பயில் புகழ்சால் சாலி சுகனுற்ற வாறுஞ் சொல்வாம். 71

கு - ரை: கற்பகநாடு - தேவருலகம். அற்பு அகன் அகலா - அன்பு மனத்தின் நீங்காத; அன்பு=அற்பு: வலித்தல். அகம்=அகன்: இறுதிப் போலி. முன் ஆனோர் - முதலாகவுள்ளோர். சொற்றும் - சொன்னோம்.

அரசகேசரி முதலியோர் முத்தியடைந்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1736

முப்பதாவது

சாலீசுகன் முத்திபெற்றபடலம்

காஞர் மலர்செறி நைமிச மேவுங் கனிதவத்தோர்
ஆஞர் வண்சூத முனிவரன் செம்பொ னடிவணங்கி
ஊஞர் நசையொழி சாலீ சுகன்முத்தி யுற்றகதைத்
தேஞர் தரப்புக லென்னவம் மாமுனி செப்புவனே. 1

கு - ரை : கான் ஆர் மலர்; கான் - வாசனே. ஊன் ஆர் நசை - உடம்பிலுள்ள ஆசை. தேன் ஆர்தர - இனிமை பொருந்த.

காமரு நாக மடந்தையை வேட்டபின் காரளிசூழ்
பூமரு மாலையன் சாலீ சுகன்புகழ்ப் பூணுடையான்
ஏமரு வுங்க ணவளோடு நாகையி னெய்தியிருந்
தோமரு வும்பொரு ளாஞரைப் போற்ற லுவந்தனளே. 2

கு - ரை : நாகமடந்தை - நாககன்னி. வேட்டபின் - மணந்து கொண்ட பின்பு. கார் அளி - கரிய வண்டுகள். புகழ்ப்பூண் - புகழாபரணம். ஏ மருவும் கண் அவள்; ஏ - அம்பு. ஓம் மருவும் பொருள் ஆஞர் - பிரணவப் பொருளாகிய சிவபெருமான். பிரணவப்பொருள் இவரே என்று உணர்ந் துய்யும் பொருட்டே கொன்றை மலர் மாலையைச் சிவபெருமான் அணிந் தனர். கொன்றைமலர் பிரணவ புஷ்பம் என்று கூறப்படும். ஓம் - பிரண வம். ஆஞர் - இடபத்தையுடைய சிவன்.

வாகை யரசர் திறைநல்க வாங்கி மருவுமிடம்
நாகை யெனக்கொண்ட சாலீ சுகஞெரு நம்பெருமாற்
கோகை மருவ மதிலைந்து கோபுர மொள்ளொளிசால்
ஈகை யமைந்த விமானமும் யாவு மியற்றினனே. 3

கு - ரை : வாகை - வெற்றி. திறை - கப்பம். வாங்கி மருவும் இடம் - இராசதானி. ஐந்து மதில்கள், கோபுரம், விமானம் முதலியன இயற்று வித்தான்.

திருவா பரணம்பொன் ஞன்மணி யான்மிகச் செய்தளித்தும்
மருவா தரவிற் பரிவட்டம் பட்டின் மகிழ்ந்தளித்தும்
ஒருவாச் சிறப்பி னபிடேக மாதி யுறப்புரிந்தும்
வெருவா விறற்கழ லாளனன் பாற்றுதன் மிக்கனனே. 4

கு -ரை: பொன்னாலும் மணிகளாலும் செய்த திருவாபரணங்கள். மருவு ஆதரவின் - பொருந்துமன்பினால். பட்டுப் பரிவட்டங்கள், நீங்காத சிறப்பால் அபிஷேகம். வெருவா விறல் கழலாளன் - அஞ்சாத வலிமை பொருந்திய வீரக்கழலை அணிந்தவன்.

கார்த்திகைத் திங்கள் மதிவாரந் தோறுங் கனகத்திற்செய்
நார்த்தியிற் கூவிள மாயிர மாயிர மண்ணலருண்
மூர்த்திபொற் றாளி லருச்சித்தும் வேறு மொழிபிறவும்
பூர்த்தியி னேங்கப் புரிந்தான் றிறன்மைப் புரவலனே. 5

கு - ரை: கார்த்திகைமாதம் சோமவாரந்தோறும். கனகத்தில் - பொன்னால். ஆர்த்தியின் - விருப்பத்தால். கூவிளம் - வில்வம். புரவலன் - சாலிசுகன் என்னும் அரசன்.

அடியா ரெதிர்வரி னேர்விரைந் தேகி யடிதொழுது
கடியார் மலரிட்டு வேட்கை வினவிக் கசிந்துநிற்பான்
பொடியார்செம் மேனிப் பெருமான் புராணம் புகலுகின்ற
நெடியார் பலருமந் நின்மல னாக நினைபவனே. 6

கு - ரை: அடியார் பூசை. கடி - வாசனை. வேட்கை வினவி - வேண்டுவன யாவை என்று கேட்டு. பொடி ஆர் செம்மேனி; பொடி - விபூதி. புராணம் - சிவபுராணம். அந் நின்மலனாக - அந்தச் சிவபரம் பொருளே என்று.

இந்தத் திறத்தி னிவன்பயி னாளி லிவன்புணருங்
கந்தக் குழலி கருந்தடங் கண்ணி கருணைகொள்வாள்
முந்தச் சினகரம் பொன்னான் மணியான் முழுதுஞ்செய்து
சந்தக் குழம்பு முதலபி டேகந் தகச்செய்வளே. 7

கு - ரை: கந்தக்குழலி - சாலிசுகன் மனைவியாகிய நாககன்னி: அன்மொழித்தொகை. சினகரம் - கோயில். சந்தக்குழம்பு - சந்தனக்குழம்பு.

பிருகுவின் வாரந் தொறுமா யிரம்பெயர் பேசியுள்ளம்
உருகும் விதநறுஞ் செஞ்சாந் தருச்சித் துறவுவந்தும்
பெருகு நிவேதன மாதிய நாளும் பிறங்குவித்தும்
மருகுத றீரன்பு மேன்மேலும் பொங்க வவாவுவளே. 8

கு - ரை: பிருகுவின் வாரம் - குருவாரம். ஆயிரம் பெயர் - சகத்திர நாமம். பேசி - சொல்லி. உள்ளம் உருகும் விதம். மருகுதல் தீர் அன்பு.

பார்த்திவன் றேவி கருந்தடங் கண்ணரி பணிகளிவ்வா
ரூர்த்தியிற் செய்ய வணையா ளுவந்தின் னருள்சுரந்தாள்
சீர்த்தியின் மேவும் புரவல ளொஞ்சிற் றிகழுவகை
பூர்த்தியி னோங்கக் கருப்பமுற் றுளந்தப் பொற்கொடியே. 9

கு - ரை: பார்த்திவன் தேவி - சாலிசுகன் மனைவி. ஆர்த்தி= அருத்தி - விருப்பம். அனையாள் - கருந்தடங் கண்ணம்மை. பொற்கொடி கருப்பமுற்றுள்.

பொன்னங் கொடிபத்துத் திங்களு நீத்தோர் புதல்வற்பெற்றுள்
மன்னர் தமிற்பெருஞ் சாலீ சுகன்செம்பொன் மாரிபெய்து
மின்னங் கலருஞ் சடைமுடி யோற்கு விசேடமுற்றுந்
தன்னங் கழிந்து பிரபல மாகச் சமைத்தனனே. 10

கு - ரை: பத்துத் திங்களும் கழிந்து புதல்வனைப் பெற்றுள். செம்பொன் மாரி - பொன்மழை. மின் அங்கு அலரும் சடைமுடியோன் - சிவபெருமான். தன் அங்கு அழிந்து; தன் என்றது செருக்கை.

பிறையின் வளர்மகற் குத்தொண்டை மானெனும் பேர்புனைந்து
முறையிற் கலைக ளனைத்தும் பயிற்சி முதுக்குறைவாந்
துறையிற் புகக்கண் டகவையொ ரீரெட்டுத் துன்னியநாட்
கறையிற் றவிர்ந்த மணிநெடு மோலி கவித்தனனே. 11

கு - ரை: பிறையின் வளர் மகற்கு - பிறைச்சந்திரன்போல் வளர்ந்து வரும் புத்திரனுக்கு. தொண்டைமான் என்னும் பெயரிட்டு. முதுக்குறைவு - பேரறிவு. அகவை ஓர் ஈரெட்டு - பதினறு வயது; அகவை - பிராயம். கறையில் தவிர்ந்த - குற்றமற்ற. மோலி - கிரீடம்.

எல்லா மகன்கைக் கொடுத்தர சாண்டிங் கிருத்தியென்று
நல்லா தரவின் மனைவியுந் தானு நயந்துசென்று
செல்லா மெனுங்களக் காரோண நாதர் திருமுனின்று
பொல்லா வமையுட னீப்பா னெடுத்துப் புகலுவனே. 12

கு - ரை: எல்லாம் - அரசுரிமைச் செல்வம் முற்றும். இருத்தி - இருப்பாய். செல் ஆம் எனும் களம் - மேகம் என்னும் கரிய கண்டம். பொல்லா: வினைமுற்றுப் பெயர் என்பது கீழ்க்குறிப்பு. அமை உடல் பொல்லா - பொருந்தும் இவ்வுடம்பு பொல்லாதது. நீப்பான் - உடம்பை விடும் பொருட்டு.

ஆரா வுடம்பி னமர்வாழ்க் கையினெனக் காசையில்லை
பாரா தரிக்குநின் பொற்று ளடையும் படியருள்வாய்
தேரா மலமொரு மூன்றுமட் டாருளச் செம்பொருளே
பேரா தரத்தொடு காரோண மேய பெருந்தகையே. 13

கு - ரை: ஆரா உடம்பு - அமையாத இவ்வுடம்பு. பார் ஆதரிக்கும் - உலகம் விரும்பும். மலம் ஒரு மூன்றும் அட்டார் - ஆணவம் கன்மம் மாயை என்னும் மலங்கள் மூன்றனையும் கெடுத்த சிவஞானிகள். செம்பொருள் - சிவபெருமான். பேர் ஆதரம் - பெருவிருப்பு.

அரியா தியர்பத நல்குவை யாயினு மாசையில்லை
விரியா மிளிர்நின் பதத்தே கலக்கும் விதமருள்வாய்
எரியா வெழுகண் ணுதலோ யடியவ ரெய்ப்பில்வைப்பே
பிரியாமை மேற்கொடு காரோண மேய பெருந்தகையே. 14

கு - ரை: அரி ஆதியர் பதம் - விஷ்ணு முதலியோர் வைகும் பதவிகள். நின்பதத்தே கலக்கும் விதம் - நின் திருவடியிலே இரண்டறக் கலக்கும் அத்துவித முத்தி. எய்ப்பினில் வைப்பு - சேமநிதி.

ஆடுங் கழலி னடைவன்றி யொன்றினு மாசையில்லை
தேடு மதிற்கலந் தின்புறு வாழ்க்கைத் திருவருள்வாய்
பாடும் புலவ ருளக்கோயி லாயுயர் பல்சிறப்பும்
பீடும் பொலிதிருக் காரோண மேய பெருந்தகையே. 15

கு - ரை: ஆடுங்கழல் - தாண்டவம் புரியும் திருவடி. அதிற்கலந்து - அந்தத் திருவடியிற் கலந்து. வாழ்க்கைத் திரு - வாழ்வாகிய செல்வம். பீடும் - பெருமையும்.

என்று துதித்து விடங்கர்பொற் றாளு மினிதிறைஞ்சி
ஒன்று கருத்திற் கருந்தடங் கண்ணியை யுற்றிறைஞ்சி
அன்று வெளிவந் தொருதே மணுகி யகனமர்ந்து
நன்று மருவின னெங்கோன் திருவரு ணல்கினனே. 16

கு - ரை: விடங்கர் - அழகிய விடங்கர். வெளிவந்து - புறத்தே வந்து. ஒரு தேம் - ஒரு இடம். அகனமர்ந்து - மனம் விரும்பி. எங்கோன் - சிவபெருமான்.

நல்குந் திருவரு ளாற்றிருப் பாத நளினத்துமிக்
கொல்கு மருங்கிற் கொடியோடு மொன்ற லுருமலொன்றிப்
புல்குஞ் சிறப்பு மரீஇப்பர மானந்த போகந்துய்த்தான்
அல்கும் பெருந்திறல் வானவர் பூச்சொரிந் தார்த்தனரே. 17

கு -ரை : நல்கும் திருவருளால் - அருளிய திருவருட் பெருக்கால். நளினம் - தாமரை. ஒன்றுமல் ஒன்றி - இரண்டறக்கலந்து. மரீஇ - மருவி. பரமானந்தபோகம் - சிவபோகம்.

விருச்சிக மாத மதிவார மாயிர வில்வங்கொண்டே
அருச்சனை செய்பவர் வில்வத்திற் காயிர மாண்டளவாக்
கருச்சரி யுஞ்சிவ லோகத்து மேவிக் களிப்புறுவார்
உருச்சமை யார்பின்னர் மேலாய போகத்தி னேங்குவரே. 18

கு - ரை : விருச்சிகம் - கார்த்திகை. மதிவாரம் - சோமவாரம். ஆயிரம் வில்வங்கொண்டு அருச்சனை செய்வோர். கரு சரியும் - பிறப்பு நீங்கும். உரு சமையார் - பிறப்பிற்படார். மேலாய போகம் - சிவபோகம்.

அறைபுகழ் மிக்ககா யாரோ கணமெனு மைந்தெழுத்து
முறைமையி னைந்து பதமாம் பெரும்பொருண் மொய்த்திடலாற்
கறைதவி ரிம்மந் திரமா யிரமுட் கணிப்பவர்கள்
நிறைமகம் யாவும் புரிபயன் பெற்று நிரம்புவரே. 19

கு - ரை : காயாரோகணம் - ஐந்தெழுத்து: இது முறையின் சிவமூல மந்திரமேயாம். ஐந்தெழுத்தும் ஐந்துபதமே. பெரும்பொருள் - மகா வாக்கியப்பொருள். மகம் - யாகம்.

பானித் திலநகை பங்கர்பொற் ருளிற் பரிதிகுலக்
கோனித் தியமுத்தி யுற்றது தேறக் குறித்துரைத்தாம்
மேனித் தமுமின்ப மேன்மேல் விளைத்து விளங்குந்தெய்வ
சானித் தியபுர மான்மியத் துஞ்சில சாற்றுதுமே. 20

கு - ரை : பால் நித்திலநகை - உமாதேவியார்; நித்திலம் - முத்து. பரிதிகுலக்கோன் - சாலீசுகன்.

சாலீசுகன் முத்திபெற்றபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1756

முப்பத்தொன்றாவது

தேவசானித்தியபுர மான்மியப்படலம்

ஓவ மோர்புறத் தானையுள் ளூன்றுபு
பாவ மாமல பந்தம் பறிப்பவர்
தேவ சானித் தியபுர மான்மியம்
மேவ வோதெனச் சூதன் விளம்புவான். 1

கு-ரை: ஓவம் - ஓவியம்; உமாதேவியார். புறத்தான் - சிவபெருமான். உள் ஊன்றுபு. மனத்திருத்தித் தியானித்து. பாவம் மா மல பந்தம் - பாவங்களுக்குக்காரணமாகிய ஆணவமலபந்தம்; மா மலம் - கரிய ஆணவம். பறிப்பவர் - நைமிசமுனிவர். மேவ - பொருந்த.

பொங்கு மேன்மைப் புகழ்சா றசரதன்
பங்கு வென்பவன் பால்வரங் கொள்ளுமுன்
எங்கு மாயிரு மூன்றிரண் டாண்டுறத்
தங்கு வற்கடஞ் சார்ந்ததை யென்பவே. 2

கு-ரை: புகழ்சால் தசரதன். பொங்கும் - அதிகரிக்கும். பங்கு என்பவன் - சனீச்சுரன்; பங்கு - முடம். இருமூன்று இரண்டு ஆண்டு - பன்னிரண்டு ஆண்டுகள். உற தங்கு - மிகப் பொருந்தும். வற்கடம் - பஞ்சம். சார்ந்ததை: ஐ சாரியை.

சுந்த ரத்தனி யாழியிற் றோயமுண்
டந்த ரத்தி னியக்க மரசன்கட்
சிந்த ரத்தஞ் சினப்பது தீர்தலாற்
கந்த ரத்தின் குழாங்கள் கரந்தன. 3

கு-ரை: தனி ஆழியில் - ஒப்பற்ற கடலில். தோயம் உண்டு - நீரைக் குடித்து. அந்தரம் - ஆகாயம். சினப்பது - கோபிக்கும் செயல். கண் ரத்தம் சிந்த. கந்தரத்தின் குழாங்கள் - மேகக்கூட்டங்கள். கரந்தன - ஒளித்தன.

§ கறுப்பு மேகத்திற் காண்டலி லாமையால்
ஒறுப்பு வற்கட மப்பெய ருற்றது
வறுப்பு நுண்மணல் வாரியி றைத்தென
வெறுப்பு வெப்பமொள் வெங்கதிர் வீசிற்றே. 4

கு - ரை : கறுப்பு - வற்கட காலத்திற்கோர் பரியாய நாமம் என்பது முற்பதிப்பின் அடிக்குறிப்பு. வற்கடம் - பஞ்சம். கறுப்பு மேகத்திற்காண்டல் இலாமை - மேகம் கருக்கொள்ளாமை; மேகங்கள் வெளுத்திருந்தன என்க. அப்பெயர் - கறுப்பு என்னும் பெயர். வறுப்பு நுண்மணல் - வறுத்த நுண்ணிய மணல். வெறுப்பு வெப்பம் - வெறுக்கத்தக்க வெப்பம். வெங்கதிர் - சூரியன்.

அடுத்த கார்சற்று மாதலி லாமையால்
எடுத்த வெப்பத் தியங்குமுன் வேனினீர்
உடுத்த ஞால முடற்றிய தொண்டலை
தொடுத்த மாலையன் சோமுனிந் தாலென. 5

கு - ரை : அடுத்த கார் - பொருந்திய மேகம். சற்றும் ஆதல் இலாமையால் - சிறிதும் தோன்றாமையால். வெப்பத்து இயங்கு முன் - வெய்யிலில் செல்வதற்கு முன்னமே. வேனில் - வேனிற்காலம்; வெய்யில். உடற்றியது - வருத்தியது. ஒண் தலை தொடுத்த மாலையன் - சிவபெருமான்; தலை தொடுத்த மாலை என்றது பிரமதேவர்களின் தலைகளைக்கோத்த மாலையை. ''வள்ளமுலைக் கலைமடந்தை மகிழ்நர்தலை மாலைசிர மாலையாகக், கொள்ளுவது மலர் மடந்தை கொழுநர்தலை கிண்கிணியாக் கோத்துச்சாத்த, உள்ளுவது மொழிவது...'', ''என்பாக நகுதலையோ டெழிலாக வணிந்தகம லேச' (திருவாரூர் நான்மணி). சோ - மதில் என்றது திரிபுரங்களை.

அருவி வார்தலு மற்றன வாடவர்
மருவி வண்டழை யீதலு மாய்ந்தன
இருவி யானுமி தையுளி லாமையாற்
குருவி யும்புக லற்ற குறிஞ்சியே. 6

கு - ரை : வார்தலும் - ஒழுகுதலும். வண்தழை ஈதல் - தலைவியினிடத்துத் தழையை ஏற்பித்தல். இருவியானும் - தினைத்தாளாயினும். இதை=இதைப்புனம் - புதுக்கொல்லை. குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும். புகல் அற்ற - போதல்நீங்கின.

---

§ கறுப்பு - வற்கட காலத்திற்கோர் பரியாய நாமம்

விரவு சாமைப யறுமி டையுங்கோத்
திரவ மாதியுந் தீர்ந்தன வண்டர்மண்
பரவு மாப்பின் பயிறலும் பாறின
கரவி றிக்கலந் தாலென முல்லையே. 7

கு - ரை: சாமை, பயறு, கோத்திரவம், வரகு முதலியன முல்லை நிலத்துக் கருப்பொருள்கள். அண்டர் - இடையர். ஆ பின் - பசுக்களின் பின்னே. பாறின - ஒழிந்தன. கரவில் - வஞ்சகமாக, ஒளித்திருந்து. முல்லை - காடும் காடுசார்ந்த இடமும்.

உழுது சேறுசெய் தொண்முளை வித்துபு
பழுது தீர்புனல் பாய்த்தலு மற்றன
தொழுது சார்களமுஞ்சுமை தீர்ந்தன
எழுது சீர்த்தி யியைந்த மருதமே. 8

கு - ரை: வித்துபு - விதைத்து. புனல் பாய்த்தலும் - நீரைப் பாய்ச்சுதலும். அற்றன - நீங்கின. சுமை - நெற்போர், வைக்கோற்போர். களம் - நெற்களம். சீர்த்தி - மிகுபுகழ். மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும்.

கொள்ளு வாரின்மை யாற்கொழு மீன்முதல்
அள்ளு வார்வலை வீசுத லற்றன
தெள்ளு முத்தம் பவளமுந் தீர்ந்தன
விள்ளு கேதகை மேவிய நெய்தலே. 9

கு - ரை: கொள்ளுவார் - வாங்குவோர். மீன் முதல் அள்ளு - மீன் முதலாகவுள்ள பண்டங்களை வாரும். முத்துக்களும் பவளங்களும் விளைவு குறைந்தன. விள்ளு - மலர்தலைச் செய்யும். கேதகை - தாழை. நெய்தல் - கடலும் கடல்சார்ந்த இடமும். அள்ளுவார் வலை வீசுதல்; அள்ளு வார்வலை விசுதல்.

வேறு பாடு விளக்கிய காரினம்
பாறு மாறு படுதவஞ் செய்தனந்
தேறு நாமெங்கு மாய்ச்சிறந் தோமெனு
ஊறு மோகையுண் டாயது பாலையே. 10

கு - ரை: வேறுபாடு - வேறுபடுதலை. கார் இனம் - மேகக்கூட்டம். பாறுமாறு - அழியும்படி. நாம் எங்குமாய்ச் சிறந்தோம் என்றது பாலை நிலத்தின் கூற்று.

விண்ணிற் காண்பதல் லான்மிளிர் சாலியை
மண்ணிற் காண்பதின் மாதேவன் கண்டத்தின்
கண்ணிற் காண்பதல் லால்கரு தாலத்தை†
எண்ணிற் காண்ப திலையெவ் விடத்துமே. 11

கு - ரை : சாலி - நெல், வடமீன்; அருந்ததி மீனை. விண்ணிற் சாலி - அருந்ததி. மண்ணிற் சாலி - நெல். காண்பது இல். மாதேவன் - சிவ பெருமான். கண்டத்தில் - திருமிடற்றில். கண்டத்தினும் கண்ணினும் என்க. கருது ஆலத்தை - கருதப்படும் ஆலகால விடத்தை. ஆலம் - நீர், விடம். எண்ணில் - எண்ணுமிடத்து. கண்ணில் - எண்ணில், கருதுமிடத்து என்றபடி.

வடுப்ப டாத்தழன் மக்கள் வயிறெலாங்
கடுப்பின் மேவிக் கனலுவ தல்லதை
விடுப்பு ருமகக் குண்டத்து பேயதில்
அடுப்பெ லாம்பொலிந் தாம்பிகள் பூத்தவே. 12

கு - ரை : வடு படா தழல் - குற்ற மில்லாத நெருப்பு. கடுப்பின் - கோபத்தோடு. கனலுவது - சுடுவது. அல்லதை : ஐ சாரியை. விடுப்புரு - நீங்காத. மகக்குண்டம் - யாககுண்டம். அது இல் - அந்த நெருப்பில்லாத. ஆம்பிகள் பூத்த - காளான் பூத்தன. ''ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின், ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவா'' (புறநானூ - 164).

தங்கு மோடையுந் தாவில் குளங்களும்
பொங்கும் வாவியும் பொய்கையுங் கால்களும்
முங்கும் யாறு மொழிதரு மற்றவும்
எங்கு நீர்நசை யேகொடு வைகின. 13

கு - ரை : ஓடை, குளம், வாவி, பொய்கை, கால்கள், யாறு முதலிய எல்லா நீர் நிலைகளும். கால் - கால்வாய். முங்கும் - முழுகும். நீர் நசை - நீர்வேண்டும் விருப்பம். இவைகளில் நீர் வறண்டன என்க.

மேவி யாரும் விதம்புன லின்மையால்
ஆவி நீங்கிய வன்ன மிலாமையே
மேவி யாரும் விதம்புன லின்மையால்
ஆவி நீங்கிய வன்ன மிலாமையே. 14

கு - ரை : ஆரும் விதம் - உண்ணுமாறு. அன்னம் இலாமையே ஆவி நீங்கிய - சோறில்லாமல் உயிர்நீங்கின. புனல் - நீர். ஆரும் விதம்

---

† ஆலம் - நீர், விடம்.

புனல் இன்மையால் - தங்குமாறு நீர் இல்லாமையால். ஆர்தல் - உண்ணு தல், தங்குதல். ஆவி - குளம், உயிர். அன்னம் - சோறு, அன்னப்பறவை. அன்னம் இலாமையே ஆவிநீங்கிய - அன்னப்பறவைகள் இல்லாமல் குளங் கள் போயின.

பாத லம்புகப் பண்ணு நடவைபோற்
பூத லம்பொதிர்ப் பப்பொதுத் தேகியுங்
காத லம்புனல் கண்டிலர் காணினும்
ஆத லின்றி யழியும்வெப் புண்ணவே. 15

கு - ரை : நடவை - வழி. பூதலம் பொதிர்ப்ப - நிலம்வெடிக்க; பொதுத் தல் - துளைத்தல்: முதற் பதிப்பின் அடிக்குறிப்பு. பொதுத்து ஏகியும் - தோண்டிச்சென்றும். புனல் கண்டிலர், புனல் காணினும் பயனின்றி வெப்பத் தால் அழியும்.

ஒருவர் நேடி யகப்பட்ட துண்ணுங்கால்
ஒருவ ரோடி யுடற்றிப் பறிப்பரால்
ஒருவ ரெச்சிலென் றோதினு முட்கொளார்
ஒருவர் பார்க்க வுணலொழிந் தாரெலாம். 16

கு - ரை : நேடி - தேடி. அகப்பட்டது - கிடைத்த நீரை. உண்ணுங் கால் - உண்ணுங்காலத்து. உடற்றி - வருத்தி. பறிப்பர் - பிடுங்கிக்கொள் வார். ஒருவர் பார்க்க உண்ணுத மக்கள் யாவரும் இஃது ஒருவருடைய மிச்சில் என்று சொல்லினும் மனத்திலே கொள்ளமாட்டார்; பறித்துக் கொள்வார் என்க.

ஊட லற்றன வொள்ளிழை மாதர்தோள்
கூட லற்றன மன்றங் குழீஇயிசை
பாட லற்றன வாடலும் பாறின
தேட லற்றதி லன்னந் தெருவெலாம். 17

கு - ரை : மாதர்களுடன் கூடுதலும் ஒழிந்தன. அவர்கள் ஊடுதலும் ஒழிந்தன. மன்றங்களில் கூடி இசை பாடுதலும் ஒழிந்தன. மகளிர் ஆடு தலும் ஒழிந்தன. தெருக்கள் எல்லாம் சோறுதேடுதல் ஒழிந்தன. ஆகலான், 'அன்னம் ஒடுங்கினுல் அஞ்சும் ஒடுங்கும்' என்பது பழமொழி. "அன்னமிலா ஐயர் நடையும் தளர் வெய்த" என்ருர் பிறரும்.

கரவிற் பற்பல காளையர் தோள்புணர்
குரவிற் பொங்குங் குழன்மட வாரெலாம்
பரவிற் பாய்கற்புப் பாவையர் போன்றனர்
உரவிற் றேரு முணவருந் தாமையால். 18

கு - ரை : கரவில் - களவில். குரவில் பொங்கும் குழல் - குராமலர் மிகச்சூடிய கூந்தல். பரவில் பாய் - துதித்தல் பொருந்தும். கற்புப்பாவையர் - கற்புடைய மகளிர். உரவில் தேரும் - வலிமையுடன் தேடும். உணவு அருந் தாமையால்.

அடரு மோக மலைப்ப முறைதபும்
விடரும் நோன்பின் விரத்தர்கள் போன்றனர்
படரு மூணில் பலவு மிளைத்தன
தொடருங் காலவெந் தூத ரிளைக்கவே. 19

கு - ரை : அடரும் மோகம் - நிறைந்த காமம். அலைப்ப - வருத்துதலால். முறை தபும் விடரும் - முறைமையில்லாமல் முயங்கும் காமுகரும். நோன்பின் விரத்தர் - விரதத்தால் வைராக்கியமுடையோர். ஊண் இல் - உணவில்லாத. பலவும் - பல பிராணிகளும். காலவெம் தூதர் - காலமாகிய கொடிய தூதுவர்கள்.

காலம் இளைக்க ஊணில் பலவும் இளைத்தன.

உழன்ம றந்தனர் மள்ள ருடன்றுபோர்க்
கெழன்ம றந்தனர் வீரரின் மாதர்தோள்
விழன்ம றந்தனர் மோகர்மெய்த் தேவையுந்
தொழன்ம றந்தன ரென்னினிச் சொல்வதே. 20

கு - ரை : மள்ளர் - உழவர். உழல் - உழவுசெய்தலை. உடன்று - மாறுபட்டு. வீழ்தல்=விழல் - விரும்புதல். மோகர் - மோகத்தையுடையவர்; காமிகள். தே - தெய்வம். மெய்த்தே - பிறந்து இறந்து உழலும் சிறு தெய்வங்கள் போலாத கடவுள். என்=எவன் - யாது.

வரம்பு தப்பி வளஞ்செய் வயலெலாங்
கரம்பு தானென வொன்றிய காட்சியால்
நிரம்பு மீது நினதென தீதெனும்
பரம்பு கின்ற வழக்கும் பறந்ததால். 21

கு - ரை : வரம்பு - வரப்பு. வளம் - பயிரின் செழுமை. கரம்பு - பாழ் நிலம். நிரம்பும் - நிறையும். ஈது நினது; ஈது எனது என்று சொல்லித் திரியும் வழக்குகள். பரம்புகின்ற - பரவுகின்ற.

மழைநன் னீர்பெய் துவாரங்க டூர்தலாற்
கழைசு ளிக்குங் களிற்றின் மதம்படு
புழையுந் தூர்ந்தன போற்றி மகவுணும்
இழைமி ஞர்முலை யில்லியுந் தூர்ந்தவே. 22

கு - ரை : மழை - மேகம். துவாரங்கள் - பொள்ளல்கள். தூர்த லால் - அடைத்துவிட்டமையால். கழை சுளிக்கும் - குத்துக்கோலைக் கோபிக் கும். மதம்படு புழையும் - மதநீர் சொரியும் துவாரங்களும். போற்றி - பாது காத்து. மகவு உண்ணும் - குழவிகள் உண்ணும். இழை - ஆபரணம். மினார் — மின்னார் - பெண்கள். இல்லியும் - துவாரங்களும்.

ஓங்கல் போல வுலாவுங் களிறெலாம்
தூங்க லென்பதற் கேற்பத் துறுதசை
நீங்கல் பூண்டு நிரம்பவும் வற்றின
ஏங்க லின்றி யியலுவ தென்னையே. 23

கு - ரை : ஓங்கல் - மலை. களிறு - ஆண் யானை. தூங்கல் - யானை; தூங்குதல் - தொங்குதல். துறுதசை - மிக்க தசைகள். வற்றின - உலர்ந்து போயின; வாடின என்க. ஏங்கல் - ஏங்குதல். இயலுதல் - நடத்தல், இயங்கல்.

நினைச யிந்தவ நீர்க்கலப் புண்மையால்
துனைத ரக்கரை யுந்தொடர் போரின்றேல்
இனைச யிந்தவ நீர்க்கலப் பின்மையால்
வினையொ டுந்தசை மெய்யுங் கரைந்தன. 24

கு - ரை : நினை சயிந்தவம் - கருதும் சிந்துநதி. நீர்க்கலப்பு உண்மை யால் - நீரின் கலப்பிருத்தலால். துனைதர - விரைந்து. கரையும் - கரைந்து செல்லும். தொடர்போர் இன்றேல் - தொடர்ந்து செல்வோரில்லையாயின். இனை சயிந்தவம் - வருந்தும் குதிரை. நீரினது கலப்பு இல்லாமையால் செய லோடு தசை பொருந்திய உடம்பும் இளைத்தன.

சூடு மாசை தொலைந்தது மாதர்தோள்
கூடு மாசை குலைந்தது வேறொன்றை
நாடு மாசை நசித்த துணவினைத்
தேடு மாசை சிறந்த தியாவர்க்கும். 25

கு - ரை : சூடும் மாசை - அணிந்துகொள்ளும் பொன்னுபரணங்கள். ஆசை குலைந்தது. நாடும் - விரும்பும். நசித்தது - தொலைந்தது. யாவர்க்கும் உணவினைத்தேடும் ஆசை சிறந்தது.

எண்ணாத் தக்கவு மல்லன வெண்ணினர்
பண்ணாத் தக்கன வல்லவும் பண்ணினர்
நண்ணாத் தக்கன வல்லவும் நண்ணினர்
உண்ணாத் தக்கன வல்லவு முண்டனர். 26

கு - ரை : மக்கள் யாவரும் எண்ணத் தகாதனவற்றையெல்லாம் எண்ணினர். செய்யத் தகாதனவற்றைச் செய்தனர். பொருந்தத் தகாத வற்றைப் பொருந்தினர். உண்ணத் தகாதனவற்றையும் உண்டனர்.

மறையி னோதை மழுங்கின வாகமத்
துறையி னோதை சுருங்கின மற்றைநூன்
முறையி னோதை கழிந்தகொண் மூப்பொழி
உறையி னோதை யொழிதலும் பாரினே. 27

கு - ரை: வேதவொலிகள் அடங்கின. ஆகமத்துறைகளின் ஓசை சுருங்கின. சாத்திரங்களின் ஓசையும் நீங்கின. கொண்மூ - மேகம். உறை - நீர். மேகம் மழைபொழிதலை ஒழிந்தமையால் மழுங்கின, சுருங்கின, கழிந்த என்க.

வறுமை யென்பது வந்து பரத்தலால்
தெறுமை யாப்பிற் சிதைந்துயிர் யாவுமுட்
பொறுமை யென்பது போக்கி மறைபுகல்
மறுமை யென்பது மன்ற மறந்தன. 28

கு - ரை: வறுமை - தரித்திரம். பரத்தலால் - பரவுதலால். தெறும் - வருத்தும். மையாப்பு - மயக்கம். உயிர் யாவும் சிதைந்து. பொறுமை - பொறுக்குந்தன்மை. மறைபுகல் மறுமை - வேதங்களால் கூறப்படும் மறுமை இன்பங்கள். மன்ற மறந்தன - மிகுதியும் மறந்தொழிந்தன.

வலிய வாகி வருவிலங் குள்ளன
மெலிய வாம்விலங் கைக்கவர்ந் துண்பன
வலிய வாகி வயங்கும் பறவைகண்
மெலிய வாம்புள் விருந்து கவர்வன. 29

கு - ரை: வலிமையுள்ள விலங்குகள் மெலிய விலங்குகளைப் பற்றி யுண்பனவாம். வலிய பறவைகளும் மெலிய பறவைகளையெல்லாம் விருந்தாக உண்பன. விலங்கு - மிருகம். புள் - பறவை. கவர்வன - பற்றியுண்பன.

இலைமு தற்பொருள் யாவு மிறுதலால்
உலையு மாந்த ருடம்பினை யோம்பிடத்
தொலை‡வி லங்கழந் தொக்கபல் $புள்ளழம்
நிலைய மர்ந்துணு நீர்மை மருவினர். 30

கு - ரை: இலை முதலாகவுள்ள உணவுப் பொருள்கள் இல்லாமல் தொலைதலால் வருந்தும் மனிதர்கள் உடலைப் பாதுகாத்தற்கு உயிர் நீங்கிய விலங்குகளின் பிணத்தையும், பறவைகளின் பிணத்தையும் நிலையாக உண்ணுந்தொழிலை மேற்கொண்டனர்.

‡ விலங்கழம் - மிருகப்பிணம். $ புள்ளழம் - பறவைப்பிணம்.

இறுதலால் - கெட்டொழிதலால். உலையும் - வருந்தும். 'விலங்கு அழும் - மிருகப்பிணம். புள்ளழம் - பறவைப் பிணம்' என்பது முற்பதிப்பின் அடிக்குறிப்பு.

நாம வற்கட மின்னணு நண்ணுழி
யேம வான மிழிந்து வசுந்தரைச்
§சோம வாசை அடைந்தது சோர்விலாக்
காம தேனு வெனுங்கொடை கற்றவான். 31

கு - ரை: நாம வற்கடம் - அச்சத்தைத்தரும் பஞ்சம். நண்ணுழி - பொருந்திய காலத்து. ஏம வானம் இழிந்து - பாதுகாக்கும் விண்ணுலகினின்று இறங்கி. வசுந்தரை - நிலவுலகம். 'சோம ஆசை - வடதிசை' இதுவும் முற்பதிப்பின் அடிக்குறிப்பு. சோமன் - குபேரன்; ஆசை - திசை. வானம் இழிந்து அடைந்தது. காமதேனு - தேவருலகத்துப்பசு. ஆன் - பசு.

தரைய டைந்து சரித்திடு காலையில்
வரைவி லாப்பசி மண்டி யெழுதலாற்
கரைபுல் லாதிக ணேடியுங் காண்கிலா
துரைசெய் யாவி யுலையக் கவன்றதால். 32

கு - ரை: சரித்திடு காலையில் - உலாவும் காலத்து. வரைவு இலா - அளவில்லாத. மண்டி - நிறைந்து. புல் ஆதிகள் - புல்முதலிய பொருள்கள். நேடியும் - தேடியும். ஆவி உலைய - உயிர்கள் வருந்த. கவன்றது - கவலைப் பட்டது.

மண்டு வெம்பசி மாற்றவோர் நாய்ப்பிணங்
கண்டு துய்த்தது காய்பசி யுற்றிடில்
உண்டு தேக்கு முறுவலிச் சீயமுந்
தண்டு தேரைத் தசையுமற் றென்செயும். 33

கு - ரை: மண்டு வெம்பசி - நிறைந்த கொடிய பசித்துன்பம். மாற்ற - நீக்கும்பொருட்டு. (காமதேனு) நாய்ப்பிணம் கண்டு துய்த்தது. உறுவலி - மிக்க வலிமையுடைய. சீயமும் - சிங்கமும். துய்த்தது - புசித்தது. காய்பசி - வெதுப்புகின்ற பசி. தண்டு - கிடைத்த. தேரைத் தசை - தவளை மாமிசம். தேக்கும் - நிறைக்கும்.

பின்ன ரீங்குச் சரித்தல் பிழையெனு
நன்னர் வான்கயி லாயத்தை நண்ணிய
தன்ன திமை யறிந்து சினந்தனன்
பன்ன காபர ணத்தெம் பசுபதி. 34

---

§ சோமவாசை - வடதிசை.

கு - ரை : சரித்தல் - சஞ்சரித்தல். வான் கயிலாயம் - சிறந்த கயிலாய மலை. பன்னகாபரணம் - பாம்பணி; பன்னகம் - பாம்பு. பசுபதி - உயிர்த் தலைவராகிய சிவபெருமான்.

விமல மோர்ந்திலை வெம்பசி யெண்ணியே
ஞமலி யூண்புசித் திங்கு நணுகினாய்
அமலும் வெம்புலி யாகென வைதனன்
கமலன் மாலினுங் காணருங் காட்சியான். 35

கு - ரை : விமலம் ஓர்ந்திலை - பரிசுத்தத்தை ஆராய்ந்தறியாய். ஞமலி ஊண் - நாய்ப்பிணம். அமலும் - வருத்தும். வைதனன் - திட்டினான். கமலன் மால் இ(ன்)னும் காணரும் காட்சியான்; கமலன் - பிரமதேவர். இனும்= இன்னும். காட்சியான் - காட்சியையுடைய சிவபெருமான்.

சொற்ற வார்த்தை துணுக்கெனக் கேட்டுமிக்
குற்ற வச்சத் தொடுபணிந் தியான்செய்த
குற்ற மோர்ந்திது கூறினை யாயினும்
அற்ற மோவ வருளென் றிரந்ததே. 36

கு - ரை : சொற்ற வார்த்தை - சொல்லிய சொல். துணுக்கென - திடுக்கிட. குற்றம் ஓர்ந்து - குற்றத்தை ஆராய்ந்து. அற்றம் ஓவ - சோர்வு நீங்க.

இரந்து வேண்டு மிருங்குடஞ் சுட்டிற்குப்
பரந்த நீர்முடி வேணிப் பரம்பரன்
வரந்த வாது வழங்கு மழையனான்
சுரந்த பேரரு ளாலிது சொல்லுவான். 37

கு - ரை : குடஞ்சுட்டு - பசு=காமதேனு. பரந்த நீர் - கங்காசலம். வேணி - சடை. பரம்பரன் - சிவபெருமான். தவாது வழங்கும் - நீங்காமல் அருளும். சுரந்த பேரருள்-அதிகரித்த மிகுந்த கருணை.

வாகை மாதவர் மன்னுஞ் சிறப்பின
தீகை நாடு மிறைஞ்சப் பொலிவது
தோகை பாலொரு நாந்திகழ் தூயது
நாகை யென்னுநன் னாமத் தொருதலம். 38

கு - ரை : வாகை மாதவர் - வெற்றிபொருந்திய தவசிகள். ஈகை நாடும் - விண்ணுலகமும். தோகைபால் ஒருநாம் - உமாதேவியாரை ஒரு பாதியிலுடைய நாம். நல் நாமத்து - நல்ல பெயரையுடைய.

மணமலர்த்திர டுய்வந்து வானவ
கணமு றப்படி காவிரித் தென்றிசைக்
குணக டற்கரை யுள்ளது கோதற
அணவி நந்தம ருட்குறி போற்றுபு. 39

கு - ரை: மணம் மலர்த்திரள் தூய். வானவ கணம் - தேவகணம். குண கடற்கரை - கீழ் கடலின் கரையில். அணவி - சென்று. அருட்குறி - இலிங்கவடிவம். போற்றுபு - போற்றி.

குடதி சைக்கணோர் காவதங் கூடிய
விடம ணைந்திடி லின்பம் பயப்பது
மடவர் சேரா வதரி வனமொன்று
புடவி யின்பய னாகப் பொருந்துமே. 40

கு - ரை: குடதிசைக்கண் - மேற்றிசையில். காவதம் - காதம். அணைந் திடில்-சேரின். மடவர் சேரா - அறிவில்லார் செல்லாத. வதரிவனம்-இலந்தை வனம். புடவியின் பயன் - நிலவுலகம் செய்த தவத்தின் பயன்.

சீல மாரவ் வனத்திற்குத் தென்றிசை
ஆல மார்பதி யாகிய நாம்பசுக்
கோல மாகிக் குழக்கன்றை யூட்டிய
ஞால மேத்துமோர் தான நன் றுண்டரோ. 41

கு - ரை: ஆலம் ஆர் பதி - ஆலமர நீழலில் பொருந்திய பதிப் பொருள்; ஆலகால விடத்தையுண்ட பதிப்பொருள் எனினுமாம். ஆலம் - கல்லால், ஆலகாலவிடம். ஆர்தல் - பொருந்துதல், உண்ணுதல். ஆலமரம் பொருந்திய தலம் எனினுமாம். பசுக்கோலம் ஆகி - பசுவடிவங்கொண்டு. குழக்கன்று - பச்சிளங்கன்று; 'மழவுங்குழவும் இளமைப்பொருள' (தொல்). ஞாலம் - பூமி. தானம் - இடம், தலம்.

அந்தத் தான மணைந்து பணிந்துபின்
வந்தற் பூற வதரி வனந்தொழு
தெந்தத் தீங்கு மிரிக்கு மதன்கிழக்
குந்தச் சார்மதி யொள்ளிய தேனுவே. 42

கு - ரை: அற்பூற=அன்பு ஊற - அன்பு சுரக்க. வதரி - இலந்தை. இரிக்கும் - கெட்டோடச் செய்யும். சார்மதி - செல்வாய். தேனுவே: விளி.

ஒருகு ரோசத்தி னுள்ளது தீங்கெலாங்
கருகு மாறு கயாதீர்த்தம் போல்வது
பெருகு மற்றதின் மூழ்கிற் பிரிதரும்
அருகு ருநா மறைந்தவெஞ் சாபமே. 43

கு - ரை : கருகுமாறு - தீயும்படி. கயாதீர்த்தம். வெஞ்சாபம் - கொடுஞ்சாபம். அருகு உரு பிரிதரும்.

தீதி லாதவத் தீர்த்தத்தின் கீழ்கரைக்
கோதி லாத குடசமொன் றுள்ளதால்
ஓதி லாதவ மோவு மதனடிப்
பேதி லாதமர் வாவென்ற னன்பிரான். 44

கு - ரை : குடசம் - வெட்பாலை. அத்தீர்த்தம் - தேவப்புனல். கோது இலாத - குற்றமில்லாத. ஓதில் ஆதவம் ஓவும்: ஆதவம் - வெப்பம். ஓவும் - நீங்கும். பேது இலாது: பேது=பேதைமை - அறியாமை; மயக்கம் எனினுமாம்.

ஆண்ட நாத னருடலை மேற்கொடு
மாண்ட தேனு வணங்கி விடைகொடு
நீண்ட நாகை நெடும்பதி யுற்றது
பூண்ட தேவப் புனல்படிந் தாடிற்றே. 45

கு - ரை : ஆண்டநாதன் - சிவபெருமான். மாண்ட - மாட்சிமைப் பட்ட. தேனு - காமதேனு. தேவப்புனல் - தேவதீர்த்தம்.

உள்ளு வாருளத் தோங்கொளி யாயமர்
கள்ளு லாங்கொன்றைக் காரோணத் தாதியைத்
தெள்ளு நீர்ச்சடைச் செம்மலைப் போற்றுபு
விள்ளு ருத விடங்கரை யுந்தொழா. 46

கு - ரை : உள்ளுவார் உளத்து - தியானிப்போர் உள்ளத்தின்கண். கள் உலாம் - தேன் பொருந்திய. காரோணத்து ஆதியை - ஆதிபுராணரை. தெள்ளுநீர் - தெளிந்த நீரையுடைய கங்கை. செம்மல் - சிவபெருமான். விள்ளுருத - வேற்றுமையில்லாத. விடங்கர் - சுந்தரவிடங்கர்.

அருந்த வத்த ரருந்தமு தாகிய
கருந்த டங்கட் பிராட்டி கழறெழு
திருந்த வம்மிதன் மேலெவ னென்றெணப்
பொருந்த மேற்றிசை போயது தேனுவே. 47

கு - ரை : அருந் தவத்தர் அருந்து அமுது. கருந்தடங்கண் பிராட்டி - நீலாயதாட்சி. இரும் தவம் இதன்மேல் எவன்: இரும் தவம் - பெரியதவம். எவன் - யாதாம். எண - எண்ணி.

வையமேத்தும் வதரி வனங்கண்டே
ஐய தென்றிசைத் தான மவாய்ச்சென்று
தெய்ய வோர்பசு வாகிய செம்மலை
நைய வுள்ள நயந்து பணிந்ததால். 48

கு - ரை: வையம் - உலகம். வதரி வனம் - இலந்தை வனம்; கீழ் வேளூர் என்னும் தலம். இலந்தை தலவிருட்சம். கண்டு - தரிசித்து. தென்திசைத்தானம் - தெற்குத்திக்கில் உள்ள தலம். அவாய் - விரும்பி. தெய்ய - தெளிவாக. பசுவாகிய செம்மல் - சிவபெருமான். நைய - உருக, பதனழிய. நயந்து - விரும்பி.

பின்னி லந்தை வனம்பெட் பொடுபுகுந்
துன்னி யுள்ளத் துறப்பணிந் தங்கொரீஇ
மன்னு கீழ்த்திசை வந்தோர் குரோசத்தின்
மின்னு தீர்த்தம் விருப்பெழக் கண்டதால். 49

கு - ரை: பின் - பின்பு. பெட்பொடு - விருப்பத்தோடு. உறப் பணிந்து - நன்றாக வணங்கி. அங்கு ஒரீஇ - அவ்விடம் விட்டகன்று. கீழ்த் திசை ஒரு குரோசத்தில் தீர்த்தம் கண்டது; கண்டது - உண்டாக்கியது.

கண்ட போது கசிந்ததின் மூழ்கிற்று
மண்டு சாபத் தொடக்கற மாய்ந்தது
கொண்ட காதலிற் கீழ்பாற் குறுகுபு
தண்ட வாக்குட சத்தடி மேவிற்றே. 50

கு - ரை: கசிந்து - மனம் உருகி. மண்டு சாபத்தொடக்கு - நிறைந்த சாபமொழியின் தொடக்கு; அற மாய்ந்தது. குறுகுபு - குறுகி. தண் தவா - குளிர்ச்சி நீங்காத. குடசத்து அடி - வெட்பாலை மரத்தின் கீழ்.

குடச மூலத்து மேவிய கோமடிக்
குடநின் றும்பொழி பால்குரைத் தோடியக்
குடதி ருத்தக் குளத்தை நிறைத்தலாற்
குடச நீர்பாற் குளமெனப் பட்டதே. 51

கு - ரை: குடசமூலம் - வெட்பாலை மரத்தின் அடி. கோ - காமதேனு. மடியாகிய குடம். குரைத்து - சத்தித்து. குட திருத்தக்குளம் - மேற்கிலுள்ள தீர்த்தக்குளம்; திருத்தம் - தீர்த்தம். குடசம் நீர் - மடியாகிய குடத்தினின்று தோன்றிய நீர்: பாற்குளம் என்னும் பேர்பெற்றது. குடசம் - குடத்தில் தோன்றியது.

குடச மாலக் குளங்கயை நீரென
மடன றத்தெளி வார்வண் பிதிரர்தங்
கடன்மு டிப்பிற் கயையினு நூறுபங்
கிடனு றத்தழைப் பெய்தும் பலனரோ. 52

கு - ரை : குடசமால் அக்குளம் கயைநீர். பிதிரர் - தென்புலத்தார். கயையினும் நூறு மடங்கு. பலன் தழைக்கும்.

தண்ட வாவளக் காசித் தலமுயிர்
விண்ட போது விரும்பித் தருவது
கண்ட போது தருமெனிற் காதல்கூர்
மண்ட வாதவத் தானத்து மாண்பென்னே. 53

கு - ரை : தண் தவா வளம் - குளிர்ச்சி நீங்காத வளப்பம். உயிர் விண்ட போது - உடலைவிட்டு உயிர் நீங்கிய காலத்து. இது கண்டபோது தரும். தருவது - தருவதாகிய முத்தியை. மண் தவாத அத்தானம்.

பாற்கு ளத்தொரு நாட்படிந் தார்பயன்
ஏற்குங் கங்கையி னாண்டினி தாடினர்
காற்குன் றாது கதிக்கும் பயனினும்
மேற்ப டர்ந்து விளங்கிடு மென்றுமே. 54

கு - ரை : ஒருநாள் முழுகினோர். ஆண்டு இனிது ஆடினர் - ஒரு வருடம் முழுகினோர். பயன் ஏற்கும் - பயனைத் தரும். குன்றாது கதிக்கும் பயனினும் - குறையாமல் கொடுக்கும் பயனினும்.

பாவ நாளும் பறித்தெறி யத்தலம்
மேவ வானோர் விளங்கி மிடைதலால்
தேவ சானித் தியமெனச் செப்புவார்
ஓவ வைய முணர்ந்த புலமையோர். 55

கு - ரை : பறித்து எறி அத் தலம் மேவ. வானோர் - தேவர்கள். மிடைதலால் - நெருங்குதலால். தேவசானித்தியம் - தேவர்கள் நிறைந்திருக்குமிடம். வையம் உணர்ந்த புலமையோர்.

மடனில் வான்பசு வைகலுந் தெய்வதத்
தடநன் னுகையிற் சார்ந்துகா ரோணத்துப்
படவ ராவணிப் பண்ணவற் போற்றிப்பின்
குடச மூலங் குறுகுபு வைகுமே. 56

கு - ரை : மடன் இல் - அறியாமையில்லாத. வான் பசு - காமதேனு. வைகலும் - நாடோறும். தெய்வதத் தடம் - தேவதீர்த்தம். பட அரா அணிப் பண்ணவன் - சிவபெருமான். குடசமூலம் குறுகுபு - வெட்பாலை மரத்தடியைச் சார்ந்து.

ஆய காலை வசிட்ட னருட்பிரான்
மேய வண்கயி லாயத்தை மேவுபு
தூய பாதந் தொழவந்த தென்னென்று
நாயன் கேட்க நவிலுவ தாயினன். 57

கு - ரை : வசிட்டன் - வசிட்டமுனிவன். அருட்பிரான் - சிவபெருமான். மேவுபு=மேவி - அடைந்து. தொழ வந்தது என் - வணங்குதற்கு வந்த காரணம் யாது. நாயன் - சிவபெருமான்.

பூசை செய்யவும் வேள்வி புரியவுந்
தேசை யார்தரு தேனு வருளென
மாசை நீத்துவண் ணாகைக்கு மேல்புறம்
ஓசை யார்குட சத்தடி யுற்றதால். 58

கு - ரை : தேசு - ஒளி, புகழ். தேனு - காமதேனு. மாசை நீத்து - குற்றத்தை விட்டு நீங்கி. வண் நாகைக்கு - தூய்மையாதற்கு வளவிய நாகையின்: உருபு மயக்கம்.

தேங்கு வண்பயத் தேனு நிலாவுறும்
ஆங்கு மேவி யருந்தவ நீசெயிற்
பாங்கு மேவுறப் பாலிப்பம் யாமென
வீங்கு பேரரு ளான்கொடுத் தான்விடை. 59

கு - ரை : தேங்கு வண் பயம் தேனு; பயம் - பால். ஆங்கு மேவி - அவ்விடத்தை அடைந்து. நீ அருந்தவம் செய்யின். பாலிப்பம் - கொடுப்போம். அருளான் விடைகொடுத்தான். வீங்கு பேரருள் - மிக்க பேரருள்.

பணிந்து நாகைப் பதியை மரீஇயன்பர்
துணிந்து போற்றுஞ் சுடரைத் தொழுதுவான்
அணிந்து காட்டிய தன்ன குடதிசைத்
தணிந்து வாழ்மனத் தாபத னேகினன். 60

கு - ரை : மரீஇ=மருவி - பொருந்தி. துணிந்து - உறுதியாக. தணிந்து வாழ் மனத்தாபதன். தணிதல் - செருக்கின்றியிருத்தல். தாபதன் - வசிட்டமுனிவர்.

நாடு பாற்குள மூழ்கி நறுந்தளிர்
கூடுந் தெய்வக் குடசத்தின் கீழ்புறம்
பாடு வேதியொன் ருக்கிப் பசுப்பொழி
நீடு பானவ நீதந் திரட்டியே. 61

கு - ரை : பாற்குளத்தில் முழுகி வெட்பாலே மரத்தின் கீழ்புறத்தில் வேதிகை ஒன்று சமைத்து. பாடு - பெருமை. பசுப்பொழிபால் நவநீதம் திரட்டி; நவநீதம் - வெண்ணெய். பசு - காமதேனு.

நிறுவிப் பூசை நிகழ்த்திடுங் காலையின்
மறுவி லான்வெளி வந்துன் கருத்தெவன்
பெறுவை யோதுக வென்றலும் பேதைமை
தெறுத வத்தன் பணிந்திது செப்புவான். 62

கு - ரை : நிறுவி - நிறுத்தி, தாபித்து. மறு இலான் - குற்றமில்லாத சிவபெருமான். வெளிவந்து - வெளிப்பட்டு வந்து. உன் கருத்து எவன் - உன் எண்ணம் யாது. பெறுவை - பெறுவாய். பேதைமை தெறு - அறியாமையைப் போக்கிய. தவத்தன் - தவத்தையுடைய வசிட்டமுனிவர்.

இந்த வெண்ணெ யிலிங்கத்தி னீயென்றும்
நந்த வேண்டு நவின்றவர் பாவமுஞ்
சிந்த வேண்டுமொண் டேனுவும் வேண்டுமென்
றுந்த வேண்ட வுதவி மறைந்தனன். 63

கு - ரை : நீ என்றும் நந்தவேண்டும்; நந்த - ஆக்கம்பெற இருத்தல் வேண்டும். நவின்றவர் - தோத்திரம் செய்தவர். சிந்த - பொடியாக. தேனுவும் வேண்டும் - காமதேனுவும் வேண்டும். வேண்ட - விருப்பமுற்று வரங் கிடக்க. உதவி - கொடுத்து.

நாகை நாதனை நன்னவ நீதஞ்சார்
ஓகை மூர்த்தியைப் பூசித்து வந்தங்கு
வாகை சாலும் வசிட்டன் வசித்தனன்
ஈகை சாலவ் விடமவன் பேரெய்தும். 64

கு - ரை : நாகைநாதன். நவநீதமூர்த்தி. பூசித்து வந்து அங்கு. வாகைசாலும் - வெற்றி மிக்க. அவ்விடம் அவன் பேர் எய்தும்.

தேவ சானித் தியபுர மான்மியம்
பாவ நாசம தாகப் பகர்ந்தனம்
ஓவ நேருமை பாகனைக் கோசிகன்
மேவப் போற்றிய வண்ணமும் விள்ளுவாம். 65

கு - ரை : பாவம் நாசம் அது ஆக. ஓவம் நேர் உமை - ஓவியத்தை யொத்த உமாதேவியார். உமைபாகன் - சிவபிரான். கோசிகன் - கௌசிகன்.

தேவசானித்தியபுர மான்மியப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1821

முப்பத்திரண்டாவது

கோசிகன் பூசித்தபடலம்

பழியில் கோசிக, னழிவின் மாதவம்
ஒழிவின் றேதென, மொழியுஞ் சூதனே. 1

கு - ரை : பழி இல் கோசிகன் - பழிக்கப்படுதல் இல்லாத கோசிகன். அழிவு இல் - அழிதலில்லாத. ஒழிவு இன்று ஓது என - நீங்குதலில்லாமல் சொல்லுக என்று. இன்று=இன்றி - இல்லாமல்.

நன்று கோசிகன், முன்றி ரேதத்தில்
எண்டி சைக்கணே, யொன்ற வுற்றனன். 2

கு - ரை : முன் திரேதத்தில் - முன்பு திரேதாயுகத்தில். எண் திசைக் கண் - எட்டுத் திக்கினும். ஒன்ற - பொருந்த.

ஆழி யின்கரை, வாழி மாதவந்
தாழ்வின் றாற்றினன், கேழ்வ றப்பவே. 3

கு - ரை : ஆழியின் கரை - கடற்கரையில். தாழ்வு இன்று மாதவம் ஆற்றினன்; தாழ்வு இன்று - குறைவின்றி. கேழ் வறப்ப - ஒப்பில்லாமல்; கேழ் - ஒப்பு.

அதுதெ ரிந்தனன், கதுமெ னக்கவன்
றிதுபு ரிந்தனன், முதுவெள் யானையான். 4

கு - ரை : கதும் என கவன்று - விரைந்து கவலையடைந்து. இது - இச் செயலை. அது - மாதவம் செய்யும் அச் செய்கையை. முதுவெள் யானை யான் - ஐராவதமென்னும் வெள்ளை யானையையுடைய இந்திரன்.

ஒருதி லோத்தமை, பொருவில் வாண்முகம்
மருவி நோக்கியச், சிருவி யோதுவான். 5

கு - ரை : ஒரு திலோத்தமை - ஒப்பற்ற திலோத்தமை என்னும் தேவதாசி; தெய்வரம்பை. பொரு இல் - ஒப்பில்லாத. அச்சு இருவி. ஓதுவான் - சொல்லத் தொடங்கினன்.

தென்க டற்கரைத், துன்பில் கோசிகன்
வன்பின் மாதவம், நன்கி யற்றுவான். 6

கு - ரை : தென் கடற்கரை - தெற்குக் கடற்கரையில். துன்பு இல் - வருத்தமில்லாத. வன்பின் - வலிமையோடு, உறுதியாக.

பொங்கு மாதவம், நங்கு றச்சிதைத்
திங்கு வாவென்றுன், மங்கு லூர்தியான். 7

கு - ரை : பொங்கும் மாதவம் - மிகப்பெருகும் சிறந்த அந்தத் தவம். நங்கு உற - பழிமிக : நங்கு - பழிச்சொல். சிதைத்து - கெடுத்து. மங்குல் ஊர்தியான் - மேகவாகனனாகிய இந்திரன்.

கேட்ட மாதராள், வாட்டந் தீர்மயல்
சூட்ட நேர்சென்று, நாட்டம் வீசினுள். 8

கு - ரை : மாதராள் - திலோத்தமை. வாட்டம் தீர் மயல் - சோர்வில்லாத காம மயக்கம். சூட்ட - உண்டாக்க. நாட்டம் விசினுள் - கண் (வலையை) எறிந்தாள்.

கண்டு கோசிகன், மண்டு மாதவம்
விண்டு பாவைபாற், றெண்டு பூண்டனன். 9

கு - ரை : மண்டு மாதவம் விண்டு - நிறைந்த பெருந்தவம் சிதைந்து. பாவைபால் - திலோத்தமையிடத்து; பாவை - சித்திரப் பிரதிமை. தொண்டு - அடிமைத்திறம்.

அன்ன மேயெனுஞ், சொன்ன மேயெனும்
முன்ன மேய்தவந், தன்ன மேயெனும். 10

கு - ரை : அன்னம் - அன்னப்பறவை; நடையால். சொன்னம் - பொன்; அருமையால். எனும் - என்று சொல்லுவான். முன்னம் ஏய் தவம் - முன்பு செய்த தவம். தன்னமே - சிறிதளவேயாம்.

அரும்பு கொன்முலை, சுரும்பு கொல்விழி
கரும்பு கொன்மொழி, யிரும்பு கொன்மனம். 11

கு - ரை : நகில் தாமரை அரும்போ. விழி வண்டோ. மொழி கருப்பஞ்சாறே. மனம் இரும்போ. சுரும்பு - வண்டு.

என்று கூறிடுங், கன்று காமவேள்
துன்று போரற, வின்று தீரெனும். 12

கு - ரை : கன்று காமவேள் - வெதும்பச்செய்யும் மன்மதன். துன்று போர் - நெருங்கிச் செய்யும் யுத்தம். தீர் - தீர்த்தருள்க. இன்று - இப்பொழுதே.

இந்த வண்ணஞ்சொற், றந்த மாதராள்
சந்த வெம்முலை, முந்தப் புல்லினன். 13

கு -ரை : சொற்று - சொல்லி. அந்த மாதராள் - அந்தத் திலோத்தமையினது; அந்த - இந்திரனால் அனுப்பப்பட்ட. மாதர் - காதல். சந்த வெம்முலை - சந்தனக்குழம்பை அப்பிய விரும்பத்தகும் நகில். புல்லினன் - தழுவினன், அணைத்தான்.

தழியு வந்தபின், பழிய டைந்தனன்
மொழியம் மாதுவிண், ணுழிய டைந்தனள். 14

கு - ரை : தழி உவந்த பின் - தழுவி மகிழ்ந்த பின்பு. பழி - பழிச் சொல்லை. அம்மாது - திலோத்தமை. விண் உழி - விண்ணுலகத்தை; உழி: ஏழனுருபு.

நல்ல நோன்பிடைச், செல்ல லுற்றமை
கல்ல வெண்ணினன், வல்ல கோசிகன். 15

கு - ரை : நல்ல நோன்பிடை - சிறந்த தவத்தில். செல்லல் - துன்பம். கல்ல - கெடுத்தற் பொருட்டு.

விருப்ப மேயசீ, பருப்ப தம்புகுந்
தருப்பு மாதவத், திருப்ப வெண்ணுழி. 16

கு - ரை : மேய - பொருந்திய. பருப்பதம் - சீபருப்பதம். மா தவத்து இருப்ப-சிறந்த தவத்திலிருத்தற்பொருட்டு. எண்ணுழி-எண்ணும் காலத்து.

காம நாசஞ்செய், தாமங் கேயமர்
வாம தேவற்கண், டேம மாமுனி. 17

கு - ரை : காம நாசம் செய்து ஆம் அங்கே அமர்; அங்கே - சீபருப்பதத்திலே. வாமதேவன் - வாமதேவ முனிவர். ஏமம் ஆம் முனி - கோசிகர். ஏமம் - பாதுகாவல்.

நடந்த தோதலு, மிடந்த மாமலத்
தடந்த ழூஉமவன், கடந்த பேசுவான். 18

கு - ரை : தாம் தவஞ்செய்த காலத்து நடந்த செய்தியை. இடந்த மா மலத் தடம் - நீங்கிய கருமலமாகிய இடம்; தடம் - இடம், தடாகம். தழூஉம்- தழுவும், பொருந்தும். அவன் - அந்த வாமதேவ முனிவர்.

நாகை நண்ணிநீ, தோகை பாகனை
ஓகை யாற்றெழின், வாகை மேவுவாய். 19

கு - ரை: நாகை - நாகபட்டினம். தோகைபாகன் - சிவபெருமான். ஓகை=உவகை-மகிழ்ச்சி. வாகை - வெற்றி.

இன்னு மேற்றிசை, மன்னு காவக
முன்னு நீசெலி, னுன்னு மாவயின். 20

கு - ரை : இன்னும் - மேலும். மேல்திசை மன்னும் கா அகம்; கா அகம் - சோலை. முன்னும் - எதிர்ப்படும். உன்னும் ஆவயின் - கருதப்படும் அவ்விடத்து.

போத மார்நவ, நீத மேவுரு
நாதற் காணலாம், ஓதக் கேண்மதி. 21

கு - ரை : போதம் ஆர் - அறிவு நிறைந்த; ஞானசொரூபமான. நவநீதமே உருநாதன் -வெண்ணெயினாலான சிவலிங்கவடிவம். காணலாம்- தரிசனம் செய்யலாம்.

ஆங்கு நீதொழி, னீங்கு ருததெத்
தீங்கு போவென்று, ஞேங்கு மாதவன். 22

கு - ரை : ஆங்கு - அவ்விடத்திலுள்ள சிவலிங்கமூர்த்தியை. நீங்குருதது - நீங்குதலில்லாதது. எத் தீங்கு - எந்தத் தீமை: தீங்கு-பழிபாவங்கள். ஓங்கும் மாதவன் போ என்றான்.

அரிய கோசிக, னுரிய நாகையில்
தெரிய மேயினன், பிரியம் வாய்ப்பவே. 23

கு - ரை : அரிய கோசிகன் - அருமையான கோசிகமுனிவர். பிரியம் வாய்ப்ப - அன்பு பொருந்த.

பாவ நாசஞ்செய், தேவ தீர்த்தத்து
மேவ மூழ்கிமுக், கோவற் போற்றுபு. 24

கு - ரை : பாவங்களை நாசம்பண்ணும் தேவதீர்த்தத்திலே முழுகிச் சிவபெருமானை வணங்கி.

முக்கோவன் - சிவபெருமான். முக்கோ - மூன்று கண்கள். போற்றுபு - போற்றி.

கருந்த டங்கணு, ளிருந்த வாலயம்
பொருந்தப் புக்குத்தாழ்ந், தருந்த வத்தினன். 25

கு - ரை : கருந்தடங்கணாள் - நீலாயதாட்சி அம்மை. ஆலயம் புக்கு - கோயிலை அடைந்து. தாழ்ந்து - வணங்கி. அருந்தவத்தினன் - கோசிகன்.

பச்சி மத்திசை, நச்சி யெய்தியாங்
கச்சி வக்குறி, மெச்சிக் கண்டனன். 26

கு - ரை : பச்சிமத்திசை - தெற்குத் திக்கு. நச்சி - விரும்பி. அச்சிவக்குறி - நவநீதலிங்கமூர்த்தி.

தூய பாற்குளம், பாய நீர்துளைந்
தேயப் போற்றினு, னேய வக்குறி. 27

கு - ரை: தூய பாற்குளம் பாய நீர் - பரிசுத்தமான பாற்குளத்திலே நிறைந்த நீரில். துளைந்து - முழுகி. ஏய - பொருந்த. நேய அக்குறி - அன்பு வடிவாகிய அச்சிவலிங்கத்தை.

குடச மூலத்தான், தடனி லாமருண்
மடன றப்பெற்றே, படர்த வத்தினன். 28

கு - ரை: குடச மூலத்தான் - வெட்பாலை மரநிழலில் வீற்றிருக்கும் சிவபெருமான். தடன் நிலாம் அருள். மடன் அற - அறியாமை தீங்க. படர் தவத்தினன் - பரவிய தவத்தையுடையான்; கோசிகன். படர்தல் - பரவுதல். படர் - துன்பம்; துன்புற்ற தவத்தையுடையான் எனினுமாம். படர்தவம் - நீங்கிய தவம் என்பதும் குறித்து நின்றது நயம்.

சுத்த வக்குறிக், குத்த ரத்தனு
கித்த டஞ்செயச், சித்தம் வைத்தனன். 29

கு - ரை: சுத்த அக்குறி - தூய அந்த நவநீதநாதர். உத்தரத்து - வடதிசையில். தடம் - தடாகம். சித்தம் வைத்தனன் - எண்ணினன்.

பரசு தீர்த்தமு, மரசு மாக்கியா
தரவின் வைகினன், புரவின் மேன்மையான். 30

கு - ரை: பரசு தீர்த்தமும் - துதிக்கும் நீர்த்தமும். அரசும் - அரச மரமும்; அரசு - நாயகன், சிவலிங்கமூர்த்தி எனினுமாம். ஆதரவின் - விருப்பத்துடன்.

அவமி லாவருந், தவமிவ் வாறுசெய்
துவம னில்லவன், கவலை தீர்ந்தனன். 31

கு - ரை: அவம் இலா - வீண்போகாத. உவமன் இல்லவன் - கோசிகன்.

வேறு

தூய கோசி கன்றவ, நேயம் யாநி கழ்த்தினம்
பாய கார்த்தி யாயனன், மேய பூசை விள்ளுவாம். 32

கு - ரை: தவநேயம் - தவத்தின் அன்பு, மிக்க அன்பு எனினுமாம். விள்ளுவாம் - சொல்வோம்.

கோசிகன் பூசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1853

முப்பத்துமூன்ருவது

கார்த்தியாயனர் பூசித்தபடலம்

பொய்யின் மாத வரெலா, ஐய கார்த்தி யாயனன்
செய்த பூசை செப்பென, மெய்கொள் சூத னேதுவான். 1

கு - ரை : பொய் இல் மாதவர் - நைமிசமுனிவர்கள். ஐய: விளி, ஐய - அழகிய எனினுமாம். கார்த்தியாயனன் - ஒரு முனிவர். மெய்கொள்சூதன் - தத்துவ உணர்ச்சியுடைய சூதமா முனிவர்.

ஆன்ற கார்த்தி யாயனன், ரேன்ற வெத்த லந்தொழிற்
சான்ற சித்தி சாருமென், றூன்ற வுள்ளு ணர்ந்தனன். 2

கு - ரை : ஆன்ற - சான்ற. தோன்ற - மிகுதியாக. எத்தலம் தொழின் - எந்தத் தலத்தில் வழிபாடுசெய்தால். சான்ற - மிகுதியான, சிறந்த. ஊன்ற - உறுதியாக. உள் உணர்ந்தனன் - மனத்திஞல் ஆராய்ந்தறிந்தான்.

தெளித ராத கத்தியன், களியி ருக்கை மேவியாங்
கொளியி னீது ணர்த்தலுந், தெளிய வோது மம்முனி. 3

கு - ரை : தெளிதராது - தெளிவடையாமல். அகத்தியன் களி இருக்கை - அகத்தியமுனிவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் பொதியில் மலையை. ஒளியின் - ஞானவொளியால். ஈது உணர்த்தலும் - இதனை அறிவித்தலும். அம்முனி - அகத்தியமுனிவர்.

நாகை யென்னு நற்றலத், தோகை பாக ரைத்தொழில்
வாகை யொண்பொ ருளெலா. மீகை செய்வ ரன்னவர். 4

கு - ரை : நாகை என்னும் நல்ல தலத்திலே உமையொருபாகராகிய சிவபெருமானை வழிபாடுசெய்யின். வாகை ஒண் பொருள் எலாம் - வெற்றியுடன் தெளிந்த பொருள்களையெல்லாம். அன்னவர் கொடுத்தருளுவர். ஈகை - ஈதல். அன்னவர் - உமையொருபாகர்.

என்று கூறி யானுமங், கொன்று மாற வாவினேன்
அன்று மேட மாயினுற், றின்று நின்ற தீதற. 5

கு - ரை : என்று கூறி, யானும் அங்கு ஒன்று மாறு அவாவினேன்; அங்கு - அந்த நாகைத்தலத்தை. ஒன்றுமாறு - பொருந்துமாறு. அன்று - அக்காலத்து; பொதியில் மலையைநோக்கி வருங்காலத்து என்க. மேடம் ஆயினனைத் தின்று நின்ற தீது: வாதாவி வில்வலர் வரலாறு குறித்தது இது. கந்தபுராணம் காண்க.

எனவு ரைத்தெ ழுந்தன, னனக மார வனெடுந்
துணையைக் கார்த்தி யாயனன், புணையு நாகை புக்கனன். 6

கு - ரை: என்று சொல்லிப் புறப்பட்டார். அனகம் ஆர் அவனெடும் - பரிசுத்தம் நிறைந்த அகத்திய முனிவருடன். கார்த்தியாயனன் நாகை புக்கனன்.

தூய தேவ தீர்த்தநன், காய வன்பின் மூழ்குபு
பாய மெய்ப்ப ரஞ்சுடர், நாய னூர்மு னண்ணினுன். 7

கு - ரை: தூய தேவதீர்த்தத்தில் மிக்க அன்புடன் முழுகி. மெய்ப் பரஞ்சுடர் நாயனூர் - சிவபெருமான். முன் நண்ணினுன் - சந்நிதியை அடைந்தார்.

உருகு நெஞ்சிற் போற்றுபு, திருகு தீர்வி டங்கர்தம்
அருகு சென்றி றைஞ்சினுன், பெருகு வாய்மை மாதவன். 8

கு - ரை: போற்றுபு - வணங்கி. திருகு தீர் - மாறுபாட்டைத் தவிர்க்கும். விடங்கர் - சுந்தரவிடங்கர். வாய்மை மாதவன் - கார்த்தியாயன முனிவர்.

எம்மை யாளி ளங்கிளி, மும்மை ஞால முழுதருள்
அம்மை நாளும் போற்றினுன், செம்மை வாய்ந்த சிந்தையான். 9

கு - ரை: எம்மை ஆள் இளங் கிளி - கருந்தடங் கண்ணம்மை. மும்மை ஞாலம் - மூன்றுலகம் என்றது எல்லா வுலகங்களையும் என்றபடி. முழுது அருள் - முழுவதையும் பெற்றருளிய. சிந்தையான் - கார்த்தியாயனர்.

இந்த வண்ண மெண்ணிறு, ளந்த நற்ற லத்தமர்ந்
துந்த வெவ்வ ரங்களு, முந்தப் பெற்று வாழ்ந்தனன். 10

கு - ரை: எண் இல் நாள் - அளவில்லாத காலம். முந்தப்பெற்று - முற்படப்பெற்று; உந்தப்பெற்று - அதிகரிக்கப்பெற்று எனினுமாம்.

உலக மீன்ற வம்மையே, திலக வொண்பு தல்வியா
நலம்வி ராயி னுனெனிற், சொலவும் வேண்டு மின்னமும். 11

கு - ரை: அம்மையே புதல்வியாகப் பெற்று நன்மையடைந்தான் எனில் இன்னமும் பெருமை சொல்ல வேண்டுமோ.

ஆங்கு நின்று மேற்றிசை, யோங்கும் வெண்ணெ யுருவினுற்
பாங்கு மேவப் பார்த்தனன், தேங்கு மின்பந் தெவ்வினுன். 12

கு - ரை: மேற்குத் திக்கில் சென்று வெண்ணெய் வடிவினையுடைய இறைவரைத் தரிசித்தார். தேங்கும் இன்பம் - நிறைந்த இன்பம். தெவ்வினுன் - வாரினுன், முகந்தான் என்றபடி.

தென்ற மிழ்மு னிவனு, மொன்ற முன்னு ரைத்தவா
றன்ற திரு நாகையிற், பொன்றி லாலைப் போற்றுபு. 13

கு - ரை : தென் தமிழ் முனிவன் - அகத்திய முனிவர். ஒன்ற - பொருந்த. பொன்றிலானை - இறத்தலில்லாத சிவபெருமானை.

மேற்றி சைக்கண் மேவியே, யாற்று வேணி யண்ணலைச்
சாற்றும் வெண்ணெ யுருவிடைப், போற்றி யோப்பி னுன்புகர். 14

கு - ரை : ஆற்று வேணி அண்ணல் - சிவபெருமான்; ஆறு - கங்கைநதி. வேணி - சடை. வெண்ணெய் வடிவில். புகர் ஒப்பினன் - குற்றத்தைப் போக்கிக்கொண்டார்.

நம்பு மிக்கு றித்தென்பா, லம்பு வீழு மெல்லையில்
வெம்பு தீருந் தீர்த்தமும், பம்பு கோச முஞ்செய்து. 15

கு - ரை : இக்குறித் தென்பால் - இந்தச் சிவலிங்கத்துக்குத் தெற்கில். அம்பு சென்றுவீழும் அளவிலே. வெம்பு தீரும் தீர்த்தம் - குளிர்ந்த தீர்த்தம். கோசம் - சிவக்குறி; சிவலிங்கப்பதிட்டைசெய்து.

மருவு மன்பிற் பூசனை, யொருவு ருதி யற்றியே
வெருவொ ழிந்து வாழ்ந்தனன், பொருவி லாத்த மிழ்முனி. 16

கு - ரை : ஒருவுருது - நீங்காமல். வெருவு ஒழிந்து - அச்சம் நீங்கி. தமிழ்முனி - அகத்தியமுனிவர்.

மற்றை மாமு னிவனும், பொற்ற கீழ்த்தி சைத்தலை
வெற்ற வம்பு வீழிடை, யுற்றோர் தீர்த்த மாக்கியே. 17

கு - ரை : மற்றை மாமுனிவன் - கார்த்தியாயன முனிவர். பொற்ற - அழகிய. கீழ்த்திசைத்தலை - கிழக்குத்திக்கில். தீர்த்தம் ஆக்கி - தீர்த்த முண்டாக்கி.

நேச மார்த ருஞ்சிவ, கோச மொன்று நாட்டுபு
வாச மாம லர்புனைந், தேச தேக வாழ்ந்தனன். 18

கு - ரை: சிவகோசம் - சிவலிங்கமூர்த்தி. நாட்டுபு - பதிட்டைசெய்து. ஏசு அது - பழி; ஏசு - ஏச்சு. அது: பகுதிப் பொருள் விகுதி. ஏக - நீங்க.

ஆய கார்த்தி யாயனன், மேய நன்மை விண்டனம்
பாய பார்ப்ப தீச்சர, நேய மாண்மி யஞ்சொல்வாம். 19

கு - ரை : மேய மேன்மை - மேவிய சிறப்பு. விண்டனம் - சொன்னோம். பார்ப்பதீச்சரம். மான்மியம் - சிறப்பு.

கார்த்தியாயனர் பூசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1872

முப்பத்துநான்காவது

பார்ப்பதீச்சர மான்மியப்படலம்

திருத்தகு நைமிசத்துச் செறிபல முனிவர்களு
மருத்தபு கழ்ச்சூத முனிமல ரடிவணங்கி
உருத்தகு பார்ப்பதியீச் சரத்திய லுரைத்தியெனத்
தருத்தகு கொடையுடையத் தாபத னுரைசெய்வான். 1

கு - ரை: திரு தகும் - அழகிய. மரு தகு மலரடி. புகழ்ச்சூதமுனி. மரு தகு மலர் - மணம் பொருந்திய மலர். மலரடி - மலர்போலும் திருவடி. உரு தகு - அழகு மிக்க. பார்ப்பதியீச்சரம். இயல் - மான்மியம். தரு தகு கொடை - கற்பகமரம் போலும் கொடை. அத் தாபதன் - சூத முனிவர்; தாபதன் - தவசி.

கயிலையங் கிரிமேய கண்ணுதல் விடையேறி
மயிலியற் பார்ப்பதியோ டுலகுள வளங்காண்பான்
பயிலுத லூறுநாளிற் பல்வளங் களுநோக்கி
எயிலுயர் திருநாகை யிடத்துவந் தனனன்றே. 2

கு - ரை: கண்ணுதல் - நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான். விடை ஏறி - இடபவாகனத்தில் ஏறிக்கொண்டு. மயில் இயல் - மயில்போலும் சாயலையுடைய. உலகு உள்ள வளம் காண்பான். எயில் - மதில். கண்ணுதல் விடையேறிப் பார்ப்பதியோடு நாகையிடத்து வந்தனன்.

ஆவயி னுளபலவு மதிசய முறநோக்கி
மேவர மேற்றிசையின் விடையுகைத் தனன்வருங்கால்
தாவரு நவநீதத் தாணுவின் றென்கீழ்பால்
ஓவரு மொருதான முத்தம மெனத்தேர்ந்து. 3

கு - ரை: ஆவயின் - அவ்விடத்தில். அதிசயம் - ஆச்சரியம். மே வர - பொருந்த. விடை யுகைத்தனன் - இடப வாகனத்தை ஏறிச் செலுத்தியவ ராகி. நவ நீதத் தாணு - நவநீதப்பெருமான்; தாணு - கடவுள். தென் கீழ் பால் - தென்கிழக்குத் திக்கில். ஓவரும்=ஓவ அரும் - நீங்குதற்கரிய. தேர்ந்து - தெளிந்து.

பல்லுயிர் களுமீன்ற பார்ப்பதி யாங்கிழிந்து
சொல்லுயர் சிவலிங்கஞ் சுடர்மிக வொன்றுநிறீஇ
ஒல்லையி னெருதீர்த்த முண்டுபண் ணினள்முழுகி
நல்லபன் மலர்கொண்டு நண்புறப் பூசித்து. 4

கு - ரை : ஆங்கு இழிந்து - அங்கே கீழ் இறங்கி. சொல் உயர் - கீர்த்தி மிக்க. சுடர் மிக - ஒளி மிக. நிறீஇ - பதிட்டை செய்து. ஒல்லையின் - விரைவில். உண்டு பண்ணினள்: முற்றெச்சம். நண்பு உற - அன்புமிக. பூசித்து - பூசைசெய்து.

அரவணி பெருமான்பா லணுகுபு தொழுமுயிர்கள்
பரவவ மரணமொழீஇப் பண்புயர் வரங்கொண்டு
கரவகல் பரமனொடுங் கலந்திட விடையுகைத்துப்
புரவுடை யவன்கயிலை புக்கனன் சுரர்வாழ்த்த. 5

கு - ரை : அரவு அணி பெருமான் - பாம்பை ஆபரணமாகத் தரித்த சிவபெருமான். அணுகுபு - அணுகி. பரவு அவமரணம் ஒழீஇ - பரவியுள்ள துர்மரணம் ஒழிந்து. வரங்கொண்டு - வரத்தைப் பெற்று. கரவு அகல் - வஞ்சகமில்லாத. உகைத்து - செலுத்தி. சுரர் - தேவர்கள்.

பூசித்து வரங்கொண்டு கலந்திட.

பரை நிறு வியதிறத்தாற் பார்ப்பதி யீச்சரமென்
றுரைசெயு மொருபெயர்பெற் றோங்கிய தத்தானம்
புரைதப வாங்கடைந்தப் புண்ணியப் புனன்மூழ்கி
விரைமலர் தூய்த்தொழுவார் வீட்டுவர் பிணியனைத்தும். 6

கு - ரை : பரை - பராசத்தி. நிறுவிய - பதிட்டைசெய்த. அத்தானம் பெயர் பெற்று ஓங்கியது. புரை தப - குற்றங் கெட. ஆங்கு - அந்த இடத்தை. தூய் - இட்டு அருச்சித்து. பிணி அனைத்தும் வீட்டுவர்; பிணி - நோய்கள் என்றது அவமிருத்துக்களை. வீட்டுவர் - போக்குவர். தொழு வார் வீட்டுவர்.

குறியிடைக் கொடுநோயன் கொள்ளருந் தீநாற்றஞ்
செறிபெரு முடைநோயன் றிருந்துபற் கடுநோயன்
வெறிமுய லகநோயன் வீசுகை குறைநோயன்
நெறியரு மிவரைவர் நேர்ந்தனர் வசிட்டனையே. 7

கு - ரை : குறியிடைக் கொண்ட கொடுநோயுடையானும், பொல்லாத நாற்றம் நிறைந்த முடைநோயினனும், கொடிய பல் நோயினனும், முயலக நோயுடையானும், கை அழுகிக் குறைந்த தொழுநோயினனும் ஆகிய இந்த ஐந்துபேரும் வசிட்டமுனிவரை எதிர்ப்பட்டனர்.

முனிவர னடிதாழ்ந்து மொய்த்தவெம் பிணிதீரத்
தனியருள் புரிகென்று தாழ்ந்திரந் தனர்வேண்டப்
பனிமதி முடிக்கணிந்த பரமனை யுளத்தெண்ணிப்
புனிதமில் முற்பவத்திற் புரிந்தமை யுளத்துணர்ந்து. 8

கு - ரை: மொய்த்த வெம்பிணி - நிறைந்த கொடிய நோய். புரிக என்று. தாழ்ந்து - வணங்கி. பரமனை - சிவபெருமானை. உளத்து எண்ணி - மனத்தில் தியானம் செய்து. புனிதம் இல் - அனுசிதமான செயல்கள். முற்பவத்தில் - ஒழிந்த பிறப்புக்களில்.

குருமனை மணத்தலினுற் குறளைசொற் றிடுதலினுல்
திருமறை யவர்க்கொலலாற் றீயக ளுண்டிடலான்
மருவுபொன் கள்ளுதலால் வருமுறை நீரைவீர்
பெருநர கனுபவித்துப் பிறந்துமிப் பிணியுற்றீர். 9

கு - ரை: குருவின் மனைவியைப் புணர்ந்தமையாலும், கோள்சொன்னமையாலும், அந்தணரைக் கொலை செய்தமையாலும், கொடிய கள்ளுண்டமையாலும், பொன்னைத் திருடினமையாலும் முறையே நீங்கள் ஐவிரும் பெரிய நரகத் துன்பங்களை அனுபவித்து எஞ்சிய பாவத்தால் பின்னும் பிறந்து இந்த நோய்களை அடைந்திருக்கிறீர்கள்.

பார்முழு வதும்புரக்கும் பார்ப்பதி யினிதமைத்த
சீர்முழு வதும்பொலியுந் தீர்த்தத்தி னினிதாடிப்
பேர்முழு வதுங்கொண்டு பிறங்கிலிங் கமுந்தொழுதால்
ஏர்முழு வதுஞ்சிறப்ப விக்கொடும் பிணியகலும். 10

கு - ரை: ஆகலின், நீங்கள் சென்று பார்வதி தேவியார் அமைத்தருளிய தீர்த்தத்தில் முழுகி, ஆயிரம் திருநாமங்களையும் சொல்லி அந்தச் சிவலிங்கத்தை வழிபடுவிராயின் அழகுமிக இந்நோய்கள் நீங்கும். சீர் - சிறப்பு. ஆடி - மூழ்கி. பேர்முழுவதும் - ஆயிரம் பேர்களும்; என்றது சகத்திர நாமத்தை. "பேரா யிரம்பரவி வானோரேத்தும் பெம்மானை" (தேவா). பிறங்கு - விளங்கும். ஏர் முழுவதும் - அழகு முற்றும். இக்கொடும் பிணி - முறையே நீங்கள் அனுபவிக்கும் இக்கொடிய நோய்கள்.

பின்னர்வண் டிருநாகைப் பெருந்தலத் திடைப்புகுந்து
நன்னர்மெய்ப் புகழ்த்தேவ தீர்த்தத்தி னயந்தாடித்
தன்னிகர் காரோணச் சயம்புவைக் கண்டுதொழின்
மின்னிக ருடல்வாழ்க்கை வெறுத்திடு மருள்வாய்ந்து. 11

கு - ரை: வண் திரு நாகை. நன்னர் - நன்றாக. நயந்து - விரும்பி. தன் நிகர் காரோணச் சயம்பு - தனக்குத்தானே யொத்த காயாரோகண நாதர். கண்டு தொழின் - தரிசித்து வணங்கினுல், மின் நிகர் உடல் வாழ்க்கை "மின்னனைய பொய்யுடலை மெய்யென்ற பாவிநான்" (தாயுமானவர்). அருள் வாய்ந்து வெறுத்திடும்.

மிடைபெறு வானேரு மேவுதற் கரிதாகித்
தடைபடு கயிலாயஞ் சார்ந்திலி தின்புறுவீர்
கடையுறு தொழில்செய்தீர் போதுமி னெனக்கரைய
உடைமனத் தவர்பணிந்தா ரொய்யென விடைகொண்டார்.

கு - ரை : மிடை பெரு வானேரும் - கூட்டமாகப் பொருந்தும் தேவ வரும் என்றது முப்பத்து முக்கோடி தேவரும் என்றபடி. கடையுறு தொழில்- இழிந்த பாவத்தொழில்கள். செய்தீர்: விளி. போதுமின் - செல்வீராக. ஒய் என - விரைவாக. உடை மனத்தவர்: வினைத்தொகை.

மறையுணர் வசிட்டமுனி வாய்மொழி கடைப்பிடித்துக்
குறையுற வருத்துபிணிக் கோட்படு மைவர்களுங்
கறைதப வீரிடத்துங் கலந்துரைத் தவையாற்றி
நிறையரு ளுடையோராய் நெடுங்கயி லையையடைந்தார். 13

கு - ரை : வாய் மொழி - உண்மையுபதேசம்; வாய்மை மொழி. பிணிக்கோட்படும் - பிணிகளால் கொள்ளப்படும். ஐவர்களும்: முற்றும்மை. கறை தப - தாம் செய்த குற்றங்கள் நீங்குமாறு. ஈரிடத்தும் - பார்ப்பதீச் சரத்தும், நாகைக்காரோண தலத்தும். உரைத்தவை ஆற்றி-வசிட்டமுனிவர் சொல்லியவைகளையெல்லாம் செய்து முடித்து. அருளுடையோராய் அடைந் தார்.

பார்புகழ் சிறப்போவாப் பார்ப்பதி யீச்சரத்தின்
சீர்புகழ்ந் தனமினிமேற் றிறல்கெழு முசுகுந்தன்
கூர்மதி யொருமறையோற் கொன்றவெம் பழிகழுவ
நேர்மதி யொடும்புகுந்த நீர்மையு மெடுத்துரைப்பாம். 14

கு - ரை : சிறப்பு ஓவா - மேன்மைகள் நீங்காத. சீர் - சிறப்பு. திறல் கெழு - வலிமை மிக்க. கூர்மதி - நுண்ணறிவுடைய. வெம் பழி - கொடிய பிரமகத்தி தோடம். கழுவ-போக்குதற்கு. நீர்மையும்-தன்மையையும்.

பார்ப்பதீச்சர மான்மியப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1886

முப்பத்தைந்தாவது

முசுகுந்தன் பிரமகத்தி தீர்த்தபடலம்

விரிநிழ லானிமிச மேய மாதவர்
அரிபுரை யளிமுசு குந்த னண்ணுபு
பரிமறை யவக்கொலை பழிதொ லைத்தது
தெரிதர வுரையெனச் சூதன் செப்புவான். 1

கு - ரை: விரிந்த நிழலையுடைய நைமிசம். அரிபுரை அளி முசுகுந்தன் - திருமாலையொத்த காக்குந்தொழிலையுடைய முசுகுந்தன். நண்ணுபு-நண்ணி. பரி - குதிரை. மறையவக் கொலை பழி - அந்தணனைக் கொலை செய்ததனால் உண்டாகிய கொலைப்பாவம். நண்ணுபு பழிதொலைத்தது.

பரிதியின் குலத்தினுற் பவித்த பார்த்திவன்
விரிகதிர்ப் பன்மணி விளங்கு மோலியான்
வரிகழற் காலினன் மங்கை பாகரன்
புரிமுசு குந்தனென் றுரைக்கும் பேரினன். 2

கு - ரை: பரிதியின்குலம் - சூரியகுலம். பார்த்திவன் - அரசன். விரி கதிர் - விரிந்த ஒளியினையுடைய. மோலியான் - கிரீடத்தையுடையவன். வரிகழல் - கட்டப்பட்ட வீரக்கழல். மங்கைபாகர் அன்பு உரி - சிவபெருமானுடைய அன்புக்குரிய.

செறிமரக் கானிடைச் சேனை சூழ்தரக்
குறிதிறற் பரிமிசைக் கொண்டு சென்றுவெம்
பொறியெனத் திரிதரு புகர்வி லங்கெலாம்
வெறிதபுத் தொழிதிறம் வேட்ட மாடினன். 3

கு - ரை: செறி மரம் கான் இடை - நெருங்கிய மரங்களடர்ந்த காட்டினிடத்து; இடை - ஏழனுருபு. குறி திறல் பரிமிசை கொண்டு - குறித்த வலிமையுடைய குதிரையின் மேலேறி. வெம்பொறி என - கொடிய இயந்திரங்கள் போல. புகர் விலங்கு - கொடிய மிருகங்கள். வெறி தபுத்து ஒழி திறம் - வெறிநீங்கி அழியுமாறு. வேட்டம் - வேட்டை.

விளைமுடித் திடுதலும் வெங்க திர்ப்பிரான்
களைதிரைக் கடலகங் கரந்து போயினன்
துனைதரத் திருநகர் துன்னத் தூண்டினன்
முனைமுகத் திரிதரா முரட்க டும்பரி. 4

கு - ரை : விளை - வேட்டைத்தொழில். வெங்கதிர்ப்பிரான் - சூரியன். கரந்து போயினன் - மறைந்தான். துனைதர - வேகமாக. துன்ன-பொருந்த, சென்று சேர. துனைதரத் தூண்டினன். முனைமுகத்து இரிதரா - போர் முனையை விட்டுக் கெட்டோடாத. முரண் கடும் பரி - வலிய வேகமுடைய குதிரை. பரி துனைதரத் துன்னத் தூண்டினன்.

வருவழி மயங்கிய மறைக்கு லத்தவன்
ஒருவனேர் கிடந்தன னரசு ணர்ந்திலான்
கருகிரு ளாதலிற் கடிது போம்பரி
வெருவமற் றவனுர மிதித்துப் போயதே. 5

கு - ரை : வருவழி - வருகின்ற வழியிலே. மயங்கிய - மயக்கத்தை யுடைய. நேர்கிடந்தனன் - எதிரே கிடந்தான். அரசு உணர்ந்திலான் - அதனை முசுகுந்தன் தெரிந்தானிலன். கருகு இருள் ஆதலின் உணர்ந் திலான். கடிது போம் பரி - விரைந்து செல்லும் செலவினையுடைய குதிரை. வெருவ - அஞ்ச. அவன் - அவ்வந்தணனுடைய. உரம் - மார்பு.

பொருபுர வலனகர்ப் புகுது முன்னமே
திருமறை யவனம னுலகஞ் சேர்ந்தனன்
ஒருவரும் வளநக ருற்று மன்னவன்
கருகிரு ளியற்றுதன் கடன்மு டித்தனன். 6

கு- ரை : புரவலன் - அரசனாகிய முசுகுந்தன். மறையவன் - அவ்வந் தணன். நமன் உலகம் - இயமனுடைய உலகத்தை. ஒருவரும் - நீங்குத லிலாத. கருகு இருள் இயற்று தன் கடன் - இராத்திரியில் செய்யவேண்டிய தனது கடப்பாடுகள்.

அடிசில்கை தொட்டன னமளி மேவினன்
வெடிமுழக் கினரழல் வீசு கண்ணினர்
தடிமுதற் பல்படை தாங்கு கையராய்ப்
படிபிர மக்கொலைப் பழிய டுத்ததே. 7

கு - ரை : அடிசில் கைதொட்டனன் - உணவு உண்டான். அமளி - படுக்கையில். பிரமக்கொலைப்பழி - பிரமகத்திதோஷம்.

அதிர்த்திடுஞ் சினந்திடு மங்கை யேந்துவாள்
விதிர்த்திடும் பொருதொழில் விளைக்க வம்மென
வெதிர்த்திடுஞ் சுழன்றிடு மெறியு மெற்றிடுங்
கதிர்த்திடு மெயிறுகள் கறித்து மேல்விழும். 8

கு - ரை : விதிர்த்திடும் - வீசும், அசைக்கும். பொருதொழில் - போர்த்தொழில். வம் என - வருக என்று. சுழன்றிடும் - சுற்றும். எறியும் - வீசும். எயிறுகள் கறித்து - பற்களைக் கடித்துக்கொண்டு.

இன்னணங் கொலைப்பழி யிகன்று டற்றுழி
மன்னவர் மன்னவன் மறுக்க மெய்தினன்
தன்னமு மிதுவென ஞன்றெ ரிந்திடான்
பொன்னவி ரமைச்சரைப் புரிந்து கூவியே. 9

கு - ரை : இன்னணம் - இவ்வாறு. இகன்று உடற்றுழி - பகைத்து வருத்துமிடத்து. மறுக்கம் - துன்பம். தன்னமும் - சிறிதும். இது எனல் - இன்ன காரணம் என்று. பொன் அவிர் அமைச்சர் - வியாழபகவானை யொத்த மந்திரிகள்; பொன் - வியாழன், தேவகுரு. புரிந்து கூவி - விருப் பத்துடன் அழைத்து.

உள்ளதை யுரைத்திட யுள்ளத் தோர்ந்தனர்
கொள்ளரும் பார்ப்பனக் கொலைவந் துற்றதென்
றெள்ளரும் புரவலற் கெடுத்துச் சொற்றனர்
விள்ளரும் பரிக்குப்பின் மேவி னூர்சிலர். 10

கு - ரை : உள்ளத்து ஓர்ந்தனர் - மனத்தால் ஆராய்ந்தனர். கொள்ள அரும் - மனத்தாலும் நினைத்தற்கரிய. பார்ப்பனக்கொலை - பிரம கத்தி. எள்ள அரும் புரவலன் - இகழ்தலில்லாத அரசன் (முசுகுந்தன்). பரிக்குப் பின் மேவினூர் - குதிரையின் பின் வந்தோர்.

வந்தனர் வணங்கினர் வாசி கான்மிதித்
தந்தண னிறந்தன னதரி னென்றனர்
சுந்தர நிலப்பொறை சுமக்குந் தோளினுன்
இந்தவல் வினைக்கினி யென்செய் கோவென்றுன். 11

கு - ரை : வாசி கால் மிதித்து - குதிரை காலால் மிதித்து. அதரின் - வழியில். நிலப்பொறை சுமக்கும் தோளினுன் - பூமிபாரந்தாங்கும் தோள் களையுடைய அரசன்; பூமியைக் காத்தலைப் பூமியைத் தாங்குதல் என்பர். வல்வினைக்கு - கொடிய பிரமக்கொலைப் பாவத்துக்கு. செய்கோ - செய்வேன்; செய்கு ஓ.

அஞ்சலே யஞ்சலே யரச ரேறெனு
எஞ்சலி ருனங்க ளெண்ணி லாதன
துஞ்சலி றீர்த்தங்கள் தலங்க டொக்கன
பஞ்செனப் பறக்குமிப் பாவ மென்றனர். 12

கு - ரை : எஞ்சல் இல் - குறைவில்லாத. துஞ்சல் இல் - நீங்காத. தொக்கன - நிறைந்துள்ளன. இப்பாவம் பஞ்செனப் பறக்கும்.

மந்திர ருரைத்தசொன் மனங்கு றிக்கொடு
செந்திர வியம்வட திசைபு ரப்பவன்
வந்திரப் பவர்முனம் வறிய னும்படி
இந்திர திருவினு னீந்து பார்த்தனன். 13

கு - ரை : மந்திரர் - அமைச்சர். குறிக்கொடு - குறித்து. செந்திரவியம் - மிக்க பொருள்கள். வடதிசை புரப்பவன் - குபேரன். வறியன் - தரித்திரன். இந்திர திருவினுன் - இந்திரச் செல்வமுடைய முசுகுந்தன்.

குலம்படு பசுப்பல கொடுத்துப் பார்த்தனன்
நலம்படு விளைநில நல்கிப் பார்த்தனன்
அலம்படு தீர்த்தங்க ளாடிப் பார்த்தனன்
புலம்படு தலம்பல போற்றிப் பார்த்தனன். 14

கு - ரை : குலம் படு பசு - சிறந்த பசுக்கள். நலம் படு விளை நிலம் - சிறப்புள்ள நன்செய் நிலங்கள். அலம் படு - துன்பத்தைப் போக்கும். புலம் படு தலம் - தன் அறிவுக்குத் தோன்றிய க்ஷேத்திரங்கள். போற்றி - வழிபாடுசெய்து.

ஒன்றினுந் தீர்ந்தில துறுகொ லேப்பழி
கன்றிய மனத்தனுய்க் கலங்கி மன்னவன்
தன்றிருக் குலகுரு வாய சால்புடை
வென்றியின் வசிட்டனை மேவித் தாழ்ந்தனன். 15

கு - ரை : தானங்கள், தீர்த்தங்கள், தலங்கள் முதலியவைகளால் வந்தடைந்த பிரமக்கொலேப் பாவம் தீர்ந்திலது. கன்றிய மனம்-வெதும்பிய மனம். வென்றியின் வசிட்டன் - தவத்தால் வெற்றி பொருந்திய வசிட்ட முனிவர்.

முன்னிகழ் வனைத்தையு மொழியத் தேர்ந்தனன்
என்னினிச் செய்வதென் றிரங்கன் மன்னவ
தன்னிகர் நாகையந் தலத்தை மேவுமுன்
மின்னினு மறையுமிவ் வெங்கொ லேப்பழி. 16

கு - ரை : நிகழ்வு - நிகழ்ந்த செயல்கள். தேர்ந்தனன் - ஆராய்ந்து பார்த்துத் தெளிந்தான். மன்னவ இரங்கல்; இரங்கல் - வருந்தாதே. தன் நிகர் நாகை - தனக்குத் தானே ஒப்பான நாகபட்டினம். மின்னினும் மறையும் - தோன்றி உடனழியும் மின்னலைவிட விரைந்து தொலையும்; மறையும் - அழியும். மேவு முன் - அடையுமுன்னமே; அடைந்தவுடன் என்க.

கடுக்கவின் பெறுகளக் கடவு ளுறைகைநீ
அடுக்குமு னிப்பழி யகலும் போவென
முடுக்கினன் வசிட்டனுண் முளைக்கு மோகைகை
கொடுக்கிய வெழுந்தனன் கொற்ற வேந்தர்கோன். 17

கு - ரை : கடுக் கவின் பெறு களக் கடவுள்; கடு - ஆலகாலவிடம். கவின் - அழகு. களம் - கண்டம்: "கடுக் கவின்பெறு கண்டனும்" (திருவிளை). கடவுள் - சிவபெருமான். அடுக்கும் முன் - சேர்வதற்குமுன்பு. இப்பழி - இந்தப் பிரமக்கொலைப்பாவம். முடுக்கினன் - விரைந்து செலவிடுத்தான். உள் முளைக்கும் ஓகை - மனத்தில் தோன்றும் உவகை. கை கொடுக்கிய - கைகொடுக்க. வேந்தர் கோன் - முசுகுந்தன்.

வழியிடைத் தலமெலாம் வணங்கிப் போற்றுபு
பழிதபு வதரிவாழ் தலம்ப டர்ந்தனன்
விழிகளித் திடவளம் விரும்பி நோக்குபு
பொழிமதுத் தாரினன் போற்றி மீண்டனன். 18

கு - ரை : வழியிடைத் தலம் எலாம் - வழியிலுள்ள தலங்களெல்லாம். பழிதபு வதரி வாழ்தலம் - பாவங்களைப் போக்கும் இலந்தை மரம் தலவிருட்சமாகவுடைய க்ஷேத்திரம். நோக்குபு - நோக்கி. தாரினன் - முசுகுந்தன்.

நாகையை யுறல்குறிக் கொடுந டப்பவன்
மாகயி லாயநேர் குடச வான்பதி
யாகைகொ ணைருதத் தடைந்த மாத்திரை
யோகையின் ருயழிந் தொழிந்த தப்பழி. 19

கு - ரை : குறிக்கொடு - மனத்திற்கொண்டு. மா கயிலாயம் நேர் - மகா கயிலாயத்தை ஒத்த. குடசம் - வெட்பாலை. நைருதத்து - நிருதித் திக்கில். மாத்திரை - அளவில். அப்பழி அழிந்தொழிந்தது.

அதுதெரிந் தனன்மிக வகம கிழ்ந்தனன்
முதுபுகழ்க் குடசநன் மூலத் துற்றனன்
புதுமதி பொலிசடைப் புனிதற் போற்றினன்
கதுமெனப் படர்ந்துகா ரோணத் தெய்தினன். 20

கு - ரை : குடசநன் மூலத்து - வெட்பாலை மரத்தின் அடியில். புனிதன் - சிவபெருமானை. கதுமென - விரைவாக. படர்ந்து - வழிக்கொண்டு.

செறிமலர் விண்ணவ தீர்த்தந் தோய்ந்துதீங்
கெறிதிரு நீறுநன் கியையப் பூசுபு
குறிகுணங் கடந்தொளிர் குழகன் முன்சென்றான்
அறிதுயி லமர்பவ னன்ன வண்ணலே. 21

கு - ரை : விண்ணவதீர்த்தம் - தேவதீர்த்தம். தீங்கு எறி - தீமையைப்போக்கும். பூசுபு - பூசி. குறிகுணங்கடந்து ஒளிர் குழகன்; "தன்னுருவம் யாவருக்கும் தாக்காதான் காண்" (தேவா); "ஊரி லான்குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும், பேரிலானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர், சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு, நேரிலானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்" (கந்தபுராணம்). முன் சென்றான் - சன்னிதியை அடைந்தான். அறிதுயில் அமர்பவன் அன்ன - திருமாலை ஒத்த. அண்ணல் - முசுகுந்தன்.

கண்களி கூர்தரக் கண்டு தாழ்ந்தனன்
பண்களி கூர்தரத் துதியும் பாடினன்
எண்களி கூர்தர வின்ப மெய்தினன்
மண்களி கூர்தரப் புரக்கும் வள்ளலே. 22

கு - ரை : களி கூர்தர - களிப்பு மிக. எண் - எண்ணம். மண் களி கூர்தர - நிலவுலகத்தோர் மகிழ. புரக்கும் - காக்கும்.

விடங்கர்தந் திருமுன மேவித் தாழ்ந்துளத்
தடங்கரும் பெருமகிழ் வமைய வின்சுதைக்
குடங்கரும் வெள்கிய கோலப் பூண்முலைத்
தடங்கருந் தடங்கணாள் சரணந் தாழ்ந்தனன். 23

கு - ரை : விடங்கர் - சுந்தரவிடங்கர். உளத்து அடங்க அரும். இன்சுதை குடங்கர் - இனிய அமுதகுடம். கருந்தடங்கணாள் - நீலாயதாட்சி அம்மையார்.

மற்றுள தலங்களும் வணங்கி வான்றளிக்
குற்றுள வளம்பல வோங்கப் பண்ணுபு
கற்றுள மாந்தர்கள் கலப்ப வள்ளல்பாற்
பெற்றுள விடையொடும் பெயர்ந்து போயினான். 24

கு - ரை : மற்றுள தலங்களும் - மேலைக் காரோணம், அகத்தீசம், நடுத்தலேசம், சுதைக்கடேசம், விண்டுநாதம், நாகநாதம், கார்முகேசம்,

இராமநாதம், கயிலாயநாதம், நந்திநாதம் முதலியனவும் பிறவும். வான் தளிக்கு உற்றுளவளம் - சிறந்த கோயில்களுக்கு முன்பு உள்ளனவாகிய நிபந்தங்கள். பல ஓங்கப் பண்ணுபு - பலவற்றையும் மிகுதியாகச் செய்து. கற்றுள மாந்தர்கள் - கல்வி கேள்வி முதலியவற்றால் மிகுந்த பெரியோர்கள்; "கற்றல் கேட்ட லுடையார் பெரியார்". வள்ளல்பால் - சிவபெருமானிடத்து.

குணமலி புகழ்முசு குந்தன் வெம்பழி
அணவிய தகன்றமை யறியக் கூறினும்
மணமல ரவன்பினும் வந்து போற்றிய
தணவரு மான்மியஞ் சாற்று வாமரோ. 25

கு - ரை : குணம் மலி புகழ் - குணங்களால் நிறைந்த கீர்த்தி. வெம் பழி - பிரமக்கொலை; "கொலைகளிற் கொடுமைசான்ற பார்ப்பனக்கொலை" (காஞ்சிப்புரா). அணவியது - பொருந்தியமை. மலரவன் - பிரமதேவன். பினும் - மறுபடியும். முன்பு பூசித்தமை நடுத்தலேசப் படலத்திற் காண்க. தணவு அரும் மான்மியம் - நீங்குதற்கரிய பெருமைகளை.

முசுகுந்தன் பிரமகத்தி தீர்த்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1911

முப்பத்தாறுவது

பிரமன் பூசித்தபடலம்

கள்ளமோ வியதவத்தார் கனிந்து சூத னடிவணங்கி
வள்ளநேர் மலர்மேலான் வயங்கு நாகைப் பதிபுகுந்து
வெள்ளமார் சடையானைப் பணிந்த சரிதம் விரித்தியென
உள்ளமே வுவப்பொடுமச் சூத னுரைப்பா னுயினன். 1

கு - ரை: கள்ளம் ஓவிய - வஞ்சகத்தன்மை நீங்கிய. தவத்தார் - நைமிசவாசிகள். வள்ளம் நேர் மலர் - கிண்ணத்தையொத்த தாமரைமலர். மலர்மேலான் - பிரமன். வெள்ளம் ஆர் சடையான் - சிவபெருமான்; வெள்ளம் - கங்கைப்பெருக்கு. உள்ளம் மேவு உவப்பொடு.

வானவருஞ் சதகோடி வயங்கு மொருகைத் திறல்வேந்தும்
மோனவருந் தவத்தோரு முளரித் தலைவாழ் நான்முகனும்
ஈனமிலோ ரிடைக்குழுமி யிருந்தா ரந்த விடத்தணைந்தான்
தானவரஞ் சிடவொறுக்குந் தறுகட் டிகிரிப் படைப்பெருமான். 2

கு - ரை: வானவர் - தேவர்கள்; அவர் முப்பத்து முக்கோடி எனும் எண்ணுள்ளோர். சதகோடி - வச்சிராயுதம். வேந்து - இந்திரன்: "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல்). மோன அருந்தவத்தோர்; மோனம் - மௌனம்: "மோன மென்பது ஞான வரம்பு" (கொன்றை வேந்தன்). மோனவரும் தவத்தோரும் எனவும் கொள்ளலாம். முளரி - தாமரை. நான்முகன் - பிரமன். ஈனம் இல் ஓர் இடை: ஓர் இடை - ஒரு இடம். ஈனம் - குற்றம். தானவர் - அசுரர்; தநு புத்திரர் தானவர்: வடமொழித்தத்திதபதம். ஒறுக்கும் - தண்டிக்கும். தறுகண் - அஞ்சாமை. திகிரிப்படை - சக்கராயுதம்.

வந்தமா யோற்கெழுந்து வணங்கி யாரு முபசரித்தார்
சந்தநான் முகன்கண்டுஞ் சற்று மிருக்கை நின்றுமெழான்
கந்தமா மலர்பொருங்கை குவியான் முகம னுங்கரையான்
விந்தநேர் புயந்தடிப்ப மேன்மே லிறுமாப் புற்றிருந்தான். 3

கு - ரை: மாயோன் - திருமால். கண்டும் எழான் - நேரில் பார்த்தும் எழாதவனாய். முகமன் - உபசாரமொழி. இறுமாப்பு - செருக்கு. "இருக்கை எழலும் எதிர் செலவும் ஏனை, விடுப்ப ஒழிதலோ டின்ன - குடிப்பிறந்தார், குன்ரு ஒழுக்கமாக் கொண்டார்" (நாலடி - 143). பெரியோர் தம்பால்

வருவாராயின் நல்லகுடியிற் பிறந்தோர் செய்யும் உபசாரங்களில் ஒன்றேனும் பிரமன் செய்யாமல் செருக்குற்றிருந்தான் என்ருர். இருக்கை எழான், கைகுவியான், முகமன் உரையான் இருந்தான்; அதற்குக்காரணம் இறுமாப்பேயாம்.

இனையான்கொ ளிறுமாப்பை யெண்ணி நெடுமான் முறுவலித்துத்
தனைநோக்குஞ் சிறுமைந்த சித்தந் திரிந்த தன்மையெவன்
புனைமேன்மை யெமைக்கண்டும் பொருக்கென் றிருக்கை நின்றுமெழாய்
துனையாவந் தனஞ்செய்யாய் சும்மா விருந்தாய் சொல்லென்ருன். 4

கு - ரை: இனையான் - படைப்புக்கடவுளாகிய பிரமன். இறுமாப்பை - செருக்கை. நெடுமால் - விஷ்ணு. முறுவலித்து - புன்சிரிப்புக் கொண்டு. தனை நோக்கும் சிறு மைந்த - தன்னையே பெரியோனுக மதித்தொழுகும் சிறுமையினையுடைய மகனே: விளி. சித்தம் திரிந்த தன்மை எவன் - மனம் மாறுபட்டிருத்தற்குக் காரணம் யாது? எம்மைக் கண்டும் பொருக்கென்று எழாய்; பொருக்கென்று - விரைவாக. துனையா - விரைந்து. வந்தனம் - வணக்கம். புனை மேன்மை எமை என்ருர் காத்தற்கடவுளும் உன்னுடைய பிதாவும் ஆகிய எம்மை எனக்கொண்டு.

என்ருன்றன் முகநோக்கி யிண்டை மலர்மே லவனகைத்து
நன்ருனின் மகன்கொல்லோ நானீ யேசித் தந்திரிந்தாய்
முன்ருன்மற் றுனைவணங்கு முறையு நவமே நாட்டிடுவை
ஒன்ருநிற் கண்டெழா துறையிற் ருேட மென்னென்ருன். 5

கு - ரை: என்ருன் தன் - என்று கூறிய திருமாலுடைய. நின் மகன் கொல்லோ - உன் மகனே. நவமே நாட்டுவை - புதிதாகச் சொல்வாய். தோடம் என் - குற்றம் யாது.

உந்திவா யுனைத்தந்தே னுருநீ யதனு லென்மைந்தன்
சிந்தியா தமர்தலினுற் சித்தந் திரிந்தா யென்றுரைத்தேன்
புந்தியா யாதுபிழை புகன்றே னென்ருன் திருநெடுமான்
முந்திநான் முகனங்கை தட்டி யீது மொழிகின்ருன். 6

கு - ரை: உந்திவாய் - உந்திக்கமலத்தினின்று. தந்தேன் - தோற்றுவித்தேன். சிந்தியாது - கருதாமல். புந்தியாய் - அறிவுடையவனே. அங்கை தட்டி - கைகளைக் கொட்டி.

எண்ணுது நீயுரைத்தாய் எண்ணிப் பலகா லுனைப்படைத்தேன்
அண்ணுன்மற் றதனுலே யானுய் மைந்த னெனக்கொருநீ
ஒண்ணுவற் புதமேவ வுனையான் பணியும் படிசொற்ருய்
கண்ணுமற் றிஃதெங்குக் கற்ரு யென்ருன் கமலத்தோன். 7

கு - ரை : எண்ணுது - ஆலோசியாமல். பலகால் - பலதடவைகளில். அண்ணுல் - பெருமையுடையவனே. ஒரு நீ எனக்கு மைந்தன் ஆனுய். அற்புதம் மேவ - வியப்புற. சொற்ருய் - சொன்னுய். கண்ணு - கருதாத. கண்ணு - கண்ணனே என்றது கருமைநிறங் கருதி எனலுமாம். கமலத்தோன் - பிரமதேவன்.

மாயோன்வெஞ் சினங்கொண்டு மறந்து மினியிம் மொழிபுகலேல்
தூயோயென் ருன்பல்காற் சொல்வேன் தெரிந்தென் ருன்பிரமன்
நீயோத லெவ்வலியா னிகழ்த்தென் றெருமா யவன்வினவ
ஆயோர்வி லான்முதனு னெவைக்கு மென்ரு னஞ்சாதே. 8

கு - ரை : மாயோன் - திருமால். இம்மொழி - இத்தகாத வார்த்தை. தூயோய் - பரிசுத்தனே. பல்கால் - பலதடவையும். எவ்வலியால் - எந்த வலிமையால். ஓர்வு இலான் - மேல்வரக் கடவனவற்றை ஆராயாதவன். ஆய் ஓர்வு இலான். நான் எவைக்கும் முதல் என்ருன். முதல் - பிரமப் பொருள்.

அஞ்சான்சொற் றனசெவியி னழற்ச லாகை கடுத்தேற
மஞ்சாருந் திருமேனி மாயோ னுள்ள மிகப்புழுங்கி
எஞ்சாத முதல்யானே யில்லை வேறு முதலென்ருன்
நஞ்சாருங் களத்தண்ண லுண்மை மனத்து நயவாதே. 9

கு - ரை : சொற்றன - சொன்ன சொற்கள். அழற் சலாகை - நெருப்பிற்காய்ச்சிய இருப்புச் சலாகை. கடுத்து - விரைந்து. மஞ்சு - மேகம். எஞ்சாத முதல் - குறையில்லாத முதற்கடவுள். யானே, வேறு முதல் இல்லை என்ருன். புழுங்கி - புழுக்கமடைந்து; வெந்து. நஞ்சு ஆரும் களத்து அண்ணல் - சிவபெருமான்; நஞ்சு - ஆலகாலவிடம். களம் - கண்டம். அண்ணல் உண்மை நயவாமல் - சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்னும் உண்மையை எண்ணுமல். எண்ணுமைக்குக் காரணம் உள்ளம் மிகப் புழுங்கியமையே. 'எஞ்சாத முதல் யானே இல்லை, முதல் வேறு என்ருன்' புழுக்கத்தால் வாய்தப்பிக் கூறினுன்: இந்த நயம் இன்புறற் பாலது.

விண்டுநீ யுரைத்தமொழி வெறும்பொய் யானே முதலென்றற்
குண்டுகாண் பல்லுலகு மொருங்கு சான்று சொலுமென்ருன்
கண்டுநேர் மொழிக்கலைமான் கலந்த நாவிற் கடவுளரி
மண்டுகோ பத்தழலான் மதியில் கொடியோ னீயென்ருன். 10

கு - ரை : விண்டு: அண்மைவிளி. ஒருங்கு - ஒருசேர. சான்று - சாட்சி. கண்டு நேர்மொழி - கற்கண்டையொத்த மொழியினையுடைய. கலைமான் - கல்வித் தெய்வமாகிய நாமகள். நாவிற்கடவுள் - நாவினையுடைய பிரமதேவன். அரி - விஷ்ணுமூர்த்தி. மண்டு கோபத்தழலால் - நிறைந்த

கோபாக்கினியால். மதி இல் கொடியோன் - அறிவில்லாத பொல்லாதவன்; என்று பிரமதேவனைப் பார்த்து அரி கூறினர் என்க.

வேறு

கொடியனென் றுந்தி பூத்த கொண்டல்சொற் றிடுத லோடுங்
கடியபூ வோனெ ழுந்து கரியவன் கபோல மேலாற்
படியவோர் கரத்த றைந்தான் பைந்துழாய்ப் படலை யானும்
முடியமற் றவன்க போல முறிதரப் புடைத்தான் கையால். 11

கு - ரை : உந்திபூத்த கொண்டல்-திருமால். பூவோன் - பிரமதேவன். கரியவன் கன்னமேலால் - திருமாலின் கன்னத்தின்மேல். கரத்து அறைந்தான் - கையால் அறைந்தான். பைந்துழாய்ப்படலையான் - மாயோன்; படலை-தழை விரவித்தொடுத்தமாலை. கபோலம் முறிதர-கன்னம் பெயரும்படி.

மறையவன் றண்டங் கொண்டு சுழற்றினன் மணிபோல் வண்ணத்
திறைவனுந் தண்டங் கொண்டா னெதிர்ந்திரு வருங்க லாய்த்தார்
முறையல வென்று வானோர் மொழிதலுங் கொள்ளார் விள்ளா
தறைமறை யிடையே தோன்றி யறைந்தது பலருங் கேட்ப. 12

கு - ரை: மறையவன் - பிரமன். தண்டம் - தண்டாயுதம். மணிபோல் வண்ணத்து இறைவன் - நீலமணிபோலும் திருமேனி நிறத்தையுடைய திருமால். தண்டம் கொண்டான் - தன்கரத்திலிருந்த தண்டாயுதத்தை எடுத்தான். கலாய்த்தார் - கலகம் செய்தனர். கொள்ளார் - கொள்ளாதவராய்: முற்றெச்சம். விள்ளாது அறை மறை - வேதம். இடையே - கலாம்விளைக்கும் அப்பிரமவிட்டுணுக்களின் நடுவில்.

இருவருங் கலாய்த்தல் வேண்டா வெமக்குமெந் தலைக்கு மெட்டா
ஒருவருஞ் சுயம்பு மூர்த்தி யோங்கொளி யாய பெம்மான்
மருவருஞ் சிவனே முன்னேன் மற்றுநீ ரல்லீ ரென்ன
வெருவருந் திறத்தா ரந்த மொழியையும் விருப்பிற் கொள்ளார். 13

கு - ரை : கலாய்த்தல் - கலகம் செய்தல். எமக்கும் - வேதமாகிய எமக்கும்; எமக்கு என்றது சாகைகள் பலவற்றையுடைய நான்மறைகளை. எந்தலைக்கும் - வேதசிரசாகிய உபநிடதங்களுக்கும். எட்டா ஒருவரும் - எட்டாமல் நீங்கும்; ஒருவரல் - நீங்குதல். சுயம்பு மூர்த்தியும் பெம்மானும் ஆகிய சிவனே முழுமுதற்கடவுள். முன்னேன்; "முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி"(தேவா). நீர் அல்லீர் - நீவிர் முதற்கடவுளாக மாட்டீர். மற்று வினைமாற்றின்கண் வந்தது. வெருவ அரும் திறத்தார் - அஞ்சுதலில்லாத வலியோர். அஞ்சத்தக்கவைகட்கு அஞ்சாதகாரணத்தால் வெருவரும் என்றார். அந்த மொழியையும்-வேதங்கள் கூறிய அச்சொல்லையும்: இறந்தது தழீஇய எச்சவும்மை.

ஒருவரை யொருவர் சீற்றத் துடலுபு மொத்தா நிற்பர்
அருவரை குலேய வார்ப்பா ராசைக ளெட்டும் போவர்
பருவரை யனைய திண்டோள் கொட்டுவர் பார்முன் யாவும்
மருவரை நொடியிற் றூளாம் படியமர் வலிந்து செய்வார். 14

கு - ரை: சீற்றத்து உடலுபு மொத்தா நிற்பர் - கோபத்தால் மாறுபட்டு மோதிக்கொள்வர். அருவரை குலேய - மலேகள் குலேயும்படி. ஆசைகள் எட்டும் - திசைகள் எட்டும். பார் முன் யாவும் - பூமி முதலிய எல்லாவுலகங்களும்.

இவர்நிலே யின்ன தாக விந்திரன் முதல்வா னேருந்
தவர்புகழ் கயிலே நண்ணித் தம்பிரான் சரணந் தாழ்ந்து
கவர்மனப் பிரமன் மாயோன் கலாய்த்தலே யெடுத்துக் கூறப்
பவர்படு சரணத் தெம்மான் பவளவாய் முறுவ ரேற்றி. 15

கு - ரை: தவர் புகழ் - தவத்தையுடையோர் புகழும். தம்பிரான் - சிவபெருமான். கவர் மனம் - மாறுபட்ட மனத்தையுடைய. கலாய்த்தலே - கலகம் செய்யும் நிலேயை. பவர் படு சரணம் - சிவந்த திருவடிகள்; பவர் - பவளம். முறுவல் - புன்சிரிப்பு.

அலேயவர் செருக்கு மாற்றி யருடுமென் றவரைப் போக்கி
நினேயமற் றெவர்க்கு முற்ரு நீள்பெருங் கருணே யாலே
கனேயதெண் டிரைசூழ் மண்மேற் கலாய்த்திடு மிருவர் காணத்
துனேயவிண் கடந்த தெய்வச் சோதியா யெழுந்து நின்ருன். 16

கு - ரை: அருள்தும் - அருள் செய்வோம். அவரை - இந்திரன் முதலிய வானேரை. எவர்க்கும் முற்ரு - எவருக்கும் முடியாத. கனேய - ஒலி பொருந்திய. கலாய்த்திடும் இருவர் - பிரம விட்டுணுக்கள். துனேய - விரைவில். விண்கடந்த சோதியாய் - விண்ணுலகத்தையும் கடந்து அப்பாற் சென்ற சோதியாகி. எழுந்து - ஊடுருவி.

சோதியை யிருவ ருங்கண் டென்னிதன் ரேற்ற மென்று
நீதியை யுணரா ராகி நெட்டுயிர்ப் பெறிந்து நின்ருர்
ஆதியை யுணர்த வத்தோ ரடைந்திரு வோரு ளுங்கீழ்
மீதியை யந்த மாதி கண்டவர் மேலோ ரென்ருர். 17

கு - ரை: இதன் தோற்றத்துக்குக் காரணம் யாது? உணரார் ஆகி - உணராதவராய். நெட்டுயிர்ப்பு - பெருமூச்சு. தவத்தோர் அடைந்து - தவசிகள் வந்து. கீழ் மீது இயை அந்தம் ஆதி கண்டவர் - கீழும் மேலும் பொருந்திய அந்தம் ஆதிகளேக் கண்டவரே. மேலோர் - உயர்ந்தோர்.

அருந்தவ ரிந்த வார்த்தை யறைதலு மயனு மாலுந்
திருந்தமற் றியாமே கண்டு சிவணலா மேன்மை யென்று
பொருந்தமிக் குவகை நெஞ்சிற் றனித்தனி நினைவு பூண்டு
வருந்தமுற் புரிபோர் தீர்ந்து மற்றிது செய்தா ரன்றே. 18

கு - ரை: அருந்தவர் - அரியதவத்தையுடைய தெய்வமுனிவர்கள். சிவணலாம் மேன்மை - மேன்மையை அடையலாம்; சிவணுதல் - பொருந்துதல், நினைவுபூண்டு - நினைத்து. முற்புரி போர் தீர்ந்து - முன்னே செய்த போரைவிட்டு நீங்கி. இது செய்தார் - இச்செயலைச் செய்யத் தொடங்கினர்.

அடிதெரிந் திடுவ லென்றே யரிமுர ணேன மாகிப்
படிமுழு திடந்து சென்றும் பாதலங் கடந்து மப்பால்
ஓடிவற முயன்று செல்லு முரனிலான் சிறிதுந் தேரான்
மடிவின்முன் புக்க வாறே வந்துமட் சோர்ந்து வீழ்ந்தான். 19

கு - ரை: அடிதெரிந்திடுவல் - அடியைக் காண்பேன். ஏனம் ஆகி - பன்றியுருக்கொண்டு. படி முழுது இடந்து - பூமிமுழுவதையும் அகழ்ந்து. பாதலம் கடந்தும் - பாதலவுலகத்தைத்தாண்டியும். உரன் இலான் - வலிமையில்லாதவனாய். தேரான் - தெளியாதவனாய். மண் சோர்ந்து வீழ்ந்தான் - பூமியில் சோர்ந்து விழுந்தான்.

கழுகுரு வெடுத்து வேதன் ககனமுற் றுருவிச் சென்றும்
வழுவற வப்பாற் செல்லும் வலியிழந் திளைப்பு மேவப்
பழுதின்முன் சென்ற வாறே பறந்துவந் திதன்றன் சென்னி
முழுவதுங் கண்டே னென்றோர் பொய்ம்மொழி மொழிந்தா னன்றே. 20

கு - ரை: கழுகு உரு எடுத்து வேதன் - பிரமன் கழுகுவடிவத்தை மேற்கொண்டு. ககனம் முற்று - ஆகாயம் முழுவதும். உருவி - ஊடுருவி. வலி இழந்து - வலிமைதொலைந்து. இளைப்பு மேவ - களைப்புப் பொருந்த. இதன் தன் சென்னி முழுவதுங் கண்டேன் - இவ்வழற்பிழம்பின் உச்சிமுழுதும் கண்டேன். பொய்ம்மொழி - பொய்வார்த்தை. பிரமனுக்குக் கழுகு வடிவும் உண்டென்பது: "ஒருகழு கும்ப ரேகி யுழன்றுங்கா ணரியான் பாதம், இரு கழு கென்றுங் காணூஉ இறைஞ்சு"(அம்பர்ப்புரா - நந்தன்வழி - 90 செய்). திருக்கழுக்குன்றச் சிலேடை - 29 காண்க.

பொய்ம்மொழி கிளத்த லோடும் பொலியுமச் சோதி நாப்பண்
மெய்ம்மொழிப் பெருமான் றோன்றி வேதநிற் கொழிக வென்றான்
அம்மொழி யலரு ளான்கேட் டஞ்சலித் தடியில் வீழ்ந்தென்
வெம்மொழிப் பிழையெண் ணாம லருளுதி மேலோ யென்றான். 21

கு - ரை: கிளத்தலோடும் - பிரமன் சொன்ன அளவிலே. நாப்பண் - நடுவிடம். மெய்ம்மொழிப்பெருமான் - சத்தியமே வடிவாகவுள்ள சிவபிரான். வேத - பிரமனே: விளி. வேதம் நிற்கு ஒழிக - வேதங்கள் உன்னைவிட்டு நீங்கக்கடவது; நிற்கு: உருபுமயக்கம். அம்மொழி - அச்சாபமொழியை. அலர் உளான் - பிரமன். வெம்மொழிப்பிழை - கொடிய பொய்ம்மொழி புகன்றபிழையை, எண்ணுமல் - திருவுளங்கொள்ளாமல். அருளுதி - அருள் செய்வீராக. அலர் - பழிமொழியுமாம்.

இரந்தவர் வறிய ராகா வெம்பிரான் கருணை கூர்ந்து
வரந்தரு நாகை யெய்தி மயங்கனீ முன்பூ சித்த
பரந்தபே ரருளி லிங்கம் பராய்த்தொழிற் பெறுவை யென்றான்
நிரந்தர முதல்வன் பெம்மா னேயென நெடியோ னோர்ந்தான். 22

கு - ரை: எம்பிரான் - சிவபெருமான். வரம் தரு - மேன்மை பொருந்தும். மயங்கல் - மயங்காதே. பராய்த்தொழின் - துதித்து வணங்கினல். தொழிற்பெறுவை - படைத்தல் தொழிலை மீண்டும் பெறுவாய். நிரந்தரம் முதல்வன் பெம்மானே - முழுமுதற்கடவுள் சிவபெருமானே. நெடியோன் - திருமால்.

மலரவன் முன்போ னுகை வந்துயர் நடுத்த லேசத்
தலர்செறி தீர்த்தத் துள்ளாற் குண்டிகை யறலும் பெய்து
பலர்புகழ் விதியி னுடிப் பரமனைப் பன்னு ளேத்திக்
கலர்கொளற் கரிய வேத முழுவதுங் கைக்கொண் டானல். 23

கு - ரை: மலரவன் - பிரமன். நடுத்தலேசத்திலுள்ள தீர்த்தத்திலே கமண்டல நீரையும் பெய்து. குண்டிகை - கமண்டலம். அறல் - நீர். விதியின் ஆடி - விதிப்படி முழுகி. கலர் - வீணர். வேதம் முழுவதும் - வேதங்கள் முழுமையும். கைக்கொண்டான் - மீளவும் நினைவிற்கொண்டான்.

திரையெறி பிரம நீர்வி சேடமெப் போது மேனுங்
கரைபுகழ் மிதுனத் திங்கட் கண்ணபக் கத்தி லெட்டாம்
புரையறு திதியும் வெய்யோன் வாரமான் றலைபு ணர்ந்த
வரைவில்புண் ணியநன் னாளு மாவிசே டங்காண் மூழ்கில். 24

கு - ரை: பிரம நீர் விசேடம் - பிரமதீர்த்தவிசேடம். எப்போது மேனும் - எக்காலத்தும் உள்ளதாயினும். மிதுனத்திங்கள் - ஆனி மாதம். கண்ணபக்கம் - அபரபக்கம்; கிருஷ்ணபக்ஷம். எட்டாம்திதி - அட்டமிதிதி. வெய்யோன் வாரம் - ஞாயிற்றுக்கிழமை. மான்தலை - மிருகசீரிடம். வரைவு - எல்லை.

ஆனி மாதம் அபரபக்கம் அட்டமிதிதியுடன் ஞாயிற்றுக்கிழமையும் மிருகசிரிடநட்சத்திரமும் கூடிய நாளில் பிரமதீர்த்தத்தில் முழுகினுல் பெரு நலம் பெறுவர் என்க.

வேண்டிய வேண்டி யாங்கே யடியர்க்கு விளக்கு நாகை
ஈண்டிய மறையோன் பெற்ற பேற்றினை யெடுத்துச் சொற்றுந்
தூண்டிய விளக்கே மானச் சுடருமத் தலமே சார்ந்து
பாண்டியன் கயநோய் தீர்ந்த படியினி யெடுத்துச் சொல்வாம். 25

கு-ரை: வேண்டியவைகளை வேண்டியபடியே அடியார்களுக்கு அளிக்கும் நாகையில் பிரமன் பெற்ற பேற்றைக் கூறினேம். மறையோன் - பிரமதேவன். தூண்டிய விளக்கையொத்து விளங்கும் அத்தலம். கயநோய்-க்ஷயநோய். தீர்ந்தபடி - நீங்கிய விதம்.

பிரமன் பூசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1936

முப்பத்தேழாவது

பாண்டியன் கயநோய் தீர்த்தபடலம்

மாதவர் சூத மாமுனி செம்பொற்
பாதமி றைஞ்சிப் பாண்டியன் வந்து
போதவி றைஞ்சும் பொற்புரை யென்ன
மேதகு மன்னுன் ஓதுதல் வேட்டான். 1

கு - ரை: மாதவர் - நைமிசமுனிவர். போத இறைஞ்சும் - மிக வழிபடும், பொற்பு உரை என்ன. அன்னுன் - சூதமுனிவர்.

கண்ணே விடுத்துக் கற்பக நோக்கு
மெண்ணே யிலாத வீர்ம்பொழில் சூழ்ந்து
விண்ணே யுரிஞ்சி வேழ மெழும்பூம்
பண்ணே வளஞ்சால் பாண்டிய நாடு. 2

கு - ரை: கண்கள் சென்று கற்பகத்தை நோக்கும், எண்ணே இலாத - எண்ணிலாத: ஐ சாரியை. ஈர்ம்பொழில் - குளிர்ந்த சோலே. உரிஞ்சி - தடவி. வேழம் - வேழக்கரும்புகள்; மூங்கில் எனினுமாம். பண்ணே - வயல்.

அண்ணிய மேன்மை யத்திரு நாட்டிற்
றிண்ணிய நொச்சி சேர்கரு மேகம்
பண்ணிய போர்வைப் பைம்பட மானும்
புண்ணிய மதுரா புரியெனு மூதூர். 3

கு - ரை: நொச்சி - மதில். கருமேகம் - கரிய நிறமுடைய மேகங்கள். போர்வைப் பைம்படம் - போர்வையாகிய பசிய ஆடை. மானும் - ஒக்கும்.

அந்நகர் வாழ்வா னுன்ற குணத்தான்
மின்னகு வேலான் மெய்ப்புகழ் பூண்பான்
ஒன்னலர் மோலி யுரிஞ்சு பதத்தான்
மன்னவன் வீர பாண்டியன் மன்னே. 4

கு - ரை: ஆன்ற குணம் - அடக்கமுடைய குணம்; ஆன்ற - நிறைந்த. ஒன்னலர் மோலி - பகையரசருடைய முடி. பதத்தான் - கால்களேயுடையவன். வீரபாண்டியன் என்பவன்.

நாடு புரக்கு நாட்சிலர் வந்து
கூடு விலங்குக் கொள்ளை மலிந்த
வீடு கொடுக்கும் வேட்டமி லாமே
ஆடு கழற்கா லாயுணர் என்றார். 5

கு-ரை: நாடு புரக்கும் நாள் - நாட்டை ஆட்சிபுரியும் காலத்து. விலங்குக் கொள்ளை மலிந்த - மிருகங்களின் தொல்லைகள் மலிந்தன. கொள்ளை - துன்பம். வேட்டம் - வேட்டையாடுதல்.

என்றலும் வாசி யேறி யியக்கிப்
பொன்ற லிலாத பொருநர்கள் சூழ
வென்றல தோயா வில்லொர்கை யேந்திக்
கன்றலில் கோமான் காடு புகுந்தான். 6

கு-ரை: வாசி ஏறி இயக்கி - குதிரையின்மேல் ஏறிச் செலுத்தி. பொன்றல் இலாத - அழிதலில்லாத. பொருநர் - வேட்டையாட்கள். வென்று அலது ஓயா வில்.

கூடு திறத்திற் கோண்வலை யாத்துக்
காடு கலைக்கக் கால்கள் விசைத்தே
யோடுபன் மாக்க ளொருங்கு படுக்கச்
சாடுத லுற்றான் சராசனங் கோட்டி. 7

கு-ரை: கோண் வலை யாத்து - வலிய வலையைக் கட்டி. பன் மாக்கள் - பல விலங்குகள். படுக்க - கொல்ல. சராசனம் கோட்டி - வில்லை வளைத்து.

கூர்முக வாளி கோத்து விடுத்துப்
போர்கெழு தோளான் பொற்ப வுலாங்கால்
ஆர்தரு வாளி யத்தனை யுள்ளு
மோர்திறல் வாளி தப்பி யொதுங்கி. 8

கு-ரை: கூர்முக வாளி - கூரியமுனையுடைய அம்புகள். உலாம் கால் - உலாவும் காலத்து. திறல் வாளி - வலிய அம்பு.

மாலற நோற்கு மாதவ னாய
காலவ னென்பான் கைதுணி செய்யச்
சீலமி லாதான் செய்ததி தென்றம்
மேலவன் மிக்கு வெஞ்சினங் கொண்டு. 9

கு-ரை: மால் அற நோற்கும் மாதவன் - அறியாமையாகிய மயக்கம் நீங்குமாறு செய்யும் பெரிய தவத்தையுடையோன். மால்-மயக்கம். காலவன்

என்னும் தவசி. துலைசெய்ய - துண்டாக்க. சீலம் இலாதான் செய்தது இது; சீலம் - நல்லொழுக்கம். மேலவன் - காலவன் என்னும் மேம்பட்டவன்.

சொல்லரும் வெங்கய நோய்தொடக் குண்டு
செல்ல லழுந்திச் சிதறுக வென்முன்
மல்ல லமைந்த மதிக்குல மன்னன்
அல்ல லடைந்தவ னுயடி வீழ்ந்து. 10

கு - ரை : வெங்கய நோய் - கொடிய க்ஷயநோய். செல்லல் அழுந்தி - துன்பத்துள் மூழ்கி. சிதறுக - அழிக. மல்லல் - வளப்பம். மதிக்குல மன்னன் - சந்திரவங்கிசத்து விரபாண்டியன் என்னும் அரசன். அல்லல் - துன்பம்.

பொறியிலி யானறி யாது புரிந்தேன்
அறிவுடை யாய்கமை செய்தரு ளாயேற்
பிறிதொரு சார்பிலை யென்பது பேசச்
செறிகுண மாமுனி சிந்தை யிரங்கி. 11

கு - ரை : பொறி இலி - அறிவில்லாதவன். கமை செய்தருள் - பொறுத்தருளுக; பொறுத்தருளாது கைவிட்டால். பிறிது ஒரு சார்பு - வேறொரு பற்றுக்கோடு. பேச - விண்ணப்பஞ்செய்ய. மாமுனி-காலவமுனி.

நாகை யெனப்புகல் நற்றல மெய்தித்
தோகை யொடும்பர னைத்தொழு தேத்தின்
ஆகை கொடுன்னை யடுங்கய வெந்நோய்
ஏகை யுறுங்கடி தேகுதி யென்முன். 12

கு - ரை : தோகையொடும் பரனைத் தொழுதேத்தின் - மயில் போன்ற சாயலையுடைய உமாதேவியாரோடும் சிவபெருமானை வணங்கித் துதித்தால். ஆகை கொடு - ஆதல் கொண்டு. அடும் - வருத்தும். ஏகை உறும் - ஏகுதல் செய்யும்; தொலையும் என்க. ஏகுதி - செல்வாய்.

என்னலு மன்னவ னிண்டை மலர்த்தாள்
நன்னரி றைஞ்சுபு நாகை யடைந்து
பொன்னவிர் வானவ புண்ணிய தீர்த்தம்
முன்னமு வந்துற மூழ்கின னன்றே. 13

கு - ரை : இண்டை மலர்த்தாள் - மலர்போலும் திருவடி. நன்னர் இறைஞ்சுபு-நன்முக வணங்கி. வானவ புண்ணிய தீர்த்தம் - தேவதீர்த்தம். முன்னம் உவந்து - மனமகிழ்ந்து. முன்னம் - முற்பட எனினுமாம்.

குலமுத லோர்தரக் கொண்ட கயத்தின்
வலமத னாலற மன்னவர் மன்னன்
புலனம ராதி புராணனை யேத்திப்
பலனரு ளம்மை பதங்களுந் தாழ்ந்து. 14

கு - ரை : குலமுதல் - தன்குல முதல்வனாகிய சந்திரன். கயத்தின்வலம் - க்ஷயரோகத்தின் வலிமை. அதனால் - தேவதீர்த்தத்தில் மூழ்கிய காரணத்தினால். புலன் அமர் - அறிவு சொரூபமாயுள்ள, ஆதிபுராணக் கடவுளை. பலன் அருள் - பயனைக்கொடுக்கும். அம்மை - கருந்தடங்கண்ணம்மையாம்.

உள்ள தலங்க ளனைத்து முவந்து
கள்ளமில் மன்னவன் கைதொழு தேத்தி
நள்ளருந் தன்குல நன்முதல் கண்ட
விள்ளருந் தீர்த்தம் விரைந்து படிந்தான். 15

கு - ரை : உள்ள தலங்கள் - நாகைக் காரோணத்தில் உள்ள வேறு பல தலங்களையும். கள்ளம் இல் மன்னன் - வஞ்சகமில்லாத வீரபாண்டியன். நள் அரும் - பொருந்துதற்கரிய. தன் குல நன்முதல் - சந்திரன். கண்ட - தோண்டிய. தீர்த்தம் - சந்திர தீர்த்தம்.

சோமலிங் கப்பெயர் சூடிய நாதன்
தாமரைச் செஞ்சர ணந்தலைச் சூடி
மாமரு வும்பல் வரங்களும் பெற்றுக்
கோமகன் றன்னகர் கூடுபு வாழ்ந்தான். 16

கு - ரை : சோமலிங்கப் பெயர் சூடிய நாதன் - சந்திரனால் பூசிக்கப்பட்ட சிவலிங்க மூர்த்தி. கோமகன் - வீரபாண்டியன். தன்னகர் - பாண்டி நாட்டிலுள்ள தன்னுடைய நகரம்.

தென்னவன் வெங்கய நோய்தெற வந்து
தன்ன மிலாரருள் சார்ந்த துரைத்தாம்
பன்னரும் வெந்தழல் வந்து பணிந்தே
இன்ன லறுத்த தினிச்சொல லுற்றாம். 17

கு - ரை : தென்னவன் - பாண்டியன். தெற - வருத்த. தன்னம் இல் - குறைவில்லாத. வெந்தழல் - அக்கினிதேவன். இன்னல் - நேர்ந்த துன்பம்.

பாண்டியன் கயநோய் தீர்த்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1953

முப்பத்தெட்டாவது

அக்கினி பூசித்தபடலம்

கரியமல வேரறுத்துக் கடுங்கூற்றி னுயிர்குடித்த
வரியதிரு வடிநீழ லடையுமுயற் சியர்வணங்கித்
தெரியவழல் பூசித்த திறமுரைத்தி யெனமகிழ்ந்து
பிரியமிகு சூதமுனி பேசுதலுற் றனன்மாதோ. 1

கு - ரை: கரிய மல வேர் - ஆணவ மலத்தின் முதல்; மல வேர் - மலத்தின் வேர். கடுங்கூற்று - கொடிய இயமன். முயற்சியர் - முயற்சியை யுடைய நைமிச முனிவர்கள். அழல் - அக்கினிதேவன்.

விதியின்முழு துலகளிப்பான் மேதக்க பெருங்குணத்தான்
மதிமரபி னுற்பவித்தான் பிரதீப னெனுமன்னன்
அதிநலத்தி னவனொருகோ னடாத்தியமர் தருநாளில்
துதிமிகுத்த விருமைந்தர் தோன்றின ரவன்றவத்தில். 2

கு - ரை: விதியின் - நீதி முறைப்படி. முழுதுலகு - உலக முழுவதையும். மதி மரபு - சந்திரவங்கிசம். பிரதீபன் என்பவன். கோல் - செங்கோல். இருமைந்தர் - இரண்டு புத்திரர்.

மூத்தமகன் றேவனென மொழியுமொரு பெயரினன்சீர்
பூத்தவிளை யவன்பெயர்சந் தனுவெனயா வரும்புகல்வார்
ஏத்தவிவர் வளர்நாளி லிகபோக மதியான்மண்
காத்தபிர தீபனருள் கைக்கொள்வான் றுறவடைந்தான். 3

கு - ரை: மூத்த மகன் தேவன், இளைய மகன் சந்தனு. இகபோகம் மதியான் - இம்மைப்போக நுகர்ச்சியை மதியாதவனாய். மண்காத்த பிரதீபன் - உலகையாண்ட பிரதீபன் என்னும் அரசன். துறவறத்தை மேற்கொண்டான். கைக் கொள்வான் - கொள்ளும்பொருட்டு.

தந்தைதுற வடைந்ததிறந் தகவுணர்ந்து மூத்தமக
னிந்தையிறே வனுங்கடல்சூழ் நெடுநிலத்தி னாசையறுத்
தந்தைதபு துறவடைந்தா னஃதுணர்ந்து மிளமைந்தன்
சிந்தைவிருப் பொழியானாய்ச் சேணிலங்காத் தினிதிருந்தான். 4

கு - ரை : தக உணர்ந்து - நன்றாக அறிந்து. மூத்த மகனாகிய தேவனும். நிந்தை இல் - பழியில்லாத. நிலத்தின் ஆசை - மண்ணாசை. அந்தை தபு - துன்பத்தினீங்கி. அந்தை=அரந்தை - துன்பம். இளமைந்தன் - இளையமகன். சேண் நிலம் - உயர்ந்த நிலவுலகம்.

சந்தனுவென் பவனின்ற தந்தையனு மதியின்றி
யந்தனுமெண் ணாதவர சாட்சிமேற் கோடலினால்
வந்ததுபன் னிருவருட மழையிலாவற்கடமுட்
டந்ததுவெங் கொடுந்துயரந் தரணியிரு திணையுயிர்க்கும். 5

கு - ரை : அந்தனும் எண்ணாத - குருடனும் நினையாத. வற்கடம் - பஞ்சம். தரணி - பூமி. இருதிணை உயிர்க்கும் - உயர்திணை அஃறிணையாகிய உயிர்களுக்கெல்லாம். வெங்கொடுந்துயர் தந்தது.

விரவியவந் நாள்விசுவா மித்திரன்செய் யொருமகத்திற்
பரவியவே றூன்கிடையாப் பரிசினான் மதிமயங்கி
யுரவியலும் பொதுவியல்பி னாலொன்றே யெனக்குறித்துக்
கரவியநா யூன்கவர்ந்து கடுந்தழலோ னுணக்கொடுத்தான். 6

கு - ரை : ஒரு மகத்தில் - ஒரு யாகத்தில். வேறு ஊன் - வேறாகிய ஊன் என்றது யாகபசுவின்வபை. ஊன் - மாமிசம். பொதுவாக மாமிசம் என்பது ஒன்றே எனக் குறித்து கரவு இயல் நாய் ஊன். தழலோன் - அக்கினி தேவன்.

உண்டுசுவை தெரிதழலோ னானிதுநா யூனதெனக்
கண்டுமழை யில்லாத காரணத்தால் வற்கடமேற்
கொண்டுவருத் திடுமதனாற் கோசிகன்மற் றிதுபுரிந்தான்
அண்டுமிவன் மேற்பிழையின் றனைத்தினுக்குங் காரணமாய். 7

கு - ரை : நாய் ஊன் அது எனக் கண்டு. கோசிகன் - விசுவாமித்திரன். இவன்மேல் பிழையின்று. எல்லாவற்றிற்கும் காரணமாக.

மழைபொழிவிப் பான்மகவான் மற்றவனாற் றியகொடிய
பிழையிதுவே யெனப்பிணங்கிப் பெயர்ந்தழலோன் காரோணத்
துழையமரோர் வேணுவனத் தொளித்திருந்தான் வெதுப்பேறிக்
கழைசுளிமால் களிருங்குக் கலந்ததுவா டியதன்றே. 8

கு - ரை : மகவான் - இந்திரன். 'சத்த மேகங்களும் வச்சிரதரன் ஆணையில் சஞ்சரித்திடுவன ஆகலின்' அவன் - அந்த இந்திரன். பிணங்கி- மாறுபட்டு. பெயர்ந்து - நீங்கி. காரோணத்துழை - காரோண தலத்தில்; உழை: ஏழனுருபு. வேணுவனம் - மூங்கிற்காடு. வெதுப்பு - வெப்பம். கழை சுளி மால் களிறு - குத்துக்கோலைக் கோபிக்கும் மதமயக்கமுடைய யானை.

நீடுதழல் வேணுவன நீங்காம லொளித்திருக்கப்
பாடுபல வுயிருமழற் பாகமற வருந்துதல்கண்
டேடுசெறி மலர்மேயோ னிமையவரோ டெழுநாவை
நாடுபல வினுந்தேடிக் காரோண நகருற்றான். 9

கு - ரை : தழல் - அக்கினிதேவன். அழற்பாகம் அற - நெருப்பினல் உண்டாகும் பக்குவம் நீங்க. ஏடு - பூவிதழ். மலர்மேயோன் - பிரமன். எழு நாவை - அக்கினிதேவனை; அக்கினிதேவனுக்கு நாக்கு ஏழென்பது வேதம்; '' ஸப்த ஜிஹ்வா '' என்பது சாமவேதம், "உதவகன் தனஞ்சயன் வசு எழு நா '' திவாகரம்.

நீடுபெரு வேணுவன நேர்வந்து களிற்றினைக்கண்
டாடுதழ லெங்கொளித்த தறியவுரைத் திடுகென்ன
வாடுமஃ தீங்கொளித்தா னெனத்தழலோன் மனங்கொதித்துக்
கோடுகுறைத் திடக்கவலை கோடியென வதைச்சபித்து. 10

கு - ரை : வாடும் அஃது - சோர்வுற்றகளிறு. தழலோன் - அக்கினி. கோடு குறைத்திட - தந்தத்தைக் குறைக்க. கவலைகோடி - கவலைகொள்வாய். சபித்து - சாபங்கொடுத்து.

வன்னிவளை பிப்பிலத்து வன்னியொளித் தனனுக
முன்னிமல ரவனுங்கு முழுத்தழலெங் கெனவெதுப்பந்
துன்னியசா ருவைவினவச் சொற்றதுபா வகனழன்று
மன்னியவாக் கிழந்துதுயர் மருவுகென வதைச்சபித்து. 11

கு - ரை : வன்னிவளைபிப்பிலத்து - கிளியின்பொந்துள்ள அரசமரத்தில். முன்னி - அணுகி. வெதுப்பம் துன்னிய சாரு - வெப்பம் தாக்கிய கிளி. பாவகன் - அக்கினி. அழன்று - கோபித்து. வாக்கு - பேசுந்திறம்.

முன்னரியற் றியதன்பேர் முயங்குதீர்த் தத்தொளித்தா
னன்னவிடத் தினுமணுகி யாங்கொருமண் டூகத்தை
நன்னர்வின விடவதுவு நவின்றதழ லோன்சினந்து
பன்னியநாக் கிழந்துதுயர் படுதியென வதைச்சபித்து. 12

கு - ரை : தன்பேர் முயங்கு தீர்த்தம் - அக்கினிதீர்த்தம். மண்டூகம் - தவளை. அதுவும் - அத்தவளையும். பன்னிய - சொல்லிய. நாக்கு இழந்து.

வெளிவந்து தழன்மலரோன் மென்மலர்த்தா ளிணைபணிந்தான்
களிவந்து மற்றவனீ கரந்ததெவ னெனவினவத்
தெளிவந்த கோசிகன்முற் செய்ததிற மெடுத்தியம்பி
யளிவந்த மழையின்றி யாயதா லிக்கொடுமை. 13

கு - ரை : தழல் - தழற்கடவுள். நீ கரந்தது எவன் - நீ ஒளிந்து கொண்டதற்குக் காரணம் யாது. முன்செய்த திறம் - நாய் ஊனை அவிசாகக் கொடுத்த செயலை.

அதுமகவான் புரிபிழையென் றறைந்துபா வகனிற்பச்
சதுமுகனுட் பிணக்கொழியச் சமாதான முறச்செய்து
கதுமெனயா வருஞ்சூழக் காரோணத் தளிபுகுந்து
புதுமலர்க டூஉயாதி புராணர்பதஞ் சேவித்து. 14

கு - ரை : அது - மறையின்றிச் செய்த கொடுஞ்செயல். மகவான் - இந்திரன். பாவகன் - அக்கினி. சதுமுகன் - பிரமன். உட்பிணக்கு - மனத்திலுள்ள மாறுபாடு. கதுமென - விரைந்து. தூஉய் - தூவி.

கருந்தடங்க ணுமையாளை யவ்வாறே கண்டிறைஞ்சிப்
பொருந்தமழை பொழிந்துவளம் புடவியுற வரம்பெற்றுத்
திருந்தமல ரோன்மகிழ்ந்தான் ஞமலியூன் றின்றலினல்
வருந்தவரு பிழையொழிய வசுவருச்சித் தருள்பெற்றான். 15

கு - ரை : புடவி வளம் உற: புடவி - பூமி. ஞமலி ஊன் - நாயின் இறைச்சி. வருந்தவரு பிழை - துன்புற்ற பிழை. வசு - அக்கினி. மலரோன் - பிரமன்.

கோடுகுறைப் பினும்வளர்ச்சி கூடுகநீங் கியகோடும்
பாடுபெறுஞ் சிறப்புறுக வெனும்வரம்பல் புகர்முகத்து
நீடுகளிற் றினுக்குதவி நிகழ்சிலவாக் குறுமவற்றை
நாடுவிரும் புகவென்ன நற்கிளிக்கோர் வரங்கொடுத்து. 16

கு - ரை : கோடு - தந்தம். பாடு - பெருமை. புகர் முகம் - புள்ளி பொருந்திய முகம். உன் வாயிலிருந்து வரும் சில வாக்குகளை உலகம் விரும்புவதாகுக என்று கிளிக்கு வரந்தந்து.

தாலமிழந் திருந்தாலுந் தப்பாதே யரமுழக்க
மோலமுறப் புரிகுதியென் றொருவரந்த வளைக்குதவிச்
சாலவிமை யோர்மறைந்தார் சதுமுகன்றன் னுலகடைந்தான்
ஞாலம்விரும் புறுமழலோ னயந்தமர்தன் னிடம்புகுந்தான். 17

கு - ரை : தாலம் - நாக்கு: தால்; அம் சாரியைபெற்றது. அரமுழக்கம் - அர அர ஒலி. ஓலம் உற - அடைக்கலம் பொருந்த. ஞாலம் - பூமி. நயந்து - விரும்பி.

நக்கினிய பெருமான்வாழ் நாகைக்கா ரோணத்தி
லக்கினிபோய்க் கலந்திருந்த வக்கினிதீர்த் தம்படிவோர்
தொக்கினிய வல்லாத துயருறினு மவைதொலைத்து
மிக்கினிய போகங்கள் வேண்டியவா றேபெறுவார். 18

கு - ரை : நாகைக்காரோணத்தில் அக்கினி தீர்த்தத்தில் முழுகுவோர் மிக்க துன்பங்களெல்லாம் தொலைத்து இனியபோகங்கள்மிக வேண்டிய வாறே பெறுவார்.

நன்னாக புரத்தடைந்து நாவோரே ழுடைக்கடவுள்
தன்னாக முறப்பணிந்து சார்ந்தபிழை தீர்ந்தகதை
யென்னாக நினைத்தலிஃ தறிந்தவகை யெடுத்துரைத்தாம்
புன்னாக வனப்பெருமை போற்றியினிப் பேசிடுவாம். 19

கு - ரை : நாகபுரம் - நாகபட்டினம். நா ஓர் ஏழ் உடைக் கடவுள் - அக்கினிதேவன். ஆகம் உற - உடல் படிய. என் அகம் - என்னாகம் என நீண்டது; அகம் - மனம்.

அக்கினி பூசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1972

முப்பத்தொன்பதாவது

புன்னாகவனப்படலம்

மனத்துடங் காத வோகை மலிதரக் காம மாதி
சினத்தவொண் சூத மேலோன் சேவடி முனிவர் போற்றிக்
கனத்திரள் கனுலி யாங்குக் காட்சியிற் பொலிபுன் னாக
வனத்திற முரைத்தி யென்ன மற்றவன் வகுக்க லுற்றான். 1

கு - ரை : ஓகை மலிதர - உவகை நிரம்ப. காமம் ஆதி சினத்த - காமம் முதலிய குற்றங்களைக் கடிந்து போக்கிய. கனத்திரள் கனுலியாங்கு - மேகக்கூட்டங்கள் செறிந்தாற்போல. புன்னாக வனத்திறம் - புன்னாகவனத்தின் தன்மையை.

வலிகெழு நாகர் தம்முள் வாசுகி யென்னும் பேரா
னொலிகெழு கடற்கா ரோணத் துனுற்றிய பூசைப் பேற்றாற்
பொலிகெழு பொன்னங் கொம்போ பூத்தபொற் கொடியோ வென்ன
வலிகெழு வனப்பி னோர்நான் மகளிரைப் பெற்றா னன்றே. 2

கு - ரை : நாகர் - நாகலோகவாசிகள் என்றது பாதலவுலகவாசிகளை. உனுற்றிய - செய்த. பூசைப் பேற்றால் - சிவபூசைப் பயனால். பொலிகெழு - விளக்கமிக்க. பொன்னங் கொம்போ - பொன்னாலாகிய இளங்கொம்போ. பொற்கொடியோ - பொன்னாலாகிய கொடியோ. வனப்பினோர் - அழகினை உடையோர். நான் மகளிர் - நான்கு புத்திரிகளை. வாசுகி நான்கு புத்திரிகளைப் பெற்றான்.

மருவுசுப் பிரபை யென்றா மாலினி யென்றா வொப்புச்
சருவுப தூமினி யென்றா சாருமண் டனையென் றாநாற்
பொருவில்புத் திரிக ளானார் புனிற்றிளம் பிறையி னாளும்
வெருவிலொண் வளர்ச்சி மேவி யவ்வனம் விழைய வாய்ந்தார். 3

கு - ரை : அப்புத்திரிகள் நால்வரும் சுப்பிரபை, மாலினி, பதுமினி, மண்டனை என்பவர்கள். ஒப்புச்சருவு - ஒப்பில்லாத. புனிற்று இளம் பிறையின் - இளம்பிறைச் சந்திரனைப்போல. புனிறு - ஈன்று அணிமையுடையது என்க. அவ்வனத்தில் விருப்பம் பொருந்தி யிருந்தார்கள்.

புதல்வியர் பருவ நோக்கி வாசுகி பொலிகா ரோண
முதல்வநின் னருளா லிந்தச் சிறுவியர் முளைப்பப் பெற்றேன்
மதனனு மவாவ வந்து மணப்பவர் தம்மைத் தேறா
விதனமொன் றுடையே னென்னா மெய்யுறச் சூழ்ந்தி ருந்தான். 4

கு - ரை : பருவம் நோக்கி - மணப் பருவம் சமீபித்தமை கருதி. காரோண முதல்வ: விளி. சிறுமியர் - சிறுமிகள். முளைப்ப - தோன்ற. மதனனும் - மன்மதனும். அவாவ - விரும்ப. மணப்பவர் தம்மைத் தேரு - மணஞ்செய்துகொள்ளுவோரைத் தேர்ந்துகொள்ள முடியாத. விதனம் - கவலை. ஒன்று - சிறிது. என்னு - என்று விண்ணப்பம்செய்து. மெய்யுற - உண்மையாக. சூழ்ந்திருந்தான் - வலம்வந்திருந்தான், ஆலோசித்திருந் தான். சூழ்தல் - வலம் வரல், ஆராய்தல்.

ஆயதோர் காலை நாகை யண்ணலா ரருளி னுலா
காயவாக் கொன்று செல்வங் கமழ்சவு ராட்டி ரப்போர்த்
தேயமாள் வேந்த னுமம் புண்ணிய புஞ்சன் சீர்த்தி
மேயவக் கோமான் மைந்தர் வேள்புரை நால்வ ருள்ளார். 5

கு - ரை : ஆய தோர் காலை - அப்போது. ஆகாயவாக்கு - ஆகாய வாணி. சவுராட்டிர தேயத்து அரசன் புண்ணிய புஞ்சனுக்கு நால்வர் மைந்தர் உள்ளார். செல்வம் கமழ் - செல்வமிக்க. சீர்த்தி - மிகுபுகழ். வேள்புரை - மன்மதனையொத்த.

புண்ணிய சீலன் யாரும் புகழ்தரு தரும சீலன்
கண்ணிய குணஞ்சா லுஞ்சுப் பிரதாபன் காம வேளும்
எண்ணிய வனப்பு வாய்சத் துருப்பிர தாப னின்னர்
மண்ணிய மணியிற் றேன்றி மணப்பரென் றுரைத்த தன்றே. 6

கு - ரை : புண்ணியசீலன், தருமசீலன், சுப்பிரதாபன், சத்துருப் பிரதாபன் என்பவர். காமவேள் - மன்மதன். வனப்பு - அழகு. இன்னர் - இத்தகையோர். மண்ணிய மணி - சாணையில் தேய்த்த மாணிக்கம்: மண் ணுதல் - கழுவுதல், தேய்த்தல். மணப்பர் - மணஞ்செய்துகொள்ளுவார்.

உருவில்வாக் குணர்ந்து மேன்மேல் ஓகையிற் றிளைத்தி ருந்தான்
பொருவில்வா சுகிமுன் சொற்ற புகழ்ச்சவு ராட்டி ரத்து
வெருவின்மைந் தர்க ளுல்வோரு மேதகு நாக நாட்டி
னெருவில்பல் வளமுங் காண்பா னுற்றனர் பிலமா ருக. 7

கு - ரை : உரு இல் வாக்கு உணர்ந்து - வடிவில்லாமல் தோன்றிய ஆகாயவாணியை அறிந்து. மேதகு - மேம்பட்ட. நாக நாட்டின் - நாகர் உலகத்தின். ஒருவு இல் - நீங்குதலில்லாத. பிலம் ஆருக - பிலத்தின் வழி யாக: சுரங்க வழியாக என்றபடி.

மணிகிளர் நாக நாட்டு மருவியோர் நோக்குங் காலைப்
பணிகிளர் படப்பூ ணுகைப் பரனரு ளதனு லோர்வாக்
கணிகிளர் வாசு கிப்பே ரரவின்புத் திரிக ளுல்வர்
பிணிகிளர் மாலை சூட்டப் பெறுதிரென் றெழுந்த தன்றே. 8

கு - ரை : மருவி - சேர்ந்து. ஏர் - அழகினை. படப்பூண் - பாம்பாபரணம். ஓர் வாக்கு - ஒரு சொல். அரவின் புத்திரிகள் - பாம்பரசனின் புதல்வியர். நால்வரும் மாலைசூட்டப் பெறுவிர். ஓர் வாக்கு எழுந்தது.

நாந்தக வுழவ ராய நால்வரும் வாசு கிப்பே
ரேந்தன்முன் மகிழ்ந்து சென்று ரியாவர்நீ ரெனவி னுவப்
போந்தமை தெரியச் சொற்றூர் பொலிவனப் பொருநால் வர்க்குஞ்
சாந்தமென் முலையார் நால்வர் தம்மைமணம் புணர்த்தி னானே. 9

கு - ரை : நாந்தக உழவர் - வாளுழவர்: நாந்தகம் - வாள். நால்வரும்: முற்றும்மை. ஏந்தல் - சிறந்தோன். போந்தமை - வந்தகாரியம். தெரிய - தெரியும்படி. மணம் புணர்த்தினன் - மணஞ்செய்து கொடுத்தான்.

பொருவரு மரச லீன்ற புத்திர ரொருநால் வோரும்
வெருவரு மரவு தந்த வேற்றடங் கண்ணால் வோரு
மொருவரு முவகை தூங்க வுவளகத் திருகப் புல்லி
மருவரும் போகந் துய்த்தார் கழிந்தன வருடம் பல்ல. 10

கு - ரை : உவகை தூங்க - மகிழ்ச்சி பொருந்த. உவளகம் - அந்தப்புரம். புல்லி - தழுவி. வருடம் பல கழிந்தன.

இடையறுப் போகந் துய்க்கு மீரிரு மாத ராரு
மிடையுமூழ் வலியா லந்தப் போகத்து வெறுப்பு வைத்தார்
நடையுயர் கொழுநர் தம்பா னயந்தனு மதியும் பெற்றுப்
புடையமர னையரோடும் பூமியை யடைந்தா ரன்றே. 11

கு - ரை : இடையறு - விட்டுநீங்காத. ஈரிரு மாதராரும் - நாககன்னியர் நால்வரும். மிடை ஊழ் வலியால் - நெருங்கிய ஊழ்வினையின் வலிமையால். கொழுநர் தம்பால் - கணவரிடத்து. நயந்து - விரும்பி என்றது வினயமாக என்க. அனுமதி - உத்தரவு. புடை அமர் அனையரோடும். புடை - பக்கம். அனையர் - அத்தன்மையுடையார்.

அடைந்தவர் முத்தி வேண்டி யருந்தவம் புரிவா னெண்ணி
மிடைந்தவண் டபோவ னத்தை மேவினர் மேவுங் காண்மா
சுடைந்தவத் திரியைக் கண்டா ருவந்திறைஞ் சிப்பி றந்தை
தடைந்தமா முத்தி வேட்டோந் தகவருள் புரிதி யென்றூர். 12

கு - ரை : மிடைந்த - நெருங்கிய. வண் தபோவனம். மாசு உடைந்த. அத்திரி முனிவரை. பிறந்தை தடைந்த - பிறப்பைத் தடைசெய்யும். அத்திரி முனிவர் பிரமதேவனது மானஸ புத்திரர்; நவப்பிரமர்களில் ஒருவர்.

அருந்தவத் துயர்ந்தோ னுய வத்திரி முனிவ னெண்ணிப்
பொருந்தநீர் நாகைக் காயா ரோகண தலத்திற் புக்கு
மருந்தமுண் டயன்மா லாதி வானரை வாழ்வித் தானைக்
கருந்தடங் கண்ணு ளாய கருணையோ ருருவத் தாயை. 13

கு - ரை : எண்ணி - ஆலோசித்து. மருந்தம் உண்டு - ஆலகால விடத்தை யுண்டு. வாழ்வித்தானை - வாழச்செய்தவராகிய சிவபெருமானை. கருணை ஓர் உருவம் தாயை - அருள்வடிவாகிய பராசத்தியை.

தேவநீ ராடிப் போற்றி மற்றுள தலமுஞ் சேவித்
தோவற வடபான் மேவி யோங்குபுன் னுக நீழன்
மேவவோ ரிலிங்க நாட்டி விதியுளிப் பூசிப் பீரேற்
பாவனு தீத முத்தி பலித்திடும் போமி னென்றான். 14

கு - ரை : தேவநீர் - தேவதீர்த்தம். மற்று உள தலங்களையும் வணங்கி. ஓவற - நீங்காமல். ஓர் இலிங்கம் தாபித்து. நாட்டி - தாபித்து. விதியுளி - சிவாகமவிதிப்படி. பாவனாதீத முத்தி-பாவனைக்கு எட்டாத முத்தி.

முனிவர னுரைத்த வாறே முழங்குகா ரோண மேவிப்
பனிமலர்த் தேவ தீர்த்தம் படிந்துகா ரோணப் பெம்மான்
புனிதமென் பாதம் போற்றிப் புவனங்க ளனைத்து மீன்ற
கனிமனக் கருந்த டங்கட் காரணி பதமும் போற்றி. 15

கு - ரை : முனிவரன் - முனிசிரேட்டராகிய அத்திரி. படிந்து - முழுகி. புவனங்கள் அனைத்தும் - உலகங்கள் எல்லாவற்றையும். புனிதம் - பரிசுத்தம். காரணி - துணைக்காரணமாயுள்ளாள்: மாயை முதற்காரணம், சத்தி துணைக்காரணம், இறைவன் நிமித்தகாரணம்.

மற்றுள தலங்க ளெல்லாம் வரன்முறை சென்று சென்று
கற்றுள மாந்தர் மேன்மை கரைதரக் கேட்டு நைந்து
பற்றுள முருகப் போற்றிப் பண்ணவர் பரவிப் போற்றற்
குற்றுள வடபா லெய்தி யோங்குபுன் னுகங் கண்டார். 16

கு - ரை : வரன்முறை - முறைப்படியே. கரைதர - சொல்ல. பண்ணவர் - தேவர்கள். வடபால் - வடக்குப்பக்கம். ஓங்கு புன்னுகம் - உயர்ந்த புன்னுகமரம்.

மரகதந் தளிர்த்து முத்தம் வரம்பில வரும்பி யாங்கே
பரவுப வளங்கள் பூத்துப் பாயபுன் னுக நீழல்
வீரவவோ ரிலிங்கந் தாபித் தமரரும் விரும்பி யாடப்
புரவுசெய் தீர்த்த மொன்று பொருந்துறத் தென்பா லாக்கி. 17

கு - ரை : மரகதம் - பச்சை; இலை. முத்தம் - அரும்பு. அரும்பி - தோன்றி. வரம்புஇல - அளவில்லாதன. பாய - பரவிய. அமரரும் - தேவரும். ஆக்கி - உண்டுபண்ணி.

அந்தநற் றீர்த்த மாடி யந்நலா ரொருநால் வோரும்
பந்தமின் முக்க ணுற்றோட் பரமனைப் பூசை செய்ய
நந்தலில் பெருமான் றோன்றி நாடிய தென்னை யென்னுஞ்
சந்தமென் கொங்கை நல்லார் தாழ்ந்தனர் வேண்டு கின்றார். 18

கு - ரை : அந்நலார் - அந்த நாககன்னியர்; வாசுகியின் புதல்வியர். மூன்று கண்களும் நான்கு தோள்களுமுடைய சிவபெருமானை. நாடியது - நீங்கள் விரும்பியது. சந்தம் - சந்தனச்சாந்து. தாழ்ந்தனர்: முற்றெச்சம்.

உத்தம வெங்கள் பூசை யுவந்தது மெய்மை யாகில்
இத்திருப் பேரூர் நாகூ ரெனும்பெய ரெய்தல் வேண்டும்
பத்தர்கள் புகழ்நா கேசப் பெயருநீ பரித்தல் வேண்டு
மொத்தநின் றாட்கீழ் யாங்கள் கொழுநரோ டுறுதல் வேண்டும். 19

கு - ரை : பூசை உவந்தது - பூசையை மகிழ்ந்தது. இந்த ஊர் நாகூர் என்னும் பெயர் எய்துதல்வேண்டும். நாகேசர் என்ற பெயரை உடையவராய்த் திகழ்தல்வேண்டும். கொழுநரோடு - கணவன் மாரோடு. கொழுநர் - கணவர். பரித்தல் - தாங்குதல்.

இத்தனை வரமுந் தம்மோ வென்றிரப் பவர்க்க னுதி
முத்தனவ் வாறே நல்கி மொழிந்தவவ் விலிங்கத் துற்றான்
சித்தமுள் ளுருக வந்த விலிங்கத்தைச் சேவை செய்வார்
பத்தமுற் றகல மேலாம் பரகதி மருவு வாரால். 20

கு - ரை : தம்மோ - தருவீராக: மோ - முன்னிலை அசை. அனுதி முத்தன் - சிவபெருமான். இலிங்கத்து உற்றான் - இலிங்கத்திலே இறைவர் மறைந்தருளினர். சித்தம் உள் உருக. சேவை - வழிபாடு. பத்தம் முற்று அகல. பத்தம் - பந்தம்: வலித்தல் விகாரம்.

பொருவரு மரும்பு மல்கும் புன்னாக வனத்தின் மேன்மை
யொருவருஞ் சரிதந் தேற யொருவகை யெடுத்துச் சொற்றா
மிருவருந் தேரு வண்ண லிணையடி யேத்தி வானோர்
வெருவருந் தன்மை பெற்ற வண்ணமும் விளம்பு வாமால். 21

கு - ரை : பொரு அரும் - ஒப்பில்லாத. ஒருவரும் சரிதம் - நீங்குதற்கரிய வரலாறு. தேற - தெளியும்படி. இருவரும் - பிரம விட்டுணுக்கள் இருவரும்.

புன்னாகவனப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1993

நாற்பதாவது

தேவர்கள் பூசித்தபடலம்

சுகமுயர் மாதவர் சூத மாமுனி
யுகபதந் தொழுதுகா ரோணத் துத்தமந்
தகவிமை யவர்பணி சரிதஞ் சொல்லென
மிகமகி ழம்முனி வரன்வி ளம்புவான். 1

கு - ரை : யுக பதம் - இரண்டு திருவடிகளையும். காரோணத்து உத்தமம் தக - காரோணத்தில் மேன்மை பொருந்த. இமையவர் - தேவர்கள்.

அரியபுண் ணியமுநல் லமர ரீட்டமுஞ்
சரியவெம் பாவமுந் தகுவர் கூட்டமும்
விரியமுன் னுளையில் விருத்தி ரப்பெயர்
உரியவல் லவுணர்கோ னொருவன் தோன்றினன். 2

கு - ரை : அமரர் ஈட்டம் - தேவர் கூட்டம். தகுவர் - அசுரர். சரிய - கெட. விரிய - பெருக. விருத்திராசுரன் தோன்றினன். அவுணர்கோன் - அவுணர் தலைவன்.

படையொடு மெழுந்துவான் படர்ந்து பண்ணவர்
உடைதரப் போர்புரிந் தொருங்கு பற்றியே
தடைசெய்கால் யாப்பிடு தறுக ணெண்ணினன்
அடைபெரு வானவ ரதுதெ ரிந்தனர். 3

கு - ரை : படையொடும் - சேனைகளுடன். பண்ணவர் உடைதர - தேவர்கள் சிதறியோட. ஒருங்கு - ஒருசேர. கால் யாப்பு - காலில் விலங்கு. தறுகண் - அஞ்சாமை. அது - விருத்திராசுரன் எண்ணத்தை.

இனிச்செய லென்னையென் றெண்ணி யோடுபு
தனித்தபொன் மலரடி தாழ்ந்து கூறலும்
மனித்தர்போ னுகைநீர் மருவிப் போற்றிடின்
அனித்தமெய் துவன்விரைந் தவுண னென்றனன். 4

கு - ரை : ஓடுபு - ஓடி. தனித்தபொன் - தனியே யிருந்த ஆசாரியராகிய வியாழபகவான்; தனித்த - ஒப்பற்ற எனினுமாம். மனித்தர்போல் - மனிதரைப்போல விரைந்து. அனித்தம் எய்துவன்: அனித்தம்-கேடு, அழிவு.

குருமொழி தலைமிசைக் கொண்டு வானவர்
ஒருவரு நாகைக்கா ரோணம் புக்கனர்
திருவரு தம்பெயர்த் தீர்த்த மாடினர்
கருமணி கண்டனைக் கண்டு போற்றுவார். 5

கு - ரை: குருமொழி - ஆசாரியன் கூறிய கட்டளையை. தம் பெயர்த் தீர்த்தம் - தேவதீர்த்தம். திருவரு தீர்த்தம் - செல்வம் ஓங்குதற்குக் காரணமான தீர்த்தம். கருமணி கண்டனை - நீலகண்டமுடைய சிவபெருமானை. போற்றுவார் - போற்றும்பொருட்டு, ஆடினர் என்க.

ஆதிபு ராணன்பொன் னடியி றைஞ்சுபு
காதிய கருந்தடங் கண்ணி தாடொழு
தேதமில் விடங்கரை யேத்திப் பின்னரும்
போதவிண் ணவரிது புரிதன் மேயினார். 6

கு - ரை: ஆதிபுராணரை இறைஞ்சி, கருந்தடங்கண்ணி தாள் தொழுது, விடங்கரை ஏத்தி, போத விண்ணவர் - சென்ற தேவர்கள்.

பொருவரு மகமொன்று புரிந்து பேருவப்
பிருவருங் காணாரு விறைவற் காக்குபு
மருவரும் புண்ணிய மககுண் டத்தினை
வெருவருந் தீர்த்தமாக் கினரவ் விண்ணவர். 7

கு - ரை: மகம் ஒன்று - ஒரு யாகம். இறைவற்கு. ஆக்குபு - ஆக்கி. மக குண்டத்தினை - வேள்விக் குண்டத்தை, தீர்த்தமாக்கினர்.

நீடுமா மகப்புன லென்னும் பேர்நிறீஇக்
கூடுதே னீயுருக் கொண்டு சோலையி
னூடுசால் மலர்தொறு முறும துக்கவர்ந்
தீடுகூ ரத்தடத் தியையச் சேர்த்தனர். 8

கு - ரை: மகப்புனல் - மகதீர்த்தம்: மகம் - யாகம். நிறீஇ - நிறுத்தி. தேனீ வடிவங்கொண்டு. மதுக்கவர்ந்து - தேனைக் கொண்டுவந்து. அத் தடாகத்தில் பொருந்தச் சேர்த்தனர்.

செறிசுவை கொளுமதுத் தீர்த்த மென்றொரு
நெறியமை பெயருற நிறுவி மொண்டுகொண்
டறிவுரு வாயவற் கன்பி னாட்டினர்
பறிபுரை மலர்பல பறித்துச் சூட்டினார். 9

கு - ரை: மதுத்தீர்த்தம் என்னும் ஒரு பெயரையும நிறுத்தி. அறிவு வடிவாகிய இறைவருக்கு அத்தீர்த்தத்தால் அபிஷேகம் செய்தனர். பறி - பொன்.

இன்னணம் பூசைசெய் திருக்கு நாளையிற்
கொன்னவி லிந்திரன் குலிசந் தாக்கிட
உன்னரும் வலிகெட வொழிந்து மாய்ந்தனன்
துன்னரும் பெருவிறற் றேள்வி ருத்திரன். 10

கு - ரை : கொன் நவில் - கூர்மை பொருந்திய; கொன் - அச்சம் எனினுமாம். குலிசம் - வச்சிராயுதம். உன்ன அரும் வலி கெட - நினைத்தற்கும் அரிய வலிமை தொலைய. பெருவிறல் - மிக்க வலிமை.

விருத்திரன் மாண்டது தெரிந்து விண்ணவர்
பருத்தெழும் ஓகையம் பரவை மூழ்கினர்
அருத்தநம் பரன்விடை யமையப் பெற்றனர்
திருத்தகு தானமே சேர்ந்து வாழ்ந்தனர். 11

கு - ரை : பருத்து எழும் - பெரிதாக உண்டாகும். ஓகை அம் பரவை - உவகைக்கடல். அருத்த நம் பரன் - செம்பொருளாகிய நமது சிவபெருமான். தானம் - விண்ணுலகம்.

அத்தட மதுமுகந் தாட்டி யண்ணலார்
சித்தநன் குவப்புறச் செய்த துர்க்கைமுன்
வித்தக மகிடன்பால் வெற்றி கொண்டனள்
உத்தம மிகத்தரு முரைத்த வத்தடம். 12

கு - ரை : அத்தடம் மது முகந்து - அத்தடாகத்திலுள்ள தேனை மொண்டு. துர்க்கை - துர்க்காதேவி. மகிடன்பால் - மகிஷாசுரனிடத்து. உரைத்த அத்தடம் - சொல்லிய அந்த மதுதீர்த்தம்; தடம் - தடாகம்.

எண்ணிய வானவ ரியாரு நாகையில்
திண்ணிய பூசைசெய் செயலு ரைத்தனம்
தண்ணிய முனிவர்கா டரும புஞ்சனுற்
றொண்ணிய தியிற்கதி யுற்ற தோதுவாம். 13

கு - ரை : திண்ணிய பூசை - உறுதியான சிவபூசை. தண்ணிய - குளிர்ந்த (மனமுடைய). தருமபுஞ்சன் - சண்டதருமன் புத்திரன். ஒண் நியதியில் - ஒளிபொருந்தும் நியமத்தினால். கதி - முத்திப்பேறு.

தேவர்கள் பூசித்த படலம்முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2006

நாற்பத்தொன்ருவது

தருமபுஞ்சன் முத்தியடைந்தபடலம்

தெங்கு சூழ்நைமி சத்துச் செறிபவர்
பொங்கு காதலிற் சூதனைப் போற்றுபு
தங்கு வாய்மைத் தருமபுஞ் சன்கதை
இங்கு நீநவி லென்ன நவிலுவான். 1

கு - ரை : தெங்கு - தென்னை மரங்கள். செறிபவர் - நெருங்கியுள்ள முனிவர்கள். பொங்கு காதலின் - மிக்க அன்புடன். வாய்மை - சத்தியம்.

அணிவ ளங்கிள ரங்கநன் ஞட்டிடைத்
தணிவில் வான்புகழ்ச் சண்டத ருமன்பான்
மணியிற் ஜேற்றமுற் ருன்மறை யாதிகள்
கணித மின்றியு ணர்ந்தக ருத்திஞன். 2

கு - ரை : அணி வளம் கிளர் - அழகிய வளப்பமிக்க. அங்கநாடு. தணிவு இல் வான் புகழ் - குறையாத மிக்க கீர்த்தி. சண்ட தருமனிடத்து. மணியில் - மாணிக்கம்போல. கணிதம் இன்றி - கணக்கில்லாமல்.

தரும புஞ்ச னெனும்பெயர் தாங்கிஞன்
அரும ருந்தின மைந்தகு ணத்திஞன்
திரும கன்பொடி யாத்தெறுங் கண்ணிஞன்
கரும மேபுரி யுங்கடப் பாட்டிஞன். 3

கு - ரை : அவன் பெயர் தருமபுஞ்சன் என்பது. கடப்பாடு - நியமம். திருமகன் - மன்மதன்.

அனையன் முந்தைப் பவத்தறி யாதுசெய்
வினையிற் றீமை யனைத்தும்வி ராயெனப்
புனைய யார்க்கும் பொருத்தமி லாஞெரு
தனையற் பெற்றனன் யாருஞ் சலிக்கவே. 4

கு - ரை : அனையன் - தருமபுஞ்சன் என்பவன். முந்தைப்பவம் - முற்பிறப்பு. அறியாது செய்வினை - அபுத்தி பூர்வ வினை. தனையன் - புதல்வன். தீவினை அனைத்தும் உருக்கொண்டாற்போல. சலிக்க - வெறுக்க.

தோற்ற முற்றசு தற்கற மென்பதன்
நாற்ற மின்மையி னுத்திக னென்னும்பேர்
சாற்ற லாமெனச் சாற்றினர் யாவரும்
ஏற்ற மேயென வேற்றுப் பயிலுவான். 5

கு - ரை : சுதற்கு - மைந்தனுக்கு. அறம் என்பதன் நாற்றம் - தருமத்தின் வாசனை. நாத்திகன் - கடவுள்கொள்கை, புண்ணியபாவத் தொடர்பு முதலிய மனத்திற் கொள்ளாதவன். அவன் அப்பெயர் தக்கதே என்று ஏற்றுக்கொண்டு நடப்பானாயினன்.

பெற்ற தாதை பெருக முயன்றுநூல்
பற்ற வோதியு மோதுவித் தும்பயி
லுற்ற தோதருந் தீமைக ளேயலாற்
கற்ற தொன்றிலன் காமர றத்தினே. 6

கு - ரை : தாதை - தமப்பன். பெருக முயன்று - மிகமுயற்சித்து. மைந்தன் பயின்றுகொண்டது தீமைகளே அல்லாமல் பிறிதொன்றுமின்று.

சந்தி வந்தனை சற்றுமி யற்றிலான்
நந்தி யெண்ணருந் தீமை நவிற்றுவான்
முந்தி யாருமு னியுஞ்ச ரிதத்தான்
புந்தி சற்றுமி லாதவப் புல்லனே. 7

கு - ரை : சந்தியாவந்தனம் முதலியன சிறிதும் செய்திலன். சந்தி வந்தனை - சந்தியா காலத்தில் செய்யும் வணக்கம். நந்தி - பெருக. நவிற்று வான் - சொல்லுவான். புல்லன் - அற்பன், கீழான குணமுடையோன்.

நேர்ந்த நீற்றை நினைத்து மறிகிலான்
வார்ந்த நல்லொழுக் கென்பது மாற்றினன்
கூர்ந்த பாதகங் கூடி மகனெனச்
சார்ந்த வோவெனத் தந்தை வருந்தினன். 8

கு - ரை : நீறு - விபூதி. வார்ந்த நல்லொழுக்கு - சதாசாரம். கூர்ந்த பாதகம் - மிக மிக நுண்ணிய பாவங்கள்; "அருவாய வல்வினை" என்றபடி. மகன் என - மகன் என்னும் வடிவங்கொண்டு. சார்ந்தவோ - வந்தடைந் தனவோ.

கண்ட தேபெருங் காட்சியெ னுமனங்
கொண்ட புன்மதக் கோட்பட் டுழலுவான்
ஓண்ட வாமட வார்முயக் கொன்றனை
விண்ட வாவுதல் வேறில னாயினன். 9

கு - ரை : 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்பது பழமொழி. புன்மதம் - கீழான கொள்கை. மடவார் முயக்கு - பெண்கள் கூட்டுறவு.

மனைய கத்துள வண்பொருள் வௌவுபு
நனைம லர்க்குழ னாரியர் கைக்கொடுத்
தனையர் நல்கிடும் போகம வாய்க்கொளா
வினைவ றப்பயில் வானக ரெங்கணும். 10

கு - ரை : மனையகத்து - வீட்டினுள். வௌவுபு - திருடிக்கொண்டு. நாரியர் - பெண்கள். போகம் அவாய் - போகத்தை விரும்பி.

இல்ல மேய பொருள்க ளிறத்தலும்
பல்ல வில்லுளும் பாதியி ராப்புகுந்
தொல்ல வேண்டுவ தோவறக் கொள்ளுவான்
நல்ல செய்யு மறிவில் கயவனே. 11

கு - ரை : இறத்தலும் - நீங்கியவுடன். பல்ல இல்லுளும் - பலவீடுகளிலும். பாதிஇரா - நள்ளிரவு. ஒல்ல வேண்டுவது ஓவற; ஓவற - நீங்காமல். அல்ல - பாவச்செயல்கள். கயவன் - கீழ்மகன்.

இன்ன நாளினி யன்மறை முன்னைநாள்
சொன்ன வாரிய னாவி தொலைதர
உன்ன வாமோ ருபல மெறிந்தனன்
என்ன செய்கையென் றியாருமி ரங்குற. 12

கு - ரை : ஆரியன் - ஆசாரியன். உபலம் - கல். ஆவி தொலைதர - உயிர்போமாறு.

குருவை மாட்டிக் குலவ வவன்மனை
மருவு வாளைவ லிந்து தழுவினன்
வெருவு தீவினை யாவும் விளைதரும்
பொருவி லாவளப் பூமியு மாயினன். 13

கு - ரை : மாட்டி - கொன்று. அவன் மனை மருவுவாளை - குருவின் மனைவியை. தீவினையாவும் விளையும் விளைபுலம் ஆயினன்.

பாவி செய்கைப யந்தவ னேர்ந்துமூ
தேவி யிங்குச் சிவணற காதென
வோவி யோட வுடன்று துரந்தனன்
மேவி னன்கொடு வேடுறு கானமே. 14

கு - ரை : பயந்தவன் - பெற்றபிதா. ஓர்ந்து - ஆராய்ந்துணர்ந்து. சிவணல் - பொருந்துதல். உடன்று - மாறுபட்டு. துரந்தனன் - துரத்தி விட்டனன். கொடுவேடு - கொடியவேடர்கள்.

காடு மேவிக் கலங்கி யுழிதரும்
வாடும் வெய்ய பசியின் மயங்குறும்
வீடு மாறு விரவுமென் றஞ்சுறும்
ஓடு மீளு முலறு மலறுமே. 15

கு - ரை : உழிதரும் - திரிவான். வீடுமாறு - உயிர்விடும்படி.

ஏங்கிச் சோண னெனுமொரு வேட்டுவன்
பாங்குற் றென்பசி பாற்றென் றழுதனன்
ஆங்குச் சீரில வன்சற் றிரங்குபு
தீங்கிற் சேர்மறச் சேரியைக் காட்டினன். 16

கு - ரை : சோணன் என்னும் வேடன். பசி பாற்று-பசியைப்போக்குக. சீர் இல்அவன் - சிறப்பில்லாத அவன். மறச்சேரி - வேடர்சேரி.

அந்த வேட்டுவச் சேரி யடைந்திடு
வெந்த வூன்மிசைந் தான்கள்ளு மாந்தினன்
அந்த மற்றவ ரோடுநட் பாயினன்
பந்த மேலுமோர் பந்தமுற் றுலென. 17

கு - ரை : இடுவெந்த ஊன் மிசைந்தான்: மிசைந்தான் - உண்டான். மாந்தினன் - குடித்தான். பந்தத்தின்மேற்பந்தம் அடைந்தாற்போல.

தரும புஞ்சன் றவாமக வாசையாற்
பெருக வெங்கணு நாடுபு பேதுற்று
வெருவு கானம் விராவிவில் வேட்டுவர்
மருவு சேரியில் வந்துறக் கண்டனன். 18

கு - ரை : தவா மகவு ஆசை - நீங்காத புத்திர வாஞ்சை. நாடுபு - தேடி. பேதுற்று - மயங்கி.

கண்டபோது கனன்றூ ரறையறைந்
துண்ட கண்மயக் காலவற் குள்ளன
எண்ட வாது பறித்தன னேங்கியே
அண்ட நீமக னென்ப தறைந்தனன். 19

கு - ரை : கனன்று - கோபித்து. உண்ட கள் மயக்கால் - கட்குடித்த மயக்கத்தால். அவற்கு உள்ளன - அவனிடத்து உள்ளபொருள்களை;

அவற்கு: உருபு மயக்கம். எண் நவாது - நினைவின்றி. நீ மகன் ஆவாய் என்ற செய்தியைச் சொன்னான்.

சிறிது ணர்ச்சி செறிந்தன னத்துணை
அறிவு திப்ப வழைத்துடன் கைக்கொடு
வெறிம லர்ப்பொழின் மேய நகரிடைக்
குறிகொ டன்மனைக் கூடி யிருந்தனன். 20

கு - ரை: சிறிது உணர்ச்சி செறிந்தனன் - சிறிதளவு உணர்ச்சி யடைந்தான். அத்துணை - அவ்வளவில். குறி கொள் தன் மனை - குறித்த தன் இல்லம்.

இரவிற் சங்கரன் பூசை யியற்றுபு
பரவிப் போற்றியென் பாலன் கொடுமையாம்
உரவிற் றீர்ந்துய்யு மாறருள் செய்தியால்
அரவப் பூணுடை யாயென வேண்டினான். 21

கு- ரை: சங்கரன் பூசை இயற்றுபு - சிவபூசை செய்து. என் பாலன் - என் மகன். கொடுமையாம் உரவு - கொடிய பாவ வலிமை.

ஆணத் தாருக் கருளும் பராபரன்
மாணப் பூசைசெய் பூசுரன் வாதனை
பேணத் தான்சகிப் பான்கொல் பெரிதவன்
காணத் தோன்றிக் கனவிடைக் கூறுவான். 22

கு - ரை: ஆணத்தாருக்கு - அன்புடைய அடியார்களுக்கு. மாண - மாட்சிமைப்பட. பூசுரன் - அந்தணன். வாதனை பேண - துன்புற.

தூய பேரொளி வாய்ந்த சுதன்மையிற்
சீய வாதன மேற்செழு நித்திலம்
மேய வெள்ளைக் கவிகை நிழல்செயப்
பாய சாமரை பக்க மிரட்டுற. 23

கு - ரை: சுதன்மை - இந்திரசபை. சீய ஆதனம் - சிங்காதனம். நித்திலம் மேய வெள்ளைக் கவிகை - முத்துக்களால் வேயப்பெற்ற வெண் கொற்றக்குடை. இரட்டுற - மாறி மாறி அசைக்க.

ஒருபு றத்தி னொருவ னடைப்பைகை
இருவி யொண்முக வாச மியற்றிட
மருவி யோர்புறத் தேயொரு வானவன்
பருவ மோர்ந்து படியக மேந்துற. 24

கு -ரை: கை இருவி - கையில் இருத்தி. அடைப்பை - வெற்றிலை பாக்குப் பை. பருவம் - காலம். படியகம் - எச்சிற்படிக்கம்.

உரிய யானையு முச்சைச் சிரவமுந்
தெரிய முன்னர்ச் சிவணுபு மேவுற
அரிய தேனு நிதிமணி யைந்தரு
பிரிய மார்பணி யேற்றுப் பிறங்கிட. 25

கு -ரை: உரிய யானை - ஐராவதம். உச்சைச் சிரவம் - இந்திரன் குதிரை. சிவணுபு - பொருந்தி. தேனு - காமதேனு. நிதி - சங்கநிதி பதுமநிதிகள். மணி - சிந்தாமணி. ஐந்தரு - பொன்னின் சோலையான கற்பகம் மந்தாரம் சந்தானம் பாரிசாதம் அரிசந்தனம் என்னப்பட்ட ஐந்து விருட்சங்கள். பணியேற்று - திருத்தொண்டைச்செய்து; பணி - தொண்டு, ஏவல்.

அரம்பை யேமுத லாகிய வந்நலார்
பரம்பி முற்பசுங் கொம்பி னடித்திட
நரம்பு வீக்கு கருவிநன் ருக்கொடு
நிரம்பு கானஞ் சிலர்நிகழ்த் தாநிற்க. 26

கு - ரை: அரம்பை - தேவப் பெண்கள். பரம்பி - பரவி. பசுங் கொம்பின் - பசிய இளங்கொம்பைப் போல: இன் - ஐந்தனுருபு ஒப்புப் பொருளில் வந்தது. நரம்பு வீக்கு கருவி - வீணைமுதலியன. கானம் - இசைப்பாட்டுக்கள். சிலர் என்றது காந்தருவர்களை.

நீடி மேன்மை நிரம்புமுப் பத்துமுக்
கோடி வானவர் கும்பிட் டெதிர்நிற்ப
வாடி வாள்வலித் தானவ ரோர்புறங்
கூடி யாவித்துக் காண்டல் குறிக்கொள. 27

கு - ரை: முப்பத்து முக்கோடி வானவர் - முப்பத்து முக்கோடிதேவர்; அவர் உருத்திரர் பதினொருவர், அருக்கர் பன்னிருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர் என்க. வாடி - சோர்ந்து. தானவர் - அசுரர். ஆவித்து - கொட்டாவிவிட்டு.

முற்று மாய விருதுமுன் னேங்கிடப்
பற்று மாகதர் சூதர் பராவிடக்
கற்று வல்லவ ராசி கழறிட
வெற்று வாளிந் திரனிருந் தானரோ. 28

கு - ரை: மாகதர் - இருந்தேத்துவார். சூதர் - நின்றேத்துவார். "சூதர் வாழ்த்த மாகதர் நுவல" (மதுரைக்காஞ்சி: 670).

ஆய காலை யருகம ருஞ்சசி
பேய வித்தனை செல்வமும் வேந்தநிற்
கேய தன்மை யெனுலென் றனளவன்
தீய வெந்தழல் போலச் சினஞ்செயா. 29

கு - ரை : சசி - இந்திராணி. இத்தனை செல்வமும் என்னுல் ஏய தன்மை என்ருள். அவன் - இந்திரன்.

மண்ண கத்து மகளுரு வாகென்று
னெண்ண மென்னினி யென்றவ ளுங்கனன்
றண்ண லீயுமு னங்ஙன மாகென்ருள்
விண்ண ரியாரும் வெருவி நடுங்கவே. 30

கு - ரை : மண்ணகத்து - நிலவுலகில். எண்ணம் என் இனி - இனி எண்ணுவது யாது. கனன்று - கோபித்து. நீயும் முன் அங்ஙனம் ஆகுக என்ருள். விண்ணர் - தேவர்கள். வெருவி - அஞ்சி.

மருவு சாபமிவ் வண்ண மொருவருக்
கொருவ ரோதி யுவரிவ ளாகத்துத்
திருவ மேவிய சென்னிநன் ணுட்டகம்
பொருவில் வேதியன் புண்ணிய கீர்த்திபால். 31

கு - ரை : இந்திரனும் சசியும் ஒருவருக் கொருவர் சாபமிட்டு. உவரி வளாகம் - கடல் சூழ்ந்த பூமி. சென்னி நாடு - சோழநாடு. வேதியன் - பிராமணன். புண்ணிய கீர்த்தி என்பவனிடத்து.

கறையி லாப்பல காந்தி யெனும்பெயர்
அறையு மாறிந் திரன்மக ளுகினுன்
பிறைநு தலயி ராணியும் பின்பிறந்
திறைவன் றங்கை யெனவிருந் தாளரோ. 32

கு - ரை : காந்தி என்னும் பெயருடன் இந்திரன் மகனுகி வந்துதித்தான். அயிராணி-இந்திரன் மனைவி. அவன் தங்கை எனப் பிறந்திருந்தாள்.

இந்த வண்ண மிருவரு மேவுழி
முந்த மைந்த வறிவு முளைத்தலாற்
பந்த மோவப் படர்ந்தனர் நாகையில்
நந்த மைத்தொழு தேத்தி நலம்பெற. 33

கு - ரை : மேவுழி - பொருந்துங் காலத்தில். முந்த அமைந்த அறிவு தோன்றலால். பந்தம் ஓவ - பந்தம் நீங்கும்படி. நந்தமை - நம்மை.

முன்ன மைத்த புனலின் முழுகினுன்
பின்னர் வந்த பிணைவிழி மாதொடு
நன்ன யத்த பழவுரு நண்ணியே
இன்ன றீர வெமைத்தொழு தேத்துபு. 34

கு - ரை : முன்னே அமைத்துள்ள தீர்த்தத்தில் முழுகினுன். பின்னர் வந்த மாது - தங்கை. பழவுரு - முன்னே உள்ள இந்திரன் சசி என்னும் வடிவங்கள். இன்னல் தீர - துன்பம் நீங்க.

வான நாடர்கள் யாரும் வளைதரத்
தேன வாவிய செஞ்சொற் சசியொடுந்
தான மேவித் தருக்குற்று வாழ்ந்தனன்
ஊன மேது மிலாவன்பி னுத்தம. 35

கு - ரை : வளைதர - சூழ. சசி - இந்திராணி. தானம் - விண்ணுலகம். ஊனம் - குற்றம்.

நீயு மவ்வண மேநின் மகனெடுந்
தாயி னேரி றவப்பெரு நாகைசார்ந்
தாயுந் தீர்த்தங்க ளாடி நமைத்தொழின்
ஓயுந் தீமையென் றோதி மறைந்தனன். 36

கு - ரை : தாயின் நேர் இல் தவப் பெருநாகை. தீர்த்தங்களிலெல்லாம் முழுகி. தீமை ஓயும் - தீமை நீங்கும்.

அல்ல கண்ட மனைத்து மொழிதரச்
சொல்ல வோர்ந்து துனைந்தெழுந் தோகைசார்
நல்ல வேதிய னுத்திக னேடும்போய்ச்
செல்ல றீர்க்குந் திருநாகை சேர்ந்தனன். 37

கு - ரை : அல்லகண்டம் - துன்பம். ஒழிதர - நீங்க. ஓர்ந்து - ஆராய்ந்து. துனைந்து-விரைவாக. வேதியன் - தரும புஞ்சன். நாத்திகன் - வேதியன்மகன். செல்லல் - துன்பம்.

உள்ள தீர்த்த மெலாமுவந் தாடினுன்
கள்ளந் தீர்த்தருள் காரோண நாதனைப்
புள்ள வாவு மலர்க்குழற் பூரணி
வெள்ள வாரருட் டாயை விருப்பொடு. 38

கு - ரை : கள்ளம் - வஞ்சகம். புள் - வண்டு. பூரணி - கருந்தடங் கண்ணம்மை. பூரணியாகிய அருட்டாய்.

போற்றி னுன்சில நாளன்பிற் போற்றலு
மேற்றி னைரு ளேய்ந்துபஃ றீமையும்
மாற்றி னுன்மக னேடுங் கயிலேயின்
ஆற்றி னைன் கமரிட மின்புற்றுன். 39

கு - ரை : ஏற்றினுன் - சிவபெருமான். மாற்றினுன் - போக்கினுன். ஆற்றினுன் - கங்கையைச் சூடிய பெருமான்.

சாற்று மேன்மைத் தருமபுஞ் சற்கறல்
ஆற்று வேணி யருளிய தோதினும்
பாற்று தோநர பாகன் புகுந்தன்பிற்
போற்று மான்மிய மும்புகல் வாமரோ. 40

கு - ரை : அறல் - கருமணல், நீருமாம். ஆறு - கங்கை. வேணி - சடையினேயுடையான்; பெயர்.

தருமபுஞ்சன் முத்தியடைந்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2046

நாற்பத்திரண்டாவது

நரபாகன் முத்தியடைந்தபடலம்

மாதவர் சூதனை வாழ்த்தி, யேதமி லாநர பாகன்
மேதகு சீர்புக லென்ன, வோதல்செய் வானவ் வுறுவன். 1

குு-ரை: மாதவர்-நைமிச முனிவர். ஏதம் இல்-குற்றமில்லாத. அவ்வுறுவன்-அந்தச் சூதமுனிவர்: உறுவன்-தவசி.

ஆரமுன் மாமணி யாவுங், காரகில் சந்தொடு வீசு
மீரவி யன்றிரை யமுனை, தீர மமைந்ததோர் பேரூர். 2

கு-ரை: ஆரம் முன் மாமணியாவும்-முத்து முதலியவைகளுடன் சிறந்த இரத்தினங்கள் எல்லாவற்றையும். கார் அகில்-கரிய அகிற்கட்டை. சந்தொடு-சந்தனக் குறடுகளுடன். யமுனைதீரம்-யமுனை நதிக்கரை.

தெரிதரி னன்னது மேரு, கிரிபுரை மாளிகை மல்கி
விரிமதில் சூழ்ந்துயர் சோம, புரியெனு நன்னக ராமால். 3

கு-ரை: புரை-ஒப்ப. மல்கி-நிறைந்து. சோமபுரி என்பது அந்த நகரின்பெயர்.

அந்நகர் வாழ்திற லண்ணல், நன்னய சோம குலத்தான்
என்னரு மேத்த விருப்பான், பன்னருஞ் சீர்நர பாகன். 4

கு-ரை: சோம குலம்-சந்திரவங்கிசம். என்னரும்-எத்தகையோரும். நரபாகன் என்பவன்.

மருவலர்ப் போரின் மலைந்து, பொருவரும் வாகைமெய்ப் பூணத்
திருவளர் நாடுமுன் யாவும், வெருவரல் மேவ விடுத்தான். 5

கு-ரை: மருவலர்-பகைவர். மலைந்து-போரில் அழித்து. வாகை-வாகைப்பூமாலை; வெற்றிமாலை. வெருவரல்-அஞ்சுதல்.

இனியெது செய்குவ லென்று, பனிமதி சூடிய நாதன்
தனியமர் தான மிறைஞ்சக், கனிமன மேவி யெழுந்தான். 6

கு-ரை: பனி மதி சூடிய நாதன்-சிவபெருமான். பனிமதி-குளிர்ந்த சந்திரன். தானம்-சிவதலங்களை.

கங்கையின் மூழ்குபு காசி, யங்கையின் மான்மழு வானை
நங்கையோர் பாலயந் நாளோ, டங்கை குவித்துப் பணிந்தான். 7

கு - ரை : கங்காநதியில் முழுகிக் காசியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீவிசுவநாதரை அன்னபூரணியம்மையுடன் வணங்கினன். ஓர்பால்-ஒரு பக்கத்தில்.

திருப்பத மாலெழுந் தேகைப், பொருப்பதள் போர்த்த புராணன்
விருப்ப தகத்தின் விளங்கும், பருப்பத மேத்திப் பணிந்து. 8

கு - ரை : திருப்பதம் - திருவடிகளை. மால் - திருமால். கைப்பொருப்பு அதள் - யானையின்தோல். புராணன் - பழமையானவர். விருப்பு அது அகத்தின் விளங்கும். பருப்பதம் - சீசைலம்.

சித்தியை வேண்டியு மேலா, முத்தியை வேண்டியு மொய்த்துப்
பத்திசெய் வார்பர வுங்கா, ளத்தி யடைந்து பணிந்து. 9

கு - ரை : சித்தி - அட்டமாசித்திகள்: "அட்டமா சித்திகள் அணைதருங் காளத்தி" (தேவா). முத்தி - வீடு. காளத்தி - திருக்காளத்தித் தலம்.

நாவடி தேனி னயக்கப், பாவடி யார்துதி பல்கும்
பூவடி யார்புனற் காஞ்சி, மாவடி யானை வழுத்தி. 10

கு - ரை : நா அடி - நாக்கினடி. தேனின் நயக்க - தேனைப்போல விரும்புமாறு. வடி தேனின் - வடிக்கட்டிய தேனைப்போல எனினுமாம். அடியார் துதிப்பா பல்கும். காஞ்சிமா அடியானை - காஞ்சிபுரத்திலுள்ள ஒற்றை மாமரத்தின் கீழ் விற்றிருக்கும் ஏகாம்பரநாதரை.

திருகழுக் கெஞ்சுற வுள்வா ரருகழுத் தும்பதத் தானை
யிருகழுக் கண்டினி தேத்து, மொருகழுக் குன்றினை வணங்கி. 11

கு - ரை : திருகு அழுக்கு - மாறுபாடாகிய குற்றம். உள்வார் அருகு - நினைப்பவர்பால். இரு கழு(கு) கண்டு - முனிவர்களாகிய இரண்டு கழுகுகள் தரிசித்து: கழுகு எனற்பாலது இறுதியெழுத்துக் குறைந்து கழு என நின்றது. நான்கு யுகங்களுக்கும் முறையே சண்டன் பிரசண்டன், சம்பாதி சடாயு, சம்புகுத்தன் மாகுத்தன், பூடா விருத்தா என்பவர் கழுகுருவாய்ப் பூசிக்கின்றனர் என்பது வரலாறு. ஒரு கழுக்குன்று - ஒப்பற்ற திருக்கழுக்குன்றம்.

[1] வரிப்புலி நீறெனப் பூசி, [2] அரிப்புலி யுண்மகி ழண்ணல்
எரிப்புலிங் கக்கணி னன்பா, திரிப்புலி யூர்சென்று போற்றி. 12

---

[1] வரிப்புலி - நிறம்பொருந்திய வோர்சாந்து.
[2] அரிப்புலி - அரியைப் புல்லியெனப் பொருள்கொள்க.

கு - ரை : வரிப்புலி - நிறம்பொருந்திய ஓர் சாந்து. அரிப்புலி - அரியைப்புல்லி எனப்பொருள் கொள்க என்பது முதற்பதிப்பின் அடிக் குறிப்பு. எரி புலிங்கக் கணினான் - அக்கினியாகிய தீப்பொறியைச் சிதறும் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான்.

நாமலை யாமை நயந்து, நாமலை பாடலு மேற்று
நாமலை யத்திரு நல்கண், ணாமலை போற்றி வணங்கி. 13

கு - ரை : நாம் அலையாமை - நாங்கள் அலைந்து திரியாமல் என்றது அற்பர்களைப்பாடிப் பொருளுக்காக அலையாமல் என்றபடி. நயந்து-விரும்பி. நாம் மலை பாடலும் - நாம் சூடும் பாமாலையையும்: மலைதல் - சூடுதல். நாம் மலைய - நாம் மலைக்கும்படி. திரு - செல்வம். அண்ணாமலை - அருணாசலம்.

குழமலை மேனியோர் பாற்றி, கழமலை யான்கழன் மைத
வழமலை நீங்கரு மாண்பார், பழமலை யேத்திப் பணிந்து. 14

கு - ரை : குழ மலை மேனி - இளமை பொருந்திய திருமேனி. ஓர் பால் திகழ் அமலையான் - ஒரு பக்கத்தில் விளங்கும் உமாதேவியையுடைய சிவபெருமான். கழல் - திருவடி. மை தவழ - மேகங்கள் தவழும்படி. பழமலை - விருத்தாசலம்.

சிதம்பர வாவுத நீர்ந்த, சிதம்பர வா நிற்கு நீற்று
சிதம்பர மானந்தஞ் செய்வார், சிதம்பர மேத்தித் திளைத்து. 15

கு - ரை : சிதம்பர் அவாவுதல் தீர்ந்த: சிதம் பரவா நிற்கும்: சிதம் - சித்தம். சிதம்பர் - கீழ்மக்கள்; "தக்க சிதம்பர வாந்தொழில் தீரச்சு தாவரு ணந்" (துறைசை யமகவந்தாதி - 22). நீற்று சிதம்: சிதம் - வெண்மை. சிதம்பரம் - தில்லை.

ஆழி மிதப்பி னமைந்து, வாழி புவிக்கருள் வைத்த
வீழி நிறச்சடை மேலோன், காழி மதித்து வணங்கி. 16

கு - ரை : ஆழி - கடல். புவி - பூமி. மிதப்பின் - தோணியின். வீழி நிறச் சடை - விழிப்பழம்போலும் சிவந்தசடை. காழி - சீகாழி.

பெருக்கற ருங்கிய வேணி, யெருக்குமு னாவணி வானை
மருக்குல மாமலர் நீர்ப்புள், ளிருக்குவே ளூரி லிறைஞ்சி. 17

கு - ரை : பெருக்கு அறல்-பெருக்கெடுத்துவந்த செருக்குற்ற கங்கை நீர்; அறல் - நீர். எருக்கு முனா - எருக்கமலர் முதலாகவுள்ள மலர்களை. மரு - வாசனை. புள்ளிருக்கு வேளூர் - வைத்தீசுவரன்கோயில்.

பெண்காட் டுமொரு பாதித், தண்காட் டும்பிறை மோலிக்
கண்காட் டுநுத லானை, வெண்காட் டிற்புகுந் தேத்தி. 18

கு - ரை: பெண் காட்டும் ஒரு பாதி - மாதொருகூறு. இச்செய்யுள் "கண்காட்டு நுதலானும் கனல் காட்டுங் கையானும், பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும், பண் காட்டும் இசையானும் பயிர்காட்டும் புனலானும், வெண் காட்டில் உறைவானும் விடைகாட்டுங் கொடியானே" என்னும் திருவெண்காட்டுத் தேவாரத்தை அடியொற்றி வந்தமை காண்க. தண் - குளிர்ச்சி. மோலி - கிரீடம், முடி. நுதல் - நெற்றி.

அடவூர் மூன்று மவிந்து, கெடவூ ரேவிடுத் தானைப்
படவூர் வாரிதிப் பாங்கர்க், கடவூ ரேத்திக் கசிந்து. 19

கு - ரை: அட - சுட்டெரிக்க, அழிக்க. ஊர் மூன்றும் - மூன்று புரங்களும். ஊர் ஏ விடுத்தானை: ஏ - அம்பு. படவு ஊர் வாரிதி: படவு - மரக்கலம். வாரிதி - கடல். கடவூர் - திருக்கடவூர் என்னும் தலம்.

நிறையான் மாக்க ளிறைஞ்ச, முறையான் மாப்பல நல்கும்
இறையான் மாமயி லாடு, துறையான் பாதமும் போற்றி. 20

கு - ரை: நிறை ஆன்மாக்கள் - நிறைந்த உயிர்கள் எல்லாம். மா பலம் நல்கும்-மாமரம் பழத்தைக் கொடுக்கும். மா பலம் - பெரும்பயனாகிய விடுபேறு. மா பலம் - பெரிய வலிமை.

மாவடு நேர்விழி யார்செய், நோவடு மாதவர் சூழ
ஆவடு தண்டுறை மேவுந், தேவடு தீர்பதம் போற்றி. 21

கு - ரை: மாவடு - மாவின் பிஞ்சு. நோ அடு மாதவர் - துன்பத்தைப் போக்கும் சிறந்த தவத்தோர். ஆவடு தண்டுறை மேவும் தே - ஸ்ரீ மாசிலாமணியீசர். வடு தீர் பதம் - குற்றமில்லாத திருவடிகள்: வடுதீர் பதம் என்றதன் குறிப்பு பசுவடிவாக வந்த உமாதேவியின் பசுவடிவத்தைப்போக்கி அணைத்தெழுந்த கோலத்தை நினைப்பிக்கும். தீர்பதம் : வினைத்தொகை.

சடைமரு வும்பிறை யானைப், புடைமரு வம்பிகை யோடுங்
கடைமரு வாவளம் வாய்ந்த, விடைமரு தேத்தி யிறைஞ்சி. 22

கு - ரை: புடை மருவு அம்பிகை - பெருநல முலையம்மை. கடை மருவா வளம் - தலைமை பெற்ற வளப்பம். இடைமருது-திருவிடைமருதூர். "பொற்றேளியுந்தானும் பொலிந்தழகாக, உறைகின்ற இடைமருது", "அன்பிற் பிரியாதவளோடும் உடனாய், இன்புற்றிருந்தான்றன் இடைமருது", "அங்கோல் வளையாளையோர் பாகம் அமர்ந்து, ... எங்கோ னுறைகின்ற இடை

மருது'', "கல்லால் நிழற்கீழ், வாடாமுலை மங்கையுந்தானு மகிழ்ந், தீடா வுறை கின்ற இடைமருது'' என்னும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரப்பகுதிகள் காண்க.

விடந்தை களத்துயர் மேலான், மடந்தையோர் பாலுடை வள்ளல்
நடந்தை பதத்து நம்மானைக், குடந்தை யணைந்து கும்பிட்டு. 23

கு - ரை : விடம் தை களத்து - ஆலகாலவிடம் பொருந்தி விளங்கும் கண்டத்தையுடைய. மடந்தையோர் பாலுடைவள்ளல் - மடந்தை பாகர். நடம் தை பதத்து நம்மான்-சிவபெருமான். குடந்தை-குடமூக்கு. குடந்தைக் கீழ்க்கோட்டத்தில் ஸ்ரீ நடராசப்பெருமானுக்காகத் தனிக்கோயில் உள்ளதும் இங்கே சிந்திக்க. 'நடந்தை - நடம் தை எனப் பிரித்து நடம் பொருந்திய எனப்பொருள் கொள்க' என்பது முதற்பதிப்பின் அடிக்குறிப்பு. குடமூக்கு என்பது குடந்தை என மரீஇயது. குடமூக்கு, குடந்தைக்கீழ்கோட்டம், குடந்தைக்காரோணம் என்பன கும்பகோணத்தில் உள்ள தேவாரம் பெற்ற தலங்கள்.

ஐயா ருறு கடந்தா, னையா ருய்மனு வுள்ளான்
ஐயா றைந்தற வாமெய், யையா றப்பனை யேத்தி. 24

கு - ரை : ஐ ஆருறு - அழகிய முப்பத்தாறு தத்துவங்கள். ஐ ஆருய் மனு - பஞ்சப்பிரம மந்திரங்களும் சடங்க மந்திரங்களும்: ஐந்தும் ஆறுமா யுள்ள மனு; மனு - மந்திரம். ஐயாறப்பன் - பஞ்சநதீசுவரர். ஐ ஆறு ஐந்து அல் தவா மெய்; ஐ ஆறு - முப்பது: ஐந்து அல் ஐ ஆறு - ஐந்து அல்லாத முப்பது; இருபத்தைந்து. தவா மெய் - நீங்காத திருமேனியை யுடைய அப்பன் என்க. என்றது இருபத்தைந்து மாகேசுர மூர்த்தங்களை என அறிக.

தேனைக் காவல்செய் வண்டின், வானைக் காவல்செய் வார்சூழ்
கோனைக் காவள மல்கு, மானைக் காவடி போற்றி. 25

கு - ரை : தேனைப் பாதுகாக்கும் தேனீக்களைப்போல. வண்டின் - தேனீக்களைப்போல. வானைக்காவல் செய்வார் - தேவர். சூழ் கோனை - வலம் வருகின்ற சிவபெருமானை. கா வளம் மல்கும் ஆனைக்கா.

கராமலை போதகங் காத்தோன், பராமலை நீர்முடி பம்ப
அராமலை யற்புத னொண்டாள், சிராமலை மேவி வணங்கி. 26

கு - ரை : கராம் மலை போதகம் காத்தோன் - திருமால். கராம் - முதலை. போதகம்-யானை. பராம்=பரவும் - துதிக்கும். அலை நீர் முடி பம்ப - கங்கா சலம் திருமுடியிலே நிறைய. அரா மலை - பாம்பை அணிந்த; மலைதல் - சூடுதல். அற்புதன் - ஞானமே வடிவாகவுடையவன். ஒண்தாள் - ஒள்ளிய திருவடி.

போரூர் முப்புர மாயத், தேரூ ரும்பெருஞ் செல்வன்
காரூர் மாளிகை யோங்கு, மாரூ ரேத்தி யிறைஞ்சி. 27

கு - ரை : போர் ஊர் முப்புரம் மாய - போரைச்செய்யும் பொருட்டுத் திரியும் திரிபுரங்கள் அழிய. தேர் ஊரும் பெருஞ்செல்வன் - பூமியாகிய தேரை ஊர்ந்து செலுத்திய சிவபெருமான். கார் - மேகம். ஆரூர் - திருவாரூர்; ஆர் - பிருதிவி: பிருதிவித்தலம். 'தேரூரும் பெருஞ்செல்வன்' என்ற குறிப்பு 'வீதி விடங்கர்' என்பதையும், 'ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூரே' என்பதையும் நினைப்பூட்டுவதும் காண்க.

இகலூர் மூன்று முருங்க, மிகலூர் ஓர்கணை தொட்டு
நகலூ ரேறு நயந்தார், புகலூ ரெய்துபு போற்றி. 28

கு - ரை : இகல் ஊர் மூன்றும் முருங்க - முப்புரங்களும் அழிய. மிகல் ஊர் ஓர் கணை - சுமையாகப் பொருந்திய திருமாலாகிய அம்பு; மிகல் அதிகப் பொருட்டு. தொட்டு - தொடுத்து. நகல்=நகுதல் - சிரித்தல். ஏறு - இடபம். புகலூர் - திருப்புகலூர்.

பங்கா டற்பரை காணப், பொங்கா டற்றிறஞ் செய்யுஞ்
சங்கா டற்செவி யானைச், செங்கா டுற்றினி தேத்தி. 29

கு - ரை : பங்கு ஆள் தற்பரை: பங்கு - பாதி. தற்பரை - சிவசத்தி, பராசத்தி. பொங்கு ஆடல் திறம் - மிகுந்த தாண்டவ விதங்களை. சங்கு - சங்கக்குண்டலம். செங்காடு - திருச்செங்காட்டங்குடி.

இந்தநற் றானங்க ளாதி, எந்தநற் றானமும் போற்றுஞ்
சந்தமிக் கான்மனத் துன்பஞ், சிந்தமிக் காயது காணான். 30

கு - ரை : இந்த நல் தானம் - மேலே கூறப்பட்ட தலங்கள்: காசி, திருப்பதம், காளத்தி, காஞ்சி, கழுக்குன்றம், பாதிரிப்புலியூர், அண்ணாமலை, பழமலை, சிதம்பரம், சீகாழி, புள்ளிருக்குவேளூர், வெண்காடு, கடவூர், மயிலாடுதுறை, திருவாவடுதுறை, இடைமருது, குடந்தை, ஐயாறு, திருவானைக்கா, சிராமலை, ஆரூர், திருப்புகலூர், திருச்செங்காட்டங்குடி முதலிய சிவதலங்களையும் பிறவற்றையும். சிந்த - கெட. மிக்காயது - சிறந்த தலம். காணான் - காணாதவனாய்.

தேவா வென்று தியங்கும், பூவாழ் வான்செவி கேட்ப
ஓவா வின்பரு ணாகை, வாவா வென்றதோர் வாக்கு. 31

கு - ரை : தியங்கும் - மனமயங்கும், திகைக்கும். ஓவா இன்பு அருள் நாகை; ஓவா - நீங்காத. நாகை வா வா - நாகைக்கு வருவாய் வருவாய். நாகை - நாகைக் காரோணம். ஓர் வாக்கு - ஒரு அசரீரி.

அதுதேர்ந் தோகை துளும்ப, மதுவார் பூந்தொடை மார்பன்
சதுவே தங்களு மேத்து, முதுநா கைப்பதி சார்ந்தான். 32

கு - ரை: அது தேர்ந்து - அவ்வாக்கினைக் கேட்டதும் தெளிவுற்று. பூந்தொடை மார்பன் - நரபாகன் என்பவன். சது வேதங்களும் - நான்கு வேதங்களும்.

வானோர் வாவி படிந்து, தேனோர் மாமலர் தூவிக்
கோனோ ராதி புராண, மானோர் பாதம் வணங்கி. 33

கு - ரை: வானோர் வாவி - தேவ தீர்த்தம். தேன் ஓர் - தேனீக்கள் ஆராயும். கோன் - நரபாகன். ஆதி புராணம் ஆனோர் - ஆதி புராணர்.

எல்லா மீன்ற பிராட்டி, அல்லார் கூந்த லணங்கு
நல்லார் சேர்பத நண்ணிப், புல்லா வேத்துபு போற்றி. 34

கு - ரை: எல்லா உலகங்களையும் ஈன்று அருளிய பிராட்டியாகிய அணங்கு. அல் - இருட்டு. நல்லார் - அறிஞர், ஞானிகள். புல்லா - பொருந்தி.

சூழ்வான் பன்முறை கோயி, லாழ்வா னன்பெனு மாழி
வீழ்வான் முன்னர் விரும்பிப், போழ்வான் தீவினை போக. 35

கு - ரை: பன்முறை சூழ்வான் - பலமுறை வலம் வருவான். ஆழி ஆழ்வான் - கடலில் மூழ்குவான்; அன்புக்கடலில். விழ்வான் முன்னர் - சந்நிதியில் வணங்குவான்.

உள்ள தலங்க ளனைத்தும், கள்ள மிலாது கலந்து
வெள்ள விருஞ்சடை யானைத், தள்ளரு மன்புறத் தாழ்வான். 36

கு - ரை: உள்ள தலங்கள் அனைத்தும் - நாகையில் உள்ள சிவ தலங்கள் எல்லாவற்றையும். வெள்ள இருஞ்சடையான்: வெள்ளம் - கங்கை. தள்ளரும் அன்பு - நீங்குதற்கரிய அன்பு.

இன்னண மேத்தி யிறைஞ்சு, மன்னவ னுக்கருண் மாண்பிற்
பொன்னவி ராதி புராணன், தன்னரு ளைல்கின னன்றே. 37

கு - ரை: இன்னணம் - இவ்வாறு. மன்னவன் - நரபாகன். ஆதி புராணர் கருணையைச் செய்தார்.

ஆதி புராணர்த மருளாம், ஏதியி னொன்னல ரிரிய
மோதியி ழந்தது பெற்றான், ஓதி யுணர்ந்த வுளத்தான். 38

கு - ரை: அருளாம் ஏதி - அருளாகிய படைக்கலம். ஒன்னலர் இரிய - பகைவர்கள் கெட்டோட. மோதி - பொருது. ஓதி - அறிவு.

முன்னையின் மேம்படு செல்வ, மென்னைகொ லாமெனப் பெற்றுன்
அன்னையொப் பார்க்கவை யாக்கித், தன்னையொப் பான்மிக
[வாழ்ந்தான். 39

கு - ரை : முன்னையின் - முன்னைக் காலத்தைவிட. அன்னை ஒப்பாற்கு - தாயையொத்த சிவபெருமானுக்கு. அவை - அச்செல்வங்களை. தன்னை ஒப்பான் - தனக்குத்தானே ஒத்தவனாக.

பண்புமிக் கானர பாக, னண்புமிக் கார்கதை சொற்றும்
விண்புகழ் பாற்கர மேலோ, னெண்படு காதை யிசைப்பாம். 40

கு - ரை : பண்பு மிக்கான் . சிவநெறியிற் செல்லும் தன்மை மிகுந்தவன். விண் - விண்ணோர். எண்படு - மனத்தில் தோன்றும். எண் - எண்ணம்.

நரபாகன் முத்தியடைந்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2086

நாற்பத்துமூன்றுவது

பார்கரப்படலம்

கருமல வேர்தபு காட்சி மாதவர்
திருமுனி சூதன்பொற் செய்ய தாடொழு
தொருவறப் பார்கர னுற்ற தோதெனப்
பெருமுனி யவனது பிறங்கக் கூறுவான். 1

கு - ரை : கருமல வேர் தபு-ஆணவமலத்தின் மூலத்தைத் தொலைத்த. மாதவர் - நைமிசாரணிய வாசிகள். ஒருவு அற - நீக்கமின்றி. உற்றது - அடைந்த பேற்றை. பிறங்க - விளங்கும்படி.

மறையவர் திருக்குலத் துதித்த மாண்பினன்
பிறைவளர் சடைமுடிப் பிரான டித்துணைப்
பொறையல தயல்சும வாத புந்தியான்
கறைதபு பார்கரப் பெயர்க லந்தவன். 2

கு - ரை : மறையவர் - அந்தணர். அடித்துணைப் பொறை அலது - இரண்டு திருவடிகளைப் பொறுத்தல் அல்லாமல்: பொறுத்தல் - தியானித்தல். புந்தி - மனம். கறை தபு - குற்றம் நீங்கிய.

மனைமக வொடுஞ்செறி வாழ்க்கை வேண்டலன்
கனைகட றந்தநஞ் சுண்ட காரணன்
புனைமலர்த் திருவடி போற்றிச் சன்மநோய்
வினைதபு வாஞ்சையே மேற்கொண் டுள்ளவன். 3

கு - ரை : இல்லற வாழ்க்கையை விரும்பிலன். காரணன் - சிவ பெருமான். சன்மநோய் - பிறவிப்பிணிக்குக் காரணமாகிய. வினை தபு வாஞ்சை - நல்வினை தீவினைத் தொடர்புகளினின்று நீங்கும் விருப்பம்.

இதங்கரை குவதலால் வேறி யம்பிடா
மதங்கராச் சிரமத்து மரீஇத் தவஞ்செயும்
உதங்கரை யடுத்தன னுண்மை யீதெனக்
கதங்கடிந் துயர்தவங் கருது பார்கரன். 4

கு - ரை : இதம் - நன்மை. மதங்கர் ஆச்சிரமத்து மரீஇ - மதங்க முனிவருடைய ஆசிரமத்தையடைந்து. உதங்கரை - உதங்கமுனிவரை. கதம் கடிந்து - கோபத்தை வெறுத்தொதுக்கி.

தவம்பொலி யுதங்கர்தந் தாள்ப ணிந்துபல்
பவந்தபு தலங்களுட் பான்மை மிக்கதாய்
நவம்பொலி வடிவமுங் கடந்த நம்பர
சிவம்பொலி தலமெது செப்பு வாயென. 5

கு - ரை : பவம் தபு தலங்களுள்-பிறப்பையறுக்கும் தலங்களினுள்ளே. நவம் பொலி வடிவமும் கடந்த - நவந்தரு பேதங்களும் கடந்து அப்பாற் பட்ட: நவந்தரு பேதம்: பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுரன் என்னும் உருவம் நான்கும், சதாசிவமாகிய அருவுரு ஒன்றும், விந்து நாதம் சத்தி சிவம் என்னும் அருவம் நான்குமாம். இவைகளைக் கடந்து நின்ற பரசிவம் விளங்கும் தலம் யாது? சொல்வாயாக என்று சொல்ல.

ஏதுகுறித் திதுவினா யினையென் றம்முனி
கதுமெனக் கேட்டலுங் கலந்த சன்மநோய்
அதுதபுத் துயர்கதி யடைதல் வேட்டனன்
முதுதவத் திறலினாய் மொழிதி யென்றனன். 6

கு-ரை : கலந்த சன்மநோய் அது தபுத்து-தொடர்ந்து பற்றிய பிறவிப் பிணியை நீக்கி. வேட்டனன்-விரும்பினேன். முதுதவம் - முதிர்ந்ததவம்.

என்றலு முறுவலித் திதயத் தெண்ணுபு
நன்றுமை முத்திநீ பெறந யப்பையேல்
அன்றல்செய் கற்பத்து மழிவி லாத்தலம்
ஒன்றது நாகைக்கா ரோண மென்பதே. 7

கு - ரை : முறுவலித்து - புன்முறுவல் செய்து. இதயத்து எண்ணுபு- மனத்தில் தியானித்து. நயப்பையேல் - விரும்புவாயாயின். அன்றல் செய் கற்பத்தும் - அழிதலைச்செய்யும் கற்பகாலத்தினும்.

அத்தலத் தடைந்துபுண் டரிக னாய்தவ
உத்தமப் பெருமையா லும்பர் தம்பிரான்
வித்தக மேனியின் மெய்யொ டுங்கலந்
தெத்தவத் தருமுரு வின்ப மெய்தினன். 8

கு - ரை : புண்டரிகன்-புண்டரிக முனிவன். ஆய் தவம்-ஆராய்ந்து செய்த தவம். உம்பர் தம்பிரான் - தேவதேவனாகிய சிவபெருமான். வித்தக மேனி - ஞானசொரூபம்.

இன்னுமத் தலத்திடை யிருந்த வம்புரிந்
துன்னுமொண் முத்தியை யுற்று ளார்பலர்
துன்னுபன் னோய்களுந் தொலைத்து ளார்பலர்
மன்னுபல் வரம்பெறு மாண்புற் றார்பலர். 9

கு - ரை : அத்தலத்தை அடைந்து தங்கித்தவம்புரிந்து முத்தியை அடைந்தோர் பலர்,பலவகைப்பட்ட நோய் தீர்ந்தாரும் பலர்,பலவரங்களைப் பெற்றுச் சிறந்தாரும் பலராவார். ஒண் முத்தி - பரமுத்தி. துன்னு - பற்றிய. மன்னு - நிலைபெற்ற.

ஆயவத் தலத்திடை யமரர் தம்பிரான்
மேயவர்க் கெண்மையின் விளக்கும் பேரருள்
பாயபஃ றலங்களும் பரவ வெய்துமா
தாயமத் தலங்கண நினைப்பிற் சாருமே. 10

கு - ரை : அமரர் தம்பிரான் - சிவபெருமான்; மகாதேவர். மேயவர்க்கு - தம்மை அடைந்தோர்க்கு. எண்மையின் - எளிமையின். அத்தலத்திடை - நாகைக்காரோணதலத்தில். பாய பரவ எய்தும்.

அன்னமாத் தலத்தைநீ யடைந்து தெய்வநீர்
முன்னமுள் ளனவெலா முறையின் மூழ்குபு
சொன்னவா னவரெலாந் துவன்று மெய்ப்பசு
நன்னர்கொள் பாலுமை நாதற் காட்டுபு. 11

கு - ரை : தெய்வநீர் - தெய்வத்தன்மை பொருந்தும் தீர்த்தம். முறையின் மூழ்குபு - விதிப்படி ஸ்நானம் செய்து. வானவரெலாம் துவன்று மெய்ப் பசு: பசுவின் உடம்பில் எல்லாத் தேவர்களும் வசிக்கின்றனர் ஆகலின் 'துவன்று மெய்ப் பசு' என்றார். இதனை, சிவதருமோத்தரம், கோபுரவியல் 123 முதல் 128 வரையுள்ளசெய்யுட்களான் அறிக. வானவர்- தேவர். அன்ன மாத் தலம் - நாகைக்காரோணம். உமைநாதற்குப் பசுப் பாலை அபிஷேகித்து.

பூசைசெய் தமர்வையேற் புரிந்த முத்தியோ
டாசையுள் ளனவெலா மடைய லாமெனா
ஓசைகொள் மாதவத் துதங்கர் கூறலும்
மாசையில் பாற்கரன் வணங்கி யோதுவான். 12

கு - ரை : ஆசையுள்ளன எலாம் - வேண்டிய எல்லாவற்றையும். மாசை இல் - குற்றத்தையில்லாத.

வானவர் யாவரும் வதியு டம்புள
தானது பசுவென வைய கூறினை
மேனகு மமரரெவ் விதம்பொ ருந்துவர்
நானறி திறநவி லெனந விற்றுவான். 13

கு - ரை : வதி உடம்புளது ஆனது பசு: வதிதல் - வசித்தல். மேல்- அப்பசுவினிடத்து. நகும் அமரர் - விளங்கும் விண்ணோர். மேல் - மேலுலகம் எனினுமாம்.

நிலையுயிர் சரவுயிர் இரண்டு நீள்புகழ்க்
கலைபுகல் கங்கைமுற் கணக்கி றீர்த்தமும்
அலைவில்சே தாமருப் பமைநு னித்தலை
மலைவற வமர்தரு மயக்கில் கேள்வியாய். 14

கு - ரை: நிலை உயிர் - நிலைத்திணை. சர உயிர் - இயங்குதிணை: எனவே சராசரப் பொருள்களும் கங்கை முதலாகிய அளவில்லாத தீர்த்தங்களும் பசுவின் கொம்பின் நுனியில் குடியிருப்பன. சேதாமருப்பு - பசுவின் கொம்பு.

பாட்டளி முரனறும் பங்க யத்தனுந்
தோட்டலர்த் திருமக டுதைந்த மார்பனும்
வாட்டமில் குடம்புரை செருத்தன் மற்றதன்
கோட்டடி யமர்குவர் குணத்தின் மிக்குளாய். 15

கு - ரை: பாட்டு அளி முரல் - இசைப்பாட்டுக்களைப் பாடும் வண்டு இனங்கள். பங்கயத்தன் - பிரமன். திருமகள் துதைந்த மார்பன் - திருமால். பசுவின் கொம்படியில் அமர்ந்திருப்பர். குடம்புரை செருத்தல் - குடத்தை யொத்தமடி. கோடு - கொம்பு.

வரத்துயர் சிவபிரான் மாண்பிற் கேற்பவான்
சிரத்திடை யமருவன் செறிந்த யாவையும்
புரத்தல்செ யெம்பெரு மாட்டி பொங்குமா
தரத்தத னுதனடு விருப்பள் தன்மையோய். 16

கு - ரை: வரத்து உயர் சிவபிரான் - மிகமேம்பட்ட முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான். சிரத்தில் அமர்வார். உமாதேவியார் நெற்றி நடுவில் இருப்பார். ஆதரத்து - விருப்போடு. அதன் நுதல் நடு.

கொடுவலிச் சூருயிர் குடித்த வேற்பிரான்
படுமத னுசியி னுனியிற் பம்புவன்
விடுவளி நாசியுள் மேக வாகன
னெடுபல தேவரு முறைவ ரொள்ளியோய். 17

கு - ரை: வேற்பிரான் - முருகக் கடவுள். நாசி நுனியில் வீற்றிருப்பர். மூக்குள்ளே இந்திரன் முதலிய எல்லாத்தேவரும் தங்கியிருப்பர். வளி விடு நாசி: வளி - சுவாசம். மேகவாகனன் - இந்திரன்.

கந்தலி லாவிரு கன்ன நாப்பணே
சுந்தரத் தமர்வரச் சுவினி தேவர்கள்
சந்தமார் நயனமோ ரிரண்டிற் றங்குவார்
அந்தரத் தியங்கிரு சுடரு மண்ணலே 18

கு - ரை : இரு கன்னங்களின் நடுவில் அச்சுவினி தேவர்கள். நாப்பண் - நடுவிடம். சூரிய சந்திரர் இரு கண்களிலும் தங்குவர். நயனம் - கண். அந்தரம் - ஆகாயம். இருசுடர் - சூரிய சந்திரர்கள்.

வளியெனுங் கடவுள்பன் மருவி வாழ்குவன்
மிளிர்தரு தாலுவில் வருணன் மேவுவன்
களிகொளுங் காரமார் கவின்ற நெஞ்சிடைத்
தெளிகலை மகளுறுஞ் சிறந்த கேள்வியாய். 19

கு - ரை : வளி எனும் கடவுள் - வாயுதேவன்; பல்லில் பொருந்துவன். நாவில் வருணனும், நெஞ்சில் கலைமகளும் தங்கியிருப்பர். தாலு - நாக்கு. கவின்ற - அழகிய.

மறலியு மியக்கரும் வயங்கு கண்டத்தி
னுறல்கெழு கண்டையி னுற்று வாழ்குவர்
தறைபுக வூதயவத் தமன சந்திகட்
கிறையவ ருதட்டுற விருப்ப ரேற்றத்தாய். 20

கு - ரை : மறலி - இயமன். இயமனும் இயக்கரும் கண்டையில் வசிப்பர். கண்டை - கழுத்திற் கட்டும் மணி. உதய அத்தமன சந்தி தேவதை உதட்டில் உறுவர்.

வானவர்க் கிறையவன் வயங்கு கண்டத்தின்
ஆன நல் லிமிலிடை யருக்க தேவர்கள்
ஈனமில் மார்பகத் தியங்கு சாத்தியர்
மானமார் தரவென்றும் வாழ்வர் மாண்பினோய். 21

கு - ரை : வானவர்க் கிறையவன் - இந்திரன்; கண்டத்தில் தங்குவன். இமில் - முரிப்பு, திமில். இமிலில் அருக்கர்கள் இருப்பர். மார்பில் சாத்தியர் வாழ்வார். மானம் ஆர்தர - பெருமை பொருந்த.

ஈரிரு காலினுங் காலி ருக்குமேற்
சார்முழந் தாண்மருத் துவர்க டங்குவர்
ஒருநாற் காற்குளம் புறுநு னித்தலை
ஆருவர் நாகர்க ளறிவின் மிக்குளாய். 22

கு - ரை : நான்கு கால்களினும் வாயுதேவனும், முழந்தாளில் மருத்துவரும், காற்குளம்புகளின் நுனியில் நாகர்களும் வாழ்வார். கால் - காற்று. மருத்துவர் - தேவமருத்துவர்.

நலஞ்செய்கந் தருவரக் குளம்பி னுப்பனும்
இலங்கரம் பையர்குளம் பிசைந்த மேற்கணும்
வலம்புனை யுருத்திரர் வெரிநும் வாழ்வரால்
அலந்தரு பிரானடிக் கன்பு வைத்துளாய். 23

கு - ரை : குளம்பின் நடுவில் கந்தருவரும், குளம்பின் மேலிடத்தில் அரம்பையரும், முதுகில் உருத்திரரும் வாழ்வார். நாப்பண் - நடு. வலம்புனை - வெற்றியுறும். வெரிந் - முதுகு.

சந்துக டோறுமெண் வசுக்க டங்குவார்
நந்தரைப் பலகையிற் பிதிரர் நண்ணுவார்
முந்தெழு மாதரும் யோனி முற்றுவார்
அந்தமில் பிரான்புக ழுறையு நாவினாய். 24

கு - ரை : சந்துகளில் அட்டவசுக்களும், அரைப்பலகையில் பிதிர்த் தேவதைகளும், யோனியில் சத்தமாதர்களும் வாழ்வார்.

திருமக ளபானத்திற் சேர்ந்து வாழ்குவள்
மருவடி வாலினு கேசர் வைகுவர்
பொருவில்வா லுரோமத்திற் பொருந்தும் வெங்கதிர்
வெருவும்வெம் பவத்தொட ரறுக்கு மேதகாய். 25

கு - ரை : குதமாகிய அபானத்தில் திருமகளும், அடிவாலில் நாகரும், வால் மயிரில் சூரியகிரணங்களும் இருப்பர். வெம் பவத் தொடர் - கொடிய பிறப்பின் தொடர்ச்சி.

திரையெறி கங்கைகோ சலத்திற் சேருவள்
புரைதபு யமுனைகோ மயம்பொ ருந்திடும்
வரைபெரு மாதவர் பலரும் வைகுவார்
கரைமயி ரனைத்தினுங் கலையு ணர்ந்துளாய். 26

கு - ரை : கோசலத்தில் கங்கையும், கோமயத்தில் யமுனையும், உரோமங்களில் மாதவர்களும் வாழ்வார். கோசலம் - பசுமூத்திரம். கோமயம் - பசுச்சாணம்.

வாரிசூழ் புவிமகள் வயிற்றில் வைகுவள்
மூரிவான் கடலெலா முலையின் மேவிடும்
ஒருநல் வயிற்றிடை யுற்று வாழ்தருங்
காருக பத்தியக் கனன்மெய் யன்பினோய். 27

கு - ரை : வாரி-கடல். புவிமகள் - பூமிதேவி. வயிற்றில் பூமிதேவியும், முலையில் எல்லாக்கடல்களும், வயிற்றில் காருகபத்தியமும் தங்கியிருக்கும்.

மோகமா யிதயத்து முயங்கி வாழ்தரும்
ஆகவ னீயந்தக் கணுக்கி னீயந்தான்
ஏகமா முகத்துற விருக்கு நாடொறும்
போகவா சையில்வெறுப் பமைத்த புந்தியாய். 28

கு - ரை : இதயத்தில் ஆகவனீயமும், முகத்தில் தட்சிணாக்கினியும் பொருந்தும். ஆகவனீயம் காருகபத்தியம் தட்சிணாக்கினி என்பன முத்தீக்கள்.

என்புக டோறுநன் கியைந்து வாழ்வன
அன்புறு மகத்தொழி லனைத்து மெய்முழு
தின்புறுப் பனைத்தினு மியைந்து வாழ்குவர்
நன்புலக் கற்புயர் நங்கை மாரெலாம். 29

கு - ரை : யாகத்தொழில் அனைத்தும் எலும்புகள்தோறும் பொருந்தி வாழ்வன. மகம் - யாகம். எல்லா அவயவங்களினும் கற்புடைய மாதர்கள் பொருந்தி வாழ்வார்.

இத்தகு மாக்களை யியக்க வேண்டிடின்
உத்தமப் பலாசக்கோ லொன்று கைக்கொடு
மெத்தென மென்மெல வெறிதல் வேண்டுமால்
வித்தக விரத்தியின் மேன்மை மேயினும். 30

கு - ரை : ஆக்களை - பசுக்களை. இயக்க - செலுத்த, ஓட்ட. பலாசக் கோல் - புரசின் கொம்பு. எறிதல் - வீசுதல். வித்தக விரத்தி - சதுரப்பாடுடைய நிராசை.

முனிவரு மகலிட முயன்று செய்ததிற்
புனிதமிக் குறநனி பொருத்தி யாவையிற்
கனிவுறப் புகுத்தியொண் கவின்புல் லாதிய
இனிதுற வூட்டுத லியையு மென்பவே. 31

கு - ரை: முனிவு அரும் அகலிடம் - வெறுத்தற்கரிய விசாலமான இடம். புனிதம் - பரிசுத்தம். புல் ஆதிய - புல்லு முதலியவைகள்.

தகைதரு மாக்களைத் தவாத வாசனைப்
புகையொளிர் சுடர்முதற் பொருத்திப் பூசிப்போர்
பகைதவிர் போகங்கள் பல்ல துய்த்துப்பின்
நகைகெழு கயிலையே நண்ணி வாழ்வரால். 32

கு - ரை : தவாத வாசனை - நீங்காத வாசனையையுடைய. புகை - தூபம். துய்த்து - அனுபவித்து. புகை - அகிற்புகை முதலியன.

புண்ணிய வாக்களைப் பூசை செய்தலோ
டண்ணிய பால்கறந் தமலற் காட்டுவார்
கண்ணிய வாயுளுங் கற்ப நீடுற
எண்ணிய வெண்ணியாங் கெய்தி வாழ்வரே. 33

கு - ரை : புண்ணிய ஆக்கள் - புண்ணிய வடிவாகிய பசுக்கள். பசுப்பாலைக் கறந்து சிவபெருமானுக்கு அபிஷேகம் பண்ணுவோர் ஆயுட் பெருக்கமும் கற்பாந்தகாலம் வரை பெற்றும், எண்ணிய எண்ணியாங்குப் பெற்றும் வாழ்வார்.

பால்கறந் தாட்டுமோர் பண்பு மிக்கவர்
மால்கழி நாகைவாழ் வரதன் பொன்முடி
மேலுற வாட்டிடின் விளைத ரும்பயன்
சாலுறு முத்திகாண் சாற்றல் வேறெவன். 34

கு - ரை : வரதன் - சிவபெருமான். ஆட்டிடின் - அபிடேகித்தால். முத்திப் பயனுண்டாம். சாற்றல்-சொல்லுதல். வேறு எவன் - வேறுயாதாம்;

எனவுரைத் தத்தல மேகென் றேதினன்
மனநெகப் பாற்கரன் வணங்கிக் கைதொழு
தனகமெய்த் திருவின ரவாவிச் சூழ்தருங்
கனமதி னாகையைக் கலத்த லெண்ணினன். 35

கு - ரை : அத்தலம் ஏகு - நாகைக்காரோணத் தலத்துச் செல்வாய். மனம் நெக - உள்ளம் உருக. அனகம் மெய் திருவினர் - பரிசுத்தமான உண்மைச் சிவஞானிகள். அவாவி - விரும்பி.

வழியமர் தீர்த்தங்க ளனைத்தும் வாஞ்சையிற்
பழிதப மூழ்குபு பஃறு லங்களும்
இழிவறச் சென்றுசென் றேத்திப் போதுவான்
கொழிதலை யுணர்ச்சியிற் கூர்த்த பாற்கரன். 36

கு - ரை : வாஞ்சையில் - விருப்பத்துடன். பழிதப மூழ்குபு - பழி நீங்குமாறு முழுகி. இழிவு அற - தன்கீழ்மை தொலைய; கீழ்மையாவது பிறப்பிறப்புகள். தலை உணர்ச்சியில் கூர்த்த - முதன்மைபெற்ற முத்திபெறும் நல்லுணர்வில் மிக்க. போதுவான் - செல்வான்.

[1] நாகைவெண் டிரையெறி நரலை சூழ்திரு
நாகையெங் குளதென நயந்த தன்பெயர்
[2] நாகையஞ் சலித்திட நவிலும் [3] வேடக
னுகையி லாயவென் றுள்ளு நன்மனம். 37

கு - ரை : நாகை வெண் திரை எறி - சங்குகளை வெள்ளிய அலைகள் வாரிவீசும்; நாகு - சங்கு. நரலை சூழ் - கடல் சூழ்ந்த. 'நாகை அஞ்சலித்திட

---

[1] நாகு - சங்கு. [2] நாகையஞ்சலித்திட நவிலும் - கை அஞ்சலித்திட, நா நவிலும் என எதிர் நிரனிறையாகக் கொள்க. [3] வேடகனு - வேள்தகனு எனப் பிரித்துப் பொருள் கொள்க.

நவிலும்: கை அஞ்சலித்திட, நா நவிலும் என எதிர் நிரனிறையாகக் கொள்க' என்பது முதற்பதிப்பின் அடிக்குறிப்பு. அஞ்சலித்திட - கூப்பித் தொழ: "கைகாள் கூப்பித்தொழீர்" (தேவா). நவிலும் - தோத்திரங்களைச் சொல்லும். 'வேடகனு - வேள் தகனு எனப் பிரித்துப் பொருள் கொள்க' என்பதும் அப்பதிப்பின் அடிக்குறிப்பே. வேள் - மன்மதன். தகனு - தகுதி உடையவனு. கையிலாய: விளி.

இராப்பக ஞகைசா ரெண்ணம் பூண்டவன்
பராக்கடி யாதவப் பதியை யெய்தினுன்
குராப்புனை கூந்தலங் கோதை பாலமர்
அராப்பணி யான்திரு வருள்வி ராவவே. 38

கு - ரை: இராப்பகல் - இரவும் பகலும். நாகை சார் எண்ணம் - நாகைக்காரோணத்துக்குச்செல்லும் நினைவு. பூண்டவன்: வினையாலணையும் பெயர். பரா கடியாத - பராசத்தி வெறுத்தலில்லாத எனவே திருவருள் மிக்க என்றபடி. குரா - குராமலர். கோதை என்றது கருந்தடங் கண்ணம் மையை. பால் - பக்கம். அராப்பணியான் - சிவபெருமான்.

நாகையின் வளமெலா நயப்ப நோக்கிமிக்
கோகையே மலிதர வுறுக ணீங்கினுன்
பாகைநே ரின்மொழி பாகர் முத்திநன்
ருகையே புரிவரென் றறத்து ணிந்துளான். 39

கு - ரை: நயப்ப - ஆச்சரியப்படுமாறு. ஓகை=உவகை - மகிழ்ச்சி. உறுகண் - துன்பம். பாகை நேர் இன் மொழி பாகர் - சிவபெருமான். பாகு - வெல்லப்பாகு. இன்மொழி: அன்மொழித்தொகை. நன்று ஆகையே புரிவர். அற துணிந்துளான் - மிக உறுதிபூண்டான்.

வானவ தீர்த்தமே யாதி மற்றுள
ஆனபஃ றீர்த்தமு மடைந்து மூழ்கினுன்
ஞானயோ கத்தவ ருளந யந்தமர்
பானலங் கண்டர்முன் பரவிச் சென்றனன். 40

கு - ரை: வானவ தீர்த்தமே ஆதி - தேவதீர்த்த முதலாகவுள்ள. மற்றுள ஆனபல் தீர்த்தமும். ஞான யோகத்தவர் - சிவஞான யோகிகள். பானல் அம் கண்டர் - நீலோற்பல மலர்போலும் கரிய அழகிய கண்டத்தை யுடைய சிவபெருமான்.

அளவையா லளப்பரு மரிய சோதியைக்
களவைநீங் கினருளங் கதிக்கு நீதியைத்
தளவநேர் முறுவலா டயங்கும் பாதியை
உளவையா னனம்பெறு மொன்றைக் கண்ணுற்ருன். 41

கு - ரை : அளவை கருதலளவை உரையளவைகளால் அளப்பதற்கு அருமையான. "அவை யெல்லாம், அளவை காண்டல் கருதலுரை யென்றிம் மூன்றி னடங்கிடுமே" (சித்தியார்). களவை - வஞ்சகத்தன்மையை. கதிக்கும் - விளங்கித் தோன்றும். தளவம் - முல்லையரும்பு. முறுவல் - பற்கள். பாதியை - பாதித் திருமேனியுடையவரை. ஐ ஆனனம்-ஐந்து திருமுகங்கள். ஒன்று - ஒப்பற்ற சிவபெருமான். கண்ணுற்ருன் - தரிசித்தான்.

காண்டலு மன்புமிக் கிளைப்பக் காரிருள்
மாண்டதே யெனவிழி வாரி சோர்தரத்
தாண்டவம் புரிபதந் தழுவிப் பன்முறை
பூண்டனன் வணங்குதல் பொருமி நின்றனன். 42

கு - ரை : அன்பு மிக்கிளைப்ப - அன்புமேலும் அதிகரிக்க. கார் இருள் மாண்டதே - கரிய ஆணவ மலம் அழிந்தொழிந்ததே. விழிவாரி - கண்ணீர். பூண்டனனுகிப் பொருமி நின்றனன்.

எத்தனை தரந்தொழு மிருகை கூப்பிச்சூழ்ந்
தெத்தனை தரம்வரு மிருக ணீருக
எத்தனை தரந்துதித் திடுங்கை கொட்டிநின்
றெத்தனை தரநட மியற்று மென்சொல்கோ. 43

கு - ரை : கைகூப்பி - கைகளைக்குவித்து. சூழ்ந்து - சுற்றி; வலம் வந்து. கண் நீர் உக - கண்ணீர்சிந்த. நடம் - கூத்து. இவை பத்தி நிலையின் மெய்ப்பாடுகள் என்க.

காணரும் பரமனைக் கண்டு ளேனெனும்
பூணருந் திருவருள் பூண்டு ளேனெனும்
வீணரும் பழிபவம் வீட்டி னேனெனும்
நாணரும் பெருங்கதி நண்ணி னேனெனும். 44

கு - ரை : காணரும் பரமன் - ஊனக்கண்ணுல் காணமுடியாத சிவ பரம்பொருள்: "ஊனக்கண் பாசம் உணராப் பதியை, ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி" என்றது காண்க. வீண் அரும் பழி பவம் வீட்டினேன்: பவம் விட்டினேன் - பிறப்பைத் தொலைத்தேன்: வீட்டுதல் - அழித்தல். பெருங் கதி - பெருமைதங்கிய முத்தி. எனும் - என்று சொல்லுவான்.

இன்னணந் துதித்திரங் கிணையில் பாற்கரன்
முன்னமம் முனிவரன் மொழிக டைப்பிடித்
துன்னரும் பலபசு வொருங்கு பூசித்து
நன்னலப் பால்கறந் தாட்ட லுடினன். 45

கு - ரை : இணை இல் - ஒப்பில்லாத. அம் முனிவரன் - உதங்க முனிவர். ஒருங்கு - ஒருசேர, கூட்டமாக. ஆட்டல் நாடினன் - அபிடேகம் செய்ய எண்ணினன்.

ஒள்ளிய கருணைக்கா ரோண நாதர்மேல்
வள்ளிய பாற்கடல் வாரி மேகமே
நள்ளிய பொழிந்தென நாடு பாற்குடம்
எள்ளிய திறனற வெடுத்தங் காட்டுவான். 46

கு - ரை : பாற் கடல் வாரி - திருப்பாற்கடலை மொண்டு. மேகமே பொழிந்தென - மேகம் பொழிந்தாற் போல. பாற்குடம் எடுத்து ஆட்டுவான். எள்ளிய திறன் அற - இகழுந் தன்மையின்றி. வள்ளிய - வள்ளன்மையை யுடைய. நள்ளிய - நடுவிலே.

வழிதர வழிதர மடையு டைக்குமன்
பொழிதர விலாவகை யூற்று மிக்கெழக்
கழிதர வினையெலாங் கனிவி னாட்டினான்
மொழிதர நிறைந்தபாற் குடங்கள் முற்றுமே. 47

கு - ரை : அன்பு ஒழிதரவிலா வகை - அன்பு நீங்காத தன்மையின். வினையெலாம் கழிதர - வினைகள் முழுவதும் நீங்க. கனிவின் - அன்பின் முதிர்ச்சியால்.

இந்தவண் ணம்பிற தலத்து மெய்தியன்
புந்தநன் காட்டினா னெழுகு தேங்குழற்
கந்தரக் கருந்தடங் கண்ணி னாளையுஞ்
சுந்தரத் தாட்டினான் தூய பால்கொடு. 48

கு - ரை : பிறதலத்தும் - நாகையிலுள்ள காரோணத் தலமேயன்றி ஏனைய தலங்கட்கும். அன்பு உந்த - அன்புமேலிட; தள்ள எனினுமாம். குழற் கந்தரம் - கூந்தலாகிய மேகம். சுந்தரத்து - அழகாக.

பணியிது புரிவது பார்த்து நாகைவாழ்
அணியர வோன்மகிழ்ந் தருள ளித்திடப்
பிணிகெழு பவத்துயர் பெயர்த்து நூலெலாந்
துணிபர முத்தியே துனைந்துற் றின்புற்றான். 49

கு - ரை : பணி இது - இத்திருத்தொண்டு. அணி அரவோன் - அணிகலமாகப் பாம்பையுடைய சிவபிரான். பிணி கெழு பவத் துயர்-நோய் மிகுந்த பிறவித்துன்பம். நூல் எலாம் துணி பரமுத்தி - நூல்களெல்லாம் உறுதியாகக் கூறிய பரமுத்தி; அது சாயுச்சிய முத்தி. துனைந்து-விரைந்து.

பத்தியின் மிகப்பொலி பாற்க ரன்பெரு
முத்தியுற் றதுதெரி தரமொ ழிந்தனம்
அத்திசெய் போர்வையா னருளின் மித்திரன்
சித்தியுற் றதுமினித் தெரியக் கூறுவாம். 50

கு - ரை : பெருமுத்தி - சாயுச்சியம். அத்திசெய் போர்வையான் - யானைத் தோலைப் போர்த்த சிவபெருமான்.

பாற்கரப்படலம் முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் — 2136

நாற்பத்துநான்காவது

மித்திரப்படலம்

தூய முனிவரர் சூத முனிவன் றுணைப்பதங் கைதொழுது
மேய மறைக்குல மித்திரன் காதை விளம்பி யருளுகென
வாய புராண மொருபதி னெட்டு மரிறபு மாறுணர்ந்து
நேய முறவடுத் தார்க்கரு ளந்த நெடுந்தவ னேதுவனல். 1

கு - ரை: மறைக்குலமித்திரன் - அந்தணர் குலத்தில் தோன்றிய மித்திரன். அரில் தபுமாறு - குற்றம் நீங்கும் வண்ணம். அடுத்தார்க்கு - தம்மைவந்தடுத்த மாணவர்கட்கு. நெடுந்தவன் - சூதமுனிவர்.

புராணம் பதினெட்டு; அவையாவன: பிரமபுராணம், பதுமபுராணம், வைணவபுராணம், சைவபுராணம், பாகவதபுராணம், பவிடியபுராணம், நாரதீயபுராணம், மார்க்கண்டேயபுராணம், ஆக்கினேயபுராணம், பிரமகைவர்த்தபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம். காந்தபுராணம், வாமனபுராணம், மற்சபுராணம், கூர்மபுராணம், காருடபுராணம், பிரமாண்டபுராணம் என்பனவாம்.

நீடு வளங்கொள்சவ் வீரநன் னாட்டு நிலாவு மறைக்குலத்தான்
கூடு புகழி னமைந்துயர் கற்பட கோத்திரத் துற்பவித்தான்
பாடுபல் லோர்களு மித்திர னென்று பகருமோர் நாமமுளான்
ஆடு திருவடிக் கன்புடை யான்சொ லருந்தவத் தாசையுளான். 2

கு - ரை: சவ்வீரநாடு, அந்தணர் குலத்தோன் கற்படகோத்திரத்தில் பிறந்தவன், மித்திரன் என்னும் பெயருடையான், தவத்தில் ஆசையுள்ளவன். பாடு - பெருமை. நாமம் - பெயர்.

குலவு மொழுக்க மிகப்பெற் றுயர்கற்க கோத்திரத் துற்பவித்து
நிலவு பதுமவல் லிப்பெயர் மாதை நிரம்ப வதுவைசெயாக்
கலவு மகிழ்ச்சியின் மேய விரதியுங் காமனு மாவரென்றே
சொலவுவப் பிற்பல போகமுந் துய்த்துத் துளக்கற வாழ்தருநாள். 3

கு - ரை: ஒழுக்கம் மிக்கவள், கற்ககோத்திரத்தில் பிறந்தவள், பதுமவல்லி என்னும் பெயரையுடைய பெண்ணை மித்திரன் மணந்தான். உவப்பில் - மகிழ்வோடு. துளக்கற - கலக்கமின்றி.

அருந்தவஞ் செய்வதற் கெண்ணிப் பிதாவி னனுஞை கிடைத்தெழுந்து
பொருந்த வளங்கொள் தபோவன மேவிப் புகழ்மிகு நாரதன்ருள்
திருந்த வணங்கி யெழுந்தரு மாதவஞ் செய்தற் கிடஞ்சொலென
வருந்தலில் கண்டக மாநதி தீர மருவெனப் போக்கினனே. 4

கு - ரை: அனுஞை - உத்தரவு. நாரதன்பால் சென்று தவம் செய்தற்குரிய இடம் யாதென்று மித்திரன்கேட்க, கண்டகநதிதீரம் மருவுக என்று போகச் செய்தான்.

கண்டக மாநதித் தீர மருவிக் கரிசறு சாலையமைத்
தெண்டக யாவையு மித்திரன் மேவி யிருந்து பொறியடக்கித்
துண்டக லாமதி சூடிபொற் பாதத் துணைமனத் துட்பொலிய
வண்ட கடாகம் வியப்ப வருந்தவ மாற்றி யமர்தருநாள். 5

கு - ரை: நதித்தீரம் - நதிக்கரை. கரிசு அறு சாலை - குற்றமற்ற தவச்சாலை. பொறி அடக்கி - புலன்களைப் பொறிகளின் வழியே செல்லவிடாமல் ஒருவழிப்படச்செய்து. துண்ட கலாமதி - இளம் பிறைச்சந்திரன். மதி சூடி - சிவபெருமான். அண்ட கடாகம் - அண்டமுகடு.

ஈன்றவன் மைந்தனைக் காணல் விரும்பி யிருக்கு நகரமொரீஇத்
தோன்ற நதியும் பதியும் வரையுஞ் சுரமுங் கடந்துவினு
யான்ற மெலிவி னருந்தவச் சாலை யவனெதிர் காண்டருமா
மான்ற விரா நடுப் போதி லணைந்தனன் மைந்த னதுதெரியான். 6

கு - ரை: ஈன்றவன் - தகப்பன். மைந்தனை - புத்திரனுகியமித்திரனை. நகரம் ஒரீஇ - நகரத்தைவிட்டு நீங்கி. வினய் - கேட்டுக்கொண்டு. ஆன்ற மெலிவின் - மிக்கமெலிவோடு. அவன் - அப்புத்திரன். காண்தருமா - காணுமாறு. இரா நடுப்போதில் - நடு இராத்திரியில்.

துட்ட மிருக மணைந்ததென் றெண்ணித்
துணுக்கென் றெழுந்திருந்தே
பட்ட நெடுங்கதை கைக்கொண் டொளிந்தொரு
பாற்சென் றுறப்புடைத்தான்
கட்ட மடைந்துயிர் விட்டனன் வேதியன்
கண்டு மிகக்கலங்கிக்
கெட்ட மனத்தினென் செய்தன னென்று
கிலேசத் தலறிடுவான். 7

கு - ரை: துணுக்கென்று - விரைந்து. கதையைக்கொண்டு நன்ருகப் புடைத்தான். கட்டம் - துன்பம். வேதியன் - மித்திரனுடைய பிதாவாகிய அந்தணன். கெட்டமனத்தின் - புத்திகெட்டு. கிலேசித்து - வருந்தி.

எந்தை யிறந்துளை யென்செய்வல் யானென் றிரங்கி யழுதிடுங்கா
லந்தையில் சுற்றுள மாதவர் கூடி யடுத்த தகந்தெரிந்து
முந்தை வினையிது மேற்செயுங் கன்ம முடித்தியப் பாவெனலுஞ்
சிந்தை வெருவிய மித்திரன் றந்தைக்குச் செய்வன செய்தொழித்தான்.

கு - ரை : எந்தை: அண்மைவிளி. இறந்துளை - இறந்துபட்டாய். என்செய்வல் - என்செய்வேன். அந்தைஇல் - துன்பமில்லாத. அந்தை = அரந்தை - துன்பம். அடுத்தது - வந்து பொருந்தியசெயலை. முந்தைவினை - முற்பிறவியில் செய்த தீவினையாம். செய்வன - செய்யுங்கருமங்களை.

கேடி †லபரக் கிரியை புரிந்துங் கிலேசத் தமர்தருநாள்
வாடில் பிரமக் கொலைப்பழி வந்து வளைப்ப மதிமயங்கிக்
கூடினின் பாமென் றவாவி மிலேச்சர் குலப்பெ ணுடன்கலந்து
நாடிலஃ தொக்கு மின்பமென் னென்று நயந்து குலாவினனால். 9

கு - ரை : அபரக்கிரியை - உத்தரக்கிரியை. அபரம் - பின்: இறந்தபின் ஒருவருக்குச் செய்யும் சடங்குகள். கிலேசித்து - வருந்தி. வாடு இல் பிரமக் கொலைப்பழி - சோர்வில்லாத பிராமணனைக் கொன்ற பெரும் பாவம். வளைப்ப - சூழ. மதிமயங்கி - அறிவு கலங்கி. நயந்து - விரும்பி.

இன்ன புரிந்துழ னுளி லறிந்தவ ரியாரு மிழித்திடலாற்
சொன்ன கிருட்டிண மாநதி தீரந் துனைந்து புகுந்தாங்கு
முன்ன மமர்ந்து தவம்புரி ‡யுந்திறன் முற்கல னைப்பணியாப்
பின்ன மிறன்பழி யாவு மெடுத்துறப் பேசினன் மித்திரனே. 10

கு - ரை : இழித்திடலால் - அவமதித்தலால். கிருஷ்ணநதிக் கரையை விரைந்துசென்றடைந்து. முன்னர் அமர்ந்து - தான் அங்குச் செல்வதன் முன்பாகச் சென்று பொருந்தி. முற்கல முனிவரை வணங்கி, தன்னுடைய பழிச்செயல் எல்லாவற்றையும் எடுத்துக் கூறினன்.

முற்கலன் மித்திர னோதிய வார்த்தை முழுவதுங் கேட்டருளிப்
பொற்கல னென்பணி யாக்கி மகிழ்ந்தமர் புண்ணிய காரோணத்
திற்கல னீர்கண் ணிறைத்திட மேவி யிறைஞ்சி வணங்குவையேற்
புற்கல னாகிய நீயுய்யு மாறு புரிந்தருள் செய்திடுமால. 11

கு - ரை : பொற் கலன் என்பு அணி ஆக்கி - பொற்கலனாக என்பு மாலையைக் கொள்ளும் சிவபெருமான்; ஆக்கி: பெயர். கலன் நீர் கண் இறைத்திட - கண்களினின்று ஒரு கலம் நீர் பொழிய என்றது மனமுருகி அழுதால் என்றபடி. புற்கலன் - ஆன்மா.

---

† அபரக்கிரியை - உத்தரக்கிரியை. புற்கலன் - ஆன்மா.

‡ நத்திரன்: ந - திரன் எனப் பிரித்து சிறப்புப் பொருந்திய நிலைமையன் எனப் பொருள்கொள்க.

என்று நவின்று விடுத்திட மீட்டு மிறைஞ்சுபு காரோணஞ்
சென்று சுதையெழு தீர்த்த முழுகித் திருந்தவெண் ணீறணிந்து
கன்று பொலிகைக் கருந்தடங் கண்ணி கலந்தருள் காரோணன்
தன்றுணைப் பாத மிறைஞ்சி முனின்று நகவிற் றுதித்திடுவான். 12

கு - ரை: சுதை எழு தீர்த்தம் - அமுத தீர்த்தம். சுதை - அமுதம். கன்று பொலி கை காரோணன்: கன்று - மான்கன்று. காரோணன் - காரோணநாதர்.

நாரண னாதியர் காணரி யாய்தொண்டு நண்ணுமவர்க்கெளியாய்
ஆரண மாகம மியாவு மியம்பி யனைத்துயி ரும்புரப்பாய்
காரண மூவகைக் காலமுன் யாவுங் கடந்த சிதானந்த
பூரண நின்னை யடுத்தன னென்னைப் புரந்தருள் வாயெனலும். 13

கு - ரை: தொண்டு நண்ணும் அவர்க்கு - அடியார்களுக்கு. ஆரணம் - வேதம். காரண - நிமித்த காரணராயுள்ளவரே; சித் ஆனந்த - ஞானனந்தரே; பூரண - நிறைந்துள்ளவரே: விளிகள்.

வள்ளல் விரைந்து வெளிப்பட வந்து மரீஇயநின் பாதகமாம்
அள்ள லனைத்துங் கழீஇயின முத்தி யளித்தன மென்றருள
உள்ள லினியெவ னென்று வணங்கி யுவப்புறு மித்திரனும்
எள்ள லிலாத்தன் னிடம்புக்கு வாழ்ந்துபின் னெய்தினன் முத்தியுமே.

கு - ரை: வள்ளல்-சிவபெருமான். மரீஇய-பொருந்திய. அள்ளல்-சேறு. கழுவினேம். உள்ளல் இனி எவன் - நினைப்பது இனி யாது. எள்ளல் இலா - இகழ்தலில்லாத. தன் இடம் - கவ்வீரநாட்டை. பின் முத்தியும் எய்தினன்.

பத்திரன் முந்து வெளிப்படு செங்கட் பராபரன் மாயவனோர்
அத்திரன் கேத்திர ராச வரத்தை யடைந்து பணிந்தெழுநன்
மித்திர னுற்ற துரைத்தனம் வல்ல விசித்திர மெய்யுறையான்
நத்திரன் மேவ வடைந்து பணிந்த நலந்தெரி யப்புகல்வாம். 15

கு - ரை: பத்திரன் - பாணபத்திரர். மாயவனை ஓர் அத்திரமாக உடையவர். கேத்திர ராசவரம் - நாகைக்காரோணம். விசித்திர மெய்யுறையான் - விசித்திர கவசன்: மெய்யுறை - கவசம். 'நத்திரன்: ந திரன் எனப் பிரித்து, சிறப்புப்பொருந்திய நிலைமையன் எனப்பொருள்கொள்க' என்பது முதற் பதிப்பின் அடிக்குறிப்பு.

மித்திரப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் - 2151

நாற்பத்தைந்தாவது

விசித்திர கவசப்படலம்

உடல்வலி மலமா சற்றூர் சூதனை யுவந்து போற்றிக்
கடல்பணிந் தேத்து நாகைக் காரோணத் தலத்தின் மேவி
மிடல்கெழு கழற்காற் சோழன் விசித்திர கவசன் பூசித்
திடல்தெரி தரச்சொ லென்ன வியம்புமச் சூத மேலோன். 1

கு - ரை : உடல்வலியும் ஆணவமலத்தின் குற்றமும் நீங்கிய நைமிச முனிவர். மிடல் கெழு கழல் கால் சோழன் - வலிமை மிக்க வீரக்கழலையணிந்த காலையுடைய சோழ அரசன். விசித்திரகவசன் என்பவன்.

இருள்வலி சவட்டும் வெய்யோ னிருங்குலத் துதித்த மேலோன்
தெருள்படு கலைக ளெல்லா மயக்கறத் தேர்ந்த செல்வன்
பொருள்பர சிவனே யல்லா லிலையெனும் புந்தி யாளன்
வெருள்கடிந் தொளிரும் மேலான் விசித்திர கவச னென்பான். 2

கு - ரை : இருள்வலி சவட்டும் வெய்யோன் இருங் குலம் - சூரியகுலம். சவட்டும் - அழிக்கும். வெய்யோன் - சூரியன். மயக்கு அற - ஐயம் திரிபுகள் நீங்க. தெருள்படு - தெளிவு மிகுந்த. பொருள் பரசிவனே அல்லால் இலை - சிவனுக்கு மேல் தெய்வம் இல்லை என்க. வெருள் கடிந்து - பகைமை நீக்கி.

ஒன்னல ரடங்க வென்று பார்முழு தொருகோ லோச்சி
நன்னக ரைந்து ளொன்றுங் கோழிமா நகர மேவிப்
பன்னரு மதிய மைச்சர் புரோகிதர் பலருஞ் சூழத்
தன்னர சாட்சி செய்வான் றவாப்பெரும் புகழின் மிக்கான். 3

கு - ரை : ஒன்னலர் - பகைவர். அடங்க - முழுவதும். பார் முழுது ஒரு கோல் ஓச்சி-உலகம் முழுவதும் பொது என்னும் தன்மை நீங்கத் தனது என்னும்படி ஒப்பற்ற செங்கோல் செலுத்தி. நன்னகர் ஐந்துள் ஒன்று ஆம் கோழி மாநகர்: கோழி மாநகர் - உறையூர். தவாப் பெரும்புகழ் - நீங்காத பெரிய புகழ்.

அரசுசெய் தமரு நாளி லண்ணலா ரருளி னுளும்
விரசுபஃ றலங்கட் குள்ள மான்மியம் வினவல் செய்யப்
பரசுபல் புலமை யாளர் தனித்தனி பகரக் கேட்டு
முரசுகண் படாதொ லிக்கு முன்றிலா னுவகை பூப்பான். 4

கு -ரை : மான்மியம் - பெருமை. பரசு பல் புலமையாளர் - துதிக்கப் படும் புலவர் பலர். முரசு கண் படாது - முரசவாத்தியம் தூங்காமல். முன்றிலான் - முற்றத்தையுடையவன்.

இந்தநன் னூலு ளோர்நா ளிந்திர னுதி யோடுஞ்
சந்தமென் மலரிட் டேத்துங் காரோணத் தலச்சீர் கேட்டுப்
பந்தமுற் றொழித்து விடு பாலிக்கு மனைய தானத்
தந்தமில் பெருமை தேர்ந்து தரிசிக்கு மார்வம் பூண்டான். 5

கு - ரை : பந்தம் முற்று ஒழித்து - பாசபந்தங்கள் முழுவதையும் தொலைத்து. விடு பாலிக்கும் - வீடுபேற்றைக் கொடுக்கும். தேர்ந்து - தெளிந்து.

சுற்றமும் பிறவுஞ் சூழத் துன்னலர்க் கரியே றன்ன
கொற்றவ னுறையூர் நீங்கி யெதிர்ப்படு தலங்கும் பிட்டுக்
கற்றவர் புகழு நாகைக் காயாரோ கணத்துட் புக்கு
நற்றவம் பயக்குந் தெய்வ தீர்த்தத்தி னயந்து மூழ்கி. 6

கு - ரை : துன்னலர்க்கு அரி யேறு அன்ன - பகைவர்க்கு ஆண் சிங்கத்தை யொத்த. துன்னலர் - பகைவர். அரி - சிங்கம். எதிர்ப்படு தலம் - வழியில் தோன்றும் தலங்களை. தெய்வதீர்த்தம் - தேவதீர்த்தம்.

நீறுகண் மணிபு னைந்து நிலவுகை கூப்பிச் சென்று
பேறுசெய் கோயின் முன்னர்ப் பிறங்குமட் டாங்க மாக
வாறுகொ ளங்க மாக வைந்தெனு மங்க மாகத்
தேறுபஃ றரங்கும் பிட்டுத் திருந்தவுள் புக்கா னன்றே. 7

கு - ரை : விபூதி உருத்திராக்கம் தரித்து உச்சிமேற் கைகூப்பிச் சென்று திருக்கோயிலின் முன்னர் எட்டு உறுப்பும் பூமியில்பட விழுந்து வணங்கிப் பலதரம் கும்பிட்டுக் கோயிலுட் புக்கான்.

புக்கவன் றிருக்கா ரோணப் புண்ணிய விலிங்கங் கண்டு
நெக்கசிந் தையனுய்க் கண்ணீர் நிலங்கரைத் தோட நின்றுன்
பக்கநின் றுரு மந்தப் படிமனங் கரைய நின்றார்
தக்கவக் காலை விண்ணுள் சதமகன் போற்ற வந்தான். 8

கு - ரை : காரோணப் புண்ணிய இலிங்கம் - காரோணநாதர். நெக்க சிந்தையனுய் - உருகிய நெஞ்சுடையவனுய். சதமகன் - இந்திரன்.

வந்தவ னுருவ மாறி வாயிலுட் புகுத லோடுஞ்
சுந்தர வளவன் காவற் சுற்றத்தா ரிறைவன் போற்றி
முந்தவங் கமர்த லானீ புகுவது முறையன் றென்றார்
அந்தவெம் மொழிகேட் டுள்ள மஞ்சினன் போல கன்று. 9

கு - ரை : வந்தவன் - வந்தவனாகிய இந்திரன்: வினையாலணையும் பெயர். வளவன் - சோழன். காவற் சுற்றத்தார் எங்களரசர் வணங்கி அங்கே இருத்தலால் நீ செல்வது முறையன்று என்று இந்திரனைத் தடுத்தார்கள். வெம்மொழி - கொடிய வார்த்தை. அஞ்சினன்போல்-பயப்பட்டவனைப் போல.

அத்தலக் குணபா லெய்தி யமையவோ ரிலிங்கந் தாபித்
துத்தமம் பொலியுந் தீர்த்த மொன்றுகண் டாடிப் போற்றிச்
சித்தமிக் குருகி யன்பிற் செங்கரங் குவிசெய் தேத்தப்
புத்தமு தனையாள் பாகப் புண்ணியன் காட்சி நல்கி. 10

கு - ரை : குணபால் - கிழக்குப்பக்கத்தில். இலிங்கம் தாபித்து - சிவலிங்கத்தைப் பதிட்டை செய்து. தீர்த்தம் ஒன்று கண்டு - ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி. ஆடி - முழுகி. குவிசெய்து - கூப்பி. புத்து அமுது அனையாள் - உமாதேவியார்.

வேண்டுவ தென்னை யென்று வினவலும் விருப்பி னென்னை
யாண்டவிவ் விலிங்கந் தீர்த்த மமையுமென் னுமத் தொன்றாய்
மாண்டசக் கரப்பேர் பூண்டு வயங்குதல் வேண்டு மன்றில்
தாண்டவம் புரிவோய் சோம வாரத்திற் சார்ந்து மூழ்கி. 11

கு - ரை : என் நாமத்து ஒன்றாய் - என் பெயருள் ஒன்றாக. சக்கரப் பேர் பூண்டு - சக்கரதீர்த்தம் என்னும் பெயரைப்பெற்று. மன்றில் தாண்டவம் புரிவோய் - ஐவகை மன்றங்களிலும் தாண்டவத்தைச் செய்தருளும் பெருமானே. ஐவகைமன்றுகளாவன: திருவாலங்காட்டில் இரத்தினசபையும் தில்லையில் கனகசபையும், மதுரையில் வெள்ளிச்சபையும், திருநெல்வேலியில் தாமிரசபையும், திருக்குற்றாலத்தில் சித்திரசபையும் ஆம். சோமவாரத்தில் - திங்கட்கிழமையில்.

கண்டவ ரெண்ண மெல்லாங் கரிசற வடைய வேண்டுந்
தொண்டனே னுங்கு நின்னைத் தொழவவாய்ப் புக்க காலை
மண்டலம் புரப்பா னுமோர் மனிதனுற் றகைப்பப் போந்தேன்
கொண்டவக் குறைதீர் சேவை கொடுக்கவும் வேண்டு மென்றான்.

கு - ரை : கண்டவர் - தரிசித்தவர். கரிசு அற - குற்றம் நீங்க. அவாய் புக்க காலை - விரும்பிப் புகுந்த காலத்தில். மண்தலம் - நிலவுலகம். தகைப்ப - தடுக்க.

எமைத்தொழப் புரிவார் தம்மு ளிமையவர் மனித ரென்ன
வமைத்ததோர் பேத மில்லை வன்பின ரெவரோ வன்னார்
தமைக்களிப் புறுத்த லேயித் தலத்திய லென்று சாற்றிக்
கமைத்தநீ வருதி யென்று கரந்தனன் கருணை மூர்த்தி. 13

கு - ரை : எமை தொழ புரிவார் தம்முள் - எம்மை வணங்குதற்கு விரும்புபவருள்ளே. இமையவர் - தேவர். அன்பினர் எவரோ - அன்பை யுடையவர்கள் யாவரோ. இத்தலத்து இயல் - இத்தலத்தின் தன்மை.

வளவன்முன் ளேன்றி நம்மைத் தொழுதற்கு மகவான் வந்தான்
களவிலின் காவ லாளன் றகைந்திடக் கழிந்து போயோர்
பளகரு மிலிங்கந் தாபித் தருச்சனை பண்ணு நின்றான்
இளகவற் கருளிச் செய்வா னெய்துவ மின்னே யென்றான். 14

கு - ரை : வளவன்முன் - விசித்திரகவசன் என்னும் சோழன் முன். மகவான் - இந்திரன், களவில் நின் காவலாளன் - வஞ்சகமில்லாத உன்னு டைய காவற்காரன். பளகு அறு - குற்றமில்லாத. இளகு அவற்கு - மனங் கனிந்த அவ்விந்திரனுக்கு. இன்னே எய்துவம் - இப்பொழுதே செல்லு வோம்.

அதிசய மாய தென்றார்ங் கண்ணிய னுங்குச் சென்று
துதிமக பதிபூ சித்த சுந்தர விலிங்கங் காணக்
கொதிகெழு குலிச வேலான் கூடிற்று லமைய மென்று
திதிசெய்கா ரோண லிங்கஞ் சேவித்து மகிழ்ந்து போனான். 15

கு - ரை : ஆர்ங்கண்ணியன் - ஆத்திப் பூமாலையை அணிந்த சோழ மன்னன். அதிசயம் ஆயது - ஆச்சரியமாயுள்ளது. மகபதி - இந்திரன். கொதி கெழு குலிச வேலான் - கோபம் மிக்க வச்சிராயுதத்தையுடைய இந் திரன். அமையம் கூடிற்றால் - சமயம் வாய்த்தது.

சக்கர தீர்த்த மூழ்கித் தயங்குவெண் ணீறு பூசிச்
சக்கர விலிங்கங் கண்டு தாழ்ந்துபன் முறைசெந் நாவஞ்
சக்கர நவிலச் சூழ்ந்து தவாதவன் போங்கு மாவஞ்
சக்கர வொழிந்த சோழன் றூழ்ந்துபே ரின்ப முற்றான். 16

கு - ரை : சக்கர இலிங்கம், சக்கரதீர்த்தம். செந்நா அஞ்சு அக்கரம் நவில. சூழ்ந்து - வலம் வந்து. தவாத அன்பு ஓங்கு - நீங்காத அன்புமிக்க. மா வஞ்ச கரவு ஒழிந்த.

பாகசா தனற்குச் சேவை பாலித்த லுள்ளங் கொண்டு
நாகமா நகர்க்கா ரோண நாயனர் புரிந்த வாடல்
தோகமே வாம லோங்கச் சோழர்தம் பெருமா னுன்னி
மோகநீங் கானு யந்த முழுத்தலத் தமர்ந்தான் பன்னாள். 17

கு - ரை : பாகசாதனன் - இந்திரன். நாகமா நகர் காரோண நாயனர் - நாகபட்டினத்திலுள்ள காயாரோகண நாதர். புரிந்த ஆடல் - செய்த திரு விளையாடல். தோகம் மேவாமல் - சிறுமை பொருந்தாமல். சோழர்தம்

பெருமான் - சோழ அரசனுகிய விசித்திரகவசன். அந்தத் தலத்துப் பன்னுள் அமர்ந்தான். மோகம் - விருப்பம்.

குலமணி பதித்த செம்பொற் கோபுரம் பிரகா ரங்கள்
நலமலி விமான மன்ற நங்கருந் தடங்கட் செல்வி
நிலவுறு கோயின் மற்றி யாவையும் நிரம்பச் செய்து
புலனமை திருவி ழாவும் பொற்புற நடத்தி னுனல். 18

கு - ரை : சிறந்த இரத்தினங்கள் பதித்த பொற்கோபுரங்களும் பிராகாரங்களும் விமானமும் நீலாயதாட்சியின் கோயிலும் மற்றுள்ள திருப்பணிகளும் நிறையச் செய்து தேர்த்திருவிழாவும் சிறப்பாக நடத்தினுன்.

இன்னணம் வளவர் கோமா னிலங்குகா ரோண நாதன்
பன்னரும் பணிகள் செய்து பற்பனு ளமர்ந்து போற்றித்
தன்னமி லருளும் பெற்றுத் தன்னக ரடைந்து வாழ்ந்து
பின்னர்மற் றவன்ரு ணீழல் பெற்றின்பந் துய்த்தா னன்றே. 19

கு - ரை : வளவர்கோமான் - சோழ அரசன். இன்னணம் - இவ்வாறு. பற்பலநாள்அமர்ந்து-மிகப்பலநாட்கள் தங்கி. தன்னம் இல் அருளும்- குறைவில்லாத திருவருளும். தன்னம் - சிறிது.

மேதகு குணத்தான் மிக்க விசித்திர கவச னென்பான்
மாதர்வண் காரோ ணத்து வந்துபூ சித்த தன்மை
போதர வெடுத்துச் சொற்ரும் பொலிவிடூ ரதப்பேர் மன்னன்
தீதமை சாபந் தீர்ந்த செய்தியும் புகல்வா மன்றே. 20

கு - ரை : மேதகு - மேம்பட்ட. மாதர் - அழகிய. போதர - மிக. விடூரதப்பேர் மன்னன் - வீடூரதன் என்னும் அரசன்.

விசித்திரகவசப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2171

நாற்பத்நாறுவது

விடூரதன் சாபந்தீர்ந்த படலம்

பஞ்சமலக் கொத்தறுத்துப் பாருதி பரபோகம்
வஞ்சமறத் திளைத்துவக்கு மாதவர்கு தனைவணங்கி
நஞ்சமுது கொண்டபிரா னுகைக்கா ரோணத்துத்
தஞ்சவிடு ரதனடைந்த தோதுகென வவன்சாற்றும். 1

கு - ரை : பஞ்ச மலக்கொத்து அறுத்து : பஞ்சமலம் - ஆணவம் கன்மம் மாயை மாயேயம் திரோதம் என்பன. பாருத பரபோகம் திளைத்து-என்றும் நீங்குதலில்லாத சிவபோகத்தை அனுபவித்து. மாதவர் - நைமிசமுனிவர். நஞ்சை அமுதாகக்கொண்ட பிரான். விடூரதன் அடைந்தது - விடூரதன் என்பவன் அடைந்த பேற்றை.

ஆன்றபல வளமலியு மானர்த்த தேசத்தான்
சான்றமதிக் குலத்துதித்தான் றண்ணியவெண் கவிகையினன்
தோன்றவுல கெங்குநிமிர் தோலாத வாணையினன்
ஏன்றபெரும் படைக்கடலா னிசைக்கும்விடு ரதனென்பான். 2

கு - ரை : ஆனர்த்த தேசத்தை உடையவன், சந்திரவம்சத்தில் உதித்தவன், வெண் கொற்றக் குடையை உடையவன், உலகம் முழுவதும் தோல்வி இல்லாத ஆணையைச் செலுத்துபவன், மிகுந்த படைகளைக் கடல்போல உடையவன் ஆகிய விடூரதன் என்பவன். மதிக்குலம் - சந்திரவமிசம். வெண்கவிகை - வெண்கொற்றக்குடை. தோலாத ஆணை - தோல்வியில்லாத ஆக்ஞா சக்கரம்.

வேட்டவினை குறித்தெழுந்து வேடுவர்கள் சூழ்வரப்போய்க்
காட்டகத்தி னுட்புகுந்து கையமர்கார் முகங்குனித்து
வாட்டமறக் கன்றினுக்குப் பாலூட்டு மான்பிணைமேற்
கோட்டமனத் தொடுவிடுத்தான் கோலொன்று கொற்றவனே. 3

கு - ரை : வேட்டவினை-வேட்டையாடும் தொழில். கார்முகம் குனித்து-வில்லை வளைத்து. கன்றினுக்குப் பாலூட்டும் மான்பிணை - கன்றுக்குப் பாலை உண்பிக்கும் பெண்மான். கோட்ட மனம் - கோணிய மனம். கோல்-அம்பு.

விட்டகணை யுடறுளைப்ப மெய்ந்நடுங்கி விழுமரிணங்
குட்டமெனுங் கொடும்பிணியைக் கொற்றவநீ யடையென்ற
தொட்டவஃ துணரரசன் வேட்டவினை யுரிமையுளேன்
இட்டமறச் சபித்ததெவ னென்னமான் பிணவியம்பும். 4

கு - ரை: கணை - அம்பு. அரிணம் - மான். குட்டம் எனும் கொடும் பிணி - கொடிய குட்டநோய். வேட்ட வினை உரிமை-வேட்டைத்தொழிலுக்கு உள்ள கடப்பாடு. மான் பிணவு - பெண்மான்.

நீதிநூல் முழுதுணர்ந்த நிருபரா வெவர்வனத்து
மோதியூ றிழைத்தலைக்கு முரண்விலங்கு கடிவதலால்
ஏதியாற் பிறிதொன்றாற் பிணவுகளை யிடர்செய்யார்
ஆதிநா யகனுரைத்த வறமன்றா லெனவரசே. 5

கு - ரை: நிருபர் - அரசர். மோதி ஊறு இழைத்து அலைக்கும்-மோது தலைச் செய்து இடையூற்றை உண்டாக்கி வருத்தும். முரண் விலங்கு - மாறுபட்ட விலங்குகள் என்றது கொடிய விலங்குகளை. கடிவது - கொல்லுவது. ஏதி - அம்பு. பிறிது ஒன்றால் - வேறொரு காரணத்தினால். பிணவுகளை - பெண்விலங்குகளை. ஆதிநாயகன் - மனு; சிவபெருமான் எனினும் ஆம். அறம் - தருமம்.

கன்றுபசி தபச்சுரந்த பாலூட்டுங் காலத்தும்
ஒன்றுமகிழ்ச் சியிற்புணருங் காலத்து மொள்ளியநீர்
நன்றுநசை யறக்குடிக்குங் காலத்து நண்ணியபீள்
பொன்றுதலி லாதினிது பொறையுயிர்க்குங் காலத்தும். 6

கு - ரை: கன்று பசி தப - கன்றினது பசி நீங்குமாறு. விலங்குகள் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் காலத்தும், மகிழ்ச்சியினாற் புணரும் காலத்தும், நீர் வேட்கையால் தண்ணீர் குடிக்கும் காலத்தும், கருவுயிர்க்கும் காலத்தும்.

பீள் - முதிராத கருப்பம். நசை அற - விருப்பம் நீங்க. பொன்றுதல் இலாது - அழியாது. உயிர்க்கும் காலத்தும் - வெளிப்படுத்தும் காலத்தும்.

உறங்குமொரு காலத்து முற்றவலி யமையாது
பிறங்குமழப் பருவத்திற் பெயராத காலத்துங்
கறங்குமன முடையாருங் கடிந்தொழிக்குந் திறங்குறியார்
மறங்குலவி மேலோங்கு வகையுணர்ந்தெவ் விலங்கினையும். 7

கு - ரை: உறங்குகின்ற காலத்தும், இளம் பருவத்திலும், எந்த விலங்கினையும் மனச்சுழற்சியுடையாரும் கொல்ல எண்ண மாட்டார். மழப்பருவம்-இளமைப்பருவம். கறங்கும் மனம் - காற்றாடி போல் சுழலும் மனம். கடிந்து ஒழிக்கும் திறம் - கொல்லுந்தன்மை. குறியார் - எண்ணார்.

முறையுணரா வேடுவரின் முயன்றென்மேற் கணைதொடுத்தாய்
இறைவவத னாற்சபித்தே னென்றுமாண் டதுநவ்வி
நிறைதருபல் லுயிர்மொழியு நிரம்பவுணர் தருமரசன்
குறைவிலதன் றுயரமெலாங் குறித்துணர்ந்து கவலுற்றான். 8

கு -ரை : முறை உணராவேடுவரின் - வேட்டைத்தொழிலின் விதியை உணராத வேடுவரைப்போல். நவ்வி மாண்டது - மான் உயிரை விட்டது. கவலுற்ருன் - கவலையடைந்தான். பல் உயிர்மொழியும் நிரம்ப உணர்தரும் அரசன் - பல உயிர்களும் சொல்லும் சொற்களின் தன்மையை அறிகின்ற அரசன் : கழறிற்றறிவார் நாயனர் போல. குறைவு இல் அதன் துயரம்.

மிக்கதுய ருறுமரசன் மெய் முழுது மப்பொழுதே
தக்கதிது வன்றென்னும் வெண்குட்டஞ் சார்ந்தன்று
தொக்ககுல முதல்போலத் தோன்றினேன் யானென்று
பக்கவளத் தினன்சோர்ந்து பதறிநில மிசைவீழ்ந்தான். 9

கு - ரை : அப்பொழுதே அரசன் உடல் முழுவதும் வெண்குட்டம் வந்தடைந்தது. தொக்க குலமுதல் போல: குலமுதல் - சந்திரன்.

வீழ்ந்தவனை யமைச்சர்புரோ கிதரெடுத்து மெய்துடைத்துப்
போழ்ந்தகவ லையனுகச் சின்மொழிகள் புகன்றிடலும்
வாழ்ந்தநக ரினையடைந்து மாதேவ னருட்கடலின்
ஆழ்ந்தகுர வன்சதா னந்தனடி யிணைதொழுது. 10

கு - ரை : நிலத்திலே வீழ்ந்த விடுரதன் என்னும் அரசனை அமைச்சர் புரோகிதர் எடுத்து உடம்பைத் துடைத்து, சில உபசார வார்த்தைகள் சொன்ன அளவில், அரசன் தன் நகரத்தை அடைந்து சிவபெருமானுடைய திருவருளில் மூழ்கியிருக்கும் ஆசாரியனுகிய சதானந்தரின் திருவடிகளைத் தொழுது.

எந்தையிதற் கொருகழுவா யியம்புதியா லெனவேண்ட
நிந்தையிலம் முனிவரனு நெடுநேர முளத்தெண்ணிச்
சிந்தைமகிழ் திருநாகைக் காரோணஞ் சேர்ந்திறைஞ்சின்
முந்தைவினை யொடுபிணியு முருங்குமா லெனமொழிந்தான். 11

கு - ரை : கழுவாய்-பிராயச்சித்தம். நிந்தை இல்-பழித்தல் இல்லாத. அம்முனிவரன் - சதானந்த முனிவர். நெடுநேரம் தியானித்து, நாகைக் காரோண தலத்தை அடைந்து வணங்கினல் பழவினையோடு இப்போதுள்ள உடற்பிணியாகிய வெண்குட்டமும் தொலையும் என்று சொன்னர். முந்தை வினை - பழவினை. முருங்கும் - அழியும்.

முனிவனுரை தலைக்கொண்டு மொய்த்தபே ருவகையனுய்ப்
புனிதமிகுந் துணைவரொடுங் காரோணத் தலம்புகுந்து
பனிபடுவா னவதீர்த்தம் படிந்தனனப் போதத்தே
யினியதலா வெண்குட்ட மிரிந்ததுபண் டுருப்பெற்ருன். 12

கு - ரை: பனி படு வானவ தீர்த்தம் - குளிர்ந்த தேவதீர்த்தம். வெண்குட்டம் இரிந்தது - உடம்பிலுள்ள வெண்குட்ட நோயானது கெட்டு ஒழிந்தது.

பண்டையுருப் பொலிவெய்தும் பார்த்திவன்மிக் குளமகிழ்ந்து
தொண்டைவிடா தவர்பூசுஞ் சுந்தரவெண் ணீறணிந்தே
யிண்டைமல ரவனெடுமா லின்னுநே டியுங்காணுக்
கண்டைவிடைக் காரோணக் கண்ணுதலோன் முன்சென்றான். 13

கு - ரை: பண்டை உரு பொலிவு - முன்னுள்ள உருவத்தின் அழகு. பார்த்திபன் - விடுரதன். தொண்டை விடாதவர் - திருத்தொண்டை விடாது செய்யும் அடியார்கள். மலரவன் - பிரமதேவன். நேடியும் - தேடியும். கண்டை விடை - வீரகண்டையணிந்த இடபவாகனம். கண்ணுதலோன் - சிவபெருமான்.

காரோணப் பெருமானைக் கண்டிறைஞ்சி யருள்பெற்றுப்
பாரோதுங் கருந்தடங்கட் பராபரைபா தமும்போற்றி
நீரோதப் புவிவியப்ப நெடும்பணிபன் னுட்புரிந்து
சீரோவாத் தன்றேயஞ் சென்றுவாழ்ந் தினிதிருந்தான். 14

கு - ரை: காரோணநாதரையும் கருந்தடங்கண்ணியையும் போற்றித் துதிசெய்து, உலகம் வியக்கும்படி பலநாட்கள் தங்கி வணங்கித்தன்னுடைய தேயத்தை அடைந்து இனிது வாழ்ந்திருந்தான். பார் ஓதும் - உலகத்தோரால் புகழ்ந்து பேசப்படும். நீர் ஓதப்புவி - கடலாற் சூழப்பட்ட உலகம். நெடும்பணி - மிக்க தொண்டுகள். சீர் ஓவா - சிறப்புக்கள் நீங்காத.

ஆயவிடு ரதனென்னு மரசுநா கையிற்புகுந்து
மேயவுடற் பிணிதவிர்ந்த விதந்தெரிய வெடுத்துரைத்தாம்
பாயபுகழ்ச் சயதுங்கன் பரவுபுகை பெற்றவருட்
டூயகதை விளங்கும்வகை யினியெடுத்துச் சொல்லுவாம். 15

கு - ரை: விடுரதன் என்னும் அரசன் நாகைக்காரோணத்தை அடைந்து சாபத்தால் தன் உடம்பில் வந்தடைந்த வெண்குட்டநோயை நீக்கிக்கொண்ட வரலாற்றை நன்கு சொன்னோம். இனி, சயதுங்கன் என்பவன்பெற்ற அருளை எடுத்துச் சொல்லுவோம்.

விடுரதன் சாபந்தீர்ந்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2186

நாற்பத்தேழாவது

சயதுங்கப்படலம்

கரும வேரைக் களைந்திடு நைமிசத்
துருமம் வாழ்பவர் சூதனைப் போற்றுபு
தரும மோருஞ் சயதுங்கன் காதையைப்
பெரும வோதென வன்னவன் பேசுவான். 1

கு-ரை: கருமவேரைக் களைந்திடு-கருமத்தினது வேரை அடியோடு போக்குகின்ற. துருமம் - காடு. தருமம் ஓரும் - தருமநூல்களை ஆராய்ந்து அறியும். பெரும: அண்மைவிளி.

ஏட்டை தீர்ந்த கலிங்க மெனும்பெயர்
நாட்டை யாளு நராதிப னெஞ்சகத்
தோட்டை யோவு சயதுங்க னுற்றுமா
வேட்டை யாடினன் கானம் விராவியே. 2

கு-ரை: ஏட்டை - துன்பம். கலிங்க தேசத்து அரசன். நராதிபன்-அரசன். நெஞ்சகத்து ஓட்டை ஓவு-மனத்தில் குற்றம் நீங்கிய. மாவேட்டை-விலங்குகளின் வேட்டை.

புலிம டங்கல் புகர்முக மாதிய
வலிவி லங்கறக் கைச்சிலை வாங்குபு
மெலிவில் பல்கணை தூண்டி வெயின்முதிர்
பொலிவின் வெம்பசி பூண்டு வருந்தினன். 3

கு-ரை: மடங்கல் - சிங்கம். புகர்முகம் - யானை. ஆதிய வலி விலங்கு அற - முதலிய கொடிய விலங்குகள் அழியும்படி. சிலை வாங்குபு - வில்லை வளைத்து. வெயில் முதிர் பொலிவின் - வெயில் மிகுந்த காட்சியால்.

விளைய கன்று வயிற்றெழு வெம்பசி
யினையொ ழித்தற் கிகற்பரி தூண்டுபு
துனைய வந்தெதிர் தோன்றிடுஞ் சூழலொன்
றனைநி கர்க்கு மரீசி யமரிடம். 4

கு-ரை: வினை அகன்று - போர்த் தொழிலின் நீங்கி. வெம்பசி யினை ஒழித்தற்கு-கொடிய பசியினது வருத்தம் நீக்கற்பொருட்டு. இளைதல் -

வருந்துதல். துணைய வந்து - வேகமாக வந்து. மரீசி அமர் இடம் - மரீசி முனிவர் தங்கியிருக்கும் பர்ணசாலை.

பெருவ ளத்துப் பிறங்குதல் கண்டத
னொருபு றத்துப் படையொடு முற்றனன்
மருவு மற்றதன் வண்ண மெலாந்தெரி
தரும்வி ருப்பின னெங்குஞ் சரித்தனன். 5

கு - ரை : பிறங்குதல் - விளங்குதல். வண்ணம் எலாம் - அழகு முழுவதும். விருப்பினன் ஆகி எங்கும் சரித்தனன்: விருப்பினன் : முற்றெச்சம். சரித்தனன் - திரிந்தான்.

நல்ல வாய நரந்தமோர் பாலெலாம்
சொல்ல வாயவொண் சூதமோர் பாலெலாம்
பல்ல வாய பனசமோர் பாலெலாஞ்
செல்ல வாமுடித் தென்னையோர் பாலெலாம். 6

தலைவி ரிந்த வரம்பையோர் சாரெலாந்
தொலைவி லாதகர்ச் சூரமோர் சாரெலா
நிலைகொள் மாதுளை நீர்மையோர் சாரெலாம்
விலைசெ யாவெலு மிச்சையோர் சாரெலாம். 7

நறிய தீஞ்சுவை நாவலோர் கண்ணெலாஞ்
செறிய வாமுந் திரிகையோர் கண்ணெலாம்
வெறிய வாவு விளவொரு கண்ணெலாம்
மருவி லாத்தம ரம்மொரு கண்ணெலாம். 8

இவைமுன் னாய விருங்கனி மல்கிய
நவையி லாவளங் கண்டு நரபதி
யுவைந மக்குண வாகுமென் றுன்னியே
செவையி லாக்கொடுஞ் செய்கைசெய் தானரோ. 9

கு - ரை : அச்சூழலில் ஒரு பக்கத்தில் நரந்தமும், ஒரு பக்கத்தில் சூதமும், ஒருபக்கத்தில்பனசமும், ஒரு பக்கத்தில் தென்னையும், ஒருபக்கத்தில் வாழையும், ஒருபக்கத்தில் கர்ச்சூரமும், ஒருபக்கத்தில் மாதுளையும், ஒருபக்கத்தில் எலுமிச்சையும், ஒருபக்கத்தில் நாவலும், ஒரு பக்கத்தில் முந்திரிகையும், ஒருபக்கத்தில் விளாவும், ஒருபக்கத்தில் ஆத்தமும் இவைமுதலாகிய கனிகள் நிறைந்த குற்றமில்லாத வளத்தை அரசன் கண்டான். இவை நமக்கு உணவாகுமென்று மனத்திற் கொண்டான். கொடுஞ்செய்கை ஒன்றைச்செய்தான்.

உள்ள யாவு மொருங்கு கவருபு
தள்ள லாவகை நானுண்ட தன்றியும்
விள்ள லாத்தன் றமரும் விழைந்துணக்
கொள்ள நல்கினன் றீவினைக் கோட்பட்டான். 10

கு • ரை : அங்குள்ள எல்லாவற்றையும் ஒருங்கே கவர்ந்து தான் உண்டான். அன்றியும் தன் தமரும் விரும்பி உண்ணும்படி கொடுத்தான். அதற்குக் காரணம் அவன் தீவினையினுற் கொள்ளப்பட்டவன் ஆகலின்.

மாத வத்து மரீசி முனிவரன்
போத லர்ந்ததண் பூம்புன லாடுபு
வேத நான்கும் விளம்பு மருட்குறி
மேத கும்பெரும் பூசை விரும்பினுன். 11

கு • ரை : மரீசி முனிவர் நீராடிச் சிவலிங்கப் பெருமானைப் பூசிக்கும் பொருட்டுச் சென்ருர்.

பூசை செய்யப் புகுந்தவக் காலையின்
மாசை நீங்கிய வண்கனி யாவுமாங்
காசை யோடு மமைத்திடக் கண்டிலா
னேசை மாமுனி யேவ லுளுற்றுவார். 12

தம்மை நோக்கியென் றந்திலிர் நீரென
வெம்மை யோடவர் வேந்த னொருவன்வந்
தம்மை பாகனுக் காவவென் றெண்ணிலான்
செம்மை தீரக் கவர்ந்துதின் ருனென்ருர். 13

கு • ரை : பூசைசெய்யப் புகுந்தபொழுது அங்குள்ள சிறந்த கனிகளெல்லாம் பொருந்தக் கண்டிலர். முனிவர் வேலைக்காரர்களை நோக்கி, கனிகளை நீங்கள் கொண்டுவராததற்குக் காரணம் யாது? என்ருர். அவர்கள் அரசன் ஒருவன்வந்து சிவபெருமானுக்கு ஆவன என்று எண்ணுதவனுய்க் கவர்ந்து தின்ருன் என்றனர்.

என்ற வார்த்தை யிருசெவி யேறலுங்
கொன்ற தன்னவெங் கோபங் குடிகொள
வொன்ற நெஞ்ச முளைந்து கவன்றனன்
இன்ற ழிந்தது கொல்லென் றவமென்பான். 14

கு • ரை : அவர் சொல்லிய வார்த்தை செவிப்பட்டவுடன் கொன்ருற் போன்ற கொடிய கோபம் தலைக்கொண்டு மனம்வருந்திக் கவலைகொண்டார். என் தவம் இன்று அழிந்தது கொல் என்ருர்.

புரம்பொ டித்த புராணனுக் காட்டவும்
நிரம்பு மாறெடுத் தூட்டவு நேர்வைத்த
வரம்பி லாக்கனி வௌவி நுகர்வதோ
பரம்பு தீவினைப் பார்த்திவன் ருனென. 15

கு - ரை: சிவபெருமானுக்கு ஆட்டவும் ஊட்டவும் வைத்துள்ள எல்லையில்லாத கனிகளைக்கவர்ந்து உண்பதோ! தீவினைமிக்க அரசன்என்று.

சுடுசி னந்தலைக் கொண்டு துடிதுடித்
தடுசி னக்களிற் ருன்கை யறக்குறைந்
திடுப லிக்கிவர் கென்னச் சபித்தனன்
கடுவெ யிற்றினின் றுங்கழன் ருலென. 16

கு - ரை: மிக்க சினங்கொண்டு, துடிதுடித்து, அரசன் கை ஒழிக. பிச்சையின் பொருட்டுச் செல்க எனச்சபித்தார். நஞ்சு பல்லினின்று வெளிப் பட்டாற்போல.

சொற்ற சாபந் துனைதரப் பற்றலும்
அற்ற கையின னுய்ப்புவி யாள்பவன்
உற்ற செல்வமு மோவக் கவன்றனன்
கற்ற மாந்தர் கரைந்தன ருண்மையே. 17

கு - ரை: மரீசி முனிவர் சொல்லிய சாபமொழி விரைந்து அரசனைப் பற்றலும் கையொழிந்தவனுய் அரசச்செல்வமும் கெட்டொழிய மிகக் கவலை கொண்டான். பெரியோர்கள் அதற்குரிய காரணத்தை அவனுக்குத் தெரிவித்தனர்.

கேட்ட போது கிலேசத்து மூழ்கியுள்
வாட்ட மேவ மரீசி முனிவரன்
தாட்ட லைத்தலை சாரப் பணிந்தனன்
கோட்ட மேதுமி லாக்குணக் கொண்டலே. 18

கு - ரை: அரசன் அவ்வுண்மையைக் கேட்டபோது துன்பத்துள் மூழ்கி, உள்ளம் வருந்தி, மரீசி முனிவருடைய திருவடிகளை வணங்கினன்.

அடிய னேன்பிழை யத்தனை யும்பொறுத்
தொடிவி லாவரு ளுதிய நல்கெனக்
கடிதி னைந்து கதறு மரசற்கு
முடிய வோர்ந்த முனிவ னிரங்கியே. 19

கு - ரை: அடியேன் செய்த பிழை முழுவதையும் பொறுத்தருளுக. எனக்கு அரசைக் கொடுக்க என்று நைந்து கதறினன். அவ்வாறு கதறிய அரசனுக்கு நேர்ந்ததை ஓர்ந்த முனிவரன் இரக்கங்கொண்டு.

ஆண்ட நாயகற் காகுங் கனிகவர்ந்
தீண்ட நீசெய் யிரும்பிழைக் குத்தக
மாண்ட சாபம் வகுத்தில நின்னிடைப்
பூண்ட பேரரு ளாற்புகன் ஞமரோ. 20

கு-ரை: சிவபெருமானுக்கு உரிய கனிவர்க்கங்களை நீ கவர்ந்து உண்ட பெரும் பிழைக்குத் தக்க சிறந்த சாபத்தை உனக்குக் கொடுத்தோமில்லை. உன்னிடத்துள்ள அருளால் அவ்வாறு சொன்னோம்.

இன்று நீவந் திணைந்துற வேண்டலால்
ஒன்று நாகைக்கா ரோணத்தி னுட்புகூஉ
நன்று சால்சுர தீர்த்தநன் காடிடிற்
கன்று தீரிரு கையும் வளருமால். 21

கு-ரை: இன்று நீ வந்து உள்ளம் வருந்தி நம்மை வேண்டுகின்ற காரணத்தால் நாகைக் காரோணத்தை அடைந்து தேவதீர்த்தத்தில் படிந்து வழிபடின் உன் இரு கையும் வளரும்.

பின்ன ராதி புராணரைப் பேணுபு
நன்ன ரேத்திடி னந்து வறுமைபோம்
என்ன செல்வமு மெய்துவை யத்தலம்
மன்ன லான்முத்தி மாண்பும் பெறுவையால். 22

கு-ரை: பிறகு ஆதி புராணரை விரும்பி நன்றாகத் துதித்து வழிபட்டால் உன் வறுமை போம். எல்லாச் செல்வமும் பெறுவாய். அத்தலத்தை அடைந்தமையால் முத்திப் பேற்றையும் நீ பெறுவாய்.

போதி யென்று புகறலுந் தாழ்ந்தெழுந்
தேதி வேந்தன்சின் ஞளில்வந் தெய்தினன்
ஆதி நாத ரமர்திரு நாகையிற்
சோதி யாரருள் துன்னுந் துணிபுற. 23

கு-ரை: அரசனே! நீ செல்வாய் என்று முனிவர் சொன்னவுடன் வணங்கி எழுந்து அரசன் சிலநாளில் ஆதிபுராணர் வீற்றிருக்கும் திருநாகைக்கு வந்தடைந்தான்.

தேவ தீர்த்தத்துச் சென்று படிந்தனன்
பாவ மாசறப் பண்டையிற் கைகள்பெற்
ருவ வென்றிறும் பூதுகண் டாருற
மேவத் தானும் வியப்புற் றெழுந்தனன். 24

கு - ரை : தேவதீர்த்தத்தில் சென்று முழுகினன். பாவங்கள் ஒழிய, முன்புபோல் கைகளைப் பெற்றான். கண்டவர் அதிசயிக்குமாறு தானும் வியப்புற்று எழுந்தான்.

அருள்வி ராவுற வாதிபு ராணர்தம்
பொருள்வி ராவுபொற் பாதமும் போற்றினன்
மருள்வி ராவு வறுமை சிதைதரத்
தெருள்வி ராவு திருவரம் பெற்றனன். 25

கு - ரை : திருவருள் பொருந்த ஆதிபுராணரது பொருள்சேர் பொற்பாதமும் வணங்கினன். வறுமை ஒழியத் தெளிவு பொருந்திய வரத்தையும் பெற்றான்.

கருந்த டங்கண் பிராட்டி கமலமொத்
திருந்த பாதமு மேத்தி யிறைஞ்சுபு
திருந்த மற்றத் தலங்களுஞ் சேவித்துப்
பொருந்த வேண்டும் பணியும் புரிந்தனன். 26

கு - ரை : நீலாயதாட்சி அம்மையின் திருவடித்தாமரைகளையும் வணங்கித் துதித்து மற்றைத் தலங்களும் வணங்கி வேண்டிய பணிகளையும் செய்தான்.

மிக்க மேன்மை விடைபெற்றுப் பல்வளந்
தொக்க தன்பதி துன்னுபு வாழ்ந்துபின்
பக்கம் பாரிடம் பாடநின் றாடுவார்
நக்க சேவடி நண்ணியின் புற்றனன். 27

கு - ரை : மிக்க மேன்மையுடன் பிரியா விடைபெற்றுத் தன்னுடைய வளம் மிக்க நாட்டை அடைந்து வாழ்ந்து சிவபெருமான் திருவடியை அடைந்து இன்புற்றான்.

அற்ற மோவ வடைந்த சயதுங்கன்
பெற்ற பேறு பிறங்க வுரைத்தனம்
கற்ற தன்மையில் காளகண் டன்புகுந்
துற்ற தன்மையு மோதிடு வாமரோ. 28

கு - ரை : துன்பம் நீங்கத் தன் நாட்டை அடைந்த சயதுங்கன் அடைந்த பேற்றை நன்று உரைத்தோம். இனி காளகண்டன் என்பவன் அடைந்து பெற்ற பேற்றையும் சொல்லுவோம்.

சயதுங்கப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2214

நாற்பத்தெட்டாவது

காளகண்டப்படலம்

முனிவரர் சூத முனியை வணங்கிக்
கனிவொடு காள கண்ட னடைந்து
புனிதன பாதம் போற்றிய காதை
இனிதரு ளென்ன விசைத்திடு மன்னோன். 1

கு - ரை : முனிவரர் - நைமிசமுனிவர்கள். கனிவொடு - அன்போடு. புனிதனபாதம் - சிவபெருமானுடைய திருவடிகளை. அன்னோன் - சூதமுனிவன்.

கரிசில் விருத்த கங்கையந் தீரத்
திரிவில்பஞ் சான மென்னுமோ ரூரிற்
பரிவொடு வாழ்வான் பார்ப்பன மாக்க
ளூரிய குலத்தா னுத்தம மிக்கான். 2

கு - ரை : கரிசு இல் விருத்தகங்கை - குற்றமில்லாத விருத்த கங்கை. இரிவுஇல் - நீங்குதலில்லாத. பஞ்சானம் என்னும் ஊர்.

விட்டுணு சாமி யெனும்பெயர் மேயான்
கட்டுறு மில்லாள் காமர் குணத்தாள்
ஒட்டுறு சாறு மதிப்பெய ருள்ளாள்
முட்டுத லோவி முயங்குபு வாழ்நாள். 3

கு - ரை : விட்டுணுசாமி என்னும் பெயரோன். கட்டுறும் இல்லாள் - கலியாணம் செய்துகொண்ட மனைவி. சாறுமதி என்பது அவள்பெயர். முட்டுதல் ஓவி - தட்டுப்பாடு இல்லாமல்.

கொடுவினை செய்யுங் கூற்றினுந் தீமை
யொடுவரு குட்ட னொருவ னுதித்தான்
கடுகுபு காள கண்ட னெனும்பே
ரிடுபு வளர்த்தா ரீன்றவர் மாதோ. 4

கு - ரை : கொடுவினை செய்யும் கூற்றினும் - கொடிய கொலைத்தொழிலைச் செய்யும் யமனைப் பார்க்கிலும். குட்டன் - மகன். உதித்தான் - தோன்றினன். மகனுக்குக் காளகண்டன் என்னும் பெயரை இட்டுப் பெற்றோர் வளர்த்தார். இடுபு - இட்டு. ஈன்றவர் - பெற்றோர்.

ஒழிவற வுண்ப துடுப்பதை யன்றி
யழிவறு மத்தி யயன மிலாமற்
பழிபடு நாள்கள் பற்பல செல்லக்
கழிதுயர் பூண்டு தந்தை கனன்றான். 5

கு - ரை : ஒழிவு அற - ஓய்வின்றி. அத்தியயனம் - வேதம் ஓதுதல். கழிதுயர் - மிக்கதுன்பம். கனன்றான் - கோபித்தான்.

அருமறை யத்தி யயனஞ் செயாது
முருடரின் வாழ்வாய் முழுமக வென்னு
ஒருகதை கொண்டு புடைக்க வுடன்று
பருவலி மைந்தன் பற்றி யறைந்தான். 6

கு - ரை : மறை அத்தியயனம் செயாது - வேதம் ஓதுதல் செய்யாமல். முருடரின் - முரடரைப்போல. முழுமக - மூடனே!: அண்மைவிளி. உடன்று - மாறுபட்டு. பருவலி மைந்தன் - மிக்க வலிமையையுடைய மகன். பற்றி அறைந்தான் - தந்தையைப் பிடித்து அடித்தான்.

அறையுற லோடு மாவி நடுங்கத்
தறைமிசை வீழ்ந்து தாதை யிறந்தான்
கறைகெழு காள கண்டனு மந்த
வுறையுள் தணந்தே யுழிதர லுற்றான். 7

கு - ரை : அறை உறலோடும் - அறைந்தவுடன். தாதை - தகப்பன். உறையுள் தணந்தே உழிதரல் உற்றான் - வீட்டைவிட்டு நீங்கித் திரியத் தொடங்கினான். உறையுள் - வீடு. உழிதரல் - திரிதல்.

கொலைப்பழி பூண்டு கூவென வாய்விட்
டுலைப்புறு நெஞ்சோ டோரிட மேனும்
நிலைப்ப திலாது நீசரு மெள்ளும்
புலைத்தொழில் செய்தான் பொருமி யுழன்றான். 8

கு - ரை : கொலைப்பழி பூண்டு-கொலைப் பாதகத்தை மேற்கொண்டு. கூ என வாய்விட்டு - கூகூ என்று அலறி. உலைப்புறும் நெஞ்சோடு - வருந்துகின்ற மனத்தோடு. நிலைப்பது இலாது - நிலையில்லாமல். நீசரும் எள்ளும்- இழிந்தோரும் பழித்துரைக்கும். புலைத்தொழில் - கீழான தொழில்கள். செய்தான் உழன்றான்; செய்தான்: முற்றெச்சம்.

உழிதரு நாளி லுத்தம நன்னூல்
வழியொழு குஞ்சீர் வசிட்ட னிருக்கு
மழிவரு மாச்சி ராம மடைந்தான்
கழிதுயர்க் காள கண்டனென் பானே. 9

கு - ரை : உழிதரு நாளில் - திரிகின்ற நாட்களில். உத்தம நன்னூல் வழி - மேலான வேதமார்க்கத்தில். ஆச்சிராமம் - முனிவர் இருக்கை. கழி துயர் - மிக்க துன்பம்.

பரவு வசிட்டன் பாதம் வணங்கி
விரவுமென் பாவம் விடுபடு மாறோர்
புரவுசெய் கழுவாய் புகலுதி யென்றான்
உரவுகொ ளண்ணயா னோர்ந்துரை செய்தான். 10

கு - ரை : பரவு வசிட்டன் - அறிவுடையவர்களால் துதிக்கப்படும் வசிட்டமுனிவர். புரவு செய் கழுவாய் - காத்தலைச் செய்யும் பிராயச்சித்தம். உரவு - ஞானவலிமை. ஓர்ந்து - ஆராய்ந்தறிந்து. உரைசெய்வான் - சொல்லத்தொடங்கினர்.

சுரத னெனும்பேர்த் தோன்ற லொருத்தன்
வரமருள் காயா ரோகண மன்னிக்
கரவற நூற்றெட் டுத்தரங் காம
முரவுறச் சூழ்வா னுற்றவந் நாள்வாய். 11

கு - ரை : சுரதன் எனும் பேர் தோன்றல் - சுரதன் என்னும் பெயரை யுடைய சிறந்தவன். மன்னி - நிலைபெற்று. கரவு அற - வஞ்சகமின்றி. சூழ்வான் - வலம் வருவான். அந்நாள்வாய் - அந்த நாட்களில்.

மறையவர் சில்லோர் மற்றது கண்டு
குறைவற நீயிவ் வாறுசெய் கொள்கை
முறைதெரி யென்ன முனிவில னாகிக்
கறையற வன்னார் தெரிதரக் கரைவான். 12

கு - ரை : முறைதெரி என்ன - சூழ்வதற்குக் காரணம் சொல்லென்று. முனிவு - கோபம். அன்னார் - அம்மறையவர்.

முற்சன னத்து முயங்கொரு கிளியா
முற்பவ முற்றே னுற்றவந் நாளில்
ஒற்கமி லிந்த வூர்வலஞ் செய்தேன்
சிற்சுக மூர்த்தி திருவருள் செய்தான். 13

கு - ரை : முற்சனனத்து - முற்பட்ட பிறப்பில். கிளி ஆம் உற்பவம்: உற்பவம்-பிறப்பு. ஒற்கம் இல்-குறைவில்லாத. ஊர் வலம் செய்தேன்-ஊரை வலம் வந்தேன். சிற்சுக மூர்த்தி - ஞானானந்த வடிவாகிய சிவபெருமான்.

அந்த விசேடத் தாலர சாகி
இந்தமண் ணுள்வே னின்னமுஞ் சூழிற்
பந்தமில் வீடு பாலிக்கு மென்னா
நந்த வுணர்ந்து நானிது செய்வேன். 14

கு - ரை : அந்த விசேடத்தால் - க்ஷேத்திரத்தை வலம்வந்த புண்ணியத்தால், சூழில் - வலம் வந்தால், பந்தம் இல் வீடு பாலிக்கும் - பந்த பாசமில்லாத வீட்டின்பத்தைக் கொடுத்தருளும். என்ன - என்று. நந்த உணர்ந்து - மிகவும் அறிந்து. இது - வலம் வருதலாகிய இதனை.

என்றனன் கேட்ட விருபிறப் பாளர்
நன்றிது வென்று நாடி வியந்தே
யொன்றமற் றன்னு னேடுறச் சூழ்ந்தார்
கன்றலின் முத்தி கைக்கொடு வாழ்ந்தார். 15

கு - ரை : என்றனன் - என்று சுரதன் சொன்னான். இரு பிறப்பாளர் - பிராமணர்கள். நாடி - ஆராய்ந்து. அன்னுனேடு - சுரதனேடு. உற சூழ்ந்தார் - மிகுதியும் வலம்வந்தார். கன்றல் இல் முத்தி - வருத்தமில்லாத முத்தி இன்பம்.

ஆதலி னீயு மத்தல மெய்திக்
காதலிற் சூழிற் கழிதரும் பாவம்
ஏதமி லாப்பே ரின்பமும் வாய்க்கும்
போதரு கென்ருன் புண்ணிய மேலோன். 16

கு - ரை : காதலின் சூழின் - அன்புடனே வலம்வந்தால், பாவம் கழிதரும் - பாவம் நீங்கும். போதருக என்ருன் - போவாய் என்று கட்டளையிட்டான். புண்ணிய மேலோன் - வசிட்டமுனிவன்.

அனைய வசிட்ட னடிமலர் போற்றித்
துனைய வெழுந்து தூயகா ரோணப்
புனை நகர் நோக்கிப் போயின னம்மா
கனைபெரும் பாவங் காற்றல் குறித்தான். 17

கு - ரை : துனைய எழுந்து - விரைந்து எழுந்து. கனைபெரும்பாவம் - மிக்க பெரும்பாவம். காற்றல் குறித்தான் - அழித்தலை எண்ணியவனாகிய காளகண்டன்.

நாகை யடைந்து நன்கு பணிந்தே
யோகையி னூற்றெட் டுத்தரஞ் சூழ்ந்தான்
ஆகைசெய் பன்னு ளித்தொழி லாற்ற
வாகை யடைந்தான் பாதக மாய்த்து. 18

கு - ரை : ஓகையின் - உவகையுடன். நூற்றெட்டுத்தரம் சூழ்ந்தான் - நூற்றெட்டுமுறை வலம்வந்தான். பன்னுள் இத்தொழில் ஆற்ற - பலநாட்கள் இவ்வாறு சூழ்வர. பாதகம் மாய்த்து - கொலைப்பாவத்தை ஒழித்து. வாகை - வெற்றிமாலை.

பாதக மாய்ந்து பண்புணர் ஞான
மேதக மேவி வேத முழங்கும்
போதகத் தெய்வப் பூம்புன லாடி
மாதக வாம்வெண் ணீறு வயக்கி. 19

கு - ரை: பாதகம் மாய்ந்து - பாவச்செயல்கள் ஒழிந்து. ஞானம் மேதக மேவி - சிவஞானம் மேம்படப் பொருந்தி. தெய்வப் பூம்புனல் - தேவ தீர்த்தம். மா தகவு ஆம் வெண்ணீறு வயக்கி-மிகமேம்பட்ட வெண்ணீற்றை நன்குகப் பூசி.

ஆதி புராணத் தண்ணலை யேத்தி
யோதி யுணர்ந்தார்க் குற்றிடு மூறு
காதிய வெங்கள் கருந்தடங் கண்ணுள்
சோதிகொ டாளுந் தொழுது துதித்தான். 20

கு - ரை: ஆதிபுராணத்து அண்ணலை - ஆதிபுராணர் என்னும் சிவபெருமானை. ஓதி உணர்ந்தார்க்கு உற்றிடும் ஊறு காதிய - வேத வேதாந்தங்களை ஆராய்ந்துணர்ந்த பெரியோர்களுக்கு வரக்கடவதாகிய துன்பத்தைப் போக்கிய. சோதி கொள் தாளும் - ஒளிபொருந்திய திருவடி களையும்.

ஆயுளின் காறு மற்புத மாகி
மீயுயர் சேவை விருப்பொடு செய்து
காயுறு தீமைக் கடுவினை மாய்த்துப்
பாயுயர் முத்தி படர்ந்தன னன்றே. 21

கு - ரை: ஆயுளின்காறும் - உயிரோடுள்ள வரையில். மீ உயர் சேவை - மிக மேம்பட்ட வணக்கத்தை. தீமைக் கடு வினை - தீமையாகிய நஞ்சை. பாய் உயர் முத்தி - பரவி உயர்ந்த முத்தியின்பம்.

கண்ணிய காள கண்ட னடைந்து
நண்ணிய பேற்றை நாமுரை செய்தாம்
எண்ணிய வானத் திறையவன் சாபம்
மண்ணிய மேய வண்ண முரைப்பாம். 22

கு - ரை: கண்ணிய - கருதப்படுகின்ற. பேற்றை - முத்தி இன் பத்தை. வானத்து இறையவன் - தேவேந்திரன். சாபம் மண்ணிய மேய வண்ணம் - சாபத்தை ஒழிக்கும் பொருட்டுப் பொருந்திய வரலாற்றை.

காளகண்டப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2236

நாற்பத்தொன்பதாவது

இந்திரன் சாபந்தீர்ந்தபடலம்

போத விலாச முனிவர ரியாரும் புகழ்ப்பரப்பார்
சூத முனிவரன் ருட்டா மரைக டொழுதருள்சால்
நாத நெடுவிண் புரப்பவன் சாப நலிவறுத்த
தோதவ வாவுதி யென்னவன் ஞன்மகிழ்ந் தோதுவனே. 1

கு - ரை: போத விலாசம் முனிவரர் - ஞானத்தை விளையாட்டாக உடைய நைமிச முனிவர்கள். விலாசம் - விளையாட்டு. புகழ் பரப்பு ஆர் - புகழ் நிறைந்த. அருள் சால் நாத - கருணை மிகுந்த தலைவரே. விண்புரப்பவன் - இந்திரன். சாப நலிவு - சாபமாகிய துன்பம். ஓத அவாவுதி - சொல்ல விரும்புவாய்: விருப்பத்தோடு சொல்லுக என்றபடி.

விண்ணம் புரக்குங் குலிசா யுதப்பெரு வேந்தனென்பான்
வண்ணம் பரப்புஞ் சுதன்மையின் மேவி மதியமைபொற்
றண்ணங் குரவ னடிபோற்றி நன்னிலை சாற்றுகென
வெண்ணம் பொருந்தத் தருமா தரும மியம்புவனே. 2

கு - ரை: குலிசாயுதப் பெருவேந்தன் - இந்திரன்; குலிசம் - வச்சிராயுதம். வேந்தன்- இத்திரன். வண்ணம் - அழகு. சுதன்மை - இந்திர சபை; சுதர்மா = நல்ல தருமங்கள் தன்னிடத்து நிகழப்பெறுவது எனப் பொருள்படும். மதி அமை - அறிவு நிறைந்த. பொன்தண் அம் குரவன் - வியாழ பகவானாகிய ஆசாரியன். பொன் - வியாழன். நன்னிலை- தருமம்.

கண்ணிய நீற்றுப் பெருமையுங் கண்மணிச் சீருங்கற்ருேர்
நண்ணிய வைந்து பதமான் மியமு நவிலடியார்
புண்ணிய மாண்பும்பத் திச்சீரு மற்றும் புகறருங்கால்
திண்ணிய வாகை மகவான் பராமுகஞ் செய்தனனே. 3

கு - ரை: கண்ணிய - பெருமையை உடைய. கண்மணி - உருத்திராக்கம். ஐந்துபத மான்மியமும் - திருவைந்தெழுத்தின் சிறப்பும். அடியார் புண்ணிய மாண்பும் - அடியார்களுடைய சிவபுண்ணியச் செயல்களின் பெருமையும். பத்திச்சீரும் - பத்தியின் சிறப்பும். மகவான் - இந்திரன். பராமுகம் செய்தனன் - பராக்குச் செய்தான்.

பராமுகஞ் செய்தெதிர் நின்றானைக் கூஉய்ச்சில பன்னுதலும்
புராதன வாரிய வாண்டளப் பான்சினம் பொங்கத்துயர்
அராவி வருத்தும் பிரமவி ராக்கத னாதியென்றான்
கராசல மூர்மக வானது கேட்டுக் கலங்கினனே. 4

கு - ரை : நின்றானை - நின்றவனாகிய இந்திரனை: வினையாலணையும் பெயர். கூய் - அழைத்து. பன்னுதலும் - சொன்ன அளவில். ஆண்ட ளப்பான் - குருபகவான். புராதன ஆரிய - பழமையான ஆசாரியராகிய. பிரம இராக்கதன் - பிரமராக்ஷஸ். ஆதி - ஆவாய். கராசலம் - யானை என்றது அயிராவதத்தை.

அடியே னறிவிலி யானேன் பிழைபொறுத் தாடியென்று
கடியேர் நறுமலர்க் கற்பக மாலையன் காறொழலும்
படியேழ் புரப்பவற் கீதோ தியது பழுதென்றெண்ணி
முடியா விரக்கத்து மந்திரி பின்னு மொழிகுவனே. 5

கு - ரை : அறிவிலி ஆனேன் - அறியாமை உடையவனானேன். பிழை பொறுத்து ஆடி - பிழை பொறுத்தருளுவாய். ஆள்தி = ஆடி. கற்பக மாலையன் - இந்திரன். கடி - வாசனை. ஏர் - எழுச்சி. கால் தொழலும் - திருவடிகளில் வணங்கி நிற்றலும். படி ஏழ் புரப்பவற்கு - ஏழு உலகங்களை யும் பாதுகாத்தருளும் இந்திரனுக்கு. ஈது - இச்செய்தியை என்றது சிவ சம்பந்தமானவற்றை. மந்திரி - குருபகவான். பின்னும் - மறுபடியும்.

நலமார் வளம்பொலி காரோண மாநகர் நண்ணிமிக்க
புலமார் முனிபுண்ட ரீகநன் னாமப் புனல்படியின்
வலமாறிச் சாபம் விடும்பின்னர் வள்ளலை வாழ்த்திவந்தித்
தலமா ரரசு புரியெழு போவெனச் சாற்றினனே. 6

கு - ரை : நலம் ஆர் - நன்மை நிறைந்த. புலம் ஆர் முனி - சிவ ஞானம் நிறைந்த முனிவன். புண்டரீக நன் நாமப் புனல் - புண்டரீக தீர்த்தம். படியின் - முழுகினால். வலம் மாறி - சாப வலிமை தொலைந்து. சாபம்விடும் - சாபம் நீங்கும். வள்ளலை - சிவபெருமானை. அலம் ஆர் அரசு - அலமரல் மிக்க ராஜ்யபாரம்.

பொன்புகல் வார்த்தைபொன் போலப் பொதிந்து புரந்தரன்வந்
தன்பு குலாவ முனிதீர்த்த மாடி யடர்ந்துபற்றி
வன்பு விராய கொடுஞ்சாபம் போக்கி மனமுருக
வென்பு முருக வெழுந்தா னிறைவன்முன் னெய்தினனே. 7

கு - ரை : பொன் - குருபகவான். பொன்போல பொதிந்து - பொன் னைப் பாதுகாப்பதுபோல மிகவும் பாதுகாத்து. புரந்தரன் - இந்திரன்.

வந்து அன்பு குலாவ. முனிதீர்த்தம் - புண்டரீக தீர்த்தம். வன்பு விராய - வலிமை பொருந்திய.

இறையவன் முன்னர்ப் பணிந்துபல் பூக்கொண் டினிதருச்சித்
தறையுடன் மொய்த்த வுரோமஞ் சிலிர்ப்ப வகத்தடங்கா
நிறைமகிழ் பூப்ப விழிப்புனல் வார நிலாவுமன்பு
குறையற வோங்கக் குளறிட நாத்துதி கூறுவனே. 8

கு - ரை : முன்னர்ப் பணிந்து - சன்னிதியில் வணங்கி. உரோமம் சிலிர்ப்ப - மயிர்க்குச்செறிய. நா குளறிட - நாத் தழுதழுப்ப.

சங்கர சம்புச தானந்த தற்பர நித்தமுத்த
பொங்கர வாபர ணாவென வேத்திப் பொலியருள்பெற்
றங்கர வென்று புடைவளந் தேத்து மமரரொடு
செங்கர வச்சிரத் தான்பண்டைத் தானஞ் சிவணினனே. 9

கு - ரை : சங்கர - சுகத்தைச் செய்பவனே. சம்பு - சுகத்திற்கு இருப்பிடமானவனே. சதானந்த - ஞானானந்தனே. தற்பர - தனக்குத்தானே பரமாக உள்ளவனே. பொங்கு அரவு ஆபரணா. அங்கு அர என்று - அவ்விடத்திலே ஹர ஹர என்று சொல்லி. செங்கர வச்சிரத்தான் - சிவந்த கையிலே வச்சிராயுதத்தை யுடைய இந்திரன். பண்டைத்தானம்-முன்னுள்ள விண்ணுலகம். சிவணினன் - பொருந்தினான்.

வாசித்த கற்பக மாலையி னான்வந்து மாத்துயரம்
மோசித்த காதை யுரைத்தாந் தவத்து முனிவரர்காள்
நேசித்த நாகைத் தலத்தை யடைந்து நிகழ்தருமன்
பூசித்த காதை தெரிவா னெடுத்துப் புகலுதுமே. 10

கு - ரை : வாசித்த - மணம் பொருந்திய. மா துயரம் மோசித்த - பெருந்துன்பத்தையுடைய பிரமராக்கதத்தை நீங்கிய. தெரிவான் - தெரிந்து கொள்ளும்பொருட்டு. புகலுதும் - சொல்லுவோம்.

இந்திரன் சாபந்தீர்ந்த படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2246

ஐம்பதாவது

தருமன் பூசித்தபடலம்

பாய மலமு மதன்வேரும் பறீத்துயர்ந்த
தூய பெருமுனிவர் சூதமுனி யைப்பணிந்தே
யாய தரும னருச்சித்த வண்ணமெவன்
நேய மருவச்சொ லெனவந்த முனிநிகழ்த்தும். 1

கு - ரை : பாய மலமும் - ஆன்மாவோடு விராவியுள்ள ஆணவ மலமும். அதன்வேரும் - அம்மலத்தின் மூலமும். முனிவர் - நைமிச முனிவர்கள். நேயம் மருவ - அன்புபொருந்த.

திராவிட தேயத் துச்செறி யும்வணிகன்
பராவு தரும னெனும்பேர் படைத்தான்
விராவு தாய்தந்தை சிறுபோதே வீய
வராவு வறுமைக் கிலக்கா யழிவான். 2

கு - ரை : திராவிடதேயம் - தமிழ்நாடு. பஞ்சத்திராவிடதேய மெனினுமாம்: தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம். சிறு போதே வீய - தன் இளமைப் பருவத்திலேயே இறந்துபட. அராவு வறுமைக்கு - தேய்க்கின்ற வறுமை நோய்க்கு.

பொல்லா வறுமை புகுந்துழக் கப்பட்டுப்
பல்லா ரகத்தும் பலியேற்கும் வாழ்க்கை
யொல்லாது கொல்லென் றெழிக்குந் திறம்பூணன்
நல்லா தரவி னயந்துமேற் கொண்டான். 3

கு - ரை : பொல்லா வறுமை - பொல்லாமையைச் செய்யும் வறுமை. உழக்கப்பட்டு - வருத்தப்பட்டு. பல்லார் அகத்தும் - பலருடைய வீடுகளிலெல்லாம். பலி ஏற்கும் - பிச்சை ஏற்று உண்ணும். ஒல்லாது கொல் - முடியாது. பூணன் மேற்கொண்டான் என்க.

பலியுண வியாரும் பரிந்திடா வண்ண
மெலியுமு டம்பெல்லாம் வெண்குட்ட மேவி
நலிபிற நோயு நடுங்க வுடற்றக்
கலிவறு மைமூழ்கிக் கலங்கித் திரியுநாள். 4

கு - ரை : பலி உணவு - பிச்சைச்சோறு. பரிந்து இடாவண்ணம் - விரும்பிக் கொடாதபடி. உடம்பு முழுதும் வெண்குட்ட நோய் பொருந்தி. நலி பிற நோயும் - வருத்துகின்ற மற்றைநோய்களும். நடுங்க உடற்ற - கண்டோரும் நடுங்கும்படி வருத்த. கலி வறுமை - கலியாகிய வறுமை.

பஞ்சகந்தக் கேடே பரமுத்தி யென்றுழலும்
வஞ்சமனப் புத்தர் பிடகத்து வாஞ்சையனாய்
நஞ்ச நிகரு மவர்கொள்கை நண்ணினான்
அஞ்சவிலம் பாடுறுத்த லாங்குந் தணிந்திலான். 5

கு - ரை : பஞ்சகந்தக்கேடே பரமுத்தி - ஐந்துகந்தமும் கெடுதலே மேலான முத்தியாம். பஞ்சகந்தமாவன: உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்பன. பிடகத்து - பிடகநூலில். வாஞ்சையனாய் - விருப்பத்தை உடையவனாய். நஞ்சம் நிகரும் - விடத்தை யொத்த. அஞ்ச இலம் பாடு உறுத்தல் - அஞ்சும்படி வறுமை துன்புறுத்துதல். ஆங்கும் - அந்த விடத்தும்.

சின்னாள் கழிய வதினின்றுந் தீர்ந்தானா
யென்னாள் நமக்கு வருமேற்ற மெனக்கவல்வான்
பன்னா ளொழியப் பளகுதவிர் நீறணிந்து
நன்னா ளுறவுற்றா னாகைக்கா ரோணத்தே. 6

கு - ரை : சின்னாள் - சிலநாட்கள். அதினின்றும் தீர்ந்தானாய் - அப்புத்த மதத்தினின்றும் நீங்கினவனாய். எந்நாள் நமக்கு ஏற்றம் வரும் என்று கவல்வான். பளகு தவிர் - குற்றம் நீங்கிய. பளகுதவிர் நீறு; தவிர் நீறு: வினைத்தொகை. நன்னாள் உற - நல்லகாலம் வந்து அடைய. நாகைக் காரோணத்து உற்றான்.

ஆயகா ரோணத் தடிக டிருக்கோயின்
மேயபலி பீடமிடும் வெண்சோ றெடுத்தயில்வான்
நேயமுற வுட்புகுந்தா னீண்ட பசிவருத்த
மாயவுடல் சோர மாழாந்து மண்வீழ்ந்தான். 7

கு - ரை : காரோணத்து அடிகள் - காரோணநாதர். மேய - பொருந்திய. வெண்சோறு - பலி. அயில்வான் - உண்ணும் பொருட்டு. நேயம் உற - அன்போடு. மாழாந்து - மயங்கி.

வீழ்ந்தானை நோக்கி மிகவிரங்கி யெம்பெருமான்
தாழ்ந்தா னமையென்று தாவா வருள்செய்தான்
வாழ்ந்தா னெழுந்தான் வறுமை வறுமையுறப்
போழ்ந்தா னுடம்பிற் புணர்நோ யெலாமொழிந்தான். 8

கு - ரை : வீழ்ந்தானை - விழுந்தவனாகிய தருமனை: வினையாலனையும் பெயர். தாழ்ந்தான் - வணங்கினான். தாவா அருள் - நீங்காத கருணை. எம்பெருமான் அருள் செய்தலால் வாழ்வுடையவனாய் எழுந்து, வறுமை நீங் கப்பெற்று, உடம்பிலுள்ள வெண்குட்டமும் ஒழியப்பெற்றான். வறுமை வறுமையுற - இல்லாமை இல்லாதொழிய. உடம்பிற் புணர் நோய் - வெண் குட்டமும் ஏனைய நோய்களும்.

அந்த நகரத் தணிமா ளிகையாதி
எந்த வளமு மியைந்தான் குபேரனினும்
நந்த வமைசெல்வ னனிவாய்ப்ப நற்குணசம்
பந்த மனைவிமகா ரோடும் பரவினான். 9

கு - ரை : நாகைக்காரோணமாகிய அத்தலத்தில் தருமன் அழகிய மாளிகை முதலிய எல்லா வளங்களும் பொருந்தியவனாய், குபேர சம்பத்தி னும் மிகு சம்பத்துடையவனாய், நல்ல குணசம்பந்தமுடைய மனைவி மக்க ளோடும் சிவபெருமானை வணங்கினான்.

வந்தாருக் கன்னம் வறுமை சிதைத்தலினால்
நொந்தாருக் காசை நுவன்மற் றுளபிறவும்
அந்தார் வணிக னவாவி யருளுவான்
கந்தார் களிற்றரசர் நட்புநனி கைக்கொண்டான். 10

கு - ரை : வந்தாருக்கு - வந்த விருந்தினருக்கு. அன்னம் கொடுத் தலினால் அவர் வறுமையைப்போக்கி. நொந்து வந்தவருக்கு அன்புடன் அவர் விரும்பிய மற்றவைகளையும் தருமன் என்னும் வணிகன் விருப்பத் தோடு கொடுப்பான். அரசருடைய நட்பையும் பெற்றான். கந்து-கட்டுத்தறி.

எண்ணா வறுமை யியைந்துதிரிந் தானளக்க
வொண்ணாத் திருவ முடையானே யாயினான்
அண்ணா வரசேயென் றாரமுதே யென்பார்க்குப்
பண்ணா வருளும் பரமற் குளதேயோ. 11

கு - ரை : எண்ணா வறுமை - நினைக்கவும் ஒண்ணாத தரித்திரம். இயைந்து திரிந்தான் - பொருந்தித்திரிந்தவன். அளக்க ஒண்ணா - அளவு செய்யமுடியாத. திருவம் உடையானே ஆயினான்-செல்வம் உடையவனானான். என்பார்க்கு - என்று துதிக்கின்றவர்கட்கு. பண்ணா அருளும் - செய்யாத கருணையும். உளதேயோ - இல்லை என்றபடி.

வளைகடலிற் பல்கலங்கள் வந்துவந்து செல்லும்
அளையு மவற்று ளமைபொருளும் பல்ல
விளை நிலத்து நாளும் விளைபொருளும் பல்ல
உளைவில் வணிகற் குறுவ வளப்பாரார். 12

கு - ரை : வலைகடலில் - நிலம் சூழ்ந்த கடலில். பல்கலங்கள் - பல மரக்கலங்கள். அலையும் - அளாவும், பொருந்தும். உலைவு இல் - வருந்துதல் இல்லாத. வணிகற்கு உறுவ - வணிகனுக்குப்பொருந்திய செல்வங்களை. அளப்பார் ஆர் - அளவிட்டுச் சொல்லுவார் யாவர்.

எங்குமவன் சத்திரங்க ளெங்குமவ னீர்ப்பந்த
ரெங்கு மவனு லியையப் புரிகழக
மெங்கு மவனு லினிதியற்றுங் கல்யாண
மெங்குந் தருமமெனி லிட்டபேர் காரணமே. 13

கு - ரை : எங்கெங்கும் அவனுடைய் சத்திரங்களும், தண்ணீர்ப் பந்தர்களும், அவனுல் இயற்றுவிக்கப்பட்ட கழகங்களும், செய்விக்கும் கல்யாணங்களும் மிகவும் நிறைந்தன. ஆகலின் அவனுக்கு இட்ட தருமன் என்னும் இயற்பெயர் காரணப்பெயராய் அமைந்தது.

இந்த விதம்பொலிவா னெங்கள்கா ரோணருக்குஞ்
சந்தக் கருந்தடங்க ணம்மைக்குந் தாவாத
பந்தத் திருப்பணிகள் பல்ல புரிந்துவந்தே
யந்தத்தின் முத்தி யடைந்தினிது வாழ்ந்தனனே. 14

கு - ரை : நாகைக்காரோண நாதருக்கும் கருந்தடங் கண்ணம்மைக்கும் வேண்டிய திருப்பணிகள் பலவற்றையும் செய்துவந்த தருமன் முடிவில் முத்தியின்பத்தை அடைந்து வாழ்ந்தான்.

ஆய தரும னடைபே றெடுத்துரைத்தாம்
போய பொலிவிற் புரோகிதனென் பானெருவன்
நேய மருவ நிகழ்காரோ ணத்தடைந்து
தீய வொருவித் திகழ்ந்தகதை செப்புவாம். 15

கு - ரை : இதுவரையில் தருமன் என்பவன் பெற்ற பேற்றை எடுத்துச்சொன்னேம். இனி, புரோகிதன் என்னும் ஒருவன் காரோணத்தை அடைந்து தீமைகளெல்லாம் நீங்கப்பெற்று விளங்கிய கதையும் சொல்லுவோம்.

தருமன் பூசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2261

ஐம்பத்தொன்றுவது

புரோகிதப்படலம்

செங்க ணெடுமாலுந் தேருத் திருவடியை
யங்க ணிதயத் தழுத்துவார் சூதமுனி
பங்கயப் பாதம் பரவிப் புரோகிதன்யார்
அங்கவன்பே றோதுகென வந்த முனிபுகல்வான். 1

கு - ரை: செங்கண் நெடுமாலும் தேருத் திருவடி: 'திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராச் சேவடி' என்க. செங்கண் - சிவந்த தாமரை போலும் கண்கள். தேரு - தெளியமுடியாத. அழுத்துவார் - நைமிச முனிவர். புரோகிதன் என்பவன் பெற்றபேறு ஓதுக என.

தென்னாடு காக்குஞ் செழியர் குலத்தொருவன்
மின்னாடும் வேல்வலத்தான் வென்றிப் பெரும்பூணன்
பொன்னாடு நூலோர் புகலுமொரு புண்ணியநாட்
சொன்னாடு கொற்கைத் துறையடைந்து மூழ்கினான். 2

கு - ரை: செழியர் - பாண்டியர். வேல் வலம் - வேற்படையின் வலிமை. பூண் - ஆபரணம். பொன்நாடு நூலோர் - சோதிடநூல் வல்லார். புண்ணிய நாளிலே கொற்கைத் துறையிலே மூழ்கினான். சொல் - புகழ்.

அந்தச் சமயத் தடுத்த புரோகிதன்கை
யெந்தப் பொருளு மெடுத்து நனியுதவி
முந்தக் கொடுத்தி முழுதுமறை யோர்க்கென்றான்
உந்தக் கொடிய னுடன்பட்டு வாங்கினான். 3

கு - ரை: அடுத்த புரோகிதன் - வந்து பொருந்திய புரோகிதன். முந்தக் கொடுத்தி - முற்படக் கொடுப்பாய். மறையோர்க்கு - பிராமணர் களுக்கு. உந்தக் கொடியன் - புரோகிதன்.

காற்கூறு நல்கிக் கழித்தெஞ் சியவாமுக்
காற்கூறு பொன்னுங் கவர்ந்துதனக் கேயெனமண்
பாற்கூறு நல்லோர் பழிமொழியோ டாக்கினனப்
பாற்கூறு செய்யவரு பாவமுமஞ் சாக்கயவன். 4

கு - ரை: காற்கூறு - காற்பங்கு. கழித்து - போக்கி. எஞ்சிய - மிகுதியான. முக்காற்பங்கு பொன்னையும் தனக்கே என வைத்துக்கொண்டான். கூறு செய்ய வருபாவமும் - பங்கிடுதலினால் வருகின்ற பாவத்தையும். கயவன் - கீழ்மகன்.

பொல்லாத் துரோகம் புணர்தலினுன் மற்றவனை
வெல்லாக் கொடுங்காலன் வீந்தநாண் மிக்கொறுத்துக்
கல்லாக் கயவர்பெறுங் காணியாங் கும்பியெலாஞ்
செல்லாத் துயரடைந்து தேம்பச் செலுத்தினுன். 5

கு - ரை: பொல்லாத்துரோகம் - கொடுத்தலில் பெரும்பொன்னைக் கொண்டமை, உடன்பட்டுக் கொடாமை, அவனை வஞ்சித்தமை முதலியன. காலன் - இயமன். வீந்தநாள் - இறந்த காலத்து. காணி - உரிய பூமி. கும்பி எலாம் - கும்பீபாகம் முதலிய நரகங்களிலெல்லாம். 'நரகபாலராய் நரகிற்புக்காரை வியசனப்படுத்துவார் தொகுதியுள் எழுபதிற்றேழு நூற்றுத் தொண்ணூறு வெள்ளத்தார் பிரதானர். இவருள் ஒருத்தர்க்கு ஒரு வெள்ளம் சேனையுண்டு. இதனை ஆருணகாண்டமான வேதத்திற் கண்டுகொள்க;' (தக்கயாகப்பரணி உரை). மிக்கு ஒறுத்து - மிகுதியும் தண்டித்து. கல்லாக் கயவர் - மெய்ந்நூல்களைப் படியாத அற்பர்கள். தேம்ப - அழ, வாட, மெலிய.

ஆவா துரோகமணு வாற்றுதலுந் தீதென்னும்
ஆவா நமனு ரடர்த்தல் கொடிதென்னும்
ஆவா நிரய மழுந்த றகாதென்னும்
ஆவா வறியாமை யால்விளைந்த தீதென்னும். 6

கு - ரை: ஆ ஆ - இரக்கக் குறிப்பு. அணு ஆற்றுதலும் - அணு அளவு செய்தலும், என்னும் - என்று சொல்லுவான். அடர்த்தல் - துன்புறுத்துதல். நிரயம் அழுந்தல் தகாது - நரகத்தில் மூழ்குதல் தக்கதன்று. அறியாமையால் விளைந்தது ஈது.

அஞ்சியவித் துன்ப மனுபவித்த வெங்கொடியோன்
எஞ்சியதுந் துய்ப்பா னிருங்கடல்சூழ் வைப்படைந்து
நஞ்சியலுந் துன்பப் பிறவி பலநண்ணித்
துஞ்சிய பின்னுந் தொலையாத சேடத்தால். 7

கு - ரை: அஞ்சிய - அஞ்சும்படி. வெங்கொடியோன் - மிக்க கொடுமையை யுடையோன், பெரும்பாவி என்றபடி. கொடியோன் பெயரையுங் கூறலாகாதாகலின் கொடியோன் எனச் செயலைக்கூறி விடுத்தார். எஞ்சிய - நரகத்தில் அனுபவித்துத் தொலையாமல் மீதமிருந்த துரோகப் பயன் முதலியன. துய்ப்பான் - அனுபவிக்கும் பொருட்டு. வைப்பு - பூமி. நஞ்சு இயலும் - விடத்தை யொத்த. துஞ்சிய பின்னும் - தொலைத்த பின்னும். சேடம் - மீதம்.

இரங்கும் பிரம விராக்கதனே யாகி
யுரங்கொள் கபில னுறைசூழ லுற்றுத்
திரங்கொ ளொலியெழுப்பித் தேம்பி யழுதான்
வரஞ்செ யவனும் வரவுரைத்தி யென்றான். 8

கு - ரை: இரங்கும் - யாவருங்கண்டு இரங்கத்தக்க. பிரமராக்கதன் - பிரமராக்ஷஸ். கபிலன் உறைசூழல் - கபிலமுனிவர் வீற்றிருக்கும் பர்ணசாலை. திரங் கொள் ஒலி - வலிய பேரொலி. தேம்பி - சோர்ந்து. வரவு உரைத்தி - நீ இங்கு வருதற்குக்காரணம் இன்னதெனச் சொல்லுக.

உள்ள வனைத்து முரைத்தா னதுகேட்டுக்
கள்ள மறுக்குமுனி காரோண நீயடைந்தோர்
தெள்ளறலின் மூழ்கிற் றீருமையென் றானேகை
துள்ள வெழுந்து துடிதுடித்துப் போயினான். 9

கு - ரை: உள்ள அனைத்தும் - நடந்த செய்திகளெல்லாம். முனி - கபிலமுனிவர். நீ அடைந்து ஓர் தெள் அறலின்; அறல் - நீர், தீர்த்தம். துடிதுடித்து - விரைந்து.

பாரோரும் விண்ணோரும் பல்லோரு மேத்தெடுக்கும்
காரோண மேவிக் கமல மலர்க்கிழவன்
சேரோகை யானமைத்த தீர்த்தக் கரையமர்ந்தான்
ஆரோ வொருவ னடைந்தப் புனன்முழுகி. 10

கு - ரை: கமல மலர்க் கிழவன் - பிரமன்; பிரமதேவர் வெண்டா மரைமலரிலிருத்தல்: "சாம வெண்டாமரை மேலயனும்" (திருவக்கரைத் தேவாரம்); "வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல், எம்பெருமான் தேவர்பிரா னென்று" (திருவாச - திருத்தசாங்கம் - 1); "வெண்ணிறக் கமல மேல் விற்றிருந் தருளண்ணல்" (திருக்காளத்திப் - பதிகம் - 15); "புண்டரீக மென் பொகுட்டுறை திசைமுகப் புத்தேள்" (ஷெ தாருகாவன-5) காண்க. அமைத்த தீர்த்தம் என்றது பிரமதீர்த்தத்தை.

ஈரம் புலர விருஞ்சிகையைத் தட்டலுமந்
நாரத் தொருதிவலை நண்ணிற் றிவன்றலைமேல்
வீரக் கடற்புடவி மேன்மே லதிசயிப்பச்
சேரத் துயருருப்போய்த் தெய்வ வுருப்பெற்றான். 11

கு - ரை: ஈரம் புலர - ஈரம் உலர. சிகை - குடுமி. நாரத்து - நீரின். புடவி - நிலவுலகத்தோர். மேன்மேல் அதிசயிப்ப - மேலும் மேலும் வியக்கும்படி. துயர் உரு - துன்பத்தைத் தரும் பிரமராக்கத வடிவம். தெய்வ உரு - தெய்வத்தன்மை பொருந்தும் வடிவம்.

தானு மதிசயித்துத் தாவா மகிழ்ச்சியெழ
மீனுஞ் சிவலோக மேவப் புனன்மூழ்கி
வானும் பிறவு மதிக்குங்கா ரோணத்தெங்
*கோனும்ப லாய குழகனடி போற்றுவான். 12

கு - ரை : மீனும் - நீர்வாழ்வதாகிய மச்சமும். உம்பல் ஆய - பிரணவ குஞ்சரமாகிய; உம்பல் - யானை.

ஆதி புராண ரடிபோற்றி யன்பர்வினை
காதி யருளுங் கருந்தடங்க ணம்மையையும்
நீதி யுறப்பணிந்து நேய மிகப்பெருகச்
சோதியமர் மற்றைத் தலமுந் தொழுதெழுந்து. 13

கு - ரை : அன்பர் வினை காதி அருளும் - அடியார்களுடைய வினைகளைத் தொலைத்தருளும். நேயம் - அன்பு. சோதி அமர் மற்றைத் தலமும் - சிவபெருமான் வீற்றிருந்தருளும் காரோணத்துள்ள ஏனைய தலங்களையும்.

பொன்செய் விமானமெதிர் போத வதினிவர்ந்து
மின்செய் நுழைமருங்குன் மேனகைமுன் னோர்பலரு
மென்செய் பணியென் றெதிர்வந்து கைகுவிப்பத்
தென்செய் சுவர்க்கத் திருநாடு போயமர்ந்தான். 14

கு - ரை : பொன் செய் விமானம் - பொன் விமானம். எதிர் போத - எதிரில் வர. இவர்ந்து - ஊர்ந்து. மேனகை முன்னோர் - மேனகை முதலியோர்; இவர் தெய்வ அரம்பையர்: ஊர்வசி, அரம்பை, திலோத்தமை, மேனகை என்பவர். செய் பணி என் - செய்யக்கடவதாகிய பணிகள் யாவை; பணி - தொண்டு. சுவர்க்கம் - தேவலோகம். தேவசாதியினர் விமானவாசிகளாகலின் இங்கே பொன்செய் விமானம் என்றார். தேவரை வைமானிகர் என்பர் வடநூலார்: "வேமானியர்தம் மகளின் விரும்ப நனி சேர்ந்தாள்" (சீவக - 2455).

பொல்லா வினைசெய் புரோகிதன்கா ரோணத்தை
நல்லா தரவி னயந்துற்ற பேறுரைத்தாம்
புல்லாத் தவஞ்செய் நிருக னெனும்பூமான்
வெல்லா வுவப்பின் மிகத்துளைந்த தோதுவாம். 15

கு - ரை : பொல்லாவினை - துரோகம். நல் ஆதரவின்; ஆதரவு - விருப்பம். பூமான் - அரசன்.

புரோகிதப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2276

---

* உம்பலாய - பிரணவ குஞ்சரமாகிய.

ஐம்பத்திரண்டாவது

நிருகன் பூசித்தபடலம்

துன்னிய மாதவர் சூத மாதவின்
மின்னிய மலரடி விரும்பிப் போற்றுபு
பன்னிய நிருகன்யா ரனையன் பண்புள
மன்னிய புகலென வவன்வ மூங்குமால். 1

கு - ரை: துன்னிய - நெருங்கிய. மாதவர் - நைமிசமுனிவர். அனையன் - அந்த நிருகன் என்பவன்.

பொருதிரைப் புடவியாண் மன்னன் பொன்னவிர்
தருகழற் காலினன் றயங்கு மோலியான்
நிருகனென் றியாவரு நிகழ்த்தும் பேரினன்
அருமகற் பெறுவதற் காசை மிக்குளான். 2

கு - ரை: புடவி - பூமி. பொன் அவிர்தரு கழல். மோலி - முடி. அரு மகற் பெறுவதற்கு - அரிய புத்திரனைப் பெறுவதற்கு.

மறையவர் முதலியோர் வகுத்த தானங்கள்
நிறைதர வியற்றிய நியமம் பூண்டுநோன்
பறைவது செய்துமா தீர்த்த மாடியும்
உறைமக மனைவயிற் றுதிப்பக் கண்டிலான். 3

கு - ரை: நிறையத் தானங்களைச் சற்பாத்திரத்திலே செய்யும் கடப்பாடுடையனாய், சொல்லிய விரதங்களை அநுட்டித்து, சிறந்த தீர்த்தங்களில் சென்று முழுகியும் மனைவி வயிற்றில் மகவு உதித்திலது.

காண்டவா ரணியத்துக் கடுகப் புக்கவண்
மாண்டவா ரழற்புனன் முழுகி வானுற
நீண்டமா லுணர்வரு நிமலத் தாண்மனம்
பூண்டவாம் பெருந்தவம் புரியு நாளையில். 4

கு - ரை: காண்ட ஆரணியத்து - காண்டவ வனத்து. கடுக - விரைந்து. மாண்ட ஆர் அழற்புனல் முழுகி - நிறைந்த அக்கினியில் முழுகி. நிமலத்தாள் - சிவபெருமானுடைய தூய திருவடிகளில். மனம் பூண்டு அவாம் - மனத்தில் கொண்டு விரும்பும்.

உருவில்வாக் கொன்றுகா ரோணத் துள்ளுறப்
பொருவின்மா தவம்புரி போதி யென்றது
வெருவிலம் மொழியுணர்ந் தெழுந்து வேந்தன்வான்
றருவின்மன் பொலியுமத் தலத்தைச் சார்ந்தனன். 5

கு - ரை : உரு இல் வாக்கு - ஆகாய வாணி. காரோணத்துள் உற பொரு இல் மாதவம்; பொரு - ஒப்பு. போதி - போவாய். வெருவு இல் - அச்சமில்லாத. அம்மொழி - அந்த ஆகாயவாணியை. வான் தருவின் - கற்பக விருட்சம்போல.

உள்ளபஃ றீர்த்தமு முவந்து மூழ்கினன்
உள்ளபஃ றலங்களு மொருங்கு போற்றினன்
உள்ளலர் வறியரா மும்பர் தீர்த்தப்பால்
உள்ளமிக் குவப்புற வுற்று நோற்றனன். 6

கு - ரை : உள்ள பல் தீர்த்தமும் - நாகைக் காரோண தலத்திலுள்ள எல்லாத் தீர்த்தங்களிலும். ஒருங்கு - ஒருசேர. உம்பர் தீர்த்தப்பால் - தேவ தீர்த்தத்தின் பக்கத்தில். நோற்றனன் - தவங்கிடந்தான். உள்ளம் மிக்கு உவப்புற.

சிலபக லருந்தவஞ் செய்ய வெம்மையாள்
நிலவணி சடைப்பிரா னேர்வந் தெண்ணிய
பலமவ னடைதரப் பாலித் தானருள்
குலவர சனுமகிழ் கூர்ந்து பிற்றைநாள். 7

கு - ரை : எம்மை ஆள் நிலவு அணி சடைப்பிரான் - எம்மையாளுடைய சிவபெருமான். நேர் வந்து - காட்சி தந்தருளி. எண்ணிய பலம் - புத்திரப்பேறு. பாலித்தான் - அருள்செய்தார். குல அரசனும் - சிறந்த நிருகமன்னனும். பிற்றைநாள் - பிற்காலத்து.

திருந்துகா ரோணநஞ் செல்வ நாதற்குங்
கருந்தடங் கண்ணிக்குங் கதிர்வி டங்கர்க்கும்
பொருந்துபல் பணிபரி வட்டம் பொற்புற
வருந்தவத் தரசர்கோ னன்பின் வீசினன். 8

கு - ரை : பல் பணி - பல ஆபரணங்கள். பரிவட்டம் - ஆடை. அரசர்கோன் - நிருகன்.

விடைகொடு தன்பதி மேவி மைந்தனைத்
தடையறப் பெற்றுளந் தவாம கிழ்ச்சியின்
இடையறத் துளைந்துநா ளீற்றி னெற்றைக்குங்
கடையுருச் சிவபுரங் காணி கொண்டனன். 9

கு - ரை : தன் பதி மேவி - தன் அரச நகரத்தை அடைந்து. மைந்தனைப் பெற்று. தவா மகிழ்ச்சியின் - நீங்காத மகிழ்வுடன். இடையறத் துளைந்து - இடையிடின்றி அளவளாவி, கொஞ்சிக் குலவி என்க. நாள் ஈற்றின் - இறுதிக்காலத்தில். சிவபுரம் காணி - சிவபுரத்தைக் காணியாக; காணி - இருப்பிடம்.

மகப்பெறு வாஞ்சையி லிருகன் வந்துநன்
கிகப்பெருந் தவஞ்செய்த தெடுத்துச் சொற்றனம்
தகப்பய னெருசண்ட தரும னுற்றதும்
நகப்புகல் வாமுள நயந்து கேண்மினே. 10

கு - ரை : மகப்பெறு வாஞ்சை - புத்திரனைப் பெறுதற்குரிய விருப்பம். தகப் பயன் - தகுதியான பிரயோசனம். நயந்து - விரும்பி.

நிருகன் பூசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2286

ஐம்பத்துமூன்ருவது

சண்டதருமன் பூசித்தபடலம்

வினைமுத லறத்து மித்து மிளிர்ப்ர போகந் துய்க்கும்
நனைமலர் வனப்பு வாய்ந்த நைமிச முனிவர் சூதன்
புனையடி வணங்கிச் சண்ட தருமன்சீர் புகலு கென்ன
அனைநிக ரனையா னுள்ளத் துவகையி னறைய லுற்ருன். 1

கு - ரை: வினைமுதல் அற துமித்து - நல்வினை தீவினைகளுக்குக் காரணமான ஆணவமலம் சத்தி கெட்டொழியுமாறு அழித்து. பரபோகம் - சிவபோகம். சண்டதருமன் சீர் - சண்டதருமனுடைய சிறப்பு. அனைநிகர் அனையான் - தாயையொத்த அச்சூதமுனிவர்.

மறையவர் குலத்து வந்தான் மறைமுதற் கலையு ணர்ந்தான்
நிறைதவ வொழுக்கம் வாய்ந்தா னீதியே கருதி நிற்பான்
முறைமையிற் றிறம்பல் செய்யான் மூர்க்கரோ டுறவு பூணுன்
தறையிடைச் சிறந்தான் சண்ட தருமனென் றுரைக்கும் பேரான். 2

கு - ரை: மறையவர் - பிராமணர். மறைமுதல் கலை - வேதமும் அதன் வழித்தாகிய கலைகளும். முறைமை - விதி. திறம்பல் - மாறுபடல். தறையிடை - பூமியில்.

அனையவ னினைய னுகி யமர்நாண்முற் பவத்திற் செய்தீ
வினைப்பய னருத்தப் புக்கா லியாவரே விலக்க வல்லார்
துனையநல் லொழுக்க மெல்லாந் தொலைத்திடுங் காம வேட்கை
மனைவயி னடங்கா தாகி மலிந்ததான் மேலு மேலும். 3

கு - ரை: இனையன் - இத்தன்மையுடையவன். செய் தீவினை - செய்த தீவினை. முற்பவம் - முற்பிறப்பு. பயன் அருத்த - பயனைப் புசிப்பிக்க. ''ஊழிற் பெருவலி யாவுள மற்ருென்று, சூழினும் தான்முந் துறும்'' (குறள்). துனைய - விரைவாக. காம வேட்கை - காமவிருப்பம். மனைவயின் - மனையாளிடத்து. மலிந்தது - அதிகரித்தது.

பரமட மாத ரியாவ ராயினும் பரிவிற் புல்லி
வரமுறக் களிப்பா னேர்நாட் பழையர்தம் மனையிற் புக்கோர்
குரவலர் கூந்த லாள்தன் கொங்கைக டழுவித் துய்த்தான்
விரவிய காம வேட்கை வீந்துநீர் நசைமிக் கன்றே. 4

கு - ரை: பரமட மாதர் - பிறர் மனைவியர். பரிவில் புல்லி - அன்போடு தழுவி. வரமுற - சிறக்க. பழையர் தம் மனை - கள்விற்போருடைய வீடு. விந்து - அவிந்து, கெட்டு. நீர் நசை மிக்கன்று - நீர் உண்ணும் விருப்பம் மிக்கது.

கடுமுது வேனிற் காலத் தாகநோய் கனற்ற லாலே
வடுவின்மோ ருண்டோ வென்று வினவவம் மடந்தை நல்லாள்
படுகளீ மொண் டருந்து கென்று கொடுத்தனள் பாரா னுண்டு
விடுகளென் றிற்றிற் றேர்ந்து வெகுண்டனன் வெளிவந் தானே. 5

கு - ரை: கடு முதுவேனில் - கொடிய முதுவேனிற் காலம்: ஆனி ஆடி மாதங்கள். கனற்றலால் - வெதுப்புதலால். கள் - கள்ளு, மது. பாரான் - பாராதவனாய். ஈற்றில் தேர்ந்து - தாகம்தீர்ந்த முடிவில் தெளிந்து.

வந்தவன் மறையோர் பாற்போய் வந்தபா தகமு ரைத்துச்
சிந்தவோர் கழுவாய் கூறிற் சிறியனே னுய்வே னென்றான்
அந்தணர் தூய வானெய் யழலெழக் காய்ச்சி வாயில்
உந்தவிப் பொழுது விட்டா லொழியுமித் தீமை யென்றார். 6

கு - ரை: வந்த பாதகம் - கள் குடித்ததனால் உண்டாகிய பாவம். பஞ்சமா பாதகங்களுள் காமம் ஒன்று, பிறர் மனைவியைச்சேர்தல் மற்றொன்று, இழிந்த கள் விற்பாளை முயங்கியது மற்றொன்று, அதனினும் கள் குடித்தமை குறிக்கத்தக்கது. சிந்த - கெட. கழுவாய் - பிராயச்சித்தம். தூய பசுவின் நெய்யை நன்றாகக் காய்ச்சி இப்போதே வாயில்விட்டால் அப்பாவம் தீரும் என்று அந்தணர் கூறினர் என்க.

அன்னவ னதுவே யாற்றி யாவிமாய்ந் திடத்து ணிந்தான்
தன்னமர் தந்தை கேட்டுத் தான்விரைந் தோடி வந்தே
என்னசெய் குதிநீ யானு மிறப்பனின் முன்ன ரென்றான்
பின்னரென் செய்து மென்று பேதுற்றுக் கவலுங் காலை. 7

கு - ரை: அன்னவன் - சண்டதருமன். அதுவே ஆற்றி - அந்தணர் கூறியபடியே பிராயச்சித்தம் செய்து. ஆவி மாய்ந்திட - உயிர் நீங்க. தன் அமர் - சுதன்பால் விருப்பமுடைய. தந்தை - பிதா. நீ என்ன செய்கின்றாய். நின் முன்னர் - நீ இறத்தற்கு முன்னமே. பேதுற்று - அறிவு மயங்கி. கவலுங் காலை - கவலைப்பட்ட பொழுது.

மொழிதவப் பெருமை கூர்சாண் டில்லிய முனிவன் போந்து
கழியழ னெய்யுண் ணுதி காரோணத் தலத்த டைந்து
பழிதபு தேவ தீர்த்தம் படிந்தனை யாயிற் பாவம்
ஒழியுமென் றுரைத்தான் சண்ட தருமனங் குடனே சென்றான். 8

கு - ரை : தவப் பெருமைகூர் - தவத்தின் பெருமை மிக்க. சாண்டில்லிய முனிவர். கழி அழல் நெய் உண்ணுதி - நெருப்பிற் காய்ச்சிய நெய்யை உண்ணுதே. தேவதீர்த்தத்தில் நீராடி. படிந்து - முழுகி. அங்கு - காரோண தலத்துக்கு.

புண்ணிய தேவ தீர்த்தம் புக்கினி தாட லோடும்
அண்ணிய கள்ளுண் டோட மகன்றனை யென்றோர் வாக்கு
நண்ணிய திரும்பூ துற்று நயந்துபல் புனலுந் தோய்ந்து
கண்ணிய தலங்க ளெல்லாந் தொழுதுகா ரோணத் துற்றான். 9

கு - ரை : கள் உண் தோடம் - கள்ளுண்ட பாவம். அகன்றனை - நீங்கினய். ஓர் வாக்கு - ஆகாயவாணி. இறும்பூது - ஆச்சரியம். பல் புனலும் - பல தீர்த்தங்களிலும். கண்ணிய - கருதப்பட்ட.

கருந்தடங் கண்ணி பாகக் காரோணப் பெருமா னுரைத்
திருந்தநன் கிறைஞ்சிப் போற்றித் திருவரு ணிரம்பப் பெற்றுப்
பொருந்துதன் னுறையுண் மேவிப் பொற்பவாழ்ந் திருந்து பின்னாள்
அருந்தவக் கயிலை மேவி யளப்பரு மின்பந் துய்த்தான். 10

கு - ரை : திருந்த - விதிப்படி. உறையுள் - இருக்கை. அளப்பரும் - அளவிடுதற்கரிய.

தாவருந் திருக்கா ரோணத் தலஞ்சண்ட தரும னுற்று
மேவரும் பேறு பெற்ற விதத்தினை யெடுத்துச் சொற்றும்
பாவரும் புகழான் மிக்க பத்திர சேனன் போந்து
தேவரும் வியப்பப் பெற்ற பேற்றினைச் செப்பு வாமால். 11

கு - ரை : தாவரும் - நீங்குதலில்லாத. பேறு - பெறத்தக்க மேல்நிலை, வீடு. பா வரும் புகழான் - பாக்களில் வைத்துப் போற்றும் புகழை யுடையவனாகிய பத்திரசேனன் என்பவன்.

சண்டதருமன் பூசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2297

ஐம்பத்துநான்காவது

பத்திரசேனன் பூசித்தபடலம்

பரையொரு பாகத் தெம்மான் பங்கயப் பாத முள்ளும்
உரையமை முனிவர் சூத ணெண்மலர்ப் பாதம் போற்றிப்
புரைதவிர் காரோ ணத்திற் பத்திர சேனன் போந்து
விரைதரப் பெற்ற பேறு விளம்பென வவன்வி ளம்பும். 1

கு - ரை: பரை - பராசத்தி. பங்கயப்பாதம் - தாமரை மலர்போலும் திருவடிகள். உள்ளும் - தியானிக்கும். உரை - கீர்த்தி. பத்திரசேனன்; போந்து - வந்து, போய்.

இக்குவா வங்கி சத்தி லுதித்தவ னிகலின் மிக்கான்
நக்குவாள் விதிர்த்த லோடு நவிலொணு நடுக்க மெய்திப்
பக்குமாற் றலர்க ளோடும் பத்திர சேன னென்பான்
திக்குமே வியசீ ரன்ன னில்லறஞ் சிறப்பச் செய்வாள். 2

கு - ரை: இக்குவா வங்கிசம் - இட்சுவாகு வமிசம். இகலின் - வலிமையின். விதிர்த்தல் - அசைத்தல். மாற்றலர் - பகைவர். திக்கு மேவிய சீர் - திசைமுழுவதும் பொருந்தும் கீர்த்தி. இல்லறம் சிறப்பச் செய்வாள் - மனைவி.

ஒருபது மவதி யென்னும் பெயரினு ளொழுக்க மிக்காள்
திருபது மினியோ வென்னச் சிறப்புறு வனப்பு வாய்ந்தாள்
இருபதும் பதினு றுந்தீர்ந் திலங்குமா தேவன் ருள்கள்
தருபது மங்கொண் டென்றும் பூசிக்குந் தன்மை மிக்காள். 3

கு - ரை: பதுமாவதி. திரு பதுமினியோ - இலக்குமியாகிய பதுமினியோ: இருபெயரொட்டுப் பண்புத்தொகை. வனப்பு - அழகு. இருபதும் பதினும் தீர்ந்து இலங்கு மாதேவன் - முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து விளங்கும் சிவபெருமான். பதுமம் - தாமரை மலர்.

அன்னநன் மனைவி யோடு மடங்கல ரரியே றன்ன
மன்னனன் கமையக் கூடி மாவடி வாணர் வைகும்
பன்னரும் புகழ்சால் காஞ்சிப் பதிவயின் மருவி யாரும்
முன்னருஞ் செங்கோ லோச்சி முறையுளி வாழு நாளில். 4

கு - ரை : மடங்கலர் அரி யேறு அன்ன - பகைவர்களுக்கு ஆண் சிங்கம் போன்ற. நன்கு அமைய. மா அடிவாணர் - மாமரத்தின் அடியில் வீற்றிருந்தருளும் ஏகாம்பரநாதர். காஞ்சி - காஞ்சிபுரம். முன்ன அரும் - நினைத்தற்கரிய. முறையுளி - நீதி முறைப்படி.

புரவலர் பலரு மொன்றிப் புழுங்கழுக் காறு பூண்டு
கரவறு மிவன்வெந் காணுங் கருத்தின ராகி வல்லே
விரவினர் வளைந்து கொண்டு மிக்கறை கூவி நின்றார்
அரவணி பவற்கன் பாய பத்திர சேன னுய்ந்து. 5

கு - ரை : புரவலர் - அரசர். ஒன்றி - கூடி. அழுக்காறு - பொறாமை. கரவு அறும் இவன் - வஞ்சகமில்லாத பத்திரசேனன். வெந்=வெரிந் - புறமுதுகு. வளைந்துகொண்டு - சுற்றிக்கொண்டு. அறைகூவி - வீரவாதங் கூறிப் போர்செய்ய அழைத்து. அரவு அணிபவற்கு - சிவபெருமானுக்கு. ஆய்ந்து - ஆராய்ந்து.

மாவடி யுலக மீன்று ளருச்சிக்க வைகு மண்ணல்
பூவடி வணங்கி யேத்திப் புரவலர் பலரு மொன்றித்
தாவடி கொண்டு மேன்மேற் சண்டைசெய் திடுவான் வந்தார்
மேவடி யேற்கென் செய்கை விளம்பென வேண்ட லோடும். 6

கு - ரை : மாவடி - மாமரத்தின் அடியில். உலகம் ஈன்றுள் - உமாதேவியார், காமாட்சியம்மையார். அருச்சிக்க - அருச்சித்துப் பூசைசெய்ய. அண்ணல் - சிவபெருமான். தாவடிகொண்டு - போர் செய்ய எண்ணி. மேவு அடியேற்கு என் செய்கை - பொருந்திய அடிமையாகிய எனக்கு என்ன செயல் உள்ளது.

நலங்கொணின் மனைவி யோடு நாகைக்கா ரோண மெய்திப்
பலங்கொளுந் தேவ தீர்த்தம் பகர்விதிப் படிப டிந்து
வலங்கொளிக் கும்ப மாத மாண்புசா லிரவி னம்மை
அலங்கொளப் போற்றில் வெற்றி யடைகுவை போதி யென்றான். 7

கு - ரை : நலங் கொள் - நன்மையையுடைய. தேவ தீர்த்தத்தில் முழுகி. இக் கும்பமாதம் - இந்த மாசிமாதம். மாண்புசால் இரவில் - சிறப்பு மிக்க சிவராத்திரி காலத்தில்.

அத்தல விசேடந் தேற அறிவித்தா னைய னென்று
முத்தலம் புகழக் கற்பு முதிர்மனை யாட்டி யோடுங்
கைத்தலங் குவித்தெ ழுந்து நாகைக்கா ரோணஞ் சார்ந்து
பைத்தலத் தமர்மண் ணுளும் பார்த்திவன் விதிவ ழாதே. 8

கு - ரை : தேற - தெளியுமாறு. மனையாட்டி - பதுமாவதி. பைத் தலத்து அமர் மண் - ஆதிசேடன் சிரத்திற் பொருந்தும் நிலவுலகம். பார்த்திவன் - பத்திரசேனன்.

தேவநீர் முழுக வன்று சிவநிசி யடைந்த தாக
மேவுமா ரருட்கா ரோண விமலற்கி யாம நான்கும்
மாவபி டேக மாதி யாவையும் வயங்கச் செய்து
பாவுபே ரன்பிற் ருழ்ந்து பழிச்சினுன் பாராள் வேந்தன். 9

கு - ரை : தேவநீர் - தேவதீர்த்தம். சிவநிசி - சிவராத்திரி. யாமம் நான்கும் - நான்கு யாமங்களினும். மா அபிடேகம் ஆதி - சிறப்புற்ற அபிஷேகம் முதலியவற்றை. பழிச்சினுன் - துதித்தான்.

வழிவழி யடிமை பூண்ட மன்னவற் கிரங்கி யையன்
பழிதபு நன்கா ரோணப் பதிநம திராவின் மேவி
மொழிபெரும் பூசை யாற்று முறைமையா னினது மாற்ருர்
கழிபெரும் போரி லாசை கழிந்துநட் பாவர் கண்டாய். 10

கு - ரை : வழி வழி அடிமை - பரம்பரைத்தொண்டு. ஐயன் - சிவ பெருமான். நமது இராவின் - சிவராத்திரியில். நினது மாற்ருர் - உன் னுடைய பகைவர். ஆசை கழிந்து - விருப்பம் நீங்கி.

ஆதலின் வருடந் தோறு மணைதரு நமதி ராவிற்
காதலி னிங்கு மேவிக் கரிசறப் பூசை செய்தி
மேதகு முத்தி யும்பின் மேவுவை யெனவி டுத்தான்
போதக மனைய வேந்தன் மனையொடுங் காஞ்சி புக்கான். 11

கு - ரை : இங்கு மேவி - இங்கே வந்து. கரிசு அற - குற்றமின்றி. போதகம் - யானை.

காஞ்சிவந் தடைத லோடுங் கடுகமுன் வளைந்த மாற்ருர்
தாஞ்சிவ நிசிக்கா ரோண தரிசனஞ் செய்த வாற்ருல்
நாஞ்சினந் திடல்கூ டாது நட்பதே கரும மென்று
பூஞ்சினை மாவின் கீழ்வாழ் புண்ணியப் பிரானை யேத்தி. 12

கு - ரை : கடுக முன் வளைந்த - விரைந்து முன்பு சூழ்ந்துவந்த. சினந்திடல் - கோபித்தல். கருமம் - செய்யத்தக்க காரியம். புண்ணியப் பிரானை - சிவபெருமானை.

பத்திர சேன மன்னன் பால்வந்து நட்புப் பூண்டு
தத்தமக் கியன்ற தாய திறைதந்து தழுவிப் போனர்
அத்தகு மிறைவ னுகை யாண்டுதோ றொருநாட் போற்றி
உத்தம மணைவி யோடு முற்றனன் முத்தி யீற்றில். 13

கு - ரை : திறை - கப்பப்பொருள். தழுவி - நட்புற்று. ஒருநாள் - சிவராத்திரியில். ஈற்றில் முத்தி உற்றனன்.

வாகையந் திண்டோண் மன்னன் பத்திர சேனன் வண்சீர்
நாகையந் தலத்து மேவி நம்பிரா னருளப் பெற்ற
வோகையை யெடுத்துச் சொற்று மோங்குமத் தலத்தை யின்னும்
மூகைமற் றொருவன் போற்றிப் பெற்றது மொழிவா மன்றே. 14

கு - ரை : வாகை - வெற்றி. நம்பிரான் - சிவபெருமான். ஓகை - மகிழ்ச்சி. அத்தலத்தை - நாகைக் காரோணத்தை. மூகை - ஊமை. பெற்றது - பெற்றபேற்றை.

பத்திரசேனன் பூசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2311

ஐம்பத்தைந்தாவது

மூகை பூசித்தபடலம்

வாகை மாதவர் சூத மாதவன்
ஈகை யார்பத மிறைஞ்சி நாகையின்
மூகை போற்றிய முறையுஞ் சொல்லென
வோகை யோடவ னுரைக்க லுற்றனன். 1

கு - ரை : வாகை - வெற்றி. மூகை - ஊமை. முறை - தன்மை.

தணித ராவளந் தங்கு நாகையின்
வணிகர் தங்குலத் துதித்த வன்முனைப்
பிணிசெய் தீமையாற் பேச்சி லாதவன்
கணித மில்பசுக் காவல் பூண்டுளான். 2

கு - ரை : தணிதரா - குறையாத. முன்னைப் பிணிசெய் தீமை - முற்பிறவியில் பற்றிய தீங்கு. பேச்சிலாதவன் - ஊமையன். கணிதம் இல் - அளவில்லாத. பசுக்காவல் - பசுக்காத்தல்.

ஓகை யார்பசு வொன்றை நாடுபு
நாகை சூழ்ந்தன னிருளி னுடிப்பின்
*மேகை தேர்ந்தவப் பசுவு மீடரா
தாகை வாய்ப்புறச் சூழ்ந்த தல்லெலாம். 3

கு - ரை : நாடுபு - தேடி. சூழ்ந்தனன் - சுற்றினன், வலம் வந்தான். மேகை - மேவுதல். மீள் தராது ஆகை - மீளாமல், திரும்பிவராமல். அல் எலாம் - இரவு முழுதும்.

வெருவின் மூகையும் விடாது சூழ்ந்தனன்
பொருவி லவ்விராப் புண்ணி யங்கெழு
திருவி னுய்த்திடுஞ் சிவனி ராவதா
யொருவி லாவள முறுப்ப தாயிற்றே. 4

கு - ரை : வெரு இல் மூகையும் - அஞ்சுதல் இல்லாத ஊமையனும். அவ்விரா சிவன் இரா. ஒருவு இலா - நீங்காத.

---

* மேகை - மேவுதல்.

பெட்டி யாவரும் பேசி ராவெலாம்
நட்டு வக்குமிந் நாகை யைக்குடஞ்
சுட்டு மூகையுஞ் சூழ்ந்த வென்றுதோல்
கட்டு நாயகன் கருணை செய்தனன். 5

கு - ரை : பெட்டு யாவரும் பேசு இராவெலாம் - விரும்பி எல்லோரும் துதிக்கும் இராக்கால முழுவதும். நட்டு உவக்கும் - சேர்ந்து மகிழும். குடஞ் சுட்டு - பசு. மூகை - அந்த ஊமையன். தோல் கட்டு நாயகன் - தோலை ஆடையாகவுடுத்த சிவபெருமான்.

மருளி லாத்தசா ருணவண் ணாட்டகத்
தருளின் மூகையோ ரரச னாயினன்
தெருள மைச்சனாய்த் திகழ்ந்த தொண்பசுப்
பொருளின் மேவர சாண்டு போதுநாள். 6

கு - ரை : தசாருண நாட்டில் மூகை ஓர் அரசனாயினன். தெருள் - தெளிவு. அமைச்சன் - மந்திரி; பசு மந்திரியாயிற்று.

முந்து சன்மத்தி னிகழ்ச்சி முற்றவும்
நந்து மாறுணர் நலம்வி ராவலாற்
பந்து நேர்முலை பாகர் நாகையை
வந்து சூழ்ந்தனர் பின்னு மாண்புற. 7

கு ரை : முந்து சன்மத்தின் நிகழ்ச்சி - முற்பிறப்பில்செய்த புண்ணிய பாவங்கள். உணர் நலம் விராவலால் - உணர்வதனுக்குரிய தன்மைவந்து பொருந்தலால். பின்னும் - மறுபடியும்.

முனிவர் சிற்சிலர் கண்டு முற்றுளக்
கனிவி னோடிராப் பகலுங் கைகுவித்
தினிய நாகையைச் சூழ்வ தென்னெனப்
புனித ரோதினர் புணர்ந்த யாவையும். 8

கு - ரை : முற்று உளக்கனிவினோடு - முதிர்ந்த உள்ளத்தில் நெகிழ்ச்சியுடன். என் என - யாது காரணம் என்று வினவ. புனிதர் - சிவபெருமான். புணர்ந்த யாவையும் - முற்பிறப்பில் நடந்த செயல்கள் அனைத்தையும்.

ஒருதி னத்தறி யாம லுத்தலம்
மருவிச் சூழ்ந்தவர் பெறன்மற் றீதெனில்
ஒருவ றத்தெரிந் துவந்து சூழ்பவர்
பெருகும் பேற்றினைப் பேசு வாரெவர். 9

கு - ரை: ஒரு தினத்து அறியாமல் - ஒருநாளில் அபுத்தி பூர்வமாய். உத்தலம் - அந்த நாகையை. ஈது எனில் - இதுவானால். ஒருவற - நீங்காமல். தெரிந்து - புத்தி பூர்வமாய்.

என்று மாதவ ரெண்ணி யத்தலம்
நன்று சூழ்ந்தனர் நம்பி ரானருள்
ஒன்று மாறுகண் டுவகை பூண்டனர்
வென்று மேம்படு முத்தி மேயினர். 10

கு - ரை: நன்று சூழ்ந்தனர் - நன்றாக வலம் வந்தனர். ஒன்றுமாறு - பொருந்துவதை. உவகை - மகிழ்ச்சி.

மதிய மைச்சனு மன்ன னும்பெருந்
துதிவி ராவுறச் சூழ்ந்து நாகையிற்
பதியுந் தீர்த்தமெல் லாம்ப டிந்துபின்
கதிசெ யுஞ்சின கரமெ லாந்தொழா. 11

கு - ரை: பெருந்துதி விராவுற - மிக்க புகழுண்டாக. சூழ்ந்து - வலம் வந்து. பதியும் தீர்த்தம் எலாம் - பொருந்திய எல்லாத் தீர்த்தங்களினும். படிந்து - முழுகி. சினகரம் - கோயில்.

ஓங்கு நாகைக்கா ரோண வுத்தமன்
பாங்கு மேவிய திருமுன் பம்பினர்
வீங்கு மன்புளம் விரியத் தாழ்ந்தனர்
ஆங்கு நாயக னருகு சார்ந்தனர். 12

கு - ரை: திருமுன் - சந்நிதியை. பம்பினவராய்த் தாழ்ந்து அருகு சார்ந்தனர். பம்புதல் - நிறைதல்.

கண்டு தாழ்ந்தனர் கருந்த டங்கணு
ளண்டு பேரருட் கிலக்க மாக்கிடுந்
தொண்டு பூண்டனர் தொழுது வாழ்த்தினர்
பண்டு நேர்மையுட் பற்றி வந்தவர். 13

கு - ரை: கண்டு - தரிசித்து. அண்டு - பொருந்தும். தொண்டு - அருட்பணி. உட்பற்றி - மனத்திற்கொண்டு.

மேய சுந்தர விடங்கப் பேர்புனை
நாய னார்பத நண்ணிப் போற்றினர்
பாய வின்பமாப் பரவை யாடினர்
நேய மூற்றெழ நிலவு நீர்மையார். 14

கு - ரை : நாயனர் - கடவுள். பாய - பரவிய. பரவை - கடல். ஊற்றெழ - மேலும் மேலும் சுரந்தோங்க.

இந்த வா றிரு வோரு மெண்ணினுள்
அந்த மாத்தலத் தடித்தொண் டாற்றுபு
சந்த மாரருட் டலைமை வாய்ந்தனர்
முந்த மேவினர் முத்தி வைப்பரோ. 15

கு - ரை : இருவோரும் - அரசனும், அமைச்சனும். எண்ணில் நாள் - அநேகநாள். அந்த மாத் தலத்து - நாகைக் காரோண தலத்தில். முத்தி வைப்பு - முத்தியுலகம்.

கந்தர் தந்தையார் கருணை செய்தலின்
வந்த மூகையார் வயங்கு தாவிலா
னந்த ரானதை நவின்று ஞானசம்
பந்தர் போற்றிய பரிசுங் கூறுவாம். 16

கு - ரை : கந்தர் தந்தையார் - சிவபெருமான். தா இல் ஆனந்தர் - குற்றமில்லாத ஆனந்தத்தையுடையவர். நவின்று - கூறி. பரிசும் - தன்மையும்.

மூகை பூசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2327

ஐம்பத்தாறுவது

ஞானசம்பந்தப்படலம்

முதிர்புகழ் முனிவர் சூத முனிவரன் பொற்றுள் போற்றி
அதிர்கட லுலக மேத்து மண்ணலார் காரோ ணத்துக்
கதிர்புரை தருசம் பந்தர் கலந்துபோற் றியதோ தென்ன
எதிரது போற்றி யன்னா தியம்புமச் சூத மேலோன். 1

கு - ரை: அதிர் கடல் - முழக்கமிக்க கடல். கதிர் புரைதரு - சூரியனை யொத்த. சம்பந்தர் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். அன்னது - அவ் வரலாற்றை.

ஆழிசூழ் புடவி யேத்து மகன்புனற் சோழ நாட்டுக்
காழிமா மறையோர் தம்முட் கவுணியர் குலஞ்செய் நோன்பால்
வாழியா ருயிர்க ளோடு சிவபாத விதயர் வாழ
ஊழியோ னருளே யென்ன வொருவர்வந் தவத ரித்தார். 2

கு - ரை: காழி - சீர்காழி. கவுணியர் குலம் - கௌண்டினிய கோத் திரம். நோன்பால் - தவத்தினல். சிவபாத இதயர் - சிவபாத இருதயர். ஊழியோன் - சிவபெருமான்.

ஆண்டுமூன் றணையுங் காலை யப்பர்தம் பின்பு சென்று
பாண்டுநீ றணிவார் கோயிற் பைம்பொன்செய் தோணி நோக்கி
மூண்டுபே ரன்பு பொங்க முலைசுரந் துலக மீன்றுள்
வேண்டுபா லூட்ட வுண்டு கண்பிசைந் தழுகை விட்டார். 3

கு - ரை: அப்பர்தம் பின்பு - தந்தையர் பின்பே. தோணி - திருத் தோணியை. உலகம் ஈன்றுள் - உமையம்மையார். ஊட்ட - உண்பிக்க.

ஊட்டினர் யாவ ரென்னு மொருவர்க்கோர் விரலாற் சுட்டிக்
காட்டினர் தமிழ்வே தந்தோ டுடையமுற் கழறிப் பின்னர்
நீட்டின வேணி யார்தங் கோலக்கா நினைந்து சென்று
கூட்டின வோசை சால்பொற் றுளங்கைக் கொண்டா ரன்றே. 4

கு - ரை: ஊட்டினர் - உண்பித்தவர். ஒருவர்க்கு - ஒப்பற்ற தமது பிதாவுக்கு. தமிழ் வேதம் - தேவாரம். தோடுடைய முற் கழறி - தோடுடைய என்பதனை முதலாக எடுத்துச் சொல்லியருளி. வேணி - சடை. கோலக்கா -

திருக்கோலக்கா என்னும் தலம். ஓசை சால் பொற்றாளம் - ஓசை மிக்க பொற்றாளம்.

பெருந்திருக் கூட்டத் தோடுந் தலமெலாம் பேணிப் போற்றி
அருந்திறற் பிள்ளை யார்தா மரத்துறைக் கோயில் சார்ந்து
மருந்தமுண் டமரர்க் காத்த வள்ளலை வணங்கி மேன்மை
பொருந்தமுத் தமைந்த யான மாதிய பொலிவிற் பெற்றார். 5

கு - ரை : பேணி - விரும்பி. பிள்ளையார் - திருஞானசம்பந்தப் பிள்ளையார். அரத்துறை. மருந்தம் உண்டு - நஞ்சையுண்டு. முத்தமைந்த யானம் - முத்துச்சிவிகை; யானம் - விமானம்.

அங்குநின் றகன்று பல்ல தலமெலா மணுகிப் போற்றித்
தெங்குவிண் டடவும் பாச்சி லாச்சிரா மத்திற் சென்று
தங்குநன் மழவன் பெற்ற கன்னிகை தவாத துன்புண்
முங்குதற் கேது வாய முயலக னொழித்துப் பின்னர். 6

கு - ரை : பல்ல தலம் எலாம் - அநேக தலமுழுதும். விண் தடவும். திருப்பாச்சிலாச்சிரமம். தவாத துன்புள் - நீங்காத துன்பத்தினுள். முங்குதல் - முழுகுதல். முயலகன் என்னும் நோய்.

அறிபெருங் கொங்கர் நாட்டை யடைந்தடி யரைவ ருத்துஞ்
செறிபனிக் கொடுமை நீங்கத் திருநீல கண்டம் பாடி
மறிவரும் வேனில் வெப்ப மடங்கப்பட் டீச்ச ரத்துக்
குறிகுண மில்லார் நல்கு குளிர்முத்தின் பந்தர் பெற்று. 7

கு - ரை : கொங்கு நாட்டை அடைந்து. பனியால் வந்த பெருந் துன்பம். திருநீலகண்டத் திருப்பதியம். சோழ நாட்டுப் பட்டீச்சரத்தில் முத்துப்பந்தர் பெற்றமை.

பெற்றவ ரினிது செய்யும் பெருமக முற்று மாறு
கற்றவர் நிறையு மெங்க ளாவடு துறைக லந்தாங்
குற்றவ ரினிது நல்கு முலவாத கிழிபெற் றிஞ்சி
செற்றவர் தலங்க ளெல்லாஞ் சென்றுசென் றிறைஞ்சிப் போற்றி. 8

கு - ரை : பெற்றவர் - தந்தையாராகிய சிவபாத இருதயர். பெருமகம் - பெரிய வேள்வி. கற்றவர் நிறையும் எங்கள் ஆவடுதுறை. அங்கு உற்றவர் - ஸ்ரீ மாசிலாமணியீசர். உலவாத கிழி - எடுக்க எடுக்கக் குறையாத பொன்முடிப்பு. "கழுமல ஊரற்கு அம்பொன் ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறையனாரே" (தேவா). இஞ்சி செற்றவர் - முப்புரத்தை அழித்த சிவபெருமான்.

காவண மெங்கு மிட்டுக் கமுகொடு கதலி யாத்துப்
பூவணை மாலை யோடு பொன்னரி மாலை நாற்றித்
தூவணப் பனிநீர் சாந்தஞ் சுண்ணமெவ் விடத்தும் வீசி
யாவண வலங்கா ரத்தோ டேனவு மலங்க ரித்தே. 9

கு - ரை : காவணம் - பந்தர். கமுகு - பாக்கு. கதலி - வாழை. நாற்றி - தொங்கவிட்டு. தூவணம் - தூயநிறம்.

எல்லியன் மறையோ ராதி யடியவ ரியாரு மீண்டிப்
பல்லிய வியமு ழங்கப் பரவுபொற் குடங்கை யேந்திச்
சொல்லியல் வாழ்த்தெ டுத்துத் துதித்தடி வணங்கப் போற்றி
நல்லிய ளுளு மேய நாகைக்கா ரோணம் வந்தார். 10

கு - ரை : ஈண்டி - நெருங்கி. பல் இயல் இயம் - பலவகையாக இயலும் வாத்தியங்கள். பொற்குடம் - பொன்னாலாகிய பூரணகும்பம். நல் இயல் - நல்ல இயல்புகள்.

கருந்தடங் கண்ணி பாகங் கலந்தமர் தருமா தேவை
அருந்தவ ருள்ள நீங்கா வற்புதக் கூத்தி னானைப்
பொருந்தநன் கருள்செய் யாதி புராணனைப் புலவர் கோவைப்
பெருந்தமிழ் பயில்கா ரோணப் பிரானைநேர் கண்டு தாழ்ந்தார். 11

கு - ரை : மா தே - காரோணநாதர். அற்புதக் கூத்து - ஞானமா நடனம். புலவர் கோ - தேவதேவன்: சிலேடை நயம் காண்க. பெருந் தமிழ் - தேவாரத் திருமறை.

மனங்கரைந் துருக வோவா மழைவிழி பொழிய மேனி
இனங்கிள ருரோம மெல்லா மியைதரச் சிலிர்ப்ப வெண்ணும்
முனங்கதி தரவல் லானிம் மூர்த்தியித் தலங்கற் பத்துங்
கனங்கரை யாது வைகு மென்பது கருத்துட் கொண்டு. 12

கு - ரை : ஓவா மழை - நீங்காத மழைத்தாரைபோலும் கண்ணீர். கதி - முத்தியின்பம். கற்பத்தும் - கற்பாந்த காலத்தும். மனமுருகல், கண்ணீர் வார்தல், மயிர்சிலிர்த்தல் என்பன மெய்யடியார்க்குரிய மெய்ப்பாடுகள். கனம் - பெருமை.

தோகைக்கோர் பாக நல்குஞ் சுந்தரர் மதியஞ் சூடு
மோகைக்கா பாலி யாருக் குறையிட மாவ தென்றும்
நாகைக்கா ரோண மேயென் றருந்தமிழ் நவின்று போற்றி
மேகைக்கா மாங்குச் சின்னாள் விருப்பொடு மமர்ந்தா ரன்றே. 13

கு - ரை : தோகை - உமாதேவியார்க்கு. காபாலியார் - காபாலம் என்னும் கூத்தையுடைய சிவபெருமான். நாகைக்காரோணமே உறையிட மாவது என்று. ''புனையும் விரி'' ''கூனற் றிங்கட்'' என்னும் இரண்டு பதிகங்கள் பிள்ளையார் அருளியுள்ளவை. இத்தலத்துக்கு ஏழு திருப்பதிகங் கள் உள்ளன.

அருந்தமி ழதுமுற் பல்ல வறைந்துகா லங்க டோறும்
பொருந்தநன் கிறைஞ்சி மற்றைத் தலங்களும் புரிந்து போற்றிப்
பெருந்தவ ருடங்கு சூழப் பிறங்குநன் மருகல் சார்ந்து
மருந்தமோர் வணிக னீங்கி யுய்ந்திட வாய்ம லர்ந்தார். 14

கு - ரை : காலங்கள் தோறும் - பூசை நடைபெறும் காலங்களிலெல் லாம். புரிந்து - விரும்பி. பெருந்தவர் - மிக்க தவத்தையுடைய அடியார்கள். உடங்கு சூழ - உடன் சூழ்ந்துவர. மருகல் - திருமருகல். மருந்தம் - விடம்.

வற்கட மொழியுங் காறு மறையவர் வீழி மூதூர்
ஒற்கமில் பொற்கா செய்தி யுறுமிடி தவிர்த்து வைகி
அற்குநன் மறைக்கா டெய்தி யவிர்கத வம்பி ணித்துக்
கொற்கையந் துறைவன் மேய கூடலை யடைந்தா ரன்றே. 15

கு - ரை : வற்கடம் - பஞ்சம். வீழி மூதூர் - திருவீழிமிழலைத் தலம். மறையவர் வீழி என்றது அந்தணர் மிக்கிருந்தாராகலின். ஒற்கம் இல் - வாசியில்லாத; வட்டம்பெறாத. மிடி - வறுமை. மறைக்காடு - வேதாரணியம். கதவம் பிணித்து - திருக்கதவந்தாளிட்டு. கொற்கையந்துறைவன் - பாண் டியன். கூடல் - மதுரை; நான்மாடக் கூடல். ''ஈசன், மின்திகழ் சடையி னின்று நீங்கிய மேகம் நான்கும், குன்றுபோல் நிவந்து நான்கு கூடமாக் கூட லாலே, அன்றுநான் மாடக் கூட லானதான் மதுரை மூதூர்'' (பரஞ் சோதி திருவிளை).

கைதவன் மேனி வெப்பங் காற்றியா ரழலி லேடு
பெய்தத னுலர்தன் மாற்றிப் பெரும்புன னதியெ திர்த்திட்
டெய்தவங் கேடு போற்றி யமணரைக் கழுவி லேற்றிச்
செய்தவச் சைவ மொன்றே பொருளெனத் தேற்றி னாரால். 16

கு - ரை : கைதவன் - பாண்டியன்; நின்றசீர் நெடுமாறன். காற்றி - போக்கி. மேனிவெப்பம் - சுரநோய். பெரும்புனல் நதி - வைகை நதி. ஏடு எதிரேறச் செய்து. கழுவில் ஏற்றுவித்து. சைவம் ஒன்றே பொருள் - ''சைவ சமயமே சமயம்'', ''சைவத்தின்மேற் சமயமில்லை'' என்னும் செய்யுட் கள் சிந்திக்க. பொருள் - மெய்ப்பொருள். செய் தவச் சைவம் - ''புறச்சமய நெறி நின்றும் ... ... சைவத் திறத்தடைவர்'' (சித்தி 263).

வழுதிநா டடங்க வுள்ள தலமெலா மருவிப் போற்றிச்
செழுவிய கொள்ளம் பூதூர் சேவிக்கு மார்வ மெய்த
ஒழுகுறு முள்ளி வாய்நீ ரோடம்வாக் காலி யக்கிப்
பழுதக றெளிச்சே ரிக்கட் பாங்குற மேவுங் காலை. 17

கு - ரை: வழுதிநாடு - பாண்டி நாடு. அடங்க - முழுவதும். கொள்ளம் பூதூர் சோழநாட்டுத்தலம். முள்ளி வாய் - முள்ளியாற்றில்; வெட்டாறு என வழங்குகிறது; அகத்திய காவிரி எனவும் கூறுவர். ஓடத்தைப் பதிகம் பாடிச் செலுத்தி. அக்கரையில் சேர்ந்து: ''நாவலமே கோலாகக் கொண்டு'' ''கொட்டமே கமழுங் கொள்ளம் பூதூர்'' என்னும் திருப்பதிகம் பாடியருளியமை.

வழியொரு புத்தன் சென்னி மடிதர வுருமு வீழ்த்துக்
கழிபுகழ்த் தொண்டை நாடு கலந்தோத்தூர் மேய காலைப்
பழிதபு மொருவர் வேண்டப் பரவுமாண் பனைக ளெல்லாம்
ஒழிவருங் குரும்பை யீன வாய்மலர்ந் தொருசொற் பேசி. 18

கு - ரை: வழி - செல்லும் நெறிக்கண். மடிதர - அழிய. உருமு - இடி. உருமு வீழ்த்தது புத்த நந்தி தலையில்: திருத்தெளிச் சேரிச் சிவபெருமானை வணங்கிச் செல்லும் வழியில் என்க. ஓத்தூர் - திருவோத்தூர். ஆண் பனையைப் பெண்பனையாக்கியது. ஒழிவு அரும் - நீங்குதலில்லா. ஈன - காய்க்க. ஒரு சொல் - திருப்பதிகம்.

பரவைவெண் டிரைக்கை யாலே பவளமு முத்தும் வீசும்
உரவைநன் கமைபுன் னகை வொண்பொழின் மயிலை சார்ந்து
கரவையி லடியா ருள்ளங் களித்திட வுக்க வங்கம்
அரவைநே ரல்கு லாக வழகிய வாய்ம லர்ந்து. 19

கு - ரை: மயிலை - திருமயிலாப்பூர். அங்கம் - எலும்பு. உக்க - பொடியான. அரவை நேர் அல்குலாக - பூம்பாவையாக.

எண்ணருந் தலங்க ளெல்லா மினிதுறச் சென்று போற்றி
நண்ணருங் காழி மேவி நயந்துபல் லடியா ரோடுங்
கண்ணரும் பெருமை ஞான சம்பந்தர் களிப்பின் வைக
விண்ணாரும் விழையு மன்ற லாற்றுவான் விழைந்தா ரியாரும். 20

கு - ரை: கண்ண அரும் பெருமை - நினைத்தற்கரிய பெருமை. விண்ணாரும் - தேவர்களும். மன்றல் - திருமணம்.

பெருமண மூதூ ரெய்திப் பெண்பேசி யாரும் வேண்டப்
பெருமணப் பதுமப் பூந்தார்ப் பிள்ளையா ரெய்தி யாங்குப்
பெருமணஞ் செய்து காணப் பேணிவந் தடைந்தா ரோடப்
பெருமணப் பெருமான் பாதம் பெற்றின்பந் துய்த்தா ரன்றே. 21

கு - ரை: பெருமண மூதூர் - நல்லூர்ப் பெருமணம்; ஆச்சாபுரம். பெருமணம் - மிக்க வாசனை. பதுமப் பூந்தார் - தாமரை மலர்மாலை. பேணி வந்தடைந்தார் - விரும்பி வந்தடைந்தோர். அப்பெருமணப் பெருமான் - சிவபெருமான். இன்பம் துய்த்தார் - சிவபோக நுகர்ச்சியையடைந்தார்.

ஞானசம் பந்த மூர்த்தி நாகைக்கா ரோண மெய்தி
ஈனசம் பந்த நீங்கப் பாடிய திசைத்தா மெய்யோ
டானசம் பந்த நாவுக் கரசரு மாங்கு மேவி
ஊனசம் பந்த நீங்கப் பாடிய துரைப்பா மன்றே. 22

கு - ரை: ஈன சம்பந்தம் - சைவ சமயமல்லாத புன்சமயத் தொடர்புகள். பாடியது - திருப்பதிகம் அருளிச் செய்தமை. மெய்யோடு ஆன சம்பந்தம் - உண்மைப் பொருளான சிவபெருமானேடுள்ள தொடர்பு; சீவன் முத்தி நிலை. ஊன சம்பந்தம் நீங்க - உடம்போடுகூடிய தொடர்பு நீங்குமாறு. பாடியது - திருப்பதிகம் பாடியருளிய திறம்.

ஞானசம்பந்தப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2349

ஐம்பத்தேழாவது

வாகீசப்படலம்

பந்தமில்பன் முனிவரருஞ் சூதமுனி பதம்போற்றி
யந்தமில்சீர்த் திருநாவுக் கரசராய் பல்வளமும்
நந்தமிகு புகழ்படைத்த நாகைக்கா ரோணத்து
வந்தமலற் பாடியதை வழங்கெனமற் றவனுரைக்கும். 1

கு - ரை : பந்தம் இல் - பாசக்கட்டுகளில்லாத. பல் முனிவர் - நைமிச முனிவர். திருநாவுக்கரசு நாயனர். பல் வளமும் நந்த - பலவகையான வளப்பங்களும் மிக. வந்து அமலற் பாடியதை - வந்து தரிசனம் செய்து சிவபெருமான்மீது தேவாரத்திருப்பதிகம் பாடிய வரலாற்றை.

முக்கணிறை தளிசெறியு முனைப்பாடி வளநாட்டின்
மிக்கதிரு வாமூரில் வேளாளர் பெருங்குலத்துத்
தக்ககொறுக் கையரதிபர் புகழனர் பாற்சைவத்
தக்கமெனத் திலதவதி யார்பின்னை வ தரித்தனரே. 2

கு - ரை : முக்கண் இறை தளி - சிவபெருமான் திருக்கோயில்கள். திருமுனைப்பாடி நாடு. திருவாமூர், வேளாளர், கொறுக்கையர்குடி, புகழனர் பால். சைவத்து அக்கம் என - சைவத்தின் கண்போல. திலதவதியாரின் தம்பி. ''அலகில்கலைத் துறைதழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ, உலகில் வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர் போற்பின், மலருமருள் நீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார்'' (திருநாவுக் - புராண - 18).

வள்ளலரு ளாலுதித்தார் மருணீக்கி யாரெனும்பேர்
எள்ளலடை யாமலடைந் தினியகலை பலகற்று
விள்ளலற மேவுநாள் விமலனரு ளாமையினல்
உள்ளல்குறி யாவமணர் சமயத்தி னுட்புகுந்தார். 3

கு - ரை : வள்ளல் - சிவபெருமான். பிள்ளைத் திருநாமம் மருணீக்கியார் என்பது. விமலன் அருளாமையினல்; விமலன் - சிவபெருமான். உள்ளல் குறியா - நினைத்தலும் செய்யாத. அமணர் - சமணர்: ''நம்பரருளாமையினற், கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயங் குறுகுவார்'' (திருநாவு - புராண - 37).

தௌவையார் பற்றெழியத் திருவதிகைத் தலஞ்சார்ந்து
செவ்வையார் பணிசெய்வார் சிவபெருமான் திருமுன்னர்
கவ்வையா ரமண்சமயங் கைவிட்டுத் தம்பியார்
இவ்வையார் திருச்சமய மெய்தவருள் புரியென்பார். 4

கு - ரை: தௌவையார் - தமக்கையார். திருவதிகைத்தலம். கவ்வை ஆர் - ஆரவாரம் மிக்க; பழிச்சொல்மிக்க எனினுமாம். திருச்சமயம் - சைவ சமயம்.

ஊழிமுத லருள்சூலை யுடற்றுதலா லமணர்செறி
பாழிமிகப் படைத்திருந்த பாடலிபுத் திரநீங்கி
வாழியதி கையிற்றிலத வதியார்தாள் வந்திறைஞ்சி
யாழிவிட மயின்றபிரான் வெள்ளியநீ றவாய்த்தரித்தார். 5

கு - ரை: சூலை - சூலைநோய். உடற்றுதலால் - வருத்துதலால். அமணர் செறிபாழி - அமணர்களின் குகை, சமணர்கள் தங்குமிடம், அவர்கள் தவஞ்செய்யும் குகை. ''அமணர் சேரும் பாழியு மருகன் மேவும் பள்ளியும்'' (பெரியபுரா - திருஞான - 871); ''எங்கு மமணர் பாழிகளாய்'' (பெரிய- தண்டியடிகள் - 4). பாடலிபுத்திரம். அதிகையில் - திருவதிகை வீரட்டத்தில். ஆழி விடம் - திருப்பாற் கடலில் தோன்றிய ஆலகால விடம். அவாய் - விரும்பி.

அண்ணலார் திருமுன்ன ரணைந்துபணிந் தெழுதரலும்
நண்ணலார் கொடுஞ்சூலை நசித்ததுகூற் றாயினவென்
றுண்ணலார் திருப்பதிக மோதினு ரவரருளால்
எண்ணலார் திருநாவுக் கரசரெனும் பெயரேற்றார். 6

கு - ரை: அண்ணலார் - சிவபெருமான். நண்ணல் ஆர் - பொருந்துதல் மிக்க; 'வயிற்றோடு துடக்கி முடக்கி எழ' என்றமை காண்க. கூற்றாயின என்று - 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்னும் திருப்பதிகம். அவர் அருளால் - வீரட்டானேசுவரர் திருவருளினல்; திருநாவுக்கரசர் எனும் பெயர் பெற்றார்.

இடையயரு வன்புமனத் தெழுதலா லுழவாரப்
படையயருத் திருக்கையும் பாட்டருச் செவ்வாயும்
மடையயரு தொழுகுபுனன் மழையயரு நோக்கமுநன்
னிடையயருப் பெருந்துறவு மாய்ப்பொலிந்தார் நாவரசர். 7

கு - ரை: இச்செய்யுள் ''இடையயருப் பேரன்பும் மழைவாரு மிணை விழியும்'' என்னும் காஞ்சிப்புராணச் செய்யுளை அடியொற்றி யெழுந்தது காண்க. (கடவுள் வாழ்த்து). பாட்டு - தேவாரத் திருப்பதிகம். நோக்கமும் -

கண்களும்: "தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்" (பெரிய - திருநாவுக் - 140).

புண்ணியநா வுக்கரச ரிவ்வாறு பொலிவதனை
எண்ணியவெஞ் சமண்கைய ரியற்றுநீற் றறையிருந்தும்
கண்ணியவெவ் விடநுகர்ந்துங் கடகரியைப் புறங்கண்டுந்
திண்ணியகல் லொடுகடலை நீந்தியுமேன் மேற்சிறந்தார். 8

கு - ரை: வெஞ் சமண் கையர் - கொடிய சமணர்களாகிய கீழோர். நீற்றறை - சுண்ணாம்புக் காளவாய். வெவ்விடம் - கொடிய நஞ்சு. கடகரியை - மதயானையை. கல்லோடு கடலில் மிதந்தும்.

பெருந்திருப்பா திரிப்புலியூர்ப் பெம்மானை யடிபணிந்தே
அருந்தமிழ்நா வுக்கரச ரதிகைமீட் டும்பணிந்து
பொருந்தியவண் டுங்கானை மாடத்திற் புக்கிறைஞ்சி
இருந்திறற்சூ லமும்விடையு மிருதோளு முறப்பெற்றார். 9

கு - ரை: திருப்பாதிரிப்புலியூர்ப் பெம்மான் - பாடலேசுவரர். திருத்தூங்கானைமாடம். சூல முத்திரையும் இடப முத்திரையும் இருதோள்களிலும் பொறிக்கப் பெற்றார்.

ஆறைவட தளியமண ராயிரரு மறமாய்த்துச்
சேறைமுதற் றலங்களெலாஞ் சென்றேத்திக் கழனிதொறும்
நூறைபயி றிங்களூர் நோற்றவருந் தவரடைந்து
கூறைதிசை யாரருளாற் கொடுவிடமோர் மகற்கொழித்தார். 10

கு - ரை: ஆறைவடதளி - பழையாறை வடதளி. ஆயிரம் அமணர்களையும் அடியோடு தொலைத்து. சேறை - திருச்சேறை. கழனி - வயல். நூறை - மலங்குமீன். திங்களூர். கூறை திசையார் - ஆடையாகத் திசையினையுடையார். ஓர் மகற்கு - அப்பூதியடிகள் நாயனாருடைய புத்திரனுக்கு.

பொல்லாவற் கடகாலம் போமளவும் வீழிநகர்
நல்லாத ரவினமர்ந்து நாடொறும்பொற் காசுபெற்றுச்
சொல்லாரு மறையடைத்த தூயகத வந்திறந்து
பல்லாருஞ் சூழ்ந்தேத்தப் பஃறலமும் போய்த்தொழுவார். 11

கு - ரை: வற்கடகாலம் - பஞ்சகாலம். திருவீழிமிழலையில் நாடோறும் பொற்காசு பெற்று, திருமறைக்காட்டில் வேதங்களால் பூட்டப்பட்டிருந்த திருக்கதவந் திறக்கப் பாடிப் பலதலங்களிலும் சென்று தொழுவார்.

வீதிதொறுந் துராலகற்றி மேயநறும் புனறெளித்துச்
சோதிசெய்கா வணம்புரிந்து தோரணமா திகளியாத்துப்
பாதிமதி புனைந்தபரம் பரனுகைக் காரோணத்
தோதியுணர்ந் தவரெதிர்கொண் டுறப்போற்ற வெதிர்போற்றி. 12

கு - ரை : துரால் - குப்பை. காவணம் - பந்தர். யாத்து - கட்டி. பரம்பரன் - சிவபெருமான். ஓதி உணர்ந்தவர் - கற்றுத்துறைபோய அநுபூதிமான்கள். உணர்தல் - அநுபூதியில் உறைத்து நிற்றல். உணர்தல்வேறு, அறிதல் வேறு.

நெருங்குபல வடியரொடு நீலநெடுங் கண்ணியார்
மருங்குதழு வுறவமரு மாதேவர் கழல்பணிந்தே
யொருங்குதல விசேடமெலா முணர்ந்துதிரு வாய்மலர்வார்
அருங்குரைத்தென் றியாவர்களு மதிசயிக்குந் திருப்பதிகம். 13

கு - ரை : நீல நெடுங் கண்ணியார் - கருந்தடங் கண்ணம்மை. மாதேவர்-காரோணநாதர். அருங்குரைத்து-அருமையுடைத்து; "அளிதோ தானே அது பெறலருங் குரைத்தே" (புறநானூறு - 5); இஃது இசைநிறை (தொல் - இடை - சூ 24 - சே, பேர், ந); "என்றிசினோர், பெறலருங் குரைத்து என்பன போலச் செய்யுண் முடிபுபெற்று நின்றதென்றலே பொருத்த முடைத்து" (தொல் - எச்ச - சூத் 1 - சே); குரையென்னும் அசைநிலை இடைச்சொல் வந்துள்ள தொடர்மொழிக்கு இது மேற்கோள்; (நன் - மயிலை - சூத் 440; நன் - விருத்தி - சூத் 441).

திருநாவுக்கரசு நாயனர் திருப்பதிகம்: திருநேரிசை 1, திருவிருத்தம் 1, திருக்குறுந்தொகை 1, திருத்தாண்டகம் 1, ஆக 4.

கற்பநீ றணிபெருமான் காரோணத் தலமொன்றே
கற்பநா ளினுமழியாக் காட்சியுற லாற்பலவி
கற்பமாத் தலத்தமருங் கடவுளர்யா வரும்புகுவார்
கற்பயா வருமிதன்சீர் காணலா மெனப்புகல்வார். 14

கு - ரை : கற்ப நீறு: கற்பம், அனுகற்பம், உபகற்பம் என மூன்று வகைப்படும். இதனை, தணிகைப்புராணம் - இராமனருள் - 15, 16 செய்யுட்களால் அறிக. கற்பநீறணி பெருமான் - சர்வசங்கார காலத்தில் எழுந்த நீற்றையணியும் சிவபெருமான். கற்பநாளினும் - கற்பகாலத்தினும். பலவிகற்பமா - பலவிகற்பங்களாக. இதன் சீர் கற்பக் காணலாம்.

முந்தியசெய் யுளிற்பழன முதலாகத் தலமூன்றும்
பிந்தியதில் வீரட்ட மெட்டனெடு பிறமூன்றும்
நந்தியமூன் றினின்மறைக்கா டாதியா நயந்தேழும்
வந்தியல வொருநான்கி னம்பர்முதல் வருமூன்றும். 15

கு - ரை : முந்திய செய்யுளில் - திருத்தாண்டகத்து முதற்பாடலில் பழனம், பருப்பதம், பைஞ்ஞீலி என்னும் மூன்று சிவதலங்கள் போற்றப் பெற்றன. இரண்டாவதில் வீரட்டானம், பெரும்பற்றப் புலியூர், அண்ணு மலே, ஆரூர் என்பன போற்றப் பெற்றுள்ளன. வீரட்டம்- அட்டவீரட்டமாம். கண்டியூர் - பிரமன் சிரத்தைக் கொய்தது, கடவூர் - காலனை யுதைத்தது, அதிகை - திரிபுரத்தை எரித்தது, வழுவூர் - யானையை யுரித்தது, பறியலூர் - தக்கன் வேள்வியைத் தகர்த்தது, கோவலூர் - அந்தகாசுரனை அழித்தது, குறுக்கை - காமனை எரித்தது, விற்குடி - சலந்தராசுரனை அழித்தது ஆகிய வீரச்செயல்களைச் சிவபெருமான் செய்தருளிய இடங்களாம் என்க. அடைவு திருத்தாண்டகம் இரண்டாவது பாடலில் அட்டவீரட்டங்களையும் வகுத் தருளியமை காண்க. ''பூமன் சிரங்கண்டி'' என்னும் பழம் பாடலொன்றும் இதனை எடுத்துக்கூறும். பிந்தியது என்றது இரண்டாம் செய்யுளை. மூன்ருவதில்: திருமறைக்காடு, வாய்மூர், கீழ்வேளூர், வலிவலம், தேவூர், ஒற்றியூர், நாகைக்காரோணம் என ஏழு தலங்கள் போற்றப் பெற்றன. நான்காம் பாடலில்: அம்பர் - திருப்பாச்சிலாச்சிராமம்; அம்பர் எனவே அம்பர்ப் பெருந்திருக்கோயிலும், அம்பர்மாகாளமும் என இரண்டுடன் ஆச்சிராமமும் கொள்ள மூன்ருயிற்று.

நாறுசுவை யைந்தகத்து நல்லூர்மு னோரிரண்டும்
ஆறுபெறப் புகலிமுத லாயதல மொருமூன்றும்
ஏறுபுகழ் மிகுமேழி லேற்றசிராப் பளியொன்றும்
விறுதரு மிருநான்கின் விளங்கவே கம்பமொன்றும். 16

கு - ரை : நல்லூர் முன் ஓரிரண்டு - நல்லூர், மருகல் என்பன ஐந்தாவது பாடலில் போற்றப் பெற்றன. ஆருவதில்: புகலி, காவிரிப்பூம் பட்டினம், புன்கூர் என்னும் மூன்றும் போற்றப் பெற்றுள. ஏழாம் பாடலில்: சிராப்பள்ளி ஒன்று. இருநான்கின் - எட்டாம்பாடலில்: ஏகம்பம் ஒன்றே.

மருவியவொன் பதிற்சோற்றுத் துறையாதி வயங்கிரண்டுந்
திருவியல்பத் தினில்விதந்து செப்பாத தலமனைத்தும்
பொருவரிய பன்னொன்றிற் பாம்புரமுற் பொருந்திரண்டுங்
கருவரிய பெருந்தகையார் காதலிற்சேர்த் தருளினர். 17

கு - ரை : ஒன்பதில்: சோற்றுத்துறை, மியச்சூர் என்னும் இரண்டு தலங்கள் போற்றப்பெற்றன. பத்தினில் - பத்தாம் பாடலில். விதந்து - பிரித்து. பிரித்துச் சொல்லப்படாத தலங்கள் எல்லாம். பதினொன்றில்: பாம்புரம், நின்றியூர் என்றதலங்கள் இரண்டும். கரு அரிய பெருந்தகையார் - பிறத்தலொன்றுமில்லாத திருநாவுக்கரசு நாயனர்.

இன்னதிருப் பதிகமுதற் பலபதிக மெடுத்தோதிச்
சொன்னபுகழ் நாவரசர் சூழடியர் குழாத்தோடும்
அன்னதலத் திடைச்சிலநா ளமர்ந்தருள்பெற் றப்பாலும்
பன்னவரி யாரமருந் தலம்பலவும் பரவுவார். 18

கு - ரை : இன்ன - இப்படிப்பட்ட. அன்ன தலத்திடை - திருநாகைக் காரோணத்தில். அப்பாலும் - அதன்பின்பும். பன்ன அரியார் - 'இன்ன தன்மையன்' என்று சொல்லுதற்கு அரிய சிவபெருமான்.

எண்ணரிய தலமனைத்து மெய்தியுரு கிப்பணிந்து
கண்ணரிய வையாற்றிற் கயிலாயந் தரிசித்து
விண்ணரிய தென்னுமன் மிகச்சிறந்து தவமிலார்
நண்ணரிய திருப்புகலூர் நாதரைச்சார்ந் தின்புற்ருர். 19

கு - ரை : எண்ணரிய - அளவில்லாத; எண்ணுதற்கும் அரிய. கண்ணரிய - நினைப்பதற்கரிய. விண் அரியது - விண்ணுலகம் அருமையுடையது. திருப்புகலூரில் சிவபெருமான் திருவடியில் நாயனர் கலந்து இன்புற்ருர்.

ஆன்றதவத் துயர்முனிவ ராகியநா வுக்கரசர்
சான்றவர்சேர் திருநாகைக் காரோணத் தலஞ்சார்ந்து
தோன்றவருள் பெற்றதிறஞ் சொற்றனஞ்சுந் தரரடைந்து
தேன்றருசெந் தமிழ்பாடிப் பரிசுபெறு திறம்புகல்வாம். 20

கு - ரை : ஆன்ற - அகன்ற. முனிவராகிய நாவுக்கரசர்; "வருஞானத் தவமுனிவர் வாகீசர்" (பெரிய - திருநாவுக் - 1.) ஆளுடைய பிள்ளையாரும், "பிரமா புரத்து மறைஞான ஞானமுனிவன்" எனவும்; வாதவூரடிகளும், "திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்" எனவும் வழங்கியது காண்க. சான்றவர் - அறிவுடையோர். சுந்தரர் - சுந்தரமூர்த்தி நாயனர். பரிசு - வெகுமதிகள்.

வாகீசப்படலம் முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் — 2369

ஐம்பத்தெட்டாவது

சுந்தரப்படலம்

முனிவரர் சூத மேலோன் முண்டக மலர்த்தாள் போற்றி
நனியருள் பொழிந்து மேவு நாகைக்கா ரோண மெய்திப்
பனிமலர்த் தொடையா லால சுந்தரர் பரிசு பெற்ற
புனிதமாங் கதையோ தென்னப் புரிந்தவன் புகல லுற்றான். 1

கு - ரை: முண்டக மலர் - தாமரைப்பூ. பனி மலர்த் தொடை - குளிர்ந்த மலர் மாலை. ஆலால சுந்தரர் - ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார். பரிசு - வெகுமதி. புரிந்து - விரும்பி. அவன் - சூதமுனிவர்.

திருமுனைப் பாடி நாட்டிற் றிகழ்திரு நாவ லூரில்
அருமறை யாதி சைவ ராகிய சடைய னார்பாற்
பொருவருங் கயிலை நின்றும் பூரண ரருளா லின்பம்
பெருகவ தாரஞ் செய்தா ராரூர ரெனும்பேர் பெற்றார். 2

கு - ரை: திருமுனைப்பாடி நாடு, திருநாவலூர், ஆதிசைவர், சடைய னார்பால் - சடையனாரிடத்து. பொருவரு கயிலை - ஒப்பற்ற கயிலாயமலை. பூரணர் - சிவபெருமான். ஆரூரர் என்னும் பேருடன் ஆலாலசுந்தரர் அவதரித்தார். இன்பம் பெருக - பேரின்ப நுகர்ச்சி மிக.

மருவநூன் மார்பிற் பூண்டு மாண்கலை பலவுங் கற்றுத்
திருமறை யவர்கள் சூழ மணம்வந்த புத்தூர் சேர்ந்தே
பொருவரும் வெண்ணெய் நல்லூர்ப் புனிதனா ரோலை காட்டிப்
பெருவழக் காடி வெல்ல வன்றொண்ட ரெனும்பேர் பெற்றார். 3

கு - ரை: பூணு நூற் சடங்கு பெற்று, கலை பல கற்று, அந்தணர்கள் சூழ மணம்வந்த புத்தூரைச் சேர்ந்து. வெண்ணெய் நல்லூர்ப் புனிதனார் - சிவபெருமான். பெருவழக்கு - மிகுந்த வழக்கு. வன்றொண்டர்.

புகழ்திருத் துறையூர் சார்ந்து புலனொன்றப் பாடிப் பெற்றுத்
திகழ்திரு வதிகை மேவிச் சேவடி சென்னி சூடி
அகழ்வினை யாரே போற்று மம்பலத் தாடல் போற்றி
இகழ்தலி லாரூர் மேவிப் பரவையா ரின்பந் துய்த்தார். 4

கு - ரை: திருத்துறையூர். புலன் ஒன்ற - புலன்கள் பொறிவாயிலிற் செல்லாமல் பொருந்துமாறு. திருவதிகை. திருவடி சூட்டப்பெற்று. அகழ் வினையார் - போக்கிய வினையாளர்; வினைகளைப் போக்கிய மெய்யடியார். அம்பலத்து ஆடல் - திருச்சிற்றம்பலத்திலே செய்யும் பஞ்சகிருத்திய தாண்டவம். ஆரூர் மேவி - திருவாரூரை அடைந்து. ஆர் - பிருதிவி: ஆரூர் - பிருதிவித்தலம். பரவை நாச்சியாரிடத்து இன்பம் நுகர்ந்தார்.

ஒருவிறன் மிண்டர் வன்மை யுறுமொழி செவியி னேற்று
வெருவருங் கடல்சூழ் வைப்பின் மிடையுயி ருய்யு மாறு
பொருவரும் பெருமான் வாக்கு முதலெடுத் தருளப் போற்றிச்
சுருதியே யென்னுந் தொண்டத் தொகையினி தருளிச் செய்தார். 5

கு - ரை: ஒரு விறல் மிண்டர் - ஒப்பற்ற விறல்மிண்ட நாயனர். வன்மையுறு மொழி - ''சிவனு ரடியார் திருக்கூட்டம், பேணு தேகு மூரனுக்கும் பிரானுந் தன்மைப் பிறை சூடிப், பூணு ரரவம் புனைந்தார்க்கும் புறகென் றுரைக்க'' (பெரியபு - விறன்மிண் - 8). வெருவரு - அச்சமிக்க. கடல்சூழ் வைப்பு - நிலவுலகம். உயிர் உய்யுமாறு - ஆன்மாக்களெல்லாம் ஈடேறும் படி. பொருவரும் பெருமான்வாக்கு முதல் எடுத்தருள - சிவபெருமான் 'தில்லைவாழந்தணர்கள் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுக்க. சுருதி - வேதம். திருத்தொண்டத் தொகையை அருளிச்செய் தார். ''முன்னம் ஒருசொல்லை முதல்வன் சொலவொருவன், சொன்னதிருத் தொண்டத்தொகையெல்லாம்'' (திருவாரூ நலா - 458).

குண்டையூர் பெருமான் மேய கோளிலீச் சரம்ப ணிந்து
குண்டையூர் நெல்ல னைத்துங் குலவாரூர் வரவ ழைத்துத்
தொண்டையா தரித்து மேன்மேற் றலமெலாந் தொழுது செவ்வாய்த்
தொண்டையார் பரவை யாரோ டின்பந்துய்த் திருப்பா ரானர். 6

கு - ரை: கோளிலீச்சரம் - திருக்கோளிலி என்னும் தலம். 'குண்டையூர் பெருமான் மேய' என்றமையின் ஊர் குண்டையூர் எனவும், கோயில் கோளிலீச்சரம் எனவும் கொள்ள நிற்பதுகாண்க. குண்டையூர்க் கிழவர்பால் ஆரூரர்க்குத்தந்தநெல்லை எடுப்பிக்க அருகிலுள்ள கோளிலிநாத ரிடம் விண்ணப்பித்து ஆரூரில் சுந்தர மூர்த்தி நாயனர் வரவழைத்தனர். தொண்டு - திருத்தொண்டு. செவ்வாய்த் தொண்டை - சிவந்தவாயாகிய தொண்டைக்கனி.

திருப்புக லூரின் மேவிச் செங்கல்பொன் னாகப் பெற்று
விருப்பமர் முதுகுன் றெய்தி மேதகு பதிகம் பாடிப்
பருப்பதச் சிலையார் நல்கும் பளகில்பொன் னாற்றிட் டாரூர்
மருப்பது மஞ்சூழ் தெய்வ வாவியி னெடுத்த பின்றை. 7

கு - ரை : திருப்புகலூரில் இறைவரருளால் செங்கல் பொன்னாகப் பெற்றமை. முதுகுன்று - பழமலை=விருத்தாசலம். பருப்பதச் சிலை - மேரு மலையாகிய வில். பளகு இல் - குற்றமில்லாத. பொன் - பன்னிரண்டா யிரம் பொன். ஆற்று இட்டு - சிவபெருமான் அசரீரியாக மொழிந்த கட்டளை யின்படியே மணிமுத்தாநதியிலே போகட்டு. ஆரூர்த் தெய்வ வாவி - கோயிலின் மேல்பாலுள்ள கமலாலய தீர்த்தம். பின்றை - பின்பு.

எண்ணருந் தலங்க ளெல்லா மெய்துபு பணிந்து பாடிக்
கண்ணகன் றொண்டை நாடு கலந்தொற்றி யூரை மேவிப்
பண்ணமை மொழியி னார்சங் கிலியார்தோள் பரிவிற் புல்லி
ஒண்ணல மருவி யாங்கே யுறைந்தனர் சின்னா ளம்மா. 8

கு - ரை : எய்துபு - எய்தி. தொண்டைநாடு, திருவொற்றியூர். சங் கிலியார் - சங்கிலி நாச்சியார். பரிவில் புல்லி - அன்பினால் அணைந்து.

அணிமதி லந்த ணாரு ரடைந்தபின் பரவை யார்தந்
தணிவருங் கோபங் கண்டு தாங்கரும் வருத்தம் பூண
மணிமருள் கண்டத் தெண்டோள் வள்ளலே தூது சென்று
பணிசெயற் குரிமை செய்யப் பராயின்ப நுகர்ந்து வாழ்நாள். 9

கு - ரை : தணிவு அரும் கோபம் - தணிதலில்லாத கோபம். மணி - நீலமணி. எண்டோள் வள்ளல் - சிவபெருமான். பராய் - பரவி.

குரவமர் கூந்த லார்தங் கொடைக்குறை யறுப்பா னெண்ணிப்
பரவுவார் குருடுங் கூனும் பாற்றிய நாவ லூரர்
அரவமே கலையார் பாட லாடனீங் காதா யென்றுங்
கரவர்சே ராத நாகைக் காரோணங் கருதி வந்தார். 10

கு - ரை : குரவு அமர் கூந்தலார் - பரவையார். கொடைக்குறை - கொடுத்தலாலாகிய குறையை; எனவே வேண்டிய வேண்டியாங்குக் கொடுத்தற் பொருட்டு என்க; விருப்பப்படி நல்க. பரவுவார் குருடும் கூனும் பாற்றிய - தொண்டு செய்வோருடைய குருட்டுத் தன்மையையும், உடற்கூனையும் போக்கியருளிய. நீங்காதாய் - நீங்கப்பெறாததாய். கரவர் - வஞ்சகர். நாகை - நாகபட்டினம். காரோணம் - காயாரோகணம்: கோயிலின் பெயர்.

ஓங்குகா ரோண மேய வடியவ ரொருங்கு கூடிப்
பாங்குசா னகர முற்றும் பண்புற வலங்க ரித்து
வீங்குபே ருவகை யோடு மெதிர்சென்று விருப்பிற் போற்றி
வாங்குபேற் றழைப்பத் தாமும் போற்றுபு மகிழ்ந்து வந்தார். 11

கு - ரை : பாங்கு சால் நகரம். அடியவர் ஒருங்கு கூடி - திருத் தொண்டர்கள் ஒருசேரத் திரண்டுவந்து. வாங்குபு ஏற்று அழைப்ப.

அருண்மலி கருந்த டங்க ணம்மையோர் பாக மேவப்
பொருண்மலிந் தமரு மாதி புராணரைக் கண்டு போற்றித்
தெருண்மலி சிந்தை வேட்ட பொருளெலாந் தெளியத் தேற்றி
வெருளறுஞ் சுவைத்தேந் தீஞ்சொற் பதிகமேல் விளம்ப லுற்றார். 12

கு - ரை : தெருள்மலி சிந்தை - தெளிந்த மனத்தில். வேட்ட பொருளெலாம் - விரும்பிய பொருள்கள் எல்லாவற்றையும். வெருள் அரும் சுவை- வெறுத்தலில்லாத சுவையினையுடைய. தேம் தீஞ் சொற் பதிகம் - தேவாரத் திருப்பதிகம்.

பத்தூர்புக் கென்ற பாட்டிற் றோழமைப் பண்பு கூர
முத்தூர்வெண் ணகையுட் டோன்றப் பல்வகை மொழிந்து போற்றிக்
கொத்தார்முத் தார வைரக் கோவைபூண் டிடுமா தந்து
கத்தூரி சாந்து பூசக் கனிந்தினி தருள்க வென்றும். 13

கு - ரை : "பத்தூர் புக்கு" என்றது முதற்பாட்டு: இப்பதிகம் பண் - கொல்லிக் கௌவாணம். முதலிரண்டடிகளில் தம்முடை தோழமைத்தன்மை மிக, நகையாடுதல் போலப் பல சொல்லிப்போற்றி, முத்தாரம் வைரக் கோவை இவைகளை அணிந்துகொள்ளுமாறு தந்தருளி, மேனியில் பூச இனிய வாசனை வீசும் கத்தூரி சந்தனம் அருண்மிக அருளுக என்றார். கொத்து ஆர் முத்தாரம் - கொத்தாகப் பொருந்திய முத்துமாலை. பூண்டிடுமா - அணிந்துகொள்ளுமாறு.

வேம்பினோ டென்ற பாட்டில் விருத்திநான் வேண்ட வேணி
பாம்பினோ டலங்கக் காட்டிப் பகட்டவொட் டுவனோ வொட்டேன்
சேம்பினோ டரத்தஞ் சூழ்நீர்த் திருவாரூ ரிருந்தீர் நீரே
காம்புநேத் திரமும் வேண்டுங் கனிந்தருள் செய்க வென்றும். 14

கு- ரை : 'வேம்பி னோடு' இது பதிகத்தின் இரண்டாவது பாட்டு. விருத்தி - பிழைப்பு. வேணி - சடை. அலங்க - அசையும்படி. பகட்ட - பசப்புச் செய்ய. ஒட்டுவனோ - உடன்படுவேனோ. ஒட்டேன் - உடன்படேன். சேம்பு - நீரிலுள்ள சேம்பு. அரத்தம் - செங்கழுநீர். திருவாரூரில் இருந்தவராகிய நீரே. 'காம்பு என்றும், நேத்திரம் என்றும் சொல்லப்படும் பட்டாடை வகைகள்; "பட்டுவர்க் கத்தி னுமம் பாளிதம் கோசி கம்பேர், பட்டு நேத் திரமாங் காம்பு படுமதன் விகற்ப நாமம்" (சூடாமணி நிகண்டு). கனிந்து - இரங்கி.

பூண்பதோ ரென்ற பாட்டிற் பொல்லாத வேடங் கொண்டு
பாண்பேசித் தலைக்க லத்துப் பலிகொள்கை தவிரீ ரந்தோ
வீண்பேசி மடவார் செங்கை வெள்வளை கோட லாமோ
காண்பாரு மாட மல்குங் காரோணத் தமர்ந்தீ ரென்றும். 15

கு - ரை: 'பூண்பதோர்' என்ற பாட்டு மூன்றுவது. பொல்லாத வேடம் - விரும்புதலில்லாத வேடம்; அது ஆமையோடு தரித்தல், விடையி லேறுதல் என்ருர். பாண்பேசி - இசைபாடி. தலைக்கலம் - பிரமகபாலம். பலிகொள்கை - பிச்சையெடுத்தல். தவிரீர் - நீங்கமாட்டீர். வீண் பேசி - வீணான சொற்களைச் சொல்லி; பிச்சை யேற்றற்குரிய சொற்களைக்கூருது வேறுவார்த்தைகளைக் கூறி. இதனை, வளையல் விற்றபடலம் 6 முதல் 11 வரை யுள்ள செய்யுட்களிற் காண்க. (பரஞ்சோதி - திருவிளை). வளை கோடல் - வளையல்களைக் கொள்ளுதல். காண்பு ஆரும் மாடம் மல்கும் "காண்பினிய மணி மாட நிறைந்தநெடு வீதி" (தேவா).

விட்டதோ ரென்ற பாட்டி லடிமைவீ ணுகந்தீர் பொல்லாத்
துட்டவான் பேய்க ளெல்லாஞ் சூழ்தர நடித்துச் செம்பொன்
வட்டவார் குழன்மின் ஞர்க்கு மயல்செய்வீர் வாட்டந் தீரக்
கட்டிநல் குவதெப் போது கனிந்தருள் செய்வீ ரென்றும். 16

கு - ரை: விட்டதோர் என்ற பாட்டு பதிகத்தில் நான்காவது. அடிமைகளை வீணுக நீர்வைத்துக்கொண்டீர். பொல்லாத் துட்டவான் பேய்கள் - கொடிய பேய்கள். சூழ்தர - சூழ. வட்டமாக முடிக்கப்படும் கூந்தலை யுடைய பெண்கள்; மின்னுர்க்கு - பெண்களுக்கு. வாட்டம் - வருத்தம். கட்டி - பொன்கட்டி; கட்டியாகப் பொன் என்க.

மிண்டாடி யென்ற பாட்டில் வினைக்கேடு சொல்ல வல்லீர்
தொண்டாடித் திரிவே னுக்குத் தொழும்பேற்று வீர்செஞ் சாந்தும்
பண்டாரத் தாடை யோடா பரணமும் பிரமா ணத்தாற்
கண்டார்க்கொல் லீர்நி மிர்ந்தீர் கனிந்தருள் செய்வீ ரென்றும். 17

கு - ரை: மிண்டாடி என்ற பாட்டு, பதிகத்திலே ஐந்தாம் பாடல். வினைக் கேடு - காரியக் கேடு. மிண்டு - வன்கண்மை. 'ஆடலே பெண்ணுண் கூடல் வார்த்தை கூத்தாடல் வென்றி' : ஆடி - பேசி. தொழும்பு - தொண்டுகள், பணிகள். தலைக்கு ஏற்றும் - தலையிற் சுமத்தும். 'சுந்தரனே' என்றது 'சுந்தரவிடங்கர்' என்னும் குறிப்புத்தோன்ற நின்றது. பண்டாரம் - கருவூலம். உமது சரக்கறையினின்று கந்தம் ஆடை ஆபரணம் முதலியவற்றை இரங்கிக் கொடுத்தருளும். கனிந்து - மனமிரங்கி. 'கண்டார்க்கு ஒல்லீர்;' கண்டார்க்கும் காண்பரிதானவர் என்றபடி. கண்டார்க்கும் - காணலுற்ருராகிய பிரம விஷ்ணுக்களுக்கும் அரிதானவர் என்றமைகுறித்தது. கண்டார் - ஆன்மபோதத்தால் காணலுற்ருர் ஆகலின் காண்பதற்கு அரிதாயினர்.

இனி, 'உணர்ந்தார்க் குணர்வரியோன்' என்பதற்குப் பேராசிரியர் உரை நோக்கியும் உணர்க.

இலவவென் றுரைக்கும் பாட்டி லெருதேறிப் பிச்சை கொள்வான்
பலவில்புக் குழலா நிற்பீர் பட்டொடு நறிய சாந்த
நலமிக வருட ராத பரிசெவ னவிலல் வேண்டுங்
கலவமா மயிலார் செல்வக் காரோணத் தமர்ந்தீ ரென்றும். 18

கு - ரை: இலவ என்று - 'இலவவிதழ் வாயுமையோடு' என்ற ஆருந் திருப்பாட்டு. உமையோடு எருது ஏறிப் பிச்சை கொள்வான்; கொள்வான் - கொள்ளும்பொருட்டு. உழலா நிற்பீர் - திரிவீர். உமையோடு என்னும் குறிப்பு உமை இமைய மலையரையன் மகள், அவளையும் உடன்கொண்டு பிச்சைக்குப் பல இல்லங்களில் சென்று திரியலாமா என்றபடி. பட்டொடு நறிய சாந்தம் நலம் மிக அருள் தராத பரிசு எவன்? நவிலல் வேண்டும். பரிசு - தன்மை. நவிலல் - சொல்லுதல். கலவம் மா மயிலார் - தோகையையுடைய மயில் போன்ற சாயலையுடைய மகளிர்.

தூசுடை யென்னும் பாட்டிற் றுணுக்கமுற் றரக்கன் பாடத்
தேசுடை நுதிய வைவா டேரொடுங் கொடுத்தீ ரன்று
நேசநல் லடியா ருண்ண நித்தலும் வீழி யிற்பொற்
காசருள் செய்தீ ரின்றெற் கருளுதல் கடனே யென்றும். 19

கு - ரை: தூசுடை என்னும் பாட்டு: 'தூசுடைய அகலல்குல்' என்ற முதற் குறிப்புடைய ஏழாம் பாடல். துணுக்க முற்று - நடுங்கி. அரக்கன் பாட - இராவணன் சாமகானம் செய்ய. தேசுடை நுதிய வை வாள் - ஒளி பொருந்திய கூரிய முனையையுடைய வாளாயுதத்தையும். தேரையும் கொடுத்தமை கூறப்பட்டது. அன்று - முற்காலத்தில். நேசமுடைய நல்ல சிவபத்தர். நித்தலும் உண்ண - நாடோறும் உண்ணும்படி. நித்தலும் பொற்காசு அருள் செய்தீர். நேச நல்லடியார் உண்ண நித்தலும் காசு அருள் செய்தீர் ஆகலின், இன்று எனக்கும் அருளுதல் உமது கடனும் என்றவாறு.

மாற்றமே லென்ற பாட்டில் வாழ்விப்ப னென்ன வாண்டீர்
ஆற்றவுந் திருவ மிக்கீ ராரூரிற் புகுத்த பொன்னிற்
றேற்றுமுக் கூற்றி லொன்று தாரீரேற் றுணைத்தாள் பேரீர்
காற்றுநேர் பரிமா வேண்டுங் கனிந்தருள் செய்வீ ரென்றும். 20

கு - ரை: மாற்றமேல் என்ற பாடல் பதிகத்தின் எட்டாம் பாடலாகும். வாழ்விப்பன் என ஆண்டீர் - நீர் வலிய என்னை ஆட்கொண்டு வாழ்விப்பேன் என்று அருள் செய்தீர். யான் வழிவழியாக அடிமைத் திறம் பூண்டவன். நீர் வறிஞரல்லீர். ஆற்றவும் திருவம் மிக்கீர் - மிகுதியும் செல்வம் உடையீர். நீர் நிறை செல்வத் திருவாரூரீர். செல்வக்கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீர். ஆரூரில் புகுத்த பொன்னில் - திருவாரூரிலே

நீர் சேமித்து வைத்திருக்கும் பொன்னில்: பொன் - பொற்குவியல். தோற்றும் முக்கூற்றில் ஒன்று - என்மனத்திலே தோன்றுகின்ற மூன்று கூறுகளுள் ஒரு கூறு. முக்கூறுவது: உமக்கொருகூறு, உமைக்கொருகூறு, அடியானாகிய எனக்கொரு கூறு என்க. ஒன்று - சிறிதெனினுமாம். தாரீரேல் - கொடாமற் போவீராயின். துணைத்தாள் பேரீர் - உம்முடைய திருவடிகள் இரண்டையும் பெயர்க்கவொட்டாமல் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்வேன். அன்றியும், திருவாரூருக்கு விரைந்துசெல்லக் காற்றையொத்த வேகமுடைய நடையினையுடைய குதிரையும் வேண்டும். இரங்கி அருள் செய்வீராக.

மண்ணுலகென்ற பாட்டின் மலைமகண் மகாருள் ளாரை
யெண்ணில னுடல்வி ருத்தி யினிதுறத் தாரீ ராகில்
நண்ணுற வுமது மேனி வருந்துற வளைப்பே னாளைக்
கண்ணறை யென்னல் வேண்டா காரோணத் தமர்ந்தீ ரென்றும். 21

கு - ரை: மண்ணுலகென்ற பாட்டு ஒன்பதாவதாகும். மலைமகளாகிய உமாதேவியையும், மகார்களாகிய முருகவேள் கணபதி என்பவர்களையும் எண்ணமாட்டேன். உடல் விருத்தி - உடலை ஓம்புதற்குரிய பொருள். இனிதுறத் தாரீராகில் - நான் கவலைப்படாமல் வாழும்படி நீர் பொருளைக் கொடாவிடின். உமது மேனி வருந்துற, நண்ணுற வளைப்பேன் - உம் திருமேனி வருந்துமாறு நன்றாகக் கட்டி வளைத்துக் கொள்வேன்; விடமாட்டேன். நாளை - பின்பு. கண்ணறை என்னல் வேண்டா - சிறிதும் தாட்சணியமில்லாதவன், கொடியன் என்று தூற்றவேண்டாம். காரோணத்தமர்ந்தீர் - புண்டரீக முனிவனை உமது திருமேனியில் ஆரோகணம் செய்து கொண்டீர் என்பதும் எனக்குத் தெரியும் எனக் குறித்தபடி.

மறியேறென் றெடுத்த பாட்டில் வல்லீரா யாண்டு கொண்டீர்
கிறிபேசிக் கீழ்வே ளூர்புக் கிருந்தனிர் கேடொன் றில்லீர்
பொறியார்பொற் சுரிகை பொற்பூப் பட்டிகை புணர்த்தல் வேண்டுங்
கறியார்நெய் சோறும் வேண்டுங் காரோணத் தமர்ந்தீ ரென்றும். 22

கு - ரை: மறியேறு என்றெடுத்தபாட்டு பதிகத்தில் பத்தாவது பாடலாகும். மறி - மான்கன்று. வல்லீராய் ஆண்டு கொண்டீர் - வல்வழக்குச்செய்து என்னை முன்பே ஆளாகக் கொண்டருளினீர். கிறி பேசி - வஞ்சனைகள்பேசி. கீழ் வேளூர் புக்கு இருந்தனிர் - கீழ்வேளூர் என்னும் தலத்தில் சென்று கோயில் கொண்டீர். கேடு ஒன்று இல்லீர் - அத்தலத்து உம்முடைய திருநாமம் கேடிலிநாதர் என்பதாம். பொறி ஆர் பொற் சுரிகை - இலச்சினையிடப்பெற்ற பொன்னாலாகிய உடைவாள். பொறி - இலச்சினை, முத்திரை. சுரிகை - உடைவாள். பொற்பூ - பொன்னாலாகிய தாமரைப்பூ. பட்டிகை - பட்டுக்கச்சு; அரைப்பட்டிகை. புணர்த்தல் வேண்டும் - இவைகளையெல்லாம் எனக்கு அளித்தருள வேண்டும். கறி ஆர் நெய் சோறும் வேண்டும் - மூன்று காலங்களினும் கறியும் நிறைந்த நெய்யும் சோறும் ஆகிய இவைகளும் வேண்டும்.

பண்மய வென்னும் பாட்டிற் பரவைசங் கிலிக்கெ னக்கும்
வண்மயப் பற்ற யுள்ளீர் மற்றுரை யுடையேன் யானே
உண்மய வுமக்குத் தொண்ட னுறுகுறை தீர்க்க வேண்டுங்
கண்மயத் திரந்த வெல்லாங் கனிந்தருள் செய்வீ ரென்றும். 23

கு-ரை: "பண்மய என்னும்" என்னும் பாட்டுப் பதினொன்றும் பாடலாகும். பரவை நாச்சியாருக்கும், சங்கிலிநாச்சியாருக்கும், எனக்கும் வளப்பமிக்க பற்றுக்கோடாக உள்ளவரே! வேறு யாரைச் சார்பாகவுடையேன் யான். நானே என் நெஞ்சறிய உமக்குத் தொண்டனாக வுள்ளேன். ஆகலின், எனக்குற்ற குறையை நீர் தீர்த்தருள வேண்டும். கண் மயத்து இரந்த எல்லாம் - என்எண்ணத்தின்மயமாக உம்மைநோக்கி வேண்டியிரந்த எல்லாப்பொருள்களையும். முத்துமாலை, பட்டாடை, பூ, கத்தூரி, சந்தனம் முதலிய எல்லாவற்றையும் என்றபடி. எல்லாம் என்றது குறைவில்லாமல் முழுவதையும் என்க.

என்றுநைந் துருகிப் பாட வியம்பிய வனைத்து நல்கி
ஒன்றுதம் பரியு மேறி யுலவுமா றருளிச் செய்தார்
அன்றுதொட் டத்த லத்தி னடற்பரி யேற்றச் சாறு
நன்றுதண் கழனி சூழு நாவலூ ரார்க்கே நண்ணும். 24

கு-ரை: நைந்து உருகிப் பாட - மனம் நொந்து உருகித் திருப்பதிகத்தை விண்ணப்பம் செய்ய. இயம்பிய அனைத்தும் நல்கி - வேண்டிய வேண்டியாங்கே கொடுத்தருளி. தம் பரியும் - தம்முடைய குதிரையையும். அன்று தொட்டு - அக்காலந்தொடங்கி. அத்தலத்தில் - நாகைக் காரோணத்தில். பரி ஏற்றச் சாறு - குதிரைவாகனத் திருவிழா: சாறு - திருவிழா. நாவலூரார்க்கே நண்ணும் - ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கே நடைபெறுவதாம்.

சிலபக லங்கு வைகித் திருவாரூர் புகுந்தா ரூரர்
நலமலி கோதை யோடு நடந்துசென் றையா றெய்தக்
குலநதிப் புனலை யோர்பா னிறுத்துபு குடநாட் டெய்தி
வலமிகு முதலையுண்ட மதலையை யுமிழப் பாடி. 25

கு-ரை: வைகி - தங்கி. நலமலி கோதையோடு - சேரமான் பெருமாள் நீயனரோடு. ஐயாறு எய்த - திருவையாற்றைத் தரிசித்தற்பொருட்டுச் செல்ல. குல நதிப் புனலை - காவிரி நதியின் நீர்ப்பெருக்கை. ஓர் பால் நிறுத்துபு - மேல்பால் பளிங்கு மலையென நிறுத்தி. குடநாடு - மேற்கிலுள்ள கொங்கநாடு, மலை நாடுகள். முதலையுண்ட மதலையை உமிழப் பாடியது திருப்புக்கொளியூரில். அவிநாசியப்பரை வணங்கினர்.

கடவுளர் செறியு மஞ்சைக் களம்பணிந் தருளாற் சேர
வடலர சொருமா வேறி யணையவெள் ளானை யூர்ந்து
படவர வணையா னாதிப் பண்ணவர் சூழ்ந்து போற்றத்
தடனெடுங் கயிலை மேவித் தவாதபே ரின்பந் துய்த்தார். 26

கு - ரை : கடவுளர் - தேவர்கள். அஞ்சைக்களம் - திருவஞ்சைக் களம். சேர அடல் அரசு - சேரமான் பெருமாள் நாயனார். ஒரு மா ஏறி - ஒரு குதிரைமேலேறி. வெள்ளானை - அயிராவணயானை. பட அரவு அணையான் - திருமால். பண்ணவர் - தேவர். தவாத பேரின்பம் - நீங்காத பேரின்பமாகிய சிவபோகம்.

நலமலி நாவ லூரர் நாகைக்கா ரோண மெய்திப்
புலமலி பதிகம் பாடிப் பொருபரி யாடை செம்பொற்
கலமலி பிறவும் பெற்ற வுண்மையைக் கரைந்தா மந்தத்
தலமலி யன்பின் மேய வதிபத்தர் சரிதஞ் சொல்வாம். 27

கு - ரை : நாவலூரர் - ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார். புலம் மலி - அறிவின் கண் நிறைந்த. பரி - குதிரை. ஆடை, செம்பொன், அணிகலம். பிறவும் - கத்தூரி சாந்தம் முதலிய போகப் பொருள்களெல்லாம்.

சுந்தரப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2396

ஐம்பத்தொன்பதாவது

அதிபத்தப்படலம்

போத மாகிய திருவமே பொலிதரப் புணர்ந்த
சூத மாதவன் றுணையடி முனிவரர் தொழுது
வேத மோதுகா ரோணத்தை யதிபத்தர் விழைந்து
பாத மெய்திய கதைபக ரெனவவன் பகரும். 1

கு - ரை : போதமாகிய திருவம் - சிவஞானமாகிய செல்வம். வேதம் ஓது காரோணம் - வேதங்களால் துதிக்கப்படும் காரோணம். அதிபத்தர் - அதிபத்தநாயனர். விழைந்து - விரும்பி. பாதம் - திருவடிநீழல்.

தலத்தின் மிக்கதென் றியாவரு மெடுத்துறச் சாற்றும்
நலத்தின் மிக்கது நாகபட் டினத்திரு நகர்க்கீழ்ப்
புலத்தின் மிக்கதாந் திரைக்கடற் கோட்டிடைப் பொலியுங்
கலத்தின் மிக்கபல் பரதவர் கலந்துவாழ் சேரி. 2

கு - ரை : மிக்கது - மேம்பட்டது. உற சாற்றும் - மிகுதியாகச் சொல்லும். கீழ்ப்புலம் - கீழ்ப்பக்கம்; கீழ் - கிழக்கு. கடற்கோடு - கடற்கரை. கலத்தின் மிக்க - மரக்கலங்களால் மிகுந்த. பரதவர் - நெய்தல் நிலமாக்கள். சேரி - தெரு.

கோடு கொண்டபல் புன்னையம் பொழிற்றழைக் குழுவான்
மாடு கொண்டபஃ றிரைக்கடல் பசப்புமல் கியதோ
நீடு கொண்டவக் கடலுடைப் பசுமையா னிலவு
மேடு கொண்டபல் புன்னையும் பசுமையெய் தியவோ. 3

கு - ரை : கோடு - கிளை. பொழில் தழை குழுவால் - சோலையிலுள்ள தழைகளின் கூட்டத்தால். மாடு கொண்ட - பக்கத்தில் பொருந்திய. பசப்பு - பசுமை. ஏடு கொண்ட - பூக்கள் பொருந்திய; ஏடு - பூவிதழ்.

வலைவ ளத்தொழி லாளர்த மடந்தையர் வாரிக்
குலைநி லைத்தபுன் னைகவண் கோட்டுறு தொட்டிற்
றலைம ழக்களைக் கிடத்துவ ரக்கடி தாமீன்
அலைத ரச்செய்தம் மழக்களை யுறக்குவ வம்மா. 4

கு - ரை : வலைவளத் தொழிலாளர் - பரதவர், வலைஞர். வண் கோடு உறு தொட்டில் தலை - வளப்பம் பொருந்திய கிளைகளிலுள்ள தொட்டிலி லிடத்து. மழக்களைக் கிடத்துவர் - குழந்தைகளைப் படுக்கவைப்பர்: மழவு - இளங்குழந்தை. "மழவுங் குழவும் இளமைப் பொருள" (தொல்). அலைதரச் செய்து - ஆடச்செய்து. உறக்குவ - தூங்கச்செய்வன.

பொற்ற தையலா ரிளமுலைப் போகமுட் புரிந்து
கற்ற வாடவர் மடற்பரி மாவிவர் கருத்தால்
உற்ற வேலையங் கரைமிசை யுலாவுவர் தாலஞ்
சொற்ற வன்றிலம் பேடடை கிடத்தலிற் றுயர்வார். 5

கு - ரை : பொற்ற - அழகிய. உள் புரிந்து - மனத்தில் விரும்பி. மடல் பரிமா இவர் கருத்தால் - பனை மடலால் செய்த குதிரையில் ஏறிச் செலுத்தும் எண்ணத்தால். வேலையங் கரை - கடற்கரை. தாலம் - பனை. அன்றில் அம் பேடு - பெண் அன்றில். அடை கிடத்தலின் - முட்டையை அடைகாத்துக் கொண்டிருத்தலினல்.

வீசு நீள்வலைச் சேரிசூழ் விரிபுன லகழும்
பேசு வானகந் தோய்தர வெழுபெரு மதிலும்
மூசு நெய்தலொண் பன்மலர்க் கழியுங்கொண் மூவே
மாசு போன்மென மேற்கொளுந் தாலமு மன்னே. 6

கு - ரை : அகழும் மதிலும் கழியும் தாலமும் நிலைபெறுவன. அகழ் வலைச்சேரியைச் சூழ்ந்துள்ளது. பெருமதில்கள் ஆகாயத்தை அளாவியுள் ளன. கழி - உப்பங்கழிகள். கொண்மூ - மேகம். தாலம் - பனைமரம்.

வலைய கப்படு மீன்குவித் திடலினு மலையுங்
கொலைய மீன்கணம் பிளந்தெறி தரவுயர் குன்றுந்
தொலைவி லுப்பமைத் துணக்கிமே லுயர்த்திடு சுரும்பும்
விலைசெய் பொன்குவி யோங்கலுஞ் செறிவமேன் மேலும். 7

கு - ரை : வீசும் வலையில் அகப்படும் மீன்கள் மலைபோலக் குவித்திருப் பன. மீன்களைப் பிளந்து எறிதலினும் குன்றுள்ளன. மீன்களின் பிளவு களில் உப்பைச் செறித்து அமைத்த உணங்கல் மீன்களின் குவியல் உள. அவைகளை விற்றுப்பெற்ற பொன்குவியலும் மேலும் மேலும் நெருங்கி யுள்ளன. மலை, குன்று, சுரும்பு, ஓங்கல் என்பன ஒரு பொருட்சொற்கள்.

தரையில் யாருமோர் வினைசெயச் சமைதரு காலை
விரையு மூர்திமே வுநர்சிலர் நடப்பவர் பலர்மேல்
உரைசெ யத்தகு சேரியார் வினைசெய லுறுகாற்
புரையி லூர்தியிற் றண்ணெனப் போவதே யமைந்தார். 8

கு - ரை: உலகத்தில் ஒருவர் வேலைசெய்யப் போகும்போது சிலர் ஊர்திகளிலும், பலர் நடந்தும் செல்வர். வலைச்சேரியிலுள்ளார் வேலை செய்யுங் காலத்து ஊர்தியில் போதலையே மேற்கொண்டுள்ளனர்.

சிறுமு ழக்கமுண் டாயினுந் துயிலுதல் சிவணார்
உறுநி லத்தவ ரலைமுழக் கொழிதரா தென்று
மறுவி லத்தகு சேரியோர் துயிறலும் வாய்ந்தார்
செறுப டைத்திரு மால்கொலோ சிந்தையிற் றேரேம். 9

கு - ரை: உலகினர் சிறு சத்த முண்டாயினும் தூங்குதல் செய்யார். கடலின் அலைகளால் உண்டாகும் முழக்கம் நீங்காமல் இருப்பது போலவே சேரியில் உள்ளோரும் எப்போதும் தூங்குதலில் நீங்கார். அவ்வாறு பெரு முழக்கத்தினும் உறங்குதலை நினைத்தால் அவர் திருமால்தானே? நம்முடைய நினைவால் தெளியமாட்டோம். சிந்தை - மனம்.

அம்ப ரத்தியர் கொங்கையம் பரத்தியர் மருங்குல்
அம்ப ரத்தியர் மற்றது சூழ்பல வன்ன
அம்ப ரத்திய ராள்வழக் கறுத்திடு நெடுங்கண்
அம்ப ரத்திய ரன்னராற் பொலியுமச் சேரி. 10

கு - ரை: பரவச் சாதி மகளிர் வருணனை கூறப்படும். அம் பரத்தியர் - அழகிய பரவச்சாதிப் பெண்கள். கொங்கை அம் பரத்தியர்; பரம் - பாரம். மருங்குல் அம்பரத்தியர் - இடையாகிய ஆகாசத்தை உடையவர்; அம்பரம் - ஆகாசம். பல வன்ன அம்பரத்தியர் - பல நிறங்களையுடைய ஆடையையுடையவர்; அம்பரம் - ஆடை. கண் அம்பு அரத்தியர் - கண்களாகிய அம்பையும் அரத்தையும் உடையவர்.

வான முட்டுவ வுணங்கன்மீன் போர்கண்மாத் திரமோ
பேன வெண்டிரை பெயர்த்தெறி சங்கவெண் போரும்
ஊன மொன்றற வலைவளத் தொழில்புரி யுரவோ
ரான வன்றிவெம் பரதவர் சிலைத்திடு மார்ப்பும். 11

கு - ரை: உணங்கல் மீன் - மீன் வற்றல். போர் - பெருங்குவியல். அம்பாரம். பேனம் - நுரை. திரை - அலைகள். சங்க வெண் போர் - சங்குகளின் வெண்ணிறமுடைய குவியல். ஊனம் - இழுக்கு. உரவோர் - வலிமையுடையோர், அறிவுடையோர். பரதவர் - நெய்தல்நில மாக்கள். சிலைத்திடும் ஆர்ப்பும் - முழக்கும் ஆரவாரமும்.

உணங்கல் மீன்போர்களும், சங்குகளின் போர்களும், பரதவர் ஆர்ப்பும் வானம் முட்டுவ.

பாய்த ரும்புன லுண்டமே கமுநனி படர்நா
வாய்த ருங்கருங் களிறும்வா னியங்கலும் பரவை
வேய்த ரும்புவி யியங்கலும் விட்டிருந் தனவேல்
ஆய்த ருந்திற லார்க்கும்வே றறிதரற் காகா. 12

கு - ரை : பாய்தரும் புனல் - பரவியுள்ள நீர்; பரவை - கடல். நாவாய் - மரக்கலம். கருங் களிறு - கரிய யானை. வான் இயங்கலும் புவி இயங்கலும் - ஆகாயத்தில் சஞ்சரித்தலும் நிலத்தில் சஞ்சரித்தலும். விட்டிருந்தனவேல் - நீங்கியிருப்பனவாயின்.

உணவு மீன்விலைப் பொன்னின்றி வேறிலார்க் குற்ற
பிணவு பல்லவுஞ் சிற்றில்கோ லுவபெரு முத்த
அணவு சோறடு குழிசியுங் கொக்கரை யடுப்பிற்
றணவு ருவிற கொண்டுகிர் பிறவுமத் தகைத்தால். 13

கு - ரை : மீன் விலைப் பொன்னின்றி - மீனை விலைப்படுத்திய பொருளை யில்லாமல். உணவு வேறு இலார்க்கு - வேறு உணவில்லாத அப்பரத வர்களுக்கு, உற்ற பிணவு பல்லவும் - பொருந்தும் பலபெண்களும். பெரிய முத்துக்களால் சிறுவீடுகோலுவர்; பிணவு - பெண்கள். சிற்றில் - சிறுவீடு. அணவு - பொருந்திய. சோறு அடு குழிசி - சோறு ஆக்கும் பானை. கொக் கரை - கொக்கரை என்னும் வாத்தியம். அடுப்பில் நீங்காத விறகு பவளங் களாம். பிறவும் - அப்பெண்கள் விளையாடுதற் கமைந்த பிறபொருள் களும். அத்தகைத்து - அத்தன்மையுடையதேயாகும்.

இன்ன பல்வளச் சேரியிற் பரதவர்க் கெல்லா
மன்ன நன்கர சுரிமைசெய் குடிவழி வந்தார்
அன்ன மூர்பவ னுதியர் காணரு மண்ணல்
தன்ன தாட்டுணைப் பத்திமை யியற்கையே சார்ந்தார். 14

கு - ரை : சேரி - வலைச்சேரி. மன்ன - நிலைபெற. அரசு உரிமைசெய் குடி - பரம்பரையாகவுள்ள அரசுரிமை மரபு. குடி வழி - பரம்பரை. அன்னம் ஊர்பவன் - பிரமன். அண்ணல் தன்ன தாட்டுணை - சிவபெருமானுடைய திருவடிகள். பத்திமை - பத்தியுளதாம் தன்மை. இயற்கையே - இயல்பாகவே; பிறக்கும்பொழுதே என்றபடி. அது முற்பிறப்புக்களில் செய்த தவத்தால் விளைவதாம் என்க.

முத்த ராரருண் முதல்வர்தா ளன்றிமுன் னிடுவார்
பித்தர் மற்றவ ரிணக்கமு மடாதெனப் பிரித்த
சுத்தர் நீற்றுமெய் யன்பினர் வாரிதி சூழும்
இத்த ராதல மியம்புபே ரதிபக்த ரென்பார். 15

கு - ரை : முத்தர் - வீடு பேற்றுக்குரியார், சீவன்முத்தர் எனினுமாம். ஆர் அருள் முதல்வர் - சிவபெருமான். தாள் அன்றி - திருவடிகளையல்லாமல். முன்னிடுவார் - கருதுகின்றோர். பித்தர் - பித்தர்களே யாவார். அவர் இணக்கமும் அடாது - சிவபெருமான் திருவடிகளை நினையாத அப்பொல்லாதவருடைய கூட்டுறவும் அடாது. மற்று: வினைமாற்றின்கண் வந்தது. சுத்தர் - தூயர். வாரிதி - கடல். தராதலம் - பூமி. அதிபத்தர் என்பது அவரது திருநாமம்.

உலக நாயகி கருந்தடங் கண்ணியோ டுலகத்
திலக மாகிய நாகைக்கா ரோணத்துச் சிறப்புற்(று)
இலக மேவிய வாதிபு ராணர்தா ளிறைஞ்சுங்
கலக மொன்றிலா வன்புபூண் டனர்பவங் கழிப்பார். 16

கு - ரை : உலகநாயகியாகிய கருந்தடங்கண்ணி. திலகம் - பொட்டு. இலக - விளங்கும்படி. கலகம் ஒன்று இலா - சிறிதும் வேறுபடாத. பவம் கழிப்பார் - பிறப்பை நீக்குபவர் ஆகலின்.

அராவ ணிந்தவர் நாகைக்கா ரோணத்தெம் மாதி
புராணர் கோயிலை வலஞ்செய்வா ராலயம் புகுந்து
பராவு வார்விழாச் சேவைசெய் தானந்தம் பயில்வார்
விராவு மற்றவ ரடியரை முற்பணி விருப்பார். 17

கு - ரை : அரா அணிந்தவராகிய ஆதிபுராணர். அரா - பாம்பு. பராவுவார் - துதிப்பார். சேவை - தரிசனம். முற்பணி - முற்பட்டு வணங்கும்.

இந்த நீர்மைய ராயவ ரியலுநன் னாளிற்
சந்த மார்வலை தாங்குபு தமர்பலர் சூழ
நந்த மார்திரைப் பெருங்கடற் புக்கனர் நயந்து
முந்த வார்வலை வீசினர் முதல்வரைத் தொழுது. 18

கு - ரை : நீர்மையராய் - தன்மையுடையவராய். அவர் - அதிபத்த நாயனர். இயலும் நாளில் - தொண்டு பூண்டொழுகும் காலத்தில். சந்தம் ஆர் - அழகுமிக்க. தமர் - தம்மவர், சுற்றத்தார். நந்தம் ஆர் - சங்குகள் நிறைந்த. திரை - அலைகள். நயந்து - விரும்பி. முதல்வரை - சிவபெருமானை. முந்த - முற்பட. சூழப் புக்கனர், தொழுது வலைவீசினர்.

வீசு மாமணி வலைக்கயி றிழுத்தனர் வெருவிக்
கூசு மீனமொன் றகப்பட்ட ததைக்கரங் கொண்டு
தேசு சாலுமென் றுடுகா ரோணத்தெஞ் செல்வர்
பேசு தாளடைந் திடுகெனப் பெருங்கடல் விடுத்தார். 19

கு - ரை : வெருவி - அச்சமுற்று. அதை - அம்மீனை. தேசு சாலும் - ஒளி மிகும். காரோணத்து எம் செல்வர் - ஆதிபுராணர். அடைந்திடுக என விடுத்தார்.

நல்ல மீனகப் பட்டது நாடுபு கொள்ளார்
செல்ல வென்றுறு முகமனுஞ் செப்புபு விடுத்தார்
வல்ல மற்றிவர் செயலெவ னென்றுள மதித்தார்
அல்ல செய்திடு வதிற்றலை யாந்தம ரானூர். 20

கு - ரை: நாடுபு - விரும்பி. செல்ல என்று - செல்வாய் என்று. முகமனும் - உபசாரமொழியும். செப்புபு - கூறி. இவர் செயல் எவன்; எவன் - யாதாகும். அல்ல செய்திடுவதில் - நல்லதல்லாதவைகளைச் செய்வதில். தலை ஆம் தமர் - தலைமைப்பாடுற்ற சுற்றத்தார்; கொலைப்பாவத்தை யுடைய பரதவர் ஆகலின்.

பின்னர் வீசிடு வலைப்படு மீனெலாம் பெயரா
தன்னர் வௌவுபு தமரொடு மிருக்கையை யணைந்தார்
என்ன ரேனுங்கா ரோணநா யகவென விசைக்கின்
முன்னர் மற்றவர் தாள்பணி பத்தியின் முதிர்ந்தார். 21

கு - ரை: வலைப் படும் - வலையில் அகப்படும். பெயராது - நீங்காமல். அன்னர் - அதிபத்தர். வௌவுபு - பற்றிக்கொண்டு. என்னரேனும் - யாவராயினும். இசைக்கின் - சொல்வராயின்.

வழிவ ருந்தின முதற்பெரு வாரிவாய்ப் புகுந்து
மொழித ருந்திற லார்வலை வீசுபு முயன்று
பழியி லாதுமுன் னாளென வாதியிற் படுமீன்
தழியெ டுத்துவிட் டேனைய கவர்ந்திலஞ் சார்வார். 22

கு - ரை: வழி வரும் தினம் முதல் - பின்னாக வரும் நாள் முதலாக. வாரிவாய் - கடலிடத்து. வலை வீசுபு - வலை வீசி. முன் நாள் என - முதல் நாளைப் போன்று. ஆதியில் படும் மீன் - முதலிலே அகப்படும் மீனை. தழி எடுத்து விட்டு - தழுவி எடுத்துக் கடலிலே மீளவும் செல்லுமாறு விடுத்து. ஏனைய - மற்றை மீன்களை. இலம்=இல்லம் - வீடு.

இந்த வண்ணமுன் மீன்விடுத் தேனைய கவர்ந்து
சந்த மேவுற வாழுநாட் டனிப்பெருந் தலைவர்
அந்த வன்பர்த முறுதியை யவனியோ ரறிந்து
பந்த மாற்றிட வெண்ணுபு திருவருள் பதித்தார். 23

கு - ரை: முன் மீன் விடுத்து - முதல் வீசும் வலையில் அகப்பட்ட மீனைக் கடலிலே விடுத்து. தனிப் பெருந்தலைவர் - சிவபெருமான். உறுதியை - மனத்திலே கொண்ட கடைப்பிடியை. அவனியோர் - உலகத்திலுள்ளோர். பந்தம் மாற்றிட - பாசபந்தங்களினின்று நீங்க. எண்ணுபு - திருவுளங் கொண்டு. திருவருளை அவரிடத்துப் பதியச்செய்தார்.

கராச லத்துரி போர்த்தகா ரோணத்தெம் மாதி
புராணர் பேரரு ளான்முதல் வலையிடைப் புக்கு
விராவு மீனமொன் றன்றிப்பின் வீசிடுந் தோறும்
பராவு மீனமொன் றுயினும் படலொழிந் தன்றே. 24

கு - ரை: கராசலத்து உரி - யானைத்தோல். முதல் வலையிடை - முதல் முதல் வீசிய வலையினிடத்து. மீனம் ஒன்று அன்றி - அகப்பட்ட ஒரு மீனையல்லாமல். மீனம் ஒன்றுயினும் - ஒரு மீனுவது. படல் ஒழிந்தன்று - அகப்படுதலின்றி நீங்கியது.

ஒற்றை மீனன்றிப் பிறிதொரு மீனமு மொழியாக்
கற்றை யார்திரைக் கடலிடைப் படாப்பெருந் துயராற்
பற்றை யார்பெருந் தமரெலாம் பசிப்பிணி வருத்த
எற்றை நாளுமெய் தாவிலம் பாடுற்ற தன்றே. 25

கு - ரை: கற்றை ஆர் திரைக்கடல் - தொகுதியாக நிறைந்துள்ள அலைகளையுடைய கடல். படா - அகப்படாத. பற்றை ஆர் - பாசப்பற்று நிறைந்த. எற்றை நாளும் - எந்த நாளினும். இலம்பாடு - வறுமை.

மன்ற மாடுகா ரோணர்சே வடிக்கென வழங்கும்
ஒன்ற தாயமீ னமுஞ்சினு ளகப்படா தொழிய
வென்ற வாரிய நாடராய் விளங்கதி பத்தர்
கன்ற வாந்துய ருருரன்பு சிறுமையுங் கழியார். 26

கு - ரை: மன்றம் ஆடு காரோணர் - திருச்சிற்றம்பலம் முதலிய அம்பலங்களிலே திருக்கூத்துச் செய்தருளும் காரோணநாதர். வழங்கும் - நியதியாகக் கொடுக்கும். சில்நாள் - சிலநாட்கள். கன்ற ஆம் துயர் - மனம் நையும்படி (வெதும்பும்படி) உண்டாகின்ற துன்பம். அன்பு சிறுமையும் கழியார் - முன்னுள்ள பத்தியிலே சிறிதளவும் குறையாதவரானுர்.

வறுமை யென்பது பலபகல் வருத்தவு மன்பிற்
சிறுமை யுந்தள ராதவ ரொருதினஞ் சென்று
பொறுமை யார்தர வீசினர் வலைதிரி புவனம்
வெறுமை யாம்படி பட்டதோர் நவமணி மீனம். 27

கு - ரை: பல பகல் - பலநாட்கள். அன்பில் சிறுமையும் தளராதவர் - அன்பில் சிறிதும் தளர்ச்சியில்லாத அதிபத்தர். பொறுமை ஆர்தர - பொறுமை மிகுதியாகப் பொருந்த. திரிபுவனம் - மூன்றுலகமும். வெறுமை ஆம்படி - வறுமையாகுமாறு. நவமணி மீனம் வலையில் அகப்பட்டது.

விலைசெ யப்புவி போதரா நவமணி மீனம்
அலையி டைப்படக் கண்டதி சயித்தன ரியாரும்
மலைவி லித்தகு மீனிஞல் வறுமைநோய் சிதைய
நிலைப டைத்தன மெனத்தமர் நீண்மகிழ் பூத்தார். 28

கு - ரை: விலை செய புவி போதரா - விலைகொடுத்து வாங்குதற்குப் பொருள் நிலவுலகத்திலே இல்லையாம்படி: போதரா - போதாத. அலையிடை - கடலிலே. மலைவு இல் - மலைத்தல் இல்லாத. இத்தகுமீன் - இப்படிப்பட்ட நவமணி மீனம். சிதைய - கெட.

அந்த மீனையு நாகைக்கா ரோணர்த மடிக்கே
சந்த மார்தரச் செல்கெனத் தடங்கையாற் றாங்கி
முந்த வோகையின் விடுத்தனர் மொழியதி பத்தர்
வந்த பாசத்தோ டிருந்ததும் விடுத்தனர் மன்னோ. 29

கு - ரை: அந்த மீனையும் - அகப்பட்ட நவமணி மீனையும். ஓகையின் - மகிழ்ச்சியோடு. கையால் தாங்கி விடுத்தனர். வந்த பாசத்தோடு இருந்ததும் - ஆகாமிய வினையோடு பிராரத்த வினையாகவுள்ளதையும். வந்தது - ஆகாமிய வினை. இருந்தது - பிராரத்தவினை.

நெடிய மான்முதற் றேவர்கை குவித்தனர் நெருங்க
ஒடிவில் பல்கண நாதரு மொருங்குசூழ்ந் தேத்தத்
தொடிவி ராயதோட் கருந்தடங் கண்ணரியோ டெங்கள்
அடிகண் மால்விடை மேற்பொலி காட்சிநன் களித்தார். 30

கு - ரை: ஒடிவு இல் - நீங்காத. பல் கணநாதரும் - பல கண நாதர்களும். தொடி - வளையல். எங்கள் அடிகள் - எங்கள் சுவாமியாகிய சிவபெருமான். மால் விடை - பெரிய இடபம்; திருமாலாகிய இடபம். காட்சி - தரிசனம்.

தோகை மேயவோர் பாலொடு சுரர்கணஞ் சூழ
நாகை மேயகா ரோணர்மால் விடைமிசை நண்ண
ஓகை மேயவ ரிதுபெறற் குரியனே யானென்
றாகை மேயவன் பூற்றெழ வடிமிசைப் பணிந்தார். 31

கு - ரை: தோகைமேய ஓர் பால் - மயில் போலும் சாயலையுடைய உமாதேவியார் பொருந்திய ஒருபக்கம். சுரர் கணம்-தேவர்களின் கூட்டம். நண்ண - பொருந்த. ஓகை மேயவர் - அதிபத்தர். இது பெறற்கு - இந்தச் சிறப்பைப் பெறுவதற்கு. அன்பு ஊற்று எழ - அன்பு மேலும் மேலும் அதிகரிக்க.

அடிப ணிந்தெழு மன்பரை நோக்கிய வையர்
முடிவி னின்பெரும் பத்திமை முழுவது முகந்தேம்
ஒடிவி னஞ்சிவ புரத்தமர் கணத்தொடு முற்றுப்
படியி லின்பந்துய்த் தமர்கெனப் பணித்தனர் மறைந்தார். 32

கு - ரை : அன்பரை - அடியவராகிய அதிபத்த நாயனுரை. ஐயர் - சிவபெருமான். முடிவு இல் நின் பெரும் பத்திமை முழுவதும் உகந்தேம் - அழிதலில்லாத உன்னுடைய மிகுந்த பத்தித்தன்மை எல்லாவற்றையும் அறிந்து மகிழ்ச்சியடைந்தோம். ஓடிவு இல் நம் சிவபுரத்து - நீங்குதலில்லாத நம்முடைய சிவபுரத்தை அடைந்து. அமர் கணத்தொடும் - அங்குள்ள சிவகணங்களோடும். உற்று - பொருந்தி. படி இல் இன்பம் துய்த்து - ஒப்பில்லாத பேரின்பத்தை நுகர்ந்து. பணித்தனர் மறைந்தார்; பணித்தனர்: முற்றெச்சம்.

பஞ்ச துந்துபி முழங்கின பனிமல ரிறைத்தார்
வஞ்ச மின்றியெவ் வானரும் வள்ளலார் பச்சை
அஞ்ச மோடுகா ரோணம்புக் கனரதி பத்தர்
எஞ்ச லில்சிவ புரம்புகூஉ வின்பமுற் றிருந்தார். 33

கு - ரை : பஞ்ச துந்துபி - ஐந்தாகிய தேவதுந்துபிகள். பச்சை அஞ்சம் - பச்சைநிறமுடைய அன்னம் போல்வாளாகிய உமாதேவியார்: இல் பொருளுவமை. வானர் - விண்ணுலகத்தோர்: வானவர்=வானர். வள்ளலார் - சிவபெருமான். புகூஉ - புகுந்து.

மருவு பேரதி பத்தர்தம் வழிவரு வாரும்
பொருவு தீருமத் தலத்தமர் புராணர்தாட் பத்தி
ஒருவு ருதுசெய் துயர்சிறப் படைகுவ ரென்றும்
வெருவு தந்தொழிற் றலைநின்று மேதினி வியப்ப. 34

கு - ரை : அதிபத்தர் தம் வழிவருவாரும் - அதிபத்தநாயனுர் அவதரித்த குடியிலே தோன்றுவாரும் ; எனவே குலத்தில் தோன்றுவாரும் எனக் கொள்க. தாட்பத்தி - திருவடிப் பத்தி. பொருவு - ஒப்பு. ஒருவுருது - நீங்காது. என்றும் - எக்காலத்தும். தம் தொழில் தலை நின்று - தமது வலை வீசும் தொழிலிலே தலைமைப்பாடுற்று. மேதினி - நிலவுலகம்.

வலைவ ளத்தொழிற் றலைநின்று மயக்குவெம் பாச
வலைய றுத்தரு ளடைந்தவர் சரித்திரம் வகுத்தாம்
கலைம தித்திடு மேலைக்கா ரோணத்திற் கலந்த
கலைம திப்பருஞ் சட்டைநா யகர்திறங் கரைவாம். 35

கு - ரை : வலை வளத்தொழில் - வலை வீசுந்தொழில். தலை நின்று - தலைமைப் பாடுற்று. மயக்கும் வெம் பாச வலை - அறிவைத் திரியச் செய்யும் கொடிய பாசமாகிய வலை. அறுத்து - போக்கி. கலை மதிப்ப அரும் - கலைகளினும் மதிப்பதற்கு அருமையான. சட்டைநாயகர் - சட்டைநாதர்.

அதிபத்தப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2431

அறுபதாவது

சட்டைநாதப்படலம்

முனிவரர் பலருஞ் சூத முனிவரன் பாதம் போற்றிப்
பனிமலர்ப் பொழில்சூழ் நாகைப் பதிப்பெருங் காரோ ணத்துத்
தனிவிறற் சட்டை நாதர் வரவினைச் சாற்று கென்னக்
கனிவுளத் தரும்ப வன்னான் கட்டுரைத் திடலுற் றானால். 1

கு - ரை : பனி மலர்ப் பொழில் - குளிர்ந்த மலர்களையுடைய சோலை. தனி விறல் - ஒப்பற்ற வலிமையுள்ள. கனிவு உளத்து அரும்ப - இரக்கம் மனத்திலே தோன்ற. அன்னான் - சூதமுனிவர்.

நாற்றஞ்சால் கடுக்கை வேணி நம்பிரா னடிக்கெப் போதுந்
தேற்றஞ்சா லன்பு மிக்கார் செழுந்தவப் பெருமை வாய்ந்தார்
மாற்றஞ்சா னீறு மொண்கண் மணியுமைந் தெழுத்தும் போற்றும்
ஏற்றஞ்சா லிராம தேவ ரெனுமொரு சித்த ருள்ளார். 2

கு - ரை : நாற்றம் - வாசனை. கடுக்கை வேணி - கொன்றை மலர் மாலையை யணிந்த சடை. நம்பிரான் - சிவபெருமான். மாற்றம் சால் - சிறப்பித்துச் சொல்லப்படும். இராமதேவர் என்னும் சித்தர் ஒருவர்.

ஆனந்த வனமென் றோது மரும்புகழ்க் காசி யெய்தி
யானந்தந் தோய்ந்தார்க் கென்று மளிக்குமொண் கங்கை யாடி
யானந்த வுருவ ராய வகிலநா யகரைப் போற்றி
யானந்தம் பெருகச் சித்தி யாவையு மடைதல் வேட்டார். 3

கு - ரை : ஆனந்தவனம் - காசி. ஆனந்த உருவர் - ஆனந்த வடிவினர். அகில நாயகர் - விசுவநாதர். சித்தியாவையும் - அணிமா முதலிய அட்டமா சித்திகளும். வேட்டார் - விரும்பினர்.

சித்திக ளனைத்தும் வேட்ட சிந்தையார் காசி யோர்பாற்
சத்திய ருண்மேற் கொண்டு சிந்திப்பார் தமக்கெஞ் ஞான்றும்
புத்திமுத் தியுநன் கீயும் வைரவர் பொற்பு மேய
அத்திரு வுருவங் கண்டா ரிலக்கண மமையு மாறே. 4

கு - ரை : சத்தியர் - சத்தியை ஒருபாலுடைய சத்தராகிய சிவபெருமான். எஞ்ஞான்றும் - எப்பொழுதும். புத்தி முத்தியும் - இம்மைப்பேறு மறுமைப் பேறுகளும். வைரவர் - வயிரவக்கடவுள். பொற்பு - அழகு.

கழுமுளொண் டுடிவா ளங்கு சம்மப யங் கபால
முழுவலி நாகம் வட்ட முரண்மிகு பாசந் தண்டந்
தழுவிய கரங்கள் பத்துங் கிண்கிணித் தார்சார் மார்பும்
வழுவில்பொற் கழல்சேர் தாளும் வயங்குற வடுகர் நின்றார். 5

கு - ரை : கழுமுள் - சூலம். துடி - உடுக்கை. வாள், அங்குசம், அபயம், கபாலம், நாகம், வட்டம், பாசம், தண்டம் இவைபொருந்திய பத்துத்திருக்கரங்கள். கிண்கிணிமாலை. பொற்கழல் - வீரக்கழல். வயங்குற - விளங்க. வடுகர் - வைரவக்கடவுள். வைரவதியானம் கூறியது.

மாயவன் மெய்த்தோற் சட்டை வயங்கலிற் சட்டை நாதன்
பாயவெந் நெலும்பாந் தண்டம் பற்றலிற் றண்ட பாணி
தீயவெங் கொடிய கூற்றிற் றீங்கறத் தெறுத லாலே
ஏயநற் றவர்சொல் கால வயிரவ னின்னுங் கூறில். 6

கு - ரை : மாயவன் மெய்த் தோற்சட்டை - விஷ்ணுமூர்த்தியின் உடலைக் கிழித்துப் போர்த்த சட்டை. வயங்கலின் - விளங்குதலால். வெந் எலும்பு ஆம் தண்டம் - முதுகெலும்பாகிய தண்டாயுதம். வெந்=வெரிந் - முதுகு. கூற்றின் - இயமனைப்போல; இன்: ஐந்தாவது ஒப்புப்பொருள். தெறுதலால் - தண்டம் செய்தலால்.

சட்டைநாதர், தண்டபாணி, காலவயிரவர்.

அடியவ ராவத் துத்தா ரணஞ்செயு மருளி னாலே
கடிகெழு மாவ தோத்தா ரணன்கமழ் புழுகு பூசி
நெடிதுற விளங்க லாலே நிறைபுழு காளி யின்னும்
படிதவிர் நாமம் பல்ல பரித்தெதிர் நின்ற வையன். 7

கு - ரை : ஆவத்து உத்தாரணம் - ஆபத்தைக் கெடுத்தல். புழுகாளி - புழுகினை அணிந்தவர். படி - ஒப்பு. ஐயன் - வைரவக்கடவுள்.

வடுகனென் றுரைக்கும் நாம வள்ளறன் பொலிவு நோக்கித்
தடுவரு மன்பு பொங்கச் சத்துவ விராம தேவர்
படுபல பொருளுங் கொண்டு பூசைபன் னாள்பு ரிந்து
விடுதலில் சித்தி யெல்லாம் பெற்றனர் மேலு மேலும். 8

கு - ரை : வடுகன் - வயிரவர். பொலிவு - அழகு. இராமதேவர் உபகரணங்களையெல்லாம் மிகுதியாகக்கொண்டு பலநாள் பூசித்தார். சித்திகளை மேலும் மேலும் பெற்றனர். விடுதல் இல் - நீங்காத.

எய்தருஞ் சித்தி யெல்லா மெய்திய விராம தேவர்
மெய்திக ழனைய மூர்த்தி விருப்பமே லோங்க லாலே
செய்தவப் பூசை யாற்றுந் திறத்தொரு வெறுப்பு மெய்தார்
கொய்தளி ராதி கொண்டு பூசித்துக் குலவி வாழ்நாள். 9

கு-ரை: எய்த அரும் - அடைதற்கரிய. அனைய மூர்த்தி - வைர வக்கடவுள். தளிர் ஆதி - தளிர் முதலாயின.

துங்கநன் மறையோர் சோளீச் சரமுடை யவரென் றோர்பேர்
தங்கநன் கமைந்தா ரென்றுந் தவநெறி கைக்கொண் டுள்ளார்
திங்களங் குழவி மோலிச் சிவபதஞ் சேர வெண்ணும்
அங்கவர் வந்தி ராம தேவரை யடைந்தா ரன்றே. 10

கு-ரை: மறையோர் - பிராமணர். சோளீச்சரமுடையவர், தவ நெறி கொண்டவர். திங்கள் அம் குழவி மோலிச் சிவபதம் - இளம்பிறைச் சந்திரனை யணிந்த திருமுடியையுடைய சிவபிரான் திருவடிகள். அவர் இராமதேவரை அடைந்தார்.

அடைந்தவர் பணித லோடு மாரருள் சுரந்து நோக்கி
மிடைந்தவன் பினராய் நம்பான் மேவிய தென்னை யென்னத்
தடைந்தவைம் பொறியீர் நும்மைச் சரணென வடைந்தேன் சன்ம
முடைந்தவ னுதற் கென்று ருதுதெரிந் திராம தேவர். 11

கு-ரை: மிடைந்த - செறிந்த. தடைந்த - தடைசெய்த என்றது வென்ற என்க; வென்றுளே புலன்களைந்தார் என்றபடியாம். சரண் - அடைக்கலம். சன்மம் உடைந்து - பிறவியொழிந்து. அவன் ஆதற்கு - சிவமாந்தன்மைப் பெருவாழ்வு பெறும்பொருட்டு. உது தெரிந்து - சோளீச் சரமுடையார் கருத்தைத் தெரிந்து.

மேதகு சட்டை நாதர் விளங்குவிக் கிரக மொன்று
காதலி னதைப்பூ சித்தே கவலருஞ் சித்தி பெற்றேன்
ஆதர மருவி நீரு மருச்சித்தேத் திடுவீ ராயின்
ஏதமி லின்ப முத்தி யெய்தலா மென்று கூறி. 12

கு-ரை: மேதகு - மேம்பட்ட. விக்கிரகம் - மூர்த்தி. அதை - அந்த விக்கிரகத்தை. கவல் அரும் - கவலையின்றி. ஆதரம் மருவி - விருப்பத்துடன். ஏதம் இல் - துன்பமில்லாத. இன்ப முத்தி - இன்பத்தை நல்கும் முத்தி.

அந்தவிக் கிரகந் தன்னை யன்னவ ரங்கை யேந்திச்
சுந்தர மருவுஞ் சோளீச் சரமுடை யார்கை நல்கி
நந்தமற் றிதனுன் முத்தி நண்ணுகென் றுக்கங் கூறிப்
பந்தமி லனைய தேவர் சுவேச்சையிற் பயின்று ரன்றே. 13

கு - ரை : அன்னவர் - இராமதேவர். நந்த - ஆக்கம் பொருந்த. இதனுல் - இந்தச் சட்டைநாதரைப் பூசிப்பதனுல். பந்தம் இல் - பாசபந்தம் இல்லாத. அனையதேவர் - இராமதேவர். சுவேச்சை - தன்னிச்சை.

பொன்பொலி சட்டை நாதர் சட்டகம் போற்றி யேற்ற
கொன்பொலி பெருமை யன்ப ருபகர ணங்கைக் கொண்டு
தென்பொலி பூசை செய்துஞ் சிந்தையிற் குறித்தல் செய்தும்
அன்பொலி யருத காசி யணிநக ரமர்ந்தா ரன்றே. 14

கு - ரை : சட்டகம் - திருமேனி. உபகரணம் - பூசைக்குரிய பொருள்கள். குறித்தல் செய்தும் - தியானித்தும்.

திரைகெழு கங்கைக் காசித் திருநக ரிராம தேவர்
உரைவழிச் சட்டை நாதர் பூசனை யுவப்பிற் செய்தாம்
புரைதபப் பன்னு ளந்தப் புண்ணிய ரருள்வ தெந்நாள்
வரைவிலின் புறுவ தெந்நா ளெனமதித் திருக்கு நாளில். 15

கு - ரை : காசித் திருநகரில் இராமதேவர் சொல்லியபடி. புரைதப - குற்றமில்லாமல். வரைவு இல் இன்பு - எல்லையில்லாத இன்பம். மதித்து - மனத்திற் கொண்டு.

ஒருதினஞ் சட்டை நாத ருவந்தவர் கனவிற் ருேன்றி
மருவநின் னுள்ளங் கொண்ட கவலைமாற் றிடுதி யன்ப
பொருவரு நினக்கு முத்தி புணர்ப்பதித் தான மன்று
கருநிறக் கடல்சூழ் நாகைக் காரோண மென்று தேர்தி. 16

கு - ரை : அவர் கனவில் - சோளீச்சர முடையார் கனவில். முத்தி புணர்ப்பது - முத்தியைக் கொடுத்தருளுவது. தேர்தி - தேர்வாய்.

அத்தல மித்த லத்து மதிகமாந் தேவ தீர்த்தம்
உத்தமச் சறுவ தீர்த்த மொளிர்பெருங் காக தீர்த்தம்
முத்தலம் புகழா நிற்கு முனிதீர்த்த மாதி யாகச்
சுத்தநற் றீர்த்த மெண்ணில் லன நனி தொக்க வாங்கே. 17

கு - ரை : அதிகம் - மேம்பாடுடையது. தேவதீர்த்தம், சறுவதீர்த்தம், காகதீர்த்தம், முனிதீர்த்தம் முதலியவாக உள்ள தீர்த்தங்கள் ஆங்கே எண்ணிலாதன உள.

பெருந்தவப் புண்ட ரீக முனிவரன் பேணிப் போற்றிப்
பொருந்தமெய் யன்பு செய்து புனிதமாங் காயத் தோடுந்
திருந்தநந் தமைய டைந்தான் றிசைமுக னுங்குப் போற்றி
மருந்தமுண் டொளிரு நம்பால் வளமலி சிருட்டி பெற்ருன். 18

கு - ரை : அத்தலத்தில் புண்டரீக முனிவன் நம்மைப்போற்றித் தூய காயத்தோடும் நம்மை அடைந்தான். பிரமதேவன் அத்தலத்தில் பூசித்துச் சிருட்டி பெற்றான். புனிதம் - பரிசுத்தம். திசைமுகன் - பிரமதேவன். மருந்தம் - நஞ்சு.

தண்டுழாய் மாயோ னந்தத் தலத்தினைச் சார்ந்து போற்றி
மண்டுவெவ் விடத்தா லுற்ற கரிசெலா மாற்றி வாழ்வான்
அண்டுவா னுடர் கோமா னுவயி னம்மைப் போற்றித்
தொண்டுபட் டளவா மேன்மை பெற்றனன் றூய வன்ப. 19

கு - ரை : திருமால் அத்தலத்தை அடைந்து நம்மைப் போற்றி ஆலகாலவிடத்தா லுண்டாகிய குற்றங்களைப் போக்கினான். இந்திரன் அவ்விடத்து நம்மைப் பூசித்து அளவில்லாத மேன்மையைப் பெற்றான். மாயோன் - திருமால். கரிசு - குற்றம். வான் நாடர் கோமான் - இந்திரன். ஆவயின் - அவ்விடத்தில். அளவா மேன்மை - அளவில்லாத சிறப்புக்கள்.

இன்னுமத் தலத்தி னம்மை யிணர்மல ராதி கொண்டு
மன்னுமெய் வழிபா டாற்றி முத்தியை மருவி னோர்கள்
பன்னுபல் கணக்குந் தீர்ந்தார் பகருவ தின்னு முண்டான்
முன்னுகற் பத்தின் மாயா திருப்பதம் முழுத்தா னங்காண். 20

கு - ரை : இன்னும் அத்தலத்தில் நம்மை வழிபட்டு முத்தியை அடைந்தோர் எல்லையில்லாதவர். இணர் - பூங்கொத்து. மலர் ஆதி - மலர் முதலியன. கணக்குத் தீர்ந்தார் - அளவில்லாதவர். கற்பாந்தத்திலும் அழியாதிருப்பது அந்த நாகைக்காரோணமே. முழுத்தானம் - நாகைக் காரோணம்.

அதுபெருஞ் சோழ நாட்டி லலங்குகா விரிக்குத் தென்பாற்
சதுமுகன் முதலோர் போற்றுந் தடந்திரு வாரூர்க் கீழ்பான்
முதுகுண கடற்றி ரத்தின் முயங்குவ தங்கு மேவிக்
கதுமென நமைத்தா பித்தி தாபிக்குங் கண்ணுஞ் சொல்வாம். 21

கு - ரை : சதுமுகன் - பிரமதேவன். முது குணகடல் - பழமையாகிய கீழ்கடல். திரம் - கரை. கதும் என - விரைவாக. தாபித்து - பதிட்டை செய்து. தாபிக்கும் கண் - தாபிக்கும் இடம்.

விருப்புற முனிபூ சித்த மேலைக்கா ரோணத் துள்ளால்
இருப்பது குறித்தே மந்த விடங்கடைப் பிடித்தி முத்தி
அருப்புவ தாங்கென் றோதி மறைந்தன ரைய ரன்பர்
பொருப்புவில் லுடையார் வார்த்தை நனவெனப் புந்தி வைத்தார். 22

கு - ரை : முனி - புண்டரீகமுனிவர். அவர் பூசித்தது மேலைக் காரோணம். பொருப்பு வில்லுடையார் - மேருமலையை வில்லாகவுடைய சிவபெருமான். கனவை நனவு எனவே தம்மனத்திற் கொண்டார் என்க.

விடியுமு னெழுந்து கங்கை வெண்டிரைத் தீர்த்த மாடிப்
பொடியணிந் தினிய கொண்டு பூசைமுன் போல வாற்றி
அடிகள்வாய் மலர்ந்த நாகைக் காரோண மடைவா னெண்ணித்
துடிதலி லொருபே ழைக்குட் சட்டைநா யகரைச் சேர்த்து. 23

கு - ரை : அடிகள் - சட்டைநாதர். பேழைக்குள் - பெட்டிக்குள். சட்டைநாயகரைச் சேர்த்து - சட்டை நாதரை எழுந்தருளப்பண்ணி.

தலைமிசைச் சுமந்து கொண்டு தக்கண திசையை நாடி
மலைகளுங் காடு மாய வழிக்கொடு நடந்து வந்து
நிலைபருப் பதமென் றோது நெடுந்தலம் பணிந்து போற்றிக்
கலைநவில் விரூபாக் கத்தைக் கலந்துகை தொழுதா ரன்றே. 24

கு - ரை : தக்கணதிசை - தெற்குத்திக்கு. திருப்பருப்பதம், விரூபாக்கம் என்னும் தலங்களைத் தரிசித்தார். கலை நவில் - நூல்களால் விதந்து சொல்லப்படும்.

தூயவ ரென்று நீங்காச் சோமநா தத்தை மேவிப்
பாயபன் மலர்க டூவிப் பரம்பரன் பாதம் போற்றி
ஆயமேல் கடற்றீ ரத்தி னமைந்தகோ கன்னம் புக்கு
நாயனார் பாதம் போற்றி நயந்தங்கு நின்று போந்து. 25

கு - ரை : சோமநாதம், மேல் கடற்கரையிலுள்ள திருக்கோகன்னம் என்ற தலங்களை அடைந்து சிவபெருமானை வணங்கி, அவ்விடம் விட்டுப் புறப்பட்டு.

வாங்குதெண் டிரைநீர்ச் செம்பொன் முகலியின் மருங்கி னாலும்
ஓங்குதென் கயிலை மேவி யும்பர்தம் பிரானைப் போற்றி
நீங்குத லின்றி மாவாய் நெடுமறை நிலவ மேன்மை
தேங்குசீர்க் காஞ்சி யெய்தித் தேவர்தந் தேவைப் போற்றி. 26

கு - ரை : பொன்முகலியாற்றின் கரையிலுள்ள தென்கயிலை என்னும் திருக்காளத்தியப்பரையும், வேதங்கள் மாமர வடிவாய் விளங்கும் காஞ்சி நகரிலுள்ள சிவபெருமானையும் வணங்கிக் கொண்டு.

மறைபுக ழாலங் காடு வணங்கிமாற் பேறு போற்றி
அறைதிரு வோத்தூர் பாசூ ரொற்றியூ ரவாவித் தாழ்ந்து
நிறைகழுக் குன்றமெய்தி நிகரிலான் சரணந் தாழ்ந்து
மிறைதபுத் தினிதி னாலும் பாதிரிப் புலியூர் மேவி. 27

கு - ரை : திருவாலங்காடு, திருமாற்பேறு, திருவோத்தூர், திருப்பாசூர், திருவொற்றியூர் முதலிய தலங்களைத் தரிசித்து, திருக்கழுக்குன்றத்தையும் திருப்பாதிரிப்புலியூரையும் அடைந்து இறைவரைப் போற்றி.

புலியொடு முயலுங் கண்ட புண்ணியப் பாதம் போற்றி
ஒலிதழ லுருவ மாய வொருபருப் பதமும் போற்றி
வலியவர் பதம்வி ருத்த வரையினுந் தொழுது தெய்வம்
பொலிதிருத் தில்லை மூதூர் புக்கிலி தரிடல் போற்றி. 28

கு - ரை : திருப்பாதிரிப்புலியூரில் புலியும் முயலும் பூசித்த இறைவரை வணங்கி, திருவண்ணாமலையும் விருத்தாசலமும் சென்று இறைவரைத் தொழுது, திருத்தில்லையைச் சென்றடைந்து திருச்சிற்றம்பலமுடையாரைத் தரிசித்து.

காழிமுற் பலவும் போற்றிக் காவிரி நன்னி ராடி
வாழிமா யூர மேய வள்ளலைத் தரிசித் தப்பால்
ஊழிகாண் வழுவூ ரேத்தி யொருதிருப் பனையூர் தாழ்ந்து
சூழிமால் யானைப் போர்வைச் சுந்தர ராரூர் சேர்ந்தார். 29

கு - ரை : சீகாழி முதலாகிய பல தலங்களையும் வணங்கிக்கொண்டு, காவிரி தீர்த்தம் ஆடி, திருமயிலாடுதுறை வள்ளலைத் தரிசித்து, அப்பால் வழுவூர், திருப்பனையூர் ஆகிய தலங்களையும் கண்டு வணங்கித் திருவாரூரை வந்தடைந்தார்.

நலமலி யாரூர் மேய நம்பர்பொற் பாதம் போற்றி
நிலமலி கீழ்வே ளூருஞ் சிக்கலு நினைந்து போந்து
புலமலி யன்பிற் றாழ்ந்து புண்ணிய முனிவர் சூழக்
கலமலி கடல்சூழ் நாகைக் காரோண நகர்வந் துற்றார். 30

கு - ரை : திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் வன்மீக நாதரையும் வீதிவிடங்கரையும் தரிசித்துக் கீழ்வேளூர், சிக்கல் முதலிய தலங்களையும் அன்போடு வணங்கி, மரக்கலங்கள் நிறைந்த கடலாற் சூழப்பட்ட நாகைக் காரோணத்தை வந்தடைந்தார்.

புண்ணிய மலியும் வானோர் புனல்படிந் தெழுந்தி யாருங்
கண்ணிய வருள்சான் மேன்மைக் கருந்தடங் கண்ணி யோடு
நண்ணிய கருணை யாதி புராணரை நயந்து போற்றித்
தண்ணிய விடங்கப் பெம்மான் பாதமுந் தரிசித் தப்பால். 31

கு - ரை : வானோர்புனல் - தேவதீர்த்தம். படிந்து - முழுகி. கருந்தடங்கண்ணி - நீலாயதாட்சியம்மை. ஆதி புராணர் - இத்தலத்துச் சிவபெருமான். விடங்கப் பெம்மான் - சுந்தரவிடங்கர்.

அருஞ்சுதைக் கடேசம் யாரு மறைநடுத் தலேச மேன்மை
தருந்தனி விண்டு நாதந் தவாவகத் தீச முண்மை
திருந்தம ரேந்தி ரேசந் திகழுங்கார் முகேச மன்பு
பொருந்திய நாக நாதம் புண்ணிய விராம நாதம். 32

கு - ரை : சுதைக்கடேசம் - அமுதகடேசம். நடுத்தலேசம், விண்டு நாதம், அகத்தீசம், இந்திரேசம், கார்முகேசம், நாகநாதம், இராமநாதம் முதலிய ஏனைய தலங்களையும்.

இவைமுதற் பலவும் போற்றி யினிதுவப் புற்றே யன்புச்
சுவைமிக வையர் சோளீச் சர முடை யவர்வா னேரும்
நவையறுத் துய்யு மேலைக் காரோண நயந்து புக்கார்
செவையுறப் பணிந்தார் முத்தி யின்பத்துத் திளைத்தா ரொத்தார். 33

கு - ரை : இவை முதலாகிய நாகையிலுள்ள பல தலங்களையும் வணங்கிச்சோளீச்சரமுடையார் மேலைக்காரோண தலத்தை வந்தடைந்தார். நன்ருக வணங்கி, முத்தியின்பத்தை அடைந்து திளைப்பவரை யொத்து விளங்கினர். நவை - குற்றம். செவையுற - செவ்வையாக. திளைத்தார் - மூழ்கினர்.

அன்றுநம் மடிகள் செவ்வாய் மலர்ந்தவா றமைய நாடி
இன்றுநா நாகை மேலைக் காரோணத் தினிதி னுற்ரேம்
ஒன்றுமேற் பதிட்டை செய்ய வுறுபொருட் கியாது செய்வோம்
என்றுதம் முள்ளங் கொண்டே யிருந்தன ரெண்ண மிக்கார். 34

கு - ரை : சட்டைநாதர் அன்று காசியில் நமக்கு இட்ட கட்டளையின் படியே, இன்று நாகை மேலைக்காரோணத்தை வந்தடைந்தோம். "சிவபெருமானைப் பதிட்டைசெய்ய வேண்டும் பொருளுக்கு யாது செய்வோம் என்று தம் மனத்தில் கவலையோடிருந்தார்.

அற்றைநாட் கனவின் முன்போ லண்ணலார் சட்டை நாதர்
பற்றையா ரவர்முற் ரேன்றிப் பரிந்தன ரருளிச் செய்வார்
இற்றைநாள் வருந்த லென்னை யிந்நகர் வடதி சைக்கண்
உற்றையா வைங்கு ரோசத் துள்ளதா னகர மொன்று. 35

கு - ரை : அன்று கனவிலே முன்புபோலச் சட்டைநாதர் தோன்றி அருள்சுரந்து அருளுவாராயினர். நீ இப்போது வருந்தாதே; இந்த நகரத்தின் வடதிசையை அடைந்து, ஐந்து குரோச தூரத்தில் ஒரு நகரம் இருப்பதனைக் காண்பாய்.

அன்னமா நகர்பு ரக்கு மரசன்புத் திரியை முன்னே
பின்னமொன் றில்லா வண்ணம் பிரமராக் கதமொன் றுற்றே
இன்னன்மிக் கியற்று நீயாங் கெய்திடின் விலகு மந்த
மன்னனின் வயத்த னுவா னென்றனர் மறைந்தா ரன்றே. 36

கு - ரை : அந்த நகரத்தைப் புரக்கும் அரசன் புத்திரியைப் பிரமராக்கதம் ஒன்று பிடித்துள்ளது. அது அவளை மிகத்துன்புறுத்துவதாம். நீ அங்கே சென்றால் அது அவளைவிட்டு விலகிவிடும். அந்த அரசன் உன் வயம் ஆவான் என்று அருள்செய்து மறைந்தார். இன்னல் - துன்பம்.

அருடலைக் கொண்டு வப்புற் றந்நகர் நேடிச் சென்று
பொருண்மிகு மரசன் முன்னம் போயின ரவனுந் தேர்ந்து
பருடபப் பணிந்தெ ழுந்து மகண்முனங் கொடுபோய் விட்டான்
கருளடற் பிரம ராக்க தங்கழன் றடிவீழ்ந் தன்றே. 37

கு - ரை : சோளீச்சரமுடையார், சட்டைநாதர் திருவருளைச் சிரமேற் கொண்டு, மகிழ்ந்து அந்த நகரை நாடிச்சென்று அரசன்முன் போயினர். அவனும் இவரைத் தெளிந்து வணங்கி எழுந்து, தன் மகளின் முன்னே கொண்டுபோய் விட்டான். மிக்க வலிமையையுடைய பிரமராக்கதம் அவளை விட்டு நீங்கி, இவர் அடியில் வீழ்ந்தது.

அடிதொழு மதனை நம்பின் வாவென வழைத்து வந்து
படியறத் தாஞ்ச மாதி பயிலிட மதற்கு மேல்பாற்
கொடியவல் விலங்கு பூட்டிக் குறும்பொழிந் திருத்தி யென்றூர்
மடிதுய ரனைத்து நீத்து மன்னவன் புதல்வி யுய்ந்தாள். 38

கு - ரை : தன்னை வணங்கிய அந்தப் பிரமராக்கதத்தை நம்பின்னே வாவென்று அழைத்துவந்து, தாம் தியானசமாதி செய்யும் இடத்திற்கு மேல்பால் வலிய விலங்கைப் பூட்டி, உன் சேட்டை ஒழிந்திருப்பாய் என்று கட்டளையிட்டார். மன்னவன் புதல்வி பிரமராக்கதத்தால் பட்ட துன்பங்கள் அனைத்தும் நீங்கியுய்ந்தாள்.

திருமலை ராய னென்னு மரசிது சிந்தை செய்தெம்
பொருமலை யொழித்தார் போல்வார் புவனத்தி னுளரோ வென்று
கருமலை பவர்சூழ் நாகைக் காரோண நகர மேவி
அருமலை போல்வார் சோளீச் சரமுடை யாரைத் தாழ்ந்தான். 39

கு - ரை : திருமலைராயன் என்னும் அந்த அரசன் இதனை மனத்திற் கொண்டு எம்முடைய துன்பத்தை ஒழித்தபெரியோர் இவ்வுலகத்தில் உள்ளவரோ என்று நாகைக் காரோணத்தையடைந்து சோளீச்சரமுடையாரை வணங்கி எழுந்தான். பொருமல் - துன்பம். புவனம் - உலகம். கரு மலை பவர் சூழ் நாகை - பிறப்பை அறுக்கும் மெய்யடியார்கள் சூழ்ந்திருக்கும் நாகை.

அடியனேன் செயுங்குற் றேவ லருள்செய வேண்டு மென்னக்
கடியவிழ் மாலை மார்ப காசியி னின்றும் போந்த
முடிவிலஞ் சட்டை நாதப் பதிட்டைசெய் முயற்சி யின்னே
ஒடிவறப் புரிதி யென்று ருவந்தவ னதுமேற் கொண்டான். 40

கு - ரை : "அடியேன் செய்யும் குற்றேவல் யாது? அருளிச்செய்ய வேண்டும்" என்று அரசன் வேண்டினன். 'அரசனே! காசியினின்றும் இவ் விடத்திற்கு எழுந்தருளியுள்ள நமது சட்டைநாதரைப் பதிட்டைசெய்யும் முயற்சியை இப்பொழுதே கைக்கொண்டு, செய்வாய்' என்றார். அவனும் மகிழ்ந்து அப்பணியை மேற்கொண்டான். கடி - வாசனை. ஓடிவு அற - நீங்காமல். இன்னே - இப்பொழுதே.

வினைவல யவனர்க் கூவி யொண்பொருள் வெறுப்ப வீசி
நினையொரு முனிபூ சித்த நின்மலப் பிராற்குத் தென்பாற்
கனைகதிர் பொருவி மான மாதிய கதிர்ப்பச் செய்து
துனைதரப் பதிட்டை செய்தான் சுரர்கள்பூ மாரி தூர்த்தார். 41

கு - ரை : யவனர் - தச்சர்கள். புண்டரீகமுனிவர் பூசித்த காயாரோ கணப் பெருமானுக்குத் தெற்குத் திசையில் சிறந்தவிமானம் முதலியவற்றை நன்றாகச் செய்து, விரைந்து பிரதிட்டை செய்தான். முனி - புண்டரீக முனிவர்கள். நின்மலப்பிரான் - காயாரோகணர். கதிர் பொரு விமானம் - சூரியன் ஒளியைக் கெடச்செய்யும் விமானம். கதிர்ப்ப - விளங்க. துனைதர - விரைவில். சுரர்கள் - தேவர்கள்.

தணிமனத் தினரா மாதி சைவர்முற் றளிக்கு வேண்டும்
பணிபுரி பவரை யெல்லாம் பாங்குறப் பதிட்டை செய்து
கணிதமில் வருவா யாக்கிக் கலந்துகி லாதி நல்கி
அணிகொணித் தியமுன் னுய வலங்குற நடாத்தல் செய்வான். 42

கு - ரை : செவ்விய மனத்தையுடைய ஆதிசைவர் முதலாகக் கோயி லுக்கு வேண்டும் பணிபுரிபவர்களையெல்லாம் சிறப்பக் கொண்டுவந்து குடி யேற்றினன். அளவில்லாத வருவாயை உண்டாக்கினன். ஆபரணம் ஆடை முதலியவற்றைக் கொடுத்து நித்தியபூசை முதலியவற்றைச் சிறப்பாக நடத் தச்செய்நான். கலம் - ஆபரணம். துகில் - ஆடை. நித்தியம் - நித்திய பூசை. முன்னுய - முதலாகவுள்ள.

கதிரவன் றகரி ராசி கலந்தமர் மதிய மெய்த
அதிர்கழற் சட்டை நாதற் கற்புத மறையோர் வாழ்த்த
எதிரில்பல் லியமு ழங்க வெங்குமங் கலம்வி ராவப்
பிதிர்தலில் விழாந டாத்திப் பெருமகிழ் பூத்தான் மன்னன். 43

கு - ரை : கதிரவன் - சூரியன். தகர் இராசி-மேடராசி. கலந்து அமர் மதியம் - சித்திரை. பல்லியம் - பல வாத்தியங்கள். பிதிர்தல் இல் விழா - குறைவில்லாத திருவிழா.

விழாமகிழ் சிறப்ப நோக்கி மிளிர்சட்டை நாதர் பொற்றுள்
துழாமன முடைய சோளீச் சரமுடை யாரத் தேவர்
வழாவபி முகச்ச மாதி வைகுபு மலமா சொன்றுந்
தழாவுய ரின்ப முத்தி சார்ந்தனர் தரணி வாழ்த்த. 44

கு - ரை : திருவிழாக்களைச் சிறப்பாகச்செய்து தரித்துச் சட்டை நாதர் திருவடியை மறவாத மனத்தையுடைய சோளீச்சரமுடையார் சட்டை நாதர்க்கு எதிரிலே தியானசமாதி இடையருமற் செய்திருந்து, குற்றமில்லாத உயர்ந்த பேரின்பமுத்தியை அடைந்தார். அமிமுகம் - நேர்முகம். மலமாசு - ஆணவமலக்குற்றம். தழா - தழுவாத. தரணி - பூமியிலுள்ளோர்.

காதர மிரிக்கு நாகைக் காரோணத் தலத்தைச் சார்ந்தார்
பாதக ரெனினு முத்திப் பயன்பெற லுண்மை யென்னில்
ஆதர மிக்க சோளீச் சரமுடை யார வாமெய்ப்
போதநன் முத்தி யுற்ற ததிசயம் புணருங் கொல்லோ. 45

கு - ரை : காதரம் இரிக்கும் - உலக விருப்பத்தைக் கெட்டோடச் செய்யும். பாதகர் எனினும் - பாவிகள் ஆயினும். ஆதரம் - விருப்பம். அவாம் - விரும்பிய.

மன்னிய சட்டை நாதர் திருமுன மருவி மேன்மை
துன்னிய புகழ்சால் சோளீச் சரமுடை யார்க்கு நாளும்
நன்னிய மத்திற் பூசை நயந்துமுற் செய்யு மாறே
அன்னிய மில்லா வன்னு ராரருள் புரிந்தா ரன்றே. 46

கு - ரை : திருமுனம் - சன்னிதியில். நல் நியமத்தில் - சிறந்த நியமத்துடன். அன்னியம் இல்லா - அனன்னியமான.

காசியி னின்றும் போந்து கலைபுகழ் சட்டை நாதர்
மாசிலா நாகைக் காயா ரோகணம் வாழ்வ தோர்ந்தும்
பேசிய வனைய தானம் வசித்திடல் சிறிதும் பேணார்
ஏசிலா ராவர் கொல்லோ வியைவரோ வின்ப முத்தி. 47

கு - ரை : கலைபுகழ் - நூல்களால் புகழ்பெற்ற. சட்டைநாதர் நாகைக் காயாரோகணத்தில் வீற்றிருப்பதை ஆராய்ந்து வைத்தும் அவ்விடத்தில் வசித்தற்குச் சிறிதும் விரும்பாதவர் பழிக்கப்படாரோ. அவர் பேரின்ப முத்தியைப்பெறுவாரோ? பெருர் என்க. ஓர்ந்தும் - ஆராய்ந்துவைத்தும். அனைய தானம் - அந்த இடத்தில். பேணர் - விரும்பாதவர். ஏசிலார் - பழிக்கப் படாதவர். இயைவரோ - பொருந்துவரோ.

பன்னரும் புகழ்சா றண்ட பாணியார் வரவு சொற்றும்
முன்னரும் வளஞ்சா னுகைக் காரோண முழுத்த லத்தின்
தன்னரும் புகழை யாரே சாற்றிட வல்ல ராவார்
என்னரு மதனைச் சார்ந்தே யின்பவீ டடைவா ரோர்மின். 48

கு - ரை : தண்டபாணியார் - சட்டைநாதர். வரவு - நாகைக்காரோணத்து வருகையை. சொற்றும் - சொன்னேம். முன்னரும் - நினைத்தற்கு அருமையான. என்னரும் - எத்தகையோரும். ஓர்மின் - ஆராய்ந்தறிவீராக.

தலமுதல் விசேட மூன்றுந் தழைந்ததெத் தான மென்றும்
நலவிக மாதி மூன்று நல்கலெத் தான மென்றும்
நிலவநீ ராய்ந்த வாறே நிரம்பிய தலமீ தொன்றே
குலமுனி வரர்கா டேர்மி னென்றனன் குணத்தான் மிக்கான். 49

கு - ரை : தலம் முதல் விசேடம் மூன்றும் - தலம், மூர்த்தி, தீர்த்தம் என்னும் மூன்றின் பெருமைகளும். எத்தானம் - எந்த இடம். இகம் ஆதி - இம்மை, மறுமை, வீடு ஆகிய மூன்றும். நிரம்பிய தலம் ஈது ஒன்றே - நிறைந்த க்ஷேத்திரம் இதுஒன்றேயாகும். முனிவரர்காள் - நைமிச முனிவர்களே! குணத்தான் மிக்கான் - குணத்திலே சிறந்தவராகிய சூதமுனிவர்.

குணமலி சூத மேலோன் கூறிய மாற்றங் கேளாக்
கணமலி முனிவ ரெல்லாங் கணிப்பரு மகிழ்ச்சி யெய்திப்
பணமலி கலத்தா னுகைக் காரோணம் பரவிப் போற்றும்
வணமலி வேண வாவுண் முழுகினர் மயக்கந் தீர்ந்தார். 50

கு - ரை : சூதமேலோன் - சூதமகாமுனிவர். மாற்றம் - உபதேச மொழி. கணம் மலி - கூட்டமாக நிறைந்த. கணிப்ப அரும் - எல்லையில்லாத. பணம் மலி கலத்தான் - பாம்புகளை நிறைந்த ஆபரணமாகக்கொண்ட சிவபெருமான். வேணவா - பேரவா. முழுகினர் மயக்கம் தீர்ந்தார் - முழுகினர்: முற்றெச்சம்.

கலைபயி றெய்வ நாகைக் காரோணம் புகுவ தென்று
தொலைவருந் தேவ தீர்த்த முதலிய தோய்வ தென்று
புலையுணர் வடையா வாதி புராணரைக் காண்ப தென்றென்
றலைவற வுளத்தி லுன்னி யிருந்தன ரறிஞர் யாரும். 51

கு - ரை : கலைபயில் - கலைகளில் பயிலப்படும். தெய்வநாகை; தெய்வத்தன்மையுள்ள நாகபட்டினம். நாகைக்காரோணம் செல்லுவது எப்பொழுது? அங்கே தேவதீர்த்தம் முதலிய தீர்த்தங்களில் முழுகுவது எப்பொழுது ? ஆதிபுராணரைக் கண்டு தரிசிப்பது எப்பொழுது? என்று அசையாத மனத்தில் நைமிச முனிவர்களாகிய அறிவர் பலரும் எண்ணியிருந்தனர்.

சட்டைநாதப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2482

அறுபத்தொன்றாவது

நைமிசமுனிவர் பூசித்தபடலம்

தனியுயர் தவத்தின் மிக்க சௌனக முனிவ னாதி
முனிவரர் பலருஞ் சூத முனிவரன் பாதம் போற்றிக்
கனிதரு முள்ள நாகைக் காரோணஞ் சென்று போற்ற
நனிவிழை வுற்ற தைய நயந்தருள் செய்தல் வேண்டும். 1

கு - ரை : சௌனக முனிவர் முதலிய பலரும். கனிதரும் உள்ளம் - உருகிய மனம். நனி விழைவு உற்றது - மிகவும் விரும்பியது.

கண்ணுதல் வயங்கு நாகைக் காரோணத் தலச்சீர் முற்று
மெண்ணுதல் செய்ய வெங்கட் கினிதருள் செய்த நீயே
விண்ணுத லனைய தானம் விரும்பியா மடைந்து காணப்
பண்ணுதல் கடனுன் மற்றை யெவர்க்குண்டு பகரா யென்றார். 2

கு - ரை : கண்ணுதல் - சிவபெருமான். எண்ணுதல் செய்ய - கருத. விண்ணுதல் அனைய தானம் - விண்ணுலகத்தையொத்த இடம் என்றது விண்ணுலகத்தோருக்கு நெற்றியையொத்ததென்றபடி. நுதல் - நெற்றி. தானம் - தலம். காணப்பண்ணுதல் - தரிசிக்கச்செய்தல்.

முனிவர ரினைய வார்த்தை மொழிதலு மகிழ்ந்து சூதன்
நனியது காணும் வாஞ்சை நமக்குமிக் குண்டு கண்டீர்
இனியது பழுது றாமே யெய்துது மென்றெ ழுந்தான்
கனிமகிழ் பூத்தெல் லாருங் கைகுவித் துடனெ ழுந்தார். 3

கு - ரை : முனிவரர் - சௌனகாதி நைமிசமுனிவர். இனைய - இப்படிப்பட்ட. வாஞ்சை - விருப்பம். அது - அந்த விருப்பம். எய்துதும் - அடைவோம். எல்லாரும் - எல்லா முனிவர்களும்.

நண்பொடி யாத சூத நாமவான் முனிவ னோடும்
வெண்பொடி யாரு மேனித் தவரெலாம் விரவி முச்சோ
நுண்பொடி யாக்கி நாகைக் காரோண நகர நோக்கிப்
பண்பொடி யாத நண்பு பரித்தனர் நடத்தல் செய்வார். 4

கு - ரை : நண்பு ஒடியாத - அன்பு கெடாத. வான் முனிவன் - தூய முனிவன். வெண்பொடி - விபூதி. தவர் எலாம் - நைமிசமுனிவர் யாவரும்.

விரவி - கலந்து. முச்சோ நுண்பொடி ஆக்கி - சிவபெருமான்; ஆக்கி: பெயர். முச்சோ - மும்மதில். நுண்பொடி - நுண்ணிய சாம்பல். பரித் தனர் - பொருந்தியவராய்: முற்றெச்சம். பரித்தல் - தாங்குதல்.

வடதிசை நின்றுந் தீம்பாற் கடலெழீஇ வருத லென்னப்
புடவியி னடவை கூடிப் போற்றுறு மவாசி நோக்கி
யிடவிய குன்றுங் கானும் யாறுமெண் ணிலக டந்து
தடநெடுங் காசி யாதித் தலமெலாந் தாழ்ந்து போற்றி. 5

கு - ரை : தீம்பாற்கடல் - இனிய பாற்கடல். எழீஇ - எழுந்து. புடவி யில் நடவை கூடி - பூமியில் நடந்து. அவாசி - தெற்குத்திசை. இடவிய - பெரிய. காசி ஆதி தலமெலாம் - காசி முதலிய தலங்களெல்லாம்.

வாயர வொலியெ ழுப்ப மனநெகிழ்ந் துருகா நிற்க
வாயகண் ணருவி வார வலருரோ மஞ்சி லிர்ப்ப
நேயமிக் கவரா யல்லும் பகலுநே ருறவி யங்கி
நாயக மாய தெய்வ நாகைக்கா ரோணம் வந்தார். 6

கு-ரை : அர ஒலி - ஹர ஹர முழக்கம். ஆய - பொருந்திய. அருவி வார - அருவிபோல ஒழுக. அல்லும் பகலும் - இரவும் பகலும். இயங்கி - நடந்து. நாயகம் ஆய - தலைமை பெற்ற.

எல்லையை வணங்கி யுள்புக் கியைந்தபல் வளமு நோக்கி
முல்லைவெண் முறுவல் பாகர் முயங்கருள் வியந்து கொண்டு
செல்லையொண் முடிகொண் மாடத் தெருவெலாங் கடந்து வந்து
வல்லைவண் டளிமுன் னாய கோபுரம் வணங்கி னூரால். 7

கு - ரை : முல்லை வெண் முறுவல் பாகர் - முல்லை அரும்பு போன்ற வெள்ளிய பற்களையுடைய உமாதேவியாரை ஒருபாகத்திலுடையவராகிய சிவபெருமான்; முறுவல்: அன்மொழித்தொகை. செல்லை - மேகத்தை: செல் - மேகம். தளிமுன் ஆய கோபுரம் - கோயிலின் முன்புள்ள கோபுரம்: தளி - கோயில்.

தங்களுள் ளத்து மேய தடந்திரைத் தேவ தீர்த்தந்
திங்களொண் முடியார் கோயி லெதிரொரு திசையிற் கண்டே
யங்களி வில்லா வின்ப மமைதர விறங்கித் தோய்ந்தார்
கங்களோர் நான்கு ளானுங் கருதரும் பெருமை வாய்ந்தார். 8

கு - ரை : தங்கள் உள்ளத்து மேய - தமது உள்ளத்திலே பொருந் திய. திங்கள் ஒண் முடியார் - சிவபெருமான். கோயில் எதிர் - கோயிலுக்கு

எதிராக. அமைதர - பொருந்த. தோய்ந்தார் - முழுகினர். கம்கள் ஓர் நான்கு உளான் - பிரமதேவர்; கம்கள் - தலைகள். கருத அரும் - எண்ணு தற்கரிய.

வெள்ளிய நீறு பூசி விளங்குருத் திராக்கம் பூண்டே
யொள்ளிய சிறப்பார் முத்தி மண்டபத் துவந்து மேவி
வள்ளிய வெழுத்தோ ரைந்து மனனுறக் கணித்தெ ழுந்தா
ருள்ளிய காம மாதி யொருங்கவித் துயர்ந்த நீரார். 9

கு - ரை: விபூதி பூசி உருத்திராக்க வடமணிந்து முத்தி மண்டபத்தை அடைந்து ஐந்தெழுத்து மந்திரத்தை மனத்தாற்கணித்து எழுந்தார். வள்ளிய - வள்ளற்றன்மையையுடைய; எண்ணிய எண்ணியாங்கு அருள் செய்தலால் வள்ளிய என்ருர். மனன் உற - மனத்திற் பொருந்த. காமம் ஆதி - காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங்களையும். ஒருங்கு அவித்து - ஒருசேரக் கெடுத்து.

பரவினர்க் கருளு நாகா பரணமால் களிற்றைப் போற்றிக்
கரமலர் குவித்துச் சென்னி மிசைக்கவி னமையச் சேர்த்து
வரமருள் பெருமை சாலா வரணஞ்சூழ்ந் துட்பு குந்து
புரவுசெய் பரம ராதி புராணர்முன் போந்தா ரன்றே. 10

கு - ரை: பரவினர்க்கு - துதிசெய்த அன்பர்களுக்கு. நாகாபரண மால் களிறு - நாகாபரண விநாயகர். கவின் அமைய - அழகு பொருந்த. பெருமைசால் ஆவரணம்; ஆவரணம் - திருச்சுற்று. சூழ்ந்து - வலம்வந்து. பரமராகிய ஆதிபுராணர் முன். போந்தார் - சென்றனர்.

அருமறை முறையிட் டின்னு மறிவதற் கருமை யாய
பெருகொளி மணியை யாதி புராணனைப் பெருங்கா ரோணத்
தொருமுதல் வனைநேர் கண்டே யுள்ளநெக் குருகப் போற்றி
இருவிழி யருவி வார வின்பவெள் ளங்கு டைந்தார். 11

கு - ரை: அருமறை முறையிட்டு இன்னும் அறிவதற்கு அருமையாய பெருகு ஒளி மணி; "அல்லையி தல்லை யிதென மறைகளு மன்மைச், சொல்லி னாற்றுதித் திளைக்குமிச் சுந்தரன்" என்ருர் பரஞ்சோதி முனிவரும். பெருகு ஒளி மணி - ஒரு காலைக் கொருகால் சுடர் விட்டோங்கும் ஒளிபொருந்திய மாணிக்கம். நெக்குருக - நெகிழ்ந்துருக. வார - ஒழுக. குடைந்தார் - மூழ்கித் திளைத்தார்.

அரிதவ ணகன்று தென்பா லடைந்துசுந் தரவி டங்கப்
பெரியரை வணங்கி மாருப் பேரின்ப வெள்ள மூழ்கிப்
புரிதர வலஞ்செய் துள்ள யாரையும் பொருந்தப் போற்றிக்
கரிசற வடைந்தா ரம்மா கருந்தடங் கண்ணி முன்னர். 12

கு - ரை : சுந்தர விடங்கப் பெரியர் - சுந்தரவிடங்கராகிய சோமாஸ் கந்தமூர்த்தி. பேரின்பமாகிய வெள்ளம். புரிதர - விருப்பமிக. கருந்தடங் கண்ணி முன்னர் - நீலாயதாட்சியம்மையின் சந்நிதியை.

கருந்தடங் கண்ணி னுளைக் கட்டவைம் பொறிய ராய
வருந்தவ ருளத்தி னுளை யகிலமு மீன்ற தாயைப்
பொருந்தநேர் கண்டு போற்றிப் பூரணு னந்த மேவித்
திருந்தமா தவத்தார் முத்தி மண்டபஞ் சேர்ந்தார் பின்னும். 13

கு - ரை : கட்ட ஐம்பொறியர் - களைந்த ஐம்பொறிகளையும் உடையார். உளத்தினுள் - உள்ளத்தின்கண் நீங்காது விற்றிருப்பவள். அகிலமும் - எல்லா உலகங்களையும். நேர் கண்டு - எதிரே தரிசித்து. பூரண ஆனந்தம்- நிறைந்த ஆனந்தம். மாதவத்தார் - முனிவர்கள்.

ஆவயி னமர்ந்து காட்சி யற்புதச் சிறப்ப னைத்து
மோவற வியப்பு மேவ வொருவருக் கொருவர் பேசிப்
பூவம ரயன்மா லாதிப் புத்தேளிர் புரிந்து போற்றுந்
தாவருந் தலங்க ளெல்லாந் தரிசிக்கும் வாஞ்சை யுற்ருர். 14

கு - ரை : ஆவயின் - அவ்விடத்து. ஓவற - நீங்காமல். பேசி - உரையாடி. புத்தேளிர் - கடவுள். புரிந்து - விரும்பி. தா அரும் - நீங்கு தற்கரிய. வாஞ்சையுற்ருர் - விருப்பமடைந்தார்.

ஒருதினஞ் சுதைக்க டேச மொருதின நடுத்த லேச
மொருதினம் விண்டு நாத மொருதின மிந்தி ரேச
மொருதின நாக நாத மொருதின மிராம நாத
மொருதினங் கார்மு கேச மொருதின மகத்தி யீசம். 15

கு - ரை : சுதைக்கடேசம் - அமுதகடேசம். நடுத்தலேசம், விண்டு நாதம், இந்திரேசம், நாகநாதம், இராமநாதம், கார்முகேசம், அகத்தீசம் என்னும் தலங்களையும் முறையே முனிவர்கள் ஒவ்வொரு நாளாகத் தரிசித்தனர். அதன்பின்பு;

ஒருதின மேலைக் காயா ரோகண முண்மை மேவ
வொருதின மொளிர்சித் தீச மாகச்சென் றுருகிப் போற்றி
யொருவற மற்று முள்ள தலமெலா முவந்து காண்பா
ரொருமலர் மகனுந் தேரு வுயர்புடை யந்த ணுளர். 16

கு - ரை : மேலைக் காயாரோகணம், சித்தீசம் என்னும் தலங்களையும் ஒவ்வொருநாள் முறையே தரிசித்தனர். ஒருவு அற - நீங்காமல். ஒரு மலர் மகனும் - ஒப்பற்ற பிரமதேவனும். உயர்பு உடை - உயர்வுடைய.

ஒருதினந் தேவ தீர்த்த மொருதின முனிவர் தீர்த்த
மொருதினங் காக தீர்த்த மொருதினஞ் சறுவ தீர்த்த
மொருதினம் பிரம தீர்த்த மொருதினம் விண்டு தீர்த்த
மொருதின நித்த கங்கை யுவந்தனர் மூழ்கு வாரால். 17

கு - ரை: தேவதீர்த்தம், முனிவர் தீர்த்தம், காகதீர்த்தம், சறுவதீர்த்தம், பிரமதீர்த்தம், விண்டுதீர்த்தம், நித்த கங்கை முதலிய தீர்த்தங்களில் ஒவ்வொருநாள் முறையே முழுகுவாராயினர். உவந்தனர் - உவந்து: முற்றெச்சம்.

திருவிழாச் சேவை செய்துஞ் சிறப்பவைங் குரோசஞ் சூழ்ந்தும்
பொருவிலாக் காலந் தோறும் போற்றியு மிந்த வண்ணம்
வெருவிலா முனிவர் சின்னாள் வசித்தனர் விடைபெற் றப்பான்
மருவுலாந் தமது வைப்பை யடைதர மனங்கொண் டாரால். 18

கு - ரை: திருவிழாத்தரிசனம் செய்தும், ஐங்குரோச எல்லை வலம் வந்தும், காலங்கள்தோறும் வணங்கியும், இவ்வாறு சில நாட்கள் தலவாசம் செய்திருந்தனர். தமது வைப்பை - தமது இருப்பிடத்தை. சூத புராணிகரை நைமிசமுனிவர்கள் சிறப்போடு அழைத்துக்கொண்டு தம் இருக்கைபுக்கனர்.

அருமைசெய் புராணஞ் சொற்ற வருட்பெருஞ் சூத மேலோற்
கிருமைசெய் சிறப்பு நல்கி யினிதவ ணிருக்கை யுய்த்தே
யொருமைசெய் யணையாற் போற்றி யுறுவிடை பெற்றுப் பின்னர்த்
தருமைமா முகிலைத் தாங்குந் தம்மிடம் புகுந்து வாழ்ந்தார். 19

கு - ரை: அருமைசெய் புராணம் சொற்ற - அருமையையுடைய நாகைக் காரோண புராணச் செய்திகளை விரித்துரைத்த. இருமை செய் சிறப்பு - இரண்டு மடங்கு சிறப்புக்களை: இம்மை மறுமைப்பயனை அடைவிக்கும் பொருட்டுப் புராணிகருக்குச் செய்யும் குருதக்கிணை முதலிய சிறப்புக்களை எனினுமாம். தரு மை மா முகிலை தாங்கும் - மரங்கள் கரிய சிறந்த மேகங்களைத் தாங்கி நிற்கும். தம் இடம் - நைமிசாரணியம்.

இதனால் புராணம் சொல்லுபவர்க்குச் செய்யும் உபசாரமும், குருதக்கிணையும் கூறப்பட்டது.

தருமை மா முகிலை என்றது நயம்.

நூற்பயன்

கடல்புடை யுடுத்த நாகைக் காரோணப் புராணங் கேட்போர்
மிடல்கெழு பொருணன் காய்வோர் விருப்பொடு படிப்போர் நாளும்
விடலறப் படிப்போர்க் கம்பொன் வீகவோ ரெழுதி வைப்போர்
மடன்மல ராதி கொண்டு வயங்குறப் பூசை செய்வோர். 20

கு - ரை : நாகைக் காரோண புராணத்தைக் கேட்போரும், அப்புராணப்பொருளை நன்கு ஆராய்கின்றேரும், விருப்பத்தோடு புராணத்தைப் படிக்கின்றேர்களும்; நன்கு படித்துப்பொருள் சொல்லுவோருக்கு நனி பொருள் நல்குவோரும், அப்புராணத்தை எழுதிவைப்போரும், நல்ல மலர்களைக்கொண்டு புராணத்தைப் பூசை செய்கின்றவர்களும் ஆகிய இவர்கள். விடல் அற - நியமமாக; நீங்காமல்.

இம்மையின் மனைவி மக்க ளியைதரச் செல்வ மெல்லாஞ்
செம்மையி னனுப வித்துத் தேவர்தம் போகம் யாவும்
அம்மையின் மிகத்துய்த் தீற்றி லருமறை முடிவுந் தேருக்
கொம்மைவெள் விடையான் மேய சிவபுரங் குறுகி வாழ்வார். 21

கு - ரை : இப்பிறப்பில் மனைவி மக்கள் பொருந்தச் செல்வங்களை யெல்லாம் நன்றாக அனுபவித்தும், மறுபிறப்பில் தேவபோகங்களை மிகுதியாக அனுபவித்தும் முடிவில் சிவபுரத்தை அடைந்து வாழ்வார்.

இயைதர - பொருந்த. செம்மையின் - நன்றாக. அம்மையின் - மறு பிறப்பில். மறைமுடிவும் - உபநிடதங்களும். வெள்விடையான் - சிவபெருமான்.

கண்ணிய புகழ்சா னுகைக் காயாரோ கணப்பு ராணம்
புண்ணியம் பயப்ப தென்றும் போற்றுபு படிப்போர் கேட்போ
ரெண்ணிய வனைத்துஞ் சார்வா ரிகபர மாதி தம்மை
யண்ணிய பெயர்க்கு நல்கும் வல்லவ ரவரே யன்றே. 22

கு - ரை : கண்ணிய - கருதப்படும். நாகைக் காயாரோகணப் புராணம் சிவபுண்ணியத்தை உண்டாக்குவது, ஆகலின் எக்காலத்தும் விரும்பிப் படிப்போரும் கேட்போரும் ஆகிய யாவரும் எண்ணிய எல்லாம் கைகூடப்பெறுவார். தன்னைச்சார்ந்தோருக்கு இகபர சுகங்களைக்கொடுக்கும். ஆகலின் அவரே சிறந்தோராவார்.

கருந்தடங் கண்ணி யோடு காயாரோ கணப்பி ரானு
ரிருந்தரு டானம் போலு மேற்றமா ரிப்பு ராணம்
பொருந்தநன் கமருந் தான மாதலாற் புகலத் தேத்துத்
திருந்தவெவ் வளனு மன்னு மூறென்றுஞ் சேரா வாறே. 23

கு - ரை : நீலாயதாட்சி அம்மையாரோடு வீற்றிருக்கும் காயாரோகணத்து ஆதிபுராணர் எழுந்தருளியிருக்கும் இடம்போன்ற தூயதாகும், உயர்ந்த இந்நாகைக் காரோணப்புராணம் இருக்கும் இடமும். ஆதலால், சொல்லப்படும் அப்புராணம் இருக்கும் இடங்களில் இடையூறு சிறிதும் உண்டாகாது; எல்லா வளங்களும் நிலைபெற்றிருக்கும்.

வாழ்த்து

வேறு

போற்றுபுகழ் மலிநாகைக் காயாரோ கணத்தாதி புராணர் வாழ்க
வாற்றுபெருங் கருணையே யுருவாய கருந்தடங்க ணம்மை வாழ்க
மாற்றுதலி னீற்றெருடுகண் மணியணியுந் திருக்கூட்டம் வாழ்க மாசு
பாற்றுதிரு வம்பலத்து ணடநவிலுங் குஞ்சிதப்பொற் பாதம் வாழ்க. 24

கு - ரை : யாவரானும் போற்றிப் புகழப்படும் நாகைக் காயாரோகண தலத்துள்ள ஆதிபுராணர் வாழக்கடவர். உயிர்களுக்குச்செய்யும் கருணையே வடிவாகக்கொண்ட நீலாயதாட்சி அம்மை வாழ்க. திருநீறு உருத்திராக்கம் முதலியவற்றை அணிந்து விளங்கும் திருக்கூட்டம் வாழ்க. உயிர்வருக்கங் களின் ஆணவமலம் முதலிய குற்றங்களைப் போக்கியருளும்பொருட்டுத் திருச்சிற்றம்பலத்திலே அனவரத தாண்டவம் புரியும் தம்பிரானரது குஞ்சித பாதம் வாழ்க.

குஞ்சிதம் - வளைவு; அஃது எடுத்த பொற்பாதமாம்.

ஐம்புலன் வழியே சென்று அழிதன் மாலையவாம் விடயங்களை மெய் யென்று கருதாது அவற்றைப் பொய்யென்று களைந்து அவைகளோடுகூட்டி அறிவிப்பானாகிய சிவனே மெய் என்று உணரும் ஒருமலமுடைய விஞ்ஞான கலருக்கு அறிவுக்கறிவாய் நின்று சிவானந்தத்தேனை யூட்டியும்; இருமல முடைய பிரளயாகலருக்கு மான் மழு சதுர்ப்புச காளகண்ட திரிநேத்திரங்க ளோடு இடபாரூடராய்க் காட்சிதந்து ஆட்கொண்டருளியும்; அவிச்சை வயத்தராகிய சகலவர்க்கத்து மும்மலமுடைய ஆன்மாக்களுக்கு ஸ்ரீபஞ்சாக்கர நடனத்தால் திரிபதார்த்த ஞானத்தை விளக்கி மும்மலங்களையும் களைந்து திருவடி சூட்டியாளுதல் கடனாகலின் குஞ்சிதபாதம் வாழ்க என்றார் என்க.

நைமிசமுனிவர் பூசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2506

திருச்சிற்றம்பலம்

திருநாகைக்காரோணப்புராணம் முற்றிற்று

உ

செய்யுள் முதற்குறிப்பகராதி

[எண் — பக்கஎண்]

அகத்தியன் 293
அகமருடணன் 113
அங்குநின்ற 633
அங்கு நீங்கி 413
அஞ்சலைய 525
அஞ்சான் 531
அஞ்சியவித் 615
அஞ்சுகூறு 416
அஞ்சுதலி 309
அடங்காத 40
அடருமோ 499
அடர்கின்ற 290
அடவூர்மூன் 566
அடிசில்கை 523
அடிதெரிந் 534
அடிதொழு 670
அடிபணிந் 660
அடியமர் 134
அடியவரா 663
அடியவர் 443
அடியனேன் 418
அடியனேன் 470
அடியனேன் 599
அடியனேன் 670
அடியாரெதி 490
அடியேனறி 608
அடுகளிற் 483
அடுகளிற் 79
அடுசமர் 287
அடுதிறற் 380
அடுதொழி 477
அடுத்தகார் 495
அடுத்ததாகி 371
அடுத்தமல 295
அடுத்தவோ 358
அடுத்துவந் 442
அடுப்பவர்க் 70
அடுவேலெ 285
அடைந்தபல 271
அடைந்தவர் 548
அடைந்தவர் 664
அடையின் 225
அணிகிளர் 128
அணிபிறை 73
அணிமதில 646
அணிமலர் 343
அணிவளங் 554
அண்டத்தா 275
அண்டபகி 138
அண்டமெண் 79
அண்டரேத்திட 33
அண்டார் 101
அண்ணலவ 296
அண்ணலாரு 130
அண்ணலார் 639
அண்ணலெம் 323
அண்ணிய 537
அண்மையோர் 222
அதவமரா 434
அதிசயமா 590
அதிசயமிக 230
அதிசயம் 187
அதிதியரா 120
அதிருப 243
அதிர்தரும் 31
அதிர்த்திடு 524
அதுகுறித்தி 161
அதுதனைப் 279
அதுதெரிந்த 510
அதுதெரிந்த 526
அதுதெரிந்து 208
அதுதேர்ந் 569
அதுநிகர் 199
அதுபுரிந்து 223
அதுபுரி 256
அதுபுரியா 405
அதுபெருஞ் 666
அதுமகவான் 544
அத்தகுமிவி 423
அத்தடமது 553
அத்தயாம 471
அத்தருவெழு 441
அத்தலக்கு 589
அத்தலத்த 572
அத்தலத்தி 147
அத்தலத்து 147
அத்தலமான் 121
அத்தலமித் 665
அத்தலமுப் 229
அத்தலவிசே 625
அத்தனதந்த 483
அத்தான 449
அத்திரி ஆங் 231
அத்திருத்த 421
அந்தச்சமய 614
அந்தணரென் 196
அந்தணன 310
அந்தத்தல 273
அந்தத்தீர்த்த 225
அந்தத்தான 504
அந்தநகரத் 612
அந்தநற் 257
அந்தநற் 317
அந்தநற்றி 463
அந்தநற்றி 550
அந்தநன்ன 355
அந்தமாதல 227
அந்தமாதேவ் 159

அந்தமாத 419
அந்தமாத் 250
அந்தமாமு 288
அந்தமாவன 371
அந்தமாவி 292
அந்தமாவிலி 163
அந்தமினை 660
அந்தமுருக 121
அந்தமுனி 149
அந்தமுனி 406
அந்தமூர்த்தி 370
அந்தரநாட 314
அந்தவமை 270
அந்தவாரணி 441
அந்தவிக்கிர 664
அந்தவிசேட 604
அந்தவேட்டு 557
அந்தவேலை 213
அந்திமதி 397
அந்திமதி 450
அந்திவான் 427
அந்திவெண் 369
அந்நகர் 563
அந்நகர்வாழ் 537
அப்போது 299
அமைதர 95
அம்பரத்தி 655
அம்புன்னு 429
அம்மைதிரு 278
அம்மையென் 182
அயலவர் 74
அயனமொவ் 184
அயன்மகத் 462
அரசிருக்கு 427
அரசுசூழ் 109
அரசுசெய் 587
அரதனப் 75
அரபத்தன் 112
அரமகளிர 135
அரம்பைமே 177
அரம்பையே 559
அரவணி 519
அரவினல் 214
அரவின்வாய் 353
அராவணித் 657
அரிதவண 676
அரிதவணி 258
அரிதலைத் 189
அரிமதர் 115
அரியகார் 368
அரியகடவு 153
அரியகோசி 513
அரியபுண்ணி 551
அரியயன் 305
அரியவிந்நா 131
அரியாதிய 492
அரியினை 381
அரியெனும் 45
அருகுநாற் 366
அருஞ்சுதை 669
அருடரும 319
அருடலைக் 670
அருட்டிரு 391
அருட்பெருங் 288
அருட்பெருங் 322
அருண்மலி 647
அருண்மறுத் 204
அருத்தமா 444
அருந்தமிழ 635
அருந்தவ 417
அருந்தவ 463
அருந்தவர் 394
அருந்தவர் 398
அருந்தவத் 411
அருந்தவத் 428
அருந்தவத்த 505
அருந்தவத்து 549
அருந்தவ 584
அருந்தவரி 534
அருமறை 353
அருமறை 390
அருமறை 399
அருமறை 603
அருமறை 676
அருமைசெய் 678
அருமையி 280
அரும்புகொன் 511
அருவத்து 144
அருவமுத 2
அருவிவார் 495
அருவுருவங் 453
அருளிலாப் 372
அருளினென் 380
அருள்விராய 226
அருள்விராவு 601
அரையிற் 216
அலகோட்டு 1
அலங்குநங் 182
அலவனெள் 339
அலிங்கமை 367
அலையெறி 124
அல்லகண் 561
அவமிலா 514
அவரவர் 484
அவனருள 404
அவனிவாழ் 420
அவாமுத 341
அழலொரு 92
அழன்மணி 64
அழுமழக் 31
அளவிலாமறை 223
அளவிலாவலி 111
அளவில்பூ 34
அளவை 579
அளிகிளர் 387
அளிக்குங் 278
அளித்திடல் 455
அறமனைத் 148
அறிதுயில 354
அறிபல 20
அறிபெருங் 633
அறியவாற் 413
அறியுமேன் 216
அறிவதற் 339
அறிவினிற் 193
அறிவுடைய 38
அறுபதின் 199
அறைதரு 92
அறைபுகழ் 493
அறைபெரு 464
அறையியம 446
அறையுற 603
அற்புதப்பூ 423
அற்புதவிட 383
அற்றமறுத் 277

அற்றமே 417
அற்றமோ 601
அற்றமோர் 427
அற்றன 282
அற்றைநாட் 669
அனையகொடி 408
அனையடன் 364
அனையமா 334
அனையவசிட் 605
அனையவ 228
அனையவர் 533
அனையவனி 486
அனையவனி 621
அனையனைத் 323
அனையன் 240
அனையன் 554
அன்புசெயு 17
அன்றியுங் 262
அன்றியுநாக 56
அன்றுதொட் 193
அன்றுநம் 669
அன்றுமுத 302
அன்னகாலை 369
அன்னசாயை 365
அன்னதல 448
அன்னது 473
அன்னது 263
அன்னதை 123
அன்னதோர் 442
அன்னநன் 624
அன்னபுட் 319
அன்னமா 669
அன்னமாதவ 224
அன்னமாத்த 573
அன்னமுனி 150
அன்னமூர் 212
அன்னமே 511
அன்னரோடு 179
அன்னர்வெளி 240
அன்னவளை 238
அன்னவற் 355
அன்னவன 622
அன்னவன் சித் 118
அன்னவன்றவ 185
அன்னவன் 400
அன்னவை 461
அன்னியநாட் 22
அன்னைபோல் 32
ஆகமஞ்சரி 430
ஆங்கது 473
ஆங்குதொழ 102
ஆங்குநாங் 162
ஆங்குநின்று 516
ஆங்குநீ 513
ஆங்குவிழை 133
ஆங்குவேதி 411
ஆசாரவழ 463
ஆடவர்பல் 81
ஆடுங்கழலி 492
ஆட்டநறு 102
ஆட்டுதற் 486
ஆணத்தாரு 558
ஆணத்திற் 198
ஆண்டநாத 505
ஆண்டநாய 600
ஆண்டுநம் 205
ஆண்டுநல் 251
ஆண்டுமூன் 632
ஆதலங்க 76
ஆதலாலி 327
ஆதலிற்கும் 162
ஆதலிற்பிற 198
ஆதலினச் 297
ஆதலினம் 156
ஆதலினியு 605
ஆதலின்வரு 626
ஆதவன் 444
ஆதிசைவ 416
ஆதிநாணு 199
ஆதிபுராணத் 606
ஆதிபுராணப் 298
ஆதிபுராணரடி 617
ஆதிபுராணர் 569
ஆதிபுராணன் 552
ஆதியாகிய 369
ஆதியோடந்த 254
ஆம்பன்முத 42
ஆயகருந் 278
ஆயகார்த் 517
ஆயகாலை 270
ஆயகாலை 508
ஆயகாலை 560
ஆயகாரோண 611
ஆயதருமன 613
ஆயதல 447
ஆயதனுற் 235
ஆயதிரை 119
ஆயதோர் 547
ஆயபிண்ட 406
ஆயபுகழ் 136
ஆயபெருந் 447
ஆயபொதி 272
ஆயபொழு 348
ஆயமலர 159
ஆயவக்கா 256
ஆயவச்சி 258
ஆயவத்தடப் 231
ஆயவத்த 460
ஆயவத்த 573
ஆயவப்பி 354
ஆயவப்பொ 355
ஆயவனப் 237
ஆயவான 311
ஆயவிடுர 595
ஆயவினிதா 172
ஆயவெங் 205
ஆயிலாரி 146
ஆயுளின் 606
ஆய்ந்தவிண் 386
ஆரணமுழக் 22
ஆரணவோ 331
ஆரமுன் 563
ஆராவன்பி 273
ஆராவுடம் 492
ஆரூர்வாஞ் 46
ஆலமெழு 315
ஆலயம் 485
ஆலவெங்கு 442
ஆவமாகி 210
ஆவயினமர் 677
ஆவயினுள 518
ஆவாதுரோ 615
ஆவியிற் 464
ஆழிகடை 315
ஆழிசூழ் 632

ஆழிமிதப் 565
ஆழியின் 510
ஆழிவரை 410
ஆறைவட 640
ஆனந்தவன 309
ஆனந்தவன 662
ஆனந்தவனத் 160
ஆனியிற் 465
ஆன்றகார்த் 515
ஆன்றசாலி 206
ஆன்றதவத் 643
ஆன்றநறு 170
ஆன்றபதி 446
ஆன்றபல 592
ஆன்றவருள் 408
இகபரமுட் 119
இகலூர் 568
இக்குவாவ 624
இடையருப் 548
இடையருவ 639
இட்டமிக்க 81
இட்டிகை 267
இதங்கரை 571
இதுதெரிந்தி 226
இதுதெரியா 117
இதுமுதன 472
இதையுள் 30
இத்தகுமா 577
இத்தகுவன 112
இத்தகைய 135
இத்தரநிக 126
இத்தரம்பு 193
இத்தனையா 162
இத்தனைவர 550
இத்துணை 361
இந்தக்கரை 48
இந்தத்திற 490
இந்தநதி 447
இந்தநடமி 396
இந்தநற்று 568
இந்தநன் 160
இந்தநன்னு 588
இந்தநீர்மை 657
இந்தமாவி 360
இந்தவண் 419
இந்தவண்ணஞ் 349
இந்தவண்ணஞ் 511
இந்தவண்ண 560
இந்தவண்ண 658
இந்தவண்ணமெ 516
இந்தவண்ணம் 54
இந்தவண்ணம் 581
இந்தவரமளி 301
இந்தவளம் 267
இந்தவாற 211
இந்தவாற 427
இந்தவாறிரு 631
இந்தவாறு 176
இந்தவிக்கிர 380
இந்தவிசேட 398
இந்தவிதங் 44
இந்தவிதஞ் 45
இந்தவிதம் வளம் 103
இந்தவிதம் 298
இந்தவிதம் 613
இந்தவிலிங் 409
இந்தவெண் 509
இந்தவெந் 476
இப்பர்தங் 470
இமையவர் 488
இமையவர் 248
இம்மைப் 279
இம்மையின் 679
இரங்கிடுகா 161
இரங்கும் 616
இரணவேல 200
இரண்டுகேட் 71
இரந்தவர் 535
இரந்தவா 418
இரந்தவாறு 378
இரந்துவே 503
இரவிமதி 151
இரவிற் 558
இராப்பகனு 579
இராமநாத 411
இராமமோ 411
இராயிர 249
இருஞ்சுதை 201
இருதிறத்த 206
இருநான்கு 277
இருந்தசதா 260
இருந்தபிரா 138
இருந்தவ 352
இருந்தவத் 423
இருபத்து 390
இருப்பதெண் 427
இருமருப்பி 426
இருமுதுகுர 482
இருமுதுமாத 10
இருவருங் 212
இருவருங் 532
இருவரு 333
இருவருட் 130
இருவருமுரு 15
இருவிழி 337
இருவினை 454
இருள்வலி 462
இருள்வலி 587
இலகடமே 91
இலவவென் 649
இலைமுதற் 501
இல்லமெங் 109
இல்லமேய 556
இல்லறக்கு 82
இவர்நிலை 533
இவனிலை 247
இவனிலை 354
இவைமுதற் 669
இவைமுதற் 146
இவைமுன் 597
இவையரு 361
இவ்வண்ண 184
இவ்வாற 283
இவ்விதமெழு 23
இழிகுலத்து 233
இழிதரு 89
இழிதொழிலி 197
இழிதொழி 331
இழிந்தகே 110
இழுக்காவி 69
இளங்கதி 394
இளமழப்ப 66
இளமுனி 303
இளைத்தில 307
இறந்தவ 288

இறந்தன 381
இறுவது 42
இறைநாக 100
இறைபக 29
இறையவன் 228
இறையவன் 343
இறையவன்முன் 609
இறையிவை 344
இறைவழி 85
இனன்விடு 64
இனிச்செய 551
இனியியற்று 179
இனியியற்று 379
இனியும் 107
இனியெது 563
இனியெவன் 186
இனையகுற் 427
இனையவித 349
இனையான் 530
இன்பமெய்தி 115
இன்றுநீ 178
இன்றுநீவந் 600
இன்னதிருப் 643
இன்னது 192
இன்னநா 556
இன்னண 234
இன்னண 249
இன்னணங் 486
இன்னணங் 524
இன்னணநிக 291
இன்னணந்து 580
இன்னணமு 129
இன்னணமே 569
இன்னணமொ 183
இன்னணம் 553
இன்னணம்வள 591
இன்னபல் 656
இன்னபல் 444
இன்னபல்வளஞ் 76
இன்னபல்வளமு 331
இன்னபல்வீர 66
இன்னபுரி 585
இன்னமுநா 424
இன்னமும் 480
இன்னவாக 219
இன்னவைபல 389
இன்னவைய 481
இன்னுந்தவ 409
இன்னுமத் 572
இன்னுமத் 362
இன்னுமத் 666
இன்னுமப் 252
இன்னுமுயர் 157
இன்னுமேற் 512
இன்னுமோ 391
இன்னுமஃதா 442
ஈங்கிது 478
ஈசனைமடந் 328
ஈதுதானென 214
ஈதுதோன்ற 367
ஈட்டவல்ல 55
ஈரநெஞ்சி 211
ஈரம்புலர 616
ஈரிருகாலி 575
ஈன்றவன் 584
உடம்பிடை 233
உடம்பெழு 234
உடல்வலி 587
உடையாய் 300
உணர்வானு 457
உணவுமின் 656
உண்டுசுவை 542
உதுபதி 476
உத்தமவெங் 550
உந்திவாயு 530
உப்புவிலக் 47
உமையொரு 77
உயர்ந்தவ 16
உயர்பதி 455
உயிரிற்கல 47
உயிர்திற 402
உரவாய 25
உரவில்விட 150
உரவுயிரி 456
உரனெனப் 107
உரியயானை 559
உருகுநெஞ் 516
உருகுமெய் 316
உருத்திரப் 125
உருத்திரர் 143
உருவில்வா 547
உருவில் 619
உரைசெய 472
உரைசெயு 266
உரைசெயுமுல 140
உரைத்தசவு 117
உரைத்தருளி 164
உரைநவ 461
உரோகணி 459
உலகநாயகி 657
உலகமின்ற 516
உலையிற் 283
உலைவில் 201
உழன்மறந்த 499
உழிதருநா 603
உழுதுசேறு 496
உழுநரிரவும் 41
உளநமை 254
உளைவயப் 221
உள்ளங்குளி 273
உள்ளதல 540
உள்ளதலங் 569
உள்ளதீர் 561
உள்ளதை 481
உள்ளதை 524
உள்ளநெக் 404
உள்ளபஃ 619
உள்ளயாவு 598
உள்ளவனை 616
உள்ளுவா 505
உறங்குமொரு 593
உறவரு 358
உறுகதி 62
உறுதுய 290
உறுப்பினு 20
உறுவகேண் 180
உறுவரிது 120
உறையிட 262
உற்றகாத 367
உற்றதன் 403
உற்றபெரு 37
உற்றபொதி 348
உற்றவன் 144
உன்னைமக 296
ஊடலற்ற 498

ஊட்டினர் 632
ஊழிமுதல 639
ஊழிமுதல் 330
ஊறுதவிர் 44
ஊறுதெரித 100
எங்களுமுக 127
எங்குமவன் 151
எங்குமவன் 613
எஞ்சியவ 287
எடுத்துரைத்த 453
எடுத்துவந்து 375
எண்ணாத்தக் 500
எண்ணரிய 297
எண்ணரிய 643
எண்ணருந் 636
எண்ணருந் 646
எண்ணுதுநீ 530
எண்ணுவறு 612
எண்ணிய 460
எண்ணிய 265
எண்ணிய 286
எண்ணிய 330
எண்ணிய 358
எண்ணிய 553
எண்ணிய 403
எண்ணிய 422
எண்ணியூ 445
எண்ணியபடி 201
எண்ணியபூங் 153
எண்ணியபோக 239
எண்ணியவாங் 162
எண்ணியவெண் 389
எண்ணில்பல 39
எதிர்தெரி 475
எதுகாணு 397
எதுகுறித்தி 572
எத்தலமித் 117
எத்தனைதர 580
எந்தையிதற் 594
எந்தையிற 385
எமைத்தொழ 389
எம்பெருமா 158
எம்மையா 516
எய்தருஞ் 664
எய்யென 65
எருமைபாடல 109
எல்லாச் 46
எல்லாமக 491
எல்லாமின் 569
எல்லாவம 272
எல்லியன் 634
எல்லிருமி 119
எல்லையை 675
எவனருள் 187
எவனுடை 187
எழுதிடும் 11
எழுதுமோ 413
எழுத்ததிகார 96
எழுந்தமுனி 117
எழுந்தவர் 448
எழுந்துபல் 383
எழுபது 11
எழுபரித்தே 461
எழுமுனிவருக் 130
எழுமுனிவருமி 128
எழுமுனிவரர் 425
எழுவிடங் 392
எறிகடல 385
எறிதிரைச் 330
எறிதிரைச் 263
எறிதிரை 124
எறியுந்திரை 409
எனத்துதி 312
எனமுறை 308
எனவுரைத் 443
எனவுரைத் 516
எனவுரைத் 578
எனைவிடை 321
என்செய்வா 288
என்புகடோ 577
என்புவற்ற 211
என்றகாலை 212
என்றலுந்திரு 198
என்றலுமவ 402
என்றலுமுமை 194
என்றலுமுல 307
என்றலுமுறு 572
என்றலும் 322
என்றலும் 538
என்றவார்த் 598
என்றனன்கேட் 605
என்றனன்முக் 258
என்றான்ற 530
என்றுகரு 457
என்றுகூறலு 178
என்றுகூறவிறைஞ் 223
என்றுகூறவிறைவி 227
என்றுகூறிடு 511
என்றுகூறியா 515
என்றுதம் 201
என்றுதம்பி 420
என்றுதுதி 277
என்றுதுதி 300
என்றுதுதி 492
என்றுநற் 318
என்றுநவி 586
என்றுநுதல் 267
என்றுநை 651
என்றுநைந்து 443
என்றுநைந்து 341
என்றுநைந்து 428
என்றுநைந்துரு 192
என்றுநெஞ் 279
என்றுபல 119
என்றுபன் 292
என்றுபித 347
என்றுபோற் 418
என்றுமதி 351
என்றுமற்ற 374
என்றுமாதவ 630
என்றுமாத் 256
என்றுமோர் 184
என்றுவெய் 352
என்றுளத் 326
என்றொரு 204
என்னலு 539
என்னுடை 306
என்னேநா 238
ஏங்கிச்சோ 557
ஏட்டைதீர் 596
ஏர்த்தமேன் 368
ஏறுகள் 311
ஏற்றஞ்சால் 21
ஏற்றஞ்சால 203
ஏற்றமா 355

ஏற்றயானை	219	ஒழிவறவு	603	கடிமலரோன்	388
ஐயாறாறு	567	ஒழுகுறு	469	கடிமலர்	465
ஓடியுமாத்	437	ஒளிகிளர்	458	கடுக்கவின்	526
ஓடியெறி	218	ஒளிசெயெண்	413	கடுநுகர்	229
ஓட்டிமேய	106	ஒளிகெழு	462	கடுமுதுவே	622
ஓராயிரங்	327	ஒளியவிர்	461	கடுவிசை	401
ஒருகடம்பு	107	ஒளிவளர்	318	கடையெழு	200
ஒருகருந்த	252	ஒள்ளியகிண்	396	கட்டுவீடி	254
ஒருகவி	352	ஒள்ளியகரு	581	கணையோன்	220
ஒருகவிமிதி	467	ஒற்றைமீன	659	கண்களி	527
ஒருகாலுய	48	ஒன்றாகிப்	126	கண்டகண்	305
ஒருகுரோச	504	ஒன்றாகிப்	299	கண்டகமா	584
ஒருகுறுமுட்	39	ஒன்றாயெண்	454	கண்டதே	555
ஒருங்குநீ	401	ஒன்றினுந்	525	கண்டபன்	477
ஒருங்குபகா	27	ஒன்றுபத்து	208	கண்டபோது	506
ஒருசிலைகுனி	286	ஒன்றுபல	447	கண்டபோது	557
ஒருசிலைமத	67	ஒன்றுமாத்	438	கண்டமங்	179
ஒருசுதந்தர	63	ஒன்னலர	587	கண்டமலர	299
ஒருதிலோத்	510	ஓகைமேவி	428	கண்டமன்ன	222
ஒருதினஞ்சட்	665	ஓகையார்	628	கண்டலங்	432
ஒருதினஞ்சு	677	ஓங்கல்	500	கண்டவரி	255
ஒருதினத்	629	ஓங்குகாஞ்சி	107	கண்டவரெ	589
ஒருதினந்தே	678	ஓங்குகா	646	கண்டவர்	229
ஒருதினமே	677	ஓங்குகாரோ	260	கண்டான	274
ஒருபதும	624	ஓங்குசீர்	403	கண்டிடின்	246
ஒருபரசிவ	304	ஓங்குதென்	184	கண்டிடு	183
ஒருபுறத்தி	558	ஓங்குநாகை	630	கண்டிராம	367
ஒருமருப்பன்	169	ஓங்குபொன்	68	கண்டுகோசி	511
ஒருமலத்த	110	ஓங்குமிந்	255	கண்டுதாழ்	630
ஒருமலர்	444	ஓடதிகொடு	200	கண்ணுடு	298
ஒருமலை	338	ஓடுகலங்க	49	கண்ணியபுக	679
ஒருமுலை	355	ஓதிமத்தி	415	கண்ணியருக்	393
ஒருமுனி	82	ஓதுபுகழி	452	கண்ணியபா	229
ஒருவருங்	63	ஓவமோர்	494	கண்ணிய	606
ஒருவரை	336	ஓவருமா	306	கண்ணியநீற்	607
ஒருவரை	533	ஓவென	234	கண்ணுதல்	674
ஒருவர்கண்	210	கங்கைமுற்	261	கண்ணுமத்	460
ஒருவர்நேடி	498	கங்கையின	160	கண்ணுவ	163
ஒருவிழுத	441	கங்கையின்	564	கண்ணுவமுனி	249
ஒருவிறன்	645	கஞ்சநாண்	412	கண்ணுவன்	253
ஒருவினம்	181	கஞ்சமனைத்	350	கண்ணைவிடு	537
ஒலிகடலு	351	கடல்புடை	678	கண்மலர்	321
ஒழியாக்	408	கடவுளர்	652	கண்மலர்	361
ஒழியாவ	347	கடனனி	239	கதலிக்க	244
ஒழியாவோ	272	கடன்முழு	141	கதிரவன்	23

கதிரவன்	72	கரையமர்	59	கன்றையுள்	35
கதிரவன்	382	கரையுமத்	131	காகநள்	246
கதிரவன்றகரி	671	கரையெறி	445	காகமேவு	32
கதிரெழு	98	கலங்கயா	405	காசியினி	672
கதிரெழுமுன்	239	கலங்கனீ	40	காஞ்சிவந்	626
கதிர்கமல	44	கலமலி	424	காடுமேவி	557
கதிர்பொழி	124	கலமலி	465	காட்சிதந்	163
கந்தமாமல	413	கலிமிகு	200	காட்சிதந்த	186
கந்தரு	359	கலைநவில்	231	காட்சிதந்த	360
கந்தர்	631	கலைபயி	673	காணரும்	580
கந்தலிலா	574	கலைமாமதி	243	காண்டலு	342
கயிலைய	518	கலைமுழுது	395	காண்டலு	383
கரவிற்	498	கலைமுழுது	400	காண்டலு	580
கராசல	659	கலைமுன்	417	காண்டவா	618
கராமலை	567	கலையனைத்	122	காதரமிரி	672
கரிசறு	459	கலையுணர்	293	காதலங்	343
கரிசில்	602	கவர்மனம்	83	காந்து	28
கரிபல	282	கவிகறா	97	காமநாச	512
கரியநாக	111	கவைபடு	174	காமருசித்	118
கரியமல	541	கழகவிடங்	5	காமருநா	489
கரியமாய	34	கழுகுரு	534	காமலிவள	15
கரியவாண	414	கழுமுளொன்	663	காமர்முலை	42
கரியுரி	378	கழைகுழை	351	காயுங்கனி	440
கருகிருடி	471	களிகிளர	298	காயுஞ்சீற்	217
கருதருவ	464	களிசெய	395	காய்தொழி	285
கருதியகா	229	கள்ளமோ	529	காரோணப்	595
கருதினவு	147	கறுப்பு	495	கார்த்திகை	463
கருந்தடங்க	3	கறைதபு	94	கார்த்திகை	490
கருந்தடங்	310	கறைதபு	161	காலங்கட	395
கருந்தடங்	353	கறைதபு	311	காலனை	287
கருந்தடங்	424	கறையணா	362	காலெலாங்	330
கருந்தடங்	513	கறையமை	479	காலைமாலை	51
கருத்தடங்	544	கறையிலா	560	காலையிற்	332
கருந்தடங்	601	கற்பகநா	488	காலைவள	172
கருந்தடங்க	103	கற்பநீற	641	காவண	634
கருந்தடங்கன்	623	கற்பமொளி	133	காவலரை	281
கருந்தடங்கன்	634	கற்புமேவி	364	காழிமுற்	668
கருந்தடங்கன்	677	கற்றகல்வி	211	காற்கூறு	614
கருந்தடங்கன்	679	கற்றவரே	121	காற்றின்	285
கருந்தடங்கண்ணி	20	கற்றவர்	383	காற்றுபல்	16
கருந்தடங்கண்ணி	75	கனிதரு	236	கானார்மல	489
கருமழுமா	454	கனியளா	436	கிட்டும்வாச	224
கருமல	571	கன்முத	43	கிளிமூக்	244
கருமவேரை	596	கன்றுபசி	593	குடசமால	506
கருமுகில்	336	கன்றுமான்	360	குடசமூல	506

குடசமூல 514
குடதிசை 504
குடந்தை 357
குடமதிய 357
குடமதிவரு 486
குடைந்த 225
குடையொலி 136
குடைவெண் 227
குணகடற் 126
குணகடற்பெரு 178
குணகடற் 213
குணகடற் 374
குணமலி 325
குணமலி 528
குணமலி 673
குண்டையூர் 645
குரவமர் 646
குரவன் 207
குரவுபுனை 450
குருமனை 520
குருமொழி 249
குருமொழி 552
குருவைமாட் 556
குலமணி 591
குலமுத 540
குலமுனி 77
குலம்படு 525
குலவுமொழு 583
குலவுவா 59
குவலயத் 431
குழமலை 565
குழிதர 22
குழைகிழி 336
குழைபடு 80
குழையடர் 76
குளிகனென் 362
குளிர்வான 437
குறிகுணங் 317
குறியிடைக் 519
குறுமுனீவ 289
குறையற 195
குனிசிலைப் 175
கூகைகளி 346
கூடிச்சென் 218
கூடியபத் 479
கூடியபூ 437
கூடியபூநிறை 436
கூடுசாயை 365
கூடுதிறத் 538
கூடுதோலு 312
கூடுபல 397
கூர்முக 538
கூறுசந்திதா 169
கூறுமாமை 49
கூறுமுப்பத் 199
கூற்றமிர 347
கூற்றம்பல் 217
கூற்றுவன் 152
கூற்றுவன் 305
கெடாதுற்ற 143
கேடிலபர 585
கேடில்புகழ் 409
கேடுசெய் 478
கேடுபோக்கி 225
கேட்டபோது 599
கேட்டமாத 511
கேட்டமாதவ 222
கேட்டவேந்த 216
கேத்திரஞ் 236
கேத்திரம் 310
கைதவன் 635
கொடிமதில் 444
கொடிமுத 290
கொடிய 125
கொடியவ 233
கொடியனெ 532
கொடியுரு 251
கொடுங்கார் 284
கொடுமை 145
கொடுவலி 574
கொடுவிட 316
கொடுவினை 602
கொடையுய 325
கொண்டுபோய் 207
கொலைப்பழி 603
கொல்லவெழு 348
கொழுநர் 345
கொழுந்து 166
கொழுவிமிற் 174
கொள்ளுவா 496
கோடலினு 238
கோடிமற் 26
கோடிழந்த 220
கோடுகுறை 544
கோடுகொண் 653
கோடுசிலை 281
கோணிலை 402
கோலமா 84
கோலமேய 176
கோலவங் 71
கோலாற் 284
சக்கரதீர்த் 590
சங்கரசம்பு 388
சங்கரசம்பு 609
சங்கரநின 308
சங்கரனு 150
சஞ்சிதமுன் 457
சடைமருவு 566
சணபகவன 329
சதுமுகனு 390
சத்தசத்து 454
சத்தனையள 529
சந்தவிந்தி 415
சந்தனுவென் 542
சந்திவந் 555
சந்துகடோ 576
சம்புபொன் 108
சராசரமனை 181
சயந்தன 190
சறுவதீர்த் 346
சற்றினிநின் 315
சாதமறை 149
சாதலும் 188
சாதுநந்தி 364
சாதுபாய 435
சாலைகள் 231
சாயலந் 339
சாய்ந்தார் 283
சாற்றிடு 12
சாற்றுமேன் 562
சிங்கம் 218
சிதம்பர 565
சித்தர் 137
சித்திகள 662
சித்தியை 564

சிந்தாமணி 242
சிந்துவார 166
சிலபகலங் 651
சிலபகலருந் 619
சிலபகல் 485
சிலைவளைத்த 208
சிலைவாங்கு 282
சிவசரித் 415
சிவபரன் 338
சிவநிசி 487
சிறந்தபல் 468
சிறந்தவா 84
சிறிதுணர்ச் 558
சிறியகல்வி 271
சிறியிலை 389
சிறுதாய் 407
சிறுமுழக்க 655
சிறையுடை 266
சிற்பநூல் 332
சிற்றுதரம் 165
சினகரங் 415
சின்னுள் 611
சிலமார 504
சிலவரோதய 440
சிரார் 269
சிரோணத் 440
சிர்பூத்த 2
சுகமுயர் 551
சுடுசினந் 599
சுடுதொழி 475
சுத்தவக் 514
சுந்தரத்த 494
சுந்தரவிட 485
சுரதனெனு 604
சுரும்புமுரல் 4
சுழியுங்கழி 50
சுரவேறு 19
சுற்றமும் 588
சுற்றுமுள்ள 428
சுற்றுறை 484
சூடுமாசை 500
சூடுவனி 320
சூதமுல்லை 35
சூரியனமை 462
சூருயிர் 459
சூலடைந்த 221
சூலமொன் 306
சூலவெம் 191
சூழுமணி 47
சூழ்வான் 569
சூளதாய 426
செக்கரஞ் 320
செங்கணொடு 614
செங்கழு 337
செங்கை 105
செந்தாமரை 345
செம்மணி 100
செம்மை 101
செயிரின் 419
செழுநலம் 389
செழுமணி 185
செழும்பாட 52
செறிசுவை 552
செறிதரு 203
செறிபல 388
செறிபெரு 239
செறிபெருந்தவ 249
செறிபெருந்தேவ 257
செறிமரக் 522
செறிமலர் 527
செறியிளைப் 189
செறியிது 477
செறிவளங் 224
செற்றமில் 259
செறிவண் 244
சேவின்மே 108
சொல்லச் 51
சொல்லரு 539
சொல்லவாய 106
சொற்றசாப 599
சொற்றசொன் 385
சொற்றநாற் 333
சொற்றபாத் 169
சொற்றலுங் 383
சொற்றவத் 230
சொற்றவுத் 96
சொற்றவாச 214
சொற்றவார் 503
சொற்றவாற 373
சொற்றவாறு 367
சொன்னமுடி 237
சோதியை 533
சோமலிங்க 540
ஞானசம்பந் 637
ஞானமுன் 482
தகுவரா 414
தகைதரு 577
தங்களிற் 61
தங்களின 135
தங்களுள் 675
தங்குசுந்த 389
தங்குதாப 414
தங்குமிவ் 443
தங்குமோ 497
தடநெடும் 185
தடிகடற் 12
தடுப்பருஞ் 247
தடுப்பருந் 30
தணிதரா 628
தணிமனத் 671
தண்டவா 507
தண்டளிரு 118
தண்டமொன் 306
தண்டுழாய் 666
தண்ணிய 260
தண்ணியரும் 8
தண்மையும் 233
தந்தத்தான 430
தந்தைசொற் 365
தந்தைதுற 541
தந்தையா 160
தந்தையா 342
தமனெரு 482
தம்பரியாய 60
தம்மைநோக் 598
தரியலரு 64
தருக்கா 273
தருதிறலு 402
தருப்பை 230
தருமபுஞ்சனே 554
தருமபுஞ்சன் 557
தருமமாதி 375
தரைமுதலு 126
தரைமுதல் 301
தரையடை 502

தரையில்	654	திரிபுரமெரி	387	துடிந்திடு	219
தலத்தின்	653	திருகழுக்	564	துட்டமிரு	584
தலமுதல்	673	திருகுகோட்	173	துட்டனென்	175
தலமொரு	260	திருகுகோட்டு	145	துதிபுரிப	203
தலவளநந்	147	திருகுதிரி	364	துதியுள	322
தலனமை	253	திருதன்மா	112	துள்ளுமோர்	36
தலேமிசை	667	திருத்தகு	518	துறவின	85
தலேயமை	304	திருத்தமிகு	155	துன்றிய	422
தலேயும்பாத	33	திருநகர	191	துன்றுவெள்	56
தலேவிரி	597	திருந்தவொளி	14	துன்னிய	446
தவமரு	275	திருந்திய	317	துன்னியமாத	618
தவமுனி	245	திருந்துகாரோ	619	தூசுடை	649
தவமுனி	471	திருந்துசிறப்	451	தூயகங்கை	213
தவம்பொலி	572	திருந்துதரு	172	தூயகங்கை	223
தவாமயக்	379	திருந்துநங்	214	தூயகோசி	514
தழல்படு	479	திருந்துமன்	376	தூயதேவ	349
தழியுவந்	512	திருப்பத	564	தூயதேவ	516
தழுவியசிலே	146	திருப்புகலூ	645	தூயபாற்	514
தனியமை	88	திருமகண்	186	தூயபுகழ்	99
தனியுயர்	674	திருமகமு	312	தூயபுண்	250
தனேயடை	353	திருமகள	576	தூயபேரொளி	558
தன்மார்ப	99	திருமலே	670	தூயமலர்	295
தன்திருமார்	99	திருமுனேப்	644	தூயமுனி	583
தன்னகர	313	திருமேனி	190	தூயவந்ந	468
தன்னரசு	356	திருவடி	137	தூயவரை	667
தன்னேயே	123	திருவளம்	488	தூயவாகம	374
தாமரை	316	திருவளர்	444	தூயவானி	487
தாயினுள்	426	திருவாபர	489	தூயவான்	332
தாலத்த	49	திருவிழா	678	தூயவுபவீத	170
தாலமிழ	544	திரைகெழு	665	தெங்குரும்	554
தாவருந்தி	623	திரைக்கட	78	தெரிதரி	563
தாவரும்புக	195	திரைசெய்	182	தெரித்தவ	449
தாவரும்	69	திரையுலா	175	தெரிந்த	424
தானமண	432	திரையெறி	535	தெரியமூ	48
தானவரை	292	திரையெறி	576	தெரியவ	301
தானவேந்த	179	திலம்படு	404	தெளிதர	391
தானினித	320	தினவிழா	485	தெளிதரா	515
தானுமதி	617	தீதிலாத	505	தெளிவள	168
திகழ்நவ	460	தீயசெய்	211	தெள்ளிய	23
திங்களஞ்	333	தீயதான	208	தெள்ளிய	250
திங்கள்	276	தீயவரக்	410	தென்கடற்	510
திசைதேர்	270	தீயினும்	233	தென்புல	398
திதியளித்	208	தீராதவரு	101	தென்றமிழ்	516
திராவிட	610	துங்கநன்	664	தென்னவன்	540
திரிபுரமு	308	துங்கமிகு	344	தென்னுடுகாக்	614

தேங்குபேரு	87	நந்திநன்	443	நாகைமேவி	410
தேங்குவண்	508	நந்திபிரான்	448	நாகைமேவி	428
தேடருந்	279	நந்திமுற்	360	நாகையடை	605
தேம்பாடல	54	நந்திநாத	445	நாகையின்	579
தேம்புகின்ற	55	நந்தியாதி	427	நாகையென	539
தேயாவா	435	நந்தியாவட்	166	நாகையென்	515
தேரிற்புகு	283	நந்துசெந்	95	நாகையை	526
தேவசாலித்	509	நந்துபல்	59	நாகைவெண்	578
தேவதீர்த்தப்	205	நமதருட்	231	நாதனமர்	452
தேவதீர்த்தப்	227	நமனணுகு	308	நாந்தக	548
தேவதீர்த்த	266	நம்புமிக்	517	நாடியதிற	381
தேவதீர்த்த	412	நம்மடிக்	130	நாடுகாரோ	319
தேவதீர்த்த	428	நம்மடியர்	150	நாடுசனற்	133
தேவதீர்த்த	600	நம்மையே	178	நாடுசீர்	412
தேவநிரா	549	நரம்பெலும்	338	நாடுதளவ	171
தேவநீர்	626	நலங்கொ	625	நாடுதிருவ	450
தேவாவென்	568	நலஞ்செய்	575	நாடுதிற	280
தேனுலுமல	301	நலமலிதரு	251	நாடுநாகை	408
தேனைக்கா	567	நலமலிநாவ	632	நாடுபாற்	508
தொக்கமேன்	175	நலமலியா	668	நாடுபுரக்	538
தொழுதெழு	230	நலமலியு	148	நாடுமிக்	146
தொழுபவ	386	நலமலி	228	நாடுமிருவ	453
தோகைக்	634	நலமலி	400	நாணமே	366
தோகைமே	660	நலமார்	608	நாமலையா	565
தோடுசெறி	446	நல்குந்திரு	492	நாமவற்	502
தோய்ந்தா	449	நல்லநோன்	512	நாரணனு	586
தோலொடு	93	நல்லமின	638	நாரணனுட்	382
தோற்றமில்	129	நல்லவரு	340	நாலெனப்	419
தோற்றமி	412	நல்லவர்	70	நாவடிதே	564
தோற்றமுற்	555	நல்லவாய	597	நாறுகொன்	35
தோளிழந்	210	நல்லார்க	396	நாறுசுவை	642
தோன்றி	32	நல்லாவுதி	350	நாறுமலர்	458
தோன்றுகா	367	நறியதீஞ்	597	நாற்றஞ்	662
தௌவை	639	நறுமலர்க்	17	நானந்த	395
நகர்வள	60	நறுவிரை	335	நித்தியகங்	293
நகுகடல	61	நள்ளருந்	247	நிரயம	474
நகுசடை	190	நன்றிகொல்	63	நிருதியா	366
நக்கிலிய	545	நன்றுகோசி	510	நிலமுரத்	151
நடந்ததோ	512	நன்னுக	545	நிலம்பூத்	19
நடிப்பவ	275	நன்னுகபட்டி	104	நிலவிய	357
நடுவன்முன்	480	நாகமா	56	நிலவுசெந்	314
நட்டபரிதி	407	நாகமாநகர	362	நிலவுதிரு	13
நட்டமுதல	41	நாகமாநகர்	58	நிலவுவச	75
நண்ணல்	276	நாகைநண்	512	நிலவுவண்	337
நண்பொடி	674	நாகைநாத	509	நிலாவணி	265

நிலைகலங்	212	பச்சைமுகி	297	பயம்படு	21
நிலையுயிர்	574	பஞ்சகந்த	611	பயன்விழை	240
நில்லென	287	பஞ்சசனன்கண்	241	பரசிராம	364
நிறுவிப்பூ	509	பஞ்சசனன்கொள்	238	பரசிவந்	333
நிறைகொம்	437	பஞ்சசனன்செய	240	பரசிவனடி	305
நிறையான்	366	பஞ்சதுந்து	661	பரசிவனு	303
நினைசயி	500	பஞ்சமலக்	592	பரசிவனே	158
நினைதரு	97	படர்தலு	472	பரசிவனை	134
நின்றமான்	377	படுகடற்	78	பரசுதீர்த்	514
நின்னையமை	347	படுகடன	341	பரதிரவிய	232
நீதிநூல்	593	படுசுவை	190	பரந்தகாம	344
நீடுதழல்	543	படுமதக்	90	பரமடந்தை	206
நீடுவளங்	583	படைத்த	158	பரமடமாத	621
நீடல்வாய்	37	படையிழந்த	210	பரமதத்த	416
நீடிமேன்	559	படையொடு	531	பரம்பர	337
நீடுபெரு	543	பட்டநிறை	345	பரம்பரணி	327
நீடுமாமக	552	பணிந்தமண்	386	பரவரு	253
நீயுமவ்வ	561	பணிந்தமாய	372	பரவருள்	484
நீரும்வெந்த	125	பணிந்து	508	பரவியகிடு	74
நீவிரவா	120	பணியரசி	363	பரவினர்	676
நீறுகண்	588	பணியிது	581	பரவுகின்ற	174
நீறுகண்மணி	232	பணைதொறு	38	பரவுசாமை	36
நீறுமெய்ப்	196	பணையுட	43	பரவுசெம்	226
நீறுமெய்விர	24	பண்டுபோல	428	பரவுநாங்	255
நீன்மணியு	68	பண்டையுருப்	595	பரவுமந்திரி	90
நுதல்விழி	13	பண்ணவ	304	பரவுமுடி	7
நெடியமா	660	பண்ணியகலை	145	பரவுவசிட்	604
நெடுந்திற	480	பண்ணியமோ	171	பரவைநீர்	291
நெருங்கு	641	பண்ணிலா	326	பரவைவெண்	636
நெறியொழு	235	பண்புமிக்	570	பராசரப்	420
நெற்றியிற்	65	பண்மயவெ	651	பராமுகஞ்	608
நேசமார்	517	பதிபசுபாச	7	பராவுமன்	405
நேர்தெரி	474	பதிமரபிற்	9	பரிதியின்	522
நேர்ந்த	555	பதியமை	236	பரியுகை	209
நேயமே	225	பதுமநன்	338	பரிவிரை	221
நேயவவ்வி	251	பத்திநெறி	450	பருவமுறு	41
பகர்தேவ	243	பத்திமேவு	415	பரைநிறுவி	519
பகன்மறை	289	பத்தியின்	582	பரையாதி	340
பகைமுழு	62	பத்திரசேன	627	பரையொரு	624
பகையானை	274	பத்திரன்	586	பலசமயத்	26
பகையுயிர்	384	பத்தூர்	647	பலநிவேத	168
பகைவரைப்	80	பந்தமறு	294	பலமுனி	72
பங்காட	568	பந்தமில்	164	பலவிரித்	147
பசுக்களை	11	பந்தமில்	638	பலாசுபற்	110
பச்சிமத்	513	பந்தமேவி	110	பலியுண	610

பல்லிய 387
பல்லுக் 237
பல்லுயிர் 518
பல்வகை 28
பல்வகைக் 73
பற்றுதந் 61
பற்றுநீத் 180
பழிதபு 266
பழியில் 510
பழுதறு 129
பழுதார் 284
பனிமலை 228
பனிவரைத 139
பனிவரையி 173
பன்முறை 318
பன்னகவே 362
பன்னரும் 70
பன்னரும்பு 672
பன்னெடு 459
பாகசாத 590
பாடலின் 81
பாட்டளி 574
பாதகமா 606
பாதலநின் 382
பாதலம் 498
பாயமல 610
பாயமுகி 280
பாயமேக 34
பாயவிரொன் 128
பாய்தரும் 656
பாரோரு 616
பார்த்திவ 491
பார்புகழ் 521
பார்பூத்த 15
பார்முழு 520
பாலாகி 300
பாலையும் 66
பால்கறந் 578
பாவகாரி 207
பாவநாச 366
பாவநாசஞ் 513
பரவநாளு 507
பாவிசெய் 536
பாற்குள 507
பானித்தில 493
பிணரியட 468
பிணையுமி 177
பிரணவத் 153
பிரமதீர்த் 302
பிரியநா 258
பிரியமிக 156
பிரியமேவி 375
பிருகுவின் 490
பிழைவள 28
பிறங்கிய 464
பிறைக்கண் 276
பிறைபடு 69
பிறைமுடி 341
பிறையின் 491
பிறையென 334
பின்னராதி 600
பின்னரீங் 502
பின்னரு 57
பின்னர்நீ 222
பின்னர்மற் 334
பின்னர்வண் 520
பின்னர்விசி 658
பின்னிலந் 506
பின்னுமோது 377
பின்னுமோர் 392
புகழ்திரு 644
புக்கவன் 461
புக்கவன் 588
புண்டரீகப் 263
புண்டரீகமுனி 178
புண்டரீகன்பொரு 180
புண்டரீகன்பொலி 177
புண்ணிய 436
புண்ணிய 547
புண்ணிய 577
புண்ணியதேவ 623
புண்ணியநா 640
புண்ணியமரு 76
புண்ணியமலி 116
புண்ணியமலியும் 668
புண்ணியமூர் 132
புண்ணியமே 398
புண்ணியம் 194
புண்ணியம் 21
புண்ணியம்பய 483
புதல்வியர் 546
புதையிருட் 400
புதையிருள் 261
புரந்தரன் 379
புரம்பொடி 599
புரவலர் 625
புரவலவ 354
புரியுநாள் 378
புரைதபு 200
புரைதவிரு 12
புரைதவிர் 74
புரையெறி 148
புலமாரும் 392
புலிமடங் 596
புலிமுகத் 219
புலிமுனி 396
புலியதள 142
புலியொடு 668
புல்லிய 39
புவனங்க 138
புவனங்க 339
புள்ளலை 330
புள்ளுமா 131
புறச்சமய 451
புறநகர 98
புனல்வற 291
புனிதவெண் 421
புனையுரு 152
புன்மைசால் 31
புன்மைமேய 55
புன்னையங் 310
புன்னையார 434
பூசனைபுரி 309
பூசைசெய்த 573
பூசைசெய்ய 508
பூசைசெய்ய 598
பூசையிவ் 329
பூசையிவ் 332
பூசையிவ் 359
பூசையின் 377
பூண்பதோ 648
பூதமும் 442
பூதலத்த 325
பூத்தகொன் 111
பூத்தபூவை 108

பூமேவுதுளு 15
பூவானை 274
பூவிற்பொலி 349
பெட்டியா 629
பெண்காட் 566
பெயர்விலாத 224
பெருகரு 449
பெருகுதன் 8
பெருக்கற 565
பெருநில 63
பெருந்தவப் 665
பெருந்திருக் 633
பெருந்திருப் 640
பெருந்திறல் 286
பெருமண 637
பெருமழை 24
பெருமறை 94
பெருமுனி 235
பெருவரு 37
பெருவலி 423
பெருவள 597
பெருவளி 114
பெறற்கரிய 452
பெற்றதாதை 555
பெற்றதாய் 5
பெற்றதூய 365
பெற்றதை 245
பெற்றமூர் 105
பெற்றவரி 633
பேசநீளிக் 426
பேறுபல 296
பொங்குகே 180
பொங்குசுவை 270
பொங்குமா 511
பொங்குமே 494
பொம்மல் 246
பொய்ம்மொழி 534
பொய்யினெடு 173
பொய்யின் 515
பொரவுழை 379
பொருசத 384
பொருசின 125
பொருதமே 106
பொருதிரைக் 124
பொருதிரைப் 618
பொருந்தவ 163
பொருந்துபற் 84
பொருந்தொரு 140
பொருள் 197
பொருபுர 523
பொருவரி 40
பொருவருங் 328
பொருவூருங் 380
பொருவரு 253
பொருவரு 548
பொருவரு 467
பொருவருமக 552
பொருவருமரு 550
பொருவரும் 192
பொருவரும்புண் 193
பொருவுதவி 165
பொருளிற் 50
பொருள்பெற 340
பொருள்பெற 488
பொருள்பெறு 13
பொலிதரு 422
பொல்லா 610
பொல்லாத் 615
பொல்லாவற் 640
பொல்லாவி 617
பொழிமது 298
பொழியரு 325
பொறிபுல 418
பொறிமறு 11
பொறியரு 424
பொறியிலி 539
பொறியொடு 371
பொறையமை 134
பொறையுரு 182
பொற்ப 105
பொற்றதை 654
பொன்செய் 617
பொன்புகல் 608
பொன்பொலி 665
பொன்னங் 346
பொன்னங் 491
பொன்னிற 255
போகமலி 406
போதமாகி 653
போதமார் 513
போதவிலா 607
போதியென் 600
போரூர் 568
போற்றினு 562
போற்றுசிற 118
போற்றுபுக 680
மகபதி 22
மகபதிநக 72
மகபதியொடு 384
மகப்பேறு 620
மடங்கலே 219
மடனில்வா 507
மடிதலில் 124
மணமகன் 356
மணமலர் 504
மணிகிளர் 547
மணிபல 388
மணிமனு 469
மணிவெயில் 67
மண்களிக்க 4
மண்டிலை 237
மண்டுவெம் 502
மண்ணகங் 484
மண்ணகத் 560
மண்ணிடை 152
மண்ணிடைப் 209
மண்ணின் 65
மண்ணுலகெ 650
மதலையாம் 213
மதிக்குமி 265
மதிக்குலஞ் 215
மதிதொறும் 487
மதிமலி 266
மதியமை 463
மதியமைச்ச 630
மதியழிந் 207
மதியெழவிந் 66
மதியொண் 410
மதுமடை 316
மதுவழிந் 487
மந்தரம் 354
மந்தரம் 378
மந்தரம் 382
மந்திரரு 525
மயிலிள 340

மரகதந் 549
மருந்தமு 403
மருடபுக 89
மருவநூன் 644
மருவருக் 166
மருவலரு 343
மருவலர்ப் 563
மருவியசன 303
மருவியவொன் 642
மருவுகார் 368
மருவுசாப 560
மருவுசுப் 546
மருவுதங் 33
மருவுபேர 661
மருவுமன் 517
மருவுவண் 58
மருவொரு 142
மருவொரு 248
மருளிலா 629
மருளினு 436
மலரவன் 535
மலர்மகனு 241
மலர்மகன் 97
மலர்மாலை 101
மலவிருடு 328
மலைமகளா 195
மலையினுஞ் 91
மழுவிராம 366
மழைநன் 499
மழைநேர் 244
மழைபொழி 25
மழைபொழி 542
மழையுரி 226
மழையொரு 401
மறப்பகை 25
மறவியுமி 575
மறிதிரைக் 17
மறிதிரைக் 290
மறிதிரைக்கட 61
மறிதிரைப் 195
மறிதிரைவா 397
மறியேறெ 650
மறைகளவ 151
மறைநான் 136
மறைபிற 88
மறைபுக 667
மறைபூசி 409
மறைமுடி 204
மறைமுடி 312
மறைமுதற் 191
மறைமுழ 102
மறைமுழு 78
மறைமுழுது 127
மறைமுழுது 149
மறைமுழுது 387
மறைமுற் 330
மறையவர் 571
மறையவர் 604
மறையவர்குல 621
மறையவர்முத 618
மறையவனு 386
மறையெனு 394
மறையவன் 532
மறையின 418
மறையினே 501
மறையுணர் 521
மறையெனு 139
மறையொலி 135
மற்றடம் 65
மற்றது 401
மற்றவற் 123
மற்றவனு 239
மற்றவன் 304
மற்றவை 361
மற்றவஃதி 473
மற்றிவரா 197
மற்றுமொ 57
மற்றுமோ 391
மற்றுள 59
மற்றுளதல 527
மற்றுளதல 549
மற்றைமா 517
மனங்கரைந் 634
மனத்தட 546
மனமொழி 254
மனைமக 571
மனையக 556
மனையொடு 465
மன்றமா 659
மன்னநின் 404
மன்னவர் 197
மன்னியகா 256
மன்னியசட் 672
மன்னியபல் 98
மன்னியபெரு 421
மன்னியவப் 159
மன்னியவிவ 113
மன்னுதேவ 215
மன்னுமத் 162
மன்னுமாய் 36
மன்னுமிராச 51
மன்னுமிவ் 139
மன்னுமின் 416
மாகதர் 137
மாசுதீர் 416
மாசொடு 17
மாடுநாக 433
மாண்டசம 450
மாண்டதவ 165
மாதர்முலை 44
மாதர்வெம் 73
மாதவச் 181
மாதவத்து 598
மாதவர்கள் 122
மாதவர்சூத 537
மாதவர்சூத 563
மாமேவு 1
மாயவனி 288
மாயவன் 323
மாயவன் 663
மாயவன்பிர 186
மாயவன்வந் 189
மாயோன் 531
மாலடியோ 448
மாலறநோ 538
மாலுமய 50
மாலைமௌ 53
மாவடியுல 625
மாவடுநேர் 566
மாற்றமே 649
மிக்கதுய 594
மிக்கமாத 364
மிக்கமேன் 601
மிடலொடு 217
மிடைபல 139

மிடைபெரு	521	முழுவலி	422	முன்னியவிப்	45
மிண்டாடி	648	முறிவிராய	31	முன்னுகாரோ	335
மிருகமுற்	18	முறைமக	93	முன்னுருத	426
மினியபொற்	75	முறையுண	141	முன்னைநா	290
மின்னகு	68	முறையுணரா	593	முன்னையின்	570
மின்னிய	264	முற்கலன்	585	மூத்தமகன்	541
மின்னுநா	215	முற்சனன	604	மூலகாரண	336
மீட்டுமப்	252	முற்றுதவ	314	மூலமுநடு	127
மீட்டுமொ	57	முற்றுமாய	559	மூவகையு	86
மீட்டுமோ	391	முனிசமரா	402	மெய்யுறு	235
மீனங்கவ	46	முனியுட	366	மெல்லிய	42
மீனவார்	216	முனியுரை	163	மேதகு	403
மீனேறு	8	முனிவரரி	674	மேதகுகுண	591
முகைவிரி	114	முனிவரரி	467	மேதகுசட்	664
முக்கணிறை	121	முனிவரர்	602	மேயகாரோ	342
முக்கணிறை	638	முனிவரர்	644	மேயகாரோ	429
முடியமுத்தி	209	முனிவரர்	662	மேயகார்	264
முடைபடு	248	முனிவரர்செயு	130	மேயகும்	289
முண்டகம	291	முனிவரர்வெளி	131	மேயசுதை	297
முதிர்புகழ்	632	முனிவரன	519	மேயசுந்த	630
முதுபெரும்	217	முனிவரனி	245	மேயதூய	174
முதுமதகு	38	முனிவரனு	549	மேயநீரா	86
முத்தமுண்	207	முனிவரனெ	60	மேயபல	153
முத்தமென	49	முனிவரன்	235	மேயமூர்	370
முத்தம்	346	முனிவரு	577	மேயவச்	129
முத்தரார	656	முனிவரை	236	மேயவாக	210
முத்தவாண	212	முனிவர்	414	மேயவித்	221
முத்திற்	242	முனிவர்சிற்	629	மேயவிள	170
முந்தியசெய்	641	முனிவர்வின	120	மேருவரைமி	271
முந்தியானை	30	முனிவனுரை	594	மேருவரையி	272
முந்துசன்	629	முனிவிடை	292	மேலாடுசோலை	439
முந்துதான்	356	முனையவச்	257	மேலாடுசோலைவி	439
முப்பதிற்	34	முனைவல	373	மேவரு	356
மும்மறை	155	முன்புநானி	328	மேவருமம்	71
முரசினை	24	முன்புபோ	255	மேவியமை	83
முருக்கை	144	முன்னடந்த	223	மேவியா	497
முருங்கை	52	முன்னமை	561	மேவுமா	429
முலையெனு	338	முன்னமொ	294	மேற்றிசை	517
முலையொரு	333	முன்னம்	29	மொழிதவப்	622
முலையொரு	334	முன்னரிய	543	மொழிதவ	481
முலையொன்	342	முன்னுல்	16	மொழிதரு	453
முல்லைவா	51	முன்னிகழ்	525	மொழிந்த	209
முழுகுறு	21	முன்னியத	451	மொழிபுகழ்	161
முழுவலன்	236	முன்னியபுண்	164	மொழிபெரு	259
முழுவலிச்	421	முன்னியபுண்	193	மோகமா	576

மோகவாண்	220	வருத்திடு	22	வனவிருப்	33
யாதுசெய்	373	வருமலர்	206	வனிதை	365
யாவருமெந்	262	வருவழி	523	வன்னிவனை	543
யாவரும்	234	வரைபொடி	245	வாகைமா	628
வடதிசை	675	வரைப்ப	250	வாகைமாத	503
வடதிசைக்	89	வரையக	25	வாகையந்	627
வடுகனென்	663	வரையாதி	52	வாகையர	489
வடுப்படா	497	வரையிற்	53	வாங்குதெண்	667
வணங்குபு	311	வரையினு	73	வாசித்த	609
வணிகர்	232	வரையுதித்த	9	வாடாத	134
வண்டுபடு	167	வரையுறு	26	வாதமுற்	142
வண்பது	204	வலனுடை	475	வாரிசூழ்	576
வண்மைச்	242	வலனுயிர்	384	வாரிதி	62
வதரியெழு	167	வலிகெழு	546	வாயர	675
வதிதரு	455	வலியவா	501	வாய்மலர்	313
வந்தகர	407	வலைபிடி	106	வாலிழந்த	218
வந்தகார்	368	வலையகப்	654	வாளியோ	220
வந்ததிங்	365	வலையர்	47	வாளொடு	281
வந்ததை	379	வலைவளத்	653	வாள்வலி	381
வந்தநாத	417	வலைவளத்தொ	661	வானகநின்றிங்	100
வந்தபாப்	327	வழிதர	581	வானகநின்று	60
வந்தபெரு	408	வழியடி	24	வானநாட	561
வந்தமா	185	வழியமர்	578	வானமுட்	655
வந்தமாமுனி	470	வழியிடைத்	526	வானவ	579
வந்தமாயோ	529	வழியொரு	636	வானவர	281
வந்தமுனி	119	வழிவருந்	658	வானவரி	388
வந்தவர	69	வழிவழிநம்	149	வானவரு	529
வந்தவனு	588	வழிவழியடி	626	வானவரை	282
வந்தவன்	622	வழுதிநாட	636	வானவர்	202
வந்தவானு	289	வழைவிடு	58	வானவர்	573
வந்தனர்	524	வளமுற	246	வானவர்	575
வந்தாரு	612	வளர்கயி	485	வானகி	300
வந்துகற்	382	வளவன்	590	வானடு	397
வந்துவான	55	வளிதட	309	வானர்	406
வம்பவிழ	67	வளியிரு	183	வானுறு	448
வம்மென	307	வளியெனு	575	வானேர்	569
வயலிற்	53	வளைகடலிற்	612	விச்சுவ	157
வரசரோ	466	வளையொலி	72	விடக்குவா	426
வரத்துயர்	574	வளையொலி	102	விடங்கரை	385
வரம்புகெட	40	வள்ளலரு	638	விடங்கர்	390
வரம்புத	499	வள்ளல்	586	விடங்கர்	527
வரிசிலை	336	வள்ளியா	29	விடந்தை	567
வரிசிலை	191	வறுமையென்	659	விடரடை	145
வரிப்புலி	564	வறுமையென்	501	விடாதபூச	380
வரிவிழி	71	வற்கட	635	விடியலி	93

விடியுமு	667	விரிநிழ	522	வீதிதொறு	641
விடுத்தலு	481	விருச்சிக	493	வீதியிற்	252
விடைகொடு	205	விருத்தகா	361	வீடருங்	247
விடைகொடு	302	விருத்தகா	429	வீடரும்	256
விடைகொடு	619	விருத்திரன்	553	வீழ்ந்தவ	594
விடைகொண்	310	விருப்பமே	512	வீழ்ந்தானை	611
விடையமை	176	விருப்புற	666	வெங்கதி	192
விடையுடை	483	விருப்பொடு	483	வெட்டின	281
விட்டகணை	592	விரும்பியா	106	வெண்பளி	133
விட்டதோ	648	விரும்புற	194	வெயின்மணி	143
விட்டுனு	602	விரைசெயா	215	வெய்யபாத	214
விண்டுநின்	433	விரைதர	247	வெருவிலா	113
விண்டுநீ	531	விரைத்த	269	வெருவின்	628
விண்ணநில	299	விரைநறு	174	வெளிவந்து	543
விண்ணம்புர	607	விரையவி	186	வெளிவரு	203
விண்ணம்பொ	269	விலைசெய	659	வெள்ளமரு	48
விண்ணவர்	103	விலையினே	73	வெள்ளலை	274
விண்ணுடு	394	விழாமகிழ்	671	வெள்ளியங்	36
விண்ணிற்	497	விழிகவர்	385	வெள்ளியங்	123
விண்ணுங்	315	விழிமலர்	286	வெள்ளியநன்	393
விண்ணுமுன்	26	விழியளி	337	வெள்ளியகொண்	118
விதிகடை	343	விழைதரு	384	வெள்ளிய	676
விதிவழி	251	விளைநல	41	வெருவமு	204
விதியிற்	376	விளைநில	226	வெற்புமே	10
விதியின்	541	விள்ளரிய	121	வேட்டவினை	592
விந்தமெழு	271	விறல்மிக்	285	வேண்டிய	536
விமலமோ	503	வினைதபு	198	வேண்டுவ	589
விரைகெழு	171	வினைமுடி	523	வேதகாயத்	154
விரசுபா	365	வினைமுத	621	வேதநிந்தனை	232
விரதமா	70	வினையகன்	596	வேதனுவி	177
விரவிய	542	வீணைவல	257	வேம்பினே	647
விரவுசா	496	வினைவலய	671	வேறுதவ	296
விராவுமற்	401	வீசுநீள்	654	வேறுபாடு	496
விரிதரு	189	வீசுமாமணி	657	வையமேத்து	506
விரித்திடு	74	வீசுவலை	50		

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
12	10	வைப்பாம்	சேர்ப்பாம்
41	7	கருத்ததுபோல்	கறுத்ததுபோல்
42	27	தொல்லோன் அட்ட	நட்ட - நடுதல்செய்த
43	16	தனிகைப்புரா	தணிகைப்புராணம்
50	33	பதிபத்தர்	மதிபத்தர்
56	19	அலேகளுள்ளே	அளேகளுள்ளே
60	30	நாகப்பட்டினம்	நாகபட்டினம்
62	8	,,	,,
63	18	மறுவலர்	மருவலர்
	19	குதிரைக்கட்டு	குதிரைகட்டு
	34	அவ்வடுவை	அவ்வடுக்களே
68	7	கறுமைநிறம்	கருமைநிறம்
89	12	நிறப்பெரும்பொருள்	அறப்பெரும்பொருள்
94	27	பதார்த்தமாகிய	பரார்த்தமாகிய
138	16	வீற்றிற்கும்	வீற்றிருக்கும்
171	31	நிரஞ்சனம்	நிராஞ்சனம்
172	15	சபித்து	செபித்து
173	10	கூடாதப்புண்டரீக	கூடாதபுண்டரீக
177	17	யாகிய	யாதிய
186	4	வேந்தன்	வேதன்
	13	பச்சைமலே	பச்சைவரை
187	7	மிளிர்முக்கண்ணுய்	அறவேற்றண்ணுல்
189	27	பரமன்	பிரமன்
190	3	தானவர்கள்	தானவர்கட்
	8	தானவர்கள் - அசுரர்கள்	தானவர்கண் - அசுரர்பால்
199	9	நீதியை	நீதியை
201	27	கெதடுலில்லாத	கெடுதலில்லாத
212	4	நிலேகலக்கிய	நிலேகலங்கிய
	32	தேகமுற்	தேசுமுற்
224	7	மதிர்க்குமே	மதிர்க்குமே

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
கஉ	36	புராணப்	புராணப்
228	4	புலமுனி	புலமலி
237	34	அயிாாணி	அயிராணி
242	4	தணமைத்	தண்மைத்
247	5	விரை தாக்	விரை தரக்
265	33	சாணைப்பிடித்த	சாணைபிடித்த
274	35	கலையே	தலையே
295	35	மனோன்மணி	மனோன்மனி
393	25	துடியதினில்	துடியதனில்
402	17	ாசற்றிடிற்	ராற்றிடிற்
407	11	தம்பியோடும	தம்பியொடும்
	24	நடட	நட்ட
417	25	கருவிகடந்து	கருவிகள் தந்து
	26	கருவிகளைக்கடந்து	கருவிகளைத்தந்து
441	27	கணததின்	கணத்தின்
448	34	மோருகுரோச	மொருகுரோச
463	4	றெய்வார்	றேய்வார்
469	27	தெழுத்தெனும்	தெழுத்தெனும்
513	30	தெற்குத்திக்கு	மேற்குத்திக்கு
516	2	துணையைக்	துணையக்
	30	பார்ததனன்	பார்த்தனன்
521	1	மிடைபெறு	மிடைபெரு
585	32	அழுதான்	அழுதால்

திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

"மெய்ய னைவிடை யூர்தியை வெண்மழுக்
கைய னைக்கடல் நாகைக்கா ரோணனை
மைய னுக்கிய கண்டனை வானவர்
ஐய னைத்தொழு வார்க்கல்ல லில்லையே."

திருச்சிற்றம்பலம்

K.